சமாஜ வெளியீடு.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் பெருமான் அருளிய

பெரியபுராணம்

என வழங்கும்

திருத்தொண்டர் புராணம்



சைவசித்தாந்த மகா சமாஜம்,

150, கோவிந்தப்பநாய்க்கன் தெரு, சென்னை.

1934

உரிமை பதிவு செய்யப்பட்டது.

தனிப் பிரதி விலை ரு. 1-6-0

ஆறு பிரதிகள் விலை ரு. 7-8-0

€2100

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை, சென்னை

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

உண்ணுமுலை உமையாளொடும் உடனுகிய ஒருவன்
பெண்ணுகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணுர்ந்தன அருவித்திரள் மழலிலம்முழ வதிரும்
அண்ணுமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே.

உரிமையுரை

அஞ்செழுத் தோதிச் செஞ்சொல் வேந்தர்
மறக்கடல் கடந்தே அறக்கரை ஏறிய
நகரில் வந்த நிகரில் வாணிபன்
சலியா தென்றும் புலியூர் அரணைப்
போற்றித் திருப்பணி ஆற்றிய தொண்டன்
திருநெறித் தமிழே பெருநெறி சேர்க்கும்
என்னுங் கொள்கையில் மன்னிய சீலன்
ஆன்றநூற் புலவோன் ஈன்றவன் என்னை
உயர்தரக் கல்வியில் பெயர்பெறச் செய்தோன்
அவநெறி புகாது சிவநெறி நிறுத்தி
ஆண்ட தந்தை ஆண்டகை ஐயன்
அண்ணு மலைப்பேர்க் கண்ணுர் அமுதன்
நினைவுக் குறியாப் புனைவுக் குன்றை
முனிஅருள் புராண இனியஇப் பதிப்பை
ஆக்கினன் உரிமை ஆக்கினன்
என்பால் உதித்த அன்பால் இனிதே.

அ. சோமசுந்தரன்.

களிற் சிறந்து விளங்கினர். அக்காலில் அரசு புரிந்த அநபாய சோழன் இவருடைய தகுதியை யறிந்து இவரைத் தனது முதல் மந்திரியாக்கி இவருக்கு உத்தமசோழப் பல்லவன் என்ற பட்டத்தையும் பெருஞ் செல்வத்தையும் தந்தான். சேக்கிழார் தமது அமைச்சுரிமையைத் திறமையோடும் இரக்கத்தோடும் தரும நெறியில் நடாத்தி வந்தார். கும்பகோணத்துக் கருகிலுள்ள திருநாகேச்சரத்தில் சேக்கிழாருக்கு அன்பு மேலிட்டது. அதைத் தமது ஆன்மார்த்த தலமாகக்கொண்டு தமது பிறப்புத் தலமாகிய குன்றத்தூரிலே ஒரு சிவாலயம் அமைத்து அதற்குத் திருநாகேச்சரம் என்றே பெயரிட்டார்.

இவ்வாறு இவர் அமைச்சுரிமை செலுத்திவரும் நாளில், அரசன் சீவக சிந்தாமணி என்ற சமண நூலைப் பாராட்டி மகிழ்ந்ததையும் பிறமக்களும் அந்நூலை மெய்யென்று நம்பிச் சைவ நெறியிலிருந்து பிறழ்ந்ததையுங் கண்டார். உடனே அரசனை நோக்கி "இம்மைக்கும் மறுமைக்கும் ஆகாத இந்நூலைப் பயில்வதால் யாது பயன்? இம்மை மறுமை நலத்தையும் வீட்டையும் தரவல்ல சிவசரிதைகளைப் பயின்றால் பயனுண்டு" என்று அறிவுறுத்தினர். அதைக் கேட்ட அரசன் "அப்படியாயின் அச்சரிதைகளைச் சொல்லியருள்க" என்றான். சேக்கிழார் "அவை சிவனடியவர் சரிதைகளேயாம். அவ்வடியவரைச் சுந்தர மூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகையுள் தொகுத்துக் கூறினர். நம்பியாண்டார் நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதியுள் சிறிது விரிவாக வகுத்துக் கூறினர்" என்று சொல்லிப் பல சரித்திரங்களையும் அரசனுக்கு எடுத்துச் சொன்னர். அச்சரித்திரங்களைக் கேட்ட அரசன் உள்ள முருகி "இவற்றை ஒரு காப்பியமாகச் செய்துதரல் வேண்டும்" என்று சேக்கிழாரை வேண்டினன். சேக்கிழாரும் அதற் கிசைந்து "இங்கிருந்தால் அப்பணி நிறை வேறாது. தில்லையிற் சென்று தங்கி முடித்தல் வேண்டும்" என்றார். அரசன் அவருக்கு விடை கொடுத்து வேண்டிய வசதிகளையெல்லாம் செய்து உதவினன். சேக்கிழார் தில்லைக்கூத்தனை வணங்கி அவன் திருவருளை வேண்டினர். உடனே மெய்ம்மொழி வானிழல் (ஆகாயத்தில் அசரீரிவாக்கு) "உலகெலாம்" என்று அடியெடுத்துக் கொடுத்தது. அதையே முதலும் நடுவும் முடிவுமாகக் கொண்டு சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தை பதின்மூன்று சருக்கங்களாக சவுரிய செய்யுள்களிற் பாடி முடித்தார்.

இந்நற்செய்தியைக் கேட்ட அரசன் தனது பரிவாரங்களுடன் தில்லையை யடைந்து சேக்கிழாரை வணங்கினன். உடனே மெய்ம்மொழி வானிழல், "உலகெலாம் என்று நாம் அடியெடுத்துத்தர சேக்கிழான் பாடிய இப்புராணத்தை நீவிரும்பிக் கேட்பாயாக" என்று அசரீரி வரும் கேட்கக் கூறிற்று. அரசன் இதைக் கேட்டு வியப்புற்று, பல அரச்சர்கட்கும் அறிஞர்கட்கும் திருமுகம் விடுத்துப் பேரவை கூட்டித் தில்லையிலே ராஜசபை ஆயிரக்கால் மண்டபம் என்று இப்போது

வழங்கும் அரசவையிலே சேக்கிழார் சுவாமிகளைக் கொண்டு இப்புரா ணத்தை அரங்கேற்றினன். சேக்கிழார் சித்திரைமீ திருவாதிரை நன் னாளில் தொடங்கி ஓராண்டு முழுமையும் இப்புராணத்துக்கு விரிவா கப் பொருள் கூறி அடுத்த சித்திரைத் திருவாதிரையிலே முடித்த தனர். பிறகு அரசன் சேக்கிழார் சுவாமிகளையும் திருத்தொண்டர் புராணத்தையும் யானைமீதேற்றித் தான் பின்னிருந்து கவரி வீசி ஊர் வலம் நடத்திச் சிறப்பித்து இப்புராணத்தைப் பன்னிரண்டாவது திருமுறையாக வகுத்தான். சேக்கிழாருக்குத் தொண்டர்சீர் பரவுவார் என்ற பட்டத்தையும் தந்தான். சேக்கிழார் தில்லையிலேயே இருந்து மெய்த்தவம் புரிந்து வைகாசிப் பூசநன்னாளிலே திருக்கூத்தன் எடுத்த பொற்பாத நீழலே எய்தினர். அரசன் சேக்கிழார் தம்பியாராகிய பாலறுவாயரை வரவழைத்து மந்திரியாக்கினன். இவர் தொண்டை மான் என்ற பட்டம் பெற்று நெடுநாள் அமைச்சுரிமை செலுத்தினர். இவர் பெயரால் பாலறுவாயர் குளம் ஒன்று குன்றத்தூரில் உளது. இவ்வரலாறு உமாபதி சிவாசாரியாரியற்றிய சேக்கிழார் புராணத்தி லுள்ளபடி எழுதப் பெற்றது.

சேக்கிழார் வரலாற்றைப் பற்றிய சில ஆராய்ச்சிக் குறிப்புகள்

(க) **சேக்கிழார், அருண்மொழித்தேவர் என்ற பெயர்கள்** :—சேக்கி ழார் என்பது இவரது இயற்பெய ரல்ல. இற்றைக்கும் தொண்டை மண்டல வேளாள மரபில் சேக்கிழார் கோத்திரம் என்றொரு பகுதி யுண்டு. இதைச் சார்ந்தவர்கள் குன்றத்தூரிலும் சுற்றுப் புறத்திலும் இருக்கிறார்கள். கவுணியர் குலத்துதித்து விளங்கிய திருஞான சம் பந்தரைக் கவுணியன் என்பதுபோல, சேக்கிழார் குடியை விளக்கிய வரும் சேக்கிழார் எனப்பட்டார். அருண்மொழித் தேவர் என்பதும் காரணப் பெயர் என்பர் சிலர். சேக்கிழார் வாக்கு அருண்மொழி யாத லாலும் இறைவனே உலகெலாம் என்றெடுத்துக் கொடுத்தமையா லும் இவருக்கு இப்பெயர் பெரிய புராணம் பாடிய பின்னர் ஏற்பட்ட தென அவர் கூறுவர். அருண் மொழி யென்பது சிவபக்தனாயிருந்த அக்காலத்திய சோழன் ஒருவன் பெயர். அப்பெயரைப் பல குடிகள் தங்கள் மக்கட்கு வைத்தார்கள். அவ்வாறு வைக்கப்பட்ட பெயரே இது என்று வேறுசிலர் கூறுவர். ஒரு கல்வெட்டில் ''சோழன் அருண் மொழிக்கு யாண்டிருபத்தொன்று'' என்று வந்திருப்பதையும் சான் றாகக் கூறுகின்றனர். அருண்மொழி யென்பது சேக்கிழாரது இயற் பெயராகவே இருந்திருத்தல் கூடுமெனத் தோன்றுகிறது.

(உ) **சேக்கிழார் தாய் தந்தையர்**:—இவர்கள் பெயர் அழகாம்பிகை, வெள்ளியங்கிரி முதலியார் என சிலர் கூறுகின்றனர். இதற்கு ஆதார மில்லை.

(கூ) சேக்கிழாரும் திருக்குறளும் :—சேக்கிழார் சுவாமிகள் பல இடங்களில் திருக்குறளின் சொல்லையும் கருத்தையும் எடுத்தாண்டிருக்கிறார். அவற்றின் விரிவைத் திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியாரியற்றிய சேக்கிழார் என்ற நூலின் கஅடு-ககூஉ-ம் பக்கங்களிற் காண்க. அரசன் ஞாலம் மலை கடலிற் பெரியது யாது என்றொரு கேள்வி விடுக்கச் சேக்கிழார் அதற்கு விடையாக,

> "காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
> ஞாலத்தின் மாணப் பெரிது."
>
> "நிலையிற் றிரியா தடங்கியான் தோற்றம்
> மலையினும் மாணப் பெரிது."
>
> "பயன் தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
> நன்மை கடலிற் பெரிது."

என்ற குறட்பாக்களை எழுதியதாக ஒரு வரலாறு கூறப்படுகிறது. தமது தந்தையாருக்கு இவ் விடையை உபகரித்தா ரென்றும் இக் கேள்விகளையே ஒரு தேர்வாகக் கொண்டு (Open Competitive Examination) சேக்கிழார் விடையே சிறந்ததாகலின் அரசன் அவரையே மந்திரியாக்கினன் என்றும் இவ்வரலாறு இருவகையாகக் கூறப்படுகிறது. இதற்கு உமாபதி சிவனார் பாடியதாகக் கருதப்படும் சேக்கிழார் புராணத்தில் ஆதாரமில்லை. சபாபதி நாவலரவர்களியற்றிய சிதம்பர சபாநாத புராணத்திலே சேக்கிழார் தோத்திரமாகக் கூறிய,

> ஞாலமலை கடல்தன்னிற் பெரியதெது எனஎடுத்து ஞாலமாள்செங்
> கோலன் அநபாயன் வினவிய முத்திறக் குறிப்பைக் குறிப்பினேர்ந்து
> சாலவுயர் திருக்குறள் மூன்று இறையாக எழுதி அவன் அரசு தாங்கி
> வாலறிவால் திருத்தொண்டர் புகழ்விரித்த சேக்கிழார் மலர்த்தாள் போற்றி.

என்ற செய்யுள் இதனை வலியுறுத்தும். கம்பரும் திருக்கை வழக்கத்திலே,

> .....காவலன்
> மண்ணிற் கடலின் மலையிற் பெரிதென் என
> எண்ணி யெழுதிக் கொடுத்த ஏற்றக்கை.....

என்று கூறிச் சேக்கிழாரைக் குறியாது இவ்வரலாற்றின் மற்ற விவரங்களை ஆதரிக்கிறார். உமாபதி சிவனார் காலத்துக்குப் பின் கம்பர் வாக்கை ஆதாரமாகக் கொண்டு இவ்வரலாறு சேக்கிழார் வரலாற்றில் சேர்க்கப்பட்டிருத்தல் கூடும் என்று ஊகிக்க இடமுண்டு.

(ச) சேக்கிழாரும் ஏனைய திருமுறைகளும் :— சேக்கிழார் தேவாரம் திருவாசகம் முதலிய திருமுறைகளை மிகநன்றாகப் பயின்றவர். பற்

பல தேவாரப் பாடல்களின் உட்கருத்தைக் குறிப்பாக உணர்த்தும் ஆற்றல்மிக்கவர். பல அடியார் வரலாறுகட்குத் தேவாரத்தைப் பேரா தரவாகக்கொண்டவர். திருத்தொண்டத் தொகையிலுள்ள பல அடை மொழிகளின் நுட்பத்தை விளக்கிய பெருமை சேக்கிழாருக்கே உரித்து. உதாரணமாக "வேல்லுமா மிகவல்ல மெய்ப்பொருள்" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூறியதைச் சேக்கிழார் "மெய்த்தவ வேடமே மெய்ப் பொருள் எனத் தொழுது வேன்றார்" என விளக்கி யிருத்தல் காண்க. நம்பியாண்டார் நம்பிகள் திருத்தொண்டர் திருவந் தாதியில் "புந்தியாரப் புகன்ற வகையினுல் வந்தவாறு வழாமல் இயம் புவாம்" என்று சேக்கிழார் கூறினுரேனும் தாம் நம்பியோடு மாறு படும் இடங்களில் தாம் நம்பி கூறுவதைத் தழுவாது நம்பியையும் கண்டனம் செய்யாது தமக்கு உண்மையெனத் தோன்றியதைக் கூறும் உறுதியும் பெருமையு முடையவர். உதாரணமாகப் பொய்யடிமையில் லாத புலவரைப் பற்றி நம்பி கூறுவதையும் சேக்கிழார் கூறுவதையும் நோக்குக. சேக்கிழார் தேவாரத்திற் காணும் அரிய சொற்றொடர்களை அழகுபெற அமைத்துப் பாடுவதில் வல்லுநர். உதாரணமாக "உயி ராவண மிருந்து" என்ற தாண்டகத்திற் காணும் "அமரர் நாடா ளாதே ஆரூராண்ட" என்ற சொற்றொடரைத் திருநீலகண்ட யாழ்ப் பாண நாயனர் புராணத்து எ-ம் செய்யுளிலமைத் திருத்தல் காண்க.

(ரு) **சேக்கிழாரும்** சரித்திரச் சான்றுகளும்:—சேக்கிழார்சுவாமிகள் தாம் முதல் மந்திரியாக இருந்தமையால் அரசாங்கத்திலுள்ள எல்லா வகையான (கல்வெட்டு, பட்டயம், ஏடு) சரித்திரச் சான்றுகளையும் ஒப்பு நோக்கித் தொகுத்து உண்மை கண்ட பிறகே புராணம் பாடி னர் என்பதில் ஒருசிறிதும் ஐயமில்லை. சாதாரண மக்களுக்குக் கிடைத் தற்கரிய பல சரித்திர நுட்பங்களை அவர் எடுத்துக் கூறியுள்ளது பாராட்டத் தக்கது.

(சு) சேக்கிழாரும் நாட்டின் அமைப்பும்:—நாட்டின் அமைப்பு நக ரங்களின் அமைப்பு முதலியவற்றையுணர்ந்து நாயன்மார்கள் யாத்திரை செய்த வழி விவரங்களைக் கூறும் பெருமை சேக்கிழாருக்கே யுரியது. புறச் சமயத்தவர் மிகுந்துள்ள இடங்களை ஒதுக்கி நேர்வழியாகச் செல்லாது சுற்று வழியாகச் சென்றதாகச் சேக்கிழார் கூறும் நுட்பம் முதலியன பெரிதும் உவகை பயக்குவன.

(எ) பெரியபுராணம் ஒரு பெருங்காப்பியம் :—மிகச் சிறந்த இலக் கியமாகிய **சீவக** சிந்தாமணியின் காவியச் சுவையில் ஈடுபட்டிருந்த அரு சனைத் திருத்தி பெரிய புராணத்தில் அவன் இன்பம் எய்தச் செய்த வர் சேக்கிழார் என்று புராணவரலாறு கூறுகின்றது. எனவே, சீவக சிந்தாமணிக்குப் பெரிய புராணம் எவ்வகையிலும் காவியச் சுவையில் குறைந்த தல்ல வென்பது பெற்றும். காவிய லக்ஷணங்கள் எவ்வாறு பெரிய புராணத்திற் பொருந்தியுள்ளன வென்பது முதலிய விவரங்க

ளடங்கிய ஆராய்ச்சி, திரு. சி.கே. சுப்பிரமணிய முதலியாரவர்களது "சேக்கிழார்" என்ற நூலிற் செய்யப்பட் டிருக்கிறது. ஆண்டுக்கண்டு கொள்க. கம்ப ராமாயணத்துக்கும் பெரிய புராணத்துக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை பற்றிய ஆராய்ச்சியையும் ஆண்டே காண்க. பெரிய புராணம் இம்மை மறுமை வீட்டு நலங்களைப் பயக்க வல்ல ஒப்புயர்வற்ற பெருங்காப்பிய மென்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

(அ) பெரிய புராணத்தாற் கிடைக்கும் பழக்க ஒழுக்க நாகரிகக் குறிப்புகள் :—இவற்றின் விரிவையும் மேற்கூறிய ஆராய்ச்சி நூலிற் காண்க. இக்குறிப்புகள் பல இந்நூலின் அரும்பொருளகராதியிற் றொகுக்கப்பட்டுள்ளன.

(கூ) சேக்கிழார் காலம்:—இதைப் பற்றிய ஆராய்ச்சியை மற்றோரிடத்திற் காண்க. இவ்வாராய்ச்சியின் முடிபாகச் சேக்கிழார் காலம் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியென்று துலங்குகிறது.

(கo) சேக்கிழார் வரலாறுகளும் புகழ்நூல்களும்:—உமாபதி சிவாசாரியரியற்றியதாகக் கூறப்படும் சேக்கிழார் புராணம், திருவாளர்கள் கா. சுப்பிரமணிய பிள்ளை, சி. கே. சுப்பிரமணிய முதலியார், சோமசுந்தர தேசிகர் ஆகிய இவர்கள் முறையே இயற்றிய 'சேக்கிழார் சுவாமிகள் சரித்திரம்', 'சேக்கிழார்' 'சைவசிகாமணிகளிருவர்' என்ற உரைநடை நூல்கள், மகா வித்வான் திருச்சிராபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களியற்றிய சேக்கிழார் பிள்ளைத் தமிழ், சைவ புராணங்களிலும் தலபுராணங்களிலுமுள்ள சேக்கிழார் தோத்திரங்கள் முதலியனவாக இவை விளங்குகின்றன.

(கக) பெரியபுராணப் பாடற்றொகையும் இடைச்செருகல்களும்:—பெரிய புராணத்தின் மொத்த பாடற்றொகை சஉருந என்று சேக்கிழார் புராணம் நுந-வது பாட்டு கூறுகின்றது. இப்போதுள்ள பிரதிகளில் அதிகமாக நுந பாட்டுக்கள் காணப்படுகின்றன. இவற்றுள் சில வெள்ளியம்பலத் தம்பிரான் என்பவரால் தொழைக்கப்பட்ட வேள்ளிப் பாடல்கள் என்று கூறப்படுகின்றன. இவ்விடைச் செருகல்கள் பற்றிய ஆராய்ச்சியை திரு. சி. கே. சு. அவர்கள் நூலில் உoசு-உஉச பக்கங்களிற் காண்க. இந்நூற்றாண்டிற் போற்றப்படும் கருத்துகட்கு மூராணை பாடல்களே யெல்லாம் இடைச்செருகல்களாகக் கொள்வது பெருந்தவறு.

(கஉ) பெரியபுராணம் மொழிபெயர்ப்பல்ல:—வடமொழி வெறியாளர் சிலர் பெரியபுராணத்தை அகத்திய பக்த விலாசம், உபமன்யு பக்த விலாசம் என்பவற்றின் மொழிபெயர்ப்பென்பர். இது மோசடியான முழுப்பொய். மேற்கூறிய இரு பக்த விலாசங்களும் பெரிய புராணத்துக்குப் பின் அதை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டன.

(கஞ) பெரிய புராண அச்சுப் பிரதிகள்:—

1. வீரசைவ மகாலிங்கையரவர்கள் : விசுவாவசு சித்திரை (1843)
2. காஞ்சி - சபாபதி முதலியார் : சித்தார்த்தி ஆனி (1859)
3. திருமயிலை சுப்பராய ஞானியார் : பிரமோதூத மார்கழி (1870)
4. சிதம்பரம் இராமலிங்கம் பிள்ளை : பிரமாதி (1879)
5. ஆறுமுக நாவலர் : (1884)
6. ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள்:ஸர்வஜித்துஹ மீனரவி(1888)
7. சதாசிவப் பிள்ளை : 2-ம் காண்டம் சர்வதாரி புரட்டாசி (1889)
8. சுப்பராய நாயகர் : (1893), (1896)
9. செந்தில்வேலு முதலியார் : சுபகிருது மகாரவி (1903)
10. திரு. வி. கலியாணசுந்தர முதலியார் : சாதாரண ஆடி (1910)
11. காஞ்சி - ஆலாலசுந்தரம் பிள்ளை. (1918, 1923, 1924)
12. திரு. வி. கலியாணசுந்தர முதலியார் : (1934)
13. சைவ சித்தாந்த மகா சமாஜம் : (1934)

குறிப்பு :—ஒவ்வொரு பக்கத்திலும் தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள எண் அப்பக்கத்து முதலில் முடியும் பாட்டின் மொத்த எண்ணிக்கையைக் குறிக்கும். ஒன்று முதல் எண்பது வரையுள்ள பக்கங்களில் கீழ்வரும் எண்களைக் குறித்துக் கொள்க ;—1, 5, 11, 18, 24, 33, 42, 51, 59, 67, 76, 85, 92, 101, 110, 119, 127, 136, 144, 151, 160, 169, 178, 186, 195, 204, 213, 221, 230, 238, 246, 253, 261, 269, 277, 285, 294, 303, 312, 320, 327, 335, 343, 343, 343, 350, 357, 365, 373, 382, 390, 399, 406, 413, 422, 431, 440, 448, 456, 465, 472, 481, 490, 497, 505, 514, 523, 532, 540, 548, 551, 559, 567, 576, 585, 594, 603, 610, 619, 628.

அறுபத்துமூன்று நாயன்மார்

பெ. பு. தொகை.	திருத்தொண்டர் பெயர்	குலம்	நாடு	ஊர்	வழிபாடு முறை	திருநக்ஷத்திரம்
20	அதிபத்த நாயனார்	நுளையர்	சோ	நாகபட்டினம்	லி	5—9
45	அப்பூதியடிகள்	அந்தணர்	,,	திங்களூர்	கு	10—24
49	அமர்நீதி நாயனார்	வணிகர்	,,	பழையாறை	சு	3—11
23	அரிவாட்டாய ,,	வேளாளர்	,,	கணமங்கலம்	லி	10—6
42	ஆனாய ,,	இடையர்	மழ	மங்கலவூர்	லி	8—13
1	இசைஞானியார்	அந்தணர்	நடு	திருநாவலூர்	லி	1—14
11	இடங்கழி ,,	அரசர்	கோ	கொடும்பாளூர்	சு	7—3
36	இயற்பகை ,,	வணிகர்	சோ	காவிரிப்பூம்பட்டின	சு	9—12
27	இளையான்குடிமாற ,,	வேளாளர்		இளையான்குடி [ம்	சு	5—10
10	உருத்திரபசுபதி ,,	அந்தணர்	சோ	திருத்தலையூர்	லி	6—1
57	எறிபத்த ,,	தெரியாது	,,	கருவூர்	லி	11—13
409	எயர்கோன்கலிக்காம ,,	வேளாளர்	,,	திருப்பெருமங்கலம்	லி	3—27
42	ஏனாதிநாத ,,	சான்றூர்	,,	எயினனூர்	சு	6—21
9	ஐயடிகள்காடவர்கோன் ,,	அரசர்	தொ	காஞ்சீபுரம்	லி	7—19
7	கணநாத ,,	அந்தணர்	சோ	சீர்காழி	கு	12—6
9	கணம்புல்ல ,,	தெரியாது		இருக்குவேளூர்	லி	8—3
186	கண்ணப்ப ,,	வேடர்	தொ	உடுப்பூர்	லி	10—5
10	கலிக்கம்ப ,,	வணிகர்	ந	திருப்பெண்ணாகட	சு	10—27
17	கலிய ,,	செக்கார்	தொ	திருவொற்றியூர் [ம்	லி	4—18
175	கழறிற்றறிவார் (=சேரமான்பெருமாள்)	அரசர்	மலை	கொடுங்கோளூர்	லி	4—15
13	கழற்சிங்க நாயனார்	,,			லி	2—2
5	காரி ,,	தெரியாது	சோ	திருக்கடவூர்	லி	11—20
66	காரைக்காலம்மையார்	வணிகர்	சோ	காரைக்கால்	லி	12—15
35	குங்குலியக்கலய நாயனார்	அந்தணர்	சோ	திருக்கடவூர்	லி	5—19
11	குலச்சிறை ,,	தெரியாது	பா	மணமேற்குடி	கு	5—17
9	கூற்றுவ ,,	அரசர்		களந்தை	லி	4—6
18	கோச்செங்கட்சோழ ,,	,,	சோ		லி	11—24
13	கோட்புலி ,,	வேளாளர்	சோ	நாட்டியத்தான்கு	லி	4—18
1	சடைய ,,	அந்தணர்	ந	திருநாவலூர் [டி	லி	9—6
60	சண்டேசுவர ,,	,,	சோ	திருச்சேய்ஞலூர்	லி	10—12
7	சத்தி ,,	வேளாளர்	,,	வரிஞ்சியூர்	சு	7—8
18	சாக்கிய ,,	,,		திருச்சங்க மங்கை	லி	9—20
6	சிறப்புலி ,,	அந்தணர்	சோ	திருஆக்கூர்	சு	8—20
88	சிறுத்தொண்ட ,,	மாமாத்திரர்	சோ	திருச்செங்காட்டங்	சு	1—2
795	சுந்தரமூர்த்திசுவாமிகள்	அந்தணர்	ந	திருநாவலூர் [குடி	லி	4—15
7	செருத்துணை நாயனார் சேரமான்பெருமாள் ,,	வேளாளர்	சோ	தஞ்சாவூர்	லி கு	5—8

அட்டவணை

செயற்கரிய செயல்கள்

பொன் மீனையும் சிவனுக்கு அர்ப்பணம் செய்தல்.
பிள்ளை இறந்ததை மறைத்து திருநாவுக்கரசு சுவாமிகட்கு அமுதளித்தல்.
கோவணத்துக்கு நிறையாகத் தம்மனைவி மக்களுடன் தம்மையும் அடியவர்க்குத்தருதல்.
நிவேதனப் பொருள் சிந்தியதற்காகத் தமது கழுத்தையரிதல்.
பசு மேய்க்கும்போது ஐந்தெழுத்தைப் புல்லாங்குழலில் அமைத்து வாசித்தல்.
சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பிள்ளையாகப் பெறுதல்.
அடியார் வழிபாட்டுக்காக நெல் திருடியவர்க்கு, மேலும் நெல்லும் பொருளும் தரல்.
சிவனடியார் விரும்பியவாறு தம் மனைவியையும் தருதல்.
விதைத்த நெல்கொண்டு அடியவர்க் கமுதளித்தல்.
அல்லும் பகலும் குளத்தில் கழுத்தளவு நின்று ஸ்ரீ ருத்திரம் செபித்தல்.
பூக்குடலையைச் சிதறிய பட்டத்து யானையைக் கொல்லுதல்.
பரவை பால் சிவபெருமானைத் தூது செல்லச்செய்த வன்றொண்டரால் சூலை நீங்க உடன்படாமல் உயிர் துறந்து பின் உயிர் பெற்று வன்றொண்டர் தண்பரானது.
திருநீறணிந்து போர் புரிந்த பகைவனைக் கொல்லாது அவனுற் கொலையுண்டது.
அரசுரிமையை வெறுத்துத் தலயாத்திரை செய்து கூற்றாயினவாறு பாடியது.
திருஞானசம்பந்தரை வழிபட்டு சரியைத் தொண்டு செய்தது.
திருவிளக்குக்கு எண்ணெய் இன்மையால் தமது திருமுடியை எரித்தல்.
காளத்தியப்பருக்குக் கண் அப்பியது.
தமது பழைய வேலையாள் சிவனடியாளுக வந்தபோது அவனை வழிபடுதல்.
திருவிளக்குக்கு எண்ணெய் இன்மையால் இரத்தம் எடுக்க முயலுதல்.

சுந்தரர் தோழமை, திருமுகப்பாசுரம் பெறல், கயிலையில் ஞான உலா பாடுதல்.
சிவபூசைக்குரிய பூவை மோந்த தமது மனைவியின் கையை வெட்டுதல்.
கோவை பாடிப் பொருள் பெற்று ஆலயப்பணி செய்தல்.
சிவனை வேண்டி மாம்பழமும் பேய் வடிவும் பெற்றது, ஆலங்காட்டில் ஆடல் கண்டது.
மங்கிலியம் விற்றுக் குங்குலியம் வாங்கியது, சாய்ந்த இலிங்கத்தை நிமிர்த்தியது.
பாண்டி நாட்டில் சைவம் புத்துயிர்பெறத் தூண புரிந்தது.
தில்லையம்பலவன் திருவடியையே முடியாகச் சூட்டப்பெற்றமை.
சிவாலயம் பல கட்டியது, முற்பிறவியில் சிலந்தியாக சிவபூசை செய்தது.
சிவபூசைக்குரிய நெல்லையுண்ட சுற்றத்தாரைக் கொல்லுதல்.
சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பிள்ளையாகப் பெறுதல்.
அபிடேகப் பாற்குடத்தை இடறியதந்தையின்காலை வெட்டித் தொண்டர் நாயகரானது.
சிவனடியாரை இகழ்வோரது நாவை யறுத்தல்.
மறவாது சிவலிங்கத்தின்மீது கல்லெறிந்து வழிபடல்.
அடியார்க்கு அமுதும் பொருளும் ஈதல்.
அடியார்க்குத் தமது ஒரே பிள்ளையைக் கறியாகச் சமைத்து வைத்தது.
முதலைவாய்ப் பிள்ளை வருவித்தது, பல அற்புதங்கள் புரிந்தது, தேவாரம் பாடியது.
கழற்சிங்க நாயனர் மனைவி சிவபூசைக்குரிய பூவை மோந்ததற்காக மூக்கை அரிந்தது.
கழறிற்றறிவார் பார்க்க.

பெ. பு. தொகை.	திருத்தொண்டர் பெயர்	குலம்	நாடு	ஊர்	வழிபாட்டு முறை	திருஞான சம்பந்தர் ஷேத்திரம்
6	சோமாசிமாற நாயனார்	அந்தணர்	சோ	திருவம்பர்	கு	2—9
26	தண்டியடிகள் ,,	தெரியாது	,,	திருவாரூர்	லி	12—24
128	திருக்குறிப்புத்தொண்ட ,,	எகாலியர்	தொ	காஞ்சீபுரம்	ச	1—15
1256	திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்	அந்தணர்	சோ	சீர்காழி	லி	2—19
429	திருநாவுக்கரசு சுவாமிகள்	வேளாளர்	ந	திருவாமூர்	லி	1—24
37	திருநாளைப்போவார் (=நந்தனார்)	புலையர்	சோ	ஆதனூர்	லி	6—4
44	திருநீலகண்ட நாயனார்	குயவர்	சோ	சிதம்பரம்	ச	10—16
12	,, யாழ்ப்பாண ,,	பாணர்	ந	திருஎருக்கத்தம்பு	கு	2—19
38	திருநீலநக்க ,,	அந்தணர்	சோ	சாத்தமங்கை[லியூர்	லி	2—19
28	திருமூல ,,	இடையர்	சோ	சாத்தனூர்	கு	7—1
33	நமிநந்தியடிகள் ,,	அந்தணர்	,,	ஏமப்பேறூர்	லி	2—8
9	நரசிங்கமுனையரையர் ,,	அரசர்	ந		ச	6—24
10	நின்றசீர்நெடுமாற ,,	,,	பா	மதுரை	கு	7—2
5	நேச ,,	சாலியர்		காம்பீலி	ச	12—4
41	புகழ்ச்சோழ ,,	அரசர்	சோ	உறையூர்	ச	4—3
7	புகழ்த்தூணை ,,	அந்தணர்		செருவிலிபுத்தூர்	லி	5—9
18	பூசலார் ,,	,,	தொ	திருநின்றவூர்	லி	7—17
11	பெருமிழலைக்குறும்ப ,,	தெரியாது		பெருமிழலை	கு	4—14
3	மங்கையர்க்கரசியார்	அரசர்	பா	மதுரை	கு	1—4
37	மானக்கஞ்சாற ,,	வேளாளர்		கஞ்சாறூர்	ச	9—15
14	முருக ,,	அந்தணர்	சோ	திருப்புகலூர்	லி	2—19
7	முனையடுவார் ,,	வேளாளர்	,,	திருநீடூர்	ச	12—8
12	மூர்க்க ,,	,,	தொ	திருவேற்காடு	ச	8—19
49	மூர்த்தி ,,	வணிகர்	பா	மதுரை	லி	4—3
24	மெய்ப்பொருள் ,,	அரசர்	ந	திருக்கோவலூர்	ச	8—12
10	வாயிலார் ,,	வேளாளர்	தொ	திருமயிலாப்பூர்	லி	9—27
11	விறன்மிண்ட ,,	,,	மலை	செங்குன்றூர்	ச	1—5

குறிப்பு :—கு - குருவழிபாடு. கோ - கோளடி. ச - சங்கம வழிபாடு. சோ - தொகை=பெரியபுராண செய்யுள் தொகை. மலை - மலைநாடு. மழ - மழநாடு. சித்திரை முதலிய மாதத்தையும் இரண்டாவது குறித்துள்ள எண் அசுவினி உள்ளது. தில்லைவாழந்தணர், பொய்யடிமையில்லாத புலவர், பத்தராய்ப் பணிவார், மும்போதுந்திருமேனி தீண்டுவார், முழுநீறுபூசிய முனிவர், அப்பாலுமடிச்சார்ந்தார் லுள்ள அந்தணர். ஏனையோர் ஊர் குலம் முதலிய எவ்வித விவரமும் தெரியாது.

செயற்கரிய செயல்கள்

வேதவேள்வி செய்தல் - சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவடியில் பக்தி செய்தல்.
திருக்குளப்பணி செய்து பிறவிக்குருடு நீங்கி சமணரை வென்று சைவம் நாட்டியது.
காலந்தவறியதால் துணி தோய்க்கும் கல்லில் தலையை மோதிக்கொள்ளுதல்.

தேவாரம் பாடியது - என்பு பெண்ணுருவாக்குதல் முதலிய பல அற்புதங்கள்.
" விடந்தீண்டிய பிள்ளையை எழுப்புதல் முதலிய பல அற்புதங்கள்.

தில்லையைக் காண வேட்கை, தீப்புகுந்து உருமாறி எழுந்து அம்பலவர் அடிசேர்ந்தது.
மனைவியைத் தீண்டாது இளமையில் இல்லறம் நடத்துதல்.
திருஞானசம்பந்தருடன் சென்று யாழ்த்தொண்டு புரிந்தது.
பாணர்க்கு வேதிகையில் இடந்தந்தது, சம்பந்தர் திருமணத்தைநடத்தி முத்திபெற்றது.
மூலனுடல் புக்கு மூவாயிரம் ஆண்டிருந்து திருமந்திரம் ஓதியது.
தண்ணீரால் விளக்கெரித்தல் - ஆரூர்ப்பிறந்தாரையெல்லாம் சிவசாரூப்பியராகக் காணல்.
சிவவேடம் பூண்ட தூர்த்தனையும் போற்றுதல்.
காழியர்கோன் தந்த திருநீற்றால் சுரம் நீங்கிக் கூன் நிமிரப்பெறுதல்.
அடியவர்க்கு வஸ்திர தானம் செய்தல்.
பகைவனது அறுபட்ட தலையில் சிவசின்னமாகிய சடை கண்டு உயிர் நீத்தல்.
சிவபூசைக்குதவியாகப் பஞ்ச காலத்தில் இறைவனால் காசு அளிக்கப் பெற்றது.
மனக்கோயில் கட்டி சிவவழிபாடு செய்தல்.
சுந்தரர் கயிலை செல்லுதலறிந்து தாமும் யோகத்தாற் கயிலை சேர்ந்தது.
திருஞானசம்பந்தரை வரவழைத்துப் பாண்டிநாட்டில் சைவத்தை நிலைநாட்டியது.
கலியாண கோலத்துடனிருந்த தம்மகள் தலையிலை அடியாருக்கு அறுத்துத் தந்தது.
புட்பத் தொண்டு - சம்பந்தர் திருமணத்தில் சோதியிற் கலத்தல்.
கூலிக்குப் போர் செய்து அடியார் வழிபாடு செய்தல்.
சூதாட்டத்தாற் கிடைத்த ஊதியங்கொண்டு அடியார் வழிபாடு செய்தல்.
சந்தனக்கட்டை கிடைக்காமையால் கையையரைத்தல் - திருநீறு, கண்மணி, சடை கொண்டு அரசுபுரிதல்.
தம்மைக் கொல்லும் சிவவேடதாரியைக் காத்தல்.
மானஷீக ஞானபூசை செய்தல்.
திருத்தொண்டத்தொகைக்குக் காரணராயிருத்தல்.

சோழநாடு. தொ - தொண்டைநாடு. ந - நடுநாடு. பா - பாண்டிநாடு. பெ. பு - செ - லி - இலிங்க வழிபாடு. திருநகரூத்திரம் என்ற தலைப்பில் முதல் உள்ள எண் முதலிய நகரூத்திரத்தையும் குறிக்கும். இவ்வட்டவணையில் 63 தனியடியார்கள் விவரம் பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார், திருவாரூர்ப்பிறந்தார், ஆகிய ஒன்பதின்மர் தொகையடியார்கள். இவர்களுள் தில்லைவாழந்தணர் தில்லையி

[1]சேக்கிழார் சுவாமிகள் காலம்

பெரியபுராணத்தில் சேக்கிழார் சுவாமிகள் பத்திடத்தில் மன்னர்பெருமான் அநபாயரை அருளுகின்றார். அவ்விடங்கள் சோழர் பழம்பதி †ஐந்தை அவதார விடமாகக் கொண்ட ‡நாயன்மார்கள் வரலாற்றிலும், சோழ மன்னரே §நாயன்மார்களாக வருமிடத்திலும், ||சோழ நாடு நகரச் சிறப்புகளிலும், ¶அவையடக்கத்திலும் வருதல் காண்க. இப் பத்துப் பாக்களிலிருந்து சேக்கிழாரால் போற்றப்படும் சோழ அரசன், அபயன், குலோத்துங்கன் என்ற பொதுப் பெயரும் அநபாயன் என்ற சிறப்புப் பெயரும் பூண்டு, தில்லைத் திருவெல்லையைப் பொன்னின் மயமாக்கி, வீதிகளை விளக்கி, பேரம்பலத்தைப் பொன்வேய்ந்தமை தெரிகிறது.

புராணக் குறிப்புகள்

சுவாமிகளது காலத்தை இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை-திருவாளர்-சோமசுந்தர தேசிகர் அவர்கள் $'முதற் குலோத்துங்கன் காலமல்ல; அதற்கு முற்பட்ட' தென்பர். காலஞ் சென்ற பிரம்மஸ்ரீ-து. அ. கோபிநாத ராவ் அவர்கள் '** திருவாரூர் ††சாசனம் ஒன்றில் இவன் (முதற் குலோத்துங்கன்) அநபாயன் என்று அழைக்கப்படுகிறான்' என்று கொண்டு ‡‡சேக்கிழார் காலத்தை முதற் குலோத்துங்கன் காலம் (1070-1118) என்றார். இக்கருத்தைப் பின்பற்றித் திருவாளர்கள் §§சுப்பிரமணியம்பிள்ளை, செல்வக்கேசவராயமுதலியார், |||மகாதேவ முதலியார், ¶¶பூர்ணலிங்கம் பிள்ளை முதலியோர் பெரியபுராண

காலக் கருத்துகள்

---

[1]திரு. இ. கி. நாராயணசாமி நாயடு எழுதியது.

*8, 22 (இடைச்செருகல்), 85, 98, 404, 552, 1218, 2750, 3954, 4215.

†உறையூர், கருவூர், காவிரிப்பூம்பட்டினம், திருச்சேய்ஞலூர், திருவாரூர்.

‡இயற்பகையார் 1, எறிபத்தர் 2, சண்டேசுரர் 8.

§புகழ்ச்சோழர் 8, கோச்செங்கண்ணனார் 14.

||நாட்டுச் சிறப்பு 35, நகரச் சிறப்பு 13.

¶செய்யுள் 8.

$சைவ சிகாமணிகள் இருவர் - பக்கம் : 120.

**சோழ வம்ச சரித்திரம் - பக்கம் : 27.

††S. I. I. Vol vii. No. 485. (269/1901).

‡‡'செந்தமிழ்' தொகுதி 3 - பக்கம் : 188.

§§அவரது சேக்கிழார் சரித்திரமும் இலக்கிய வரலாறும் பார்க்க.

|||அவரது பெரிய புராண ஆராய்ச்சி பார்க்க.

¶¶அவரது History of Tamil Literature பார்க்க.

காலத்தை முதற் குலோத்துங்கன் காலமெனக் கொண்டார்கள். இக் காலம் 1901ஆம் ஆண்டில் சாசன இலாகாவால் படி எடுக்கப்பட்ட 269-ம் நெம்பர் கல்வெட்டைப் பொருத்திருந்தது. அந்நாளில் இரண்டாங் குலோத்துங்கனைப்பற்றி* ஒன்றுமே தெரியாதிருந்ததால், திருவாரூர்க் கல்வெட்டில் வரும் குலோத்துங்கன், அபயாயன் என்ற பெயர்கள், தெரிந்த முதற்குலோத்துங்கனையே குறிப்பதாகக் கொண்டார்கள்.

ஆரூர்க் கல்வெட்டு

அத்திருவாரூர்க் கல்வெட்டின் சுருக்கம் வருமாறு :—(1)†பூ மன்னு பதுமம் பூத்த.....(4) கோவிராஜகேசரி பன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்கசோழ தேவர்க்கு யாண்டு எ-வது திருவாரூர் உடையார் ஸ்ரீமூலத்தன முடையார் கோயிலில் எருந்தருளியிருக்கும் ஆளுடைய நம்பிக்கும் பரவை நாச்சியார்க்கும் அற்சனாபோக இறையிலியாக பழம்பெயரும் முன்னிறை கட்டின படியுந் தவிர்த்து யாண்டு எ-வது முதல் அபாய நல்லா ரென்னுந் திருநாமத்தால்.....(11) இக்கோயிலில் எழுந்தருளி யிருக்கும் ஆளுடைய பிள்ளையார்க்கும் திருநாவுக்கரசு தேவர்க்கும் வேண்டும் அற்சனைகளுக்கு..... (32) ‡ஸ்ரீமத்.....

இது நிற்க பூ மன்னுபதுமம் என்ற மெய்க்கீர்த்தியுடைய திருமாதாளத்து 1910ஆம் 109 நெ. கல்வெட்டில்.....(4) 'ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு கக பதினொன்றாவது தத ஞாயிற்று இரண்டாந்தியதியும் சனிக்கிழமையும் பெற்ற பூசத்[தின்] நாள்', என வரும் காலக்குறிப்பைக் கணித்ததில் இவ் வெட்டில் காணும் குலோத்துங்கர், கலிங்கத்துப் பரணிகொண்ட முதற்குலோத்துங்கர் அல்ல என்றும், அவர் இரண்டாங் குலோத்துங்கரே என்றும்

'பூ மன்னு பதுமம்' குலோத்துங்கர் II மெய்க்கீர்த்தி

‖சூவல் (Mr. Sewell) துரைமகனார் 1912-ல் முடிவு கட்டினார். பூ மன்னு பதுமம் என்ற ஆரம்பமுடைய இச்சாசனத்தின், காலக் கணிதத்தால் ஏற்பட்ட கருத்து வேறுபாடு, மேலே விவரிக்கப்பட்ட இப் பூ மன்னு பதுமம் என்ற ஆரம்பமுடைய திருவாரூர்க் கல்வெட்

---

*இவனையும் (குலோத்துங்கன் II) இவன் மகன் இராஜராஜனையும் பற்றி ஒன்றும் தெரியவில்லை.....இவர்கள் செயல்கள் ஒன்றும் தெரியவில்லை. சோழ வம்ச சரித்திரம் - பக்கம் : 37. [1910]

†மெய்க்கீர்த்தி.

‡இதனை S. I. I. Vol. II. p. 153 & Vol. IV No. 397லும் பார்க்க. இங்கு வரும் வடமொழிச் சுலோகத்தின் கருத்தாவது :—திருவாரூர் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள திருஞானசம்பந்தர் (பிரமபுரீசர்) அப்பர் (வாகபதி) சுந்தரர் (ஸ்வஸ்சாமி மித்திரர்) இவர்களுக்கு நிலம், பொன், பித்தளை, வெள்ளி முதலியவை பொன்னம்பலம் போற்றும் அபாய மன்னன் தந்தான். புலியூரில் பொன்னம்பலத்து நடேசர் பாதாரவிந்தத்தில் வண்டாக (மொய்க்கும்) அபாயன்.

‖Ep. Report. 1912 p. 67.

டுக்கும் இசைவதாகி, வெட்டின் காலமும் பெரியபுராண ஆசிரியர் காலமும் இரண்டாங் குலோத்துங்கரது காலமாகி (1133-1146) அவரே அநபாயர் என்றும் ஆயிற்று. அவரே முதற் குலோத்துங்க ருக்குப் பேரனும் விக்கிரமசோழருக்குப் பிள்ளையும் ஆவார் என்பது

இரண்டாம் குலோத்துங் கரே அநபாயர்

சகம் 1065-ல் ஏற்பட்ட *செல்லூர் செப்பேட்டால் தெரிகிறது. †பிரம்மஸ்ரீ-ரா. இராகவையங்கார் அவர் கள்* குலோத்துங்கன் உலாவின் கண்ணிகளிலும் இறுதியிலுள்ள வெண்பாவிலும் 'அநபாயன்' பயின்று வருவதால் விக்கிரம சோழன் (அகளங்கன்) மகனை இரண்டாம் குலோத்துங்கனே அநபாயன் என்றார். 1911ஆம் 395 கெ. கல்லெழுத் தில் 'பழம்பேர் தவிர்த்து ‡அநபாய நல்லூர் என்று' பேரிடச் சொல் வது, ஈண்டுச் சிந்திக்க உரியது. இவற்றால் இரண்டாங் குலோத்துங்கரே அநபாயர் என்று சிலாலேகையாலும் அவரது ‡உலாவாலும் தெரி கிறோம்.

அநபாயர் வரலாறு

ஆட்சிகாலம்

இவர் கி. பி. §1133 (மே. 10 முதல் ஜூலை 14-க்குள்) 'செம் பொன் வீரசிம்மாசனத்துத் திருமுத்துப் பந்தலின் கீழ் எழுந்தருளி' கி. பி. ||1146 (மே 22 முதல் ஜூன் 26-க்குள்) வரை ஆட்சிபுரிந்து, பின் §1148 (செப்டம்பர் 15) வரை தம் மகன் இரண்டாம் இராஜராஜர் அரியணை ஏறிய பின்னும் வாழ்ந்தமை தெரிகிறது.

மெய்க்கீர்த்தி கள்

இவர்க்குப் [1]பூ மருவிய புவி ஏழும், [2]பூ மன்னு பதுமம், [3]பூ மன்னு பாவை, [4]பூ மன்னு யாணர், [5]பூ மேவி வளர், [6]பூ மேவு திரு மகள் என்ற ஆரம்பமுடைய மெய்க்கீர்த்திகளும்; ராஜகேசரி, திரிபுவன சக்கரவர்த்திகள், ¶சிவபாத சேகரர், கலிகடிந்த சோழர், கோநேரின்மை கொண் டார் முதலிய விருதுகளும் உண்டு.

---

*Indian Antiquary XIV p. 55.

†'செந்தமிழ்' தொகுதி 3 - பக்கம் : 298, 348.

‡271 1915.

§வரி 317, 627, வெண்பா.

||Historical Inscriptions of South India P. 101, 106, 107.

இம்மெய்க்கீர்த்தி குறிப்புகள் பிரம்மஸ்ரீ - க. அ. நீலகண்ட சாஸ்திரியார் உதவியன.

1. S. I. I. Vol. V. No. 268. 2. S. I. I. Vol. VII. No. 1038.
3. S. I. I. Vol. IV. No. 282. Vo VII. No. 43.
4. S. I. I. Vol. V No. 643.
5. S. I. I. Vol. VII. No. 136. 6. 572 of 1907.

¶533 1922.

பூ மருவிய என்று தொடங்கும் *1901ஆம் 106ஆ. சாசனத்தில் 'நம் பேராற் திருநீற்றுச்சோழன் திருமடைவிளாக மென்று' பேர் இடுமாறும், 1911ஆம்த்து 363 ஆ. சாசனத்தில் 'பழம் பேர் தவிர்த்து குலோத்துங்க சோழன் திருநீற்றுச்சோழ நல்லூர் என்று பேரிட்டு' என்று கூறுவதாலும் இவர்க்கு அப்பெயர் உள்ளமை தெரிகிறோம். இக்கருத்தைக் கோயிற்புராணப் பாயிரம் கஉ-லும், சிதம்பரபுராணப் பாயிரம் கக-லும் பார்க்க.

இவரது †உலாவும், ‡இராஜராஜர் உலாவும், §தக்க யாகப் பரணியும் இவர் தில்லை திருச்சித்திரகூடச் செங்கண்மாலைப் பெயர்த்துக் கடலில் இட்டதைக் கூறுகின்றன. இதனை ¶குருபரம்பரை பிரபந்தமும் ||இராமானுஜார்ய திவ்விய சரிதையும் கூறுகின்றன. குருபரம்பரைப் பிரபந்தம் இவரைக் கிரிமிகண்டன் என்று கூறுகிறது.

திருச்சிற்றம்பலத்தை [1]ஆதித்தர், [2]பராந்தகர், [3]முதற் குலோத்துங்கர், [4]விக்கிரமசோழர் முதலியோர் பொன் வேய்ந்தனர். பேரம்பலம் சிற்றம்பலத்திற்கு வேறுயதொரு இடமென்று பெரியபுராண 250,2061, 3806-ம் பாக்களும், கோயிற் புராண விழாச்சருக்கத்து 19-ம் செய்யுளும் கூறும். இப்பேரம்பலத்தை அநபாயர் பொன் வேய்ந்ததைப் பெரியபுராணமும் **உலாக்களும் கூறுகின்றன.

அம்பலப் பொன்

††கோகர்ணக் கல்வெட்டு "....பேரம்பலம் பொன் மேய்ந்த கோராஜ கேசரிப் பன்மரான திரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு கஉ-வது பூ மன்னு தென்கவிரநாட்டு....." என்று இருப்பதால் இங்கு காணும் பூமன்னு, அநபாயர் மெய்க்கீர்த்தியின் முதற் சொல்லுக்கு ஒத்திருத்தல் கவனிக்கத்தக்கது. இதுவே அன்றி ‡‡சாசனங்களும் 'பேரம்பலம் பொன் வேய்ந்தருளின கோராஜகேசரி பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்கு' என்று கூறுவதும் இதனை வலியுறச் செய்கிறது.

---

*S. I. I. Vol. VII. No. 407.

†வரி 77. ‡வரி 65. §கண்ணி 777.

¶செய்யுள் 795.

||பக் - 239.

1. இடங்கழி நாயனார் புராணம் : செ - 3.
2. A. S. I. 1905 - 06.
3. S. I. I. Vol. IV No. 225.
4. S. I. I. Vol. V No. 458.

**கு. உலா வரி 93. ரா. உலா. வரி 58.

††S. I. I. Vol. VII. No. 1044.

‡‡350/1927, 315/1929, 349/1929.

திருவாரூர் சாசனத்திலுல் இவர் தில்லைக்கூத்தப் பெருமான், மூவர் ஆகியவர்கள் பால் அன்பு பூண்டமை தெரி கின்றும். இவருடைய காலத்து *திருவாமாத்தூர் கல்வெட்டில்"……கோயிலில் திருப்பதிகம் பாடி வரும் குருடர்கள்……பேர்பதினரு வரும் இவர்களுக்கு கண் காட்டுவார் இருவரும் ஆகப் பேர் பதினெண்மர்……மூன்று சந்தியும் வந்து விண்ணப்பஞ் செய்தீ" என்றும், இவருடைய †களத்தூர் சாசனம் 'குலோத்துங்கச் சோழன் திருத்தொண்டத் தொகை நல்லூ ரென் னும் பெயரால் வேறு பிரித்து' என்றும் கூறுவதால் இவர்க்குத் திருமுறையின் பாலிருந்த அன்பு தெரிகிறது.

தீநப்பணியும் பிறவும்

தம் பெயரால் திருச்சி ஜில்லா ஊட்டத்தூரில் குலோத்துங்க சோளீச்சரம் எடுத்தார். இவர் சிதம்பரத்தில் பல பணிகளைச் செய் ததை உலாகூறுகிறது. இவர்க்குப் பிள்ளைத் தமிழ் ஒன்றுண்டு. அது பூ மன்னு என்று ஆரம்பமூடையது. இவரது அரசி புவனமுழுதுடை யாள். குமாரன் இரண்டாம் இராஜராஜன். திருமந்திர ஓலைக்காரன் அர பாயமூவேந்த வேளான். இவரது உலா, பிள்ளைத்தமிழ் ஆசிரியராகிய ஒட்டக்கூத்தர், இவர் காலத்து இருந்தார் என்பர். தண்டியலங் காரத்து மேற்கோள் செய்யுட்களில் இவரைப் புகழும் பாக்கள் எட்டுள.

தஞ்சை ஜில்லா கோட்டூர் ‡சாசனத்தில் வரும் பாலறுவாயன் களப்பாளராயரைப் பாலறுவாயர்(சேக்கிழார் இளவல்) மகனுகக் கொண்டாலும் சேக்கிழார் இரண்டாம் குலோத்துங்கர் காலத்தவர் என்பது ஏற்படுகிறது.

பாலறுவாயர்

இதுவரை நமக்குக் கிடைத்த சாசனங்களாலும், ஆராய்ச்சிகளா லும் பழைய சரித்திர சம்பந்தமான தமிழ் நூல்களாலும், சேக்கிழார் பெருமான் பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வதிந்தவர் என்பது பெறப்படும்.

---

*433/1903. †346/1911.

‡(ஸ்ரீ குலோத்துங்கசோழ தேவர் [III] யாண்டு இரண்டாவது இராஜே ……குலோத்துங்கசோழ வளநாட்டு குன்றத்தூர் நாட்டு குன்றத்தூர் சேக்கி ழான் பாலறுவாயன் களப்பாளராயர்……உபையமாக ஒரு நொந்தா விளக்கு.)

உள்ளுறை

புராணம்	பக்கம்	புராணம்	பக்கம்
அதிபத்தநாயனார்	ச அச	குலச்சிறைநாயனார்	உ0எ
அப்பாலும் அடிச்சார்ந்தார்	நி0க	கூற்றுவநாயனார்	ச எசு
அப்பூதியடிகள்	உகஅ	கோச்செங்கட்சோழநாயனார்	நிகங
அமர்நீதிநாயனார்	சுஎ	கோட்புலிநாயனார்	நி0ச
அரிவாட்டாயநாயனார்	ககங	சடையநாயனார்	நிகள
அரும்பொருள் அகராதி	நிஅக	சண்டேசுவரநாயனார்	கநி0
அறுபத்துமூன்றுநாயன்மார் அட்டவணை	xii	சத்திநாயனார்	சகூ0
		சாக்கியநாயனார்	சசஉ
ஆனாயநாயனார்	ககசு	சித்தத்தைச்சிவன்பாலேவைத்தார்	நி0எ
இசைஞானியார்	நிகள	சிறப்புலிநாயனார்	சசச
இடங்கழிநாயனார்	நி00	சிறுத்தொண்டநாயனார்	சசநி
இயற்பகைநாயனார்	நிஉ	செருத்துணைநாயனார்	நி0உ
இலைமலிந்தசருக்கம்	எக	சேக்கிழார் சுவாமிகள் காலம்	xvi
இளையான்குடிமாறநாயனார்	நிள	,, தோத்திரங்கள்	நிஎள
உரிமையுரை	iii	சேக்கிழார் சுவாமிகள் வரலாறு	v
உருத்திரபசுபதிநாயனார்	கஉஅ	சேக்கிழார் புராணம்	நிசுச
உள்ளுறை	xxi	சேரமான்பெருமாள்நாயனார் (=கழறிற்றறிவார்நாயனார்)	சநிநி
எறிபத்தநாயனார்	எக	சோழர்குடிவழி	நிஎஅ
ஏயர்கோன்கலிக்காமநாயனார்	ஙஅநி	சோமாசிமாறநாயனார்	சசக
ஏனாதிநாதநாயனார்	ளஎ	தடுத்தாட்கொண்ட புராணம்	ககூ
ஐயடிகள்காடவர்கோன்நாயனார்	சகக	தண்டியடிகள்	சஙசு
கடல்சூழ்ந்தசருக்கம்	சகக	திருக்குறிப்புத்தொண்டநாயனார்	கஙச
கணநாதநாயனார்	சஎநி	திருக்கூட்டச்சிறப்பு	கஅ
கணம்புல்லநாயனார்	சகஙக	திருஞானசம்பந்த சுவாமிகள்	உஙங
கண்ணப்பநாயனார்	அஉ	திருத்தொண்டத்தொகை	சச
கலிக்கம்பநாயனார்	சஅஎ	திருத்தொண்டர் திருநகூத்திரம்	நிசுக
கலியநாயனார்	சஅஅ	,, திருநாமக்கோவை	நிசு0
கல்வெட்டுகள்	நிஎக	,, திருவந்தாதி	நிஙச
கழறிற்றறிவார்	சநிநி	,, புராணசாரம்	நிசள
கழற்சிங்கநாயனார்	சகக	,, புராணவரலாறு	நிசுச
கறைக்கண்டன்சருக்கம்	சகங	திருநகரச்சிறப்பு	கஉ
காரிநாயனார்	சகூச	திருநாட்டுச்சிறப்பு	அ
காரைக்காலம்மையார்	உக0		
குங்குலியக்கலயநாயனார்	க0ச		

புராணம்	பக்கம்
திருநாவுக்கரசு சுவாமிகள்	கடுஎ
திருநாளைப்போவார்நாயனார்	கஉக
திருநின்றசருக்கம்	கடுஎ
திருநீலகண்டநாயனார்	சஎ
திருநீலகண்டயாழ்ப்பாணநாயனார்	நுகசு
திருநீலநக்கநாயனார்	உஉங
திருப்பதிகக்கோவை	நுஙo
திருப்பதிக்கோவை	நுஙஉ
திருமலைச்சருக்கம்	ங
திருமலைச் சிறப்பு	ங
திருமுறைகண்ட புராணம்	நுஉடு
திருமூலநாயனார்	சஙங
திருவாரூர்ச்சிறப்பு (=திருநகரச் சிறப்பு)	கஉ
திருவாரூர்ப்பிறந்தார்	நுoஎ
தில்லைவாழந்தணர் சருக்கம்	சசு
,,	சசு
தமிநந்தியடிகள்	உஉஎ
நரசிங்கமுனையரையநாயனார்	சஅங
நின்றசீர்நெடுமாறநாயனார்	சகடு
நெடுமாறநாயனார்	சகடு
நேசநாயனார்	நுகஉ
பத்தராய் பணிவார் சருக்கம்	நுoசு
பத்தராய் பணிவார் புராணம்	நுoசு
பதிப்புரை	iv
பரமனேயேபாடுவார்	நுoஎ
பாட்டுமுதற்குறிப்பகராதி	நுகஙு
பாயிரம்	க

புராணம்	பக்கம்
புகழ்ச்சோழநாயனார்	சளஅ
புகழ்த்துணைநாயனார்	நுoங
பூசலார்நாயனார்	நுக :
பெருமிழலைக்குறும்பநாயனார்	உoக
பொய்யடிமையில்லாதபுலவர் சருக்கம்	சளஅ
,, புராணம்	,,
மங்கையர்க்கரசியார்	நுகஉ
மனுநீதிகண்ட புராணம் (=திருநகரச்சிறப்பு)	கஉ
மன்னியசீர்ச்சருக்கம்	நுகo
மானக்கஞ்சாறநாயனார்	கoஅ
மூப்போதும் திருமேனிதீண்டுவார்	நுoஅ
மும்மையால் உலகாண்டசருக்கம்	கஉக
முருகநாயனார்	கஉசு
முழுநீறுபூசியமுனிவர்	நுoஅ
மூனையடுவார்நாயனார்	சகஎ
மூர்க்கநாயனார்	சஙக
மூர்த்திநாயனார்	கஉக
மெய்ப்பொருள்நாயனார்	சுo
வம்பறாவரிவண்டுச் சருக்கம்	உஙங
வாயிலார்நாயனார்	சகசு
வார்கொண்டவனமுலையாள் சருக்கம்	சசஉ
விறன்மிண்டநாயனார்	சுங
வெள்ளானைச் சருக்கம்	நுகஅ

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பெரிய புராணம்

என வழங்கும்

திருத்தொண்டர் புராணம்

பாயிரம்

வாழ்த்து

1 உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். க

2 ஊன் அடைந்த உடம்பின் பிறவியே
தான் அடைந்த உறுதியைச் சாருமால்
தேன் அடைந்த மலர்ப்பொழில் தில்லையுள்
மாந டஞ்செய் வரதர்பொற் றாள்தொழ. உ

3 எடுக்கும் மாக்கதை இன்தமிழ்ச் செய்யுளாய்
நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக்
கடக்க ளிற்றைக் கருத்துள் இருத்துவாம். ங

வேறு

திருக்கூட்டம்

4 மதிவளர் சடைமுடி மன்று ளாரைமூன்
றுதிசெயும் நாயன்மார் தூய சொல்மலர்
பொதிநலன் துகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே.

திருத்தொண்டர் புராணம்

வேறு

அவையடக்கம்

5 அளவி லாத பெருமைய ராகிய
அளவி லாஅடி யார்புகழ் கூறுகேன்
அளவு கூட உரைப்பரி தாயினும்
அளவி லாசை துரப்ப அறைகுவேன். நு

6 தேரி வரும்பெரு மைத்திருத் தொண்டர்தம்
பொருவ ருஞ்சீர் புகலலுற் றேன்முற்றப்
பெருகு தெண்கடல்உற்றுண் பெருநசை
ஒருசு ணங்கனை ஒக்குந் தகைமையேன். சு

7 சேப்ப லுற்ற பொருளின் சிறப்பினுல்
அப்பொ ருட்குரை யாவருங் கொள்வரால்
இப்பொ ருட்கென் னுரைசிறி தாயினும்
மெய்ப்பொ ருட்குரி யார்கொள்வர் மேன்மையால். எ

8 மேய இவ்வுரை கொண்டு விரும்புமாம்
சேய வன்திருப் பேரம்ப லம்செய்ய
தூய பொன்னணி சோழன்நீ டூழிபார்
ஆய சீர்அன பாயன் அரசவை. அ

9 அருளின் நீர்மைத் திருத்தொண் டறிவரும்
தெருளில் நீரிது செப்புதற் காம்எனின்
வெருளில் மெய்ம்மொழி வான்நிழல் கூறிய
பொருளின் ஆகும் எனப்புகல் வாம்அன்றே. கூ

நூற்பெயர்

வேறு

10 இங்கிதன் நாமம் கூறின் இவ்வுல கத்து முன்னுள்
தங்கிருள் இரண்டில் மாக்கள் சிந்தையுள் சார்ந்து நின்ற
பொங்கிய இருளே ஏனைப் புறஇருள் போக்கு கின்ற
செங்கதி ரவன்போல் நீக்கும் திருத்தொண்டர் புராணம் என்பாம்.

ஆ திருவிருத்தம் கo

க. திருமலைச் சருக்கம்

திருமலைச் சிறப்பு

11 பொன்னின் வெண்திரு நீறு புனைந்தெனப்
பன்னும் நீள்பனி மால்வரைப் பாலது
தன்னை யார்க்கும் அறிவரி யான்என்றும்
மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை. க

12 அண்ணல் வீற்றிருக் கப்பெற்ற தாதலின்
நண்ணும் மூன்றுல குந்நான் மறைகளும்
எண்ணில் மாதவஞ் செய்யவந் தெய்திய
புண்ணி யம்திரண் டுள்ளது போல்வது. உ

13 நிலவும் எண்ணில் தலங்களும் நீடொளி
இலகு தண்தளிர் ஆகள மூந்தரு தார்
உலகம் என்னும் ஒளிமணி வல்லிமேல்
மலரும் வெண்மலர் போல்வதம் மால்வரை. ங

14 மேன்மை நான்மறை நாதமும் விஞ்சையர்
கான வீணையின் ஓசையும் காரெதிர்
தான மாக்கள் முழக்கமும் தாவில்சீர்
வான துந்துபி ஆர்ப்பும் மருங்கெலாம். ச

15 பனிவி சும்பில் அமரர் பணிந்துசூழ்
அனித கோடி அணிமுடி மாலையும்
புனித கற்பகப் பொன்னரி மாலையும்
முனிவர் அஞ்சலி மாலையும் முன்னெலாம். ஞ

16 நீடு தேவர் நிலைகளும் வேண்டிடின்
நாடும் ஐம்பெரும் பூதமும் நாட்டுவ
கோடி கோடி குறட்சிறு பூதங்கள்
பாடி ஆடும் பரப்பது பாங்கெலாம். ட

17 நாய கன்கழல் சேவிக்க நான்முகன்
மேய காலம் அலாமையின் மீண்டவன்
தூய மால்வரைச் சோதியில் மூழ்கியொன்
முய அன்னமும் காண தயர்க்குமால். ண

வேறு

18 *காதில்வெண் குழையோன் கழல்தொழ நெடியோன் காலம் பார்த் திருந்ததும் அறியான், சோதிவெண் கயிலைத் தாழ்வரை மூழையில் துதிக்கையோன் ஊர்தியைக் கண்டு, மீதழு பண்டைச் செஞ்சுடர் இன்று வெண்சுட ரானதென் றதன்கீழ், ஆதிஎ னம தாய் இடக்கலுற் றுன்என் றதணைவந் தணைதரும் கலுழன். அ

19 *அரம்பைய ராடல் முழவுடன் மருங்கில் அருவிகள் எதிரெதிர் முழங்க, வரம்பெறுங் காதல் மனத்துடன் தெய்வ மதுமலர் இருகை யும் ஏந்தி, நிரந்தரம் மிடைந்த விமானசோ பான நீடுயர் வழியினுல் ஏறிப், புரந்தரன் முதலாம் கடவுளர் போற்றப் பொலிவதத் திரு கூ மலைப் புறம்பு.

20 *வேதநான் முகன்மால் புரந்தரன் முதலாம் விண்ணவர் எண் ணிலார் மற்றும், காதலால் மிடைந்த முதற்பெருந் தடையாம் கதிர் மணிக்கோபுரத் துள்ளான், பூதவே தாளப் பெருங்கண நாதர் போற் றிடப் பொதுவில் நின்றாடும், நாதனூர் ஆதி தேவனூர் கோயில் நாய கன் நந்தியெம் பெருமான். கo

21 *நேற்றியிற் கண்ணர் நாற்பெருந் தோளர் நீறணி மேனியர் அனேகர், பெற்றம்மேல் கொண்ட தம்பிரான் அடியார் பிஞ்ஞகன் தன் னருள் பெறுவார், மற்றவர்க் கெல்லாம் தலைமையாம் பணியும் மலர்க் கையில் சுரிகையும் பிரம்பும், கற்றைவார் சடையான் அருளினுல் பெற் றுன் காப்பதக் கயிலைமால் வரைதான். கக

22 *கையில்மான் மழுவர் கங்கைசூழ் சடையில் கதிரிளம் பிறை நறுங் கண்ணி, ஐயர்வீற் றிருக்குந் தன்மையி னுலும் அளப்பரும் பெருமையி னுலும், மெய்யொளி தழைக்குந் தூய்மையி னுலும் வென்றிவெண் குடைஅந் பாயன், செய்யகோல் அபயன் திருமனத் தோங்கும் திருக்கயி லாயநீள் சிலம்பு. கஉ

வேறு

23 அன்ன தன்திருத் தாழ்வரை யின்னிடத்
தின்ன தன்மையன் என்றறி யாச்சிவன்
தன்னை யேஉணர்ந்(து) ஆர்வம் தழைக்கின்றுன்
உன்ன ருஞ்சீர் உபமன் னியமுனி. கந

24 யாத வன்துவ ரைக்கிறை யாகிய
மாத வன்முடி மேலடி வைத்தவன்

---

* இவை சிற்சில பிரதிகளிலில்லை. "காதில் வெண்குழையோன்" என்னும் பாடல் மட்டும் வெள்ளிப்பாடல் என்று காஞ்சி சபாபதி முதலியார் பதிப்பில் குறிக்கப்பட்டிருக் கிறது.

பூத நாதன் பொருவருந் தொண்டினுக்
காதி அந்தம் இலாமை அடைந்தவன். கச

25 அத்தர் தந்த அருட்பாற் கடலுண்டு
சித்தம் ஆர்ந்து தெவிட்டி வளர்ந்தவன்
பத்த ராய மூனிவர்பல் ஆயிரர்
சுத்த யோகிகள் சூழ இருந்துழி. கஙி

26 அங்கண் ஓரொளி ஆயிர ஞாயிறு
பொங்கு பேரொளி போன்றுமுன் தோன்றிடத்
துங்க மாதவர் சூழ்ந்திருந் தாரெலாம்
"இங்கி தென்கொல் அதிசயம்" என்றலும். கசு

27 அந்தி வான்மதி சூடிய அண்ணல்தாள்
சிந்தி யாஉணர்ந் தம்மூனி "தென்திசை
வந்த நாவலர் கோன்புகழ் வன்தோண்டன்
எந்தை யார்அரு ளால்அணை வான்" என. களை

28 கைகள் கூப்பித் தொழுதெழுந் தத்திசை
மெய்யில் ஆனந்த வாரி விரவிடச்
செய்ய நீள்சடை மாமுனி செல்வுழி
ஐயம் நீங்க வினவுவோர் அந்தணர். கஅ

29 "சம்பு வின்அடித் தாமரைப் போதலால்
எம்பி ரான்இறைஞ் சாயிஃ தென்" எனத்
"தம்பி ரானைத்தன் உள்ளம் தழீஇயவன்
நம்பி ஆரூரன் நாம்தொழும் தன்மையான்" கசு

30 என்று கூற இறைஞ்சி இயம்புவார்
"வென்ற பேரொளி யார்செய் விழுத்தவம்
நன்று கேட்க விரும்பும் நசையினேம்
இன்றெ மக்குரை செய்தருள்" என்றலும். உ0

31 உள்ள வண்ணம் மூனிவன் உரைசெய்வான்:
"வெள்ள நீர்ச்சடை மெய்ப்பொரு ளாகிய
வள்ளல் சாத்தும் மதுமலர் மாலையும்
அள்ளும் நீறும் எடுத்தணை வானுளன். உக

32 அன்ன வன்பெயர் ஆலால சுந்தரன்
முன்னம் ஆங்கொரு நாள்முதல் வன்தனக்
கின்ன ஆமெனும் நாண்மலர் கொய்திடத்
துன்னி னுன்நந் தனவனச் சூழலில். உஉ

33 அங்கு முன்எமை ஆளுடை நாயகி
கொங்கு சேர்குழற் காம்மலர் கொய்திடத்

பா. 33. 1 ~~முன்னமை~~ முன் எமை

திங்கள் வாள்முகச் சேடியர் ஏய்தினர்
போங்கு கின்ற கவினுடைப் பூவைமார். உங

34 அந்த மில்சிர் அனிந்திதை ஆய்குழல்
கந்த மாலைக் கமலினி என்பவர்
கொந்து கொண்ட திருமலர் கொய்வுழி
வந்து வானவர் ஈசர் அருளென. உச

35 மாத வம்செய்த தென்திசை வாழ்ந்திடத்
தீதி லாத்திருத் தோண்டத் தொகைதரப்
போது[1]வான்அவர் மேல்மனம் போக்கிடக்
காதல் மாதருங் காட்சியில் கண்ணினர். உஞ

36 முன்னம் ஆங்கவன் மொய்ம்முகை நாண்மலர்
என்னை ஆட்கொண்ட ஈசனுக் கேய்வன
பன்ம லர்கொய்து செல்லப் பனிமலர்
அன்னம் அன்னவ ருங்கொண் டகன்றபின். உசு

37 ஆதி மூர்த்தி அவன்திறம் நோக்கியே
'மாதர் மேல்மனம் வைத்தனை, தென்புவி
மீது தோன்றிஅம் மெல்லிய லாருடன்
காதல் இன்பம் கலந்தனை வாய்' என. உள

38 கைக ளஞ்சலி கூப்பிக்[2]லங்கினன்
'செய்ய சேவடி நீங்குஞ் சிறுமையேன்
மையல் மானுட மாய்மயங் கும்வழி
ஐய னே!தடுத் தாண்டருள் செய்' என. உஅ

39 அங்க ணாளன் அதற்கருள் செய்தபின்
நங்கை மாருடன் நம்பிமற் றத்திசை
தங்கு தோற்றத்தில் இன்புற்றுச் சாரு''மென்
றங்க வன்செயல் எல்லாம் அறைந்தனன். உக

40 அந்த ணாளரும் ஆங்கது கேட்டவர்
''பந்த[3]மானுடப் பாற்படு தென்திசை
இந்த வான்திசை எட்டினும்[4]மேற்பட
வந்த புண்ணியம் யாதெ''ன மாதவன். ஈ0

41 ''போரு வருந்தவத் தான்புலிக் காலனும்
அருமு னிளந்தை அர்ச்சித்தும் உள்ளது
[5]பெருமைசேர் பெரும் பற்றப் புலியூரென்
றிருமை யாளர்வைப் பாம்பதி ஓங்குமால். ஈக

42 அத்தி ருப்பதி யில்நமை ஆளுடை
மெய்த்த வக்கொடி காண விருப்புடன்

பா.பே.1. வான்அவர். 2. கலங்கினான.
3. மானிடப். 4. மேம்பட. 5. பெருமைசேர்

1 அத்தன் நீடிய அம்பலத் தாடும்மற்
றித்தி றம்பெற லாம்திசை எத்திசை. நஉ

43 பூதம்யோவையின் உள்ளலர் போதென
வேத மூலம் வெளிப்படு மேதினிக்
காதல் மங்கை இதய கமலமாம்
மாதொர் பாகனூர் ஆரூர் மலர்ந்ததால். நங

44 எம்பி ராட்டிஇவ் வேமூல னீன்றவள்
தம்பி ராணைத் தனித்தவத் தால்எய்திக்
கம்பை யாற்றில் வழிபடு காஞ்சியென்
றும்பர் போற்றும் பதியும் உடையது. நச

45 நங்கள் நாதனும் நந்தி தவஞ்செய்து
பொங்கு நீடருள் எய்திய பொற்பது
கங்கை வேணி மலரக் கனல்மலர்
செங்கை யாளர் ஐயாறும் திகழ்வது. நரி

46 தேசம் எல்லாம் விளக்கிய தென்திசை
ஈசர் தோணி புரத்துடன் எங்கணும்
பூச னைக்குப் பொருந்தும் இடம்பல
பேசில் அத்திசை ஒவ்வா பிறதிசை'' நசு

47 என்று மாமுனி வன்தொண்டர் செய்கையை
அன்று சொன்ன படியால் அடியவர்
3 தொன்று சீர்த்திருத் தோண்டத் தோகைவிரி
இன்றென் ஆதர வால்இங் கியம்புகேன். நஎ

48 மற்றி தற்குப் பதிகம்வன் தொண்டர்தாம்
புற்றி டத்திதம் புராணர் அருளினல்
சொற்ற மெய்த்திருத் தோண்டத் தோகைஎனப்
பெற்ற நற்பதி கம்தொழப்பிபெற்றதாம். நஅ

49 அந்த மெய்ப்பதி கத்தடி யார்களை
நந்தம் நாதனும் நம்பியாண் டார்நம்பி
புந்தி ஆரப் புகன்ற வகையினல்
வந்தவாறு வழாமல் இயம்புவாம். நகூ

50 உலகம் உய்யவும் சைவம்நின் றோங்கவும்
அலகில் சீர்நம்பி ஆரூரர் பாடிய
நிலவு தொண்டர்தம் கூட்டம் நிறைந்துறை
குலவு தண்புனல் நாட்டணி கூறுவாம். சO

~~ஆ திருவிருத்தம் நிறை~~

பா. பே. 1 நித்தன். 2 யானையும். 3. ~~தன்று~~ தொன்று
4 பெற்றதாம். 5 வாறும்.

திருநாட்டுச் சிறப்பு

51 பாட்டியல் தமிழுரை பயின்ற எல்லையுள்
கோட்டுயர் பனிவரைக் குன்றின் உச்சியில்
சூட்டிய வளர்புலிச் சோழர் காவிரி
நாட்டியல் பதனையான் நவிலல் உற்றனன். க

52 ஆதிமா தவமுனி அகத்தி யன்தரு
பூதநீர்க் கமண்டலம் பொழிந்த காவிரி
மாதர்மண் மடந்தைபொன் மார்பில் தாழ்ந்ததோர்
ஓதநீர் நித்திலத் தாமம் ஒக்குமால். உ

53 கையமால் வரைபயில் தலைமை சான்றது
செய்யபூ மகட்குநற் செவிலி போன்றது
வையகம் பல்லுயிர் வளர்த்து நாள்தொறும்
உய்யவே சுரந்தளித் தூட்டும் நீரது. ங

54 மாலின்உந் திச்சுழி மலர்தன் மேல்வருஞ்
சால்பினுல் பல்லுயிர் தருதன் மாண்பினுல்
கோலநற் குண்டிகை தாங்குங் கொள்கையால்
போலும்நான் முகனையும் பொன்னி மாநதி. ச

55 திங்கள்சூ டியமுடிச் சிகரத் துச்சியில்
பொங்குவெண் தலைநுரை பொருது போதலால்
எங்கள்நா யகன்முடி மிசைநின் றிறையிழி
கங்கையாம் பொன்னியாம் கன்னி நீத்தமே. ஞ

56 வண்ணம்நீள் வரைதர வந்த மேன்மையால்
எண்ணில்பேர் அறங்களும் வளர்க்கும் ஈகையால்
அண்ணல்பா கத்தையா ளுடைய நாயகி
உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது. ட

வேறு

57 வம்பு லாமலர் நீரால் வழிபட்டுச்
செம்பொன் வார்கை எண்ணில் சிவாலயத்
தெம்பி ரானை இறைஞ்சலின் ஈர்ம்பொன்னி
உம்பர் நாயகர்க் கன்பரும் ஒக்குமால். எ

58 வாசம் நீர்குடை மங்கையர் கொங்கையில்
பூசு குங்கும மும்புனை சாந்தமும்
வீசு தெண்திரைமீ திழிந் தோடுநீர்
தேசு டைத்தெனி னுந்தெளி வில்லதே. அ

பா. & ப. 1. நேய்ந்திழி. 2. வம் பவர் மலர்.
3. மீதிழி : மீதிழிந்.

59 மாவி ரைத்தெழுந் தார்ப்ப வரைதரு
பூவி ரித்த புதுமதுப் பொங்கிட
வாவி யிற்பொலி நாடு வளந்தரக்
காவி ரிப்புனல் கால்பரந் தோங்குமால். கூ

60 ஒண்து றைத்தலை மாமத கூடுபோய்
மண்டு நீர்வய லுள்புக வந்ததிர்
கொண்ட மள்ளர் குரைத்தகை ஓசைபோய்
அண்டர் வானத்தின் அப்புறஞ் சாருமால். கo

61 மாதர் நாறு பறிப்பவர் மாட்சியும்
சீத நீர்முடி சேர்ப்பவர் செய்கையும்
ஓதை யார்செய் உழுநர் ஒழுக்கமும்
காதல் செய்வதோர் காட்சி மலிந்தவே. கக

62 உழுத சால்மிக வூறித் தெளிந்தசே(று)
இழுது செய்யினுள் இந்திரத் தெய்வதம்
தொழுது நாறு நடுவார் தொகுதியே
பழுதில் காவிரி நாட்டின் பரப்பெலாம். கஉ

வேறு

63 மண்டுபுனல் பரந்தவயல் வளர்முதலின் சுருள்விரியக்
கண்டுழவர் பதங்காட்டக் கலைகளையுங் கடைசியர்கள்
தண்தரளஞ் சொரிபணிலம் இடறியிடை தளர்ந்தசைவார்
வண்டலையுங்குழல்அல்ல மடநடையின் வரம்பணைவார். கங

64 சேங்குவளை பறித்தணிவார் கருங்குழல்மேல் சிறைவண்டை
அங்கைமலர் களைக்கொடு(உ)கைத் தயல்வண்டும் வரவழைப்பார்
திங்கள்துதல் வெயர்வரும்பச் சிறுமுறுவல் தள(வு)அரும்பப்
பொங்குமலர்க் கமலத்தின் புதுமதுவாய்மடுத்தயர்வார். கச

65 கரும்பல்ல நெல்லென்னக் கழுகல்ல கரும்பென்னச்
சுரும்பல்லி குடைநீலத் துகளல்ல பகலெல்லாம்
அரும்பல்ல முலையென்ன அழுதல்ல மொழியென்ன
வரும்பல்லா யிரங்கடைசி மடந்தையர்கள் வயல்எல்லாம். கஙி

66 கயல்பாய்பைந் தடம்நந்தான் கழிந்தபெருங் கருங்குழிசி
வியல்வாய்வெள் வளைத்தரள மலர்வேரி உலைப்பெய்தங்
கயலாமை அடுப்பேற்றி அரக்காம்பல் நெருப்பூதும்
வயல்மாதர் சிறுமகளிர் வீளையாட்டு வரம்பெல்லாம். கஞ

67 காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாங் குழைக்கு(அ)ரும்பு
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை

பா. வே. 1. பூவி ரைத்த. 2. நீண்டு டி. 3. இழுலைய
4. மடுத்தயிலுவார்.

கோடெல்லாம் மடஅன்னம் குளமெல்லாம் கடல்அன்ன
நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலமெல்லாம். கள

வேறு

68 ஆலை பாய்பவர் ஆர்ப்புறும் ஓலமும்
சோலை வாய்வண் டிசைத்தெழு சும்மையும்
ஞாலம் ஓங்கிய நான்மறை ஓதையும்
வேலை ஓசையின் மிக்கு விரவுமால். கஅ

69 அன்னம் ஆடும் அகன்துறைப் பொய்கையில்
துன்னும் மேதி படியத் துதைந்தெழும்
கன்னி வாளை கமுகின்மேல் பாய்வன
மன்னு வான்மிசை வானவில் போலுமால். கக

70 காவி னிற்பயி லுங்களி வண்டினம்
வாவி யிற்படிந் துண்ணும் மலர்மது
மேவி அத்தடம் மீதெழப் பாய்கயல்
தாவி அப்பொழி லிற்கனி சாடுமால். உo

வேறு

71 சாலிநீள் வயலின் ஓங்கித் தங்கிகர் இன்றி மிக்கு
வாலிதாம் வெண்மை உண்மைக் கருவினும் வளத்த வாகிச்
சூல்முதிர் பசலை கொண்டு சுருள்விரித் தரனுக் கன்பர்
ஆலின சிந்தை போல அலர்ந்தன கதிர்க ளெல்லாம். உக

72 பத்தியின் பால ராகிப் பரமனுக் காளாம் அன்பர்
தத்தமில் கூடி னார்கள் தலையினல் வணங்கு மாபோல்
மொய்த்தநீள் பத்தி யின்பால் முதிர்தலை வணங்கி மற்றை
வித்தகர் தன்மை போல விளைந்தன சாலி யெல்லாம். உஉ

73 அரிதரு செந்நெற் சூட்டின் அடுக்கிய அடுக்கல் சேர்ப்பார்
பரிவுறத் தடிந்த பன்மீன் படர்நெடுங் குன்று செய்வார்
சுரிவளை சொரிந்த முத்தின் சுடர்ப்பெரும் பொருப்பு (உ)யர்ப்பார்
விரிமலர்க் கற்றை வேரி பொழிந்திழி வெற்பு வைப்பார். உங

74 சாலியின் கற்றை துற்ற தடவரை முகடு சாய்த்துக்
காலிரும் பகடு போக்குங் கருமெருமும் பாண்டில் ஈட்டம்
[illegible]ய முகிலின் கூட்டம் அருவரைச் சிமயச் சாரல்
மேல்வலங் கொண்டு சூழுங் காட்சியின் மிக்க தன்றே. உச

75 வைதெரிந் தகற்றி ஆற்றி மழைபெயல் மானத் தூற்றிச்
செய்யபோற் குன்றும் வேறு நவமணிச் சிலம்பும் என்னக்
கைவினை மள்ளர் வானங் கரக்கவாக் கியநெற் குன்றல்
மொய்வரை உலகம் போலும் முளரிநீர் மருத வைப்பு உடு

பா.பே.1. கருவிநூல்: 2. திருத்தொண்டர் புராணம்.

76 அரசுகொள் கடன்கள் ஆற்றி மிகுதிகொண் டறங்கள் பேணிப்
பரவருங் கடவுட் போற்றிக் குரவரும் விருந்தும் பண்பின்
விரவிய கிளையுந் தாங்கி விளங்கிய குடிகள் ஓங்கி
வரைபுரை மாடம் நீடி மலர்ந்துள பதிகள் எங்கும். உசு

77 கரும்படு களமர் ஆலைக் கமழ்நறும் புகையோ மாதர்
சுரும்பெழ அகிலால் இட்ட தூபமோ யூப வேள்விப்
பெரும்பெயர்ச் சாலை தோறும் பிறங்கிய புகையோ வானின்
வருங்கரு முகிலோ சூழ்வ மாடமும் காவும் எங்கும். உள

78 நாளிகே ரஞ்செ ருந்தி நறுமலர் நரந்தம் எங்கும்
கோளிசா லந்த மாலங் குளிர்மலர்க் குரவம் எங்கும்
தாளிரும் போந்து சந்து தண்மலர் நாகம் எங்கும்
நீளிலை வஞ்சி காஞ்சி நிறைமலர்க் கோங்கம் எங்கும். உஅ

79 சூதபா டலங்கள் எங்கும் சூழ்வழை ஞாழல் எங்கும்
சாதிமா லதிகள் எங்கும் தண்தளிர் நறவம் எங்கும்
மாதவி சரளம் எங்கும் வகுளசண் பகங்கள் எங்கும்
போதவிழ் கைதை எங்கும் பூகபுன் னகம் எங்கும். உக

80 மங்கல வினைகள் எங்கும் மணஞ்செய்கம் பலிகள் எங்கும்
பங்கய வதனம் எங்கும் பண்களின் மழலை எங்கும்
பொங்கொளிக் கலன்கள் எங்கும் புதுமலர்ப் பந்தர் எங்கும்
செங்கயல் பழனம் எங்கும் திருமகள் உறையுள் எங்கும். நஎ

81 மேகமும் களிறும் எங்கும் வேதமும் கிடையும் எங்கும்
யாகமும் சடங்கும் எங்கும் இன்பமும் மகிழ்வும் எங்கும்
யோகமும் தவமும் எங்கும் ஊசலும் மறுகும் எங்கும்
போகமும் பொலிவும் எங்கும் புண்ணிய முனிவர் எங்கும். நக

82 பண்தரு விபஞ்சி எங்கும் பாதசெம் பஞ்சி எங்கும்
வண்டறை குழல்கள் எங்கும் வளரிசைக் குழல்கள் எங்கும்
தொண்டர்தம் இருக்கை எங்கும் சொல்லுவ(து) இருக்கை எங்கும்
தண்டலை பலவும் எங்கும் தாதகி பலவும் எங்கும். நஉ

83 மாடுபோ தகங்கள் எங்கும் வண்டுபோ தகங்கள் எங்கும்
பாடும்அம் மனைகள் எங்கும் பயிலும்அம் மனைகள் எங்கும்
நீடுகே தனங்கள் எங்கும் நிதிநிகே தனங்கள் எங்கும்
தோடுசூழ் மாலை எங்கும் துணைவர்சூழ் மாலை எங்கும். நங

84 வீதிகள் விழவின் ஆர்ப்பும் விரும்பினர் விருந்தின் ஆர்ப்பும்
சாதிகள் நெறியில் தப்பா தனயரும் ~~அவனியில்~~ தப்பா
நீதிய புள்ளும் மாவும் நிலத்திருப்பு (உ)ள்ளு மாவும்
ஓதிய எழுத்தாம் அஞ்சும் உறுபிணி வரத்தாம் அஞ்சும். நச

பா. பெ. 1 தப்பாரா.

85 நற்றமிழ் வரைப்பின்! ஓங்கு நாம்புகழ் திருநா டென்றும்
பொற்றடந் தோளால் வையம் பொதுக்கடிந் தினிது காக்கும்
கொற்றவன் அநபா யன்பொற் குடைநிழற் குளிர்வ தென்றுல்
மற்றதன் பெருமை நம்மால் வரம்புற விளம்ப லாமோ. நடு

திருவிருத்தம் - அஞ்.

திருநகரச் சிறப்பு

86 சொன்ன நாட்டிடைத் தொன்மையில் மிக்கது
மன்னும் மாமல ராள்வழி பட்டது
வன்னி யாறு மதிபொதி செஞ்சடைச்
சென்னி யார்திரு வாரூர்த் திருநகர். க

87 வேத ஒசையும் வீணையின் ஓசையும்
சோதி வானவர் தோத்திர ஓசையும்
மாதர் ஆடல் மணிமுழ வோசையும்
கீத ஒசையு மாய்க்கிளர் வுற்றதே. உ

88 பல்லி யங்கள் பரந்த ஒலியுடன்
செல்வ வீதிச் செழுமணித் தேரொலி
மல்லல் யானை ஒலியுடன் மாவொலி
எல்லை இன்றி எழுந்துள எங்கணும். ங

89 மாட மாளிகை சூளிகை மண்டபம்
கூட சாலைகள் கோபுரம் தெற்றிகள்
நீடு சாலர நீடரங் கெங்கணும்
ஆடல் மாதர் அணிநிலம் பார்ப்பன. ச

90 அங்கு ரைக்கென் னளவப் பதியிலார்
தங்கள் மாளிகை யின்னென்று சம்புவின்
பங்கி னுள்திருச் சேடிப் பரவையாம்
மங்கை யார்அவ தாரஞ்செய் மாளிகை. ஞ

91 படர்ந்த பேரொளிப் பன்மணி வீதிபார்
இடந்த எனமும் அன்னமும் தேடுவார்
தொடர்ந்து கொண்டவன் தொண்டர்க்குத் தூதுபோய்
நடந்த செந்தா மரையடி நாறுமால். ட

92 செங்கண் மாதர் தெருவில் தெளித்தசெங்
குங்கு மத்தின் குழம்பை அவர்குழல்

பா.வே.நி. நிலையம். ஒப்பு ✓

பொங்கு கோதையின் பூந்துகள் வீழ்ந்துடன்
அங்கண் மேவி அளறு புலர்த்துமால். எ

93 உள்ளம் ஆர்உரு காதவர் ஊர்விடை
வள்ள லார்திரு வாரூர் மருங்கெலாம்
தெள்ளும் ஓசைத் திருப்பதி கங்கள்பைங்
கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள். அ

94 விளக்கம் மிக்க கலன்கள் விரவலால்
துளக்கில் பேரொலி யால்துன்னு பண்டங்கள்
வளத்தொ டும்பல ஆறு மடுத்தலால்
அளக்கர் போன்றன ஆவண வீதிகள். கூ

95 ஆர ணங்களே அல்ல மறுகிடை
வார ணங்களும் மாறி முழங்குமால்
சீர ணங்கிய தேவர்க ளேயலால்
தோர ணங்களில் தாமமுஞ் சூழுமால். கூ

96 தாழ்ந்த வேணியர் சைவர் தபோதனர்
வாழ்ந்த சிந்தை முனிவர் மறையவர்
வீழ்ந்த இன்பத் துறையுள் விரவுவார்
சூழ்ந்த பல்வே றிடத்ததத் தொல்நகர். கக

97 நிலம கட்கழ|கார்திரு நீள்நுதல்
திலகம் ஒப்பது செம்பியர் வாழ்பதி
மலர்ம கட்குவண் தாமரை போல்மலர்ந்
தலகில் சீர்திரு வாரூர் விளங்குமால். கஉ

98 அன்ன தொல்நக ருக்கர சாயினுன்
துன்னு|செங்கதி ரோன்வழித் தோன்றினுன்
மன்னு சீர்அந பாயன் வழிமுதல்
மின்னும் மாமணிப் பூண்மனு வேந்தனே. கந

99 மண்ணில் வாழ்தரு மன்னுயிர் கட்கெலாம்
கண்ணும் ஆவியும் ஆம்பெருங் காவலான்
விண்ணு ளார்மகிழ் வெய்திட வேள்விகள்
எண்ணி லாதன மாண இயற்றினுன். கச

100 கோற்ற ஆழி குவலயஞ் சூழ்ந்திடச்
சுற்று மன்னர் திறைகடை சூழ்ந்திடச்
செற்றம் நீக்கிய செம்மையின் மெய்ம்மனுப்
பெற்ற நீதியுந் தன்பெயர் ஆக்கினுன். கரு

101 பொங்கு மாமறைப் புற்றிடங் கொண்டவர்
எங்கும் ஆகி இருந்தவர் பூசனைக்

பா. பே. 1 கார்திரு. 2. ஏலங்க ழி.

கங்கண் வேண்டும் நிபந்தமா ராய்ந்துளான்
துங்க ஆகமம் சொன்ன முறைமையால். கசு

வேறு

102 அறம்பொரு ளின்ப மான அறநெறி வழாமல் புல்லி
மறங்கடிந் தரசர் போற்ற வையகம் காக்கும் நாளில்
நிறந்தரல் தவத்தால் தேவி திருமணி வயிற்ற மைந்தன்
பிறந்தனன் உலகம் போற்றப் பேர்அரிக் குருளை அன்னன். கள

103 தவம்முயன் றரிதில் பெற்ற தனிஇளங் குமரன் நாளுஞ்
சிவம்முயன்1றடைந்து தெய்வக் கலைபல திருந்த ஓதிக்
2கவனவாம் புரவி யானை தேர்படைத் தொழில்கள் கற்றுப்
பவம்முயன் றதுவும் பேறே எனவரும் பண்பில் மிக்கான். கஅ

104 அளவில்தொல் கலைகள் முற்றி அரும்பெறல் தந்தை மிக்க
உளம்மகிழ் காதல் கூர ஓங்கிய குணத்தால் நீடி
இளவர சென்னுந் தன்மை எய்துதற் கணிய னாகி
வளரிளம் பரிதி போன்று வாழுநாள் ஒருநாள் மைந்தன். கக

105 திங்கள்வெண் கவிகை மன்னன் திருவளர் கோயில் நின்று
மங்குல்தோய் மாடவீதி மன்னிளங் குமரர் சூழக்
கொங்கலர் மாலை3தாழ்ந்த குங்குமக் குவவுத் தோளான்
பொங்கிய தானை சூழத் தேர்மிசைப் பொலிந்து போந்தான். உ0

106 4பரசுவந் தியர்முன் சூதர் மாகதர் ஒருபால் பாங்கர்
விரைநறுங் குழலார் சிந்தும் வெள்வளை ஒருபால் மிக்க
முரசொடு சங்கம் ஆர்ப்ப முழங்கொலி ஒருபால் வென்றி
அரசிளங் குமரன் போதும் அணிமணி மாட வீதி. உக

107 தனிப்பெருந் தருமந் தானோர் தயாஇன்றித் தானை மன்னன்
பனிப்பில்சிந் தையினில் உண்மைப் பான்மைசோ தித்தால் என்ன
மனித்தர்தன் வரவு காணு வண்ணமோர் வண்ணம் நல்ஆன்
புனிற்றிளங் கன்று துள்ளிப் போந்ததம் 5மறுகி னூடே. உஉ

108 அம்புனிற் றாவின் கன்றோர் அபாயத்தின் ஊடு போகிச்
செம்பொனின் தேர்க்கால் மீது விசையினுல் செல்லப் 6பட்டே
உம்பரின் அடையக் கண்டங் குருகுதாய் அலமந் தோடி
வெம்பிடும் அலறும் சோரும் மெய்ந்நடுக் குற்று வீழும். உங

109 மற்றது கண்டு மைந்தன் "வந்ததிங் கபாயம்" என்று
சொல்தடு மாறி நெஞ்சில் துயருழந் தறிவு ழிந்து
"பெற்றமுங் கன்றும் இன்றென் உணர்வெனும் பெருமை மாளச்
செற்ற,என் செய்கேன்" என்று தேரின்நின் றிழிந்து வீழ்ந்தான். உச

பா.பே. 1 நடையும். 2. கவனவையும்.
3 தாழ்ந்து இருக்குமாயினும் 4 அவர்க்கே.
5. மறுகி னூடே.

110 அலறுபேர் ஆவை நோக்கி ஆர்உயிர் பதைத்துச் சோரும்
நிலமிசைக் கன்றை நோக்கி நெடிதுயிர்த் திரங்கி நிற்கும்
"மலர்தலை உலகங் காக்கும் மனுவெனும் என்கோ மானுக்
குலகில்இப் பழிவந் தெய்தப் பிறந்தவா ஒருவன்" என்பான். உடு

111 "வந்தஇப் பழியை மாற்றும் வகையினை மறைநூல் வாய்மை
அந்தணர் விதித்த ஆற்றால் ஆற்றுவ தறமே ஆகில்
எந்தைஈ தறியா முன்னம் இயற்றுவன்" என்று மைந்தன்
சிந்தைவெந் துயரந் தீர்ப்பான் திருமறை யவர்முன் சென்றான். உசு

112 தன்னுயிர்க் கன்று வீயத் தளர்ந்தஆத் தரியா தாகி
முன்நெருப் புயிர்த்து விம்மி முகத்தினில் கண்ணீர் வார
மன்னுயிர் காக்குஞ் செங்கோல் மனுவின்பொன் கோயில் வாயில்
பொன்னணி மணியைச் சென்று கோட்டினால் புடைத்த தன்றே. உஎ

113 பழிப்பறை முழக்கோ ஆர்க்கும் பாவத்தின் ஒலியோ வேந்தன்
வழித்திரு மைந்தன் ஆவி கொளவரும் மறலி ஊர்திக்
கழுத்தணி மணியின் ஆர்ப்போ என்னத்தன் கடைமுன் கேளாத்
தெழித்தெழும் ஓசை மன்னன் செவிப்புலம் புக்க போது. உஅ

114 ஆங்கது கேட்ட வேந்தன் அரியணை இழிந்து போந்து
பூங்கொடி வாயில் நண்ணக் காவலர் எதிரே போற்றி
"ஈங்கிதோர் பசுவந் தெய்தி, இறைவனின் கொற்ற வாயில்
தூங்கிய மணியைக் கோட்டால் துளக்கிய" தென்று சொன்னார். உக

115 மன்னவன் அதனைக் கேளா வருந்திய பசுவை நோக்கி
"என்இதற் குற்ற"தென்பான் அமைச்சரை இகழ்ந்து நோக்க
முன்னுற நிகழ்ந்த எல்லாம் அறிந்துளான் முதிர்ந்த கேள்வித்
தொன்னெறி அமைச்சன் மன்னன் தாளினை தொழுது சொல்வான்:

116 "வளவனின் புதல்வன் ஆங்கோர் மணிநெடுந் தேர்மேல் ஏறி
அளவில்தேர்த் தானை சூழ அரசுலாந் தெருவில் போங்கால்
இளையஆன் கன்று தேர்க்கால் இடைப்புகுந் திறந்த தாகத்
தளர்வுறும் இத்தாய் வந்து விளைத்ததித் தன்மை" என்றான். ஙக

117 அவ்வுரை கேட்ட வேந்தன் ஆவுறு துயரம் எல்லாம்
வெவ்விடந் தலைக்கொண் டாற்போல் வேதனை அகத்து மிக்"கிங்
கிவ்வினை விளைந்த வா"றென் றிடருறும் இரங்கும் ஏங்கும்
"செவ்விதென் செங்கோல்!" என்னும் தெருமரும் தெளியும் தேறான்.

118 "மன்னுயிர் புரந்து வையம் பொதுக்கடிந் தறத்தில் நீடும்
என்னெறி நன்றால்" என்னும் "என்செய்தால் தீரும்" என்னும்
தன்னிளங் கன்று காணத் தாய்முகங் கண்டு சோரும்
அந்நிலை அரசன் உற்ற துயரம்ஓர் அளவிற் றன்றால். ஙங

பா. வே. நி. என்னென் நமைச்சரை. உவாவென்.

வேறு

119 மந்திரிகள் அதுகண்டு மன்னவனே அடிவணங்கிச்
"சிந்தைதளர்ந் தருளுவது மற்றிதற்குத் தீர்வன்றால்
கொந்தலர்தார் மைந்தனேமுன் கோவதைசெய் தார்க்குமறை
அந்தணர்கள் விதித்தமுறை வழிநிறுத்தல் அறம்" என்றார். நச

120 "வழக்கென்று நீர்மொழிந்தால் மற்றதுதான் வலிப்பட்டுக்
குழக்கன்றை இழந்தலறுங் கோவுறுநோய் மருந்தாமோ
இழக்கின்றேன் மைந்தனைஎன் றெல்லீருஞ் சொல்லியஇச்
சழக்கின்று ஈனிசைந்தால் தருமந்தான் சலியாதோ."

121 "மாநிலங்கா வலனுவான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னுல்தன் பரிசனத்தால்
ஊனம்மிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்துந்தீர்த்(து) அறங்காப்பான் அல்லனே."

122 "என்மகன்செய் பாதகத்துக் கிரும்தவங்கள்செயஇசைந்தே
அன்னியன்ஓர் உயிர்கொன்றால் அவனைக்கொல் வேனுனல்
தோன்மனுநூல் தொடைமனுவால் துடைப்புண்ட தெனும்வார்த்தை
மன்னுலகில் பெறமொழிந்தீர் மந்திரிகள் வழக்"கென்றான். நஎ

123 என்றரசன் இகழ்ந்துரைப்ப எதிர்நின்ற மதிஅமைச்சர்
"நின்றநெறி உலகின்கண் இதுபோல்முன் நிகழ்ந்ததால்
பொன்றுவித்தல் மரபன்று மறைமொழிந்த அறம்புரிதல்
தொன்றுதொடு நெறியன்றே தொல்நிலங்கா வல!"என்றார். நஅ

124 அவ்வண்ணம் தொழுதுரைத்த அமைச்சர்களை முகம்நோக்கி
மெய்வண்ணந் தெரிந்துணர்ந்த மனுவென்னும்விறல்வேந்தன்
"இவ்வண்ணம் பழுதுரைத்தீர்" என்றெரியின் இடைத்தோய்ந்த
செவ்வண்ணக் கமலம்போல் முகம்புலர்ந்து செயிர்த்துரைப்பான்.

125 "அவ்வுரையில் வருநெறிகள் அவைநிற்க அறநெறியின்
செவ்வியுண் மைத்திறம்நீர் சிந்தையெயா துரைக்கின்றீர்
எவ்வுலகில் எப்பெற்றம் இப்பெற்றித் தாம்இடரால்
வெவ்வுயிர்த்துக் கதறிமணி எறிந்துவிழுந் தது"விளம்பீர். சO

126 "போற்றிசைத்துப் புரந்தரன்மால் அயன்முதலோர் புகழ்ந்திறைஞ்ச
வீற்றிருந்த பெருமானார் மேவியுறை திருவாரூர்த்
தோற்றமுடை உயிர்கொன்றான் ஆதலினுல் துணிபொருள்தான்
ஆற்றவுமற் றவற்கொல்லும் அதுவேயாம் எனநினைமின்".

127 எனமொழிந்து "மற்றிதனுக் கினியிதுவே செயல்இவ்வுன்
மனம்அழியுந் தீயர்அகற்ற மாட்டாதேன் வருந்தும்இது

பா.பே. 1. செயதிலை சென்றேன். 2. நிறை.

தன துறுபேர் இடர்யானும் தாங்குவதே தருமம்''என
அநகன் அரும் பொருள் துணிந்தான் அமைச்சரும் அஞ்சினர் அகன்றார்.

128 மன்னவன் தன் மைந்தனை அங் கழைத்தொரு மந் திரி தன்னை
''முன்னிவனை அவ்வீதி முரண்தேர்க்கால் ஊர்க''என
அன்னவனும் அதுசெய்யா தகன்றுதன் ஆர் உயிர்துறப்பத்
தன்னுடைய குலமகனைத் தான்கொண்டு மறுகணீர்ந்தான். சஎ

129 ஒருமைந்தன் தன்குலத்துக் குள்ளான்என் பதும்உணரான்
தருமம்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமம்தன் தேராழி உறஊர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோமற் றெளிதோதான். சஅ

130 தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழைசொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங் கப்பெருமான். சஉ

131 சடைமருங்கில் இளம்பிறையுந் தனிவிழிக்குந் திருநுதலும்
இடமருங்கில் உமையாளும் எம்மருங்கும் பூதகணம்
புடைதெருங்கும் பெருமையும்முன் கண்டரசன் போற்றிசைப்ப
விடைமருவும் பெருமானும் விறல்வேந்தற் கருள்கொடுத்தான். சஊ

132 அந்நிலையே உயிர்பிரிந்த ஆன்கன்றும் அவ்வரசன்
மன்னுரிமைத் தனிக்கன்றும் மந்திரியும் உடன்எழலும்
இன்னபரி சானுன்என் றறிந்திலன்வேந் தனும்யார்க்கும்
முன்னவனே முன்நின்ரு முடியாத போருளுளதோ. சஎ

133 அடிபணிந்த திருமகனை ஆகமுற எடுத்தணைத்து
நெடிதுமகிழ்ந் தருந்துயரம் நீங்கினான் நிலவேந்தன்
மடிசுரந்து பொழிதீம்பால் வருங்கன்று மகிழ்ந்துண்டு
படிநனைய வரும்பசுவும் பருவரல்நீங் கியதன்றே. சஅ

134 பொன்தயங்கு மதிலாரூர்ப் பூங்கோயில் அமர்ந்தபிரான்
வென்றிமனு வேந்தனுக்கு வீதியிலே அருள்கொடுத்துச்
சென்றருளும் பெருங்கருணைத் திறங்கண்டு தன்னடியார்க்
கென்றும்எளி வரும்பெருமை ஏழுலகும் எடுத்தேத்தும். சகூ

135 இனையவகை அறநெறியில் எண்ணிறந்தோர்க் கருள்புரிந்து
முனைவரவர் மகிழ்ந்தருளப் பெற்றுடைய மூதூர்மேல்
புனையும்உரை நம்மளவில் புகலலாந் தகைமையதோ
அனையதனுக் ககமலராம் அறவனார் பூங்கோயில். ஙo

~~ஆ திருவிருத்தம் கூடுங்.~~

உ பா. பே. 1. மனுவேழிந்தது.
மழை தொனிந்தார் ✓

திருக்கூட்டச் சிறப்பு

136 பூத நாயகர் புற்றிடங் கொண்டவர்
ஆதி தேவர் அமர்ந்தபூங் கோயிலில்
சோதி மாமணி நீள்சுடர் முன்றில்சூழ்
மூதெ யில்திரு வாயில்மூன் னியது. க

137 பூவார் திசைமுகன் இந்திரன் பூமிசை
மாவாழ் அகலத்து மால்முதல் வானவர்
ஓவா தெவரும் நிறைந்துறைந் துள்ளது
தேவா சிரியன் எனுந்திருக் காவணம். உ

138 அரந்தை தீர்க்கும் அடியவர் மேனிமேல்
நிரந்த நீற்றெளி யால்நிறை தூய்மையால்
புரந்த அஞ்செழுத் தோசை பொலிதலால்
பரந்த ஆயிரம் பாற்கடல் போல்வது. ங

139 அகில காரணர் தாள்பணி வார்கள்தாம்
அகில லோகமும் ஆளற் குரியர்என்
றகில லோகத்து ளார்கள் அடைதலின்
அகில லோகமும் போல்வ ததனிடை. ச

140 அத்தர் வேண்டிமூன் ஆண்டவர் அன்பினுல்
மெய்த்த ழைந்து விதிர்ப்புறு சிந்தையார்
கைத்தி ருத்தொண்டு செய்கடப் பாட்டினர்
இத்தி றத்தவர் அன்றியும் எண்ணிலார். ஞ

141 மாசி லாத மணிதிகழ் மேனிமேல்
பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்
தேசி னல்லத் திசையும் விளக்கினர்
பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினர். ட

142 பூதம் ஐந்தும் நிலையில் கலங்கினும்
மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்
ஓது காதல் உறைப்பின் நெறிநின்றார்
கோதி லாத குணப்பெருங் குன்றனர். ண

143 கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்
ஓடுஞ் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிட லேஅன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினர். அ

பா.பே.I. ஞானசு. 2. ஆனவர்.

144 ஆரங் கண்டிகை ஆடையுங் கந்தையே
பாரம் ஈசன் பணிஅல தோன்றிலார்
ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்
வீரம் என்னுல் விளம்புந் தகையதோ. கூ

145 வேண்டும் ஆறு விருப்புறும் வேடத்தர்
தாண்ட வப்பெரு மான்தனித் தொண்டர்கள்
நீண்ட தொல்புக ழார்தம் நிலைமையை
ஈண்டு வாழ்த்துகேன் என்னறிந் தேத்துகேன். கo

146 இந்த மாதவர் கூட்டத்தை எம்பிரான்
அந்தம் இல்புகழ் ஆலால சுந்தரன்
சுந்த ரத்திருத் தோண்டத் தொகைத்தமிழ்
வந்து பாடிய வண்ணம் உரைசெய்வாம். கக

~~ஆதி திருவிருத்தம் கூசு~~

தடுத்தாட்கொண்ட புராணம்

147 கங்கையும் மதியும் பாம்பும் கடுக்கையும் முடிமேல் வைத்த
அங்கணர் ஓலை காட்டி ஆண்டவர் தமக்கு நாடு
மங்கையர் வதன சீத மதிஇரு மருங்கும் ஓடிச்
செங்கயல் குழைகள் நாடும் திருமுனைப் பாடி நாடு. க

148 பெருகிய நலத்தால் மிக்க பெருந்திரு நாடு தன்னில்
அருமறைச் சைவம் ஓங்க அருளினுல் அவத ரித்த
மருவிய தவத்தால் மிக்க வளம்பதி, வாய்மை குன்றுத்
திருமறை யவர்கள் நீடும் திருநாவ லூராம் அன்றே. உ

149 மாதொரு பாக னுர்க்கு வழிவழி அடிமை செய்யும்
வேதியர் குலத்துள் தோன்றி மேம்படு சடைய னுர்க்கு
ஏதமில் கற்பின் வாழ்க்கை மனைஇசை ஞானி யார்பால்
தீதகன் றுலகம் உய்யத் திருஅவ தாரம் செய்தார். ங

150 தம்பிரான் அருளி னுலே தவத்தினுல் மிக்கோர் போற்றும்
நம்பியா ரூரர் என்றே நாமமுஞ் சாத்தி மிக்க
ஐம்படைச் சதங்கை சாத்தி அணிமணிச் சுட்டிசாத்திச்
செம்பொன்நாண் அரையில் மின்னத் தெருவில்தேர் உருட்டி நாளில்.

151 நரசிங்க முனையர் என்னும் நாடுவாழ் அரசர் கண்டு
பரவருங் காதல் கூரப் பயந்தவர் தம்பால் சென்று

விரவிய நண்பி னுலே வேண்டினர் பெற்றுத் தங்கள்
அரசிளங் குமரற் கேற்ப அன்பினுல் மகன்மை கொண்டார். நு

152 பெருமைசால் அரசர் காதல் பிள்ளையாய்ப் பின்னும் தங்கள்
வருமுறை மரபில் வைகி வளர்ந்துமங் கலஞ்செய் கோலத்
தருமறை முந்நூல் சாத்தி அளவில்தொல் கலைகள் ஆய்ந்து
திருமலி சிறப்பின் ஓங்கிச் சீர்மணப் பருவஞ் சேர்ந்தார். சு

153 தந்தையார் சடைய னூர்தம் தனித்திரு மகற்குச் சைவ
அந்தணர் குலத்துள் தங்கள் அரும்பெரும் மரபுக் கேற்ப
1 வந்ததொல் சிறப்பின் புத்தூர்ச் சடங்கவி மறையோன் தன்பால்
சேந்திரு அனைய கன்னி மணத்திறம் செப்பி விட்டார். எ

154 குலமுதல் அறிவில் மிக்கோர் கோத்திர முறையும் தேர்ந்தோர்
நலம்மிகு முதியோர் சொல்லச் சடங்கவி நன்மை ஏற்று
மலர்தரு முகத்தன் ஆகி மணம்புரி செயலின் வாய்மை
பலவுடன் பேசி ஒத்த பண்பினுல் அன்பு நேர்ந்தான். அ

155 மற்றவன் இசைந்த வார்த்தை கேட்டவர் வள்ளல் தன்னைப்
பெற்றவர் தம்பால் சென்று சொன்னபின் பெருகு சிந்தை
உற்றதோர் மகிழ்ச்சி எய்தி மணவினை உவந்து சாற்றக்
கொற்றவர் திருவுக் கேற்பக் குறித்து நாள்ஓலை விட்டார். கூ

156 மங்கலம் பொலியச் செய்த மணவினை ஓலை ஏந்தி
அங்கயல் கண்ணி னரும் ஆடவர் பலரும் ஈண்டிக்
கொங்கலர் சோலை மூதூர் குறுகினர் எதிரே வந்து
பங்கய வதனி மாரும் மைந்தரும் பணிந்து கொண்டார். கo

157 மகிழ்ச்சியால் மணம்மீக் கூறி மங்கல வினைகள் எல்லாம்
புகழ்ச்சியால் பொலிந்து தோன்றப் போற்றிய தொழிலர் ஆகி
இகழ்ச்சியொன் றுனும் இன்றி எந்துபூ மாலைப் பந்தர்
நிகழ்ச்சியில் மைந்தர் ஈண்டி நீள்முளை சாத்தி னார்கள். கக

158 மணவினைக் கமைந்த செய்கை மாதினைப் பயந்தோர் செய்யத்
4 துணைமலர்க் கோதைத் தாமச் சுரும்பினை தோளி னினைப்
புணர்மணத் திருநாள் முன்னுல் பொருந்திய விதியி னுலே
பணைமுர சியம்ப வாழ்த்திப் பைம்பொன்நாண் காப்புச் சேர்த்தார்.

159 மாமறை விதிவ ழாமல் மணத்துறைக் கடன்கள் ஆற்றித்
தூமறை மூதூர்க் கங்குல் மங்கலம் துவன்றி ஆர்ப்பத்
தேமரு தொடையல் மார்பன் திருமணக் கோலங் காணக்
காமுறு மனத்தான் போலக் கதிரவன் உதயம் செய்தான். கஙு

160 கால்லசெய் வினைகள் முற்றிக் கணிதனூல் புலவர் சொன்ன
வேலைவந் தணையா முன்னர் விதிமணக் கோலம் கொள்வான்

பா. பே. 1. வந்ததோர். ✓
2. அறிவில்மிக்கார்: அறிவுமிக்க.
3. இனிது. 4. துணைமலர்.

நூலசைந் திலங்குமார்பின் நுணங்கிய கேள்வி மேலோன்
மாலையுந் தாரும் பொங்க மஞ்சனச் சாலை புக்கான். கச

161 வாசநெய் பூட்டிமிக்க மலர்விரை அடுத்த தூநீர்ப்
பாசனத் தமைத்த பாங்கர் பருமணிப் பைம்பொன் திண்கால்
ஆசனத் தணிநீர் ஆட்டி அரிசனஞ் சாத்தி அன்பால்
ஈசனுக்கினியான் மேனி எழில்பெற விளக்கி னார்கள். கரு

162 அகில்விரைத் தூப மேய்ந்த அணிகொள் பட்டாடை சாத்தி
முகில்நுழை மதியம்போலக் கைவலான் முன்கை சூழ்ந்த
துகில்கொடு குஞ்சி ஈரம் புலர்த்தித்தன் தூய செங்கை
உகிர்தடி முறையில் போக்கி ஒளிர்நறுஞ் சிகழி ஆர்த்தான். கசு

163 தூநறும் பசுங்கர்ப் பூரச் சுண்ணத்தால் வண்ணப் போதில்
ஆனதண் பனிநீர் கூட்டி அமைத்தசந் தனச்சே றூட்டி
மான்மதச் சாந்து தோய்ந்த மங்கலக் கலவை சாத்திப்
பால்மறை முந்நூல் மின்னப் பவித்திரஞ் சிறந்த கையான். கள

164 தூமலர்ப் பிணையல் மாலை துணர்இணர்க் கண்ணி கோதை
தாமம்என் றிணைய வேறு தகுதியால் அமையச் சாத்தி
மாமணி அணிந்த தூய வளர்ஒளி இருள்கால் சீக்கும்
நாமநீள் கலன்கள் சாத்தி நன்மணக் கோலம் கொண்டார். கஅ

165 மன்னவர் திருவும் தங்கள் வைதிகத் திருவும் பொங்க
நன்னகர் விழவு கொள்ள நம்பியா ரூரர் நாதன்
தன்னடி மனத்துள் கொண்டு தகுந்திரு நீறு சாத்திப்
பொன்னணி மணியார் யோகப் புரவிமேல் கொண்டு போந்தார். கக

166 இயம்பல துவைப்ப எங்கும் ஏத்தொலி எடுப்ப மாதர்
நயந்துபல் லாண்டு போற்ற நான்மறை ஒலியின் ஓங்க
புயந்துயிர் விரும்ப வந்து விரவினர்க் கின்பஞ் செய்தே
உயர்ந்தவா கனயா னங்கள் மிசைகொண்டார் உழையர் ஆனார். உ0

167 மங்கல கீத நாத மறையவர் குழாங்க ளோடு
தொங்கலும் விரையும் சூழ்ந்த மைந்தரும் துவன்றிச் சூதும்
பங்கய முகையும் சாய்த்துப் பணைத்தெழுந் தணியில் மிக்க
குங்கும முலையி னாரும் பரந்தெழு கொள்கைத் தாகி. உக

168 அருங்கடி எழுந்த போழ்தின் ஆர்த்தவெள் வளைக ளாலும்
இருங்குழை மகரத் தாலும் இலங்கொளி மணிகளாலும்
நெருங்கிய பீலிச் சோலை நீலநீர்த் தரங்கத் தாலும்
கருங்கடல் கிளர்ந்த தென்னக் காட்சியில் பொலிந்த தன்றே. உஉ

169 நெருங்குதூ ரியங்கள் ஏங்க நிரைத்தசா மரைகள் ஓங்கப்
பெருங்குடை மிடைந்து செல்லப் பிணங்குபூங் கொடிகள் ஆட

பா. ஏ. 1. மாற்பண. 2. இனியான். 3. கூ
4. வியந்துயிர். 5. குழாங்கள் சூழ்ந்து. 6. நீண்முறை
7. நிரைத்தசா மரைகள் ஓங்க.

அருங்கடி மணம்வந் தெய்த அன்றுதொட் டென்றும் அன்பில்
வருங்குல மறையோர் புத்தூர் மணம்வந்த புத்தூர் ஆமால். உங

170 நிறைகுடம் தூபம் தீபம் நெருங்குபா லிகைகள் ஏந்தி
நறைமலர் அறுகு சுண்ணம் நறும்பொரி பலவும் வீசி
உறைமலி கலவைச் சாந்தின் உறுபுனல் தெளித்து வீதி
மறையவர் மடவார் வள்ளல் மணம்எதிர் கொள்ள வந்தார். உச

171 "கண்கள்எண் ணிலாத வேண்டுங் காலையைக் காண" என்பார்
"பெண்களில் உயர நோற்றுள் சடங்கவி பேதை" என்பார்
"மண்களி கூர வந்த மணம்கண்டு வாழ்ந்தோம்" என்பார்
பண்களில் நிறைந்த கீதம் பாடுவார் ஆடு வார்கள். உடு

172 "ஆண்டகை அருளின் நோக்கின் வெள்ளத்துள் அலைந்தோம்" என்பார்
"தாண்டிய பரியும் நம்பால்2தகுதியில் நடந்த" தென்பார்
"பூண்தயங் கிவனே காணும் புண்ணிய மூர்த்தி" என்பார்
ஈண்டிய மடவார் கூட்டம் இன்னன இசைப்பச் சென்றார். உக

173 வருமணக் கோலத் தெங்கள் வள்ளலார் தெள்ளும் வாசத்
திருமணப் பந்தர் முன்பு சென்றுவெண் சங்கம் எங்கும்
பெருமழைக் குலத்தின் ஆர்ப்பப் பரிமிசை இழிந்து பேணும்
ஒருமணத் திறத்தின் ஆங்கு நிகழ்ந்தது மொழிவேன் உய்ந்தேன்.

வேறு

174 ஆலும்மறை சூழ்கயிலை யின்கண்அருள் செய்த
சாலுமொழி யால்வழி தடுத்தடிமை கொள்வான்
மேலுற எழுந்துமிகு கீழுற அகழ்ந்து
3 மாலும்அய னுக்கும்அரி யார்ஒருவர் வந்தார். உஅ

175 கண்ணிடை கரந்தகதிர் வெண்படம் எனச்சூழ்
புண்ணிய நுதல்புனித நீறுபொலி வெய்தத்
தண்மதி முதிர்ந்துகதிர் சாய்வதென4மீதே
வெண்ணரை முடித்தது விழுந்திடை சழங்க. உக

176 காதிலணி கண்டிகை வடிந்தகுழை தாழச்
சோதிமணி மார்பின்5அசை நூலிலொடு தோளின்
மீதுபுனை உத்தரிய வெண்துகில் நடங்க
ஆதபம் மறைக்குடை அணிக்கரன் விளங்க. ஙo

177 பண்டிசரி கோவண உடைப்பழமை கூரக்
கொண்டதொர் சழங்கலுடை ஆர்ந்தழகு கொள்ள
வெண்துகில் உடன்குசை முடிந்துவிடு வேணுத்
தண்டொருகை கொண்டுகழல் தள்ளுநடை கொள்ள. ஙக

பா. வே. 1. மாலும் : 2. தகுதியிணைந்தது. 3 மாலுமிடு வக்குமரி. 4 மாலே. 5 மிசை.

178 மொய்த்துவளர் பேரழகு மூத்தவடி வேயோ
அத்தகைய மூப்பெனும் அதன்படிவ மேயோ
மெய்த்தநெறி வைதிகம்1விளைந்தமுத லேயோ
இத்தகைய வேடமென ஐயமுற எய்தி. நஉ

179 வந்துதிரு மாமறை மணத்தொழில் தொடங்கும்
பந்தரிடை நம்பிஎதிர் பன்னுசபை முன்னின்(று)
"இந்தமொழி கேண்மின்எதிர் யாவர்களும்" என்றான்
முந்தைமறை ஆயிரம் மொழிந்ததிரு வாயான். நங

180 என்றுரைசெய் அந்தணனை எண்ணில்மறை யோரும்
மன்றல்வினை மங்கலம டங்கலனை யானும்
"நன்றுமது நல்வரவு நங்கள்தவம் என்றே
நின்றதிவண் நீர்மொழிமின் நீர்மொழிவ" தென்றார். நச

181 பிஞ்ஞகனும் நாவலர் பெருந்தகையை நோக்கி
"என்னிடையும் நின்னிடையும் நின்றஇசை வால்யான்
முன்னுடைய தோர்பெரு வழக்கினை முடித்தே
நின்னுடைய வேள்வியினை நீமுயல்தி" என்றான். நரி

182 நேற்றிவிழி யான்மொழிய நின்றநிகர் இல்லான்
"உற்றதொர் வழக்கெனிடை நீயுடைய துண்டேல்
மற்றது முடித்தலது யான்வதுவை செய்யேன்
முற்றஇது சொல்லு" கென எல்லைமுடி வில்லான். நசு

183 "ஆவதிது கேண்மின்மறை யோர்! என்அடியான்இந்
நாவலர்நகர் ஊரன்இது நான்மொழிவ" தென்றான்
தேவரையும் மால்அயன் முதல்திருவின் மிக்கோர்
யாவரையும் வேறடிமை யாவுடைய எம்மான். நஎ

வேறு

184 என்றான் இறையோன் அதுகேட்டவர் எம்ம ருங்கும்
நின்றார் இருந்தார் "இவன் என்நினைந் தான்கொல்" என்று
சென்றார் வெகுண்டார் சிரித்தார், திருநாவ லூரர்
"நன்றால் மறையோன் மொழி" என்றெதிர் நோக்கி நக்கார். நஅ

185 நக்கார் முகம்நோக்கி நடுங்கி நடங்கி யார்க்கும்
மிக்கான் மிசையுத் தரிகத்துகில் தாங்கி மேற்சென்(று)
"அக்கா லம்உன் தந்தை தன்தந்தை ஆள்ஓலை ஈதால்
இக்கா ரியத்தை இன்றுநீ சிரித்ததென்2ஏடா" என்ன. நக

வேறு

186 மாசிலார் மரபில் வந்த வள்ளல்வே தியனை நோக்கி
நேசம்முன் கிடந்த சிந்தை நெகிழ்ச்சியால் சிரிப்பு நீங்கி

1. விளைந்து 2 நக்கான். 3. ஏடவென்றான் (ன்)
விளைந்து ✓

"ஆகில்அந் தணர்கள் வேறோர் அந்தணர்க் கடிமை ஆதல்
பேசஇன் றுன்னைக் கேட்டோம் பித்தனே மறையோய்" என்றார்.

187 "பித்தனும் ஆகப் பின்னும் பேயனும் ஆக நீயின்
றெத்தனை தீங்கு சொன்னாய் யாதும்மற் றவற்றுல் நாணேன்
அத்தனைக் கென்னை ஒன்றும் அறிந்திலை யாகில் நின்று
வித்தகம் பேசவேண்டாம் பணிசெய வேண்டும்" என்றான். சக

188 "கண்டதோர் வடிவால் உள்ளங் காதல்செய் துருகா நிற்கும்
கொண்டதோர் பித்த வார்த்தை கோபமும் உடனே ஆக்கும்
உண்டொராள் ஓலை என்னும் அதன்உண்மை அறிவேன்" என்று
தொண்டனார் "ஓலை காட்டு" கென்றனர் துணைவனாரை. சஉ

189 "ஓலைகாட்" டென்று நம்பி உரைக்க "நீ ஓலைகாணற்
பாலையோ அவைமுன் காட்டப் பணிசெயற் பாலை" என்ற
வேலையில் நாவலூரார் வெகுண்டுமேல் விரைந்து சென்று
மாலயன் தொடரா தாணி வலிந்துபின் தொடர லுற்றார். சங

190 ஆவணம் பறிக்கச் சென்ற அளவினில் அந்த ணாளன்
காவணத் திடையே ஓடக் கடிதுபின் தொடர்ந்து நம்பி
பூவணத் தவரை உற்றார் அவரலால் புரங்கள் செற்ற
ஏவணச் சிலையி னாரை யார்தொடர்ந் தெட்ட வல்லார். சச

191 மறைகளா யினமுன் போற்றி மலர்ப்பதம் பற்றி நின்ற
இறைவனைத் தொடர்ந்து பற்றி எழுதும்ஆள் ஓலை வாங்கி
அறைகழல் அண்ணல் "ஆளாய் அந்தணர் செய்தல் என்ன
முறை" எனக் கீறியிட்டார் முறையிட்டான் முடிவிலாதான். சடு

192 அருமறை முறையிட் டின்னும் அறிவதற் கரியான் பற்றி
ஒருமுறை முறையோ என்ன உழைநின்றார் விலக்கி "இந்தப்
பெருமுறை உலகில் இல்லா நெறிகொண்டு பிணங்கு கின்ற
திருமறை முனிவ ரேநீர் எங்குளீர் செப்பும்" என்றார். சசு

193 என்றலும் நின்ற ஐயர் "இங்குளேன் இருப்புஞ் சேய
தன்றிந்த வெண்ணெய் நல்லூர் அதுநிற்க அறத்தா றின்றி
வன்றிறல் செய்தென் கையில் ஆவணம் வலிய வாங்கி
நின்றிவன் கிழித்துத் தானே நிரப்பினன் அடிமை" என்றான். சஎ

194 சூழ்மறை காதி னானைக் கோதில்ஆ ரூரர் நோக்கிப்
"பழையமன் னுடி போலும் இவன்" என்று பண்பில் மிக்க
ஏழைவுறு மனமும் பொங்க "வெண்ணெய்நல் லூரா யேல்உன்
பிழைநெறி வழக்கை ஆங்கே பேசநீ போதாய்" என்றார். சஅ

ப.பே.1. என்ன. 2. என்றார். 3 சேயது.

175 வேதியன் அதனைக்கேட்டு "வெண்ணெய்நல் லூரி லேநீ
போதினும் நன்று மற்றப் புனிதநான் மறையோர் முன்னர்
ஆதியில் மூல வோலை காட்டிநீ அடிமை யாதல்
சாதிப்பன்" என்று முன்னே தண்டுமுன் தாங்கிச் சென்றான். ௮௯

176 செல்லுமா மறையோன் தன்பின் திரிமுகக் காந்தஞ் சேர்ந்த
வல்லிரும் பிணைய மாபோல் வள்ளலுங் கடிது சென்றார்
எல்லையில் சுற்றத்தாரும் "இதுஎன்னும்" என்று செல்ல
நல்லஅந் தணர்கள் வாழும் வெண்ணெய்நல் லூரை நண்ணி. ௯0

177 வேதபா ரகரில் மிக்கார் விளங்குபேர் அவைமுன் சென்று
நாதனும் மறையோன் சொல்லும் "நாவலூர் ஆரூ ரன்தான்
காதலென் அடியான் என்னைக் காட்டிய ஓலை கீறி
மூதறி வீர்முன் போந்தான் இதுஎன்றன் முறைப்பா" டென்றான்.

178 அந்தணர் அவையில் மிக்கார் "மறையவர் அடிமை ஆதல்
இந்தமா நிலத்தில் இல்லை என்சொன்னாய் ஐயா" என்றார்
"வந்தவா றிசைவே அன்றே வழக்கிவன் கிழித்த ஓலை
தந்தைதன் தந்தை நோக்த(து)" என்றனன் தனியாய் நின்றான். ௯௨

179 இசைவினுல் எழுதும் ஓலை காட்டினுன் ஆகில் இன்று
விசையினுல் வலிய வாங்கிக் கிழிப்பது வெற்றி ஆமோ
தசையெலாம் ஒடுங்க மூத்தான் வழக்கினைச் சாரச் சொன்னுன்
அசைவில்ஆ ரூரர் எண்ணம் என்" என்றார் அவையில் மிக்கார். ௯௩

180 "அனைத்துநூல் உணர்ந்தீர்! ஆதி சைவனென் றறிவீர் என்னைத்
தனக்குவே றடிமை என்றிவ் அந்தணன் சாதித் தானேல்
மனத்தினுல் உணர்தற் கேட்டா மாயைஎன் சொல்லு கேன்யான்
எனக்கிது தெளிய வொண்ணு தென்றனன்" எண்ணம் மிக்கான். ௯௪

181 அவ்வுரை அவையின் முன்பு நம்பியா ரூரர் சொல்லச்
செவ்விய மறையோர், நின்ற திருமறை முனியை நோக்கி
"இவ்வுல கின்கண் நீரின் றிவரைதும் அடிமை என்ற
வெவ்வுரை எம்முன் பேற்ற வேண்டும்" என் றுரைத்து மீண்டும். ௯௫

182 ஆட்சியில் ஆவணத்தில் அன்றிமற் றியலார் தங்கள்
காட்சியில் மூன்றில் ஒன்று காட்டுவாய்" என்ன "முன்னே
மூட்சியில் கிழித்த ஓலை படியோலை மூல ஓலை
மாட்சியில் காட்ட வைத்தேன்" என்றனன் மாயை வல்லான். ௯௬

183 "வல்லியேல் காட்டிங்" கென்ன, மறையவன் "வலிசெய் யாமல்
சொல்லநீர் வல்லீ ராகில் காட்டுவேன்" என்று சொல்லச்
"செல்வன்நான் மறையோய்! நாங்கள் தீங்குற ஓட்டோம்" என்றார்
அல்லல்தீர்த் தாள நின்றான் ஆவணங் கொண்டு சென்றான். ௯௭

பா. வே.1. கோள. 2. நிரங்க. 3 அடியாளுக்க.
4 கண்ணிங் கிவரைதும்.

204 இருள்மறை மிடற்றோன் கையில் ஓலைகண் டவையோர் ஏவ
அருள்பெறு காரணத் தானும் ஆவணம் தொழுது வாங்கிச்
சுருள்பெறு மடியை நீக்கி விரித்தனன் தொன்மை நோக்கித்
தெருள்பெறு சபையோர் கேட்ப வாசகம் செப்பு கின்றான். நிஅ

205 "அருமறை நாவல் ஆதி சைவன்ஆ ரூரன் செய்கை
பெருமுனி வேண்ணெய் நல்லூர்ப் பித்தனுக் கியானும் என்பால்
வருமுறை மரபு ளோரும் வழித்தொண்டு செய்தற் கோலை
இருமையால் எழுதி நோந்தேன் இதற்கிவை என்ன ழுத்து." நிக

206 வாசகங் கேட்ட பின்னர் மற்றுமேல் எழுத்திட் டார்கள்
ஆசிலா எழுத்தை நோக்கி "அவையொக்கும்" என்ற பின்னர்
மாசிலா மறையோர் "ஐயா! மற்றுங்கள் பேர னர்த்தம்
தேசுடை எழுத்தே ஆகில் தெளியப்பார்த் தறிமின்" என்றார். சுO

207 அந்தணர் கூற "இன்னும் ஆள்ஓலை இவனே காண்பான்
தந்தைதன் தந்தை தான்வே றெழுதுகைச் சாத்துண் டாகில்
இந்தஆ வணத்தி னோடும் எழுத்துநீர் ஒப்பு நோக்கி
வந்தது மொழிமின்" என்றான் வலியஆட் கொள்ளும் வள்ளல். சுக

208 திரண்டமா மறையோர் தாமும் திருநாவ லூரர் கோமான்
மருண்டது தெளிய மற்ற மறையவன் எழுத்தால் ஓலை
அரண்தரு காப்பில் வேறொன் றழைத்துடன் ஒப்பு நோக்கி
"இரண்டும்ஒத் திருந்த தென்னே! இனிச்செயல் இல்லை" என்றார்.

209 "நான்மறை முனிவ னுர்க்கு நம்பியா ரூரர்! தோற்றீர்
பான்மையின் ஏவல் செய்தல் கடன்" என்று பண்பில் மிக்க
மேன்மையோர் விளம்ப, நம்பி "விதிமுறை இதுவே ஆகில்
யான்இதற் கிசையேன் என்ன இசையுமோ" என்று நின்றார். சுங

210 திருமிகு மறையோர் நின்ற செழுமறை முனியை நோக்கி
"அருமுனி! நீர்முன் காட்டும் ஆவணம் அதனில் எங்கள்
பெருமைசேர் பதியே யாகப் பேசிய தூமக்கிவ் வூரில்
வருமுறை மனையும் நீடு வாழ்க்கையும் காட்டு" கென்றார். சுச

211 பொருவரும் வழக்கால் வென்ற புண்ணிய முனிவர் "என்னை
ஒருவரும் அறியீ ராகில் 'போதும்' " என் றுரைத்துச் சூழ்ந்த
பெருமறை யவர்கு ழாமும் நம்பியும் பின்பு செல்லத்
திருவருட் டிறையே புக்கார், கண்டிலர் திகைத்து நின்றார். சுஞ

212 நம்பிரான் கோயில் நண்ண இலங்குநூல் மார்பர் "எங்கள்
நம்பர்தங் கோயில் புக்க தென்கொலோ" என்று நம்பி
தம்பெரு விருப்பி னோடு தனித்தொடர்ந் தழைப்ப மாதோ
டும்பரின் விடைமேல் தோன்றி அவர்தமக் குணர்த்தல் உற்றார். சுஞ

பா.வே.1. விரிந்தனன். 2 நோந்தேன். 3 கூறுவன் காண் டும்.
4 உனக்கிவ்

213 "முன்புநீ நமக்குத் தொண்டன் முன்னிய வேட்கை கூரப்
பின்புநம் ஏவ லாலே பிறந்தனை மண்ணின் மீது
துன்புறு வாழ்க்கை நின்னைத் தொடர்வறத் தொடர்ந்து வந்து
நன்புல மறையோர் முன்னர் நாம் தடுத் தாண்டோம்" என்றார். சுஎ

214 என்றெழும் ஓசை கேளா ஈன்றஆன் கனைப்புக் கேட்ட
கன்றுபோல் கதறி நம்பி கரசர ணுதி அங்கம்
துன்றிய புளகம் ஆகத் தொழுதகை தலைமேல் ஆக
"மன்றுளீர்! செயலோ வந்து வலியஆட் கொண்ட" தென்றார். சுஅ

215 எண்ணிய ஓசை ஐந்தும் விசும்பிடை நிறைய எங்கும்
விண்ணவர் பொழிபூ மாரி மேதினி நிறைந்து விம்ம
மண்ணவர் மகிழ்ச்சி பொங்க மறைகளும் முழங்கி ஆர்ப்ப
அண்ணலே ஓலை காட்டி ஆண்டவர் அருளிச் செய்வார். சுக

216 "மற்றுநீ வன்மை பேசி வன்தொண்டன் என்னும் நாமம்
பெற்றனை நமக்கும் அன்பில் பெருகிய சிறப்பில் மிக்க
அர்ச்சனை பாட்டே ஆகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு" கென்றார் தூமறை பாடும்வாயார். எ0

217 தேடிய அயனும் மாலும் தெளிவுறு ஐந்தெ ழுத்தும்
பாடிய பொருளாய் உள்ளான் "பாடுவாய் நம்மை" என்ன
நாடிய மனத்த ராகி நம்பியா ரூரர், மன்றுள்
ஆடிய செய்ய தாளை அஞ்சலி கூப்பி நின்று. எக

218 "வேதியன் ஆகி என்னை வழக்கினுள் வெல்ல வந்த
ஊதியம் அறியா தேனுக் குணர்வுதர் துய்யக் கொண்ட
கோதிலா அமுதே! இன்றுன் குணப்பெருங் கடலே நாயேன்
யாதினை அறிந்தென் சொல்லிப் பாடுகேன்" எனமொ ழிந்தார். எஉ

219 அன்பனை அருளின் நோக்கி அங்கணர் அருளிச் செய்வார்
"முன்பெனைப் பித்தன் என்றே மொழிந்தனை ஆத லாலே
என்பெயர் பித்தன் என்றே பாடுவாய்" என்றார், நின்ற
வன்பெருந் தொண்டர் ஆண்ட வள்ளலைப் பாடல் உற்றார். எக

வேறு

220
கோத்தார்மலர்க் குழலாளொரு கூறுய்அடி யவர்பால்
மெய்த்தாயினும் இனியானைஅவ் வியன்நாவலர் பெருமான்
பித்தாபிறை சூடிஎனப் பெரிதாந்திருப் பதிகம்
இத்தாரணி முதலாம்உல கெல்லாம்உ(ய்)ய எடுத்தார். எச

221 முறையால் வரு மதுரத்துடன் மொழிஇந்தள முதலில்
குறையாநிலை மும்மைப்படி கூடுங்கிழ மையினால்

பா. வே. 1. வாயான். 2. மதுரத்துடன்; மதுரத்துடன்.

நிறைபாணியின் இசைகோள்புணர் நீடும்புகழ் வகையால்
இறையான்மகிழ் இசைபாடினன் எல்லாம்நிகர் இல்லான். எடு

222 சொல்லார்தமிழ் இசைபாடிய தொண்டன்தனை "இன்னும்
பல்லாறுல கினில்நம்புகழ் பா(டு)" என்றுறு பரிவில்
நல்லார்வெண்ணெய் நல்லூரருட் டுறைமேவிய நம்பன்
எல்லாவுல குய்யப்புறம் எய்தான் அருள் செய்தான். எசு

223 அயலோர்தவம் முயல்வார்பிறர் அன்றேமணம் அழியும்
செயலால்நிகழ் புத்தூர்வரு சிவவேதியன் மகளும்
உயர்நாவலர் தனிநாதனை ஒழியாதுணர் வழியில்
பெயராதுயர் சிவலோகமும் எளிதாம்வகை பெற்றாள். எள

வேறு

224 நாவலர்கோன் ஆரூரன் தனைவெண்ணெய் நல்லூரில்
மேவும்அருட் டுறையமர்ந்த வேதியராள் கொண்டதற்பின்
பூவலருந் தடம்பொய்கைத் திருநாவ லூர்புகுந்து
தேவர்பிரான் தனைப்பணிந்து திருப்பதிகம் பாடினார். எஅ

225 சிவனுறையுந் திருத்துறையூர் சென்றணைந்து "தீவினையால்
பிற அவநெறியே செல்லாமே தடுத்தாண்டாய் அடியேற்குத்
தவநெறிதந் தருள்" என்று தம்பிரான் முன்னின்று
பவநெறிக்கு விலக்காகுந் திருப்பதிகம் பாடினார். எக

226 புலனைந்தும் படிதவத்தில் புரிந்தநெறி கொடுத்தருள
அலர்கொண்ட நறுஞ்சோலைத் திருத்துறையூர் அமர்ந்தருளும்
நிலவுந்தண் புனலும்மொளிர் நீள்சடையோன் திருப்பாதம்
மலர்கொண்டு போற்றிசைத்து வந்தித்தார் வன்தொண்டர். அ0

227 திருத்துறையூர் தனைப்பணிந்து சிவபெருமான் அமர்ந்தருளும்
பொருத்தமாம் இடம்பலவும் புக்கிறைஞ்சிப் போற்புலியூர்
நிருத்தனார் திருக்கூத்துத் தொழுவதற்கு நினைவுற்று
வருத்தம்மிகு காதலினால் வழிக்கொள்வான் மனங்கொண்டார். அக

228 மலிவளர்சந் தகில்பீலி மலர்பரப்பி மணிகொழிக்கும்
அலைதருதண் புனல்பெண்ணை யாறுகடந் தேறியபின்
2 நிலவுபசும் புரவிநெடுந் தேரிரவி மேல்கடலில்
செலஅணையும் பொழுதணையத் திருவதிகைப் புறத்தணைந்தார். அஉ

229 "உடையஅர சுலகேத்தும் உழவாரப் படையாளி
விடையவர்க்குக் கைத்தொண்டு விரும்புபெரும் பதியையிதித்
தீடையுமதற் கஞ்சுவன்" என்நகரில் புகுதாதே
மடைவளர்தண் புறம்பணையில் சித்தவட மடம்புகுந்தார். அங

பா.செ.1. நீடும்புகல்வகையான் → நீடும்புகழ் ✓
2. இலபெசும்புர.

230 வரிவளர்பூஞ் சோலைசூழ் மடத்தின்கண் வன்தொண்டர்
விரிதிரைநீர்க் கெடிலவட வீரட்டா னத்திறைதாள்
புரிவுடைய மனத்தினராய்ப் புடைஎங்கும் மிடைகின்ற
பரிசனமும் துயில்கொள்ளப் பள்ளியமர்ந் தருளினார். அச

231 அதுகண்டு வீரட்டத் தமர்ந்தருளும் அங்கணரும்
முதுவடிவின் மறையவராய் முன்னிருவர் அறியாமே
பொதுமடத்தி னுள்புகுந்து பூந்தாரான் திருமுடிமேல்
பதுமமலர்த் தாள்வைத்துப் பள்ளிகொள்வார் போல்பயின்றார். அரு

232 அங்கிலஆ ரூரன்உணர்ந் "தருமறையோய்! உன்னடிஎன்
சென்னியில்வைத் தனை"என்னத் "திசையறியா வகைசெய்த
தென்னுடைய மூப்புக்காண்" என்றருள அதற்கிசைந்து
தன்முடிஅப் பால்வைத்தே துயிலமர்ந்தான் தமிழ்நாதன். அசு

233 அங்குமவன் திருமுடிமேல் மீட்டும்அவர் தாள்நீட்டச்
செங்கயல்பாய் தடம்புடைசூழ் திருநாவ லூராளி
"இங்கென்னைப் பலகாலும்மிதித்தனைநீ யார்?"என்னக்
கங்கைசடை கரந்தபிரான் "அறிந்திலையோ!" எனக்கரந்தான். அள

234 "செம்மாந்திங் கியானறியா தென்செய்தேன்" எனத்தெளிந்து
தம்மானை அறியாத சாதியார் உளரேஎன்(று)
அம்மானைத் திருவதிகை வீரட்டா னத்தமர்ந்த
கைம்மாவின் உரியானைக் கழல்பணிந்து பாடினார். அஅ

235 பொன்திரளும் மணித்திரளும் பொருகரிவெண் கோடுகளும்
மின்திரண்ட வெண்முத்தும் விரைமலரும் நறுங்குறடும்
வன்திரைக ளால்கொணர்ந்து திருவதிகை வழிபடலால்
தென்திசையில் கங்கையெனும் திருக்கெடிலம் திளைத்தாடி. அக

236 அங்கணரை அடிபோற்றி அங்ககன்று மற்றந்தப்
பொங்குநதித் தென்கரைபோய்ப் போர்வலித்தோள் மாவலிதன்
மங்கலவேள் வியில்பண்டு வாமனனாய் மண்இரந்த
செங்கணவன் வழிபட்ட திருமாணிக் குழிஅணைந்தார். கூ

237 பரம்பொருளைப் பணிந்துதாள் பரவிப்போய்ப் பணிந்தவர்க்கு
வரந்தருவான் தினைநகரை வணங்கினர்வண் தமிழ்பாடி
நரம்புடையாழ் ஒலிமுழவின் நாதஒலி வேதஒலி
அரம்பையர்தம் கீதஒலி அறுத்தில்லை மருங்கணைந்தார். கூக

வேறு

238 தேம லங்கலணி மாமணி மார்பின் செம்மல், அங் கயல்கள் செங்கம லத்தண்
பூம லங்கலதிர் பாய்வன மாடே புள்ள லம்புதிரை வெள்வளை வாவித்

பா. பே. 1. மீண்டும். 2. மிரு[illegible]

தாம லங்குகள் தடம்பணை சூழும் தண்ம ருங்குதோழ வார்கள்தம் மும்மை
மாம லங்களற வீடருள் தில்லை மல்லல் அம்பதியின் எல்லை வணங்கி.

239 நாக சூதவகு ளஞ்சர ளஞ்சூழ் நாளி கேரம்இல வங்க நரந்தம்
பூக ஞாழல்குளிர் வாழை மதூகம் பொதுளும் வஞ்சிபல எங்கும் நெருங்கி
மேக சாலமலி சோலைக ளாகி மீது கோகிலம் மிடைந்து மிழற்றப்
போக பூமியினும் மிக்கு விளங்கும் பூம்பு றம்பணை கடந்து புகுந்தார்.

240 வன்னி கொன்றைவழை சண்பகம் ஆரம் மலர்ப்ப லாசொடு
செருந்திமந் தாரம், கன்னி காரங்குர வங்கமழ் புன்னை!கற்பு பாட
லம் கூவிளம் ஓங்கித், துன்னு சாதிமரு மாலதி மௌவல் துதைந்த
நந்திகர வீரம் மிடைந்த, பன்ம லர்ப்புனித நந்த வனங்கள் பணிந்து
சென்றனன் மணங்கமழ் தாரான். கூச

241 இடம ருங்கு தனி நாயகி காண ஏழ்பெ ரும்புவனம் உய்ய
எடுத்து, நடம்ந வின்றருள் சிலம்பொலி போற்றும் நான்ம றைப்
பதியை நாளும் வணங்கக், கடல்வ லங்கொள்வது போல்புடை சூழுங்
காட்சி மேவிமிகு சேண்செல ஓங்கும், தடம்ம ருங்குவளர் மஞ்சிவர்
இஞ்சித் தண்கி டங்கை எதிர் கண்டு மகிழ்ந்தார். கூரி

242 மன்று ளாடுமது வின்நசை யாலே மறைச்சு ரும்பறை புறத்தின்
மருங்கே, குன்று போலுமணி மாமதில் சூழுங் குண்ட கழ்க்கமல
வண்டலர் கைதை, துன்று நீறுபுனை மேனிய வாகித் தூய நீறுபுனை
தொண்டர்கள் என்னச், சென்று சென்றுமுரல் கின்றது கண்டு
சிந்தை அன்பொடு திளைத்தெதிர் சென்றார். கூசு

243 பார்வி ளங்கவளர் நான்மறை நாதம் பயின்ற பண்புமிக வெண்
கொடி ஆடும், சீர்வி ளங்குமணி நாஒலி யாலும் திசைகள் நான்கெதிர்
புறப்பட லாலும், தார்வி ளங்குவரை மார்பின் அயன்பொன் சதுர்மு
கங்களென ஆயின தில்லை, ஊர்வி ளங்குதிரு வாயில்கள் நான்கின்
உத்த ரத்திரு வாயில்முன் எய்தி. கூள

244 அன்பின் வந்தெதிர் கொண்டசீர் அடியார் அவர்க ளோநம்பி
ஆரூரர் தாமோ, முன்பி றைஞ்சினர் யாவரென் றறியா முறைமை
யால்எதிர் வணங்கி மகிழ்ந்து, பின்பு கும்பிடும் விருப்பில் நிறைந்து
பெருகு காவல்நக ரார்பெரு மானும், பொன்பி றங்குமணி மாளிகை
நீடுமொருவி றந்தருவி தீதி புகுந்தார். கூஅ

245 அங்கண் மாமறை முழங்கும் மருங்கே ஆட 'ரம்பையர் அரங்கு
முழங்கும், மங்குல் வானின்மிசை ஐந்தும் முழங்கும் வாச மாலிகளில்
வண்டு முழங்கும், பொங்கும் அன்பருவி கண்பொழி தொண்டர்
போற்றி சைக்கும்ஒலி எங்கும் முழங்கும், திங்கள் தங்குசடை
கங்கை முழங்கும் தேவ தேவர்புரி யுந்திரு வீதி. கூக

பா. பே. 1. கற்பகாடவும்.
2. பொருவிசம் 1 திருவாயில்.

246 போக நீடுநிதி மன்னவன் மன்னும் புரங்கள் ஒப்பன வரம்பில ஓங்கி, மாகம் முன்பருகு கின்றன போலும் மாளி கைக்குலம் மிடைந்த பதாகை, யோக சிந்தைமறை யோர்கள் வளர்க்கும் ஓம தூமம் உயர் வானில் அடுப்ப, மேக பந்திகளின் மீதிடை எங்கும் மின்னு டங்குவன என்ன விளங்கும். கoo

247 ஆடு தோகைபுடை நாசிகள் தோறும் அரணி தந்தசுடர் ஆகுதி தோறும், மாடு தாமமணி வாயில்கள் தோறும் மங்க லக்கலசம் வேதிகை தோறும், சேடு கொண்டஒளி தோரிதை தோறும் செந் நெல் அன்னமலி சாலைகள் தோறும், நீடு தண்புனல்கள் பந்தர்கள் தோறும் நிறைந்த தேவர்கணம் நீளிடை தோறும். கoக

248 எண்ணில் பேர்உல கனைத்தினும் உள்ள எல்லை யில்அழகு சொல்லிய எல்லாம், மண்ணில் இப்பதியில் வந்தன என்ன மங்க லம் பொலி வளத்தன ஆகிப், புண்ணி யப்புனித அன்பர்கள் முன்பு புகழ்ந்து பாடல்புரி பொற்பின் விளங்கும், அண்ணல் ஆடுதிரு அம் பலம் சூழ்ந்த அம்பொன் வீதியினை நம்பிவ ணங்கி. கoஉ

249 மால யன்சத மகன்பெருந் தேவர் மற்றும் உள்ளவர்கள் முற்றும் நெருங்கிச், சில மாமுனிவர் சென்றுமுன் துன்னித் திருப்பி ரம்பின் அடி கொண்டு தினைத்துக், காலம் நேர்படுதல் பார்த்தயல் நிற்பக் காதல் அன்பர்கண நாதர் புகும்பொன், கோல நீடுதிரு வாயி லிறைஞ்சிக் குவித்த செங்கைதலை மேற்கொடு புக்கார். கoங

வேறு

250 பெருமதில் சிறந்த செம்பொன்மா ளிகைமின் பிறங்குபேர் அம் பலம் மேரு, வருமுறை வலங்கொண் டிறைஞ்சிய பின்னர் வணங்கிய மகிழ்வொடும் புகுந்தார், அருமறை முதலில் நடுவினில் கடையில் அன்பர்தம் சிந்தையில் அலர்ந்த, திருவளர் ஒளிசூழ் திருச்சிற்றம் பலமுன் திருஅணுக் கன்திரு வாயில். சoச

251 வையகம் பொலிய மறைச்சிலம் பார்ப்ப மன்றுளே மாலயன் தேட, ஐயர்தாம் வெளியே ஆடுகின் றுரை அஞ்சலி மலர்த்திமுன் குவித்த, கைகளோ தினைத்த கண்களோ அந்தக் காரணமோ கலந்த அன் புந்தச், செய்தவப் பெரியோன் சென்றுதாழ்ந் தெழுந்தான் திருக்களிற் றுப்படி மருங்கு. கoஙி

252 ஐந்துபேர் அறிவும் கண்களே கோள்ள அளப்பரும் காரணங்கள் நான்கும், சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும் திருந்துசாத்து விகடே ஆக, இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த எல்லையில் தனிப்பெருங் கூத்தின், வந்தபேர் இன்ப வெள்ளத்துள் தினைத்து மாநிலா மகிழ்ச்சி யில் மலர்ந்தார். கoசு

பா. பே. 1. தோற்றம். 2. அன்னமலி நாலுகள்.
3. பெலவிழி. 4. சிறந்தில 5. பரந்த. 6 செய்தவ

253 தேண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்தன் திருநடம் கும்பிடப் பெற்று, மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பம் ஆம் என்று, கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக் கைம்மலர் உச்சிமேல் குவித்துப், பண்ணினுல் நீடி அறிவரும் பதிகம் பாடினுர் பரவினுர் பணிந்தார். கoஎ

254 தடுத்துமுன் ஆண்ட தொண்டனுர் முன்பு தனிப்பெருந் தாண்டவம் புரிய, எடுத்தசே வடியார் அருளினுல் "தரளம் எறிபுனல் மறிதிரைப் பொன்னி, மடுத்தநீள் வண்ணப் பண்ணை ஆரூரில் வருக நம்பால்" என வானில், அடுத்தபோ தினில்வந் தெழுந்ததோர் நாதம் கேட்டலும் அதுவுணர்ந் தெழுந்தார். கoஅ

255 ஆகின் றவர்பேர் அருளினுல் நிகழ்ந்த அப்பணி சென்னிமேல் கொண்டு, சூடுதம் கரங்கள் அஞ்சலி கொண்டு தொழுந்தொறும் புறவிடை கொண்டு, மாடுபே ரொளியின் வளரும் அம்பலத்தை வலங் கொண்டு வணங்கினர் போந்து, நீடுவான் பணிய உயர்ந்த பொன் வரைபோல் நிலவெழு கோபுரம் கடந்து. கoக

256 நின்றுகோ புரத்தை நிலமுறப் பணிந்து நெடுந்திரு வீதியை வணங்கி, மன்றலார் செல்வ மறுகினு டேகி மன்னிய திருப்பதி அதனில், தென்திரு வாயில் கடந்துமுன் போந்து சேண்படுந் திரு எல்லை இறைஞ்சிக், கொன்றைவார் சடையான் அருளேயே நினைவார் கோள்ளிடத் திருநதி கடந்தார். ககo

வேறு

257 புறந்தருவார் போற்றிசைப்பப் புரிமுந்நூல் அணிமார்பார் அறம்பயந்தாள் திருமூலப்பால் அமுதுண்டு வளர்ந்தவர்தாம் பிறந்தருளும் பெரும்பேறு பெற்றதென முற்றுலகில் சிறந்தபுகழ்க் கழுமலமாம் திருப்பதியைச் சென்றணைந்தார். ககக

258 "பிள்ளையார் திருஅவதா ரஞ்செய்த பெரும்புகலி உள்ளும்நான் மிதியேன்"என் றூரெல்லைப் புறம்வணங்கி வள்ளலார் வலமாக வரும்பொழுது மங்கையிடம் கொள்ளும்மால் விடையானும் எதிர்காட்சி கொடுத்தருள. ககஉ

259 மண்டியபேர் அன்பினுல் வன்தொண்டர் நின்றிறைஞ்சித் தெண்திரைவே லையில்மிதந்த திருத்தோணி புரத்தாரைக் கண்டுகொண்டேன் கயிலையினில் வீற்றிருந்த படிஎன்று பண்தரும்இன் னிசைபயின்ற திருப்பதிகம் பாடினுர். ககங

260 இருக்கோலம் இடும்பெருமான் எதிர்நின்றும் எழுந்தருள வெருக்கோளுற் றதுநீங்க ஆரூர்மேற் செலவிரும்பிப் பெருக்கோதஞ் சூழ்புறவப் பெரும்பதியை வணங்கிப் போய்த் திருக்கோலக்கா இறைஞ்சிச் செந்தமிழ்மா லைகள்பாடி. ககச

261 தேனுர்க்கும் மலர்ச்சோலைத் திருப்புன்கூர் நம்பர்பால்
ஆனுப்பேர் அன்புமிகு அடிபணிந்து தமிழ்பாடி
மானுர்க்கும் கரதலத்தார் மகிழ்ந்தஇடம் பலவணங்கிக்
கானுர்க்கும் மலர்த்தடஞ்சூழ் காவிரியின் கரையணைந்தார். ககடு

262 வம்புலா மலர்அலைய மணிகொழித்து வந்திழியும்
பைம்பொன்வார் கரைப்போன்னிப் பயில்தீர்த்தம் படிந்தாடித்
தம்பிரான் மயிலாடு துறைவணங்கித் தாவில்சீர்
அம்பர்மா காளத்தின் அமர்ந்தபிரான் அடிபணிந்தார். ககசு

263 மின்னுர்செஞ் சடைஅண்ணல் விரும்புதிருப் புகலூரை
முன்னுகப் பணிந்தேத்தி முதல்வன்தன் அருள்நினைந்து
பொன்னுரும் உத்தரியம் புரிமுந்நூல் அணிமார்பர்
தென்னுவ ஞாளி திருவாரூர் சென்றணைந்தார். ககள

264 தேரோரும் நெடுவீதித் திருவாரூர் வாழ்வார்க்கு
"ஆராத காதலின்நம் ஆரூரன் நாம்அழைக்க
வாராநின் ருன்அவனை மகிழ்ந்தெதிர்கொள் வீர்" என்று
நீராரும் சடைமுடிமேல் நிலவணிந்தார் அருள்செய்தார். ககஅ

265 தம்பிரான் அருள்செய்யத் திருத்தொண்டர் அதுசாற்றி
"எம்பிரா னுர்அருள்தான் இருந்தபரி சிதுவானுல்
நம்பிரா னுர்ஆவார் அவரன்றே" எனும்நலத்தால்
உம்பர்நா டிழிந்தெதனை எதிர்கொள்ள உடன்எழுந்தார். ககக

266 மாளிகைகள் மண்டபங்கள் மருங்குபெருங் கொடிநெருக்கத்
தாளில்நெடுந் தோரணமும் தழைக்கமுகும் குழைத்தாடையும்
நீளிலைய கதலிகளும் நிறைந்தபசும் பொன்தசும்பும்
ஒளிநெடு மணிவிளக்கும் உயர்வாயில் தொறும்நிரைத்தார். கஉ0

267 சோதிமணி வேதிகைகள் தூநறுஞ்சாந் தணிநீவிக்
கோதில்பொரி பொற்சுண்ணங் குளிர்தரள மணிபரப்பித்
தாதவிழ்பூந் தொடைமாலைத் தண்பந்தர் களுஞ்சமைத்து
வீதிகள்நுண் துகள்அடங்க விரைப்பனிநீர் மிகத்தெளித்தார். கஉக

268 மங்கலநீ தம்பாட மழைநிகர்தூ ரியம்முழங்கச்
செங்கயற்கண் முற்றிழையார் தெற்றிதொறும் நடம்பயில
நங்கள்பிரான் திருவாரூர் நகர்வாழ்வார் நம்பியைமுன்
பொங்கெயில்நீள் திருவாயில் புறம்உறவந் தெதிர்கொண்டார். கஉஉ

வேறு

269 வந்தெதிர் கொண்டு வணங்குவார்முன் வன்தொண்டர் அஞ்சலி
கூப்பிநின்று, இந்தை களிப்புற வீதியூடு செல்வார் திருத்தொண்டர்

க பா. பே. 1. அடியணைந்து. 2. மலர்த் கோலங்க
4, 6 மலர்சூழ். அம்பர்மா. 5. அருள்புரிய.
7. மிகைகாட்டார். 8 வந்து.

தம்மை நோக்கி, எந்தை இருப்பதும் ஆரூர்அவர் எம்மையும் ஆள் வரோ கேளீர்என்னும், சந்த இசைப்பதி கங்கள்பாடித் தம்பெரு மான் திருவாயில் சார்ந்தார். கூஉ

270 வானுற நீள்திரு வாயில்நோக்கி மண்ணுற ஐந்துறுப் பால் வணங்கித், தேனுறை கற்பக வாசமாலைத் தேவாகிரியன் தொழு திறைஞ்சி, ஊனும்உயிரும் உருகும் அன்பால் உச்சி குவித்த செங் கைகளோடும், தூநறுங் கொன்றையான் மூலட்டானம் சூழ்திரு மாளிகை வாயில் புக்கார். கூச

271 புற்றிடங் கொண்ட புராதனனைப் பூங்கோயில் மேய பிரானை யார்க்கும், பற்றிடம் ஆய பரம்பொருளைப் பார்ப்பதி பாகனைப் பங்க யத்தாள், அர்ச்சனை செய்ய அருள்புரிந்த அண்ணலை மண்மிசை வீழ்ந்திறைஞ்சி, நற்றமிழ் நாவலர் கோன்உடம்பால் நன்மையின் தன்மையை மெய்ம்மை பெற்றார். கூஞ

272 அன்பு பெருக உருகிஉள்ளம் அலையஅட் டாங்கபஞ் சாங்க மாக, முன்பு முறைமையி னல்வணங்கி முடிவிலாக் காதல் முதிர ஓங்கி, நன்புலன் ஆகிய ஐந்தும்ஒன்றி நாயகன் சேவடி எய்தப்பெற்ற, இன்பவெள் ளத்திடை மூழ்கிநின்றே இன்னிசை வண்தமிழ் மாலை பாட. கூசு

273 வாழிய மாமறைப் புற்றிடங்கொள் மன்னவன் ஆரூ ளாலோர் வாக்குத், "தோழமை ஆக உனக்கு நம்மைத் தந்தனம் நாம்முன்பு தொண்டுகொண்ட, வேள்வியில் அன்றுநீ கொண்டகோலம் என்றும் பூணந்துநின் வேட்கைதீர, வாழிமண் மேல்வியூ யாடுவாய்"என் றூரர் கேட்க எழுந்ததன்றே. கூஎ

274 கேட்க விரும்பிவன் தொண்டர்என்றும் கேடிலாதானை இறைஞ்சி நின்றே, "ஆட்கொள வந்த மறையவனே! ஆரூர் அமர்ந்த அரு மணியே!, வாட்கயல் கொண்டகண் மங்கைபங்கா! மற்றுன் பெரிய கருணையன்றே!, நாட்கம லப்பதம் தந்ததின்று நாயினே னைப்பொரு ளாக" என்றார். கூஅ

275 என்று பலமுறை யால்வணங்கி எய்திய உள்ளக் களிப்பினெடும் வென்றி அடல்விடை போல்நடந்து வீதிவிடங்கப் பெருமான் முன்பு சென்று தொழுது துதித்து வாழ்ந்துதிருமாளி கைவலம் செய்துபோந்தார் அன்று முதலடி யார்களெல்லாந் தம்பிரான் தோழர் என்றேஅறைந்தார்.

276 மைவளர் கண்டர் அருளினாலே வண்தமிழ் நாவலர் தம்பெருமான் ஐசவ விடங்கின் அணிபுனைந்து சாந்தமும் மாலையும் தாரும் ஆகி மெய்வளர் கோலமெல் லாம்பொலிய மிக்கவிழுத்தவ வேந்தர் என்னத் தெய்வ மணிப்புற்று ளாரைப்பாடித்திளைத்து மகிழ்வொடுஞ் செல்லாநின்றார்.

வேறு

277 இதற்குமுன் எல்லை இல்லாத் திருநகர் இதனுள் வந்து
முதற்பெருங் கயிலை ஆதி முதல்வர்தம் பங்கி னுட்குப்
பொதுக்கடிந் தூரிமை செய்யும் பூங்குழல் சேடி மாரில்
கதித்தபூண் ஏந்து கொங்கைக் கமலினி அவத ரித்தாள். கஙக

278 கதிர்மணி பிறந்த தென்ன உருத்திர கணிகை மாராம்
பதியிலார் குலத்துள் தோன்றிப் பரவையார் என்னும் நாமம்
விதியுளி விளக்கத் தாலே மேதகு சான்றோர் ஆன்ற
மதியணி புனிதன் நன்நாள் மங்கல அணியால் சாத்த. கஙஉ

279 பரவினர் காப்புப் போற்றிப் பயில்பெருஞ் சுற்றம், திங்கள்
விரவிய பருவம் தோறும் விழாஅணி எடுப்ப, மிக்கோர்
" வரமலர் மங்கை இங்கு வந்தனள் " என்று சிந்தை
தரவரு மகிழ்ச்சி பொங்கத் தளர்நடைப் பருவஞ் செய்து. கஙங

280 மான்இளம் பிணையோ தெய்வ வளர்இளம் முகையோ வாசத்
தேன்இளம் பதமோ வேலைத் திரைஇளம் பவள வல்லிக்
கான்இளம் கொடியோ திங்கட்கதிர்இளங் கொழுந்தோ காமன்
தான்இளம் பருவம் கற்கும் தனிஇளந் தனுவோ என்ன. கஙச

281 நாடும்இன் பொற்பு வாய்ப்பு நாளுநாள் வளர்ந்து பொங்க
ஆடும்மென் கழங்கும் பந்தும் அம்மனை ஊசல் இன்ன
பாடும்இன் இசையும் தங்கள் பனிமலை வல்லி பாதம்
கூடும்அன் புருகப் பாடும் கொள்கையோர் குறிப்புத் தோன்ற. கஙஞ

282 பிள்ளைமைப் பருவம் மீதாம் பேதைமைப் பருவம் நீங்கி
அள்ளுதற் கமைந்த போற்பால் அநங்கன்மெய்த் தனங்கள் ஈட்டம்
கொள்ளமிக் குயர்வு போன்ற கொங்கைகோங் கரும்பை வீழ்ப்ப
உள்ளமெய்த் தன்மை முன்னை உண்மையும் தோன்ற உய்ப்பார்.

283 பாங்கியர் மருங்கு சூழப் படரொளி மறுகு சூழத்
தேங்கமழ் குழலின் வாசம் திசையெலாம் சென்று சூழ
ஓங்குபூங் கோயில் உள்ளார் ஒருவரை அன்பி னேடும்
பூங்கழல் வணங்க என்றும் போதுவார் ஒருநாள் போந்தார். கஙஎ

284 அணிசிலம் படிகள் " பார்வென் றடிப்படுத் தனம் " என் மூர்ப்ப
மணிகிளர் காஞ்சி அல்குல் வரிஅர வுலகை வென்ற
துணிவுகொண் டார்ப்ப மஞ்சு சுரிகுழற்(கு) அழிய " விண்ணும்
பணியும் " என் றினவண் டார்ப்பப் பரவையார் போதும் போதில்.

285 பூற்றிடம் விரும்பி னரைப் போற்றினர் தொழுது செல்வார்
சுற்றிய பரிச னங்கள் சூழஆ னடைய நம்பி

பா. பே. 1. தேர்ந்தான். 2 உயர்வு பொன்ற.

நற்பெரும் பான்மை கூட்ட நகைபோதிந் திலங்கு செவ்வாய்
விற்புரை நுதலின் வேற்கண் விளங்கிழை யவரைக் கண்டார். கஙூ

284 "கற்பகத்தின் பூங்கோம்போ காமன்தன் பெருவாழ்வோ
போற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கோடியோ
அற்புதமோ சிவனருளோ அறியேன் "என் றதிசயித்தார். கச0

285 "ஓவியம்நான் முகன்எழுத ஒண்ணுமை உள்ளத்தால்
மேவியதன் வருத்தமுற விதித்ததொரு மணிவிளக்கோ
மூவுலகின் பயனுகி முன்நின்ற" தெனநினைந்து
நாவலர்கா வலர்நின்றூர் நடுநின்றூர் படைமதனூர். கசக

286 தண்தரள மணித்தோடும் தகைத்தோடும் கடைபிறழும்
கெண்டைநெடுங் கண்விம்மப் கிளர்ஒளிப்பூண் உரவோனை
அண்டர்பிரான் திருவருளால் அயல்அறியா மனம்விரும்பப்
பண்டைவிதி கடைகூட்டப் பரவையா ருங்கண்டார். கசஉ

287 கண்கொள்ளாக் கவின்பொழிந்த திருமேனி கதிர்விரிப்ப
விண்கொள்ளாப் பேரொளியான் எதிர்நோக்கும் மெல்லியலுக்
கெண்கொள்ளாக் காதலின்முன் பெய்தாத தொருவேட்கை
மண்கொள்ளா ணண்மடம்அச் சம்பயிர்ப்பை வலிந்தெழலும். கசங

288 "முன்னேவந் தெதிர்தோன்றும் முருகனே பெருகோளியால்
தன்நேரில் மாரனே தார்மார்பின் விஞ்சையனே
மின்நேர்செஞ் சடைஅண்ணல் மெய்யருள்பெற் றுடையவனே
என்னே!என் மனந்திரித்த இவன்யாரோ" என நினைந்தார். கசச

289 அண்ணலவன் தன்மருங்கே அளவிறந்த காதலினுல்
உள்நிறையும் குணம்நான்கும் ஒருபுடைசாய்ந் தனஎனினும்
வண்ணமலர்க் கருங்கூந்தல் மடக்கொடியை வலிதாக்கிக்
கண்ணுதலைத் தொழும்அன்பே கைக்கொண்டு செலவுய்ப்ப. கசஞ

290 பாங்கோடிச் சிலைவளைத்துப் படைஅநங்கன் விடுபாணம்
தாங்கோலி எம்மருங்கும் தடைசெய்ய மடவரலும்
தேங்கோதை மலர்க்குழல்மேல் சிறைவண்டு கலந்தார்ப்பப்
பூங்கோயில் அமர்ந்தபிரான் பொற்கோயில்போய்ப்புகுந்தார். கசசு

291 வன்தொண்டர் அதுகண்(டு)"என் மனங்கொண்ட மயிலியலின்
இன்தோண்டைச் செங்கனிவாய் இளங்கோடிதான் யார்"என்ன,
அன்றங்கு முன்நின்றூர் "அவர்நங்கை பரவையார்
சென்றும்பர் தரத்தார்க்கும் சேர்வரியார்" எனச்செப்ப. கசஎ

294 "பேர்பரவை பெண்மையினில் பெரும்பரவை விரும்பல்குல்
ஆர்பரவை அணிதிகழும் மணிமுறுவல் அரும்பரவை

பா-செ-1. மணம்விரும்பி. 2. போய்ப்புக்கார்.

சீர்பரவை ஆயினுள் திருவுருவின் மென்சாயல்
ஏர்பரவை இடைப்பட்ட என்ஆசை எழுபரவை." கசஅ

295 என்றினைய பலவுநினைந் தெம்பெருமான் அருள்வகையான்
முன்தொடர்ந்து வருங்காதல் முறைமையினுல் தொடக்குண்டு
"நன்றெனையாட் கொண்டவர்பால் நண்ணுவன்"என் றுள்மகிழ்ந்து
சென்றுடைய நம்பியும்போய்த் தேவர்பிரான் கோயில்புக. கசக

296 பரவையார் வலங்கொண்டு பணிந்தேத்தி முன்னரே
புரவலனுர் கோயிலினின் றிருமருங்கு புறப்பட்டார்,
விரவுபெருங் காதலினுல் மெல்லியலார் தமைவேண்டி
அரவின்ஆ ரம்புனைந்தார் அடிபணிந்தார் ஆரூரர். கடo

297 அவ்வாறு பணிந்தேத்தி "அணிஆரூர் மணிப்புற்றின்
மைவாழுந் திருமிடற்று வானவர்பால் நின்றும்போந்
தெவ்வாறு சென்றுள்ளஎன் இன்னுயிராம் அன்னம்"எனச்
செவ்வாய்வெண் நகைக்கொடியைத் தேடுவா ராயினுர். கடுக

வேறு

298 "பாச மாம்வினைப் பற்றறுப் பான்மிகும்
ஆசை மேலும்ஓர் ஆசை அளிப்பதோர்
தேசு மன்னஎன் சிந்தைமயக்குற
ஈச னுர்அருள் எந்நெறிச் சென்றதே." கடஉ

299 "உம்பர் நாயகர் தம்கழல் அல்லது
நம்பு மாறறி யேனை நடுக்குற
வம்பு மால்செய்து வல்லியின் ஒல்கியின்(று)
எம்பி ரான்அருள் எந்நெறிச் சென்றதே." கடஙூ

300 "பந்தம் வீடு தரும்பர மன்கழல்
சிந்தைஆரவும் உன்னும்என் சிந்தையில்
வந்து மால்செய்து மான்என வேவிழித்(து)
எந்தை யார்அருள் எந்நெறிச் சென்றதே. கடுச

301 என்று சாலவும் ஆற்றலர் "என்னுயிர்
நின்ற தெங்"கென, நித்திலப் பூண்முலை
மன்றல் வார்குழல் வஞ்சியைத் தேடுவான்
சென்று தேவா சிரியனைச் சேர்ந்தபின். கடுஞ

302 காவி நேர்வருங் கண்ணியை நண்ணுவான்
யாவ ரோடும் உரையியம் பாதிருந்(து)
"ஆவி நல்குவர் ஆரூரை ஆண்டவர்
பூவின் மங்கையைத் தந்(து)"எனும் போழ்தினில். கடுசு

பா. ₹ப. 1. தேதினின் மன்னிஎன்.
2 மயக்கியே. 3 ஆர்வமுற. 4. மன்றலங்குழல்.

303 நாட்டு நல்லிசை நாவலூ ரன்சிந்தை
வேட்ட மின்னிடை இன்னமு தத்தினைக்
காட்டு வன்கட லைக்கடைந் தென்பபோல்
பூட்டும் எழ்பரித் தேரோன் கடல்புக. கருள

304 எய்து மென்பேடை யோடிரை தேர்ந்துண்டு
போய்கை யிற்பகல் போக்கிய புள்ளினம்
வைகு சேக்கைகண் மேற்செல வந்தது
பையுள் மாலை தமியோர் பனிப்புற. கருஅ

305 பஞ்சின் மெல்லடிப் பாவையர் உள்ளமும்
வஞ்ச மாக்கள்தம் வல்வினை யும்பரன்
அஞ்சே முத்தும் உணரா அறிவிலோர்
நெஞ்சும் என்ன இருண்டது நீண்டவான். கருக

306 "மறுவில் சிந்தைவன் தொண்டர் வருந்தினால்
இறும்ம ருங்குலார்க் (கி)யார்பிழைப் பார்"என்று
நறும லர்க்கங்குல் நங்கைமுன் கோண்டபுன்
முறுவல் என்ன முகிழ்த்தது வேண்நிலா. கஉO

307 அரந்தை செய்வார்க் கழுங்கித்தம் ஆருயிர்
வரன்கை தீண்ட மலர்குல மாதர்போல்
பரந்த வெம்பகற் கொல்கிப் பனிமதிக்
கரங்கள் தீண்ட அலர்ந்த கயிரவம். கஉக

308 தோற்றும் மன்னுயிர் கட்கெலாந் தூய்மையே
சாற்றும் இன்பமும் தண்மையும் தந்துபோய்
ஆற்ற அண்டமெ லாம்பரந் தண்ணல்வெண்
நீற்றின் பேரொளி போன்றது நீள்நிலா. கஉஉ

309 வாவி புள்ளொலி மாறிய மாலையில்
நாவ லூரரும் நங்கை பரவையாம்
பாவை தந்த படர்பெருங் காதலும்
ஆவி சூழ்ந்த தனிமையும் ஆயினர். கஉஉ

310 "தந்தி ருக்கண் எரிதழ லிற்பட்டு
வெந்த காமன் வெளியே உருச்செய்து
வந்தென் முன்னின்று வாளி தொடுப்பதே
எந்தை யார்அருள் இவ்வண்ண மோ"என்பார். கஉச

311 "ஆர்த்தி கண்டும்என் மேல்நின் றழற்கதிர்
தூர்ப்ப தேஎனைத் தொண்டுகொண் டாண்டவர்
நீர்த்த ரங்க நெடுங்கங்கை நீள்முடிச்
சாத்தும் வெண்மதி போன்றிலை தண்மதி." கஉஉ

312 "அடுத்து மேன்மேல் அலைத்தெழும் ஆழியே!
தடுத்து முன்னரே ஆண்டவர் தாம்உனைக்
கடுத்த நஞ்சுன் தாங்கக் கரங்களால்
எடுத்து நீட்டுநீ என்னையின் றென்செயாய்." ககூசு

313 "பிறந்த தெங்கள் பிரான்மல யத்திடைச்
சிறந்த ணைந்தது தெய்வநீர் நாட்டினில்
புறம்ப ணைத்தடம் பொங்கழல் வீசிட
மறம்ப யின்றதெந் கோதமிழ் மாருதம்." ககூஎ

314 இன்ன தன்மைய பின்னும் இயம்புவான்
மன்னு காதல னுகிய வள்ளல்பால்
தன்ன ரும்பெறல் நெஞ்சு தயங்கப்போம்
அன்னம் அன்னவள் செய்கை அறைகுவாம். ககூஅ

வேறு

1 315 கனங்கொண்ட மணிகண்டர் கழல்வணங்கிக் கணவனைமுன் பெறு
வாள் போல, இனங்கொண்ட சேடியர்கள் புடைசூழ எய்துபெருங்
காத லோடும், தனங்கொண்டு தளர்மருங்குல் பரவையும்வன் தொண்
டர்பால் தனித்துச் சென்ற, மனங்கொண்டு வரும்பெரிய மயல்
கொண்டு தன்மணிமா ளிகையைச் சார்ந்தாள். ககூக

316 சீறடிமேல் நூபுரங்கள் அறிந்தனபோல் சிறிதளவே ஒலிப்ப
முன்னர், வேறொருவர் உடன்பேசாள் மெல்லஅடி ஓதுங்கிமா ளிகை
யின் மேலால், எறிமர · கதத்தூணத் திலங்குமணி வேதிகையில்
நிலங்கொள் பொற்கால், மாறில்மலர்ச் சேக்கைமிசை மணிநிலா முன்
றில்மருங் கிருந்தாள் வந்து. களஏ

317 அவ்வளவில் அருகிருந்த சேடிமுக நோர்நோக்கி "ஆரூர் ஆண்ட
மைவிரவு கண்டரைநாம் வணங்கப்போம் மறுகெதிர்வந்தவரார்"? என்ன
"இவ்வுலகில் அந்தணராய் இருவர்தே டொருவர்தாம் எதிர்நின் றுண்ட
சைவமுதல் திருத்தொண்டர் தம்பிரான் தோழனர் நம்பி" என்றாள்.

318 என்றவுரை கேட்டலுமே "எம்பிரான் தமரேயோ" என்னு
முன்னம், வன்தொண்டர் பால்வைத்த மனக்காதல் அளவின்றி
வளர்ந்து பொங்க, நின்றநிறை நாண்முதலாம் குணங்கள்உடன் நீங்க
உயிர் ஒன்றுந் தாங்கி, மின்தயங்கு துண்ணிடையாள் வெவ்வுயிர்த்து
மெல்லணைமேல் வீழ்ந்த போது. களஉ

319 ஆரநறுஞ் சேறுட்டி அரும்பனிநீர் நறுந்திவலை அருகு வீசி
ஈரஇளந் தளிர்குளிரி படுத்துமட வார்செய்த இவையும் எல்லாம்
பேரழலின் நெய்சொரிந்தால் ஒத்தனமற் றதன்மீது சமிதை என்ன
மாரனும்தன் பெருஞ்சிலை யின்வலிகாட்டிமலர்வாளி சொரிந்தான்வந்து.

1 மா · பே · நூலகம் தஞ்சாவூர்.
மலையடிகள் நூல்நிலை
8210a

320 மலரமளித் துயிலாற்றுள் வருந்தென்றல் மருங்காற்றுள் மங்குல் வானில், நிலவுமிழும் தழலாற்றுள் நிறையாற்றும் பொறையாற்று நீர்மை யோடும், கலவமயில் எனஎழுந்து கருங்குழலின் பரமாற்றுக் கையை ளாகி, இலவஇதழ்ச் செந்துவர்வாய் நெகிழ்ந்தாற்று மையின் வறிதே இன்ன சொன்னாள். களச

வேறு

321 "கந்தம் கமழ்மென் குழலீர்! இதுஎன் கலிவாண் மதியம் கனல் வான் எனஇச், சந்தின் தழலைப் பனிநீர் அளவித் தடவுங் கொடியீர்! தவிரீர் தவிரீர், வந்திங் குலவி நிலவும் விரையார் மலையு னிலமும் எரி யாய் வருமால், அந்தண் புனலும் அரவும் விரவும் சடையான் அருள் பெற் றுடையார் அருளார்." களஞ

322 "புலரும் படியன் றிரவென் னளவும் பொறையும் நிறையும் இறையும் தரியா, உலரும் தனமும் மனமும் வீனையேன் ஒருவென் அளவோ பெருவாழ் வுரையீர், பலரும் புரியும் துயர்தான் இதுவே படைமன் மதனுர் புடைநின் றகலார், அலரும் நிலவும் மலரும் முடி யார் அருள்பெற் றுடையார் அவரோ அறியார்." களசு

323 "தேரும் கொடியும் மிடையும் மறுகில் திருவா ரூரீர் நீரே அல் லால், ஆரென் துயரம் அறிவார் அடிகேள் அடியேன் அயரும் படியோ இதுதான், நீரும் பிறையும் பொறிவாள் அரவின் நிரையும் நிரை வெண் தலையின் புடையே, ஊரும் சடையீர்! விடைமேல் வருவீர்! உமதன் பிலர்போல் யானே உறுவேன்." களள

324 என்றின் னனவே பலவும் புகலும் இருளார் அளகச் சுருளோ தியையும், வன்தொண்டரையும் படிமேல் வரமூன் பருள்வான் அரு ளும் வகையார் நினைவார், சென்றும் பர்களும் பணியும் செல்வத் திருவா ரூர்வாழ் பெருமான் அடிகள், "அன்றங் கவர்மன் றலைநீர் செயும்', என் றடியார் அறியும் படியால் அருளி. களஅ

325 மன்னும் புகழ்நா வலர்கோன் மகிழ "மங்கை பரவை தன்னைத் தந்தோம், இன்ன வகைநம் அடியார் அறியும் படியே உரைசெய்த னம்"என் றருளிப், பொன்னின் புரிபுன் சடையன் விடையன் பொ ருமா கரியின் உரிவை புனைவான், அன்ன நடையாள் பரவைக்(கு) "அணியதாரு ரன்பால் மணம்"என் றருள. களக

326 காமத் துயரில் கவல்வார் நெஞ்சில் கரையில் இருளும் கங்குல் கழிபோம், யாமத் திருளும் புலரக் கதிரோன் எழுகா லையில்வந் தடி யார் கூடிச், சேமத் துணையாம் அவர்பேர் அருளைத் தொழுதே திருநா வலர்கோன் மகிழத், தாமக் குழலாள் பரவை வதுவை தகுநீர் மையி னல் நிகழச் செய்தார். கஅo

பா. வே. 1. திருவாரூரார்.

வேறு

327 தேன்ஞவ ஞர்மன்னன் தேவர்பிரான் திருவருளால்
மின்ஞருங் கொடிமருங்குல் பரவையெனும் மெல்லியல்தன்
போன்ஞரும் முலைஞங்கல் புணர்குவடே சார்வாகப்
பன்ஞளும் பயில்யோக பரம்பரையின் விரும்பினர். கஅக

328 தன்னேயா ருடையபிரான் சரணார விந்தமலர்
சென்னியிலுஞ் சிந்தையிலும் மலர்வித்துத் திருப்பதிகம்
பன்னுதமிழ்த் தொடைமாலை பலசாத்திப் பரவையெனும்
மின்னிடையாள் உடன்கூடி விளையாடிச் செல்கின்றார். கஅஉ

வேறு

329 மாதுடன் கூட வைகி மாலிகை மருங்கு சோலை,
போதலர் வாவி மாடு செய்குன்றின் புடையோர் தெற்றிச்
சீதளத் தரளப் பந்தர்ச் செழுந்தவி சிழிந்து தங்கள்
நாதர்பூங் கோயில் நண்ணிக் கும்பிடும் விருப்பால் நம்பி. கஅங

330 அந்தரத் தமரர் போற்ற அணிகிளர் ஆடை சாத்திச்
சந்தனத் தளறு தோய்ந்த குங்குமக் கலவை சாத்திச்
சுந்தரச் சுழியஞ் சாத்திச் சுடர்மணிக் கலன்கள் சாத்தி
இந்திரத் திருவின் மேலாம் எழில்பெற விளங்கித் தோன்ற. கஅச

331 கையினில் பூனபொற் கோலும் காதினில் இலங்கு தோடும்
மெய்யினில் துவளு நூலும் நெற்றியில் விளங்கு நீறும்
"ஐயனுக் கழகிதாம்"என் ருயிழை மகளிர் போற்றச்
சைவமெய்த் திருவின் கோலம் தழைப்பவீ தியினைச் சார்ந்தார். கஅஞ

332 "நாவலூர் வந்த சைவ நற்றவக் களிறே" என்றும்
"மேவலர் புரங்கள் செற்ற விடையவர்க் கன்ப" என்றும்
"தாவில்சீர்ப் பெருமை ஆரூர் மறையவர் தலைவ" என்றும்
மேவினர் இரண்டு பாலும் வேறுவே ருயம் போற்ற. கஅசு

333 கைக்கிடா குரங்கு கோழி சிவல்கவு தாரி பற்றிப்
பக்கமுன் போது வார்கள் பயில்மொழி பயிற்றிச் செல்ல
மிக்கபூம் பிடகை கொள்வோர் விரையடைப் பையோர் சூழ
மைத்தடங் கண்ணி னார்கள் மறுகணீள் மறுகில் வந்தார். கஅள

334 போலங்கலப் புரவி பண்ணிப் போதுவார் பின்பு போத
இலங்கொளி வலயப் பொற்றேர்ள் இடையிடை மிடைந்து தொங்கல்.
நலங்கிளர் நீழல் சூழ நான்மறை முனிவ ரோடும்
அலங்கலந் தோளி னன்வந் தணைந்தனன் அண்ணல் கோயில். கஅஅ

335 கண்ணுதல் கோயில் தேவா சிரியனுங் காவ ணத்துள்
விண்ணவர் ஒழிய மண்மேல் மிக்கசீர் அடியார் கூடி
எண்ணிலார் இருந்த போதில் "இவர்க்குயான் அடியா னுகப்
பண்ணுநாள் எந்நாள்" என்று பரமர்தாள்பரவச் சென்றூர். கஅசு

336 அடியவர்க் கடிய னுவேன் என்னும்ஆ தரவு கூரக்
கொடிநெடுங் கொற்ற வாயில் பணிந்துகை குவித்துப் புக்கார்
கடிகொள்பூங் கொன்றை வேய்ந்தார் அவர்க்கெதிர் காணக் காட்டும்
படியெதிர் தோன்றி நிற்கப் பாதங்கள் பணிந்து பூண்டு. கஉ0

வேறு

337 மன்பெ ருந்திரு மாமறை வண்டுசூழ்
அன்பர் சிந்தை அலர்ந்தசெந் தாமரை
நன்பெ ரும்பர மானந்த நன்மது
என்த ரத்தும் அளித்தெதிர் நின்றன. கஉஉ

338 ஞாலம் உய்ய நடம்மன்று ளாடின
காலன் ஆருயிர் மாளக் கறுத்தன
மாலை தாழ்குழல் மாமலை யாள்செங்கை
சில மாக வருடச் சிவந்தன. கஉஉ

339 நீதி மாதவர் நெஞ்சில்பொலிந்தன
வேதி யாதவர் தம்மைவே திப்பன
சோதி யாய்எழுஞ் சோதியுட் சோதிய
ஆதிமாலயன் காணு அளவின. கஉஉ

340 வேத ஆரணம் மேற்கொண் டிருந்தன
பேதை யேன்செய் பிழைபொறுத் தாண்டன
ஏத மானவை தீர்க்க இசைந்தன
பூத நாதனின் புண்டரீ கப்பதம். கஉச

வேறு

341 இன்னவா றேத்து நம்பிக் கேறுசே வகனூர் தாமும்
அன்னிலை அவர்தாம் வேண்டும் அதனையே அருள வேண்டி
மன்னுசீர் அடியார் தங்கள் வழித்தொண்டை உணர நல்கிப்
பின்னையும் அவர்கள் தங்கள் பெருமையை அருளிச் செய்வார். கஉடி

342 "பெருமையால் தம்மை ஒப்பார் பேணலால் எம்மைப் பேற்றூர்
ஒருமையால் உலகை வேல்வார் ஊனம்மேல் ஒன்றும் இல்லார்
அருமையாம் நிலையில் நின்றூர் அன்பினுல் இன்பம் ஆர்வார்
இருமையுங் கடந்து நின்றூர் இவரைநீ அடைவாய்" என்று. கஉஉ

பா-பே-1. பணிய. 2. பெரியனை. 3. மாலவன்

343 நாதனூர் அருளிச் செய்ய நம்பியா ரூரர் "நானிங்(கு)
ஏதம்தீர் நெறியைப் பெற்றேன்" என்றெதிர் வணங்கிப் போற்ற
"நீதியால் அவர்கள் தம்மைப் பணிந்துநீ நிறைசொன் மாலை
கோதிலா வாய்மை யாலே பாடென" அண்ணல் கூற. ககஎ

344 தன்னையா ளுடைய நாதன் தானருள் செய்யக் கேட்டுச்
சென்னியால் வணங்கி நின்ற திருமுனைப் பாடி நாடர்
"இன்னவா றின்ன பண்பென் றேத்துகேன் இதற்கு யானுர்
பன்னுபா மாலை பாடும் பரிசெனக் கருள்செய்" என்ன. ககஅ

வேறு

345 தோல்லைமால் வரைபயந்த தூயாள்தன் திருப்பாகன்
அல்லல்தீர்க் குலகுய்ய மறையளித்த திருவாக்கால்
"தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்"என்(று)
"எல்லையில்வண் புகழாரை எடுத்திசைப்பா மொழி"என்றுன். ககக

346 மன்னுசீர் வயல்ஆரூர் மன்னவரை வன்தொண்டர்
சென்னியுற அடிவணங்கித் திருவருள்மேற் கொள்பொழுதில்
முன்னம்மால் அயன்அறியா முதல்வர்தாம் எழுந்தருள
அந்நிலைகண் டடியவர்பால் சார்வதனுக் கணிகின்றூர். உ00

347 தூரத்தே திருக்கூட்டம் பலமுறையால் தொழுதன்பு
சேரத்தாழ்ந் தெழுந்தருகு சென்றெய்தி இன்றழியா
வீரத்தார் எல்லார்க்குந் தனித்தனிவே றடியேன்என்
றூர்வத்தால் திருத்தொண்டத் தொகைப்பதிகம் அருள்செய்தார். உ0உ

348 தம்பெருமான் கொடுத்தமொழி முதலாகத் தமிழ்மாலைச்
செம்பொருளால் திருத்தொண்டத்தொகையான்ற திருப்பதிகம்
உம்பர்பிரான் தானருளும் உணர்வுபெற உலகேத்த
எம்பெருமான் வன்தொண்டர் பாடிஅவர் எதிர்பணிந்தார். உ0ஊ

349 உம்பர்நா யகரடியார் பேருவகை தாமெய்த
நம்பியா ரூர்திருக் கூட்டத்தின் நடுவணைந்தார்
தம்பிரான் தோழரவர் தாம்மொழிந்த தமிழ்முறையே
எம்பிரான் தமர்கள்திருத் தொண்டேத்தல் உறுகின்றேன். உ0ஈ

பா. ஏ.பி. சொல்வதனுக் உ. நின்றழியா
3. அருள்செய்வார். 4. தொகையான.

பதிகம்

திருத்தொண்டத்தொகை - பண் - கொல்லிக்கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

1 தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் திருநீலகண்டத்துக் குயவனார்க் கடியேன், இல்லையேயென்னுத இயற்பகைக்கும் அடியேன் இளையான் தன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன், வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கடியேன் விரிபொழில்சூழ் குன்றையார் விறல்மிண்டர்க் கடியேன், அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன் ஆரூரான் ஆரூரில் அம்மானுக்காளே.

2 இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தர்க் கடியேன் எஞ்சி நாதன்தன் அடியார்க்கும் அடியேன், கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன் கடவூரிற் கலயன் தன் அடியார்க்கும் அடியேன், மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன் எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன், அலைமலிந்த புனல்மங்கை ஆளர்க் கடியேன் ஆரூரான் ஆரூரில் அம்மானுக்காளே. உ

3 மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன் முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன், செம்மையே திருநாளைப்போவார்க்கும் அடியேன் திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன், மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க வெருண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த, அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன் ஆரூரான் ஆரூரில் அம்மானுக்காளே. ஙூ

4 திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட திருநாவுக் கரையன்தன் அடியார்க்கும் அடியேன், பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன் பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கும் அடியேன், ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன் ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கர்க் கடியேன், அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன் ஆரூரான் ஆரூரில் அம்மானுக்காளே. ஞ

5 வம்பறா வரிவண்டு மணம்நாற மலரும் மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணு, எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன் ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன், நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன் நாட்டம்மிகு தண்டிக்கும் மூர்க்கர்க்கும் அடியேன், அம்பரான் சோமாசிமாறனுக்கும் அடியேன் ஆரூரான் ஆரூரில் அம்மானுக்காளே. டூ

6 வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கும் அடியேன், சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன் செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டர்க் கடியேன், கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவார்க்கும் அடியேன் கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன், ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோன் அடியேன் ஆரூரான் ஆரூரில் அம்மானுக்காளே. சூ

8 பொய்யடிமை யில்லாத புலவர்க்கும் அடியேன் பொழிற்கருவூர்த் தஞ் சிய புகழ்ச்சோழர்க் கடியேன், மெய்யடியான் நரசிங்க முனையரையர்க் கடியேன் விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தர்க் கடியேன், கைதடிந்த வரிசிலையான் கலிக் கம்பன் கலியன் கழற்சத்தி விரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன், ஐயடி கள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன் ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

5 கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த கண்ணம்புல்ல நம்பிக்குங் காரிக்கும் அடியேன், நிறைக்கொண்ட சிந்தையால் நெல்வேலி வென்ற நின்ற சீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன், குறைக்கொண்ட செம்பவளம் இருள கற்றுஞ் சோதி தொன்மயிலே வாயிலான் அடியார்க்கும் அடியேன், அறைக் கொண்ட வேல்நம்பி மூனையடுவார்க் கடியேன் ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. அ

6 கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான் காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன், மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்கும் தஞ்சை மன்னவ னுஞ் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன், புடைசூழ்ந்த புலியதள்மேல் அரவாட ஆடிப் பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன், அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன் ஆரூரன் ஆரூரில் அம்மா னுக் காளே. கூ

7 பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன் பரமனையே பாடுவார் அடி யார்க்கும் அடியேன், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன் திரு வாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன், மூப்போதுந் திருமேனி தீண்டு வார்க் கடியேன் முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன், அப்பாலும் அடிச் சார்ந்த அடியார்க்கும் அடியேன் ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. கo

7 மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல் வரிவளையாள் மானிக்கும் நேச னுக்கும் அடியேன், தென்னவனுய் உலகாண்ட செங்கணனுர்க் கடியேன் திரு நீல கண்டத்துப் பாணனுர்க் கடியேன், என்னவனும் அரனடியே அடைந்திட்ட சடையன் இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன், அன்னவனும் ஆரூரன் அடிமைகேட் டுவப்பார் ஆரூரில் அம்மானுக் கன்பரா வாரே. கக

திருச்சிற்றம்பலம்

உ. தில்லைவாழந்தணர் சருக்கம்

1. தில்லைவாழந்தணர் புராணம்

350 ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி. க

351 கற்பனை கடந்த சோதி கருணையே உருவ மாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி. உ

352 போற்றிநீள் தில்லை வாழ்அந் தணர்திறம் புகல லுற்றேன்
நீற்றினுல் நிறைந்த கோல நிருத்தனுக் குரிய தொண்டாம்
பேற்றினுர் பெருமைக் கெல்லை ஆயினுர் பேணி வாழும்
ஆற்றினுர் பெருகும் அன்பால் அடித்தவம் புரிந்து வாழ்வார். ங

353 பொங்கிய திருவில் நீடும் பொற்புடைப் பணிகள் ஏந்தி
மங்கலத் தொழில்கள் செய்து மறைகளால் துதித்து மற்றும்
தங்களுக் கேற்ற பண்பில் தகும்பணித் தலைகின் றுய்த்தே
அங்கணர் கோயில் உள்ளா அகம்படித் தொண்டு செய்வார். ச

354 வருமுறை எரிமூன் றோம்பி மன்னுயிர் அருளால் மல்கத்
தருமமே பொருளாக் கொண்டு தத்துவ நெறியில் செல்லும்
அருமறை நான்கி னோடா றங்கமும் பயின்று வல்லார்
திருநடம் புரிவார்க் காளாம் திருவினுல் சிறந்த நீரார். ஞ

355 மறுவிலா மரபின் வந்து மாறிலா ஒழுக்கம் பூண்டார்
அறுதொழில் ஆட்சி யாலே அருங்கலி நீக்கி உள்ளார்
உறுவது நீற்றின் செல்வம் எனக்கொளும் உள்ளம் மிக்கார்
பெறுவது சிவன்பால் அன்பாம் பேறெனப் பெருகி வாழ்வார். ட

356 ஞானமே முதலா நான்கும் நவையறத் தெரிந்து மிக்கார்
தானமும் தவமும் வல்லார் தகுதியின் பகுதி சார்ந்தார்
ஊனம்மேல் ஒன்றும் இல்லார் உலகெலாம் புகழ்ந்து போற்றும்
மானமும் போறையும் தாங்கி மனுஅறம் புரிந்து வாழ்வார். ண

357 சேம்மையால் தணிந்த சிந்தைத் தெய்வமே தியர்க ளாளுர்
மும்மைஆ யிரவர் தாங்கள் போற்றிட முதல்வ னுரை

இம்மையே பெற்று வாழ்ந்தார் இனிப்பெறும் பேரொன் றில்லார்
தம்மையே தமக்கொப் பான நிலைமையால் தலைமை சார்ந்தார். அ

358 இன்றிவர் பெருமை எம்மால் இயம்பலாம் வல்லித் தாமோ
தென்தமிழ்ப் பயனுய் உள்ள திருத்தொண்டத் தொகைமுன் பாட
அன்றுவன் தொண்டர் தம்மை அருளிய ஆரூர் அண்ணல்
மூன்திரு வாக்கால் கோத்த முதற்பொரு ளானார் என்றால். கூ

359 அகலிடத் துயர்ந்த தில்லை அந்தணர் அகிலம் எல்லாம்
புகழ்திரு மறையோர் என்றும் பொதுநடம் போற்றி வாழ்க
நிகழ்திரு நீல கண்டக் குயவனார் நீடு வாய்மை
திகழும்அன் புடைய தொண்டர் செய்தவம் கூற லுற்றும். கo

ஆ திருவிருத்தம் நூறு.

2. திருநீலகண்ட நாயனார் புராணம்

360 வேதியர் தில்லை மூதூர் வேட்டோவர் குலத்து வந்தார்
மாதொரு பாகம் நோக்கி மன்னுசிற் றம்ப லத்தே
ஆதியும் முடிவும் இல்லா அற்புதத் தனிக்கூத் தாடும்
நாதனார் கழல்கள் வாழ்த்தி வழிபடும் நலத்தில் மிக்கார். க

361 பொய்கடிந் தறத்தின் வாழ்வார் புனற்சடை முடியார்க் கன்பர்
மெய்யடி யார்கட் கான பணிசெயும் விருப்பில் நின்றார்
வையகம் போற்றும் செய்கை மனையறம் புரிந்து வாழ்வார்
சைவமெய்த் திருவின் சார்வே பொருளெனச் சாரு நீரார். உ

362 அளவிலா முரபின் வாழ்க்கை மட்கலம் அமுதுக் காக்கி
வளரிளம் திங்கட் கண்ணி மன்னுளார் அடியார்க் கென்றும்
உளம்மகிழ் சிறப்பின் மல்க ஓடளித் தொழுகும் நாளில்
இளமைமீ தூர இன்பத் துறையினில் எளியர் ஆனார். ங

363 அவர்தங்கண் மனைவி யாரும் அருந்ததிக் கற்பில் மிக்கார்
புவனங்கள் உய்ய ஐயர் பொங்குநஞ் சுண்ண யாம்செய்
தவம்நின்று தடுத்த தென்னத் தகைந்துதான் தரித்த தென்று
சிவனெந்தை கண்டத் தன்னைத் திருநீல கண்டம் என்பார். ச

364 ஆனதங் கேள்வர் அங்கோர் பரத்தைபால் அணைந்து நண்ண
மானம்முன் பொருது வந்த ஊடலால் மனையின் வாழ்க்கை
ஏனைய எல்லாஞ் செய்தே உடனுறை(வு) இசையார் ஆனார்
தேனலர் கமலப் போதில் திருவினும் உருவம் மிக்கார். ஞ

பா. பே. 1. வாழ்வார். 2. பெருமை. 3. வாழ. 4. மல்கிற்
5. முடியார்க்கின்பம். 6. பொருளின். 7. வந்த.
8. பொருவுவந்த. 9. உடனுறை.

365 மூண்டஅப் புலவி நீர்க்க அன்பனார் முன்பு சென்று
தூண்தயங் கிளமென் சாயல் பொற்கொடி அனையார் தம்மை
வேண்டுவ இரந்து கூறி மெய்யுற அணையும் போதில்
"தீண்டவீ ராயின் எம்மைத் திருநீல கண்டம்" என்றார். கூ

366 ஆதியார் நீல கண்டத் தளவுதாம் கொண்ட ஆர்வம்
பேதியா ஆணை கேட்ட பெரியவர் பெயர்ந்து நீங்கி
எதிலார் போல நோக்கி "எம்மைஎன் றதனுல் மற்றை
மாதரார் தமையும் என்தன் மனத்திலும் தீண்டேன்" என்றார். எ

367 கற்புறு மனைவி யாரும் கணவனார்க் கான எல்லாம்
பொற்புறு மெய்யு ரும்பல் பொருந்துவ போற்றிச் செய்தே
இற்புறம்(பு) ஒழியா தங்கண் இருவரும் வேறு வைகி
அற்புறு புணர்ச்சி இன்மை அயலறி யாமை வாழ்ந்தார். அ

368 இளமையில் மிக்கு ளார்கள் இருவரும் அறிய நின்ற
அளவில்சீர் ஆணை போற்றி ஆண்டுகள் பலவுஞ் செல்ல
வளம்மலி இளமை நீங்கி வடிவுறு மூப்பு வந்து
தளர்வொடு சாய்ந்தும் அன்பு தம்பிரான் திறத்துச் சாயார். கூ

369 இன்நெறி ஒழுகும் காளில் எரிதளிர்த் தென்ன நீண்ட
மின்னெளிர் சடையான் தானுந் தொண்டரை விளக்கங் காண
நன்னெறி இதுவாம் என்று ஞாலத்தார் விரும்பி உய்யும்
அன்நெறி காட்டும் ஆற்றல் அருட்சிவ யோகி யாகி. கo

வேறு

370 கீளொடு கோவணம் சாத்திக் கேடிலா
வாள்விடு நீற்றெருளி மலர்ந்த மேனிமேல்
தோளொடு மார்பிடைத் துவளும் நூலுடன்
நீளொளி வளர்திரு முண்ட நெற்றியும். கக

371 நெடுஞ்சடை கரந்திட நெறித்த பம்பையும்
விடுங்கதிர் முறுவல்வெண் நிலவும் மேம்பட
இடும்பலிப் பாத்திரம் ஏந்து கையராய்
நடந்துவேட் கோவர்தம் மனையில் நண்ணினார். கஉ

372 நண்ணிய தவச்சிவ யோக நாதரைக்
கண்ணுற நோக்கிய காதல் அன்பர்தாம்
புண்ணிய தொண்டராம் என்று போற்றிசெய்
தெண்ணிய வகையினல் எதிர்கொண் டேத்தினர். கஉ

373 பிறைவளர் சடைமுடிப் பிராணத் தொண்டரென்
றுறையுளில் அணைந்துபேர் உவகை கூர்ந்திட

பா.பே. 1. நீத்த. 2. மானிர். 3. தமக்கையென். 4. போன்றுதெய்ய. 5. தழியாடவ்கனை. 6 பொருது. 7 உவகையால்

முறைமையின் வழிபட மொழிந்த பூசைகள்
நிறைபெரு விருப்பொடு செய்து நின்றபின். கச

374 "எம்பிரான் ! யான்செயும் பணிஎது" என்றனர்
வம்புலா மலர்ச்சடை வள்ளல் தொண்டனார்
உம்பர்நா யகனும்"இவ் வோடுன் பால்வைத்து
நம்பி !நீ தருகநாம் வேண்டும் போ"தென்று. கஞ

375 "தன்னைஒப் பரியது தலத்துத் தன்னுழைத்
துன்னிய யாவையுந் தூய்மை செய்வது
பொன்னினும் மணியினும் போற்ற வேண்டுவ
தின்னதன் மையதிது வாங்கு நீ"என. கசு

376 தோல்லைவேட் கோவர்தங் குலத்துள் தோன்றிய
மல்குசீர்த் தொண்டனார் வணங்கி வாங்கிக்கொண்
டொல்லையின் மனையிலோர் மருங்கு காப்புறும்
எல்லையில் வைத்துவந் திறையை எய்தினார். கள

377 வைத்தபின் மறையவ ராகி வந்தருள்
நித்தனார் நீங்கிட நின்ற தொண்டரும்
உய்த்துடன் போய்விடை கொண்டு மீண்டனர்
அத்தர்தாம் அம்பலம் அணைய மேவினார். கஅ

வேறு

378 சாலநாள் கழிந்த பின்பு தலைவனார் தாம்முன் வைத்த
கோலமார் ஓடு தன்னைக் குறியிடத் தகலப் போக்கிச்
சீலமார் கொள்கை என்றும் திருந்துவேட் கோவர் தம்பால்
வாலிதாம் நிலைமை காட்ட முன்புபோல் மனையில் வந்தார். கக

379 வந்தபின் தொண்ட ரெதிர்வழி பாடு செய்து
"சிந்தைசெய் தருளிற் றெங்கள் செய்தவம்" என்று நிற்ப
"மூந்தைநாள் உன்பால் வைத்த மொய்யொளி விளங்கும் ஓடு
தந்துநில்" என்றுன் எல்லாம் தான்வைத்து வாங்க வல்லான். உ0

380 என்றவர் விரைந்து கூற இருந்தவர் ஈந்த ஓடு
சென்றுமுன் கொணர்வான் புக்கார் கண்டிலர் திகைத்து நோக்கி
நின்றவர் தம்மைக் கேட்டார் தேடியும் காணர் மாயை
ஒன்றுமங் கறிந்தி லாதார் உரைப்பதொன் றின்றி நின்றார். உக

381 மறையவ னாகி நின்ற மலைமகள் கேள்வன் தானும்
உறையுளில் புக்கு நின்ற ஒருபெருந் தொண்டர் கேட்ப
"இறையிலிங் கெய்தப் புக்காய் தாழ்த்ததென்" என்ன வந்து
கறைமறை மிடற்றி னானைக் கைதொழு தணைக்க லுற்றார். உஉ

382 "இழையணி முந்நூல் மார்பின் எந்தை! நீர் தந்து போன
விழைதரும் ஓடு வைத்த வேறிடம் தேடிக் காணேன்
பழையமற் றதனில் நல்ல பாத்திரம் தருவன் கொண்டிப்
பிழையினைப் பொறுக்க வேண்டும் பெருமை" என் றிறைஞ்சி நின்றார்.

383 சென்னியால் வணங்கி நின்ற தொண்டரைச் செயிர்த்து நோக்கி
"என்னிது மொழிந்த வாறீ யான்வைத்த மண்ணே டன்றிப்
பொன்னினுல் அமைத்துத் தந்தாய் ஆயினுங் கொள்ளேன் போற்ற
முன்னைநான் வைத்த ஓடே கொண்டுவா" என்றான் முன்னோன். உச

384 "கேடிலாப் பெரியோய்! என்பால் வைத்தது கெடுத லாலே
நாடியும் காணேன் வேறு நல்லதோர் ஓடு சால
வீடுசெல் வதுதான் ஒன்று தருகின்றேன் எனவும் கொள்ளா
தூடிநின் றுரைத்த தென்றன் உணர்வெலாம் ஒழித்த" தென்ன.

385 "ஆவதென் உன்பால் வைத்த அடைக்கலப் பொருளை வௌவிப்
பாவகம் பலவும் செய்து பழிக்குநீ ஒன்றும் நாணாய்
யாவரும் காண உன்னை வஞ்சித்துநான் கொண்டே அன்றிப்
போவதும் செய்யேன்" என்றான் புண்ணியப் பொருளாய் நின்றான்.

386 "வளத்தினுல் மிக்க ஓடு வௌவினேன் அல்லேன் ஒல்லை
உளத்தினும் களவி லாமைக் கென்செய்கேன் உரையும்" என்னக்
களத்துநஞ் சொளித்து நின்றான் "காதல்உன் மகனைப் பற்றிக்
குளத்தினில் மூழ்கிப் போ" என் றருளினன் கோடமை இல்லான்.

387 "ஐயர்நீர் அருளிச் செய்த வண்ணம்யான் செய்வ தற்குப்
போய்யில்சீர்ப் புதல்வன் இல்லை என்செய்கேன் புகலும்" என்ன,
"மையறு சிறப்பின் மிக்க மனையவள் தன்னைப் பற்றி
மொய்யலர் வாவி புக்கு மூழ்குவாய்" எனமொ ழிந்தார். உஅ

வேறு

388 கங்கைநதி கரந்தசடை கரந்தருளி எதிர்நின்ற
வெங்கண்விடை யவர்அருள வேட்கோவர் உரைசெய்வார் :
"எங்களில்ஓர் சபதத்தால் உடன்மூழ்க இசைவில்லை
பொங்குபுனல் யான்மூழ்கித் தருகின்றேன் போதும்" என. உக

389 "தந்ததுமுன் தாராதே கொள்ளாமைக் குன்மனைவி
அந்தளிர்ச்செங் கைப்பற்றி அலைபுனலில் மூழ்காதே
சிந்தைவலித் திருக்கின்றாய் திலைவாழ் அந்தணர்கள்
வந்திருந்த போரவையில் மன்னுவன்யான்" எனச்சென்றார். ஈo

390 நல்லோழுக்கம் தலைநின்றார் நான்மறையின் துறைபோனர்
திலைவாழ் அந்தணர்கள் வந்திருந்த திருந்தவையில்

மாதேயி. விளரு தும். உ. சொன்னை.

எல்லையிலான் முன்செல்ல இருந்தொண்டர் அவர்தாமும்
மல்குபெருங் காதலினுல் வழக்கின்மே லிட்டணைந்தார். நஈ

391 அந்தணனும் எந்தைபிரான் அருமறையோர் முன்பகர்வான்
"இந்தவேட் கோவன்பால் யான்வைத்த பாத்திரத்தைத்
தந்தொழியான் கெடுத்தானேல் தன்மனைவி கைப்பற்றி
வந்துமுழ் கியுந்தாரான் வலிசெய்கின் றுன்" என்றார். நஉ

392 நறைகமழுஞ் சடைமுடியும் நாற்றோளும் முக்கண்ணும்
கறைமருவுந் திருமிடறும் கரந்தருளி எழுந்தருளும்
மறையவன்இத் திறம்மொழிய மாமறையோர் உரைசெய்வார்
"நிறையுடைய வேட்கோவர்! நீர்மொழியும்" புகுந்ததென. நஊ

393 "நீள்நிதியாம் இதுவென்று நின்றஇவர் தரும்ஓடு
பேணிநான் வைத்தஇடம் பெயர்ந்துகரந் ததுகாணேன்
பூணைநூல் மணிமார்பீர்! புகுந்தபரி சித" என்று
சேணிடையும் தீங்கடையாத் திருத்தொண்டர் உரைசெய்தார். நச

வேறு

394 திருவுடை அந்த ணுளர் செப்புவார் "திகழ்ந்த நீற்றின்
உருவுடை இவர்தாம் வைத்த ஓட்டினைக் கெடுத்தீ ரானுல்
தருமிவர் குளத்தில் மூழ்கித் தருகஎன் றுரைத்தா ராகில்
மருவிய மனைவி யோடு மூழ்குதல் வழக்கே" என்றார். நஎ

395 அருந்தவத் தொண்டர் தாமும் அந்தணர் மொழியக் கேட்டுத்
திருந்திய மனைவி யாரைத் தீண்டாமை செப்ப மாட்டார்
"பொருந்திய வகையால் மூழ்கித் தருகின்றேன் போதும்" என்று
பெருந்தவ முனிவ ரோடும் பெயர்ந்ததம் மனையைச் சார்ந்தார். நஏ

396 மனைவியார் தம்மைக் கொண்டு மறைச்சிவ யோகி யார்முன்
சினவிடைப் பாகர் மேவும் திருப்புலீச் சுரத்து முன்னர்
நனைமலர்ச் சோலை வாவி நண்ணித்தம் உண்மை காப்பார்
புனைமணி வேணுத் தண்டின் இருதலை பிடித்துப் புக்கார். நஐ

397 தண்டிரு தலையும் பற்றிப் புகும்அவர் தம்மை நோக்கி
வெண்திரு நீற்று முண்ட வேதியர் "மாதைத் தீண்டிக்
கொண்டுடன் மூழ்கீர்" என்னக் கூடாமை பாரோர் கேட்பப்
பண்டுதம் செய்கை சொல்லி மூழ்கினர் பழுதி லாதார். நக

398 வாவியின் மூழ்கி ஏறுங் கணவரும் மனைவி யாரும்
மேவிய மூப்பு நீங்கி விருப்புறும் இளமை பெற்றுத்
தேவரும் முனிவர் தாமும் சிறப்பொடு பொழிந்துத் தெய்வப்
பூவின்மா மழையின் மீள மூழ்குவார் போன்று தோன்ற. நகக

399 அங்நிலே அவரைக் காணும் அதிசயம் கண்டார் எல்லாம்
முன்னிலே நின்ற வேத முதல்வரைக் கண்டார் இல்லே
"இங்நிலே இருந்த வண்ணம் என்" என மருண்டு நின்றார்
துன்னிய விசும்பி னூடு தூணையுடன் விடைமேற் கண்டார். ச0

400 கண்டனர் கைக ளாரத் தொழுதனர் கலந்த காதல்
அண்டரும் ஏத்தி னார்கள் அன்பர்தம் பெருமை நோக்கி
விண்டரும் பொலிவு காட்டி விடையின்மேல் வருவார் தம்மைத்
தொண்டரும் மனேவி யாரும் தொழுதுடன் போற்றி நின்றார். சக

401 மன்றலே திருக்கூத் தாடி அடியவர் மனேகள் தோறும்
சென்றவர் நிலேமை காட்டும் தேவர்கள் தேவர் தாமும்
"வென்றஜம் புலனுல் மிக்கீர்! விருப்புடன் இருக்க நம்பால்
என்றும்இவ் இளமை நீங்கா" தென்றெழுந் தருளி னரே. சஉ

402 விறலுடைத் தொண்ட னரும் வெண்நகைச் செவ்வாய் மென்தோள்
அறலியற் கூந்த லாளாம் மனேவியும் அருளின் ஆர்ந்த
திறலுடைச் செய்கை செய்து சிவலோகம் அதனே எய்திப்
பெறலரும் இளமை பெற்றுப் பேரின்பம் உற்றார் அன்றே. சங

403 அயலறி யாத வண்ணம் அண்ணலார் ஆணே உய்த்த
மயலில்சீர்த் தொண்ட னுரை யான்அறி வகையால் வாழ்த்திப்
புயல்வளர் மாடம் ஓடும் பூம்புகார் வணிகர் பொய்யில்
செயல்இயற் பகையார் செய்த திருத்தொண்டு செப்ப லுற்றேன். சச

திருவிருத்தம் ச0

3. இயற்பகை நாயனுர் புராணம்

404 சென்னி வெண்குடை நீடுக பாயன் திருக்கு லம்புகழ் பெருக்கிய
சிறப்பின், மன்னு தொல்புகழ் மருதநீர் நாட்டு வயல்வ ளந்தர இயல்
பினில் அளித்துப், பொன்னி நல்நதி மிக்கநீர் பாய்ந்து புணரி
தன்னேயும் புனிதமாக் குவதோர், நன்னெ டும்பெரு தீர்த்தம்முன்
னுடைய நலஞ்சி றந்தது வளம்புகார் நகரம். க

405 அக்கு லப்பதிக் குடிமுதல் வணிகர் அளவில் செல்வத்து வள
மையின் அமைந்தார், செக்கர் வெண்பிறைச் சடையவர் அடிமைத்
திறத்தின் மிக்கவர் மறைச்சிலம் படியார், மிக்க சீரடி யார்கள்யா
ரேனும் வேண்டும் யாவையும் இல்லேஎன் னுதே, இக்க டற்படி
நிகழுமுன் கொடுக்கும் இயல்பின் நின்றவர் உலகியற் பகையார். உ

பா.பே.1. மயலில்லார்த் தொண்டு செய்ய.

406 ஆறு சூடிய ஐயர்மேய் யடிமை அளவி லாததோர் உளம்நிறை அருளால், நீறு சேர்திரு மேனியர் மனத்து நினைத்த யாவையும் வினைப்பட முடித்து, மாறி லாதகன் னெறியினில் விளங்கும் மனைய றம்புரி மகிழ்ச்சியின் வந்த, பேறெ லாம்அவர் எவின செய்யும் பெரு மை யேஎனப் பேணிவாழ் நாளில். ஙூ

407 ஆய நுண்பொரு ளாகியும் வெளியே அம்ப் லத்துள்நின் றாடு வார் உம்பர், நாய கிக்குமஃ் தறியவோ பிரியா நங்கை தானறி யாமையோ அறியோம், தூய நீறுபொன் மேனியில் விளங்கத் தூர்த்த வேடமும் தோன்றவே தியராய், மாய வண்ணமே கொண்டு தந் தொண்டர் மறுத வண்ணமும் காட்டுவான் வந்தார். ஙூ

408 வந்து தண்புகார் வணிகர்தம் மறுகின் மருங்கி யற்பகை யார் மனை புகுத, "எந்தை எம்பிரான் அடியவர் ஆணைந்தார்" என்று நின்ற தோர் இன்பஆ தரவால், சிந்தை அன்பொடு சென்றெதிர் வணங்கிச் சிறப்பின் மிக்கஅர்ச் சனைகள்முன் செய்து, "மூந்தை எம்பெருந் தவத்தினு லென்கோ முனிவர் இங்கெழுந் தருளிய" தென்றார். ஙூ

409 என்று கூறிய இயற்பகை யார்முன் எய்தி நின்றஅக் கைதவ மறையோர், "கொன்றை வார்சடை யாரடி யார்கள் குறித்து வேண் டின குணமெனக் கொண்டே, ஒன்றும் நீள்எதிர் மறுது(உ)வக் களிக் கும் உண்மை கேட்டுநும் பாலொன்று வேண்டி, இன்று நான்இங்கு வந்தனன் அதனுக் கிசைய லாம்எனில் இயம்பலாம்" என்றார். சூ

410 என்ன அவ்வுரை கேட்டியற் பகையார் " யாதும் ஒன்றும்என் பக்கல்உண் டாகில், அன்ன தெம்பிரான் அடியவர் உடைமை ஐயம் இல்லைநீர் அருள்செய்யும்" என்ன, " மன்னு காதல்உன் மனைவியை வேண்டி வந்த திங்" கென அந்தணர் எதிரே, சொன்ன போதிலும் முன்னையின் மகிழ்ந்து தூய தொண்டனர் தொழுதுரை செய்வார். எ

411 " இதுஎ னக்குமுன்(பு) உள்ளதே வேண்டி எம்பி ரான்செய்த பேறெனக்" கென்னுக், கதுமெ னச்சென்று தம்மனை வாழ்க்கைக் கற்பு மேம்படு காதலி யாரை, " விதிம ணக்குல மடந்தை! இன் றுனைஇம் மெய்த்த வர்க்குநான் கொடுத்தனன்" என்ன, மதும லர்க் குழல் மனைவியார் கலங்கி மனந்தெ ளிந்தபின் மற்றிது மொழிவார்.

412 " இன்று நீரெனக் கருள்செய்த திதுவேல் என்உ யிர்க்கொரு நாத! நீர் உரைத்தி, தொன்றை நான்செயும் அத்தனையல்லால் உரிமை வேறுள தோஎனக்" கென்று, தன்த னிப்பெருங் கணவரை வணங் கத் தாழ்ந்து தொண்டனர் தாமெதிர் வணங்கச், சென்று மாதவன் சேவடி பணிந்து நிகைத்து நின்றனள் திருவினும் பெரியாள். ஙூ

413 மாது தன்னைமுன் கொடுத்தமா தவர்தாம் மனம கிழ்ந்துபோய் உவகையின் மலர்ந்தே, " யாது நான்இனிச் செய்பணி" என்றே

பா. பே. 1. ஆயுள்ளெல்லாம். 2. மாலையன்னாளை. 3. ஒவ்வி இலைகொல். 4. அந்தணர்
5. ஒன்னாநான்றெய்வ

இறைஞ்சி நின்றவர் தம்மெதிர் நோக்கிச், சாதி வேதிய ராகிய தலை
வர் தையல் தன்னையான் தனிக்கொடு போகக், காதல் மேவிய
சுற்றமும் பதியும் கடக்க நீதுணை போதுக'' என்றார். கo

வேறு

414 என்றவர் அருளிச் செய்ய '' யானெமுன் செய்குற் றேவல்
ஒன்றிது தன்னை என்னை உடையவர் அருளிச் செய்ய
நின்றது பிழையாம் '' என்று நினைந்துவே றிடத்துப் புக்குப்
பொன்திகழ் அறுவை சாத்திப் பூங்கச்சுப் பொலிய வீக்கி. கக

415 வாளொடு பலகை ஏந்தி வந்தெதிர் வணங்கி மிக்க
ஆளரி ஏறு போல்வார் அவரைமுன் போக்கிப் பின்னே
தோளிணை துணையே யாகப் போயினர் தூன்னி ஞரை
நீளிடைப் படமுன் கூடி நிலத்திடை வீழ்த்த நேர்வார். கஉ

416 மனைவியார் சுற்றத் தாரும் வள்ளலார் சுற்றத் தாரும்
''இனையதொன்(று) யாரே செய்தார் இயற்பகை பித்த னுலல்
புனையிழை தன்னைக் கொண்டு போவதாம் ஒருவன்'' என்று
தனைபெரும் பழியை மீட்பான் தொடர்வதற் கெழுந்து சூழ்வார். கஊ

417 வேலொடு வில்லும் வாளும் சுரிகையும் எடுத்து மிக்க
காலென விசையிற் சென்று கடிநகர்ப் புறத்துப் போகிப்
பாலிரு மருங்கும் ஈண்டிப் பரந்தஆர்ப்(பு) அரவம் பொங்கி
மால்கடல் இளர்ந்த தென்ன வந்தெதிர் வளைத்துக் கொண்டார். கச

418 வழிவிடுந் துணைபின் போத வழித்துணை யாகி யுள்ளார்
கழிபெருங் காதல் காட்டக் காரிகை யுடன்போம் போதில்
''அழிதகன்! போகேல், ஈண்ட அருங்குலக் கொடியை விட்டுப்
பழிவிட நீபோ'' என்று பகர்ந்தெதிர்நிரந்து வந்தார். கடு

419 மறைமுனி அஞ்சி னன்போல் மாதினைப் பார்க்க மாதும்
''இறைவனே! அஞ்ச வேண்டாம் இயற்பகை வெல்லும்'' என்ன
அறைகழல் அண்ணல் கேளா ''அடியனேன் அவரை எல்லாம்
தறையிடைப் படுத்து கின்றேன் தளர்ந்தருள் செய்யேல்''என்று. கஎ

420 பெருவிறல் ஆளி என்னப் பிறங்கெரி சிதற நோக்கிப்
பரிபவப் பட்டு வந்த படர்பெருஞ் சுற்றத் தாரை
''ஒருவரும் எதிர்நில் லாமே ஓடிப்போய்ப் பிழையும் அன்றேல்
எரிசுடர் வாளில் கூருய்த்துடிக்கின்றீர்'' என்றுகொந்தார். கஅ

421 ''ஏட!நீ என்செய் தாயால் இத்திறம் இயம்பு கின்றாய்
நாடுறு பழியும் ஒன்னார் நகையையும் நாணுய் இன்று
பாடவம் உரைப்ப துன்றன் மனைவியைப் பனவற்(கு) ஈந்தோ
கூடவே மடிவ தன்றிக் கொடுக்கையாம் ஒட்டோம்'' என்றார். கஆ

பா.பே.: அயாய்த. 2 நினைத்து, 3 அண்பர்.
புத்துணர்ச்சி ஏர். 5. நேர்ந்தார்.

மற்றவர் சொன்ன மாற்றம் கேட்டலும் மனத்தின் வந்த
செற்றம்மூன் பொங்க "உங்கள் உடற்றுணி எங்குஞ் சிந்தி
முற்றுநும் உயிரை எல்லாம் முதல்விசும் பேற்றிக் கொண்டு
நற்றவர் தம்மைப் போக விடுவன்" என் றெழுந்தார் நல்லோர். கக

நேர்ந்தவர் எதிர்ந்த போது நிறைந்தஅச் சுற்றத் தாரும்
சார்ந்தவர் தம்முன் செல்லார் தையலைக் கொண்டு பெற்றம்
ஊர்ந்தவர் படிமேற் செல்ல உற்றெதிர் உடன்று பொங்கி
ஆர்ந்தவெஞ் சினத்தால் மேற்சென் றடர்ந்தெதிர் தடுத்தார் அன்றே.

சென்றவர் தடுத்த போதில் இயற்பகை யார்முன் சீறி
வன்துணை வாளே யாகச் சாரிகை மாறி வந்து
துன்றினர் தோளும் தாளும் தலைகளும் துணித்து வீழ்த்து
வென்றடு புலிஏ றென்ன அமர்விளை யாட்டில் மிக்கார். உக

மூண்டுமுன் பலராய் வந்தார் தனிவந்து முட்டி னார்கள்
வேண்டிய திசைகள் தோறும் வேறுவே றமர்செய் போழ்தில்
ஆண்டகை வீரர் தாமே அனைவர்க்கும் அனைவ ராகிக்
காண்டகு விசையிற் பாய்ந்து கலந்துமுன் துணித்து வீழ்த்தார். உஉ

சோரிந்தன குடல்கள் எங்கும் துணிந்தன உடல்கள் எங்கும்
விரிந்தன தலைகள் எங்கும் மிடைந்தன கழுகும் எங்கும்
எரிந்தன விழிகள் எங்கும் எதிர்ப்பவர் ஒருவர் இன்றித்
திரிந்தனர் களனில் எங்கும் சிவன்கழல் புனைந்த வீரர். உங

மாடலை குருதி பொங்க மடிந்தசெங் களத்தின் நின்றும்
ஆடுறு செயலின் வந்த இளைஞரோ டணைந்தார் தம்மில்
ஓடினர் உள்ளார் உய்ந்தார் ஒழிந்தவர் ஒழிந்தே மாண்டார்
நீடிய வாளும் தாமும் நின்றவர் தாமே நின்றார். உச

திருவுடை மனைவி யாரைக் கொடுத்திடைச் செறுத்து முன்பு
வருபெருஞ் சுற்றம் எல்லாம் வாளினுல் துணித்து மாட்டி
அருமறை முனியை நோக்கி "அடிகள்நீர் அஞ்சா வண்ணம்
பொருவருங் கானம் நீங்க விடுவன்" என் றுடனே போந்தார். உடு

திருவரால் அறிய ஒண்ணு ஒருவர்பின் செல்லும் ஏழை
பொருதிறல் வீரர் பின்பு போகமுன் போகும் போதில்
அருமறை முனிவன் சாய்க்கா டதன்மருங் கணைய மேவித்
திருமலி தோளி னோடு "மீள்" எனச் செப்பி னானே. உசு

தேவமுனி தன்னை மீளச் சொன்னபின் தலையால் ஆர
அவன்மலர்ப் பதங்கள் சூடி அஞ்சலி கூப்பி நின்று
புவனம்மூன் றுய்ய வந்த பூசுரன் தன்னை ஏத்தி
"இவனருள்பெறப்பெற்றேன்" என்றியற்பகையாரும்மீண்டார். உஎ

பா. வே. 1. நினைவச். 2. சாரிலை. 3. எதிர்ந்தவர்.
4 கொடுபோய். 5. மாற்று.

4231 செய்வதற் கரிய செய்கை செய்தநற் ரெண்டர் போக
மைதிகழ் கண்டன் எண்தோள் மறையவன் மகிழ்ந்து நோக்கிப்
"பொய்தரும் உள்ளம் இல்லான் பார்க்கிலன் போனான்" என்று
மெய்தரு சிந்தை யாரை மீளவும் அழைக்க லுற்ரான். உஅ

4232 "இயற்பகை முனிவா ஓலம் ஈண்டுநீ வருவாய் ஓலம்
அயர்ப்பிலா தானே ஓலம் அன்பனே ஓலம் ஓலம்
செயற்கருஞ் செய்கை செய்த தீரனே ஓலம்" என்ரான்
மயக்கறு மறைஓ லிட்டு மாலயன் தேட நின்ரான். உக

4233 அழைத்தபேர் ஓசை கேளா "அடியனேன் வந்தேன் வந்தேன்
பிழைத்தவர் உளரேல் இன்னும் பெருவலித் தடக்கை வாளின்
இழைத்தவ ராகின் ரார்"என் றியற்பகை யார்வந் தெய்தக்
குழைப்பொலி காதி னோனும் மறைந்தனன் கோலங் கொள்வான். உஎ

4234 சென்றவர் முனியைக் காணார் சேயிழை தன்னைக் கண்டார்
பொன்திகழ் குன்று வெள்ளிப் பொருப்பின்மேற் பொலிந்த தென்ன
தன்துணை புடனே வானில் தலைவனை விடைமேற் கண்டார்
நின்றிலர் தொழுது வீழ்ந்தார் நிலத்தினின் றெழுந்தார் கோர்ந்தார்.

4235 "சொல்லுவ தறியேன் வாழி தோற்றிய தோற்றம் போற்றி
வல்லைவந் தருளி என்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி
எல்லையில் இன்ப வெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி
தில்லையம் பலத்து ளாடும் சேவடி போற்றி" என்ன. உஉ

4236 விண்ணிடை நின்ற வெள்ளை விடையவர் அடியார் தம்மை
"எண்ணிய உலகு தன்னில் இப்படி நம்பால் அன்பு
பண்ணிய பரிவு கண்டு மகிழ்ந்தனம் பழுதி லாதாய்!
நண்ணிய மனைவி யோடு நம்முடன் போது" கென்று. உங

4237 திருவளர் சிறப்பின் மிக்க திருத்தொண்டர் தமக்கும் தேற்றம்
மருவிய தெய்வக் கற்பின் மனையியார் தமக்கும் தக்க
பெருகிய அருளின் நீடு பேறளித் திமையோர் ஏத்தப்
பொருவிடைப் பாகர் மன்னும் பொற்பொது அதனுட் புக்கார். உச

4238 வானவர் பூவின் மாரி பொழியமா மறைகள் ஆர்ப்ப
ஞானமா முனிவர் போற்ற நலம்மிகு சிவலோ கத்தில்
ஊனமில் தொண்டர் கும்பிட் டுடன்உறை பெருமை பெற்ரார்
ஏனைய சுற்றத் தாரும் வானிடை இன்பம் பெற்ரார். உடு

4239 இன்புறு தாரத் தன்னை ஈசனுக் கன்பர் என்றே
துன்புறு துதவும் தொண்டர் பெருமையைத் தொழுது வாழ்த்தி
அன்புறு மனத்தால் நாதன் அடியவர்க் கன்பு நீடு
மன்புகழ் இளைசை மாறன் வளத்தினை வழுத்த லுற்றேன். உக

திருவிருத்தம் முற்றும்

பா. வே. 1. சொற்கள். 2. தொடர்.

4. இளையான்குடிமாறநாயனார் புராணம்

அம்பொன் மேடிய அம்ப லத்தினில் ஆடு வார்அடி சூடுவார்
தம்பி ரான்அடி மைத்தி றத்துயர் சால்பின் மேன்மை தரித்துளார்
நம்பு வாய்மையில் நீடு சூத்திர நற்கு லஞ்செய் தவத்தினில்
இம்பர் ஞாலம் விளக்கி னர்இளை யான்கு டிப்பதி மாறனார். க

ஊரின் மல்கு வளத்தி னில்வரும் எல்லை இல்லதொர் செல்வமும்
நீரின் மல்கிய வேணி யார்அடி யார்தி றத்து நிறைந்ததோர்
சீரின் மல்கிய அன்பின் மேன்மை திருந்த மன்னிய இன்தையும்
பாரின் மல்க விரும்பி முற்றவை பெற்ற நீடு பயன்கொள்வார். உ

ஆரம் என்பு புனைந்த ஐயர்தம் அன்பர் என்பதொர் தன்மையால்
நேர வந்தவர் யாவ ராயினும் நித்த மாகிய பத்திமுன்
கூர வந்திதிர் கொண்டு கைகள் குவித்து நின்று செவிப்புலத்(து)
ஈரம் மென்மதுரப் பதம்பரி வெய்த முன்னுரை செய்தபின். ங

கொண்டு வந்து மனைப்பு குந்து குலாவு பாதம் விளக்கியே
மீண்டு காதலின் ஆச னத்திடை வைத்த ருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்தி லாறுசுவைத்தி றத்திலில் ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில் அமுது செய்ய அளித்துளார். ச

ஆளும் நாயகர் அன்பர் ஆனவர் அளவி லார்உளம் மகிழவே
நாளும் நாளும்நி றைந்து வந்து நுகர்ந்த தன்மையின் நன்மையால்
நீளு மாநிதி யின்ப ரப்பு நெருங்கு செல்வம் நிலாவிஎண்
தோளி னர்அள கைக்கி ருத்திய தோழ னெனவா ழுநாள். ஞ

செல்வம் மேவிய நாளில் இச்செயல் செய்வ தன்றியும் மெய்யினில்
அல்லல் நல்குர வான போதினும் வல்லர் என்றறி விக்கவே
மல்லல் நீடிய செல்வம் மெல்ல மறைந்து நள்தொறும் மாறிவந்
தொல்லை யில்வறு மைப்ப தம்புக உன்னி னர்தில்லை மன்னினர். ட

இன்ன வாறுவ ளஞ்சு ருங்கவும் எம்பி ரான்இளை யான்குடி
மன்னன் மாறன் மனஞ்சு ருங்குதல் இன்றி உள்ளன மாறியும்
தன்னை மாறிஇ றுக்க உள்ள கடன்கள் தக்கன கொண்டுபின்
முன்னை மாறில் திருப்ப ணிக்கண் முதிர்ந்தகொள்கை யாயினர்.

மற்ற வன்செயல் இன்ன தன்மைய தாக மாலய னுனஅக்
கொற்ற னெனமும் அன்ன மூந்தெரி யாத கொள்கைய ராயினர்
பெற்றம் ஊர்வதும் இன்றி மேடிய பேதை யாளுடன் இன்றிஓர்
கற்ற வத்தவர் வேட மேகொடு ஞாலம் உய்ந்திட நண்ணினர். அ

மா. பே. தவத்திரு. உ. இரத். சு. முனிசாமி.
4 சுவைத்தினை. 5 தெய்வைகையர்.

வேறு

மாரிக் காலத் திரவினில் வைகியோர்
தாரிப் பின்றிப் பசிதலைக் கொள்வது
பாரித் தில்லம் அடைத்தபின் பண்புற
வேரித் தாரான் விருந்தெதிர் கொண்டனன். கூ

ஈர மேனியை நீக்கி இடங்கொடுத்
தார இன்னமு தூட்டுதற் காசையால்
தார மாதரை நோக்கித் தபோதனர்
"தீர வேபசித் தார்செய்வ தென்"என்று. கo

"நமக்கு முன்பிங் குணவிலை யாயினும்
இமக்கு லக்கொடி பாகர்க் கினியவர்
தமக்கு காம்இன் அடிசில் தகவுற
அமைக்கு மாறெங்க னேஅணங் கே!"என. கக

மாது கூறுவள் "மற்றிரு ன்றுங் காண்கிலேன்
எதி லாரும் இனித்தரு வாரில்லை
போதும் வைகிற்றுப் போம்இடம் வேறிலை
தீது செய்வினை யேற்கென் செயல்"என்று. கஉ

"செல்லல் நீங்கப் பகல்வித் தியசெந்நெல்
மல்லல் நீர்முளை வாரிக் கொடுவந்தால்
வல்ல வாறமு தாக்கலும் ஆகும்மற்
றல்ல தொன்றறி யேன்"என் றயர்வுற. கங

மற்றம் மாற்றம் மனைவியார் கூறலும்
பெற்ற செல்வம் எனப்பெரி துள்மகிழ்ந்
தற்ற காதலி னல்லொருப் பட்டனர்
சுற்று நீர்வயல் செல்லத் தொடங்குவார். கச

பெருகு வானம் பிறங்க மழைபொழிந்
தருகு நாப்பண் அறிவருங் கங்குல்தான்
கருகு மையிரு ளின்கணம் கட்டிவிட்
டிருகு கின்றது போன்ற துலகெலாம். கஙி

எண்ணும் இவ்வுல கத்தவர் யாவரும்
துண்ணெ னும்படி தோன்றமுன் தோன்றிடில்
வண்ணம் நீடிய மைக்குழம் பாம்என்று
நண்ணல் செய்யா நடுவிருள் யாமத்து. கஙு

உள்ளம் அன்புகொண் டுக்கவோர் பேரிடாக்
கொள்ள முன்கவித் துக்குறி யின்வழிப்

புள்ளு றங்கும் வயல்புகப் போயினர்
வள்ள லார்இளை யான்குடி மாறனார். கள

காலி னுல்தட விச்சென்று கைகளால்
சாலி வெண்முளை நீர்வழிச் சார்ந்தன
கோலி வாரி இடாநிறை யக்கொண்டு
மேலெ டுத்துச் சுமந்தெல்லை மீண்டனர். கஅ

வேறு

வந்தபின் மனைவி யாரும் வாய்தலின் நின்று வாங்கிச்
சிந்தையில் விரும்பி நீரில் சேற்றினை அலம்பி ஊற்றி
"வெந்தழல் அடுப்பின்மூட்ட விறகில்லை" என்ன மேலோர்
அந்தமில் மனையில் நீடும் அலக்கினை அறுத்து வீழ்த்தார். கக

மூறித்தவை அடுப்பின் மாட்டி முளைவித்துப் பதமுன் கொள்ள
வறுத்தபின் அரிசி யாக்கி வாக்கிய உலையிற் பெய்து
வேறுப்பில்இன் அடிசில் ஆக்கி மேம்படு கற்பின் மிக்கார்
"கறிக்கினி என்செய் கோம்!" என் றிறைஞ்சினர் கணவ னுரை. உ0

வழிவரும் இளைப்பி னோடும் வருத்திய பசியி னலே
"அழிவுறும் ஐயன்" என்னும் அன்பினிற் பொலிந்து சென்று
குழிநிரம் பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப்
பழிமுதல் பறிப்பார் போலப் பறித்தவை கறிக்கு நல்க. உக

மனைவியார் கொழுநர் தந்த மனமகிழ் கறிகள் ஆய்ந்து
புனலிடைக் கழுவித் தக்க புனிதபாத் திரத்துக் கைம்மை
வினையினுல் வேறு வேறு கறியமு தாக்கிப் பண்டை
நினைவினுல் குறையை நொந்து திருவமு தமைத்து நின்று. உஉ

இணைவனுர் தம்மை நோக்கிக் கறியமு தான காட்டி
"இணையிலா தாரை ஈண்ட அமுதுசெய் விப்போம்" என்ன
உணர்வினுல் உணர ஓண்ணு ஒருவரை உணர்த்த வேண்டி
அணையமுன் சென்று நின்றங் கவர்துயில் அகற்ற லுற்றார். உங

அழுந்திய இடருள் நீங்கி அடியனேன் உய்ய என்பால்
எழுந்தருள் பெரியோய்! ஈண்ட அமுதுசெய் தருள்க" என்று
தொழும்பனர் உரைத்த போதில் சோதியாய் எழுந்து தோன்றச்
செழுந்திரு மனைவி யாரும் தொண்டரும் திகைத்து நின்றார். உச

மாலயற் கரிய நாதன் வடிவொரு சோதி யாகச்
சாலவே மயங்கு வார்க்குச் சங்கரன் தான்ம கிழ்ந்தே
ஏலவார் குழலாள் தன்னை டிடபவா கனனுய்த் தோன்றிச்
சீலமார் பூசை செய்த திருத்தொண்டர் தம்மை நோக்கி. உரு

பா. பே/. மாட்ட.

465 "அன்பனே! அன்பர் பூசை அளித்தநீ அணங்கி னோடும்
என்பெரும் உலகை எய்தி இருநிதிக் கிழவன் தானே
மூன்பெரு நிதியம் ஏந்தி மொழிவழி ஏவல் கேட்ப
இன்பமார்ந் திருக்க" என்றே அருள்செய்தான் எவர்க்கும் மிக்கான்.

466 இப்பரி சிவர்க்குத் தக்க வகையினல் இன்பம் நல்கி
மூப்புரஞ் செற்றூர் அன்பர் முன்பெழுந் தருளிப் போனூர்
அப்பெரி யவர்தந் தூய அடியிணை தலைமேற் கொண்டு
மெய்ப்பொருட் சேதி வேந்தன் செயலினை விளம்ப லுற்றேன். உ

திருவிருத்தம்.

५. மெய்ப்பொருள் நாயனார் புராணம்

467 சேதிநன் னாட்டு நீடு திருக்கோவ லூரின் மன்னி
மாதொரு பாகர் அன்பின் வழிவரு மலாடர் கோமான்
வேதநன் னெறியின் வாய்மை விளங்கிட மேன்மை பூண்டு
காதலால் ஈசர்க் கன்பர் கருத்தறிந் தேவல் செய்வார். க

468 அரசியல் நெறியின் வந்த அறநெறி வழாமல் காத்து
வரைகெடுந் தோளால் வென்று மாற்றலர் மூனைகள் மாற்றி
உரைதிறம் பாத நீதி ஓங்குநீர் மையினில் மிக்கார்
திரைசெய்நீர்ச் சடையான் அன்பர் வேடமே சிந்தை செய்வார். உ

469 மங்கையைப் பாக மாகஉடையவர் மன்னுங் கோயில்
எங்கணும் பூசை நீடி ஏழிசைப் பாடல் ஆடல்
பொங்கிய சிறப்பின் மல்கப் போற்றுதல் புரிந்து வாழ்வார்
தங்கள்நா யகருக் கன்பர் தாளலால் சார்பொன் றில்லார். ங

470 தேடிய மாடு நீடு செல்வமும் தில்லை மன்றுள்
ஆடிய பெருமான் அன்பர்க் காவன ஆகும் என்று
நாடிய மனத்தி னோடு நாயன்மார் அணைந்த போது
கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவறக் கொடுத்து வந்தார். ச

471 இன்னவா றெழுகும் நாளில் இகல்திறம் புரிந்தோர் மன்னன்
அன்னவர் தம்மை வெல்லும் ஆசையால் அமர்மேற் கொண்டு
பொன்னணி ஓடை யானைப் பொருபரி காலாள் மற்றும்
பன்முறை இழந்து தோற்றுப் பரிபவப் பட்டுப் போனன். ஞ

472 இப்படி இழந்த மாற்றான் இகலினல் வெல்ல மாட்டான்
மெய்ப்பொருள் வேந்தன் சீலம் அறிந்துவெண் நீறு சாத்தும்

பா. பே. 1. திருப்பி நாவினன்.
2. வந்திய நாவினரி.
3. வைத்த தவரி.
4 வாழ்நாளும்.

அப்பெரு வேடங் கொண்டே அற்றத்தில் வெல்வா னுகச்
செப்பரு நிலைமை எண்ணித் திருக்கோவ லூரிற் சேர்வான். சு

473 மெய்யெலாம் நீறு பூசி வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினிற் படைக ளந்த புத்தகக் கவளி ஏந்தி
மைபோதி விளக்கே என்ன மனத்தினுள் கறுப்பு வைத்துப்
பொய்தவ வேடங் கொண்டு புகுந்தனன் முத்த நாதன். எ

474 மாதவ வேடங் கொண்ட வன்கணன் மாடந் தோறும்
கோதைசூழ் அளக பாரக் குழைக்கொடி ஆட மீது
சோதிவெண் கொடிகள் ஆடுஞ் சுடர்நெடு மறுகிற் போகிச்
சேதியர் பெருமான் கோயில் திருமணி வாயில் சேர்ந்தான். அ

475 கடைப்புடைக் காவ லாளர் கைதொழுது ஏற நின்றே
"உடையவர் தாமே வந்தார் உள்ளெழுந் தருளும்" என்னத்
தடைபல புக்க பின்பு தனித்தடை நின்ற தத்தன்
"இடைதெரிந் தருள வேண்டும் துயில்கொளும் இறைவன்" என்றான்.

476 என்றவன் கூறக் கேட்டே "யான்அவற் குணர்தி கூற
நின்றிடு நீயும்" என்றே அவனையும் நீக்கிப் புக்குப்
பொன் திகழ் பள்ளிக் கட்டில் புரவலன் துயில மாடே
மன்றலங் குழல்மென் சாயல் மாதேவி இருப்பக் கண்டான். கo

477 கண்டுசென் றணையும் போது கதுமென எழுந்து தேவி
வண்டலர் மாலை யான எழுப்பிட உணர்ந்து மன்னன்
அண்டர்நா யகனார் தொண்ட ராம்எனக் குவித்த செங்கை
கொண்டிழிந் தெதிரே சென்று கொள்கையின் வணங்கி நின்று. கக

478 "மங்கலம் பெருக மற்றென் வாழ்வுவந் தணைந்த தென்ன
இங்கெழுந் தருளப் பெற்ற தென்கொலோ" என்று கூற
"உங்கள்நா யகனார் முன்னம் உரைத்தஆ கமநூல் மண்மேல்
எங்குமில் லாத தொன்று கொடுவந்தேன் இயம்ப" என்றான். கஉ

479 "பேறெனக் கிதன்மேல் உண்டோ பிரான்அருள் செய்த இந்த
மாறிலா கமத்தை வாசித் தருள்செய வேண்டும்" என்ன
"நாறுபூங் கோதை மாது தவிரவே நானும் நீயும்
வேறிடத் திருத்தல் வேண்டும்" என்றவன் விளம்ப, வேந்தன். கங

480 திருமகள் என்ன நின்ற தேவியார் தம்மை நோக்கிப்
பரிவுடன் விரைய அத்தப் புரத்திடைப் போக ஏவித்
தருதவ வேடத் தானைத் தழிசின்மேல் இருத்தித் தாமும்
இருநிலத் திருந்து போற்றி "இனியருள் செய்யும்" என்றார். கச

481 கைத்தலத் திருந்த வஞ்சக் கவளிகை மடிமேல் வைத்துப்
புத்தகம் அவிழ்ப்பான் போன்று புரிந்தவர் வணங்கும் போதில்

பா. வே. 1. தெரிவான். 2. யாதனை. 3. மெய்ந்நாதன். 5. இழிந்து. 6. பரிவுடன்.
4 யாகனிவற்.

பத்திரம் வாங்கித் தான்முன் நினைந்தஅப் பரிசே செய்ய
"மெய்த்தவ வேட மேமெய்ப் பொருள்"எனத் தொழுது வென்றார்.

மறைத்தவன் புகுந்த போதே மனம்அங்கு வைத்த தத்தன்
இறைப்பொழு தின்கட் கூடி வாளினுல் எறிய லுற்றான்
நிறைத்தசெங் குருதி சோர வீழ்கின்றார் நீண்ட கையால்
தறைப்படும் அளவில் "தத்தா! நமர்"எனத் தடுத்து வீழ்ந்தார். கஈ

வேதனை எய்தி வீழ்ந்த வேந்தரால் விலக்கப் பட்ட
தாதனும் தத்தன் தானும் தலையினுல் வணங்கித் தாங்கி
"யாதுகான் செய்கேன்" என்ன "எம்பிரான் அடியார் போக
மீதிடை விலக்கா வண்ணம் கொண்டுபோய் விடுமீ" என்றார். கஎ

அத்திறம் அறிந்தார் எல்லாம் "அரசனைத் தீங்கு செய்த
பொய்த்தவன் தன்னைக் கொல்வோம்" எனப்புடை சூழ்ந்த போது
தத்தனும் அவரை எல்லாம் தடுத்துடன் கொண்டு போவான்
"இத்தவன் போகப் பெற்ற திறைவன தாணை" என்றான். கஅ

அவ்வழி அவர்கள் எல்லாம் அஞ்சியே அகல நீங்கச்
செவ்விய நெறியில் தத்தன் திருநகர் கடந்து போந்து
கைவடி நெடுவாள் ஏந்தி ஆளுறுக் கானஞ் சேர
வெவ்வினைக் கொடியோன் தன்னை விட்டபின் மீண்டு போந்தான்.

மற்றவன் கொண்டு போன வஞ்சனை வேடத் தான்மேல்
செற்றவர் தம்மை நீக்கித் தீதிலா நெறியில் விட்ட
சொற்றிறங் கேட்க வேண்டிச் சோர்கின்ற ஆவி தாங்கும்
கொற்றவன் முன்பு சென்றான் கோமகன் குறிப்பில் நின்றான். உ0

சென்றடி வணங்கி நின்று "செய்தவ வேடங் கொண்டு
வென்றவற் கிடையூ றின்றி விட்டனன்" என்று கூற
"இன்றெனக்(கு) ஐயன் செய்த தியார்செய்ய வல்லார்" என்று
நின்றவன் தன்னை நோக்கி நிறைபெருங் கருணை கூர்ந்தார். உக

அரசியல் ஆயத் தார்க்கும் அழிவுறும் காத லார்க்கும்
விரவிய செய்கை எல்லாம் விளம்புவார் "விதியி னுலே
பரவிய திருநீற் றன்பு பாதுகாத் துய்ப்பீர்" என்று
புரவலர் மன்று ளாடும் பூங்கழல் சிந்தை செய்தார். உஉ

தொண்டனர்க்(கு) இமயப் பாவை துணைவனர் அவர்முன் தம்மைக்
கண்டவா றெதிரே நின்று காட்சிதந் தருளி மிக்க
அண்டவா னவர்கட் கெட்டா அருட்கழல் நீழல் சேரக்
கொண்டவர் இடைய றாமல் கும்பிடுங் கொள்கை ஈந்தார். உங

1 பா.பே.1. கொண்டவர்.

இன்னுயிர் செகுக்கக் கண்டும் எம்பிரான் அன்பர் என்றே
நன்னெறி காத்த சேதி நாதனார் பெருமை தன்னில்
என்னுரை செய்தே னுக இகல்விறன் மிண்டர் பொற்றாள்
சென்னிவைத் தவர்முன் செய்த திருத்தொண்டு செப்ப லுற்றேன்.

விறன்மிண்ட நாயனார் புராணம்

விரைசெய் நறும்பூந் தொடையிதழி வேணி யார்தங் கழல்பரவிப்
பரசு பெறுமா தவமுனிவன் பரசு ராமன் பெறுநாடு
திரைசெய் கடலின் பெருவளனும் திருந்து நிலனின் செழுவளனும்
வரையின் வளனும் உடன்பெருகி மல்கு நாடு மலைநாடு. க

வாரி சொரியுங் கதிர்முத்தும் வயல்மென் கரும்பில் படுமுத்தும்
வேரல் விளையுங் குளிர்முத்தும் வேழ மருப்பின் ஒளிர்முத்தும்
மூரல் முறுவல் வெண்முத்த நகையார் தெரிந்து முறைகோக்கும்
சேரர் திருநாட் டூர்களின்முன் சிறந்த மூதூர் செங்குன்றூர். உ

என்னும் பெயரின் விளங்கியுல கேறும் பெருமை யுடையதுதான்
அன்னம் பயிலும் வயலுழவின் அமைந்த வளத்தால் ஆய்ந்தமறை
சொன்ன நெறியின் வழியொழுகும் தூய குடிமைத் தலைநின்றூர்
மன்னுங் குலத்தின் மாமறைநூல் மரபில் பெரியோர் வாழ்பதியாம்.

அப்பொற் பதியி னிடைவேளாண் குலத்தை விளக்க அவதரித்தார்
செப்பற் கரிய பெருஞ்சீர்த்திச் சிவனார் செய்ய கழல்பற்றி
எப்பற் றினையும் அறவழிவார் எல்லை தெரிய ஒண்ணாதார்
மெய்ப்பத் தர்கள்பால் பரிவுடையார் எம்பி ரானார் விறன்மிண்டர். ச

நதியும் மதியும் புனைந்தசடை நம்பர் விரும்பி நலம்சிறந்த
பதிகள் எங்கும் கும்பிட்டுப் படரும் காதல் வழிச்செல்வார்
முதிரும் அன்பிற் பெருந்தொண்டர் முறைமை நீடு திருக்கூட்டத்
ததிர்முன் பரவும் அருள்பெற்றே இறைவர் பாதம் தொழப்பெற்றார்.

பொன்தாழ் அருவி மலைநாடு கடந்து கடல்சூழ் புவிஎங்கும்
சென்(று)ஆள் உடையார் அடியவர்தம் திண்மை ஒழுக்கம் நடைசெலுத்தி
வன்தாள் மேருச் சிலைவளைத்துப் புரங்கள் செற்று வைதிகத்தேர்
நின்றார் இருந்த திருவாரூர் பணிந்தார் நிகரொன் றில்லாதார். சு

திருவார் பெருமை திகழ்கின்ற தேவா சிரிய னிடைப்பொலிந்து
மருவா நின்ற சிவனடியார் தம்மைத் தொழுது வந்தணையா

தொருவா றெதுங்கும்வன்தொண்டன்புறகென் றுரைப்பச்சிவனருளால்
பெருகா நின்ற பெரும்பேறு பெற்றூர் மற்றும் பெறநின்றூர். எ

4958 சேணூர் மேருச் சிலைவளைத்த சிவனூர் அடியார் திருக்கூட்டம்
பேணு தேகும் ஊரனுக்கும் பிரானும் தன்மைப் பிறைசூடிப்
பூணூர் அரவம் புனைந்தார்க்கும் புறகென் றுரைக்க மற்றவர்பால்
கோணு அருளைப் பெற்றூர்மற் றினியார் பெருமை கூறுவார். அ

4977 ஞாலம் உய்ய நாம்உய்ய நம்பி சைவ நன்னெறியின்
சீலம் உய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பாடச் செழுமறைகள்
ஓலம் இடவும் உணர்வரியார் அடியார் உடனும்உளதென்றுல்
ஆலம் அமுது செய்தபிரான் அடியார் பெருமை அறிந்தாரார். கூ

5000 4978 ஒக்க நெடுநாள் இவ்வுலகில் உயர்ந்த சைவப் பெருந்தன்மை
தொக்க நிலைமை நெறிபோற்றித் தொண்டு பெற்ற விறன்மிண்டர்
தக்க வகையால் தம்பெருமான் அருளி னாலே தாள்நிழற்கீழ்
மிக்க கணநா யகராகுந் தன்மை பெற்று விளங்கினார். கo

5019 4979 வேறு பிறிதென் திருத்தொண்டத் தொகையால் உலகு விளங்கவரும்
பேறு தனக்குக் காரணராம் பிரானர் விறன்மிண் டரின்பெருமை
கூறும் அளவென் அளவிற்றே அவர்தாள் சென்னி மேற்கொண்டே
ஆறை வணிகர் அமர்நீதி அன்பர் திருத்தொண் டறைகுவாம். கக

ஆ திருவிருத்தம் ஙo க.

7. அமர்நீதி நாயனார் புராணம்

5012 சீரில் நீடிய செம்பியர் பொன்னிநன் னாட்டுக்
காரின் மேவிய களிஅளி மலர்ப்பொழில் சூழ்ந்து
தேரின் மேவிய செழுமணி வீதிகள் சிறந்து
பாரில் நீடிய பெருமைசேர் பதிபழை யாறை. க

5023 மன்னும் அப்பதி வணிகர்தங் குலத்தினில் வந்தார்
பொன்னும் முத்தும்நன் மணிகளும் பூந்துகில் முதலா
எந்நி லத்தினும் உள்ளன வருவளத் தியல்பால்
அந்நி லக்கண்மிக் கவர்அமர் நீதியார் என்பார். உ

5034 சிந்தை செய்வது சிவன்கழல் அல்லதொன் றில்லார்
அந்தி வண்ணர்தம் அடியவர்க் கமுதுசெய் வித்துக்
கந்தை கீளுடை கோவணம் கருத்தறிந் தீதவி
வந்த செல்வத்தின் வளத்தினால் வரும்பயன் கொள்வார். ஙo

பா.பே.1. 4976 என்னுரைப்ப
2. 1977 மென்றுரைத்தே
3. 5034 5035
4. 5035 5036

505 மூக்கண் நக்கராம் முதல்வனை ரவர்திரு நல்லூர்
மிக்க சீர்வளர் திருவிழா விருப்புடன் வணங்கித்
தக்க அன்பர்கள் அமுதுசெய் திருமடம் சமைத்தார்
தொக்க சுற்றமும் தாமும்வந் தணைந்தனர் தூயோர். ச

506 மருவும் அன்பொடு வணங்கினர் மணிகண்டர் நல்லூர்த்
திருவி ழாஅணி சேவித்துத் திருமடத்(து) அடியார்
பெருகும் இன்பமோ டமுதுசெய் திடஅருள் பேணி
உருகு சிந்தையின் மகிழ்ந்துறை நாளிடை ஒருநாள். ஞ

507 பிறைத்த ளிர்ச்சடைப் பெருந்தகைப் பெருந்திரு நல்லூர்க்
கறைக்க ளத்திறை கோவணப் பெருமைமுன் காட்டி
நிறைத்த அன்புடைத் தொண்டர்க்கு நீடருள் கொடுப்பான்
மறைக்கு லத்தொரு பிரமசா ரியின்வடி வாகி. கூ

508 செய்ய புன்சடை கரந்ததோர் திருமுடிச் சிகையும்
சைவ வெண்திரு நீற்றுமுண் டகத்தொளித் தழைப்பும்
மெய்யின் வெண்புரி நூலுடன் விளங்குமான் தோலும்
கையில் மன்னிய பவித்திர மரகதக் கதிரும். எ

509 முஞ்சி நாண்உற முடிந்தது சாத்திய அரையில்
தஞ்ச மாமறைக் கோவண ஆடையின் அசைவும்
வஞ்ச வல்வினைக் கறுப்பறும் மனத்தடி யார்கள்
நெஞ்சில் நீங்கிடா அடிமலர் நீள்நிலம் பொலிய. அ

510 கண்ட வர்க்குறு காதலின் மனங்கரைந் துருகத்
தொண்டர் அன்பெனுந் தூநெறி வெளிப்படப் பாராய்த்
தண்டின் மீதிரு கோவண நீற்றுப்பை தருப்பை
கொண்டு வந்(து)அமர் நீதியார் திருமடங் குறுக. கூ

511 வடிவு காண்டலும் மனத்தினும் மிகமுக மலர்ந்து
கடிது வந்தெதிர் வணங்கி "இம் மடத்தினிற் காணும்
படியி லாதநீர் அணையமுன் பயில்தவம் என்னே
அடிய னேன்செய்த தென்றனர்" அமர்நீ தி அன்பர். கஂ

512 பேணும் அன்பரை நோக்கி "நீர் பெருகிய அடியார்க்(கு)
ஊணும் மேன்மையில் ஊட்டிநற் கந்தைகள் உடைகள்
யாணர் வெண்கிழிக் கோவணம்ஈவது கேட்டுக்
காண வந்தனம்" என்றனன் கண்ணுதற் கரந்தோன். கக

513 என்று தம்பிரான் அருள்செய "இத்திரு மடத்தே
நன்று நான்மறைப்பெருந்தவர் அமுதுசெய் தருளத்
துன்று வேதியர் தூய்மையின் அமைப்பதும் உளதால்
இன்று நீரும்இங் கமுதுசெய் தருளும்"என் றிறைஞ்ச. கஉ

பா. ஓ U - 1. ஒண்தடை. உதவையும்.
3. ஈ. தல்கேட்டுண்ணுங் 4. நாற்றுவர்.

514 வணங்கும் அன்பரை நோக்கிஅம் மறையவர் இசைந்தே
"அணங்கு நீர்ப்பொன்னி ஆடிநான் வரமழை வரினும்
உணங்கு கோவணம் வைத்துநீர் தாரும்"என் றுருவெண்
குணங்கொள் கோவணம் தண்டினில் அவிழ்த்தது கொடுப்பார்.

515 "ஓங்கு கோவணப் பெருமையை உள்ளவா றுமக்கே
ஈங்கு நான்சொல வேண்டுவ தில்லைநீர் இதனை
வாங்கி நான்வரும் அளவும்உம் மிடத்திக ழாதே
ஆங்கு வைத்துநீர் தாரும்"என் றவர்கையிற் கொடுத்தார். கச

516 கொடுத்த கோவணங் கைக்கொண்டு கோதிலா அன்பர்
"கடுப்பில் இங்கெழுந் தருளுநம்நீர் குளித்"தெனக் கங்கை
மடுத்த தும்பிய வளர்சடை மறைத்தஅம் மறையோர்
அடுத்த தெண்திரைப் பொன்னிநீர்/ஆடவென் றகன்றார். கரு

517 தந்த கோவணம் வாங்கிய தனிப்பெருந் தொண்டர்
முந்தை அந்தணர் மொழிகொண்டு முன்புதாம் கொடுக்கும்
கந்தை கீளுடை கோவணம் அன்றியோர் காப்புச்
சிந்தை செய்துவே றிடத்தொரு சேமத்து வைத்தார். கசு

518 போன வேதியர் வைத்தகோ வணத்தினைப் போக்கிப்
பான லந்துறைப் பொன்னிநீர் படிந்துவந் தாரோ
தூய புஞ்சடைக் கங்கைநீர் தோய்ந்துவந் தாரோ
வான நீர்மழை பொழிந்திட நனைந்துவந் தணைந்தார். கள

519 கதிர்இ ளம்பிறைக் கண்ணியர் நண்ணிய பொழுதில்
முதிரும் அன்புடைத் தொண்டர்தாம் முறைமையின் முன்னே
அதிக நன்மையின் அறுசுவைத் திருவமு தாக்கி
எதிரே முந்துசென் றிறைஞ்சிட நிறைந்தநூல் மார்பர். கஅ

520 தொண்டர் அன்பெனுந் தூயநீர் ஆடுதல் வேண்டி
"மண்டு தண்புனல் மூழ்கிய ஈரத்தை மாற்றத்
தண்டின் மேலதும் ஈரம்,நான் தந்தகோ வணத்தைக்
கொண்டு வாரும்"என் றுரைத்தனர் கோவணக் கள்வர். கக

521 ஐயர் கைதவம் அறிவுறு தவர்கடி தணுகி
எய்தி நோக்குறக் கோவணம் இருந்தவே றிடத்தில்
மையில் சிந்தையர் கண்டிலர் "வைத்தகோ வணம்முன்
செய்த தென்"என்று திகைத்தனர் தேடுவா ரானார். உ0

522 "பொங்கு வெண்கிழிக் கோவணம் போயின நெறிமேல்
சங்கை இன்றியே தப்பின" தென்றுதம் சரக்கில்
எங்கும் நாடியும் கண்டிலர் என்செய்வார் நின்றார்
அங்கண் வேதியர் பெருந்தொடக் கினில்அகப் பட்டார். உக

பா.பே.1. ஆடுதற் கென்றார்.

524 மனைவி யாரொடு மன்னிய கிளைஞரும் தாமும்
இனைய தொன்றுவந் தெய்திய தெனஇடர் கூர்ந்து
கினைவ தொன்றிலர் வருந்தினர் நிற்கவும் மாட்டார்
புனைய வேறொரு கோவணங் கொடுபுறப் பட்டார். உஉ

525 அத்தர் முன்புசென்(று) "அடிகள்! நீர் தந்தகோ வணத்தை
வைத்தி டத்துநான் கண்டிலன் மற்றுமோ ரிடத்தில்
உய்த்தொ ளித்தனர் இல்லை அஃதொழிந்தவா றறியேன்
இத்த கைத்தவே றதிசயம் கண்டிலேன்" என்று. உஙூ

526 "வேறு நல்லதோர் கோவணம் விரும்பிமுன் கொணர்ந்தேன்
கீறு கோவணம் அன்றுநெய் தமைத்தது கிளர்கொள்
நீறு சாத்திய நெற்றியீர்! மற்றது கலைந்து
மாறு சாத்தினன் பிழைபொறுப் பீர்"என வணங்க. உச

527 நின்ற வேதியர் வெகுண்(டு)"அமர் நீதியார் நிலைமை
நன்று, சாலவும் நாளிடை கழிந்ததும் அன்றுல்
இன்று நான்வைத்த கோவணங் கொண்டதற் கெதிர்வே
றொன்று கொள்கென உரைப்பதே நீர்"என உரையா. உடூ

528 "நல்ல கோவணம் கொடுப்பன்என் றுலகின்மேல் நாளும்
சொல்லு வித்ததென் கோவணம் கொள்வது துணிந்தோ
ஒல்லை ஈங்குறு வாணிபம் அழகிதே உமக்கு"என்(று)
எல்லை இல்லவன் எரிதுள்ளி னல்என வெகுண்டான். உசூ

529 மறிக ரந்துதண் டேந்திய மறையவர் வெகுளப்
பொறிக லங்கிய உணர்வின ராய்முகம் புலர்ந்து
"சிறிய என்பெரும் பிழைபொறுத் தருள்செய்வீர் அடியேன்
அறிய வந்ததொன் றன்"றென அடிபணிந் தயர்வார். உஎ

530 "செயத்த கும்பணி செய்வன்இக் கோவணம் அன்றி
நயத்த குந்தன நல்லபட் டாடைகள் மணிகள்
உயர்த்த கோடிகொண் டருளும்"என் றுடம்பினில் அடங்காப்
பயத்தொ டுங்குலைந் தடிமிசைப் பலமுறை பணிந்தார். உஅ

531 பணியும் அன்பரை நோக்கிஅப் பரம்பொரு ளானூர்
தணியும் உள்ளத்த ராயினர் போன்று"நீர் தந்த
மணியும் பொன்னும்நல் ஆடையும் மற்றும்என் செய்ய
அணியும் கோவணம் நேர்தர அமையும்"என் றருள. உகூ

532 மலர்ந்த சிந்தைய ராகிய வணிகர்ஏ றனையார்
"அலர்ந்த வெண்ணிறக் கோவணம் அதற்குமே ராக
இலங்கு பூந்துகில் கொள்வதற் கிசைந்தருள் செய்யீர்
நலங்கொள் கோவணந் தரும்பரிசு யா"தென நம்பர். கூ0

பா. பே. 1. நானெனினு வாறு: அ: நானினு வாறு
2. உனைப் பதென.

532 "உடுத்த கோவணம் ஒழியநாம் உம்கையில் தரநீர்
கெடுத்த தாகமுன் சொல்லும்அக் கிழித்தகோ வணநேர்
அடுத்த கோவணம் இது"என்று தண்டினில் அவிழா
எடுத்து "மற்றிதன் எடையிடுங் கோவணம்" என்றார். நக

533 "நன்று சால!"என் றன்பரும் ஒருதுலை நாட்டக்
குன்ற வில்லியார் கோவணம் ஒருதட்டில் இட்டார்
நின்றுதொண்டருங் கையினில் நெய்தகோ வணந்தட்
டொன்றி லேஇட நிறைநிலா தொழிந்தமை கண்டார். நஉ

534 நாடும் அன்பொடு நாயன்மார்க் களிக்கமுன் வைத்த
நீடு கோவணம் அடையநே ராகவொன் றுன்றுக்
கோடு தட்டின்மீ திடஇடக் கொண்டெழுந் ததுகண்
டாடு சேவடிக் கடியரும் அற்புதம் எய்தி. நஊ

535 "உலகில் இல்லதோர் மாயைஇக் கோவணம் ஒன்றுக்
கலகில் கோவணம் ஒத்தில " என்றதி சயித்துப்
பலவும் மென்துகில் பட்டுடன் இடஇட உயர
இலகு பூந்துகிற் பொதிகளே எடுத்துமேல் இட்டார். நச

536 மூட்டில் அன்பர்தம் அன்பிடுந் தட்டுக்கு முதல்வர்
மட்டு நின்றதட் டருளொடுந் தாழ்வுறும் வழக்கால்
பட்டொ டுந்துகில் அநேககோ டிகளிடும் பத்தர்
தட்டு மேற்படத் தாழ்ந்தது கோவணத் தட்டு. நஎ

537 ஆன தன்மைகண் டடியவர் அஞ்சிஅந் தணர்முன்
" தூந றுந்துகில் வர்க்கம்நூல் வர்க்கமே முதலா
மானம் இல்லன குவிக்கவுந் தட்டின்மட் டிதுவால்
ஏனை என்தனம் இடப்பெற வேண்டும்"என் றிறைஞ்ச. நஅ

538 மங்கை பாகராம் மறையவர் மற்றதற் கிசைந்தே
"இங்கு நாம்இனி வேறொன்று சொல்லுவ தென்கொல்!
அங்கு மற்றுங்கள் தனங்களி னுகிலும் இடுவீர்
எங்கள் கோவணம் நேர்நிற்க வேண்டுவ " தென்றார். நஏ

539 நல்ல பொன்னெடும் வெள்ளியும் நவமணித் திரளும்
பல்வ கைத்திறத் துலோகமும் புணர்ச்சிகள் பலவும்
எல்லை யில்பொருள் சுமந்தவர் இடஇடக் கொண்டே
மல்கு தட்டுமீ தெழுந்தது வியந்தனர் மண்ணோர். நஆ

ப.ரு.பே.1 அன்பரும்.
2 எல்லையில்.

540 தவம்நி றைந்தநான் மறைப்பொருள் நூல்களாற் சமைந்த
சிவன்வி ரும்பிய கோவண மிடுஞ்செழுந் தட்டுக்
கவனி மேலமர் நீதியார் தனமெலாம் அன்றிப்
புவனம் யாவையும் நேர்நிலா என்பது புகழோ. நுகூ

541 நிலைமை மற்றது நோக்கிய நிகரிலார் நேர்நின்(று)
"உலகில் பஃறன மொன்றெழி யாமையுய்த் தொழிந்தேன்
தலைவ! யானும்என் மனைவியும் சிறுவனும் தகுமேல்
துலையில் ஏறிடப் பெறுவதுன் அருள்"எனத் தொழுதார். சஂ

542 பொச்ச மில்லடி மைத்திறம் புரிந்தவர் எதிர்நின்(று)
அச்ச முன்புற உரைத்தலும், அங்கணர் அருளால்
நிச்ச யித்தவர் நிலையினைத் துலையெனுஞ் சலத்தால்
இச்ச ழக்கினின் றேற்றுவார் ஏறுதற் கிசைந்தார். சஃக

543 மனம கிழ்ந்(து)அவர் மலர்க்கழல் சென்னியால் வணங்கிப்
புனைம லர்க்குழல் மனைவியார் தம்மொடு புதல்வன்
தனையி டக்கொடு தனித்துலை வலங்கொண்டு தகவால்
இனைய செய்கையில் ஏறுவார் கூறுவார் எடுத்து. சஉ

544 "இழைத்த அன்பினில் இறைதிரு நீற்றுமெய் யடிமை
பிழைத்தி லோம்எனிற் பெருந்துலை நேர்நிற்க" என்று
மழைத்த டம்பொழில் திருநல்லூர் இறைவரை வணங்கித்
தழைத்த அஞ்செழுத் தோதினர் ஏறினர் தட்டில். சஙூ

545 மண்டு காதலின் மற்றவர் மகிழ்ந்துடன் ஏற
அண்டர் தம்பிரான் திருஅரைக் கோவணம் அதுவும்
கொண்ட அன்பினிற் குறைபடா அடியவர் அடிமைத்
தொண்டும் ஒத்தலால் ஒத்துநேர் நின்றதத் துலைதான். சச

546 மதிவி ளங்கிய தொண்டர்தம் பெருமையை மண்ணோர்
துதிசெய் தெங்கணும் அதிசயம் உறஎதிர் தொழுதார்
கதிர்வி சும்பிடைக் கரந்திட நிரைந்தகற் பகத்தின்
புதிய பூமழை இமையவர் மகிழ்வுடன் பொழிந்தார். சஙி

547 அண்டர் பூமழை பொழியமற் றதனிடை ஒளித்த
முண்ட வேதியர் ஒருவழி யான்முதல் நல்லூர்ப்
பண்டு தாம்பயில் கோலமே விசும்பினிற் பாகங்
கொண்ட பேதையுந் தாமுமாய்க் காட்சிமுன் கொடுத்தார். சஙு

பாடபேதம் நினைந்துகாண் பொருள் மனை. புனிறைக் து: நிறைந்த.
துலையெனுங்கலத்தால்.

547 தொழுது போற்றிஅத் துலைமிசை நின்றுநேர் துதிக்கும்
வழுவில் அன்பரும் மைந்தரும் மனைவியார் தாமும்
முழுதும் இன்னருள் பெற்றுத்தம் முன்தொழு திருக்கும்
அழிவில் வான்பதங் கொடுத்தெழுந் தருளினார் ஐயர். சள

548 நாதர் தம்திரு வருளினால் நற்பெருந் துலையே
மீது கொண்டெழு விமானம தாகிமேற் செல்லக்
கோதில் அன்பருங் குடும்பமுங் குறைவறக் கொடுத்த
ஆதி மூர்த்தியா ருடன்சிவ புரியினை அணைந்தார். சஅ

வேறு

549 மலர்மிசை அயனும் மாலும் காணுதற் கரிய வள்ளல்
பலர்புகழ் வெண்ணெய் நல்லூர் ஆவணப் பழமை காட்டி
உலகுய்ய ஆண்டு கொள்ளப் பெற்றவர் பாதம் உன்னித்
தலைமிசை வைத்து வாழும் தலைமைநந் தலைமை யாகும். சக

திருவீருத்தம் முற்றும்.

ஈ. இலைமலிந்த சருக்கம்

9. எறிபத்த நாயனார் புராணம்

551 மல்லல்நீர் ஞாலம் தன்னுள் மழவிடை யுடையான் அன்பர்க்(கு)
ஒல்லைவந் துற்ற செய்கை உற்றிடத் துதவும் நீரார்
எல்லையில் புகழின் மிக்க எறிபத்தர் பெருமை எம்மால்
சொல்லலாம் படித்தன் றேனும் ஆசையால் சொல்ல லுற்றேன். க

552 பொன்மலைப் புலிநின் றேங்கப் புதுமலை இடித்துப் போற்றும்
அன்நெறி வழியே யாக அயல்வழி அடைத்த சோழன்
மன்னிய அநபா யன்சீர் மரபின்மா நகர மாகும்
தொன்னெடுங் கருவூர் என்னுஞ் சுடர்மணி வீதி மூதூர். உ

553 மாமதில் மஞ்சு சூழும் மாளிகை நிரைவிண் சூழும்
தூமணி வாயில் சூழும் சோலையில் வாசஞ் சூழும்
தேமலர் அளகஞ் சூழும் சிலமதி தெருவில் சூழும்
தாமகிழ்ந் தமரர் சூழும் சதமகன் நகரந் தாழ. ங

554 கடகரி துறையி லாடும் களிமயில் புறவி லாடும்
அடர்மணி அரங்கி லாடும் அரிவையர் குழல்வண் டாடும்
படரொளி மறுகி லாடும் பயில்கொடி கதிர்மீ தாடும்
தடநெடும் புவிகொண் டாடும் தனிநகர் வளமை ஈதால். ச

555 மன்னிய சிறப்பின் மிக்க வளநகர் அதனில் மல்கும்
பொன்னியல் புரிசை சூழ்ந்து சுரர்களும் போற்றும் பொற்பால்
துன்னிய அன்பின் மிக்க தொண்டர்தஞ் சிந்தை நீங்கா
அந்நிலை அரனூர் வாழ்வ(து) ஆனிலை என்னுங் கோயில். ஞ

556 பொருட்டிரு மறைக டந்த புனிதரை இனிதக் கோயில்
மருட்டுறை மாற்றும் ஆற்றல் வழிபடுந் தொழில ராகி
இருட்கடி ஓடுங்கு கண்டத் திறையவர்க் குரிமை பூண்டார்க்(கு)
அருட்பெருந் தொண்டு செய்வார் அவர்எறி பத்த ராவார். சு

557 மழைவளர் உலகில் எங்கும் மன்னிய சைவம் ஓங்க
அழலவிர் சடையான் அன்பர்க்(கு) அடாதன அடுத்த போது
முழையரி என்னத் தோன்றி முரண்கெட எறிந்து தீர்க்கும்
பழமறை பரசுந் தூய பரசுமுன் எடுக்கப் பெற்றார். எ

558 அண்ணலார் நிகழும் நாளில் ஆனிலை அடிக ளார்க்குத்
திண்ணிய அன்பு கூர்ந்த சிவகாமி யாண்டார் என்னும்
புண்ணிய முனிவ னர்தாம் பூப்பறித் தலங்கல் சாத்தி
உள்நிறை காத லோடும் ஒழுகுவார் ஒருநாள் முன்போல். அ

பா. பே. 1. எல்லில்
2 நகல்லலுற்றேன்.
3 தெருவு.

559 வைகறை உணர்ந்து போந்து புனல்மூழ்கி வாயுங் கட்டி
மொய்மலர் நெருங்கு வாச நந்தன வனத்து முன்னிக்
கையினில் தெரிந்து நல்ல கமழ்முகை அலரும் வேலைத்
தெய்வநா யகர்க்குச் சாத்தும் திருப்பள்ளித் தாமம் கொய்து. கூ

560 கோலப்பூங் கூடை தன்னை நிறைத்தனர் கொண்டு நெஞ்சில்
வாலிய நேசங் கொண்டு மலர்க்கையில் தண்டும் கொண்டங்(கு)
ஆலய மதனை நோக்கி அங்கணர்க் கமைத்துச் சாத்தும்
காலைவந் துதவ வேண்டிக் கடிதினில் வாரா நின்றார். கo

561 மற்றவர் அணைய இப்பால் வளநகர் அதனில் மன்னும்
கொற்றவர் வளவர் தங்கள் குலப்புகழ்ச் சோழ னுர்த்தம்
பற்றலர் முனைகள் சாய்க்கும் பட்டவர்த் தனமாம் பண்பு
பெற்றவெங் களிறு கோலம் பெருகுமா ஈவமி முன்னுள். கக

562 மங்கல விழவு கொண்டு வருநதித் துறைநீ ராடிப்
பொங்கிய களிப்பி னோடும் பொழிமதஞ் சொரிய, நின்றார்
எங்கணும் இரியல் போக எதிர்பரிக் காரர் ஓடத்
துங்கமால் வரைபோல் தோன்றித் துண்ணென அணைந்த தன்றே.

563 வென்றிமால் யானை தன்னை மேல்கொண்ட பாக ரோடுஞ்
சென்றெரு தெருவின் மூட்டிச் சிவகாமி யார்முன் செல்ல
வன்தனித் தண்டில் தூங்கும் மலர்கொள்பூங் கூடை தன்னைப்
பின்தொடர்ந் தோடிச் சென்று பிடித்துடன் பறித்துச் சிந்த. கங

564 மேல்கொண்ட பாகர் கண்டு விசைகொண்ட களிறு சண்டக்
கால்கொண்டு போவார் போலக் கடிதுகொண் டகலப் போக
நூல்கொண்ட மார்பின் தொண்டர் நோக்கினர் பதைத்துப் பொங்கி
மால்கொண்ட களிற்றின் பின்பு தண்டுகொண் டடிக்க வந்தார். கச

565 அப்பொழு தணைய வொட்டா தடற்களி றகன்று போக
மெய்ப்பெருந் தொண்டர் மூப்பால் விரைந்துபின் செல்ல மாட்டார்
தப்பினர் விழுந்து கையால் தரையடித் தெழுந்து நின்று
செப்பருந் துயரம் மீடிச் செயிர்த்துமுன் சிவதா என்பார். கடு

வேறு

566 "களியா னையின்ஈர் உரியாய் சிவதா
எளியார் வலியாம் இறைவா சிவதா
அளியார் அடியார் அறிவே சிவதா
தெளிவார் அமுதே சிவதா சிவதா. கசு

567 ஆறும் மதியும் அணியுஞ் சடைமேல்
ஏறும் மலரைக் கரிசிந் துவதே

ப.ா. ஐ.ா. நூனுள்.

வேறுள் நின்வார் புரம்வெந் தவியச்
சீறுஞ் சிலையாய் சிவதா சிவதா. கள

569 தஞ்சே சரணம் புகுதுந் தமியோர்
நெஞ்சேய் துயரங் கெடநேர் தொடரும்
மஞ்சே என்வீழ் மறலிக் கிறைவீள்
செஞ்சே வடியாய் சிவதா சிவதா. கஅ

569 நேடியோன் அறியா நெறியார் அறியும்
படியால் அடிமைப் பணிசெய் தொழுகும்
அடியார் களில்யான் ஆரா அணைவார்
முடியா மூதலார்'' எனவே மொழிய. ககூ

வேறு

570 என்றவ ருரைத்த மாற்றம் எறிபத்தர் எதிரே வாரா
நின்றவர் கேளா, மூளும் நெருப்புயிர்த் தழன்று பொங்கி
'' மன்றவர் அடியார்க் கென்றும் வழிப்பகை களிறே யன்றே
கொன்றது வீழ்ப்பன் '' என்று கொலைமழு எடுத்து வந்தார். உ0

571 வந்தவர் அழைத்த தொண்டர் தமைக்கண்டு வணங்கி '' உம்மை
இந்தவல் இடும்பை செய்த யானைஎங் குற்ற '' தென்ன
'' எந்தையார் சாத்தும் பூவை என்கையில் பறித்து மண்மேல்
சிந்திமுன் பிழைத்துப் போகா நின்றதித் தெருவே '' என்றார். உக

572 '' இங்கது பிழைப்ப தெங்கே இனி'' எனா எரிவாய் சிந்தும்
அங்கையின் மழுவும் தாமும் அனலுமிவெங் காலும் என்னப்
பொங்கிய விசையிற் சென்று பொருகரி தொடர்ந்து பற்றும்
செங்கண்வாள் அரியிற் கூடிக் கிடைத்தனர் சீற்றம் மிக்கார். உஉ

573 '' கண்டவர் இதுமுன்(பு) அண்ணல் உரித்தஅக் களிறே போலும்
அண்டரும் மண்ணு ளோரும் தடுக்கினும் அடர்த்துச் சிந்தத்
துண்டித்துக் கொல்வேன்'' என்று சுடர்மழு வலத்தில் வீசிக்
கொண்டெழுந் தார்த்துச் சென்று காலினல் குலுங்கப் பாய்ந்தார்.

574 பாய்தலும் மிசைகொண் டுய்க்கும் பாகரைக் கொண்டு சீறிக்
காய்தழல் உமிழ்கண் வேழம் திரிந்துமேற் கதுவ அச்சம்
தாய்தலை அன்பின் மூன்பு நிற்குமே தகைந்து பாய்ந்து
தோய்தனித் தடக்கை வீழ மழுவினல் துணித்தார் தொண்டர். உச

575 கையினைத் துணித்த போது கடலெனக் கதறி வீழ்ந்து
மைவரை அனைய வேழம் புரண்டிட மருங்கு வந்த
வெய்யகோல் பாகர் மூவர் மிசைகொண்டார் இருவ ராக
ஐவரைக் கொன்று நின்றார் அருவரை அனைய தோளார். உஞ

மா. பே. 1. அணைவாய். 4. கொடுமழு.
2. மூவர். 5. வண்காது
3. மகரியா. 6. நடல்லும்.

576 வேட்டுண்டு பட்டு வீழ்ந்தார்|ஒழியமற் றுள்ளார் ஓடி
மட்டவிழ் தொங்கல் மன்னன் வாயிற்கா வலரை நோக்கிப்
"பட்டவர்த் தனமும் பட்டுப் பாகரும் பட்டார் என்று
முட்டநீர் கடிது புக்கு முதல்வனுக் குரையும்" என்றார். உசு

577 மற்றவர் மொழிந்த மாற்றம் மணிக்கடை காப்போர் கேளாக்
கொற்றவன் தன்பால் எய்திக் குரைகழல் பணிந்து நின்று
"பற்றலர் இலாதாய்! நின்பொற் பட்டமால் யானை வீழச்
செற்றனர் சிலராம் என்று செப்பினர் பாகர்" என்றார். உஎ

578 வளவனும் கேட்ட போதில் மாறின்றி மண்காக் கின்ற
கிளர்மணித் தோள்அ லங்கல் சுரும்பினம் கிளர்ந்து பொங்க
அளவில்சீற் றத்தி னூலே "யார்செய்தார்" என்றுங் கேளான்
இளஅரி ஏறு போல|எழில்மணி வாயில் நீங்க. உஅ

579 தந்திரத் தலைவர் தாமுந் தலைவன்றன் நிலைமை கண்டு
வந்துறச் சேனை தன்னை வல்விரைந் தெழுமுன் சாற்ற
அந்தரத் தகல மெல்லாம் அணிதுகிற் பதாகை தூர்ப்ப
எந்திரத் தேரும் மாவும் இடைஇடை களிறு மாகி. உக

580 வில்லொடு வேல்வாள் தண்டு பிண்டிபா லங்கள் மிக்க
வல்லெழு முசலம் நேமி மழுக்கழுக் கடைமுன் னான
பல்படைக் கலன்கள் பற்றிப் பைங்கழல் வரிந்த வன்கண்
எல்லையில் படைஞர் கொட்புற் றெழுந்தனர் எங்கும் எங்கும். ஈ0

581 சங்கொடு தாரை காளம் தழங்கொலி முழங்கு பேரி
வெங்குரல் பம்பை கண்டை வியன்துடி திமிலை தட்டி
பொங்கொலிச் சின்னம் எல்லாம் பொருபடை மிடைந்த பொற்பின்
மங்குல்வான் கிளர்ச்சி5 னான மருங்கெழுந் தியம்பி மல்க. ஈக

582 தூரிய6துவைப்பும் மூட்டுஞ் சுடர்ப்படை ஒலியும் மாவின்
தார்மணி7இசைப்பும் வேழ முழக்கமும் தடந்தேர்ச் சீறும்
வீரர்தஞ் செருக்கின் ஆர்ப்பும் மிக்கெழுந் தொன்றும் எல்லைக்
காருடன் கடைநாட் பொங்குங் கடலெனக் கலித்த அன்றே. ஈஉ

583 பண்ணுறும் உறுப்பு நான்கில் பரந்தெழு சேனை யெல்லாம்
மண்ணிடை இறுகால் மேன்மேல் வந்தெழுந் ததுபோல் தோன்றத்
தண்ணளிக் கவிகை மன்னன் தானைபின் தொடரத் தானைர்
அண்ணலம் புரவி மேற்கொண் டரசமா வீதி சென்றான். ஈஈ

584 கடிவிசை முடுகிப்8போகிக் களிற்றெடும் பாகர் வீழ்ந்த
படுகளம் குறுகச் சென்றான் பகைப்புலத் தவரைக் காணான்
விடுசுடர் மழுவொன் றேந்தி வேறிரு தடக்கைத் தாய
அடுகளி றென்ன நின்ற அன்பரை முன்பு கண்டான். ஈச

பா.பே. 1. ஆழியை ஏவு நுள்ளாள நோடி. 3 பொரங்கி.
2. போற்றி நின்று. 5. மான.
3. எரி மூளி. 6 துவைப்ப
4. பொரப்ப. 8 முடுகப்

585 போன்தவழ் அருவிக் குன்றம் எனப்புரள் களிற்றின் முன்பு
நின்றவர் மன்று ளென்றும் நிருத்தமே பயிலும் வெள்ளிக்
குன்றவர் அடியா ரானூர் கொன்றவர் இவரென் றேரான்
"வென்றவர் யாவர்" என்றுன் வெடிபட முழங்குஞ் சொல்லான். ஈரு

586 அரசன்ஆங் கருளிச் செய்ய அருகுசென் றணைந்து பாகர்
" விரைசெய்தார் மாலை யோய்!நின் விறற்களிற் றெதிரே நிற்கும்
திரைசெய்நீர் உலகின் மன்னர் யாருளார் தீங்கு செய்தார்
பரசுமுன் கொண்டு நின்ற இவர்"எனப் பணிந்து சொன்னர். ஈசு

587 குழையணி காதி னுனுக் கன்பராங் குணத்தின் மிக்கார்
பிழைபடின் அன்றிக் கொல்லார் பிழைத்ததுண்" டென்றுட் கொண்டு
மழைமத யானை சேனை வரவினை மாற்றி மற்ற
உழைவயப் புரவி மேல்நின் றிழிந்தனன் உலக மன்னன். ஈள

588 "மைத்தடங் குன்று போலும் மதக்களிற் றெதிரே இந்த
மெய்த்தவர் சென்ற போது வேறுன்றும் புகுதா விட்ட
அத்தவ முடையேன் ஆனேன் அம்பல வாணர் அன்பர்
இத்தனை முனியக் கெட்டேன் என்கொலோ பிழை"என் றஞ்சி. ஈஅ

589 சேறிந்தவர் தம்மை நீக்கி அன்பர்முன் தொழுது சென்(று)" ஈ
தறிந்திலேன் அடியேன் அங்குக் கேட்டதொன் றதுதான் நிற்க
மறிந்தஇக் களிற்றின் குற்றம் பாகரோ டிதனை மாள
எறிந்ததே போது மோதான் அருள்செயும்" என்று நின்றார். ஈக

590 மன்னவன் தன்னை நோக்கி வானவர் ஈசர் நேசர்
"சென்னி!இத் துங்க வேழம் சிவகாமி யாண்டார் கொய்து
பன்னகா பரணர்ச் சாத்தக் கொடுவரும் பள்ளித் தாமம்
தன்னைமுன் பறித்துச் சிந்தத் தரைப்படத் துணித்து வீழ்த்தேன்."

591 மாதங்கம் தீங்கு செய்ய வருபரிக் காரர் தாமும்
மீதங்குக் கடவு வாரும் விலக்கிடா தொழிந்து பட்டார்
ஈதிங்கு நிகழ்ந்த" தென்றூர் எறிபத்தர் என்ன அஞ்சிப்
பாதங்கள் முறையால் தாழ்ந்து பருவரைத் தடந்தோள் மன்னன்.

592 "அங்கணர் அடியார் தம்மைச் செய்தஇவ் அபரா தத்துக்(கு)
1 இங்கிது தன்னுற் போதா(து) என்னையுங் கொல்ல வேண்டும்
மங்கல மழுவால் கொல்கை வழக்குமன்(று) இதுவாம்" என்று
செங்கையால் உடைவாள் வாங்கிக் கொடுத்தனர் தீர்வு நேர்வார். சஉ

593 வேந்தழற் சுடர்வாள் நீட்டும் வேந்தனை நோக்கிக் " கெட்டேன்
அந்தமில் புகழான் அன்புக் களவின்மை கண்டேன் " என்று
தந்தவாள் வாங்க மாட்டார் தன்னைத்தான் துறக்கும் என்று
சிந்தையால் உணர்வுற் றஞ்சி வாங்கினர்2தீங்கு தீர்ப்பார்.

பா. வே. 1. இவ்வினை தம்மால் போதா.
2. தீர்வு.

594 வாங்கிய தொண்டர் முன்பு மன்னனுர் தொழுது நின்றே
"ஈங்கெனை வாளி னுற்கொன் றென்பிழை தீர்க்க வேண்டி
ஓங்கிய உதவி செய்யப் பெற்றனன் இவர்பால்" என்றே
ஆங்கவர்தி உவப்பக் கண்ட எறிபத்தர் அதனுக் கஞ்சி. சச

595 "வன்பெருங் களிறு பாகர் மடியவும் உடைவர் ஏத்தர்(து)
என்பெரும் பிழையி னுலே என்னையுங் கொல்லும் என்னும்
அன்பனுர்தமக்குத் தீங்கு நினைந்தனன்" என்று கொண்டு
"முன்பென துயிர்செ குத்து முடிப்பதே முடி"வென் றெண்ணி. சஞ

596 புரிந்தவர் கொடுத்த வாளை அன்பர்தங் கழுத்தில் பூட்டி
அரிந்திட லுற்ற போதில் அரசனும் "பெரியோர் செய்கை
இருந்தவா றிதுஎன்! கெட்டேன்!" என்றெதிர் கடிதிற் சென்று
பெருந்தடந் தோளால் கூடிப் பிடித்தனன் வாளுங் கையும். சசு

597 வளவனுர் விடாது பற்ற மாதவர் வருந்து கின்ற
அளவிலாப் பரிவில் வந்த இடுக்கணை அகற்ற வேண்டிக்
களமணி களத்துச் செய்ய கண்ணுதல் அருளால் வாக்குக்
கிளரொளி விசும்பின் மேல்வந் தெழுந்தது பலருங் கேட்ப. சஎ

598 "தொழுந்தகை அன்பின் மிக்கீர்! தொண்டினை மண்மேல் காட்டச்
செழுந்திரு மலரை இன்று சினக்கரி சிந்தத் திங்கட்
கொழுந்தணி வேணிக் கூத்தர் அருளினுல் கூடிற்" றென்றங்(கு)
எழுந்தது பாக ரோடும் யானையும் எழுந்த தன்றே. சஅ

599 ஈரவே பூட்டும்வாளை விட்டெறி பத்தர் தாமும்
நேரியர் பெருமான் தாள்மேல் விழுந்தனர் நிருபர் கோனும்
போர்வடி வாளைப் போக எறிந்(து)அவர் கழல்கள் போற்றிப்
பார்மிசைப் பணிந்தார் விண்ணோர் பனிமலர் மாரி தூர்த்தார். சகூ

600 இருவரும் எழுந்து வானில் எழுந்தபே ரொலியைப் போற்ற
அருமறைப் பொருளா யுள்ளார் அணிகொள்பூங் கூடை தன்னில்
மருவிய பள்ளித் தாமம் நிறைந்திட அருள மற்(று)அத்
திருவருள் கண்டு வாழ்ந்து சிவகாமி யாரும் நின்றூர். நo

601 மட்டவிழ் அலங்கல் வென்றி மன்னவர் பெருமான் முன்னர்
உட்டரு களிப்பி னேடும் உறங்கிய தெழுந்த தொத்து
முட்டவெங் கடங்கள் பாய்ந்து முகிலென முழங்கிப் பொங்கும்
பட்டவர்த் தனத்தைக் கொண்டு பாகரும் அணைய வந்தார். நுக

602 ஆனசீர்த் தொண்டர் கும்பிட்(டு) "அடியனேன் களிப்ப இந்த
ஞானவெங் களிற்றில் ஏறி மகிழ்ந்தெழுந் தருளும்" என்ன
மேன்மையப் பணிமேற் கொண்டு வணங்கிவெண் குடையின் நீழல்
யானைமேற் கொண்டு சென்றூர் இவுளிமேற் கொண்டு வந்தார். நுஉ

பா.பே. 1: உளைப்புதிகண்ட.
2: தம்மைமத தீர்ந்து.
3. வாளுறிந்டை நிறுத்தார்தாம்பணிந்.
4. உருள்திரி

603 அங்கிலே எழுந்த சேனை ஆர்கலி எழும் ஒன்றாய்
மன்னிய ஒலியின் ஆர்ப்ப மண்ணெலாம் மகிழ்ந்து வாழ்த்தப்
பொன்னெடும் பொதுவில் ஆடல் நீடிய புனிதர் பொற்றாள்
சென்னியில் கொண்டு சென்னி திருவளர் கோயில் புக்கான். நிக

604 தம்பிரான் பணிமேற் கொண்டு சிவகாமி யாருஞ் சார
எம்பிரான் அன்ப ரான எறிபத்தர் தாமும் "என்னே!
அம்பலம் நிறைந்தார் தொண்டர் அறிவதற் கரியார்" என்று
செம்பியன் பெருமை உன்னித் திருப்பணி நோக்கிச் சென்றார். நிச

605 மற்றவர் இனைய வான வன்பெருந் தொண்டு மண்மேல்
உற்றிடத் தடியார் முன்சென் றுதவியே நாளும் நாளும்
நற்றவக் கொள்கை தாங்கி நலம்மிகு கயிலை வெற்பில்
கொற்றவர் கணத்தின் முன்னுங் கோமுதல் தலைமை பெற்றார். நிரி

606 ஆளுடைத் தொண்டர் செய்த ஆண்மையும் தம்மைக் கொல்ல
வாளினைக் கொடுத்து நின்ற வளவனார் பெருமை தானும்
நாளும்மற் றவர்க்கு நல்கும் நம்பர்தாழ் அளக்கில் அன்றி
நீளும்இத் தொண்டின் நீர்மை நினைக்கில்ஆர் அளக்க வல்லார். நிக

607 தேனுருந் தண்பூங் கொன்றைச் செஞ்சடை யவர்பொற் றாளில்
ஆனாத காதல் அன்பர் எறிபத்தர் அடிகள் சூடி
வானுளந் தேவர் போற்றும் மன்றுளார் நீறு போற்றும்
ஏனாதி நாதர் செய்த திருப்பணி இயம்ப லுற்றேன். நிள

ஆ திருவிருத்தம் கூஎ

ஏனாதிநாத நாயனார் புராணம்

608 புண்டரிகம் பொன்வரைமேல் எற்றிப் புவியளிக்கும்
தண்தரள வெண்கவிகைத் தார்வளவர் சோணாட்டில்
வண்டறைபூஞ் சோலை வயல்மருதத் தண்பணைசூழ்ந்(து)
எண்திசையும் எறியசீர் எயினர்மூதூர் எயினனூர். க

609 வேழக் கரும்பிடைடு மென்கருப்பு தண்வயலில்
தாழக் கதிர்ச்சாலி தானேங்குந் தன்மையதாய்
வாழக் குடிதழைத்து மன்னியஅப் பொற்பதியில்
ஈழக் குலச்சான்றார் ஏனாதி நாதனார். உ

610 தோன்மைத் திருநீற்றுத் தொண்டின் வழிபாட்டின்
நன்மைக்கண் நின்ற நலம்என்றுங் குன்றாதார்

பா. பே. 1. பொன்றாது. 4. எயினர் மூதூர்
2. அளத்தல். 3. தொண்டர் நீர்மை. 5. தனமையவாய்.

மன்னர்க்கு வென்றி வடிவாட் படைபயிற்றுந்
தன்மைத் தொழில்விஞ்சை யிற்றலைமை சார்ந்துள்ளார். கூ

611 வாளின் படைபயிற்றி வந்த வளமெல்லாம்
நாளும் பெருவிருப்பால் நண்ணுங் கடப்பாட்டில்
தாளும் தடமுடியும் காணுதார் தம்மையுந்தொண்(டு)
ஆளும் பெருமான் அடித்தொண்டர்க் காக்குவார். ச

612 நள்ளார் களும்போற்றும் நன்மைத் துறையின்கண்
எள்ளாத செய்கை இயல்பின் ஒழுகுநாள்
தள்ளாத தங்கள் தொழிலுரிமைத் தாயத்தின்
உள்ளான் அதிசூரன் என்பான் உளனனன். ஞ

613 மற்றவனுங் கொற்ற வடிவாட் படைத்தொழில்கள்
கற்றவர்கள் தன்னிற் கடந்துள்ளார் இல்லையெனும்
பெற்றிமையான் மாநிலத்து மிக்க பெருமிதம்வந்(து)
உற்றுலகில் தன்னையே சால மதித்துள்ளான். கூ

614 தாளுள் விருத்திகெடத் தங்கள்குலத் தாயத்தின்
ஆளுதை செய்தொழிலாம் ஆசிரியத் தன்மைவளம்
மேலுளநந் தான்குறைந்து மற்றவர்க்கே மேம்படலால்
ஏனாதி நாதர்திறத்(து) ஏலா இகல்புரிந்தான். எ

615 கதிரோன் எழமழுங்கிக் கால்சாயுங் காலே
மதிபோல் அழிந்துபொரு மற்றவனுஞ் சுற்றப்
பதியோ ருடன்கூடப் பண்ணியலார் மேற்சென்(று)
எதிர்போர் விளைப்பதற்கே எண்ணி யதுதுணிந்தான். அ

616 தோள்கொண்ட வல்லாண்மைச் சுற்றத் தொடுந்துணையாங்
கோள்கொண்ட போர்மள்ளர் கூட்டத் தொடுஞ்சென்று
வாள்கொண்ட தாயம் வலியாரே கொள்வதென
மூள்கின்ற செற்றத்தான் முன்கடையில் நின்றழைத்தான். கூ

617 வெங்கண் புலிகிடந்த வெம்முழையில் சென்றழைக்கும்
பைங்கண் குறுநரியே போல்வான் படைகொண்டு
பொங்கிப் புறஞ்சூழ்ந்து போர்குறித்து நேர்நின்றே
அங்கண் கடைநின் றழைத்தான் ஒலிகேளா. கo

618 "ஆர்கொல் பொரஅழைத்தார்" என்றரியேற் றிற்கிளர்ந்து
சேர்வு பெறக்கச்சில் செறிந்தவுடை மேல்வீக்கி
வார்கழலுங் கட்டி வடிவாள் பலகைகொடு
போர்முனையில் ஏனாதி நாதர் புறப்பட்டார். கக

619 புறப்பட்ட போதின்கண் போர்த்தொழில்வாள் கற்கும்
விறற்பெருஞ்சீர்க் காளையர்கள் வேறிடத்து நின்றும்

பா.பே. 1. அதிசூரன்
2. பண்ணியலார்
3. எண்ணித்துணிந்தனன்றான்
4. புடைசூழ்ந்து
5. நின்று திளைத்து
6. போர்த்தொழில்கள்!

மறப்படைவாள் சுற்றத்தார் கேட்டோடி வந்து
செறற்கரும்போர் வீரர்க் கிருமருங்குஞ் சேர்ந்தார்கள். கஉ

620 வந்தழைத்த மாற்றான் வயப்புலிப்போத் தன்னார்முன்
" நந்தமது வாள்பயிற்று நற்றாயங் கொள்ளுங்கால்
இந்தவெளி மேற்கை வகுத்திருவேம் பொருபடையும்
சந்தித்தமர்வினோத்தால் சாயாதார் கொள்வ"தென. கங

621 என்றுபகைத் தோணுரைப்ப ஏஞ்சி நாதர்"அது
நன்றனக்கு வேண்டுமேல் நண்ணுவன்"என் றுள்மகிழ்ந்து
சென்றவன்முன் சொன்ன செருக்களத்துப் போர்குறிப்பக்
கன்றிஇருபடையும் கைவகுத்து நேர்மலைவார். கச

வேறு

622 மேக ஒழுங்குகள் முன்கொடு மின்னிசை தம்மிடை யேகொடு
மாக மருங்கினும் மண்ணினும் வல்லுரு மேறெதிர் செல்வன
வாக நெடும்பல கைக்குல மாள்வினை வாளுடை யாடவர்
காகம் மிடைந்த களத்திரு கைகளின் வந்து கலந்தனர். கடு

623 கால்கழல் கட்டிய மள்ளர்கள் கைகளின் மெய்கள் அடக்கிய
வாளொளி வட்ட3மூணைந்திட வந்திரு கைகளின் முந்தினர்
வேலொடு வேலெதிர் நீள்வன மேவிய பாதலம் விட்டுயர்
ஞாலமு மும்பணி வீரர்கள் நாநிமிர் கின்றன ஒத்தன. கசு

624 வெங்கண் விறற்சிலை வீரர்கள் வேறிரு கையிலும் நேர்பவர்
தங்கள் சிலைக்குலம் உந்தின தாவில் சரங்கள் நெருங்குவ
பொங்கு சினத்தெரி யிற்புகை போகு கொடிக்கள் வளைத்தெதிர்
செங்கண் விழிக்கனல் சிந்திய சீறு பொறிச்செல வொத்தன. கள

625 வாளொடு நீள்கை துடித்தன மார்பொடு வேல்கள் குளித்தன
தோளொடு வாளி நிலத்தன தேரொடு தோல்கள் தகைத்தன
தாளொடு வார்கழல் இற்றன தாரொடு சூழ்சிரம் அற்றன
நாளொடு சீறி மலைப்பவர் நாடிய போர்செய் களத்தினில். கஅ

626 சூருதியின் நதிகள் பரந்தன குறையுடல் ஓடி அலைந்தன
பொருபடை அறுதுணி சிந்தின புடைசொரி குடர்உடல் பம்பின
வெருவர எருவை நெருங்கின விசியறு துடிகள் புரண்டன
இருபடை4யினும் எதிர்ந்தவர் எதிரெதிர் அமர்செய் பறந்தலை. ககூ

627 நீளிடை மூடுகி நடந்தெதிர் நேரிரு வரிலொரு வன்தொடர்
தாளிரு தொடையற முன்பெயர் சாரிகை முறைமை5தடிந்தனன்
வாளொடு விழுமுடல் வென்றவன் மார்பிடை அறமுன் எறிந்திட
ஆளியி னவனு மிறந்தனன் ஆயினர் பலருள ரெங்கணும். உ0

பா-பே.1. அமர்வேந்தர்.
2. இருபுடையும்.
3. இரண்டிட.
5. மறிந்தனன்.

628 கூர்முனை அயில்கொடு முட்டினர் கூடிமுன் உருவிய தட்டுடன்
நேருரம் உருவ உரப்புடன் நேர்பட எதிரெதிர் குத்தினர்
ஆருயிர் கழியவும் நிற்பவர் ஆண்மையில் இருவரும் ஒத்தமை
போரடு படைகொ டளப்பவர் போல்பவர் அளவிலர் பட்டனர். உக

627 போற்சிலை வளைய எதிர்ந்தவர் புற்றர வனைய சரம்பட
விற்படை துணியவும் நின்றிலர் வெற்றிகொள் சுரிகை வழங்கினர்
மூற்றிய பெருவளன் இன்றியும் முற்படு கொடைநிலை நின்றிட
உற்றன உதவிய பண்பினர் ஒத்தனர் உளர்சில[1]கண்டர்கள். உஉ

630 அடல்முனை மறவர் மடிந்தவர் அலர்முகம் உயிருள வென்றுறு
படர்சிறை சுலவு கருங்கொடி[2]படர்வன சுழல்வன துன்றலில்
விடுசுடர் விழிகள் இரும்புசெய் வினைஞர்தம் உலையின் முகம்பொதி
புடையிடை கரியிடை பொங்கிய புகைவிடு[3]தழலை நிகர்த்தன. உங

631 திண்படை வயவர் பிணம்படு செங்கள மதனிடை மூன்சிலர்
புண்படு வழிசொரி யுங்குடர் பொங்கிய கழுகு பருந்[தொடு [னர்
கொண்டெழு பொழுதினும் முன்செயல் குன்றுதல் இலர்தலை நின்ற\
விண்படர் கொடிவிடு பண்பயில் விஞ்சையர் குமரரை வென்றனர். உச

வேறு

632 இம்முனைய வெம்போரில் இருபடையின் வாள்வீரர்
வெம்முனையில் வீடியபின் வீடாது மிக்கொழிந்த
தம்முடைய பல்படைஞர் பின்னுகத் தாம்முன்பு
தெம்முனையில் ஏனாதி நாதர் செயிர்த்தெழுந்தார். உடு

633 வெஞ்சினவாள் தீயுமிழ வீரக் கழல்கலிப்ப
நஞ்சணிகண் டர்க்கன்பர் தாம்எதிர்ந்த ஞாட்பின்கண்
எஞ்சினெதிர் நின்ற இகல்முனையில் வேல்உழவர்
தஞ்சிரமுந் தோள்உரமுந் தாளும் விழத்துணித்தார். உசு

634 தலைப்பட்டார் எல்லாருந் தனிவீரர் வாளில்
கொலைப்பட்டார் முட்டாதார் கொல்களத்தை விட்டு
நிலைப்பட்ட மெய்யுணர்வு நேர்பட்ட போதில்
அலைப்பட்ட ஆர்வமுதற் குற்றம்போ லாயினர். உஎ

635 இந்நிலைய வெங்களத்தில் ஏற்றழிந்த மானத்தால்
தன்னுடைய[4]புல்படைஞர் மீண்டார் தமைக்கொண்டு
மின்னெளிவாள் வீசி விறல்வீரர் வெம்புலியே(று)
அன்னவர்தம் முன்சென்று அதிசூரன் நேரடர்ந்தான். உஅ

636 மற்றவர்தஞ் செய்கை வடிவாள் ஒளிகாணச்
சுற்றிவரும் வட்டணையில் தோன்று வகைகலந்து

பா.பே.1. கண்டகர். 5. முன்வந்து.
2. படியுமுன்
3. தழனிகர்கின்றன.
4. புல்படைஞர்.

பற்றியடர்க் கும்பொழுதில் தானும் படைபிழைத்துப்
பொற்றடந்தோள் வீரர்க்(கு) உடைந்து புறகிட்டான். உசு

637 போன அதிசூரன் போரில் அவர்க்கழிந்த
மானம்மிக மீதூர மண்படுவான் கண்படான்
ஆனசெயல் ஓரிரவுஞ் சிந்தித் தலமந்தே
"ஈனம்மிகு வஞ்சனையால் வெல்வன்"என எண்ணினான். உஎ

638 சேட்டாருங் கங்குல் புலர்காலைத் தீயோனும்
"நாட்டாரைக் கொல்லாதே நாம்இருவேம் வேறிடத்து
வாட்தாயங் கொள்போர் மலைக்க வருக"எனத்
தோட்டார்பூந் தாரார்க்குச் சொல்லிச் செலவிட்டான். உக

639 இவ்வாறு கேட்டலுமே ஏகாதி நாதனார்
அவ்வாறு செய்தல் அழகு தெனஅமைந்து
கைவ்வாள் அமர்வீரைக்கத் தான்கருதும் அக்களத்தே
வெவ்வாள் உரவோன் வருகஎன மேற்கொள்வார். உஉ

640 சுற்றத்தார் யாரும் அறியா வகைசுடர்வாள்
பொற்பலகை யுந்தாமே கொண்டு புறம்போந்து
மற்றவன்முன் சொல்லி வரக்குறித்த அக்களத்தே
பற்றலனை முன்வரவு பார்த்துத் தனிநின்றார். உஊ

641 தீங்கு குறித்தழைத்த தீயோன் "திருநீறு
தாங்கிய நெற்றியினர் தங்களையே எவ்விடத்தும்
ஆங்கவருந் தீங்கிழையார் " என்ப தறிந்தானுய்ப்
பாங்கில் திருநீறு பண்டு பயிலாதான். உச

642 வெண்ணீறு நெற்றி விரவப் புறம்பூசி
உள்நெஞ்சில் வஞ்சக் கறுப்பும் உடன்கொண்டு
3வண்ணச் சுடர்வாள் மணிப்பலகை கைக்கொண்டு
புண்ணியப்போர் வீரர்க்குச் சொன்ன இடம்புகுந்தான். உடு

643 வென்றி மடங்கல் விடக்குவர முன்பார்த்து
நின்றூற்போல் 4நின்றார் நிலைகண்டு தன்நெற்றி
சென்று கிடைப்பளவுந் திண்பலகை யான்மறைத்தே
முன்தனிவீ ரர்க்கெதிரே மூண்டான் மறம்பூண்டான். உசு

644 அடல்விடையே றென்ன அடர்த்தவனைக் கொல்லும்
இடைதெரிந்து தாள்பெயர்க்கும் ஏகாதி நாதர்
புடைபெயர்ந்த மாற்றுன் பலகைபுறம் போக்கக்
கடையவன்தன் நெற்றியின்மேல் வெண்ணீறு தாங்கண்டார். உஎ

645 கண்டபொழு தே"கெட்டேன் முன்பிவர்மேற் காணுத
வெண்திருநீற் றின்பொலிவு மேற்கண்டேன் வேறினிஎன்

சு பா. ஏ. 1. புகுவிட்டான். 2. வெளிவிட்டான்.
3. வண்ணக்கொள்வாள்.
4. நின்று.

அண்டர்பிரான் சிரடியார் ஆயினார்'' என்றுமனங்
கொண்(டு)''இவர்தங் கொள்கைக் குறிவழிநிற் பேன்''என்று. நஅ

646 கைவாள் உடன்பலகை ஈக்கக் கருதியது
செய்யார் ''நிராயுதரைக் கொன்றார் எனுந்தீமை
எய்தாமை வேண்டும் இவர்க்கென் '' றிரும்பலகை
நெய்வாள் உடன்அடர்த்து நேர்வார்போல் நேர்நின்றார். நக

647 அங்கின்ற தொண்டர் திருவுள்ளம் ஆறிவார்
முன்கின்ற பாதகனும் தன்கருத்தே முற்றுவித்தான்
இங்கின்ற தன்மை அறிவார் அவர்க்கருள
மின்கின்ற செஞ்சடையார் தாமே வெளிநின்றார். சO

648 மற்றினிநாம் போற்றுவதென் வானோர் பிரான்அருளைப்
பற்றலர்தங் கைவாளால் பாசம் அறுத்தருளி
உற்றவரை என்றும் உடன்பிரியா அன்பருளிப்
பொற்றொடியாள் பாகனார் பொன்னம் பலம்அணைந்தார். சக

649 தம்பெருமான் சாத்துந் திருநீற்றுச் சார்புடைய
எம்பெருமான் ஏனாதி நாதர் கழல்இறைஞ்சி
உம்பர்பிரான் காளத்தி உத்தமர்க்குக் கண்ணப்பும்
நம்பெருமான் செய்தபணி நான்தெரிந்த வாறுரைப்பாம். சஉ

ஆ திருவிருத்தம் சுசக

10. கண்ணப்ப நாயனார் புராணம்

650 மேவலர் புரங்கள் செற்ற விடையவர் வேத வாய்மைக்
காவலர் திருக்கா ளத்திக் கண்ணப்பர் திருநா டென்பர்
நாவலர் புகழ்ந்து போற்ற நல்வளம் பெருகி நின்ற
பூஅலர் வாவிச் சோலை சூழ்ந்தபொத் தப்பி நாடு. க

651 இத்திரு நாடு தன்னில் இவர்திருப் பதியா தென்னில்
நித்தில அருவிச் சாரல் நீள்வரை சூழ்ந்த பாங்கர்
மத்தவெங் களிற்றுக் கோட்டு வன்தொடர் வேலி கோலி
ஒத்தபேர் அரணஞ் சூழ்ந்த முதுபதி உடுப்பூர் ஆகும். உ

652 குன்றவர் அதனில் வாழ்வார் கொடுஞ்செவி ஞமலி யார்த்த
வன்திரள் விளவின் கோட்டு வார்வலி மருங்கு தூங்கப்
பன்றியும் புலியும் எண்கும் கடமையும் மானின் பார்வை
அன்றியும் பாறை முன்றில் ஐவனம் உணங்கும் எங்கும். ந

பா.பே. 1. அறைந்தார். 5. சூழ்ந்த பொதி
2. தோன்றுதற்கு 6. வன்தூல்.
3 போற்றும்
4 பெருகி.

653 வன்புலிக் குருளை யோடும் வயக்கரிக் கன்றி னோடும்
புன்தலைச் சிறுமை கார்கள் புரிந்துடன் ஆடல் அன்றி
அன்புறு காதல் கூர அணையுமான் பிணைக ளோடும்
இன்புற மருவி ஆடும் எயிற்றியர் மகளிர் எங்கும். சு

654 வேல்படைத் தறுகண் வெஞ்சொல் வேட்டுவர் கூட்டந் தோறும்
கொல்லெறி குத்தென் முர்த்துக் குழுமிய ஓசை யன்றிச்
சில்லரித் துடியும் கொம்பும் சிறுகணு குளியுங் கூடிக்
கல்லெனும் ஒலியின் மேலும் கறங்கிசை அருவி எங்கும். டு

655 ஆறலைத் துண்ணும் வேடர் அயற்புலங் கவர்ந்து கொண்ட
வேறுபல் உருவின் மிக்கு விரவுமான் நிரைக ளன்றி
ஏறுடை வானந் தன்னில் இடிக்குரல் எழிலி யோடு
மாறுகொள் முழக்கங் காட்டும் மதக்கைமா நிரைகள் எங்கும். சு

656 மைச்செறிந் தனைய மேனி வன்தொழில் மறவர் தம்பால்
அச்சமும் அருளும் என்றும் அடைவிலார் உடைவன் தோலார்
பொச்சையின் நறவும் ஊனின் புழுக்கலும் உணவு கொள்ளும்
நச்சழற் பகழி வேடர்க் கதிபதி நாகன் என்பான். எ

657 பேற்றியால் தவம்முன் செய்தா னெயினும் பிறப்பின் சார்பால்
குற்றமே குணமா வாழ்வான் கோமையே தலைநின் றுள்ளான்
விற்றொழில் விறலின் மிக்கான் வெஞ்சின மடங்கல் போல்வான்
மற்றவன் குறிச்சி வாழ்க்கை மனைவியுந் தத்தை என்பாள். அ

658 அரும்பெறல் மறவர் தாயத் தான்றதொல் குடியில் வந்தாள்
இரும்புலி எயிற்றுத் தாலி இடையிடை மனவு கோத்துப்
பெரும்புறம் அலையப் பூண்டாள் பீலியும் குழையும் தட்டச்
சுரும்புறு படலை முச்சிச் சூர்அரிப் பிணைவு போல்வாள். கூ

659 பொருவருஞ் சிறப்பின் மிக்கார் இவர்க்கினிப் புதல்வர்ப் பேறே
அரியதென் றெவரும் கூற அதற்படி காத லாலே
முருகலர் அலங்கற் சேவ்வேல் முருகவேள் முன்றிற் சென்று
பரவுதல் செய்து நாளும் பராய்க்கடன் நெறியில் நிற்பார். கo

660 வாரணச் சேவ லோடும் வரிமயிற் குலங்கள் விட்டுத்
தோரண மணிகள் தூக்கிச் சுரும்பணி கதம்பம் நாற்றிப்
போரணி நெடுவே லோற்குப் புகழ்புரி குரவை தூங்கப்
பேரணங் காடல் செய்து பெருவிழா எடுத்த பின்றை. கக

661 பயில்வடுப் பொலிந்த யாக்கை வேடர்தம் பதியாம் நாகற்
கெயிலுடைப் புரங்கள் செற்ற எந்தையார் மைந்த ரான
மயிலுடைக் கொற்ற வூர்தி வரையுரங் கிழித்த திண்மை
அயிலுடைத் தடக்கை வென்றி அண்ணலார் அருளி னாலே. கஉ

பா. பே. I. பின்னர்

662 கானவர் குலம்வி ளங்கத் தத்தைபால் கருப்பம் நீட
ஊனமில் பலிகள் போக்கி உறுகடன் வெறியாட் டோடும்
ஆனஅத் திங்கள் செல்ல அளவில்செய் தவத்தி னலே
பான்மதி உவரி ஈன்ரு லெனமகப் பயந்த போது. கஙூ

663 கரிப்பரு மருப்பின் முத்தும் கழைவிளை செழுநீர் முத்தும்
பொருப்பினின் மணியும் வேடர் பொழிதரு மழையே யன்றி
வரிச்சுரும் பலைய வானின் மலர்மழை பொழிந்த தெங்கும்
அரிக்குரல் துடியே யன்றி அமரர்துந் துபியும் ஆர்த்த. கச

664 அருவரைக் குறவர் தங்கள் அகன்குடிச் சீறூர் ஆயம்
பெருவிழா எடுத்து மிக்க பெருங்களி கூருங் காலைக்
கருவரை கால மேகம் ஏந்திய தேன்னத் தாதை
பொருவரைத் தோள்க ளாரப் புதல்வனை எடுத்துக் கொண்டான். கஙி

665 கருங்கதிர் விரிக்கும் மேனிக் காமரு குழவி தானும்
இரும்புலிப் பறழின் ஓங்கி இறவுளர் அளவே யன்றி
அரும்பெறல் உலக மெல்லாம் அளப்பரும் பெருமை காட்டித்
தருங்குறி பலவுஞ் சாற்றுந் தன்மையிற் பொலிந்து தோன்ற. ககூ

666 அண்ணலைக் கையில் ஏந்தற்(கு) அருமையால் " உரிமைப் பேருந்
திண்ணன் என் றியம்பும் " என்னத் திண்சிலை வேடர் ஆர்த்தார்
புண்ணியப் பொருளா யுள்ள பொருவில்சீர் உருவி னானைக்
கண்ணினுக்(கு) அணியாத் தங்கள் கலன்பல அணிந்தார் அன்றே. கஎ

667 வரையுறை கடவுட் காப்பு மறக்குடி மரபில் தங்கள்
புரையில்தொல் முறைமைக் கேற்பப் பொருந்துவ போற்றிச் செய்து
விரையிளந் தளிருஞ் சூட்டி வேம்பிழைத் திடையே கோத்த
அரைமணிக் கவடி கட்டி அழகுற வளர்க்கும் நாளில். கஅ

668 வருமுறைப் பருவந் தோறும் வளம்மிகு சிறப்பில் தெய்வப்
பெருமடை கொடுத்துத் தொக்க பெருவிறல் வேடர்க் கெல்லாம்
திருமலி துழனி பொங்கச் செழுங்களி மகிழ்ச்சி செய்தே
அருமையிற் புதல்வர்ப் பெற்ற ஆர்வமுந் தோன்ற உய்த்தார். ககூ

669 ஆண்டெதிர் அணைந்து செல்ல விடும்அடித் தளர்வு நீங்கிப்
பூண்திகழ் சிறுபுன் குஞ்சிப் புலியுகிர்ச் சுட்டி சாத்தி
மூண்டெழு சினத்துச் செங்கண் முளவுமுள் அரிந்து கோத்த
நாண்தரும் எயிற்றுத் தாலி நலங்கிளர் மார்பில் தூங்க. உ0

670 பாசொளி மணியோ டார்த்த பன்மணிச் சதங்கை ஏங்கக்
காசொடு தொடுத்த காப்புக் கலன்புனை அரைஞாண் சேர்த்தித்
தேசுடை மருப்பின் தண்டை செறிமணிக் குதம்பை மின்ன
மாசறு கோலங் காட்டி மறுகிடை யாடும் நாளில். உக

பா.பே.1. பலிதனோத்தி; பலிகளோத்தி.
2. பொருவலித் தோள்க ளாரப்பு.
3. கழிமகிழ்ச்சி.

671 தண்மலர் அலங்கல் தாதை தாய்மனங் களிப்ப வந்து
புண்ணியக் கங்கை நீரில் புனிதமாம் திருவாய் நீரில்
உள்ளுணக் தமுதம் ஊறி ஒழுகிய மழலைத் தீஞ்சொல்
வண்ணமென் பவளச் செவ்வாய் குதட்டியே வளரா நின்றார். உஉ

672 போருபுலிப் பார்வைப் பேழ்வாய் முழையெனப் பொற்கை நீட்டப்
பரிவுடைத் தந்தை கண்டு பைந்தழை கைக்கொண் டோச்ச
இருசுடர்க் குறுகண் தீர்க்கும் எழில்வளர் கண்ணீர் மல்கி
வருதுளி முத்தம் அத்தாய் வாய்முத்தம் கொள்ள மாற்றி. உங

673 துடிக்குற டுருட்டி ஓடித் தொடக்குநாய்ப் பாசஞ் சுற்றிப்
பிடித்தறுத் தெயினப் பிள்ளைப் பேதையர் இழைத்த வண்டல்
அடிச்சிறு தளிரால் சிந்தி அருகுறு சிறுவ ரோடும்
குடிச்செறி குரம்பை எங்கும் குறுநடைக் குறும்பு செய்து. உச

674 அனையன பலவும் செய்தே ஐந்தின்மேல் ஆன ஆண்டின்
வனைதரு வடிவார் கண்ணி மறச்சிறு மைந்த ரோடும்
சினைமலர்க் காவு ளாடிச் செறிகுடிக் குறிச்சி சூழ்ந்த
புனைமருப் புழலை வேலிப் புறச்சிறு கானில் போகி. உடு

675 கடுமுயற் பறழி னோடுங் கானவ னத்தின் குட்டி
கொடுவரிக் குருளை செந்நாய் கொடுஞ்செவிச் சாப மான
முடுகிய ஷிசையி லோடித் தொடர்ந்துடன் பற்றி முற்றத்
திடுமரத் தீரளில் கட்டி வளர்ப்பன எண்ணி லாத. உசு

676 அலர்பகல் கழிந்த அந்தி ஐயவிப் புகையும் ஆட்டிக்
குலமுது குறத்தி ஊட்டிக் கொண்டுகண் துயிற்றிக் கங்குல்
புலரஊன் உணவு நல்கிப் புரிவினை யாட்டின் விட்டுச்
சிலமுறை யாண்டு செல்லச் சிலையில் பருவம் சேர்ந்தார். உள

677 தந்தையும் மைந்த னுரை நோக்கித்தன் தடித்த தோளால்
சிந்தையுள் மகிழப் புல்லிச் சிலைத்தொழில் பயிற்ற வேண்டி
முந்தைஅத் துறையில் மிக்க முதியரை அழைத்துக் கூட்டி
வந்தநாட் குறித்த தெல்லாம் மறவர்க்குச் சொல்லி விட்டான். உஅ

678 "வேடர்தங் கோமான் நாகன் வேன்றிவேள் அருளால் பெற்ற
சேடரின் மிக்க செய்கைத் திண்ணன்வில் பிடிக்கின் றான்"என்
றுடியல் துடியும் சாற்றி அறைந்தபேர் ஓசை கேட்டு
மாடியர் மலைகள் ஆளும் மறக்குலத் தலைவ ரெல்லாம். உக

679 மலைபடு மணியும் பொன்னும் தரளமும் வரியின் தோலும்
கொலைபுரி களிற்றுக் கோடும் பீலியின் குவையும் தேனும்
தொலைவில்பல் நறவும் ஊனும் பலங்களும் கிழங்கும் துன்றச்
சிலையுயில் வேடர் கொண்டு திசைதொறும் நெருங்க வந்தார். நo

பா. வே. 1. தானில் கூட்டி.

680 மல்கிய வளங்கள் எல்லாம் நிறைந்திட மாறில் சீரார்
எல்லையில் அடங்கா வண்ணம் ஈண்டினர் கொணர்ந்தார் எங்கும்
" பல்பெருங் கிளைஞர் போற்றப் பராய்க்கடன்[2] பலவும்[1] செய்து
வில்விழா எடுக்க" என்று விளம்பினன் வேடர் கோமான். நக

681 பான்மையில் சமைத்துக் கொண்டு படைக்கலம் வினைஞர் ஏந்தத்
தேனலர் கொன்றை யார்தந் திருச்சிலைச் செம்பொன் மேரு
வானது கடலின் நஞ்சம் ஆக்கிட அவர்க்கே பின்னும்
கானவன் அமுதம் ஆக்கும் சிலையினைக் காப்புச் சேர்த்தார். நஉ

682 சிலையினைக் காப்புக் கட்டும் திண்புலி நரம்பில் செய்த
நலம்மிகு காப்பு நன்னுண் நாகனூர் பயந்த நாகக்
குல்ம்விளங் கரிய குன்றின் கோலமுன் கையில் சேர்த்தி
மலையுறை மாக்கள் எல்லாம் வாழ்த்தெடுத் தியம்பி னார்கள். நஙந

683 ஐவன அடிசில் வெவ்வே றமைத்தன புற்பாற் சொன்றி
மொய்வரைத் தினைமென் சோறு மூங்கில்வன்[3] பதங்கள் மற்றும்
கைவினை எயின ராக்கிக் கலந்தவன் கிழங்கு துன்றச்
செய்வரை உயர்ப்ப எங்கும் கலந்தனர் சினவில் வேடர். நச

684 சேந்தினை இடியும் தேனும் அருந்துவார் தேனில் தோய்த்து
வெந்தவன் அயில்வார் வேரி விளங்கனிக் கவளம் கொள்வார்
நந்திய ஈயல் உண்டி நசையொடு மிசைவார் வெவ்வே
றந்தமில் உணவின் மேலோர் ஆயினர் அளவி லார்கள். நஞ

685 அயல்வரைப்[4] புலத்தின் வந்தார் அருங்குடி இருப்பின் உள்ளார்
இயல்வகை உணவில் ஆர்ந்த எயிற்றியர் எயினர் எல்லாம்
உயர்கதிர் உச்சி நீங்க ஒழிவில்பல் நறவு மாந்தி
மயலுறு களிப்பின் நீடி வரிசிலை விழவு கொள்வார். நசு

686 பாசிலைப் படலை சுற்றிப் பன்மலர்த் தொடையல் சூடிக்
காசுடை வடத்தோல் கட்டிக் கவடிமெய்க் கலன்கள்[5] பூண்டு
மாசில்சீர் வெட்சி[6] முன்னு வருந்துறைக் கண்ணி சூடி
ஆசில்ஆ சிரியன் ஏந்தும் அடற்சிலை மருங்கு சூழ்ந்தார். நஎ

687 தோண்டக முரசும் கொம்பும் துடிகளும் துளைகொள் வேயும்
எண்டிசை நிறைந்து விம்ம எழுந்தபேர் ஒலியி னோடும்
திண்திறல் மறவர் ஆர்ப்புச் சேண்விசும் பிடித்துச் செல்லக்
கொண்டசீர் விழவு பொங்கக் குறிச்சியை வலங்கொண் டார்கள். நஅ

688 குன்றவர்[7] வரிகொண் டாடக் கொடிச்சியர் துணங்கை ஆடத்
துன்றிய மகிழ்ச்சி யோடுஞ் சூர்அர மகளிர் ஆ[8]
வென்றிவில் விழவி னோடும் விருப்புடை எழாம்[9] நாளாம்
அன்றிரு மடங்கு செய்கை அழகுற அமைத்தி பின்றை. நக

பா. வே. 1. நேர்ந்து. 2 மிகவும். 3. கூட.
4. புறத்தின். 5. பூண்டார். 6. மா சிலாவெட்சி
7. குன்றைவாண்டாட. 8. நாளில். 9 பின்னர்.

689 வேங்கதிர் விசும்பின் உச்சி மேவிய பொழுதில் எங்கும்
மங்கல வாழ்த்து மல்க மருங்குபல் லியங்கள் ஆர்ப்பத்
தங்கள்தொல் மரபின் விஞ்சைத் தனுத்தொழில் வலவர் தம்பால்
பொங்கொளிக் கரும்போர் ஏற்றைப் பொருகிலை பிடிப்பித் தார்கள். சo

690 போற்றட வரையின் பாங்கர்ப் புரிவுறு கடன்முன் செய்த
விற்றிருழிற் களத்தில் நண்ணி விதிமுறை வணங்கி மேவும்
அற்றைநாள் தொடங்கி நாளும் அடற்சிலை ஆண்மை முற்றக்
கற்றனர் என்னை யாளுங் கானவர்க் கரிய சிங்கம். சக

691 வண்ணவெஞ் சிலையும் மற்றப் படைகளும் மலரக் கற்றுக்
கண்ணகல் சாயல் பொங்கக் கலிவளர் திங்க ளேபோல்
எண்ணிரண் டாண்டின் செவ்வி எய்தினர் எல்லை இல்லாப்
புண்ணியந் தான்றி மேன்மேல் வளர்வதன் பொலிவு போல்வார்.

வேறு

692 இவ்வண்ணந் திண்ணனார் நிரம்பு நாளில் இருங்குறவர் பெருங்
குறிச்சிக் கிறைவன் ஆய, மைவண்ண வரைநெடுந்தோள் நாகன்
தானும் மலையெங்கும் வனமெங்கும் வரம்பில் காலம், கைவண்ணச்
சிலைவேட்டை யாடித் தெவ்வர் கணம்நிரைகள் பலகவர்ந்து கானங்
காத்து, மெய்வண்ணந் தளர்மூப்பின் பருவம் எய்தி வில்லுழவின்
பெருமுயற்சி மிலிவான் ஆனன். சஙூ

693 அங்கண்மலைத் தடஞ்சாரற் புனங்கள் எங்கும் அடலேனம் புலி
கரடி கடமை ஆமா, வெங்கண்மரை கலையொடுமான் முதலா யுள்ள
மிருகங்கள் மிகநெருங்கி மீதூர் காலத், " திங்கள்முறை வேட்டை
வினை தாழ்த்த " தென்று னினைவேடர் தாமெல்லாந் திரண்டு சென்று,
தங்கள்குல முதற்றலைவ னுகியுள்ள தண்தெரியல் நாகன்பால் சார்ந்து
சொன்னார். சஎ

694 சொன்னவுரை கேட்டலுமே நாகன் தானும் சூழ்ந்துவரும் தன்
மூப்பின் தொடர்வு நோக்கி, முன்னவர்கட் குரைசெய்வான் " மூப்பி
னலே முன்புபோல் வேட்டையினில் முயல கில்லேன், என்மகனை
உங்களுக்கு நாத னுக எல்லீருங் கைக்கொள்மின் " என்ற போதின்,
அன்னவரும் இரங்கிப்பின் மகிழ்ந்து தங்கோன் அடிவணங்கி இம்
மாற்றம் அறைகின் றார்கள். சஙூ

695 " இத்தனைகா லமும்நினது சிலைக்கீழ்த் தங்கி இனிதுண்டு தீங்கின்றி
இருந்தோம் இன்னும், அத்தகினை தருள்வழியே நிற்ப தல்லால்
அடுத்தநெறி வேறுளதோ அதுவே அன்றி, மெய்த்தவிறல் திண்
ணனையும் மரபில் சால மேம்படவே பெற்றளித்தாய் விளங்கு
மேன்மை, வைத்தசிலை மைந்தனைஈண் டழைத்து நுங்கள் வரையாட்சி
அருள்" என்றார் மகிழ்ந்து வேடர். சசு

பா. பே. 1. போதில் 2. கானத்தை 3. நிரண்டு.
4. மெலிவதானன். 5. கலினத்தினொடு 6 பலரையுங்கி.
7 நிலவேட்டம் 8 முயல்கிலேன்.

696 சிலைமறவர் உரைசெய்ய நாகன் தானும் திண்ணனைமுன் கொண்டு வரச் செப்பி விட்டு, "மலைமருவு நெடுங்கானில் கன்னி வேட்டை மகன்போகக் காடுபலி மகிழ ஊட்டத், தலைமரபின் வழிவந்த தேவ ராட்டி தனைஅழைமின்" எனஅங்குச் சார்ந்தோர் சென்று, நிலைமை யவள் தனக்குரைப்ப நரைமூ தாட்டி நெடிதுவந்து விருப்பிலெடுங் கடிது வந்தாள். சஎ

697 கானில்வரித் தளிர்துதைந்த கண்ணி சூடிக் கலைமருப்பின் அரிந்த குழை காதில் பெய்து, மானின்வயிற் றரிதாரத் திலகம் இட்டு மயிற் கழுத்து மனவுமணி வடமும் பூண்டு, தானிழிந்து திரங்கிமூலை சரிந்து தாழத் தழைப்பீலி மரவுரிமேல் சார எய்திப், பூநெருங்கு தோரைமலி சேடை நல்கிப் போர்வேடர் கோமானைப் போற்றி நின்றாள். சஅ

698 நின்றமுது குறக்கோலப் படிமத் தாளை நோக்கிக் "அன்னை நீ நிரப்பு நீங்கி, நன்றினிதின் இருந்தனையோ" என்றுகூறும் நாகன் எதிர் நலம்பெருக வாழ்த்தி "நல்ல, மென்தசையும் ஈயலொடு நறவும் வெற்பில் விளைவளனும் பிறவளனும் வேண்டிற் றெல்லாம், அன்றுநீ வைத்தபடி பெற்று வாழ்வேன் அழைத்தபணி என்" என்றாள் அணங்கு சார்ந்தாள். சக

699 "கோட்டமில்என் குலமைந்தன் திண்ணன் எங்கள் குலத்தலைமை யான்கொடுப்பக் கொண்டு பூண்டு, பூட்டுறுவெஞ் சிலைவேடர் தம்மைக் காக்கும் பொருப்புரிமை புகுகின்றான் அவனுக் கென்றும், வேட்டை வினை எனக்குமே லாக வாய்த்து வேறுபுலங் கவர்வென்றி மேவு மாறு, காட்டினுறை தெய்வங்கள் விரும்பி உண்ணக் காடுபலி ஊட்" டென் றான் கவலை இல்லான். நூ

700 மற்றவன்தன் மொழிகேட்ட வரைச்சூ ராட்டி "மனமகிழ்ந்திங் கன்போடு வருகின் றேனுக், கெற்றையினுங் குறிகள்மிக நல்ல ஆன இதனுலே உன்மைந்தன் திண்ண னை, வெற்றிவரிச் சிலையோன்நின் அளவி லன்றி மேம்படுகின் றான்" என்று விரும்பி வாழ்த்திக், கொற்ற வனத் தெய்வங்கள் மகிழ ஊட்ட வேண்டுவன குறைவின்றிக் கொண்டு போனாள். நுக

701 தெய்வமிகழ் குறமுதியாள் சென்ற பின்பு திண்ணனார் சிலைத் தாதை அழைப்பச் சிர்கொள், மைவிரவு நறுங்குஞ்சி வாசக் கண்ணி மணிநீல மலையோன்று வந்த தென்னக், கைவிரவு சிலைவேடர் போற்ற வந்து காதல்புரி தாதைகழல் வணங்கும் போதில்,3செவ்வரைபோற் புயமிரண்டும் செறியப் புல்லிச் செழும்புலித்தோல் இருக்கையினில் சேர வைத்தான். நூ

702 முன்னிருந்த மைந்தன்முகம் நோக்கி நாகன் "மூப்பெனைவந் தடைதலினுல் முன்பு போல, என்னுடைய முயற்சியினுல் வேட்டை

பா.வே.1 நன்றுபிணி நிலை 2னையே.
2.மனமகிழ்ந்து 1நானிங்கு.
3. தெய்வ ரைபோல்.

யாட இனிஎனக்குக் கருத்தில்லை எனக்கு மேலாய், மன்னுசிலை மலை யர்குலக் காவல் பூண்டு மாறெறிந்து மாவேட்டை ஆடி என்றும், உன் னுடைய மாபுரிமை தாங்கு வாய்''என் றுடைதோலுஞ் சுரிகையுங்கைக் கொடுத்தான் அன்றே. நிஈ

703 தந்தைநிலை உட்கொண்டு தளர்வு கொண்டு தங்கள்குலத் தலை மைக்குச்சார்வு தோன்ற, வந்தகுறை பாடதணி நிரப்பு மாறு மனங் கொண்ட குறிப்பினுல் மறுமை கொண்டு, முந்தையவன் கழல் வணங்கி முறைமை தந்த முதற்சுரிகை உடைதோலும் வாங்கிக் கொண்டு, சிந்தைபரங் கொளநின்ற திண்ண னார்க்குத் திருத்தாதை முகம்மலர்ந்து செப்பு கின்றான். நிச

704 ''நம்முடைய குலமறவர் சுற்றத் தாரை நான்கொண்டு பரித்த தன்மேல் நலமே செய்து, தெம்முனையில் அயற்புலங்கள் கவர்ந்து 2கொண்ட திண்சிலையின் வளமொழியாச் சிறப்பின் வாழ்வாய்,வெம் முனையின் வேட்டைகளும் உனக்கு வாய்க்கும் விரைந்துநீ தாழாதே வேட்டை ஆட, இம்முரண்வெஞ் சிலைவேடர் தங்க ளோடும் எழுக'' என விடைகொடுத்தான் இயல்பில்3நின்றான். நிடி

705 செங்கண்வயக் கோளரியே(று) அன்ன திண்மைத் திண்ணனார் செய்தவத்தின் பெருமை பெற்ற, வெங்கண்விறல் தாதைகழல் வணங்கி நின்று விடைகொண்டு புறம்போந்து வேட ரோடும், மங்கல நீர்ச் சுனைபடிந்து மனையின் வைகி வைகிருளின் புலர்காலை வரிவிற் சாலைப், பொங்குசிலை அடல்வேட்டைக் கோலங் கொள்ளப் புனை தொழிற்கை வினைஞரொடும் பொலிந்து புக்கார். நிசு

வேறு

706 நெறிகொண்ட குஞ்சிச் சுருள்துஞ்சி நிமிர்ந்து பொங்க
முறிகொண்ட கண்ணிக் கிடைமொய்யொளிப் பீலி சேர்த்தி
வெறிகொண்ட முல்லைப் பிணைமீது குறிஞ்சி வெட்சி
செறிகொண்ட வண்டின் குலஞ்சீர்கொளப் பின்பு செய்து. நிஎ

707 முன்நெற்றியின் மீது முருந்திடை வைத்த குன்றி
தன்னிற்புரி கொண்ட மயிர்க்கயி றுரச் சாத்தி
மின்னில்திகழ் சங்கு விளங்குவெண் தோடு காதின்
மன்னிப்புடை நின்றன மாமதி போல வைக. நிஅ

708 கண்டத்திடை வெண்கவ டிக்கதிர் மாலை சேரக்
கொண்டக்கொடு பன்மணி கோத்திடை ஏனக் கோடு
துண்டப்பிறை போல்வன தூங்கிட வேங்கை வன்தோல்
தண்டைச்செயல் பொங்கிய சன்னவீ ரந்த யங்க. நிஉ

709 மார்பிற்சிறு தந்த மணித்திரள் மாலை தாழத்
தாரிற்பொலி தோள்வல யங்கள் தழைத்து மின்னக்

பா. வே. 1. கூய்ச.
2 கொண்டு நின்ற.
3 பிறக்கான்.

சேர்விற்பொலி கங்கணம் மீது திகழ்ந்த முன்கைக்
கார்விற்செறி நாண்எறி கைச்செறி கட்டி கட்டி. கூ0

710 அரையிற்சர ணத்துரி ஆடையின் மீது பௌவத்
திரையிற்படு வெள்ளல கார்த்து விளிம்பு சேர்த்தி
நிரையிற்பொலி நீளுடை தோல்சுரி கைப்பு றஞ்சூழ்
விரையில்துவர் வார்விசி போக்கி அமைத்து வீக்கி. கூக

711 வீரக்கழல் காலின் விளங்க அணிந்து பாதம்
சேரத்தொடு நீடு செருப்பு விருப்பு வாய்ப்பப்
பாரப்பெரு வில்வலங் கொண்டு பணிந்து திண்ணன்
சாரத்திருத் தாள்மடித் தேற்றி வியந்து தாங்கி. கூஉ

712 அங்கப்பொழு திற்புவ னத்திடர் வாங்க ஓங்கித்
துங்கப்பெரு மாமழை போன்று துண்ணென் றெழிப்ப
வெங்கட்சின நீடு விலங்கு விலங்கி நீங்கச்
செங்கைத்தலத் தால்தட விச்சிறு நாண்எறிந்தார். கூங

713 பல்வேறு வாளி புதைபார்த் துடன்போத எவி
வில்வேட ராயத் துடிமேவி ஒலிக்கு முன்றில்
சொல்வேறு வாழ்த்துத் திசைதோறுந் துதைந்து விம்ம
வல்லேறு போல்வார் அடல்வாளி தெரிந்து நின்றார். கூச

714 மானச்சிலை வேடர் மருங்கு நெருங்கு போதில்
பானற்குல மாமல ரிற்படர் சோதி யார்முன்
தேன்நல்தசை தேறல் சருப்பொரி மற்று முள்ள
கானப்பலி நேர்கட வுட்பொறை யாட்டி வந்தாள். கூரு

715 நின்றெங்கு மொய்க்குஞ் சினவேடர்கள் நீங்கப் புக்குச்
சென்றங்கு வள்ளல் திருநெற் றியிற்சேடை சாத்தி
"உன்தந்தை தந்தைக்கும் இந்நன்மைகள் உள்ள வல்ல
நன்றும்பெரி துன்விறல் நம்மள வன்(று) இதெ"ன்றாள். கூசூ

716 அப்பெற்றியில் வாழ்த்தும் அணங்குடை யாட்டி தன்னைச்
செப்பற்கரி தாய கிறப்பெதிர் செய்து போக்கிக்
கைப்பற்றிய திண்சிலைக் கார்மழை மேகம் என்ன
மெய்ப்பொற் புடைவேட் டையின்மேற்கொண் டெழுந்து போந்தார்.

வேறு

717 தாளில்வாழ் செருப்பர்தோல் தழைத்தநீடு தாளையார்
வாளியோடு சாபம்மேவு கையர்வெய்ய வன்கணர்
ஆளியேறு போலஏகும் அண்ணலார்முன் எண்ணிலார்
மீளிவேடர் நீடுகூட்டம் மிக்குமேல் எழுந்ததே. கூஅ

பா-செ-1: 1. மரஞ்சாடி.
2. தினைவேடரை நீக்கி

718 வன்தொடர்ப்பி ணித்தபாசம் வன்கைமள்ளர் கொள்ளவே
வென்றிமங்கை வேடர்வில்லின் மீதுமேவு பாதம்முன்
சென்றுமீளு மாறுபோல்வ செய்யநாவின் வாயவாய்
ஒன்றுமொடொன் றுநேர்படாமல் ஓடுநாய்கள் மாடெலாம். சுகூ

719 போர்வலைச் சிலைத்தொழிற் புறத்திலே விளைப்பவச்
சார்வலைத் தொடக்கறுக்க ஏகும்ஐயர் தம்முனே
கார்வலைப் படுத்தகுன்று கானமா வளைக்கநீள்
வார்வலைத் திறஞ்சுமந்து வந்தவெற்பர் முந்தினர். எ0

720 நண்ணிமா மறைக்குலங்கள் நாடவென்று நீடும்அத்
தண்கிலா அரும்புகொன்றை தங்குவேணி யார்தமைக்
கண்ணில்நீடு பார்வையொன்று கொண்டுகாணும் அன்பர்முன்
எண்ணில்பார்வை கொண்டுவேடர் எம்மருங்கும் ஏகினர். எக

721 கோடுமுன் பொலிக்கவும் குறுங்கணை குளிக்குலம்
மாடுசென் றிசைப்பவும் மருங்குபம்பை கொட்டவும்
சேடுகொண்ட கைவினிச் சிறந்தஓசை செல்லவும்
காடுகொண் டெழுந்தவேடு கைவளைந்து சென்றதே. எஉ

722 நெருங்குபைந் தருக்குலங்கள் நீடுகாடு கூடநேர்
வருங்கருஞ் சிலைத்தடக்கை மானவேடர் சேனைதான்
பொருந்தடந் திரைக்கடற் பரப்பிடைப் புகும்பெருங்
கருந்தரங்க நீள்புனற் களிந்திகன்னி ஒத்ததே. எ

723 தேன்திசைப் பொருப்புடன் செறிந்தகானின் மானினம்
பன்றிவெம் மரைக்கணங்கள் ஆதியான பல்குலம்
துன்றிநின்ற என்றடிச் சுவட்டின்ஒற்றர் சொல்லவே
வன்தடக்கை வார்கொடெம் மருங்கும்வேடர் ஓடினர்.

724 ஓடியெறிந்து வாரொழுக்கி யோசனைப் பரப்பெலாம்
நெடியதிண் வலைத்தொடக்கு நீளிடைப் பிணித்துநேர்
கடிகொளப் பரந்தகாடு காவல்செய் தமைத்தபின்
செடிதலைச் சிலைக்கைவேடர் திண்ணனார்முன் நண்ணினார்

725 வெஞ்சிலைக்கை வீரரும்மே வேடரோடு கூடிமுன்
மஞ்சலைக்கு மாமலைச் சரிப்புறத்து வந்தமா
அஞ்சுவித் தடர்க்குநாய்கள் அட்டமாக விட்டுநீள்
செஞ்சரத்தி னேடுசூழல் செய்தகானுள் எய்தினர்.

726 வெய்யமா எழுப்பஎவி வெற்பராயம் ஓடிநேர்
எய்யும்வாளி முன்தெரிந்து கொண்டுசெல்ல எங்கணும்
மொய்குரல் துடிக்குலங்கள் பம்பைமுன் சிலைத்தெ
கைவினித் ததிர்த்துமா எழுப்பினார்கள் காணலா

பா. வே. 1. சென்று நீரு
2. அடர்ந்து
3. வேடர்க்கை

727 ஏனமோடு மானினங்கள் எண்குதிண் கலைக்குலம்
கானமேதி யானைவெம் புலிக்கணங்கள் கான்மரை
ஆனமா அநேகமா வெருண்டெழுந்து பாயமுன்
சேனைவேடர் மேலடர்ந்து சீறிஅம்பில் நூறினர். எஅ

வேறு

728 தாள்அறுவன இடைதுணிவன தலைதுமிவன கலைமான்
வாளிகளொடு குடல்சொரிதர மறிவனசில மரைமா
நீள்உடல்விடு சரம்உருவிட நிமிர்வனமிடை கடமா
மீளிகொள்கணை படும்உடலெழ விழுவனபல உழையே. எக

729 வெங்கணைபடு பிடர்கிழிபட விசைஉருவிய கயவாய்
செங்கனல்விட அதனெடுகணை செறியமுன்இரு கருமா
அங்கெழுசிரம் உருவியபொழு தடலெயிறுற அதனைப்
பொங்கியசின மொடுகவர்வன புரைவனசில புலிகள். அ0

730 பின்மறவர்கள் விடுபகழிகள் பிறகு(உ)றவயி றிடைபோய்
முன்நடுமுக மிசையுருவிட முடுகியவிசை யுடன்அக்
கொன்முனையடு சரமினமெதிர் குறுகியமுகம் உருவத்
தன்னெதிரெதிர் பொருவனநிகர் தலையனபல கலைகள். அக

731 கருவரைஒரு தனுவொடுவிசை கடுகியதென மூனைநேர்
குரிசில்முன்விடும் அடுசரம்எதிர் கொலையில்பொழு தவையே
பொருகரியொடு சினஅரியிடை புரையறவுடல் புகலால்
வரும்இரவொடு பகல்அனைவன எனமிடையும்அவ் வனமே. அஉ

732 நீள்விடைவிசை மிசைகுதிகொள நெடுமுகில்தொட எழுமான்
தாளுறுகழல்மறவர்கள்விடு சரம்நிலைதொடர் வனதாம்
வாளவிடுகதிர் மதிபிரிவுற வருமெனவிழும் உழையைக்
கோளொடுபயில் பணிதொட்நிலை கொளவுளஎதிர் பலவே. அங

733 கடல்விரிபுனல் கொளவிழுவன கருமுகிலென நிரையே
படர்வொடுசெறி தழைபொதுளிய பயில்புதல்வனம் அதன்மேல்
அடலுறுசரம் உடலுறவரை யடியிடம்அல மரலால்
மிடைகருமரை கரடிகளொடு விழுவனவன மேதி. அச

734 மலைதுறைகளின் வெருவரலொடு பயில்வலியற துழைமா
உலைமொடுபடர் வனதகையுற உறுசினமொடு கவர்நாய்
நிலையிருவினவலியிடை நிலைசுழல்பவர் நெறிசேர்
புலனுமன னிடைதடைசெய்த போரிகளின்அள வுளவே. அரு

735 துடியடியன மடிசெவியன துறுகயமுனி தொடரார்
வெடிபடவிரி றிறகுருளைகள் மிசைபடுகொலை விரவார்

பா. பே 1 அழகு நூற்றிரு
2. பதிப்பிலுள்ள

அடிதளர்வுறு கருவுடையன அணைவுறுபிணை அலையார்
கொடியனஎதிர் முடுகியும்உறு கொலைபுரிசிலை மறவோர். அசு

736 இவ்வகைவரு கொலைமறவினை எதிர்நிகழ்வுழி அதிரக்
கைவரைகளும் வெருவுறமிடை கான்எழுவதொர் ஏனம்
பெய்கருமுகி லெனஇடியொடு பிதிர்கனல்விழி சிதறி
மொய்வலிகளை அறநிமிர்வுற முடுகியகடு விசையில். அள

737 போமதுதனை அடுதிறலொடு பொருமறவர்கள் அரியே
தாமவர்தொடர் வுறும்விசையுடன் அடிவழிசெலும் அளவில்
தாமொருவரும் அறிகிலரவர் தனிதொடர்வுழி அதன்மேல்
ஏமுனைஅடு சிலைவிடலைகள் இருவர்கள்அடி பிரியார். அஅ

738 நாடியகழல் வயவர்களவர் நாணனும்நெடு வரிவில்
காடனும்எனும் இருவரும்மலை காவலொடு கடிதில்
கூடினர்விடு பகழிகளொடு கொலைஞமலிகள் வழுவி
நீடியசரி படர்வதுதரு நீழலின்விசை கேழல். அக

739 குன்றியைநிக ரமுன்செறளரி கொடுவிழிஇடி சூல்நீள்
பன்றியும்அடல் வன்திறலொடு படர்நெறிநெடி தோடித்
துன்றியதொரு குன்றடிவரை சுலவியநெறி சூழல்
சென்றதனிடை நின்றதுவழி தெருமரமரம் நிரையில். கூ0

740 அத்தருவளர் சுழலிடையடை அதன்நிலையறி பவர்முன்
கைத்தெரிகணை யினிலடுவது கருதலர்விசை கடுகி
மொய்த்தெழுசுடர் விடுசுரிகையை முனைபெறஎதிர் உருவிக்
குத்தினருடல் முறிபடவெறி குலம்றவர்கள் தலைவர். கூக

வேறு

741 வேடர்தங் கரிய செங்கண் வில்லியார் விசையில் குத்த
மாடிரு துணியாய் வீழ்ந்த வராகத்தைக் கண்டு நாணன்
" காடனே ! இதன்பின் இன்று காதங்கள் பலவந் தெய்த்தோம்
ஆடவன் கொன்றுன் அச்சோ" என்(று)அவர் அடியில் தாழ்ந்தார். கூஉ

742 மற்றவர் திண்ண னுர்க்கு மொழிகின்றுர் "வழிவந் தாற்ற
உற்றது பசிவந் தெம்மை உதவிய இதனைக் காய்ச்சிச்
சற்றுநீ அருந்தி யாமும் தின்றுதண் ணீர்கு டித்து
வெற்றிகொள் வேட்டைக் காடு குறுகுவோம் மெல்ல" என்றுர். கூங

743 என்றவர் கூற நோக்கித் திண்ணனுர் "தண்ணீர் எங்கே
நன்றும்இவ் வனத்தில் உள்ள" தென்றுரை செய்ய நாணன்
"நின்றஇப் பெரிய தேக்கின் அப்புறஞ் சென்றுல் நீண்ட
குன்றினுக் கயலே ஓடுங் குளிர்ந்ததோன் முகலி" என்றுன். கூச

பா.வே.1. அரியேறுமலை.

744 பொங்கிய சினவில் வேடன் சொன்னபின் "போவோம் அங்கே
இங்கிது தன்னைக் கொண்டு போதுமின்" என்று தாமும்
அங்கது நோக்கிச் சென்றூர் காவதம் அரையில் கண்டார்
செங்கண்ஏ றுடையார் வைகுந் திருமலைச் சாரல் சோலை. கூரு

745 "நாணனே தோன்றும் குன்றில் நண்ணுவேம்" என்ன நாணன்
"காணநீ போதின் நல்ல காட்சியே காணும், இந்தச்
சேணுயர் திருக்கா ளத்தி மலைமிசை எழுந்து செவ்வே
கோணமில் குடுமித் தேவர் இருப்பர்கும் பிடலாம்" என்றான். கூசு

746 "ஆவதென் இதனைக் கண்டிங்(கு) அணைதொறும் என்மேல் பாரம்
போவதொன் றுளது போலும் ஆசையும் பொங்கி மேன்மேல்
மேவிய நெஞ்சும் வேறூர் விருப்புற விரையா நிற்கும்
தேவரங் கிருப்ப தெங்கே போ"கென்றூர் திண்ணன் ஞர்தாம். கூள

747 உரைசெய்து விரைந்து செல்ல அவர்களும் உடனே போந்து
கரைவளர் கழையின் முத்தும் கார்அகில் குறடும் சந்தும்
வரைதரு மணியும் பொன்னும் வயிரமும் புளினந் தோறும்
திரைகள்முன் திரட்டி வைத்த திருமுக லியினைச் சார்ந்தார். கூஅ

748 ஆங்கதன் கரையின் பாங்கோர் அணிநிழற் கேழல் இட்டு
வாங்குவில் காடன் தன்னை மரக்கடை தீக்கோல் பண்ணி
"ஈங்குநீ நெருப்புக் காண்பாய் இம்மலை ஏறிக் கண்டு
நாங்கள்வந் தணைவோம்" என்று நாணனும் தாமும் போந்தார். கூகூ

749 அளிமிடை கரைசூழ் சோலை அலர்கள்கொண் டணைந்த ஆற்றின்
தெளிபுனல் இழிந்து சிந்தை தெளிவுறும் திண்ண னூர்தாம்
களிவரும் மகிழ்ச்சி பொங்கக் காளத்தி கண்டு கொண்டு
குளிர்வரு நதியூ டேகிக் குலவரைச் சாரல் சேர்ந்தார். கஂஂ

750 கதிரவன் உச்சி நண்ணக் கடவுள்மால் வரையின் உச்சி
அதிர்தரும் ஓசை ஐந்தும் ஆர்கலி முழக்கங் காட்ட
"இதுஎன்கொல் நாண" என்றூர்க்(கு) "இம்மலைப் பெருந்தேன் சூழ்ந்து
மதுமலர் ஈக்கள் மொய்த்து மருங்கெழும் ஒலிகொல்" என்றான். கஂக

751 முன்புசெய் தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்ப மான
அன்பினை எடுத்துக் காட்ட அளவிலா ஆர்வம் பொங்கி
மன்பெருங் காதல் கூர வள்ளலார் மலையை நோக்கி
என்புநெக் குருகி உள்ளத் தெழுபெரு வேட்கை யோடும். கஂஉ

752 நாணனும் அன்பும் முன்பு நளிர்வரை ஏறத் தாமும்
பேணுதத் துவங்க ளென்னும் பெருகுசோ பானம் ஏறி
ஆணையாம் சிவத்தைச் சார அணைபவர் போல ஐயர்
நீள்நிலை மலையை ஏறி நேர்படச் செல்லும் போதில். கஂங

753 திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணு முன்னே
அங்கணர் கருணை கூர்ந்த அருள்திரு நோக்கம் எய்தத்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட் டகல நீங்கிப்
பொங்கிய ஒளியின் நீழல் பொருவில்அன் புருவம் ஆனார். கoச

754 மாகமார் திருக்கா ளத்தி மலைஎழு கொழுந்தா யுள்ள
ஏகநா யகரைக் கண்டார் எழுந்தபேர் உவகை அன்பின்
வேகமா னதுமேற் செல்ல மிக்கதோர் விரைவி னோடு
மோகமாய் ஓடிச் சென்றார் தழுவினர் மோந்து நின்றார். கoடு

755 நெடிதுபோ துயிர்த்து நின்று நிறைந்தெழு மயிர்க்கால் தோறும்
வடிவேலாம் புளகம் பொங்க மலர்க்கண்ணீர் அருவி பாய
"அடியனேற் கிவர்தாம் இங்கே அகப்பட்டார் அச்சோ" என்று
படியிலாப் பரிவு தானேர் படிவமாம் பரிசு தோன்ற. கoசு

756 "வெம்மறக் குலத்து வந்த வேட்டுவச் சாதி யார்போல்
கைம்மலை கரடி வேங்கை அரிதிரி கானம் தன்னில்
உம்முடன் துணையாய் உள்ளார் ஒருவரும் இன்றிக் கெட்டேன்!
இம்மலைத் தனியே நீரிங் கிருப்பதே" என்று நைந்தார். கoஎ

757 கைச்சிலை விழுந்த தோரார் காளையார் மீள "இந்தப்
பச்சிலை யோடு பூவும் பறித்திட்டு நீரும் வார்த்து
மச்சிது செய்தார் யாரோ" என்றலும் மருங்கு நின்ற
அச்சிலை நாணன் தானும் "நானிது அறிந்தேன்" என்பான். கoஅ

758 "வன்திறல் உந்தை யோடு மாவேட்டை ஆடிப் பண்டிக்
குன்றிடை வந்தோம் ஆகக் குளிர்ந்தநீர் இவரை ஆட்டி
ஒன்றிய இலைப்பூச் சூட்டி ஊட்டிமுன் பறைந்தோர் பார்ப்பான்
அன்றிது செய்தான் இன்றும் அவன்செய்த தாகும்" என்றான்.

759 உள்நிறைந் தெழுந்த தேனும் ஒழிவின்றி ஆரா அன்பில்
திண்ணனார் "திருக்கா ளத்தி நாயனார்க் கினிய செய்கை
எண்ணிய இவைகொ லாம்"என் றிதுகடைப் பிடித்துக் கொண்டவ்
அண்ணலைப் பிரிய மாட்டா அளவில்ஆ தரவு நீட. ககo

760 "இவர்தமைக் கண்டே னுக்குத் தனியராய் இருந்தார் என்னே
இவர்தமக் கழுது செய்ய இறைச்சியும் இடுவார் இல்லை
இவர்தமைப் பிரிய ஒண்ணு தென்செய்கேன் இனியான் சால
இவர்தமக் கிறைச்சி கொண்டிங் கெய்தவும் வேண்டும்" என்று. ககக

761 போதுவர் மீண்டு செல்வர் புல்லுவர் மீளப் போவர்
காதலின் நோக்கி நிற்பர் கன்றகல் புனிற்றுப் போல்வர்
"நாதனே! அழுது செய்ய நல்லமெல் இறைச்சி நானே
கோதறத் தெரிந்து வேறு கொண்டிங்கு வருவேன்" என்பார். ககஉ

762 "ஆர்தம ராக நீரிங் கிருப்பதென் றகல மாட்டேன்
நீர்பசித் திருக்க இங்கு நிற்கவுங் கில்லேன்" என்று
சோர்தரு கண்ணீர் வாரப் போய்வரத் துணிந்தா ராகி
வார்சிலை எடுத்துக் கொண்டு மலர்க்கையால் தொழுது போந்தார். ககஙு

763 முன்புநின் றரிதில் நீங்கி மொய்வரை இழிந்து நாணன்
பின்புவந் தணைய முன்னைப் பிறதுறை வேட்கை நீங்கி
அன்புகோண் டேய்ப்பச் செல்லும் அவர்திரு முகலி யாற்றின்
பொன்புனை கரையி லேறிப் புதுமலர்க் காவிற் புக்கார். ககச

764 காடனும் எதிரே சென்று தொழுது "தீக் கடைந்து வைத்தேன்
கோடுடை ஏனம் உங்கள் குறிப்படி உறுப்பை எல்லாம்
மாடுற நோக்கிக் கொள்ளும் மறித்துநாம் போகைக் கின்று
நீடநீர் தாழ்த்த தென்னே" என்றலும் நின்ற நாணன். ககஞ

765 "அங்கிவன் மலையில் தேவர் தம்மைக்கண் டணைத்துக் கொண்டு
வங்கினைப் பற்றிப் போதா வல்லுடும்(பு) என்ன நீங்கான்
இங்கும்அத் தேவர் தின்ன இறைச்சிகொண் டேகப் போந்தான்
நங்குலத் தலைமை விட்டான் நலப்பட்டான் தேவர்க்(கு)" என்றான்.

766 "என்செய்தாய் திண்ணா! நீதான் என்னமால் கொண்டாய் எங்கள்
மூன்பெரு முதலி யல்லை யோ"என, முகத்தை நோக்கார்
வன்பெரும் பன்றி தன்னை எரியினில் வதக்கி மிக்க
இன்புறு தசைகள் வெவ்வே றம்பினுல் ஈர்ந்து கொண்டு. ககள

767 கோலினிற் கோத்துக் காய்ச்சிக் கொழுந்தசை பதத்தில் வேவ
வாலிய சுவைமூன் காண்பான் வாயினில் அதுக்கிப் பார்த்துச்
சாலவும் இனிய எல்லாம் சருகிலை இணைத்த கல்லை
ஏலவேகோலிக் கூட அதன்மிசை இடுவார் ஆனார். ககஅ

768 மருங்குநின் றவர்கள் பின்னும் " மயல்மிக முதிர்ந்தான் என்னை!
அரும்பெறல் இறைச்சி காய்ச்சி அதுக்கிவே றுமிழா நின்றான்
பெரும்பசி யுடைய னேனும் பேச்சிலன் எமக்கும் பேறு
தரும்பரி சுணரான் மற்றைத் தசைபுறத் தெறியா நின்றான்." ககக

769 "தேவுமால் கொண்டான் இந்தத் திண்ணன்மற் றிதனைத் தீர்க்கல்
ஆவதொன் றறியோம் தேவ ராட்டியை நாக ணோடு
மேவினாங் கொணர்ந்து தீர்க்க வேண்டும்அவ் வேட்டைக் கானில்
ஏவல்ஆட் களையுங் கொண்டு போதும்"என் றெண்ணிப் போனார். கஉ0

770 கானவர் போன தோரார் கடிதினில் கல்லி யின்கண்
ஊனமு தமைத்துக் கொண்டு மஞ்சனம் ஆட்ட உன்னி
மாநதி நன்னீர் தூய வாயினில் கொண்டு கொய்த
தூநறும் பள்ளித் தாமம் குஞ்சிமேல் துதையக் கொண்டார். கஉக

பா.வே. 1. தீவர்க்கினம்.
2. தீலிக் கூட்டி.

771 தனுஒரு கையில் வெய்ய சரத்துடன் தாங்கிக் கல்லைப்
புனிதமெல் இறைச்சி நல்ல போனகம் ஒருகை ஏந்தி
"இனியஎம் பிரானார் சாலப் பசிப்பர்"என் றிரங்கி ஏங்கி
நனிவிரைந் திறைவர் வெற்பை நண்ணினார் திண்ண னார்தாம். கூஉ

772 இளைத்தனர் நாய னாரென் றீண்டச்சென் றெய்தி வெற்பின்
முளைத்தெழு முதலைக் கண்டு முடிமிசை மலரைக் காலில்
வளைத்தபோன் சேரப்பால் மாற்றி வாயின்மஞ் சனநீர் தன்னை
விளைத்தஅன் புமிழ்வார் போல விமலனார் முடிமேல் விட்டார். கூஉ

773 தலைமிசைச் சுமந்த பள்ளித் தாமத்தைத் தடங்கா ளத்தி
மலைமிசைத் தம்பி ரானார் முடிமிசை வணங்கிச் சாத்திச்
சிலைமிசைப் பொலிந்த செங்கைத் திண்ணனார் சேர்த்த கல்லை
இலைமிசைப் படைத்த ஊனின் திருவமு தெதிரே வைத்து. கூச

774 "கோழுவிய தசைகள் எல்லாங் கோலினில் தெரிந்து கோத்தங்(கு)
அழலுறு பதத்திற் காய்ச்சிப் பல்லினல் அதுக்கி நாவில்
பழகிய இனிமை பார்த்துப் படைத்தஇவ் இறைச்சி சால
அழகிது நாய னீரே அமுதுசெய் தருளும்" என்றார். கூடு

775 அன்னஇம் மொழிகள் சொல்லி அமுதுசெய் வித்த வேடர்
மன்னனார், "திருக்கா ளத்தி மலையினார்க் கினிய நல்லான்
இன்னமும் வேண்டும்" என்னும் எழுபெருங் காதல் கண்டு
பன்னெடுங் கரங்கள் கூப்பிப் பகலவன் மலையில் தாழ்ந்தான். கூசு

776 அவ்வழி அந்தி மாலை அணைதலும் "இரவு சேரும்
வெவ்விலங் குள"என் றஞ்சி மெய்ம்மையின் வேறு கொள்ளாச்
செவ்விய அன்பு தாங்கித் திருக்கையில் சிலையும் தாங்கி
மைவ்வரை என்ன ஐயர் மருங்குறின் றகலா நின்றார். கூஎ

777 சார்வருந் தவங்கள் செய்து முனிவரும் அமரர் தாமும்
கார்வரை அடவி சேர்ந்தும் காணுதற் கரியார் தம்மை
ஆர்வம்முன் பெருக ஆரா அன்பினிற் கண்டு கொண்டே
நேர்பேற நோக்கி நின்றார் நீளிருள் நீங்க நின்றார். கூஅ

778 கழைசொரி தரளக் குன்றின் கதிர்நில வொருபால் பொங்க
முழையர(வு) உமிழ்ந்த செய்ய மணிவெயில் ஒருபால் மொய்ப்பத்
தழைகதிர்ப் பரிதி யோடுஞ் சந்திரன் தலைஇ வாவில்
குழையணி காதர் வெற்பைக் கும்பிடச் சென்றால் ஒக்கும். கூக

779 விரவுபன் மணிகள் கான்ற விரிகதிர்ப் படலை பொங்க
மரகதம் ஒளிகொள் நீல மணிகளும் இமைக்குஞ் சோதி,
பொரஇரு சுடரைக் கஞ்சிப் போயின புடைகள் தோறும்
இரவிருள் ஒதுங்கி னலே போன்றுள தெங்கும் எங்கும். கஙூ

எ பா. பே. வெர்ப.

780 செந்தழல் ஒளியிற் பொங்கும் தீபமா மரங்க ளாலும்
மந்திகள் முழையில் வைத்தி மணிவிளக் கோளிக ளாலும்
ஐந்தும்ஆ றுடக்கி யுள்ளார் அரும்பெருஞ் சோதி யாலும்
எந்தையார் திருக்கா ளத்தி மலையினில் இரவோன் றில்லை. கஎக

781 வருங்கறைப் பொழுது நீங்கி மல்கிய யாமஞ் சென்று
சுருங்கிட அறிந்த புள்ளின் சூழ்நிலம் போசை கேட்டுக்
கருங்கடல் என்ன நின்று கண்துயி லாத வீரர்
அரும்பெறல் தம்பி ரானுர்க் கமுதுகொண் டணைய வேண்டி. கஎஉ

782 ஏறுகாற் பன்றி யோடும் இருங்கலை புனமான் மற்றும்
வேறுவே றினங்கள் வேட்டை விளைத்தொழில் விரகி னலே
ஊறுசெய் காலம் சிந்தித் துருமிகத் தெரியாப் போதின்
மாறடு சிலையுங் கொண்டு வள்ளலைத் தொழுது போந்தார். கஎங

வேறு

783 மோய்காட்டும் இருள்வாங்கி முகங்காட்டும் தேர்இரவி
மெய்காட்டும் அன்புடைய வில்லியார் தனிவேட்டை
எய்காட்டின் மாவளைக்க இட்டகருந் திரைஎடுத்துக்
கைகாட்டு வான்போலக் கதிர்காட்டி எழும்போதில். கஎச

784 எய்தியசீர் ஆகமத்தில் இயம்பியபூ சனைக்கேற்பக்
கொய்தமல ரும்புனலும் முதலான கொண்டணைந்தார்
மைதழையுங் கண்டத்து மலைமருந்தை வழிபாடு
செய்துவருந் தவமுடைய முனிவர்சிவ கோசரியார். கஎடு

785 வந்துதிரு மலையின்கண் வானவர்நா யகர்மருங்கு
சிந்தைநிய மத்தோடுஞ் செல்கின்றூர் திருமுன்பு
வெந்தஇறைச் சியும்எலும்பும் கண்டகல மிதித்தோடி
"இந்தஅனு சிதங்கெட்டேன் யார்செய்தார்" என்றழிவார். கஎசு

786 "மேவநோ வாஅஞ்சா வேடுவரே இதுசெய்தார்
தேவதே வேசனே! திருமுன்பே இதுசெய்து
போவதே இவ்வண்ணம் புகுதரீர் திருவுள்ளம்
ஆவதே" எனப்பதறி அழுதுவிழுந் தலமந்தார். கஎஎ

787 "பொருப்பில்எழுஞ் சுடர்க்கொழுந்தின் பூசனையும் தாழ்க்கநான்
இருப்பதினி என்"னென்றவ் இறைச்சிஎலும் புடன்இலையும்
செருப்படியும் நாயடியும் திருவலகால் மாற்றியபின்
விருப்பினெடுந் திருமுகலிப் புனல்மூழ்கி விரைந்தணைந்தார்.

788 பழுதுபுகுந் ததுதீரப் பவித்திரமாம் செயல்புரிந்து
தொழுதுபெறு வன்கொண்டு தூயபூ சனைதொடங்கி

பா. பே. 1. மணியாளினைளக் கருதாமே.

வழுவில்திரு மஞ்சனமே முதலாக வரும்பூசை
முழுதுமுறை மையின்முடித்து முதல்வனார் கழல்பணிந்தார். கஙூகூ

789 பணிந்தெழுந்து தனிமுதலாம் பரனென்று பன்முறையால்
துணிந்தமறை மொழியாலே துதிசெய்து சுடர்த்திங்கள்
அணிந்தசடை முடிக்கற்றை அங்கணரை விடைகொண்டு
தணிந்தமனத் திருமுனிவர் தபோவனத்தி னிடைச்சார்ந்தார். கசO

790 இவ்வண்ணம் பெருமுனிவர் ஏகினார் இனிஇப்பால்
மைவண்ணக் கருங்குஞ்சி வனவேடர் பெருமானார்
கைவண்ணச் சிலைவீரத்துக் கான்வேட்டை தனியாடிச்
செய்வண்ணத் திறம்மொழிவேன் தீவினையின் திறம்ஒழிவேன். கசக

791 திருமலையின் புறம்போன திண்ணனார் செறிதுறுகல்
பெருமலைக ளிடைச்சரிவில் பெரும்பன்றி புனம்மேய்ந்து
வருவனவும் துணிபடுத்து மானினங்கள் கானிடைநின்
றெருவழிச்சென் றேறுதுறை ஒளிகின்று கொன்றருளி. கசஉ

792 பயில்விளியால் கலிஅழைத்துப் பாடுபெற ஊடுருவும்
அயில்முகவெங் கணைபோக்கி அடியொற்றி மரையினங்கள்
துயிலிடையிற் கிடையெய்து தொடர்ந்துகடை மைகளெய்து
வெயில்படுவெங் கதிர்முதிரத் தனிவேட்டை வினைமுடித்தார். கசஙூ

793 பட்டவன விலங்கெல்லாம் படர்வனத்தில் ஒருசூழல்
இட்டருகு தீக்கடைகோல் இருஞ்சுரிகை தனையுருவி
வெட்டிநறுங் கோல்தேனும் மிகமுறித்துத் தேக்கிலையால்
வட்டமுறு பெருங்கல்லே மருங்குபுடை படஅமைத்தார். கசச

794 இந்தனத்தை முறித்தடுக்கி எரிகடையும் அரணியினில்
வெந்தழலைப் பிறப்பித்து மிகவளர்த்து மிருகங்கள்
கொந்தியில் அலகம்பால் குட்டமிட்டுக் கொழுப்பரிந்து
வந்தனகொண் டெழுந்தழலில் வக்குவன வக்குவித்து. கசடு

795 வாயம்பால் அழிப்பதுவும் வகுப்பதுவும் செய்தவற்றின்
ஆயஉறுப் பிறைச்சியெலாம் அரிந்தொருகல் லேயில்இட்டுக்
காயநெடுங் கோல்கோத்துக் கனலின்கண் உறக்காய்ச்சித்
தூயதிரு அமுதமைக்கச் சுவைகாணல் உறுகின்றார். கசசு

796 எண்ணிறந்த கடவுளருக் கிடும்உணவு கொண்டிட்டும்
வண்ணஎரி வாயின்கண் வைத்ததெனக் காளத்தி
அண்ணலார்க் காம்பரிசு தாம்சோதித் தமைப்பார்போல்
திண்ணனார் திருவாயில் அமைத்தார்ஊன் திருவமுது. கசஎ

பா.வே-1 கிட் டமிருக்.

797 நல்லபத முறவெந்து நாவின்கண் இடும்இறைச்சி
கல்லியினிற் படைத்துத்தேன் பிழிந்துகலந் ததுகொண்டு
வல்விரைந்து திருப்பள்ளித் தாமமுந்தூய் மஞ்சனமும்
ஒல்லையினின் முன்புபோல் உடன்கொண்டு வந்தணைந்தார். கசஅ

798 வந்துதிருக் காளத்தி மலையேறி வனசரர்கள்
தந்தலைவ ரிமையோர் தலைவனுர் தமையெய்தி
அந்தணனுர் பூசையினை முன்புபோல் அகற்றியபின்
முந்தைமுறை தம்முடைய பூசனையின் செயல்முடிப்பார். கசக

799 ஊன்அமுது கல்லியுடன் வைத்"திதுமுன் னியின்நன்ரு
ஏனமொடு மான்கலைகள் மரைகடமை இவையிற்றில்
ஆனவுறுப் பிறைச்சியமு தடியேனும் சுவைகண்டேன்
தேனும்உடன் கலந்ததிது தித்திக்கும்" எனமொழிந்தார். கஙo

800 இப்பரிசு திருவமுது செய்வித்துத் தம்முடைய
ஒப்பரிய பூசனைசெய் தன்நெறியில் ஒழுகுவார்
எப்பொழுதும் மேன்மேல்வந் தெழும்அன்பால் காளத்தி
அப்பர்எதிர் அல்லுறங்கார் பகல்வேட்டை ஆடுவார். கஙக

801 மாமுனிவர் நாள்தோறும் வந்தணைந்து வனவேந்தர்
தாம்முயலும் பூசனைக்குச் சாலமிகத் தளர்வெய்தித்
தீமையென அதுநீக்கிச் செப்பியஆ கமவிதியால்
ஆம்முறையில் அர்ச்சனைசெய் தன்நெறியில் ஒழுகுவசால். கஙஉ

802 நாணனெடு காடனும்போய் நாகனுக்குச் சொல்லியபின்
ஊணும்உறக் கமும்இன்றி அணங்குறைவா னோயுங்கொண்டு
பேணும்மக னர்தம்பால் வந்தெல்லாம் பேதித்துக்
காணும்நெறி தங்கள்குறி வாராமல் கைவிட்டார். கஙங

803 முன்புதிருக் காளத்தி முதல்வனுர் அருள்நோக்கால்
இன்புறுவே தகத்திரும்பு பொன்னுனுற் போல்யாக்கைத்
தன்பரிசும் வினைஇரண்டும் சாரும்மல மூன்றும்அற
அன்புபிழம் பாய்த்திரிவார் அவர்கருத்தின் அளவினரோ. கஙச

804 அந்நிலையில் அன்பனுர் அறிந்தநெறி பூசிப்ப
மன்னியஆ கமப்படியால் மாமுனிவர் அருச்சித்" திங்
கென்னுடைய நாயகனே! இதுசெய்தார் தமைக்காணேன்
உன்னுடைய திருவருளால் ஒழித்தருள வேண்டும்"என. கஙஙு

805 அன்றிரவு கனவின்கண் அருள்முனிவர் தம்பாலே
மின்திகழுஞ் சடைமவுலி வேதியர்தாம் எழுந்தருளி
"வன்திறல்வே டுவன்என்று மற்றவனை நீநினையேல்
நன்றவன்தன் செயல்தன்னை நாமுரைப்பக் கேள்"என்று. கஙசு

பா.வே.1. வேடர்: வனசரர்கள்.

806. "அவனுடைய வடிவேல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவேல்லாம் நமைஅறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாம்என்றும்
அவனுடைய நிலை இவ்வா றறிநீ"என் றருள்செய்தார். கருள

807 "பொருப்பினில்வந் தவன்செய்யும் பூசனைக்கு முன்பென்மேல்
அருப்புறுமென் மலர்முன்னே அவைநீக்கும் ஆதரவால்
விருப்புறும்அன் பெனும்வெள்ளக் கால்பெருகிற் றெனவீழ்ந்த
செருப்படிஅவ் இளம்பருவச் சேயடியிற் சிறப்புடைத்தால்." கருஅ

808 "உருகியஅன் பொழிவின்றி நிறைந்தஅவன் உருவென்னும்
பெருகியகொள் கலமுகத்தில் பிறங்கியினி தொழுகுதலால்
ஒருமுனிவன் செவிஉமிழும் உயர்கங்கை முதல்தீர்த்தப்
பொருபுனலின் எனக்கவன்தன் வாயுமிழும் புனல்புனிதம்." கருக

809 "இம்மலைவந் தெனையடைந்த கானவன்தன் இயல்பாலே
மெய்ம்மலரும் அன்புமேல் விரிந்தனபோல் விழுதலால்
செம்மலர்மேல் அயனெடுமால் முதல்தேவர் வந்துபுனை
எம்மலரும் அவன்தலையால் இடுமலர்போல் எனக்கொவ்வா." கசுO

810 "வெய்யகனற் பதங்கொள்ள வெந்துளதோ எனும்அன்பால்
நையும்மனத் தினிமையினில் நையமிக மென்றிடலால்
செய்யுமறை வேள்வியோர் முன்புதருந் திருந்தவியில்
எய்யும்வரிச் சிலையவன்தான் இட்டஊன் எனக்கினிய." கசுக

811 "மன்பெருமா மறைமொழிகள் மாமுனிவர் மகிழ்ந்துரைக்கும்
இன்பமொழித் தோத்திரங்கள் மந்திரங்கள் யாவையினும்
மூன்பிருந்து மற்றவன்தன் முகம்மலர அகம்நெகிழ
அன்பில்நினைந் தெனையல்லால் அறிவுறு மொழிநல்ல." கசுஉ

812 "உனக்கவன்தன் செயல்காட்ட நானேநீ ஒளித்திருந்தால்
எனக்கவன்தன் பரிவிருக்கும் பரிசெல்லாங் காண்கின்றாய்
மனக்கவலை ஒழி"யென்று மறைமுனிவர்க் கருள்செய்து
புனற்சடிலத் திருமுடியார் எழுந்தருளிப் போயினார். கசுங

813 கனவுநிலை நீங்கியபின் விழித்துணர்ந்து கங்குலிடைப்
புனைதவத்து மாமுனிவர் புலர்வளவுங் கண்துயிலார்
மனமுறுமற் புதமாகி வரும்பயமும் உடனுகித்
தூனைபுரவித் தனித்தேர்மேல் தோன்றுவான் கதிர்தோன்ற. கசுச

814 முன்னைநாள் போல்வந்து திருமுகலிப் புனல்மூழ்கிப்
பன்முறையும் தம்பிரான் அருள்செய்த படிநினைந்து
மன்னுதிருக் காளத்தி மலைவந்தி முன்புபோல்
பிஞ்ஞகனைப் பூசித்துப் பின்பாக ஒளித்திருந்தார். கசுஞ

பா. பே.1. தூனைபுரவி.

வேறு

815 கருமுகில் என்ன நின்ற கண்படா வில்லி யார்தாம்
வருமுறை ஆரும் நாளில் வரும்இர வொழிந்த காலே
அருமறை முனிவ னுர்வந் தணைவதன் முன்பு போகித்
தருமுறை முன்பு போலத் தனிப்பெரு வேட்டை யாடி.. கசுசு

816 மாறில்ஊன் அமுதும் நல்ல மஞ்சனப் புனலும் சென்னி
ஏறுகாண் மலரும் ஈவவ்வே றியல்பினில் அமைத்துக் கொண்டு
தேறுவார்க் கமுத மான செல்வனூர் திருக்கா ளத்தி
ஆறுசேர் சடையார் தம்மை அணுகவந் தணையா நின்றார். கசுள

817 "இத்தனை பொழுது தாழ்த்தேன்" எனவிரைந் தேகு வார்முன்
மொய்த்தபல் சகுனம் எல்லாம் முறைமுறை தீங்கு செய்ய
"இத்தகு தீய புட்கள் ஈண்டமுன் உதிரங் காட்டும்,
அத்தனுக் கென்கொல் கெட்டேன் அடுத்ததென்" றணையும் போதில்.

818 அண்ணலார் திருக்கா ளத்தி அடிகளார் முனிவ னுர்க்குத்
திண்ணனூர் பரிவு காட்டத் திருநய னத்தில் ஒன்று
துண்ணென உதிரம் பாய இருந்தனர் தூரத் தேஅவ்
வண்ணவெஞ் சிலையார் கண்டு வல்விரைந் தோடி வந்தார். கசுக

819 வந்தவர் குருதி கண்டார் மயங்கினர் வாயில் நன்னீர்
சிந்திடக் கையில் ஊனுஞ் சிலையுடன் சிதறி வீழக்
கொந்தலர் பள்ளித் தாமம் குஞ்சிநின் றலைந்து சோரப்
பைந்தழை அலங்கல் மார்பர் நிலத்திடைப் பதைத்து வீழ்ந்தார். களo

820 விழுந்தவர் எழுந்து சென்று துடைத்தனர் குருதி வீழ்வ
தொழிந்திடக் காணூர் செய்வ தறிந்திலர் உயிர்த்து மீள
அழிந்துபோய் வீழ்ந்தார் தேறி "யாரிது செய்தார்" என்னு
எழுந்தனர் திசைகள் எங்கும் பார்த்தனர் எடுத்தார் வில்லும். களக

821 வாளியுந் தெரிந்து கொண்"டிடம் மலையிடை எனக்கு மாறு
மீளிவெம் மறவர் செய்தார் உளர்கொலோ விலங்கின் சாதி
ஆளிமுன் னுகி யுள்ள விளைத்தவோ அறியேன்" என்று
நீளிருங் குன்றைச் சாரல் நெடிதிடை நேடிச் சென்றார். களஉ

822 வேடரைக் காணூர் தீய விலங்குகள் மருங்கும் எங்கும்
நாடியுங் காணூர் மீண்டும் நாயனூர் தம்பால் வந்து
நீடிய் சோகத் தோடு நிறைமலர்ப் பாதம் பற்றி
மாடுறக் கட்டிக் கொண்டு கதறினூர் கண்ணீர் வார. களங

823 "பாவியேன் கண்ட வண்ணம் பரமனூர்க் கடுத்த தென்னே
ஆவியின் இனிய எங்கள் அத்தனூர்க் கடுத்த தென்னே

பா. வே. 1. முன்னரும் பொதிந்.

மேவினர் பிரிய மாட்டா விமலனார்க் கடுத்த தென்னே
ஆவதொன் றறிகி லேன்யான் என்செய்கேன்" என்று பின்னும். களச

824 "என்செய்தால் தீரு மோதான் எம்பிரான் திறத்துத் தீங்கு
முன்செய்தார் தம்மைக் காணேன் மொய்கழல் வேடர் என்றும்
மின்செய்வார் பகழிப் புண்கள் தீர்க்குமெய்1 மருந்து தேடிப்
பொன்செய்தாழ் வரையிற் கொண்டு வருவன்நான்" என்று போனார்.

825 நினைத்தனர் வேறு வேறு நெருங்கிய வனங்கள் எங்கும்
இனத்திடைப் பிரிந்த சேங்கண் ஏறென வேருக்கோண் டெய்திப்
புனத்திடைப் பறித்துக் கொண்டு பூதநா யகன்பால் வைத்த
மனத்தினுங் கடிது வந்தம் மருந்துகள்2 பிசைந்து வார்த்தார். களசு

826 மற்றவர் பிசைந்து வார்த்த மருந்தினுல் திருக்கா ளத்திக்
கொற்றவர் கண்ணிற் புண்நீர் குறைபடா3 திழியக் கண்டும்
" இற்றையின் நிலைமைக் கென்னே " இனிச்செயல் என்று பார்ப்பார்
உற்றநோய் தீர்ப்ப தானுக் கூனெனும் உரைமுன் கண்டார். களள

827 "இதற்கினி என்கண் அம்பால் இடந்தப்பின் எந்தை யார்கண்
அதற்கிது மருந்தாய்ப் புண்ணீர் நிற்கவும் அடுக்கும்" என்று
மதர்த்தெழும் உள்ளத் தோடு மகிழ்ந்துமுன் இருந்து தங்கண்
முதற்சரம்4 அடுத்து வாங்கி முதல்வர்தங் கண்ணில் அப்ப. களஅ

828 நின்றசெங் குருதி கண்டார் நிலத்தினின் றேறப் பாய்ந்தார்
குன்றெனை5 வளர்ந்த தோள்கள் கொட்டினர் கூத்தும் ஆடி
"நன்றுநான் செய்த இந்த மதி"என நகையுந் தோன்ற
ஒன்றிய களிப்பி னுலே உன்மத்தர் போல மிக்கார். களக

829 வலத்திருக் கண்ணில் தங்கண் அப்பிய வள்ள லார்தம்
நலத்தினைப் பின்னுங் காட்ட நாயனார் மற்றைக் கண்ணில்
உலப்பில்செங் குருதி பாயக் கண்டனர் உலகில் வேடர்
குலப்பெருந் தவத்தால் வந்து கோள்கையின் உம்பர் மேலார். கஅo

830 கண்டபின் "கெட்டேன் எங்கள் காளத்தி யார்கண் ஒன்று
புண்தரு குருதி நிற்க மற்றைக்கண் குருதி பொங்கி
மண்டுமற் றிதனுக் கஞ்சேன் மருந்துகை கண்டேன் இன்னும்
உண்டொரு கண்அக் கண்ணை இடந்தப்பி ஒழிப்பேன்" என்று. கஅக

831 கண்ணுதல் கண்ணில் தங்கண் இடந்தப்பின் காணும் நேர்பா
டெண்ணுவார் தம்பி ரான்தன் திருக்கண்ணில் இடக்கால் ஊன்றி
உள்நிறை விருப்பி னேடும் ஒருதனிப் பகழிகொண்டு
திண்ணனார் கண்ணில் ஊன்றத் தரித்திலர் தேவ தேவர். கஅஉ

832 சேங்கண்வெள் விடையின் பாகர், திண்ணனார் தம்மை யாண்ட
அங்கணர், திருக்கா ளத்தி அற்புதர் திருக்கை, அன்பர்

பா. பே. 1. மருந்துநாடி 2. பிழிந்து 3. வளரும்.
4. தொடுக்கக்கண்டே 5. எடுத்து வாங்கி.
6. தாரலோடும் 7 அன்பால்.

தங்கண்முன் இடக்குங் கையைத் தடுக்கமூன் றடுக்கு நாக
கங்கணர் அமுத வாக்குக் "கண்ணப்ப நிற்க" என்றார். கஅங

633 கானவர் பெருமா னுர்தங் கண்ணிடந் தப்பும் போதும்
ஊனமு துகந்த ஐயர் உற்றுமுன் பிடிக்கும் போதும்
ஞானமா முனிவர் கண்டார் நான்முகன் முதலா யுள்ள
வானவர் வளர்பூ மாரி பொழிந்தனர் மறைகள் ஆர்ப்ப. கஅச

634 பேறினி இதன்மேல் உண்டோ பிரான்திருக் கண்ணில் வந்த
ஊறுகண் டஞ்சித் தங்கண் இடந்தப்ப உதவுங் கையை
ஏறுயர்த் தவர்தங் கையால் பிடித்துக்கொண் "டென்ன வத்தில்
மாறிலாய்! நிற்க" என்று மன்னுபேர் அருள்பு ரிந்தார். கஅஞ

635 மங்குல்வாழ் திருக்கா ளத்தி மன்னனூர் கண்ணில் புண்ணீர்
தங்கணுல் மாற்றப் பெற்ற தலைவர்தாள் தலைமேற் கொண்டே
கங்கைவாழ் சடையார் வாழுங் கடவூரில் கலய னுராம்
பொங்கிய புகழின் மிக்கார் திருத்தொண்டு புகல லுற்றேன். கஅசு

ஆ திருவிருத்தம் அஞ்சு.

குங்குலியக்கலய நாயனூர் புராணம்

636 வாய்ந்தநீர் வளத்தால் ஓங்கி மன்னிய பொன்னி நாட்டின்
ஏய்ந்தசீர் மறையோர் வாழும் எயிற்பதி எறிநீர்க் கங்கை
தோய்ந்தநீள் சடையார் பண்டு தொண்டர்மேல் வந்த கூற்றைக்
காய்ந்தசே வடியார் நீடி இருப்பது கடவூர் ஆகும். க

637 வயலெலாம் விளைசெஞ் சாலி வரம்பெலாம் விளையின் முத்தம்
அயலெலாம் வேள்விச் சாலை அணையெலாங் கழுநீர்க் கற்றை
புயலெலாங் கழுகின் காடப் புறமெலாம் அதன்சீர் போற்றல்
செயலெலாந் தொழில்கள் ஆறே செழுந்திருக் கடவூர் என்றும். உ

638 குடங்கையின் அகன்ற உண்கண் கடைசியர் குழுமி ஆடும்
இடம்படு பண்ணை தோறும் எழுவன மருதம் பாடல்
வடம்புரி முந்நூல் மார்பின் வைதிக மறையோர் செய்கைச்
சடங்குடை இடங்கள் தோறும் எழுவன சாமம் பாடல். ங

639 துங்கநீள் மருப்பின் மேதி படிந்துபால் சொரிந்த வாவிச்
செங்கயல் பாய்ந்து வாசக் கமலமும் தீம்பால் நாறும்
மங்குல்தோய் மாடச் சாலை மருங்கிறை ஒதுங்கும் மஞ்சும்
அங்கவை பொழிந்த நீரும் ஆகுதிப் புகைப்பால் நாறும். ச

பா. பே. 1. தடுக்கமுன். 2. பிடிக்கும். 3. மறுகைக்கவர்.
4. மலையன்மகள். 5. கையிய. 6. மாடச் சோலை.

8420 மருவிய திருவின் மிக்க வளம்பதி அதனில் வாழ்வார்
அருமறை முந்நூல் மார்பின் அந்தணர் கலயர் என்பார்
பெருநதி அணியும் வேணிப் பிரான்கழல் பேணி நாளும்
உருகிய அன்பு கூர்ந்த சிந்தையார் ஒழுக்கம் மிக்கார். நி

8421 பாலனும் மறையோன் பற்றப் பயங்கெடுத் தருளும் ஆற்றல்
மாலும்மான் முகனும் காணு வடிவுகொண் டெதிரே வந்து
காலனுர் உயிர்செற் றார்க்குக் கமழ்ந்தகுங் குலியத் தூபம்
சாலவே நிறைந்து விம்ம இடும்பணி தலைநின் றுள்ளார். சு

8422 கங்கைநீர் கலிக்குஞ் சென்னிக் கண்ணுதல் எம்பி ரான்குப்
பொங்குகுங் குலியத் தூபம் பொலிவுறப் போற்றிச் செல்ல
அங்கவர் அருளி னாலே வறுமைவந் தடைந்த பின்னும்
தங்கள்நா யகர்க்குத் தாம்முன் செய்பணி தவாமை உய்த்தார். எ

8423 இன்றெறி ஒழுகு நாளில் இலம்பாடு நீடு செல்ல
நன்னிலம் முற்றும் விற்றும் நாடிய அடிமை விற்றும்
பன்னெடுந் தனங்கள் மாளப் பயில்மனை வாழ்க்கை தன்னில்
மன்னிய சுற்றத் தோடு மக்களும் வருந்தி னார்கள். அ

8424 யாதொன்றும் இல்லை யாகி இருபகல் உணவு மாறிப்
பேதுறும் மைந்த ரோடும் பெருகுசுற் றத்தை நோக்கிக்
காதல்செய் மனைவி யார்தங் கணவனுர் கலய னார்கைக்
கோதில்மங் கலநூல் தாலி கொடுத்து"நெற் கொள்ளும்" என்றார். கூ

8425 அப்பொழு ததனைக் கொண்டு நெற்கொள்வான் அவரும் போக
ஒப்பில்குங் குலியங் கொண்டோர் வணிகனும் எதிர்வந் துற்றான்
" இப்பொதி என்கொல் " என்றார்க் குள்ளவா றியம்பக் கேட்டு
மூப்புரி வெண்ணூல் மார்பர் முகமலர்ந் திதனைச் சொன்னார். கo

8426 ஆறுசெஞ் சடைமேல் வைத்த அங்கணர் பூசைக் கான
நாறுகுங் குலியம் நீதேல் நான்இன்று பெற்றேன் நல்ல
பேறுமற் றிதன்மேல் உண்டோ பெருப்பேறு பெற்று வைத்து
வேறினிக் கொள்வ தென்"என் றுரைத்தெழும் விருப்பின் மிக்கார்.

8427 போன்தரத் தாரும்" என்று புகன்றிட வணிகன் தானும்
" என்தர இசைந்த " தென்னத் தாலியைக் கலயர் ஈந்தார்
அன்றவன் அதனை வாங்கி அப்பொதி கொடுப்பக் கொண்டு
நின்றிலர் விரைந்து சென்றார் நிறைந்தெழு களிப்பி னோடும். கஉ

8428 விடையவர் பீடுட் டானம் விரைந்துசென் றெய்தி என்னை
உடையவர் நம்மை யாளும் ஒருவர்தம் பண்டா ரத்தில்
அடைவுற ஒடுக்கி எல்லாம் அயர்த்தெழும் அன்பு பொங்கச்
சடையவர் மலர்த்தாள் போற்றி இருந்தனர் தமக்கொப் பில்லார். கந

பா. பே.1. மாளவர். 2. போற்ற. 3. ஈ.தே.
4 மகிழ்ந்து. 5 எம்மை.

848 அன்பர்அங் கிருப்ப நம்பர் அருளினால் அளகை வேந்தன்
தன்பெரு நிதியந் தூர்த்துத் தரணிமேல் நெருங்க எங்கும்
பொன்பயில் குவையும் நெல்லும் பொருவில்பல் வளனும் பொங்க
மன்பெருஞ் செல்வம் ஆக்கி வைத்தனன் மனையில் நீட. கச

850 மற்றவர் மனைவி யாரும் மக்களும் பகியால் வாடி
அற்றைநாள் இரவு தன்னில் அயர்வுறத் துயிலும் போதில்
நற்றவக் கோடிய னர்க்குக் கனவிடை நாதன் நல்கத்
தெற்றென உணர்ந்து செல்வங் கண்டபின் சிந்தை செய்வார். கரு

851 கோம்பனர் இல்லம் எங்கும் குறைவிலா நிறைவிற் காணும்
அம்பொனின் குவையும் நெல்லும் அரிசியும் முதலா யுள்ள
எம்பிரான் அருளாம் என்றே இருகரங் குவித்துப் போற்றித்
தம்பெருங் கணவ னர்க்குத் திருவமு தமைக்கச் சார்ந்தார். ககூ

852 காலனைக் காய்ந்த செய்ய காலனர், கலய னாரும்
ஆலும்அன் புடைய சிந்தை அடியவர் அறியும் ஆற்றல்
"சாலநீ பசித்தாய் உன்தன் தடநெடு மனையில் நண்ணிப்
பாலின்இன் அடிசில் உண்டு பருவரல் ஒழிக" என்றார். கள

853 கலியனார் அதனைக் கேளாக் கைதொழு திறைஞ்சிக் கங்கை
அலைபுனற் சென்னி யார்தம் அருள்மறுத் திருக்க அஞ்சித்
தலைமிசைப் பணிமேற் கொண்டு சங்கரன் கோயில் நின்று
மலைநிகர் மாட வீதி மருங்குதம் மனையைச் சார்ந்தார். கஅ

854 இல்லத்திற் சென்று புக்கார் இருநிதிக் குவைகள் ஆர்ந்த
செல்வத்தைக் கண்டு நின்று திருமனை யாரை நோக்கி
"வில்லொத்த நுதலாய்! இந்த விளைவெலாம் என்கொல்" என்ன
"அல்லொத்த கண்டன் எம்மான் அருள்தர வந்த" தென்றார். ககூ

855 மின்னிடை மடவார் கூற மிக்கசீர்க் கலய னார்தாம்
மன்னிய பெருஞ்செல் வத்து வளமலி சிறப்பை நோக்கி
"என்னையும் ஆளுந் தன்மைத் தெந்தைதம் பெருமான் ஈசன்
தன்னருள் இருந்த வண்ணம்" என்றுகை தலைமேற் கொண்டார். உo

856 பதுமநற் றிருவின் மிக்கார் பரிகலந் திருத்திக் கொண்டு
கதுமெனக் கணவ னைகைக் கண்ணுதற் கன்ப தோடும்
விதிமுறை தீபம் ஏந்தி மேவும்இன் அடிசில் ஊட்ட
அதுதுகர்ந் தின்பம் ஆர்ந்தார் அருமறைக் கலய னார்தாம். உக

857 ஊர்தொறும் பலிகொண் டுய்க்கும் ஒருவன தருளி னாலே
பாரினில் ஆர்ந்த செல்வம் உடையராம் பண்பில் நீடிச்
சீருடை அடிசில் நல்ல செழுங்கறி தயிர்நெய் பாலால்
ஆர்தரு காதல் கூர அடியவர்க் குதவும் நாளில். உஉ

பா. பே. 1. தன்மைக் கைம்மை.

857 செங்கண்வெள் ளேற்றின் பாகன் திருப்பனந் தாளில் மேவும்
அங்கணன் செம்மை கண்டு கும்பிட அரசன் ஆர்வம்
பொங்கித்தன் வேழம் எல்லாம் பூட்டவும் நேர்நில் லாமைக்
கங்குலும் பகலும் தீராக் கவலையுற் றழுங்கிச் செல்ல. உக

858 மன்னவன் வருத்தங் கேட்டு மாசறு புகழின் மிக்க
நன்னெறிக் கலய னார்தாம் நாதனே நேரே காணும்
அன்நெறி தலைநின் றுன்என் றாசனே விரும்பித் தாமும்
மின்னெறித் தனைய வேணி விகிர்தனே வணங்க வந்தார். உச

859 மழுவுடைச் செய்ய கையர் கோயில்கள் மருங்கு சென்று
தொழுதுபோந் தன்பி னேடுந் தொன்மறை நெறிவ ழாமை
முழுதுல கினையும் போற்ற மூன்றெரி புரப்போர் வாழும்
செழுமலர்ச் சோலை வேலித் திருப்பனந் தாளிற் சேர்ந்தார். உடி

860 காதலால் அரசன் உற்ற வருத்தமுங் களிற்றி னேடும்
தீதிலாச் சேனை செய்யுந் திருப்பணி நேர்ப டாமை
மேதினி மிசையே எய்த்து வீழ்ந்திளைப் பதுவும் நோக்கி
மாதவக் கலயர் தாமும் மனத்தினில் வருத்தம் எய்தி. உசு

861 சேனையும் ஆனை பூண்ட திரளும்எய்த் தெழாமை நோக்கி
"யானும்இவ் இளைப்புற் றெய்க்கும் இதுபெற வேண்டும்" என்று
தேனலர் கொன்றை யார்தந் திருமேனிப் பூங்கச் சேய்ந்த
மானவன் கயிறு பூண்டு கழுத்தினில் வருந்த லுற்றார். உள

862 நண்ணிய ஒருமை அன்பின் நாருறு பாசத் தாலே
திண்ணிய தொண்டர் பூட்டி இளைத்தபின் திறம்பி நிற்க
ஒண்ணுமோ கலய னார்தம் ஒருப்பாடு கண்ட போதே
அண்ணலார் நேரே நின்றார் அமரரும் விசும்பில் ஆர்த்தார். உஅ

863 பார்மிசை நெருங்க எங்கும் பரப்பினர் பயில்பூ மாரி
தேர்மலி தானை மன்னன் சேனையும் களிறும் எல்லாம்
கார்பெறு கானம் போலக் களித்தன கைகள் கூப்பி
வார்கழல் வேந்தன் தொண்டர் மலரடி தலைமேல் வைத்து. உக

864 "விண்பயில் புரங்கள் வேவ வைதிகத் தேரில் மேருத்
திண்சிலை குனிய நின்றார் செஞ்சிலை காணச் செய்தீர்
மண்பகிர்ந் தவனுங் காணா மலரடி இரண்டும் யாரே
பண்புடை அடியார் அல்லால் பரிந்துநேர் காண வல்லார்." நo

865 என்றுமெய்த் தொண்டர் தம்மை ஏத்தியங் கெம்பி ரானுக்(கு)
ஒன்றிய பணிகள் மற்றும் உள்ளன பலவுஞ் செய்து
நின்றவெண் கவிகை மன்னன் நீங்கவும் நிகரில் அன்பர்
மன்றிடை ஆடல் செய்யும் மலர்க்கழல் வாழ்த்தி வைகி. நக

பா. பே. 1. பைங்கிண் ஏவல் னைந்ரின்.
2. மண் புகந்தவனும்

867 சிலபகல் கழிந்த பின்பு திருக்கட ஊரில் நண்ணி
நிலவுதம் பணியில் தங்கி நிகழுநாள் நிகரில் காழித்
தலைவராம் பிள்ளை யாருந் தாண்டகச் சதுர ராகும்
அலர்புகழ் அரசுங் கூட அங்கெழுந் தருளக் கண்டு. ந உ

868 மாறிலா மகிழ்ச்சி பொங்க எதிர்கொண்டு மனையில் எய்தி
ஈறிலா அன்பின் மிக்கார்க் கின்னமு தேற்கும் ஆற்றல்
ஆறுநற் சுவைகள் ஓங்க அமைத்தவர் அருளே அன்றி
நாறுபூங் கொன்றை வேணி நம்பர்தம் அருளும் பெற்றார். ந ங

869 கருப்புவில் லோனைக் கூற்றைக் காய்ந்தவர் கடவூர் மன்னி
விருப்புறும் அன்பு மேன்மேல் மிக்கெழும் வேட்கை கூர
ஒருப்படும் உள்ளத் தன்மை உண்மையால் தமக்கு நேர்ந்த
திருப்பணி பலவுஞ் செய்து சிவபத நிழலிற் சேர்ந்தார். ந ச

870 தேனக்க கோதை மாதர் திருநெடுந் தாலி மாறிக்
கூனற்றண் பிறையி னார்க்குக் குங்குலி யங்கொண் டுய்த்த
பான்மைத்தின் கலய னரைப் பணிந்(து)அவர் அருளி னாலே
மானக்கஞ் சாறர் மிக்க வண்புகழ் வழுத்த லுற்றேன். ந ரு

ஆ திருவிருத்தம் அஎo.

12 மானக்கஞ்சாற நாயனார் புராணம்

871 மேலாறு செஞ்சடைமேல் வைத்தவர்தாம் விரும்பியது
நூலாறு நன்குணர்வார் தாம்பாடும் நோன்மையது
கோலாறு தேன்பொழியக் கொழுங்கனியின் சாறெழுகும்
காலாறு வயற்கரும்பின் கீழ்ச்சாறூர் கஞ்சாறூர். க

872 கண்நீலக் கடைசியர்கள் கடுங்களிமயில் பிழைத்தொதுங்கி
உள்நீர்மைப் புணர்ச்சிக்கண் உறைத்துமலர்க் கண்சிவக்கும்
தண்நீர்மென் கழுநீர்க்குத் தடஞ்சாலி தலைவணங்கும்
மண்நீர்மை நலஞ்சிறந்த வளவயல்கள் உளஅயல்கள். உ

873 புயல்காட்டுங் கூந்தல்சிறு புறங்காட்டப் புனமயிலின்
இயல்காட்டி இடைஒதுங்க இனங்காட்டும் உழத்தியர்கண்
முயல்காட்டும் மதிதோற்கும் முகங்காட்டக் கண்மூரிக்
கயல்காட்டுந் தடங்கள்பல கதிர்காட்டுந் தடம்பணைகள். ந

874 சேறணிதண் பழனவயல் செழுநெல்லின் கொழுங்கதிர்போய்
வேறருகு மிடைவேலிப் பைங்கமுகின் மிடறுரிஞ்சி

பா. தே. 1. ஆக்கிய அரசுகள்.

மாறெழுதிண் குலவேளப்ப வண்டலேதண் டலையுழுவர்
தாறரியும் நெடுங்கொடுவாள் அனையவுள தனியிடங்கள். ச

475 பாங்குமணிப் பலவெயிலும் சுலவெயிலும் உளமாடம்
ஓங்கரணி துகிற்கொடியும் நகிற்கொடியும் உளஅரங்கம்
ஓங்குநிலைத் தோரணமும் பூரணமும் பழம்உளவால்
பூங்கணைவீ திபில்அணைவோர் புலம்மறுகுஞ் சிலம்புகு. ஞ

476 மனைசாலும் நிலையறத்தின் வழிவந்து வளம்பெருகும்
வினைசாலும் உழவுதொழில் மிக்கபெருங் குடிதுவன்றிப்
புனைசாயல் மயிலனையார் நடம்புரியப் புகல்முழவம்
கனைசாறு மிடைவீதிக் கஞ்சாறு விளங்கியதால். கூ

477 அப்பதியில் குலப்பதியாய் அரசர்சே ணுபதியாம்
செப்பவருங் குடிவிளங்கத் திருஅவதா ரஞ்செய்தார்
மெய்ப்பொருளே அறிந்துணர்ந்தார் விழுமியவே ளாண்குடிமை
வைப்பனைய மேன்மையினார் மானக்கஞ் சாறனார். எ

478 பணிவுடைய வடிவுடையார் பணியினெடும் பனிமதியின்
அணிவுடைய சடைமுடியார்க் காளாகும் பதம்பெற்ற
தணிவில்பெரும் பேறுடையார் தம்பெருமான் கழல்சார்ந்த
துணிவுடைய தொண்டர்க்கே ஏவல்செயுந் தொழில்பூண்டார். அ

479 மாறில்பெருஞ் செல்வத்தின் வளம்பெருக மற்றதெலாம்
ஆறுலவுஞ் சடைக்கற்றை அந்தணர்தம் அடியாராம்
ஈறில்பெருந் திருவுடையார் உடையாரென் றியாவையும்நேர்
கூறுவதன் முன்அவர்தங் குறிப்பறிந்து கொடுத்துள்ளார். கூ

480 விரிகடல்சூழ் மண்ணுலகை விளக்கியஇத் தன்மையராம்
பெரியவர்க்கு முன்சிலநாள் பிள்ளைப்பே றின்மையினால்
அரிஅறியா மலர்க்கழல்கள் அறியாமை அறியாதார்
வருமகவு பெறற்பொருட்டு மனத்தருளால் வழுத்தினார். கo

481 குழைக்கலையும் வடிகாதில் கூத்தனார் அருளாலே
மழைக்குதவும் பெருங்கற்பின் மனைக்கிழத்தி யார்தம்பால்
இழைக்கும்வினைப் பயன்சூழ்ந்த இப்பிறவிக் கோடுஞ்சூழல்
பிழைக்குநெறி தமக்குதவப் பெண்கோடியைப் பெற்றெடுத்தார். கக

482 பிறந்தபெரு மகிழ்ச்சியினால் பெருமூதூர் களிசிறப்பச்
சிறந்தநிறை மங்கலநா ரியம்முழங்கத் தேவர்பிரான்
அறந்தலைநின் றவர்க்கெல்லாம் அளவில்வளத் தருள்பெருக்கிப்
புறந்தருவார் போற்றிசைப்பப் பொற்கொடியை வளர்க்கின்றார். கஉ

483 காப்பணியும் இளங்குழவிப் பதம்நீங்கிக் கமழ்சுரும்பின்
பூப்பயிலுஞ் சுருட்குழலும் பொலங்குழையும் உடன்தாழ

பா. பே. 1. பாங்கின் மணி. 2 ஓங்கு மணி. 4 புகல்முழவம்.
3 வழிவந்து. 5 அந்தணர்.

யாப்புறுமென் சிறுமணிமே கலையணிசிற் றுடையுடன்
கோப்பமைகிண் கிணியசையக் குறுந்தளிர்மெல் லடியொதுங்கி. கஙூ

884 பூணமலர்மென் கரங்களினுல் போற்றியதா தியர்நடுவண்
மணியகத்து மணிமுன்றில் மணற்சிற்றில் இழைத்துமணிக்
கணகுரல்தூ புரம்அலையக் கழன்முதலாப் பயின்றுமுலை
நணமுகஞ்செய் முதற்பருவம் நண்ணினளப் பெண்அமுதம். கச

885 உறுகவின்மெய்ப் புறம்பொலிய ஒளிதுசுப்பை முலைவருத்த
முறுவல்புற மலராத முகிண்முத்த நகையென்னும்
நறுமுகைமென் கொடிமருங்குல் நளிர்ச்சுருள்அந் தளிர்ச்செங்கை
மறுவில்குலக் கொழுந்தினுக்கு மணப்பருவம் வந்தணைய. கடி

886 திருமகட்கு மேல்விளங்கும் செம்மணியின் தீபம்எனும்
ஒருமகளை மன்னுலகில் ஒங்குகுல மரபினராய்க்
கருமிடற்று மறையவனுர் தமராய கழல்ஏயர்
பெருமகற்கு மகட்பேச வந்தணைந்தார் பெருமுதியோர். கசு

887 வந்தமூ தறிவோரை மானக்கஞ் சாறனுர்
முந்தைமுறை மையின்விரும்பி மொழிந்தமணத் திறங்கேட்டே
"எந்தமது மரபினுக்குத் தரும்பரிசால் ஏயும்"எனச்
சிந்தைமகிழ் வுறவுரைத்து மணம்நேர்ந்து செலவிட்டார். கள

888 சென்றவருங் கஞ்சாறர் மணம்இசைந்த படிசெப்பக்
குன்றனைய புயத்தேயர் கோனுரும் மிகவிரும்பி
நின்றநிலை மையின்இரண்டு திறத்தார்க்குஞ் நேர்வாய
மன்றல்விளை மங்கலநாள் மதிநூல்வல் லவர்வகுத்தார். கஅ

889 மங்கலமாஞ் செயல்விரும்பி மகட்பயந்த வள்ளலார்
தங்குலநீள் சுற்றமெலாந் தயங்குபெருங் களிசிறப்பப்
பொங்கியவெண் மூளைப்பெய்து பொலங்கலங்க ளிடைநெருங்கக்
கொங்கலர்தண் பொழில்மூதூர் வதுவைமுகங் கோடித்தார். ககூ

890 கஞ்சாறர் மகட்கொடுப்பக் கைப்பிடிக்க வருகின்ற
எஞ்சாத புகழ்ப்பெருமை ஏயர்குலப் பெருமானும்
தஞ்சால்பு நிறைசுற்றம் தலைநிறைய முரசியம்ப
மஞ்சாலும் மலர்ச்சோலைக் கஞ்சாற்றின் மருங்கணைய. உo

891 வள்ளலார் மணம்அவ்வூர் மருங்கணையா முன்மலர்க்கண்
ஒள்ளிழையைப் பயந்தார்தந் திருமனையில் ஒருவழியே
தெள்ளுதிரை நீருலகம் உய்வதற்கு மற்றவர்தம்
உள்ளநிலைப் பொருளாய உம்பர்பிரான் தாம்அணைவார். உக

892 முண்டநிறை நெற்றியின்மேல் முண்டித்த[4] திருமுடியில்
கொண்டசிகை முச்சியின்கண் கோத்தணிந்த எற்புமணி

பா-பே. 1. நளிர்ச்சுருளும் - மணமுலையில். 3 நோயை.
4. திகையின்கண் : திருமுடியின்கண்.

பண்டொருவன் உடல்அங்கம் பரித்தகாள் அதுகடைந்த
வெண்தரளம் எனக்காதின் மிசைஅசையுங் குண்டலமும். உஉ

893 அவ்என்பின் ஒளிமணிகோத் தணிந்ததிருத் தாழ்வடமும்
பைவன்பேர் அரவெழியத் தோளில்இடும் பட்டிகையும்
மைவந்த நிறக்கேச வடப்பூணு நூலும்மனச்
செவ்வன்பர் பவம்மாற்றுந் திருநீற்றுப் பொக்கணமும். உங

894 ஒருமுன்கைத் தனிமணிகோத் தணிந்தஒளிர் சூத்திரமும்
அருமறைநூற் கோவணத்தின் மிசைஅசையுந் திருவுடையும்
இருநிலத்தின் மிசைதோய்ந்த எழுதரிய திருவடியும்
திருவடியில் திருப்பஞ்ச முத்திரையும் திகழ்ந்திலங்க. உச

895 பொடிமூடு தழல்என்னத் திருமேனி தனிற்பொலிந்த
படிநீடு திருநீற்றின் பரப்பணிந்த பான்மையராய்க்
கொடிநீடு மறுகணைந்து தம்மூடைய குளிர்கமலத்
தடிநீடும் மனத்தன்பர் தம்மனையின் அகம்புகுந்தார். உரு

896 வந்தணைந்த மாவிரத முனிவரைக்கண் டெதிரெழுந்து
சிந்தைகளி கூர்ந்துமகிழ் சிறந்தபெருந் தொண்டனுர்
"எந்தைபிரான் புரிதவத்தோர் இவ்விடத்தே எழுந்தருள
உய்ந்தொழிந்தேன் அடியேன்"என் றுருகியஅன் பொடுபணிந்தார்.

897 நற்றவராம் பெருமானுர் நலம்மிகும்அன் பரைநோக்கி
"உற்றசெயல் மங்கலம்இங் கொழுகுவதென்" என"அடியேன்
பெற்றதொரு பெண்கொடிதன் வதுவை"எனப் பெருந்தவரும்
"மற்றுமக்குச் சோபனம்ஆ குவ"தென்று வாய்மொழிந்தார். உஎ

898 ஞானச்செய் தவரடிமேற் பணிந்துமனை யகம்நண்ணி
மானக்கஞ் சாறனுர் மணக்கோலம் புனைந்திருந்த
தேனக்க மலர்க்கூந்தல் திருமகளைக் கொண்டணைந்து
பானற்கந் தரம்மறைத்து வருமவரைப் பணிவித்தார். உஅ

899 தஞ்சரணத் திணைப்பணிந்து தாழ்ந்தெழுந்த மடக்கொடிதன்
மஞ்சுதழைத் தெனவளர்ந்த மலர்க்கூந்தல் புறம்நோக்கி
அஞ்சலிமெய்த் தொண்டரைப்பார்த் "தணங்கிவள்தன் மயிர்நமக்குப்
பஞ்சவடிக் காம்"என்றுர் பரவஅடித் தலங்கொடுப்பார். உக

900 அருள்செய்த மொழிகேளா அடற்சுரிகை தனைஉருவிப்
"பொருள்செய்தாம் எனப்பெற்றேன்" எனக்கொண்டு பூங்கொடிதன்
இருள்செய்த கருங்கூந்தல் அடியில்அரிந் தெதிர்கின்ற
மருள்செய்த பிறப்பறுப்பார் மலர்க்கரத்தி னிடைநீட்ட. ஈ0

01 வாங்குவார் போல்கின்ற மறைப்பொருளாம் அவர்மறைந்து
பாங்கின்மலி வல்லியுடன் பழையமழ விடையேறி

பா. பே. 1. வைவளர் பேர். 2. வடப்புனை. 3 மிகை யனைத்தும்.
4. நிலவடிவில். 5 தெனவளர்ந்த.

ஓங்கியவிண் மிசைவந்தார் ஒளிவிசும்பின் நிலநெருங்கத்
தூங்கியபொன் மலர்மாரி தொழும்பர்தொழு தெதிர்விழுந்தார். நக

902 விழுந்தெழுந்து மெய்ம்மறந்த மெய்யன்பர் தமக்குமதிக்
கொழுந்தலைய விழுங்கங்கை சூதித்தசடைக் கூத்தனார்
"எழும்பரிவு நம்பக்கல் உனக்கிருந்த பரிசிந்தச்
செழும்புவனங் களில்எறச் செய்தோம்"என் றருள்செய்தார். நஉ

903 மருங்குபெருங் கணநாதர் போற்றிசைப்ப வானவர்கள்
நெருங்கவிடை மேற்கொண்டு நின்றவர்முன் நின்றவர்தாம்
ஒருங்கியநெஞ் சொடுகரங்கள் உச்சியின்மேல் குவித்தையர்
பெருங்கருணைத் திறம்போற்றும் பெரும்பேறு நேர்பெற்றார். நஙி

904 தொண்டனார் தமக்கருளிச் சூழ்ந்திமையோர் துதிசெய்ய
இண்டைவார் சடைமுடியார் எழுந்தருளிப் போயினார்
வண்டுவார் குழற்கொடியைக் கைப்பிடிக்க மணக்கோலங்
கண்டவர்கள் கண்களிப்பக் கலிக்காம னுர்புகுந்தார். நச

905 வந்தணைந்த ஏயர்குல மன்னவனார் மற்றந்தச்
சிந்தைதனில் வரியசெயல் செறிந்தவர்பால் கேட்டருளிப்
புந்தியினில் மிகஉவந்து புனிதனார் அருள்போற்றிச்
சிந்தைதளர்ந் தருள்செய்த திருவாக்கின் திறங்கேட்டு. நஙி

906 மனந்தளரும் இடர்நீங்கி வானவர்நா யகர்அருளால்
புனைந்தமலர்க் குழல்பெற்ற பூங்கொடியை மணம்புணர்ந்து
தனம்பொழிந்து பெருவதுவை உலகெலாந் தலைசிறப்ப
இனம்பெருகத் தம்முடைய எயின்மூதூர் சென்றணைந்தார். நசு

வேறு

907 ஒருமகள் கூந்தல் தன்னை வதுவைநாள் ஒருவர்க் கீந்த
பெருமையார் தன்மை போற்றும் பெருமைஎன் அளவிற் றுமே
மருவிய கமரிற் புக்க மாவடு 'விடேல்'என் னுசை
உரிமையால் கேட்க வல்லார் திறம்இனி உரைக்க லுற்றேன். நஎ

ஆ திருவிருத்தம் கூஎ

பா. பே. 1. ணைப்பிழைத்தும்.
2. தனம்பொழிந்து.
3. தன்மை.

13. அரிவாட்டாய நாயனார் புராணம்

908 வரும்பு னற்பொன்னி நாட்டொரு வாழ்பதி
சுரும்பு வண்டொடு சூழ்ந்து முரன்றிட
விரும்பு மென்க ணுடையவாய் விட்டுநீள்
கரும்பு தேன்பொழி யுங்கண மங்கலம். க

909 செந்நெல் ஆர்வயல் கட்டசெந் தாமரை
முன்னர் நந்துமிழ் முத்தஞ் சொரிந்திடத்
துன்னு மள்ளர்கைம் மேற்கொண்டு தோன்றுவார்
மன்னு பங்கய மாநிதி போன்றுளார். உ

910 வளத்தில் நீடும் பதியதன் கண்வரி
உளர்த்தும் ஐம்பால் உடையோர் முகத்தினும்
களத்தின் மீதும் கயல்பாய் வயலயல்
குளத்தும் நீடுங்/குழையுடை நீலங்கள். ங

911 அக்கு லப்பதி தன்னில் அறநெறித்
தக்க மாமறை வாழ்க்கையில் தங்கினார்
தொக்க மாநிதித் தொன்மையில் ஓங்கிய
மிக்க செல்வத்து வேளாண் தலைமையார். ச

912 தாய னார்எனும் நாமம் தரித்துளார்
சேய காலந் தொடர்ந்துந் தெளிவிலா
மாய னர்மண் கிளைத்தறி யாதஅத்
தூய நாண்மலர்ப் பாதந் தொடர்ந்துளார். ஞ

913 மின்னு செஞ்சடை வேதியர்க் காமென்று
செந்நெல் இன்னமு தோடுசெங் கீரையும்
மன்னு பைந்துணர் மாவடு வுங்கொணர்ந்
தன்ன என்றும் அமுதுசெய் விப்பரால். ஊ

914 இந்த நன்னிலை இன்னல்வந் தெய்திலும்
சிந்தை நீங்காச் செயலின் உவந்திட
முந்தை வேத முதல்வர் அவர்வழி
வந்த செல்வம் அறியாமை மாற்றினார். எ

915 மேவு செல்வம் களிறுண் விளங்கனி
ஆவ தாகி அழியவும் அன்பினால்
பாவை பங்கர்க்கு முன்பு பயின்றஅத்
தாவில் செய்கை தவிர்ந்திலர் தாயனார். அ

அ பா.பே.நி. கையெழுத்துப் படி.
2 பாகர்க்கு.

916 அல்லல் நல்குர வாயிடக் கூலிக்கு
நெல்அ றுத்துமெய்ந் நீடிய அன்பினுல்
நல்ல செந்நெலிற் பெற்றன நாயனார்க்
கொல்லை இன்னமு தாக்கொண் டொழுகுவார். கூ

917 சாலி தேடி அறுத்தவை தாம்பெறும்
கூலி எல்லாங் திருஅமு தாக்கொண்டு
நீல நெல்லரி கூலிகொண் டுண்ணுநாள்
மால யற்கரி யாரது மாற்றுவார். கூ

வேறு

918 நண்ணிய வயல்கள் எல்லாம் நாடொறும் முன்னங் காண
வண்ணவார் கதிர்ச்செஞ் சாலி ஆக்கிட மகிழ்ந்து சிந்தை
அண்ணலார் அறுத்த கூலி கொண்(டு)"இஃ தடியேன் செய்த
புண்ணியம்" என்று போத அமுதுசெய் விப்பார் ஆனர். ககக

919 வைகலும் உணவி லாமை மீனப்படப் பையினிற் புக்கு
நைகரம் இல்லா அன்பின் நங்கைகை அடகு கொய்து
பெய்கலத் தமைத்து வைக்கப் பெருந்தகை அருந்தித் தங்கள்
செய்கடன் முட்டா வண்ணம் திருப்பணி செய்யும் நாளில். கஉ

920 மீனமருங் கடகு மாள வடநெடு வான மீனே
அனையவர் தண்ணீர் வார்க்க அமுதுசெய் தன்ப ருரும்
வினைசெயல் முடித்துச் செல்ல மேவுநாள் ஒருநாள் மிக்க
முனைவனுர் தொண்டர்க் கங்கு நிகழ்ந்தது மொழியப் பெற்றேன். கஙு

921 முன்புபோல் முதல்வ னுரை அமுதுசெய் விக்க மூளும்
அன்புபோல் தூய செந்நெல் அரிசிமா வடுமென் கீரை
துன்புபோம் மனத்துத் தொண்டர் கூடையில் சுமந்து போதப்
பின்புபோம் மனைவி யார்ஆன் பெற்றஅஞ் சேந்திச் சென்ருர். கச

922 போதரா நின்ற போது புலர்ந்துகால் தளர்ந்து தப்பி
மாதரார் வருந்தி வீழ்வார் மட்கல மூடு கையால்
காதலால் அணைத்தும் எல்லாங் கமரிடைச் சிந்தக் கண்டு
பூதநா யகர்தந் தொண்டர் "போவதங் கினியேன்" என்று. கஞ

923 நல்லசெங் கீரை தூய மாவடு அரிசி சிந்த
"அல்லல்தீர்த் தாள வல்லார் அமுதுசெய் தருளும் அப்பே
றெல்லையில் தீமை யேன்இங் கெய்திடப் பெற்றி லேன்"என்
றெல்லையில் அரிவாள் பூட்டி ஊட்டியை அரிய லுற்ருர். கஙு

924 "ஆட்கொள்ளும் ஐயர் தாமிங் கமுதுசெய் திலர்கொல்" என்னப்
பூட்டிய அரிவாள் பற்றிப் புரையற விரவும் அன்பு

காட்டிய நெறியின் உள்ளந் தண்டறக் கழுத்தி னேடே
ஊட்டியும் அரியா நின்றூர் உறுபிறப் பரிவார் ஒத்தார். கள

925 மாசறு சிந்தை அன்பர் கழுத்தரி அரிவாள் பற்றும்
ஆசில்வண் கையை மாற்ற அம்பலத் தாடும் ஐயர்
வீசிய செய்ய கையும் மாவடு விடேல்வி டேலென்
றூசையும் கமரில் நின்றும் ஒக்கவே எழுந்த அன்றே. கஅ

926 திருக்கைசென் றரிவாள் பற்றும் திண்கையைப் பிடித்த போது
வெருக்கொடங் கூறு நீங்க வெவ்வினை விட்டு நீங்கிப்
பெருக்கவே மகிழ்ச்சி நீடத் தம்பிரான் பேணித் தந்த
அருட்பெருங் கருணை நோக்கி அஞ்சலி கூப்பி நின்று. ககூ

927 "அடியனேன் அறிவி லாமை கண்டும்என் அடிமை வேண்டிப்
படிமிசைக் கமரில் வந்திங் கழுதுசெய் பரனே போற்றி
துடியிடை பாக மான தூயநற் சோதி போற்றி
பொடியணி பவள மேனிப் புரிசடைப் புராண போற்றி." உ0

928 என்றவர் போற்றி செய்ய இடபவா கனராய்த் தோன்றி
"நன்றுநீ புரிந்த செய்கை நன்னுத லுடனே கூட
என்றும்நம் உலகில் வாழ்வாய்" என்றவர் உடனே நண்ண
மன்றுளே ஆடும் ஐயர் மழவிடை உகைத்துச் சென்றூர். உக

929 பரிவுறு சிந்தை அன்பர் பரம்பொரு ளாகி யுள்ள
பெரியவர் அமுது செய்யப் பெற்றிலேன் என்று மாவின்
வரிவடு விடேலெ னுமுன் வன்கழுத் தரிவாள் பூட்டி
அரிதலால் அரிவாட் டாயர் ஆயினூர் தூய நாமம். உஉ

930 முன்னிலை கமரே யாக முதல்வனூர் அமுது செய்யச்
செந்நெலின் அரிசி சிந்தச் செவியுற வடுவின் ஓசை
அந்நிலை கேட்ட தொண்டர் அடியிணை தொழுது வாழ்த்தி
மன்னும்ஆ னாயர் செய்கை அறிந்தவா வழுத்தல் உற்றேன். உங

ஆ திருவிருத்தம் - கங0.

பா. பே. 1. ஏனாநாம்.

14 ஆயர் நாயனார் புராணம்

931 மாடு விரைப்பொலி சோலையின் வான்மதி வந்தேறச்
சூடு பரப்பிய புண்ணை வரம்பு சுரும்பேற
ஈடு பெருக்கிய போர்களின் மேகம் இளைத்தேற
நீடு வளத்தது மேன்மழ நாடெனும் நீர்நாடு. க

932 நீவி நிதம்ப உழத்தியர் நெய்க்குழல் மைச்சூழல்
மேவி உறங்குவ மென்சிறை வண்டு விரைக்கஞ்சப்
பூவில் உறங்குவ நீள்கயல் பூமலி தேமாவின்
காவின் நறுங்குளிர் நீழல் உறங்குவ கார்மேதி. உ

933 வன்னிலை மள்ளர் உகைப்ப எழுந்த மரக்கோவைப்
பன்முறை வந்தெழும் ஓசை பயின்ற முழக்கத்தால்
அன்னம் மருங்குறை தண்டுறை வாவி அதன்பாலைக்
கன்னல் அடும்புகை யால்முகில் செய்வ கருப்பாலை. ங

934 பொங்கிய மாநதி நீடலை உந்து புனல்சங்கம்
துங்க இலக்கத லிப்புதல் மீது தொடக்கிப்போய்த்
தங்கிய பாசடை சூழ்கொடி யூடு தவழ்ந்தேதறிப்
பைங்கமு கின்தலை முத்தம்1 உதிர்க்குவ பாளையென. ச

935 அல்லி மலர்ப்பழ னத்தயல் நாகிள ஆன்ஈனும்
ஒல்லை முழுப்பை உகைப்பின் உழக்கு குழக்கன்று
கொல்லை2 மடக்குல மான்மறி யோடு குதித்தோடும்
மல்கு வளத்தது முல்லை யுடுத்த மருங்கோர்பால். ஞ

936 கண்மலர் காவிகள் பாய இருப்பன கார்முல்லைத்
தண்ணகை வெண்முகை மேவு சுரும்பு தடஞ்சாலிப்
பண்ணை எழுங்கயல் பாய இருப்பன காயாவின்
வண்ண நறுஞ்சினை மேவிய3 வன்சிறை வண்டானம். ட

937 பொங்கரில் வண்டு புறம்பலை சோலைகள் மேலோடும்
வெங்கதிர் தங்க விளங்கிய மேன்மழ நன்னாடம்
அங்கது மண்ணின் அருங்கல மாக அதற்கேயோர்
மங்கல மானது மங்கல மாகிய வாழ்மூதூர். ண

938 ஒப்பில் பெருங்குடி நீடிய தன்மையில் ஓவாமே
தப்பில் வளங்கள் பெருக்கி அறம்புரி சால்போடும்
செப்ப உயர்ந்த சிறப்பின் மலிந்தது சீர்மேவும்
அப்பதி4 மன்னிய ஆயர் குலத்தவர் ஆளுயர். த

1. பா.வே.ப. உகைப்பன. 2. மடக்கேறு. 3. அஞ்சிறை. 4 மேவிய.

939 ஆயர் குலத்தை விளக்கிட வந்துத யஞ்செய்தார்
தூய சுடர்த்திரு நீறு விரும்பு தொழும்புள்ளார்
வாயினின் மெய்யின் வழுத்து மனத்தின் விணைப்பாலின்
பேயுட னுடு பிரானடி அல்லது பேணுதார். கூ

940 ஆனிரை கூட அகன்புற விற்கொடு சென்றேறிக்
காணுறை தீய விலங்குறு நோய்கள் கடிந்தெங்கும்
1 தூநறு மென்புல் அருந்தி விரும்பிய தூநீருண்(டு)
ஊனமில் ஆயம் உலப்பில பல்க அளித்துள்ளார். கo

941 கன்றெரு பால்மறை நாகு கறப்பன பாலாவும்
புன்தலை மென்சிறை ஆனெரு நீடு புனிற்றாவும்
வென்றி விடைக்குல மோடும் இனந்தொறும் வெவ்வேறே
துன்றி நிறைந்துள சூழ லுடன்பல தோழங்கள். ககக

942 ஆவின் நிரைக்குலம் அப்படி பல்க அளித்தென்றும்
கோவலர் ஏவல் புரிந்திட ஆயர் குலம்பேணும்
காவலர் தம்பெரு மானடி அன்புறு கானத்தின்
மேவு துலைக்கரு விக்குழல் வாசிணை மேல்கொண்டார். கஉ

வேறு

943 மூந்தைமறை நூன்மரபின் மொழிந்தமுறை எழுந்தவேய்
அந்தமுதல் நாலிரண்டில் அரிந்துநரம் புறுதானம்
வந்ததுளை நிரையாக்கி வாயுமுதல் வழங்குதுளை
அந்தமில்சீர் இடையீட்டின் அங்குலிஎண் களின்அமைத்து. கங

944 எடுத்தகுழற் கருவியினில் எம்பிரான் எழுத்தஞ்சும்
தொடுத்தமுறை ஏழிசையின் சுருதிபெற வாசித்துத்
தடுத்தசரா சரங்களெலாந் தங்கவருந் தங்கருணை
அடுத்தஇசை அமுதளித்துச் செல்கின்றூர் அங்கொருநாள். கச

945 வாச்மலர்ப் பிணைபொங்க மயிர்நுழுதி மருங்குயர்ந்த
தேசுடைய சிகழிகையிற் செறிகண்ணித் தொடைசெருகிப்
பாசிலைமென் கொடியின்வடம் பயிலநறு விலிபுனைந்து
காசுடைநாண் அதற்கயலே கருஞ்சுருளின் புறங்கட்டி. கடு

946 வேண்கோடல் இலைச்சுருளிற் பைந்தோட்டு விரைத்தோன்றித்
தண்கோல மலர்புனைந்த வடிகாதின் ஒளிதயங்கத்
திண்கோல நெற்றியின்மேல் திருநீற்றின் ஒளிகண்டோர்
கண்கோடல் நிறைந்தாராக் கவின்விளங்க மிசையணிந்து. கசு

947 நிறைந்தநீ றணிமார்பின் நிரைமுல்லை முகைசுருக்கிச்
செறிந்தபுனை வடந்தாழத் திரள்தோளின் புடைஅலங்கல்

அறைந்தசுரும் பிசைஅரும்ப அரையுடுத்த மரவுரியின்
புறந்தழையின் மலிதாணைப் பூம்பட்டுப் பொலிந்தசைய. கள

948 சேவடியில் தொடுதோலும் செங்கையினில் வெண்கோலும்
மேவும்இசை வேய்ங்குழலும் மிகவிளங்க வினைசெய்யும்
காவல்புரி வல்லாயர் கன்றுடைஆன் நிரைசூழப்
பூவலர்தார்க் கோவலனார் நிரைகாக்கப் புறம்போந்தார். கஅ

வேறு

949 நீலமா மஞ்ஞை ஏங்க நிரைக்கோடிப் புறவம் பாடக்
கோலவெண் முகையோர் முல்லை கோபம்வாய் முறுவல் காட்ட
ஆலுமின் னிடைசூழ் மாலைப் பயோதரம் அசைய வந்தாள்
ஞாலநீ டரங்கி லாடக் காரேனும் பருவ நல்லாள். ககூ

வேறு

950 எம்மருங்கு நிரைபரப்ப எடுத்தகோ லுடைப்பொதுவர்
தம்மருங்கு தொழுதணையத் தண்புறவில் வருந்தலைவர்
அம்மருங்கு தாழ்ந்தசினை அலர்மருங்கு மதுவுண்டு
செம்மருந்தண் சுரும்புசுழல் செழுங்கொன்றை மருங்கணைந்தார். உ0

951 சென்றணைந்த ஆனயர் செய்தவிரைத் தாமமென
மன்றல்மலர்த் துணர்தூக்கி மருங்குதாழ் சடையார்போல்
நின்றநறுங் கொன்றையினை நேர்நோக்கி நின்றுருகி
ஒன்றியசிந் தையில்அன்பை உடையவர்பால் மடைதிறந்தார். உக

952 அன்பூறி மிசைப்பொங்கும் அமுதஇசைக் குழலோலியால்
வன்பூதப் படையாளி எழுத்தைந்தும் வழுத்தித்தாம்
முன்பூதி வருமளவின் முறைமையே எவ்வுயிரும்
என்பூடு கரைந்துருக்கும் இன்னிசைவேய்ங் கருவிகளில். உஉ

953 ஏழுவிர லிடையிட்ட இன்னிசைவங் கியம்எடுத்துத்
தாழுமலர் வரிவண்டு தாதுபிடிப் பனபோலச்
சூழுமூரன் றெழுநின்று தூயபெருந் தனித்துளையில்
வாழியநந் தோன்றலார் மணிஅதரம் வைத்தூத. உங

954 மூத்திரையே முதலினைத்தும் முறைத்தானஞ் சோதித்து
வைத்ததுளை ஆராய்ச்சி வக்காணை வழிபோக்கி
ஒத்தநிலை உணர்ந்ததற்பின் ஒன்றுமுதல் படிமுறையாம்
அத்தகைமை ஆரோசை அமரோசை களின்அமைத்தார். உச

955 மாறுமுதற் பண்ணின்பின் வளர்முல்லைப் பண்ணுக்கி
ஏறியதா ரமும்உழையும் கிழமைகொள இடுந்தானம்
ஆறுலவுஞ் சடைமுடியார் அஞ்செழுத்தின் இசைபெருகக்
கூறியபட் டடைக்குரலாங் கொடிப்பாலை யினில்நிறுத்தி. உரு

பா. பே. 1. தாவிப் பிழிப்பனை.

956 ஆயஇசைப் புகல்நான்கின் அமைத்புகல் வகையெடுத்து
மேயதுளை பற்றுவன விடுப்பனவாம் விரல்நிரையிற்
சேயவொளி யிடையிலையத் திருவாளன் எழுத்தஞ்சுந்
தூயஇசைக் கிளைகொள்ளுந் துறையஞ்சின் முறைவிளைத்தார். உசு

957 மந்தரத்தும் மத்திமத்தும் தாரத்தும் வரன்முறையால்
தந்திரிகள் மெலிவித்தும் சமங்கொண்டும் வலிவித்தும்
அந்தரத்து விரற்றொழில்கள் அளவுபெற அசைத்தியக்கிச்
சுந்தரச்செங் கனிவாயும் துளைவாயும் தொடக்குண்ண. உஎ

958 எண்ணியநூற் பெருவண்ணம் இடைவண்ணம் வனப்பென்னும்
வண்ணஇசை வகையெல்லாம் மாதுரிய நாதத்தில்
நண்ணியபா ணியும்இயலும் தூக்குநடை முதற்கதியில்
பண்ணமைய எழும்ஓசை எம்மருங்கும் பரப்பினார். உஅ

959 வள்ளலார் வாசிக்கும் மணித்துளைவாய் வேய்ங்குழலின்
உள்ளுறைஅஞ் செழுத்தாக ஒழுகியெழு மதுரவொலி
வெள்ளநிறைந் தெவ்வுயிர்க்கும் மேலமரர் தருவினேதென்
தெள்ளமுதின் உடன்கலந்து செவிவார்ப்ப தெனத்தேக்க. உக

960 ஆனிரைகள் அறுகருந்தி அசைவிடா தணைந்தயரப்
பானுரைவாய்த் தாய்மூலையில் பற்றும்இளங் கன்றினமும்
தானுணவு மறந்தொழியத் தடமருப்பின் விடைக்குலமும்
மான்முதலாம் கான்விலங்கும் மயிர்முகிழ்த்து வந்தணைய. ஈ0

961 ஆடுமயில் இனங்களும்அங் கசைவயர்ந்து மருங்கணுக
ஊடுசெவி இசைநிறைந்த உள்ளமொடு புள்ளினமும்
மாடுபடிந் துணர்வொழிய மருங்குதொழில் புரிந்தொழுகும்
1 கூடியவன் கோவலரும் குறைவினையின் துறைநின்றார். ஈக

962 பணிபுவனங் களிலுள்ளார் பயில்பிலங்கள் வழியணைந்தார்
மணிவரைவாழ் அரமகளிர் மருங்குமயங் கினர்மலிந்தார்
தணிவில்ஒளி விஞ்சையர்கள் சாரணர்கின் னரர்அமரர்
அணிவிசும்பில் அயர்வெய்தி விமானங்கள் மிசைஅணைந்தார். ஈஉ

963 சுரமகளிர் கற்பகப்பூஞ் சோலைகளின் மருங்கிருந்து
கரமலரின் அமுதூட்டுங் கனிவாய்மென் கிள்ளையுடன்
2 விரவுநறுங் குழல்அலைய விமானங்கள் விரைந்தேறிப்
பரவியஎ ழிசைஅமுதம் செவிமடுத்துப் பருகினர். ஈஈ

964 நலிவாரும் மெலிவாரும் உணர்வொன்றுய் நயத்தலினால்
மலிவாய்வெள் எயிற்றரவம் மயில்மீது மருண்டுவிழும்
சலியாத நிலைஅரியும் தடங்கரியும் உடன்சாரும்
புலிவாயின் மருங்கணையும் புல்வாய புல்வாயும். ஈசு

பா. வே. 1. கூடியவண்ண. 2. விரவுநறுங்.

965 மருவியகால் விசைத்தசையா மரங்கள்மலர்ச் சினைசலியா
கருவரைவீழ் அருவிகளும் கான்யாறும் கலித்தோடா
பெருமுகிலின் குலங்கள்புடை பெயர்வொழியப் புனல்சோரா
இருவிசும்பி னிடைமுழங்கா எழுகடலும் இடைதுளும்பா. நடு

966 இவ்வாறு நிற்பனவும் சரிப்பனவும் இசைமயமாய்
மெய்வாழும் புலன்கரணம் மேவியவொன் றுயினவால்
மொய்வாச நறுங்கொன்றை முடிச்சடையார் அடித்தொண்டர்
செவ்வாயின் மிசைவைத்த திருக்குழல்வா சினையுருக்க. நசு

967 மெய்யன்பர் மனத்தன்பின் விளைந்தஇசைக் குழலோசை
வையந்தன் னையும்நிறைத்து வானம்தன் வயமாக்கிப்
போய்யன்புக் கேட்டாத போற்போதுவில் நடம்புரியும்
ஐயன்றன் திருச்செவியின் அருகணையப் பெருகியதால். நஎ

968 ஆனயர் குழலோசை கேட்டருளி அருட்கருணை
தானைய திருவுள்ளம் உடையதவ வல்லியுடன்
காணுதி காரணராம் கண்ணுதலார் விடையுகைத்து
வானுறு வந்தணைந்தார் மதிநாறுஞ் சடைதாழ. நஅ

969 திசைமுழுதுங் கணநாதர் தேவர்கட்கு முன்நெருங்கி
மிசைமிடைந்து வரும்பொழுது வேற்றெழிகள் விரவாமே
அசையஎழுங் குழல்நாதத் தஞ்செழுத்தால் தமைப்பரவும்
இசைவிரும்பும் கூத்தனார் எழுந்தருளி எதிர்கின்றார். நசு

970 முன்நின்ற மழவிடைமேல் முதல்வனார் எப்பொழுதும்
சென்நின்ற மனப்பெரியோர் திருக்குழல்வா சினைகேட்க
"இந்நின்ற நிலையேநம் பாலணைவாய்" எனஅவரும்
அந்நின்ற நிலைபெயர்ப்பார் ஐயர்திரு மருங்கணைந்தார். சO

971 விண்ணவர்கள் மலர்மாரி மிடைந்துலகம் மிசைவிளங்க
எண்ணிலரு முனிவர்குழாம் இருக்குமொழி எடுத்தேத்த
அண்ணலார் குழற்கருவி அருகிசைத்தங் குடன்செல்லப்
புண்ணியனார் எழுந்தருளிப் பொற்பொதுவி னிடைப்புக்கார். சக

வேறு

972 தீதுகொள் வினைக்கு வாரோம் செஞ்சடைக் கூத்தர் தம்மைக்
காதுகொள் குழைகள் வீசும் கதிர்நில(வு) இருள்கால் சீப்ப
மாதுகொள் புலவி நீக்க மணியிடை இருகால் செல்லத்
தூதுகொள் பவராம் நம்மைத் தொழும்புகொண் டெமை கொள்வார்.

ச. மும்மையால் உலகாண்ட சருக்கம்

15 மூர்த்தி நாயனார் புராணம்

973 சீர்மன்னு செல்வக் குடிமல்கு சிறப்பின் ஓங்கும்
கார்மன்னு சென்னிக் கதிர்மாமணி மாட வைப்பு
நார்மன்னு சிந்தைப் பலநற்றுறை மாந்தர் போற்றும்
பார்மன்னு தொன்மைப் புகழ்பூண்டது பாண்டி நாடு. க

974 சாயுந்தளிர் வல்லி மருங்குல் நெடுந்த டங்கண்
வேயும்படு தோளியர் பண்படும் இன்சொற் செய்ய
வாயும்படு நீள்கரை மண்பொருந் தண்பொ ருந்தம்
பாயுங்கட லும்படு நீர்மை பணித்த முத்தம். உ

975 மோய்வைத்த வண்டின் செறிசூழல் முரன்ற சந்தின்
மைவைத்த சோலை மலயந்தர வந்த மந்த
மெய்வைத்த காலும் தருஞாலம் அளந்த மேன்மைத்
தெய்வத்தமி ழும்தருஞ் செவ்வி மணஞ்செ யீரம். ங

976 சூழுமிதழ்ப் பங்கய மாகஅத் தோட்டின் மேலாள்
தாழ்வின்றி என்றுந் தனிவாழ்வதத் தையல் ஒப்பார்
யாழின் மொழியிற் குழலின்னிசை யுஞ்சு ரும்பும்
வாழும் நகரம் மதுராபுரி என்ப தாகும். ச

977 சால்பாய மும்மைத் தமிழ்தங்கிய அங்கண் மூதூர்
நூல்பா யிடத்தும் உளநோன்றலை மேதி பாயப்
பால்பாய் முலைதேய்ப் மதுப்பங்கயம் பாய எங்குஞ்
சேல்பாய் தடத்தும் உளசெய்யுள்மிக் கேறு சங்கம். ஞ

978 மந்தாநிலம் வந்தசை பந்தரின் மாட முன்றில்
பந்தாடிய மங்கையர் பங்கயச் செங்கை தாங்கும்
சந்தார்முலை மேலன தாழ்குழை வாள்மு கப்பொன்
செந்தாமரை மேலன நித்திலஞ் சேர்ந்த கோவை. ட

979 மும்மைப் புவனங்களின் மிக்கதன் றேஅம் மூதூர்
மெய்ம்மைப் பொருளாந் தமிழ்நூலின் விளங்கு வாய்மைச்
செம்மைப் பொருளுந் தருவார்திரு வால வாயில்
எம்மைப் பவந்தீர்ப் பவர்சங்கம் இருந்த தென்றூல். எ

980 அப்பொற் பதிவாழ் வணிகக்குலத் தான்ற தொன்மைச்
செப்பத் தகுசீர்க் குடிசெய்தவஞ் செய்ய வந்தார்
எப்பற் றினையும்அறுத்(து) ஏறுகைத் தேறு வார்தாள்
மெய்ப்பற் றெனப்பற்றி விடாத விருப்பின் மிக்கார். அ

981 நாளும்பெருங் காதல் நயப்புறும் வேட்கை யாலே
கேளும் துணையும் முதற்கேடில் பதங்க ளெல்லாம்
ஆளும்பெரு மான்அடித் தாமரை அல்ல தில்லார்
மூளும்பெரு கன்பெனும் மூர்த்தியார் மூர்த்தி யார்தாம். கூ

982 அந்திப் பிறைசெஞ் சடைமேலணி ஆல வாயில்
எந்தைக் கணிசந் தனக்காப்பிடை என்றும் முட்டா
அந்தச் செயலின் நிலைநின் றடியா ருவப்பச்
சிந்தைக் கினிதாய திருப்பணி செய்யும் நாளில். கo

983 கானக் கடிசூழ் வடுகக்கரு நாடர் காவன்
மானப் படைமன்னன் வலிந்து நிலங்கொள் வானுய்
யானைக் குதிரைக் கருவிப்படை வீரர் திரண்ட
சேனைக் கடலுங் கொடுதென் திசை நோக்கி வந்தான். கக

984 வந்துற்ற பெரும்படை மண்புதை யப்ப ரப்பிச்
சந்தப்பொதி யில்தமிழ் நாடுடை மன்னன் வீரம்
சிந்தச்செரு வென்றுதன் ஞாண செலுத்து மாற்றல்
கந்தப்பொழில் சூழ்மது ராபுரி காவல் கொண்டான். கஉ

985 வல்லாண்மையின் வண்தமிழ் நாடுவளம்ப டுத்து
நில்லாநிலை ஒன்றிய இன்மையின் நீண்ட மேரு
வில்லான்அடி மைத்திறம் மேவிய நீற்றின் சார்பு
செல்லாதரு கந்தர் திறத்தினிற் சிந்தை தாழ்ந்தான். கஙு

986 தாழுஞ்சமண் கையர் தவத்தைமெய் யென்று சார்ந்து
வீழுங்கொடி யோன்அது வன்றியும் வெய்ய முன்னைச்
சூழும்வினை யால்அர வஞ்சுடர்த் திங்க ளோடும்
வாழுஞ்சடை யான்அடி யாரையும் வன்மை செய்வான். கச

987 சேக்கர்ச்சடை யார்விடை யார்திரு வால வாயுள்
முக்கட்பர னார்திருத் தொண்டரை மூர்த்தி யாரை
மைக்கற்புரை நெஞ்சுடை வஞ்சகன் வெஞ்ச மண்பேர்
எக்கர்க்குட னாக இகழ்ந்தன செய்ய எண்ணி. கஞ

988 அந்தம்இல வாம்மிறை செய்யவும் அன்ப னார்தாம்
முந்தைம்முறை மைப்பணி முட்டலர் செய்து வந்தார்
தந்தம் பெருமைக் களவாகிய சார்பில் நிற்கும்
எந்தம் பெருமக் களையாவர் தடுக்க வல்லார். கசு

989 எள்ளுஞ்செயல் வன்மைகள் எல்லையில் லாத செய்யத்
தள்ளுஞ்செய லில்லவர் சந்தனக் காப்புத் தேடிக்
கொள்ளுந்துறை யும்அடைத் தான்கொடுங் கோன்மை செய்வான்
தெள்ளும்புனல் வேணியர்க் கன்பருஞ் சிந்தை நொந்து. கஎ

பா.பே.1. திண்டிவனம் 2 வளம்படுத்தி.

970 புன்மைச் செயல்வல் அமண்குண்டரிற் போது போக்கும்
வன்மைக் கொடும்பா தகன்மாய்ந்திட வாய்மை வேத
நன்மைத் திருநீற் றுயர்நன்னெறி தாங்கு மேன்மைத்
தன்மைப் புவிமன் னரைச்சார்வதென் றென்று சார்வார். கஅ

971 காய்வுற்ற செற்றங்கொடு கண்டகன் காப்ப வுஞ்சென்
ரூய்வுற்ற கொட்பிற் பகலெல்லை அடங்க நாடி
ஏய்வுற்ற நற்சந் தனமெங்கும் பெறுது சிந்தை
சாய்வுற்றிட வந்தனர் தம்பிரான் கோயில் தன்னில். ககு

972 நட்டம்புரி வாரணி நற்றிரு மெய்ப்பூச் சின்று
முட்டும்பரி சாயினுந் தேய்க்குங்கை முட்டா தென்று
வட்டந்திகழ் பாறையின் வைத்து முழங்கை தேய்த்தார்
கட்டும்புறந் தோல்நரம் பென்பு கரைந்து தேய. உ0

973 கல்லின்புறந் தேய்த்த முழங்கை கலுழ்ந்து சோரி
செல்லும்பரப் பெங்கணும் என்பு திறந்து மூளை
புல்லும்படி கண்டு பொறுத்திலர் தம்பி ரானர்
அல்லின்கண் எழுந்தது வந்தருள் செய்த வாக்கு. உக

974 "அன்பின்துணி வால்இது செய்திடல் ஐய! உன்பால்
வன்புன்கண் விளைத்தவன் கொண்டமண் எல்லாங் கொண்டு
முன்பின்னல் புகுந்தன முற்றவும் நீத்துக் காத்துப்
பின்புன்பணி செய்துநம் பேருல கெய்து" கென்ன. உஉ

975 இவ்வண்ணம் எழுந்தது கேட்டெழுந் தஞ்சி முன்பு
செய்வண்ணம் ஒழிந்திடத் தேய்ந்தபுண் ஊறு தீர்ந்து
கைவண்ணம் நிரம்பின வாசமெல் லாங்க லந்து
மொய்வண்ண விளங்கொளி எய்தினர் மூர்த்தி யார்தாம். உங

976 அந்நாள்இர வின்கண் அமண்புகல் சார்ந்து வாழும்
மன்னுகிய போர்வடு க்கருநாடர் மன்னன்
தன்நாளும் முடிந்தது சங்கரன் சார்பி லோர்க்கு
மின்னுமென நீடிய மெய்ந்நிலை யாமை வெல்ல. உச

977 இவ்வா றுலகத்தின் இறப்ப உயர்ந்த நல்லோர்
மெய்வா ழுலகத்து விரைந்தணை வார்க ளேபோல்
அவ்வா றரனூர் அடியாரை அலைத்த தீயோன்
வெவ்வாய் நிரயத் திடைவீழ விரைந்து வீந்தான். உடு

978 முழுதும்பழு தேபுரி மூர்க்கன் உலந்த போதின்
எழுதுங்கொடி போல்பவ ருட்பட வங்கு சுற்றம்
அழுதும்புலர் வுற்றது மற்றவன் அன்ன மாலைப்
பொழுதும்புலர் வுற்றது செங்கதிர் மீது போத. உசு

பா. பே. 1 முழுதும்.

999 அவ்வேலையில் அங்கண் அமைச்சர்கள் கூடித் தங்கள்
கைவேறுகொள் ஈம வருங்கடன் காலே முற்றி
வைவேலவன் றன்குல மைந்தரும் இன்மை யாலே
செய்வேறுவி னேதத்திறஞ் சிந்தனை செய்து தேர்வார். உஎ

1000 "தாழுஞ்செய லின்றொரு மன்னவன் தாங்க வேண்டும்
கூழும்குடி யும்முத லாயின கொள்கைத் தேனும்
சூழும்படை மன்னவன் தோளிணைக் காவ லின்றி
வாழுந்தகைத் தன்றிந்த வையகம்" என்று சொன்னார். உஅ

வேறு

1001 "பன்முறை உயிர்கள் எல்லாம் பாலித்து ஞாலங் காப்பான்
தன்னெடுங் குடைக்கீழ்த் தத்தம் நெறிகளில் சரித்து வாழும்
மன்னரை இன்றி வைகும் மண்ணுல கெண்ணுங் காலே
இன்னுயிர் இன்றி வாழும் யாக்கையை ஒக்கும்" என்பார். உக

1002 இவ்வகை பலவும் எண்ணி "இங்கினி அரசர் இல்லே
செய்வகை இதுவே என்று தெளிபவர் சிறப்பின் மிக்க
மைவரை அனைய வேழம் கண்கட்டி விட்டால் மற்றக்
கைவரை கைக்கொண் டார்மண் காவல்கைக் கொள்வார்" என்று.

வேறு

1003 செம்மாண்வினை அர்ச்சனை நூன்முறை செய்து தோளால்
"இம்மாநிலம் ஏந்தலர் ஏந்தலே ஏந்து" கென்று
பெய்ம்மாமுகில் போல்மதம் பாய்பெரு கோடை நெற்றிக்
கைம்மாவை நறுந்துகில் கொண்டுகண் கட்டி விட்டார். ஙக

1004 கண்கட்டி விடுங்களி யானைஅக் காவல் மூதூர்
மண்கொட்புற வீதி மருங்கு திரிந்து போகித்
திண்பொற்றட மாமதில் சூழ்திரு வால வாயின்
விண்பிற்பட ஓங்கிய கோபுரம் முன்புமேவி. ஙஉ

1005 நீங்கும்இர வின்கண் நிகழ்ந்தது கண்ட தொண்டர்
"ஈங்கெம்பெரு மான்அரு ளாம்எனில் இந்த வையம்
தாங்கும்செயல் பூண்பன்" என் றுள்ளம் தளர்வு நீங்கிப்
பூங்கொன்றை மிலைந்தவர் கோயிற் புறத்து நிற்ப. ஙங

1006 வேழத் தரசங்கண் விரைந்து நடந்து சென்று
வாழ்வுற் றுலகஞ்செய் தவத்தினின் வள்ள லாரைச்
சூழ்பொற் சுடர்மாமணி மாநிலந் தோய முன்பு
தாழ்வுற் றெடுத்துப் பிடர்மீது தரித்த தன்றே. ஙச

1007 மாதங்கம் எருத்தினில் வைத்தவர் தம்மைக் காணு
ஏதங்கெட எண்ணிய திண்மை அமைச்சர் எல்லாம்

பாதங்களின் மீது பணிந்தெழுந் தார்கள் அப்போ(து)
ஓதங்கிளர் வேலையை ஒத்தொலி மிக்க தவ்வூர். நடு

1008 சங்கங்கள் முரன்றன தாரைகள் பேரி யோடும்
எங்கெங்கும் இயம்பின பல்லியம் எல்லை யில்ல
அங்கங்கு மலிந்தன வாழ்த்தொலி அம்பொற் கொம்பின்
பங்கன் அருளால்உல காள்பவர் பாங்கர் எங்கும். நசு

1009 வெங்கட்களிற் றின்மிசை நின்றும் இழிச்சி வேரித்
தொங்கல்சுடர் மாலைகள் சூழ்முடி சூடி சாலை
அங்கட்கொடு புக்கரி யாசனத் தேற்றி ஒற்றைத்
திங்கட்குடைக் கீழ்உரி மைச்செயல் சூழ்ந்து செய்வார். நஎ

1010 மன்னுந் திசைவேதியில் மங்கல ஆகு திக்கண்
துன்னுஞ் சுடர்வன்னி வளர்த்துத் துதைந்த நூல்சூழ்
பொன்னின் கலசங்கள் குடங்கள் பூரித்த தூநீர்
உன்னுஞ் செயல்மந் திரயோகர் நிறுத்தி னார்கள். நஅ

1011 வந்துற்றெழு மங்கல மாந்தர்கள் தம்மை நோக்கிச்
சிந்தைச்சிவ மேதெளி யுந்திரு மூர்த்தி யார்தாம்
"முந்தைச்செய லாம்அமண் போய்முதற் சைவம் ஓங்கில்
இந்தப்புவி தாங்கிஇவ் வின்னர சாள்வன்" என்றார். நஊ

1012 அவ்வாறு மொழிந்தது கேட்ட அமைச்ச ரோடு
மெய்வ்வாழ்தரு நூலறி வின்மிகு மாந்தர் தாமும்
"எவ்வாறருள் செய்தீன மற்றவை யன்றி யாவர்
செய்வ்வார் பெரியோய்" எனச்சேவடி தாழ்ந்து செப்ப. சO

1013 "வையம் முறைசெய் குவலுகில் வயங்கு நீறே
செய்யும் அபிடே கமுமாக, செழுங்க லன்கள்
ஐயன் அடையா ளமுமாக, அணிந்து தாங்கும்
மொய்புன் சடைமா முடியேமுடி யாவ" தென்றார். சக

1014 என்றிவ்வுரை கேட்டலும் எல்லையில் கல்வி யோரும்
வன்திண்மதி நூல்வளர் வாய்மை அமைச்சர் தாமும்
"நன்றிங்கருள் தான்"என நற்றவ வேந்தர் சிந்தை
ஒன்றும்அர சாள்உரி மைச்செய லான உய்த்தார். சஉ

1015 மாடெங்கும் நெருங்கிய மங்கல ஓசை மல்கச்
சூடுஞ்சடை மௌலி அணிந்தவர் தொல்லை ஏனம்
தேடுங்கழ லார்திரு வாலவாய் சென்று தாழ்ந்து
நீடுங்களிற் றின்மிசை நீள்மறு கூடு போந்தார். சந

1016 மின்னும்மணி மாளிகை வாயிலின் வேழம் மீது
தன்னின்றும் இழிந்து தயங்கொளி மண்ட பத்திற்

பா.பே.1. திருவாசகங்கள்.

பொன்னின்அரி மெல்லணைச் சாமரைக் காமர் பூங்கால்
மன்னுங்குடை நீழல் இருந்தனர் வையம் தாங்கி. சச

குலவுந்துறை நீதி அமைச்சர் குறிப்பின் வைகக்
கலகஞ்செய் அமண்செய லாயின கட்டு நீங்கி
நிலவுந்திரு நீற்று நெறித்துறை நீடு வாழ
உலகெங்கும் நிரம்பிய சைவம் உயர்ந்து மன்ன. சஞ

நுதலின்கண் விழித்தவர் வாய்மை துணங்கு நூலின்
பதமெங்கும் நிறைந்து விளங்கப் பவங்கள் மாற
உதவுந்திரு நீறுயர் கண்டிகை கொண்ட வேணி
முதன்மும்மையி னுல்உல காண்டனர் மூர்த்தி யார்தாம். சசு

ஏலங்கமழ் கோதையர் தந்திறம் என்றும் நீங்கும்
சீலங்கொடு வெம்புலன் தெவ்வுடன் வென்று நீக்கி
ஞாலந்தனி நேமி நடாத்தி நலங்கொள் ஊழிக்
காலம்உயிர் கட்கிட ரான கடிந்து காத்து. சஎ

பாதம்பர மன்னவர் சூழ்ந்து பணிந்து போற்ற
ஏதம்பிணி யாவகை இவ்வுல காண்டு தொண்டின்
பேதம்புரி யாஅருட் பேரர சாளப் பெற்று
நாதன்கழற் சேவடி நண்ணினர் அண்ண லாரே. சஅ

அகல்பா றையின்வைத்து முழங்கையை அன்று தேய்த்த
இகலார்களிற் றன்பரை ஏத்தி முருக னாரும்
முகில்சூழ் நறுஞ்சோலையின் மொய்யொளி மாட வீதிப்
புகலூர்வரும் அந்தணர் தந்திறம் போற்ற லுற்றும். சகூ

ஆ திருவிருத்தம் - க,0உக.

16. முருக நாயனார் புராணம்

தாது சூழும் குழல்மலையாள் தளிர்க்கை சூழும் திருமேனி
மீது சூழும் புனற்கற்றை வேணி நம்பர் விரும்புபதி
சோதி சூழும் மணிமௌலிச் சோழர் பொன்னித் திருநாட்டுப்
போது சூழும் தடஞ்சோலைப் பொய்கை சூழும் பூம்புகலூர். க

நாம மூதூர் மற்றதனுள் நல்லோர் மனம்போல் அவரணிந்த
சேமம் நிலவு திருநீற்றின் சிறந்த வெண்மைத் திருந்தொளியால்
யாம இருளும் வெளியாக்கும் இரவே அல்ல விரைமலர்மேல்
காமர் மதுவுண் சிறைவண்டும் களங்கம் இன்றி விளங்குமால். உ

பா.பே.1. பாதம்பல. 2. இடுஸ்டவாள்.

1024 நண்ணும் இசைதேர் மதுகரங்கள் நனைமென் சினையின் மருங்கலைய
வண்ண மதுரத் தேன்பொழிவ வாச மலர்வா யேயல்ல
தண்ணென் சோலை எம்மருங்கும் சாரும் மடமென் சாரிகையின்
பண்ணின் கிளவி மணிவாயும் பதிகச் செழுந்தேன் பொழியுமால். ங

1025 வண்டு பாடப் புனல்தடத்து மலர்ந்து கண்ணீர் அரும்புவன
கொண்ட வாச முகைஅவிழ்ந்த குளிர்பங் கயங்க ளேயல்ல
அண்டர் பெருமான் திருப்பாட்டின் அமுதம் பெருகச் செவிமடுக்கும்
தொண்டர் வதன பங்கயமும் துளித்த கண்ணீர் அரும்புமால். ச

1026 ஆன பெருமை வளஞ்சிறந்த அந்தண் புகலூர் அதுதன்னில்
மான மறையோர் குலமரபின் வந்தார் முந்தை மறைமுதல்வர்
ஞான வரம்பின் தலைநின்றூர் நாகம் புனைவார் சேவடிக்கீழ்
ஊனம் இன்றி நிறைஅன்பால் உருகும் மனத்தார் முருகனார். ஞ

1027 அடைமேல் அலவன் துயிலுணர அலர்செங் கமல வயற்கயல்கள்
மடைமேல் உகளும் திருப்புகலூர் மன்னி வாழுந் தன்மையராய்
விடைமேல் வருவார்க் காளான மெய்ம்மைத் தவத்தால் அவர்கற்றைச்
சடைமேல் அணியத் திருப்பள்ளித் தாமம் பறித்துச் சாத்துவார். ட

1028 புலரும் பொழுதின் முன்னெழுந்து புனித நீரில் மூழ்கிப்போய்
மலருஞ் செவ்வித் தம்பெருமான் முடிமேல் வான்நீர் ஆறுமதி
உலவு மருங்கு முருகுயிர்க்க, நகைக்கும் பதத்தின் உடன்பறித்த
அலகில் மலர்கள் வெவ்வேறு திருப்பூங் கூடை களிலமைப்பார். எ

1029 கோட்டு மலரும் நிலமலரும் குளிர்நீர் மலரும் கொழுங்கொடியின்
தோட்டு மலரும் மாமலரும் சுருதி மலருந் திருவாயில்
காட்டு முறுவல் நிலவலரக் கனக வரையின் பன்னகநாண்
பூட்டும் ஒருவர் திருமுடிமேல் புனைய லாகும் மலர்தெரிந்து. அ

1030 கோண்டு வந்து தனியிடத்தின் இருந்து கோக்கும் கோவைகளும்
இண்டைச் சுருக்கும் தாமமுடன் இணைக்கும் வாச மாலைகளும்
தண்டில் கட்டும் கண்ணிகளும் தாளிற் பிணைக்கும் பிணையல்களும்
தண்டா திறைக்கும் தொடையல்களும் சமைத்து நடங்கு நான்மார்பர்.

1031 ஆங்கப் பணிக ளானவற்றுக் கமைத்த காலங் களின்அமைத்துத்
தாங்கிக் கொடுசென் றன்பினெடுஞ் சாத்தி வாய்ந்த அர்ச்சனைகள்
பாங்கிற் புரிந்து பரிந்துள்ளார் பரமர் பதிகப் பற்றுன
ஓங்கிச் சிறந்த அஞ்செழுத்தும் ஓவா நாவின் உணர்வினர். கo

1032 தள்ளரும் முறைமை ஒழிந்திடஇத் தகுதி ஒழுகும் மறையவர்தாம்
தெள்ளு மறைகள் முதலான ஞானஞ் செம்பொன் வள்ளத்தில்
அள்ளி அகிலம் ஈன்றளித்த அம்மை முலைப்பால் உடனுண்ட
பிள்ளை யார்க்கு நண்பருமாம் பெருமை யுடையார் ஆயினர். கக

பா. பே. 1. அரசங்கல்கரும்

1033 அன்ன வடிவும் ஏனமுமாய் அறிவான் இருவர் அறியாமல்
மன்னும் புகலூர் உறைவாரை வர்த்த மான வீச்சுரத்து
நன்னர் மகிழ்ச்சி மனங்கொள்ள நாளும் பூசை வழுவாமே
பன்னும் பெருமை அஞ்செழுத்தும் பயின்றே பணிந்து பரவினார். கஉ

1034 அங்கண் அமருந் திருமுருகர் அழகார் புகலிப் பிள்ளையார்
பொங்கு மணத்தின் மூன்செய்த பூசை அதனுல் புக்கருளிச்
செங்கண் அடலே றுடையவர்தாஞ் சிறந்த அருளின் பொருள்அளிக்கத்
தங்கள் பெருமான் அடிநீழல் தலையாம் நிலைமை சார்வுற்றார். கங

1035 அரவம் அணிந்த அரையாரை அருச்சித் தவர்தங் கழல்நிழற்கீழ்
விரவு புகலூர் முருகனார் மெய்ம்மைத் தொண்டின் திறம்போற்றிக்
கரவி லவர்பால் வருவாரைக் கருத்தில் உருத்தி ரங்கொண்டு
பரவும் அன்பர் பசுபதியார் பணிந்த பெருமை பகர்வுற்றேன். கச

ஆ திருவிருத்தம் - க,0உடு.

17 உருத்திர பசுபதி நாயனார் புராணம்

1036 நிலத்தின் ஓங்கிய நிவந்தெழும் பெரும்புனல் நீத்தம்
மலர்த்த டம்பணை வயல்புகு பொன்னிநன் னாட்டுக்
குலத்தின் ஓங்கிய குறைவிலா நிறைகுடி குழுமித்
தலத்தின் மேம்படு நலத்தது பெருந்திருத் தலையூர். க

1037 வான ளிப்பன மறையவர் வேள்வியின் வளர்தீ
தேன ளிப்பன நறுமலர் செறிசெழுஞ் சோலை
ஆன ளிப்பன அஞ்சுகந் தாடுவார்க் கவ்வூர்
தான ளிப்பன தருமமும் நீதியுஞ் சால்பும். உ

1038 அங்கண் மாநக ரதனிடை அருமறை வாய்மைத்
துங்க வேதியர் குலத்தினில் தோன்றிய தூயோர்
செங்கண் மால்விடை யார்செழும் பொன்மலி வல்லி
பங்க னூரடி மைத்திறம் புரிபசு பதியார். ங

1039 ஆய அந்தணர் அருமறை உருத்திரம் கொண்டு
மாய னூறி யாமலர்ச் சேவடி வழுத்துந்
தூய அன்பொடு தொடர்பினில் இடையறாச் சுருதி
நேயநெஞ்சின ராகிஅத் தொழில்தலை நின்றார். ச

1040 கரையில் கம்பலை புள்ளொலி கறங்கிட மருங்கு
பிரச மென்சுரும் பறைந்திடக் கருவரால் பிறழும்

பா.வே.1. அறியாமே. 2. பரவுற்றேன். 3. நலத்திடம் புனை. 4 நனையூர். 5. நெறி னினராகிய நாதனில். 6. பெருவரால்

1 நிரைநெ டுங்கயல் நீரிடை நெருப்பெழுந் தனைய
விரைநெ கிழ்ந்தசெங் கமலமென் பொய்கையுள் மேவி. ரு

1041 தெள்ளு தண்புனல் கழுத்தள வாயிடைச் செறிய
உள்ளு றப்புக்கு நின்றுகை உச்சிமேற் குவித்துத்
தள்ளு வெண்திரைக் கங்கைநீர் ததும்பிய சடையார்
கொள்ளும் அன்பினில் உருத்திரம் குறிப்பொடு பயின்றார். கூ

1042 அரும றைப்பய னுகிய உருத்திரம் அதனை
வருமு றைப்பெரும் பகலும்எல் லியும்வழு வாமே
திரும லர்ப்பொகுட் டிருந்தவன் அனையவர் சிலநாள்
ஒருமை உய்த்திட உமைஇடம் மகிழ்ந்தவர் உவந்தார். எ

1043 காதல் அன்பர்தம் அருந்தவப் பெருமையும் கலந்த
வேத மந்திர தியதியின் மிகுதியும் விரும்பி
ஆதி நாயகர் அமர்ந்தருள் செய்யுமற் றவர்தாம்
நீதி லாநிலைச் சிவபுரி எல்லையிற் சேர்ந்தார். அ

1044 நீடும் அன்பினில் உருத்திரம் ஓதிய நிலையால்
ஆடு சேவடி அருகுற அணைந்தனர் அவர்க்குப்
பாடு பெற்றசீர் உருத்திர பசுபதி யாராம்
கூடு நாமமும் நிகழ்ந்தது குவலயம் போற்ற. கூ

1045 அயில்கொள் முக்குமி ழிப்படை யார்மருங் கருளால்
பயில்உ ருத்திர பசுபதி யார்திறம் பரசி
எயிலு டைத்தில்லை எல்லையில் நாளைப்போ வாராம்
செயலு டைப்புறத் திருத்தொண்டர் திறத்தினை மொழிவாம். கo

திருவிருத்தம் கo சருக்.

18 திருநாளைப்போவார் நாயனார் புராணம்

1046 பகர்ந்துலகு சீர்போற்றும் பழையவளம் பதியாகும்
திகழ்ந்தபுனற் கோள்ளிடம்பொன் செழுமணிகள் திரைக்கரத்தால்
முகந்துதர இருமருங்கும் முளரிமலர்க் கையேற்கும்
அகன்பணைநீர் நன்னாட்டு மேற்காநாட் டாதனூர். க

1047 நீற்றலர்பே ரொளிநெருங்கும் அப்பதியின் நிறைகரும்பின்
சாற்றலைவன் குலைவயலில் தகட்டுவரால் எழப்பகட்டேர்
ஆற்றலவன் கொழுக்கிழித்த சால்வழிபோய் அசைந்தேதிரிச்
சேற்றலவன் கருவுயிர்க்க முருகுயிர்க்குஞ் செழுங்கமலம். உ

பா. பே. 1. நிரைநெடுங்கய நீரிடை.
2. டிருந்தவன் செய்ய: அருந்தவன்செல்ய.
3 சென்றார்.

1033 1048 ஈனைமருவுஞ் சினைபொதுளி நறுவிரைசூழ் செறிதளிரில்
தினகரமண் டலம்வருடுஞ் செழுந்தருவின் குலம்பெருகிக்
கனமருவி அசைந்தலையக் களிவண்டு புடைசூழப்
புனல்மழையோ மதுமழையோ பொழிவொழியா பூஞ்சோலை. கூ

1047 1049 பாளைவிரி மணங்கமழும் பைங்காய்வன் குலைத்தெங்கின்
தாளதிர மிசைமுட்டித் தடங்கிடங்கின் எழப்பாய்ந்த
வாளைபுதை யச்சொரிந்த பழம்மிதப்ப வண்பலவின்
நீளமுதிர் கனிகிழிதேன் நீத்தத்தில் எழுந்துகளும். சு

1049 1050 வயல்வளமும் செயல்படுபைந் துடவையிடை வருவளமும்
வியலிடமெங் கணும்நிறைய மிக்கபெருந் திருவினவாம்
புயலடையும் மாடங்கள் பொலிவெய்த மலிவுடைத்தாய்
அயலிடைவே றடிநெருங்கக் குடிநெருங்கி உளதவ்வூர். ரு

1051 மற்றவ்வூர்ப் புறம்பணையின் வயன்மருங்கு பெருங்குலையில்
சுற்றம்விரும் பியகிழமைத் தொழில்உழவர் கிளைதுவன்றிப்
பற்றியபைங் கொடிச்சுரைமேற் படர்ந்தபழங் கூரையுடைப்
புற்குரம்பைச் சிற்றில்பல நிறைந்துளதோர் புலப்பாடி. சூ

1052 கூருகிர்மெல் லடியளகின் குறும்பார்ப்புக் குழுச்சுழலும்
வார்பயின்முன் றிலில்நின்ற வள்ளுகிர்நாய்த் துள்ளுபறழ்
காரிரும்பின் சரிசெறிகைக் கருஞ்சிறார் கவர்ந்தோட
ஆர்சிறுமென் குரைப்படக்கும் அரைக்கசைத்த இருப்புமணி. எ

1053 வன்சிறுதேல் மிசையுழத்தி மகவுறக்கு நிழல்மருதும்
தன்சினைமென் பெடையொடுங்குந் தடங்குழிசிப் புதைநீழல்
மென்சினைய வஞ்சிகளும் விசிப்பறைதூங் கினமாவும்
புன்தலைநாய்ப் புனிற்றுமுழைப் புடைத்திதங்கும் உடைத்திதங்கும். அ

1054 செறிவலித்திண் கடைஞர்வினைச் செயல்புரிவை கறையாமக்
குறியளக்கும் உலைக்குஞ்செங் குடுமிவா ரணச்சேக்கை
வெறிமலர்த்திண் சினைக்காஞ்சி விரிநீழல் மருங்கெல்லாம்
நெறிகுழற்புன் புலைமகளிர் நெற்குறுபாட் டொலிபரக்கும். கூ

1055 புள்ளுந்தண் புனற்கலிக்கும் பொய்கையுடைப் புடைஎங்கும்
தள்ளுந்தாள் நடையசையத் தளையவிழ்பூங் குவளைமது
விள்ளும்பைங் குழற்கதிர்நெல் மிலைச்சியபுன் புலைச்சியர்கள்
கள்ளுண்டு களிதூங்கக் கறங்குபறை யுங்கலிக்கும். கo

1056 இப்படித்தா கியகடைஞர் இருப்பின்வரைப் பினின்வாழ்வார்
மெய்ப்பரிவு சிவன்கழற்கே விளைத்தஉணர் வோடும்வந்தார்
அப்பதியில் ஊர்ப்புலைமை ஆன்றதொழில் தாயத்தார்
ஒப்பிலவர் நந்தனுர் எனஒருவர் உளராஞர். கக

பா பா. பே. 1. இருந்தையைக் களிவண் டு.
2. அளந்தும்மைசெம்

1057 பிறந்துணர்வு தொடங்கியபின் பிறைக்கண்ணிப் பெருந்தகைபால்
சிறந்தபெருங் காதலினுல் செம்மைபுரி சிந்தையராய்
மறந்தும்அயல் நினைவின்றி வருபிறப்பின் வழிவந்த
அறம்புரிகொள் கையராயே அடித்தொண்டின் நெறிநின்றார். கூ

1058 ஊரில்விடும் பறைத்துடவை உணவுரிமை யாக்கொண்டு
சார்பில்வருந் தொழில்செய்வார் தலைநின்றார் தொண்டினுல்
கூரிலைய முக்குடுமிப் படையண்ணல் கோயில்தொறும்
பேரிகையே முதலாய முகக்கருவி பிறவினுக்கும். கஙூ

1059 போர்வைத்தோல் விசிவார்என் றினையனவும் புகலும்இசை
நேர்வைத்த வீணைக்கும் யாழுக்கும் நிலைவகையில்
சேர்வுற்ற தந்திரியும் தேவர்பிரான் அர்ச்சனைகட்(கு)
ஆர்வத்தி னுடன்கோரோ சனையும்இவை அளித்துள்ளார். கச

1060 இவ்வகையால் தந்தாழிலின் இயன்றவெலாம் எவ்விடத்தும்
செய்வனவும் கோயில்களில் திருவாயிற் புறம்நின்று
மெய்விரவு பேரன்பு மிகுதியினுல் ஆடுதலும்
அவ்வியல்பில் பாடுதலு மாய்நிகழ்வார் அந்நாளில். கஙி

1061 திருப்புன்கூர்ச் சிவலோகன் சேவடிகள் மிகநினைந்து
விருப்பினுடைந் தம்பணிகள் வேண்டுவன செய்வதற்கே
அருத்தியினுல் ஒருப்பட்டங் காதனூர் தனில்நின்றும்
வருத்தமுறுங் காதலினுல் வந்தவ்வூர் மருங்கணைந்தார். கசு

1062 சீரேறும் இசைபாடித் திருத்தொண்டர் திருவாயில்
நேரேகும் பிடவேண்டும் எனநினைந்தார்க் கதுநேர்வார்
காரேறும் எயிற்புன்கூர்க் கண்ணுதலார் திருமுன்பு
போரேற்றை விலங்கஅருள் புரிந்தருளிப் புலப்படுத்தார். களூ

1063 சிவலோகம் உடையவர்தந் திருவாயில் முன்னின்று
பவலோகங் கடப்பவர்தம் பணிவிட்டுப் பணிந்தெழுந்து
சுவலோடு வாரலையப் போவார்பின் பொருசூழல்
அவலோடும் அடுத்ததுகண்டு ஆதரித்துக் குளந்தொட்டார். கஅ

1064 வடங்கொண்ட பொன்னிதழி மணிமுடியார் திருவருளால்
தடங்கொண்ட குளத்தளவு சமைத்ததற்பின் தம்பெருமான்
இடங்கொண்ட கோயில்புறம் வலங்கொண்டு பணிந்தெழுந்து
நடங்கொண்டு விடைகொண்டு தம்பதியில் நண்ணினார். கக

1065 இத்தன்மை ஈசர்மகிழ் பதிபலவுஞ் சென்றிறைஞ்சி
மெய்த்ததிருத் தொண்டுசெய்து விரவுவார் மிக்கெழுந்த
சித்தமொடுந் திருத்தில்லைத் திருமன்று சென்றிறைஞ்ச
உய்த்தபெருங் காதலுணர்(வு) ஒழியாது வந்துதிப்ப. உ

பா. பே. 1. கொள்கையினராய்.
2. வழிநின்ற.
3. கடந்துவந்தம். புறம்பணை

1066 அன்றிரவு கண்துயிலார் புலர்ந்ததற்பின் "அங்கெய்த
ஒன்றியணை தருதன்மை உறுகுலத்தோ டிசைவில்லை"
என்"றிதுவும் எம்பெருமான் ஏவல்"எனப் போக்கொழிவார்
நன்றுமெழுங்காதல்மிக "நாளைப்போ வேன்"என்பார். உக

1067 "நாளைப்போ வேன்"என்று நாள்கள்செலத் தரியாது
பூளைப்பூ வாம்பிறவிப் பிணிப்பொழியப் போவாராய்ப்
பாளைப்பூங் கமுகுடுத்த பழம்பதியின் நின்றும்போய்
வாளைப்போத் தெழும்பழனஞ் சூழ்திலை மருங்கணைவார். உஉ

1068 செல்கின்ற போழ்தந்தத் திருவெல்லை பணிந்தெழுந்து
பல்குஞ்செந் தீவளர்த்த பயில்வேள்வி எழும்புகையும்
மல்குபெருங் கிடையோது மடங்கள்நெருங் கினவுங்கண்
டல்குந்தம் குலம்நினைந்தே அஞ்சிஅணைந் திலர்கின்றார். உங

1069 நின்றவர்அங் கெய்தரிய பெருமையினை நினைப்பார்முன்
சென்றிவையுங் கடந்தூர்சூழ் எயிற்றிருவா யிலைப்புக்கார்
குன்றனைய மாளிகைகள் தொறுங்குலவும் வேதிகைகள்
ஒன்றியமூ வாயிரம்அங் குளஎன்பார் ஆகுதிகள். உச

1070 "இப்பரிசா யிருக்கவெனக் கெய்தல்"அரி தென்றஞ்சி
அப்பதியின் மதிற்புறத்தின் ஆராத பெருங்காதல்
ஒப்பரிதாய் வளர்ந்தோங்க உள்ளுருகிக் கைதொழுதே
செப்பரிய திருவெல்லை வலங்கொண்டு செல்கின்றார். உரு

1071 இவ்வண்ணம் இரவுபகல் வலஞ்செய்தங் கெய்தரிய
அவ்வண்ணம் நினைந்தழிந்த அடித்தொண்டர் அயர்வெய்தி
"மைவண்ணத் திருமிடற்றார் மன்றில்நடங் கும்பிடுவ
தெவ்வண்ணம்" எனநினைந்தே ஏசறவி னெடுந்துயில்வார். உசு

1072 "இன்னல்தரும் இழிபிறவி இதுதடை"என் றேதுயில்வார்
அந்நிலைமை அம்பலத்துள் ஆடுவார் அறிந்தருளி
மன்னுதிருத் தொண்டரவர் வருத்தமெலாந் தீர்ப்பதற்கு
முன்னணைந்து கனவின்கண் முறுவலோடும் அருள்செய்வார். உஎ

1073 "இப்பிறவி போய்நீங்க எரியினிடை நீமூழ்கி
மூப்புரிநூல் மார்பருடன் முன்னணைவாய்" என்னமொழிந்
தப்பரிசே தில்லைவாழ் அந்தணர்க்கும் எரியமைக்க
மெய்ப்பொருளா னர்அருளி அம்பலத்தே மேவினார். உஅ

1074 தம்பெருமான் பணிகேட்ட தவமறையோர் எல்லாரும்
அம்பலவர் திருவாயின் மூன்(பு)அச்ச முடன்ஈண்டி
"எம்பெருமான் அருள்செய்த பணிசெய்வோம்"3என்றேத்தித்
தம்பரிவு பெருகவருந் திருத்தொண்டர் பாற்சார்ந்தார். உக

1 பா. பே. I. காதலினில். 2 : மருங்கணைந்தார். 3 என்றேறி

1075 "ஐயரே! அம்பலவர் அருளால்இப் பொழுதணைந்தோம்
வெய்யஅழல் அமைத்துமக்குத் தாவேண்டி" எனவிளம்ப
நையும்மனத் திருத்தொண்டர் "நான்உய்ந்தேன்" எனத்தொழுதார்
தெய்வமறை முனிவர்களும் தீயமைத்த படிமொழிந்தார். கஉ

1076 மறையவர்கள் மொழிந்ததற்பின் தென்திசையின்மதிற்புறத்துப்
பிறையுரிஞ்சுந் திருவாயின் முன்னுகப் பிஞ்ஞகர்தீம்
நிறையருளால் மறையவர்கள் நெருப்பமைத்த குழிஎய்தி
இறையவர்தாள் மனங்கொண்டே எரிசூழ வலங்கொண்டார். கஊ

1077 கைதொழுது, நடமாடுங் கழலுன்னி அழல்புக்கார்
எய்தியஅப் பொழுதின்கண் எரியின்கண் இம்மாயப்
போய்தகையும் உருவொழித்துப் புண்ணியமா முனிவடிவாய்
மெய்திகழ்வெண் நூல்விளங்க வேணிமுடி கொண்டெழுந்தார். கஎ

1078 சேந்தீமேல் எழும்பொழுது செம்மலர்மேல் வந்தெழுந்த
அந்தணன்போல் தோன்றினார் அந்தரதுந் துபிநாதம்
வந்தெழுந்த(து) இருவிசும்பில் வானவர்கள் மகிழ்ந்தார்த்துப்
பைந்துணர்மந் தாரத்தின் பனிமலர்மா ரிகள்பொழிந்தார். கஏ

1079 திருவுடைய தில்லைவாழ் அந்தணர்கள் கைதொழுதார்
பரவரிய தொண்டர்களும் பணிந்துமனம் களிபயின்றார்
அருமறைசூழ் திருமன்றில் ஆடுகின்ற கழல்வணங்க
வருகின்றார் திருநாளைப் போவாராம் மறைமுனிவர். கஐ

1080 தில்லைவாழ் அந்தணரும் உடன்செல்லச் சென்றெய்திக்
கொல்லைமான் மறிக்கரத்தார் கோபுரத்தைத் தொழுதிறைஞ்சி
ஒல்லைபோய் உள்புகுந்தார் உலகுய்ய நடமாடும்
எல்லையினைத் தலைப்பட்டார் யாவர்களுங் கண்டிலரால். கக

1081 அந்தணர்கள் அதிசயித்தார் அருமுனிவர் துதிசெய்தார்
வந்தணைந்த திருத்தொண்டர் தம்மைவிண மாசறுத்துச்
சுந்தரத்தா மரைபுரையுந் துணையடிகள் தொழுதிருக்க
அந்தமிலா ஆனந்தப் பெருங்கூத்தர் அருள்புரிந்தார். கங

1082 மாசுடம்பு விடத்தீயின் மஞ்சனஞ்செய் தருளியெழுந்(து)
ஆசில்மறை முனியாகி அம்பலவர் தாளடைந்தார்
தேசுடைய கழல்வாழ்த்தித் திருக்குறிப்புத் தொண்டர்தினைப்
பாசமறுமுயன்றவர்தம் திருத்தொண்டின் பரிசுரைப்பாம். கச

ஆ திருவிருத்தம் க,0அ2.

பரி.பெ.1. லையழகு நூல்வாளனைத்து.
2. பெயன்றவர்தெய்.

19. திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணம்

1083 ஏயு மாறுபல் உயிர்களுக் கெல்லையில் கருணைத்
தாய ளுள்தனி யாயின தலைவரைத் தழுவ
ஆயு நான்மறை போற்றநின் றருந்தவம் புரியத்
தூய மாதவம் செய்தது தொண்டைநன் னாடு. க

1084 நன்மை நீடிய நடுநிலை ஒழுக்கத்து நயந்த
தன்மை மேவிய தலைமைசால் பெருங்குடி தழைப்ப
வன்மை ஓங்கெயில் வளம்பதி பயின்றது வரம்பின்
தொன்மை மேன்மையில் நிகழ்பெருந் தொண்டைநன் னாடு. உ

1085 நற்றி றம்புரி பழையனூர்ச் சிறுத்தொண்டர் நவைவந்
துற்ற போதுதம் உயிரையும் வணிகனுக் கொருகால்
சொற்ற மெய்ம்மையுந் தூக்கிஅச் சொல்லையே காக்கப்
பெற்ற மேன்மையில் நிகழ்ந்தது பெருந்தொண்டை நாடு. ங

1086 ஆணை யாமென நீறுகண் டடிச்சேரன் என்னும்
சேணு லாவுசீர்ச் சேரனர் திருமலை நாட்டு
வாணி லாவுபூண் வயவர்கள் மைத்துனக் கேண்மை
பேண நீடிய முறையது பெருந்தொண்டை நாடு. ச

1087 கறைவி ளங்கிய கண்டர்பாற் காதல்செய் முறைமை
நிறைபு ரிந்திட நேரிழை அறம்புரிந் ததனால்
பிறையு ரிஞ்(சு)யிற் பதிபயில் பெருந்தொண்டை நாடு
முறைமை யாமென உலகினில் மிகுமொழி உடைத்தால். ஞ

1088 தாவில் செம்மணி அருவியா றிழிவன சாரல்
பூவில் வண்டினம் புதுநற(வு) அருந்துவ புறவம்
வாவி நீள்கயல் வரம்பிற உகைப்பன மருதம்
நீவி நித்திலம் பரத்தியர் உணக்குவ நெய்தல். ட

1089 குறவர் பன்மணி அரித்திதை விதைப்பன குறிஞ்சி
கறவை ஆன்நிரை மானுடன் பயில்வன கானம்
பறவை தாமரை யிருந்திற வருந்துவ பழனம்
சுறவ முள்மருப் பணங்கயர் வனகழிச் சூழல். எ

1090 கோண்டல் வானத்தின் மணிசொரி வனகுல வரைப்பால்
தண்து ணர்க்கொன்றை பொன்சொரி வனதள வயற்பால்
வண்டல் முத்தநீர் மண்டுகால் சொரிவன வயற்பால்
கண்டல் முன்துறைக் கரிசொரி வனகலங் கடற்பால். அ

பா. பே. 1 தகைமைசால்.

1091 தேனி றைந்தசெந் தினையிடி தருமலைச் சீறூர்
பால்நி றைந்தபுற் பதத்தன முல்லைநீள் பாடி
தூநெ ன்னம்நெய் கன்னலின் கனியதண் டுறையூர்
மீன்நி றைந்தபே ருணவின வேலிவைப் பிடங்கள். கூ

1092 குழல்செய் வண்டினங் குறிஞ்சியாழ் முரல்வன குறிஞ்சி
முழவு கார்கொள முல்லைகள் முகைப்பன முல்லை
மழலை மென்கிளி மருதமர் சேக்கைய மருதம்
நிழல்செய் கைதைசூழ் நெய்தலங் கழியன நெய்தல். கo

1093 மல்கும் அப்பெரு நிலங்களில் வரைபுணர் குறிஞ்சி
எல்லை எங்கணும் இறவுளர் ஏனல்முன் விளைக்கும்
பல்பெ ரும்புனம் பயில்வன படர்சிறைத் தோகை
சொல்லும் அப்புனங் காப்பவுஞ் சுரிகுழல் தோகை. கக

1094 அங்கண் வான்மிசை அரம்பையர் கருங்குழற் சுரும்பு
பொங்கு பூண்முலைக் கொடிச்சியர் குழல்மூழ்கிப் போகாச்
செங்கண் மால்விடை யார்திருக் காளத்தி என்னும்
மங்குல் சூழ்வரை நிலவிய வாழ்வினுல் மல்கும். கஉ

1095 பேறு வேறுசூழ் இமையவர் அரம்பையர் பிறந்து
மாறில் வேடரும் மாதரு மாகவே வணங்கும்
ஆறு சூழ்சடை அண்ணலார் திருவிடைச் சுரமும்
கூறு மேன்மையின் மிக்கதந் நாட்டுவண் குறிஞ்சி. கங

1096 அம்பொன் வார்குழற் கொடிச்சிய ருடன்அர மகளிர்
வம்பு லாமலர்ச் சுணைபடிந் தாடுநீள் வரைப்பின்
உம்பர் நாயகர் திருக்கழுக் குன்றமும் உடைத்தால்
கொம்பர் வண்டுசூழ் குறிஞ்சிசெய் தவங்குறை உளதோ. கச

1097 கோல முல்லையும் குறிஞ்சியும் அடுத்தசில் லிடங்கள்
நீல வாட்படை நீலிகோட் டங்களும் நிரந்து
கால வேனிலிற் கடும்பகற் பொழுதினைப் பற்றிப்
பாலை யுஞ்சொல லாவன வுளபரல் முரம்பு. கஙி

1098 சொல்லும் எல்லையின் புறத்தன துணர்ச்சுரும் பலைக்கும்
பல்பெ ரும்புனற் கானியா றிடையிடை பரந்து
கொல்லை மெல்இணர்க் குருந்தின்மேற் படர்ந்தபூம் பந்தர்
முல்லை மென்புதல் முயலுகைத் தடங்குநீள் முல்லை. கசு

1099 பிளவு கொண்டதன் மதிநுதற் பேதையர் எயிற்றைக்
களவு கொண்டது தளவெனக் களவலர் தூற்றும்
அளவு கண்டவர் குழல்நிறங் கனியும்அக் களவைத்
தளவு கண்டெதிர் சிரிப்பன தமக்குமுண் டென்று. கஎ

பா.பே.1. படர்வன பயில்சிறைத் தோகை.

1100 மங்கை யர்க்குவாள் விழியிணை தோற்றமான் குலங்கள்
எங்கும் மற்றவ ரிடைக்கிடை மலர்க்கொடி எங்கும்
அங்கண் முல்லையின் தெய்வமென் றருந்தமிழ் உரைக்கும்
செங்கண் மால்தொழுஞ் சிவன்மகிழ் திருமுல்லை வாயில். கஅ

1101 நீறு சேர்திரு மேனியர் நிலாத்திகழ் முடிமேல்
மாறில் கங்கைதான் அவர்க்குமஞ் சனந்தர அணைந்தே
ஊறு நீர்தரும் ஒளிமலர்க் கலிகைமா நகரை
வேறு தன்பெரு வைப்பென விளங்குமா முல்லை. கக

1102 வாச மென்மலர் மல்கிய முல்லைசூழ் மருதம்
வீசு தெண்டிரை நதிபல மிக்குயர்ந்[1]தோடிப்
பாச டைத்தடம் தாமரைப் பழனங்கள் மருங்கும்
பூசல் வன்கரைக் குளங்களும் எரியும் புகுவ. உ0

1103 துங்க மாதவன் சுரபியின் திருமுலை சொரிபால்
பொங்குநீர்த்தமாய் நந்திமால் வரைமிசைப் போந்தே
அங்கண் நித்திலம் சந்தனம் அகிலொடு மணிகள்
பங்க யத்தடம் நிறைப்பவந் திழிவது பாலி. உக

1104 பிள்ளை தைவரப் பெருகுபால் சொரிமுலைத் தாய்போல்
மள்ளர் வேனிலின் மணல்திடர் பிசைந்துகை வருட
வெள்ள நீரிரு மருங்குகால் வழிமிதந் தேறிப்
பள்ள நீள்வயல் பருமடை உடைப்பது பாலி. உஉ

1105 அனைய வாகிய நதிபரந் தகன்பணை மருங்கில்
கனைகு டும்புனல் நிறைந்துதிண்[3]கரைப்பெருங் குளங்கள்
புனையி ருங்கடி மதகுவாய் திறந்திடப் புறம்போய்
வினைஞ ராற்பொலி எடுப்பநீர் வழங்குவ வியன்கால். உங

1106 மாறில் வண்பகட் டேர்பல நெருங்கிட வயல்கள்
சேறு செய்பவர் செந்நெலின் வெண்முளை சிதறி
நாறு வார்ப்பவர் பறிப்பவர் நடுபவ ரான
வேறு பல்வினை யுடைப்பெருங் கம்பலை மிகுமால். உச

1107 வரும்பு னற்பெருங் கால்களை மறித்திட வாளை
பெருங்கு லைப்பட விலங்குவ பிறங்குநீர்ப் பழனம்
நெருங்கு சேற்குல முயர்த்துவ நீள்கரைப் படுத்துச்
சுருங்கை நீர்வழக் கறுப்பன பருவரால் தொகுதி. உரு

1108 தூளித்த டம்பணை எழுந்தசெந் தாமரைத் தவிசின்
இளைத்த சூல்வளை கண்படுப் பனஇடை எங்கும்
விளைத்த பாசொளி விளங்குநீள் விசும்பிடை ஊர்கோள்
வளைத்த மாமதி போன்றுள[4]மருதநீர் வைப்பு. உசு

பா. வே. 1. தோய்ந்தி. 2 நீர்த்தாய். 3. கரைப்பொரும். 4. மருதநீள்.

1109 ஓங்கு செங்நெலின் புடையன உயர்கழைக் கரும்பு
பூங்க ரும்பயல் மிடைவன பூகமப் பூகப்
பாங்கு நீள்குலைத் தெங்குபைங் கதலிவண் பலவு
தூங்கு தீங்கனிச் சூதநீள் வேலிய சோலை. உள

1110 நீடு தண்பணை உடுத்தநீள் மருங்கின, நெல்லின்
கூடு துன்றிய இருக்கைய, விருந்தெதிர் கோள்ளும்
பீடு தங்கிய பெருங்குடி மனையறம் பிறங்கும்
மாடம் ஓங்கிய மறுகன மல்லல்மூ தூர்கள். உஅ

1111 தோல்லை நான்மறை முதற்பெருங் கலியொலி துவன்றி
இல்ல றம்புரிந் தாகுதி வேள்வியில் எழுந்த
மல்கு தீண்புகை, மழைதரு முகிற்குலம் பரப்பும்
செல்வம் ஓங்கிய திருமறை யவர்செழும் பதிகள். உக

1112 தீது நீங்கிடத் தீக்கலி யாம்அவு ணற்கு
நாதர் தாம்அருள் புரிந்தது நல்வினைப் பயன்செய்
மாதர் தோன்றிய மரபுடை மறையவர் வல்லம்
2 பூதி சாதனம் போற்றிய பொற்பினல் விளங்கும். உ0

1113 அருவி தந்தசெம் மணிகளும், புறவில்ஆய் மலரும்
பருமி ஓடைகள் நிறைந்திழி பாலியின் கரையின்
மருவு கங்கைவாழ் சடையவர் மகிழ்ந்தமாற் பேறும்
பொருவில் கோயிலும் சூழ்ந்ததப் பூம்பணை மருதம். உக

1114 விரும்பு மேன்மையென் பகர்வது விரிதிரை நதிகள்
அருங்க ரைப்பயில் சிவாலயம் அனேகமும் அணைந்து
பருங்கை யானையை உரித்தவர் இருந்தவப் பாசூர்
மருங்கு சூழ்தவம் புரிந்ததன் ரூமற்ற மருதம். உஉ

1115 பூம ரும்புனல் வயற்களம் பாடிய பொருநர்
தாம ருங்கிளை யுடன்தட மென்மலர் மிலைந்து
மாம ருங்குதண் ணீழலின் மருதயாழ் மூஉம்
காமர் தண்பணைப் புறத்தது கருங்கழி நெய்தல். உங

1116 தூய வெண்டுறைப் பரதவர் தொடுப்பன வலைகள்
சேய நீள்விழிப் பரத்தியர் தொடுப்பன செருந்தி
ஆய பேரளத் தளவர்கள் அளப்பன உப்பு
சாயன்மல்லிடை அளத்தியர் அளப்பன தரளம். உச

1117 கோடுவி ணைத்தொழில் நுளையர்கள் கொடுப்பன கொழுமீன்
படும ணற்கரை நுளைச்சியர் கொடுப்பன பவளம்
தொடுக டற்சங்கு துறையவர் குளிப்பன அவர்தம்
வடுவ கிர்க்கண்மங் கையர்குளிப் பனமணற் கேணி. நுடு

பா. ஐ. 1. தீண் புகை. 3. புறம்பணை.
2. பூதி சுந்தரர். 4. மென்னடை

1118 சுழிப்பு னற்கடல் ஓதமுன் சூழ்ந்துகொண் டணிய
வழிக்க ரைப்பொதிப் பொன்னவிழ்ப் பனமலர்ப் புன்னை
விழிக்கு நெய்தலின் விரைமலர்க் கட்சுரும் புண்ணக்
கழிக்க ரைப்பொதி சோறவிழ்ப் பனமடற் கைதை. நஙூ

1119 காயல் வண்கரைப் புரைநெறி அடைப்பன[2]கனிமுள்
சேய தண்ணறுஞ் செழுமுகை செறியுமுண் டகங்கள்
ஆய துண்மணல் வெண்மையை மறைப்பன அன்னம்
தாய முன்றுறைச் சூழல்சூழ் ஞாழலின் தாது. நஎ

1120 வாம்பெ ருந்திரை வளாகமுன் குடிபயில் வரைப்பில்
தாம்ப ரப்பிய கயல்களின் விழிக்கயல் தவிரக்
காம்பி னேர்வருந் தோளியர் கழிக்கயல் விலைசெய்
தேம்பொ திந்தசின் மழலைமென் மொழியசெவ் வழியாழ். நஅ

1121 மருட்கொ டுத்தொழில் மன்னவன் இறக்கிய வரியை
நெருக்கி முன்திரு வோற்றியூர் நீங்கவென் றெழுதும்
ஒருத்தர் தம்பெருங் கோயிலின் ஒருபுறஞ் சூழ்ந்த
திருப்ப ரப்பையும் உடையதத் திரைக்கடல்[3]வரைப்பு. நகூ

1122 மெய்த ரும்புகழ்த் திருமயி லாபுரி விரைசூழ்
மொய்த யங்குதண் பொழில்திரு வான்மியூர் முதலாப்
பைத ரும்பணி அணிந்தவர் பதியெனைப் பலவால்
நெய்தல் எய்தமுன் செய்தஅந் நிறைதவம் சிறிதோ. சO

1123 கோடு கொண்டெழும் திரைக்கடற் பவளமென் கொழுந்து
மாடு மொய்வரைச் சந்தனச் சினைமிசை வளரும்
நீடு நெய்தலும் குறிஞ்சியும் புணர்நிலம் பலவால்
ஆடு நீள்கொடி மாடமா மல்லையே அனைய. சக

1124 மலைவி ழிப்பன எனவயற் சேல்வரைப் பாறைத்
தலையு கைப்பவும் தளைச்செறு விடைநெடுங் கருமான்
கலைகு திப்பன கரும்பகட் டோர்நிகர்ப் பவுமாய்
அலைபு னற்பணை குறிஞ்சியோ டணைவன அனேகம். சஉ

1125 புணர்ந்த ஆனிரைப் புறவிடைக் குறுமுயல், பொருப்பின்
அணைந்த வான்மதி முயலினை இனமென அணைந்து
மணங்கொள் கொல்லையில் வரகுபோர்[4]மஞ்சன வரைக்கார்
இணைந்து முல்லையுங் குறிஞ்சியுங் கலப்பன எங்கும். சங

1126 கவரும் மீன்குவை கழியவர் கானவர்க் களித்துச்
சிவலும் சேவலும் மாறியும் சிறுகழிச் சியர்கள்
அவரை ஏனலுக் கெயிற்றியர் பவளமுத் தளந்தும்
உவரி நெய்தலும் கானமும் கலந்துள ஒழுக்கம். சச

பா.பே.1 கழிக்கு ரைப்பொ 2. கயல்முள் 3 வைப்பு.
4. மஞ்சன.



1124 அயல் நறும்புற வினில்இரு பிர்அணி நடையும்
விரவு நெடும்பணை உழுதுயர் காயலும் விருப்பி
இயலும் அன்னமும் தேனகமும் எதிர்எதிர் பயில
வயலும் முல்லையும் இயைவன பலவுள மருங்கு. சடு

1125 மீளும் ஓதமுன் கொழித்தவெண் தாளமும் கழுகின்
பாணி உக்கவும் விரவலிற் பாத்தியர் பணைமென்
தோளு முத்தியர் மகளிர்மா முடிமுன் தொகுக்கும்
சீளு செய்தலும் மருதமும் கலந்துள நிலங்கள். சசு

1126 ஆய நானிலத் தமைதியில் தத்தமக் கடுத்த
மேய தெய்தொழில் வேறுபல் குலங்களின் விளங்கித்
தீய என்பன கனவிலும் நினைவிலுந் தீண்டாத்
தூய மாந்தர்வாழ் தொண்டைநாட் டதுசொல்வரைத்தோ. சஎ

1127 இவ்வ ளத்தரு பெருந்திரு நகர் என்றும்
பெ[illegible]ந்தரு சிறப்பினுல் உலகேலாம் வியப்ப
[illegible]களும் உளளதென் றியாவரும் ஏத்தும்
சீகழி வங்கியகீலியது காஞ்சிமா நகரம். சஅ

1128 ஆன தொல்நகர் அம்பிகை தம்பெரு மானே
மான அர்ச்சனை யாலொரு காலத்து வழிபட்
டூன மில்அறம் அனேகமும் உலகுய்ய வைத்த
மேன்மை பூண்டஅப் பெருமையை அறிந்தவா விளம்பில். சக

1129 வேள்ளி மால்வரைக் கயிலையில் வீற்றிருந் தருளித்
தூள்ளு வார்புனல் வேணியார் அருள்செயத் தொழுது
தெள்ளு வாய்மையின் ஆகமத் திறனெலாந் தெரிய
உள்ள வாறுகேட் டருளினுள் உலகைஆ ளுடையாள். நுo

1130 எண்ணில் ஆகமம்3இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
உண்மை யாவது பூசனை எனவுரைத் தருள
அண்ண லார்தமை அர்ச்சனை புரியஆ தரித்தாள்
பேண்ணின் நல்லவ ளாயின பெருந்தவக் கொழுந்து. நுக

வேறு

1134 நங்கை உள்நிறை காதலை நோக்கி நாய கன்திரு உள்ளத்து
மகிழ்ந்தே, அங்கண் எய்திய முறுவலுந் தோன்ற "அடுத்த தென்
கொல்நின் பால்"என வினவ, "இங்கு நாதநீ மொழிந்தஆ கமத்தின்
இயல்பி னுல்உனை அர்ச்சனை புரியப், பொங்கு கின்றதென் ஆசை"
என் றிறைஞ்சிப் போக மார்த்தபூண் முலையினுள் போற்ற. நுஉ

1135 தேவ தேவனும் அதுதிரு வுள்ளஞ் செய்து "தென்திசை மிக்க
செய் தவத்தால், யாவ ருந்தனை அடைவது மண்மேல் என்றும் உள்

பா. பே.1. ஆதிமங்கைபிரி. 2. தெளிய. 3. அருளிய.

ளது காஞ்சிமற் றதனுள், மாஅ மர்ந்தநம் இருக்கையில் அணைந்து மன்னு பூசனை மகிழ்ந்துசெய் வாய்"என், றேவ எம்பெரு மாட்டியும் பிரியா இசைவு கொண்டெழுந் தருளுதற் கிசைந்தாள். நிக

1136 ஏத மில்பல யோனியெண் பத்து நான்கு நூ றுயி ரந்தனுள் வைத்த, பேத மும்புரந் தருளும்அக் கருணைப் பிரான்மொ ழிந்தஆ கமவழி பேணிப், போது நீர்மையில் தொழுதனள் போதப் பொருப் பில் வேந்தனும் விருப்பில்வந் தெய்தி, மாத வம்புரிந் தருளுதற் கமைந்த வளத்தொ டும்பரி சனங்களை விடுத்தான். நிச

1137 துன்னு பல்லுயிர் வானவர் முதலாச் சூழ்ந்து டன்செலக் காஞ்சி யில் அணையத், தன்னை நேர்வரும் பதுமமா நாகம் தம்பி ராட்டிதாள் தலைமிசை வைத்தே, "அன்னை யாயுல கனைத்தையும் ஈன்றுய் அடிய னேன்உறை பிலமத னிடையே, மன்னு கோயில்கொண் டருளுவாய்" என்ன மலைம டந்தைமற் றதற்கருள் புரிந்து. நிந

1138 அங்கு மண்ணுல கத்துயிர் தழைப்ப அளவில் இன்பத்தி னருட் கரு விருத்தித், திங்கள் தங்கிய புரிசடை யார்க்குத் திருந்து பூசனை விரும்பினள் செய்ய, எங்கும் நாடவுந் திருவினீ யாட்டால் ஏக மா முதல் எதிர்ப்படா தொழியப், பொங்கு மாதவஞ் செய்துகாண் பதற்கே புரிவு செய்தனள் பொன்மலை வல்லி. நிசு

1139 நெஞ்சம் ஈசனைக் காண்பதே விரும்பி நிரந்த சந்திரு வாக்கினில் நிகழ்வ, தஞ்செ ழுத்துமே ஆகஆ ளுடைய அம்மை செம்மலர்க் கைகுவித் தருளித், தஞ்ச மாகிய அருந்தவம் புரியத் தரீப்ப ரேஅ வள் தனிப்பெருங் கணவர், வஞ்சம் நீக்கிய மாவின்மூ லத்தில் வந்து தோன்றினர் மலைமகள் காண. நிள

1140 கண்ட போதிலப் பெருந்தவப் பயனும் கம்பம் மேவிய தம்பெரு மானை, வண்டு லாங்குழற் கற்றைமுன் தாழ வணங்கி வந்தெழும் ஆசைமுன் பொங்கக், கொண்ட காதலின் விருப்பள வின்றிக் குறித்த பூசனை கொள்கைமேற் கொண்டு, தொண்டை யங்கனி வாயுமை நங்கை தூய அர்ச்சனை தொடங்குதல் புரிவாள். நிஅ

1141 உம்பர் நாயகர் பூசனைக் கவர்தாம் உரைத்த ஆகமத் துண்மையே தலைநின், றெம்பி ராட்டியர்ச் சனைபுரி வதனுக் கியல்பில் வாழ்திருச் சேடிய ரான, கொம்ப னார்கள்பூம் பிடகைகொண் டணையக் குலவு மென்தளிர் அடியிணை ஒதுங்கி, அம்பி காவன மாந்திரு வனத்தி லான தூநறும் புதுமலர் கொய்தாள். நிக

1142 கோய்த பன்மலர் கம்பைமா நதியில் குலவு மஞ்சனம் நிலவுமெய்ப் பூச்சு, நெய்த ருங்கொழுந் தூபதீ பங்கள் நிறைந்த சிந்தையில் நீடிய அன்பின், மெய்தரும்படி வேண்டின எல்லாம் வேண்டும் போதினில்

ப.ா. ப.ெ.ப.ி. நூ நியாயத்தில் 2. அனைத்துயர்.
3. சைவித் தெழுந்தி

உதவமெய்ப் பூசை, எய்த ஆகம விதியெலாஞ் செய்தாள் உயிர்கள் யாவையும் ஈன்றளம் பிராட்டி. சுo

1145 கரந்த ரும்பயன் இதுவென உணர்ந்து கம்பம் மேவிய உம்பர்நா யகர்பால், நிரந்த காதல்செய் உள்ளத்தளாகி நீடு நன்மைகள் யாவை யும்பெருக, வரந்த ரும்பொரு ளாம்மலி வல்லி மாறி லாவகை மலர்ந் தபே ரன்பால், சிரம்ப ணிந்தெழு பூசைநாள் தோறும் திருவு ளங் கொளப் பெருகிய தன்றே. சுக

1146 நாத ரும்பெரு விருப்பொடு நயந்து கங்கை யர்ச்சனை செய்யும் அப் பொழுதில், காதல் மிக்கவோர் திருவிளை யாட்டில் கனங்கு ழைக் கருள் புரிந்திட வேண்டி, ஓத மார்கடல் ஏழுமொன் றுகி ஓங்கி வான மும் உட்படப் பரந்து, மீது செல்வது போல்வரக் கம்பை வெள்ள மாந்திரு வுள்ளமுஞ் செய்தார். சுஉ

1147 அண்ண லார்அருள் வெள்ளத்தை நோக்கி அங்க யற்கண்ணி தம்பெரு மான்மேல், விண்ணெ லாங்கொள வரும்பெரு வெள்ளம் மீதுவந்துறும் எனவெருக் கொண்டே, உள்நி லாவிய பதைப்புறு காத லுடன்தி ருக்கையால் தடுத்தும்நில் லாமை, தண்ணி லாமலர் வேணி யினைரைத் தழுவிக் கொண்டனள் தன்னையே ஒப்பாள். சுஙு

1148 மலைக்கு லக்கொடி பரிவுறு பயத்தால் மாவின் மேவிய தேவநா யகரை, மூலைக்கு வட்டொடு வளைக்கையால் நெருக்கி முறுகு காத லால் இறுகிடத் தழுவச், சிலைத்த னித்திரு நுதல்திரு மூலைக்கும் செந்த ளிர்க்கரங் களுக்கும்மெத் தெனவே, கொலைக்க ளிற்றுரி புனைந் ததம் மேனி குழைந்து காட்டினர் விழைந்தகொள் கையினர். சுச

1147 கம்பர் காதலி தழுவமெய் குழையக் கண்டு நிற்பவுஞ் சரிப்பவு மான, உம்ப ரேமுதல் யோனிகள் எல்லாம் உயிரும் யாக்கையும் உருகியொன் றுகி, "எம்பி ராட்டிக்கு மெல்லிய ரானர் என்றும் ஏகம் பர்" என்றெடுத் தேத்த, வம்பு லாமலர் நிறையவிண் பொழியக் கம்பை யாறுமுன் வணங்கிய தன்றே. சுஙி

1148 பூதி யாகிய புனிதநீ றுடிப் பொங்கு கங்கைதோய் முடிச்சடை புனைந்து, காதில் வெண்குழை கண்டிகை தாழக் கலந்த யோகத்தின் மருவிய கருத்தால், ஆதி தேவனு ராயுமா தவஞ்செய் அவ்வ ரங் கொலோ அகிலமீன் றளித்த, மாது மெய்ப்பயன் கொடுப்பவே கொண்டு வளைத்த மூம்புடன் மூலைச்சுவ டணிந்தார். சுசு

1149 கோதி லாஅமு தனையவள் மூலைக்குக் குழைந்த தம்மண வாள நற் கோலம், மாது வாழவே காட்டிமுன் நின்று "வரங்கள் வேண்டுவ கொள்க" என் றருள, வேத காரண ராயவ கம்பர் விரைம லர்ச்செய்ய தாமரைக் கழற்கீழ், ஏதம் நீங்கிய பூசனை முடிந்த தின்மை தானறி விப்பதற் கிறைஞ்சி. சுஙு

பா.வே.1. ஏழுமாகடல் - ஏழுகடல்களில்லாமை

1150 அண்டர் நாயகர் எதிர்நின்று கூறும்[1]அளவி னில்அஞ்சி அஞ்சலி கூப்பிக், "கொண்ட இற்றைஎன் பூசனை இன்னும் குறைநி ரம்பிடக் கொள்க"என் றருள, வண்டு வார்குழல் மலைமகள் கமல வதனம் நோக்கிஅம் மலர்க்கண்நெற் றியின்மேல், மூண்ட நீற்றர் "நின் பூசனை என்றும் முடிவ தில்லைநம் பால்"என மொழிய. சுஅ

1151 "மாறி லாதஇப் பூசனை என்றும் மன்ன எம்பிரான் மகிழ்ந்து கொண் டருளி, ஈறி லாதஇப் பதியினுள் எல்லா அறமும் யான்செய அருள்செய வேண்டும், வேறு செய்வினை திருவடிப் பிழைத்தல் ஒழிய இங்குளார் வேண்டின செயினும், பேறு மாதவப் பயன்கொடுத் தருளப் பெறவும் வேண்டும்"என் றனள்பிறப் பொழிப்பாள். சுக

1152 விடையின் மேலவர் மலைமகள் வேண்ட விரும்பு பூசனை மேவி வீற் றிருந்தே, இடைய றாஅறம்[2]வளர்க்கும்வித் தாக இகப ரத்திரு நாழிநெல் அளித்துக், கடைய ராகியும் உயர்ந்த வராயும் காஞ்சி வாழ்பவர் தாஞ்செய்தீ வினையும், தடைப டாதுமெய்ந் நெறியடை வதற்காந் தவங்க ளாகவும் உவந்தருள் செய்தார். எ0

1153 எண்ண ரும்பெரு வரங்கள்மூன் பெற்றங் கெம்பி ராட்டிதம் பிரான்மகிழ்ந் தருள, மண்ணின் மேல்வழி பாடுசெய் தருளி மனைய றம்பெருக் குங்கரு ணையினுல், நண்ணும் மன்னுயிர் யாவையும் பல்க நாடு காதலின் நீடிய வாழ்க்கைப், புண்ணி யத்திருக் காமக்கோட் டத்துப் பொலிய மூப்பதோ டிரண்டறம் புரக்கும். எக

1154 அலகில் நீள்தவத் தறப்பெருஞ் செல்வி அண்ட மாந்திரு மனைக்கி டுந் தீபம், உலகில் வந்துறு பயனறி விக்க ஓங்கும் நாண்மலர் மூன்று டன் ஒன்று, நிலவ ஆண்டினுக் கொருமுறை செய்யும் நீடு தொன்மை யால் நிறைந்தபே ருலகம், மலர்பெ ருந்திருக் காமக்கோட் டத்து வைத்த நல்லறம் மன்னவே மன்னும். எஉ

1155 தீங்கு தீர்க்குநல் தீர்த்தங்கள் போற்றுஞ்[3]சிறப்பி னில்திருக் காமக்கோட் டத்தின்,[4]பாங்கு மூன்றுல கத்தினுள் ளோரும் பரவு தீர்த்தமாம் பைம்புனற் கேணி,[5]வாங்கு தெண்டிரை வேலைமே கலை சூழ் வையகந் தனைக் கெய்திய படியாய், ஓங்கு தன்வடி[5]வாய்நிகழ்ந் தென்றும் உள்ள தொன்றுல காணியென் றுளதால். எங

1156 அந்த மின்றிநல் லறம்புரிந் தளிக்கும்[6]அன்னை தன்திருக் காமக் கோட் டத்தில், வந்து சந்திர சூரியர் மீது வழிக்கொ ளாததன் மருங் குபோ தலினுல், சந்த மாதிர மயங்கிஎம் மருங்கும் சாயை மாறிய தன்திசை மயக்கம், இந்த மாநிலத் தவரெலாம் காண என்றும் உள்ள தொன் றின்றும்அங் குளதால். எச

1157 கன்னி நன்னெடுங் காப்புடை வரைப்பில் காஞ்சி யாந்திரு நதிக் கரை மருங்கு, சென்னி யிற்பிறை அணிந்தவர் விரும்பும் திருப்பெ

பா. பே. 1. அன்பி னலவறி. 2 யாஅக்கும்வாத்துக. அதன்வாத்து. 3. திருமகள். 4. பாங்கின் 5 வலம்புரிநாறு. 6 அம்மை.

ரும்பெய ரிருக்கையில் திகழ்ந்து, மன்னு வெங்கதிர் மீதெழும் போதும் மறித்து மேற்கடல் தலைவிழும் போதும் தன்னி ழற்பிரி யாதவண் காஞ்சித் தானம் மேவிய மேன்மையும் உடைத்தால். எரி

1158 மறைக ளால்துதித் தருந்தவம் புரிந்து மாறி லாஇய மந்தலை நின்று, முறைமை யால்வரும் பூசனை செய்ய முனிவர் வானவர் முதல் உயி ரெல்லாம், நிறையும் அன்பினுல் அர்ச்சனை செய்ய நீடு காமங்கள் அவரவர்க் கருளி, இறைவர் தாம்மகிழ்ந் தருளிய பதிகள் எண்ணி றந்தஅத் திருநகர் எல்லை. எசு

1159 மன்னு கின்றஅத் திருநகர் வரைப்பின் மண்ணில் மிக்கதோர் நன்மையி னுலே, துன்னும் யானையைத் தூற்றில்வாழ் முயல்முன் தூரக்க எய்திய தொலைவில்ஊக் கத்தால், தன்னி லத்துநின் றகற்று தல் செய்யும் தானம் அன்றியுந் தனுவெழுந் தரணி, எந்நி லத்தினுங் காண்பரும் இறவாத் தானம் என்றிவை இயல்பினில் உடைத்தால்.

1160 ஈண்டு தீவினை யாவையும் நீக்கி இன்ப மேதரும் புண்ணிய தீர்த் தம், வேண்டி னர்தமக் கிட்டசித் தியதாய் விளங்கு தீர்த்தம்நன் மங் கல தீர்த்தம், நீண்ட காப்புடைத் தீர்த்தம்மூன் றுலகில் நிகழ்ந்த சாருவ தீர்த்தமே முதலா, ஆண்டு நீடிய தீர்த்தம்எண் ணிலவும் அமர நாட்டவர் ஆடுதல் ஒழியார். எஅ

1161 தாள தொன்றினில் மூன்றுபூ மலருந் தமனி யச்செழுந் தாம ரைத் தடமும், நீள வார்புனல் குடதிசை யோடி நீர்க ரக்குமா நதி யுடன் நீடு, நாள லர்ந்தசெங் குவளைபைங் கமலம் நண்ப கல்தரு பாடலம் அன்றிக், காள மேகம்ஒப் பாள்உறை வரைப்பில் கண்ப டாதகா யாப்புளி உளதால். எக

1162 சாயை முன்பிணிக் குங்கிணி றென்று தஞ்ச முண்ணின்நஞ் சாந் தடம் ஒன்று, மாயை இன்றிவந் துள்ளடைந் தார்கள் வான ரத்துரு வாம்பிலம் ஒன்று, மேய அவ்வுரு நீங்கிடக் குளிக்கும் விளங்கு பொய் கையும் ஒன்றுவிண் ணவரோ, டாய இன்பம்உய்க் கும்பிலம் ஒன்றே டனைய ஆகிய அதிசயம் பலவால். அ0

1163 அஞ்சு வன்கரத் தாறிழி மதத்தோர் ஆண் நிற்கவும் அரையி ருட் டிரியும், மஞ்சு நீள்வது போலுமா மேனி மலர்ப்ப தங்களில் வண்சிலம் பொலிப்ப, நஞ்சு பில்கெயிற் றரவவெற் றரையின் நாம மூன்றிலைப் படையுடைப் பிள்ளை, எஞ்ச லின்றிமூன் றிரியவும் குன் றும் எழிந்த வேலவன் காக்கவும் இசையும். அக

1164 சத்தி தற்பர சித்தயோ கிகளும் சாத கத்தனித் தலைவரும் முதலா, நித்தம் எய்திய ஆயுள்மெய்த் தவர்கள் நீடு வாழ்திருப் பூடியும் அனேகம், சித்தர் விஞ்சையர் இயக்கர்கந் தருவர் திகழ்ந்து

மன்னுவார் செண்டுகை ஏந்தி, வித்த கக்கரி மேற்கொளுங் காரி மேவு செண்டணை வெளியும்ஒன் றுளதால். அஉ

1165 வந்த டைந்தவர் தம்முரு மாய மற்று ளாரைத்தாங் காண்பிடம் உளது, சிந்தை யோகத்து முனிவர்யோ கினிகள் சேரும் யோகபீ டமும்உள தென்றும், அந்த மில்அறம் புரப்பவள் கோயில் ஆன போகபீ டமும்உள தாகும், எந்தை யார்மகிழ் காஞ்சிநீ டெல்லை எல்லை இல்லன உள்ளவா றறிவார். அங

1166 தூண்டு சோதியொன் றெழுந்திருள் துரக்கும் சுரர்கள் வந்துசூழ் உருத்திர சோலை, வேண்டி ஞர்கள்தம் பிறப்பினை ஒழிக்கும் மெய்ந்நெ றிக்கணின் றூர்கள்தாம் விரும்பித், தீண்டில் யாவையுஞ் செம்பொனுக் குவதோர் சிலையும்உண் டுரைசெய்வதற் கரிதால், ஆண்ட நாயகி சமயங்கள் ஆறும் அகில யோனியும் அளிக்கும்அந் நகரம். அச

1167 என்றும் உள்ளஇந் நகர்கலி யுகத்தில் இலங்கு வேற்கரி காற் பெரு வளத்தோன், வன்தி றற்புலி இமயமால் வரைமேல் வைக்க ஏகுவோன் தனக்கிதன் வளமை, சென்று வேடன்முன் கண்டுரை செய்யத் திருந்து காதகான் குட்பட வகுத்துக், குன்று போலுமா மதில்புடை போக்கிக் குடியி ருத்தின கொள்கையின் விளங்கும். அடு

வேறு

1168 தண்காஞ்சி மென்சினைப்பூங் கொம்ப ராடல் சார்ந்தசைய அதன் மருங்கு சுரும்பு தாழ்ந்து, பண்காஞ்சி இசைபாடும் பழன வேலிப் பணைமருதம் புடையுடைத்தாய்ப் பாரில் நீடும், திண்காஞ்சி நகர் நொச்சி இஞ்சி சூழ்ந்த செழுங்கிடங்கு திருமறைகள் ஒலிக்குந் தெய்வ, வண்காஞ்சி அல்குல்மலி வல்லி காக்க வளர்கருணைக் கடலுலகம் சூழ்ந்தால் மானும். அசு

1169 கோந்தலர்பூங் குழல்இமயக் கொம்பு கம்பர் கொள்ளும்பூ சணை குறித்த தானங் காக்க, மந்திரமா மதில்அகழி அவர்தாந் தந்த வாய்மைஆ கமவிதியின் வகுப்புப் போலும், அந்தமில்சீர்க் காஞ்சியைவந் தடைந்தார்க் கன்றி அடைகளங்கம் அறுப்பரிதென் றறிந்து சூழ, வந்தணைந்து தன்கறுப்பும் உவர்ப்பும் நீக்கும் மாகடலும் போலும்மலர்க் கிடங்கு மாதோ. அள

1170 ஆங்குவளர் எயிலினுடன் விளங்கும் வாயில் அப்பதியில் வாழ் பெரியோர் உள்ளம் போல, ஒங்குநிலைத் தன்மையவாய் அகிலம் உய்ய உமைபாகர் அருள்செய்த ஒழுக்க மல்லால், தீங்குநெறி அடையாத தடையு மாகிச் செந்நெறிக்கண் நிகழ்வாய்மை திருந்து மார்க்கம், தாங் குலவ நிலவிவளர் ஒளியால் என்றும் தடநெடுவான் அளப்பனவாந் தகைய வாகும். அஅ

1171 மாறுபெறல் அருங்கனக மாடம் நீடு மணிமறுகும் நெடுங்தெருவும் வளத்தில் வந்த, ஆறுபயில் ஆவணவீ திகளும் மற்றும் அமைந்தநகர் அணிவரைகள் நடுவு போக்கிக், கூறுபடு நவகண்ட மன்றி மல்கக் கொண்டஅனே கங்கண்ட மாகி அன்ன, வேறுருமண் ணுலகுதனில் உளதால் என்ன விளங்கியமா லோகநிலே மேவிற் றன்றே. அசு

1172 பாகமருங் கிருபுடையும் உயர்ந்து நீண்ட படரொளிமா ளிகை நிரைகள் பயில்மென் கூந்தல், தோகையர்தங் குழாம்அலையத் தூக்கு முத்தின் சுடர்க்கோவைக் குளிர்நீர்மை துதைந்த வீதி, மாகமிடை ஒளிதழைப்ப மன்னி நீடு மருங்குதா ரகைஅலைய வரம்பில் வண்ண, மேகமிடை கிழித்தொழுகும் தெய்வக் கங்கை மேல்நதிகள் பலமண் மேல்விளங்கி ஒக்கும். கூ0

1173 கிளரொளிச்செங் கனகமயந் தானுய் மாடு கிழ்நிலேயோர் நீலச்சோ பானம் பூணக், கொளஅமைத்து மீதொருபாற் கன்ன சாலே குலவயிரத் தாலமைத்த கொள்கை யாலே, அளவில்சுடர்ப் பிழம்பு பானுர் தம்மைத் தேடி அகழ்ந்தேனம் ஆனனும் அன்ன மாகி, வளர் விசும்பில் எழுந்தானும் போல நீடுமாளிகையும் உளமற்று மறுகு தோறும். கூக

1174 மின்பொலிபன் மணிமிடைந்த தவள மாட மிசைப்பயில்சந் திரகாந்தம் விசும்பின் மீது, பொன்புரையும் செக்கர்நிறப் பொழுது தோன்றும் புனிற்றுமதி கண்டுருகிப் பொழிந்த நீரால், வன்புலியின் உரியாடைத் திருவ கம்பர் வளர்சடையும் இளம்பிறையும் கண்டு கும்பிட், டன்புருகி மெய்பொழியக் கண்ணீர் வாரும் அடியவரும் அனேயவுள அலகி லாத. கூஉ

1175 முகிலுரிஞ்சுங் கொடிதொடுத்த முடிய வாகும் முழுப்பளிங்கின் மாளிகைகள் மூற்றுஞ் சுற்றும், நிகரில்சரா சரங்களெல்லாம் நிழலி னுலே நிறைதலினுல் நிறைதவஞ்செய் இமயப் பாவை, நகில்உழுத சுவடும்வளைத் தழும்பும் பூண்ட நாயகனுர் நான்முகற்குப் படைக்க நல்கும், அகிலயோ னிகளெல்லாம் அமைத்து வைத்த அரும்பெரும் பண் டாரநிலே அனேய வாகும். கூந

1176 பொற்களப மாளிகைமேல் முன்றில் நின்று பூங்கழங்கு மணிப் பந்தும் போற்றி ஆடும், விற்புருவக் கொடிமடவார் கலன்கள் சிந்தி விழுவனவும் கெழுவுதுணே மேவு மாதர், அற்புமுதிர் கலவியினிற் பரிந்து சிந்தும் அணிமணிச்சே டியர்தொகுக்கும் அவையும் ஆகி, நற் கனக மழையன்றிக் காஞ்சி எல்லே நவமணிமா ரியும்பொழியும் நாளும் நாளும். கூச

1177 பூமகளுக் குறையுளெனுந் தகைய வான பொன்மாடத் தரமியங் கள் பொலிய நின்று, மாமகரக் குழைமகளிர் மைந்த ரங்கண் வந்தேறு முன்நறுநீர் வண்ட லாடத், தூமணிப்பொன் புனைநாளத்

கo
பா.பே.1. விளக்கி ஆங்கும்
2 மாளிகைகளை உளமற்று.

துருத்தி வீசுஞ் சுடர்விடுசெங் குங்குமநீர்த் துவலை தோய்ந்த, காமர் மணி நாகிகையின் மருங்கு தங்குங் கருமுகில்கள் செம்முகில்க ளாகிக் காட்டும். கூடு

1178 இமம்மலிய எடுத்தநெடு |வரைகள் போல 2இலங்குசுதைத் தவளமா ளிகைநீள் கோட்டுச், சிமையடையுஞ் சோபான நிரையும் விண்ணும் தெரிவரிய 3தூய்மையினுல் அவற்றுட் சேர்ந்து, தமர் களுடன் இழிந்தேறு மைந்தர் மாதர் தங்களையும் விசும்பிடைநின் றிழியா நிற்கும், அமரரையும் அரமகளிர் தமையும் வெவ்வே றறி வரிதாந் தகைமையன அனேகம் அங்கண். கூசு

1179 அரவநெடுந் தேர்வீதி அருகு மாடத் தணிமணிக்கோ புரத்தயலே 4வியல்வாய் நீண்ட, விரவுமர கதச்சோதி வேதித் திண்ணை விளிம் பின்ஒளி துளும்புமுறைப் படிமீ தேறும், குரவலருங் குழல்மடவார் அடியில்ஊட்டுங் குழம்படுத்த செம்பஞ்சின் சுவட்டுக் கோலம், பரவை நெடுந் தரங்கமிசை விளங்கித் தோன்றும் பவளநறுந் தளிரனைய பலவும் பாங்கர். கூள

1180 வேம்புசினக் களிற்றதிர்வும் மாவின் ஆர்ப்பும் வியன்நெடுந்தேர்க் காலிசைப்பும் விழவ முத, அம்பொன்மணி வீதிகளில் அரங்கி லாடும் அரிவையர்தூ புரவொலியோ டமையும் இம்பர், உம்பரின்இந் திரன் களிற்றின் முழக்குந் தெய்வ உயர்இரவி மாக்கலிப்பும் அயனூர் தித் தேர், பம்பிசையும் விமானத்துள் ஆடுந் தெய்வப் பாவையர்தூ புர அரவத் துடனே பல்கும். கூஅ

1181 அருமறையந் தணர்மன்னும் இருக்கை யான ஆகுதியின் புகை அடுத்த அம்பொன் மாடப், பெருமறுகு தொறும்வேள்விச் சாலை எங்கும் பெறும்அவிப்பா கங்கொடுக்கும் பெற்றி மேலோர், வரு முறைமை அழைக்கவிடு மந்திரம்எம் மருங்கும் வானவர்நா யகர் திருவே கம்பர் முன்றில், திருமலிபொற் கோபுரத்து நெருங்கும் எல் லாத் தேவரையும் அணித்தாகக் கொண்டு செல்லும். கூக

1182 அரசர்குலப் பெருந்தெருவும் தெற்றி முற்றத் தாயுதங்கள் பயி லும்வியல் இடமும் அங்கண், புரசைமதக் கரிகளொடு புரவி ஏறும் பொற்புடைய வீதிகளும் பொலிய எங்கும், விரைசெய்நறுந் தொடை அலங்கல் குமார் செய்யும்5வியப்புறுசெய் தொழில்கண்டு விஞ்சை விண்ணோர், நிரைசெறியும் விமானவூர் திகளின் மேலும் நிலமிசையும் பலமுறையும் நிரந்து நீங்கார். கஂஂ

1183 வேயிலுமிழும் பன்மணிப்பூண் வணிக மாக்கள் விரவுநிதி வளம் பெருக்கும் வெறுக்கை மிக்க, வயின்நிலவு மணிக்கடைமா நகர்கள் எல்லாம் வனப்புடைய பொருட்குலங்கள் மலித லாலே, கயிலைமலை யார்கச்சி ஆல யங்கள் கம்பமுமே வியதன்மை கண்டு போற்றப்,

பா. வே. 1 வையே. 2. தினைத்தாவி வள. 3. நீரினையிலவற்றுள். 4. தியல்பரப் 5. ஈடும் புறுதகப்.

பயிலுமுருப் பலகொண்டு நிதிக்கோன் தங்கப் பயில்அளகா புரிவ
குத்த பரிசு காட்டும். கஅக

1184 விழவுமலி திருக்காஞ்சி வரைப்பின் வேளாண் விழுக்குடிமைப்
பெருஞ்செல்வர் விளங்கும் வேணி, மழஇளவெண் திங்கள்புனை கம்
பர் செம்பொன் மலைவல்லிக் களித்தவள ருணவின் மூலம், தொழு
வுலகு பெறுமவள்தா னருளப் பெற்றுத் தொன்னிலத்து மன்னுபயிர்
வேத வாய்மை, உழவுதொழி லாற்பெருக்கி உயிர்கள் எல்லாம் ஓங்க
வருந் தருமவினைக் குளரால் என்றும். கஅஉ

1185 ஓங்கியதாற் குலத்தொவ்வாப் புணர்வில் தம்மில் உயர்ந்தனவும்
இழிந்தனவும் ஆன சாதி, தாங்குழுமிப் பிறந்தகுல பேதம் எல்லாம்
தந்தகைமைக் கேற்றதனி இடங்கள் மேவி, ஆங்குநிறை இலைபயின்று
மரபின் ஆற்ற அடுத்தவினைத் தொழின்முறைமை வழாமை நீடு,
பாங்குவளர் இருக்கைநிலை பலவும் எல்லாம் பண்புநீ டியவுரிமைப்
பால அன்றே. கஅங

வேறு

1186 ஆதி மூதெயில் அந்நகர் மன்னிய
சோதி நீள்மணித் தூபமும் தீபமும்
கோதில் பல்லிய முங்கொடி யும்பயில்
வீதி நாளும் ஒழியா விழாவணி. கஅச

1187 வாயில் எங்கணுந் தோரணம் மாமதில்
ஞாயில் எங்கணுஞ் சூழ்முகில் நாண்மதி
தோயில் எங்கணும் மங்கலம் தொண்டர்சூழ்
கோயில் எங்கணும் உம்பர் குலக்குழாம். கஅரு

1188 வேத வேதியர் வேள்வியே தீயன
மாத ரோதி மலரே பிணியன
காதல் வீதிவி லக்கே கவலைய
சூத மாதவி யேபுறஞ் சூழ்வன. கஅசு

1189 சாய லார்கள் நுசுப்பே தளர்வன
ஆய மாடக் கொடியே அசைவன
சேய ஓடைக் களிறே திகைப்பன
பாய சோலைத் தருவே பயத்தன. கஅள

1190 அண்ணலார் அன்பர் அன்பேமுன் ஆர்த்தன
தண்ண றுஞ்செழுந் தாதே துகள்வன
வண்ண நீள்மணி மாலையே தாழ்வன
எண்ணில் குங்குமச் சேறே இழுக்கின. கஅஅ

1191 வென்றி வானவர் தாம்விரை யாடலும்
என்றும் உள்ளவர் வாழும் இயற்கையும்

நன்றும் உள்ளத்து நண்ணினர் வேட்கைகள்
ஒன்றும் அங்கொழி யாவகை உய்ப்பது. கoசு

1192 புரங்க டந்தவர் காஞ்சி புரம்புகழ்
பரம்பு நீள்புவ னம்பதி னுன்கிணும்
வரம்பில் போக வனப்பின் வளமெலாம்
நிரம்பு கொள்கலம் என்ன நிறைந்ததால். கசo

வேறு

1193 அவ்வகைய திருநகரம் அதன்கண்ஒரு மருங்குறைவார்
இவ்வுலகிற் பிறப்பினுல் எகாலிக் குலத்துள்ளார்
செவ்வியஅன் புடைமனத்தார் சீலத்தின் நெறிநின்றார்
மைவிரவு கண்டரடி வழித்தொண்டர் உளராளுர். கசக

1194 மண்ணின்மிசை வந்ததற்பின் மனம்முதலா யினமூன்றும்
அண்ணலார் சேவடியின் சார்வாக அணைவிப்பார்
புண்ணியமெய்த் தொண்டர்திருக் குறிப்பறிந்து போற்றுநிலைத்
திண்மையினுல் திருக்குறிப்புத் தொண்டரெனுஞ் சிறப்பினுர். கசஉ

1195 தேரொலிக்க மாவொலிக்கத் திசையொலிக்கும் புகழ்க்காஞ்சி
ஊரொலிக்கும் பெருவண்ணு ரெனவொண்ணு உண்மையினுர்
நீரோலிக்க அராஇரைக்க நிலாமுகிழ்க்குந் திருமுடியார்
பேரொலிக்க உருகுமவர்க் கொலிப்பர்பெரு விருப்பினெடும். கசங

1196 தேசுடைய மலர்க்கமலச் சேவடியார் அடியார்தந்
தூசுடைய துகள்மாசு கழிப்பார்போல் தொல்லிவினை
ஆசுடைய மலமூன்றும் அணையவரும் பெரும்பிறவி
மாசுதனை விடக்கழித்து வருநாளில் அங்கொருநாள். கசச

1197 பொன்னிமயப் பொருப்பரையன் பயந்தருளும் பூங்கொடிதன்
நன்னிலைமை அன்றளக்க எழுந்தருளும் நம்பெருமான்
தன்னுடைய அடியவர்தந் தனித்தொண்டர் தம்முடைய
அந்நிலைமை கண்டன்பர்க் கருள்புரிவான் வந்தணைவான். கசஞ

1198 சீதம்மலி காலத்துத் திருக்குறிப்புத் தொண்டர்பால்
ஆதுலராய் மெலிந்துமிக அழுக்கடைந்த கந்தையுடன்
மாதவமே டந்தாங்கி மாலறியா மலரடிகள்
கோதடையா மனத்தவர்முன் குறுநடைகள் கொளக்குறுகி. கசசு

1199 திருமேனி வெண்ணீறு திகழ்ந்தொளிருங் கோலத்துக்
கருமேக மெனஅழுக்குக் கந்தையுடன் எழுந்தருளி
வருமேனி அருந்தவரைக் கண்டுமனம் மகிழ்ந்தெதிர்கொண்
டுருமேவும் மயிர்ப்புளகம் உளவாகப் பணிந்தெழுந்தார். கசஎ

பா.பே.1. வேட்கையுள்.

1199 எய்துமவர் குறிப்பறிந்தே இன்மொழிகள் பலமொழிந்து
"செய்தவத்தீர்! திருமேனி இளைத்திருந்த தென்"என்று
கைதொழுது "கந்தையினைத் தந்தருளும் கழுவ"என
மைதிகழ்கண் டங்கரந்த மாதவத்தோர் அருள்செய்வார். ககஅ

1200 "இக்கந்தை அழுக்கேறி எடுக்கவொணு தெனினும்பான்
மெய்க்கொண்ட குளிர்க்குடைந்து விடமாட்டேன்மேல்கடற்பால்
அக்குன்றம் வெங்கதிரோன் அணைவதன்முன் தருவீரேல்
கைக்கொண்டு போயொலித்துக் கொடுவாரும் கடி"தென்றார். ககக

1201 "தந்தருளும் இக்கந்தை தாழாதே ஒலித்துமக்கின்(று)
அந்திபடு வதன்முன்னந் தருகின்றேன்" ளன அவரும்
"கந்தைஇது ஒலித்துணக்கிக் கடிதின்றே தாரீரேல்
இந்தவுடற் கிடர்செய்தீர்" என்றுகொடுத் தேகினார். கஉ0

1202 குறித்தபொழு தேதொலித்துக் கொடுப்பதற்குக் கொடுபோந்து
வெறித்தடநீர்த் துறையின்கண் மாசெறிந்து மிகப்புழுக்கிப்
பிறித்தொலிக்கப் புகும்அளவில் பெரும்பகல்போய்ப் பின்பகலாய்
மறிக்கரத்தார் திருவருளால் மழைஎழுந்து பொழிந்திடுமால். கஉக

1203 திசைமயங்க வெளியடைத்த செறிமுகிலின் குழாம்மிடைந்து
மிசைசொரியும் புனல்தாரை விழிதுழையா வகைமிடைய
அசைவுடைய மனத்தன்பர் அறிவுமறந் தருந்தவர்பால்
இசைவுநினைந் தழிந்"தினியான் என்செய்கேன்" எனநின்றார். கஉஉ

1204 "ஓவாதே பொழியுமழை ஒருகால்விட் டொழியும்"எனக்
காவாலி திருத்தொண்டர் தனிநின்றார் விடக்காணார்
மேவார்போற் கங்குல்வர "மெய்குளிரும் விழுத்தவர்பால்
ஆ!ஆ!என் குற்றேவல் அழிந்தவா" எனவிழுந்தார். கஉங

1205 "விழுந்தமழை ஒழியாது மெய்த்தவர்சொல் லியஎல்லை
கழிந்ததுமுன் பொலித்துமனைக் காற்றேற்க அறிந்திலேன்
செழுந்தவர்தந் திருமேனி குளிர்காணுந் தீங்கிழைத்த
தொழும்பனேற் கினியிதுவே செயல்"என்று துணிந்தெழுவார். கஉச

1206 "கந்தைபுடைத் திடஎற்றுங் கற்பாறை மிசைத்தலையைச்
சிந்தஎடுத் தெற்றுவன்"என் றணைந்துசெழும் பாறைமிசைத்
தந்தலையைப் புடைத்தெற்ற அப்பாறை தன்மருங்கு
வந்தெழுந்து பிடித்ததணி வளைத்தழும்பர் மலர்ச்செங்கை. கஉஞ

1207 வானிறைந்த புனல்மழைபோய் மலர்மழையா யிடமருங்கு
தேனிறைந்த மலரிதழித் திருமுடியார் பொருவிடையின்
மேனிறைந்த துணைவியொடும் வெளிநின்றார், மெய்த்தொண்டர்
தானிறைந்த அன்புருகக் கைதொழுது தனிநின்றார். கஉசு

1209 முன்னவரை நோக்கோக்கி முக்கண்ணர் "மூவுலகும்
நின்நிலைமை அறிவித்தோம் நீயும்இனி நீடியநம்
மன்னுலகு பிரியாது வைகுவாய்" எனஅருளி
அங்நிலையே எழுந்தருளி அணிஏகாம் பரமணைந்தார். கஉள

1210 சீர்நிலவு திருக்குறிப்புத் தொண்டர்திருத் தொழில்போற்றிப்
பார்குலவத் தந்தைதா ளறஎறிந்தார் பரிசுரைக்கேன்
பேரருளின் மெய்த்தொண்டர் பித்தனெனப் பிதற்றுதலால்
ஆருலகில் இதனுண்மை அறிந்துரைக்க இசைந்தெழுவார். கஉஅ

ஆ திருவிருத்தம் கூடுக

20. சண்டேசுரநாயனார் புராணம்

1211 பூந்தண் பொன்னி எந்நாளும் பொய்யா தளிக்கும் புனல்நாட்டு
வாய்ந்த மண்ணித் தென்கரையில் மன்ன முன்னுள் வரைகிழிய
ஏந்தும் அயில்வேல் நிலைகாட்டி இமையோர் இகல்வெம் பகைகடக்கும்
சேந்தன் அளித்த திருமறையோர் மூதூர் செல்வச் சேய்ஞலூர். க

1212 செம்மை வெண்ணீற் றொருருமையினர் இரண்டு பிறப்பின் சிறப்பினர்
மும்மைத் தழலோம் பியநெறியார் நான்கு வேதம் முறைபயின்றார்
தம்மை ஐந்து புலனும்பின் செல்லும் தகையார் அறுதொழிலின்
மெய்ம்மை ஒழுக்கம் ஏழுலகும் போற்றும் மறையோர் விளங்குவது.

1213 கோதில் மான்தோல் புரிமுந்நூல் குலவு மார்பிற் குழைக்குடுமி
ஓதுகிடைசூழ் சிறுவர்களும் உதவும் பெருமை ஆசானும்
போதின் விளங்குந் தாரகையும் மதியும் போலப் புணர்மடங்கள்
மீது முழங்கு முகிலொதுங்க வேத ஒலிகள் முழங்குவன. ங

1214 யாகம் நிலவும் சாலிதொறும் மறையோர் ஈந்த அவியுணவின்
பாகம் நுகர வருமாலும் அயனும் ஊரும் படர்சிறைப்புள்
மாகம் இகந்து வந்திருக்கும் சேக்கை எனவும் வானவர்கோன்
நாகம் அணையும் கந்தெனவும் நாட்டும் யூப ஈட்டமுள. ச

1215 தீம்பா லொழுகப் பொழுதுதொறும் ஓம தேனுச் செல்வனவும்
தாம்பா டியசா மங்கணிப்போர் சமிதை இடக்கொண் டணைவனவும்
பூம்பா சடைநீர்த் தடம்மூழ்கி மறையோர் மகளிர் புகுவனவும்
ஆம்பான் மையினில் விளங்குவன அணிநீள் மறுகு பலவுமுள. ஞ

1216 வாழ்பொற் பதிமற் றதன்மருங்கு மண்ணித் திரைகள் வயல்வரம்பின்
தாழ்வில் தரளம் சொரிகுலைப்பால் சமைத்த யாகத் தடஞ்சாலை
சூழ்வைப் பிடங்கள் நெருங்கியுள தொடங்கு சடங்கு முடித்தேறும்
வேள்வித் தலைவர் பெருந்தேர்கள் விண்ணோர் ஏறும் விமானங்கள். கூ

பா.தே.11 ஸ்ரீமஹாதேவி. 2. புடைசூழ்.

1217 மடையில் கழுநீர் செழுநீர்சூழ் வயலில் சாலிக் கதிர்க்கற்றைப்
புடையில் சுரும்பு மிடைகமுகு புனலில் பரம்பு பூம்பாளை
அடையில் பயிலுந் தாமரைநீள் அலரில் துயிலுங் கயல்கள்வழி
நடையில் படர்மென் கொடிமௌவல் நனையில் திகழுஞ் சினைக்காஞ்சி.

1218 சென்னி அபயன் குலோத்துங்கச் சோழன் தில்லைத் திருவெல்லை
பொன்னின் மயமாக் கியவளவர் போரே றென்றும் புவிகாக்கும்
மன்னர் பெருமான் அநபாயன் வருந்தொல் மரபின் முடிசூட்டுந்
தன்மை நிலவு பதிஐந்தின் ஒன்றாய் மீடும் தகைத்தவ்வூர். அ

1219 பண்ணின் பயனும் நல்லிசையும் பாலின் பயனும் இன்சுவையும்
கண்ணின் பயனும் பெருகொளியும் கருத்தின் பயனும் எழுத்தஞ்சும்
விண்ணின் பயனும் பொழிமழையும் வேதப் பயனும் சைவமும்போல்
மண்ணின் பயனும் அப்பதியின் வளத்தின் பெருமை வரம்புடைத்தோ.

1220 பெருமை பிறங்கும் அப்பதியின் மறையோர் தம்முள் பெருமனைவாழ்
தருமம் நிலவு காசிபகோத் திரத்துத் தலைமை சால்மரபில்
அருமை மணியும் அளித்ததுவே நஞ்சும் அளிக்கும் அரவுபோல்
இருமை வினைக்கும் ஒருவடிவாம் எச்ச தத்தன் உளனனன். கம

1221 மற்றை மறையோன் திருமனைவி வாய்ந்த மரபின் வந்துதித்தாள்
சுற்றம் விரும்பும் இல்வாழ்க்கைத் தொழிலாள் உலகில் துணைப்புதல்வர்
பெற்று விளங்குந் தவஞ்செய்தாள் பெறும்பே றெல்லைப் பயன்பெறுவாள்
பற்றை எழியும் பற்றவரச் சார்பா யுள்ள[1]பவித்திரையாம். கக

1222 நன்றி புரியும் அவர்தம்பால் நன்மை மறையின் துறைவிளங்க
என்றும் மறையோர் குலம்பெருக ஏழு புவனங் களும்உய்ய
மன்றில் நடஞ்செய் பவர்சைவ வாய்மை வளர மாதவத்தோர்
வென்றி விளங்க வந்துதயம் செய்தார் விசார சருமனார். கஉ

1223 ஐந்து வருடம் அவர்க்கணைய அங்கம் ஆறும் உடன்நிறைந்த
சந்த மறைகள் உட்படமூன் தலைவர் மொழிந்த ஆகமங்கள்
முந்தை அறிவின் தொடர்ச்சியினல்[3]முகைக்கு மலரின் வாசம்போல்
சிந்தை மலர உடன்மலரும் செவ்வி உணர்வு சிறந்ததால். கஙு

1224 நிகழும் முறைமை ஆண்டேழும் நிரம்பும் பருவம் வந்தெய்தப்
புகழும் பெருமை உபநயனப் பொருவில் சடங்கு முடித்தறிவின்
இகழு நெறிய அல்லாத எல்லாம் இயைந்த எனினுந்தம்
திகழு மரபின் ஒதுவிக்கும் செய்கை பயந்தார் செய்வித்தார். கச

1225 குலவு மறையும் பலகலையும் கொளுத்து வதன்மூன் கொண்டமைந்து
நிலவும் உணர்வின் திறங்கண்டு நிறுவும் மறையோர் அதிசயித்தார்
அலகில் கலியின் பொருட்கெல்லை ஆடுங் கழலே எனக்கொண்ட
செலவு மிகுந்த சிந்தையினில் தெளிந்தார் சிறிய பெருந்தகையார். கஞ

ப.வே. 1. பவித்திரையாள். 2. பவர்சைவ. 3. முகைந்த.

1226 "நடமே புரியுஞ் சேவடியார் நம்மை உடையார்" எனுமெய்ம்மை
உடனே தோன்றும் உணர்வின்கண் ஓழியா தூறும் வழியன்பின்
கடனே இயல்பாய் முயற்றிவருங் காதல் மேன்மேல் எழுங்கருத்தின்
திடம்நேர் நிற்குஞ் செம்மலார் திகழு நாளில் ஆங்கொருநாள். ககூ

1227 ஓது கிடையி னுடன்போவார் ஊர்ஆன் நிரையி னுடன்புக்க
போது மற்றங் கொருபுனிற்று போற்றும் அவன்மேல் மருப்போச்ச
யாதும் ஒன்றுங் கூசாதே எடுத்த கோல்கொண் டவன்புடைப்ப
மீது சென்று மிகும்பரிவால் வெகுண்டு விலக்கி மெய்யுணர்ந்து. கஎ

1228 பாவுங் கலைகள் ஆகமநூல் பரப்பின் தொகுதிப் பான்மையினுல்
மேவும் பெருமை அருமறைகள் மூல மாக விளங்குலகில்
யாவுந் தெளிந்தபொருள்நிலையே எய்த உணர்ந்த உள்ளத்தால்
ஆவின் பெருமை உள்ளபடி அறிந்தார் ஆயற் கருள்செய்வார். கஅ

1229 "தங்கும் அகில யோனிகட்கும் மேலாம் பெருமைத் தகைமையன
பொங்கு புனித தீர்த்தங்கள் எல்லாம் என்றும் பொருந்துவன
துங்க அமரர் திருமுனிவர் கணங்கள் சூழ்ந்து பிரியாத
அங்கம் அனைத்துந் தாமுடைய அல்ல வோநல் ஆனினங்கள். கக

1230 ஆய சிறப்பி னுற்பெற்ற அன்றே மன்றுள் நடம்புரியும்
நாய னுர்க்கு வளர்மதியும் நதியும் நகுவெண் தலைத்தொடையும்
மேய வேணித் திருமுடிமேல் விரும்பி ஆடி அருளுதற்குத்
தூய திருமஞ் சனம்ஐந்தும் அளிக்கும் உரிமைச் சுரபிகள் தாம். உ0

1231 சீல முடைய கோக்குலங்கள் சிறக்குந் தகைமைத் தேவருடன்
கால முழுதும் உலகினைத்துங் காக்கும் முதற்கா ரணராகும்
நீல கண்டர் செய்யசடை நிருத்தர் சாத்து நீறுதரும்
மூலம் அவதா ரஞ்செய்யும் மூர்த்தம் என்றுல் முடிவென்னே. உக

1232 உள்ளுந் தகைமை இனிப்பிறவே னுளவே உழைமான் மறிக்கன்று
துள்ளுங் கரத்தார் அணிபணியின் சுடர்சூழ் மணிகள் சுரநதிநீர்
தெள்ளுஞ் சடையார் தேவர்கள்தம் பிராட்டி யுடனே சேரமிசைக்
கொள்ளுஞ் சினமால் விடைத்தேவர் குலமன் றேஇச் சுரபிகுலம்".

1233 என்றின் னனவே பலவும்கினைந் "திதத்தின் வழியே மேய்த்திந்தக்
கன்று பயில்ஆன் நிரைகாக்கும் இதன்மேல் இல்லை கடன்இதுவே
மன்றுள் ஆடுஞ் சேவடிகள் வழுத்து நெறியா வதும்"என்று
நின்ற ஆயன் தனைநோக்கி "நிரைமேய்ப் பொழிக நீ"என்பார். உங

1234 "யானே இனிஇந் நிரைமேய்ப்பன்" என்றார் அஞ்சி இடைமகனும்
தானேர் இறைஞ்சி விட்டகன்றான் தாமும் மறையோர் இசைவினுல்
ஆனே நெருங்கும் பேராயம் அளிப்பா ராகிப் பைங்கூழ்க்கு
வானே என்ன நிரைகாக்க வந்தார் தெய்வ மறைச்சிறுவர். உச

பா. பே. 1. பொருளினில செய்த.

1235 கோலும் கயிறும் கொண்டுகுழைக் குடுமி அலையக் குலவுமான்
தோலும் நூலும் சிறுமார்பில் துவள அரைக்கோ வணஞ்சுடரப்
பாலும் பயனும் பெருகவரும் பசுக்கள் மேய்க்கும் பான்மையினால்
சாலும் புல்லின் அவைவேண்டுந் தினையும் மிசையுந் தலைச்சென்று.உரு

1236 பதவு காலங் களில்மேய்த்தும் பறித்தும் அளித்தும் பரிவகற்றி
இதமுண் துறையுள் நற்றண்ணீர் ஊட்டி அச்சம் எதிர்நீக்கி
அதர்நல் லனமுன் செலநீழல் அமர்வித் தமுத மதுரப்பால்
உதவும் பொழுது பிழையாமல் உடையோர் இல்லந் தொறும்உய்த்தார்.

1237 மண்ணிக் கரையின் வளர்புறவின் மாடும் படுகர் மருங்கினிலும்
தண்நித் திலநீர் மருதத்தண் டலைசூழ் குலையின் சார்பினிலும்
எண்ணிற் பெருகு நிரைமேய்த்துச் சமிதை யுடன்மேல் எரிகொண்டு
நண்ணிக் கங்குல் முன்புகுதும் நன்னாள் பலவாம் அந்நாளில். உள

1238 ஆய நிரையின் குலமெல்லாம் அழகின் விளங்கி மிகப்பல்கி
மேய இனிய புல்லுணவும் விரும்பு புனலும் ஆர்தலினால்
ஏய மனங்கொள் பெருமகிழ்ச்சி3நெய்தி இரவும் நன்பகலும்
தூய தீம்பால் மடிபெருகிச் சொரிய முலைகள் சுரந்தனவால். உஅ

1239 பூணுந் தொழில்வேள் விச்சடங்கு புரிய ஓம தேனுக்கள்
காணும் பொலிவின் முன்னையினும் அனேக மடங்கு கறப்பனவாய்ப்
"பேணுந் தகுதி அன்பால்இப் பிரம சாரி மேய்த்ததற்பின்
மாணுந் திறத்த வான"என மறையோர் எல்லாம் மனமகிழ்ந்தார்.

1240 அனைத்துத் திறத்தும் ஆனினங்கள் அணைந்த மகிழ்ச்சி அளவின்றி
மனைக்கண் கன்று பிரிந்தாலும் மருவுஞ் சிறிய மறைக்கன்று
தனைக்கண் டருகு சார்ந்துருகித் தாயாந் தன்மை நிலைமையவாய்க்
கனைத்துச் சுரந்து முலைக்கண்கள் கறவா மேபால் பொழிந்தனவால்.

1241 தம்மை அணைந்த ஆன்முலைப்பால் தாமே பொழியக் கண்டுவந்து
செம்மை நெறியே உறுமனத்தில் திருமஞ் சனமாங் குறிப்புணர்ந்தே
எம்மை யுடைய வள்ளலார் எய்த நினைந்து தெளிந்ததனில்
மெய்ம்மைச் சிவனார் பூசனையை விரும்பும் வேட்கை விரைந்தெழலும்.

1242 அங்கண் முன்னை அர்ச்சனையின் அளவின் தொடர்ச்சி விளையாட்டாப்
பொங்கும் அன்பால் மண்ணிமணல் புளினக் குறையில் ஆத்தியின்கீழ்ச்
செங்கண் விடையார் திருமேனி மணலால் ஆக்கிச் சிவாலயமும்
துங்க நீடு கோபுரமும் சுற்று லயமும் வகுத்தமைத்தார். ஙஉ

1243 ஆத்தி மலரும் செழுந்தளிரும் முதலா அருகு வளர்புறவில்
பூத்த மலர்கள் தாந்தெரிந்து புனிதர் சடிலத் திருமுடிமேல்
சாத்த லாகுந் திருப்பள்ளித் தாமம் பலவுந் தாங்கொய்து
கோத்த இலைப்பூங் கூடையினில் கொணர்ந்து மணந்தங் கிடவைத்தார்.

பா.பே.1 மெய்த்துப் பறித்தும். 3 எய்த.
2. நிருண் மெய்ய ஈர்ணண்ணீர்.

1244 நல்ல நவகும் பங்கள்பெற நாடிக் கொண்டு நாணற்பூங்
கொல்லை யிடத்தும் குறைமறைவும் மேவுங் கோக்கள் உடன்கூட
ஒல்லை அணைந்து பாலாக்கள் ஒன்றுக் கொருகா லாகஎதிர்
செல்ல அவையும் கனைத்துமுலை தீண்டச்செழும்பால் பொழிந்தனவால்.

1245 கொண்டு மடித்த குடநிறையக் கொணர்ந்து விரும்புங் கொள்கையினுல்
அண்டர் பெருமான் வெண்மணல்ஆ லயத்துள் அவைமுன் தாபித்து
வண்டு மருவுந் திருப்பள்ளித் தாமங் கொண்டு வரன்முறையே
பண்டைப்பரிவால் அருச்சித்துப் பாலின் திருமஞ் சனம்ஆட்டி. நடு

1246 மீள மீள இவ்வண்ணம் வெண்பால் சொரிமஞ் சனம்ஆட்ட
ஆள உடையார் தம்முடைய அன்பர் அன்பின் பாலுளதாய்
மூள அமர்ந்த நயப்பாடு முதிர்ந்த பற்று முற்றச்சூழ்
கோளம் அதனில் உள்நிறைந்து குறித்த பூசைகொள்கின்றார். நசு

1247 பெருமை பிறங்குஞ் சேய்ஞலூர்ப் பிள்ளை யார்தம் உள்ளத்தில்
ஒருமை நினைவால் உம்பர்பிரான் உவக்கும் பூசை உறுப்பான
திருமஞ் சனமே முதலவற்றில் தேடா தனஅன் பினில்நிரப்பி
வரும்அந் நெறியே அர்ச்சனைசெய் தருளி வணங்கி மகிழ்கின்றார். நஎ

1248 இறையோன் அடிக்கீழ் மறையவனர் எடுத்துத் திருமஞ் சனம்ஆட்டும்
நிறைபூ சனைக்குக்குடங்கள்பால் நிரம்பச் சொரிந்து நிரைக்குலங்கள்
குறைபா டின்றி மடிபெருகக் குவிந்த முலைப்பால் குறைவின்றி
மறையோர் மனையின் முன்புதரும் வளங்கள் பொலிய வைகுமால்.

1249 செயலிப் படியே பலகாலுஞ் சிறந்த பூசை செய்வதற்கு
முயல்வுற் றதுவே திருவிளையாட் டாக முன்நூல் அணிமார்பர்
இயல்பில் புரியும் மற்றிதனைக் கண்டித் திறத்தை அறியாத
அயல்மற் றொருவன் அப்பதியில் அந்த ணாளர்க் கறிவித்தான். நகூ

1250 அச்சொற் கேட்ட அருமறையோர் "ஆயன் அறியான் என்றவற்றின்
இச்சை வழியே யான்மேய்ப்பேன் என்றெம் பசுக்கள் தமைக்கறந்து
பொச்சம் ஒழுகு மாணவகன் பொல்லாங் குரைக்க அவன்தாதை
எச்ச தத்தன் தனையழைமின்" என்றார் அவையில் இருந்தார்கள். சO

1251 ஆங்கு மருங்கு நின்றார்கள் அவ்வந் தணன்தன் திருமனையின்
பாங்கு சென்று மற்றவனை அழைத்துக் கொண்டுவரப்பரந்த [செய்
ஓங்கு சபையோர் அவனைப்பார்த்(து) "ஊரா னிரைமேய்த் துன்மகன்
தீங்கு தன்னைக் கேள்"என்று புகுந்த பரிசு செப்புவார். சக

1252 அந்தண் மறையோர் ஆகுதிக்குக் கறக்கும் பசுக்க ளானவெலாம்
சிந்தை மகிழ்ந்து பரிவினுல் திரளக் கொடுபோய் மேய்ப்பான்போல்
கந்தம் மலியும் புனல்மண்ணி மணலிற் கறந்து பாலுருத்து
வந்த பரிசே செய்கின்றான்என்றான்" என்று வாய்மொழிந்தார்.

பா.பே. 1 பயில்வால். 2. எதிரனின்றார்.
3. ஆடல்தொழும்பரசு. 4 பரப்பகன்றி. 5 அந்தணனார்.
6 என்று மறையோர் வாய்மொழிந்தார்.

1253 மறையோர் மொழியக் கேட்டஞ்சிச் "சிறுமா ணவகன் செய்தஇது
இறையும் நான்முன் பறிந்திலேன் இதற்கு முன்பு புகுந்ததனை
நிறையும் பெருமை அந்தணர்காள்! பொறுக்க வேண்டும் நீங்கள்" எனக்
குறைகொண் டிறைஞ்சி "இனிப்புகுதிற் குற்றம் எனதே யாம்" என்றான்.

1254 அந்த ணாளர் தமைவிடைகொண் டந்தி தொழுது மனைபுகுந்து
"வந்த பழியொன்" றெனநினைந்தே மகனார் தமக்கு வாய்நேரான்
"இந்த நிலைமை அறிவேன்" என் றிரவு கழிந்து நிரைமேய்க்க
மைந்த னர்தாம் போயினபின் மறைந்து சென்றான் மறைமுதியோன்.

1255 சென்ற மறையோன் திருமகனார் சிறந்த ஊர்ஆன் நிரைகொடுபோய்
மன்றல் மருவும் புறவின்கண் மேய்ப்பார் மண்ணி மணற்குறையில்
அன்று திரளக் கொடுசென்ற அதனை அறிந்து மறைந்தப்பால்
நின்ற குரவின் மிசையேறி நிகழ்வ தறிய ஒளித்திருந்தான். சரு

1256 அன்பு புரியும் பிரமசா ரிகளும் மூழ்கி அரனார்க்கு
முன்பு போல மணற்கோயில் ஆக்கி முகைமென் மலர்கொய்து
பின்பு வரும்ஆன் மூலிபொழிபால் பெருகுங் குடங்கள் பேணுமிடத்
தன்பாற் கொணர்ந்து தாபித்துப் பிறவும் வேண்டு வனசமைத்தார்.

1257 நின்ற விதியின் விளையாட்டால் நிறைந்த அரும்பூ சனைதொடங்கி
ஒன்றும் உள்ளத் துண்மையினுல் உடைய நாதன் திருமுடிமேல்
மன்றல் விரவுந் திருப்பள்ளித் தாமஞ் சாத்தி மஞ்சனமா
நன்று நிறைதீம் பாற்குடங்கள் எடுத்து நயப்புற் றூட்டுதலும். சள

1258 பரவ மேன்மேல் எழும்பரிவும் பழைய பான்மை மிகும்பண்பும்
விரவும் மேதக் கவர்தம்பால் மேவும் பெருமை வெளிப்படுப்பான்
அரவம் மேவுஞ் சடைமுடியார் அருளாம் என்ன அறிவழிந்து
குரவ மேவு மூதுமறையோன் கோப மேவும் படிகண்டான். சஅ

1259 கண்ட போதே விரைந்திழிந்து கடிது சென்று கைத்தண்டு
கொண்டு மகனார் திருமுதுகில் புடைத்துக் கொடிதாம் மொழிகூறத்
தொண்டு புரியுஞ் சிறியபெருந் தோன்ற லார்தம் பெருமான்மேல்
மண்டு காதல் அருச்சனையின் வைத்தார் மற்றிவ் றறிந்திலரால். சக

1260 மேலாம் பெரியோர் பலகாலும் வெகுண்டோன் அடிக்க வேறுணரார்
பாலார் திருமஞ் சனம்ஆட்டும் பணியிற் சலியா ததுகண்டு
மாலா மறையோன் மிகச்செயிர்த்து வைத்த திருமஞ் சனக்குடப்பால்
காலால் இடறிச் சிந்தினன் கையாற் கடைமைத் தகுநின்றான். நிக

1261 சிந்தும் பொழுதில் அதுநோக்குஞ் சிறுவர் இறையில் தீயோனைத்
தந்தை எனவே அறிந்தவன்தன் தாள்கள் சிந்தும் தகுதியினுல்
முந்தை மருங்கு கிடந்தகோல் எடுத்தார்க் கதுவே முறைமையினுல்
வந்து மழுவா யிடனறிந்தார் மண்மேல் வீழ்ந்தான் மறையோனும். நிக

ப. பே. 1. ஸ்ரவ மேன்மேல். 2. சலியா ததுகண்டு.

1262 எறிந்த அதுவே அர்ச்சனையில் இடையூ றகற்றும் படையாக
மறிந்த தாதை இருதாளும் துணித்த மைந்தர் பூசனையில்
அறிந்த இடையூ றகற்றினராய் முன்போல் அருச்சித் திடப்புகலும்
செறிந்த சடைநீள் முடியாரும் தேவி யோடும் விடையேறி. நிஉ

1263 பூத கணங்கள் புடைசூழப் புராண முனிவர் புத்தேளிர்
வேத மொழிகள் எடுத்தேத்த விமல மூர்த்தி திருவுள்ளம்
காதல் கூர வெளிப்படலும் கண்டு தொழுது மனங்களித்துப்
பாத மலர்கள் மேல்விழுந்தார் பத்தி முதிர்ந்த பாலகனர். நிக

1264 தொடுத்த இதழி சூழ்சடையார் தூணைத்தாள் நிழற்கீழ் விழுந்தவரை
எடுத்து நோக்கி "நம்போருட்டால் ஈன்ற தாதை விழஎறிந்தாய்
அடுத்த தாதை இனியுனக்கு நாம்"என் றருள்செய் தணைத்தருளி
மடுத்த கருணை யால்தடவி உச்சி மோந்து மகிழ்ந்தருள. நிச

1265 செங்கண் விடையார் திருமலர்க்கை தீண்டப் பெற்ற சிறுவனர்
அங்கண் மாயை யாக்கையின்மேல் அளவின் றுயர்ந்த சிவமயமாய்ப்
பொங்கி எழுந்த திருவருளின் மூழ்கிப் பூமேல் அயன்முதலாம்
துங்க அமரர் துதிசெய்யச் சூழ்ந்த ஒளியில் தோன்றினர். நிந

1266 அண்டர் பிரானுந் தொண்டர்தமக் கதிப னுக்கி "அனைத்தும்நாம்
உண்ட கலமும் உடுப்பனவும் சூடு வனவும் உனக்காகச்
சண்டீ சனுமாம் பதந்தந்தோம்" என்றங் கவர்பொற் றடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை மாலை வாங்கிச் சூட்டினர். நிசு

1267 எல்லா உலகும் ஆர்ப்பெடுப்ப எங்கும் மலர்மா ரிகள்பொழியப்
பல்லா யிரவர் கணநாதர் பாடி ஆடிக் களிபயிலச்
சொல்லார் மறைகள் துதிசெய்யச் சூழ்பல் லியங்கள் எழச்சைவ
நல்லா ரேங்க நாயகமாம் நங்கள் பெருமான் தொழுதணைந்தார். நிஎ

1268 ஞாலம் அறியப் பிழைபுரிந்து நம்பர் அருளால் நான்மறையின்
சீலந் திகழுஞ் சேய்ஞலூர்ப் பிள்ளை யார்தந் திருக்கையில்
கோல மழுவால் ஏறுண்டு குற்றம் நீங்கிச் சுற்றமுடன்
மூல முதல்வர் சிவலோகம் எய்தப் பெற்றுன் முதுமறையோன். நிஅ

1269 வந்து மிகைசெய் தாதைதாள் மழுவால் துணித்த மறைச்சிறுவர்
அந்த உடம்பு தன்னுடனே அரனர் மகனர் ஆயினர்
இந்த நிலைமை அறிந்தாரார் ஈறி லாதார் தமக்கன்பு
தந்த அடியார் செய்தனவே தவமாம் அன்றே சாற்றுங்கால். நிகூ

1270 நேசம் நிறைந்த உள்ளத்தால் நீலம் நிறைந்த மணிகண்டத்
தீச னடியார் பெருமையினை எல்லா உயிரும் தொழஎடுத்துத்
தேசம் உய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன்
வாச மலர்மென் கழல்வணங்க வந்த பிறப்பை வணங்குவாம். கூ

ஆ திருவிருத்தம் க,உஎ0.

நு. திருநின்ற சருக்கம்

21. திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம்

1271 திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டின்[1] நெறிவாழ
வருஞானத் தவமுனிவர்[2] வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவ லுறுகின்றேன் பேருலகில்
ஒருநாவுக் குரைசெய்ய ஒண்ணுமை உணராதேன். க

1272 தொன்மைமுறை வருமண்ணின் துகளன்றித் துகளில்லா
[3]நன்மைநிலை ஒழுக்கத்து நலஞ்சிறந்த[4] குடிமல்கிச்
சென்னிமதி புனையவளர் மணிமாடச் செழும்பதிகள்
மன்னிநிறைந் துளதுதிரு முனைப்பாடி வளநாடு. உ

1273 [5]புனப்பண்ணை மணியிலெடும் புறவின்நறும்[6] புதுமலரின்
[7]கனப்பெண்ணில் திரைசுமந்து கரைமருங்கு பெரும்பகட்டேர்
இனப்பண்ணை உழும்பண்ணை எறிந்துலவி எவ்வுலகும்
வனப்பெண்ண வரும்பெண்ணை மாநதிபாய் வளம்பெருகும். ங

1274 காலெல்லாந் தகட்டுவரால் கரும்பெல்லாங் கண்பொழிதேன்
பாலெல்லாங் கதிர்ச்சாலி பரப்பெல்லாங் குலைக்கமுகு
சாலெல்லாந் தரளம்நிரை தடமெல்லாஞ் செங்கழுநீர்
மேலெல்லாம் அகிற்றூபம் விருந்தெல்லாந் திருந்துமனை. ச

1275 கடைஞர்மிடை வயற்குறைத்த[8] கரும்புகுறை பொழிகொழுஞ்சா
றிடைதொடுத்த தேன்கிழிய இழிந்தொழுகு நீத்தமுடன்
புடைபரந்து ஞிமிறெழிப்பப் புதுப்புனல்போல் மடையுடைப்ப
உடைமடையக் கரும்படுகட் டியினடைப்ப ஊர்கள்தொறும். ஞ

1276 கருங்கதலிப் பெருங்குலைகள் களிற்றுக்கைம் முகங்காட்ட
மருங்குவளர் கதிர்ச்சேந்நெல் வயப்புரவி முகங்காட்டப்
பெருஞ்சகடு தேர்காட்ட வினைஞர்ஆர்ப் போலிபிறங்க
நெருங்கியசா துரங்கபல நிகர்ப்பனவாம் நிறைமருதம். சு

1277 நறையாற்றுங் கமுகுநவ மணிக்கழுத்தி னுடன்கூந்தல்
பொறையாற்ற மகளிரெனப் புறம்பலைதண் டலைவேலித்
துறையாற்ற[9] மணிவண்ண சுரும்பிரைக்கும் பெரும்பெண்ணை
நிறையாற்று நீர்க்கொழுந்து படர்ந்தேறு நிலைமையதால். எ

1278 மருமேவு[9] மலர்மேய மாகடலி னுட்படியும்
உருமேகம் எனமண்டி உகைத்தகருங் கன்றுபோல்

9. மலர்மேல்வாழ்வோன்.

பா. நே. 1. நெறிவழுக்கு. 2. வாய்மை நிகழ் வாகீசர்.
3 நன்னிலை 4 குடிபல்கி. 5. புனற்பண்ணை 6 புதுமலரும்
7 கனப்பெண்ணினில். 8 கரும்புகுறை தினைக்கொழுஞ்சாறு. 9. மணிசெறிய

1 பருமேனிச் செங்கண்வசால் மடிமுட்டப் பால்சொரியும்
கருமேதி தனைக்கொண்டு கரைபுரள்வ திரைவாவி. அ

1279 மோய்யளிசூழ் நிரைநீல முழுவலயங் களின்அலையச்
செய்யதளிர் நறுவிரலின் செழுமுகையின் நகஞ்சிறப்ப
மெய்யொளியின் நிழற்காணும் ஆடியென வெண்மதியை
வையமகள்கையணைத்தாற் போலுயர்வ மலர்ச்சோலை. கூ

1280 எயில்குலவும் வளம்பதிகள் எங்கும்மணந் தங்கும்வயற்
பயிர்க்கண்வியல் இடங்கள்பல பரந்துயர்நெற் கூடுகளும்
வெயிற்கதிர்மென் குழைமகளிர் விரவியமா டமும்மேவி
மயிற்குலமும் முகிற்குலமும் மாறுட மருங்காடும். கo

1281 மறந்தருதி நெறிமாற மணிகண்டர் வாய்மைநெறி
அறந்தருநா வுக்கரசும் ஆலால சுந்தரரும்
பிறந்தருள உளதானல் நம்மளவோ பேருலகில்
சிறந்ததிரு முனைப்பாடித் திறம்பாடுஞ் சீர்ப்பாடு. கக

1282 இவ்வகைய திருநாட்டில் எனைப்பலவூர் களுமென்றும்
மெய்வளங்கள் ஓங்கவரும் மேன்மையன ஆங்கவற்றுள்
சைவநெறி ஏழுலகும் பாலிக்குந் தன்மையினால்
தெய்வநெறிச் சிவம்பெருக்குந் திருவாமூர் திருவாமூர். கஉ

1283 ஆங்குவன முலைகள்சுமந் தணங்குவன மகளிரிடை
ஏங்குவன நூபுரங்கள் இரங்குவன மணிக்காஞ்சி
ஓங்குவன மாடநிரை ஒழுகுவன வழுவில்அறம்
நீங்குவன தீங்குநெறி நெருங்குவன பெருங்குடிகள். கங

1284 மலர்நீலம் வயல்காட்டும் மைஞ்ஞீலம் மதிகாட்டும்
அலர்நீடு மறுகாட்டும் அணியூசல் பலகாட்டும்
புலர்நீலம் இருள்காட்டும் பொழுதுழவர் ஒலிகாட்டும்
கலநீடு மனைகாட்டும் கரைகாட்டாப் பெருவளங்கள். கச

1285 தலத்தின்கண் விளங்கியஅத் தனிப்பதியில் அனைத்துயித
நலத்தின்கண் வழுவாத நடைமருவுங் குடிநாப்பண்
விலக்கின்மனை ஒழுக்கத்தின் மேதக்க நிலைவேளாண்
குலத்தின்கண் வரும்பெருமைக் குறுக்கையர்தங் குடிவிளங்கும். கஙு

1286 அக்குடியின் மேல்தோன்ற லாயபெருந் தன்மையினர்
மிக்கமனை அறம்புரிந்து விருந்தளிக்கும் மேன்மையினர்
ஒக்கல்வளர் பெருஞ்சிறப்பின் உளரானர் உளரானர்
திக்குநில வும்பெருமை திகழவரும் புகழனர். கசு

1287 புகழனர் தமக்குரிமைப் பொருவில்குலக் குடியின்கண்
மகிழவரு மணம்புணர்ந்த மாதினியார் மணிவயிற்றில்

பா. பே. 1 வருமணி. 2 கையணைத்தால். 3 எயிற்குலவு மனம்பதிகள். 4 நெறிமன்னு. 5 நிலவேழும். 6 நன்மையினால். 7 திலம் பெறுவ. 8 நடைமருவி

நிகழுமலர்ச் செங்கமல நிரையிதழின் அகவயினில்
திகழவருந் திருவனைய திலகவதி யார்பிறந்தார். கள

1288 திலகவதி யார்பிறந்து சிலமுறையாண் டகன்றதற்பின்
அலகில்கலைத் துறைதழைப்ப அருந்தவத்தோர் நெறிவாழ
உலகில்வரும் இருள்நீக்கி ஒளிவிளங்கு கதிர்போல
மலருமருள் நீக்கியார் வந்தவதா ரஞ்செய்தார். கஅ

1289 மாதினியார் திருவயிற்றின் மன்னியசீர்ப் புகழனார்
காதலனார் உதித்ததற்பின் கடன்முறைமை மங்கலங்கள்
மேதகுசூல் வினைசிறப்ப விரும்பியபா ராட்டினுடன்
ஏதமில்பல் கிளைபோற்ற இளங்குழவிப் பதங்கடந்தார். கக

1290 மருணீக்கி யார்சென்னி மயிர்நீக்கும் மணவினையும்
தெருள்நீர்ப்பன் மாந்தரெலாம் மகிழ்சிறப்பச் செய்ததற்பின்
பொருள்நீத்தங் கொளவீசிப் புலன்கோளுவ மனம்முகிழ்த்த
சுருள்நீக்கி மலர்விக்கும் கலைபயிலத் தொடங்குவித்தார். கo

1291 1தந்தைதாய் களிமகிழ்ச்சி 2தலைசிறக்க முறைமையினால்
2சிந்தைமலர்ந் தெழும்உணர்வில் செழுங்கலையின் திறங்களெல்லாம்
முந்துமுறை மையில்பயின்று முதிரஅறி வெதிரும்வகை
மைந்தனார் மறுஒழித்த இளம்பிறைபோல் வளர்கின்றார். கக

1292 அந்நாளில் திலகவதி யாருக்காண் டாறிரண்டின்
முன்னுக ஒத்தகுல முதல்வேளாண் குடித்தலைவர்
மின்னுச்செஞ் சடைஅண்ணல் மெய்யடிமை விருப்புடையார்
பொன்னுரும் மணிமௌலிப் புரவலன்பால் அருளுடையார். கக

1293 ஆண்டகைமைத் தொழிலின்கண் அடலரியே றெனவுள்ளார்
காண்டகைய பெருவனப்பிற் கலிப்பகையார் எனும்பெயரார்
பூண்டகொடைப் புகழனார் பாற்பொருவின் மகள்கொள்ள
வேண்டிஎழுங் காதலினால் மேலோரைச் செலவிட்டார். கங

1294 அணங்கனைய திலகவதி யார்தம்மை ஆங்கவர்க்கு
மணம்பேசி வந்தவரும் வந்தபடி அறிவிப்பக்
குணம்பேசிக் குலம்பேசிக் கோதில்சீர்ப் புகழனார்
பணங்கொளர வகல்அல்குல் பைந்தொடியை மணம்நேர்ந்தார். கச

1295 கன்னிதிருத் தாதையார் மணம்இசைவு கலிப்பகையார்
முன்அணைந்தார் அறிவிப்ப வதுவைவினை முடிப்பதன்முன்
மன்னவற்கு வடபுலத்தோர் மாறேற்க 4மற்றவர்மேல்
அன்னவர்க்கு விடைகொடுத்தான் அவ்வினைமேல் அவர்அகன்றார். கங

1296 வேந்தற்குற் றுழிவினைமேல் வெஞ்சமத்தில் விடைகொண்டு
போந்தவரும் பொருபடையும் உடன்கொண்டு சிலநாளில்

1. தன்னையார் 2. தலைசிறக்கும் முறைமையினால்.

காய்ந்தசினப் பகைப்புலத்தைக் [1]கலந்துகடுஞ் சமர்க்கடலை
நீந்துவார் நெடுநாள்கள் நிறைவெம்போர்த் துறைவிளைத்தார். உசு

1297 ஆயகா லிடைஇப்பால் அணங்கனையாள் தனைப்பயந்த
தூயகுலப் புகழனார் தொன்றுதொடு நிலையாமை
மேயவினைப் பயத்தாலே இவ்வுலகை விட்டகலத்
தீயஅரும்[2]பிணியுழந்து விண்ணுலகிற் சென்றடைந்தார். உஎ

1298 மற்றவர்தாம் உயிர்நீப்ப மனைவியார் மாதினியார்
சுற்றமுடன் மக்களையுந் துகளாக வேநீத்துப்
பெற்றிமையால் உடன்என்றும் பிரியாத உலகெய்தும்
கற்புநெறி வழுவாமல் கணவனு டன்சென்றார். உஅ

1299 தாதையா ரும்பயந்த தாயாரும்[3]இறந்ததற்பின்
மாதரார் திலகவதி யாரும்அவர் பின்வந்த
காதலனார் மருணீக்கி யாரும்மனக் கவலையினால்
பேதுறுநற் சுற்றமொடும் பெருந்துயரில் அழுந்தினார். உக

1300 ஒருவாறு பெருங்கிளைஞர் மனந்தேற்றத் துயரொழிந்து
பெருவானம் அடைந்தவர்க்குச் செய்கடன்கள் பெருக்கினார்
மருவார்மேல் மன்னவற்கா மலையப்போங் கலிப்பகையார்
பொருவாரும் போர்க்களத்தில் உயிர்கொடுத்துப் புகழ்கொண்டார். உo

1301 வெம்முனைமேற் கலிப்பகையார் வேல்வேந்தன் ஏவப்போய்
அம்முனையில் பகைமுருக்கி அமருலகம் ஆள்வதற்குத்
தம்முடைய கடன்கழித்த பெருவார்த்தை தலைஞாற்றச்
செம்மலர்மேல் திருவனைய திலகவதி யார்கேட்டார். உக

1302 "எந்தையும்எம் அனையும்அவர்க் கெனைக்கொடுக்க இசைந்தார்கள்
அந்தமுறை யால்அவர்க்கே[4]உரியதுநான் ஆதலினால்
இந்தவுயிர் அவருயிரோ[5]டிசைவிப்பன்" எனத்துணிய
வந்தவர்தம் அடியினைமேல் மருணீக்கி யார்விழுந்தார். உஉ

1303 அந்நிலையில் மிகப்புலம்பி "அன்னையும்அத் தனும்அகன்ற
பின்னையும்நான் உமைவணங்கப் பெறுதலினால் உயிர்தரித்தேன்
என்னைஇனித் தனிக்கைவிட் டேகுவீர் எனில்யானும்
முன்னம்உயிர் நீப்பன்"என மொழிந்திடரின் அழுந்தினார். உஉ

1304 "தம்பியார் உளராக வேண்டும்"என வைத்ததயா
உம்பருல கணையவுறு நிலைவிலக்க உயிர்தாங்கி
அம்பொன்மணி நூல்தாங்கா தனைத்துயிர்க்கும் அருள்தாங்கி
இம்பர்மனைத் தவம்புரிந்து திலகவதி யாரிருந்தார். உச

1305 மாசின்மனத் துயரொழிய மருணீக்கி யார்நிரம்பித்
தேசுநெறி நிலையாமை கண்டடங்கள் செய்வாராய்க்

பா. பே: 1. கடந்துகடந்து. 2. பிணியுழன்றுவிண்ணுலகை.
3. மாய்ந்ததற்பின். 4. உரியதுதான். 5. இசைப்பன் என வேதுணிய.

காசினிமேற் புகழ்விளங்க நிதியளித்துக் கருணையினுல்
ஆசில்அறச் சாலைகளும் தண்ணீர்ப்பந் தரும்அமைப்பார். நடு

1306 காவளர்த்தும் குளந்தொட்டும் கடப்பாடு வழுவாமல்
மேவினர்க்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தும் விருந்தளித்தும்
நாவலர்க்கு வளம்பெருக நல்கியும்நா னிலத்துள்ளோர்
யாவருக்குந் தவிராத ஈகைவினைத் துறைநின்றார். நசு

1307 நில்லாத உலகியல்பு கண்டு"நிலே யாவாழ்க்கை
அல்லேன்"என் றறத்துறந்து சமயங்க ளானவற்றின்
நல்லாறுதெரிந்துணர நம்பர்அரு ளாமையினுல்
கொல்லாமைமேறைந்துறையும் அமண்சமயங்கூறுகுவார். நஎ

1308 பாடலிபுத் திரமென்னும் பதிஅணைந்து சமண்பள்ளி
மாடணைந்தார் வல்லமணர் மருங்கணைந்து மற்றவர்க்கு
4"வீடறியும் நெறிஇதுவே" எனமெய்போல் தங்களுடன்
5கூடவரும் உணர்வுகொளக் குறிபலவுங் கொளுவினுர். நஅ

1309 அங்கவரும் அமண்சமயத் தருங்கலூ லானவெலாம்
பொங்கும்உணர் வுறப்பயின்றே அந்நெறியிற் புலன்சிறப்பத்
6துங்கமுழு உடற்சமணர் சூழ்ந்துமகிழ் வார்அவர்க்குத்
தங்களின்மே லாந்தருமச் சேனர்எனும் பெயர்கொடுத்தார். நக

1310 அத்துறையின் மீக்கூரும் அமைதியினுல் அகலிடத்தில்
7சித்தநிலே அறியாத தேரையும்வா தின்கண்
உய்த்தவுணர் வினில்லென்றே உலகின்கண் ஒளியுடைய
வித்தகராய் அமண்சமயத் தலைமையினில் மேம்பட்டார். சஎ

வேறு

1311 அந்நெறியின் மிக்கார் அவரொழுக ஆன்றதவச்
செந்நெறியின் வைகுந் திலகவதி யார்தாமும்
தொன்னெறியின் சுற்றத் தொடர்பொழியத் தூயசிவ
நன்னெறியே சேர்வதற்கு நாதனருள் நண்ணுவார். சக

1312 பேராத பாசப்9பிணிப்பொழியப் பிஞ்ஞகன்பால்
ஆராத அன்புபெற ஆதரித்த அம்மடவார்
நீரார் கெடிலவட நீள்கரையில் நீடுபெருஞ்
சீரார் திருவதிகை வீரட்டானஞ் சேர்ந்தார். சஉ

1313 சென்றுதிரு வீரட்டா னத்திருந்த செம்பவளக்
குன்றை அடிபணிந்து கோதில் சிவசின்னம்
அன்று முதல்தாங்கி ஆர்வமுறத் தங்கையால்
துன்று திருப்பணிகள் செய்யத் தொடங்கினுர். சந

பா.பே.கக 1. தெரிந்துணர்ந்து. 2. மறைந்துறையும் : மறந்துறையும்
3. இறுகினர். 4. வீடையும். 5. கூடி வரும். 6. துங்கமுறு.
7. அரையரையர். 8. தெரியாத். 9. பிணியொழிய.

வேறு

1314 புலர்வதன்முன் திருவலகு பணிமாறிப் புனிறகன்ற
நலம்மலிஆன் சாணத்தால் நன்குதிரு மெழுக்கிட்டு
மலர்கொய்து கொடுவந்து மாலைகளுந் தொடுத்தமைத்துப்
பலர்புகழும் பண்பினுல் திருப்பணிகள் பலசெய்தார். சச

1315 நாளும்மிகும் பணிசெய்தங் குறைந்தடையும் நன்னுளில்
கேளுறும்அன் புறவொழுகுங் கேண்மையினர் பின்பிறந்தார்
கோளுறுதீவினைமுந்தப் பரசமயங் குறித்ததற்கு
மூளும்மனக் கவலையினுல் முற்றவருந் துயருழந்து. சஞ

1316 தூண்டுதவ விளக்கனையார் சுடரொளியைத் தொழு"தென்னை
ஆண்டருளும் நீராகில் அடியேன்பின் வந்தவினை
ஈண்டுவினைப் பரசமயக் குழிநின்றும் எடுத்தாள
வேண்டும்"எனப் பலமுறையும் விண்ணப்பஞ் செய்தனரால். சசு

1317 "தவமென்று பாயிடுக்கித் தலைபறித்து நின்றுண்ணும்
அவமொன்று நெறிவீழ்வான் வீழாமே அருளும்"எனச்
சிவமொன்று நெறிநின்ற திலகவதி யார்பரவப்
பவமொன்றும் வினைதீர்ப்பார் திருவுள்ளம் பற்றுவார். சள

1318 மன்னுதபோ தனியார்க்குக் கனவின்கண் மழவிடையார்
"உன்னுடைய மனக்கவலை ஒழிநீஉன் உடன்பிறந்தான்
முன்னமே முனியாகி எமைஅடையத் தவம்முயன்றான்
அன்னவனை இனிச்சூலை மடித்தாள்வம்" எனஅருளி. சஅ

1319 பண்டுபுரி நற்றவத்துப் பழுதினைள விறைவழுவும்
தொண்டைஆ ளதித்தொடங்குஞ் சூலைவே தனைதன்னைக்
கண்தருநெற் றியர்அருளக் கடுங்கனல்போல் அடுங்கொடிய
மண்டுபெருஞ் சூலைஅவர் வயிற்றினிடைப் புக்கதால். சகூ

1320 அடைவிலமண் புரிதரும சேனர்வயிற் றடையும்அது
வடஅனலும் கொடுவிடமும் வச்சிரமும் பிறவுமாம்
கொடியஎலாம் ஒன்றுகும் எனக்குடரின் அகங்குடையப்
படருழந்து நடுங்கிஅமண் பாழியறை யிடைவிழுந்தார். ஞo

1321 அச்சமயத் திடைத்தாமுன் அதிகரித்து வாய்த்துவரும்
விச்சைகளால் தடுத்திடவும் மேன்மேலும்மிகமூடுகி
உச்சமுற வேதனைநோய் ஓங்கிஎழ ஆங்கவர்தாம்
நச்சரவின் விடந்தலைக்கொண் டெனமயங்கி நவையுற்றார். ஞக

1322 அவர்நிலைமை கண்டதற்பின் அமண்கையர் பலர்ஈண்டிக்
"கவர்கின்ற விடம்போல்முன் கண்டறியாக் கொடுஞ்சூலை

பா.வே. 1. நாருமவர்மனை 3. மூளுமவரும் 4. துயருழந்தார் 5. தடுத்திடவும் 6. வயிற்றினிடையும் 7. படருழந்து 8. வாய்த்துவரும் 9. அனல்மூடுகி.

இவர்தமக்கு வந்ததினி யாதுசெயல்'' என்றழிந்தார்
தவமென்று விணைபெருக்கிச் சார்பல்லா நெறிசார்வார். நிஉ

1323 புண்தலைவன் முருட்டமணர் புலர்த்துசெயல் அறியாது
குண்டிகைநீர் மந்திரித்தும் குடிப்பித்தும் தணியாமை
கண்டுமிகப் பீலிகொடு கால்அளவுந் தடவிடவும்
பண்டையினும் நோவுமிகப் பரிபவத்தால் இடர்உழந்தார். நிங

1324 தாவாத புகழ்த்தரும சேனருக்கு வந்தபிணி
ஓவாது நின்றிடலும் ஒழியாமை உணர்ந்தாராய்
''ஆ!ஆ!நாம் என்செய்கோம்'' என்றழிந்த மனத்தினராய்ப்
போவார்கள் ''இதுநமமாற் போக்கரிதாம்'' எனப்புகன்று. நிச

1325 குண்டர்களுங் கைவிட்டார் கொடுஞ்சூலை கைக்கொண்டு
மண்டிமிக மேன்மேலும் முடுகுதலால் மதிமயங்கிப்
பண்டையுற வுணர்ந்தார்க்குத் திலகவதி யார்உளராக்
கொண்டவர்பால் ஊட்டுவான் தணிவிட்டார் குறிப்புணர்த்த. நிடி

1326 ஆங்கவன்போய்த் திருவதிகை தணிஅடைய அருந்தவத்தார்
பூங்கமழ்நந் தனவனத்தின் புறம்பணியக் கண்டிறைஞ்சி
''ஈங்குயான் உமக்கிளையார் ஏவலினல் வந்த''தெனத்
''தீங்குளவோ'' எனவினவ மற்றவனுஞ் செப்புவான். நிசு

1327 ''கொல்லாது சூலைநோய் குடர்முடக்கித் தீராமை
எல்லாருங் கைவிட்டார் இதுசெயல்என் முன்பிறந்த
நல்லாள்பால் சென்றியம்பி நான்உய்யும் படிகேட்டிங்
கல்லாகும் பொழுதணைவாய் என்றார்''என் றறிவித்தான். நிஎ

1328 என்றவன்முன் கூறுதலும் ''யான்அங்குன் னுடன்போந்து
நன்றறியா அமண்பாழி நண்ணுகிலேன் எனும்மாற்றம்
சென்றவனுக் குரை''என்று திலகவதி யார்மொழிய
அன்றவனும் மீண்டுபோய்ப் புகுந்தபடி அவர்க்குரைத்தான். நிஅ

1329 அவ்வார்த்தை கேட்டலுமே அயர்வெய்தி ''இதற்கினியான்
எவ்வாறு செய்வன்''என ஈசரருள் கூடுதலால்
''ஒவ்வாஇப் புன்சமயத் தொழியாஇத் துயரொழியச்
செவ்வாறு சேர்திலக வதியார்தாள் சேர்வன்''என.

1330 எடுத்தமனக் கருத்துய்ய எழுதலால் எழுமுயற்சி
அடுத்தலுமே அயர்வொதுங்கத் திருவதிகை அணைவதனுக்
குடுத்துழலும் பாயொழிய உறியுறுகுண் டிகையொழியத்
தொடுத்தபீ லியும்ஒழியப் போவதற்குத் துணிந்தெழுந்தார். கூ

1331 பொய்தருமால் உள்ளத்துப் புன்சமணர் இடங்கழிந்து
மெய்தருவான் நெறியடைவார் வெண்புடைவை மெய்சூழ்ந்து

பா.வே.1. சார்வலர். சார்வல்லார். 2. புரிந்தனைய. 3. கொல்லாத
4. தீராமே: தீராமல். 5. அல்லாரும். 6. நின்றதுயார். 7. அவர்க்
கினைப்ப. 8. இடங்கழிந்து.

கைதருவார் தமையூன்றிக் காணுமே இரவின்கண்
செய்தவமா தவர்வாழுந் திருவதிகை சென்றடைவார். சுக

1332 சுலவிவயிற் றகங்கன லுஞ் சூலநோ யுடன்தொடரக்
குலவியெழும் பெருவிருப்புக் கொண்டணையக் குலவரைபோன்
நிலகுமணி மதிற்சோதி எதிர்கோள்திரு வதிகையினில்
திலகவதி யார்இருந்த திருமடத்தைச் சென்றணைந்தார். சுஉ

1333 வந்தணைந்து திலகவதி யார்அடிமே லுறவணங்கி
" நந்தமது குலஞ்செய்த நற்றவத்தின் பயன்அனையீர்!
இந்தவுடற் கொடுஞ்சூலக்கிடைந்தடைந்தேன் இனிமயங்கா
துய்ந்துகரை ஏறுநெறி உரைத்தருளும் " எனஉரைத்து. சுஊ

1334 தாளிணைமேல் விழுந்தயருந் தம்பியார் தமைநோக்கி
ஆளுடைய தம்பெருமான் அருள்நினைந்து கைதொழுது
" கோலில்பர சமயநெறிக் குழியில்விழுந் தறியாது
மூலும்அருந் துயர்உழந்தீர் எழுந்திரீர் " எனமொழிந்தார். சுச

1335 மற்றவுரை கேட்டலுமே மருணீக்கி யார்தாமும்
உற்றபிணி உடல்நடுங்கி எழுந்துதொழ உயர்தவத்தோர்
" கற்றைவே ணியர்அருளே காணும்இது கழலடைந்தோர்
பற்றறுப்பார் தமைப்பணிந்து பணிசெய்வீர் " எனப்பணித்தார். சுரு

1336 என்றபொழு தவரருளே எதிரேற்றுக் கொண்டிறைஞ்ச
நின்றதபோ தனியாரும் நின்மலன்பேர் அருள்நினைந்து
சென்றுதிரு வீரட்டம் புகுவதற்குத் திருக்கயிலைக்
குன்றுடையார் திருநீற்றை அஞ்செழுத்தோ தக்கொடுத்தார். சுசு

1337 திருவாளன் திருநீறு திலகவதி யார்அளிப்பப்
" பெருவாழ்வு வந்த"தெனப் பெருந்தகையார் பணிந்தேற்றங்
குருவாச அணிந்ததமக் குற்றவிடத் துய்யுநெறி
தருவாராய்த் தம்முன்பு வந்தார்பின் தாம்வந்தார். சுள

1338 நீறணிந்தார் அகத்திருளும் நிறைகங்குல் புறத்திருளும்
மாறவருந் திருப்பள்ளி எழுச்சியினில் மாதவஞ்செய்
சீறடியார் திருவலகுந் திருமெழுக்குந் தோண்டியுங்கொண்
டாறணிந்தார் கோயிலினுள் அடைந்தவரைக் கொடுபுக்கார். சுஅ

1339 திரைக்கெடில வீரட்டா னத்திருந்த செங்கனக
வரைச்சிலையார் பெருங்கோயில் தொழுதுவலங் கொண்டிறைஞ்சித்
தரைத்தலத்தின் மிசைவீழ்ந்து தம்பிரான் திருவருளால்
உரைத்தமிழ்மா லைகள்சாத்தும் உணர்வுபெற உணர்ந்துரைப்பார். சுக

பா. வே. 1. நிருங்கலையும். நருங்களையும். 2. பெருவையப்பு.
3. இடைந்துடைந்தேன்.

வேறு

1340 நீற்றுருல்நிறை வாகிய மேனியுடன் நிறைஅன்புறு சிந்தையில் நேசம்மிக
மாற்றுர்புரம் மாற்றிய வேதியரை மருளும்பிணி மாயை அறுத்திடுவா
"கூற்றுயின வாறு விலக்ககிலீர்" எனநீடிய கோதில் திருப்பதிகம் [ன்
போற்றுலுல கேழின் வருந்துயரும் போமாறெதிர் நின்று புகன்றனரால்.

1341 மன்னும்பதி கம்மது பாடியபின் வயிறுற்றடு சூலை மறப்பிணி
தான், அந்நின்ற நிலைக்கண் அகன்றிடலும் "அடியேன்உயி ரோடருள்
தந்த"தெனுச், செந்நின்ற பரம்பொரு ளானவர்தம் திருவாரருள்
பெற்ற சிறப்புடையோர், முன்னின்ற தெருட்சி மருட்சியினுல் முதல்
வன்கரு ணைக்கடல் மூழ்கினரே. எக

1342 அங்கங்கள் அடங்கஉ ரோமமெலாம் அடையப்புள கங்கண்
முகிழ்த்தலரப், பொங்கும்புனல் கண்கள் பொழிந்திழியப் புவிமீது
விழுந்து புரண்டயர்வார், "இங்கென்செய லுற்ற பிழைப்பதனுல்
ஏறுத பெருந்திட ரேறிடின், தங்குங்கரு ணைப்பெரு வெள்ளமிடத்
தருமோ"என இன்னன தாம்மொழிவார். எஉ

1343 "போய்வாய்மை பெருக்கிய புன்சமயப் பொறியில்சமண் ரீசர்
புறத்துறையாம், அவ்வாழ்குழி யின்கண் விழுந்தெழுமா றறியாது
மயங்கி அவம்புரிவேன், மைவாச நறுங்குழல் மாமலையாள் மணவாளன்
மலர்க்கழல் வந்தடையும், இவ்வாழ்வு பெறத்தரு சூலையினுக் கெதிர்
செய்குறை என்கொல்"1எனத்தொழுவார். எந

1344 மேவுற்றஇவ் வேலையில் நீடியசீர் வீரட்டம் அமர்ந்தபிரானரு
ளால், "பாவுற்றலர் சொற்தமி ழின்சொல்வளப் பதிகத்தொடை பாடிய
பான்மையினுல், நாவுக்கர சென்றுல கேழினும்நின்3நன்நாமம் நயப்
புற மன்னுக" என், றியாவர்க்கும் வியப்புற மஞ்சுறைவா னிடையே
ஒரு வாய்மை எழுந்ததுவே. எச

1345 இத்தன்மை நிகழ்ந்துழி நாவின்மொழிக் கிறையாகிய அன்பரும்
"இங்நெடுநாள், சித்தந்திகழ் தீவினை யேன்அடையுந் திருவோஇது"
என்று தெருண்டறியா, அத்தன்மைய னுய இராவணனுக் கருளுங்
கருணைத்திற மானஅதன், மெய்த்தன்மை அறிந்து துதிப்பதுவே மேல்
கொண்டு வணங்கினர் மெய்யுறவே. எரு

1346 பரசுங்கரு ணைப்பெரி யோன்அருளப் பறிபுன்தலை யோர்நெறி
பாழ்படவந், தரசிங்கருள் பெற்றுல குய்ந்ததெனு அடியார்புடை சூழதி
கைப்பதிதான், முரசம்பட கந்துடி தண்ணுமையாழ் முழவங்கொளை துங்
துபி கண்டையுடன், நிரைசங்கொலி எங்கும் முழங்குதலால் நெடி
மாகடல் என்ன நிறைந்துளதே. எசு

1347 மையற்றுறை ஏறி மகிழ்ந்தலர்சீர் வாகீசர் மனத்தோடு வாய்மை
யுடன், மெய்யுற்ற திருப்பணி செய்பவராய் விரவுஞ்சிவ சின்னம்விளங்

---

1. பா.பே.: எனுஞ்சொற்றொடர். 2. பிரானருளைப்பாடிய நூல்
3. நாமங்களை.

கிடவே, எய்துற்ற தியானம் அருவுணர்வும் ஈறின்றி எழுந்திரு வாசக மும், கையில்திக ழும்உழ வாரமுடன் கைக்கொண்டு கலந்து கசிந் தன தனரே. எள

1348 மெய்ம்மைப்பணி செய்த விருப்பதனல் விண்ணோர்தனி நாயக னர்கழலில், தம்மிச்சை நிரம்ப வரம்பெறும்அத் தன்மைப்பதி மேவிய தாபதியார், "பொய்ம்மைச்சம யப்பிணி விட்டவர்மூன் போதும்பிணி விட்டரு ளிப்பொருளா, எம்மைப்பணி கொள்கரு ணைத்திறமிங் கியார் பெற்றனர்" என்ன இறைஞ்சினரே. எஅ

வேறு

1349 இன்ன தன்மையில் இவர்சிவ நெறியினை எய்தி
மன்னு பேரருள் பெற்றிடர் நீங்கிய வண்ணம்
பன்னு தொன்மையிற் பாடலி புத்திர நகரில்
புன்மை யேபுரி அமணர்தாம் கேட்டது பொருளாய். எக

1350 "தரும சேனர்க்கு வந்தஅத் தடுப்பருஞ் சூலை
ஒருவ ராலும்இங் கொழிந்திடா மையின்அவ ருயப்போய்ப்
பெருகு சைவராய்ப் பெயர்ந்துதம் பிணியொழித் துய்ந்தார்
மருவு நம்பெருஞ் சமயம்வீழ்ந் தது"என மருள்வார். அ

1351 "மலையும் பல்சம யங்களும் வென்றுமற் றவரால்
நிலையும் பெற்றஇந் நெறிஇனி அழிந்த"தென் றழுங்கிக்
கொலையும் பொய்ம்மையும்[2]இலவென்று கொடுமையே புரிவோர்
தலையும் பீலியும் தாழவந் தொருசிறை சார்ந்தார். அக

1352 இவ்வ கைப்பல அமணர்கள் துயருடன் ஈண்டி
"மெய்வ கைத்திறம் அறிந்திடில் வேந்தனும் வெகுண்டு
சைவ ருகிநம் விருத்தியுந் தவிர்க்கும்மற் றினிநாம்
செய்வ தென்"என வஞ்சனை தேரிந்துசித் திரிப்பார்." அஉ

1353 "தவ்வை சைவத்து நிற்றலின் தருமசே னருந்தாம்
பொய்வ குத்தசேதார் சூலைதீர்ந் திலதெனப் போயிங்
கெவ்வ[3]மாகஅங் கெய்திநஞ் சமயலங் கனமும்
தெய்வ நிந்தையும் செய்தனர்" எனச்சொலத் தெளிந்தார். அங

1354 சொன்ன வண்ணமே செய்வது துணிந்ததுன் மதியோர்
"முன்னம் நாம்சென்று முறைப்படி வோம்"என முயன்றே
இன்ன தன்மையில் இருட்குழாஞ் செல்வது போல
மன்ன ணுகிய பல்லவன் நகரில்வந் தணைந்தார். அச

1355 உடைஒ ழிந்தொரு பேச்சிடை யின்றிநின் றுண்போர்
கடைஅ டைந்தவன் வாயில்கா வலருக்கு "நாங்கள்

பா. பே. 1. கைத்தொண்டு கைக்கொண்டு கசிந்து கலந்தனரே
2. கீலமென்று. 3. மாகவந்ததெய்வ.

அடைய வந்தமை அரசனுக் கறிவியும்'' என்ன
இடைஅ றிந்துபுக் கவருந்தம் இறைவனுக் கிசைப்பார். அடு

வேறு

1356 ''அடிகண்மார் எல்லாரும் ஆகுலமாய் மிகஅழிந்து
கொடிதுடங்கு திருவாயிற் புறத்தணைந்தார்'' எனக்கூற
வடிநெடுவேல் மன்னவனும் மற்றவர்சார் பாதலினுல்
கடிதணைவான் ''அவர்க்குற்ற தென்கொல்''எனக்கனன்றுரைத்தான்.

1357 கடைகாவ லுடையார்கள் புகுதவிடக் காவலன்பால்
நடையாடுந் தொழிலுடையார் நண்ணித்தாம் எண்ணியவா
'' றுடையாரா கியதருமு சேனர்பிணி உற்றராய்ச்
சடையானுக் காளாய்நின் சமயம்ஒழித் தார்''என்றார். அள

1358 விரையலங்கற் பல்லவனும் அதுகேட்டு வெகுண்டெழுந்து
''புரையுடைய மனத்தினராய்ப் போவதற்குப் பொய்ப்பிணிகொண்
டுரைசிறந்த சமயத்தை அழித்தொழியப் பெறுவதே
கரையில்தவத் தீர்!இதனுக் கென்செய்வ'' தெனக்கனன்றான். அஅ

1359 ''தலைநெறியா கியசமயந் தன்னையழித் துன்னுடைய
நிலைநின்ற தொல்வரம்பின் நெறியழித்த பொறியிலியை
2 அலைபுரிவாய்'' 3னப்பரவி வாயால்அஞ் சாதுரைத்தார்
கோலைபுரியா நிலைகொண்டே போய்யோழுகும் அமண்குண்டர். அக

1360 அருள்கொண்ட உணர்வின்றி நெறிகோடி அறிவேன்று
மருள்கொண்ட மன்னவனும் மந்திரிகள் தமைநோக்கித்
''தெருள்கொண்டோர் இவர்சொன்ன தீயோனைச் செறுவதற்குப்
பொருள்கொண்டு விடாதென்பால் கொடுவாரும்'' எனப்புகன்றான்.

1361 அரசனது பணிதலைநின் றமைச்சர்களும் அங்கிலையே
முரசதிரும் தானையொடு முன்சென்று முகில்சூழ்ந்து
விரைசெறியுஞ் சோலைசூழ் திருவதிகை தனைமேவிப்
பரசமயப் பற்றறுத்த பான்மையினர் பால்சென்றார். கக

1362 சென்றணைந்த அமைச்சருடன் சேனைவீ ரருஞ்சூழ்ந்து
மின்தயங்கு புரிவேணி வேதியனூர் அடியவரை
''இன்றுதுமை அரசன்அழைத் தெமைவிடுத்தான் போதும்''என
நின்றவரை நோக்கிநோக்கி நிறைதவத்தோர் உரைசெய்வார். கஉ

1363 ''நாமார்க்குங் குடியல்லோம்'' என்றெடுத்து நான்மறையின்
கோமானை நதியினுடன் குளிர்மதிவாழ் சடையானைத்
தேமாலைச் செந்தமிழின் செழுந்திருத்தாண் டகம்பாடி
''ஆமாறு நீரழைக்கும் அடைவிலம்''என் றருள்செய்தார். கஙு

பா.பே.1. கவன்றுரைத்தான. 2. அலைபுரிவோம்.
3. எனப்பரவி.

1364 ஆண்டஅர சருள்செய்யக் கேட்டவரும் அடிவணங்கி
வேண்டியவர்க் கொண்டேக விடையுகைத்தார் திருத்தொண்டர்
"ஈண்டுவரும் வினைகளுக்கெம் பிரான்உளன்"என் றிசைந்திருந்தார்
மூண்டசினப் போர்மன்னன் முன்னணைந்தங் கறிவித்தார். கூச

1365 பல்லவனும் அதுகேட்டுப் பாங்கிருந்த பாயுடுக்கை
வல்லமணர் தமைநோக்கி "மற்றவனைச் செய்வதினிச்
சொல்லும்"என் றறந்துறந்து தமக்குறுதி அறியாத
புல்லறிவோர் அஞ்சாது நீற்றறையில் இடப்புகன்றார். கூடு

1366 அருகணைந்தார் தமைநோக்கி "அவ்வண்ணஞ் செய்க"எனப்
பெருகுசினக் கொடுங்கோலான் மொழிந்திடலும் பெருந்தகையை
உருகுபெருந் தழல்வெம்மை நீற்றறையின் உள்ளிருத்தித்
திருகுகருந் தாள்கொளுவிச் சேமங்கள் செய்தமைத்தார். கூசு

1367 ஆண்டஅர சதனகத்துள் அணைந்தபொழு தம்பலத்துத்
தாண்டவம்முன் புரிந்தருளுந் தாள்நிழலைத் தலைக்கொண்டே
"ஈண்டுவருந் துயருளவோ ஈசன்அடி யார்க்"கென்று
மூண்டமனம் நேர்நோக்கி முதல்வனையே தொழுதிருந்தார். கூள

1368 வெய்யநீற் றறையதுதான் வீங்கிளவே னிற்பருவம்
தைவருதண் டென்றல்அணை தண்கழுநீர்த் தடம்போன்று
2 மொய்யொளிவேண் நிலவலர்ந்து முரன்றயாழ் ஒலியினதாய்
ஐயர்திரு வடிநீழல் அருளாகிக் குளிர்ந்ததே. கூஅ

1369 மாசில்மதி நீடுபுனல் மன்னிவளர் சென்னியனைப்
பேசஇனி யானுலக காளுடைய பிஞ்ஞகனை
ஈசனெளம் பெருமானை 3எவ்வுயிருந் தருவானை
ஆசையில்ஆ ராஅமுதை அடிவணங்கி இனிதிருந்தார். கூகூ

1370 ஒருநாள் கழிந்ததற்பின் உணர்வில்அம ணரைஅழைத்துப்
"பாரும்இனி நீற்றறையை" எனஉரைத்தான் பல்லவனும்
காரிருண்ட குழாம்போலும் உருவுடைய காரமணர்
தேருகிலை இல்லாதார் நீற்றறையைத் திறந்தார்கள். கஂஂ

1371 ஆனந்த வெள்ளத்தின் இடைமூழ்கி அம்பலவர்
தேனுந்து மலர்ப்பாதத் தமுதுண்டு தெளிவெய்தி
ஊனந்தான் இலராகி உவந்திருந்தார் 4தமைக்கண்டே
5 "ஈனந்தாங் கியதிலதாம் என்னஅதி சயம்!"என்றார். கஂக

1372 "அதிசயம்அன் றிதுமுன்னை அமண்சமயச் சாதகத்தால்
இதுசெய்து பிழைத்திருந்தான்" எனவேந்தற் குரைசெய்து
"மதிசெய்வ 6தினிக்கொடிய வல்விடமூட் டுவ"தென்று
மூதிரவரும் பாதகத்தார் மூடைவாயால் மொழிந்தார்கள். கஂஉ

1. பல்தென்னல. 2. மொய்யினி. 3. எவ்வுலகும். 4. தம்மைக்கண்டு. 5. ஈனந்தங்கிய திலதால். 6. கினிக்கடிய

1373 ஆங்கதுகேட் டலுங்கொடிய அமண்சார்பால் கெடும்மன்னன்
ஓங்குபெரு மையலினுல் " நஞ்சூட்டும் " எனஉரைப்பத்
தேங்காதார் திருநாவுக்கரயரைஅத் தீயவிடப்
பாங்குடைய பாலடிசில் அமுதுசெயப் பண்ணினுர். கஉங

1374 " நஞ்சும்அமு தாம்எங்கள் நாதன்அடி யார்க்" கென்று
வஞ்சமிகு நெஞ்சுடையார் வஞ்சனையாம் படியறிந்தே
செஞ்சடையார் சீர்விளக்குந் திறலுடையார் தீவிடத்தால்
வெஞ்சமணர் இடுவித்த பாலடிசில் மிசைந்திருந்தார். கஉச

1375 போடியார்க்குந் திருமேனிப் புனிதற்குப் புவனங்கள்
முடிவாக்குந் துயர்நீங்க முன்னைவிடம் அமுதானுல்
படியார்க்கும்அறிவரிய பசுபதியார் தம்முடைய
அடியார்க்கு நஞ்சமுதம் ஆவதுதான் அற்புதமோ ? கஉஞ

1376 அவ்விடத்தை ஆண்டஅர சமுதுசெய்து முன்னிருப்ப
" வெவ்விடமும் அமுதாயிற் " றெனஅமணர் வெருக்கொண்டே
இவ்விடத்தில் இவன்பிழைக்கில் எமக்கெல்லாம் இறுதி "எனத்
தெவ்விடத்துச் செயல்புரியுங் காவலற்குச் செப்புவார். கஉசு

1377 " நஞ்சுகலந் தூட்டிடவும் நஞ்சமயத் தினில்விடந்தீர்
தஞ்சமுடை மந்திரத்தால் சாதியா வகைதடுத்தான்
எஞ்சும்வகை அவற்கிலதேல் எம்முயிரும்நின்முறையும்
துஞ்சுவது திடம்" என்றுர் சூழ்வினையின் துறைநின்றுர். கஉள

1378 மற்றவர்தம் மொழிகேட்டு மதிகெட்ட மன்னவனும்
" செற்றவனை இனிக்கடியுந் திறம்எவ்வா " றெனச்செப்ப
உற்றவரும் " மந்திரசா தகநாங்கள் ஒழித்திடநின்
கொற்றவயக் களிற்றெதிரே விடுவ "தெனக் கூறினுர். கஉஅ

1379 மாபாவிக் கடையமணர் வாகீசத் திருவடியாம்
காபாலி அடியவர்பால் " கடக்களிற்றை விடு "கென்னப்
பூபாலர் செயல்மேற்கொள் புலித்தோழிலோன் அவர்தம்மேல்
கோபாதி சயமானகொலைக்களிற்றை விடச்சொன்னன். கஉசு

1380 கூடத்தைக் குத்திஒரு குன்றமெனப் புறப்பட்டு
மாடத்தைமறித்திட்டு மண்டபங்கள் எடுத்தெதற்றித்
தாடத்திற் பரிக்காரர் தலைஇடறிக் கடக்களிற்றின்
வேடத்தால் வருங்கூற்றின் மிக்கதொரு விறல்வேழம். ககஉ

வேறு

1381 பாசத்தொடை நிகளத்தொடர் பறியத்தறி முறியா
மீசற்றிய பறவைக்குலம் வெருவத்துணி விலகா

பா. பே. 1. காசினை. 2. அறிவரிதாம். 3. நினைமுறையும். நும் முறையும்
4. துஞ்சுமது. 5. கிடுவதென, கிடுதலென. 6. இலக்கனிறை. 7. மண்டபங்கள். 8. மிதித்திட்டு மறித்திட்டு.
9. மிகைஎன்றொடு. 10 வெருவத்துணி. வெருவத்துனி.

ஊசற்கரம் எதிர்சுற்றிட உரறிப்பரி உழறு
வாசக்கட மழைமுற்பட மதவெற்பெதிர் வருமால். ககக

1382 இடியுற்றெழும் ஒலியில்திசை இபமுட்கிட அடியில்
படிபுக்குற நெளியப்படர் பவனக்கதி விசையில்
கடிதுற்றடு செயலிற்கிளர் கடலிற்படு கடையின்
முடிவிற்கன லெனமுற்சினம் முடுகிக்கடு கியதே. ககஉ

1383 மாடுற்றணை இவுளிக்குலம் மறியச்செறி வயிரக்
கோடுற்றிரு பிளவிட்டறு குறைகைக்கொடு மூறியச்
சாடுற்றிடு மதில்தெற்றிகள் சரியப்புடை அணிசெற்
றடுற்றகல் வெளியுற்றதவ் வடர்கைக்குல வரையே. ககங

1384 பாவக்கொடு வினைமூற்றிய படியுற்றடு கொடியோர்
நாவுக்கர செதிர்மூற்கொடு நணுகிக்கரு வரைபோல்
எவிச்செறு பொருகைக்கரி யினைஉய்த்திட வெருளார்
சேவிற்றிகழ் பவர்பொற்கழல் தெளிவுற்றனர் பெரியோர். ககச

வேறு

1385 அண்ணல் அருந்தவ வேந்தர் ஆனதம் மேல்வரக் கண்டு
விண்ணவர் தம்பெரு மானை விடையுகந் தேறும் பிரானைச்
"சுண்ணவெண் சந்தனச் சாந்து" தொடுத்த திருப்பதி கத்தை
மண்ணுல குய்ய எடுத்து மகிழ்வுட னேபாடு கின்றார். ககடு

1386 வஞ்சகர் விட்ட சினப்போர் மதவெங் களிற்றினை நோக்கிச்
"செஞ்சடை நீள்முடிக் கூத்தர் தேவர்க்குந் தேவர் பிரானர்
வெஞ்சுடர் மூவிலைச் சூல வீரட்டர் தம்அடி யோம்நாம்
அஞ்சுவ தில்லை" என் றென்றே அருந்தமிழ் பாடி உறைந்தார். ககசு

1387 தண்டமிழ் மாலைகள் பாடித் தம்பெரு மான்சர ணைக்
கொண்ட கருத்தில் இருந்து குலாவிய அன்புறு கொள்கைத்
தொண்டரை முன்வல மாகச் சூழ்ந்தெதிர் தாழ்ந்து நிலத்தில்
எண்டிசை யோர்களுங் காண இறைஞ்சி எழுந்தது வேழம். ககள

1388 ஆண்ட அரசை வணங்கி அஞ்சி அவ் வேழம் பெயரத்
தூண்டிய மேன்மறப் பாகர் தொடக்கி அடர்த்துத் திரித்து
மீண்டும் அதனை அவர்மேல் மிறைசெய்து காட்டிட வீசி
ஈண்டவர் தங்களை யேகொன் றமணர்மேல் ஓடிற் றெதிர்ந்தே. ககஅ

1389 ஓடி அருகர்கள் தம்மை உழறி மிதித்துப் பிளந்து
நாடிப் பலரையுங் கொன்று நகரங் கவுங்கி மறுக
நீடிய வேலை கலக்கும் நெடுமந் தரகிரி போல
ஆடி அவ் யானையும் மன்னற் காகுலம் ஆக்கிய தன்றே. ककக

பா. பே. 1. உளறிப்பரி. உலறிப்பரி. 2. படிபுக்கற. 3. கடிதுற்றடு
4 கைவாரணங்கள். 5. அணிசெற். 6. படிறுய்த்திட. படிதுற்றடு.
படிதுற்றிடு. 7 நணுகிக்கரை. 8 எவக்கெறு.
9 வெஞ்சுடி. 10 எழுந்ததுவேழம். 11. அஞ்சிய 12. எதிர்ந்தே.

1390 யானையின் கையிற் பிழைத்த வினைஅமண் கையர்கள் எல்லாம்
மானம் அழிந்து மயங்கி வருந்திய சிந்தைய ராகித்
தானை நிலமன்னன் தாளில் தனித்தனி வீழ்ந்து புலம்ப
மேன்மை நெறிவிட்ட வேந்தன் வெகுண்"டினிச் செய்வதென்" என்றான். 1391

1391 "நங்கள் சமயத்தின் நின்றே நாடிய மூட்டி நிலையால்
எங்கள் எதிரே றழிய யானையால் இவ்வண்ணம் நின்சீர்
பங்கப் படுத்தவன் போகப் பரிபவந் தீரும் உனக்குப்
போங்கழல் போக அதன்பின் புகையகன் றுலென "என்றார். கஉக

1392 அல்லிருள் அன்னவர் கூற அரும்பெரும் பாவத் தவன்பின்
"தொல்லைச் சமயம் அழித்துத் துயரம் விளைத்தவன் தன்னைச்
சொல்லும் இனிச்செய்வ" தென்னச் சூழ்ச்சி முடிக்குந் தொழிலோர்
"கல்லுடன் பாசம் பிணித்துக் கடலிடைப் பாய்ச்சுக" என்றார்.

1393 ஆங்கது கேட்ட அரசன் அவ்வினை மாக்களை நோக்கித்
"தீங்கு புரிந்தவன் தன்னைச் சேமம் உறக்கொடு போகிப்
பாங்கொரு கல்லில் அணைத்துப் பாசம் பிணித்தோர் படகில்
வீங்கொலி வேலையில் எற்றி வீழ்த்துமின் " என்று விடுத்தான்.

1394 அவ்வினை செய்திடப் போகும் அவருடன் போயரு கந்த
வெவ்வினை யாளருஞ் சென்று மேவிட நாவுக் கரசர்
செவ்விய தந்திரு வுள்ளஞ் சிறப்ப அவருடன் சென்றார்
பவ்வத்தில் மன்னவன் சொன்ன படிமுடித் தார்அப் பதகர். கஉச

1395 அப்பரி சவ்வினை முற்றி அவரகன் றேகிய பின்னர்
ஒப்பரும் ஆழ்கடல் புக்க உறைப்புடை மெய்த்தொண்டர் தாமும்
"எப்பரி சாயினும் ஆக எத்துவன் எந்தையை "என்று
செப்பிய வண்தமிழ் தன்னுல் சிவன்அஞ் செழுத்துந் துதிப்பார். கஉடு

வேறு

1396 "சொற்றுணை வேதியன் " என்னுந் தூமொழி
நற்றமிழ் மாலையா "நமச்சி வாய"என்
றற்றமுன் காக்கும்அஞ் செழுத்தை அன்பொடு
பற்றிய உணர்வினுல் பதிகம் பாடினார். கஉசு

1397 பெருகிய அன்பினர் பிடித்த பெற்றியால்
அருமல ரோன்முதல் அமரர் வாழ்த்துதற்
கரியஅஞ் செழுத்தையும் அரசு போற்றிடக்
கருநெடுங் கடலினுள் கல்மி தந்ததே. கஉஎ

1398 அப்பெருங் கல்லும்அங் கரசு மேல்கொளத்
தெப்பமாய் மிதத்தலில் செறிந்த பாசமும்

பா. பே. 1. அவ்வமண். கினையஅமண். 2. பாயச்சுவ.
3 கேட்டவ்வரசன். 4. தெம்மையெற்கொண்டு.
5 தெவ்வியதாந. 6. வேரு மலரோன். 7 கல்லும் ஆங்
8 செறிந்த.

1 தப்பிய ததன்மிசை இருந்த தாவில்சீர்
மெய்ப்பெருந் தொண்டனர் விளங்கித் தோன்றினர். கஉஅ

1399 இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்கள் ஏறிட
அருளுமெய் அஞ்செழுத் தரசை இக்கடல்
ஒருகல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ. கஉக

1400 அருள்நயந் தஞ்செழுத் தேத்தப் பெற்றஅக்
கருணைநா வரசினைத் திரைக்க ரங்களால்
தெருள்நெறி நேர்மையில் சிரத்தில் தாங்கிட
வருணனுஞ் செய்தனன் மூன்பு மாதவம். கஙO

1401 வாய்ந்தசீர் வருணனே வாக்கின் மன்னரைச்
சேர்ந்தடை கருங்கலே சிவிகை ஆயிட
ஏந்தியே கொண்டெழுந் தருளு வித்தனன்
பூந்திருப் பாதிரிப் புலியூர்ப் பாங்கரில். கஙக

1402 அத்திருப் பதியினில் அணைந்த அன்பரை
மெய்த்தவக் குழாமெலாம் மேவி ஆர்த்தெழ
எத்திசை யினும்அர என்னும் ஓசைபோல்
தத்துநீர்ப் பெருங்கடல் தானும் ஆர்த்ததே. கஙஉ

1403 தோழுந்தகை நாவினுக் கரசுந் தொண்டர்முன்
செழுந்திருப் பாதிரிப் புலியூர்த் திங்கள்வெண்
கொழுந்தணி சடையனைக் கும்பிட் டன்புற
விழுந்தெழுந் தருள்நெறி விளங்கப் பாடுவார். கஙங

வேறு

1404 "என்முலை மாய்எனக் கெந்தையு மாகி" எனஎடுத்துத்
"தோன்றுத் துணையாய் இருந்தனன் தன்அடி யோங்கட்"கென்று
வான்தாழ் புனற்கங்கை வாழ்சடை யானமற் றெவ்வுயிர்க்கும்
சான்றும் ஒருவனைத் தண்டமிழ் மாலைகள் சாத்தினரே. கஙச

1405 மற்றும் இனையன வண்டமிழ் மாலைகள் பாடிவைகி
வெற்றி மழவிடை வீரட்டர் பாதம் மிகநினைவால்
உற்றதொர் காதலின் அங்குகின் றேகிஒன் னர்புரங்கள்
செற்றவர் வாழுந் திருவதி கைப்பதி சென்றடைவார். கஙரு

1406 தேவர் பிரான்திரு மாணி குழியுந் தினைகருமம்
மேவினர் சென்று விரும்பிய சொன்மலர் கொண்டிறைஞ்சிப்
பூவலர் சோலை மணமடி புல்லப் பொருள்மொழியின்
காவலர் செல்வத் திருக்கெடி லத்தைக் கடந்தணைந்தார். கஙசு

பா.பே. 1. தப்பினவதனிலை. 2. இருந்து. 3. தாவிடம். 4. மலர்சுடை. 5. அங்குனைறெய்தி. 6. சென்றனைவார். 7. திருநகரும் 8. மலரடி.

(407)
வேஞ்சமண் குண்டர்கள்[1] செய்வித்த தீய மிறைகளெல்லாம்
எஞ்சவென் றேறிய இன்தமிழ் ஈசர் எழுந்தருள
மஞ்சிவர் மாடத் திருவதி கைப்பதி வாணர்எல்லாம்
தஞ்செயல் பொங்கத் தழங்கொலி மங்கலஞ் சாற்றலுற்றார். கஉள

(408)
மணிநெடுந் தோரணம் வண்குலைப் பூகம் மடற்கதலி
இணையுற நாட்டி எழுநிலைக் கோபுரந் தெற்றிஎங்கும்
தணிவில் பெருகொளித் தாமங்கள் நாற்றிச்செஞ்[2]சாந்துநீவி
அணிநகர் முன்னே அணிமேல் அணிசெய் தலங்கரித்தார். கஉஅ

(409)
மன்னிய[3] அன்பின் வளநகர் மாந்தர் வயங்கிழையார்
இன்னிய நாதமும் ஏழிசை ஓசையும் எங்கும்விம்மப்
பொன்னியல் சுண்ணமும் பூவும் பொரிகளும் தூவிளங்கும்
தொன்னக ரின்புறஞ் சூழ்ந்ததிர் கொண்டனர் தொண்டரையே.

(410)
தூயவெண் ணீறு துதைந்தபோன் மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ்[4]சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போல்அன்பு நீர்பொழி கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே. கசஅ

(411)
கண்டார்கள் கைதலை மேல்குவித் " தீந்தக் கருணைகண்டால்
மிண்டாய செய்கை அமண்கையர் தீங்கு விளைக்கச்செற்றம்
உண்டா யினவண்ணம் எவ்வண்ணம்" என்றுரைப் பார்கள்பின்னும்
தொண்டாண்டு கொண்ட பிரானைத் தொழுது துதித்தனரே. கசக

(412)
இவ்வண்ணம் போல எனைப்பல மாக்கள் இயம்பிஏத்த
மெய்வ்வண்ண நீற்றொளி மேவுங் குழாங்கள் விரவிச்செல்ல
அவ்வண்ணம் நண்ணிய அன்பரும் வந்தெய்தி அம்பவளச்
செவ்வண்ணர் கோயில் திருவீரட் டானத்தைச் சேர்ந்தனரே. கசஉ

(413)
உம்பர்தங் கோனை உடையபி ரானைஉள் புக்கிறைஞ்சி
நம்புறும் அன்பின் நயப்புறு காதலி னல்திளைத்தே
"எம்பெரு மான்தனை ஏழையேன் நான்பண் டிகழ்ந்த"தென்று
தம்பரி வாற்றிருத் தாண்டகச் செந்தமிழ்[5]சாற்றிவாழ்ந்தார். கசஙு

வேறு

(414)
அரிஅயனுக் கரியானை அடியவருக் கெளியானை
விரிபுனல்சூழ் திருவதிகை வீரட்டா னத்தமுதைத்
தெரிவரிய பெருந்தன்மைத் திருநாவுக் கரசுமனம்
பரிவுறுசெந் தமிழ்ப்பாட்டுப் பலபாடிப் பணிசெயுநாள். கசச

(415)
புல்லறிவிற் சமணர்க்காப் பொல்லாங்கு புரிந்தொழுகும்
பல்லவனுந் தன்னுடைய பழவினைப்பா சம்பறிய

பா. வே. 1. தையத்தவிர் பெ. 2. சாந்தநீவி. 3. அன்பர். 4. சிந்தையில். 5. சாற்றினரே.

அல்லல்ஒழிந் தங்கெய்தி ஆண்டஅர சினைப்பணிந்து
வல்லமணர் தமைநீத்து மழவிடையோன் தாளடைந்தான். கசடு

1416 வீடறியாச் சமணர்மொழி பொய்யென்று மெய்யுணர்ந்த
காடவனுந் திருவதிகை நகரின்கண் கண்ணுதற்குப்
பாடலிபுத் திரத்தில்அமண் பள்ளியொடு பாழிகளும்
கூடஇடித் துக்கொணர்ந்து குணபரஈச் சரமெடுத்தான். கசசு

1417 இந்நாளில் திருப்பணிகள் செய்கின்ற இன்தமிழ்க்கு
மன்னுன வாகீசத் திருமுனியும் மதிச்சடைமேல்
பன்னுகம் அணிந்தவர்தம் பதிபலவுஞ் சென்றிறைஞ்சிச்
சொன்னமத் தமிழ்புனைந்து தொண்டுசெய்வான் தொடர்ந்தெழுவார்.

1418 திருவதிகைப் பதிமருங்கு திருவெண்ணெய் நல்லூரும்
அருளுதிரு ஆமாத்தூர் திருக்கோவ லூர்முதலா
மருவுதிருப் பதிபிறவும் வணங்கிவளத் தமிழ்பாடிப்
பெருகுவிருப் புடன்விடையார் மகிழ்பெண்ணை கடம்அணைந்தார். கசஅ

1419 கார்வளரும் மாடங்கள் கலந்தமறை ஒலிவளர்க்குஞ்
சீருடைஅந் தணர்வாழுஞ் செழும்பதியின் அகத்தெய்தி
வார்சடையார் மன்னுதிருத் தூங்கானை மாடத்தைப்
பார்பரவுந் திருமுனிவர் பணிந்தேத்திப் பரவினார். கசசூ

1420 "புன்னெறியாம் அமண்சமயத் தொடக்குண்டு போந்தவுடல்
தன்னுடனே உயிர்வாழத் தரியேன்நான் தரிப்பதனுக்
கென்னுடைய நாயக!நின் இலச்சினையிட் டருள்"என்று
பன்னுசெழுந் தமிழ்மாலை முன்னின்று பாடுவார். கரு0

1421 "போன்னார்ந்த திருவடிக்கென் விண்ணப்பம்"[1] என்றெடுத்து
முன்னுகி எப்போருட்கும் முடிவாகி நின்றனைத்
தன்னுகத் துமைபாகங் கொண்டானைச் சங்கரனை
நன்னுமத் திருவிருத்தம் நலம்சிறக்கப் பாடுதலும். கருக

1422 நீடுதிருத் தூங்கானை மாடத்து நிலவுகின்ற
ஆடகமே ருச்சிலையான் அருளாலோர் சிவபூதம்
மாடொருவர் அறியாமே வாகீசர் திருத்தோளில்
சேடுயர்மூ விலைச்சூலம் சினவிடையி னுடன்சாத்த. கருஉ

1423 ஆங்கவர்தந் திருத்தோளில் ஆர்ந்ததிரு இலச்சினையைத்
தாங்கண்டு மனங்களித்துத் தம்பெருமான்[2] அருள்நினைந்து
தூங்கருவி கண்பொழியத் தொழுதுவிழுந் தார்வத்தால்
ஓங்கியசிந் தையராகி "உய்ந்தொழிந்தேன்" எனஎழுந்தார். கருங

1424 தூங்கானை மாடத்துச்[3] சுடர்க்கொழுந்தின் அடிபரவிப்
பாங்காகத் திருத்தொண்டு செய்துபயின் றமருநாள்

1. போன்னார்ந்த திருவடிக்கென் விண்ணப்பம் எனவெடுத்து. 2. தாணினைந்து. 3. சுடர்க்கொழுந்தை.

பூங்கானம் மணங்கமழும் பொருவில்திரு அரத்துறையும்
தேங்காவின் முகில்உறங்குந் திருமுதுகுன் றமும்பணிந்து. கடிச

(425) வண்தமிழ்மென் மலர்மாலை புனைந்தருளி மருங்குள்ள
தண்துறைநீர்ப் பதிகளிலுந் தனிவிடையார் மேவியிடங்
கொண்டருளுந் தானங்கள் கும்பிட்டுக் குணதிசைமேல்
புண்டரிகத் தடஞ்சூழ்ந்த நிவாக்கரையே போதுவார். கடிடி

(426) ஆனைத சீர்த்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
வானுறு புடைபரக்கும் மலர்ச்சடையார் அடிவணங்கி
ஊனுலும் உயிராலும் உள்ளபயன் கொளநினைந்து
தேனுரும் மலர்ச்சோலைத் திருப்புலியூர் மருங்கணைந்தார். கடிசு

வேறு

(427) நாவுக் கரசரும் இருவர்க் கரியவர் நடமா டியதிரு எல்லைப்பால்
மேவித் தலமுற மெய்யில் தொழுதபின் மேன்மேல் எழுதரும் விரைவோடும்
காவிற் களிமயில் மகிழ்வுற் றெதிரெதி ராடக் கடிகமழ் கமலஞ்சூழ்
வாவித் தடமலர் வதனம் பொலிவுறு மருதத் தண்பணை வழிவந்தார்.

(428) முருகிற் செறிஇதழ் முளரிப் படுகரில் முதுமே திகள்புது மலர்
மேயும், அருகிற் செறிவன மெனமிக் குயர்கழை அளவிற் பெருகிட
வளர்இக்குப், பெருகிப் புடைமுதிர் தாளஞ் சொரிவன பெரியோ ரவர்
திரு வடிவைக்கண், டருகிப் பரிவுறு புனல்கண் பொழிவன எனமுன்
புளவள வயலெங்கும். கடிஅ

(429) அறிவிற் பெரியவர் அயல்நெற் பணைவயல் அவைபிற் படும்வகை
அணைகின்றூர், "பிறவிப் பகைநெறி விடுவீர் இருவினை பெருகித்
தொடர்பிணி உறுபாசம், பறிவுற் றிடஅணை யுமின்"என் றிருபுடை
பயில்சூழ் சினைமிசை குயில்கூவும், செறிவிற் பலதரு நிலையிற் பொலி
வுறு திருநந் தனவனம் எதிர்கண்டார். கடிக

(430) அவர்முன் பணிவொடு தொழுதங் கணைவுற அணிகொம் பரின்
மிசைஅருகெங்கும், "தவம்முன் புரிதலில் வருதொண் டெனுநிலை தலை
நின் றுயர்தமிழ் இறையோராம், இவர்தந் திருவடி அதுகண் டதிச
யம்" எனவந் தெதிர்"அர கர"என்றே, சிவமுன் பயில்மொழி பகர்
கின் றனவளர் நிறைமென் கிளியொடு சிறுபூவை. கசo

(431) அஞ்சொல் திருமறை அவர்முன் பகர்தலும் அவருந் தொழுது
முன் அளிகூரும், நெஞ்சிற் பெருகிய மகிழ்வும் காதலும் நிறையன்
பொடும்உரை தடுமாறச், செஞ்சொல் திருமறை மொழியந் தணர்
பயில் தில்லைத் திருநகர் எல்லைப்பால், மஞ்சிற் பொலிநெடு மதில்சூழ்
குடதிசை மணிவா யிற்புறம் வந்துற்றார். கசுக

பா.பே.1. புஞ்சாஹன். 2. வினைதீவாடும். 3. எதிர்எதிர்ஆடி. 4. நிறுமென். 5. சிவபுனை.
6. அணிகூறும். 7. மகிழ்வுறு. 8. பொலிதரு.

1432 அல்லற் பவம்அற அருளுந் தவமுதல் அடியார் எதிர்கொள அவ
ரோடும், மல்லற் புனல்கமழ் மாடே வாயிலின் வழிபுக் கெதிர்தொழு
தணைவுற்றார், கல்வித் துறைபல வருமா மறைமுதல் கரைகண் டுடை
யவர் கழல்பேணுஞ், செல்வக் குடிநிறை நல்வைப் பிடைவளர் சிவமே
நிலவிய திருவீ தி. கசுஉ

1433 நவமின் சுடர்மணி நெடுமா லியுநறு மலர்மா லியுநிறை திரு
வீதிப், புவனங் களின்முதல் இமையோர் தடமுடி பொருதுந் திய
மணி போகட்டிப், பவனன் பணிசெய வருணன் புனல்கொடு பணிமா
றவும்அவை பழுதாமென், றெவருந் தொழுதெழும் அடியார் திருவல
கிடுவார் குளிர்புனல் விடுவார்கள். கசுங

1434 மேலம் பரதலம் நிறையுங் கொடிகளில் விரிவெங் கதிர்தழை வரி
தாகும், கோலம் பெருகிய திருவீ தியைமுறை குலவும் பெருமையர்
பணிவுற்றே, ஞாலந் திகழ்திரு மறையின் பெருகொலி நலமார் முனி
வர்கள் துதியோடும், ஓலம் பெருகிய நிலையேழ் கோபுரம் முற்றி
னமெய்கொடுதொழு துள்புக்கார். கசுச

1435 வளர்பொற் கனமணி திருமா ளிகையினை வலம்வந் தலமரு வரை
நில்லா, அளவிற் பெருகிய ஆர்வத் திடைஎழும் அன்பின் கடல்நிறை
உடலெங்கும், புளகச் செறிநிரை விரவத் திருமலி பொற்கோ புரமது
புகுவார்முன், களனிற் பொலிவிடம் உடையார் நடம்நவில் கனகப்
பொதுஎதிர் கண்ணுற்றார். கசுடு

1436 நீடுந் திருவுடன் நிகழும் பெருகொளி நிறைஅம் பலம்நினை வுற
நேரே, கூடும் படிவரும் அன்பால் இன்புறு குணமுன் பெறவரு நிலை
கூடத், தேடும் பிரமனும் மாலுந் தேவரும் முதலாம் யோனிகள்
தெளிவொன்று, ஆடுங் கழல்புரி அமுதத் திருநடம் ஆரா வகைதொழு
தார்கின்றார். கசுசு

1437 கையுந் தலைமிசை புனைஅஞ் சலியன கண்ணும் பொழிமழை
ஒழியாதே, பெய்யுந் தகையன கரணங் களும்உடன் உருகும் பரிவின
பேறெய்தும், மெய்யுந் தரைமிசை விழுமுன் பெழுதரு மின்தாழ் சடை
யோடு நின்றுடும், ஐயன் திருநடம் எதிர்கும் பிடும்அவர் ஆர்வம் பெருகு
தல் அளவின்றால். கசுள

1438 இத்தன் மையர்பல முறையுந் தொழுதெழ "என்றெய் தினை" என
மன்றுடும், அத்தன் திருவருள் பொழியுங் கருணையின் அருள்பெற்
றிடவரும் ஆனந்தம், மெய்த்தன் மையினில்வி ருத்தத் திருமொழி
பாடிப் பின்னையும் மேன்மேலும், சித்தம் பெருகிய பரிவால் இன்புறு
திருநே ரிசைமொழி பகர்கின்றார். கசுஅ

ப.வே. 1 போகட்டிப். 2. விரவி. 3. திருவடி. 4. ஒழியாதே
5 தலமிசை.

வேறு

(43) "பத்தனுய்ப் பாட மாட்டேன்" என்றுமுன் னெடுத்துப் பண்ணால்
"அத்தாஉன் ஆடல் காண்பான் அடியனேன் வந்த வா"றென்
றித்திரம் போற்றி நின்றே இன்தமிழ் மாலை பாடிக்
கைத்திருத் தொண்டு செய்யுங் காதலிற் பணிந்து போந்தார். ககூக

(44) நீடிய மணியின் சோதி நிறைதிரு முன்றின் மாடும்
ஆடியர் கொடிசூழ் பொற்றேர் அணிதிரு வீதி யுள்ளும்
கூடிய பணிகள் செய்து கும்பிடுந் தொழில ராகிப்
பாடிய புனித வாக்கின் பணிகளும் பயிலச் செய்வார். களo

(45) அருட்பெரு மகிழ்ச்சி பொங்க "அன்னம்பா லிக்கும்" என்னும்
திருக்குறுந் தொகைகள் பாடித் திருவுழ வாரங் கொண்டு
பெருத்தெழு காத லோடும் பெருந்திருத் தொண்டு செய்து
விருப்புறு மேனி கண்ணீர் வெண்ணீ ற்று வண்ட லாட. களக

(46) மேவிய பணிகள் செய்து விளங்குநாள் வேட்க ளத்துச்
சேவுயர் கொடியார் தம்மைச் சென்றுமுன் வணங்கிப் பாடிக்
காவியங் கண்டர் மன்னுந் திருக்கழிப் பாலை தன்னில்
நாவினுக் கரசர் சென்று நண்ணினர் மண்ணோர் வாழ. களஉ

வேறு

(47) தினவிடையே முகைத்தேறும் மணவாள நம்பிகழல் சென்று தாழ்ந்து
"வனபவள வாய்திறந்து வானவர்க்குந் தானவனே என்கின் ரு"ளென்
றனையதிருப் பதிகமுடன் அன்புறுவண் தமிழ்பாடி அங்கு வைகி
நினைவரியார் தமைப்போற்றி நீடுதிருப் புலியூரை நினைந்து மீள்வார்.

(48) மனைப்படப்பிற் கடற்கொழுந்து வளைசொரியுங் கழிப்பாலை
மருங்கு நீங்கி, நனைச்சினைமென் குளிர்ஞாழற் பொழிலூடு வழிக்
கொண்டு நண்ணும் போதில், "நினைப்பவர்தம் மனங்கோயில் கொண்
டருளும் அம்பலத்து நிருத்த னைத், தினைத்தனையாம் பொழுதும்
மறந் துய்வனே" எனப்பாடித் தில்லை சார்ந்தார். களச

(49) "அரியானே" என்றெடுத்தே 5அடியவருக் கெளியானை அவர்தஞ் சிந்தை
பிரியாத பெரியதிருத் தாண்டகச்செந் தமிழ்பாடிப் பிறங்கு சோதி
விரியாநின் 6றவ்வுலகும் 7விளங்கியபொன் அம்பலத்து மேவி ஆடல்
புரியாநின் றவர்தம்மைப்பணிந்துதமிழாற்பின்னும்போற்றல்செய்வார்.

(50) "செஞ்சடைக் கற்றைமுற்றத் திளநிலா எறிக்கும்"எனுஞ் சிறந்த வாய்மை
அஞ்சொல்வளத் தமிழ்மாலை அதிசயமாம் படிபாடி அன்பு சூழ்ந்த
நெஞ்சுருகப் பொழிபுனல்வார் கண்ணினையும் பாவியசொல் நிறைந்த வாயும்
தஞ்செயலின் ஒழியாத திருப்பணியும் மாறுது சாரும் நாளில். களசு

மா. பே. 1 நிறைந்த. 2 மாடையர். 3 மாமணி. 4 மணிக்கோயில்.
5. அடியவர்க்கு. 6 றவுலகும். 7 விளங்கியபொன்.

1447 கடையுகத்தில் ஆழியின்மேல் மிதந்ததிருக் கழுமலத்தின்
இருந்த செங்கண், 1விடையுகைத்தார் திருவருளால் வெற்பரையன்
பாவைதிரு முலைப்பா லோடும், அடையநிறைசிவம்பெருக வளர்ஞானங்
குழைத்தூட்ட அமுது செய்த, உடையமறைப் பிள்ளையார் திரு
வார்த்தை அடியார்கள் உரைப்பக் கேட்டார். கஎஎ

1448 ஆழிவிடம் உண்டவரை 3அம்மைதிருப் பாலமுதம் உண்ட
போதே, ஏழிசைவண் தமிழ்மாலை "இவன்எம்மான்" எனக்காட்டி
இயம்ப வல்ல, காழிவரும் பெருந்தகைசீர் கேட்டலுமே அதிசயமாங்
காதல் கூர, வாழியவர் மலர்க்கழல்கள் வணங்குதற்கு மனத்தெழுந்த
விருப்பு வாய்ப்ப. கஎஅ

1449 அப்பொழுதே அம்பலத்துள் ஆடுகின்ற கழல்வணங்கி அருள்
மூன் பெற்றுப், பொய்ப்பிறவிப் பிணியோட்டுந் திருவீதி புரண்டு
வலங் கொண்டு போந்தே, எப்புவனங் களும்நிறைந்த திருப்பதியின்
எல்லையினை இறைஞ்சி ஏத்திச், செப்பரிய பெருமையினுர் திருநாரை
யூர்பணிந்து பாடிச் செல்வார். கஎக

1450 தோண்டர்குழாம் புடைசூழத் தொழுதகரத் தொடுநீறு
துதைந்த கோலங், கண்டவர்தம் மனங்கசிந்து கரைந்துருகுங் கருணை
புறம் பொழிந்து காட்டத், தெண்திரைவாய்க் கல்மிதப்பில் உகைத்
தேறுந் திருநாவுக் கரசர் தாமும், வண்தமிழால் 4எழுதுமறை
மொழிந்தபிரான் திருப்புகலி மருங்கு சார்ந்தார். கஅ0

1451 நீண்டவரை வில்லியார் வெஞ்சூலை மடித்தருளி நேரே முன்னுள்
ஆண்டஅர செழுந்தருளக் கேட்டருளி ஆளுடைய பிள்ளை யாருங்
காண்டகைய பெருவிருப்புக் கைம்மிக்க திருவுள்ளக் கருத்தி னோடு
மூண்டஅருள் மனத்தன்பர் புடைசூழ எழுந்தருளி முன்னே வந்தார்.

1452 தோழதணைவுற் றுண்டஅர சன்புருகத் தொண்டர்குழாத்
திடையே சென்று, பழுதில்பெருங் காதலுடன் அடிபணியப் பணிந்த
வர்தங் கரங்கள் பற்றி, எழுதரிய மலர்க்கையால் எடுத்திறைஞ்சி
விடையின்மேல் வருவார் தம்மை, அழுதழைத்துக் கொண்டவர்தாம்
5 "அப்பரே" எனஅவரும் "அடியேன்" என்றார். கஅஉ

1453 அம்பிகைசெம் பொற்கிண்ணத் தமுதளா னங்கொடுப்ப அழுகை
தீர்ந்த, சேம்பவள வாய்ப்பிள்ளை திருநாவுக் கரசரெனச் சிறந்த
சீர்த்தி, எம்பெருமக் களும்இயைந்த கூட்டத்தில் அரனடியார் இன்பம்
எய்தி, உம்பர்களும் போற்றிசைப்பச் சிவம்பெருகும் ஒலிநிறைத்தார்
உலகம் எல்லாம். கஅங

1454 "பிள்ளையார் கழல்வணங்கப் பெற்றேன்" என் றரசுவப்பப்
பெருகு ஞான, வள்ளலார் வாகீசர் 6தமைவணங்கப் பெற்றதற்கு

பாடவே. 1. விடையுயர்த்தார் 2. இவ்விடுக்கி. 5. அப்பரோ
3. அம்மைதிரு 4. தெய்வமறை. 6. தமைக்காண.

மகிழ்ச்சி பொங்க, உள்ளநிறை காதலினுல் ஒருவரோரு வரிற்கலந்த உண்மை யோடும், வெள்ளநீர்த் திருத்தோணி வீற்றிருந்தார் கழல் வணங்கும் விருப்பின் மிக்கார். கஅச

வேறு

1453 அருட்பெருகு தனிக்கடலும் உலகுக் கெல்லாம் அன்புசெறி கட லுமாம் எனவும் ஓங்கும், பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற புண்ணியக்கண் ணிரண்டெனவும் புவனம் உய்ய, இருட்கடவுண் டவர்அருளும் அகிலம் எல்லாம் ஈன்ருள்தன் திருவருளும் எனவுங் கூடித், தெருட்கலைஞா னக்கன்றும் அரசுஞ் சென்று செஞ்சடைவா னவர்கோயில் சேர்ந்தார் அன்றே. கஅரு

1454 பண்பயில்வண் டறைசோலை சூழுங் காழிப் பரமர்திருக் கோபு ரத்தைப் பணிந்துள் புக்கு, விண்பணிய ஓங்குபெரு விமானந் தன்னை வலங்கொண்டு தொழுதுவிழுந் தெழுந்த எல்லைச், சண்பைவரு பிள்ளை யார் "அப்பர் உங்கள் தம்பிரா னுரைநீர் பாடீர்" என்னக், கண்பயிலும் புனல்பொழிய அரசும் வாய்மைக் கலைபயிலும் மொழிபொழியக் கசிந்து பாடி. கஅசு

1455 பெரியபெரு மாட்டியுடன் தோணி மீது பேணிவீற் றிருந்தரு ளும் பிரான்முன் நின்று, பரிவுறுசெந் தமிழ்மாலை பத்தி யோடும் "பார்கொண்டு மூடி" எனும் பதிகம் போற்றி, அரியவகை புறம் போந்து பிள்ளை யார்தந் திருமடத்தில் எழுந்தருளி அமுது செய்து, மருவியநண் புறுகேண்மை அற்றை நாள்போல் வளர்ந்தோங்க உடன் பலநாள் வைகும் நாளில். கஅள

1456 அத்தன்மை பயில்அரசும் பிள்ளை யாரும் அளவளா வியமகிழ்ச்சி அளவி லாத, சித்தநெகிழ்ச் சியினேறி செல்லும் நாளில் திருநாவுக் கரசுதிரு வுள்ளந் தன்னில், மைத்தழையும் மணிமிடற்றர் பொன்னி நாட்டு மன்னியதா னங்களெல்லாம் வணங்கிப் போற்ற, மெய்த் தெழுந்த பெருங்காதல் பிள்ளை யார்க்கு விளம்புதலும் அவருமது மேவி நேர்வார். கஅஅ

1457 ஆண்டஅர செழுந்தருளக் கோலக் காவை அவரோடுஞ் சென் றிறைஞ்சி அன்பு கொண்டு, மீண்டருளி னர்அவரும் விடைகொண் டிப்பால் வேதநா யகர்விரும்பும் பதிக ளான, இரண்டகருப் பறியலூர் புன்கூர் நீடூர் நீடுதிருக் குறுக்கைதிரு நின்றி யூருங், காண்டகைய நனிபள்ளி முதலாய் நண்ணிக் கண்ணுதலார் கழல்தொழுது கலந்து செல்வார். கஅக

1460 மேவுபுனற் பொன்னியிரு கரையுஞ் சார்ந்து விடையுயர்த்தார் திருச்செம்பொன் பள்ளி பாடிக், காவுயரு மயிலாடு துறைநீள் பொன் னிக் கரைத்துருத்தி வேள்விகுடி எதிர்கொள் பாடி, பாவுறுசெந்

பா. பே. 1. புனல்பொழிந்த 2. நீண்டபுகழ்.
3. வணங்கிச்செல்வார் 4. விடையுகைத்தார்.

தமிழ்மாலை பாடிப் போற்றிப் பரமர்திருப்1 பதிபலவும் பணிந்து போந்தே, ஆவுறும்அஞ் சாடுவார் கோடி காவில் அணைந்துபணிந் தாவடு தண் டுறையைச் சார்ந்தார். ககo

1461 "ஆவடுதண் டுறையாரை அடைந்துய்ந்தேன்"என் றளவில்திருத் தாண்டகமுன் அருளிச் செய்து, மேவுதிருக் குறுந்தொகைநே ரிசை யுஞ் சந்த விருத்தங்க ளானவையும் வேறு வேறு, பாவலர்செந் தமிழ்த் தொடையாற் பள்ளித் தாமம் பலசாத்தி மிக்கெழுந்த பரிவி னோடும், பூவலயத் தவர்பரவப் பலநாள் தங்கிப் 2புரிவுறுகைத் திருத்தொண்டு போற்றிச் செய்வார். ககக

1462 எறிபுனல்பொன் மணிசிதறுந் திரைநீர்ப் பொன்னி இடைமரு தைச் சென்றெய்தி அன்பி னோடு, மறிவிரவு கரத்தாரை வணங்கி வைகி வண்தமிழ்ப்பா மாலைபல மிகுழச் சாத்திப், பொறியரவம் புனைந் தாரைத் திருநாகேச் சுரத்துப் போற்றியருந் தமிழ்மாலை புனைந்து போந்து, செறிவிரைசேர் மலர்ச்சோலைப் பழையா றெய்தித் திருச் சத்தி 3முற்றத்திற் சென்று சேர்ந்தார். ககஉ

வேறு

1463 சென்று சேர்ந்து திருச்சத்தி முற்றத் திருந்த சிவக்கொழுந்தைக் குன்ற மகள்தன் மனக்காதல் குலவும் பூசை கொண்டருளும் என்றும்4 இனிய பெருமானை இறைஞ்சி இயல்பில் திருப்பணிகள் முன்றில் அணைந்து செய்துதமிழ் மொழிமா லைகளுஞ் சாத்துவார்.

1464 "கோவாய் முடுகி" என்றெடுத்துக் "கூற்றம் வந்து குமைப்பதன்முன்
5 பூவா ரடிகள் என்தலைமேல் பொறித்து வைப்பாய்" எனப்புகன்று
நாவார் பதிகம் பாடுதலும் நாதன் தானும் நல்லூரில்
"வாவா" என்றே அருள்செய்ய வணங்கி மகிழ்ந்து வாகீசர். ககச

வேறு

1465 நன்மைபெரு கருள்நெறியே வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கிமகிழ்ந் தெழும்பொழுதில்
"உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்" என்றவர்தஞ்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினனன் சிவபெருமான். ககஙு

1466 "நினைந்தனைய திருவடிஎன் தலைமேல்வைத் தார்"என்று
புனைந்ததிருத் தாண்டகத்தால் போற்றிசைத்துப் புனிதரருள்
நினைந்துருகி விழுந்தெழுந்து நிறைந்தமலர்க் 6தொழியாத
தனம்பெரிதும் பெற்றுவந்த வறியோன்போல் மனந்தழைத்தார். ககஙு

1467 நாவுக்கு மன்னர்திரு நல்லூரில் நம்பர்பால்
மேவுற்ற திருப்பணிகள் மேவுறநா ளுஞ்செய்து
பாவுற்ற7 தமிழ்மாலை பலபாடிப் பணிந்தேத்தித்
தேவுற்ற திருத்தொண்டு செய்துதாழுகிச் செல்லுநாள். ககஞ

1. பதிபிறவும். 2. பணிவுறுதல். 3 முற்றுனை. 4 இனிய. 5. பூவாத்தாழ்கள். 6 அழியாத. 7. மொழிமாலை.

1468 கருகாவூர் முதலாகக் கண்ணுதலோன் அமர்ந்தருளுந்
திருவாவூர் திருப்பாலைத் துறைபிறவுஞ் சென்றிறைஞ்சிப்
பெருகார்வத் திருத்தொண்டு செய்துபெருந் திருநல்லூர்
ஒருகாலும் பிரியாதே உள்ளுருகிப் பணிகின்றார். ககூஅ

1469 ஆளுடைய நாயகன்றன் அருள்பெற்றங் ககன்றுபோய்
வாளாபாய் புனற்பழனத் திருப்பழன மருங்கணைந்து
காளவிடம் உண்டிருண்ட கண்டர்பணிக் கலன்பூண்டு
நீளரவில் ஆவோர் கழல்வணங்க நேர்பெற்றார். ககூக

1470 அப்பதியைச் சூழ்ந்ததிருப் பதியில்அர னார்மகிழும்
ஒப்பரிய தானங்கள் உள்ளுருகிப் பணிந்தணைவார்
மெய்ப்பொருள்தேர் ஞானினுக்கு வேந்தர்தாம் மேவினார்
செப்பருஞ்சீர் அப்பூதி அடிகளுர் திங்களூர். உ00

1471 அந்தணரின் மேம்பட்ட அப்பூதி அடிகளார்
தந்தனய ருடன்சாலை கூவல்குளந் தருதண்ணீர்ப்
பந்தர்பல ஆண்டஅர செனும்பெயரால் பண்ணினமை
வந்தணைந்த வாகீசர் கேட்டவர்தம் மனைநண்ண. உ0க

1472 மற்றவரும் மனம்மகிழ்ந்து மனைவியார் மைந்தர்பெருஞ்
சுற்றமுடன் களிகூரத் தொழுதெழுந்து சூழ்ந்துமொழிக்
கொற்றவரை அமுதுசெயக் குறைகொள்வார் இறைகொள்ளப்
பெற்றபெருந் தவத்தொண்டர் திருவுள்ளம் பெறப்பெற்றார்.

1473 காண்டகைமை இன்றியும்முன் கலந்தபெருங் கேண்மையினர்
பூண்டபெருங் காதலுடன் போனகமுங் கறியமுதும்
வேண்டுவன வெவ்வேறு விதங்கள்பெற விருப்பினால்
ஆண்டஅர சமுதுசெயத் திருஅமுதாம் படிஅமைத்து. உ0ங

1474 திருநாவுக் கரசமுது செய்தருள மற்றவர்தம்
பெருநாமஞ் சாத்தியஅப் பிள்ளைதனை அழைத்தன்பு
தருஞானத் திருமறையோர் தண்டலையின் வண்கதலிக்
குருநாளக் குருத்தரிந்து கொண்டுவரத் தனிவிட்டார். உ0ச

1475 ஆங்கவனும் விரைந்தெய்தி அம்மருங்கு தாழாதே
பூங்கதலிக் குருத்தரியப் புகும்அளவில் ஒருநாகம்
தீங்கிழைக்க அதுபேணன் திருஅமுது செய்தருள
ஓங்குகத லிக்குருத்துக் கொண்டொல்லை வந்தணைந்தான். உ0ரு

1476 தீயவிடந் தலைக்கொள்ளத் தெருமந்து செழுங்குருத்தைத்
தாயர்கரத் தினில்நீட்டித் தளர்ந்துதனைத் தாழ்நாகம்
மேயபடி உரைசெய்யான் விழக்கண்டு "கெட்டொழிந்தேம்
தூயவர்இங் கமுதுசெயத் தொடங்கார்"என் றதுஓலித்தார்.

---

1. துறைபலவும். 2. மெய்ப்பொருள். 3. அடிகளார்.
4. அழைத்தன்பு. 5. தழலாவம்.

1477 தம்புதல்வன் சவம்மறைத்துத் தமோற்றம் இலராகி
"எம்பெருமான்! அமுதுசெய வேண்டும்"என வந்திறைஞ்ச
உம்பர்பிரான் திருத்தொண்டர் உள்ளத்தில் தமோற்றம்
நம்பர்திரு வருளாலே அறிந்தருளி நவைதீர்ப்பார். உ0ஸ

1478 அன்றவர்கள் மறைத்ததனுக் களவிறந்த கருணையராய்க்
கொன்றைநறுஞ் சடையார்தங் கோயிலின்முன் கொணர்வித்தே
"ஒன்றுகொலாம்" எனப்பதிகம் எடுத்துடையான் சீர்பாடப்
பின்றைவிடம் போய்நீங்கிப் பிள்ளையுணர்ந் தெழுந்திருந்தான்.

1479 அருந்தனயன் உயிர்பெற்ற அதுகண்டும் அமுதுசெயா
திருந்ததற்குத் தளர்வெய்தி இடருழந்தார் துயர்நீங்க
வருந்துமவர் மனைப்புகுந்து வாகீசத் திருமுனிவர்
விருந்தமுது செய்தருளி விருப்பினுடன் மேவுநாள். உ0க

1480 திங்களூர் தனில்நின்றுந் திருமறையோர் பின்செல்லப்
பைங்கண்விடைத் தனிப்பாகர் திருப்பழனப் பதிபுகுந்து
தங்குபெருங் காதலொடுந் தம்பெருமான் கழல்சார்ந்து
பொங்கியஅன் புறவணங்கி முன்னின்று போற்றிசைப்பார். உகO

1481 புடைமாலை மதிக்கண்ணிப் புரிசடையார் பொற்கழற்கீழ்
அடைமாலைச் சீலமுடை அப்பூதி அடிகள்தமை
நடைமாணச் சிறப்பித்து நன்மைபுரி திருத்தமிழின்
தொடைமாலைத் திருப்பதிகச் சொன்மாலை பாடினார். உகக

1482 எழும்பணியும் இளம்பிறையும் அணிந்தவரை எம்மருங்குந்
தொழும்பணிமேற் கொண்டருளித் திருச்சோற்றுத் துறைமுதலாத்
தழும்புறுகேண் மையில்நண்ணித் தானங்கள் பலபாடிச்
செழும்பழனத் திறைகோயில் திருத்தொண்டு செய்திருந்தார். உகஉ

1483 சாலநாள் அங்கமர்ந்து தந்தலைமேல் தாள்வைத்த
ஆலமார் மணிமிடற்றர் அணிமலர்ச்சே வடிநினைந்து
சேலுலாம் புனற்பொன்னித் தென்கரையே திருச்சென்று
கோலநீள் மணிமாடத் திருநல்லூர் குறுகினார். உகங

1484 அங்கணைந்து தம்பெருமான் அடிவணங்கி ஆராது
பொங்கியஅன் பொடுதிளைத்துப் போற்றிசைத்துப் பணிசெயுநாள்
தங்குபெருங் காதலினால் தாமரைமேல் விரிஞ்சனுடு
செங்கண்மால் அறிவரியார் திருவாரூர் தொழுதணைந்தார். உகச

1485 நல்லூரில் நம்பர்அருள் பெற்றுப்போய்ப் பழையாறை
பல்லூர்வெண் தலைக்கரத்தார் பயிலும்இடம் பலபணிந்து
சொல்லூர்வண் தமிழ்பாடி வலஞ்சுழியைத் தொழுதேத்தி
அல்லூர்வெண் பிறையணிந்தார் திருக்குடமூக் கணைந்திறைஞ்சி. உகடு

பா.CV.1 அன்பொடு. 2. கொண்டடு ரூம்.

1486 நாலூர்தென் திருச்சேறை குடவாயில் நறையூர்சேர்
பாலூரும் இன்மொழியாள் பாகனூர் கழல்பரவி
மேலூர்தி விடைக்கொடியார் மேவும்இடம் பலபாடிச்
சேலூர்தண் பணைசூழ்ந்த தென்திருவாஞ் சியம்அணைந்தார். உகசு

1487 பெருவாச மலர்ச்சோலைப் பெருவேளூர் பணிந்தேத்தி
முருகாரும் மலர்க்கொன்றை முதல்வனூர் பதிபிறவும்
திருவாரும் விளமருடன் சென்றிறைஞ்சி வாகீசர்
மருவாரூர் எரித்தவர்தந் திருவாரூர் வந்தடைந்தார். உகள

1488 ஆண்டஅர செழுந்தருள ஆரூரில் அன்பர்கள்தாம்
நீண்டசடை முடியார்பால் நிறைந்தஅருள் பெற்றுடையார்
காண்தகுமா விகைமாடங் கவின்சிறந்தோங் கிடஎங்கும்
சேண்திகழ்வீ திகள்பொலியத் திருமலிமங் கலஞ்செய்தார். உகஅ

வேறு

1489 வல்லமண் குண்டர்தம் மாயை கடந்து மறிகடலில்
கல்லே மிதப்பாகப் போந்தவர் வந்தா ரெனுங்களிப்பால்
எல்லையில் தொண்டர் எயிற்புறஞ் சென்றெதிர் கொண்டபோது
சொல்லின் அரசர் வணங்கித் தொழுதுரை செய்தணைவார். உகக

1490 "பற்றொன் றிலாவரும் பாதக ராகும் அமணர்தம்பால்
உற்ற பிணியொழிந் துய்யப்போந் தேன்பெற லாவதொன்றே
புற்றிடங் கொண்டான்தன் தொண்டர்க்குத் தொண்டாம் புண்ணிய"மென்
றுற்ற உணர்வொடும் ஆரூர்த் திருவீதி உள்ளணைந்தார். உஉ0

1491 சூழுந் திருத்தொண்டர் தம்முடன் தோரண வாயில்நண்ணி
வாழி திருநெடுந் தேவா சிரியன்முன் வந்திறைஞ்சி
ஆழி வரைத்திரு மாளிகை வாயில் அவைபுகுந்து
நீள்சுடர் மாமணிப் புற்றுகந் தாரைநேர் கண்டுகொண்டார். உஉக

1492 கண்டு தொழுது கரசர ணுதிஅங்கமெலாம்
கொண்ட புளகங்க ளாக எழுந்தன்பு கூரக்கண்கள்
தண்டுளி மாரி பொழியத் திருமூலட் டானர்தம்மைப்
புண்டரி கக்கழல் போற்றித் திருத்தாண் டகம்புனைந்து. உஉஉ

1493 "காண்ட லேகருத் தாய்நினைந்" தென்னுங் கலிப்பதிகம்
தூண்டா விளக்கன்ன சோதிமுன் நின்று துதித்துருகி
ஈண்டு மணிக்கோயில் சூழ வலஞ்செய் திறைஞ்சிஅன்பு
பூண்ட மனத்தொடு நீள்திரு வாயிற் புறத்தணைந்தார். உஉங

வேறு

1494 செய்யமா மணிஒளிசூழ் திருமூன்றின் முன்தேவா சிரியன் சார்ந்து
4 "கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ மயிலாலும் ஆரூ ராரைக்

பா.பே.1. பெருலாவதுண்டே. 2. உற்றனர் வெலாம்
3. அங்கைங்கனல்லாம். 4 கொய்யுமா.

கையினுல் தொழாதொழிந்து கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வ னேன்''என் றெய்தரிய கையறவால் திருப்பதிகம் அருள்செய்தங் கிருந்தார் அன்றே.

1455 மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாருந் திருவடியும் மதுர வாக்கில் சேர்வாகுந் திருவாயில் தீந்தமிழின் மாலைகளுஞ் சேம்போற் ருளே சார்வான திருமனமும் உழவாரத் தனிப்படையும் தாழும் ஆகிப் பார்வாழத் திருவீதிப் பணிசெய்து பணிந்தேத்திப் பரவிச் செல்வார்.

1456 நீடுபுகழ்த் திருவாரூர் நிலவுமணிப் புற்றிடங்கொள் நிருத்தர் தம்மைக் கூடியஅன் பொடுகாலங் களில்அணைந்து கும்பிட்டுக் கோதில் வாய்மைப் ''பாடிளம்பூ தத்திணன்'' எனும்பதிகம் முதலான பலவும் பாடி நாடியஆர் வம்பெருக நைந்துமனங் கரைந்துருகி நயந்து செல்வார்.

1457 நான்மறைதூற் பெறுவாய்மை நமிநந்தி அடிகள்திருத் தொண் டின் நன்மைப், பான்மைநிலை யால்அவரைப் பரமர்திரு விருத்தத்துள் வைத்துப் பாடித், தேன்மருவுங் கொன்றையார் திருவாரூர் அர னெறியில் திகழுந் தன்மை, ஆனதிற மும்போற்றி அணிவீதிப் பணி செய்தங் கமரும் நாளில். உஉஎ

1458 நீராருஞ் சடைமுடியார் நிலவுதிரு வலிவலமும் நிணைந்து சென்று வாராரு முலைமங்கை உமைபங்கர் கழல்பணிந்து மகிழ்ந்து பாடிக் காராருங் கறைக்கண்டர் கீழ்வேளூர் கன்றாப்பூர் கலந்து பாடி ஆராத காதலினுல் திருவாரூர் தனில்மீண்டும் அணைந்தார் அன்றே.

1459 மேவுதிரு வாதிரைநாள் வீதிவிடங் கப்பெருமாள் பவனி தன் னில், தேவருடன் முனிவர்கள்முன் சேவிக்கும் அடியார்க ளுடன்சே வித்து, மூவுலகுங் களிகூர வரும்பெருமை முறைமையெலாங் கண்டு போற்றி, நாவினுக்குத் தனியரசர் நயக்குநாள் நம்பர்திரு அருளி னுலே. உஉக

1460 திருப்புகலூர் அமர்ந்தருளுஞ் சிவபெருமான் சேவடிகள் கும்பிட் டேத்தும், விருப்புடைய உள்ளத்து மேவிஎழுங் காதல்புரி வேட்கை கூர, ஒருப்படுவார் திருவாரூர் ஒருவாறு தொழுதகன்றங் குள்ளம் வைத்துப், பொருப்பரையன் மடப்பாவை இடப்பாகர் பதிபிறவும் பணிந்து போந்தார். உஉO

1461 அந்நாளில் ஆளுடைய பிள்ளையார் திருப்புகலி அதன்கண் நின் றும், பன்னகப் பூணணிவார் பயின்றதிருப் பதிபலவும் பணிந்து செல்வார், புன்னுக மணங்கமழும் பூம்புகலூர் வந்திறைஞ்சிப் பொரு வில் சீர்த்தி, மின்னுரும் புரிமுந்நூல் முருகனார் திருமடத்தில் மேவுங் காலை. உஉக

1462 ஆண்டஅர செழுந்தருளி அணியாரூர் மணிப்புற்றில் அமர்ந்து வாழும், நீண்டசுடர் மாமணியைக் கும்பிட்டு நீடுதிருப் புகலூர்

பா. ஏ.U.1 · நாயிய ஆசு வம்பெருங்கு ·

நோக்கி, மீண்டருளி ஞரென்று கேட்டருளி எதிர்கொள்ளும் விருப்பி னோடும், ஈண்டுபெருந் தொண்டர்குழாம் புடைசூழ எழுந்தருளி எதிரே சென்றார். உஙஉ

1503 கரண்டமலி தடம்பொய்கைக் காழியர்கோன் எதிரணையுங் காதல் கேட்டு, வரன்றுமணிப் புனற்புகலூர் நேர்நோக்கி வாகீசர் மகிழ்ந்து வந்தார், இருதிரண்டுவருந் திருநீற்றுத் தொண்டர்குழாம் இருதிறமுஞ் சேர்ந்த போதில், இரண்டுநில வின்கடல்கள் ஒன்றுகி அணைந்தன போல் இசைந்த அன்றே. உஙங

1504 திருநாவுக் கரசர்எதிர் சென்றிறைஞ்சிச் சிரபுரத்துத் தெய்வ வாய்மைப், பெருஞான சம்பந்தப் பிள்ளையார் எதிர்வணங்கி "அப்ப ரே!நீர், வருநாளில் திருவாரூர் நிகழ்பெருமை வகுத்துரைப்பீர்" என்று கூற, அருநாமத் தஞ்செழுத்தும் பயில்வாய்மை அவரும்எதிர் அருளிச் செய்தார். உஙச

வேறு

1505 "சித்தம் நிலாவுந் தென்திரு ஆரூர் நகராளும்
மைத்தழை கண்டர் ஆதிரை நாளின் மகிழ்செல்வம்
இத்தகை மைத்தென் றென்மொழி கேன்3என் றருள்செய்தார்
"மூத்து விதான மணிப்பொற் கவரி" மொழிமாலை. உஙடு

1506 அம்மொழி மாலைச் செந்தமிழ் கேளா அணிசண்பை
4மைம்மலர் கண்டத் தண்டர் பிரானார் மகனுரும்
"கொய்ம்மலர் வாவித் தென்திரு ஆரூர் கும்பிட்டே
உம்முடன் வந்திங் குடன்அமர் வேன்"என் றுரைசெய்தார். உஙசு

1507 மாமதில் ஆரூர் மன்னரை அங்கு வணங்கச்சென்
தாமரை யோடைச் சண்பையர் நாதன் தானேக
5நாமரு சொல்லின் நாதரும் ஆர்வத் தொடுபுக்கார்
6பூமலர் வாசத் தண்பணை சூழும் புகலூரில். உஙள

1508 அத்திரு மூதூர் மேவிய நாவுக் கரசுந்தம்
சித்தம் நிறைந்தே அன்பு தெவிட்டுந் தெளிவெள்ளம்
மொய்த்திழி தாரைக் கண்பொழி நீர்மெய்ம் முழுதாரப்
பைத்தலை நாகப் பூண்அணி வாரைப் பணிவுற்றார். உஙஅ

1509 தேவர் பிரானைத் தென்புக லூர்மன் னியதேனைப்
பாவியல் மாலைச் செந்தமிழ் பாடிப் பரிவோடு
மேவிய காலந் தோறும் விருப்பிற் கும்பிட்டே
ஓவுதல் ஓவுந் திருப்பணி செய்தங் குறைகின்றார். உஙக

1510 சீர்தரு செங்காட் டங்குடி நீடுந் திருநள்ளா
ரூர்தரு சோலை சூழ்தரு சாந்தை அபவந்தி

பா.வே. 1. தோத்திவெழும். 2. திரண்டெலும்.
3. என்னுரை செய்தார். 4. மைம்மலி.
5. நாமருசொற்சொல். 6. பூலிவாசரி.

வார்திகழ் மென்முலை யாளொரு பாகன் திருமருகல்
ஏர்தரும் அன்பால் சென்று வணங்கி இன்புற்றார். உசo

1511 அப்படிச் சின்னாள் சென்றபின் ஆரூர் நகராளும்
தூப்புறழ் வேணிக் கண்ணுத லாரைத் தொழுதிப்பால்
மெய்ப்பொருள் ஞானம் பெற்றவர் வேணு புரத்தெங்கள்
பொற்புரி மூன்றூல் மார்பரும் வந்தார் புகலூரில். உசக

வேறு

1512 பிள்ளையார் எழுந்தருளப் பெருவிருப்பால் வாகீசர்
உள்ளமகிழ்ந் தெதிர்கொண்டங் குடன்உறையு நாளின்கண்
வள்ளலார் சிறுத்தொண்டர் மற்றவர்பால் எழுந்தருள
எள்ளருஞ்சீர் நீலநக்கர் தாமும்எழுந் தருளினார். உசஉ

1513 ஆங்கணையும் அவர்களுடன் அப்பதியில் அந்தணராம்
ஓங்குபுகழ் முருகனார் திருமடத்தி லுடனுகப்
பாங்கில்வருஞ் சீரடியார் பலருமுடன் பயில்கேண்மை
நீங்கரிய திருத்தொண்டின் நிலையுணர்ந்து நிகழ்கின்றார். உசங

1514 திருப்பதிகச் செழுந்தமிழின் திறம்போற்றி மகிழ்வுற்றுப்
பொருப்பரையன் மடப்பாவை இடப்பாகர் பொற்றாளில்
விருப்புடைய திருத்தொண்டர் பெருமையினை விரித்துரைத்தங்
கொருப்படுசிந் தையினர்கள் உடனுறைவின் பயன்பேற்றார். உசச

1515 அந்நாளில் தமக்கேற்ற திருத்தொண்டின் நெறியாற்ற
மின்னார்செஞ் சடைஅண்ணல் மேவுபதி எணெப்பலவும்
முன்னுகச் சென்றேத்தி முதல்வன்தாள் தொழுவதற்குப்
பொன்னாரும் மணிமாடப் பூம்புகலூர் தொழுதகன்றார். உசரு

1516 திருநீல நக்கடிகள் சிறுத்தொண்டர் முருகனார்
பெருநீர்மை அடியார்கள் பிறரும்விடை கொண்டேக
ஒருநீர்மை மனத்துடைய பிள்ளையா ருடன்அரசும்
வருநீர்செஞ் சடைக்காந்தார் திருஅம்பர் வணங்கினார். உசசு

1517 செங்குமுத மலர்வாவித் திருக்கடவூர் அணைந்தருளிப்
பொங்கியவெங் கூற்றடர்த்த பொன்னடிகள் தொழுதேத்திக்
குங்குலியக் கலயனார் திருமடத்தில் குறைவறுப்ப
அங்கவர்பால் சிவனடியா ருடன்அமுது செய்தார்கள். உசள

1518 சீர்மன்னுந் திருக்கடவூர்த் திருமயா னமும்வணங்கி
ஏர்மன்னும் இன்னிசைப்பாப் பலபாடி இனிதமர்ந்து
கார்மன்னுங் கறைக்கண்டர் கழலிணைகள் தொழுதகன்று
தேர்மன்னும் மணிவீதித் திருவாக்கூர் சென்றணைந்தார். உசஅ

1519 சார்ந்தார்தம் புகலிடத்தைத் தான்தோன்றி மாடத்துக்
கூர்ந்தார்வம் உறப்பணிந்து கோதில்தமிழ்த் தொடைபுனைந்து
வார்ந்தாடுஞ் சடையார்தம் பதிபலவும் வணங்கியுடன்
சேர்ந்தார்கள் தம்பெருமான் திருவீழி மிழலையினை. உசசு

வேறு

1520 வீழி மிழலை1வந்தணைய மேவு நாவுக் கரசினையும்
காழி ஞானப் பிள்ளையையும் கலந்த உள்ளக் காதலினால்
ஆழி வலவன் அறியாத அடியார் அடியார் அவர்களுடன்
வாழி மறையோர் எதிர்கொண்டு வணங்க வணங்கி உள்புக்கார். உருo

1521 மாட வீதி அலங்கரித்து மறையோர் வாயின் மணிவிளக்கு
நீடு கதலி தழைப்பூகம் நிரைத்து நிறைபொற் குடமெடுத்துப்
பீடு பெற்ருகும் வாகீசர் பிள்ளை யாரும் தொண்டர்களும்
கூட மகிழ்ந்து விண்ணிழிந்த கோயில் வாயில் சென்றணைந்தார். உருக

1522 சென்றுள் புகுந்து திருவீழி மிழலை அமர்ந்த செங்கனகக்
குன்ற வில்லி யார்மகிழ்ந்த கோயில் வலமா வந்துதிரு
முன்றில் வணங்கி முன்னெய்தி முக்கட் செக்கர்ச் சடைமவுலி
வென்றி விடையார் சேவடிக்கீழ் விழுந்தார் எழுந்தார் விம்மினர்.

1523 கைகள் குவித்துக் கழல்போற்றிக் கலந்த அன்பு 2கரைந்துருக
மெய்யில் வழியுங் கண்ணருவி 3விரவப் பரவுஞ் சொன்மாலை
"செய்ய சடையார் தமைச்சேரார் தீங்கு நெறிசேர் கின்றூர்" என்
றுய்யு நெறித்தாண் டகமொழிந்தாங் கொழியாக் காதல் சிறந்தோங்க.

1524 முன்னுள் அயனுந் திருமாலும் முடிவும் முதலும் காணுத
பொன்னுர் மேனி மணிவெற்பைப் பூநீர் மிழலை யினில்போற்றிப்
பன்னுள் பிரியா நிலைமையினால் பயிலக் கும்பிட் டிருப்பாராய்
அந்நாள் மறையோர் திருப்பதியில் இருந்தார் மெய்ம்மை அருந்தவர்கள்.

1525 சீரின் விளங்குந் திருத்தொண்டர் இருந்து சிலநாள் சென்றதற்பின்
மாரி சுருங்கி 6வளம்பொன்னி நதியும் பருவம் மாறுதலும்
5நீரின் இயன்ற உணவருகி நிலவும் பலமன்7னுயிர்க்கிளைலாம்
பாரின் மலிந்த இலம்பாட்டில் படர்கூர் வறுமை8பரந்ததால். உருடு

1526 வையம் எங்கும் வற்கடமாய்ச் செல்ல உலகோர் வருத்தமுற
கையும் நாவில் பிள்ளையார் தமக்கும் நாவுக் கரசருக்கும்
கையில் மானும் மழுவுமுடன் காணக் கனவில் எழுந்தருளிச்
செய்ய சடையார் திருவீழி மிழலை யுடையார் அருள்செய்வார். உருக

1527 "கால நிலைமை யால்உங்கள் கருத்தில் வாட்ட முறீர்எனினும்
ஏல உம்மை வழிபடுவார்க் களிக்க அளிக்கின் றேம்" என்று

பா.பே. 1. வந்தணையும். 2. கனைந்துருக்க. 3 விரவப். 4. வளர்பொ(ன்னி
5. நீரினியன்றி. 6. உணவுகி. 7. உயிர்க்கெல்லாம்.
8. படர்ந்ததால்.

கோலங் காண எழுந்தருளிக் குலவும் பெருமை இருவர்க்கும்
ஞாலம் அறியப் படிக்காசு வைத்தார் மிழலை நாயகனார். உடுஎ

1526 விண்ணின் றிழிந்த விமானத்தின் கிழக்கும் மேற்கும் பீடத்தில்
அண்ணல் புகலி ஆண்டகையார் தமக்கும் ஆண்ட அரசினுக்கும்
நண்ணும் நாள்கள் தொறுங்காசு படிவைத் தருள நானிலத்தில்
எண்ணில் அடியா ருடன்அமுது செய்தங் கிருந்தார் இருவர்களும்.

1527 அல்லார் கண்டத் தண்டர்பிரான் அருளால் பெற்ற படிக்காசு
பல்லா றியன்ற வளம்பெருகப் பரமன் அடியா ராளர்கள்
எல்லாம்[1] எய்தி உண்கவென இரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச்
சொல்லால் சாற்றிச் சோறிட்டார் துயர்கூர் வறுமை தொலைத்திட்டார்.

1528 ஈசர் மிழலை இறையவர்பால் இமையப் பாவை திருமுலைப்பால்
தேசம் உய்ய[2] உண்டவர்தாம் திருமா மகனார் ஆதலினால்
காசு வாசி யுடன்பெற்றார் கைத்தொண் டாகும் படிமையினால்
வாசி இல்லாக் காசுபடி பெற்று வந்தார் வாகீசர். உசo

1531 ஆறு சடைமேல் அணிந்தருளும் அண்ணல் வைத்த படிக்காசால்
ஈறி லாத பொருளுடைய இருவருடைய திருமடங்கள்
சோறு நாளுந் தொண்டர்மகிழ்ந் துண்ண உண்ணத் தொலையாதே
ஏறு பெருமை புவிபோற்ற இன்புற் றிருக்கும் அந்நாளில். உசக

1532 காலந் தவறு தீர்த்தெங்கும் கலிவான் பொழிந்த புனல்கலந்து
ஞாலம் எல்லாம்[3] குளிர்தூங்கி உணவு பெருகி நலஞ்சிறப்ப
மூல அன்பர் இருவர்களும் மொழிமா லைகளும் பலசாத்தி
நீல கண்டர் உறைபதிகள் பிறவும் வணங்க நினைவுற்றார். உசஉ

1533 வாய்ந்த மிழலை மாமணியை வணங்கிப் பிரியா விடைகொண்டு
பூந்தண் புனல்சூழ்[4] வாஞ்சியத்தைப்போற்றிப் புனிதர் வாழ்பதிகள்
ஏய்ந்த அன்பி னுள்இறைஞ்சி இசைவண் தமிழ்கள் புனைந்துபோய்ச்
சேர்ந்தார் செல்வத் திருமறைக்கா டெல்லை இல்லாச் சீர்த்தியினர்.

1534 மன்றல் விரவு மலர்ப்புன்னை மணஞ்சூழ் சோலை உப்பளத்தின்
முன்றில் தோறுஞ் சிறுமடவார் முத்தங் கொழிக்கும் மறைக்காட்டுக்
குன்ற வில்லி யார்மகிழ்ந்த கோயில் புகுந்து வலங்கொண்டு
சென்று சேர்ந்தார் தென்புகலிக் கோவும் அரசுந் திருமுன்பு. உசச

1535 பரவை ஓதக் கழிக்கானற் பாங்கு நெருங்கும் அப்பதியில்
அரவச் சடைஅந் தணனுரை அகில மறைகள் அர்ச்சனைசெய்
துரவக் கதவந் திருக்காப்புச் செய்த அந்நாள் முதல்இந்நாள்
வரையும் அடைத்தே நிற்கின்ற மணிநீள் வாயில் வணங்குவார். உசுஎ

1536 தொல்லை வேதந் திருக்காப்புச் செய்த வாயில் தொடர்வகற்ற
வல்ல அன்பர் அணையாமை மருங்கோர் வாயில் வழிஎய்தி

---

1. எய்த 2. உண்டவர்தம் 3. களிதூங்கி
4 பூந்தண்பொழில்சூழ் 5. வாஞ்சியநற்பதியை

அல்லல் தீர்ப்பார் தமையருச்சிப் பார்கள் தொழுவார் ஆம்படிகண்
டெல்லே இல்லாப் பெரும்புகழார் இதனை அங்குக் கேட்டறிந்தார்.

1537 ஆங்கப் பரிசை அறிந்தருளி ஆழித் தோணி புரத்தரசர்
ஓங்கு வேதம் அருச்சனைசெய் உம்பர் பிரானை உள்புக்குத்
"தேங்கா திருவோம் நேர்இறைஞ்சத் திருமுன் கதவந் திருக்காப்பு
நீங்கப் பாடும் அப்பர்"என நீடுந்திருநா வுக்கரசர். உசுள

1538 உண்ணீர் மையினுல் பிள்ளையார் உரைசெய் தருள அதனுலே
"பண்ணி னேரு மொழியாள்"என் றெடுத்துப் பாடப் பயன்துய்ப்பான்
தெண்ணீர் அணிந்தார் திருக்காப்பு நீக்கத் தாழ்க்கத் திருக்கடைக்காப்
"பெண்ணீர் இரக்கம்[1] ஒன்றில்லீர்" என்று பாடி இறைஞ்சுதலும்.

1539 வேத வனத்தின் மெய்ப்பொருளின் அருளால் விளங்கு மணிக்கதவம்
காதல் அன்பர் முன்புதிருக் காப்பு நீங்கக் கலிமொழிக்கு
நாதர் ஞான முனிவருடன் தொழுது விழுந்தார் ஞாலத்துள்
ஓத ஒலியின் மிக்கெழுந்த தும்பர் ஆர்ப்பும் மறையொலியும். உசுக

1540 அன்பர் ஈட்டங் களிசிறப்ப ஆண்ட அரசுஞ் சிவக்கன்றும்
இன்ப வெள்ளத் திடைமூழ்கி எழுந்துள் புகுந்து தம்பெருமான்
முன்பு பணிந்து போற்றிசைத்துப் பரவி மொழிமா லைகள்பாடி
என்பு கரைய உள்ளுருகி இறைஞ்சி அரிதிற் புறத்தணைந்தார். உஎ0

1541 புறம்பு[2] நின்று வாகீசர் புனிதர் அருளால் இக்கதவம்
திறந்தும் அடைத்தும் செல்லுநெறி திருந்த மலையாள் திருமுலையில்
கறந்த ஞானங் குழைத்தமுது செய்த புகலிக் கவுணியரை
"நிறைந்த கதவம் அடைக்கும்வகை நீரும் பாடி அருளும்"என. உஎக

1542 கண்பை ஆளுந் தமிழ்விரகர் தாமுந் திருநா வுக்கரசர்
பண்பின் மொழிந்த[3] உரைகொண்டு பதிகம் பாடும் அவ்வளவில்
கண்போற் பமைந்த நுதற்காள கண்டர் அருளால் கடிதுடனே
திண்பொற் கதவந் திருக்காப்பு[4]செய்த தெடுத்த திருப்பாட்டில்.

1543 அதுகண் டுடைய பிள்ளையார் தாமும் ஆண்ட அரசும்மகிழ்ந்
"திதுநம் பெருமான் அருள்செய்யப் பெற்றோம்" என்றங் கிறைஞ்சியபின்
பதிகம் நிரம்பப் பிள்ளையார் பாடித் தொழுது பணிவுற்றார்
எதிர்பொற் றிருவர் யிலின்வழக்கம் என்றும் நிகழ்ச்சி எய்தியதால்.

1544 அங்கு நிகழ்ந்த அச்செயல்கண் டடியார் எல்லாம் அதிசயித்துப்
பொங்கு புளகம் எய்திடமெய் பொழியுங் கண்ணீர்[5] பரந்திழிய
எங்கும் நிகரொன் றில்லாத இருவர் பாதம் இறைஞ்சினர்
நங்கள் புகலிப் பெருந்தகையும் அரசும் மடத்தில் நண்ணியபின். உஎச

1545 "அரிதில் திறக்கத் தாம்பாட அடைக்க அவர்பா டியஎளிமை
கருதி நம்பர் திருவுள்ளம் அறியா தயர்ந்தேன்" எனக்கவன்று

பா. பே.) 1. இல்லீரே. 2. நின்று. 3. அருள்கொண்டு. 4. கொள்ளட
5. பாய்ந்திழிய. 6. யாம்பாட.

பெரிதும் அஞ்சித் திருமடத்தில் ஒருபால் அணைந்து பேழ்கணித்து
மருவும் உணர்வில் துயில்கொண்டார் வாய்மை திறம்பா வாகீசர். உஎடு

1546 மன்னுஞ் செல்வ மறைக்காட்டு மணியின் பாதம் மனத்தின்கண்
உன்னித் துயிலும் பொழுதின்கண் உமையோர் பாகம் உடையவர்தாம்
பொன்னின் மேனி வெண்ணீறு பூணந்த கோலப் பொலிவினுடைங்
துன்னி அவர்க்கு "வாய்மூரில் இருப்போந் தோடர வா" என்றார்.

1547 "போதம் நிகழ வாளன்று போனார் என்கொல்" எனப்பாடி
"ஈதெம் பெருமான் அருளாகில் யானும் போவேன்" என்றெழுந்து
வேத வனத்தைப் புறகிட்டு விரைந்து போக அவர்முன்னே
ஆதி மூர்த்தி முன்காட்டும் அவ்வே டத்தால் எழுந்தருள. உஎஎ

1548 சீரார் பதியி னின்றெழுந்து செல்லுந் திருநா வுக்கரசர்
ஆரா அன்பில் ஆரமுதம் உண்ண எய்தா வாறேபோல்
நீரார் சடையார் எழுந்தருள நெடிது பின்பு செல்லுமவர்
பேரா ளரைமுன் தொடர்ந்தணையப் பெறுவார் எய்தப் பெற்றிலரால்.

1549 அன்ன வண்ணம் எழுந்தருளி அணித்தே காட்சி கொடுப்பார்போல்
பொன்னின் கோயில் ஒன்றெதிரே காட்டி அதனுட் புக்கருளத்
துன்னுந் தொண்டர் அம்மருங்கு விரைந்து தொடரப் போந்தபடி
மன்னும் புகலி வள்ளலார் தாமுங் கேட்டு வந்தணைந்தார். உஎக

1550 "அழைத்துக் கொடுபோந் தணியார்போல் காட்டி மறைந்தார்"
எனஅயர்ந்து, "பிழைத்துச் செவ்வி அறியாதே திறப்பித் தேனுக்
கேயல்லால், உழைத்தா மொளித்தால் கதவந்தொண் டிறைக்கப் பாடி
அடைப்பித்த, தழைத்த மொழியார் உப்பாலார் தாமிங் கெப்பால்
மறைவதென". உஅo

1551 மாடம் நீடு திருப்புகலி மன்ன ரவர்க்கு மாலயனும்
தேடி இன்னங் காணுதார் நேரே காட்சி கொடுத்தருள
ஆடல் கண்டு பணிந்தேத்தி அரசுங் காணக் காட்டுதலும்
"பாட அடியார்" என்றெடுத்துப் பரமர் தம்மைப் பாடினார். உஅக

1552 பாடுந் தமிழ்மா லைகள்கொண்டு பரமர் தாமும் எழுந்தருள
நீடுந் திருவாய் மூரடைந்து நிலவுங் கோயில் வலஞ்செய்து
சூடும் பிறையார் பெருந்தொண்டர் தொழுது போற்றித் துதிசெய்து
நாடுங் காதல் வளர்ந்தோங்க நயந்தந் நகரில் உடனுறைந்தார். உஅஉ

1553 ஆண்ட அரசும் பிள்ளையா ருடனே அங்கண் இனிதமர்ந்து
பூண்ட காதல் பொங்கிஎழ வாய்மூர் அடிகள் அடிபோற்றி
மூண்ட அன்பின் மொழிமாலை சாத்தி ஞான முனிவரொடு
மீண்டு வந்து திருமறைக்கா டெய்தி விமலர் தாள்பணிந்தார். உஅங

பா.பே.1 புறப்பட்டு. உ.உம்பாலார்.

1554 ஆதி முதல்வர் தமைப்பணிந்தங் கான பணிசெய் தமருநாள்
சீத மதிவெண் குடைவளவர் மகளார்1தென்னன்2தேவியாங்
கோதில் குணத்துப் பாண்டிமா தேவி யார்முன் குலச்சிறையார்
போத விட்டார் சிலர்வந்தார் புகலி வேந்தர் தமைக்காண. உஅச

1555 வந்து சிவனூர் திருமறைக்கா டெய்தி மன்னு வேணுபுரி
அந்த ணுளர் தமக்கறிவித் தவர்பால் எய்தி அடிவணங்கச்
சிந்தை மகிழ்ந்து தீதின்மை வினவத் "தீங்கும் உளவாமோ
இந்த உலகம்3உயவந்தீர் இருதாள்4நினைவார்க்" கென்றுரைப்பார்.

1556 "சைவ நெறிவை திகம்நிற்கச் சழக்கு நெறியைத் தவம்என்னும்
பொய்வல் அமணர் செயல்தன்னைப் பொறுக்க இல்லோம்" எனக்கேட்டே
அவ்வன் தொழிலோர் செயல்மாற்றி ஆதி சைவ நெறிவிளங்கத்
தெய்வ நீறு நினைந்தெழுந்தார் சீர்கொள் சண்பைத் திருமறையோர்.

1557 ஆய பொழுது திருநாவுக் கரசு புகலி ஆண்டகைக்குக்
"காய மாசு பெருக்கியுழல் கலதி அமணர் கடுவினைசெய்
மூர்க்க சாலம் மிகவல்லார் அவர்மற் றென்னை முன்செய்த
தீய தொழிலும் பல,கெட்டேன் செல்ல இசையேன் யான்"என்றார்.

1558 என்று கூற "எல்லையிலா நீறு போற்றும் இருவரையும்
சென்று5காணுங் கருத்துடையேன் அங்குத்7தீங்கு புரிஅமணர்
நின்ற நிலைமை அழிவித்துச் சைவ நெறிபா ரித்தன்றி
ஒன்றுஞ் செய்யேன் ஆணையும்" தென்னூர் உடைய பிள்ளையார்.உஅஅ

1559 "போமா துணிந்து நீர்அங்குப்6போகப் போதா அவ்வமணர்
தீமா யையினை யானேபோய்ச் சிதைத்து வருகின் றேன்"என்ன
ஆமா றெல்லாம் உரைத்தவரை மறுக்க மாட்டா தரசிருப்பத்
தாமா தரவால் தமிழ்நாட்டில் போனார் ஞானத் தலைவனார். உஅக

1560 வேணு புரக்கோன் எழுந்தருள விடைகொண் டிருந்த வாகீசர்
பூணும் அன்பால் மறைக்காட்டில் புனிதர் தம்மைப் போற்றிசைத்துப்
பேணி இருந்தங் குறையுநாள் பெயர்வார் வீழி மிழலைஅமர்
தாணு வின்தன் செய்யகழல் மீண்டுஞ் சார நினைக்கின்றார். உகo

1561 சோலை மறைக்காட் டமர்ந்தருளுஞ் சோதி அருள்பெற் றகன்றுபோய்
"வேலை விடமுண் டவர்வீழி மிழலை மீண்டுஞ் செல்வன்"என
ஞாலம் நிகழ்ந்த நாகைக்கா ரோணம் பிறவுந் தாம்பணிந்து
சாலு மொழிவண் தமிழ்பாடித் தலைவர் மிழலை வந்தடைந்தார். உகக

1562 வீழி மிழலை தனைப்பணிந்து வேத முதல்வர் தாமிருப்ப
ஆழி வலமேந் தியஅரியால் ஆகா சத்தின் நின்றிழிந்த
வாழி மலர்ந்த கோயில்தனில் மன்னும் பொருளைப் போற்றிசைத்துத்
தாழும் நனிற் பிறபதியும் பணியுங் காதல் தலைநிற்பார். உகஉ

---

1. வளவன். 2. பாண்டியார். 3. உயவந்தீர். 4. அணைவார்க்கு. 5. தீங்கு செய்யும். 6. காணக். 7. நீங்கு. 8. போதப்

1563 பூவிற் பொலியும் புனற்பொன்னிக் கரைபோய்ப் பணிவார் பொற்பமைந்த
ஆவுக் கருளும் ஆவடுதண் டுறையார் பாதம் அணைந்திறைஞ்சி
நாவுக் கரசர் ஞானபோ னகர்க்குச் செம்பொன் ஆயிரமும்
பாவுக்களித்த திறம்போற்றிப் போந்து பிறவும் பணிகின்றார். உகஉ

1564 செய்ய சடையார் பழையாறை எய்த அதனிற் செல்பொழுதில்
மையல் அமணர் மறைத்தவட தளியின் மன்னுஞ் சிவனுரைக்
கைகள் கூப்பித் தொழுதருளக் கண்ட வாற்றூல் அமணர்கள்தம்
பொய்கொள் விமான மெனக்கேட்டுப் பொறுத வுள்ளம் மிகப்புழுங்கி.

1565 அந்த விமானந் தனக்கருகா ஆங்கோர் இடத்தின் பாங்கெய்திக்
கந்த மலருங் கடிக்கொன்றை முடியார் செய்ய கழல்உன்னி
மந்த அமணர் வஞ்சனையால் மறைத்த வஞ்சம் ஒழித்தருளிப்
''பந்தங் கொண்ட சூண்டர்திறம் பாற்றும்'' என்று பணிந்திருந்தார்.

1566 ''வண்ணங் கண்டு நான்உம்மை வணங்கி யன்றிப் போகேன்''என்
றெண்ண முடிக்கும் வாகிசர் இருந்தார் அழுது செய்யாதே
அண்ண லாரும் அதுவுணர்ந்தங் கரசு தம்மைப் பணிவதற்குத்
திண்ண மாக மன்னனுக்குக் கனவில் அருளிச் செய்கின்றார். உகஉ

1567 ''அறிவில் அமணர் நமைமறைப்ப இருந்தோம்'' என்றங் கடையாளக்
குறிகள் அறியச் செய்தருளி நம்மை அரசு கும்பிடுவான்
நெறியில் அமணர் தமையழித்து நீக்கிப் போக்கென் றருள்புரியச்
செறிவில் அறிவுற் றெழுந்தவனுஞ் செங்கை தலைமேல் குவித்திறைஞ்சி.

1568 கண்ட வியப்பு மந்திரிகட் கியம்பிக் கூடக் கடிதெய்தி
அண்டர் பெருமான் அருள்செய்த அடையா ளத்தின் வழிகண்டு
சூண்டர் செய்த வஞ்சனையைக் குறித்து வேந்தன் குலவுபெருந்
தொண்டர் தம்மை அடிவணங்கித் தொக்க அமணர் தூர்அறுத்தான்.

1569 ஆன இனத்தில் துகைப்புண்ட அமணு யிரமும் மாய்ந்ததற்பின்
மேன்மை அரசன் ஈசர்க்கு விமான மாக்கி விளக்கியபின்
ஆன வழிபாட் டர்ச்சனைக்கு நிபந்தம் எல்லாம் அமைத்திறைஞ்ச
ஞான அரசும் புக்கிறைஞ்சி நாதர் முன்பு போற்றுவார். உகஉ

1570 ''தலையின் மயிரைப் பறித்துண்ணுஞ் சாதி அமணர் மறைத்தாலும்
நிலையி லாதார் நிலைமையினுல் மறைக்க வொண்ணு மோ''என்னும்
விலையில் வாய்மைக் குறுந்தொகைகள் விளம்பிப் புறம்போந் தங்கமர்ந்தே
இலகொள் சூலப் படையார்சேர் இடங்கள் பிறவுந் தொழுவணைவார்.

1571 பொங்கு புனலார் பொன்னியினில் இரண்டு கரையும் பொருவிடையார்
தங்கும் இடங்கள் புக்கிறைஞ்சித் தமிழ்மா லைகளுஞ் சாத்திப்போய்
எங்கும் நிறைந்த புகழாளர் ஈறில் தொண்டர் எதிர்கொள்ளச்
செங்கண் விடையார் திருவாணைக் காவின் மருங்கு சென்றணைந்தார்.

1571 சிலந்திக் கருளுங் கழல்வணங்கிச் செஞ்சொன் மாலை பலபாடி
இலங்கு சடையார் எறும்பியூர் மலையும் இறைஞ்சிப் பாடியபின்
மலர்ந்த சோதித் திருச்சிராப் பள்ளி மலையுங் கற்குடியும்
நலங்கொள் செல்வத் திருப்பராய்த் துறையுந் தொழுவான் நண்ணினார்.

1572 மற்றப் பதிகள் முதலான மருங்குள் ளனவுங் கைதாழுது
பொற்புற் றமைந்த திருப்பணிகள் செய்து பதிகங் கொடுபோற்றி
உற்ற அருளால் காவிரியை ஏறி ஒன்னார் புரமெரியச்
செற்ற சிலையார் திருப்பைஞ்ஞீ லியினைச் சென்று சேர்கின்றார். ஙஐ

1574 வழிபோம் பொழுது மிகஇளைத்து வருத்தம் உறநீர் வேட்கையொடும்
அழிவாம் பசிவந் தணைந்திடவும் அதற்குச் சித்தம் அலையாதே
மொழிவேந் தரும்முன் எழுந்தருள முருகார் சோலைப் பைஞ்ஞீலி
விழியேந் தியநெற் றியினர்தந் தொண்டர் வருத்தம் மீட்பாராய். ஙஐ

1575 காவும் குளமும் முன்சமைத்துக் காட்டி வழிபோங் கருத்தினுல்
மேவுந் திருநீற் றந்தணராய் விரும்பும் பொதிசோ றுங்கொண்டு
நாவின் தனிமன் னவர்க்கெதிரே நண்ணி யிருந்தார் விண்ணின்மேல்
தாவும் புள்ளும் மண்கிழிக்குந் தனிவ னமுங்காண் பரியவர்தாம். ஙஐ

1576 அங்கண் இருந்த மறையவர்பால் ஆண்ட அரசும் எழுந்தருள
வெங்கண் விடைவே தியர்நோக்கி "மிகவும் வழிவந் திளைத்திருந்தீர்
இங்கென் பாலே பொதிசோறுண் டிதனீ ருண்டு தண்ணீர்இப்
பொங்கு குளத்தில் குடித்தினைப்புப் போக்கிப் போவீர்" எனப்புகன்றார்.

1577 நண்ணுந் திருநா வுக்கரசர் நம்பர் அருள்என் றறிந்தார்போல்
"உண்ணும்" என்று திருமறையோர் உரைத்துப் பொதிசோ றளித்தலுமே
எண்ண நினையா தெதிர்வாங்கி இனிதா அமுது செய்தினிய
தண்ணீர் அமுது செய்தருளித் தூய்மை செய்து தளர்வொழிந்தார்.

1578 எய்ப்பு நீங்கி நின்றவரை நோக்கி இருந்த மறையவனர்
"அப்பால் எங்கு நீர்போவ" தென்றார் அரசும் அவர்க்கெதிரே
செப்பு வார்"யான் திருப்பைஞ்ஞீ லிக்குப் போவ"தென்றுரைப்ப
ஒப்பி லாரும் யான்அங்குப் போகின் றேன்என் றுடன்போந்தார். ஙஐ

1579 கூட வந்து மறையவனர் திருப்பைஞ் ஞீலி குறுகியிட
வேடம் அவர்முன் மறைத்தலுமே மெய்ம்மைத் தவத்து மேலவர்தாம்
"ஆடல் புரிந்தார் அடியேனைப் பொருளா அளித்த கருணை"எனப்
பாடல் புரிந்து விழுந்தெழுந்து கண்ணீர் மாரி பயில்வித்தார். ஙஐ

1580 பைஞ்ஞீ லியினில் அமர்ந்தருளும் பரமர் கோயில் சென்றெய்தி
மைஞ்ஞீ லத்து மணிகண்டர் தம்மை வணங்கி மகிழ்ந்திறந்து
மெய்ஞ்ஞீர் மையினில் அன்புருக விரும்புந் தமிழ்மா லைகள்பாடிக்
கைஞ்ஞீ டியதந் திருத்தொண்டு செய்து காத லுடனிருந்தார். ஙஐ

ஙஙு பா.பே. 1 மிகஇளைத்து. 2. காட்டி.
3 எண்ணி நினையா. 4 செப்பவரியான். 5. என்றுரைத்தார்

1581 நாதர் மருவுந் திருவண்ணு மலையை நாடிப் பதிபலவும்
காதல் கூரச் சென்றிறைஞ்சிக் கலந்த இசைவண் தமிழ்பாடி
மாதோர் பாகர் அருளாலே வடபால் நோக்கி வாகீசர்
ஆதி தேவர் அமர்ந்ததிரு அண்ணு மலையை நண்ணினார். நகக

1582 செங்கண் விடையார் திருவண்ணு மலையைத் தொழுது வலங்கொண்டு
துங்க வரையின் மிசையேறித் தொண்டர் தொழும்புக் கெதிர்நிற்கும்
அங்கண் அரசைத் தொழுதெழுந்து திளைத்துத் திருநா வுக்கரசர்
தங்கு பிறப்பே வீட்டினுக்கு மேலாம் பெருமை சாதித்தார். நகஉ

1583 அண்ணு மலைமேல் அணிமலையை ஆரா அன்பின் அடியவர்தங்
கண்ணுர் அமுதை விண்ணோரைக் காக்கக் கடலில் வந்தெழுந்த
உண்ணு நஞ்சம் உண்டானைக் கும்பிட் டுருகுஞ் சிந்தையுடன்
பண்ணுர் பதிகத் தமிழ்பாடிப் பணிந்து பரவிப் பணிசெய்தார். நகங

1584 பணியார் வேணிச் சிவபெருமான் பாதம் போற்றிப் பணிசெயுநாள்
மணியார் கண்டத் தெம்பெருமான் மண்மேல் மகிழும் இடமெங்கும்
தணியாக் காத லுடன்சென்று வணங்கித் தக்க பணிசெய்வார்
அணியார் தொண்டைத் திருநாட்டில் அருளால் அணைவா ராயினார்.

1585 காதல் செய்யுங் கருத்தினுடன் காடும் மலையும் கான்யாறும்
சூத மலிதண் பணைப்பதிகள் பலவும் கடந்து சொல்லினுக்கு
நாதர் போந்து பெருந்தொண்டை நன்னு டெய்தி முன்னுகச்
சீத மலர்மென் சோலைசூழ் திருவோத் தூரிற் சென்றடைந்தார். நகஙு

1586 சேக்கர்ச் சடையார் திருவோத்தூர்த் தேவர் பிரானுர் தங்கோயில்
புக்குவலங்கொண் டெதிர்இறைஞ்சிப் போற்றிக் கண்கள் புனல்பொழிய
முக்கட் பிரானை விரும்புமொழித் திருத்தாண் டகங்கள் முதலாகத்
தக்க மொழிமா லைகள்சாத்திச் சார்ந்து பணிசெய் தொழுகுவார். நகசு

1587 செய்ய ஐயர் திருவோத்தூர் ஏத்திப் போந்து செழும்புவனம்
உய்ய நஞ்சுண் டருளுமவர் உறையும் பதிகள் பலவணங்கித்
தையல் தழுவக் குழைந்தபிரான் தங்குந் தெய்வப் பதிஎன்று
வையம் முழுதுந் தொழுதேத்தும் மதில்சூழ் காஞ்சி மருங்கணைந்தார்.

1588 "ஞாலம் உய்யத் திருவதிகை நம்பர் தம்பேர் அருளினால்
சூலை மடித்து முன்னுண்ட தொண்டர் வரப்பெற் றோம்"என்று
4 காலை மலருங் கமலம்போல் காஞ்சி வாணர் முகமெல்லாம்
5 சால மலர்ந்து களிசிறப்பத் தழைத்த மனங்கள் தாங்குவார். நகஅ

1589 மாட வீதி 6 மருங்கெல்லாம் மணிவா யில்களில் தோரணங்கள்
நீடு கதலி யுடன்கமுகு 7 நிரைத்து நிறைபொற் குடந்தீபம்
தோடு குலவு மலர்மாலை சூழ்ந்த வாசப் பந்தர்களும்
ஆடு கொடியு முடனெடுத்தங் கணிநீள் காஞ்சி அலங்கரித்தார். நகசு

பா. 1. துங்க வரையின். 2. பணிசெ சாற்றினர். 3. மணிமலையை.
4 காலைமலரும். 5 சாலமகிழ்ந்து. 6 மறுகெல்லாம்.
7 நெருங்கு.

1570 தொண்டர் ஈண்டி எதிர்கொள்ள எழுந்து சொல்லுக் கரசர்பால்
கொண்ட வேடப் பொலிவினெடுங் குலவும்வீதி பணிசெய்யும்
அண்டர் அறிதற் கரியதிரு வலகு முதலாம் அவையேந்தி
இண்டை புனைந்த சடைமுடியார்க் கன்பர் தம்மை எதிர்கொண்டார்.

1571 எதிர்கொண் டிறைஞ்சுஞ் சீரடியார் தம்மை இறைஞ்சி எழுந்தருளி
மதில்கொண் டணிந்த காஞ்சிநகர் மறுகுட் போந்து வானநதி
குதிகொண் டிழிந்த சடைக்கம்பர் செம்பொற் கோயில் குறுகினார்
அதிர்கொண் டலைநேர் மணிமிடற்றார் ஆண்ட திருநா வுக்கரசர். நடக

1572 திருவா யிலினைப் பணிந்தெழுந்து செல்வத் திருமுன் றிலைஅணைந்து
கருவார் கச்சி ஏகம்பர் கனக மணிமா ளிகைசூழ்ந்து
வருவார் செம்பொன் மலைவல்லி தழுவக் குழைந்த மணிமேனிப்
பெருவாழ் வினைமுன் கண்டிறைஞ்சிப் பேரா அன்பு பெருகினார்.

1573 வார்ந்து சொரியுங் கண்ணருவி மயிர்க்கால் தோறும் வரும்புளகம்
ஆர்ந்த மேனிப் புறம்பலைப்ப அன்பு கரைந்தென் புள்ளலைப்பச்
சேர்ந்த நயனப் பயன்பெற்றுத் தீளைப்பத் திருவே கம்பர்தமை
நேர்ந்த மனத்தில் உறவைத்து நீடும் பதிகம் பாடுவார். நடஙு

வேறு

1574 "கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானே" என்றெடுத்துப்
பரவாய சொன்மாலைத் திருப்பதிகம் பாடியபின்
விரவார்தம் புரம்எரித்த விடையவனார் வெள்ளெயிற்றின்
அரவாரம் புனைந்தவர்தந் திருமுன்றிற் புறத்தணைந்தார். நடச

1575 கையார்ந்த திருத்தொண்டு கழியமிகு காதலொடுஞ்
செய்யாகின் றேஎல்லாச் செந்தமிழ்மா லையும்பாடி
மையார்ந்த மிடற்றார்திரு மயானத்தை வலங்கொண்டு
மெய்யார்வ மூறத்தொழுது விருப்பினெடு மேவுநாள். நடஙூ

1576 சீர்வளரு மதிற்கச்சி நகர்த்திருமேற் றளிமுதலாம்
நீர்மருவுஞ் சடைமுடியார் நிலவியுறை ஆலயங்கள்
ஆர்வமுறப் பணிந்தேத்தி ஆய்ந்ததமிழ்ச் சொன்மலரால்
சார்வுறுமா லகள்சாத்தித் தகுந்தொண்டு செய்திருந்தார். நடசு

1577 அந்நகரில் அவ்வண்ணம் அமர்ந்துறையும் நாளின்கண்
மன்னுதிரு மாற்பேறு வந்தணைந்து தமிழ்பாடிச்
சென்னிமிசை மதிபுனைவார் பதிபலவுஞ் சென்றிறைஞ்சித்
துன்னினார் காஞ்சியினைத் தொடர்ந்தபெருங் காதலினால். நடஎ

1578 "ஏகம்பன் காண்அவன்என் எண்ணத்தான்" என்பபோற்றிப்
பாகம்பெண் ணுருவானைப் பைங்கண்விடை உயர்த்தானை

ப.வே.1 வேட்கை. 2. பெருகினார். 3. சொரிந்து. 4 நயனம.
5. வெள்ளையயிற் (ரு)வகையரா. 7 மேவுவார்.
8 நீர்வளருஞ் சடையவர்தம். 9. தகுந்தொண்டு.

நாகம்பூண் உகந்தானே நலம்பெருகுந் திருநீற்றின்
ஆகந்தோய் அணியானே அணைந்துபணிந் தின்புற்றார். நஉஅ

1597 திருக்கச்சி ஏகம்பம் பணிந்தேத்தித் திங்களார்
நெருக்கச்செஞ் சடைக்கணிந்தார் நீடுபதி தொழுதினைவார்
வருக்கைச்செஞ் சுளைபொழிதேன் வயல்விளக்கும் நாட்டிடைப்போய்ப்
பருக்கைத்திண் களிற்றுரியார் கழுக்குன்றின் பாங்கணைந்தார். நஉக

1600 நீடுதிருக் கழுக்குன்றில் நிருத்தனார் கழல்வணங்கிப்
பாடுதமிழ்த் தொடைபுனைந்து பாங்குபல பதிகளிலுஞ்
சூடும்இளம் பிறைமுடியார் தமைத்தொழுது போற்றிப்போய்
மாடுபெருங் கடலுடுத்த வான்மியூர் மருங்கணைந்தார். நஉ0

1601 திருவான்மி யூர்மருந்தைச் சேர்ந்துபணிந் தன்பினெடும்
பெருவாய்மைத் தமிழ்பாடி மருங்கெங்கும் பிறப்பறுத்தல்
தருவார்தங் கோயில்பல சார்ந்திறைஞ்சித் தமிழ்வேந்தர்
மருவாரும் மலர்ச்சோலை மயிலாப்பூர் வந்தடைந்தார். நஉக

1602 வரைதவழ்மா மஞ்சென்ன மாடமிசை மயிலாடும்
தரைபுகழ்சீர்த் திருமயிலைச் சங்கரனார் தாள்வணங்கி
உரைவளர்மா லைகள்அணிவித் துழுவாரப் படையாளி
திரைவளர்வே லைக்கரைபோய்த் திருவொற்றி யூர்சேர்ந்தார். நஉஉ

1603 ஒற்றியூர் வளநகரத் தொளிமணிவீ திகள்விளக்கி
நற்கொடிமா லைகள்பூகம் நறுங்கதலி நிரைநாட்டிப்
பொற்குடங்கள் தூபங்கள் தீபங்கள் பொலிவித்து
மற்றவரை எதிர்கொண்டு கொடுபுக்கார் வழித்தொண்டர். நஉஉ

1604 திருநாவுக் கரசரும்அத் திருவொற்றி யூர்அமர்ந்த
பெருநாகத் திண்சிலையார் கோபுரத்தை இறைஞ்சிப்புக்
கொருஞானத் தொண்டருடன் உருகிவலங் கொண்டடியார்
கருநாமந் தவிர்ப்பாரைக் கைதொழுது முன்வீழ்ந்தார். நஉச

1605 எழுதாத மறைஅளித்த எழுத்தறியும் பெருமானைத்
தொழுதார்வம் உறநிலத்தில் தோய்ந்தெழுந்தே அங்கமெலாம்
முழுதாய பரவசத்தின் முகிழ்த்தமயிர்க் கால்மூழ்க
விழுதாரை கண்பொழிய விதிர்ப்புற்று விம்மினார். நஉடு

1606 "வண்டோங்குஞ் செங்கமலம்" எனஎடுத்து மனமுருகப்
பண்தோய்ந்த சொற்றிருத்தாண் டகம்பாடிப் பரவுவார்
விண்தோய்ந்த புனற்கங்கை வேணியார் திருவுருவம்
கண்டோங்கு களிசிறப்பக் கைதொழுது புறத்தணைந்தார். நஉசு

1607 விளங்குபெருக் திருமுன்றில் மேவுதிருப் பணிசெய்தே
உளங்கொள்திரு விருத்தங்கள் ஓங்குதிருக் குறுந்தொகைகள்

பா. பே. 1. அம்மலர்ப்பே பிறப்பறுத்து.
2. வரைவளர்மா மயிலென்ன மாடமிசை மஞ்சாடும்
3. தரைவளர்சீர்த். 4 திண்சிலையார்.

களங்கொள்திரு நேரிசைகள் பலபாடிக் கைதொழுது
வளங்கொள்திருப் பதியதனில் பலநாள்கள் வைகினார். ஙஙஎ

1608 அங்குறையு நாளின்கண் அருகுளவாம்பி சிவாலயங்கள்
எங்குஞ்சென் றினிதிறைஞ்சி ஏத்துமவர் இறைஅருளால்
பொங்குபுனல் திருவொற்றி யூர்தொழுது போந்துமையாள்
பங்குடையார் அமர்ந்ததிருப் பாசூராம் பதிஅணைந்தார். ஙஙஅ

1609 திருப்பாசூர் நகர்எய்திச் சிந்தையினில் வந்தூறும்
விருப்பார்வம் மேற்கொள்ள வேயிடங்கொண் டுலகுய்ய
இருப்பாரைப் புரம்மூன்றும் எரித்தருள எடுத்ததனிப்
பொருப்பார்வெஞ் சிலையாரைத் தொழுதெழுந்து போற்றுவார். ஙஙக

1610 "மூந்திமூ வெயில்எய்த முதல்வனுர்" எனஎடுத்துச்
சிந்தைகளைந் துருகுதிருக் குறுந்தொகையும் தாண்டகமும்
சந்தநிறை நேரிசையும் முதலான தமிழ்பாடி
எந்தையார் திருவருள்பெற் றேகுவார் வாகீசர். ஙச0

1611 அம்மலர்ச்சீர்ப் பதியைஅகன் றயல்உளவாம் பதிஅனைத்தின்
உமைம்மலருங் களத்தாரை வணங்கிமகிழ் வொடும்போற்றி
மெய்ம்மைநிலை வழுவாத வேளாள விழுக்குடிமைச்
செம்மையினுர் பழையனுர்த் திருஆல வனம்பணிந்தார். ஙசக

1612 "திருஆலங் காடுறையுஞ் செல்வர்தாம்" எனச்சிறப்பின்
ஒருவாத பெருந்திருத்தாண் டகம்முதலாம் ஓங்குதமிழ்ப்
பெருவாய்மைத் தொடைமாலை பலபாடிப் பிறபதியும்
மருஆர்வம் பெறவணங்கி வடதிசைமேல் வழிக்கொள்வார். ஙசஉ

1613 பல்பதியும் நெடுங்கிரியும் படர்வனமுஞ் சென்றடைவார்
செல்கதிமுன் அளிப்பார்தந் திருக்காரிக் கரைபணிந்து
தொல்கலியின் பெருவேந்தர் தொண்டர்கள்பின் உம்பர்குழாம்
மல்குதிருக் காளத்தி மாமலைவந் தெய்தினார். ஙசஙக

1614 பொன்முகலித் திருநதியின் புனிதநெடுந் தீர்த்தத்தில்
மூன்முழுகிக் காளத்தி மொய்வரையின் தாழ்வரையில்
சென்னியுறப் பணிந்தெழுந்து செங்கண்விடைத் தனிப்பாகர்
மன்னும்மலை மிசையேறி வலங்கொண்டு வணங்குவார். ஙசச

1615 காதணிவெண் குழையாளைக் காளத்தி மலைக்கொழுந்தை
வேதமொழி மூலத்தை விழுந்திறைஞ்சி எழுந்துபெருங்
காதல்புரி மனங்களிப்பக் கண்களிப்பப் பரவசமாய்
"நாதனைஎன் கண்ணுளான்" எனுந்திருத்தாண் டகம்நவின்றார். ஙசடு

1616 மலைச்சிகரச் சிகாமணியின் மருங்குறமுன் னேகிற்குஞ்
சிலைத்தடக்கைக் கண்ணப்பர் திருப்பாதம் சேர்ந்திறைஞ்சி

அலைத்துவிழுங் கண்ணருவி ஆகத்துப் பாய்ந்திழியத்
தலைக்குவித்த கையினராய்த் தாழ்ந்துபுறம் போந்தணைந்தார். நஉசசு

1617 சேணிலவு திருமலையில் திருப்பணியா யினசெய்து
தாணுவினை அம்மலைமேல் தாள்பணிந்த குறிப்பினுல்
பேணுதிருக் கயிலைமலை வீற்றிருந்த பெருங்கோலங்
காணுமது காதலித்தார் கலிவாய்மைக் காவலனார். நஉசள

வேறு

1618 அங்கண் மாமலை மேல்ம ருந்தைவ ணங்கி யாரரு ளால்மிகப்
பொங்கு காதலின் உத்த ரத்திசை மேல்வி ருப்பொடு போதுவார்
துங்க மால்வரைகானி யாறுதொ டர்ந்த நாடு கடந்தபின்
செங்கண் மால்விடை அண்ணல் மேவு திருப்ப ருப்பதம் எய்தினார்.

1619 மான விஞ்சையர் வான நாடர்கள் வான்இ யக்கர்கள் சித்தர்கள்
கான கின்னரர் பன்ன காதிபர் காம சாரிக ளேழுதல்
ஞான மோனிகள் நாளும் நம்பரை வந்தி றைஞ்சி நலம்பெறுந்
தான மானதி ருச்சி லம்பை வணங்கி வண்தமிழ் சாற்றினார். நஉசக

1620 அம்ம ருங்குக டந்து போமவர் ஆர்கொள் சூல அயிற்படைச்
செம்மல் வெண்கயி லைப்பொ ருப்பைநி னைந்தெ ழுந்ததொர் சிந்தையால்
எம்ம ருங்குமொர் காத லின்றி இரண்டு பாலும்வியந்துளோர்
கைம்ம ருங்கணை யுந்தெ லுங்கு கடந்து கன்னடம் எய்தினார். நஉ0

1621 கருந டுங்கழி வாகைகிய பின்க லந்தவ னங்களும்
திருந தித்துறை யாவை யும்பயில் சேண் நெடுங்கிரி வட்டையும்
பெருந லங்கிளர் நாடும் எண்ணில பிற்ப டச்செறி பொற்பினுல்
வருநெ டுங்கதிர்கோலு சோலைய மாள வத்தினை நண்ணினார். நஉஙக

1622 அங்கு முற்றிஅ கன்று போகி அருஞ்சு ரங்கள் கடந்துசென்
றெங்கு மிக்கஅ றங்கள் நீடும் இலாட பூமி இகந்துபோய்
மங்குல் சுற்றிய வெற்பி னோடு வனங்கள் ஆறு கடந்தயற்
பங்க யப்பழ னத்துமத்திய பைதி ரத்தினை எய்தினார். நஉஉ

1623 அன்ன நாடுக டந்து கங்கைஅணைந்து சென்று வலங்கொளும்
மின்னு வேணியர் வார ணுசி விருப்பி னோடு பணிந்துடன்
பின்ன ணைந்தவர் தம்மை அங்கண் ஒழிந்து கங்கை பெயர்ந்துபோய்
மன்னுகாதல்செய் நாவின் மன்னவர் வந்து கற்சுரம் முந்தினார்.

1624 மாக மீதுவ ளர்ந்த கானக மாகி எங்கும் மனித்தரால்
போக லாநெறி அன்றி யும்புரி கின்ற காதல்பொ லிந்தெழச்
சாக மூலப லங்கள் துய்ப்பன வுந்த விர்ந்துத னித்துநேர்
ஏகி னிர வும்பெ ருங்கயி லைக்கு லக்கிரி எய்துவார். நஉசச

பா.பே. 1. பாருதிய. 2. காடு. 3. விரைந்துளோர்.
4. எய்ய. 5. சோலை வேலியும். 6 மதுமை.
7 கடந்து. 8 காதலின்.

1625 ஆய வாரிரு ளின்கண் ஏகுமவ் வன்பர் தம்மைஅ ணைந்துமுன்
தீய வாயவி லங்கு வன்தொழில் செய்ய அஞ்சின, நஞ்சுகால்
வாய நாகம ணிப்ப ணங்கொள்வி ளக்கெ டுத்தன, வந்துகால்
தோய வானவ ராயி னுந்தனி துன்ன ருஞ்சுரம் முன்னினார். நடுடு

1626 வேங்க திர்ப்பக லக்க டத்திடை வெய்ய வன்கதிர் கைபரந்
தெங்கு மிக்கபி ளப்பி னுகர்தம் எலும்பு புக்கெரி கின்றன
பொங்க ழற்றெறு பாலை வெங்கிழலி புக்க சூழல் புகும்பகல்
செங்க திர்க்கனல் போலும் அத்திசை தின்மை மெய்த்தவர் நண்ணினார்.

1627 இங்ங னம்இர வும்ப கற்பொழு தும்அ ருஞ்சுரம் எய்துவார்
பங்க யும்புரை தாள்ப ரட்டள வும்ப சைத்தசை தேயவும்
மங்கை பங்கர்தம் வெள்ளி மால்வரை வைத்த சிந்தை மறப்பரோ
தங்க ரங்க ளிரண்டு மேகொடு தாவி ஏகுதல் மேவினார். நடுடெ

1628 கைக ளும்மணி பந்த சைந்துற வேக சைந்துசி தைந்தபின்
மெய்க லந்தெழு சிந்தை அன்பின் விருப்பு மீமிசை போங்கிட
மொய்க டுங்கனல் வெம்ப ரற்புகை மூள மத்த முயங்கியே
மைகொள் கண்டர்தம் அன்பர் செல்ல வருந்தி உந்தினர் மார்பினுல்.

1629 மார்ப முந்தசை நைந்து சிந்தி வரிந்த என்பு முரிந்திட
நேர்வ ருங்குறி நின்ற சிந்தையின் நேசம் ஈசனே நேரே
டார்வம் அங்குயிர் கொண்டு கைக்கும் உடம்ப டங்கவும் ஊன்கெடச்
சேர்வ ரும்பழு வம்பு ரண்டுபு ரண்டு சென்றனர் செம்மையோர்.

1630 அப்பு றம்புரள் கின்ற நீளிடை அங்கம் எங்கும் அரைந்திடச்
செப்ப ருங்கயி லேச்சி லம்படி சிந்தை சென்றுறும் ஆதலால்
மெய்ப்பு றத்தில் உறுப்ப ழிந்தபின் மெல்ல உந்து முயற்சியும்
தப்பு றச்செய லின்றி அங்நெறி தங்கி னார்தமி ழாளியார். நடுடூ

வேறு

1631 அன்ன தன்மையர் கயிலையை அணைவதற் கருளார்
மன்னு தீந்தமிழ் புவியின்மேற் பின்னையும் வழுத்த
நன்னெ டும்புனல் தடமும்ஒன் றுடன்கொடு நடந்தார்
பன்ன கம்புனை பரமரோர் முனிவராம் படியால். நடுடுக

1632 வந்து மற்றவர் மருங்குற அணைந்துநேர் நின்று
கொந்து நோக்கிமற் றவர்எதிர் நோக்கிட நுவல்வார்
"சிந்தி இவ்வுறப் பழிந்திட வருந்திய திறத்தால்
இந்த வெங்கடத் தெய்திய தென்"என இசைத்தார். நடுடூ

1633 மாசில் வற்கலை ஆடையும் மார்பின்முந் நூலும்
தேசு டைச்சடை மவுலியும் நீறும்மெய் திகழ

பா. பே. 1. பாதம் அ. 2. புகைகுழல் சூழலானபுகும்.
3. பாகரதம். 4. மறப்பரோ: மறைப்பரோ.
5. நேருரே. 6. முன்கைடச்.

ஆசின் மெய்த்தவ ராகினின் றவர்தமை நோக்கிப்
பேச உற்றதோர் உணர்வுற விளம்புவார் பெரியோர். ந.சுங

1634 "வண்டு லாங்குழல் மலைமக ளுடன்வட கயிலை
அண்டர் நாயகர் இருக்கும்அப் பரிசவர் அடியேன்
கண்டு கும்பிட விருப்பொடுங் காதலின் அடைந்தேன்
கொண்ட என்குறிப் பிதுமுனி யே"எனக் கூற. ந.சுச

1635 "கயிலை மால்வரை யாவது காசினி மருங்கு
பயிலும் மானுடப் பான்மையோர் அடைவதற் கெளிதோ
அயில்கொள் வேற்படை அமரரும் அணுகுதற் கரிதால்
வெயில்கொள் வெஞ்சுரத் தென்செய்தீர் வந்"தென விளம்பி. ந.சுரு

1636 "மீளும் அத்தனை உமக்கினிக் கடன்"என விளங்கும்
தோளும் ஆகமும் துவளுமுந் நூல்முனி சொல்ல
"ஆளும் நாயகன் கயிலையில் இருக்கைகண் டல்லால்
மாளும் இவ்வுடல் கொண்டுமீ ளேன்"என மறுத்தார். ந.சுசு

1637 ஆங்கு மற்றவர் துணிவறிந் தவர்தமை அறிய
நீங்கு மாதவர் விசும்பிடைக் கரந்துநீள் மொழியால்
"ஓங்கு நாவினுக் கரசனே! எழுந்திர்"என் றுரைப்பத்
தீங்கு நீங்கிய யாக்கைகொண் டெழுந்தொளி திகழ்வார். ந.சுள

1638 "அண்ண லேஎனை ஆண்டுகொண் டருளிய அமுதே
விண்ணி லேமறைந் தருள்புரி வேதநா யகனே
கண்ணி னுல்திருக் கயிலையில் இருந்தநின் கோலம்
நண்ணி நான்தொழ நயந்தருள் புரி"எனப் பணிந்தார். ந.சுஅ

1639 தொழுதெ ழுந்தநற் றொண்டரை நோக்கிவிண் தலத்தில்
எழுபெ ருந்திரு வாக்கினுல் இறைவர்"இப் பொய்கை
முழுகி நம்மைநீ கயிலையில் இருந்தஅம் முறைமை
பழுதில் சீர்த்திரு வையாற்றிற் காண்"எனப் பணித்தார். ந.சுக

1640 ஏற்றி னுர்அருள் தலைமிசைக் கொண்டெழுந் திறைஞ்சி
வேற்று மாகிவிண் ணுகினின் றுர்மொழி விரும்பி
ஆற்றல் பெற்றவர் அண்ணலார் அஞ்செழுத் தோதிப்
பாற்ற டம்புனற் பொய்கையில் மூழ்கினுர் பணியால். ந.எO

1641 ஆதி தேவர்தந் திருவருட் பெருமையார் அறிந்தார்
போத மாதவர்பனிமலர்ப் பொய்கையில் மூழ்கி
மாதெ ரார்பாகனுர் மகிழும்ஐ யாற்றிலோர் வாவி
மீது தோன்றிவந் தெழுந்தனர் உலகெலாம் வியப்ப. ந.எக

1642 வம்பு லாமலர் வாவியின் கரையில்வந் தேறி
உம்பர் நாயகர் திருவருட் பெருமையை உணர்வார்

ப.1.விளங்கி. 2.அறிவார். 3 பணிவரைப்: மணி வரைப். 4.உணர்ந்தார்

"எம்பிரான் தருங் கிருணைகொல் இது" என இருகண்
பம்பு தாரைநீர் வாவியிற் படிந்தெழும் படியார். நுஎஉ

1643 மிடையும் நீள்கொடி வீதிகள் விளங்கிய ஐயா
றுடைய நாயகர் சேவடி பணியவந் தறுவார்
அடைய அப்பதி நிற்பவுஞ் சரிப்பவு மான
புடைஅ மர்ந்ததந் துணையோடும் போலிவன கண்டார். நுஎந

1644 பொன்ம லைக்கொடி யுடன்அமர் வெள்ளியம் பொருப்பில்
தன்மை யாம்படி சத்தியுஞ் சிவமுமாஞ் சரிதைப்
பன்மை யோனிகள் யாவையும் பயில்வன பணிந்தே
மன்னு மாதவர் தம்பிரான் கோயில்முன் வந்தார். நுஎச

1645 காணும் அப்பெருங் கோயிலுங் கயிலைமால் வரையாய்ப்
பேணு மால்அயன் இந்திரன் முதற்பெருந் தேவர்
பூணும் அன்பொடு போற்றிசைத் தெழும்ஒலி பொங்கத்
தாணு மாமறை யாவையுந் தனித்தனி முழங்க. நுஎடு

1646 தேவர் தானவர் சித்தர்விச் சாதரர் இயக்கர்
மேவு மாதவர் முனிவர்கள் புடையெலாம் மிடையக்
காவி வாள்விழி அரம்பையர் கானமும் முழவும்
தாவில் ஏழ்கடல் முழக்கினும் பெருகொலி தழைப்ப. நுஎசு

1647 கங்கை யேமுதல் தீர்த்தமாங் கடவுள்மா நதிகள்
மங்க லம்பொலி புனற்பெருந் தடங்கொடு வணங்க
எங்கும் நீடிய பெருங்கண நாதர்கள் இறைஞ்சப்
பொங்கி யங்களால் பூதவே தாளங்கள் போற்ற. நுஎள

1648 அந்தண் வெள்ளிமால் வரையிரண் டாம்என அணைந்தோர்
சிந்தை செய்திடச் செங்கண்மால் விடைஎதிர் நிற்ப
மூந்தை மாதவப் பயன்பெறு முதன்மையால் மகிழ்ந்தே
நந்தி எம்பிரான் நடுவிடை யாடிமுன் நணுக. நுஎஅ

1649 வெள்ளி வேற்பின்மேல் மரகதக் கோடியுடன் விளங்கும்
தெள்ளு பேரொளிப் பவளவேற் பெனஇடப் பாகம்
கொள்ளு மாமலை யாளுடன் கூடவீற் றிருந்த
வள்ள லாரைமுன் கண்டனர் வாக்கின்மன் னவனுர். நுஎசு

1650 கண்ட ஆனந்தக் கடலினைக் கண்களால் முகந்து
கொண்டு கைகுவித் தெதிர்விழுந் தெழுந்துமெய் குலைய
அண்டர் முன்புகின் முடிஞர் பாடிஞர் அழுதார்
தொண்ட ஞர்க்கங்கு நிகழ்ந்தன யார்சொல வல்லார். நுஅ0

1651 முன்பு கண்டுகொண் டருளின்ஆர் அமுதுண்ண மூவா
அன்பு பெற்றவர் அளவிலா ஆர்வம்முன் பொங்கப்

பா.பே. 1 மொன்றிருக் கருணை யோ விது. 2. கருணை போலிது. 3 மூன்மையால்.

பொன்பி றங்கிய சடையரைப் போற்றுதாண் டகங்கள்
இன்பம் ஓங்கிட ஏத்தினர் எல்லையில் தவத்தோர். நஅக

1652 ஆய்வாறுமற் றவர்மனங் கோளிப்புறக் கயிலை
மேயநாதர்தந் துணையொடும் வீற்றிருந் தருளித்
தூய தொண்டருந் தொழுதெதிர் நிற்கஅக் கோலம்
சேய தாக்கினர் திருவையா றமர்ந்தமை திகழ. நஅஉ

1653 ஐயர் கோலம்அங் களித்தகன் றிடஅடித் தொண்டர்
மையல் கொண்டுளம் மகிழ்ந்திட வருந்திமற் " றிங்குச்
செய்ய வேணியர் அருளிது வோ''எனத் தெளிந்து
வையம் உய்ந்திடக் கண்டமை பாடுவார் மகிழ்ந்து. நஅங

வேறு

1654 "மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும்" என்னும்
கோதறு தண்டமிழ்ச் சொல்லால் குலவு திருப்பதி கங்கள்
"வேத முதல்வர்ஐ யாற்றில் விரவுஞ் சராசரம் எல்லாம்
காதல் துணையொடுங் கூடக் கண்டேன்" எனப்பாடி நின்றார். நஅச

1655 கண்டு தொழுது வணங்கிக் கண்ணுத லார்தமைப் போற்றிக்
கொண்ட திருத்தாண் டகங்கள் குறுந்தொகை நேரிசை அன்பில்
மண்டு விருத்தங்கள் பாடி வணங்கித் திருத்தொண்டு செய்தே
அண்டர் பிரான்திரு ஐயா றமர்ந்தனர் நாவுக் கரசர். நஅஞ

1656 நீடிய அப்பதி நின்று நெய்த்தான மேமுத லாக
மாடுயர் தானம் பணிந்து மழபாடி யாரை வணங்கிப்
பாடிய செந்தமிழ் மாலை பகர்ந்து பணிசெய்து போற்றித்
தேடிய மாலுக் கரியார் திருப்பூந் துருத்தியைச் சேர்ந்தார். நஅசு

1657 சேர்ந்து விருப்பொடும் புக்குத் திருநட மாளிகை முன்னர்ச்
சார்ந்து வலங்கொண் டிறைஞ்சித் தம்பெரு மான்திரு முன்பு
நேர்ந்த பரிவொடுந் தாழ்ந்து நிறைந்தொழி யாஅன்பு பொங்க
ஆர்ந்தகண் ணீர்மழை தூங்க அயர்வுறுந் தன்மைய ரானார். நஅள

1658 "திருப்பூந் துருத்தி அமர்ந்த செஞ்சடை யாஅனே ஆன் ஏற்றுப்
பொருப்பூர்ந் தருளும் பிராஅனப் போய்யிலி யைக்கண்டேன்" என்று
விருப்புறு தாண்டகத் தோடு மேவிய காதல் விளைப்ப
"இருப்போந் திருவடிக் கீழ்நாம்" என்னுங் குறுந்தொகை பாடி. நஅஅ

1659 அங்குறை யுந்தன்மை வேண்டி "நாமடி போற்றுவ" தென்று
பொங்கு தமிழ்ச்சொல் விருத்தம் போற்றிய பாடல் புரிந்து
தங்கித் திருத்தொண்டு செய்வார் தம்பிரா னார்அருள் பெற்றுத்
திங்களும் ஞாயிறும் தோயும் திருமடம் ஆங்கொன்று செய்தார். நஅக

ப.ர.ெப.1 காலையில். 2 களியும். 3 நாயகர். 4 அப்பொன்று.

1660
பல்வகைத் தாண்டகத் தோடும் பரவுந் தனித்தாண் டகமும்
அல்லல் அறுப்பவர் தானத் தடைவு திருத்தாண் டகமும்
செல்கதி காட்டிடப் போற்றுந் திருஅங்க மாலையும் உள்ளிட்
டெல்லையில் பன்மைத் தொகையும் இயம்பினர் ஏத்தி இருந்தார். நகூ0

வேறு

1661
பொன்னிவலங் கொண்டதிருப் பூந்துருத்தி அவர்இருப்பக்
கன்மனத்து வல்லமணர் தமைவாதிற் கட்டழித்துத்
தென்னவன்கூன் நிமிர்த்தருளித் திருநீற்றின் ஒளிகண்டு
மன்னியசீர்ச் சண்பைநகர் மறையவனூர் வருகின்றார். நகூக

1662
தீந்தமிழ்நாட் டிடைநின்றும் எழுந்தருளிச் செழும்பொன்னி
வாய்ந்தவளந் தருநாட்டு வந்தணைந்தார் வாக்கினுக்கு
வேந்தர்இருந் தமைகேட்டு "விரைந்தவர்பால் செல்வன்" எனப்
பூந்துருத்தி வளம்பதியின் புறம்பணையில் வந்தணைந்தார். நகூஉ

1663
சண்பைவருந் தமிழ்விரகர் எழுந்தருளத் தாங்கேட்டு
மண்பரவும் பெருங்கீர்த்தி வாகீசர் மனம்மகிழ்ந்து
கண்பெருகுங் களிகொள்ளக் கண்டிறைஞ்சுங் காதலினால்
எண்பெருகும் விருப்பெய்த எழுந்தருளி எதிர்சென்றார். நகூங

1664
காழியர்கோன் வருமெல்லை கலந்தெய்திக் காதலித்தார்
சூழுமிடைந் திடுநெருக்கிற் காணுமே தொழுதருளி
"வாழியவர் தமைத்தாங்கும் மணிமுத்தின் சிவிகையினைத்
தாழும்உடல் இதுகொண்டு தாங்குவன்யான்" எனத்தரித்தார். நகூச

1665
வந்தெதிருவர் அறியாமே மறைந்தவடி வொடும்புகலி
அந்தணனூர் எறியெழுந் தருளிவரும் மணிமுத்தின்
சந்தமணிச் சிவிகையினைத் தாங்குவா ருடன்தாங்கிச்
சிந்தைகளிப் புறவருவார் தமையாருந் தெளிந்திலரால். நகூடி

1666
திருஞான சம்பந்தமாமுனிவர் அரசிருந்த பூந்துருத்திக்
கருகாக எழுந்தருளி "எங்குற்றார் அப்பர்" என
உருகாநின் "றும்அடியேன் உம்அடிகள் தாங்கிவரும்
பெருவாழ்வு வந்தெய்தப் பெற்றிங்குற் றேன்" என்றார். நகூசு

1667
பிள்ளையார் அதுகேளாப் பெருகுவிரை வுடன்இழிந்தே
உள்ளம்மிகு பதைப்பெய்தி உடையஅர சினைவணங்க
வள்ளலார் வாகீசர் அவர்வணங்கா முன்வணங்கத்
துள்ளுமான் மறிக்கரத்தார் தொண்டரெலாந் தொழுதார்த்தார். நகூள

1668
கழுமலக்கோன் திருநாவுக் கரசருடன் கலந்தருளிச்
செழுமதியந் தவழ்சோலைப் பூந்துருத்தித் திருப்பதியின்

பூதபு. வெய்தி. உ. சம்பந்தர்.

மழுவினெடு மான்ஏந்துங் திருக்கரத்தார் மலர்த்தாள்கள்
தொழுதுருகி இன்புற்றுத் துதிசெய்தங் குடனிருந்தார். நகூஅ

1669 வல்அமணர் தமைவாதில் வென்றதுவும் வழுதியுடல்
புல்லியசூன் நிமிர்த்ததுவும் தண்பொருந்தப் புனல்நாட்டில்
எல்லையிலாத் திருநீறு வளர்த்ததுவும் இருந்தவத்தோர்
சொல்லஅது கேட்டுவந்தார் தூயபுகழ் வாகீசர். நகூக

1670 பண்புடைய பாண்டிமா தேவியார் தம்பிரிவும்
நண்புடைய குலச்சிறையார் பெருமையும்ஞா னத்தலைவர்
எண்பெருக வுரைத்தருள எல்லையில்சீர் வாகீசர்
மண்குலவும் தமிழ்நாடு காண்பதற்கு மனங்கொண்டார். ச00

1671 பிரமபுரத் திருமுனிவர் பெருந்தொண்டை நன்னாட்டில்
அரனமருந் தானங்கள் அணைந்திறைஞ்சிப் பாடுதற்கங்
குரனுடைய திருநாவுக் கரசர்உரை செய்தருளப்
புரமெரித்தார் திருமகனார் பூந்துருத்தி தொழுதகன்றார். ச0க

1672 ஆண்டஅர சங்கணர்சீர் அருள்பெற்றப் பதிகின்றும்
பாண்டிநாட் டெழுந்தருளும் பான்மையராய்த் தென்திசைபோய்க்
காண்டகைய திருப்புத்தூர் பணிந்தேத்திக் கதிர்மதியம்
தீண்டுகொடி மதில்மதுரைத் திருஆல வாய்சேர்ந்தார். ச0உ

1673 சென்றணைந்து மதுரையினில் திருந்தியதூற் சங்கத்துள்
அன்றிருந்து தமிழாராய்ந் தருளியஅங் கணர்கோயில்
முன்றிலினை வலங்கொண்டு முன்இறைஞ்சி உள்புக்கு
வன்தனிமால் விடையானை வணங்கிமகிழ் வொடுந்தினைத்தார். ச0ங

1674 எய்தியபே ரானந்த இன்பத்தி னிடைஅழுந்தி
மொய்திகழுஞ் சடையானை "முளைத்தானை" என்றெடுத்துச்
செய்தவத்தோர் தாண்டகச்செந் தமிழ்பாடிப் புறத்தணைவார்
கைதொழுது பணிந்தேத்தித் திருவுள்ளங் களிசிறந்தார். ச0ச

1675 சீர்திகழும் பாண்டிமா தேவியார் திருநீற்றின்
சார்வுடைய கூன்நிமிர்ந்த தென்னவனார் தம்முடனே
பார்பரவுங் குலச்சிறையார் வாகீசர் தமைப்பணிவுற்
றூரகிலாக் காதல்மிக அடிபோற்ற அங்கிருந்தார். ச0ஞ

1676 திருவால வாய்அமர்ந்த செஞ்சுடரைச் செழும்பொருள்நூல்
தருவானை நேரிசையும் தாண்டகமும் முதலான
பெருவாய்மைத் தமிழ்பாடிப் பேணுதிருப் பணிசெய்து
மருவார்தம் புரம்எரித்தார் பூவணத்தை வந்தடைந்தார். ச0சு

1677 கோடிமாடம் நிலவுதிருப் பூவணத்துக் கோயிலினுள்
நெடியானுக் கறிவரியார் நேர்தோன்றக் கண்டிறைஞ்சி

பா. பே.1. அரன்ம கிழும் : அ ரனுறையும். 2. பாடுவதற்கு.
3. சார்வடைய.

"வடிவேறு திரிசூல"த் தாண்டகத்தால் வழுத்திப்போய்ப்
பொடிநீடு திருமேனிப் புனிதர்பதி பிறபணிவார். சஅள

1678 தென்னிலங்கை இராவணன்தன் சிரமீரைந் துந்துணித்த
மன்னவனும் இராமனுக்கு வரும்பெரும்பா தகந்தீர்த்த
பிஞ்ஞகனைத் தொழுவதற்கு நினைந்துபோய்ப் பெருமகிழ்ச்சி
துன்னிமனங் கரைந்துருகத் தொழுதெழுந்தார் சொல்லரசர். சஅஅ

1679 தேவர்தொழுந் தனிமுதலைத் திருவிரா மேச்சுரத்து
மேவியசங் கரனைஎதிர் நின்றுவிருப் புறுமொழியால்
பாவுதிரு நேரிசைகள் முதலான தமிழ்பாடி
நாவரசர் திருத்தொண்டு நலம்பெருகச் செய்தமர்ந்தார். சஅக

1680 அங்குறைந்து கண்ணுதலார் அடிசூடி அகன்றுபோய்ப்
பொங்குதமிழ்த் திருநாட்டுப் புறம்பணைசூழ் நெல்வேலி
செங்கண்விடை யார்மன்னுந் திருக்கானப் பேர்முதலா
எங்குநிகழ் தானங்கள் எல்லாம்புக் கிறைஞ்சுவார். சகஅ

1681 தொழுதுபல வகையாலுஞ் சொற்றொடைவண் தமிழ்பாடி
வழுவில்திருப் பணிசெய்து மனங்கசிவுற் றெப்பொழுதும்
ஒழுகியகண் பொழிபுனலும் ஓவாது சிவன்தாள்கள்
தழுவியசிந் தையில்உணர்வுந் தங்கியநீர் மையிற்சரித்தார். சகக

1682 தேம்பொழியும் செந்தமிழ்நாட் டினில்எங்குஞ் சென்றிறைஞ்சிப்
பாம்பணிவார் தமைப்பணிவார் பொன்னிநா டதுஅணைந்து
வாம்புனல்சூழ் வளநகர்கள் பின்னும்போய் வணங்கியே
பூம்புகலூர் வந்தடைந்தார் போய்ப்பாசம் போக்குதற்கு. சகஉ

1683 போய்கைசூழ் பூம்புகலூர்ப் புனிதர்மலர்த் தாள்வணங்கி
நையுமனப் பரிவினெடும் நாள்தோறுந் திருமுன்றில்
கைகலந்த திருத்தொண்டு செய்துபெருங் காதலுடன்
வைகுநாள் எண்ணிறந்த வண்தமிழ்மா லைகள்மொழிவார். சகங

1684 நின்றதிருத் தாண்டகமும் நீடுதனித் தாண்டகமும்
மன்றுறைவார் வாழ்பதிகள் வழுத்துதிருத் தாண்டகமும்
கொன்றைமலர்ச் சடையார்பால் நிறைந்ததிரு நேரிசையும்
துன்றுதனி நேரிசையும் முதலான தொடுத்தமைத்தார். சகச

1685 ஆருயிரின் திருவிருத்தம் தசபுரா ணத்தடைவும்
பார்பரவும் பாவநா சப்பதிகம் பன்முறையும்
நேர்படநின் றறைகூவுந் திருப்பதிகம் முதற்பிறவும்
பேரருளின் கடல்அளிக்கும் பெருமானைப் பாடினார். சகஞ

1686 அந்நிலைமை யினில்ஆண்ட அரசுபணி செய்யஅவர்
நன்னிலைமை காட்டுவார் நம்பர்திரு மணிமுன்றில்

பா.வே. 1. தொழுந்தினைஞ்சி. 2. போக்குவார். 3 குறைந்தடைந்த. 4 தினிலாண்ட.

தன்னில்வரும் உழுவாரம் நுழைந்தவிடந் தானெங்கும்
பொன்னிணெடு நவமணிகள் பொலிந்திலங்க அருள்செய்தார். சகசு

1687 செம்போன்னும் நவமணியும் சேண்விளங்க! ஆங்கேவையும்
உம்பர்பிரான் திருமுன்றில் உருள்பருக்கை யுடன்ஒக்க
எம்பெருமான் வர்கீசர் உழுவாரத் தினில்வந்தி
வம்பலர்மென் பூங்கமல வாவியினிற் புகளறிந்தார். சகள

1688 புல்லோடும் கல்லோடும் பொன்னோடும் மணியோடும்
சொல்லோடும் வேறுபா டிலாநீலமை துணிந்திருந்த
நல்லோர்முன் திருப்புகலூர் நாயகனர் திருவருளால்
வில்லோடு துதல்மடவார் விசும்பூடு வந்திழிந்தார். சகஅ

1689 வானகமின் னுக்கொடிகள் வந்திழிந்தால் எனவந்து
தானநிறை சுருதிகளில் தகும்அலங்கா ரத்தன்மை
கானஅமு தம்பரக்குங் கனிவாயில் ஒளிபரப்பப்
பானல்நெடுங் கண்கள்வெளி பரப்பிஇசை பாடுவார். சகக

1690 கற்பகப்பூந் தளிரடிபோங் காமருசா ரிகைசெய்ய
உற்பலமென் முகிழ்விரல்வட் டணையோடுங் கைபெயரப்
பொற்புறும்அக் கையின்வழிப் பொருகயற்கண் புடைபெயர
அற்புதப்பொற் கொடிதுடங்கி ஆடுவபோல் ஆடுவார். சஉ0

1691 ஆடுவார் பாடுவார் அலர்மாரி மேற்பொழிவார்
கூடுவார் போன்றணைவார் குழல்அவிழ இடைதுடங்க
ஓடுவார் மாரவே ளுடன்மீள்வர் ஒளிபெருக
நீடுவார் துகில்அசைய நிற்பாரும் ஆயினர். சஉக

1692 இத்தன்மை அரம்பையர்கள் எவ்விதமுஞ் செயல்புரிய
அத்தனார் திருவடிக்கீழ் நினைவகலா அன்புருகும்
மெய்த்தன்மை உணர்வுடைய விழுத்தவத்து மேலோர்தம்
சித்தநிலை திரியாது செய்பணியின் தலைநின்றார். சஉஉ

1693 இம்மாயப் பவத்தொடக்காம் இருவினைகள் தமைநோக்கி
"உம்மால்இங் கென்னகுறை உடையேன்யான் திருவாரூர்
அம்மானுக் காளானேன் அலையேன்மின் நீர்" என்று
"பொய்ம்மாயப் பெருங்கடலுள்" எனுந்திருத்தாண் டகம்புகன்றார்.

1694 மாதரவர் மருங்கணைய வந்தெய்தி மதனவசக்
காதலவர் புரிந்தாழுகுங் கைதவங்கள் செய்திடவும்
பேதமிலா ஒருணர்விற் பெரியவரைப் பெயர்விக்க
யாதும்ஒரு செயலில்லா மையில்இறைஞ்சி எதிர்நின்றார். சஉச

1695 இந்நிலைமை உலகேழும் எய்தஅறிந் தியல்பேத்த
மன்னியஅன் புறுபத்தி வடிவான வாகீசர்

பா.பே.1. ஆங்கவையும். 2. கானவமு தினைபரக்கும்.
3. கைபெயர்ப் பார்4. ஆடினர். 5. ஆயினபின.

மின்னிலவுஞ் சடையார்தம் மெய்யருள்தான் எய்தவரும்
அந்நிலைமை அணித்தாகச் சிலநாள்அங் கமர்ந்திருந்தார். சஉடு

1696 மன்னியஅத் தக்கரணம் மருவுதலைப் பாட்டினுல்
"தன்னுடைய சரணன தமியேனைப் புகலூரன்
என்னையினிச் சேவடிக்கீழ் இருத்திடும்"என் றெழுகின்ற
முன்னுணர்வின் முயற்சியினுல் திருவிருத்தம் பலமொழிந்தார். சஉசு

1697 மண்முதலாம் உலகேத்த மன்னுதிருத் தாண்டகத்தைப்
"புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்" எனப்புகன்று
நண்ணரிய சிவானந்த ஞானவடி வேயாகி
அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்டஅரசமர்ந்திருந்தார். சஉஎ

1698 வானவர்கள் மலர்மாரி மண்ணிறைய விண்ணுலகின்
மேல்நிறைந்த ஐந்துபே ரியவொலியும் விரிஞ்சன்முதல்
யோனிகளா யினஎல்லாம் உள்நிறைந்த பெருமகிழ்ச்சி
தானிறைந்த சித்திரையில் சதயமாந் திருநாளில். சஉஅ

1699 அடியனேன் ஆதரவால் ஆண்டஅர சின்சரிதப்
படியையான் அறிந்தபடி பகர்ந்தேன்அப் பரமுனிவன்
கடிமலர்மென் சேவடிகள் கைதொழுது குலச்சிறையார்
முடிவில்புகழ்த் திருத்தொண்டின் முயற்சியினை மொழிகின்றேன்.

ஆ திருவிருத்தம் - க,ஙகக.

22. குலச்சிறை நாயனார் புராணம்

1700 பன்னு தொல்புகழ்ப் பாண்டிநன் னுட்டிடைச்
செந்நெ லார்வயல் தீங்கரும் பின்னயல்
தன்னு *பூகப் புறம்பணை சூழ்ந்தது
மன்னு வண்மையி னர்மண மேற்குடி. க

1701 அப்ப திக்கு முதல்வர்வன் தொண்டர்தாம்
ஒப்ப ரும்"பெரு நம்பி"என் றோதிய
செப்ப ருஞ்சீர்ச் குலச்சிறை யார்திண்மை
வைப்பி னுல்திருத் தொண்டில் வழாதவர். உ

1702 காரு ணங்கண் ணுதற்கன்பர் என்னவே
வாரு மாகி மகிழ்ந்தவர் தாள்மிசை
ஓரும் அன்பொடு வீழ்ந்தஞ் சலிமுகிழ்த்
தீர நன்மொழி எய்த இசைத்துளார். ங

பா.பே.1. ஆண்டஅ ரசெய்தினன்.

1703 குறியில் நான்கு குலத்தின ராயினும்
நெறியின் அக்குலம் நீங்கின ராயினும்
அறிவு சங்கரற் கன்பர் எனப்பெறில்
செறிவு றப்பணிந் தேத்திய செய்கையார். ச

1704 உலகர் கொள்ளும்1நலத்தின ராயினும்
அலகில் தீமைய ராயினும் அம்புலி
இலகு செஞ்சடை2யார்க்கடி யாரெனில்
தலமு றப்பணிந் தேத்துந் தகைமையார். ஞ

1705 3பண்பு மிக்கார் பலராய் அணையினும்
உண்ப வேண்டி ஒருவர் அணையினும்
எண்பெ ருக்கிய அன்பால் எதிர்கொண்டு
நண்பு கூர்ந்தமு தூட்டும் நலத்தினர். கூ

1706 பூதி கோவணஞ் சாதனத் தாற்பொலிந்
தாதி தேவர்தம் அஞ்செழுத் தாமவை
ஓது நாவணக் கத்தால் உரைப்பவர்
பாதம் நாளும் பரவிய பண்பினர். எ

1707 இன்ன நல்லொழுக் கத்தினுல்4ஈறிலாத்
தென்ன வன்நெடு மாறற்குச் சீர்திகழ்
மன்னு மந்திரி கட்குமே லாகியார்
ஒன்ன லார்ச்செற் றுறுதிக்கண் நின்றுளார். அ

1708 ஆய செய்கைய ராயவர் ஆறணி
நாய னர்திருப் பாதம் நவின்றுளார்
பாய சீர்புனை பாண்டிமா தேவியார்
மேய தொண்டுக்கு மெய்த்தொண்ட ராயினர். கூ

1709 புன்ன யத்தரு கந்தர்பொய்5நீக்கவும்
தென்னர் நாடு திருநீறு போற்றவும்
மன்னு காழியர் வள்ளலார் பொன்னடி
சென்னி சேர்த்தி மகிழ்ந்த சிறப்பினர். கo

1710 வாதில் தோற்ற அமணரை வன்கழுத்
தீது நீங்கிட ஏற்றுவித் தார்திறம்
யாது போற்றினேன் மேலினி ஏத்துகேன்
வேத நீதி மிழலைக் குறும்பர்தாள். கக

ஆ திருவிருத்தம் - கஎத்o

யா.பே.1.நலத்துள. 2.யாரடி. 3.பண்பினின்.
4.எறில்தீர்த். 5.நீப்பவும்.

23 பெருமிழலைக் குறும்ப நாயனார் புராணம்

1711 சூதம் நெருங்கு குலைத்தெங்கு பலவு பூகஞ் சூழ்புடைத்தாய்
வீதி தோறும் நீற்றினொளி விரிய மேவி விளங்குபதி
நீதி வழுவா நெறியினராய் நிலவுங் குடியால் நெடுநிலத்து
மீது விளங்குந் தொன்மையது மிழலை நாட்டுப் பெருமிழலை. க

1712 அன்ன தொன்மைத் திருப்பதிக்கண் அதிபர் மிழலைக் குறும்பனார்
சென்னி மதியம் வைத்தவர்தம் அடியார்க் கான செய்பணிகள்
இன்ன வண்ணம் என்றவர்தாம் உரையா முன்னம் எதிரேற்று
முன்னம் உணர்ந்து செய்வாராய் முதிரும் அறிவின் பயன்கொள்வார்.

1713 தொண்டர் பலரும் வந்தீண்டி உண்ணத் தொலையா அமுதூட்டிக்
கொண்டு செல்ல அருநியமம் முகந்து கொடுத்துக் குறைந்தடைவார்
வண்டு மருவுங் குழலுமையாள் கேள்வன் செய்ய தாளென்னும்
புண்ட ரீகம் அகமலரில் வைத்துப் போற்றும் பொற்பினார். ங

1714 இத்தன் மையராய் நிகழுநாள் எல்லை இல்லாத் திருத்தொண்டின்
மெய்த்தன் மையினை உலகறிய விதியால் வணங்கி மெய்யடியார்
சித்தம் நிலவுந் திருத்தோண்டத் தொகைபா டியநம் பியைப்பணிந்து
நித்தன் அருள்பெற் றவர்பாதம் நினைக்கும் நியமத் தலைநின்றார். ச

1715 மையார் தடங்கட் பரவையார் மணவா ளன்தன் மலர்க்கழல்கள்
கையால் தொழுது வாய்வாழ்த்தி மனத்தால் நினைக்கும் கடப்பாட்டில்
செய்யாள் கோனும் நான்முகனும் அறியாச் செம்பொற் ருளினைக்கீழ்
உய்வான் சேர உற்றநெறி இதுவே என்றன் பினில்உய்த்தார். ஞ

1716 நாளும் நம்பி ஆரூரர் நாமம் நவின்ற நலத்தாலே
ஆளும் படியால் அணிமாதி சித்தி யான அணைந்ததற்பின்
மூளுங் காத லுடன்பெருக முதல்வர் நாமத் தஞ்செழுத்தும்
கேளும் பொருளும் உணர்வுமாம் பரிசு வாய்ப்பக் கெழுமினார். ட

1717 இன்ன வாறே இவரொழுக ஏறு கொடிமேல் உயர்த்தவர்தம்
பொன்னங் கழல்கள் மண்ணின்மேல் பொருந்த வந்து வழக்குரைத்து
மன்னும் ஓலை அவைமுன்பு காட்டி ஆண்ட வன்தொண்டர்
சென்னி மதிதோய் மாடமலி கொடுங்கோ ளூரைச் சேர்வுற்றார். ண

1718 அஞ்சைக் களத்து நஞ்சுண்ட அமுதைப் பரவி அணைவுறுவார்
செஞ்சொல் தமிழ்மா லைகள்மொழியத் தேவர் பெருமான் அருளாலே
மஞ்சில் திகழும் வடகயிலைப் பொருப்பில் எய்த வரும்வாழ்வு
நெஞ்சில் தெளிய இங்குணர்ந்தார் நீடு மிழலைக் குறும்பனார். அ

கச பா. பே.) வண்ணம். உ. உலகு.

3 இருநியமம்.

1719 "மண்ணில் திகழுந் திருநாவ லூரில் வந்த வன்தொண்டர்
நண்ணற் கரிய திருக்கயிலை நாளே எய்த நான்பிரிந்து
கண்ணிற் கரிய மணிகழிய வாழ்வார் போல வாழேன்"என்
றெண்ணிச் "சிவன்தாள் இன்றேசென் றடைவன் யோகத் தால்" என்பார்.

1720 நாலு கரணங் களும்ஒன்றாய் நல்ல அறிவு மேற்கொண்டு
காலும் பிரம நாடிவழிக் கருத்துச் செலுத்தக் கபாலநடு
ஏல வேமுன் பயின்றநெறி எடுத்த மறைமூ லந்திறப்ப
மூல முதல்வர் திருப்பாதம் அணைவார் கயிலை முன்னடைந்தார். கo

1721 பயிலைச் செறிந்த யோகத்தால் பரவை கேள்வன் பாதமுறக்
கயிலைப் பொருப்பர் அடியடைந்த மிழலைக் குறும்பர் கழல்வணங்கி
மயிலைப் புறங்கொள் மென்சாயல் மகளிர் கிளவி யாழினுமேம்
குயிலைப் பொருவும் காரைக்கால் அம்மை பெருமை கூறுவாம். கக

ஆ திருவிருத்தம் - க,எஉக.

24. காரைக்காலம்மையார் புராணம்

1722 மானமிகு தருமத்தின் வழிநின்று வாய்மையினில்
ஊனமில்சீர்ப் பெருவணிகர் குடிதுவன்றி ஓங்குபதி
கூனல்வளை திரைசுமந்து கொண்டேறி மண்டுகழிக்
கானல்மிசை உலவுவளம் பெருகுதிருக் காரைக்கால். க

1723 வங்கமலி கடற்காரைக் காலின்கண் வாழ்வணிகர்
தங்கள்குலத் தலைவனுர் தனதத்த னுர்தவத்தால்
அங்கவர்பால் திருமடந்தை அவதரித்தா ளெனவந்து
பொங்கியபே ரழகுமிகப் புனிதவதி யார்பிறந்தார். உ

1724 வணிகர்பெருங் குலம்விளங்க வந்துபிறந் தருளியபின்
அணிகிளர்மெல் அடிதளர்வுற் றசையுநடைப் பருவத்தே
பணிஅணிவார் கழற்கடிமை பழகிவரும் பாங்குபெறத்
தணிவில்பெரு மனக்காதல் ததும்பவரும் மொழிபயின்றார். ங

1725 பல்பெருநற் கிளைஉவப்பப் பயில்பருவச் சிறப்பெல்லாம்
செல்வமிகு தந்தையார் திருப்பெருகுஞ் செயல்புரிய
மல்குபெரும் பாராட்டின் வளர்கின்றார் விடையவர்பால்
அல்கியஅன் புடன்அழகின் கோழுந்தெழுவ தெனவளர்வார். ச

1726 வண்டல்பயில் வனவெல்லாம் வளர்மதியம் புனைந்தசடை
அண்டர்பிரான் திருவார்த்தை அணையவரு வனபயின்று

பா.வே.1. பயிலை. 2. யோகத்தார்.

தொண்டர்வரில் தொழுதுதா தியர்போற்றத் தூணைமூலைகள்
கொண்டுதுசுப் பொதுங்குபதங் கொள்கையினிற் குறுகினார். நி

1727 நல்லவென உறுப்புநூ லவர்உரைக்கும் நலம்நிரம்பி
மல்குபெரு வனப்புமீக் கூரவரு மாட்சியினால்
இல்லிகவாப் பருவத்தில் இவர்கள்மர பினுக்கேற்கும்
தொல்குலத்து வணிகர்மகட் பேசுதற்குத் தொடங்குவார். சு

1728 நீடியசீர் கடல்நாகை நிதிபதிஎன் றுலகின்கண்
பாடுபெறு புகழ்வணிகன் பயந்தருள மைந்தனுக்குத்
தேடவருந் திருமரபில் சேயிழையை மகட்பேச
மாடமலி காரைக்கால் வளநகரில் வரவிட்டார். எ

1729 வந்தமூ தறிவோர்கள் மணங்குறித்த மனைபுகுந்து
தந்தையார் தனதத்தன் தனைநோக்கி "நீபயந்த
பைந்தொடியை நிதிபதிமைந் தன்பரம தத்தனுக்கு
மூந்தைமர பினுக்கேற்கும் முறைமைமணம் புரி"கென்றார். அ

1730 மற்றவனும் முறைமையினால் மணம்இசைந்து செலவிடச்சென்
றுற்றவர்கள் உரைகேட்ட நிதிபதியும் உயர்சிறப்புப்
பெற்றனன்போல் உவந்துதனிப் பெருமகட்குத் திருமலியும்
சுற்றமுடன் களிகூர்ந்து வதுவைவினைத் தொழில்பூண்டான். கூ

1731 மணமிசைந்த நாளோலை செலவிட்டு மங்கலநாள்
அணையவது வைத்தொழில்க ளானவெலாம் அமைவித்தே
இணரலங்கல் மைந்தனையும் மணஅணியின் எழில்விளக்கிப்
பணைமுரசம் எழுந்தார்ப்பக் காரைக்கால் பதிபுகுந்தார். கo

1732 அளிமிடைதார்த் தனதத்தன் அணிமாடத் துள்புகுந்து
தெளிதருநூ லிதிவழியே செயல்முறைமை செய்தமைத்துத்
தளிரடிமென் நகைமயிலைத் தாதவிழ்தார்க் காளைக்குக்
களிமகிழ்சுற் றம்போற்றக் கல்யாணஞ் செய்தார்கள். கக

1733 மங்கலமா மணவினைகள் முடித்தியல்பின் வைகுநாள்
தங்கள்குடிக் கரும்புதல்வி ஆதலினால் தனதத்தன்
பொங்கொலிநீர் நாகையினிற் போகாமே கணவனுடன்
அங்கண்அமர்ந் தினிதிருக்க அனிமாடம் மருங்கமைத்தான். கஉ

1734 மகட்கொடையின் மகிழ்சிறக்கும் வரம்பில்தனங் கொடுத்ததற்பின்
நிகர்ப்பரிய பெருஞ்சிறப்பில் நிதிபதிதன் குலமகனும்
தகைப்பில்பெருங் காதலினால் தங்குமனை வளம்பெருக்கி
மிகப்புரியும் கொள்கையினில் மேம்படுதல் மேவினான். கங

1735 ஆங்கவன்தன் இல்வாழ்க்கை அருந்துணையாய் அமர்கின்ற
பூங்குழலார் அவர்தாமும் பொருவிடையார் திருவடிக்கீழ்

பா.பே.1. மண்ணுதித்து. 2. வழிமுறையே. 3. தெரிவுதரும். 4. பூங்கொடியார்.

ஓங்கியஅன் புறுகாதல் ஒழிவின்றி மிகப்பேருகப்
பாங்கில்வரும் மணிஅறத்தின் பண்புவழா மையில்பயில்வார். கச

1836 நம்பர்அடி யார்அணைந்தால் நல்லதிரு அமுதளித்தும்
செம்பொன்னும் நவமணியும் செழுந்துகிலும் முதலான
தம்பரிவி னல்அவர்க்குத் தகுதியின்வேண் டுவகொடுத்தும்
உம்பர்பிரான் திருவடிக்கீழ் உணர்வுமிக ஒழுகுநாள். கடு

1837 பாங்குடைய நெறியின்கட் பயில்பரம தத்தனுக்கு
மாங்கனிகள் ஓரிரண்டு வந்தணைந்தார் சிலர்கொடுப்ப
ஆங்கவைதான் முன்வாங்கி அவர்வேண்டுங் குறையளித்தே
"ஈங்கிவற்றை இல்லத்துக் கொடுக்க"என இயம்பினனன். கசு

1838 கணவன்தான் வரவிடுத்த கனிஇரண்டுங் கைக்கொண்டு
மணம்மலியும் மலர்க்கூந்தல் மாதரார் வைத்ததற்பின்
பணஅரவம் புனைந்தருளும் பரமனார் திருத்தொண்டர்
உணவின்மிகு வேட்கையினால் ஒருவர்மனை யுட்புகுந்தார். களை

1839 வேதங்கள் மொழிந்தபிரான் மெய்த்தொண்டர் நிலகண்டு
"நாதன்தன் அடியாரைப் பசிதீர்ப்பேன்" எனநண்ணிப்
பாதங்கள் விளக்கநீர் முன்னளித்துப் பரிகலம்வைத்
தேதந்தீர் நல்விருந்தா இன்அடிசில் ஊட்டுவார். கஅ

1840 கறியமுதங் குதவாதே திருஅமுது கைகூட
வெறிமலர்மேல் திருவனையார் விடையவன்தன் அடியாரே
பெறலரிய விருந்தானால் பேறிதன்மேல் இல்லையெனும்
அறிவினராய் அவர்அமுது செய்வதனுக் காதரிப்பார். கக

1841 இல்லாளன் "வைக்க"எனத் தம்பக்கல் முன்னிருந்த
நல்லநறு மாங்கனிகள் இரண்டினில்ஒன் றைக்கொண்டு
வல்விரைந்து வந்தணைந்து படைத்துமன மகிழ்ச்சியினால்
அல்லல்தீர்ப் பவர்அடியார் தமைஅமுது செய்வித்தார். உ0

1842 மூப்புறும்அத் தளர்வாலும் முதிர்ந்துமுடு கியவேட்கைத்
தீப்பசியின் நிலையாலும் அயர்ந்தணைந்த திருத்தொண்டர்
வாய்ப்புறுமென் சுவைஅடிசில் மாங்கனியோ டினிதருந்திப்
பூப்பயில்மென் குழல்மடவார் செயல்உவந்து போயினார். உக

1843 மற்றவர்தாம் போயினபின் மனைப்பதியா கியவணிகன்
உற்றபெரும் பகலின்கண் ஓங்கியபே ரில்லெய்திப்
பொற்புறமுன் நீராடிப் புகுந்தடிசில் புரிந்தயிலக்
கற்புடையமடவாரும் கடப்பாட்டில் ஊட்டுவார். உஉ

1844 இன்னடிசில் கறிகளுடன் எய்துமுறை இட்டதற்பின்
மன்னியசீர்க் கணவன்தான் மனையிடைமுன் வைப்பித்த

பா.வே.1. மைப்பயில்வார். 2 மனையாரும்.

நன்மதுர மாங்கனியில் இருந்ததனை நறுங்கூந்தல்
அன்னமனை யார்தாமுங் கொடுவந்து கலத்தளித்தார். உங

மனைவியார் தாம்படைத்த மதுரமிக வாய்த்தகனி
தனைதுகர்ந்த இனியசுவை ஆராமைத் தார்வணிகன்
"இனையதொரு பழம்இன்னும் உளததனை இடுக"என
அனையதுதாங் கொண்டுவர அனைவார்போல் அங்ககன்றூர். உச

அம்மருங்கு நின்றயர்வார் அருங்கனிக்கங் கென்செய்வார்!
மெய்ம்மறந்து நினைந்துற்ற விடத்துதவும் விடையவர்தாள்
தம்மனங்கொண் டுணர்த்தலுமே அவர்அருளால் தாழ்குழலார்
கைம்மருங்கு வந்திருந்த(து) அதிமதுரக் கனியொன்று. உரு

மற்றதனைக் கொடுவந்து மகிழ்ந்திடலும் அயின்றதனில்
உற்றசுவை அமுதினுமேற் படவுளதா யிட"இதுதான்
மூற்றருமாங் கனியன்று மூவுலகில் பெறற்கரிதால்
பெற்றதுவே றெங்"கென்று பெய்வளையார் தமைக்கேட்டான். உசு

அவ்வுரைகேட் டலும்மடவார் " அருளுடையார் அளித்தருளுஞ்
செவ்வியபேர் அருள்விளம்புந் திறமன்"றென் றுரைசெய்யார்
"கைவருகற் புடைநெறியால் கணவன்உரை காவாமை
மெய்வழியன் " றெனவிளம்பல் விடமாட்டார் விதிர்ப்புறுவார். உஎ

செய்தபடி சொல்லுவதே கடன்என்னுஞ் சீலத்தார்
மைதழையுங் கண்டர்சே வடிகள்மனத் துறவணங்கி
"எய்தவருங் கனியளித்தார் யார்"என்னுங் கணவனுக்கு
மொய்தருபூங் குழல்மடவார் புகுந்தபடி தனைமொழிந்தார். உஅ

"ஈசனருள்" எனக்கேட்ட இல்இறைவன் அதுதெளியான்
வாசமலர்த் திருஅனையார் தமைநோக்கி மூற்றிதுதான்
தேசுடைய சடைப்பெருமான் திருவருளே ல் இன்னமும்ஓர்
ஆசில்கனி அவனருளால் அழைத்தளிப்பாய்" எனமொழிந்தான்.

பாங்ககன்று மனைவியார் பணியணிவார் தமைப்பரவி
"ஈங்கிதளித் தருளீரேல் என்னுரைபோய் யாம்"என்ன
மாங்கனியொன் றருளால்வந் தெய்துதலும் மற்றதனை
ஆங்கவன்கைக் கொடுத்தலுமே அதிசயித்து வாங்கினன். ஈ0

வேறு

வணிகனுந் தன்கைப் புக்க மாங்கனி பின்னைக் காணன்
தணிவரும் பயமேற் கொள்ள உள்ளமுந் தடுமா றெய்தி
அணிகுழ லவரை வேறூர் அணங்கெனக் கருதி நீங்கும்
துணிவுகொண் டெவர்க்குஞ் சொல்லான் தொடர்வின்றி ஓழுகு நாளில்.

பா. பே. 1. இலத்தால். 2. மற்றதுதான்.

1753 விடுவதே எண்ண மாக மேவிய முயற்சி செய்வான்
"படுதிரைப் பரவை மீது படர்கலங் கொண்டு போகி
நெடுநிதி கொணர்வேன்" என்ன நிரந்தபல் கிளஞ ராகும்
வடுவில்சீர் வணிக மாக்கள் மரக்கலஞ் சமைப்பித் தார்கள். நஉ

1754 கலஞ்சமைத் ததற்கு வேண்டுங் கம்மிய ருடனே செல்லும்
புலங்களில் விரும்பு பண்டம் பொருந்துவ நிரம்ப ஏற்றிச்
சலந்தரு கடவுட் போற்றித் தலைமையாம் நாய்கன் முனும்
நலந்தரு நாளில் ஏறி நளிதிரைக் கடல்மேற் போனான். நஙு

1755 கடல்மிசை வங்கம் ஓட்டிக் கருதிய தேயந் தன்னில்
அடைவுறச் சென்று சேர்ந்தங் களவில்பல் வளங்கள் மூற்றி
இடைசில நாட்கள் நீங்க மீண்டும்அக் கலத்தில் ஏறிப்
படர்புனற் கன்னி நாட்டோர் பட்டினம் மருங்கு சேர்ந்தான். நச

1756 அப்பதி தன்னில்ஏறி அலகில்பல் பொருள்கள் ஆக்கும்
ஒப்பில்மா நிதியம் எல்லாம் ஒருவழிப் பெருக உய்த்து
மெய்ப்புகழ் விளங்கும் அவ்வூர்விரும்பவோர் வணிகன் பெற்ற
செப்பருங் கன்னி தன்னைத் திருமலி வதுவை செய்தான். நஞ

1757 பெறலருந் திருவி னாலைப் பெருமணம் புணர்ந்து முன்னை
அறலியல் நறுமென் கூந்தல் அணங்கனுள் திறத்தில் அற்றம்
புறமொரு வெளியு மூமற் போதிந்தசிந் தனையி னோடு
முறைமையின் வழாமை வைகி முகமலர்ந் தொழுகு நாளில். நஎ

1758 முருகலர் சோலை மூதூர் ரதன்முதல் வணிக ரோடும்
இருநிதிக் கிழவன் என்ன எய்திய திருவின் மிக்குப்
பொருகடற் கலங்கள் போக்கும் புகழினன் மனைவி தன்பால்
பெருகொளி விளக்குப் போலோர் பெண்கொடி அரிதிற் பெற்றான். நக

1759 மடமகள் தன்னைப் பெற்று மங்கலம் பேணித் தான்முன்(பு)
உடனுறை(வு) அஞ்சி நீத்த ஒருபெரு மனைவி யாரைத்
தொடர்வற நினைந்து தெய்வத் தொழுகுலம் என்றே கொண்டு
கடனமைத் தவர்தம் நாமம் காதல்செய் மகவை இட்டான். நஅ

1760 இந்நிலை இவன்இங் கெய்தி இருந்தனன் இப்பால் நீடுங்
கன்னிமா மதில்சூழ் மாடக் காரைக்கால் வணிக னான
தன்னிகர் கடந்த செல்வத் தனதத்தன் மகளார் தாமும்
மன்னிய கற்பி னோடு மனையறம் புரிந்து வைக. நகூ

1761 "விளைவளம் பெருக்க வங்க மீதுபோம் பரம தத்தன்
வளர்புகழ்ப் பாண்டி நாட்டோர் மாநகர் தன்னில் மன்னி
அளவில்மா நிதியம் ஆக்கி அமர்ந்தினி திருந்தான்" என்று
கிளரொளி மணிக்கொம் பன்னார் கிளைஞர்தாங் கேட்டா ரன்றே. சஒ

பா.பே.1.எய்தி.2.விடும் புமோர்.

1762 அம்மொழி கேட்ட போதே அணங்கனார் சுற்றத் தாரும்
தம்முறு கிளைஞர்ப் போக்கி அவன்நிலை தாமும் கேட்டு
மம்மர்கொள் மனத்த ராகி "மற்றவன் இருந்த பாங்கர்க்
கொம்மைவெம் மூலியி னிலைக் கொண்டுபோய் விடுவ" தென்றார். சக

1763 மாமணிச் சிவிகை தன்னில் மடநடை மயில்அன் னைதாம்
தாமரைத் தவிசில் வைகுந் தனித்திரு என்ன ஏற்றிக்
காமருகழனி வீழ்த்துக் காதல்செய் சுற்றத் தாருந்
தேமொழி யவருஞ் சூழச் சேணிடைக் கழிந்து சென்றார். சஉ

1764 சிலபகல் கடந்து சென்று செந்தமிழ்த் திருநா டெய்தி
மலர்புகழ்ப் பரம தத்தன் மாநகர் மருங்கு வந்து
குலமுதல் மனைவி யாரைக் கொண்டுவந் தணைந்த தன்மை
தொலைவில்சீர்க் கணவ னுக்குச் சொல்லிமுன் செல்ல விட்டார். சஙூ

1765 வந்தவர் அணைந்த மாற்றங் கேட்டலும் வணிகன் தானும்
சிந்தையில் அச்சம் எய்திச் "செழுமணம் பின்பு செய்த
பைந்தொடி தனையுங் கொண்டு பயந்தபெண் மகவி னோடு
முந்துறச் செல்வேன்" என்று மொய்குழ லவர்பால் வந்தான். சச

1766 தானும்அம் மனைவி யோடுந் தளர்நடை மகவி னோடும்
மானிளம் பிணைபோல் நின்ற மனைவியார் அடியில் தாழ்ந்தே
"யான்உம தருளால் வாழ்வேன் இவ்விளங் குழவி தானும்
பான்மையால் உமது நாமம்" என்றுமுன் பணிந்து வீழ்ந்தான். சஞ

1767 கணவர்தாம் வணங்கக் கண்ட காமர்பூங் கோடி யரும்
அணைவுறுஞ் சுற்றத் தார்பால் அச்சமோ டொதுங்கி நிற்ப
உணர்வுறு கிளைஞர் வெள்கி "உன்திரு மனைவி தன்னை
மணமலி தாரி னுய்!நீ வணங்குவ தென்கொல்" என்றார். சசு

1768 மற்றவர் தம்மை நோக்கி " மானுடம் இவர்தாம் அல்லர்
நற்பெருந் தெய்வ மாதல் நானறிந் துகந்த பின்பு
பெற்றஇம் மகவு தன்னைப் பேரிட்டேன் ஆத லாலே
பொற்பதம் பணிந்தேன் நீரும் போற்றுதல் செய்மின்" என்றான்.

1769 என்றலுஞ் சுற்றத் தாரும் "இதுஎன்கொல்!" என்று நின்றார்
மன்றலங் குழலி னாரும் வணிகன்வாய் மாற்றங் கேளாக்
கொன்றைவார் சடையி னார்தங் குரைகழல் போற்றிச் சிந்தை
ஒன்றிய நோக்கில் மிக்க உணர்வுகொண் டுரைசெய் கின்றார். சஅ

1770 "ஈங்கிவன் குறித்த கொள்கை இதுஇனி இவனுக் காகத்
தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி கழித்திங் குன்பால்
ஆங்குநின் தாள்கள் போற்றும் பேய்வடி(வு) அடியே னுக்குப்
பாங்குற வேண்டும்" என்று பரமர்தாள் பரவி நின்றார். சகூ

---

1. கேவிகை. 2. அச்சுகோ. 3. மணமகு. 4. அகனை று
5. பரமனை.

1771 ஆனஅப் பொழுது மன்றுள் ஆடுவார் அருளி னாலே
மேல்நெறி உணர்வு கூர வேண்டிடற்றே பெறுவார் மேய்யில்
1 ஊனடை வனப்பை எல்லாம் உதறிஎற் புடம்பே யாக
வானமும் மண்ணும் எல்லாம் வணங்குபேய் வடிவம் ஆனார். நிo

1772 மலர்மழை பொழிந்த தெங்கும் வானதுந் துபியின் நாதம்
உலகெலாம் நிறைந்து விம்ம உம்பரும் முனிவர் தாமும்
2 குலவினர் கணங்கள் எல்லாங் குணலையிட் டனமுன் நின்ற
3 தொலைவில்பல் சுற்றத் தாருந் தொழுதஞ்சி அகன்று போனார். நிக

1773 உற்பவித் தெழுந்த ஞானத் தொருமையின் உமைகோன் தன்னை
அற்புதத் திருவந் தாதி அப்பொழு தருளிச் செய்வார்
"பொற்புடைச் செய்ய பாத புண்டரீ கங்கள் போற்றும்
நற்கணத் தினில்ஒன் றனேன் நான்" என்று நயந்து பாடி. நிஉ

1774 ஆய்ந்தசீர் இரட்டை மாலை அந்தாதி எடுத்துப் பாடி
ஏய்ந்தபே ருணர்வு பொங்க எயிலொரு மூன்றும் மூன்னுள்
காய்ந்தவர் இருந்த வெள்ளிக் கைலைமால் வரையை நண்ண
வாய்ந்தபே ரருள்முன் கூர வழிபடும் வழியால் வந்தார். நிங

1775 கண்டவர் வியப்புற் றஞ்சிக் கையகன் றோடு வார்கள்
கொண்டதோர் வேடத் தன்மை உள்ளவா கூறக் கேட்டே
"அண்டநா யகனுர் என்னை அறிவரேல் அறியா வாய்மை
எண்டிசை மாக்க ளுக்கியான் எவ்வுரு வாயென்" என்பார். நிச

1776 வடதிசைத் தேசம் எல்லாம் மனத்தினுங் கடிது சென்று
தொடையவிழ் இதழி மாலைச் சூலபா ணியனுர் மேவும்
படரொளிக் கைலை வெற்பின் பாங்கணைந் தாங்குக் காலின்
நடையினைத் தவிர்ந்து பார்மேல் தலையினுல் நடந்து சென்றார். நிடி

1777 தலையினுல் நடந்து சென்று சங்கரன் இருந்த வெள்ளி
மலையின்மேல் ஏறும் போது மகிழ்ச்சியால் அன்பு பொங்கக்
கலையிளந் திங்கட் கண்ணிக் கண்ணுதல் ஒருபா கத்துச்
சிலைநுதல் இமய வல்லி திருக்கண்நோக் குற்ற தன்றே. நிசு

1778 அம்பிகை திருவுள் ளத்தின் அதிசயித் தருளித் தாழ்ந்து
தம்பெரு மானை நோக்கித் "தலையினுல் நடந்திங் கேறும்
எம்பெரு மானுர் எற்பின் யாக்கைஅன் பென்னே!" என்ன
நம்பெரு மாட்டிக் கங்கு நாயகன் அருளிச் செய்வான். நிஎ

1779 "வரும்இவள் நம்மைப் பேணும் அம்மைகாண் உமையே மற்றிப்
பெருமைசேர் வடிவும் வேண்டிப் பெற்றனள்" என்று பின்றை
அருகுவந் தணைய நோக்கி "அம்மையே!" என்னுஞ் செம்மை
ஒருமொழி உலகம் எல்லாம் உய்யவே அருளிச் செய்தார். நிஅ

பா.பே. 1. ஊனுடை. 2. குலவிய. 3. தொலைவில.

1780 அங்கணன் "அம்மை யே"என் றருள்செய "அப்பா" என்று
பங்கயச் செம்பொற் பாதம் பணிந்துவீழ்ந் தெழுந்தார் தம்மைச்
சங்கவெண் குழையி னருந் தாமெதிர் நோக்கி "நம்பால்
இங்குவேண் டுவதென்" என்ன இறைஞ்சினின் றியம்பு கின்றார். நுக

1781 இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
"பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுமான் மகிழ்ந்து பாடி
அறவா!நீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க" என்றார். சுo

1782 கூடுமா றருள்கொ டுத்துக் "குலவுதென் திசையில் என்றும்
நீவோழ் பழன மூதூர் நிலவிய ஆலங் காட்டில்
ஆடுமா நடமும் நீகண்டானந்தஞ் சேர்ந்தெப் போதும்
பாடுவாய் நம்மை" என்றுன் பரவுவார் பற்றுப் நின்றான். சுக

1783 அப்பரி சருளப் பெற்ற அம்மையுஞ் செம்மை வேத
மெய்ப்பொரு ளானர் தம்மை விடைகொண்டு வணங்கிப் போந்து
செப்பரும் பெருமை அன்பால் திகழ்திரு வாலங் காடாம்
நற்பதி தலையி னலே நடந்துபுக் கடைந்தார் அன்றே. சுஉ

1784 ஆலங்கா டதனில் அண்டம் உறநிமிர்ந் தாடு கின்ற
கோலங்காண் பொழுது "கொங்கை திரங்கி"என் றெடுத்துத் தங்கு
4 மூலங்காண் பரியார் தம்மை மூத்தநற் பதிகம் பாடி
ஞாலங்கா தலித்துப் போற்றும் நடம்போற்றி நண்ணு நாளில். சுங

வேறு

1785 மட்டவிழ்கொன் றையினர்தந் திருக்கூத்து முன்வணங்கும்
இட்டமிகு பெருங்காதல் எழுந்தோங்கி5வியப்பெய்தி
"எட்டிஇல வம்மீகை" எனஎடுத்துத் திருப்பதிகங்
"கொட்டமுழ வங்குழகன்" ஆடும்எனப் பாடினார். சுச

1786 மடித்தபுனல் வேணியினர் "அம்மை"என மதுரமொழி
கொடுத்தருளப் பெற்றுரைக் குலவியதான் டவத்தில்அவர்
எடுத்தருளுஞ் சேவடிக்கீழ் என்றும்இருக் கின்றுரை
அடுத்தபெருஞ் சீர்பரவல் ஆரளவா யினதம்மா. சுடு

வேறு

1787 ஆதியோ டந்த மில்லான் அருள்நடம் ஆடும் போது
சீதமுண்6பாடும் அம்மை கிளரொளி மலர்த்தாள் போற்றிச்
சீதநீர் வயல்சூழ் திங்கள் ஊரில்அப் பூதி யாராம்
போதமா முனிவர் செய்த திருத்தொண்டு புகல லுற்றேன். சுசு

ஆ திருவிருத்தம் க,எஎள

பா.பே. 1. நிறைந்து நின்றது புகன்றும். 3. என்றெடுத்து.
4. ஆர்ந்து தெய்தே யெப்போதும். 5. மூலங்காணைதார்.
5. வியப்பெய்த. 6. பரவும்.

25. அப்பூதியடிகள் புராணம்

1788 தாண்டவம் புரிய வல்ல தம்பிரா னருக் கன்பர்
ஈண்டிய புகழின் பூலார் எல்லையில் தவத்தின் மிக்கார்
ஆண்டகீர் அரசின் பாதம் அடைந்தவர் அறியா முன்னே
காண்டகு காதல் கூரக் கலந்தஅன் பினராய் உள்ளார். க

1789 களவுபோய் காமம் கோபம் முதலிய குற்றங் காய்ந்தார்
வளம்மிகு மனையின் வாழ்க்கை நிலையினர் மனைப்பால் உள்ள
அளவைகள் நிறைகோல் மக்கள் ஆவொடு மேதி மற்றும்
உளவெலாம் அரசின் நாமஞ்சாற்றும்அவ் வொழுக்க லாற்றார். உ

1790 வடிவுதாங் காணு ராயும் மன்னுசீர் வாக்கின் வேந்தர்
அடிமையுந் தம்பி ரானர் அருளுங்கேட் டவர்நா மத்தால்
‡படிகிகழ் மடங்கள் தண்ணீர்ப் பந்தர்கள் முதலா யுள்ள
முடிவிலா அறங்கள் செய்து முறைமையால் வாழும் நாளில். ங

வேறு

1791 பொருப்பரையன் மடப்பிடியி னுடன்புணருஞ் சிவக்களிற்றின்
திருப்பழனம் பணிந்துபணி செய்திருநா வுக்கரசர்
ஒருப்படுகா தலிற்பிறவும் உடையவர்தம் பதிவணங்கும்
விருப்பினெடுந் திங்களூர் மருங்குவழி மேவுவார். ச

1792 அளவில்சனஞ் செலவொழியா வழிக்கரையில் அருளுடையார்
உளமனைய தண்ணளித்தாய் உறுவேனிற் பரிவகற்றிக்
குளம்நிறைந்த நீர்த்தடம்போல் குளிர்தூங்கும் பரப்பினதாய்
வளம்மருவும் நிழல்தருதண் ணீர்ப்பந்தர் வந்தணைந்தார். ஞ

1793 வந்தணைந்த வாகீசர் மந்தமா ருதசீதப்
பந்தருடன் அமுதமாந் தண்ணீரும் பார்த்தருளிச்
சிந்தைவியப் புறவருவார் திருநாவுக் கரசெனும்பேர்
சந்தமுற வரைந்ததனை எம்மருங்குந் தாங்கண்டார். ட

1794 “இப்பந்தர் இப்பெயரிட் டிங்கமைத்தார் யார்”என்றார்க்(கு)
அப்பந்தர் அறிந்தார்கள் ஆண்டஅர செனும்பெயரால்
செப்பருஞ்சீர் அப்பூதி அடிகளார் செய்தமைத்தார்
தப்பின்றி எங்குமுள சாலைகுளம் கா”என்றார். எ

1795 என்றுரைக்க அரசுகேட் “டிதற்கென்னே கருத்”தென்று
நின்றவரை நோக்கி“அவர் ஏவ்விடத்தார்” எனவினவத்
“துன்றியநூல் மார்பரும்இத் தொல்பதியார் மனையின்கண்
சென்றனர்இப் பொழுததுவுஞ் சேய்த்தன்று நணித்”தென்றார். அ

பா.டு.பி. 1. குணத்தின். 2. சாந்துமிவ் வொழுகலாறு இ.
3. அறிவார்கள். 4. ஆண்டஅர சின்பெயரால்.

1796 அங்ஙகன்று முனிவரும்போய் அப்பூதி அடிகளார்
தங்குமனைக் கடைத்தலைமுன் சார்வாக, உள்ளிருந்த
திங்களூர் மறைத்தலைவர் "செழுங்கடையில் வந்தடைந்தார்
நங்கள்பிரான் தமர்ஒருவர்" எனக்கேட்டு நண்ணினார். கூ

1797 கடிதணிந்து வாகீசர் கழல்பணிய மற்றவர்தம்
அடிபணியா முன்பணியும் அரசின்எதிர் அந்தணனர்
"முடிவில்தவஞ் செய்தேன்கொல் முன்பொழியுங் கருணைபுரி
வடிவுடையீர் ! என்மனையில் வந்தருளிற் றென்"என்றார். கo

1798 "ஒருகுன்ற வில்லாரைத் திருப்பழனத் துள்ளிறைஞ்சி
வருகின்றும் வழிக்கரையில் நீர்வைத்த வாய்ந்தவளந்
தருகின்ற நிழல்தண்ணீர்ப் பந்தருங்கண் டத்தகைமை
புரிகின்ற அறம்பிறவுங் கேட்டணைந்தோம்" எனப்புகல்வார். கக

1799 "ஆறணியுஞ் சடைமுடியார் அடியார்க்கு நீர்வைத்த
ஈறில்பெருந் தண்ணீர்ப்பந் தில்நும்பேர் எழுதாதே
வேறொருபேர் முன்னெழுத வேண்டியகா ரணம்என்கொல்
கூறும்"என எதிர்மொழிந்தார் கோதில்மொழிக் கொற்றவனார். கஉ

1800 நின்றமறை யோர்கேளா நிலையழிந்த சிந்தையராய்
"நன்றருளிச் செய்திலீர் நாணில்அமண் பதகருடன்
ஒன்றியமன் னவன்சூட்சி திருத்தொண்டின் உறைப்பாலே
வென்றவர்தந் திருப்பேரோ வேறொருபேர்!" எனவெகுள்வார். கங

1801 "நம்மையுடை யவர்கழற்கீழ் நயந்ததிருத் தொண்டாலே
இம்மையிலும் பிழைப்பதென என்போல்வா ருந்தெளியச்
செம்மைபுரி திருநாவுக் கரசர்திருப் பெயர்எழுத
வெம்மைமொழி யான்கேட்க விளம்பினீர்" எனவிளம்பி. கச

1802 "பொங்குகடற் கல்மிதப்பில் போந்தேறும் அவர்பெருமை
அங்கணர்தம் புவனத்தில் அறியாதார் யாருளரே
மங்கலமாந் திருவேடத் துடனின்றிவ் வகைமொழிந்தீர்
எங்குறைவீர்? நீர்தாம்யார்? இயம்பும்"என இயம்பினர். கடு

1803 திருமறையோர் அதுமொழியத் திருநாவுக் கரசர்அவர்
பெருமையறிந் துரைசெய்வார் "பிறதுறையி1னின்றேற
2 அருளுபெருஞ் சூலையினல் ஆட்கொள்ள அடைந்துய்ந்த
தெருளும்உணர் வில்லாத சிறுமையேன் யான்"என்றார். கசு

1804 அரசறிய உரைசெய்ய அப்பூதி அடிகள்தாங்
கரகமலம் மிசைகுவியக் கண்ணருவி பொழிந்திழிய
உரைகுழறி உடம்பெல்லாம் உரோமபுள கம்பொலியத்
தரையின்மிசை வீழ்ந்தவர்தஞ் சரணகம லம்பூண்டார். கள

UR. 6U1) - 1. நினறேறி. 2. அருள்பெற்ற.

மற்றவரை எதிர்வணங்கி வாகீசர் எடுத்தருள
அற்றவர்கள் அருநிதியம் பெற்றுர்போல் அருமறையோர்
முற்றவுளங் களிகூர முன்னின்று கூத்தாடி
உற்றவிருப் புடன்சூழ ஓடினர் பாடினர். கஅ

மூண்டபெரு மகிழ்ச்சியினல் முன்செய்வ தறியாதே
ஈண்டமணி அகத்தெய்தி இல்லவர்க்கும் மக்களுக்கும்
ஆண்டஅர செழுந்தருளும் ஓகையுரைத் தார்வமுறப்
பூண்டபெருஞ் சுற்றமெலாங் கொடுமீளப் புறப்பட்டார். ககூ

மணியா ருடன்மக்கள் மற்றுமுள்ள சுற்றத்தோர்
அணிவரையுங் கொண்டிறைஞ்சி ஆராத காதலுடன்
முனிவரைஉள் எழுந்தருளு வித்தவர்தாள் முன்விளக்கும்
புனிமலர்நீர் தங்கள்மேல் தெளித்துள்ளும் பூரித்தார். உo

ஆசனத்தில் பூசனைகள் அமர்வித்து விருப்பினுடன்
வாசம்நிறை திருநீற்றுக் காப்பேந்தி மனந்தழைப்பத்
தேசம்உய்ய வந்தவரைத் திருவமுது செய்விக்கும்
நேசம்உற விண்ணப்பஞ் செயஅவரும் அதுநேர்ந்தார். உக

வேறு

செய்தவர் இசைந்த போது திருமணி யாரை நோக்கி
"எய்திய பேறு நம்பால் இருந்தவா றென்னே!" என்று
"மைதிகழ் மிடற்றி னன்றன் அருளினல் வந்த தென்றே
உய்தும்"என் றுவந்து கொண்டு திருவமு தாக்கல் உற்றார். உஉ

தூயநற் கறிக ளான அறுவகைச் சுவையால் ஆக்கி
ஆயஇன் அமுதும் ஆக்கி அமுதுசெய் தருளத் தங்கள்
சேயவர் தம்மில் மூத்த திருநாவுக் கரசை "வாழை
மேயபொற் குருத்துக் கொண்டு வா"என விரைந்து விட்டார். உங

"நல்லதாய் தந்தை எவ நான்இது செயப்பெற் றேன்"என்
றுல்லையில்விரைந்து தோட்டத் துள்புக்குப் பெரிய வாழை
மல்லலங் குருத்தை ஈரும் பொழுதினில் வாள ராஞன்
றல்லல்உற்றமுங்கிச் சோர அங்கையில் தீண்டிற் றன்றே. உச

கையினிற் கவர்ந்து சுற்றிக் கண்ணெரி காந்து கின்ற
பையரா வுதறி வீழ்த்துப் பதைப்புடன் "பாந்தள் பற்றும்
வெய்யவே கத்தால் வீழா முன்னம்வே கத்தால் எய்திக்
கொய்தஇக் குருத்தைச் சென்று கொடுப்பன்"என் றோடி வந்தான்.

பொருந்தியவிடவே கத்திற் போதுவான் வேகம் மூந்த
வருந்தியே அணியும் போழ்து "மாசுணங் கவர்ந்த தியார்க்கும்

பி.பே.1 புனிமலி நீர். 2 அணைந்து. 3 அமுங்கிவீழ். 4 விடவேகத்தால்.

அருந்தவர் அமுது செய்யத் தாழ்க்கயான் அறையேன்'' என்று
திருந்திய கருத்தி னோடுஞ் செழுமனை சென்று புக்கான். உசு

1814 எரிவிடம் முறையே ஏறித் தலைக்கொண்ட ஏழாம் வேகம்
தெரிவுற எயிறும் கண்ணும் மேனியும் கருகித் தீந்து
விரியுரை குழறி ஆவி விடக்கொண்டு மயங்கி வீழ்வான்
பரிகலக் குருத்தைத் தாயார் பால்வைத்துப் படிமேல் வீழ்ந்தான்.

1815 தளர்ந்துவீழ் மகனைக் கண்டு தாயருந் தந்தை யாரும்
உளம்பதைத் துற்று நோக்கி உதிரஞ்சோர் வடிவும் மேனி
விளங்கிய குறியும் கண்டு ''விடத்தினுல் வீந்தான்'' என்று
துளங்குதல் இன்றித் தொண்டர் அமுதுசெய் வதற்குச் சூழ்வார்.

1816 பெறலரும் புதல்வன் தன்னைப் பாயினுட் பெய்து மூடிப்
புறமனை முன்றிற் பாங்கோர் புடையினில் மறைத்து வைத்தே
''அறஇது தெரியா வண்ணம் அமுதுசெய் விப்போம்'' என்று
விறலுடைத் தொண்ட னர்பால் விருப்பொடு விரைந்து வந்தார். உக

1817 கடிதுவந் ''தமுது செய்யக் காலந்தாழ்க் கின்ற'' தென்றே
அடிகிலும் கறியும் எல்லாம் அழகுற அணைய வைத்துப்
படியில்சீர்த் தொண்ட னர்முன் பணிந்தெழுந் ''தமுது செய்தெந்
குடிமுழு துய்யக் கொள்வீர்'' என்றவர் கூறக் கேட்டு. உ0

1818 அருந்தவர் எழுந்து செய்ய அடியிணை விளக்கி வேறோர்
திருந்தும்ஆ சனத்தில் ஏறிப் பரிகலந் திருத்து முன்னர்
இருந்துவெண் ணீறு சாத்தி இயல்புடை இருவ ருக்கும்
பொருந்திய நீறு நல்கிப் புதல்வர்க்கும் அளிக்கும் போழ்தில். உக

1819 ஆதிநான் மறைநூல் வாய்மை அப்பூதி யாரை நோக்கிக்
''காதலர் இவர்க்கு மூத்த சேயையுங் காட்டும் முன்னே
மேதகு பூதி சாத்த'' என்றலும் விளைந்த தன்மை
யாதுமொன் றுரையார் ''இப்போ திங்கவன் உதவான்'' என்றார். உஉ

1820 அவ்வுரை கேட்ட போதே அங்கணர் அருளால் அன்பர்
செவ்விய திருவுள் ளத்தோர் தடுமாற்றஞ் சேர நோக்கி
''இவ்வுரை பொருதென் உள்ளம் என்செய்தான் இதற்கொன் றுண்டால்
மெய்விரித் துரையும்'' என்ன விளம்புவார் விதிர்ப்புற் றஞ்சி. உஉ

1821 ''பெரியவர் அமுது செய்யும் பேறிது பிழைக்க என்னே
வருவ''தென் றுரையா ரேனும் மாதவர் வினவ வாய்மை
தெரிவுற உரைக்க வேண்டுஞ் சீலத்தால் சிந்தை நொந்து
பரிவொடு வணங்கி மைந்தர்க் குற்றது பகர்ந்தார் அன்றே. உச

1822 நாவினுக் கரசர் கேளா ''நன்றுநீர் புரிந்த வண்ணம்
யாவர்இத் தன்மை செய்வார்'' என்றுமுன் எழுந்து சென்றே

பா.வே. 1. இல்லுடை. 2. காதலால். 3 செய்தார்
4. மொழிந்த.

ஆவிதீர் சவத்தை நோக்கி அண்ணலார் அருளும் வண்ணம்
பாவிசைப் பதிகம் பாடிப் பணிவிடம் பாற்று வித்தார். ஈடு

1823 தீவிடம் நீங்க உய்ந்த திருமறை யவர்தஞ் சேயும்
மேவிய உறக்கம் நீங்கி விசைந்தெழு வாணைப் போன்று
சேவுகைத் தவர்ஆட் கொண்ட திருநாவுக் கரசர் செய்ய
பூவடி வணங்கக் கண்டு புனிதநீ ரளித்தார் அன்றே. ஈசு

1824 பிரிவுறும் ஆவி பெற்ற பிள்ளையைக் காண்பார் தொண்டின்
நெறியினைப் போற்றி வாழ்ந்தார் நின்றஅப் பயந்தார் தாங்கள்
"அறிவரும் பெருமை அன்பர் அமுதுசெய் தருளு தற்குச்
சிறிதிடை யூறு செய்தான் இவன்"என்று சிந்தை நொந்தார். ஈள

1825 ஆங்கவர் வாட்டந் தன்னை அறிந்துசொல் அரசர் கூட
ஓங்கிய மனையில் எய்தி அமுதுசெய் தருள வுற்ற
பாங்கினில் இருப்ப முந்நூல் பயில்மணி மார்பர் தாமும்
தாங்கிய மகிழ்ச்சி யோடுந் தகுவன சமைத்துச் சார்வார். ஈஅ

1826 புகழ்ந்தகோ மயத்து நீரால் பூமியைப் பொலிய நீவித்
திகழ்ந்தவான் சுதையும் போக்கிச் சிறப்புடைத் தீபம் ஏற்றி
நிகழ்ந்தஅக் கதலி நீண்ட குருத்தினை விரித்து நீரால்
மகிழ்ந்துடன் விளக்கி ஈர்வாய்இலம்பெற மரபின் வைத்தார். ஈக

1827 திருந்திய வாச நன்னீர் அளித்திடத் திருக்கை நீவும்
பெருந்தவர், மறையோர் தம்மைப் பிள்ளைக ளுடனே நோக்கி
"அரும்புதல் வர்களும் நீரும் அமுதுசெய் வீர்இங்" கென்ன
விரும்பிய உள்ளத் தோடு மேலவர் ஏவல் செய்வார். சO

1828 மைந்தரும் மறையோர் தாமும் மருங்கிருந் தமுது செய்யச்
சிந்தைமிக் கில்ல மாதர் திருவமு தெடுத்து நல்கக்
கொந்தவிழ் கொன்றை வேணிக் கூத்தனார் அடியா ரோடும்
அந்தமிழ் ஆளி யார்அங் கமுதுசெய் தருளி னாரே. சக

1829 மாதவ மறையோர் செல்வ மனையிடை அமுது செய்து
காதல்நண் பளித்துப் பன்னாள் கலந்துடன் இருந்த பின்றை
மேதகு நாவின் மன்னர் விளங்கிய பழன மூதூர்
நாதர்தம் பாதஞ் சேர்ந்து நற்றமிழ்ப் பதிகஞ் செய்வார். சஉ

1830 அப்பூதி அடிக ளார்தம் அடிமையைச் சிறப்பித் தான்ற
மெய்ப்பூதி அணிந்தார் தம்மை விரும்புசொன் மாலை வேய்ந்த
இப்பூதி பெற்ற நல்லோர் எல்லையில் அன்பால் என்றுஞ்
செப்(பு)ஊதி யங்கைக் கொண்டார் திருநாவுக் கரசர் பாதம். சங

1831 இவ்வகை அரசின் நாமம் ஏத்திளப் பொருளும் நாளும்
அவ்வருந் தவர்பொற் சூரே எனவுணர்ந் தடைவார் செல்லுஞ்

பா.பே.1 அமைந்து 2 வலம்பட

செவ்விய நெறிய தாகத் திருத்தில்லை மன்றுள் ஆடும்
கவ்வியங் கண்ணுள் பங்கர் நற்கழல் நண்ணி னாரே. சச

1832 மான்மறிக் கையர் பொற்றூள் வாசிசார் அடைவால் பெற்ற
மேன்மைஅப் பூதி யாராம் வேதியர் பாதம் போற்றிக்
கான்மலர்க் கமல வாவிக் கழனிசூழ் சாத்த மங்கை
நான்மறை நீல நக்கர் திருத்தொழில் நவில லுற்றேன். சஞ

ஆ திருவிருத்தம் க, அஊஉ.

26. திருநீலநக்க நாயனார் புராணம்

1833 பூத்த பங்கயப் பொகுட்டின்மேற் பொருகயல் உகளுங்
காய்த்த செந்நெலின் காடுசூழ் காவிரி நாட்டுச்
சாத்த மங்கைஎன் றுலகெலாம் புகழ்வுறுந் தகைத்தால்
வாய்த்த மங்கல மறையவர் மூதறப்பதி வனப்பு. க

1834 நன்மை சாலும்அப் பதியிடை நறுதுதல் மடவார்
மென்ம லர்த்தடம் படியமற் றவருடன் விரவி
அன்னம் முன்துறை ஆடுவ பாடுவ சாமம்
பன்ம றைக்கிடை யுடன்பயிற் றுவபல பூவை. உ

1835 ஆய்ந்த மெய்ப்பொருள் நீறென வளர்க்கும்அக் காப்பில்
ஏய்ந்த மூன்றுதீ வளர்த்துளார் இருபிறப் பாளர்
நீந்து நல்லறம் நீர்மையின் வளர்க்கும்அத் தீயை
வாய்ந்த கற்புடன் நான்கென வளர்ப்பர்கள் மடவார். ஊ

1836 சீலம் உய்த்தஅத் திருமறை யோர்செழு மூதூர்
ஞாலம் மிக்கநான் மறைப்பொருள் விளக்கிய நலத்தார்
ஆலம் வைத்தகண் டத்தவர் தொண்டராம் அன்பர்
நீல நக்கனார் என்பவர் நிகழ்ந்துளார் ஆனார். ச

1837 வேத உள்ளுறை யாவன விரிபுனல் வேணி
நாதர் தம்மையும் அவரடி யாரையும் நயந்து
பாதம் அர்ச்சனை புரிவதும் பணிவதும் என்றே
காத லால்அவை இரண்டுமே செய்கருத் துடையார். ஞ

1838 மேய்த்த ஆகம விதிவழி வேதகா ரணரை
நித்தல் பூசனை புரிந்தெழு நியமமுஞ் செய்தே
அத்தர் அன்பருக் கமுதுசெய் விப்பது முதலா
எத்தி றத்தன பணிகளும் ஏற்றெதிர் செய்வார். கூ

பா. பே 1. உருங்கும். 2. நிகழ்வுறும். 3. வாழ்பதி.

1839 ஆய செய்கையில் அமருநாள் ஆதிரை நாளில்
மேய பூசனை நியதியை விதியினல் முடித்துத்
தூய தொண்டனர் தொல்லைநீ டயவந்தி அமர்ந்த
நாய னுரையும் அருச்சனை புரிந்திட நயந்தார். எ

1840 உறையு ளாகிய மனைநின் றும்ஒருமைஅன் புற்ற
முறைமை யால்வரு பூசைக்கும் முற்றவேண் டுவன
குறைவ றக்கொண்டு மனைவியார் தம்மொடுங் கூட
இறைவர் கோயில்வந் தெய்தினர் எல்லையில் தவத்தோர். அ

1841 அணைய வந்துபுக் கயவந்தி மேவிய அமுதின்
துணைம லர்க்கழல் தொழுதுபூ சனைசெயத் தொடங்கி
இணைய நின்றங்கு வேண்டுவ மனைவியார் ஏந்த
உணர்வின் மிக்கவர் உயர்ந்தஅர்ச் சனைமுறை உய்த்தார். க

1842 நீடு பூசனை நிரம்பியும் அன்பினல் நிரம்பார்
மாடு சூழ்புடை வலங்கொண்டு வணங்கிமுன் வழுத்தித்
தேடு மாமறைப் பொருளினைத் தெளிவுற நோக்கி
நாடும் அஞ்செழுத் துணர்வுற இருந்துமுன் நவின்றார். கo

1843 தோலைவில் செய்தவத் தொண்டனர் சுருதியே முதலாங்
கலையின் உண்மையாம் எழுத்தஞ்சுங் கணிக்கின்ற காலை
நிலையின் நின்றுமுன் வழுவிட நீண்டபொன் மேருச்
சிலையி னர்திரு மேனிமேல் விழுந்ததோர் சிலம்பி. கக

1844 விழுந்த போதில்அங் கயல்நின்ற மனைவியார் விரைவுற்
றெழுந்த அச்சமோ டிளங்குழ லியில்விழுஞ் சிலம்பி
ஒழிந்து நீங்கிட ஊதிமுன் துமிப்பவர் போலப்
பொழிந்த அன்பினல் ஊதிமேல் துமிந்தனர் போக. கஉ

1845 பதைத்த செய்கையால் மனைவியார் முற்செயப் பந்தஞ்
சிதைக்கு மாதவத் திருமறை யவர்கண்டு தங்கண்
புதைத்து "மற்றிது செய்ததென் பொறியிலாய்" என்னச்
"சுதைச்சி லம்பிமேல் விழவூதித் துமிந்தனன்" என்றார். கங

1846 மனைவி யார்செய்த அன்பினை மனத்தினிற் கொள்ளார்
புனையும் நூல்மணி மார்பர்தம் பூசனைத் திறத்தில்
"இனைய செய்கைஇங் கநுசித மாம்"என எண்ணும்
நினைவி னல்அவர் தம்மைவிட் டகன்றிட நீப்பார். கச

1847 "மின்னெ டுஞ்சடை விமலர்மேல் விழுந்தநூற் சிலம்பி
தன்னை வேறொரு பரிசினல் தவிர்ப்பது தவிர
முன்அ ணைந்துவந் தூதிவாய் நீர்ப்பட முயன்றுய்
உன்னை யான்இனித் துறந்தனன் ஈங்"கென உரைத்தார். கடு

1846 மற்ற வேலையிற் கதிரவன் மலைமிசை மறைந்தான்
உற்ற ஏவலின் மனைவியார் ஒருவழி நீங்க
முற்ற வேண்டுவ பழுதுதீர் பூசனை முடித்துக்
கற்றை வேணியார் தொண்டருங் கடிமனை புகுந்தார். ஙசு

1847 அஞ்சும் உள்ளமோ டவர்மருங் கணைவுற மாட்டார்
நஞ்சம் உண்டவர் கோயிலில் நங்கையார் இருந்தார்
செஞ்சொல் நான்மறைத் திருநீல நக்கர்தாம் இரவு
பஞ்சின் மெல்லணைப் பள்ளியிற் பள்ளிகொள் கின்றார். ஙஎ

1848 பள்ளி கொள்பொழு தயவந்திப் பரமர்தாங் கனவில்
வெள்ள நீர்ச்சடை யொடுநின்று மேனியைக் காட்டி
"உள்ளம் வைத்தெமை ஊதிமுன் துமிந்தபால் ஒழியக்
கொள்ளும் இப்புறஞ் சிலம்பியின் கொப்புள்" என் றருள. ஙஅ

1849 கண்ட அப்பெருங் கனவினை நனவெனக் கருதிக்
கொண்ட அச்சமோ டஞ்சலி குவித்துடன் விழித்துத்
தொண்ட னர்தொழு தாடினர் பாடினர் துதித்தார்
அண்ட நாயகர் அருணையைப் போற்றிநின் றழுதார். ஙகூ

1850 போது போயிருள் புலர்ந்திடக் கோயிலுட் புகுந்தே
ஆதி நாயகர் அயவந்தி அமர்ந்தஅங் கணர்தம்
பாத மூலங்கள் பணிந்துவீழ்ந் தெழுந்துமுன் பரவி
மாத ராரையுங் கொண்டுதம் மனையில்மீண் டணைந்தார். உ0

1851 பின்பு முன்னையிற் பெருகிய மகிழ்ச்சிவந் தெய்த
இன்பு றுந்திறத் தெல்லையில் பூசனை இயற்றி
அன்பு மேம்படும் அடியவர் மிகஅணை வார்க்கு
முன்பு போலவர் வேண்டுவ விருப்புடன் முடிப்பார். உக

1852 அன்ன தன்மையில் அமர்ந்தினி தொழுகும்அந் நாளில்
மன்னு பூந்தராய் வருமறைப் பிள்ளையார் பெருமை
பன்னி வையகம் போற்றிட மற்றவர் பாதஞ்
சென்னி வைத்துடன் சேர்வுறும் விருப்பினிற் சிறந்தார். உஉ

1853 பண்பு மேம்படு நிலைமையார் பயிலும்அப் பருவ
மண்பெ ருந்தவப் பயன்பெற மருவுநற் பதிகள்
விண்பி றங்குநீர் வேணியார் தமைத்தொழ அணைவார்
சண்பை மன்னருஞ் சாத்தமங் கையில்வந்து சார்ந்தார். உங

1854 நீடு சீர்த்திரு நீலகண் டப்பெரும் பாணர்
தோடு லாங்குழல் விறலியார் உடன்வரத் தொண்டர்
கூடும் அப்பெருங் குழாத்தொடும் புகலியர் பெருமான்
மாடு வந்தமை கேட்டுளம் மகிழ்நீல நக்கர். உச

கரு பா.பே.I. ஞாபகம். 2 கருணையே.

1857 கேட்ட அப்பொழு தேபெரு மகிழ்ச்சியிற் கிளர்ந்து
தோட்ட லங்கலுங் கொடிகளும் புனைந்துதோ ரணங்கள்
நாட்டி நீள்நடைக் காவண மிட்டுநற் சுற்றத்
தீட்ட முங்கொடு தாமும்முன் எதிர்கொள எழுந்தார். உடு

1858 சென்று பிள்ளையார் எழுந்தரு ளுந்திருக் கூட்டம்
ஒன்றி அங்கெதிர் கொண்டுதங் களிப்பினுல் ஒருவா
றன்றி ஆடியும் பாடியுந் தொழுதெழுந் தணைவார்
பொன்த யங்குநீள் மனையிடை யுடன்கொடு புகுந்தார். உசு

1859 பிள்ளை யாரெழுந் தருளிய பெருமைக்குத் தக்க
வெள்ள மாகிய அடியவர் கூட்டமும் விரும்ப
உள்ளம் ஆதர வோங்கிட ஓங்குசீர்க் காழி
வள்ள லாரைத்தம் மனையிடை அமுதுசெய் வித்தார். உள

1860 அமுது செய்தபின் பகலவன் மேல்கடல் அணையக்
குமுத வாவியிற் குளிர்மதிக் கதிரணை போதில்
இமய மங்கைதன் திருமுலை அமுதுண்டார் இரவும்
தமது சீர்மனைத் தங்கிட வேண்டிவ சமைத்தார். உஅ

1861 சீல மெய்த்திருத் தொண்டரோ டமுதுசெய் தருளி
ஞாலம் உய்க்கிட நாயகி யுடன்நம்பர் நண்ணும்
காலம் முற்பெற அழுதவர் அழைத்திடக் கடிது
நீல நக்கனுர் வந்தடி பணிந்துமுன் நின்றார். உக

1862 நின்ற அன்பரை "நீலகண் டப்பெரும் பாணர்க்
கின்று தங்கஞர் இடங்கொடுத் தருளுவீர்" என்ன
நன்றும் இன்புற்று நடுமனை வேதியின் பாங்கர்ச்
சென்று மற்றவர்க் கிடங்கொடுத் தனர்திரு மறையோர். உ0

1863 ஆங்கு வேதியில் அறுதசெந் தீவலஞ் சுழிவுற்
றேங்கி முன்னையில் ஒருபடித் தன்றியே ஒளிரத்
தாங்கு தூலவர் மகிழ்வுறச் சகோடயாழ்த் தலைவர்
பாங்கு பாணியா ருடன்அரு ளாற்பள்ளி கொண்டார். உக

1864 கங்கு லிற்பள்ளி கொண்டபின் கவுணியர்க் கிறைவர்
அங்கு நின்றெழுந் தருளுவார் அயவந்தி அமர்ந்த
திங்கள் சூடியை நீலநக் கரைச்சிறப் பித்தே
பொங்கு செந்தமிழ்த் திருப்பதி கத்தொடை புனைந்தார். உஉ

1865 பதிக நாண்மலர் கொண்டுதம் பிரான்கழல் பரவி
அதிக நண்பினை நீலநக் கருக்களித் தருளி
எதிர்கொ ளும்பதி களில்எழுந் தருளினர் என்றும்
புதிய செந்தமிழ்ப் பழமறை மொழிந்தபூ சுரனார். உஉ

பா.வே.1. தயங்கும் 2. கருங்கடல் 3. உயர்ந்த
4 தலைவர்.

1866 பிள்ளை யார்எழுந் தருளஅத் தொண்டர்தாம் பின்பு
தள்ளரும் அன்புடன் கேண்மையும்தவிர்ப்பில எனினும்
வள்ள லார்திரு வருளினை வலியமாட் டாமை
உள்ளம் அங்குடன் போக்கிமீண் டொருவகை இருந்தார். ஈச

1867 மேவு நாளில்அவ் வேதியர் முன்புபோல் விரும்பும்
தாவில் பூசனை முதற்செய்கை தலைத்தலை சிறப்பச்
சேவின் மேலவர் மைந்தராந் திருமறைச் சிறுவர்
பூவ டித்தலம் பொருந்தியஉணர்வொடும் பயின்றார். ஈடு

1868 சண்பை யாளியார் தாமெழுந் தருளும்எப் பதியும்
நண்பு மேம்பட நாளிடைச் செலவிட்டு நண்ணி
வண்பெ ரும்புக ழவருடன் பயின்றுவந் தணைந்தார்
திண்பெ ருந்தொண்ட ராகிய திருநீல நக்கர். ஈசு

1869 பெருகு காதலிற் பின்னெடு நாள்முறை பிறங்க
வருபெ ருந்தவ மறையவர் வாழிசீர் காழி
ஒருவர் தந்திருக் கல்லியா ணத்தினி லுடனே
திரும ணத்திறஞ் சேவித்து நம்பர்தாள் சேர்ந்தார். ஈஎ

1870 தருதொ ழில்திரு மறையவர் சாத்தமங் கையினில்
வருமு தற்பெருந் திருநீல நக்கர்தாள் வணங்கி
இருபி றப்புடை அந்தணர் ஏறுயர்த் தவர்பால்
ஒருமை உய்த்துணர் நமிநந்தி யார்தொழில் உரைப்பாம். ஈஅ

ஆ திருவிருத்தம் க,அஎ0.

27. நமிநந்தியடிகள் புராணம்

1871 வையம் புரக்குந் தனிச்செங்கோல் வளவர் பொன்னித் திருநாட்டுச்
செய்ய கமலத் தடம்பணையும் செழுநீர்த் தடமும் புடையுடைத்தாய்ப்
பொய்தீர் வாய்மை அருமறைநூல் புரிந்த சீலப் புகழதனால்
எய்தும் பெருமை எண்டிசையும் ஏமூர் ஏமப் பேறூரால். க

1872 மாலை பயிலும் தோரணங்கள் மருங்கு பயிலும் மணிமறுகு
வேலை பயிலும் புனல்பருகு மேகம் பயிலும் மாடங்கள்
சோலை பயிலும் குளிர்ந்தஇருள் சுரும்பு பயிலும் அரும்பூகம்
காலை பயிலும் வேதஒலி கழுநீர் பயிலும் செழுநீர்ச்செய். உ

1873 பணையில் விளைந்த வெண்ணெல்லின் பரப்பின் மீது படச்செய்ய
துணர்மென் கமலம் இடைஇடையே சுடர்விட் டெழுந்து தோன்றுவன

பா.பே.1. திப்பில. 2. அரிவைரும்பயின்றார்: அரிவைரும் புணர்ந்தார்.

புணர்வெண் புரிநூ லவர்வேள்விக் களத்தில் புனைந்த வேதிகைமேல்
மணல்வெண் பரப்பின் இடைஇடையே வளர்த்த செந்தீ மானுமால்.

1874 பெருமை விளங்கும் அப்பதியில் பேணும் நீற்றுச் சைவநெறி
ஒருமை நெறிவாழ் அந்தணர்தம் ஒங்கு குலத்தி னுள்வந்தார்
இருமை உலகும் ஈசர்கழல் இறைஞ்சி ஏத்தப் பெற்றதவத்
தருமை புரிவார் நமிநந்தி அடிகள் என்பா ராயினர். ச

1875 வாய்மை மறைநூல் சீலத்தால் வளர்க்குஞ் செந்தீ எனத்தகுவார்
தூய்மைத் திருநீற் றடைவேமெய்ப் பொருளென் றறியுந் துணிவினர்
சாம கண்டர் செய்யகழல் வழிப்பட் டொழுகுந் தலைமைநிலை
யாம இரவும் பகலும்உணர் வொழியா இன்பம் எய்தினர். ஞ

1876 அவ்வூர் நின்றுந் திருவாரூ ரதனை அடைவார் "அடியார்மேல்
வெவ்வூ றகற்றும் பெருமான்றன் விரைசூழ் மலர்த்தாள் பணிவுறுதல்
எவ்வூ தியமும் எனக்கொள்ளும் எண்ணம் உடையார் பலநாளும்
தெவ்வூர் எரித்த வரைச்சிலையார் திருப்பா தங்கள் வணங்கினர். ஈ

1877 செம்பொற் புற்றின் மாணிக்கச் செழுஞ்சோ தியைநேர் தொழுஞ்சீலம்
தம்பற் றுக நினைந்தணைந்து தாழ்ந்து பணிந்து வாழ்ந்துபோந்
தம்பொற் புரிசைத் திருமுன்றில் அணைவார் பாங்கோர் அரனெறியின்
நம்பர்க் கிடமாங் கோயிலினுட் புக்கு வணங்க நண்ணினர். எ

1878 நண்ணி இறைஞ்சி அன்பினுல் நயப்புற் றெழுந்த காதலுடன்
அண்ண லாரைப் பணிந்தெழுவார் அடுத்த நிலைமைக் குறிப்பினுல்
பண்ணுந் தொண்டின் பாங்குபல பயின்று பரவி விரவுவார்
எண்ணில் தீபம் ஏற்றுவதற் கெடுத்த கருத்தின் இசைந்தெழுந்தார்.

1879 எழுந்த பொழுது பகற்பொழுதங் கிறங்கு மாலை எய்துதலும்
செழுந்தண் பதியி னிடையப்பால் செல்லிற் செல்லும் பொழுதென்ன
ஒழிந்தங் கணைந்தோர் மனையில்விளக் குறுநெய் வேண்டி உள்புகலும்
அழிந்த நிலைமை அமணர்மனை ஆயிற் றங்கண் அவருரைப்பார். கூ

1880 "கையில் விளக்கு கனலுடையார் தமக்கு விளக்கு மிகைகாணும்
நெய்யிங் கில்லை விளக்கெரிப்பீ ராகில் நீரை முகந்தெரித்தல்
செய்யும்" என்று திருத்தொண்டர்க் குரைத்தார் தெளியாதொருபொருளே
பொய்யும் மெய்யும் ஆம்என்னும் பொருள்மேற் கொள்ளும் புரைதெரியார்.

1881 அருகர் மதியா துரைத்தவுரை ஆற்ற ராகி அப்பொழுதே
பெருக மனத்தில் வருத்தமுடன் பெயர்ந்து போந்து பிறையணிந்த
முருகு விரியும் மலர்க்கொன்றை முடியார் கோயில் முன்எய்தி
உருகும் அன்பர் பணிந்துவிழ ஒருவாக் கெழுந்த(து) உயர்விசும்பில்.

1882 "வந்த கவலை மாற்றும்இனி மாறு விளக்குப் பணிமாற
இந்த மருங்கில் குளத்துநீர் முகந்து கொடுவந் தேற்றும்" என

பா. வே. 1. பணி அறுவ. 2. இறைஞ்சுவார். 3 தொழுதெழுந்தே

அந்தி மதியம் அணிந்தபிரான் அருளால் எழுந்த மொழிகேளாச்
சிந்தை மகிழ்ந்து நமிநந்தி அடிகள் செய்வ தறிந்திலரால். கூ

1883 சென்னி மிசைநீர் தரித்தபிரான் அருளே சிந்தை செய்தெழுவார்
நன்னீர்ப் பொய்கை நடுப்புக்கு நாதர் நாமம் நவின்றேத்தி
அந்நீர் முகந்து கொண்டேறி அப்பர் கோயில் அடைந்தகலுள்
மும்நீர் உலகம் அதிசயிப்ப முறைக்குந் திரிமேல் நீர்வார்த்தார். கங

1884 சோதி விளக்கொன் றேற்றுதலுஞ் சுடர்விட் டெழுந்த ததுநோக்கி
ஆதி முதல்வர் அரனெறியார் கோயில் அடைய விளக்கேற்றி
ஏதம் நிணைந்த அருகந்தர் எதிரே முதிருங் களிப்பினுடன்
நாதர் அருளால் திருவிளக்கு நீரால் எரித்தார் நாடறிய. கச

1885 நிறையும் பரிசு திருவிளக்கு விடியு மளவும் நின்றெரியக்
குறையுந் தகளி களுக்கெல்லாங் கொள்ள வேண்டும் நீர்வார்த்து
மறையின் பொருளை அருச்சிக்கும் மனையின் நியதி வழுவாமல்
உறையும் பதியின் அவ்விரவே அணைவார் பணிவுற் றிருப்பட்டார். கஅ

1886 இரவு சென்று தம்பதியில் எய்தி மனைப்புக் கென்றும்போல்
விரவி நியமத் தொழில்முறையே விமலர் தம்மை அருச்சித்துப்
பரவி அமுது செய்தருளிப் பள்ளி கொண்டு புலர்காலை
அரவம் அணிவார் பூசைஅமைத் தாரூர் நகரின் மீண்டணைந்தார். கசு

1887 வந்து வணங்கி அரனெறியார் மகிழுங் கோயில் வலங்கொண்டு
சிந்தை மகிழப் பணிந்தெழுந்து புறம்பும் உள்ளுந் திருப்பணிகள்
முந்த முயன்று பகலெல்லாம் முறையே செய்து மறையவனூர்
அந்தி அமையத்(து) அரியவிளக் கெங்கும் ஏற்றி அடிபணிவார். கஎ

1888 பண்டு போலப் பலநாளும் பயிலும் பணிசெய் தவமொழுகத்
தண்டி அடிக ளால்அமணர் கலக்கம் விளைந்து சார்வில்அமண்
குண்டர் அழிய ஏழுலகும் குலவும் பெருமை நிலவியதால்
அண்டர் பெருமான் தொண்டர்கழல் அமரர் பணியுமணியாரூர். கஅ

1889 நாத மறைதேர் நமிநந்தி அடிக ளார்நற் றிருண்டாகப்
பூத நாதர் புற்றிடங்கொள் புனிதர்க் கமுது படிமுதலாம்
நீதி வளவன் தான்வேண்டும் நிபந்தம் பலவும் அரியணையின்
மீது திகழ இருந்தமைத்தான் வேதா கமநூல் விதிவிளங்க. ககூ

1890 வேன்றி விடையார் மதிச்சடையார் வீதி விடங்கப் பெருமாள்தாம்
என்றுந் திருவா ரூர்ஆளும் இயல்பின் முறைமைத் திருவிளையாட்
டொன்றுஞ் செயலும் பங்குனியுத் தரமாந் திருநாள் உயர்சிறப்பு
நின்று விண்ணப் பஞ்செய்த படிசெய் தருளும்நிலைபெற்றார். உ0

1891 இன்ன பரிசு திருப்பணிகள் பலவுஞ் செய்தே ஏழுலகும்
மன்னும் பெருமைத் திருவாரூர் மன்னர் அடியார் வழிநிற்பார்

ப1. ஏ. 1. அருச்சித்து. 2. அந்தியமை 3. விளைக்க. 4 நேர்பெற்றார்.

அன்ன வண்ணந் திருவிளையாட் டாடி அருள எந்நாளும்
நன்மை பெருக நமிநந்தி அடிகள் தொழுதார் நாம்உய்ய. உக

1892 தேவர் பெருமான் எழுச்சிதிரு மணலிக் கொருநாள் எழுந்தருள
யாவ ரேன்ற துடன்சேவித் தெல்லாக் குலத்தி லுள்ளோரும்
மேவ அன்பர் தாமுமுடன் சேவித் தணைந்து விண்ணவர்தங்
காவ லாளர் ஓலக்கம் அங்கே கண்டு களிப்புற்றார். உஉ

1893 பொழுது வைகச் சேவித்துப் புனிதர் மீண்டுங் கோயில்புகத்
தொழுது தம்மூர் மருங்கணைந்து தூய மணியுட் புகுதாதே
இழுதும் இருள்சேர் இரவுபுறங் கடையில் துயில இல்லத்து
முழுதுந் தருமம் புரிமனையார் வந்துட் புகுத மொழிகின்றார். உங

1894 "திங்கள் முடியார் பூசனைகள் முடித்துச் செய்யுங் கடன்முறையால்
அங்கி தனிவேட் டமுதுசெய்து பள்ளி கொள்வீர்" எனஅவர்க்குத்
" தங்கள் பெருமான் திருமணலிக் கெழுச்சி சேவித் துடன்நண்ண
எங்கும் எல்லா ரும்போத இழிவு தொடக்கிற் றெனே"என்று. உச

1895 "ஆத லாலே குளித்தடுத்த தூய்மை செய்தே அகம்புகுந்து
வேத நாதர் பூசனையைத் தொடங்க வேண்டும் அதற்குநீ
சீத நன்னீர் முதலான கொண்டிங் கணைவாய்" எனச்செப்பக்
காதல் மனையார் தாமும்அவை கொணரு மதற்குக் கடிதணைந்தார்.

1896 ஆய பொழுது தம்பெருமான் அருளா லேயோ மேனியினில்
வியும் அசைவின் அயர்வாலோ அறியோம் இறையும் தாழாதே
மேய உறக்கம் வந்தணைய விண்ணோர் பெருமான் கழல்நினைந்து
தூய அன்பர் துயில்கொண்டார் துயிலும் பொழுது கனவின்கண்.உசு

1897 மேன்மை விளங்குந் திருவாரூர் வீதி விடங்கப் பெருமாள்தாம்
மான அன்பர் பூசனைக்கு வருவார் போல வந்தருளி
"ஞான மறையோய்! ஆரூரில் பிறந்தார் எல்லாம் நங்கணங்கள்
ஆன பரிசு காண்பாய்"என் றருளிச் செய்தங் கெதிரகன்றார். உஎ

1898 ஆதி தேவர் எழுந்தருள உணர்ந்தார் "இரவர்ச் சனைசெய்யா(து)
ஏதம் நினைந்தேன்" எனஅஞ்சி எழுந்த படியே வழிபட்டு
மாத ரார்க்கும் புகுந்தபடி மொழிந்து விடியல் விரைவோடு
நாத னர்தந் திருவாரூர் புகுத எதிர்அந் நகர்காண்பார். உஅ

1899 தெய்வப் பெருமாள் திருவாரூர்ப் பிறந்து வாழ்வார் எல்லாரும்
மைவைத் தணைய மணிகண்டர் வடிவே யாகிப் பெருகொளியால்
மொய்வைத் தமர்ந்த மேனியராம் பரிசு கண்டு முடிகுவித்த
கைவைத் தஞ்சி அவனிமிசை விழுந்து பணிந்து களிசிறந்தார். உக

1900 படிவம் மாற்றிப் பழம்படியே நிகழ்வுங் கண்டு பரமர்பால்
"அடியேன் பிழையைப் பொறுத்தருள வேண்டும்"என்று பணிந்தருளால்

பா.பே.I.கண்டரவர்.

குடியும் திருவா ரூரகத்துப் புகுந்து வாழ்வார் குவலயத்து
நெடிது பெருகுந் திருத்தொண்டு நிகழச் செய்து நிலவுவார். நஂ

(901) நீறு புனைவார் அடியார்க்கு நெடுநாள் நியதி யாகவே
வேறு வேறு வேண்டுவன எல்லாஞ் செய்து மேவுதலால்
ஏறு சிறப்பின் மணிப்புற்றில் இருந்தார் தொண்டர்க் காணியெனும்
பேறு திருநா வுக்கரசர் விளம்பப் பெற்ற பெருமையினர். நக

(902) இன்ன வகையால் திருப்பணிகள் எல்லா உலகுந் தொழச்செய்து
நன்மை பெருகும் நமிநந்தி அடிகள் நயமார் திருவீதிச்
சென்னி மதியும் திருநுதியும் அலைய வருவார் திருவாரூர்
மன்னர் பாத நீழல்மிகும் வளர்பொற் சோதி மன்னினர். நஉ

(903) நாட்டார் அறிய முன்னுளில் நன்னுள் உலந்த ஐம்படையின்
பூட்டார் மார்பிற் சிறியமறைப் புதல்வன் தன்னைப் புக்கொளியூர்த்
தாட்டா மரையின் மடுவின்கண் தனிமா முதலை வாய்நின்று
மீட்டார் கழல்கள் நினைவாரை மீளா வழியின் மீட்பனவே. நஙக

ஆக திருவிருத்தம் கஎகஂக

பா. ஏ. ஏ. வேறு சிறப்பு.

இரண்டாங் காண்டம்

சு. வம்பரூவரிவண்டுச் சருக்கம்

28. திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் புராணம்

1904 வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபோலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம். க

1905 சென்னிவளர் மதியணிந்த சிலம்பணிசே வடியார்தம்
மன்னியசை வத்துறையின் வழிவந்த குடிவளவர்
பொன்னிவளந் தருநாடு பொலிவெய்த நிலவியதால்
கன்னிமதில் மருங்குமுகில் நெருங்குகழு மலமூதூர். உ

1906 அப்பதிதான் அந்தணர்தங் கிடைகள்அரு மறைமுறையே
செப்பும்ஒலி வளர்பூகச் செழுஞ்சோலை புறஞ்சூழ
ஒப்பில்நகர் ஓங்குதலால் உகக்கடைநாள் அன்றியே
எப்பொழுதுங் கடல்மேலே மிதப்பதென இசைந்துளதால். ங

1907 அரிஅயனே முதல்அமரர் அடங்களமும் வெள்ளங்கள்
விரிசுடர்மா மணிப்பதணம் மீதெறிந்த திரைவரைகள்
புரிசைமுதல் புறஞ்சூழ்வ பொங்கோதம் கடைகாளில்
வரிஅரவ மந்தாஞ்சூழ் வடம்போல வயங்குமால். ச

1908 வளம்பயிலும் புறம்பணைப்பால் வாசப்பா சடைமிடைந்த
தளம்பொலியும் புனற்செந்தா மரைச்செவ்வித் தடமலரால்
களம்பயில்நீர்க் கடல்மலர்வ தொருபரிதி எனக்கருதி
இளம்பரிதி பலமலர்ந்தாற் போல்பஉள இலஞ்சிபல. ஞ

1909 உளங்கொள்மறை வேதியர்தம் ஓமதூ மத்திரவும்
கிளர்ந்ததிரு நீற்றொளியிற் கெழுமியநண் பகலும்மலர்ந்
தளந்தறியாப் பல்லூழி ஆற்றுதலால் அகலிடத்து
விளங்கியஅம் மூதூர்க்கு வேறிரவும் பகலும்மிகை. சு

1910 பரந்தவிளை வயற்செய்ய பங்கயமாம் பொங்கெரியில்
வரம்பில்வளர் தேமாவின் கனிகிழிந்த மதுநறுநெய்
நிரந்தரம்நீள் இலக்கடையால் ஒழுகுதலால் நெடிதவ்வூர்
மரங்களுமஆ குதிவேட்குந்1தகையவென2மணந்துளதால். எ

பா. பே. 1 தினைகளையன. 2 வயங்கியதால்: மலர்ந்துளதால்.

1911 வேலைஅழற் கதிர்படிந்த வியன்கங்குல் வெண்மதியம்
சோலைதொறும் தழைந்துபுறப் படும்பொழுது தாதைந்தமலர்ப்
பாலணைந்து மதுத்தேய்ந்து தாதளைந்து பயின்றந்தி
மாலைஎழுஞ்[1]செவ்வொளிய மதியம்போல் வதியுமால். அ

1912 காமர்திருப் பதியதன்கண் வேதியர்போற் கடிகமழுந்
தாமரையும் புல்லிதழுந் தயங்கியநூ லுந்தாங்கித்
தூமருதுண் துகள்அணிந்து தூளிவருகண் ணீர்ததும்பித்
தேமருமென் சுரும்பிசையாற் செழுஞ்சாமம் பாடுமால். கூ

1913 பூவைவார்பொற் குழைஅசையப் பூந்தாது பின்போக்கி
வினைவாய்ந்த தழல்வேதி மெழுக்குறவெண் சுதைஒழுக்கும்
கனைவான முகில்கூந்தற் கதிர்செய்வட மீன்கற்பின்
மனைவாழ்க்கைக் குலமகளிர் வளம்பொலிவ மாடங்கள். கo

1914 வேள்விபுரி சடங்கதனை விளையாட்டுப் பண்ணைதொறும்
பூழியுற வகுத்தமைத்துப் பொன்பூவைகிண் கிணிஒலிப்ப
ஆழிமணிச் சிறுதேரூர்ந் தவ்விரதப் பொடியாடும்
வாழிவளர் மறைச்சிறுவர் நெருங்கியுள மணிமறுகு. கக

1915 விடுசுடர்நீள் மணிமறுகின் வெண்சுதைமா ளிகைமேகம்
தொடுகுடுமி நாசிதொறுந் தொடுத்தகொடி சூழ்ங்கங்குல்
உடுளனுகாண் மலர்அலர உறுபகலிற் பலநிறத்தால்
நெடுவிசும்பு தளிர்ப்பதென நெருங்கியுள மருங்கெல்லாம். கஉ

1916 மடைஎங்கும் மணிக்குப்பை வயலெங்கும் கயல்வெள்ளம்
புடைஎங்கும் மலர்ப்பிறங்கல் புறமெங்கும் மகப்பொலிவு
கிடைஎங்கும்[2]கலேச்சூழல் கிளர்வெங்கும் முரல்அளிகள்
இடைஎங்கும் முனிவர்குழாம் எயிலெங்கும் பயில்எழிலி. கஙு

1917 பிரமபுரம் வேணுபுரம்[3] புகலிபெரு வேங்குருநீர்ப்
பொருவில்திருத் தோணிபுரம் பூந்தராய் சிரபுரமுன்
வருபுறவஞ் சண்பைநகர் வளர்காழி கோச்சைவயம்
பரவுதிருக் கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால். கச

1918 அப்பதியின் அந்தணர்தங் குடிமுதல்வர் ஆகில்மறை
கைப்படுத்த சீலத்துக் கவுணியர்கோத் திரம்விளங்கச்
செப்புநெறி வழிவந்தார் சிவபாத விருதயரென்
றிப்புவிவா ழத்தவஞ்செய் இயல்பினுர் உளராானுர். கடு

1919 மற்றவர்தந் திருமனையார் வாய்ந்தமறை மரபின்வரு
பெற்றியினர் எவ்வுலகும் பெறற்கரிய பெருமையினர்
பொற்புடைய பகவதியார் எனப்போற்றும் பெயருடையார்
கற்புமேம்[4]படுசிறப்பால் கணவனுர் கருத்தமைந்தார். கஉ

பா. பே.1. தேயொளிய. 2. கலேஞ்சூழல்கள். 3. பெரும்புகலி.
4 படுசிறப்பில்.

1920 மாபிரண்டுஞ் சைவநெறி வழிவந்த கேண்மையினர்
அரவணிந்த சடைமுடியார் அடியலால் அறியாது
பரவுதிரு நீற்றன்பு பாலிக்குந் தன்மையராய்
விரவுமறை மனைவாழ்க்கை வியப்பெய்த மேவுநாள். களை

1924 மேதினிமேற் சமண்கையர் சாக்கியர்தம் பொய்ம்மிகுத்தே
ஆதிஅரு மறைவழக்கம் அருகிஅரன் அடியார்பால்
பூதிசா தனவிளக்கம் போற்றல்பெரு தொழியக்கண்
டேதமில்சீர்ச் சிவபாத விருதயர்தாம் இடருழந்தார். கஅ

1922 மனையறத்தில் இன்பமுறு மகப்பெறுவான்விரும்புவார்
அனையநிலை தலைநின்றே ஆடியசே வடிக்கமலம்
நினைவுறமுன் பரசமயம் நிராதரித்து நீறுக்கும்
புனைமணிப்பூண் காதலனைப் பேறுப்போற்றுந் தவம்புரிந்தார். கக

1923 பெருத்தெழும்அன் பாற்பெரிய நாச்சியா ருடன்புகலித்
திருத்தோணி வீற்றிருந்தார் சேவடிக்கீழ் வழிபட்டுக்
கருத்துமுடிந் திடப்பரவும் காதலியார் மணிவயிற்றில்
உருத்தோரிய வரும்பெரும்பே றுலகுய்ய உளதாக. உ0

1924 ஆளுடையா ளுடன்தோணி அமர்ந்தபிரான் அருள்போற்றி
மூளுமகிழ்ச் சியில்தங்கள் முதல்மறைதூல் முறைச்சடங்கு
நாளுடைய ஈரைந்து திங்களினும் நலஞ்சிறப்பக்
கேளிருடன் செயல்புரிந்து பேரின்பங் கிளர்வுறுநாள். உக

1925 அருக்கன்முதற் கோள்அனைத்தும் அழகியஉச் சங்களிலே
பெருக்கவலி யுடன்நிற்கப் பேணியநல் லோரைஎழத்
திருக்கிளரும் ஆதிரைநாள் திசைவிளங்கப் பரசமயத்
தருக்கொழியச் சைவமுதல் வைதிகமும் தழைத்தோங்க. உஉ

1926 தொண்டர்மனம் களிசிறப்பத் தூயதிரு நீற்றுநெறி
எண்டிசையும் தனிநடப்ப ஏழுலகும் குளிர்தூங்க
அண்டர்குலம் அதிசயிப்ப அந்தணர்ஆ குதிபெருக
வண்தமிழ்செய் தவம்நிரம்ப மாதவத்தோர் செயல்வாய்ப்ப. உங

1927 திசையனைத்தின் பெருமைஎலாந் தென்திசையே வென்றேற
மிசையுலகும் பிறவுலகும் மேதினியே தனிவேல்ல
அசைவில்செழுந் தமிழ்வழக்கே அயல்வழக்கின் துறைவெல்ல
இசைமுழுதும் மெய்யறிவும் இடங்கொள்ளும் நிலைபெருக. உச

1928 தாளுடைய படைப்பென்னுந் தொழிற்றன்மை தலைமைபெற
நாளுடைய நிகழ்காலம் எதிர்கால நவைநீங்க
வாளுடைய மணிவீதி வளர்காழிப் பதிவாழ
ஆளுடைய திருத்தோணி அமர்ந்தபிரான் அருள்பெருக. உஞ

ப.ப.பே.1 கேண்மையராய். 2. பெற்றெடுக்கும் 3 நிலவயத்தில்.
4. பெரிதினியம். 5 அயல்வழங்கின்.

1925 அவம்பெருக்கும் புல்லறிவின் அமண்முதலாம் பரசமயப்
பவம்பெருக்கும் புரைநெறிகள் பாழ்படநல் லூழிதொறும்
தவம்பெருக்குஞ் சண்பையிலே தாவில்சரா சரங்களெலாம்
சிவம்பெருக்கும் பிள்ளையார் திருஅவதா ரஞ்செய்தார். உசூ

வேறு

1930 அப்பொழுது பொற்புறு திருக்கழு மலத்தோர்
எப்பெயரி னேரும்அயல் எய்தும்இடை யின்றி
மெய்ப்படு மயிர்ப்புளகம் மேவிஅறி யாமே
ஒப்பில்களி கூர்வதொர் உவப்புற உரைப்பார். உஎ

1931 "சிவனருள் எனப்பெருகு சித்தமகிழ் தன்மை
இவணிது நமக்குவர எய்தியதென்" என்பார்
"கவுணியர் குலத்தில்ஒரு காதலன் உதித்தான்
அவன்வரு நிமித்தம்இது" என்றதி சயித்தார். உஅ

1932 பூமுகை அவிழ்ந்துமணம் மேவுபொழில் எங்கும்
தேமருவு தாதெடு துதைந்ததிசை யெல்லாம்
தூமருவு சோதிவிரி யத்துகள் அடக்கி
மாமலய மாருதமும் வந்தசையும் அன்றே. உகூ

1933 மேலிமை யோர்களும் விருப்பொடு காப்பில்
சோலைமலர் போலமலர் மாமழை சொரிந்தே
ஞாலமிசை வந்துவளர் காழிநகர் மேவும்
சீலமறை யோர்களுடன் ஓமவிதி செய்தார். உ0

1934 பூதகண நாதர்புவி வாழஅருள் செய்த
நாதன்அரு ளின்பெருமை கண்டுநலம் உய்ப்பார்
ஓதுமறை யோர்பிறி துரைத்திடினும் ஓவா
வேதமொழி யால்ஒலி விளங்கிஎழும் எங்கும். உக

1935 பயன்தருவ பஃறருவும் வல்லிகளும் மல்கித்
தயங்குபுன லுந்திதெளிவ தண்மையுடன் நண்ணும்
வயங்கொளி விசும்புமலி னங்கழியும் மாரு
நயம்புரிவ புள்ளொலிகள் நல்லதிசை எல்லாம். உஉ

1936 அங்கண்விழ விற்பெருகு சண்பைஅகல் மூதூர்ச்
சங்கபட கங்கருவி தாரைமுத லான
எங்கணும் இயற்றுபவ ரின்றியும் இயம்பு
மங்கல முழக்கொலி மலிந்தமறு கெல்லாம். உஉ

1937 இரும்புவனம் இத்தகைமை எய்தஅவர் தம்மைத்
தருங்குல மறைத்தலிவர் தம்பவன முன்றில்

பெருங்களி வியப்பொடு பிரான்அருளி ஞலே
அருந்திரு மகப்பெற அணைந்தஅணி செய்வார். நஎ

1938 காதல்புரி சிந்தைமகி ழுக்களி சிறப்பார்
மீதணியு நெய்யணி விழாவொடு திளைப்பார்
சூதநிகழ் மங்கல வினைத்துழனி பொங்கச்
சாதக முறைப்பல சடங்குவினை செய்வார். நஅ

1939 மாமறை விழுக்குல மடந்தையர்கள் தம்மில்
தாமுறு மகிழ்ச்சியொடு சாயல்மயில் என்னத்
தூமணி விளக்கொடு சுடர்க்குழைகள் மின்னக்
காமர்திரு மாளிகை கவின்பொலிவு செய்வார். நஉ

1940 சுண்ணமொடு தண்மலர் துதைந்ததுகள் வீசி
உள்நிறை விருப்பினுடன் ஓகையுரை செய்வார்
வெண்முளைய பாவிகைகள் வேதிதொறும் வைப்பார்
புண்ணிய நறும்புனல்கொள் பொற்குடம் நிரைப்பார். நஎ

1941 செம்பொன்முத லானபல தானவினை செய்வார்
நம்பர்அடி யார்அமுது செய்யநலம் உய்ப்பார்
வம்பலர் நறுந்தொடையல் வண்டொடு தொடுப்பார்
நிம்பமுத லானகடி நீடுவினை செய்வார். நஅ

1942 ஐயவி யுடன்பல அமைத்தபுகை யாலும்
நெய்யகில் நறுங்குறை நிறைத்தபுகை யாலும்
வெய்யதழல் ஆகுதி விழுப்புகையி னாலும்
தெய்வமணம் நாறவரு செய்தொழில் விளைப்பார். நஉ

1943 ஆயபல செய்தொழில்கள் அன்றுமுதல் விண்ணோர்
நாயகன் அருட்பெருமை கூறுநலம் எய்தத்
தூயதிரு மாமறை தொடர்ந்தநடை நூலின்
மேயவிதி ஐயிரு தினத்தினும் விளைத்தார். சO

1944 நாமகர ணத்தழகு நாள்பெற நிறுத்திச்
சேமவுத யப்பரிதி யில்திகழ் பிராணைத்
தாமரை மிசைத்தனி முதற்குழவி என்னத்
தூமணி நிரைத்தணிசெய் தொட்டில்அமர் வித்தார். சக

1945 பெருமலை பயந்தகொடி பேணுமலை யின்பால்
அருமறை குழைத்தமுது செய்தருளு வாரைத்
தருமறைவி யார்பரமர் தாள்பரவும் அன்பே
திருமுலை சுரந்தமுது செய்தருளு வித்தார். சஉ

1946 ஆறுலவு செய்யசடை ஐயர்அரு ளாலே
பேறுலகி னுக்கென வரும்பெரிய வர்க்கு

வேறுபல காப்புமிகை என்றவை விரும்பார்
நீறுதிரு நெற்றியில் நிறுத்திநிறை வித்தார். சஉ

வேறு

1947 தூயர்திரு மடித்தலத்துந் தயங்குமணித் தவிசினிலும்
தூயசுடர்த் தொட்டிலினுந் தூங்குமலர்ச் சயனத்துஞ்
சேயபொருள் திருமறையுந் தீந்தமிழுஞ் சிறக்கவரு
நாயகனைத் தாலாட்டு நலம்பலபா ராட்டினர். சச

1948 வருமுறைமைப் பருவத்தில் வளர்புகலிப் பிள்ளையார்
அருமறைகள் தலைஎடுப்ப ஆண்டதிரு முடிஎடுத்துப்
பெருமழுவர் தொண்டல்லால் பிறிதிசையோம் என்பார்போல்
திருமுகமண் டலமசையச் செங்கீரை ஆடினர். சடு

1949 "நாம்அறியோம் பரசமயம் உலகிரிஎதிர் நாடாது
போம்அகல" என்றங்கை தட்டுவதும் புனிதன்பால்
காமருதா ளம்பெறுதற் கொத்துவதுங் காட்டுவபோல்
தாமரைச்செங் கைகளினல் சப்பாணி கொட்டினர். சசு

1950 விதிதவறு படும்வேற்றுச் சமயங்க ளிடைவிழுந்து
கதிதவழ, இருவிசும்பு நிறைந்தகடி வார்கங்கை
நதிதவழுஞ் சடைமுடியார் ஞானம்அளித் திடவுரியார்
மதிதவழ்மா ளிகைமூன்றின் மருங்குதவழ்ந் தருளினர். சள

1951 சூழவரும் பெருஞ்சுற்றத் தோகையரும் தாதியரும்
"காழியர்தஞ் சீராட்டே கவுணியர்கற் பகமே" என்
றேழிசையும் பலகலையும் எவ்வுலகுந் தனித்தனியே
வாழவரும் அவர்தம்மை "வருகவரு" கெனஅழைப்ப. சஅ

1952 திருநகையால் அழைத்தவர்தஞ் செழுமுகங்கள் மலர்வித்தும்
வருமகிழ்வு தலைசிறப்ப மற்றவர்மேற் செலவுகைத்தும்
உருகிமனங் கரைந்தலைய உடன்அணைந்து தழுவியும்முன்
பெருகியஇன் புறஅளித்தார் பெரும்புகலிப் பிள்ளையார். சகூ

1953 வளர்பருவ முறையாண்டு வருவதன்முன் மலர்வாவண்
டுளர்கருமென் சுருட்குஞ்சி யுடன்அலையச் சென்றின்று
கிளர்ஒளிகிங் கிணிஎடுப்பக் கீழ்மைநெறிச் சமயங்கள்
தளர்நடையிட் டறத்தாமுந் தளர்நடையிட் டருளினர். நிO

1954 தாதியர்தங் கைப்பற்றித் தளர்நடையின் அசைவொழிந்து
சோதியணி மணிச்சதங்கை தொடுத்தவடம் புடைசூழ்ந்த
பாதமலர் நிலம்பொருந்தப் பருவமுறை ஆண்டொன்றின்
மீதணைய நடந்தருளி விளையாடத் தொடங்கினர். நிக

1. தொட்டுவதும். 2. தூங்குவதும். 3. அரும்பு ஏ
4. முலையும் 5. மணிக்கிண். 6. சுடர்க்குஞ்சி.

1955 சிறுமணித்தேர் தொடர்ந்துருட்டிச் செழுமணற்சிற் றில்கள்இழை
நறுநுதற்பே தையர்மருங்கு நடந்தோடி அடர்ந்தழித்தும்
குறுவியர்ப்புத் துளியரும்பக் கொழும்பொடியா டியகோல
மறுகிடைப்பே சொளிபரப்ப வந்துவளர்ந் தருளினார். நிஉ

1956 மங்கையோ டுடனுகி வளர்தோணி வீற்றிருந்த
திங்கள்சேர் சடையார்தந் திருவருட்குச் செய்தவத்தின்
அங்குரம்போல் வளர்ந்தருளி அருமறையோ டுலகுய்ய
எங்கள்பிரான் ஈராண்டின் மேலோராண் டெய்துதலும். நிங

1957 நாவாண்ட பலகலையும் நாமகளும் நலஞ்சிறப்பப்
பூவாண்ட திருமகளும் புண்ணியமும் பொலிவெய்தச்
சேவாண்ட கொடியவர்தஞ் சிரபுரத்துச் சிறுவருக்கு
மூவாண்டில் உலகுய்ய நிகழ்ந்ததனீ மொழிகின்றேன். நிச

1958 பண்டுதிரு வடிமறவாப் பான்மையோர் தமைப்பரமர்
மண்டுதேவ மறைக்குலத்தோர் வழிபாட்டின் அளித்தருளத்
தொண்டின்நிலை தரவருவார் தொடர்ந்தபிரி(வு)உணர்வொருகால்
கொண்டெழலும் வெருக்கொண்டாற் போல்அழுவார் குறிப்பயலாய்.

1959 மேதகைய இந்நாளில் வேறுருநாள் வேதவிதி
நீதிமுறைச் சடங்குநெறி முடிப்பதற்கு நீராடத்
தாதையார் போம்பொழுது தம்பெருமான் அருள்கூடச்
சோதிமணி மணிமுன்றில் தொடர்ந்தழுது பின்சென்றார். நிசு

1960 பின்சென்ற பிள்ளையார் தமைநோக்கிப் பெருந்தவத்தோர்
முன்செல்கை தனையொழிந்து முனிவர்போல் விலக்குதலும்
மின்செய்பொலங் கிங்கிணிக்கால் கொட்டிஅவர் மீளாமை
"உன்செய்கை இதுவாகில் போ"தென்றங் குடன்சென்றார். நிள

1961 கடையுகத்தில் தனிவெள்ளம் பலவிரிக்குங் கருப்பம்போன்(று)
இடையருப் பெருந்தீர்த்தம் எவற்றினுக்கும் பிறப்பிடமாய்
விடையுயர்த்தார் திருத்தோணிப் பற்றுவிடா மேன்மையதாம்
தடமதனில் துறையணைந்தார் தருமத்தின் தலைநின்றார். நிஅ

1962 பிள்ளையார் தமைக்கரையில் வைத்துத்தாம் பிரிவஞ்சித்
தெள்ளுநீர்ப் புகமாட்டார் தேவியொடுந் திருத்தோணி
வள்ளலார் இருந்தாரை எதிர்வணங்கி மணிவாவி
உள்ளிழிந்து புனல்புக்கார் உலகுய்ய மகப்பெற்றார். நிக

1963 நீராடித் தருப்பித்து நியமங்கள் பலசெய்வார்
3 சீராடுந் திருமகனார் காண்பதன்முன் செய்ததற்பின்
ஆராத விருப்பினுல் அகமருடம் படியநீர்
போராது மூழ்கினார் பெருங்காதல் பெற்றாராய். கo

ப.ஏ. 1 தெடிமணிச்சிறு. 2. உளர் வொடுபோல் 3 சீராடும்
4. படியவழி. 5. பெருங்காவல்

1964 மறைமுனிவர் மூழ்குதலும் [1]மற்றவரை முற்காணு
திறைதரியா தெனுநிலைமை தலைக்கிடா ஈசர்கழல்
முறைபுரிந்த முன்உணர்வு மூளஅழத் தோடங்கினர்
நிறைபுனல்வா விக்கரையில் நின்றருளும் பிள்ளையார். சுக

1965 கண்மலர்கள் நீர்தளும்பக் கைம்மலர்க ளாற்பிசைந்து
வண்ணமலர்ச் செங்கனிவாய் மணிஅதரம் புடைதுடிப்ப
எண்ணில்மறை ஒலிபெருக எவ்வுயிருங் குதுகலிப்பப்
புண்ணியக்கன் றனையவர்தாம் பொருமிஅழு தருளினர். சுஉ

1966 மெய்ம்மேற்கண் துளிபனிப்ப வேறெங்கும் பார்த்தழுவார்
தம்மேலைச் சார்புணர்ந்தே தா சாரும்பிள் ளைமைதானே
செம்மேனி வெண்ணீற்றர் திருத்தோணிச் சிகரம்பார்த்(து)
"அம்மேஅப் பா"என்றென் றழைத்தருளி அழுதருள. சுங

1967 அந்நிலையில் திருத்தோணி யீற்றிருந்தார் அருள்நோக்கால்
முன்நிலைமைத் திருத்தொண்டு முன்னியவர்க் கருள்புரிவான்
பொன்மலைவல் வியுந்தாமும் பொருவிடைமேல் எழுந்தருளிச்
சென்னிஇளம் பிறைதிகழச் செழும்பொய்கை மருங்கணைந்தார். சுச

1968 திருமறைதூல் வேதியர்க்கும் தேவியர்க்கும் தாங்கொடுத்த
பெருகுவரம் நினைந்தேதான் தம்பெருமைக் கழல்பேணும்
3 ஒருநெறியில் வருஞானங் கொடுப்பதனுக் குடனிருந்த
அருமறையா ளுடையவளை [4]அளித்தருள அருள்செய்வார். சுரு

1969 அழுகின்ற பிள்ளையார் தமைநோக்கி அருட்கருணை
எழுகின்ற திருவுள்ளத் திறையவர்தாம் எவ்வுலகும்
தொழுகின்ற மலைக்கோடியைப் பார்த்தருளித் "துணைமுலைகள்
பொழிகின்ற பால்அடிசில் பொன்வள்ளத் தூட்"டென்ன. சுசு

1970 ஆரணமும் உலகேழும் ஈன்றருளி அனைத்தினுக்கும்
காரணமாய் வளம்பெருகு கருணைதிரு வடிவான
சீரிணங்கு சிவபெருமான் அருளுதலும் சென்றணைந்து
வாரிணங்கு [5]திருமுலைப்பால் வள்ளத்துக் கறந்தருளி. சுள

1971 எண்ணரிய சிவஞானத் தின்னமுதங் குழைத்தருளி
"உண்ணடிசில்" எனஊட்ட உமையம்மை எதிர்நோக்கும்
கண்மலர்நீர் துடைத்தருளிக் கையிற்பொற் கிண்ணம்அளித்(து)
அண்ணலைஅங் கழுகைதீர்த் தங்கணனர் அருள்புரிந்தார். சுஅ

1972 யாவருக்குந் தந்தைதாய் எனும்இவர்இப் படிஅளித்தார்
ஆவதனல் ஆளுடைய பிள்ளையா ராய்அகில
தேவருக்கும் முனிவருக்குந் தெரிவரிய பொருளாகும்
தாவில்தனிச் சிவஞான சம்பந்த ராயினர். சுஆ

பா. பே. 1. திற்றருவர்தம் எனைஸ்ஸுனை. 2. எப்புவனமும் 3. ஒருமை நெறி.
4. அனைத்திளை. 5. நிலவெள்

1973 சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவம்அதனை அறமாற்றும் பாங்கினில்லங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம்உணர்ந்தார் அங்கிலையில். எ0

1974 "எப்பொருளும் ஆக்குவான் ஈசனே" எனும்உணர்வும்
1 "அப்பொருள்தான் ஆளுடையார் அடியார்கள்" எனும்அறிவும்
இப்படியால் இதுவன்றித் தம்இசைவு கொண்டியலும்
துப்புரவில் லார்துணிவு துகளாகச் சூழ்ந்தெழுந்தார். எக

1975 சீர்மறையோர் சிவபாத விருதயருஞ் சிறுபொழுதில்
நீர்மருவித் தாஞ்செய்யும் நியமங்கள் முடித்தேதறிப்
பேருணர்விற் போலிகின்ற பிள்ளையார் தமைநோக்கி
"யாரளித்த பாலடிசில் உண்டதுநீ" எனவெகுளா. எஉ

1976 "எச்சில்மயங் கிடஉனக்கீ திட்டாரைக் காட்"டென்று
கைச்சிறிய தொருமாறு கொண்டோச்சக் காலெடுத்தே
அச்சிறிய பெருந்தகையார் ஆனந்தக் கண்துளிபெய்
2 துச்சியினில் எடுத்தருளும் ஒருதிருக்கை விரற்சுட்டி. எங

1977 விண்நிறைந்த பெருகொளியால் விளங்குமழ விடைமேலே
பண்நிறைந்த அருமறைகள் பணிந்தேத்தப் பாவையுடன்
எண்நிறைந்த கருணையினல் நின்றுமை எதிர்காட்டி
உள்நிறைந்து போழிந்தெழுந்த உயர்ஞானத் திருமொழியால். எச

1978 எல்லையிலா மறைமுதல்மெய் யுடன்எடுத்த எழுதுமறை
மல்லல்நெடுந் தமிழால்இம் மாநிலத்தோர்க் குரைசிறப்பப்
பல்லுயிருங் களிகூரத் தம்பாடல் பரமர்பால்
4 செல்லுமுறை பெறுவதற்குத் திருச்செவியைச் சிறப்பித்து. எடு

1979 செம்மைபெற எடுத்ததிருத் தோடுடைய செவியன்எனும்
மெய்ம்மைமொழித் திருப்பதிகம் பிரமபுரம் மேவினார்
தம்மைஅடை யாளங்க ளுடன்சாற்றித் தாதையார்க்(கு)
"எம்மையிது செய்தபிரான் இவனன்றே" எனஇசைத்தார். எசு

1980 மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையின்
கண்ணுதலான் பெருங்கருணை கைக்கோள்ளும் எனக்காட்ட
எண்ணமிலா வல்லரக்கன் எடுத்துமுறிந் திசைபாட
அண்ணலவற் கருள்புரிந்த ஆக்கப்பா டருள்செய்தார். எஎ

1981 தொழுவார்க்கே அருளுவது சிவபெருமான் எனத்தொழார்
வழுவான மனத்தாலே மாலாய மாலயனும்
இழிவாகுங் கருவிலங்கும் பறவையுமாய் எய்தாமை
விழுவார்கள் அஞ்செழுத்துந் துதித்துய்ந்த படிவிரித்தார். எஅ

கசு 1. பரிவே. 2. அப்பொருளும். 3. ஆளுடையான்.
உ. சியின்மேல் 4. செல்லுறையை: செல்லுமுறை

1982 வேதகா ரணராய வெண்பிறைசேர் செய்யசடை
நாதன்நெறி அறிந்துய்யார் தம்மிலே நலங்கொள்ளும்
போதம்இலாச் சமண்கையர் புத்தர்வழி பழியாக்கும்
ஏதமே எனமொழிந்தார் எங்கள்பிரான் சம்பந்தர். எக

1983 திருப்பதிகம் நிறைவித்துத் திருக்கடைக்காப் புச்சாத்தி
இருக்குமொழிப் பிள்ளையார் எதிர்தொழுது நின்றருள
அருட்கருணைத் திருவாள னர்அருள்கண் டமரெலாம்
பெருக்கவிசும் பினில்ஆர்த்துப் பிரசமலர் மழைபொழிந்தார். அ0

1984 வந்தெழுமங் கலமான வானகதுந் துபிமுழக்கும்
கந்தருவர் கின்னரர்கள் கானஒலிக் கடல்முழக்கும்
இந்திரனே முதல்தேவர் எடுத்தேத்தும் இசைமுழக்கும்
அந்தமில்பல் கணநாதர் அரஎனும்ஓ சையின்அடங்க. அக

வேறு

1985 மறைகள் கிளர்ந்தொலி வளர முழங்கிட வானோர்தந்
நிறைமுடி உந்திய நிரைமணி சிந்திட நீள்வானத்
துறையென வந்துல கடைய நிறைந்திட ஓவாமெய்ப்
பொறைபெரு குந்தவ முனிவ ரெனுங்கடல் புடைசூழ. அஉ

1986 அணைவுற வந்தெழும் அறிவு தொடங்கின அடியார்பால்
இணையில் பவங்கிளர் கடல்கள் இகந்திட இருதாளின்
புணையருள் அங்கணர் பொருவிடை தங்கிய புணர்பாகத்
துணையொ டணைந்தனர் சுருதி தொடர்ந்த பெருந்தோணி. அங

1987 அண்ணல் அணைந்தமை கண்டு தொடர்ந்தெழும் அன்பாலே
மண்மிசை நின்ற மறைச்சிறு போதகம் அன்னருங்
கண்வழி சென்ற கருத்து விடாது கலந்தேதகப்
புண்ணியர் நண்ணிய பூமலி கோயிலின் உட்புக்கார். அச

1988 எறில்பெ ருந்தவம் முன்செய்து தாதைள னப்பெற்றூர்
மாறுவி ழுந்த மலர்க்கை குவித்து மகிழ்ந்தாடி
வேறுவி ளைந்தவெ ருட்சிவி யப்புவி ருப்போடும்
கூறும்அ ருந்தமி ழின்பொரு ளான குறிப்போர்வார். அடு

1989 தாணுவி னைத்தனி கண்டு தொடர்ந்தவர் தம்மைப்போல்
காணுதல் பெற்றில ரேனும் நிகழ்ந்தன கண்டுள்ளார்
தோணிபுரத்திறை தன்னரு ளாதல் துணிந்தார்வம்
பேணும னத்தொடு முன்புகு காதலர் பின்சென்றூர். அசு

1990 அப்பொழு தங்கண் அணைந்தது கண்டவர் அல்லாதார்
மூப்புரி நூன்மறை யோர்கள் உரோம முகிழ்ப்பெய்தி

ம.வே.1: அந்தமில் தீர்.
2: அறிந்தார்வம்.

"இப்படி ஒப்பதொர் அற்புதம் எங்குள" தென்றென்றே
துப்புறழ் வேணியர் கோயிலின் வாயில்பு றஞ்சூழ. அள

199/ பொங்கொளி மால்விடைமீது புகுந்தணி பொற்றேணி
தங்கிஇ ருந்தபெ ருந்திரு வாழ்வு தலைப்பட்டே
"இங்கெனை யாளுடை யான்உமை யோடும் இருந்தான்" என்
றங்கெதிர் நின்று புகன்றனர் ஞானத் தமுதுண்டார். அஅ

1992 இன்னிசை ஏழும் இசைந்த செழுந்தமிழ் ஈசற்கே
சொன்முறை பாடு தொழும்பருள் பெற்ற தொடக்கோடும்
பன்மறை வேதியர் காண விருப்பொடு பால்நாறும்
பொன்மணி வாயினர் கோயிலின் நின்று புறப்பட்டார். அக

1993 பேணிய அற்புத நீடருள் பெற்றபி ரான்முன்னே
நீணிலை யில்திகழ் கோபுர வாயிலின் நேரெய்தி
வாணில வில்திகழ் வேணியர் தொண்டர்கள் வாழ்வெய்தும்
தோணி புரத்தவர் தாம்எதிர் கொண்டு துதிக்கின்றார். கூ

வேறு

1994 "காழியர் தவமே கவுணியர் தனமே கலைஞானத்
தாழிய கடலே அதனிடை அமுதே அடியார்முன்
வாழிய வந்திம் மண்மிசை வானோர் தனிநாதன்
ஏழிசை மொழியாள் தன்திரு வருள்பேற் றனை" என்பார். கூக

1995 "மறைவளர் திருவே வைதிக நிலையே வளர்ஞானப்
போறையணி முகிலே புகலியர் புகலே போருபோன்னித்
துறைபெறு மணியே சுருதியின் ஒளியே வேளியேவந்
திறையவன் உமையா ளுடனருள் தரஎய் தினை" என்பார். கூஉ

1996 "புண்ணிய முதலே புனைமணி அரைஞா ணுடைபோதும்
கண்ணிறை கதிரே கலைவளர் மதியே கவின்மேவும்
பண்ணியல் கதியே பருவம தொருமூ வருடத்தே
எண்ணிய போருளாய் நின்றவர் அருள்பேற் றனை" என்பார். கூந

வேறு

1997 என்றினைய பலகூறி இருக்குமொழி அந்தணரும் ஏனை யோரும்
நின்றுதுதி செய்தவர்தாள் நீள்முடிக்கண்மேலேந்தி நிரந்த போது
சென்றணைந்த தாதையார் சிவபாத விருதயர்தாந் தெய்வ ஞானக்
கன்றினைமுன் புக்கெடுத்துப் பியலின்மேற் கொண்டுகளி கூர்ந்து செல்ல.

1998 மாமறையோர் குழாத்தினுடன் மல்குதிருத் தொண்டர்குழாம் மருங்கு சூழ்ந்து
தாம்அறவை உத்தரியந் தனிவிசும்பில் எறிந்(து)ஆர்க்கும் தன்மை யாலே
பூமறுகு சிவானந்தப் பெருக்காறு போதஅதன் மீது பெறுங்கும்
காமர்நுரைக் குமிழிஎழுந் திழிவனபோல் விளங்குபெருங்காட்சித் தாக.

பா.பே.1.வாய்த்த. 2.புகுந்தொளிர். 3.புகுந்தனர்.புரந்தருள். 5தமரில். 6.கலைவேந்தி. 7 காட்சிஎய்தாகி.

1999 நீடுதிருக் கழுமலத்து நிலத்தேவர் மாளிகைமேல் நெருங்கி அங்கண்
மாடுநிறை மடவார்கள் மங்கலமா மொழிகளால் வாழ்த்தி வாசத்
தோடுமலி நறுமலருஞ் சுண்ணமும்வெண் பொரியிறைஞ்சுந் தூவி நிற்பார்
கோடுபயில் தலவரைமேல் மின்தலங்கள் புடைபெயருங் கொள்கைத் தாக.

2000 மங்கலநூ ரியந்துவைப்பார் மறைச்சாமம் பாடுவார் மருங்கு வேதிப்
பொங்குமணி விளக்கெடுத்துப் பூரணகும் பமும்நிரைப்பார் போற்றிசெய்வார்
அங்கவர்கள் மனத்தெழுந்த அதிசயமும் பெருவிருப்பும் அன்பும் பொங்கத்
தங்குதிரு மலிவீதிச் சண்பைநகர் வலஞ்செய்து சாருங் காலை. கூள

2001 தந்திருமா ளிகையின்கண் எழுந்தருளிப் புகும்பொழுது சங்க நாதம்
அந்தரதுந் துபிமுதலா அளவில்பெரு கொலிதழைப்ப அணைந்து புக்கார்
சுந்தரப்பொற் றோணிமிசை இருந்தபிரா னுடன்அமர்ந்த அணைவி யாகும்
பைந்தொடியாள் திருமூலியின் பாலரு மதுரமொழிப் பவள வாயார்.

2002 தூமணிமா ளிகையின்கண் அமர்ந்தருளி அன்றிரவு தொல்லை நாத
மாமறைகள் திரண்டபெருந் திருத்தோணி மன்னிவீற் றிருந்தார் செய்ய
காமருசே வடிக்கமலங் கருத்திலுற இடையருக் காதல் கொண்டு
நாமநெடுங் கதிருதிப்ப நண்ணினார் திருத்தோணி நம்பர் கோயில்.

2003 காதலுடன் அணைந்துதிருக் கழுமலத்துக் கலந்துவீற் றிருந்த தங்கள்
தாதையா ரையும்வெளியே தாங்கரிய மெய்ஞ்ஞானந் தம்பால் வந்து
போதமுலை சுரந்தளித்த புண்ணியத்தா யாரையும்முன் வணங்கிப் போற்றி
மேதகைய அருள்பெற்றுத் திருக்கோலக் காஇறைஞ்ச விருப்பிற் சென்றார்.

2004 பெருக்கோலிட் டலைபிறங்குங் காவிரிநீர் பிரசமலர் தரளஞ் சிந்த, வரிக்கோல வண்டாட மாதரார் குடைந்தாடு மணிநீர் வாவித், திருக்கோலக் காளத்தித் தேவர்பிரான் கோயில்வலஞ் செய்து முன்னின், றிருக்கோலிட் டறிவரிய திருப்பாதம் ஏத்துவதற் கெடுத்துக் கொள்வார். கூக

2005 மெய்ந்நிறைந்த செம்பொருளாம் வேதத்தின் விழுப்பொருளை வேணி மீது, பைந்நிறைந்த அரவுடனே பசுங்குழவித் திங்கள்பரித் தருளு வானை, மைந்நிறைந்த மிடற்றானை "மடையில்வா ளைகள்பாய" என்னும் வாக்கால், கைந்நிறைந்த ஒத்தறுத்துக் கலிப்பதிகங் கவுணி யர்கோன் பாடுங் காலை. கூஉ

2006 கையதனுல் ஒத்தறுத்துப் பாடுதலுங் கண்டருளிக் கருணை கூர்ந்த, செய்யசடை வானவர்தம் அஞ்சேழுத்தும் 4எழுதியசெம் பொற்ற ளங்கள், ஐயரவர் திருவருளால் எடுத்தபா டலுக்கிசைந்த அளவால் ஒத்த, வையமெலாம் உய்யவரு மறைச்சிறுவர் கைத்தலத்து 5வந்த வன்றே. கூங

2007 காழிவரும் பெருந்தகையார் கையில்வருந் திருத்தாளக் கருவி கண்டு, வாழியதந் திருமுடிமேற் கொண்டருளி மனங்களிப்ப முதுர

4. எழுதியசெம்பொற்றளம் 5. வந்தனனே.

வாயில், ஏழிசையுந் தழைத்தோங்க இன்னிசைவண் தமிழ்ப்பதிகம் எய்தப் பாடித், தாழுமணிக் குழையார்முன் தக்கதிருக் கடைக்காப் புச் சாத்தி நின்றார். கoச

2008 உம்பருல கதிசயிப்ப ஓங்கியநா தத்தளவின் உண்மை நோக்கித், தும்புருநா ரதர்முதலாஞ் சுருதிஇசைத் துறையுள்ளோர் துதித்து மண்மேல், வம்பலர்மா மழைபொழிந்தார் மறைவாழ வந்தருளும் மதலை யாருந், தம்பெருமான் அருள்போற்றி மீண்டருளிச் சண்பை நகர் சாரச் செல்வார். கoடு

2009 செங்கமல மலர்க்கரத்துத் திருத்தாளத் துடன்நடந்து செல்லும் போது, தங்கள்குலத் தாதையார் தரியாது தோளின்மேல் தரித்துக் கொள்ள, அங்கவர்தந் தோளின்மிசை எழுந்தருளி அணைந்தார்சூழ்ந் தமசர் ஏத்தும், திங்கள்அணி மணிமாடத் திருத்தோணி புரத் தோணிச் சிகரக் கோயில். கoசு

2010 திருப்பெருகு பெருங்கோயில் சூழவலங் கொண்டருளித் திரு மூன் நின்றே, அருட்பெருகு திருப்பதிகம் எட்டொருகட் டளையாக்கி அவற்றுள் ஒன்று, விருப்புறுபொற் றிருத்தோணி வீற்றிருந்தார் தமைப்பாட மேவு காதல், பொருத்தம்உற அருள்பெற்றுப் போற்றி எடுத்தருளினார் "பூவார் கொன்றை." கoஎ

2011 எடுத்ததிருப் பதிகத்தின் இசைதிருத்தா ளத்தினுல் இசைய ஒத்தி, அடுத்தநடை பெறப்பாடி ஆர்வமுற வணங்கிப்போந் தலைநீர்ப் பொன்னி, மடுத்தவயற் பூந்தரா யவர்வாழ மழவிளங்கோ லத்துக் காட்சி, கொடுத்தருளி வைகினார் குறைவிலா நிறைஞானக் கொண்ட லார்தாம். கoஅ

2012 அங்கியில் ஆளுடைய பிள்ளையார் தமைமுன்னம் அளித்த தாயார், முன்னுதிக்க முயன்றதவத் திருநன்னி பள்ளிமுதன் மறை யோர் எல்லாம், மன்னுபெரு மகிழ்ச்சியுடன் மங்கலநூ ரியந்துவைப்ப மறைகள் ஓதிக், கன்னிமதிற் சண்பைநகர் வந்தணைந்து கவுணியர் கோன் கழலில் தாழ்ந்தார். கoக

2013 மங்கலமா மெய்ஞ்ஞானம் மண்களிப்பப் பெற்றபெரு வார்த்தை யாலே, எங்களுடைநீள் பதிமருங்கில் இருபிறப்பா ளரும்எல்லா ஏனை யோரும், பொங்குதிருத் தொண்டர்களும் அதிசயித்துக் குழாங் கொண்டு புகலி யார்தஞ், சிங்கஇள வேற்றின்பால் வந்தணைந்து கழல் பணியுஞ் சிறப்பின் மிக்கார். ககo.

2014 வந்ததிருத் தொண்டர்க்கும் மல்குசெழு மறையவர்க்கும் மற்று ளோர்க்குஞ், சிந்தைமகிழ் வுறமலர்ந்து திருவமுது முதலான சிறப்பின் செய்கை, தந்தம்அள வினில்விரும்புந் தகைமையினுல் கட னுற்றுஞ் சண்பை மூதூர், எந்தைபிரான் சிவலோகம் எனவிளங்கி எவ்வுலகும் ஏத்து நாளில். ககக

2015 செழுந்தரளப் பொன்னிசூழ் திருநன்னி பள்ளியுள்ளோர்
தொழுது "திங்கட், கொழுந்தணியுஞ் சடையாரை எங்கள்பதி யினிற்
கும்பிட் டருள அங்கே, எழுந்தருள வேண்டும்"என இசைந்தருளித்
தோணிவீற் றிருந்தார் பாதந், தொழுந்தகைமை யாலிறைஞ்சி
அருள்பெற்றுப் பிறபதியும் தொழமுன்செல்வார். ககஉ

2016 தாதவிழ்சேந் தாமரையின் அகவிதழ்போல் சீறடிகள் தரையின்
மீது, போதுவதும் பிறர்ஒருவர் பொறுப்பதுவும் பொருஅன்பு புரிந்த
சிந்தை, மாதவஞ்செய் தாதையார் வந்தெடுத்துத் தோளின்மேல் வைத்
துக் கொள்ள, நாதர்கழல் தம்முடிமேல் கொண்டகருத் துடன்போந்
தார் ஞானம் உண்டார். ககஙு

2017 தேனலருங் கொன்றையினர் திருநன்னி பள்ளியினைச் சாரச்
செல்வார், "வானணியும் மலர்ச்சோலை தோன்றுவதெப் பதி?"என்ன
மகிழ்ச்சி எய்திப், "பானல்வயல் திருநன்னி பள்ளி"எனத் தாதையார்
பணிப்பக் கேட்டு,ஞானபோ னகர்தொழுது நற்றமிழ்ச்சொல் தொடை
மாலை நவில லுற்றார். ககச

வேறு

2018 "காரைகள் கூகை முல்லை" எனநிகழ் கலிசேர் வாய்மைச்
சீரியற் பதிகம் பாடித் திருக்கடைக் காப்புத் தன்னில்
"நாரியோர் பாகர் வைகும் நனிபள்ளி உள்ளு வார்தம்
பேரிடர் கெடுதற் காணை நம"தெனும் பெருமை வைத்தார். ககஙு

2019 ஆதியார் கோயில் வாயில் அணைந்துபுக் கன்பு கூர
நீதியால் பணிந்து போற்றி நீடிய அருள்முன் பெற்றுப்
போதுவார் தம்மைச் சூழ்ந்து பூசுரர் குழாங்கள் போற்றும்
காதல்கண் டங்க மர்ந்தார் கவுணியர் தலைவ னார்தாம். ககசு

2020 அம்பிகை அளித்த ஞானம் அகிலமும் உய்ய உண்ட
நம்பெருந் தகையார் தம்மை எதிர்கொண்டு நண்ண வேண்டி
உம்பரும் வணங்கும் மெய்ம்மை உயர்தவத் தொண்ட ரோடு
தம்பெரு விருப்பால் வந்தார் தலைசைஅந் தணர்க ளெல்லாம். ககள

2021 காவணம் எங்கும் இட்டுக் கமுகொடு கதலி நாட்டிப்
1பூவணை தாமந் தூக்கிப் பூரண கும்பம் ஏந்தி
ஆவண வீதி எல்லாம் அலங்கரித் தண்ண லாரை
2மாவணை மலர்மென் சோலை வளம்பதி கொண்டு புக்கார். ககஅ

2022 திருமறை யோர்கள் சூழ்ந்து சிந்தையின் மகிழ்ச்சி பொங்கப்
பெருமறை ஓசை மல்கப் பெருந்திருக் கோயில் எய்தி
அருமறைப் பொருளா னரைப்3பணிந்தணி நற்சங் கத்தின்
தருமுறை நெறியக் கோயில் சார்ந்தமை அருளிச் செய்தார். ககக

1. சென்றார். 2. பூவணத்து மாவனை. 3. அடிபணிந் தஞ்சொன்மாலை.

2023 கறையணி கண்டர் கோயில் காதலால் பணிந்து பாடி
மறையவர் போற்ற வந்து திருவலம் புரத்து மன்னும்
இறைவரைத் தொழுது பாடுங் "கொடியுடை" ஏத்திப் போந்து
நிறைபுனல் திருச்சாய்க் காடு தொழுதற்கு நினைந்து செல்வார். கஉ0

2024 பன்னகப் பூணி னுரைப் பல்லவ னீச்ச ரத்துச்
சென்னியால் வணங்கி ஏத்தித் திருந்திசைப் பதிகம் பாடிப்
பொன்னிசூழ் புகாரில் நீடு புனிதர்தந் திருச்சாய்க் காட்டு
மன்னுசீர்த் தொண்டர் எல்லாம் மகிழ்ந்தெதிர் கொள்ளப் புக்கார்.

2025 வானள வுயர்ந்த வாயில் உள்வலங் கொண்டு புக்குத்
தேனலர் கொன்றை யார்தந் திருமுன்பு சென்று தாழ்ந்து
மானிடந் தரித்தார் தம்மைப் போற்றுவார் " மண்பு கார் "என்(று)
ஊனெலாம் உருக ஏத்தி உச்சிமேற் குவித்தார் செங்கை. கஉஉ

2026 சீரினில் திகழ்ந்த பாட்டில் திருக்கடைக் காப்புப் போற்றிப்
பாரினில் பொலிந்த தொண்டர் போற்றிடப் பயில்வார் பின்னும்
எரிசைப் பதிகம் பாடி ஏத்திப்போந் திறைவர் வெண்கா
டாருமெய்க் காத லோடும் பணிவதற் கணைந்தா ரன்றே. கஉங

2027 பொன்னிதழ்க் கொன்றை வன்னி புனல்இள மதியம் நீடு
சென்னியர் திருவெண் காட்டுத் திருத்தொண்டர் எதிரே சென்றங்
கின்னதன் மையர்க ளானர் எனவொணு மகிழ்ச்சி பொங்க
மன்னுசீர்ச் சண்பை யாளும் மன்னரைக் கொண்டு புக்கார். கஉச

2028 மூத்தமிழ் விரகர் தாமும் முதல்வர்கோ புரத்து முன்னர்ச்
சித்தநீ டுவகை யோடுஞ் சென்றுதாழ்ந் தெழுந்து புக்குப்
பத்தராம் அடியார் சூழப் பரமர்கோ யிலேச்சூழ் வந்து
நித்தனார் தம்முன் பெய்தி நிலமுறத் தொழுது வீழ்ந்தார். கஉடு

2029 மெய்ப்பொரு ளாயி னுரை வெண்காடு மேவி னுரைச்
செப்பரும் பதிக மாலை "கண்காட்டு நுதல்" முன் சேர்த்தி
மூப்புரஞ் செற்றார் பாதஞ் சேருமுக் குளமும் பாடி
ஒப்பரு ஞானம் உண்டார் உளமகிழ்ந் தேத்தி வாழ்ந்தார். கஉசு

2030 அருமையாற் புறம்பு போந்து வணங்கிஅங் கமரும் நாளில்
திருமுல்லை வாயில் எய்திச் செந்தமிழ் மாலைசாத்தி
மருவிய பதிகள் மற்றும் வணங்குவார் மறையோர் ஏத்தத்
3தருமலி புகலி வந்து ஞானசம் பந்தர் சார்ந்தார். கஉஎ

2031 தோணிவீற் றிருந்தார் தம்மைத் தொழுதுமுன் நின்று தூய
ஆணியாம் பதிகம் பாடி அருட்பெரு வாழ்வு கூரச்
சேணுயர் மாடம் ஓங்குந் திருப்பதி யதனிற் செய்ய
வேணியார் தம்மை நாளும் போற்றிய விருப்பின் மிக்கார். கஉஅ

பா. பே.1.பாடியினிதமர்ந்தே1ற்றி. 2.சேர்ந்தி. 3. திருமலி.

2032 வைகும்அந் நாளிற் கீழ்பால் மயேந்திரப் பள்ளி வாசம்
செய்பொழிற் குருகா வூருந் திருமுல்லை வாயில் உள்ளிட்
டெய்திய பதிகள் எல்லாம் இன்புற இறைஞ்சி ஏத்தித்
தையலாள் பாகர் தம்மைப் பாடினர் தமிழ்ச்சொல் மாலை. கஉசூ

2033 அவ்வகை மருங்கு சூழ்ந்த பதிகளில் அரனூர் பொற்றூள்
மெய்வகை ஞானம் உண்ட வேதியர் விரவிப் போற்றி
உய்வகை மண்ணு லோருக் குதவிய பதிகம் பாடி
எவ்வகை யோரும் ஏத்த இறைவரை ஏத்து நாளில். கஙO

வேறு

2034 திருநீல கண்டத்துப் பெரும்பாணர் தெள்ளமுதின்
வருநீர்மை இசைப்பாட்டு மதங்கசூ ளாமணியார்
ஒருநீர்மையுடன்உடைய பிள்ளையார் கழல்வணங்கத்
தருநீர்மை யாழ்கொண்டு சண்பையிலே வந்தணைந்தார். கஙக

2035 பெரும்பாணர் வரவறிந்து பிள்ளையார் எதிர்கொள்ளச்
சுரும்பார்செங் கமலமலர்த் தூணைப்பாதந் தொழுதெழுந்து
விரும்பார்வத் தொடும்ஏத்தி மெய்ம்மொழிக ளால்துதித்து
வரும்பான்மை தருவாழ்வு வந்தெய்த மகிழ்சிறந்தார். கஙஉ

2036 அளவிலா மகிழ்ச்சியினர் தமைநோக்கி "ஐயர்நீர்
உளமகிழ இங்கணைந்த உறுதியுடை யோம்"என்றே
இளநிலா நகைமுகிழ்ப்ப இசைத்தவரை யுடன்கொண்டு
களகிலவு நஞ்சணிந்தார் பாலணையுங் கவுணியனூர். கஙங

2037 கோயிலினிற் புறமுன்றிற் கொடுபுக்குக் கும்பிடுவித்
"தேயும்இசை யாழ்உங்கள் இறைவருக்கிங் கியற்றும்"என
ஆயபுகழ்ப் பிள்ளையார் அருள்பெற்ற அதற்கிறைஞ்சி
மேயதொடைத் தந்திரியாழ் வீக்கிஇசை விரிக்கின்றார். கஙச

2038 தானநிலைக் கோல்வடித்துப் படிமுறைமைத் தகுதியினுல்
ஆனஇசை ஆராய்வுற் றங்கணர்தம் பாணியினே
மானமுறைப் பாடினியா ருடன்பாடி வாசிக்க
ஞானபோ னகர்மகிழ்ந்தார் நான்மறையோர் அதிசயித்தார். கஙடு

2039 யாழில்எழும் ஓசையுடன் இருவர்மிடற் றிசைஒன்றி
வாழிதிருத் தோணியுளார் மருங்கணையும் மாட்சியினைத்
தாழும்இரு சிறைப்பறவை படிந்ததனி விசும்பிடைநின்
றேழிசைதூற் கந்தருவர் விஞ்சையரும் எடுத்திசைத்தார். கஙசு

2040 எண்ணருஞ்சீர்த் திருத்தோணி எம்பெருமான் கழல்பரவிப்
பண்ணமையாழ் இசைகூடப் பெரும்பாணர் பாடியபின்

கண்ணுதலார் அருளினுற் காழியர்கோன் கொடுபோந்து
நண்ணியுறை விடஞ்சமைத்து நல்விருந்து சிறந்தளிப்ப. கஙூஎ

2041 பிள்ளையார் அருள்பெற்ற பெரும்பாணர் பிறையணிந்த
வெள்ளநீர்ச் சடையாரை அவர்மொழிந்தமெய்ப்பதிகம்
உள்ளபடி கேட்டலுமே உருகுபெரு மகிழ்ச்சியராய்த்
தெள்ளமிர்தம் அருந்தினர்போல் சிந்தைகளிப் புறத்தொழுதார்.

2042 காழியார் தவப்பயனுங் கவுணியர்தந் தோன்றலார்
ஆழிவிடம் உண்டவர்தம் அடிபோற்றும் பதிகஇசை
யாழின்முறை மையின்இட்டே எவ்வுயிரும் மகிழ்வித்தார்
ஏழிசையும் பணிகொண்ட நீலகண்ட யாழ்ப்பாணர். கஙூஊ

2043 தியமறைக் கூறிறளித்த திருப்பதிக இசையாழின்
நெறியிலிடும் பெரும்பாணர் பின்னு "நீர் அருள்செய்யும்
அறிவரிய திருப்பதிக இசையாழில் இட்டடியேன்
பிறிவின்றிச் சேவிக்கப் பெறவேண்டும்" எனத்தொழுதார். கசO

2044 மற்றதற்குப் பிள்ளையார் மனமகிழ்வுற் றிசைந்தருளப்
பெற்றவர்தாம் "தம்பிரான் அருளிதுவே" எனப்பேணிச்
சொற்றமிழ்மா லையின்இசைகள் சுருதியாழ் முறைதொடுத்தே
அற்றைநாட் போல்என்றும் அகலாநண் புடன்அமர்ந்தார். கசக

2045 சிரபுரத்தில் அமர்ந்தருளுந் திருஞான சம்பந்தர்
பரவுதிருத் தில்லைநகடம் பயில்வாரைப் பணிந்தேத்த
விரவிஎழும் பெருங்காதல் வெள்ளத்தை உள்ளத்தில்
தரஇசையுங் குறிப்பறியத் தமுனிவர்க் கருள்செய்தார். கசஉ

2046 பிள்ளையார் அருள்செய்யப் பெருந்தவத்தால் பெற்றெடுத்த
வள்ளலார் தாமும்உடன் செல்வதற்கு மனங்களிப்ப
வெள்ளிமால் வரைஎன்னத் திருத்தோணி வீற்றிருந்த
புள்ளிமான் உரியாரைத் தொழுதருளாற் புறப்பட்டார். கசஙூ

2047 தாவில்யாழ்ப் பாணரொடுந் தாதையார் தம்மோடும்
மேவியசீர் அடியார்கள் புடைவரவெங் குருவேந்தர்
பூவின்மேல் அயன்போற்றும் புகலியினைக் கடந்துபோய்த்
தேவர்கள்தம் பெருந்தேவர் திருத்தில்லை வழிச்செல்வார். கசச

வேறு

2048 நள்ளி ருட்கண்நின் றுடுவார் உறைபதி நடுவுகண் டனபோற்றி
4 முள்ளு டைப்புற வெள்ளிதழ் கேதகை முகிழ்விரி மணஞ்சூழப்
புள்ளு டைத்தடம் பழனமும் 6 படுகரும் புடைகழிந் திடப்போந்து
தொள்ளி டத்திரு நதிக்கரை அணைந்தனர் கவுணியர் குலதீபர். கசடு

பா. பே. 1. திருப்பதிகம் 2. கண்ணுளி 3. உனைவேண்ட.
4. முள்ளிடைப்புற. 5. கைகரி. 6 படுகரு மிடை.

2049 வண்டி ரைத்தெழுசெழுமலர்ப் பிறங்கலும் மணியும்ஆ ரமும்உந்தித்
தண்ட லைப்பல வளத்தொடும் வருபுனல் தாழ்ந்துசே வடிதாழத்
தெண்டி ரைக்கடற் பவளமும் பணிலமும் செழுமணித் திரள்முத்தும்
2 கொண்டி ரட்டிவந் தோதமங் கெதிர்கொளக் கொள்ளிடங் கடந்தேறி.

2050 பல்கு தொண்டர்தங் குழாத்தொடும் உடன்வரும் பயின்மறை யவர்சூழச்
செல்க திப்பியன் காண்பவர் போற்களி சிந்தைகூர் தரக்கண்டு
மல்கு தேவரே முதலினைத் துயிர்களும் வணங்கவேண் டினவெல்லாம்
நல்கு தில்லைசூழ் திருஎல்லை பணிந்தனர் ஞானஆ ரமுதுண்டார்.

2051 செங்கண் ஏற்றவர் தில்லையே நோக்கிஇத் திருந்துல கினிற்கெல்லாம்
மங்க லந்தரு மழவிளம் போதகம் வரும்இரு மருங்கெங்கும்
தங்கு புள்ளொலி வாழ்த்துரை எடுத்துமுன் தாமரை மதுவாசப்
பொங்கு செம்முகை கரங்குவித் தலர்முகங் காட்டின புனற்பொய்கை.

2052 கலவ மென்மயி லினங்களித் தழைத்திடக் கடிமணக் குளிர்கால்வந்
துலவி முன்பணிந் தெதிர்கொளக் கிளர்ந்தெழுந் துடன்வருஞ் சுரும்பார்ப்ப
இலகு செந்தளிர் ஒளிகிறந் திகழ்தர இருகுழை புடையாட
மலர்மு கம்பொலிந் தசையமென் கொம்பர்நின் றுடுவ மலர்ச்சோலை.

2053 இழைத்த டங்கொங்கை இமயமா மலைக்கொடி இன்னமு தெனஞானம்
குழைத்த ளித்திட அமுதுசெய் தருளிய குருவையார் வரக்கண்டு
மழைத்த மந்தமா ருதத்தினல் நறுமலர் வண்ணநுண் துகள்தூவித்
தழைத்த பொங்கெழில் முகஞ்செய்து வணங்கின தடம்பணை வயற்சாலி.

2054 ஞாலம் உய்ந்திட ஞானமுண் டவர்எழுந் தருளும்அந் நலங்கண்டு
சேல லம்புதண் புனற்றடம் படிந்தணை சீதமா ருதம்வீசச்
சால வும்பல கண்பெறும் பயன்பெறுந் தன்மையிற் களிகூர்வ
போல சைந்திரு புடைமிடைந் தாடின புறம்பணை நறும்பூகம். கருக

2055 பவந்த விர்ப்பவர் தில்லைசூழ் எல்லையில் மறையவர் பயில்வேள்விச்
சிவந்த ரும்பய னுடையஆ குதிகளின் செழும்புகைப் பரப்பாலே
தவந்த ழைப்பவந் தருளிய பிள்ளையார் தாமணை வுறமுன்னே
நிவந்த நீலதுண் துகில்விதா னித்தது போன்றது நெடுவானம். கருஉ

2056 கரும்பு செஞ்செல்பைங் கமுகொடு கலந்துயர் கழனியம் பணைநீங்கி
அரும்பு மென்மலர் தளிர்பல மூலமென் றணைத்தின்ஆ கரமான
மருங்கில் நந்தன வனம்பணிந் தணைந்தனர் மாடமா ளிகையோங்கி
நெருங்கு தில்லைசூழ் நெடுமதில் தென்திரு வாயில்நே ரணித்தாக.

2057 "போங்கு கொங்கையிற் கறந்தமெய்ஞ் ஞானமாம் போனகம் பொற்குன்ற
மங்கை செங்கையால் ஊட்டஉண் டருளிய மதலையார் வந்தார்" என்
றங்கண் வாழ்பெருந் திருத்தில்லை அந்தணர் அன்பர்க ளுடன்எண்டி
எங்கும் மங்கல அணிமிக அலங்கரித் தெதிர்கொள அணைவார்கள்.

பா.வே.1. தெரிந்தெழுந்து தெரிந்தெழுந்து
2. தொண்டி ரட்டிவந்
3. வணங்கி. சுரும்பார்ப்ப.
4. நெருங்கு பூகம்.

2057 வேத நாதமும் மங்கல முழக்கமும் விசும்பிடை நிறைந்தோங்கச்
சீத வாசநீர் நிறைகுடந் தீபங்கள் திசைஎலாம் நிறைந்தாரச்
சோதி மாமணி வாயிலின் புறஞ்சென்று சோபன ஆக்கமுஞ் சொல்லிக்
கோதி லாதவர் ஞானசம் பந்தரை எதிர்கொண்டு கொடுபுக்கார். கருடு

2058 செல்வம் மல்கிய தில்லைமூ தூரினில் தென்திசைத் திருவாயில்
எல்லை நீங்கியுள் புகுந்திரு மருங்குநின் றெடுக்கும்எத் தொலிசூழ
மல்லல் ஆவண மறுகிடைக் கழிந்துபோய் மறையவர் நிறைவாழ்க்கைத்
தொல்லை மாளிகை நிரைத்திரு வீதியைத் தொழுதணைந் தனர்தூயோர்.

2059 மலர்ந்த பேரொளி குளிர்தரச் சிவமணங் கமழ்ந்துவான் துகள்மாறிச்
சிலம்பலம்புசே வடியவர் பயில்வுறுஞ் செம்மையால் திருத்தொண்டு
கலந்த அன்பர்தஞ் சிந்தையில் திகழ்திரு வீதிகண் களிசெய்யப்
பலன்கொள் மைந்தனர் எழுநிலைக் கோபுரம் பணிந்தெழுந் தனர்போற்றி.

2060 நீடு நீள்நிலைக் கோபுரத் துள்புக்கு நிலவிய திருமுன்றின்
மாடு செம்பொனின் மாளிகை வலங்கொண்டு வாணுற வளர்திங்கள்
சூடு கின்றபே ரம்பலந் தொழுதுபோந் தருமறை தொடர்ந்தேத்த
ஆடு கின்றவர் முன்புற அணைந்தனர் அணிகிளர் மணிவாயில். கருஅ

2061 நந்தி எம்பிரான் முதற்கண நாதர்கள் நலங்கொள்பன் முறைகூட
அந்த மில்லவர் அணுகிமுன் தொழுதிரு அணுக்கனுந் திருவாயில்
கிந்தை ஆர்வமும் பெருகிடச் சென்னியிற் கிறியசெங் கையேற
உய்ந்து வாழ்திரு நயனங்கள் களிகொள உருகும்அன் பொடுபுக்கார்.

2062 அண்ண லார்தமக் களித்தமெய்ஞ் ஞானமே யானஅம் பலமுந்தம்
உண்ணி றைந்தஞா னத்தெழும் ஆனந்த ஒருபெருந் தனிக்கூத்துங்
கண்ணின் முன்புறக் கண்டுகும் பிட்டெழுங் களிப்பொடுங் கடற்காழிப்
புண்ணி யக்கொழுந் தனையவர் போற்றுவார் புனிதரா டியபொற்பு.

2063 உணர்வின் நேர்பெற வருஞ்சிவ போகத்தை ஒழிவின்றி உருவின்கண்
அணையும் ஐம்பொறி அளவினும் எளிவர அருளினை" எனப்போற்றி
இணையில் வண்பெருங் கருணையே ஏத்திமுன் எடுத்தசொற் பதிகத்தில்
புணரும் இன்னிசை பாடினர் ஆடினர் பொழிந்தனர் விழிமாரி. கசுக

வேறு

2065 ஊழி முதல்வர்க் குரிமைத் தொழில்சிறப்பால்
வாழி திருத் தில்லைவாழ் அந்தணரை முன்வைத்தே
ஏழிசையும் ஓங்க எடுத்தார் எமையாளும்
காழியர்தங் காவலனார் "கற்றுங் கெரியோம்பி". கசுஉ

2066 பண்ணூர் பதிகத் திருக்கடைக்காப் புப்பரவி
உண்ணூடும் என்பும் உயிருங் கரைந்துருக்கும்
விண்ணு யகன்கூத் தர்வெட்டவெளி யேதிளைத்துக்
கண்ணு ரமுதுண்டார் காலம் பெறஅழுதார். கசுஙு

---

* 1 பா.வே. அலம்புமன்கேழ். 2. புலவர்கோன்
3 வலம்கொள்வார். 4. திருத்தகு ய.
5 வெள்ளைவெளி.

2067 முன்மால் அயன்அறியா மூர்த்தியார் முன்னின்று
சொன்மாலை யாற்காலம் எல்லாந் துதித்திறைஞ்சிப்
பன்மா மறைவெள்ளஞ் சூழ்ந்து பரவுகின்ற
பொன்மா ளிகையைவலங் கொண்டு புறம்போந்தார். ககூச

2068 செல்வத் திருமுன்றில் தாழ்ந்தெழுந்து தேவர்குழாம்
மல்குந் திருவாயில் வந்திறைஞ்சி மாதவங்கள்
நல்குந் திருவீதி நான்குந் தொழுதங்கண்
அல்குந் திறம்அஞ்சு வார்சண்பை ஆண்டகையார். ககூடு

2069 செய்ய சடையார் திருவேட் களஞ்சென்று
கைதொழுது சொற்பதிகம் பாடிக் கழுமலக்கோன்
வைகி அருளுமிடம் அங்காக மன்றுடும்
ஐயன் திருக்கூத்துக் கும்பிட் டணைவுறுநாள். ககூக

2070 கைம்மான் மறியார் கழிப்பாலை யுள்ளணைந்து
மெய்ம்மாலைச் சொற்பதிகம் பாடி விரைக்கொன்றைச்
செம்மாலை வேணித் திருவுச்சி மேவியுறை
அம்மானைக் கும்பிட் டருந்தமிழும் பாடினார். ககூஎ

2071 பாடும் பதிகஇசை யாழ்ப்பாண ரும்பயிற்றி
நாடுஞ் சிறப்பெய்த நாளுநடம் போற்றுவார்
நீடுந் திருத்தில்லை அந்தணர்கள் நீள்மன்றுள்
ஆடுங் கழற்கணுக்க ராம்பே றதிசயிப்பார். ககூஅ

2072 ஆங்கவர்தஞ் சீலத் தளவின் மையுணினைந்தே
ஓங்கி எழுங்காதல் ஒழியாத உள்ளத்தார்
தேங்கமழுஞ் சோலைத் திருவேட் களங்கடந்து
பூங்கிடங்கு சூழ்புலியூர்ப் புக்கணையும் போழ்தின்கண். ககூக

2073 அண்டத் திறைவர் அருளால் அணிதில்லை
மூண்டத் திருநீற்று மூவா யிரவர்களும்
தொண்டத் தகைமைமைக் கணநாத ராய்த்தோன்றக்
கண்டப் பரிசுபெரும் பாணர்க்குங் காட்டினார். களO

2074 செல்வம் பிழிவழியாத் தில்லைவாழ் அந்தணரும்
எல்லையில்சீர்ச் சண்பை இளவே றெழுந்தருளி
ஒல்லை இறைஞ்சாமுன் தாமும் உடன்இறைஞ்சி
மல்லல் அணிவீதி மருங்கணைய வந்தார்கள். களக

2075 பொங்கி எழுங்காதல் புலனுகப் பூசுரர்தம்
சிங்கம் அனையார் திருமுடியின்மேற்குவித்த
பங்கயத்தின் செவ்வி பழித்து வனப்போங்கும்
செங்கை யொடுஞ்சென்று திருவாயி லுட்புக்கார். களஉ

பா.வே.1 ஆவார். 2. டீடீற்றினார்.

2076 ஒன்றிய சிந்தை உருக உயர்மேருக்
குன்றனைய பேரம் பலமருங்கு கும்பிட்டு
மன்றுள் நிறைந்தாடும் மாணிக்கக் கூத்தர்எதிர்
சென்றணைந்து தாழ்ந்தார் திருக்களிற் றுப்படிக்கீழ். களசு

வேறு

2077 "ஆடி னுய்நறு நெய்யொடு பால்தயிர்" என்றெடுத் தார்வத்தால்
பாடி னுர்பின்னும் அப்பதி கத்தினிற் பரவிய பாட்டொன்றில்
நீடு வாழ்தில்லை நான்மறை யோர்தமைக் கண்டஅந் நிலைஎல்லாம்
கூடு மாறுகோத் "தவர்தொழு தேத்துசிற் றம்பலம்" எனக்கூறி. களச

2078 இன்ன தன்மையில் இன்னிசைப் பதிகமுந் திருக்கடைக் காப்பேத்தி
மன்னும் ஆனந்த வெள்ளத்தில் திளைத்தெதிர் வந்துமுன் நின்றுடும்
பின்னு வார்சடைக் கூத்தர்பே ரருள்பெறப் பிரியாத விடைபெற்றுப்
பொன்னின் அம்பலஞ் சூழ்ந்துதாழ்ந் தெழுந்துபோந் தணைந்தனர் புறமுன்றில்.

2079 அப்பு றத்திடை வணங்கிஅங் கருளுடன் அணிமணித் திருவாயில்
பொற்பு றத்தொழு தெழுந்துடன் போதரப் போற்றிய புகழ்ப்பாணர்
நற்ப தந்தொழு "தடியனேன் பதிமுதல் நதிநிவாக் கரைமேய
ஒப்பில் தானங்கள் பணிந்திடவேண்டும்" என் றுரைசெயஅதுநேர்வார்.

2080 போங்கு தெண்திரைப் புனிதநீர் நிவாக்கரைக் குடதிசை மிசைப்போந்து
தங்கு தந்தையா ருடன்பரி சனங்களுந் தவமுனி வருஞ்செல்லச்
செங்கை யாழ்த்திரு நீலகண் டப்பெரும் பாணனு ருடன்சேர
மங்கை யார்புகழ் மதங்கசூ ளாமணி யாருடன் வரவந்தார். களஎ

2081 இருந்த டங்களும் பழனமும் கடந்துபோய் எருக்கத்தம் புலியூரின்
மருங்கு சென்றுற நீலகண் டப்பெரும் பாணனூர் வணங்கிக்"கார்
நெருங்கு சோலைசூழ் இப்பதி அடியனேன் பதி"என நெடிதின்புற்
றருங்க லைச்சிறு மழஇளங் களிறனூர் அங்கணைந் தருள்செய்வார்.

2082 "ஐயர் நீர்அவ தரித்திட இப்பதி அளவில்மா தவம்முன்பு
செய்த வா"றெனச் சிறப்புரைத் தருளிஅச் செழும்பதி இடங்கொண்ட
மைகொள் கண்டர்தங் கோயிலி னுட்புக்கு வலங்கொண்டு வணங்கிப்பார்
உய்ய வந்தவர் செழுந்தமிழ்ப் பதிகம்அங் கிசையுடன் உரைசெய்தார்.

2083 அங்கு நின்றெழுந் தருளிமற் றவருடன் அம்பொன்மா மலை
வல்லி, பங்கர் தாம்இனி துறையுநற் பதிபல பரிவொடும் பணிந்தேத்
தித், துங்க வண்தமிழ்த் தொடைமலர் பாடிப்போய்த் தொல்லைவெங்
குருவேந்தர், செங்க ணேற்றவர் திருமுது குன்றினைத் தொழுது
சென் றணைகின்றார். கஅ0

2084 "மோய்கொள் மாமணி கொழித்துமுத் தாறுசூழ் முதுகுன்றை
அடைவோம்" என், றெய்து சொன்மலர் மாலைவண் பதிகத்தை இசை

பா. பே. 1. நின்னுவார்த்தை.
2. நின்றனைக் கொன்றெரு ணைனின்றார்.

யொடும் புனைந்தேத்திச், செய்தவத்திரு முனிவரும் தேவரும் திசை யெலாம் நெருங்கப்புக், கையர் சேவடி பணியும்அப் பொருப்பினில் ஆதர வுடன்சென்றார். கஅக

2085 வான நாயகர் திருமுது குன்றினை வழிபட வலங்கொள்வார்
தூய தமிழ்ச் சொல்லிருக் குக்குறட் டுணைமலர் மொழிந்தேத்தி
ஞான போனகர் நம்பர்தங் கோயிலை நண்ணிஅங் குள்புக்குத்
தேன லம்புதண் கொன்றையார் சேவடி திளைத்தஅன் பொடுதாழ்ந்தார்.

2086 தாழ்ந்தெ ழுந்துமுன் "மூரசதிர்ந் தெழும்"எனுந் தண்டமிழ்த் தொடைசாத்தி, வாழ்ந்து போந்தங்கண் வளம்பதி அதனிடை வைகு வார் மணிவெற்புச், சூழ்ந்த தண்புனல் சுலவு" முத் தாறெறு" தொடுத்தசொல் தொடைமாலை, வீழ்ந்த காதலாற் பலமுறை விளம் பியே மேவினர் சிலநாள்கள். கஅங

2087 ஆங்கு நாதரைப் பணிந்துபெண் ணைகடம் அணைந்தரு மறையோசை ஓங்கு தூங்கானை மாடத்துள் அமர்கின்ற ஒருதனிப் பரஞ்சோதிப் பாங்க ணைந்துமுன் வலங்கொண்டு பணிவுற்றுப் பரவுசொல் தமிழ்மாலை "தீங்கு நீங்குவீர் தொழுமின்கள்" எனும்இசைப் பதிகமும் தெரிவித்தார்.

வேறு

2088 கருவ ரைப்பிற் புகாதவர் கைதொழும்
ஒருவ ரைத்தொழு துள்ளம் உவந்துபோய்ப்
பெருவ ரத்தினிற் பெற்றவர் தம்முடன்
திருவ ரத்துறை சேர்துமென் றேகுவார். கஅஙி

2089 முந்தை நாள்கள் ஒரோவொரு கால்முது
தந்தை யார்பியன் மேலிருப் பார்தவிர்ந்
தந்த ணாளர்4அவரரு கேசெலச்
சிந்தை செய்விருப் போடுமுன் சென்றனர். கஅசு

2090 ஆதி யார்தம் அரத்துறை நோக்கியே
காத லால்அணை வார்கடி தேகிடத்
தாதை யாரும் பரிவுறச் சம்பந்தர்
பாத தாமரை நொந்தது பைப்பய. கஅள

2091 மறைய னேத்தும் ஒருவடி வாமென
நிறைம திப்பிள்ளை நீள்நிலஞ் சேர்ந்தெனத்
துறைஅ லைக்கங்கை சூடும் அரத்துறை
இறைவ ரைத்தொழு வான்விரைந் தேகினர். கஅஅ

2092 பாச மற்றில ராயினும் பார்மிசை
ஆசை சங்கரற் காயின தன்மையால்

பா.வே. 1. இறைஞ்சுகின்றபொழு
2. தினைத்தெய்யவுயர் மலர்வீழ்ந்தனை.
3. தேமென்றேகினர்: சேறுமென்றேகினர்.
4 அவர்க்கு

தேசு மிக்க திருவுரு வானவர்
ஈச னேத்தொழு தேதொழு தேகினர். ககக

2093 இந்த மாநிலத் தின்இருள் நீங்கிட
வந்த வைதிக மாமணி யானவர்
சிந்தை ஆரமு தாகிய செஞ்சடைத்
தந்தை யார்கழல் தாழ்ந்தெழுந் தேகினர். ககo

2094 மாறன் பாடி எனும்பதி வந்துற
ஆறு செல்வருத் தத்தின் அசைவினுல்
வேறு செல்பவர் வெய்துறப் பிள்ளையார்
ஏறும் அஞ்செழுத் தோதிஅங் கெய்திட. ககக

2095 உய்ய வந்தசம் பந்த ருடன்வந்தார்க்
கெய்து வெம்மை இளைப்பஞ்சி னன்போலக்
கைகள் ஆயிரம் வாங்கிக் கரந்துபோய்
வெய்ய வன்சென்று மேல்கடல் வீழ்ந்தனன். ககஉ

2096 அற்றை நாள்இர வப்பதி யின்னிடைச்
சுற்று நீடிய தொண்டர்கள் போற்றிடப்
பெற்றம் ஊர்ந்த பிரான்கழல் பேணுவார்
வெற்றி மாதவத் தோருடன் மேவினர். ககங

2097 இந்நி லக்கண் எழில்வளர் பூந்தராய்
மன்ன னர்தம் வழிவருத் தத்தினை
அன்ன மாடுந் துறைநீர் அரத்துறைச்
சென்னி யாற்றர் திருவுளஞ் செய்தனர். ககச

2098 ஏறு தற்குச் சிவிகை இடக்குடை
கூறி ஊதக் குலவுபொற் சின்னங்கள்
மாறில் முத்தின் படியினுல் மன்னிய
நீறு (உ)வந்த நிமலர் அருளுவார். ககஞ

2099 நீடு வாழ்பதி யாகும்நெல் வாயிலின்
மாட மாமனை தோறும் மறையோர்க்குக்
கூடு கங்குல் கனவில் குலமறை
தேடு சேவடி தோன்றமுன் சென்றுபின். ககசு

2100 " ஞான சம்பந்தன் நம்பால் அணைகின்றான்
மான முத்தின் சிவிகை மணிக்குடை
யான சின்னம்நம் பாற்கொண் டருங்கலைக்
கோன வன்பால் அணைந்து கொடும்"என. ககஎ

2101 அந்த ணாளர் உரைத்தஅப் போழ்தினில்
வந்து கூடி மகிழ்ந்தற் புதமுறுஞ்

பா. வே. 1. தோன்றாரே. 2 அந்தணாளர்த் தொழுது.

சிந்தை யோடுஞ் செழுநீர் அரத்துறை
இந்து சேகரர் கோயில்வந் தெய்தினர். ககூஅ

2102 ஆங்கு மற்ற அருள்அடி யாருடன்
ஓங்கு கோயிலுள் ளார்க்குமுண் டாயிட
"ஈங்கி தென்ன அதிசயம்" என்பவர்
தாங்கள் அம்மறை யோர்கள்முன் சாற்றினர். ககூக

2103 சால மிக்க வியப்புறு தன்மையின்
பால ராதலும் பள்ளி எழுச்சியின்
காலம் எய்திடக் காதல்[2] வழிப்படும்
சீல மிக்கார் திருக்காப்பு நீக்கினர். உ00

2104 திங்கள் நீர்மைச் செழுந்திரள் முத்தினல்
துங்க வெண்குடை தூய சிவிகையும்
பொங்க ஊதும் பொருவருஞ் சின்னமும்
அங்கண் நாதர் அருளினற் கண்டனர். உ0க

2105 கண்ட பின்அவர் கைதலை மேற்குவித்
"தெண்டி சைக்கும் விளக்கிவை யாம்"எனத்
தொண்ட ரோடும் மறையவர் சூழ்ந்தெழுந்
தண்டர் நாடும் அறிவுற ஆர்த்தனர். உ0உ

2106 சங்கு துந்துபி தாரைபே ரிம்முதல்
பொங்கு பல்லிய நாதம் பொலிந்தெழ
அங்க ணன்அரு ளால்அவை கொண்டுடன்
பொங்கு காதல் எதிர்கொளப் போதுவார். உ0ங

2107 மாசில் வாய்மைநெல் வாயின் மறையவர்
ஆசில் சீர்ச்சண்பை ஆண்டகை யார்க்கெதிர்
தேசு டைச்சிவி கைமுத லாயின
ஈசர் இன்னரு ளால்தாங்கி ஏகினர். உ0ச

2108 இத்த லஇவர் இன்னணம் ஏகினர்
அத்த லச்சண்பை நாதர்க்கும் அவ்விரா
முத்த நற்சிவி கைமுத லாயின
உய்த்த ளிக்கும் படிமுன் உணர்த்துவார். உ0ரு

2109 அள்ளல் நீர்வயல் சூழும் அரத்துறை
வள்ள லார்"நாம் மகிழ்ந்தளிக் கும்அவை
கொள்ள லாகுங்கொண் டுய்த்தல்செய் வாய்"என
உள்ள வாறருள் செய்ய உணர்ந்தபின். உ0க

2110 சண்பை யாளியார் தாங்கண்ட[4] மெய்யருட்
பண்பு தந்தையார் தம்முடன் பாங்கமர்

பா-வே. 1. பாலநாயனும் 2. வெளிப்படும் 3. இத்தலவர்
4. பெருமை : மெய்ப்பொருள்

தொண்ட ருக்கருள் செய்து[1] தொழாமுனம்
விண்பு லப்பட வீங்கிருள் நீங்கலும். உ0ள

2111 மாலை யாமம் புலர்வு றும் வைகறை
வேலை செய்வினை முற்றிவெண் ணீறணி
கோல மேனிய ராய்க்கைம் மலர்குவித்
தேல அஞ்செழுத் தோதி எழுந்தனர். உ0அ

2112 போத ஞானப் புகலிப் புனிதரைச்
சீத முத்தின் சிவிகைமேல் ஏற்றிடக்
காதல் செய்பவன் போலக் கருங்கடல்
மீது தேரின்வந் தெய்தினன் வெய்யவன். உ0கூ

2113 ஆய போழ்தின் அரவெனும் ஆர்ப்புடன்
தூய முத்தின் சிவிகை சுடர்க்குடை
மேய சின்னங்கள் கொண்டுமெய் யன்பரோ
டேய அந்தணர் தாமெதிர் தோன்றினர். உகo

2114 வந்து தோன்றிய அந்தணர் மாதவர்
கந்த வார்பொழில் காழிநன் னுடர்முன்
" அந்த மில்சீர் அரத்துறை ஆதியார்
தந்த போருள் தாங்குவீர் " என்றனர். உகக

2115 என்று தங்களுக் கீசர் அருள்செய்த(து)
ஒன்றும் அங்கொழி யாமை உரைத்துமுன்
நின்று போற்றித்[2] தொழுதிட " நேர்ந்தது
மன்று ளார்அருள் " என்று வணங்கினர். உகஉ

2116 " எந்தை ஈசன் "[3] எனஎடுத் " திவ்வருள்
வந்த வாறுமற்[4] றெவ்வண மோ " என்று
சிந்தை செய்யுந் திருப்பதி கத்திசை
புந்தி யாரப் புகன்றெதிர் போற்றுவார். உகங

2117 "போடி அணிந்த[5] புராணன் அரத்துறை
அடிகள் தம்மரு ளேஇது வாம் " எனப்
படியி லாதசொன் மாலைகள் பாடியே
நெடிது போற்றிப் பதிகம் நிரப்பினர். உகச

2118 மெய்ம்மை போற்றி விடாத விருப்பினல்
தம்மை உன்னும் பரிசுதந் தாள்பவர்
செம்மை நித்தில யானச் சிறப்பருள்
எம்மை யாளுவப் பானின் றளித்ததே. உகஞ

2119 சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீது தாழ்ந்துவெண் ணீற்றொளி போற்றினின்

கள 1. போ. பே.). தொழுமுனம். 2. எழுதுடனேர்ந்து
3. என்றெடுத் தின்னருள். 4. இவ்வண. 5. புராணன்

ரூதி யார்அரு ளாதலில் அஞ்செழுத்
தோதி ஏறினர் உய்ய உலகெலாம். உகசு

வேறு

2120 தொண்டர்ஆர்த்தனர் சுருதிகள் ஆர்த்தன தொல்லை
அண்டர் ஆர்த்தனர் அகிலமும் ஆர்ப்புடன் எய்தக்
கொண்டல் ஆர்த்தன முழவமும் ஆர்த்தன குழுமி
வண்ட ரூப்பொலி மலர்மழை ஆர்த்தது வானம். உகள

2121 வளையும் ஆர்த்தன வயிர்களும் ஆர்த்தன மறையின்
இளையும் ஆர்த்தன இளைஞரும் ஆர்த்தனர் கெழுவும்
களைகண் ஆர்த்தமதோர் கருணையின் ஆர்த்தன முத்து
விளையு மாக்கதிர் வெண்குடை ஆர்த்தது மிசையே. உகஅ

2122 பல்கு வெண்கதிர்ப் பத்திசேர் நித்திலச் சிவிகைப்
புல்கு நீற்றொளி யுடன்பொலி புகவிகா வலனுர்
அல்கு வெள்வளை அலைத்தெழு மணிநிரைத் தரங்கம்
மல்கு பாற்கடல் வளர்மதி உதித்தென வந்தார். உகக

2123 நீடு தொண்டர்கள் மறையவர் ஏனையோர் நெருங்கி
மாடு கொண்டெழு மகிழ்ச்சியின் மலர்க்கைமேல் குவித்தே
ஆடு கின்றனர் அயர்ந்தனர் அளவில்ஆ னந்தம்
கூடு கின்றகண் பொழிபுனல் வெள்ளத்தில் குளித்தார். உஉ0

2124 செய்ய பொன்புனை வெண்தர ளத்தணி சிறக்கச்
சைவ மாமறைத் தலைவர்பால் பெறுந்தனிக் காளம்
வையம் ஏழுடன் மறைகளும் நிறைதவத் தோரும்
"உய்ய ஞானசம் பந்தன்வந் தான்"என ஊத. உஉக

2125 சுற்று மாமறைச் சுருதியின் பெருகொலி நடுவே
தெற்றி னர்புரம் எரித்தவர் தருதிருச் சின்னம்
"முற்றும் ஆனவள் ஞானமே முலைசுரந் தூட்டப்
பெற்ற பாலரு வாயன்வந் தான்"எனப் பிடிக்க. உஉஉ

2126 புணர்ந்த மெய்த்தவக் குழாத்தொடும் போதுவார் முன்னே
இணைந்த நித்திலத் திலங்கொளி நலங்கிளர் தாரை
"அணைந்த மாமறை முதற்கலை அகிலமும் ஓதா
துணர்ந்த முத்தமிழ் விரகன்வந் தான்"என ஊத. உஉங

2127 தெருளு மெய்க்கலை விளங்கவும் பாருளோர் சிந்தை
இருளும் நீங்கவும் எழுதுசொன் மறைஅளிப் பவர்தாம்
பொருளும் ஞானமும் போகமும் போற்றிஎன் பாருக்
கருளும் அங்கணர் திருஅரத் துறையுளவந் தணைந்தார். உஉச

பா.வே. 1. கினைவயிரூற் கலைன்மூழ்தும்
2. தோரூரதை யனபதிக்.

2128 வந்து கோபுர மணிநெடு வாயில்சேய்த் தாகச்
சந்த நித்திலச் சிவிகைநின் றிழிந்துதாழ்ந் தெழுந்து
சிந்தை ஆர்வமும் மகிழ்ச்சியும் பொங்கிமுன் செல்ல
அந்தி நாண்மதி அணிந்தவர் கோயிலுள் அடைந்தார். உஉடு

2129 மன்னு கோயிலை வலங்கொண்டு திருமுன்பு வந்து
சென்னி யிற்கரங் குவித்துவீழ்ந் தன்பொடு திளைப்பார்
"என்னை யும்பொரு ளாகஇன் னருள்புரிந் தருளும்
பொன்ன டித்தலத் தாமரை போற்றி" என் றெழுந்தார். உஉசு

வேறு

2130 சூடி னர்கர கமலங்கள் சொரிந்திழி கண்ணீர்
ஆடி னர்திரு மேனியில் அரத்துறை விரும்பி
நீடி னர்திரு அருட்பெருங் கருணையே நிகழப்
பாடி னர்திருப் பதிகம்இவ ழிசையொடும் பயில. உஉள

2131 இசைவி ளங்கிட இயல்பினிற் பாடிகின் றேத்தி
மிசைவி ளங்குநீர் வேணியார் அருளினுல் மீண்டு
திசைவி ளங்கிடத் திருவருள் பெற்றவர் சிலநாள்
அசைவில் சீர்த்தொண்டர் தம்முடன் அப்பதி அமர்ந்தார். உஉஅ

2132 தேவர் தம்பிரான் திருஅரத் துறைபினில் இறைஞ்சி
மேவு நாட்களில் விமலனர் நெல்வெண்ணெய் முதலாத்
தாவில் அன்பர்கள் தம்முடன் தொழுதுபின் சண்பைக்
காவ லார்அருள் பெற்றுடன் கலந்துமீண் டணைந்தார். உஉக

2133 விளங்கு வேணுபு ரத்திருத் தோணிவீற் றிருந்த
களங்கொள் கண்டர்தங் காதலி யாருடன் கூட
உளங்கொ ளப்புகுந் துணர்வினில் வெளிப்பட உருகி
வளங்கொள் பூம்புனற் புகலிமேற் செலமனம் வைத்தார். உஉ0

2134 அண்ண லார்திரு அரத்துறை அடிகளை வணங்கி
நண்ணு பேரரு ளால்விடை கொண்டுபோய் நடங்கொண்
டுண்ணி றைந்தபூங் கழலினை உச்சிமேற் கொண்டே
வெண்ணி லாமலர் நித்திலச் சிவிகைமேற் கொண்டார். உஉக

2135 சிவிகை முத்தினிற் பெருகொளி திசைஎலாம் விளக்கக்
கவிகை வெண்மதிக் குளிரொளி கதிர்செய்வான் கலப்பக்
குவிகை மேற்கொண்டு மறையவர் குணிலையிட் டாடப்
புவிகைம் மாறின்றிப் போற்றவந் தருளினர் போந்தார். உஉஉ

2136 மறைமு ழங்கின தழங்கின வண்தமிழ் வழிபிரின்
குறைந ன்றன முரன்றன வளைக்குலங் காளம்

பரி. பே. 1. விரிக்க. 2. கானம்.

1 முறைஇ யம்பின இயம்பல ஒலித்தன முரசப்
பொறை கறங்கின பிறங்கின போற்றிசை அரவம். உஙங

2137 உடைய பிள்ளையார் வருமெல்லை உள்ளப் பதியோர்
புடைஇ ரண்டி-னுங் கொடியொடு பூந்துகில் விதானம்
நடைசெய் காவணந் தோரணம் பூகநற் கதலி
மிடையு மாலைகள் நிறைகுடம் விளக்கொடு நிரைத்தார். உஙச

2138 அனைய செய்கையால் எதிர்கொளும் பதிகளா னவற்றின்
வினைத ரும்பவந் தீர்ப்பவர் கோயில்கள் மேவிப்
புனையும் வண்டமிழ் மொழிந்தடி பணிந்துபோந் தணைந்தார்
பனைநெ டுங்கைமா உரித்தவர் மகிழ்பெரும் பழுவூர். உஙரி

வேறு

2139 அங்கணைந் திளம்பிறை அணிந்த சென்னியார்
பொங்கெழிற் கோபுரந் தொழுது புக்கபின்
துங்கநீள் விமானத்தைச் சூழ்ந்து வந்துமுன்
பங்கயச் சேவடி பணிந்து பாடுவார். உஙசு

2140 மண்ணினிற் பொலிகுல மலையர் தாந்தொழு
தெண்ணில்சீர்ப் பணிகள்செய் தேத்துந் தன்மையில்
நண்ணிய வகைகிறப் பித்து நாதரைப்
பண்ணினில் திகழ்திருப் பதிகம் பாடினார். உஙஎ

2141 பாவின திசைவழி பாடி அங்ஙகன்
றியாவருந் தொழுதுடன் ஏத்த எய்தினர்
மூவுல குய்யநஞ் சுண்ட மூர்த்தியார்
மேவிய பெருந்திரு விசய மங்கையில். உஙஅ

2142 அந்தணர் விசயமங் கையினில் அங்கணர்
தந்தனி ஆலயஞ் சூழ்ந்து தாழ்ந்துமுன்
வந்தனை செய்துகோ தனத்தை மன்னிய
செந்தமிழ் மாலையிற் சிறப்பித் தேத்தினர். உஙசு

2143 விசயமங் கையினிடம் அகன்று மெய்யர்தாள்
அசைவில்வை காவினில் அணைந்து பாடிப்போந்
திசைவளர் ஞானசம் பந்தர் எய்தினர்
திசையுடை ஆடையர் திருப்பு றம்பயம். உசo

2144 புறம்பயத் திறைவரை வணங்கிப் போற்றிசெய்
திறம்புரி நீர்மையிற் பதிகச் செந்தமிழ்
நிறம்பயில் இசையுடன் பாடி நீடிய
அறந்தரு கொள்கையார் அமர்ந்து மேவினார். உசசு

பா.வே.1. பனை. 2 போற்றி ஒலி. 3. பாவின திசைவழி

2145 அத்திருப் பதிபணிந் தகன்று போய்அனல்
கைத்தலத் தவர்பதி பிறவுங் கைதொழு
மூத்தமிழ் விரகராம் முதல்வர் நண்ணினர்
செய்த்தலைப் பணிலமுத் தீனுஞ் சேய்ஞலூர். உசஉ

2146 திருமலி புகலிமன் சேரச் சேய்ஞலூர்
அருமறை யவர்பதி அலங்க ரித்துமுன்
பெருமறை யொடுமுழ வொலிபி றங்கவே
வருமுறை எதிர்கொள வந்து முந்தினர். உசங

2147 ஞானசம் பந்தரும் "நாய னுர்சடைத்
தூநறுந் தொடையல்முன் சூட்டும் பிள்ளையார்
பான்மையில் வரும்பதி" என்று நித்தில
யானமுன் இழிந்ததிர் இறைஞ்சி எய்தினர். உசச

2148 மாமறை யாளர்வண் புகலிப் பிள்ளையார்
தாமெழுந் தருளிடத் தங்கள் பிள்ளையார்
காமரும் பதியில்வந் தருளக் கண்டனர்
ஆமகிழ் வுடன்பணிந் தாடி ஆர்த்தனர். உசடு

2149 களித்தனர் புண்ணியக் கரக வாசநீர்
தெளித்தனர் பொரிகளும் மலருஞ் சிந்தினர்
துளித்தனர் கண்மழை சுருதி ஆயிரம்
அளித்தவர் கோயிலுள் அவர்முன் பெய்தினர். உசசு

2150 வெங்குரு வேந்தரும் விளங்கு கோயிலைப்
பொங்கிய விருப்பினுற் புடைவ லங்கொடு
செங்கைகள் சென்னிமேற் குவித்துச் சென்றுபுக்
கங்கணர் முன்புற அணைந்து தாழ்ந்தனர். உசள

2151 வேதியர் சேய்ஞலூர் விமலர் தங்கழல்
காதலிற் பணிந்தவர் கருணை போற்றுவார்
தாதைதாள் தடிந்தசண் டீசப் பிள்ளையார்
பாதகப் பயன்பெறும் பரிசு பாடினர். உசஅ

2152 இன்னிசை வண்தமிழ் பாடி ஏத்தியே
நன்னெடும் பதியுளோர் நயக்க வைகிய
பின்னர்வெண் பிறையணி வேணிப் பிஞ்ஞகர்
மன்னிய திருப்பனந் தாள்வ ணங்கினர். உசக

2153 ஆங்கணி சொன்மலர் மாலை சாத்திஅப்
பாங்குபந் தணைநலூர் பணிந்து பாடிப்போய்த்
தீங்குதீர் மாமறைச் செம்மை அந்தணர்
ஓங்கும்ஓ மாம்புலி யூர்வந் தடைந்தனர். உருo

பா. வே. பாதபந்தாயம் பெறும்

2154 மற்றநற் பதிவட தளியின் மேவிய
அற்புதர் அடிபணிந் தலர்ந்த செந்தமிழ்ச்
சொற்றொடை பாடிஅங் ககன்று சூழ்மதில்
பொற்பதி வாழ்கொளி புத்தூர் புக்கனர். உருக

2155 சீர்வளர் கோயிலே அணைந்து தேமலர்க்
கார்வளர் கண்டர்தாள் பணிந்து காண்பவர்
பார்புகழ் பதிகங்கள் பாடி நீடுவார்
வார்பொழிற் கடம்பையும் வணங்கி வாழ்ந்தனர். உருஉ

2156 நம்பரை நலந்திகழ் நாரை யூரினில்
கும்பிடும் விருப்பொடு குறுகிக் கூடிய
வம்பலர் செந்தமிழ் மாலை பாடிநின்
றெம்பிரான் கவுணியர் தலைவர் ஏத்தினர். உருங

2157 அப்பதி பணிந்தருந் தமிழ்பு னைந்துதம்
மெய்ப்படு விருப்பொடு மேவு நாள்அரன்
பொற்பதி பலவும்முன் பணிந்து போந்தனர்
பைப்பணி யவர்கருப் பறிய லூரினில். உருச

2158 பரமர்தந் திருக்கருப் பறிய லூரினைச்
சிரபுரச் சிறுவர்கை தொழுது செந்தமிழ்
உரைஇசை பாடிஅம் மருங்கின் உள்ளவாம்
சுரர்தொழும் பதிகளும் தொழுது பாடினர். உருஞ

வேறு

2159 மண்ணுலகு செய்ததவப் பயனு யுள்ள வள்ளலார் அப்பதிகள் வணங்கி ஏகி, எண்ணில்முர சிரங்கிஎழப் பணிலம் ஆர்ப்ப இலங்கியகா ளஞ்சின்னம் எங்கும் ஊதக், கண்வளர்மென் கரும்புமிடை கதிர் செஞ் சாலிக தலிகழு குடனேங்குங் கழனி நாட்டுத், தெண்ணிலவு சூடியதம் பெருமான் வைகும் திருப்பிரம புரஞ்சாரச் செல்லும் போது. உருசு

2160 பிள்ளையார் எழுந்தருளக் கேட்ட செல்வப் பிரமபுரத் தருமறை யோர் பெருகு காதல், உள்ளமகிழ் சிறந்தோங்கத் தோணி மேவும் உமைபாகர் கழல்வணங்கி உவகை கூர, வெள்ளமறை ஒலிபெருகு மறுகு தோறும் மிடைமகர தோரணங்கள் கதலி பூகம், தெள்ளுபுனல் நிறைகுடங்கள் தீப தூபம் செழுங்கொடிகள் நிரைத்திதிர்கொள் சிறப்பிற் செல்வார். உருள

2161 ஆரணங்கள் மதுரவொலி எழுந்து பொங்க அரசிலையுந் தருப் பையும்பெய் தணிந்த வாசப், பூரணகும் பங்கள்நிறை கரகம் ஏந்திப் புதுமலரும் நறுந்துகளும் பொரியுந் தூவி, வாரணங்கு முலைஉமை

பா.வே.1. மீண்டனர்:
2. பரமன் தங்கிழல் கருப்பறிய லூரினில்.

யாள் குழைத்த செம்பொன் வள்ளத்தில் அமுதுண்ட வள்ள லாரைச், சீரணங்கு மணிமுத்தின் சிவிகை மீது செழுந்தரளக் குடை நிழற்கீழ்ச் சென்று கண்டார். உருஅ

2162 கண்டபொழு தேகைகள் தலைமேற் கொண்டு கண்களிப்ப மனங் களிப்பக் காதல் பொங்கித், தொண்டர்களும் மறையவருஞ் சென்று சூழ்ந்து சொல்லிறந்த மகிழ்ச்சியினல் துதித்த ஓசை, எண்திசையும் நிறைவித்தார் ஆடை வீசி இருவிசும்பின் வெளிதூர்த்தார் ஏறு சீர்த்தி, வண்டமிழ்நா யகரும்இழிந் தெதிரே சென்று வணங்கிஅவ ருடன்கூடி மகிழ்ந்து புக்கார். உருக

2163 திங்கள்அணி மணிமாடம் மிடைந்த வீதி சென்றணைந்து தெய்வ மறைக் கற்பின் மாதர், மங்கலவாழ்த் திசைஇரண்டு மருங்கு மல்க வானவர்நா யகர்கோயில் மருங்கு சார்ந்து, துங்கநீலக் கோபுரத்தை இறைஞ்சிப் புக்குச் சூழ்ந்துதிருத் தோணிமிசை மேவி னார்கள், தங்கள்திரு முன்புதாழ்ந் தெழுந்து நின்று தமிழ்வேதம் பாடினார் தாளம் பெற்றார். உசுO

2164 பரவுதிருப் பதிகஇசை பாடி நீடும்[1]பரன்கருணைத் திருவருளின் பரிசு போற்றி, விரவுமலர்க் கண்பனிப்பக் கைகள் கூப்பி வீழ்ந்து தெழுந்து புறம்போந்து வேத வாய்மைச், சிரபுரத்துப் பிள்ளையார் செல்லும் போது திருநீல கண்டயாழ்ப் பாணர் பின்னே, வரஅவரை வளம்பெருகு மணியிற் போக அருள்செய்து தந்திருமா ளிகையின் வந்தார். உசுக

2165 மறையவர்கள் அடிபோற்றத் தந்தை யாரும் மருங்கணைய மாளி கையில் அணையும் போதில், நிறைகுடமும் மணிவிளக்கும் முதலா யுள்ள[2]நீதிமறைக் குலமகளிர் நெருங்கி ஏந்த, இறைவர்திரு நீற்றுக் காப் பேந்தி முன்சென் றீன்றதா யார்சாத்தி இறைஞ்சி ஏத்த, முறைமையவர்க் கருள்செய்து மடத்திற் புக்கார் முதல்வர்பால் மணி முத்தின் சிவிகை பெற்றார். உசுஉ

2166 செல்வநெடு மாளிகையில் அமர்ந்து நாளும் திருத்தோணி மிசை யாரைச் சென்று தாழ்ந்து, மல்குதிருப் பதிகங்கள் பலவும் பாடி மனமகிழ்ந்து போற்றிசைத்து வைகு நாளில், ஒல்லைமுறை உபநயனப் பருவம் எய்த உலகிறந்த சிவஞானம் உணரப் பெற்றார்[3]தொல்லை மறை விதிச்சடங்கு மறையோர் செய்யத் தோலொடுநூல் தாங்கினார் சுரர்கள் போற்ற. உசுந

2167 ஒருபிறப்பும் எய்தாமை உடையார் தம்மை உலகியல்பின் உப நயன முறைமை யாகும், இருபிறப்பின் நிலைமையினைச் சடங்கு காட்டி எய்துவிக்கும் மறைமுனிவர் எதிரே நின்று, "வருதிறத்தின் மறை நான்குந் தந்தோம்" என்று மந்திரங்கள் மொழிந்தவர்க்கு மதுர வாக்

1. பரங்கருணை. 2. நீதிமனைக். 3. தொல்லை மனை

கால், பொருவிறப்ப ஓதினார் புகலி வந்த புண்ணியனார் எண்ணிறந்த புனித வேதம். உசுச

2168 சுருதிஆ யிரம்ஓதி அங்க மான தொல்கலைகள் எடுத்தியம்புந் தோன்ற லாரைப், புரிதிஆ யிரகோடி விரிந்தால் என்னப் பரஞ்சோதி அருள்பெற்ற பான்மை மேன்மை, கருதிஆ தரவோடும் வியப்புற் றேத்துங் கலிமறையோர் கவுணியனார் தம்மைக் கண்முன், வருதியா னப்பொருளென் றிறைஞ்சித் தாமுன் வல்லமறை கேட்டையந் தீர்ந்து வாழ்ந்தார். உசுரி

2169 மந்திரங்க ளானஎலாம் அருளிச் செய்து மற்றவற்றின் வைதிக நூற் சடங்கின் வந்த, சிந்தைமயக் குறும்ஐயந் தெளிய எல்லாம் செழுமறையோர்க் கருளிஅவர் தெருளும் ஆற்றல், முந்தைமுதன் மந்திரங்கள் எல்லாந் தோன்றும் முதலாகும் முதல்வனார் எழுத்தஞ் சென்பார், "அந்தியினுள் மந்திரம்அஞ் செழுத்து மே"என் றஞ் செழுத்தின் திருப்பதிகம் அருளிச் செய்தார். உசுக

2170 அத்தகைமை பிள்ளையார் அருளிச் செய்ய அந்தணர்கள் அருள் தலைமேற் கொண்டு தாழ்ந்து, சித்தமகிழ் வொடுசிறப்பத் தாழுந் தெய்வத் திருத்தோணி அமர்ந்தாரைச் சென்று தாழ்ந்து, மெய்த்த இசைப் பதிகங்கள் கொண்டு போற்றி விரைமலர்த்தாள் மனங் கொண்டு மீண்டு போந்து, பத்தருடன் இனிதமரும் பண்பு கூடப் பரமர்தாள் பணிந்தேத்திப் பயிலும் நாளில். உசுள

வேறு

2171 பந்தணை மெல்விர லாளும் பரமரும் பாய்விடை மீது
வந்துபொன் வள்ளத் தளித்த வரம்பில்ஞா னத்தமு துண்ட
செந்தமிழ் ஞானசம் பந்தர் திறங்கேட்டி றைஞ்சுதற் காக
அந்தணர் பூந்தராய் தன்னில் அணைந்தனர் நாவுக் கரையர். உசுஅ

2172 "வாக்கின் பெருவிறல் மன்னர் வந்தணைந் தார்"எனக் கேட்டுப்
பூக்கமழ் வாசத் தடஞ்சூழ் புகலிப் பெருந்தகை யாரும்
"ஆக்கிய நல்வினைப் பே"றென் றன்பர் குழாத்தொடும் எய்தி
ஏற்கும் பெருவிருப் போடும் எதிர்கொள எய்தும் பொழுதில். உசுக

2173 சிந்தை இடையுறு அன்பும் திருமேனி தன்னில் அசைவும்
கந்தம் மிகையாங் கருத்தும் கைஉழ வாரப் படையும்
வந்திழி கண்ணீர் மழையும் வடிவிற் பொலிதிரு நீறும்
அந்தமி லாத்திரு வேடத் தரசும் எதிர்வந் தணைய. உஎ0

2174 கண்ட கவுணியக் கன்றும் கருத்திற் பரவுமெய்க் காதல்
"தொண்டர் திருவேடம் நேரே தோன்றிய" தென்று தொழுதே
அண்டரும் போற்ற அணைந்தங் கரசும் எதிர்வந் திறைஞ்ச
மண்டிய ஆர்வம் பெருக மதுர மொழிஅருள் செய்தார். உஎக

2175 பேரிசை நாவுக் கரசைப் பிள்ளையார் கொண்டுடன் போந்து
போர்விடை யார்திருத் தோணிப் பொற்கோயி லுட்புகும் போதில்
ஆர்வம் பெருக அணையும் அவருடன் கும்பிட் டருளால்
சீர்வளர் தொண்ட சைக்கொண்டு திருமா ளிகையினிற் சேர்ந்தார்.

2176 அணையுந் திருத்தொண்டர் தம்மோ டாண்ட அரசுக்கும் அன்பால்
இணையில் திருவமு தாக்கி இயல்பால் அமுதுசெய் வித்துப்
புணரும் பெருகன்பு நண்பும் பொங்கிய காதலிற் கும்பிட்
டுணருஞ்சொன் மாலைகள் சாத்தி உடன்மகிழ் வெய்தி உறைந்தார்.

2177 அந்நாள் சிலநாள்கள் செல்ல அருள்திரு நாவுக் கரசர்
மின்னுர் சடைஅண்ணல் எங்கும் மேவிடங் கும்பிட வேண்டிப்
பொன்மார்பின் மூந்நூல் புனைந்த புகலிப் பிரான்இசை வோடும்
பின்னுக எய்த இறைஞ்சிப் பிரியாத நண்பொடும் போந்தார். உஎச

2178 வாக்கின் தனிமன்னர் ஏக, மாறுத் திருவுளத் தோடும்
3 பூக்கமழ் பண்ணைகள் சூழ்ந்த புகலியின் மீண்டும்புகுந்து
தேக்கிய மாமறை வெள்ளத் திருத்தோணி வீற்றிருந் தாரைத்
தூக்கின் தமிழ்மாலை பாடித் தொழுதங் குறைகின்ற நாளில். உஎடு

2179 சேந்தமிழ் மாலை விகற்பச் செய்யுட்க ளான்மொழி மாற்றும்
வந்தசொற் சீர்மாலை மாற்றும் வழிமொழி எல்லா மடக்கும்
சந்த வியமகம் ஏகபாதந் தமிழ்இ ருக்குக்குறள் சாத்தி
எந்தைக் கெழுகூற் றிருக்கை ஈரடி ஈரடி வைப்பு. உஎசு

2180 நாலடி மேல்வைப்பு 4 மேன்மை நடையின் முடுகுமி ராகம்
சால்பினில் சக்கரம் ஆதி விகற்பங்கள் சாற்றும் பதிக
மூல இலக்கிய மாக எல்லாப் 5 பொருள்களும் முற்ற
ஞாலத் துயர்காழி யாரைப் பாடினர் ஞானசம் பந்தர். உஎஎ

2181 இன்னிசை பாடின எல்லாம் யாழ்ப்பெரும் பாணனர் தாமும்
மன்னும் இசைவடி வான மதங்கசூ ளாமணி யாரும்
பன்னிய ஏழிசை பற்றிப் பாடப் பதிகங்கள் பாடிப்
பொன்னின் திருத்தா ளம்பெற்றூர் புகலியிற் போற்றி இருந்தார்.

2182 அங்கண் அமர்கின்ற நாளில் " அருந்தமிழ் நாடெத்தி னுள்ளும்
திங்கள் சடைஅண்ண லார்தம் திருப்பதி யாவையுங் கும்பிட்
டெங்குந் தமிழ்மா லைபாடி எத்திஇங் கெய்துவன்" என்று
தங்குலத் தாதையா ரோடுந் தவமுனி வர்க்கருள் செய்தார். உஎக

2183 பெருகு விருப்புடன் நோக்கிப் பெற்ற குலத்தாதை யாரும்
"அருமையால் உம்மைப் பயந்த அதனுற் பிரிந்துறை வாற்றேன்
இருமைக்கும் இன்பம் அளிக்கும் யாகமும் யான்செய வேண்டும்
ஒருமையால் இன்னஞ் சிலநாள் உடன்எய் துவேன்" என் றுரைத்தார்.

பா-பே. 1. திருமா ளிகைமாடம். 2. இறைஞ்சார்
3. பூக்கமழும் பதிகுழ்ந்த. 4. மேன்மை நடையின்
5 பொருள்களெலாம் முற்ற.

2184 ஆண்டகை யாரும் இசைந்தங் கம்பொற் றிருத்தோணி மேவும்
நீண்ட சடையார் அடிக்கீழ்ப் பணிவுற்று நீடருள் பெற்றே
ஈண்டு புகழ்த்தா தையார்பின் எய்திட யாழ்ப்பாண ரோடும்
காண்டகு காழி தொழுது காதலி னூற்புறம் போந்தார். உஅக

2185 அத்திரு மூதூரின் உள்ளார் அமர்ந்துடன் போதுவார் போத
மெய்த்தவர் அந்தணர் நீங்கா விடைகொண்டு மீள்வார்கள் மீள
முத்தின் சிவிகைமேற் கொண்டு மொய்யொளித் தாமம் நிரைத்த
நித்தில வெண்குடை மீது நிறைமதி போல நிழற்ற. உஅஉ

2186 சின்னம் தனிக்காளம் தாரை "சிரபுரத் தாண்டகை வந்தார்"
என்னுந் தகைமை விளங்க ஏற்ற திருப்பெயர் சாற்ற
முன்னெம் மருங்கு நிரந்த முரசுடைப் பல்லியம் ஆர்ப்ப
மன்னுந் திருத்தொண்ட ராளர் வந்ததிர் கொண்டு வணங்க. உஅங

2187 சங்கநா தங்கள் ஒலிப்பத் தழங்குபொற் கோடு முழங்க
மங்கல வாழ்த்துரை எங்கும் மல்க மறைமுன் இயம்பத்
திங்களும் பாம்பும் அணிந்தார் திருப்பதி எங்கும் முன்சென்று
பொங்கிய காதலிற் போற்றப் புகலிக் கவுணியர் போந்தார். உஅச

2188 திருமறைச் சண்பைய ராளி சிவனார் திருக்கண் ணார்கோயில்
பெருவிருப் பால்அணைந் தேத்திப் பிஞ்ஞகர் கோயில் பிறவும்
உருகிய அன்பால் இறைஞ்சி உயர்தமிழ் மாலைகொண் டேத்தி
வருபுனற் பொன்னி வடபால் குடதிசை நோக்கி வருவார். உஅஞ

2189 போற்றிய காதல் பெருகப் புள்ளிருக் குந்திரு வேளூர்
நாற்றடந் தோளுடை மூன்று நயனப் பிரான்கோயில் நண்ணி
ஏற்றஅன் பெய்தவ ணங்கி இருவர்புள் வேந்தர் இறைஞ்சி
ஆற்றிய பூசனை சாற்றி அஞ்சொற் பதிகம் அணிந்தார். உஅசு

2190 நீடு திருநின்றி யூரின் நிமலனார் நீள்கழல் ஏத்திக்
கூடிய காதலிற் போற்றிக் கும்பிட்டு வண்தமிழ் கூறி
நாடுசீர் நீடூர் வணங்கி நம்பர் திருப்புன்கூர் நண்ணி
ஆடிய பாதம் இறைஞ்சி அருந்தமிழ் பாடிஅ மர்ந்தார். உஅள

2191 அங்குநின் றேகிஅப் பாங்கில் அரனார் மகிழ்கோ யிலான
எங்கணுஞ் சென்று பணிந்தே ஏத்தி இமவான் மடந்தை
பங்கர் உறைபழ மண்ணிப் படிக்கரைக் கோயில் வணங்கித்
தங்கு தமிழ்மாலை சாத்தித் திருக்குறுக் கைப்பதி சார்ந்தார். உஅஅ

2192 திருக்குறுக் கைப்பதி மன்னித் திருவீரட் டானத் தமர்ந்த
பொருப்புவில் லாளரை ஏத்திப் போந்தன்னி யூர்சென்று போற்றிப்
பருக்கை வரைஉரித் தார்தம் பந்தண் நல்லூர் பணிந்து
விருப்புடன் பாடல் இசைத்தார் வேதந் தமிழால் விரித்தார். உஅக

உனை

பா. வே. 1. கடுப்புறு.

2193 அப்பதி போற்றி அகல்வார் அரனூர் திருமணஞ் சேரி
செப்பருஞ் சீர்த்தொண்ட ரோடுஞ் சென்று தொழுதிசை பாடி
எப்பொரு ளுந்தரும் ஈசர் எதிர்கொள்பா டிப்பதி எய்தி
ஒப்பில் பதிகங்கள் பாடி ஓங்குவேள் விக்குடி உற்றார். உகஂ

2194 சேழுந்திரு வேள்விக் குடியில் திகழ்மண வாளநற் கோலம்
பொழிந்த புனல்பொன்னி மேவும் புனிதத் திருத்தி இரவில்
தழும்பிய தன்மையுங் கூடத் தண்தமிழ் மாலையிற் பாடிக்
கொழுந்துவெண் திங்கள் அணிந்தார் கோடி காவிற்சென் றடைந்தார்.

2195 திருக்கோடி காவில் அமர்ந்த தேவர் சிகாமணி தன்னை
எருக்கோ டிதழியும் பாம்பும் இசைந்தணிந் தானெவெள் ளேனப்
பருக்கோடு பூண்ட பிரானைப் பணிந்துசொன் மாலைகள் பாடிக்
கருக்கோடி நீப்பார்கள் சேருங் கஞ்சனூர் கைதொழச் சென்றார்.

2196 கஞ்சனூர் ஆண்டதங் கோவைக் கண்ணுற் றிறைஞ்சிமுன் போந்து
மஞ்சணி மாமதில் சூழும் மாந்துறை வந்துவ ணங்கி
அஞ்சொல் தமிழ்மாலை சாத்தி அங்ககன் றன்பர்முன் ஞகச்
செஞ்சடை வேதியர் மன்னுந் திருமங்க லக்குடி சேர்ந்தார். உகஙூ

2197 வெங்கண் விடைமேல் வருவார் வியலூர் அடிகளைப் போற்றித்
தங்கிய இன்னிசை கூடும் தமிழ்ப்பதி கத்தொடை சாத்தி
அங்கண் அமர்வார்தம் முன்னே அருள்வே டங்காட்டத் தொழுது
செங்கண்மா லுக்கரி யார்தந் திருந்துதே வன்குடி சேர்ந்தார். உகச

2198 திருந்துதே வன்குடி மன்னுஞ் சிவபெரு மான்கோயில் எய்திப்
பொருந்திய காதலிற் புக்குப் போற்றிவ ணங்கிப் புரிவார்
" மருந்தொடு மந்திர மாகி மற்றும்இ வ்வேட மாம்"என்
றருந்தமிழ் மாலைபு னைந்தார் அளவில்ஞா னத்தமு துண்டார். உகஞ

2199 மொய்திகழ் சோலைஅம் மூதூர் முன்னகன் றன்நெறி செல்வார்
செய்தரு சாலிக ரும்பு தெங்குபைம் பூகத்தி டைபோய்
மைதிகழ் கண்டர்தங் கோயில் மருங்குள்ள எல்லாம் வணங்கி
எய்தினர் ஞானசம் பந்தர் இன்னம்பர் ஈசர்தங் கோயில். உகசு

2200 இன்னம்பர் மன்னும்பி ரானை இறைஞ்சி இடைமடக் கான
பன்னுந் தமிழ்த்தொடை மாலைப் பாடல்பு னைந்து பரவிப்
பொன்னங் கழலிணை போற்றிப் புறம்போந் தணைந்து புகுந்தார்
மன்னுந் தடங்கரைப் பொன்னி வடகுரங் காடு துறையில். உகஎ

2201 வடகுரங் காடு துறையில் வாலியார் தாம்வழி பட்ட
அடைவுந் திருப்பதி கத்தில் அறியச் சிறப்பித் தருளிப்
புடைகொண் டிறைஞ்சினர் போந்து புறத்துள்ள தானங்கள் போற்றிப்
படைகொண்ட மூவிலை வேலார் பழனத் திருப்பதி சார்ந்தார். உகஅ

பா.வே. 1. பருக்கோடு எனிற்கு. 2. மஞ்சணி. 3. வெங்கண் விடைமீது மேவும்
4 நம்பரும் பிரானை.

2202 பழனத்து மேவிய மூக்கண் பரமேட்டி யார்பயில் கோயில்
உழைபுக் கிறைஞ்சிநின் றேத்தி உருகிய சிந்தைய ராகி
விழைசொற் பதிகம் விளம்பி விருப்புடன் மேவி அகல்வார்
அழனக்க பங்கய வாவி ஐயாறு சென்றடை கின்றார். உகூக

வேறு

2203 மாடநிரை மணிவீதித் திருவையாற் றினில்வாழு மல்கு தொண்டர்
"நாடுய்யப் புகலிவரு ஞானபோ னகர்வந்து நண்ணி னார்" என்
றூடலொடு பாடல்அரு அணிமூதூர் அடையஅலங் காரஞ் செய்து
நீடுமனக் களிப்பினெடும் எதிர்கொள்ள நித்திலயா னத்து நீங்கி. ஈ.00

2204 வந்தணைந்த திருத்தொண்டர் மருங்குவர மான்வந்து கையர் தம்பால்
நந்திதிரு வருள்பெற்ற நன்னகரை முன்இறைஞ்சி நண்ணும் போதில்
"ஐந்துபுலன் நிலைகலங்கும் இடத்தஞ்சேல் என்பார்தம் ஐயா" றென்று
புந்திநிறை செந்தமிழின் சந்தஇசை போற்றிசைத்தார் புகலி வேந்தர்.

2205 மணிவீதி இடங்கடந்து மாலயனுக் கரியபிரான் மன்னுங் கோயில்
அணிநீடு கோபுரத்தை அணைந்திறைஞ்சி உள்ளெய்தி அளவில் காதல்
தணியாத கருத்தினெடுந் தம்பெருமான் கோயில்வலங் கொண்டு தாழ்ந்து
பணிசூடு மவர்முன்பு பணிந்துவீழ்ந் தெழுந்தன்பாற் பரவு கின்றார்.

2206 "கோடல்கோங் கங்குளிர்கூ விளம்" என்னுந் திருப்பதிகக் குலவு மாலை
நீடுபெருந் திருக்கூத்து நிறைந்ததிரு உள்ளத்து நிலைமை தோன்ற
"ஆதிமா றதுவல்லான் ஐயாற்றெம் ஐயனே" என்று நின்று
பாடினார் ஆடினார் பண்பினெடுங் கண்பொழிநீர் பரந்து பாய. ஈ0ஈ

2207 பலமுறையும் பணிந்தெழுந்து புறம்போந்து பரவுதிருத் தொண்ட ரோடு
நிலவுதிருப் பதியதன்கண் நிகழுநாள் நிகரிலா நெடுநீர்க் கங்கை
அலையுமதி முடியார்தம் பெரும்புலியூர் முதலான அணைந்து போற்றிக்
குலவுதமிழ்த் தொடைபுனைந்து மீண்டணைந்து பெருகார்வங் கூர நாளில்.

2208 குடதிசைமேற் போவதற்குக் கும்பிட்டங் கருள்பெற்றுக் குறிப்பி னேடும்
படருநெறி மேலணைவார் பரமர்திரு நெய்த்தானப் பதியில் நண்ணி
அடையுமனம் உறவணங்கி அருந்தமிழ்மா லைகள்பாடி அங்கு நின்றும்
புடைவளர்மென் கரும்பினெடு பூகமிடை மழபாடி போற்றச் சென்றார்.

2209 செங்கைமான் மறியார்தந் திருமழபா டிப்புறத்துச் சேரச் செல்வார்
"அங்கையார் அழல்" என்னும் திருப்பதிகம் எடுத்தருளி அணைந்த போழ்தில்
"மங்கைவாழ் பாகத்தார் மழபாடி- தலையினுல் வணங்கு வார்கள்
பொங்குமா தவமுடையார்" எனத்தொழுது போற்றிசைத்தே கோயில்புக்கார்.

2210 மழபாடி வயிரமணித் தூண்அமர்ந்து மகிழ்கோயில் வலங்கொண் டெய்திச், செழுவாச மலர்க்கமலச் சேவடிக்கீழ்ச் சென்றுதாழ்ந் தெழுந்து நின்று, தொழுதாடிப் பாடிநறுஞ் சொன்மாலைத் தொடை

பா. பே. 1. வந்தணைந்து. 2. பணிந்தெழும்
3. தொண்டர் கள்.

யணிந்து துதித்துப் போந்தே, ஒழியாத நேசமுடன் உடையவரைக் கும்பிட்டங் குற்றந்தார் சின்னுள். நடஎ

2211 அதன்மருங்கு கடந்தருளால் திருக்காணூர் பணிந்தேத்தி ஆன்ற சைவ, முதன்மறையோர் அன்பிலா லந்துறையின் மூன்னவ னேத் தொழுது போற்றிப், பதநிறைசெந் தமிழ்பாடிச் சடைமுடியார் பயில்பதியும் பணிந்து பாடி., மதகரட வரையுரித்தார் வடகரைமாந் துறைஅணைந்தார் மணிநூல் மார்பர். நடஅ

2212 சென்றுதிரு மாந்துறையில் திகழ்ந்துறையுந் துறைநதிவாழ் சென்னி யார்தம், முன்றில்பணிந் தணிநெடுமா ளிகைவலஞ்செய் துள் புக்கு முன்பு தாழ்ந்து, துன்றுகதிர்ப் பரிதிமதி மருத்துக்கள் தொழுதுவழி பாடு செய்ய, நின்றநிலை சிறப்பித்து நிறைதமிழின் சொன்மாலை நிகழப் பாடி. நடக

2213 அங்கணகன் றம்மருங்கில் அங்கணர்தம் பதிபிறவும் அணைந்து போற்றிச், செங்கமலப் பொதிஅவிழச் சேல்பாயும் வயல்மதுவால் சேறு மாறுப், பொங்கொளிநீர் மழநாட்டுப் பொன்னிவட கரைமிசைப் போய்ப் புகலி வேந்தர், நங்கள்பிரான் திருப்பாச்சி லாச்சிரா மம் பணிய நண்ணும் போதில். நடஅ

2214 அந்நகரில் கொல்லிமழ வன்பயந்த அரும்பெறல்ஆர் அமுத மென்சொற், கன்னிஇள மடப்பிணையாங் காமருகோ மளக்கொழுந்தின் கதிர்செய் மேனி, மன்னுபெரும் பிணியாகும் முயலகன்வந் தணைவுற மெய் வருத்தம் எய்தித், தன்னுடைய பெருஞ்சுற்றம் புலம்பெய்ததத் தானும்மனந் தளர்வு கொள்வான். நடக

2215 மற்றுவே றொருபரிசால் தவிராமை மறிவளருங் கையார் பாதம், பற்றியே வருங்குலத்துப் பான்மையினுன் ஆதலினுல் பரிவு தீரப், பொற்றொடியைக் கொடுவந்து போர்க்கோலச் சேவகராய்ப் புரங்கள் மூன்றும், செற்றவர்தங் கோயிலினுட் கொடுபுகுந்து திருமுன்பே இட்டு வைத்தான். நடஉ

2216 அவ்வளவில் ஆளுடைய பிள்ளையார் எழுந்தருளி அணுக எய்தச், "செவ்வியமெய்ஞ் ஞானமுணர் திருஞான சம்பந்தன் வந்தான்" என்றே, எவ்வுலகுந் துயர்நீங்கப் பணிமாறுந் தனிக்கணத் தெழுந்த ஓசை, வெவ்வுயிர்க்கும் அவன்கேளா மெல்லியலே விட்டெதிரே விரைந்து செல்வான். நடஙஉ

2217 "மாநகரம் அலங்கரிமின் மகரதோ ரணம்நாட்டும் மணிநீர் வாசத், தூநறும்பூ ரணகும்பம் சோதிமணி விளக்கினொடு தூபம் ஏந்தும், ஏனஅணி பிறவுமெலாம் எழில்பெருக இயற்றும்"என ஏவித் தானும், வானவர்நா யகர்மகனூர் வருமுன்பு தொழுதணைந்தான் மழவர் கோமான். நடச

1. பே. 1. பலபதியும். 2. ஏவிருவாழ்.

2218 "பிள்ளையார் எழுந்தருளப் பெற்றேன்" என் றுனந்தம் பெருகு காதல், வெள்ளநீர் கண்பொழியத் திருமுத்தின் சிவிகையின்முன் வீழ்ந்த போது, வள்ளலார் "எழுக" என மலர்வித்த திருவாக்கால் மலர்க்கை சென்னி, கொள்ளமகிழ்ந் துடன்சென்று குலப்பதியின் மணிவீதி கொண்டு புக்கான். நகரு

2219 மங்கலதூ ரியம்முழங்கு மணிவீதி கடந்துமதிச் சடையார் கோயில், பொங்குசுடர்க் கோபுரத்துக் கணித்தாகப் புனைமுத்தின் சிவிகை நின்றும், அங்கண்இழிந் தருளுமுறை இழிந்தருளி அணிவா யில் பணிந்து புக்குத், தங்கள்பிரான் கோயில்வலங் கொண்டுதிரு முன்வணங்கச் சாருங் காலை. நகசு

2220 கன்னிஇளங் கொடியுணர்வு கழிந்துநிலன் சேர்ந்ததனைக் கண்டு நோக்கி, "என்இது?" என் றருள்செய்ய மழவன்தான் எதிர்இறைஞ்சி "அடியேன் பெற்ற, பொன்இவளை முயலகனும் பொருவில்அரும் பிணி பொருந்தப் புனிதர் கோயில், முன்அணையக் கொணர்வித்தேன் இது புகுந்த படி" என்று மொழிந்து நின்றான். நகள

வேறு

2221 அணிகிளர் தாரவன் சொன்ன மாற்றம் அருளொடுங் கேட்டந் நிலையில் நின்றே, பணிவளர் செஞ்சடைப் பாச்சின் மேய பரம்பொரு ளாயினு ரைப் பணிந்து, "மணிவளர் கண்டரோ மங்கையை வாட மயல் செய்வ தோஇவர் மாண்ப" தென்று, தணிவில் பிணிதவிர்க் கும்பதிகத் தண்டமிழ் பாடினார் சண்பை நாதர். நகஅ

2222 பன்னு தமிழ்மறை யாம்பதிகம் பாடித் திருக்கடைக் காப்புச் சாத்தி, மன்னுங் கவுணியர் போற்றிநிற்க மழவன் பயந்த மழலை மென்சொல், கன்னி யுறுபிணி விட்டு நீங்கக் கதுமெனப் பார்மிசை நின்றெழுந்து, பொன்னின் கொடிஎன ஒல்கி வந்து பொருவலித் தாதை புடைஅணைந்தாள். நகக

2223 வன்பிணி நீங்கும் மகளைக் கண்ட மழவன் பெருகு மகிழ்ச்சி பொங்கத், தன்தனிப் பாவையுந் தானுங் கூடச் சண்பையர் காவலர் தாளில் வீழ, நின்ற அருமறைப் பிள்ளை யாரும் நீரணி வேணி நிமலர் பாதம், ஒன்றிய சிந்தை யுடன்ப ணிந்தார் உம்பர் பிரான்திருத் தொண்டர் ஆர்த்தார். நஉo

2224 நீடு திருவாச்சி ராமம் மன்னும் நேரிழை பாகத்தர் தாள்வ ணங்கிக், கூடும் அருளுடன் அங்கமர்ந்து கும்பிடுங் கொள்கைமேற் கொண்டு போந்தே, ஆடல் பயின்றூர் பதிபிறவும் அணைந்து பணிந்தடி போற்றி ஏகிச், சேடர்கள் வாழுந் திருப்பைஞ் ஞீலிச் சிவபெரு மானை இறைஞ்சச் சென்றார். நஉக

பா.பே.1 திருப்பாச்சிராமம் 2. மன்னிநின்றார்.

2225 பண்பயில் வண்டினம் பாடுஞ் சோலைப் பைஞ்ஞீலி வாணர்
கழல்ப ணிந்து, மண்பர வுந்தமிழ் மாலை பாடி வைகி வணங்கி மகிழ்ந்து
போந்து, திண்பெருந் தெய்வக் கயிலை யில்வாழ் சிவனூர் பதிபல சென்
றிறைஞ்சிச், சண்பை வளந்தரு நாடர் வந்து தடந்திரு ஈங்கோய் மலை
யைச் சார்ந்தார். நஉஉ

2226 செங்கட் குறவரைத் தேவர் போற்றும் திகழ்திரு ஈங்கோய் மலை
யில் மேவும், கங்கைச் சடையார் கழல்ப ணிந்து கலந்த இசைப்பதி
கம்பு னைந்து, பொங்கர்ப் பொழில்சூழ் மலையும் மற்றும் புறத்துள்ள
தானங்க ளெல்லாம் போற்றிக், கொங்கிற் குடபுலஞ் சென்ற ணைந்தார்
கோதில்மெய்ஞ் ஞானக் கொழுந்தனையார். நஉந

வேறு

2227 அண்டர்பிரான் ஆலயங்கள் அம்மருங்குள் ளனபணிந்து
தெண்திரைநீர்த் தடம்பொன்னித் தென்கரையாங் கொங்கினிடை
வண்டலையும் புனற்சடையார் மகிழ்விடங்கள் தொழுதணைந்தார்
கொண்டல்பயில் நெடும்புரிசைக் கொடிமாடச் செங்குன்றூர். நஉச

2228 அங்கரில் வாழ்வாரும் அடியவரும் மனம்மகிழ்ந்து
பன்னெடுந்தோ ரணம்முதலாப் பயில்அணிகள் பலஅமைத்து
முன்னுறவந் தெதிர்கொண்டு பணிந்தேத்தி மொய்கரங்கள்
சென்னியுறக் கொண்டணைந்தார் சினவிடையார் செழுங்கோயில் நஉரு

2229 தம்பெருமான் கோயிலினுள் எழுந்தருளித் தமிழ்விரகர்
நம்பரவர் திருமுன்பு தாழ்ந்தெழுந்து நலஞ்சிறக்க
இம்பரும்உம் பரும்ஏத்த இன்னிசைவண் தமிழ்பாடிக்
கும்பிடும்ஆ தரவுடன்அக் கோநகரில் இனிதமர்ந்தார். நஉசு

2230 அப்பாலைக் குடபுலத்தில் ஆறணிந்தார் அமர்கோயில்
எப்பாலுஞ் சென்றேத்தித் திருநணு வினைஇறைஞ்சிப்
பைப்பாந்தள் புனைந்தவரைப் பரவிப்பண் டமர்கின்ற
வைப்பான செங்குன்றூர் வந்தணைந்து வைகினார். நஉஎ

2231 ஆங்குடைய பிள்ளையார் அமர்ந்துறையும் நாளின்கண்
தூங்குதுளி முகிற்குலங்கள் சூரந்துபெயல் ஒழிகாலை
வீங்கொலிநீர் வைப்பெல்லாம் வெயில்பெரு விருப்புவரப்
பாங்கர்வரை யுங்குளிரும் பனிப்பருவம் எய்தியதால். நஉஅ

2232 அளிக்குலங்கள் சுளித்தகல அரவிந்தம் முகம்புலரப்
பளிக்குமணி மரகதவல் லியிற்கோத்த பான்மைஎனத்
துளித்தலைமேல் அறுகுபனி தோடுத்தசையச் சூழ்பனியால்
குளிர்க்குடைந்து வெண்படாம் போர்த்தனைய குன்றுகளும். நஉக

1. தே. பெ. 2. வண்டினை 3. தென்னாடைய 4. அரவு 5. சூரந்து 6. வையில் 7. துளித்தலைமேல்

2233 மோய்பனிகூர் குளிர்வாடை முழுதுலவும் பொழுதேயாய்க்
கொய்தளிர்மென் சோலைகளுங் குலைந்தசையக் குளிர்க்கொதுங்கி
வெய்யவனுங் கரம்கிமிர்க்க மாட்டான்போல் விசும்பினிடை
ஐதுவெயில் விரிப்பதுவும் அடங்குவதும் ஆகுமால். ஙஙஏ

2234 நீடியஅப் பதிகளெலாம் நிரைமாடத் திறைகள்தொறும்
பேடையுடன் பவளக்கால் புறவொடுங்கப் பித்திகையின்
தோடலர்மென் குழல்மடவார் தூணைக்கலச் வெம்மூலையுள்
ஆடவர்தம் பணைத்தோளும் மணிமார்பும் அடங்குவன. ஙஙக

2235 அரிசனமும் குங்குமமும் அரைத்தமைப்பார் அயலெல்லாம்
பரியஅகிற் குறைபிளந்து புகைப்பார்கள் பாங்கெல்லாம்
எரிஉமிழ்பேழ் வாய்த்தோணி இரும்பீர்ப்பார் இடையெல்லாம்
பூவிரிமலர்மென் புறவணிந்த மீப்புலத்து வைப்பெல்லாம். ஙஙஉ

2236 அங்நாளிற் கொடிமாடச் செங்குன்றூர் அமர்ந்திருந்த
மெய்ஞ்ஞானப் பிள்ளோயா ருடன்மேவும் பரிசனங்கள்
பன்னுளும் அந்நாட்டிற் பயின்றதனுல் பனித்தகுளிர்
முன்னை பிணிவந்து மூள்வதுபோல் முடுகுதலும். ஙஙங

2237 அந்நிலைமை ஆளுடைய பிள்ளோயார்க் கவர்கிளெலாம்
முன்னறிவித் திறைஞ்சுதலும் முதல்வனுர் அருள்தொழுதே
"இந்நிலத்தின் இயல்பெனினும் நமக்கெய்தப் பெறு"என்று
சென்னிமதி அணிந்தாரைத் திருப்பதிகம் பாடுவார். ஙஙச

வேறு

2238 "அவ்வினைக் கிவ்வினை" என்றெடுத் "தையர் அமுதுசெய்த
வெவ்விடம் முன்தடுத் தெம்மிடர் நீக்கிய வெற்றியினுல்
எவ்விடத் தும்அடி யார்இடர் காப்பது கண்டம்"என்றே
"செய்வ்வினை தீண்டா திருநீல கண்டம்" எனச்செப்பினர். ஙஙஞ

2239 ஆய குறிப்பினில் ஆணை நிகழ அருளிச்செய்து
தூய பதிகத் திருக்கடைக் காப்புத் தொடுத்தணிய
மேயஅப் பொற்பதி வாழ்பவர்க் கேஅன்றி மேவும்அங்காள்
தீய பனிப்பிணி அந்நா டடங்கவுந் தீர்ந்ததன்றே. ஙஙசு

2240 அப்பதி யின்கண் அமர்ந்து சிலநாளில் அங்ககன்று
-துப்புறழ் வேணியர் தானம் பலவுந் தொழுதருளி
மூப்புரி நூலுடன் தோலணி மார்பர் முனிவொடும்
செப்பருஞ் சீர்த்திருப் பாண்டிக் கொடுமுடி சென்றணைந்தார். ஙஙஎ

2241 பருவ மழுப்பொன்னிப் பாண்டிக் கொடுமுடி யார்தம்பாதம்
மருவி வணங்கி வளத்தமிழ் மாலை மகிழ்ந்துசாத்தி

பா.வே.1. மொய்யெளிசூர். 2. நீள்மாடத்துணரியுள்
3 மென்மூங்கியுள் 4. சிறுமலரிவளை
5 கூடர்ந்தை. 6 அங்கியில் 7. பிறவுந்தொழுதினைந்தி

விரிசுடர் மாலிகை வெஞ்சமாக் கூடல் விடையவர்தம்
பொருவில்தா னம்பல போற்றிக் குணதிசைப் போதுகின்றார். ஈஈ அ

242 செல்வக் கருவூர்த் திருவா னிலைக்கோயில் சென்றிறைஞ்சி
நல்லிசை வண்டமிழ்ச் சொற்றொடை பாடிஅந் நாடகன்று
மல்கிய மாணிக்க வெற்பு முதலா வணங்கிவந்து
பல்கு திரைப்பொன்னித் தென்கரைத் தானம் பலபணிவார். ஈஈக

243 பன்னெடுங் குன்றும் படர்பெருங் கானும் பலபதியும்
அந்நிலத் தானங்கள் ஆயின எல்லாம் அமர்ந்திறைஞ்சி
மன்னு புகலியில் வைதிக வாய்மை மறையவனார்
பொன்னியல் வேணிப் புனிதர் பராய்த்துறை யுட்புகுந்தார். ஈசO

244 நீடும் பராய்த்துறை நெற்றித் தனிக்கண்ணர் கோயில்கண்ணிக்
கூடுங் கருத்தொடு கும்பிட்டுக் கோதில் தமிழ்ச்சொன் மாலை
பாடுங் கவுணியர் கண்பனி மாரி பரந்திழியச்
சூடுங் கரதலத் தஞ்சலி கோலித் தொழுதுநின்றார். ஈசக

245 தொழுது புறம்பணைந் தங்குகின் றேகிச் சுரர்பணிவுற்
றெழுதிரு வர்லந் துறைதிருச் செந்துறை யேமுதலா
வழுவில்பல் கோயில்கள் சென்று வணங்கி மகிழ்ந்தணைவார்
செழுமலர்ச் சோலைத் திருக்கற் குடிமலை சேரவந்தார். ஈசஉ

வேறு

246 கற்குடி மாமலை மேலெழுந்த கனகக் கொழுந்தினைக் கால்வளையப்
பொற்றிரள் மேருச் சிலைவளைத்த போர்விடை யாளியைப் போற்றிசைத்து
நற்றமிழ் மாலை புனைந்தருளி ஞானசம் பந்தர் புலன்கள்ஐந்தும்
செற்றவர் மூக்கீச் சரம்பணிந்து திருச்சிராப் பள்ளிச் சிலம்பணைந்தார்.

247 சம்மணி வாரி அருவிதூங்கும் சிராப்பள்ளி மேய செழுஞ்சுடரைக்
கைம்மலை ஈருரி போர்வைசாத்துங் கண்ணுத லாரைக் கழல்பணிந்து
மெய்ம்மகிழ் வெய்தி உளங்குளிர விளங்கிய சொற்றமிழ் மாலைவேய்ந்து
மைம்மலர் கண்டர்தம் ஆனைக்காவை வணங்கும் விருப்பொடு வந்தணைந்தார்.

248 விண்ணவர் போற்றிசெய் ஆனைக்காவில் வெண்ணுவல் மேவிய
மெய்ப்பொருளே, நண்ணி இறைஞ்சிமுன் வீழ்ந்தெழுந்து நாற்கோட்டு
நாகம் பணிந்ததுவும், அண்ணல் கோச்செங்கண் அரசன்செய்த அடி
மையும் அஞ்சொற் றொடையில் வைத்துப், பண்ணுறு செந்தமிழ்
மாலைபாடிப் பரவினின் றேத்தினர் பான்மையினால். ஈசஙி

249 நாரணன் நான்முகன் காணுஉண்மை வெண்ணுவல் உண்மை
மயேந்திரமும், சீரணி நீடுந் திருக்கயிலை செல்வத் திருவாரூர் மேய
பண்பும், ஆரணத் துட்பொரு ளாயினரை ஆனைக்கா வின்கட் புகழ்ந்து

கஅ 1. பா.வே.1 படர்கானும். 2. வந்தணைவார்.
3. வெண்ணுவல் உண்மை.

பாடி, ஏரணி யும்பொழில் சூழ்ந்தசண்பை ஏந்தலார் எல்லையில் இன்ப முற்றார். நசசு

2250 கைதொழு தேத்திப் புறத்தணைந்து காமர் பதியதன் கட்கில நாள், வைகி வணங்கி மகிழ்ந்தணைவார் மன்னுந் தவத்துறை வானவர் தாள், எய்தி இறைஞ்சி எழுந்துநின்றே இன்தமிழ் மாலைகொண் டேத்திப் போந்து, வைதிக மாமணி அம்மருங்கு மற்றுள்ள தானம் வழுத்திச் செல்வார். நசள

2251 ஏறுயர்த் தார்திருப் பாற்றுறையும் எறும்பியூர் மாமலை யேமுதலா வேறு பதிகள் பலவும் போற்றி விரவுந் திருத்தொண்டர் வந்துசூழ ஈறில் புகழ்ச்சண்பை யாளியார் தாம் எண்திசை யோருந் தொழுதிறைஞ்ச கீறணி செம்பவ ளப்பொருப்பின் நெடுங்கள மாநகர் சென்றுசேர்ந்தார்.

2252 நெடுங்களத் தாதியை அன்பால் "நின்பால் நெஞ்சம் செலாவகை நேர்விலக்கும், இடும்பைகள் தீர்த்தருள் செய்வாய்" என்னும் இன் னிசை மாலைகொண் டேத்தி ஏகி, அடும்பணிச் செஞ்சடை யார்பதிகள் அணைந்து பணிந்து நியமம் போற்றிக், கடுங்கை வரைஉரித் தார் மகிழ்ந்த காட்டுப்பள் ளிப்பதி கைதொழுவார். நசசு

2253 சென்று திகழ்திருக் காட்டுப்பள்ளிச் செஞ்சடை நம்பர்தங் கோயில்எய்தி, முன்றில் வலங்கொண் டிறைஞ்சி வீழ்ந்து மொய்கழற் சேவடி கைதொழுவார், கன்றணை ஆவின் கருத்துவாய்ப்பக் கண்ணுத லாரைமுன் போற்றிசெய்து, மன்றுள்நின் முடல் மனத்துள் வைப் பார் "வாருமன் னும்முலை" பாடிவாழ்ந்தார். நருO

2254 அங்கப் பதிகின் றெழுந்தருளி அணிதிரு வாலம் பொழில்வணங் கிப், பொங்கு புனற்பொன்னிப் பூந்துருத்திப் பொய்யிலி யாரைப் பணிந்து போற்றி, எங்கும் நிகழ்திருத் தொண்டர்குழாம் எதிர் கொள்ள எப்பதி யுந்தொழுது, செங்கயல் பாய்வயல் ஓடைசூழ்ந்த திருக்கண்டி யூர்தொழச் சென்றணைந்தார். நருக

2255 கண்டியூர் வீரட்டர் கோயில்எய்திக் கலந்தடி யாருடன் காதல் பொங்கக், கொண்ட விருப்புடன் தாழ்ந்திறைஞ்சிக் குலவு மகிழ்ச்சி யின் கொள்கையினால், தொண்டர் குழாத்தினை நோக்கி நின்று தொடுத்த இசைத்தமிழ் மாலைதன்னில், அண்டர் பிரான்தன் அரு ளின்வண்ணம் அடியார் பெருமையிற் கேட்டருளி. நருஉ

2256 வினவி எடுத்த திருப்பதிகம் மேவு திருக்கடைக் காப்புத் தன்னில், அனைய நினைவரி யோன்செயலே அடியாரைக் கேட்டு மகிழ்ந்த தன்மை, புனைவுறு பாடலிற் போற்றிசெய்து போந்து புகலிக் கவுணி யனார், தூணிபுனற் பொன்னித் திரைவலங்கொள் சோற்றுத் துறை தொழச்சென்றடைவார். நருக

மா.பே.பி. நெஞ்சுதெளிவானகை; நெஞ்சுதெளிவானது. இ.அ.னி.மு.ம் நெஞ்சுதெளிவா?

வேறு

2257 "அப்பர் சோற்றுத் துறைசென் றடைவோம்"என்
றெப்பில் வண்தமிழ் மாலை ஒருமையால்
செப்பி யேசென்று சேர்ந்தனர் சேர்விலார்
முப்புரஞ் செற்ற முன்னவர் கோயில்முன். ஈடுச

2258 தொல்லை நீள்திருச் சோற்றுத் துறையுறை
செல்வர் கோயில் வலங்கொண்டு தேவர்கள்
அல்லல் தீர்க்கஞ் சுண்ட பிரான் அடி
எல்லை யில்அன்பு கூர இறைஞ்சினர். ஈடுடு

2259 இறைஞ்சி ஏத்தி எழுந்துநின் றின்னிசை
நிறைந்த செந்தமிழ் பாடி நிலாவிஅங்
குறைந்து வந்தடி யாருடன் எய்தினர்
சிறந்த சீர்த்திரு வேதி குடியினில். ஈடுசு

2260 வேத வேதியர் வேதி குடியினில்
நாதர் கோயில் அணைந்து நலந்திகழ்
பாத பங்கயம் போற்றிப் பணிந்தெழுந்
தோதி னர்தமிழ் வேதத்தின் ஓங்கிசை. ஈடுள

2261 எழுது மாமறை யாம்பதி கத்திசை
முழுதும் பாடி முதல்வரைப் போற்றிமுன்
தொழுது போந்துவந் தெய்தினர் சோலைசூழ்
பழுதில் சீர்த்திரு வெண்ணிப் பதியினில். ஈடுஅ

2262 வெண்ணி மேய விடையவர் கோயிலை
நண்ணி நாடிய காதலின் நாண்மதிக்
கண்ணி யார்தங் கழலிணை போற்றியே
பண்ணில் நீடும் பதிகமும் பாடினர். ஈடுசூ

2263 பாடி நின்று பரவிப் பணிந்துபோய்
ஆடும் அங்கணர் கோயில்அங் குள்ளன
மாடு சென்று வணங்கி மகிழ்ந்தனர்
நீடு சண்பை நிறைபுகழ் வேதியர். ஈடுO

வேறு

2264 மோய்தருஞ் சோலைசூழ் முளரிமுள் ளடவிபோய்
மெய்தரும் பரிவிலான் வேள்வியைப் பாழ்படச்
செய்தசங் கரர்திருச் சக்கரப் பள்ளிமுன்
பெய்தவந் தருளினர் இயல்இசைத் தலைவனார். ஈடுசுக

பா.வே.1 சுண்டா 2 பழயனை. 2. பதிகமும்

2265 சக்கரப் பள்ளியார் தந்திருக் கோயிலுள்
புக்கருத் தியினுடன் பூமலர்த் தாள்பணிந்
தக்கரைப் பரமர்பால் அன்புறும் பரிவுகூர்
மிக்கசொற் றமிழினல் வேதமும் பாடினார். நகஉ

2266 தலைவர்தஞ் சக்கரப் பள்ளிதன் னிடையகன்(று)
அலைபுனற் பணைகளின் அருகுபோய் அருமறைப்
புலனுறுஞ் சிந்தையார் புள்ளமங் கைப்பதி
குலவும்ஆ லந்துறைக் கோயிலைக் குறுகினார். நகஉ

2267 மன்னும்அக் கோயில்சேர் மான்மறிக் கையர்தம்
பொன்னடித் தலம்உறப் புரிவொடுந் தொழுதெழுந்
தின்னிசைத் தமிழ்புனைந் திறைவர்சே வுருடன்
பன்னுபா லைத்துறைப் பதிபணிந் தேகினார். நகஊ

2268 காவின்மேல் முகிலெழுங் கமழ்நறும் புறவுபோய்
வாவிநீ டலவன்வாழ் பெடையுடன் மலர்நறும்
பூவின்மேல் விழைவுறும் புகலியார் தலைவனார்
சேவின்மேல் அண்ணலார் திருநறை யூர்நண்ணினார். நகஎ

2269 மன்றலங் கழனிசூழ் திருநறை யூர்மறைவலோர்
துன்றுமங் கலவினைத் துழனியால் எதிர்கொளப்
பொன்தயங் கொளிமணிச் சிவிகையிற் பொலிவுறச்
சென்றணைந் தருளினார் சிரபுரச் செம்மலார். நகக

2270 நித்திலச் சிவிகைமேல் நின்றிழிந் தருளியே
மொய்த்தஅந் தணர்குழாம் முன்செலப் பின்செலும்
பத்தரும் பரிசனங் களுமுடன் பரவவே
அத்தர்தங் கோபுரந் தொழுதணைந் தருளினார். நகஙஅ

2271 வெள்ளிமால் வரையைநேர் விரிசுடர்க் கோயிலைப்
பிள்ளையார் வலம்வரும் பொழுதினிற் பெருகுநீர்
வெள்ளஆ னந்தமெய் பொழியமேல் ஏறிநீர்
துள்ளுவார் சடையரைத் தொழுதுமுன் பரவுவார். நகஙஆ

2272 பரவுசொற் பதிகம்முன் பாடினார் பரிவுதான்
வரவயர்த் துருகுநேர் மனனுடன் புறம்அணைந்
தரவுடைச் சடையர்பேர் அருள்பெறும் பெருமையால்
விரவும்அப் பதிஅமர்ந் தருளியே மேவினார். நகஙக

வேறு

2273 அன்ன தன்மையில் அப்பதி யினில்அமர்ந் தருளி
மின்னை நுஞ்சடை விமலர்தாள் விருப்பொடு வணங்கிப்

1. பே. தம்பிரானைக். 2. வரைநிகர். 3. பெருகுநீர்.
4. மின்னு செஞ்சடை.

பன்னும் இன்னிசைப் பதிகமும் பலமுறை பாடி
நன்னெ டுங்குல நான்மறை யவர்தொழ நயந்தார். ஈஎ0

2274 நீடும் அப்பதி நீங்குவார் நிகழ்திரு நல்லூர்
ஆடு வார்திரு அருள்பெற அகன்றுபோந் தங்கண்
மாடும் உள்ளன வணங்கியே பரவிவந் தணைந்தார்
தேடும் மாலயற் கரியவர் திருக்கரு காவூர். ஈஎக

2275 வந்து பந்தர்மா தவிமணங் கமழ்கரு காவூர்ச்
சந்த மாமறை தந்தவர் கழலிணை தாழ்ந்தே
"அந்தம் இல்லவர் வண்ணம் ஆரழல்வண்ணம்" என்று
சிந்தை இன்புறப் பாடினர் செழுந்தமிழ்ப் பதிகம். ஈஎஉ

2276 பதிக இன்னிசை பாடிப்போய்ப் பிறபதி பலவும்
நதிஅ ணிந்தவர் கோயில்கள் நண்ணியே வணங்கி
மதுர முத்தமிழ் வாசகர் அணைந்தனர் மன்றுள்
அதிர்சி லம்படி யார்மகிழ் அவளிவ ணல்லூர். ஈஎங

2277 மன்னும் அப்பதி வானவர் போற்றவும் மகிழ்ந்த
தன்மை யார்பயில் கோயிலுள் தம்பரி சுடையார்
என்னும் நாமமும் நிகழ்ந்திட ஏத்திமுன் இறைஞ்சிப்
பன்னு சீர்ப்பதி பலவும்அப் பாற்சென்று பணிவார். ஈஎச

2278 பழுதில் சீர்த்திருப் பரிதிநன் னியமமும் பணிந்தங்
கெழுது மாமறை யாம்பதி கத்திசை போற்றி
முழுதும் ஆனவர் கோயில்கள் வணங்கியே முறைமை
வழுவி லார்திருப் பூவனூர் வணங்கிவந் தணைந்து. ஈஎடு

2279 பொங்கு காதலிற் போற்றிஅங் கருளுடன் போந்து
பங்க யத்தடம் பணைப்பதி பலவும்முன் பணிந்தே
எங்கும் அன்பர்கள் ஏத்தொலி எடுக்கவந் தணைந்தார்
அங்க ணர்க்கிடம் ஆகிய பழம்பதி ஆவூர். ஈஎசு

2280 பணியும் அப்பதிப் பசுபதீச் சரத்தினி திருந்த
மணியை உள்புக்கு வழிபடும் விருப்பினல் வணங்கித்
தணிவில் காதலில் தண்டமிழ் மாலைகள் சாத்தி
அணிவி ளங்கிய திருவூர் மீண்டும்வந் தணைந்தார். ஈஎஎ

2281 மறைவி ளங்கும்அப் பதியினில் மணிகண்டர் பொற்றாள்
நிறையும் அன்பொடு வணங்கியே நிகழ்பவர் நிலவும்
பிறைஅ ணிந்தவர் அருள்பெறப் பிரசமென் மலர்வண்
டறைந ரும்பொழில் திருவலஞ் சுழியில்வந் தணைந்தார். ஈஎஅ

2282 மதிபு னைந்தவர் வலஞ்சுழி மருவுமா தவத்து
முதிரும் அன்பர்கள் முத்தமிழ் விரகர்தம் முன்வந்

பா. பே. 1. நான்மறை, 2. வெஞ்சினச் சூர்த்தடும்ப 3. பசுபதீச் சுரத்தினி

தெதிர்கொள் போழ்தினில் இழிந்தவர் எதிர்செல மதியைக்
கதிர்செய் வெண்முகிற் குழாம்புடை சூழ்ந்தெனக் கலந்தார்.

2283 கலந்த அன்பர்கள் தொழுதெழக் கவுணியர் தலைவர்
அலர்ந்த செங்கீம லக்கரங் குவித்துடன் அணைவார்
வலஞ்சு ழிப்பெரு மான்மகிழ் கோயில்வந் தெய்திப்
பொலங்கொள் நீள்சுடர்க் கோபுரம் இறைஞ்சிஉட் புகுந்தார்.

2284 மருவ லார்புரம் முனிந்தவர் திருமுன்றில் வலங்கொண்
டருகும் அன்புடன் உச்சிமேல் அஞ்சலி யினராய்த்
திருவ லஞ்சுழி உடையவர் சேவடித் தலத்தில்
பெருகும் ஆதர வுடன்பணிந் தெழுந்தனர் பெரியோர். நஅக

2285 ஞான போனகர் நம்பர்முன் தொழுதெழு விருப்பால்
ஆன காதலில் அங்கண ரவர்தமை வினவும்
ஊன மில்இசை யுடன்விளங் கியதிருப் பதிகம்
பான லார்மணி கண்டரைப் பாடினர் பரவி. நஅஉ

2286 புலன்கொள் இன்தமிழ் போற்றினர் புறத்தினில் அணைந்தே
இலங்கு நீர்ப்பொன்னி சூழ்திருப் பதியினில் இருந்து
நலங்கொள் காதலின் நாதர்தாள் நாள்தொறும் பரவி
வலஞ்சு ழிப்பெரு மான்தொண்டர் தம்முடன் மகிழ்ந்தார்.

2287 மகிழ்ந்த தன்தலை வாழும்அக் காளிடை வானில்
திகழ்ந்த ஞாயிறு தூணப்புணர் ஓரையுட் சேர்ந்து
நிகழ்ந்த தன்மையில் நிலவும்ஏழ் கடல்நீர்மை குன்ற
வெகுண்டு வெங்கதிர் பரப்பலின் முதிர்ந்தது வேனில். நஅக

2288 தண்பு னற்குளிர் கால்நறுஞ் சந்தனத் தேய்வை
பண்பு நீடிய வாசமென் மலர்பொதி பனிநீர்
நண்பு டைத்துணை நகைமணி முத்தணி நாளும்
உண்ப மாதுரி யச்சுவை உலகுளோர் விருப்ப. நஅஙு

வேறு

2289 அறல்மலியுங் கான்யாற்றின் நீர்நசையால் அணையுமான்
பெறல்அரிய புனல்என்று பேய்த்தேரின் பின்தொடரும்
உறையுணவு கொள்ளும்புள் தேம்பவயல் இரைதேரும்
பறவைசிறை விரித்தொடுங்கப் பனிப்புறத்து வதியுமால். நஅசு

2290 நீணிலைமா ளிகைமேலும் நிலாமுன்றின் மருங்கினிலும்
வாணிழனற் சோலையிலும் மலர்வாவிக் கரைமாடும்
பூணிலவு முத்தணிந்த பூங்குழலார் முலைத்தடத்தும்
காணுமகிழ்ச் இயின்மலர்ந்து மாந்தர்கலந் துறைவரால். நஅள

பா.பே.1. புலம்பெரி னிகை. 2. நிலைமா.
3. இன்ப மும்.

2291 மயிலொடுங்க வண்டாட மலர்க்கமலம் முகைவிரியக்
குயிலொடுங்காச் சோலையின்மென் தளிர்கோதிக் கூவிளழுத்
துயிலொடுங்கா உயிர்அனைத்தும் துயில்பயிலச் சுடர்வானில்
வெயிலொடுங்கா வெம்மைதரும் வேனில்விரி தருநாளில். நஅஅ

2292 சண்பைவரும் பிள்ளையார் சடாமகுடர் வலஞ்சுழியை
எண்பெருகத் தொழுதேத்திப் பழையாறை எய்துதற்கு
நண்புடைய அடியார்க ளுடன்போத நடந்தருளி
விண்பொருநீள் மதிளாறை மேற்றளிசென் றெய்தினார். நஅசு

2293 திருவாறை மேற்றளியில் திகழ்ந்திருந்த செந்தீயின்
உருவாளன் அடிவணங்கி உருகியஅன் பொடுபோற்றி
மருவாருங் குழல்மலையாள் வழிபாடு செய்யஅருள்
தருவார்தந் திருச்சத்தி முற்றத்தின் புறஞ்சார்ந்தார். நகூ0

2294 திருச்சத்தி முற்றத்திற் சென்றெய்தித் திருமலையாள்
அருச்சித்த சேவடிகள் ஆர்வமுறப் பணிந்தேத்திக்
கருச்சுற்றில் அடையாமற் கைதருவார் கழல்பாடி
விருப்புற்றுத் திருப்பட்டீச் சரம்பணிய மேவுங்கால். நகூக

2295 வெம்மைதரு வேனிலிடை வெயில்வெப்பந் தணிப்பதற்கு
மும்மைநிலைத் தமிழ்விரகர் முடிமீதே சிவபூதம்
தம்மைஅறி யாதபடி தண்தாரளப் பந்தர்எடுத்
"தெம்மைவிடுத் தருள்புரிந்தார் பட்டீசர்" என்றியம்ப. நகூஉ

2296 அவ்வுரையும் மணிமுத்தின் பந்தரும்ஆ காயம்எழச்
செவ்வியமெய்ஞ் ஞானமுணர் சிரபுரத்துப் பிள்ளையார்
"இவ்வினைதான் ஈசர்திரு வருளாகில் இசைவ"தென
மெய்விரவு புளகமுடன் மேதினியின் மிசைத்தாழ்ந்தார். நகூங

2297 அதுபொழுதே அணிமுத்தின் பந்தரினை அருள்சிறக்கக்
கதிரொளிய மணிக்காம்பு பரிசனங்கள் கைக்கொண்டார்
மதுரமொழி மறைத்தலைவர் மருங்கிமையோர் பொழிவாசப்
புதுமலரால் அப்பந்தர் பூம்பந்த ரும்போலும். நகூச

2298 தொண்டர்குழாம் ஆர்ப்பெடுப்பச் சுருதிகளின் பெருந்துழனி
எண்டிசையும் நிறைந்தேதாங்க எழுந்தருளும் பிள்ளையார்
வெண்தாரளப் பந்தர்நிழல் மீதணையத் திருமன்றில்
அண்டர்பிரான் எடுத்ததிரு வடிநீழல் என அமர்ந்தார். நகூடு

2299 பாரின்மிசை அன்பருடன் வருகின்றார் பன்னகத்தின்
ஆரம்அணிந் தவர்தந்த அருட்கருணைத் திறம்போற்றி
ஈரமனங் களிதழைப்ப எதிர்கொள்ள முகம்மலர்ந்து
சேரவருந் தொண்டருடன் திருப்பட்டீச் சரம்அணைந்தார். நகூசு

பா. பே. 1. இயலொடுங்க, 2. மலர்களும்
3. வேனில்தரு மருநாளில், 4. ஆடுதுலையினார்
5. தளிரொளியில், 6. எ.தே. ஒரு படி

2300 சென்றணைந்து திருவாயிற் புறத்திறைஞ்சி உள்புக்கு
வென்றிவிடை யவர்கோயில் வலங்கொண்டு வெண்கோட்டுப்
1பன்றிகளைத் தறியாத பாததா மரைகண்டு
முன்தொழுது விழுந்தெழுந்து மொழிமாலை போற்றிசைத்தார். நகூள

2301 2அருள்வெள்ளத் திறம்பாவி அளப்பரிய ஆனந்தப்
பெருவெள்ளத் திடைமூழ்கிப் பேராத பெருங்காதல்
திருவுள்ளப் பரிவுடனே செம்பொன்மலை வல்லியார்
தருவள்ளத் தமுதுண்ட சம்பந்தர் புறத்தணைந்தார். நகூஅ

2302 அப்பதியில் அமர்கின்ற ஆளுடைய பிள்ளையார்
செப்பருஞ்சீர்த் திருவாறை வடதளியில் சென்றிறைஞ்சி
ஒப்பரிய தமிழ்பாடி உடன்அமருந் தொண்டமொடு
எப்பொருளு மாய்நின்ற இரும்பூளை எய்தினார். நகூக

2303 தேவர்பிரான் அமர்ந்ததிரு இரும்பூளை சென்றெய்தக்
காவணநீள் தோரணங்கள் நாட்டியுடன் களிசிறப்பப்
3பூவணமா லகள்நாற்றிப் பூரணபொற் குடம்நிரைத்தங்(கு)
யாவர்களும் போற்றிசைப்பத் திருத்தொண்டர் எதிர்கொண்டார்.

2304 வண்தமிழின் மொழிவிரகர் மணிமுத்தின் சிவிகையினைத்
தொண்டர்குழாத் தெதிர்இழிந்தங் கவர்தொழத்தா மூந்தொழுதே
அண்டர்பிரான் கோயிலினை அணைந்திறைஞ்சி முன்நின்று
பண்தரும்இன் னிசைப்பதிகம் பரம்பொருளைப் பாடுவார். சoக

2305 நிகரிலா மேருவரை அணுவாக நீண்டானை
நுகர்கின்ற தொண்டர்தமக் கமுதாகி நோய்யானைத்
தகுவொன்ற அடியார்கள் 4தமைவினவித் தமிழ்விரகர்
பகர்கின்ற அருமறையின் பொருள்விரியப் பாடினார். சoஉ

2306 பாடும்அர தைப்பெரும் பாழியே முதலாகச்
சேடர்பயில் திருச்சேறை திருநாலூர் குடவாயில்
காடியசீர் நறையூர்தென் திருப்புத்தூர் நயந்திறைஞ்சி
நீடுதமிழ்த் தொடைபுனைந்தந் நெடுநகரில் இனிதமர்ந்தார். சoங

2307 அங்கண்இனி தமருநாள் அடல்வெள்ளே னத்துருவாய்ச்
செங்கண்நெடு மால்பணியுஞ் சிவபுரத்துச் சென்றடைந்து
கங்கைசடைக் கரந்தவர்தங் கழல்வணங்கிக் காதலினால்
பொங்கும்இசைத் திருப்பதிகம் முன்நின்று போற்றிசைத்தார். சoச

2308 போற்றிசைத்துப் புனிதர்அருள் பெற்றுப்போந் தெவ்வுருவும்
தோற்றுவித்த அயன்போற்றுந் தோணிபுரத் தந்தணனார்
ஏற்றுமிசை ஏற்றுகந்த இறைவர்தமை ஏத்துதற்கு
காற்றிசையோர் பரவுதிருக் குடமூக்கு நண்ணினார். சoஞ

1. பன்றி நிழல் 2. அருள்வள்ளல் 3 பூவண. 4. நமைவினவி. 5. எப்பொருளும்.

2309 தேமருவு மலர்ச்சோலைத் திருக்குடமூக் கினிற்செல்வ்
மாமறையோர் பூந்தராய் வள்ளலார் வந்தருளத்
தூமறையின் ஒலிபெருகத் தூரியமங் கலம்முழங்கக்
கோமுறைமை எதிர்கொண்டு தம்பதியுட் கொடுபுக்கார். சஅசு

2310 திருஞான சம்பந்தர் திருக்குடமூக் கினைச்சேர
வருவார்தம் பெருமானே வண்தமிழின் திருப்பதிகம்
உருகாநின் றுளம்மகிழக் "குடமூக்கை உவந்திருந்த
பெருமான்எம் இறை"என்று பெருகிசையால் பரவினர். சஅள

2311 வந்தணைந்து திருக்கீழ்க்கோட் டத்திருந்த வான்பொருளைச்
சிந்தைமகிழ் வுறவணங்கித் திருத்தொண்ட ருடன்செல்வார்
அந்தணர்கள் புடைசூழ்ந்து போற்றிசைப்ப அவரோடும்
கந்தமலர்ப் பொழில்சூழ்ந்த காரோணஞ் சென்றடைந்தார்.

2312 பூமருவும் கங்கைமுதற் புனிதமாம் பெருந்தீர்த்தம்
மாமகந்தா னுதேற்கு வந்துவழி படுங்கோயில்
தூமருவு மலர்க்கையால் தொழுதுவலங் கொண்டணைந்து
காமர்கெட நூதல்விழித்தார் கழல்பணிந்து கண்களித்தார்.

2313 கண்ணுறும் அருமணியைக் காரோணத் தாரமுதை
அண்ணுதார் புரம்எரித்த நான்மறையின் பொருளானைப்
பண்ணுர்ந்த திருப்பதிகம் பணிந்தேத்திப் பிறபதியும்
எண்ணுர்ந்த சீரடியா ருடன்பணிவுற் றெழுந்தருளி. சகO

2314 திருநாகேச் சரத்தமர்ந்த செங்கனகத் தனிக்குன்றைக்
கருநாகத் துரிபுனைந்த கண்ணுதலைச் சென்றிறைஞ்சி
அருஞானச் செந்தமிழின் திருப்பதிகம் அருள்செய்து
பெருஞான சம்பந்தர் பெருகார்வத் தின்புற்றார். சகக

2315 மாநாகம் அருச்சித்த மலர்க்கமலத் தாள்வணங்கி
நாணுளும் பரவுவார் பிணிதீர்க்கும் நலம்போற்றிப்
பாணுறும் மணிவாயார் பரமர்திரு விடைமருதில்
பூநாறும் புனற்பொன்னித் தடங்கரைபோய்ப் புகுகின்றார். சகஉ

2316 ஓங்குதிருப் பதிகம்"ஓ டேகலன்"என் றெடுத்தருளித்
தாங்கரிய பெருமகிழ்ச்சி தலைசிறக்குந் தன்மையினால்
"ஈங்கெனாஆ ளுடையபிரான் இடைமருதீ தோ"என்று
பாங்குடைய இன்னிசையாற் பாடிஎழுந் தருளினர். சகங

2317 அடியவர்கள் எதிர்கொள்ள எழுந்தருளி அங்கணைந்து
முடிவில்பரம் பொருளானர் முதற்கோயில் முன்இறைஞ்சிப்
படியில்வலங் கொண்டுதிரு முன்பெய்திப் பார்மீது
நெடிதுபணிந் தெழுந்தன்பு நிறைகண்ணீர் நிரந்திழிய. சகச

பா. பே. 1. கம்பரியில் . 2. அருமணியை காரோணத் தாரமுதை . 3. ஈண்டு நீ தோ.
/ மானுளும்

2314 பரவுறுசெந் தமிழ்ப்பதிகம் பாடிஅமர்ந் தப்பதியில்
விரவுவார் திருப்பதிகம் பலபாடி வெண்மதியோ
டரவுசடைக் கணிந்தவர்தந் தாள்போற்றி ஆர்வத்தால்
உரவுதிருத் தொண்டருடன் பணிந்தேத்தி உறையுநாள். சகடு

2315 மருங்குளநற் பதிகள்பல பணிந்துமா நதிக்கரைபோய்க்
குரங்காடு துறையணைந்து குழகனூர் குரைகழல்கள்
பெருங்காத லிற்பணிந்து பேணியஇன் னிசைபெருக
அருங்கலைநூல் திருப்பதிகம் அருள்செய்து பரவினார். சகசு

2316 அம்ம லர்த்தடம் பதிபணிந் தகன்றுபோந் தருகு
மைம்ம லர்க்கள த் திறைவர்தங் கோயில்கள் வணங்கி
நம்ம லத்துயர் தீர்க்கவந் தருளிய ஞானச்
செம்ம லார்திரு ஆவடு துறையினைச் சேர்ந்தார். சகள

வேறு

2317 மூவ ருக்கறி வரும்பொரு ளாகிய மூலத்
தேவர் தந்திரு ஆவடு துறைத்திருத் தொண்டர்
பூவ லம்புதண் பொருபுனல் தடம்பணைப் புகலிக்
காவ லர்க்கெதிர் கொள்ளும் ஆதரவுடன் கலந்தார். சகஅ

2318 வந்த ணைந்தவர் தொழாமூனம் மலர்புகழ்ச் சண்பை
அந்த ணர்க்கெலாம் அருமறைப் பொருளென வந்தார்
சந்த சித்திலச் சிவிகைகின் றிழிந்தெதிர் தாழ்ந்தே
சிந்தை இன்புற இறைவர்தங் கோயில்முன் சென்றார். சகக

2319 நீடு கோபுரம் இறைஞ்சிஉள் புகுந்துநீள் நிலையான்
மாடு சூழ்திரு மாளிகை வலங்கொண்டு வணங்கி
ஆடும் ஆதியை ஆவடு துறையுள்ஆர் அமுதை
நாடு காதலிற் பணிந்தெழுந் தருந்தமிழ் நவின்றார். சஉ0

2320 அன்பு நீடிய அருவிகண் பொழியும்ஆர் வத்தால்
முன்பு போற்றியே புறம்பணை முத்தமிழ் விரகர்
துன்பு போம்மனத் திருத்தொண்டர் தம்முடன் தொழுதே
இன்பம் மேவிஅப் பதியினில் இனிதமர்ந் திருந்தார். சஉக

2321 மேவி அங்குறை நாளினில் வேள்விசெய் வதனுக்
காவ தாகிய காலம்வந் தணைவுற அணைந்து
தாவில் சண்பையர் தலைவர்க்குத் தாதையார் தாமும்
போவ தற்கரும் பொருள்பெற எதிர்நின்று புகன்றார். சஉஉ

2322 தந்தை யார்மொழி கேட்டலும் புகலியார் தலைவர்
மூந்தை நாளிலே மொழிந்தமை நினைந்தருள் முன்னி.

பா. வே. 1. நீங்கிலன் 2. வாள்புகுந் 3. பெருந் தெய்வ புகம்பணை

"அந்த மில்பொரு ளாவன ஆவடு துறையுள்
எந்தை யார்அடித் தலங்களன் ரே"என எழுந்தார். சஉங

2327 சென்று தேவர்தம் பிரான்மகிழ் கோயில்முன் பெய்தி
நின்று போற்றுவார் "நீள்நிதி வேண்டினுர்க் கீவ
தொன்றும் மற்றிலேன் உன்னடி அல்லதொன் றறியேன்"
என்று பேரருள் வினவிய செந்தமிழ் எடுத்தார். சஉச

2328 எடுத்த வண்தமிழ்ப் பதிகநா லடியின்மேல் இருசீர்
தொடுத்த வைப்பொடு தொடர்ந்தஇன் னிசையினுல் துதிப்பார்
மடுத்த காதலில் வள்ளலார் அடியிணை வழுத்தி
அடுத்த சிந்தையால் ஆதரித் தஞ்சலி அளித்தார். சஉரு

2329 நச்சி இன்தமிழ் பாடிய ஞானசம் பந்தர்
இச்சை யேபுரிந் தருளிய இறைவர்இன் அருளால்
அச்சி றப்பருள் பூதமுன் விரைந்தகல் பீடத்
துச்சி வைத்தது பசும்பொன்ஆ யிரக்கிழி ஒன்று. சஉசு

2330 வைத்த பூதம்அங் கணைந்துமுன் நின்றுநல் வாக்கால்
"உய்த்த இக்கிழி பொன்னுல வாக்கிழி உமக்கு
நித்த னுர்அருள் செய்த"தென் றுரைக்கநேர் தொழுதே
அத்த னுர்திரு வருள்நினைந் தவனிமேற் பணிந்தார். சஉள

2331 பணிந்தெ ழுந்துகை தொழுதுமுன் பனிமலர்ப் பீடத்
தணைந்த ஆடகக் கிழிதலைக் கொண்டரு மறைகள்
துணிந்த வான்பொருள் தரும்பொருள் தூயவாய் மையினுல்
தணிந்த சிந்தைஅத் தந்தையார்க் களித்துரை செய்வார். சஉஅ

2332 "ஆதி மாமறை விதியினுல் ஆறுசூழ் வேணி
நாத னுரைமுன் னுகவே புரியுநல் வேள்வி
தீது நீங்கநீர் செய்யவுந் திருக்கழு மலத்து
வேத வேதியர் அனைவருஞ் செய்யவும் மிகுமால்." சஉக

2333 என்று கூறிஅங் கவர்தமை விடுத்தபின் அவரும்
நன்றும் இன்புறு மனத்தொடும் புகலிமேல் நண்ண
வென்றி ஞானசம் பந்தரும் விருப்பொடு வணங்கி
மன்றல் ஆவடு துறையினில் மகிழ்ந்தினி திருந்தார். சஉ0

2334 அண்ண லார்திரு ஆவடு துறைஅமர்ந் தாரை
உள்கி லாவிய காதலி னுற்பணிந் துறைந்து
மண்ணெ லாம்உய வந்தவர் போந்துவார் சடைமேல்
தெண்ணி லாஅணி வார்திருக் கோழம்பஞ் சேர்ந்தார். சஉக

2335 கொன்றை வார்சடை முடியரைக் கோழம்பத் திறைஞ்சி
என்றும் நீடிய இன்னிசைப் பதிகம்முன் இயம்பி

மன்று ளார்மகிழ் வைகல்மா டக்கோயில் மருங்கு
சென்று சார்ந்தனர் திருவளர் கிரபுரச் செல்வர். சஙஉ

2336 வைகல் நீடுமா டக்கோயில் மன்னிய மருந்தைக்
கைகள் அஞ்சலி கொண்டுதாழ்ந் தெழுந்துகண் அருவி
செய்ய இன்னீசைச் செந்தமிழ் மாலைகள் மொழிந்து
நையும் உள்ளத்த ராய்த்திரு நல்லத்தில் நண்ணி. சஙங

2337 நிலவு மாளிகைத் திருநல்லம் நீடுமா மணியை
இலகு சேவடி இறைஞ்சிஇன் தமிழ்கொடு துதித்துப்
பலவும் ஈசர்தந் திருப்பதி பணிந்துசெல் பவர்தாம்
அலைபு னல்திரு வழுந்தூர்மா டக்கோயில் அடைந்தார். சஙச

2338 மன்னு மாமடம் மகிழ்ந்தவான் பொருளினை வணங்கிப்
பன்னு பாடலிற் பதிகஇன் னிசைகொடு பரவிப்
பொன்னி மாநதிக் கரையினில் மீண்டுபோந் தணைந்து
சொன்ன வாறறி வார்தமைத் துருத்தியில் தொழுதார். சஙஞ

2339 திரைத்த டம்புனல் பொன்னிசூழ் திருத்துருத் தியினில்
"வரைத்த லைப்பசும் பொன்"எனும் வண்தமிழ்ப் பதிகம்
உரைத்து மெய்யுறப் பணிந்துபோந் தலவும்அந் நதியின்
கரைக்கண் மூவலூர்க் கண்ணுத லார்கழல் பணிந்தார். சஙசு

2340 மூவ லூர்உறை முதல்வரைப் பரவிய மொழியால்
மேவு காதலில் ஏத்தியே விருப்பொடும் போந்து
பூவ லம்புதண் புனற்பணைப் புகலியர் தலைவர்
வாவி சூழ்திரு மயிலாடு துறையினில் வந்தார். சஙள

2341 மல்கு தண்டலை மயிலாடு துறையினில் மருவும்
செல்வ வேதியர் தொண்டரோர் டெதிர்கொளச் சென்று
கொல்லை மான்மறிக் கையரைக் கோயில்புக் கிறைஞ்சி
எல்லை இல்லதோர் இன்பம்மூன் பெருகிட எழுந்தார். சஙஅ

2342 உள்ளம் இன்புற உணர்வுறும் பரிவுகொண் டுருகி
வெள்ளந் தாங்கிய சடையரை விளங்குசொற் பதிகத்
தெள்ளும் இன்னிசைத் திறைப்பொடும் புறத்தணைந் தருளி
வள்ள லார்மற்ற வளம்பதி மருவுதல் மகிழ்ந்தார். சஙக

2343 அத்தி ருப்பதி அகன்றுபோய் அணிகிளர் சூலக்
கைத்த லப்படை வீரர்செம் பொன்பள்ளி கருதி
மெய்த்த காதலில் விளநகர் விடையவர் பாதம்
பத்தர் தம்முடன் பணிந்திசைப் பதிகம்மூன் பகர்ந்தார். சசO

2344 பாடும் அப்பதி பணிந்துபோய்ப் பறியலூர் மேவும்
தோடு லாமலர் இதழியும் தும்பையும் அடம்பும்

பா. செ. 1. அறுபது.

காடு கொண்டசெஞ் சடைமுடிக் கடவுளார் கருது
நீடு வீரட்டம் பணிந்தனர் நிறைமறை வேந்தர். சசக

2345 பரமர் தந்திருப் பறியலூர் வீரட்டம் பரவி
விரவு காதலின் வேலையின் கரையினே மேவி
அரவ ணிந்தவர் பதிபல அணைந்துமுன் வணங்கிச்
சிரபு ரத்தவர் திருத்தொண்டர் எதிர்கொளச் செல்வார். சசஉ

வேறு

2346 அடியவர்கள் களிசிறப்பத் திருவேட்டக் குடிபணிந்தங் கலை வாய்ப் போகிக், கடிகமழும் மலர்ப்பழனக் கழனிநாட் டகன்பதிகள் கலந்து நீங்கிக், கொடிமதில்சூழ் தருமபுரங் குறுகினர் "குண்டர்சாக் கியர்தங் கொள்கை, படிஅறியப் பழு"தென்றே மொழிந்துய்யும் நெறி காட்டும் பவள வாயர். சசங

2347 தருமபுரம் பெரும்பாணர் திருத்தாயர் பிறப்பிடமாம் அதனைச் சார, வருமவர்தஞ் சுற்றத்தார் வந்தெதிர்கொண் டடிவணங்கி வாழ்த் தக் கண்டு, பெருமையுடைப் பெரும்பாணர் அவர்க்குரைப்பார் பிள்ளை யார் அருளிச் செய்த, அருமையுடைப் பதிகந்தாம் யாழினும் பயிற் றும்பே றருளிச் செய்தார். சசச

2348 கிளைஞரும்மற் றதுகேட்டுக் "கெழுவுதிருப் பதிகத்திற் கிளர்ந்த ஓசை, அளவுபெறக் கருவியில்நீர் அமைத்தியற்றும். அதனுலே அகி லம் எல்லாம், வளரிசை நிகழ்வ"தென விளம்புதலும் வளம்புகலி மன்னர் பாதம், உளம்நடுங்கிப் பணிந்துதிரு நீலகண்டப் பெரும் பாணர் உணர்த்து கின்றார். சசடு

2349 "அலகில்திருப் பதிகஇசை அளவுபடா வகைஇவர்கள் அன்றி யேயும், உலகில்உளோ ருந்தெரிந்தங் குண்மையினே அறிந்துய்ய உணர்த்தும் பண்பால், பலர்புகழுந் திருப்பதிகம் பாடிஅரு ளப்பெற் றால் பண்பு நீடி, "இலகும்இசை யாழின்கண் அடங்காமை யான்காட் டப் பெறுவன்" என்றார். சசசு

2350 வேதநெறி வளர்ப்பவரும் விடையவர்முன் தொழுதிருப் பதி கத் துண்மை, பூதலத்தோர் கண்டத்தும் கலத்தினிலும் நிலத்தும்நூல் புகன்ற பேத, நாதஇசை முயற்சிகளால் அடங்காத வகைகாட்ட நாட்டு கின்றார், "மாதர்மடப் பிடி"பாடி வணங்கினர் வானவரும் வணங்கி ஏத்த. சசள

2351 வண்புகலி வேதியனார் "மாதர்மடப் பிடி"எடுத்து வனப்பிற் பாடிப், பண்பயிலுந் திருக்கடைக்காப் புச்சாத்த அணைந்துபெரும் பாண னர்தாம், நண்புடையாழ்க் கருவியினில் முன்புபோல் கைக் கொண்டு நடத்தப் புக்கார்க், கெண்பெருகும் அப்பதிகத் திசைநரம்பில் இடஅடங்கிற் றில்லை அன்றே. சசஅ

2352 அப்பொழுது திருநீல கண்டஇசைப் பெரும்பாணர் அதனை விட்டு, மெய்ப்பயமும் பரிவும்உறப் பிள்ளையார் கழலிணைவீழ்ந் தெழுந்துநோக்கி, "இப்பெரியோர் அருள்செய்த திருப்பதிகத் திசை யாழில் ஏற்பன் என்னச், செப்பியதிக் கருவியைநான் தொடுதலி னன் றே"என்று தெளிந்து செய்வார். சசக

2353 "வீக்குநரம் புடையாழி னல்விளைந்த திது"என்றங் கதனைப் போக்க, ஓக்குதலுந் தடுத்தருளி "ஐயரே உற்றஇசை அளவினுல் நீர், ஆக்கியஇக் கருவியினைத் தாரும்"என வாங்கிக்கொண் டவனி செய்த, பாக்கியத்தின் மெய்வடிவாம் பாலரு வாயர்பணித் தருளு கின்றார். சடுo

2354 "ஐயர்!நீர் யாழ்இதனை முரிக்குமதென் ஆளுடையா ளுடனே கூடச், செய்யசடை யார்அளித்த திருவருளின் பெருமையெலாந் தெரிய நம்பால், எய்தியஇக் கருவியினில் அளவுபடு மோகந்தம் இயல்புக் கேற்ப, வையகத்தோர் அறிவுறஇக் கருவிஅள வையின் இயற்றல் வழக்கே" என்றார். சடுக

2355 "சிந்தையால் அளவுபடா இசைப்பெருமை செயலாவில் எய்து மோநீர், இந்தயா ழினைக்கொண்டே இறைவர்திருப் பதிகஇசை இத னில் எய்த, வந்தவா றேபாடி வாசிப்பீர்" எனக்கொடுப்பப் புகலி மன்னர், தந்தயா ழினைத்தொழுது கைக்கொண்டு பெரும்பாணர் தலைமேற் கொண்டார். சடுஉ

2356 அணைவுறும்அக் கிளைஞருடன் பெரும்பாணர் ஆளுடைய பிள்ளை யார்தம், துணைமலர்ச்சே வடிபணிந்து துதித்தருளத் தோணிபுரத் தோன்ற லாரும், இணையில்பெருஞ் சிறப்பருளித் தொண்டருடன் அப்பதியில் இனிது மேவிப், பணைநெடுங்கை மதயானை உரித்தவர்தம் பதிபிறவும் பணியச் செல்வார். சடுங

2357 பங்கயப்பா சடைத்தடஞ்சூழ் பழனநாட் டகன்பதிகள் பலவும் நண்ணி, மங்கையொரு பாகத்தார் மகிழ்கோயில் எனைப்பலவும் வணங் கிப் போற்றித், தங்கிசையாழ்ப் பெரும்பாண ருடன்மறையோர் தலை வனுர் சென்று சார்ந்தார், செங்கைமான் மழுவேந்தும் சினவிடையார் அமர்ந்தருளுந் திருநள் ளாறு. சடுச

2358 நள்ளாற்றில் எழுந்தருள நம்பர்திருத் தொண்டர்குழாம் நயந்து சென்று, கொள்ளாற்றில் எதிர்கொண்டு குலவியுடன் சூழ்ந்தணையக் குறுகிக் கங்கைத், தெள்ளாற்று வேணியர்தந் திருவளர்கோ புரம் இறைஞ்சிச் செல்வக் கோயில், உள்ளாற்ற வலங்கொண்டு திருமுன்பு தாழ்ந்தெழுந்தார் உணர்வின் மிக்கார். சடுடு

2359 உருகியஅன் புறுகாதல் உள்ளுருகி நணுகரம் பெற்றுற் போல, மருவுதிரு மேனிஎலாம் முகிழ்த்தெழுந்த முயிர்ப்புளகம் வளர்க்கு

கோய், அருவிசொரி திருநயனத் தானந்த வெள்ளம்இழிந் தலைய
கின்று, பொருவில்பதி கம்"போக மார்த்தபூண் முலையாள்"என்
றெடுத்துப் போற்றி. சருசு

யாழ்நரம்பில் ஆதியல் இசைகூடப் பாடியே எண்ணில் கற்பச்
சேணளவு படஓங்குந் திருக்கடைக்காப் புச்சாத்திச் செங்கண் நாகப்
பூணகலத் தவர்பாதம் போற்றிசைத்துப் புறத்தணைந்து புவனம் ஏத்தும்
பாணனார் யாழிலிடப் பாலரு வாயர்அருள் பணித்த போது. சருள

பிள்ளையார் திருத்தாளங் கொடுபாடப் பின்புபெரும் பாண
னார்தாம், தெள்ளமுத இன்னிசையின் தேம்பொழிதந் திரியாழைச்
சிறக்க வீக்கிக், கொள்ளஇடும் பொழுதின்கட் குவலயத்தோர் களி
கூரக் குலவு சண்பை, வள்ளலார் திருவுள்ளம் மகிழ்ந்துதிருத்
தொண்டருடன் மருவுங் காலை. சருஅ

மன்னுதிரு நள்ளாற்று மருந்தைவணங் கிப்போந்து வாசி நன்னீர்ப்
பொன்னிவளந் தருகாட்டுப் புறம்பணைசூழ் திருப்பதிகள் பலவும் போற்றிச்
செந்நெல்வயற் செங்கமல முகம்மலருந் திருச்சாத்த மங்கை மூதூர்
தன்னில்எழுந் தருளினார் சைவசிகா மணியார்மெய்த் தவத்தோர் சூழ.

நிறைசெல்வத் திருச்சாத்த மங்கையினில் நீலநக்கர் தாழுஞ் சைவ
மறையவனார் எழுந்தருளும் படிகேட்டு வாழ்ந்துவழி விளக்கி எங்கும்
துறைமலிதோ ரணங்கதலி கமுகுநிறை குடந்தூப தீபம் ஆக்கி
முறைமையில்வந் தெதிர்கொள்ள உடனணைந்து முதல்வனார் கோயில் சார்ந்தார்.

அயவந்தி அமர்ந்தருளும் அங்கணர்தங் கோயில்முருங் கணைந்து வாளூர்
உயவந்தித் தெழுமுன்றில் புடைவலங்கொண் டுள்புக்கா(று) ஒழுகுஞ் செக்கர்
மயவந்தி மதிச்சடையார் முன்தாழ்ந்து மாதவம்இவ் வையம் மெல்லாஞ்
செயவந்த அந்தணனார் செங்கைமேற் குவித்தெழுந்து திருமுன் நின்றார்.

போற்றிசைக்கும் பாடலினைப் பொங்கிஎழும் ஆதரவு பொழிந்து
விம்ம, ஏற்றின்மிசை இருப்பவர்தம் எதிர்நின்று துதித்துப்போந்
தெல்லை இல்லா, நீற்றுநெறி மறையவனார் நீலநக்கர் மனையில்எழுந்
தருளி அன்பால், ஆற்றும்விருந் தவர்அமைப்ப அன்பருடன் இன்
புற்றங் கமுது செய்தார். சசுஉ

நீடுதிரு நீலநக்கர் நெடுமனையில் விருந்தமுது செய்து நீர்மைப்
பாடும்யாழ்ப் பெரும்பாண ருந்தங்க அங்கிரவு பள்ளி மேவி
ஆடுமவர் அயவந்தி பணிவதனுக் கன்பருடன் அணைந்து சென்று
நாடியநண் புடைநீல நக்கடிக ளுடன்நாதர் கழலில் தாழ்ந்து. சசுஙி

கோதிலா ஆரமுதைக் கோமளக்கொம் புடன்கூடக் கும்பிட் டேத்தி
ஆதியாம் மறைப்பொருளால் அருந்தமிழின் திருப்பதிகம் அருளிச் செய்வார்
நீதியால் நிகழ்கின்ற நீலநக்கர் தம்பெருஞ்சீர் நிகழ வைத்துப்
பூதிசா தனர்பரவும் புனிதஇய லிசைப்பதிகம் போற்றி செய்தார்.

2368 பரவியகா தலிற்பணிந்து பாலரு வாயர்புறத் தணைந்து பண்பு
விரவியநண் புடையடிகள் விருப்புறுகா தலில்தங்கி மேவும் நாளில்
அரவணிந்தார் பதிபிறவும் பணியளழும் ஆதரவால் அணைந்து செல்வார்
உரவுமனக் கருத்தொன்றும் உள்ளமுடை யவர்க்குவிடை உவந்து நல்கி.

வேறு

2369 மற்றவர்தம் பெருங்கேண்மை மகிழ்ந்து கொண்டு மாலயனுக்
கரியபிரான் மருவு தானம், பற்பலவுஞ் சென்றுபணிந் தேத்திப்
பாடிப் பரமர்திருத் தொண்டர்குழாம் பாங்கின் எய்தக், கற்றவர்
வாழ் கடல்நாகைக் காரோ ணத்துக் கண்ணுதலைக் கைதொழுது
கலந்த ஓசைச், சொற்றமிழ்மா லைகள்பாடிச் சிலநாள் வைகித்
தொழுதகன்றூர் தோணிபுரத் தோன்ற லார்தாம். சசுசு

வேறு

2370 கழிக்கானல் மருங்கணியுங் கடல்நாகை யதுநீங்கிக் கங்கை
யாற்றுச், சுழிக்கானல் வேணியர்தம் பதிபலவும் பரவிப்போய்த்
தோகை மார்தம், விழிக்காவி மலர்பழனக் கீழ்வேளூர் விமலர்கழல்
வணங்கி ஏத்தி, மொழிக்காதல் தமிழ்மாலை புனைந்தருளி அங்ககன்றூர்
மூதூர் நின்றும். சசுள

2371 அருகணியுந் திருப்பதிகள் ஆனவெலாம் அங்கணரைப் பணிந்து
போற்றிப், பெருகியஞா னம்பெற்ற பிள்ளையார் எழுந்தருளும்
பெருமை கேட்டுத், திருமருவு செங்காட்டங் குடிநின்றுஞ் சிறுத்
தொண்ட ரோடிச் சென்றங், குருகுமனங் களிசிறப்ப எதிர்கொண்டு
தம்பதியுட் கொண்டு புக்கார். சசுஅ

2372 சிறுத்தொண்ட ருடன்கூடச் செங்காட்டங் குடியில்எழுந் தருளிச் சீர்த்தி, நிறுத்தெண்திக் கிலுநிலவுந் தொண்டரவர் நண்பமர்ந்து
நீல கண்டம், பொறுத்தண்டர் உயக்கொண்டார் கணபதீச் சரத்தின்
கட் போகம் எல்லாம், வெறுத்துண்டிப் பிச்சைகொகர் மெய்த்தொண்ட
ருடன் அணைந்தார் வேத கீதர். சசுக

2373 அங்கணைந்து கோயில்வலங் கொண்டருளி அரவணிந்தார் அடிக்
கீழ் வீழ்ந்து, செங்கண்அரு விகள்பொழியத் திருமுன்பு பணிந்
தெழுந்து செங்கை கூப்பித், தங்கள்பெருந் தகையாரைச் சிறுத்தொண்
டர் தொழஇருந்த தன்மை போற்றிப், பொங்கிஎழும் இசைபாடிப்
போற்றிசைத்தங் கொருபரிசு புறம்பு போந்தார். சஎ0

2374 போந்தமா மாத்திரர்தம் போரேற்றின் திருமணியிற் புகுந்து சிந்தை
வாய்ந்தமா தவரவர்தாம் மகிழ்ந்தருள அமர்ந்தருளி மதில்கள் மூன்றும்
காய்ந்தமால் விடையார்தங் கணபதீச் சரம்பரவு காதல் கூர
ஏந்துதூல் அணிமார்பர் இன்புற்றங் கன்பருடன் இருந்த நாளில். சஎக

கி.பி. 1134. கி. வாயர் 3 ஆணி 4ஆம்.

375 திருமருகல் நகரின்கண் எழுந்தருளித் திங்களுடன் செங்கட் பாம்பு மருவுநெடுஞ் சடைமவுலி மாணிக்க வண்ணர்கழல் வணங்கிப் போற்றி உருகியஅன் புறுகாதல் உள்ளலேப்பத் தெள்ளுறும்இசை யுடனே கூடப் பெருகுதமிழ்த் தொடைசாத்தி அங்கிருந்தார் பெரும்புகலிப் பிள்ளே யார்தாம்.

வேறு

376 அந்நாளில் ஒருவணிகன் பதிக ளுகி அணைவானேர் கன்னியையும் உடனே கொண்டு, பொன்னுர்மே ருச்சிலையார் கோயில் மாடு புறத்தி லொரு மடத்திரவு துயிலும் போது, மின்னுர்வெள் எயிற்றரவு கவ் வுதலும் கிளர்ந்த விடவேகங் கடிதுதலே மீக்கொண் டேறத், தன்னுவி ரீங்குமவன் தன்மை கண்டு சாயலிளங் கன்னிநிலே தளர்ந்து சோர் வாள். சளங

377 வாளரவு தீண்டவுந்தான் தீண்ட கில்லாள் மறுமாற்றம் மற்றெருரு வர்கொடுப்பா ரின்றி, ஆளரியே றனையானை அணுக வீழ்ந்தே அசைந்த மலர்க் கொடிபோல்வாள் அரற்றும் போது, கோளருமும் புள்ளரசும் னேயார் எல்லாக் கொள்கையினு லுந்தீர்க்கக் குறையா தாக, நீளிரவு புலர்காலே மாலே வாச நெறிகுழலாள் நெடிதயர்ந்து புலம்பு கின்ருள்.

378 "அன்னேயையும் அத்தனேயும் பிரிந்து நின்னே அடைவாக உடன் போந்தேன் அரவால் வீடி, என்னேஉயிர் விட்டகன்ருய் யானென் செய்கேன் இவ்விடுக்கண் தீர்க்கின்ருர் யாரு மில்லே, மன்னியசீர் வணி கர்குல மணியே! யானும் வாழேன்" என்றென்றயர்வாள் மதியி னுலே, சென்னிஇளம் பிறைஅணிவார் கோயில் வாயில் திசைநோக்கித் தொழுதழுதாள் செயலொன் றில்லாள். சளஙி

379 "அடியாராம் இமையவர்தங் கூட்டம் உய்ய அலைகடல்வாய் நஞ் சுண்ட அமுதே! செங்கண், நெடியானும் நான்முகனும் காணக் கோல நீலவிட அரவணிந்த நிமலா! வெந்து, பொடியான காமன்உயிர் இரதி வேண்டப் புரிந்தளித்த புண்ணியனே! பொங்கர் வாசக், கடியாரும் மலர்ச்சோலே மருங்கு சூழுங் கவின்மருகற் பெருமானே! காவாய்" என்றும். சளசு

380 "வந்தடைந்த சிறுமறையோன் உயிர்மேற் சீறி வருங்காலன் பெருங்கால வலயம் போலும், சென்தறுகண் வெள்ளெயிற்றுக் கரிய கோலம் சிதைந்துருள உதைத்தருளுஞ் செய்ய தாளா!, இந்தவிடக் கொடுவேகம் நீங்கு மாறும் யான்இடுக்கண் குழிநின்றும் ஏறு மாறும், அந்திமதிக் குழவிவளர் செய்ய வேணி அணிமருகற் பெருமானே! அருளாய்" என்றும். சளள

381 இத்தன்மை சிவனருளே சிந்தித் தேங்கும் இளங்கொடிபோல் நடுங்கும்இடை ஏழை ஏத்தும், அத்தன்மை ஓசைஎழுந் தெங்கள் சண்பை ஆண்டகையார் கும்பிடவந் தணுகின் ருர்தம், மெய்த்தன்மை

ககக

பா.வே. 1. கைதாழ்வார். 2. அரவாயினு 3. பொங்கு. 4. குழிநின்றும்.

விளங்குதிருச் செவியிற் சார மேவுதலுந் திருவுள்ளக் கருணை மேன் மேல், வைத்தன்னம் எனஅயர்வாள் மாடு நீடு மாதவத்தோர் சூழ எழுந் தருளி வந்தார். சஎஅ

2382 சிரபுரத்து மறையவனுர் சென்று நின்று சிவபெருமான் அருள் போற்றிச் சிந்தை நைந்து, பரிவுறுவாள் தனேநோக்கிப் " பயப்ப டேல்நீ பருவரலும் நும்பரிசும் பகர்வாய் " என்னக், கரமலர்கள் உச்சியின்மேற் குவித்துக் கொண்டு கண்ணருவி சொரிந்திழியக் காழி வேதப், புரவலனுர் சேவடிக்கீழ் வீழ்ந்து தாங்கள் போந்ததுவும் புகுந் ததுவும் புகல லுற்றுர். சஎக

2383 "வளம்பொழில்சூழ் வைப்பூர்க்கோன் தாமன் எந்தை மருமகன் மற் றிவன்அவற்கு மகளிர் நல்ல, இளம்பிடியார் ஒருமூவர் இவரில் மூத்தாள் இவனுக்கென் றுரைசெய்தே ஏதி லானுக், குளம்பெருகத் தனம்பெற்றுக் கொடுத்த பின்னும் ஒருமூவ ராகளனே ஒழிய ஈந்தான், தளர்ந்தழியும் இவனுக்காத் தகவு செய்தங் கவரைமறைத் திவன்தனேயே சார்ந்து போந்தேன்." சஅo

2384 "மற்றிவனும் வாளரவு தீண்ட மாண்டான் மறிகடலிற் கலங் கவிழ்த்தார் போல நின்றேன், சுற்றத்தார் எனவந்து தோன்றி என் பால் துயரமெலாம் நீங்கஅருள் செய்தீர்" என்னக், கற்றவர்கள் தொழுதேத்துங் காழி வேந்தர் கருணையினுற் காரிகையாள் தன்க்கு நல்கப், பற்றியவாள் அரவுவிடந் தீரு மாறு பணேமருகற் பெருமானேப் பாட லுற்றுர். சஅக

2385 சடையானே எவ்வுயிர்க்குந் தாயா னேனச் சங்கரனேச் சசிகண்ட மவுலி யானே, விடையானே வேதியனே வெண்ணீற் றனே விரவாதார் புரம்மூன்றும் எரியச் செற்ற, படையானேப் பங்கயத்து மேவி னனும் பாம்பணையில் துயின்றனும் பரவுங் கோலம், உடையானே "உடை யானே தகுமோ இந்த ஒள்ளிழையாள் உள்மெலி"வென் றெடுத்துப் பாட. சஅஉ

2386 பொங்குவிடந் தீர்ந்தெழுந்து நின்றுன் சூழ்ந்த பொருவில்திருத் தொண்டர்குழாம் பொலிய ஆர்ப்ப, அங்கையினே உச்சியின்மேற் குவித்துக் கொண்டங் கருட்காழிப் பிள்ளேயார் அடியில் வீழ்ந்த, நங்கைஅவள் தனேநயந்த நம்பி யோடு நானிலத்தில் இன்புற்று வாழும் வண்ணம், மங்குல்தவழ் சோலைமலி புகலி வேந்தர் மணம்புணரும் பெருவாழ்வு வகுத்து விட்டார். சஅங

2387 மற்றவர்க்கு விடைகொடுத்தங் கமரு நாளில் மருகல்நக ரினில் வந்து வலிய பாசம், செற்றபுகழ்ச் சிறுத்தொண்டர் வேண்ட மீண் டுஞ் செங்காட்டங் குடியில்எழுந் தருள் வேண்டிப், பற்றியெழுங் காதல்மிக மேன்மேற் சென்று பரமனுர் திறத்துன்னிப் பாங்கர் எங்

1. பே. : கழுமலத்தார் போல
2. மனைவியார் தனேயினும் பாசமல்லால்

குஞ், சுற்றும்அருந் தவரோடுங் கோயில் எய்திச் சுடர்மழுவாண் டவர்பாதந் தொழுவான் புக்கார். சஅச

2388 புக்கிறைஞ்சி எதிர்நின்று போற்று கின்றூர் பொங்குதிரை நதிப் புனலும் பிறையுஞ் சேர்ந்த, செக்கர்முடிச் சடைமவுலி வெண்ணீற் றூர்தந் திருமேனி ஒருபாகம் பசுமை யாக, மைக்குலவு கண்டத்தார் மருகற் கோயில் மன்னுநிலை மனங்கொண்டு வணங்கு வார்முன், கைக் கனலார் கணபதீச் சரத்தின் மேவுங் காட்சிகொடுத் தருளுவான் காட்டக் கண்டார். சஅடு

வேறு

2389 மருகல் அமர்ந்து நிறைந்த கோலம் மல்குசெங் காட்டங் குடியின் மன்னிப், பெருகு கணபதி யீச்சரத்தார் பீடுடைக் கோலமே யாகித் தோன்ற, உருகிய காதலும் மீது பொங்க உலகர்முன் கொள்ளும் உணர்வு நீட, அருவிகண் வார்வுறப் பாட லுற்றூர் "அங்கமும் வேத மும்" என்றெ டுத்து. சஅசு

2390 கண்டெதிர் போற்றி வினவிப் பாடிக் கணபதி யீச்சரங் காத லித்த, அண்டர் பிரானை வணங்கி வைகும் அப்பதி யிற்சில நாள்கள் போற்றித், தொண்ட ருடன்அருள் பெற்று மற்றத் தொல்லைத் திருப் பதி எல்லை நீங்கிப், புண்டரி கத்தடஞ் சூழ்பழனப் பூம்புக லூர்தொழப் போது கின்றூர். சஅள

2391 சீரின் மலிந்த சிறப்பின் மேவுஞ் சிறுத்தொண்டர் நண்புடன் செல்ல கல்ல, வேரி நறுந்தொங்கல் மற்றவரும் விடையரு ளப் பெற்று மீண்டு பின்பு, சீரின் மலிந்த சடையர் மேவி நிகழும் பதிகள் பலப னிந்து, பாரின் மலிந்து நிறைந்த செல்வம் பயில்புக லூர்நகர்ப் பாங்க ணைந்தார். சஅஅ

2392 திருப்புக லூர்த்திருத் தொண்ட ரோடுஞ் செம்மை முருகனூர் மெய்ம்ம கிழ்ந்த, விருப்பொடு சென்றெதிர் கொள்ள வந்து வேத முதல்வர்தங் கோயி லெய்திப், பொருப்புறழ் கோபுரத் துட்பு குந்து பூமலி மூன்றில் புடைவ லங்கொண் டொருப்படு சிந்தையொ டுள் ளணைந்தார் ஓதாது ஞானமே லாம்உ ணர்ந்தார். சஅக

2393 புகிதிர் தாழ்ந்து விழுந்தெ ழுந்து பூம்புக லூர்மன்னு புண்ணி யரை, நெக்குரு குஞ்சிந்தை அன்பு பொங்க நிறைமலர்க் கண்ணீர் அருவி செய்ய, மிக்க தமிழ்த்தொடை மாலை சாத்தி மேவிய ஏழிசை பாடிப் போந்து, திக்கு நிறைசீர் முருகர் முன்பு செல்ல அவர்மடஞ் சென்று புக்கார். சகo

2394 ஆங்கவர் போற்றுஞ் சிறப்பின் மேவி அப்பதி தன்னில் அமரு நாளில், வாங்கு மலைச்சிலை யார்ம கிழ்ந்த வர்த்தமா னீச்சரந் தான் வணங்கி, ஓங்கிய அன்பின் முருக னூர்தம் உயர்திருத் தொண்டு

பார். பே.1. தண்டபாணி

சிறப்பித் தோங்கும், பாங்குடை வண்டமிழ் பாடி நாளும் பரமர்தம் பாதம் பணிந்தி ருந்தார். சகூ5

2395 மற்றத் திருப்பதி வைகு நாளில் வாக்கின் பெருவிறல் மன்னனூர்தாம், புற்றிடங் கொண்டாரை வந்தி றைஞ்சிப் பொன்மதில் ஆரூர் புகழ்ந்து போற்றிச், சிற்றிடைப் பொற்றொடிப் பங்கர் தங்குந் திருப்புக லூர்தொழச் சிந்தை செய்து, கொற்றவ னூர்அருள் பெற்ற தொண்டர் குழாத்துடன் அவ்வூர் குறுக வந்தார். சகூஉ

2396 நாவுக் கரசர் எழுந்த ருளும் நல்ல திருவார்த்தை கேட்ட போதே சேவில் திகழ்ந்தவர் மைந்த ரான திருஞான சம்பந்தர் சிந்தை அன்பு மேவுற்ற காதல் மிகப்பெருக விரைந்தெதிர் கொள்ளமெய் யன்ப ரோடும் பூவிற் பொலிபொய்கை சூழ்புகலூர்ப் புறம்பணை எல்லை கடந்துபோந்தார்.

2397 அங்கணர் ஆரூர் வணங்கிப் போந்த அரசும் எதிர்வந் தணைய வாசப் பொங்கு புனற்றண் புகலி வந்த பூசுரர் சிங்கமும் பொற்பின் எய்தித் தங்களின் அன்பின் முறைமை யாலே தாழ்ந்து வணங்கித் தனித்தனியே மங்கல மாகிய நல்வரவின் வாய்மை வினவி மகிழும் போது. சகூச

2398 மெய்த்திரு ஞானசம் பந்தர் வாக்கின் வேந்தரை நோக்கி விருப்பி னூலே, "அப்பரை இங்கணை யப்பெ றும்பே ரருளுடை யோம்யாம் அந்தண் ஆரூர், எப்பரி சால்தொழு துய்ந்த" தென்று வினவிட ஈதில் பெருந்த வத்தோர், செப்பிய வண்டமிழ் மாலை யாலே திருவா திரைநிகழ் செல்வஞ் சொன்னார். சகூரி

2399 அரசரு ளிச்செய்த வாய்மை கேட்ட அப்பொழு தேஅருள் ஞானம் உண்ட,சிரபுர வேந்தருஞ் சிந்தை யின்கண் தென் திரு வாரூர் வணங்கு தற்கு, விரவிய காதலிற் "சென்று போற்றி மீண்டும்வக் தும்மூடன் மேவுவன்" என், றுரவு கடற்கல் மிதப்பின் வந்தார்க் குரைத்துடன் பாடுகொண் டொல்லை போந்தார். சகூசு

2400 சோற்பெரு வேந்தருந் தோணி மூதூர்த் தோன்றல்பின் காதல் தொடாத் தாமும், பொற்புக லூர்தொழச் சென்றணைந்தார் புகலிப் பிரானும் புரிந்த சிந்தை, விற்குடி வீரட்டஞ் சென்று மேவி விடையவர் பாதம் பணிந்து போற்றிப், பற்பல ஆயிரந் தொண்ட ரோடும் "பாடல ஞன்மறை" பாடிப் போந்தார். சகூள

2401 துணரிணர்ச் சோலையுஞ் சாலி வேலித் துறைநீர்ப் பழனமுஞ் சூழ்க ரும்பின், மணமலி கானமும் ஞானம் உண்டார் மருங்குற நோக்கி மகிழ்ந்தருளி, அணைபவர் "அள்ளற் கழனி ஆரூர் அடைவோம்" என மொழிந் தன்பு பொங்கப், புணரிசைச் செந்தமிழ் கொண்டு போற்றிப் பொன்மதில் ஆரூர்ப் புறத்த ணைந்தார். சகூஅ

2402 வானுயர் செங்கதிர் மண்டி லத்து மருங்கணை யுங்கொடி மன்னும் ஆரூர், தாமெரு பொன்னுல கென்ன நீள்தொன் றுதங்கொளி

சண்பை வந்த, பானிற நீற்றர் "பருக்கை யாணைப்" பதிகத்
தமிழிசை பாடி யாடித், தேனெடு வண்டு முரலுஞ் சோலைத் திருப்
பற்றதன் எல்லை சேர்ந்தார். சகூக

போக்கிய சிந்தை விருப்பின் வெள்ளம் பொழிந்து புவிமேற்
போலிவ தென்ன, எங்குங் குளிரொளி வீசு முத்தின் இலங்கு சிவிகை
இழிந்தருளிச், செங்கை நிறைமலர் கொண்டு தூவித் திருவிருக் குக்
குறள் பாடி ஏத்தித், தங்கள் பிரான்அர சாளும் ஆரூர் தனைப்பணி
வுற்றார் தமிழ்விரகர். நிOO

வேறு

2

படியில் ஞானமுண் டருளிய பிள்ளையைப் பணிதற்
கடியர் சென்றெதிர் கொளஎழுந் தருளும்அஞ் ஞான்று
வடிகொள் சூலத்தர் மன்னிய பொன்மதில் ஆரூர்க்
கடிகொள் பேரணிப் பொலிவையார் முடிவுறக் காண்பார். நிOக

நின் மான்மத நளிர்பெருஞ் சேற்றிடை நறும்பொன்
தூங் றுந்துகள் சொரிதலிற் சுடரொளிப் படலை
யான வீதிகள் அடிவலித் தவைகரைந் தலைய
வர்ன மாரியிற் பொழிந்தது மலர்மது மாரி. நிOஉ

ஆடல் நீடுவ துகிற்கொடி அணிகுழற் கொடிகள்
தோடு சூழ்வன சுரும்பொடு தமனியத் தசும்பு
காடு கொண்டன கதலிதோ ரணநிரைக் கமுகு
மாளிகை மண்டபங் களின்மருங் கெல்லாம். நிOங

மாலை சூழ்புறங் கடைகளின் மணிநிரை விளக்கின்
கோல நீள்சுடர் ஒளியுடன் கோத்திடை தூக்கும்
சீல மாமணி நிழல்பொர நிறம்புகர் படுக்கும்
பால வாயின பவளவே திகைமலர்ப் பந்தர். நிOச

தழைம லர்த்தடஞ் சாலைகள் தெற்றிகள் சதுக்கம்
குழைமு கத்தவர் ஆடரங் கிமையவர் குழாமும்
விழைசி றப்பின வியலிடம் யாவையும் மிடைந்து
மழைமு ழக்கென இயம்பின மங்கல இயங்கள். நிOஞ

விரவு பேரணி வேறுவே றின்னன விளங்கும்
பிரச மன்மலர்ச் சோலைசூழ் பெருந்திரு வாரூர்
அரசு செலிப்பவர் அருளினால் அடியவர் குழுவும்
புரிசை னங்களும் புறத்தணைந் தெதிர்கொளும் பொழுது. நிOசு

வகுதி றைஞ்சுமெய்த் தொண்டர்தங் குழாத்தெதிர் வணங்கிச்
சதுர முத்தமிழ் விரகராஞ் சண்பையர் தலைவர்

"அந்த மாயுல காதியாம்" பதிகம்அங் கெடுத்தே
"எங்தை தான்எனை ஏன்றுகொ ளுங்கொல்?"என் றிசை

2411 ஆன அத்திருப் பதிகமுன் பாடிவந் தணையும்
ஞான வித்தகர்•மெய்த்தவர் சூழஅந் நகரார்
தூந றுஞ்சுண்ண மலர்பொரி தூஉய்த்தொழு தேத்த
வான நாயகர் கோயில்வா யிலின்மருங் கணைந்தார்.

2412 மன்னு தோரண வாயில்முன் வணங்கியுள் புகுவார்
தன்னுள் எவ்வகைப் பெருமையுந் தாங்கிய தகைத்தாம்
பன்னெ டுஞ்சுடர்ப் படலையின் பரப்பினைப் பார்த்துச்
சென்னி தாழ்ந்துதே வாசிரி யன்தொழு தெழுந்தார்.

2413 மாடு சூழ்திரு மாளிகை வலங்கொண்டு வணங்கிக்
கூடு காதலிற் கோபுரம் பணிந்துகை குவித்துத்
தேடு மாலயர்க் கரியராய்ச் செழுமணிப் புற்றில்
நீடு வார்முன்பு நிலமுறப் பலமுறை பணிந்தார்.

2414 பணிந்து வீழ்ந்தனர் பதைத்தனர் பரவிய புளகம்
அணிந்த மேனியோ டாடினர் பாடினர் அறிவில்
துணிந்த மெய்ப்பொரு ளானவர் தமைக்கண்டு துதிப்பார்
தணிந்த சிந்தையின் விரைந்தெழு வேட்கையில் தாழ்ந்தார்.

2415 செஞ்சொல் வண்டமிழ்த் திருப்பதி கத்திசை எடுத்து
நஞ்சு போனகம் ஆக்கிய நம்பர்மூன் பாடி
மஞ்சு சூழ்திரு மாளிகை வாயிலின் புறம்பேரந்
தஞ்செ முத்தின்மெய் யுணர்ந்தவர் திருமடத் தணைந்தார்.

2416 அங்க ணேந்தமர்ந் தருளுவார் அரனெறி அமர்ந்த
செங்க ணேற்றவர் சேவடி வணங்கிமுன் திளைத்துப்
பொங்கு பேரொளிப் புற்றிடங் கொண்டவர் புனிதப்
பங்க யப்பதந் தொழுதுகா லந்தொறும் பணிந்தார்.

2417 புற்றி டங்கொளும் புனிதரைப் போற்றிசை பெருகப்
பற்றும் அன்பொடு பணிந்திசைப் பதிகங்கள் பாடி
நற்ற வத்திருத் தொண்டர்க ளொடுகலந் சிறப்ப
மற்ற வன்பதி தன்னிடை வைகும்அந் நாளில்.

2418 மல்லல் நீடிய வலிவலங் கோளிலி முதலாத்
தொல்லை நான்மறை முதல்வர்தம் பதிபல தொழுதே
எல்லை யில்திருப் பதிகங்க ளாற்பணிந் தேத்தி
அல்லல் தீர்ப்பவர் மீண்டும்ஆ ரூர்தொழ அணைந்தார்.

2419 ஊறு காதலில் ஒளிவளர் புற்றிடங் கொண்ட
ஆறு லாவிய சடைமுடி ஐயரைப் பணிந்து

நீறு வாழ்வென நிகழ்திருத் தொண்டர்க ளோடும்
ஈறி லாத்திரு ஞானசம் பந்தர்அங் கிருந்தார். நிகசு

2420 அங்கு நன்மையில் வைகும்அந் நாள்சில அகல
நங்கள் தந்திரு நாவினுக் கரசரை நயந்து
பொங்கு சீர்ப்புக லூர்தொழ அருளினுற் போவார்
தங்கும் அப்பதிப் புறம்பணை சார்ந்தருள் செய்வார். நிகள

வேறு

2421 புவனவா ரூரினிற் புறம்புபோந் ததனையே நோக்கி நின்றே
"அவமிலா நெஞ்சமே அஞ்சல்நீ உய்யுமா றறிதி" அன்றே
"சிவனதா ரூர்தொழாய் நீமற் வா"தென்று செங்கை கூப்பிப்
"பவனமாய்ச் சோடையாய்" எனுந்திருப் பதிகமுன் பாடி னாரே.

2422 காழியார் வாழவந் தருள்செயுங் கவுணியப் பிள்ளை யார்தாம்
ஆழியான் அறியொணு அண்ணல்ஆ ரூர்பணிந் தரிது செல்வார்
பாழிமால் யானையின் உரிபுனைந் தார்பணை யூர்ப ணிந்து
வாழிமா மறைஇசைப் பதிகமும் பாடிஅப் பதியில் வைகி. நிகக

2423 அங்குநின் றரிதெழுந் தருளுவார் அகிலகா ரணமும் ஆனூர்
தங்குநற் பதிகளும் பிறபணிந் தருளிவண் தமிழ்பு னைந்தே
எங்குமெய்த் தவர்குழாம் எதிர்கொளத் தொழுதெழுந் தருளி வந்தார்
பொங்குதண் பாசடைப் பங்கயப் புனல்வயற் புகலூர் சார. நிஉ

2424 நாவினுக் கரசரும் நம்பிசீர் முருகரும் மற்று நாமச்
சேவுகைத் தவர்திருத் தொண்டரா னவர்கள்முன் சென்று சீதப்
பூவினிற் பொலிபுனற் புகலியார் போதகத் தெதிர்ப ணிந்தே
மேவமற் றவருடன் கூடவே விமலர்கோ யிலைஅ டைந்தார். நிஉக

வேறு

2425 தேவர்தந் தலைவனூர் கோயில்புக் கணைவருஞ் சீர்நிலத் துறவ ணங்கிப்
பாவருந் தமிழிசைப் பதிகமும் பாடிமுன் பரவுவார் புறம்ப ணைந்தே
தாவில்சீர் முருகனூர் திருமணைக் கெய்திஅத் தனிமுதல் தொண்டர் தாமே
யாவையுங் குறைவறுத் திடஅமர்ந் தருளுவார் இனிதின்அங் குறையு நாளில்.

2426 நீலநக் கடிகளும் நிகழ்சிறுத் தொண்டரும் உடன்அணைந் தெய்து
நீர்மைச், சீலமெய்த் தவர்களுங் கூடவே கும்பிடுஞ் செய்கைநேர்
கின்று வாய்மை, சாலமிக் குயர்திருத் தொண்டின்உண் மைத்
திறந் தன்னையே தெளிய நாடிக், காலமுய்த் தவர்களோ டளவளா
விக்கலந் தருளினூர் காழி நாடர். நிஉங

2427 கும்பிடுங் கொள்கையிற் "குறிகலந் திசை"எனும் பதிகமுன்
னை பாடல், தம்பெருந் தலைமையால் நிலைமைசால் பதியதன் பெருமை

சால் புறவி ளம்பி, உம்பரும் பரவுதற் குரியசொற் பிள்ளையார் உள்ள மெய்க் காதல் கூர, நம்பர்தம் பதிகளா யினஎணைப் பலவுமுன் நண் ணியே தொழுத யந்தார். நிஉச

வேறு

2428 புள்ள லம்புதண் புனற்புக லூர்உறை புனிதனர் அருள்பெற்றுப்
பிள்ளை யாருடன் நாவினுக் கரசரும் பிறபதி தொழச்செல்வார்
வள்ள லார்சிறுத் தொண்டரும் நீலநக் கரும்வளம் பதிக்கேக
உள்ளம் அன்புறும் முருகர்அங் கொழியவும் உடன்பட இசைவித்தார்.

2429 கண்ண கன்புக லூரினைத் தொழுதுபோம் பொழுதினிற் கடற்காழி
அண்ண லார்திரு நாவினுக் கரசர்தம் அருகுவிட் டகலாதே
வண்ண நித்திலச் சிவிகையும் பின்வர வழிக்கொள உறுங்காலை
எண்ணில் சீர்த்திரு நாவினுக் கரசரும் மற்றவர்க் கிசைக்கின்றார்.

2430 "நாய னர்உமக் களித்தருள் செய்தஇந் நலங்கிளர் ஒளிமுத்தின்
தூய யானத்தின் மிசைஎழுந் தருளுவீர்" என்றலுஞ் "சுடர்த்திங்கள்
மேய வேணியார் அருளும்இவ் வாறெனில் விரும்புதொண் டர்களோடும்
போய தெங்குநீர் அங்குயான் பின்வரப் போவ"தென் றருள்செய்தார்.

2431 என்று பிள்ளையார் மொழிந்தருள் செய்திட இருந்தவத் திறையோரும்
"நன்று நீர்அருள் செய்ததே செய்வன்" என்றருள்செய்து நயப்புற்ற
அன்றை நாள்முதல் உடன்செலு நாளெலாம் அவ்வியல் பினிற்செல்வார்
சென்று முன்னுறத் திருவம்பர் அணைந்தனர் செய்தவக் குழாத்தோடும்.

2432 சண்பை மன்னருந் தம்பிரான் அருள்வழி நிற்பது தலைச்செல்வார்
பண்பு மேம்படு பனிக்கதிர் நித்திலச் சிவிகையிற் பணிந்தேறி
வண்பெ ரும்புக லூரினைக் கடந்துபோய் வரும்பரி சனத்தோடும்
திண்பெ ருந்தவர் அணைந்ததெங் கென்றுபோய்த் திருவம்பர் நகர்புக்கார்.

2433 அம்பர் மாநகர் அணைந்துமா காளத்தில் அண்ணலார் அமர்கின்ற
செம்பொன் மாமதிற் கோயிலை வலங்கொண்டு திருமுன்பு பணிந்தேத்தி
வம்பு லாமலர் தூவிமுன் பரவியே வண்தமி ழிசைமாலை
உம்பர் வாழநஞ் சுண்டவர் தமைப்பணிந் துருகும்அன் பொடுதாழ்ந்தார்.

2434 தாழ்ந்து நாவினுக் கரசுடன் தம்பிரான் கோயில்முன் புறமெய்திச்
சூழ்ந்த தொண்டரோ டப்பதி யமர்பவர் சுரநதி முடிமீது
வீழ்ந்த வேணியர் தமைப்பெருங் காலங்கள் விருப்பினுற் கும்பிட்டு
வாழ்ந்தி ருந்தனர் காழியார் வாழவந் தருளிய மறைவேந்தர். நிஎக

2435 பொருவி லாதசொற் "புல்குபொன் னிற"முதற் பதிகங்க ளாற்போற்றித்
திருவி னர்ந்தகோச் செங்கணன் அந்நகர்ச் செய்தகோ யிலைச்சேர்ந்து
மருவு வாய்மைவண் தமிழ்மலர் மாலைஅவ் வளவனைச் சிறப்பித்துப்
பெருகு காதலிற் பணிந்துமுன் பரவினர் பேணிய உணர்வோடும்.

1. 2427. 1. திருத்தொண்டர். 2. மெய்யடி.

2436 இன்ன வாறுசொன் மாலிக ளாற்றுதித் திறைஞ்சிஅங் கமர்ஞாளில்
கன்னி மாமதில் திருக்கட வூர்தொழுக் காதல்செய் தருளிப்போய்
மன்னு கோயில்கள் பிறபதி வணங்கியே வாக்கின்மன் னவரோடும்
அந்நெ டும்பதி அணைவுறக் கலயரோ டடியவர் எதிர்கொண்டார். நிஙஙு

2437 மற்ற வண்பதி அணைந்துவீ ரட்டத்து மழவிடை யார்கோயில்
சுற்று மாளிகை வலங்கொண்டு காலனை யுதைத்துருட் டியசெய்ய
பொற்சி லம்பணி தாமரை வணங்கிமுன் போற்றிஉய்ந் தெதிர்கின்று
பற்ற றுப்பவர் "சடையுடை யான்" எனும் பதிகஇன் னிசைபாடி.

2438 பரவி ஏத்திஅங் கரிதினிற் போந்துபார் பரவுசீர் அரசோடு
விரவு நண்புடைக் குங்குலி யப்பெருங் கலயர்தம் மனைமேவிக்
கரையில் காதல்மற் றவர்அமைத் தருளிய விருந்தினி தமர்ந்தங்குச்
சிரபு ரத்தவர் திருமயா னமும்பணிந் திருந்தனர் சிறப்பெய்தி. நிஙஙு

2439 சிறப்பு டைத்திருப் பதிஅத னிடைச்சில நாளமர்ந் தருளோடும்
விறற்பெ ருங்கரி உரித்தவர் கோயில்கள் விருப்பொடுந் தொழச்செல்வார்
மறைப்பெ ருந்திருக் கலயரும் உடன்பட வணங்கிய மகிழ்வோடும்
அறப்பெ ரும்பயன் அணையஅத் தொண்டரோ டணைந்தனர் திருவாக்கூர்.

2440 தக்க அந்தணர் மேவும்அப் பதியினில் தான்தோன்றி மாடத்துச்
செக்கர் வார்சடை அண்ணலைப் பணிந்திசைச் செந்தமிழ்த் தொடைபாடி
மிக்க கோயில்கள் பிறவுடன் தொழுதுபோய் மீயச்சூர் பணிந்தேத்திப்
பக்கம் பாரிடம் பரவநின் றுடுவார் பாம்புர நகர்சேர்ந்தார். நிஙஙு

2441 பாம்பு ரத்துறை பரமரைப் பணிந்துநற் பதிகஇன் னிசைபாடி
வாம்பி னன்சடை முடியினர் மகிழ்விடம் மற்றுமுள் ளனபோற்றிக்
காம்பி னில்திகழ் தரும்பொடு செந்நெலின் கழனியம் பணைநீங்கித்
தேம்பொ ழில்திரு வீழிநன் மிழலையின் மருங்குறச் செல்கின்றார்.

வேறு

2442 அப்பொழுதின் ஆண்ட அரசை எதிர்கொண்ட
மெய்ப்பெருமை அந்தணர்கள் வெங்குருவாழ் வேந்தனார்
பிற்படவந் தெய்தும் பெரும்பேறு கேட்டுவப்பார்
எப்பரிசி னல்வந் தணைந்தங் கெதிர்கொண்டார். நிஙஙூ

2443 நிறைகுடந் தூபந்தீபம் நீட நிரைத்தேந்தி
நறைமலர்ப் பொற்சுண்ணம் நறும்பொரியுந் தூவி
மறையொலிபோய் வானளப்ப மாமுரசம் ஆர்ப்ப
இறைவர்திரு மைந்தர்தமை எதிர்கொள்வ ரேற்றார். நிசo

2444 வந்து திருவீழி மிழலை மறைவல்ல
அந்தணர்கள் போற்றிசைப்பத் தாழும் மணிமுத்தின்

பா.பே.1. தாலனை எதிர்கொண்டையை. 2. வீழிமர.

சந்த மணிச்சிவிகை நின்றிழிந்து தாழ்ந்தருளி
உய்ந்த மறையோ ருடனணைந்தங் குள்புகுவார். நிசக

2443 அப்போ தரையார் விரிகோ வணவுடை
ஒப்போ தரும்பதிகத் தோங்கும் இசைபாடி
மெய்ப்போதப் போதமர்ந்தார் தங்கோயில் மேவினார்
கைப்போது சென்னியின்மேற் கொண்டு கவுணியனார். நிசஉ

2444 நாவின் தனிமன்னர் தாமும் உடன்நண்ண
மேவிய விண்ணிழிந்த கோயில் வலங்கொள்வார்
பூவியலும் உந்தியான் போற்றப் புவிக்கிழிந்த
தேவியலு மெய்கண்டு சிந்தைவியப் பெய்தினார். நிசஙக

2445 வலங்கொண்டு புக்கெதிரே வந்து வாகதியின்
சலங்கொண்ட வேணித் தனிமுதலைத் தாழ்ந்து
நிலங்கொண்ட மேனியராய் நீடுபெருங் காதல்
புலங்கொண்ட சிந்தையினைப் பொங்கிசை மீப்பொழிந்தார்.

2446 போற்றிச் "சடையார் புன லுடையான்" என்றெடுத்துச்
சாற்றிப் பதிகத் தமிழ்மாலை சந்தஇசை
ஆற்ற மிகப்பாடி ஆனந்த வெள்ளத்தில்
நீற்றழகர் சேவடிக்கீழ் நின்றலைந்து நீடினார். நிசஞ

2447 நீடியபே ரன்புருகி உள்ளலைப்ப நேர்நின்று
பாடினதி ராடிப் பரவிப் பணிந்தெழுந்தே
ஆடிய சேவடிகள் ஆர்வமுற உட்கொண்டு
மாடுயர் கோயிற் புறத்தரிது வந்தணைந்தார். நிசசு

2450 வந்தணைந்து வாழ்ந்து மதிற்புறத்தோர் மாமடத்துச்
செந்தமிழ்ச்சொல் வேந்தருஞ் செய்தவருஞ் சேர்ந்தருளச்
சந்தமணிக் கோபுரத்துச் சார்ந்தவட பாற்சண்பை
அந்தணர்சூ ளாமணியார் அங்கோர் மடத்தமர்ந்தார். நிசஎ

2451 அங்கண் அமர்வார் அரனார் அடியிணைக்கீழ்த்
தங்கிய காதலினாற் காலங்கள் தப்பாமே
பொங்குபுகழ் வாகீச ருங்கூடப் போற்றிசைத்தே
எங்கும் இடர்தீர்ப்பார் இன்புற்றுறைகின்றார். நிசஅ

2452 ஓங்குபுனற் பேணு பெருந்துறையும் உள்ளிட்ட
பாங்கார் திலதைப் பதிமுற்ற மும்பணிந்து
வீங்கொளிநீர் வீழி மிழலையினில் மீண்டும்அணைந்
தாங்கினிது கும்பிட்டமர்ந்தொழுகும் அந்நாளில். நிசஙக

2. நாவுக்கரசு சுவாமிகள் திருப்பூந்துருத்தி.
3. ஞானசம்பந்தர் திருவேதிகுடி

வேறு

2453 சேணுயர் மாடப் புகலி யுள்ளார் திருஞான சம்பந்தப் பிள்ளை யாரைக், காணும் விருப்பிற் பெருகும் ஆசை கைம்மிகு காதல் கரையி கப்பப், பூணு மனத்தொடு தோணி மேவும் பொருவிடை யார்மலர்ப் பாதம் போற்றி, வேணு புரத்தை அகன்று போந்து வீழி மிழலையில் வந்த ணைந்தார். நருo

2454 "ஊழி முடிவில் உயர்ந்த வெள்ளத் தோங்கிய காழி உயர்பதி யில், வாழி மறையவர் தாங்கள் எல்லாம் வந்து மருங்கணைந் தார்கள்" என்ன, வீழி மிழலையின் வேதி யர்கள் கேட்டுமெய்ஞ் ஞானமுண் டாரை முன்னு, ஏழிசை சூழ்மறை எய்த ஓதி எதிர்கொள் முறை மையிற் கொண்டு புக்கார். நருக

2455 சண்பைத் திருமறை யோர்க ளெல்லாம் தம்பிரா ஞரைப் பணிந்து போந்து, நண்பிற் பெருகிய காதல் கூர்ந்து ஞானசம் பந்தர் மடத்தில் எய்திப், பண்பிற் பெருகுங் கழும லத்தார் பிள்ளையார் பாதம் பணிந்து பூண்டே, "எண்பெற்ற தோணி புரத்தில் எம்மோ டெழுந்தரு ளப்பெற வேண்டும்" என்றார். நருஉ

2456 என்றவர் விண்ணப்பஞ் செய்த போதில் ஈறில் சிவஞானப் பிள்ளை யாரும், "நன்றிது சாலவுந் தோணி மேவும் நாதர் கழலிணை நாம்இ றைஞ்ச, இன்று கழித்து மிழலை மேவும் இறைவர் அருள்பெற் றுப் *போவ" தென்றே, அன்று புகலி அருமறையோர்க் கருள்செய் தவர்க்கு முகம்அ ளித்தார். நருஊ

2457 மேற்பட்ட அந்தணர் சண்பை மேவும் வேதியர்க் காய விருந்த ளிப்பப், பாற்பட்ட சிந்தைய ராய்ம கிழ்ந்து பரம்பொரு ளானூர் தமைப்பரவும், சீர்ப்பட்ட எல்லை இனிது செல்லத் திருத்தோணி மேவிய செல்வர் தாமே, கார்ப்பட்ட வண்கைக் கவுணி யர்க்குக் கன விடை மூன்னின் றருள்செய் கின்றார். நருஎ

2458 "தோணியில் நாமங் கிருந்த வண்ணந் தூமறை வீழி மிழலை தன் னுள், சேணுயர் விண்ணின் றிழிந்த இந்தச் சீர்கொள் விமானத்துக் காட்டு கின்றோம், பேணும் படியால் அறிதி" என்று பெயர்ந்தருள் செய்யப் பெருந்த வங்கள், வேணு புரத்தவர் செய்ய வந்தார் விரவும் புளகத் தொடும் உணர்ந்தார். நருஏ

2459 அறிவுற்ற சிந்தைய ராய்ள மூந்தே அதிசயித் துச்சிமேல் அங்கை கூப்பி, வெறியுற்ற கொன்றையி னர்ம கிழ்ந்த விண்ணிழி கோயிலிற் சென்று புக்கு, மறியுற்ற கையரைத் தோணி மேல்முன் வணங்கும் படிஅங்குக் கண்டு வாழ்ந்து, குறியிற் பெருகுந் திருப்பதிகங் குலவிய கொள்கையிற் பாடு கின்றார். நருஐ

* பி. வெ. போவ எனச் சேர்த்து, 2. வென்னேர் காட்டு

2460 "மைம்மரு பூங்குழல்" என்றெடுத்து மாறில் பெருந்திருத் தோணி தன்மேற், "கொம்மை முலையினுள் கூட நீடு கோலங் குலாவு மிழலை தன்னில், செம்மை தருவிண் ணிழிந்த கோயில் திகழ்ந்த படி இது என்கொல்!" என்று, மெய்ம்மை விளங்குந் திருப்பதிகம் பாடி மகிழ்ந்தனர் வேத வாயர். நிருள

2461 செஞ்சொல் மலர்ந்த திருப்பதிகம் பாடித் திருக்கடைக் காப்புச் சாத்தி, அஞ்சலி கூப்பி விழுந்தெழுவார் ஆனந்த வெள்ளம் அலைப் பப் போந்து, மஞ்சிவர் சோலைப் புகலி மேவும் மாமறை யோர்தமை நோக்கி வாய்மை, நெஞ்சில் நிறைந்த குறிப்பில் வந்த நீர்மைத் திறத்தை அருள்செய் கின்றார். நிருஅ

2462 "பிரம புரத்தில் அமர்ந்த மூக்கட் பெரிய பிரான்பெரு மாட்டி யோடும், விரவிய தானங்கள் எங்குஞ் சென்று விரும்பிய கோலம் பணிந்து போற்றி, வருவது மேற்கொண்ட காதல் கண்டங் கமர்ந்த வகைஇங் களித்த" தென்று, தெரிய உரைத்தருள் செய்து "நீங்கள் சிரபுர மாநகர் செல்லும்" என்றார். நிருக

2463 என்று கவுணியப் பிள்ளை யார்தாம் இயம்பப் பணிந்தருள் ஏற் றுக் கொண்டே, ஒன்றிய காதலின் உள்ளம் அங்கண் ஒழிய ஒருவா றகன்று போந்து, மன்னுள் நடம்புரிந் தார்ம கிழ்ந்த தானம் பலவும் வணங்கிச் சென்று, நின்ற புகழ்த்தோணி நீடு வாரைப் பணியும் நிய தியராயு றைந்தார். நிகo

2464 சிரபுரத் தந்தணர் சென்ற பின்னைத் திருவீழி மேவிய செல்வர் பாதம், பரவுதல் செய்து பணிந்து நாளும் பண்பின் வழாத்திருத் தொண்டர் சூழ, உரவுத் தமிழ்த்தொடை மாலை சாத்தி ஓங்கிய நாவுக் கரச ரோடும், விரவிப் பெருகிய நண்பு கூர மேவி இனிதங் குறையு நாளில். நிகக

வேறு

2465 மண்ணின்மிசை வான்பொய்த்து நதிகள் தப்பி மன்னுயிர்கள் கண்சாம்பி உணவு மாறி, விண்ணவர்க்குஞ் சிறப்பில்வரும் பூசை யாற்று மிக்கபெரும் பசிஉலகில் விரவக் கண்டு, பண்ணமரு மொழியு மையாள் முலையின் ஞானப் பாலரு வாயருடன் அரசும் பார்மேல், "கண்ணுதலான் திருநீற்றுச் சார்வி னோர்க்குங் கவலைவரு மோ" என்று கருத்திற் கொண்டார். நிகஉ

2466 வானுகி நில்லுகி அனலு மாகி மாருதமாய் இருசுடராய் நீரு மாகி, ஊனுகி உயிராகி உணர்வு மாகி உலகங்கள் அனைத்துமாய் உலகுக் கப்பால், ஆனுத வடிவாகி நின்றார் செய்ய அடிபரவி அன்றிரவு துயி லும் போது, காணுடு கங்காளர் மிழலை மூதூர் காதலித்தார் கனவில் அணைந் தருளிச் செய்வார். நிகங

2467 "உலகியல்பு நிகழ்ச்சியால் அணைந்த தீய உறுபசிநோய் உமை அடையா தெனினும் உம்பால், நிலவுசிவ நெறிசார்ந்தோர் தம்மை வாட்டம் நீக்குதற்கு நித்தமோரோர் காசு நீடும், இலகுமணிப் பீடத்துக் குணக்கு மேற்கும் யாமளித்தோம் உமக்கிந்தக் கடலந் தீர்ந்தால், அலகில்புக ழீர்! தவிர்வ தாகும்" என்றே அருள்புரிந்தார் திருவீழி மிழலை ஐயர். நிசுச

2468 தம்பிரான் அருள்புரிந்து கனவின் நீங்கச் சண்பையார் இளவேறு தாமு ணர்ந்து, "நம்பிரான் அருளிருந்த வண்ணம்" என்றே நாவினிசை அரசொடுங் கூட நண்ணி, வம்புலா மலரிதழி வீழி நாதர் மணிக்கோயில் வலஞ்செய்யப் புகுந்த வேலை, அம்பிகா பதிஅருளால் பிள்ளை யார்தாம் அபிமுகத்துப் பீடிகைமேற் காசு கண்டார். நிசுநி

2469 காதலொடுங் தொழுதெடுத்துக் கொண்டு நின்று கைகுவித்துப் பெருமகிழ்ச்சி கலந்து பொங்க, "நாதர்விரும் படியார்கள் நாளும் நாளும் நல்விருந்தா யுண்பதற்கு வருக" என்று, தீதில்பறை நிகழ்வித்துச் சென்ற தொண்டர் திருவமுது கறிநெய்பால் தயிரென்றின்ன, ஏதமுறு தினிதுண்ண ஊட்டி அங்கண் இருதிறத்துப் பெருந்தவரும் இருந்த நாளில். நிசுசூ

2470 நாவினுக்கு வேந்தர்திரு மடத்தில் தொண்டர் நாட்கூறு திருவமுது செய்யக் கண்டு, சேவுகைத்தார் அருள்பெற்ற பிள்ளை யார்தந் திருமடத்தில் அமுதாக்கு வாசை நோக்கித், "தீவினைக்கு நீரென்றும் அடைவி லாதீர் திருவமுது காலத்தால் ஆக்கி இங்கு, மேவுமிக்க அடியவருக் களியா வண்ணம் விளைந்தவா றென்கொலோ விளம்பும்" என்றார். நிசுஎ

2471 திருமறையோர் தலைவர்தாம் அருளிச் செய்யத் திருமடத்தில் அமுதமைப்போர் செப்பு வார்கள், "ஒருபரிசும் அறிந்திலோம் இதனை உம்மை உடையவர்பாற் பெறும்படிக்கா சொன்றுங் கொண்டு, கருதிய எல் லாங்கொள்ள வேண்டிச் சென்றால் காசுதனை வாசிபட வேண்டும் என்பார், பெருமுனிவர் வாசீசர் பெற்ற காசு பேணியே கொள்வர்இது பிற்பா" டென்றார். நிசுஅ

2472 திருஞான சம்பந்தர் அதனைக் கேட்டுச் சிந்திப்பார் "சிவபெருமான் நமக்குத் தந்த, ஒருகாசு வாசிபட மற்றக் காசு நன்றாகி வாசிபடா தொழிவான் அந்தப், பெருவாய்மைத் திருநாவுக் கரசர் தொண்டாற் பெறுங்காசாம் ஆதலினற் பெரியோன் தன்னை, வருநாள்கள் தருங்காசு வர்சி தீரப் பாடுவன்" என் றெண்ணியது மனத்துட் கொண்டார். நிசுக

2473 மற்றைநாள் தம்பிரான் கோயில் புக்கு "வாசிதீர்த் தருளும்" எனப் பதிகம் பாடிப், பெற்றபடி நற்காசு கொண்டு மாந்தர் பெயர்ந்து போய் ஆவணவீ தியினிற் காட்ட, நற்றவத்தீர்! "இக்காசு சால நன்று

வேண்டுவன நாந்தருவோம்'' என்று நல்க, அற்றைநாள் தொடங்கி நாட் கூறுதன்னில் அடியவரை அமுதுசெய்வித் தார்வம் மிக்கார். நுஎ0

2474 அருவிலையிற் பெறுங்காசும் அவையே யாகி அமுதுசெய்யத் தொண்டாள விறந்து பொங்கி, வருமவர்கள் எல்லார்க்கும் வந்தாருக்கும் மகிழ்ந்துண்ண இன்னடிசில் மாளா தாகத், திருமுடிமேல் திங்களொடு கங்கை சூடுஞ் சிவபெருமான் அருள்செய்யச் சிறப்பின் மிக்க, பெருமைதரு சண்பைநகர் வேந்தர் நாவுக் கரசர்இவர் பெருஞ் சோற்றுப் பிறங்கல் ஈந்தார். நுஎக

2475 அவனிமிசை மழைபொழிய உணவு மல்கி அனைத்துயிருந் துயர் நீங்கி அருளி னூலே, புவனமெலாம் பொலிவெய்துங் காலம் எய்தப் புரிசடையார் கழல்பலகாள் போற்றி வைகித், தவமுனிவர் சொல் வேந்த ரோடுங் கூடத் தம்பிரான், அருள்பெற்றுத் தலத்தின் மீது, சிவன்மகிழுந் தானங்கள் வணங்கப் போவார் தென்திருவாஞ் சிய மூதூர் சென்று சேர்ந்தார். நுஎஉ

2476 நீடுதிரு வாஞ்சியத்தில் அமர்ந்த முக்கண் நீலமிடற் றரு மணியை வணங்கிப் போற்றிப், பாடொலிநீர்த் தலையாலங் காடு மாடு பரமர்பெரு வேளூரும் பணிந்து பாடி, நாடுபுகழ்த் தனிச்சாத்தங் குடியில் நண்ணி நம்பர்திருக் கரவீரம் நயந்து பாடித், தேடுமறைக் காரியார்தம் விளமர் போற்றித் திருவாரூர் தொழ நினைந்து சென்று புக்கார். நுஎங

2477 நம்பர்மகிழ் திருவாரூர் வணங்கிப் போந்து நலங்கொள்திருக் காரு யில் நண்ணி ஏத்திப், பைம்புனல்மென் பணைத்தேவூர் அணைந்து போற்றிப் பரமர்திரு நெல்லிக்காப் பணிந்து பாடி, உம்பர்பிரான் கைச் சினமும் பரவித் தெங்கூர் ஓங்குபுகழ்த் திருக்கொள்ளிக் காடும் போற் றிச், செம்பொன்மதில் கோட்டூரும் வணங்கி ஏத்தித் திருமழிவெண் துறைதொழுவான் சென்று சேர்ந்தார். நுஎச

2478 மற்றவ்வூர் தொழுதேத்தி மகிழ்ந்து பாடி மாலயனுக் கரியபிரான் மருவுந் தானம், பற்பலவுஞ் சென்றுபணிந் தேத்திப் பாடிப் பரவு திருத் தொண்டர்குழாம் பாங்கின் எய்தக், கற்றவர்வாழ் தண்டலைநீள் நெறியுள் ளிட்ட கனகமதில் திருக்களருங் கருதார் வேள்வி, செற்ற வர்சேர் பதிபிறவுஞ் சென்று போற்றித் திருமறைக்காட் டதன் மருங்கு சேர்ந்தார் அன்றே. நுஎடு

2479 காரமண்வெஞ் சுரம்அருளால் கடந்தார் தாமும் கடற்காழிக் கவு ணியர்தங் கலிவர் தாமும், சேரஎழுந் தருளியஅப் பேறு கேட்டுத் திருமறைக்காட் டகன்பதியோர் சிறப்பிற் பொங்கி, ஊரடைய அலங் கரித்து விழவு கொள்ள உயர்கமுகு கதலிநிறை குடந்தீ பங்கள், வார்

மூசை மங்கலநா தங்கள் மல்க எதிர்கொள்ள அடியருடன் மகிழ்ந்து வந்தார். நுஎசு

2480 முன்னணைந்த திருநாவுக் கரசர் தம்மை முறைமையால் எதிர் கொண்டு களிப்பின் மூழ்கிப், பின்னணைய எழுந்தருளும் பிள்ளை யார்தம் பெருகியபொற் காளத்தின் ஓசை கேட்டுச், சென்னிமிசைக் கரங்குவித்து முன்பு சென்று சேணிலத்து வணங்குதலுந் திருந்து சண்பை, மன்னவரும் மணிமுத்தின் சிவிகை நின்று வந்திழிந்து வணங்கியுடன் மகிழ்ந்து போந்தார். நுஎஎ

2481 சொல்லரசு ருடன்கூடப் பிள்ளை யாரும் தூமணிநீர் மறைக் காட்டுத் தொல்லை மூதூர், மல்குதிரு மறுகின்கட் புகுந்த போது மாதவர்கள் மறையவர்கள் மற்றும் உள்ளோர், எல்லையில்லா வகை "அர"என் றெடுத்த ஓசை இருவிசும்பும் திசைஎட்டும் நிறைந்து பொங்கி, ஒல்லொலிநீர் வேலையொலி அடக்கி விண்மேல் உம்பர்நாட் டப்புறத்தும் உற்ற தன்றே. நுஎஅ

2482 அடியவரும் பதியவரும் மருங்கு போற்ற அணிமறுகி னூடெய்தி அருகு சூழ்ந்த, கொடிநுடங்கு செழுந்திருமா ளிகையின் முன்னர்க் கோபுரத்தைத் தாழ்ந்திறைஞ்சிக் குறுகிப் புக்கு, முடிவில்இமை யவர்முனிவர் நெருங்குந் தெய்வ முன்றில்வலங் கொண்டுநேர் சென்று முன்னுள், படியின்மறை அருச்சித்துக் காப்புச் செய்த பைம்பொன் மணித் திருவாயிற் பாங்கு வந்தார். நுஎக

2483 அருமறைகள் திருக்காப்புச் செய்து வைத்த அக்கதவந் திறந் திடஅம் மறைகள் ஓதும், பெருகியஅன் புடைஅடியார் அணைந்து நீக்கப் பெறுமையினுல் அன்றுமுத லாகப் பின்னே, ஒருபுடைஓர் வாயில் அமைத் தொழுகுந் தன்மை உள்ளபடி கேட்டருளி உயர்ந்த சண் பைத், திருமறையோர் தலைவர்வியப் பெய்தி நின்று திருநாவுக் கரச ருக்குச் செப்பு கின்றார். நுஅ0

2484 "அப்பரே! வேதவனத் தையர் தம்மை அபிமுகத்துத் திருவாயில் திறந்து புக்கே, எப்பரிசும் நாம்இறைஞ்ச வேண்டும் நீரே இவ்வாயில் திருக்காப்பு நீங்கு மாறு, மெய்ப்பொருள்வண் தமிழ்பாடி அருளும்" என்ன விளங்குமொழி வேந்தர்அது மேற்கொண் "டென்னே, இப்பரிசு நீர்அருளிச் செய்தீ ராகில் இதுசெய்வேன்" எனப்பதிகம் எடுத்துப் பாட. நுஅக

2485 பாடியஅப் பதிகப்பாட் டான பத்தும் பாடல்நிரம் பியபின்னும் பைம்பொன் வாயிற், சேடியர்பொற் கதவுதிருக் காப்பு நீங்கச் செய் கையினுல் வாகீசர் சிந்தை நொந்து, நீடுதிருக் கடைக்காப்பில் அரிது வேண்டி நின்றெடுக்கத் திருக்காப்பு நீக்கங் காட்ட, ஆடியசே வடியார்

ப.ரா.பெ.1. திருக்காப்பு நீங்கிக் காட்ட

தம் அடியார் விண்ணோர் ஆர்ப்பெழுந்த தகிலாண்டம் அனைத்தும் நிஅ
மூழ்க.

வேறு

மற்றது கண்ட போதே வாக்கின்மன் னவரை நோக்கிப்
பொற்புறு புகலி மன்னர் போற்றிட அவரும் போற்றி
அற்புத நிலையி னார்கள் அணிதிரு மறைக்கா டாளும்
கொற்றவர் கோயில் வாயில் நேர்வழி குறுகிப் புக்கார். நிஅ

கோயிலுட் புகுவார் உச்சி குவித்தசெங் கைக ளோடும்
தாயினும் இனிய தங்கள் தம்பிரா னரைக் கண்டார்
பாயுநீர் அருவி கண்கள் தூங்கிடப் படியின் மீது
மேயின மெய்ய ராகி விதிர்ப்புற்று விரைவின் வீழ்ந்தார். நிஅ

அன்பினுக் களவு காணர் ஆனந்த வெள்ளம் மூழ்கி
என்புநெக் குருக நோக்கி இறைஞ்சிநேர் விழுந்து நம்பர்
முன்புநிற் பதுவும் ஆற்றூர் மொழிதடு மாற ஏத்தி
மின்புரை சடையார் தம்மைப் பதிகங்கள் விளம்பிப் போந்தார். நிஅ

புறம்புவந் தணைந்த போது புகலிகா வலரை நோக்கி
"நிறங்கிளர் மணிக்க பாடம் நீக்கமும் அடைப்பும் நிற்கத்
திறந்தவா றடைக்கப் பாடி அருளும்நீர்" என்றூர் தீய
மறம்புரி அமணர் செய்த வஞ்சனை கடக்க வல்லார். நிஅ

அன்றர சருளிச் செய்ய அருமறைப் பிள்ளை யாரும்
வென்றிவெள் விடையார் தம்மை விருப்பினுல் "சதுரம்" என்னும்
இன்தமிழ்ப் பதிகப் பாடல் இசைத்திட இரண்டு பாலும்
நின்றஅக் கதவு கர்ப்பு நிரம்பிட அடைத்த தன்றே. நிஅஎ

அடைத்திடக் கண்டு சண்பை ஆண்டகை யாரும் அஞ்சொல்
தொடைத்தமி ழாளி யாரும் தொழுதெழத் தொண்டர் ஆர்த்தார்
புடைப்பொழிந் திழிந்த தெங்கும் பூமழை புகலி வேந்தர்
நடைத்தமிழ்ப் பதிக மாலை நிரம்பிட நவின்று போற்றி. நிஅஅ

அத்திரு வாயில் தன்னில் அற்றைநாள் தொடங்கி நேரே
மெய்த்திரு மறைகள் போல மேதினி புக்குப் போற்ற
வைத்திதிர் வழக்கஞ் செய்த வரம்பிலாப் பெருமை யோரைக்
கைத்தலங் குவித்துத் தாழ்ந்து வாழ்ந்தது கடல்சூழ் வையம். நிஅக

அருமறை யான வெல்லாம் அகலிரு விசும்பில் ஆர்த்துப்
பெருமையின் முழங்கப் பஞ்ச நாதமும் பிறங்கி ஓங்க
இருபெருந் தகையோர் தாமும் எதிரெதிர் இறைஞ்சிப் போந்து
திருமடங் களின்முன் புக்கார் செழும்பதி விழவு கொள்ள. நிகூ

1. மே. 1. நிலத்தும் 2. 1. 8—மேதகு.

தேவதங்கள் எண்ணில் கோடி மிடைந்துசெய் பணியை மிக்க
ஏதங்கள் நம்பால் நீப்பார் இருவருஞ் செய்து வைத்தார்
நாதங்கொள் வடிவாய் நின்ற நதிபொதி சடையார் செய்ய
பாதங்கள் போற்றும் மேலோர் பெருமையார் பகரும் நீரார். 49

திருமறை நம்பர் தாம்முன் பருள்செய்த அதனைச் செப்பும்
ஒருமையில் நின்ற தொண்டர் தம்பிரா னருள்பால் ஒக்க
வரும்அருட் செய்கை தாமே வகுத்திட வல்லோர் என்றுல்
பெருமறை யுடன்மெய்த் தொண்ட ரிடையீடு பெரிதா மன்றே. 50

இவ்வகை திரும றைக்காட் டிறையவர் அருளே யுன்னி
மெய்வகை தெரிந்த வாக்கின் வேந்தர்தாம் துயிலும் போதில்
அவ்வளர் கண்டர் சைவ வேடத்தால் வந்து "வாய்மூர்
அவ்விடை யிருத்தும் அங்கே வா"என்றங் கருளிப் போக. 51

கண்டஅப் போதே கைகள் குவித்துடன் கடிது செல்வார்
பண்டிய காத லோடு மருவுவார் போன்றுங் காணூர்
எண்டிசை நோக்கு வாருக் கெய்துவார் போல எய்தா
அண்டர்தம் பிரானர் தம்பின் போயினர் ஆர்வத் தோடும். 52

அங்கவர் ஏகச் சண்பை ஆண்டகை யாரும் "அப்பர்
தங்கள்தம் பெருமான் றன்று கோப்ப "எய்தினர் திருவாய் மூரில்
பொங்கிய காதலால்"என் றுரைத்திடப் "போன தன்மை
சங்கையுற் றென்கொல்" என்று தாமும்அங் கணையப் போந்தார். 53

அங்கிலை அணைந்த போதில் அம்பிகை யுடனே கூட
மன்னிய ஆடல் காட்டத் "தளரிள வளரும்" பாடிச்
சென்னியால் வணங்கி வாய்மூர் அரசொடுஞ் சென்று புக்கங்
கன்னியல் புறமுன் கூடி இருவரும் போற்றி செய்தார். 54

நீடுசீர்த் திருவாய் மூரில் நிலவிய சிவனார் தம்மைப்
பாடுசொற் பதிகந் தன்னுற் பரவிஅப் பதியில் வைகிக்
கூடுமெய் அன்பு பொங்க இருவருங் கூடி மீண்டு
தேடுமா மறைகள் கண்டார் திருமறைக் காடு சேர்ந்தார். 55

பைநா டுடைய பிள்ளை தமிழ்மொழித் தலைவ ரோடு
மணிபயில் சீர்த்திச் செல்வ மாமறைக் காட்டு வைகிக்
கண்பயில் நெற்றி யார்தங் கழலிணை பணிந்து போற்றிப்
பண்பயில் பதிகம் பாடிப் பரவிஅங் கிருந்தார் அன்றே. 56

இவ்வகை இவர்கள் அங்கண் இருந்தன ராக இப்பால்
செய்வகை இடையே தப்பும் தென்னவன் பாண்டி நாட்டு
மெய்வகை நெறியில் நில்லா வினைஅமண் சமயம் மிக்குக்
கைவகை முறைமைத் தன்மை கழியமூன் கலங்குங் காலை. 57

20 பா.பே.| பகரற்பாலார். 2. வரவினை அகளிப் போக.
3. எஞ்ஞர் 4. இவ்வாறு

2503 தென்னவன் தானும் முன்செய் தீவினைப் பயத்தி னாலே
அந்நெறிச் சார்வு தன்னை அறமென நினைந்து நிற்ப
மன்னிய சைவ வாய்மை வைதிக வழக்க மாகும்
நன்னெறி திரிந்து மாறி நவைநெறி நடந்த தன்றே. சுஂ0

2504 பூழியர் தமிழ்நாட் டுள்ள பொருவில்சீர்ப் பதிகள் எல்லாம்
பாழியும் அருகர் மேவும் பள்ளிகள் பலவு மாகிச்
சூழிருட்குழுக்கள் போலத் தொடைமயிற் பீலி யோடு
மூழிநீர் கையிற் பற்றி அமணரே யாகி மொய்ப்ப. சுஂக

2505 பறிமயிர்த் தலையும் பாயும் பீலியும் தடுக்கும் மேனிச்
செறியுமுக் குடையு மாகித் திரிபவர் எங்கு மாகி
அறியும்அச் சமய நூலின் அளவினில் அடங்கிச் சைவ
நெறியினிற் சித்தஞ் செல்லா நிலைமையில் நிகழுங் காலை. சுஂஉ

2506 வரிசிலைத் தென்ன வன்தான் உய்தற்கு வளவர் கோமான்
திருவுயிர்த் தருளுஞ் செல்வப் பாண்டிமா தேவி யாரும்
குரைகழல் அமைச்ச ராங்கு குலச்சிறை யாரும் என்னும்
இருவர்தம் பாங்கு மன்றிச் சைவம்அங் கெய்தா தாக. சுஂஙு

2507 ஆங்கவர் தாங்கள் அங்கண் அரும்பெறல் தமிழ்நா டுற்ற
தீங்கினுக் களவு தேற்றுச் சிந்தையிற் பரிவு கொண்டே
ஓங்கிய சைவ வாய்மை ஒழுக்கத்தில் நின்ற தன்மை
பூங்கழற் செழியன் முன்பு புலப்படா வகைகொண் டுய்த்தார். சுஂச

2508 இன்நெறி யொழுகு கின்றார் ஏழுல குய்ய வந்த
மன்னிய புகலி வேந்தர் வைதிக வாய்மைச் சைவச்
செந்நெறி விளக்கு கின்றார் திருமறைக் காடு சேர்ந்த
நன்னிலை கன்னி நாட்டு நல்வினைப் பயத்தாற் கேட்டார். சுஂஞ

2509 கேட்டஅப் பொழுதே சிந்தை கிளர்ந்தெழு மகிழ்ச்சி பொங்க
நாட்பொழு தலர்ந்த செந்தா மரைங்கை முகத்த ராகி
வாட்படை அமைச்ச ரும்ம ங்கையர்க் கரசி யாரும்
சேட்படு புலத்தா ரேனுஞ் சென்றடி பணிந்தார் ஒத்தார். சுஂசு

2510 காதலால் மிக்கோர் தாங்கள் கைதொழுங் கருத்தி னாலே
"போதவிழ் சோலை வேலிப் புகலிகா வலனார் செய்ய
பாதங்கள் பணிமின்" என்று பரிசன மாக்கள் தம்மை
மாதவஞ் சுருதி செய்த மாமறைக் காட்டில் விட்டார். சுஂள

2511 ஆங்கவர் விடமுன் போந்த அறிவுடை மாந்தர் அங்கண்
நீங்கிவண் தமிழ்நாட் டெல்லை பிற்பட நெறியின் ஏகி
ஞாங்கர்நீர் நாடும் காடும் நதிகளும் கடந்து வந்து
தேங்கமழ் கைதை நெய்தல் திருமறைக் காடு சேர்ந்தார். சுஂஅ

திருமறைக் காடு நண்ணிச் சிரபுர நகரில் வந்த
அருமறைப் பிள்ளை யார்தாம் அமர்ந்தினி தருளுஞ் செல்வப்
பெருமடத் தணைய வந்து பெருகிய விருப்பில் தாங்கள்
வருமுறைத் தன்மை எல்லாம் வாயில்கா வலர்க்குச் சொன்னார்.

மற்றவர் சென்று புக்கு "'வளவர்கோன் மகளார் தென்னர்
கொற்றவன் தேவி யாரும் குலச்சிறை யாரும் ஏவப்
பொற்கழல் பணிய வந்தோம்' எனச்சிலர் புறத்து வந்து
சொற்றனர்" என்று போற்றித் தொழுதுவிண் ணப்பஞ் செய்தார்.

புகலிகா வலர்தாங் கேட்டுப் பொருவிலா அருள்முன் கூர
அகமலர்ந்(து) "அவர்கள் தம்மை அழையும்"என் றருளிச் செய்ய
முகைமுகச் செவ்வி நோக்கி நற்றவ மாந்தர் கூவத்
தகவுடை மாந்தர் புக்குத் தலையினால் வணங்கி நின்றார். சுஉக

நின்றவர் தம்மை நோக்கி நிகரில்சீர்ச் சண்பை மன்னர்
என்றலங் குழலி யாராம் மானியார் தமக்கும் மானக்
குன்றென நின்ற மெய்ம்மைக் குலச்சிறை யார்த மக்கும்
என்றுதான் வினவக் கூறி நற்பதம் போற்று வார்கள். சுஉஉ

"கன்னிகா டமணர் தம்மால் கட்டழிந் திழிந்து தங்கள்
மன்னனும் அவர்கள் மாயத் தழுந்தமா தேவி யாரும்
கொன்னவில் அயில்வேல் வென்றிக் குலச்சிறை யாரும் கூடி
இன்னிலை புகலி வேந்தர்க் கியம்பும்"என் றிறைஞ்சி விட்டார். சுஉஊ

வேறு

என்றவர்கள் விண்ணப்பஞ் செய்த பின்னர் ஏறுயர்த்த சிவபெரு
மான் தொண்டர் எல்லாம் "நன்றுநமை ஆளுடைய நாதன் பாதம்
எண்ணுதல எண்ணில்அமண் குண்டர் தம்மை, வென்றருளி வேதநூல்
நெறியே யாக்கி வெண்ணீறு வேந்தனையும் இடுவித் தங்கு, நின்ற
செயல் சிவனடியார் செயலே யாக நினைந்தருள வேண்டும்"என நின்று
போற்ற. சுஉச

மற்றவர்கட் கருள்புரிந்து பிள்ளை யாரும் வாகீச முனிவருடன்
கூடச் சென்று, பெற்றம்உயர்த் தவர்பாதம் பணிந்து போந்து பெரிய
திருக் கோபுரத்துள் இருந்து தென்னு, பெற்றசெயல் பாண்டிமா
தேவி யாரும் உரிமைஅமைச் சரும்உரைத்து விட்ட வார்த்தை,
சொற்றனிமன் னவருக்குப் புகலி மன்னர் சொல்லிஎழுந் தருளுதற்
குத் துணிந்த போது. சுஉஎ

அரசருளிச் செய்கின்றார் "பிள்ளாய்! அந்த அமண்கையர் வஞ்ச
னைக்கோர் அவதி யில்லை, உரைசெய்வ துளதுறுகோள் தானுந் தீய
எழுந்தருள உடன்படுவ தொண்ணு(து)" என்னப், "பரசுவது நம்

பெருமான் கழல்கள் என்றுல் பழுதணையா'' தெனப்பகர்ந்து பரமர் செய்ய, விரைசெய்மலர்த் தாள்போற்றிப் புகலி வேந்தர் '' வேயுறு தோளி ''யை எடுத்து விளம்பி னரே. சுகசு

2520 சிரபுரத்துப் பிள்ளையார் அருளிச் செய்த திருப்பதிகங் கேட்ட தற்பின் திருந்து நாவுக், கரசும்அதற் குடன்பாடு செய்து தாமும் அவர் முன்னே எழுந்தருள அமைந்த போது, புரமெரித்தார் திருமகனூர் ''அப்பர்! இந்தப் புனல்நாட்டில் எழுந்தருளி இருப்பீர்''என்று, காகம லங் குவித்திறைஞ்சித் தவிர்ப்ப வாக்கின் காவலரும் தொழுதரிதாங் கருத்தில் நேர்ந்தார். சுகள

வேறு

2521 வேதம்வளர்க் கவுஞ்சைவம் விளக்கு தற்கும் வேதவனத் தரு மணியை மீண்டும் புக்குப், பாதமுறப் பணிந்தெழுந்து பாடிப் போற் றிப் பரசியருள் பெற்றுவிடை கொண்டு போந்து, மாதவத்து வாகீசர் மறுத வண்ணம் வணங்கிஅருள் செய்துவிடை கொடுத்து மன்னுங், காதலினுல் அருமையுறக் கலந்து நீங்கிக் கதிர்ச்சிவிகை மருங்கணைந் தார் காழி நாதர். சுகஅ

2522 திருநாவுக் கரசரும்அங் கிருந்தார் இப்பால் திருஞான சம்பந்தர் செழுநீர் முத்தின், பெருநாமச் சிவிகையின்மீ தேறிப் பெற்றம் உயர்த்தவர்தாள் சென்னியின்மேற் பேணும் உள்ளத், தொருநாமத் தஞ்செழுத்தும் ஓதி வெண்ணீற் றொளிவிளங்குந் திருமேனி தொழு தார் நெஞ்சில், வருநாமத் தன்புருகுங் கடலாம் என்ன மாதவர்ஆர்ப் பொலிவையம் நிறைந்த தன்றே. சுகக

வேறு

2523 போங்கிளழுந் திருத்தொண்டர் போற்றெடுப்பார் நாற்றிசையும் மங்கலதூ ரியந்தழங்க மறைமுழங்க மழைமுழங்கும் சங்கபட கம்பேரி தாரைகா ளந்தாளம் எங்கும்எழுந் தெதிரியம்ப இருவிசும்பு கொடிதூர்ப்ப. சுஉ0

2524 மலர்மாரி பொழிந்திழிய மங்கலவாழ்த் தினிதிசைப்ப அலர்வாசப் புனற்குடங்கள் அணிவிளக்குத் தூபமுடன் நிலைநீடு தோரணங்கள் நிரைத்தடியார் எதிர்கொள்ளக் கலைமாலை மதிச்சடையார் இடம்பலவுங் கைதொழுவார். சுஉக

2525 தெண்திரைசூழ் கடற்கானல் திருவகத்தி யான்பள்ளி அண்டர்பிரான் கழல்வணங்கி அருந்தமிழ்மா மறைபாடிக் கொண்டல்பயில் மணற்கோடு சூழ்கோடிக் குழகர்தமைத் தொண்டருடன் தொழுதணைந்தார் தோணிபுரத் தோன்றலார். சுஉஉ

2526 கண்ணுர்ந்த திருநுதலார் மகிழ்ந்தகடிக் குளமிறைஞ்சி எண்ணுர்ந்த திருவிடும்பா வனமேத்தி எழுந்தருளி

T.N.S.I. திருநெல்வேலி. E. தொழுநாடு. 3 20.07.7 வரும்

பண்ணுர்ந்த பதிபிறவும் மகிழ்தருமன் பால்வணங்கிப்
பண்ணுர்ந்த தமிழ்பாடிப் பரவியே செல்கின்றூர். சுஉங

திருவுசாத் தானத்துத் தேவர்பிரான் கழல்பணிந்து
திருவியசெந் தமிழ்ப்பதிக மலர்போற்றும் படிபாடி
நிருவிணையும் பற்றறுப்பார் எண்ணிறந்த தொண்டருடன்
திருகுவிருப் பினராகிப் பிறபதியும் பணிந்தருள்வார். சுஉச

தருங்கழிவே லுப்பாலைக் கழிநெய்தல் கடந்தருளித்
திருந்தியசீர்ப் புனல்நாட்டுத் தென்மேற்பால் திசைநோக்கி
மருங்குமிடை தடஞ்சாலி மாடுசெறி குலைத்தெங்கு
கொருங்கிவளர் கமுகுடுத்த நிறைமருத வழிச்சென்றூர். சுஉரு

தங்கங்கள் வயல்எங்கும் சாலிகளைக் கரும்பெங்கும்
கொங்கெங்கும் நிறைகமலக் குளிர்வாசத் தடம்எங்கும்
பங்கங்கே உழவர்குழாம் ஆர்க்கின்ற ஒலிஎங்கும்
எங்கெங்கும் மலர்ப்படுகர் இவைகழிய எழுந்தருளி. சுஉசு

படமெங்கும் புனல்குடையுந் தையலார் தொய்யில்நிறம்
இடமெங்கும் அந்தணர்கள் ஓதுகிடை யாகநிலை
மடமெங்குந் தொண்டர்குழாம் மனைஎங்கும் புனைவதுவை
நடமெங்கும் ஒலியோவா நற்பதிக ளவைகடந்து. சுஉள

நீர்நாடு கடந்தருளி நெடும்புறவிற் குறும்புதல்கள்
சார்நாடு மூங்கைமுல்லைக் கடிநாறு நிலங்கடந்து
போர்நாடுஞ் சிலைமறவர் புன்புலவைப் பிடைபோகிச்
சீர்நாடும் தென்பாண்டி நன்னாடு சென்றணைவார். சுஉஅ

மன்றல்மலர்ப் பிறங்கல்மருங் கெறிந்துவரு நதிகள்பல
முன்றணைந்து கடந்தேறித் திரிமருப்பின் கலைபுணர்மான்
சென்றுதெறித் தனவுகைக்குங் கானஅதர் கடந்தணைந்தார்
பொன்றைநறுஞ் சடைமுடியார் மகிழ்ந்ததிருக் கொடுங்குன்றம். சுஉக

காடுங்குன்றத் தினிதமர்ந்த கொழும்பவளச் செழுங்குன்றை
நீடுங்குன்றம் உரித்தாணை வணங்கிஅருந் தமிழ்பாடி
நாடுங்குன்றும் படர்காணும் நிறைநாடுங் கடந்துமதி
தோடுங்குன்ற மதில்மதுரைத் தொன்னகர்வந் தணைகின்றூர். சுஈ

வேறு

ஆங்கிலை இவர்வந் தெய்த எண்பெருங் குன்றம் மேவும்
ஓங்கிலை அமணர் தங்கட் கழிவுமுன் சாற்ற லுற்றுப்
பாங்குமுறை வெருக்கொண் டுள்ளம் பதைப்பத்தீக் கனுக்க ளோடும்
தீங்கிமித் தங்கள் அங்கு நிகழ்ந்தன சொல்ல லுற்றும். சுஈக

2535 பள்ளிகள் மேலும் மாடு பயில்அமண் பாழி மேலும்
ஒள்ளிதழ் அசோகின் மேலும் உணவுசெய் கவளங் கையில்
கொள்ளுமண் டபங்கள் மேலும் கூகையோ டாந்தை தீய
புள்ளின மான தம்மிற் பூசலிட் டழிவு சாற்றும். கூகஉ

2536 பீலியும் தடுக்கும் பாயும் பிடித்தகை வழுவி வீழக்
கால்களுந் தடுமா றுடிக் கண்களும் இடமே ஆடி
மேல்வரும் அழிவுக் காக வேறுகா ரணமுங் காணூர்
மாலுழந் தறிவு கெட்டு மயங்கினர் அமணர் எல்லாம். கூகக

2537 கந்தியர் தம்மில் தாமே கனன்றெழு கலாங்கள் கொள்ள
வந்தவா றமணர் தம்மில் மாறுகொண் டூறு செய்ய
மூந்தைய உரையிற் கொண்ட பொறைமுதல் வைப்பும் விட்டுச்
சிந்தையிற் செற்றம் முன்னுந் தீக்குணத் தலைநின் றார்கள். கூகஙி

2538 இப்படி அமணர் வைகும் எப்பெயர்ப் பதியும் எய்தும்
ஒப்பில்உற் பாதம் எல்லாம் ஒருவரின் ஒருவர் கூறி
மெய்ப்படு தீக்க னவும் வேறுவே றுகக் கண்டு
செப்புவான் புறத்து ளோருந் தென்னவன் மதுரை சேர்ந்தார்.

2539 அந்நகர் தன்னில் வாழ்வார் புறம்புநின் றணைவார் கூடி
மன்னவன் தனக்குங் கூறி மருண்டஉள் ளத்த ராகித்
துன்னிய அழுக்கு மெய்யில் துகிலார் பலரும் ஈண்டி
"இன்னன கனவு கண்டோம்" எனஎடுத் தியம்ப லுற்றார். கூகசு

2540 "சீர்மலி அசோகு தன்கீழ் இருந்தருந் தேவர் மேலே
வேகொடு சாய்ந்து வீழக் கண்டனம் அதன்பின் னுக
ஏர்கொள்முக் குடையுந் தாமும் எழுந்துகை நாற்றிப் போக
ஊருளோர் ஓடிக் காணக் கண்டனம்" என்று சைப்பார். கூகஎ

2541 "குண்டிகை தகர்த்துப் பாயும் பீறியோர் குரத்தி ஓடப்
பண்டிதர் பாழி நின்றும் கழுத்தைமேற் படர்வார் தம்பின்
ஒண்தொடி இயக்கி யாரும் உளையிட்டுப் புலம்பி ஓடக்
கண்டனம்" என்று சொன்னர் கையறு கவலை யுற்றார். கூகஅ

2542 "கானிடை நட்டம்ஆடுங் கண்ணுதல் தொண்டர் எல்லாம்
மீனவன் மதுரை தன்னில் விரவிடக் கண்டோம்" என்பார்
கோனவன் தானும் வெய்ய் கொழுந்தழல் முழுகக் கண்டோம்
ஆனபின் எழுவுங் கண்டோம் அதிசயம் இதுவாம்" என்பார். கூகக

2543 "மழவிடை இளங்கன் முன்று வந்துநங் கழகந் தன்னை
உழறிடச் சிதறி ஓடி ஒருவருந் தடுக்க அஞ்சி
விழுவொரு புகலு மின்றி மேதினி தன்னை விட்டு
நிழலிலா மரங்க ளேறி நின்றிடக் கண்டோம்" என்பார். கூச0

மா. இ. 1. பள்ளி வாழ் பாழி. 2. மரணமே தலை வழுவி
3. தம்பின் 4. உளைவிட்டு 5. எதிரே தழல் மூழ்கி

வதென் பாவி காள்!இக் கனத்திறம் அடிகள் மார்க்கு
வைய தீங்கு தன்னை விளைப்பது திடமே'' என்று
வுறு மனத்த ராகி துகர்பெரும் பதமுங் கொள்ளார்
வாவது செயல்''என் றெண்ணி இடருழன் றழுங்கி னார்கள். சுசக

வகை அவர்கள் எல்லாம் அந்நிலை மையர்க ளாகச்
வநன் மரபில் வந்த தடமயில் மடமென் சாயல்
வளர் அரவே ரல்குல் பாண்டிமா தேவி யார்க்கும்
வகை அமைச்ச னார்க்கும் விளங்குநன் நிமித்தம் மேன்மேல்.

வெலா மகிழ்ச்சி காட்டும் அரும்பெரு நிமித்தம் எய்த
மகிழ் வுணருங் காலை உலகெலாம் உய்ய வந்த
விளைாளி ஞானம் உண்டார் வந்தணைந் தருளும் வார்த்தை
னர்வுறும் ஓகை கூறி வந்தவர் மொழியக் கேட்டார். சுசஙூ

மொழி விளம்பி னோர்க்கு வேண்டுவ அடைய நல்கி
மம்மையில் விளங்கு காதல் விருப்புறு வெள்ளம் ஓங்கத்
மையும் அறியா வண்ணங் கைமிக்குத் தழைத்துப் பொங்கி
யிய மகிழ்ச்சி கூர மேவிய சிறப்பின் மிக்கார். சுசச

வகையர்க் கரசி யார்பால் வந்தடி வணங்கி நின்ற
ங்கலர் தெரிய லாராங் குலச்சிறை யாரை நோக்கி
கள்தம் பிரானு ராய ஞானபோ னகர்முன் பெய்தி
கெழுந் தருள உய்ந்தோம்' எனஎதிர் கொள்ளும்'' என்றார். சுசஙி

மலங் குழலி னுரை வணங்கிப்போந் தமைச்ச னுரும்
றிவேல் அரச னுக்கும் ''உறுதியே'' எனவி சைந்து
ன்திகழ் மாட வீதி மதுரையின் புறத்துப் போகி
ன் தமிழ் மறைதந் தாரை எதிர்கொள எய்துங் காலை. சுசசூ

ம்புய மலராள் போல்வார் ஆலவாய் அழர்ந்தார் தம்மைக்
ம்பிட வேண்டும்'' என்று கொற்றவன் தனக்குங் கூறித்
மபரி சனங்கள் சூழத் தனித்தடை யோடுஞ் சென்று
யரை வணங்கித் தாமும் நல்வர வேற்று நின்றார். சுசஎ

வேறு

நிலவு மணிமுத்தின் சிவிகையின்மேற் சேவித்து
நிலவு தருமதிபோல் வளரொளிவெண் குடைநிழற்றப்
பெருகொளிய திருநீற்றுத் தொண்டர்குழாம் பெருகிவர
ருள்பெருக வருஞ்ஞானத் தமுதுண்டார் அணைகின்றார். சுசஅ

துபிகள் முதலாய தூரியங்கள் கிளராமே
தணராம் மாதவர்கள் ஆயிரமா மறையெடுப்ப

வந்தெழுமங் கலநாத மாதிரமுட் படமுழங்கச்
சேந்தமிழ்மா ருதம்எதிர்கோண் டேம்மருங்குஞ் சேவிப்ப. கூசகூ

2553 பண்ணியவஞ் சணைத்தவத்தாற் பஞ்சவன்நாட் டிடைப்பரந்த
எண்ணில்அமண் ஏனும்பாவ இருஞ்சேனை இரிந்தோடை
மண்ணுலக மேயன்றி வானுலகுஞ் செய்தபெரும்
புண்ணியத்தின் படைஎழுச்சி போலெய்தும் பொலிவெய்த. கூருO

2554 துன்னுமுழு உடற்றுகளால் சூழும்உணர் வினிற்றுகளால்
அன்னெறியிற் செறிந்தடைந்த அமண்மாசு கழுவுதற்கு
மன்னியொளிர் வெண்மையினுல் தூய்மையினுல் வழுதியர்தம்
கன்னிநாட் டிடைக்கங்கை அணைந்ததெனுங் கவின்காட்ட. கூருக

2555 பானல்வயல் தமிழ்நாடும் பழிநாடும் படிபரந்த
மானமிலா அமணென்னும் வல்லிருள்போய் மாய்வதனுக்
கானபெரு கொளிப்பரப்பால் அண்டமெலாங் கொண்டதொரு
ஞானமணி விளக்கெழுந்து வருவதென நலம்படைப்ப. கூருஉ

2556 புரசைவயக் கடகளிற்றுப் பூழியர்வண் தமிழ்நாட்டுத்
தரைசெய்தவப் பயன்விளங்கச் சைவநெறி தழைத்தோங்க
உரைசெய்திருப் பேர்பலவும் ஊதுமணிச் சின்னமெலாம்
"பரசமயக் கோளரிவந் தான்" என்று பணிமாற. கூருங

வேறு

2557 இப்பரி சணையுஞ் சண்பையர் பெருமான் எழுந்தரு ளும்பொழு
திசைக்கும், ஒப்பில்நித் திலப்பொற் றனிப்பெருங் காளம் உலகுய்ய
ஒலித்தெழும் ஓசை, செப்பரும் பெருமைக் குலச்சிறை யார்தஞ் செவி
நிறை அமுதெனத் தேக்க, அப்பொழு தறிந்து தலத்தின்மேற்
பணிந்தே அளப்பருங் களிப்பின ரானர். கூருச

2558 அஞ்சலி குவித்த கரங்களுந் தலைமேல் அணைந்திடக் கடிதுசென்
றணைவார், நஞ்சணி கண்டர் தந்திரு மகனு ருடன்வரு நற்றவக் கடலை,
நெஞ்சினில் நிறைந்த ஆர்வம்முன் செல்லக் கண்டுநீள் நிலத்திடைத்
தாழ்ந்து, பஞ்சவர் பெருமான் மந்திரித் தலைவர் பாங்குற அணைந்து
முன் பணிந்தார். கூருஞ

2559 நிலமிசைப் பணிந்த குலச்சிறை யாரை நீடிய பெருந்தவத்
தொண்டர், பலரும்முன் அணைந்து வணங்கிமற் றவர்தாம் படியின்
நின் றெழாவகை கண்டு, "மலர்மிசைப் புத்தேள் வழிபடும் புகலி
வைதிகச் சேகரர் பாதங், குலவிஅங் கணைந்தார் தென்னவன் அமைச்
சர் குலச்சிறை யார்" எனக் கூற. கூருசு

2560 சிரபுரச் செல்வர் அவருரை கேட்டுத் திருமுகத் தாமரை
மலர்ந்து, விரவொளி முத்தின் சிவிகையின் றிழிந்து விரைந்துசென்

ப.வே.1 அவ்வுரை: அவ்வுரை.

தவர்தமை அணைந்து, கரகம லங்கள் பற்றியே எடுப்பக் கைதொழு தவரும்முன் நிற்ப, வரமிகு தவத்தார் அவரையே நோக்கி வள்ளலார் சாரவாக் களிப்பார். சுருள

"செம்பியர்1 பெருமான் குலமக ளார்க்குந் திருந்திய சிந்தையீர்! உமக்கும், நம்பெரு மான்தன் திருவருள் பெருகும் நன்மைதான் மிகவிதே" என்ன, வம்பலர் அலங்கல் மந்திரி யாரும் மண்மிசைத் தாழ்ந்தடி வணங்கித், தம்பேரும் தவத்தின் பயன்அனை யார்க்குத் தன்மையாம் நிலையுரைக் கின்றார். சுருஅ

"சென்றகா லத்தின் பழுதிலாத் திறமும் இனிஎதிர் காலத்தின் சிறப்பும், இன்றெழுந் தருளப் பெற்றபே றிதனுல் எற்றைக்குந் திருவரு ளுடையேம், நன்றியில்நெறியில் அழுந்திய நாடும் நற்றமிழ் வேந்தனும் உய்ந்து, வென்றிகொள் திருநீற் றொளியினில் விளங்கும் மேன்மையும் படைத்தனம்" என்பார். சுருக

இங்கெழுந் தருளும் பெருமைகேட் டருளி எய்துதற் கரியபே றெய்தி, மங்கையர்க் கரசி யாரும்"நம் முடைய வாழ்வெழுந் தருளிய" தென்றே, "அங்குநீர் எதிர்சென் றடிபணி வீர்என் றருள்செய்தார்" எனத்தொழு தார்வம், பொங்கிய களிப்பால் மீளவும் பணிந்து போற்றினர் புரவலன் அமைச்சர். சுசO

ஆங்கனம் போற்றி அடிபணிந் தவர்மேல் அளவிலா அருள்புரி திருவுளத், தாங்கிய மொழியால் தகுவன விளம்பித் தலையளித் தருள அப்பொழுதில், ஓங்கெயில் புடைசூழ் மதுரைதோன் றுதலும் உயர்தவத் தொண்டரை நோக்கி, "ஈங்குநம் பெருமான் திருவால வாய்மற் றெம்மருங் கினது?"என வினவ. சுசக

அன்பராய் அவர்முன் பணிந்தசீர் அடியார் அண்ணலார் அடியிணை வணங்கி, முன்புநின் றெடுத்த கைகளாற் காட்டி "முருகலர் சோலைகள் சூழ்ந்து, மின்பொலி விசும்பை அளக்குநீள் கொடிசூழ் வியன்நெடுங் கோபுரந் தோன்றும், என்(பு)அணி அணிவார் இனிதமர்ந் தருளுந் திருவால வாய்இது" என்றார். சுசஉ

தொண்டர்தாம் போற்றிக் காட்டிடக் கண்டு துணைமலர்க் கரங் குவித் தருளி, மண்டுபே ரன்பால் மண்மிசைப் பணிந்து "மங்கையர்க் கரசி"என் றெடுத்தே, "எண்டிசை பரவும் ஆலவா யாவ திதுவே" என் றிருவர்தம் பணியும், கொண்டமை சிறப்பித் தருளிநற் பதிகம் பாடினர் குவலயம் போற்ற. சுசஈ

பாடிய பதிகம் பரவியே வந்து பண்புடை அடியவ ரோடும் நீடுமால் அயனுக் கரியவர் மகிழ்ந்த திருவால வாய்மருங் கணைந்து சீர்மிகு செல்வக் கோபுரம் இறைஞ்சி நிறைபெரு விருப்புடன் புக்கு மாடுசூழ் வலங்கொண் டுடையவர் கோயில் மந்திரி யாருடன் புகுந்தார்.

1. சோழன், 2. சுற்றம் 3. வாய்த்த

வேறு

2568 ஆளும் அங்கணர் ஆலவாய் அமர்ந்தினி திருந்த
காள கண்டரைக் கண்களின் பயன்பெறக் கண்டு
நீள வந்தெழும் அன்பினுல் பணிந்தெழ நிறையார்
மீள வும்பல முறைநில முறவிழுந் தெழுவார். சுசுஞ

2569 அங்கம் எட்டினும் ஐந்தினும் அளவின்றி வணங்கிப்
பொங்கு காதலின் மெய்ம்மயிர்ப் புளகமும் பொழியும்
செங்கண் நீர்தரும் அருவியும் திகழ்திரு மேனி
எங்கு மாகிநின் றேத்தினர் புகலியர் இறைவர். சுசுசு

2570 "நீல மாமிடற் றுலவா யான்"என நிலவு
மூல மாகிய திருவிருக் குக்குறள் மொழிந்து
சீல மாதவத் திருத்தொண்டர் தம்மொடுந் திளைத்தார்
சாலு மேன்மையில் தலைச்சங்கப் புலவனுர் தம்முன். சுசுள

2571 சேர்த்தும் இன்னிசைப் பதிகமுந் திருக்கடைக் காப்புச்
சாத்தி நல்லிசைத் தண்டமிழ்ச் சொன்மலர் மாலை
போர்த்தும் இன்புறப் பாடிவெண் பிறையணி சென்னி
மூர்த்தி யார்கழல் பரவியே திருமுன்றில் அணைய. சுசுஎ

2572 பிள்ளை யார்எழுந் தருளிமுன் புகுதும்அப் பொழுது
வெள்ள நீர்பொதி வேணியார் தமைத்தொழும் விருப்பால்
உள்ள ணைந்திட எதிர்செலா தொருமருங் கொதுங்கும்
தெள்ளு நீர்விழித் தெரிவையார் சென்றமுன் பெய்த. சுசுசூ

2573 மருங்கின் மந்திரி யார்பிள்ளை யார்கழல் வணங்கிக்
கருங்கு ழற்கற்றை மேற்குவி கைத்தளி ருடையார்
"பருங்கை யானைவாழ் வளவர்கோன் பாவையார்" என்னப்
பெருங்க ளிப்புடன் விரைந்தெதிர் பிள்ளையார் அணைந்தார். சுஎ0

2574 தென்ன வன்பெருந் தேவியார் சிவக்கன்றின் செய்ய
பொன்ன டிக்கம லங்களிற் பொருந்தமுன் விழுந்தார்
மன்னு சண்பையர் வள்ளலார் மகிழ்சிறந் தளிக்கும்
இன்ன ருட்பெருஞ் சிறப்பொடுந் திருக்கையால் எடுத்தார். சுஎக

2575 ஞான போனகர் எதிர்தொழு தெழுந்தநற் றவத்து
மானி யார்மனக் கருத்துமுற் றியதென மதித்தே
பானலங் கண்கள்நீர் மல்கப் பவளவாய் குழறி
" யானும் என்பதி யுஞ்செய்த தவமென்கொல்!" என்றார். சுஎஉ

2576 யாழின் மென்மொழி யார்மொழிந் தெதிர்கழல் வணங்கக்
காழி வாழவந் தருளிய கவுணியர் பிரானும்

பா. இ. பி. [illegible]

சூழ் மாகிய பரசம யத்திடைத் தோண்டு
வாழும் நீர்மையீர்! உமைக்காண வந்தனம்'' என்றார். சுஎஈ

இன்ன வாறருள் செய்திடத் தொழுதடி வீழ்ந்தார்
மன்னு மந்திரி யார்வரு திறமெலாம் மொழிய
அன்ன மென்நடை யார்தமக் கருள்செய்து போக்கித்
தன்னு மெய்த்தொண்டர் சூழவந் தருளும்அப் பொழுது. சுஎச

செல்வம் மல்கிய திருவால வாயினிற் பணிசெய்
தல்கு தொண்டர்கள் பிள்ளையார் மருங்கணைந் திறைஞ்சி
''மல்கு கார்அமண் இருள்கெட ஈங்குவந் தருள
எல்லை யில்தவஞ் செய்தனம்'' எனஎடுத் திசைத்தார். சுஎஙி

அத்தி ருத்தொண்டர் தங்களுக் கருள்முகம் அளித்து
மெய்த்த காதலின் அவரொடும் புறத்தினில் மேவிச்
சித்தம் இன்புறும் அமைச்சனர் திருமடங் காட்டப்
பத்தர் போற்றிடப் பரிசனத் தொடும்இனி தமர்ந்தார். சுஎசு

பரவு காதலிற் பாண்டிமா தேவியார் அருளால்
விரவு நண்பொடு குலச்சிறை யார்விருந் தளிப்பச்
சிரபு ரத்துவந் தருளிய செல்வர்அங் கிருந்தார்
இரவி மேற்கடல் அணைந்தனன் எல்லிவந் தணைய. சுஎள

வழுதி மாநகர் அதனிடை மாமறைத் தலைவர்
பழுதில் சீரடி யாருடன் பகல்வரக் கண்ட
கழுது போல்வருங் காரமண் குண்டர்கள் கலங்கி
இழுகு மெய்யிருட் கிருளென ஈண்டினர் ஒருபால். சுஎஅ

அங்கண் மேவிய சமணர்கள் பிள்ளையார் அமர்ந்த
துங்க மாமடந் தன்னிடைத் தொண்டர்தங் குழாங்கள்
எங்கும் ஓதிய திருப்பதி கத்திசை எடுத்த
பொங்கு பேரொலி செவிப்புலம் புக்கிடப் பொறாராய். சுஎசு

மற்றிவ் வான்பழி மன்னவன் மாறணை எய்திச்
சொற்றும் என்றுதஞ் சூழ்ச்சியும் ஒருபடி துணிவார்
கொற்ற வன்கடைக் காவலர் முன்சென்று குறுகி
''வெற்றி வேலவர்க் கெங்களை விளம்புவீர்'' என்றார். சுஅஉ

வாயில் காவலர் மன்னவன் தணைதிர் வணங்கி
''ஆய மாகிவந் தடிகள்மார் அணைந்தனர்'' என்ன
ஏயி னன்அணை வாரென அவருஞ்சென் றிசைத்தார்
பாயி னல்உடல் மூடுவார் பதைப்புடன் புக்கார். சுஅக

புக்க போதவர் அழிவுறு மனத்திடைப் புலர்ச்சி
மிக்க தன்மையை வேந்தனுங் கண்டெதிர் வினவி

"ஒக்க நீர்திரண் டணைவதற் குற்றதென்?" என்னத்
"தக்க தல்லதிங் கடித்தது சாற்றுதற்" கென்றார். சுஅஉ

2586 ஆவ தேல்தமக் கடித்தது கூறுவீர்" என்று
காவ லன்பரிந் துரைத்தலுங் கார்அமண் கையர்
"மாவ லாய்!உன்தன் மதுரையிற் சைவமே தியர்தாம்
மேவ லால்இன்று கண்டுமுட் டுயாம்"என்று விளம்ப. சுஅங

2587 என்று கூறலும் "கேட்டுமுட் டுயானும்"என் றியம்பி
"நன்று நல்லறம் புரிந்தவா நான்"என்று நகுவான்
கன்றும் உள்ளத்த னாகி"அக் கண்ணுதல் அடியார்
இன்றிம் மாநகர் அணைந்ததென் அவர்கள்யார்?" என்றான். சுஅச

2588 "மாலை வெண்குடை வளவர்சோ ணாட்டுவண் புகலிச்
சூல பாணிபால் ஞானம்பெற் றுன்என்று சுருதிப்
பாலன் அன்பர்தங் குழாத்தொடும் பனிமுத்தின் சிவிகை
மேல ணைந்தனன் எங்களை வாதினில் வெல்ல." சுஅடு

2589 என்று கூறுவார் இத்திறம் முன்புதாம் அறிந்த
தொன்றும் அங்கொழி யாவகை உரைத்தலுந் தென்னன்
மன்ற லம்பொழிற் சண்பையார் வள்ளலார் நாமம்
சென்று தன்செவி நிறைத்தலுஞ் செயிர்த்துமுன் சொல்வான். சுஅசு

2590 "மற்ற மாமறை மைந்தன் இம் மருங்கணைந் தானேல்
உற்ற செய்தொழில் யாதுசெய் கோம்?"என உரைப்பச்
சேற்றம் மீக்கொண்ட சிந்தையும் செய்கையும் உடையோர்
கொற்ற மன்னவன் மொழிக்கெதிர் குறித்துரை செய்வார். சுஅள

2591 "வந்த அந்தணன் தன்னைநாம் வலிசெய்து போக்கும்
சிந்தை யன்றிஅச் சிறுமறை யோன்உறை மடத்தில்
வெந்த ழற்படை விஞ்சைமந் திரத்தொழில் விளைத்தால்
இந்த நன்னக ரிடத்திரான் எரும்"என் றிசைத்தார். சுஅஅ

வேறு

2592 "ஆவதொன் றிதுவே யாகில் அதனையே விரைந்து செய்யப்
போவ"தென் றவரைப் போக்கிப் பொய்ம்மையைப் பொருளாக் கொண்டான்
யாவதும் உரையா டாதே எண்ணத்திற் கவலை யோடும்
பூவணை அமளி புக்கான் பொங்கெழில் தேவி சேர்ந்தாள். சுஅக

2593 மன்னவன் உரைப்ப தின்றி இருக்கமா தேவி யார்தாம்
"என்னுயிர்க் குயிராய் உள்ள இறைவ!நீ உற்ற தென்னை?
முன்னுள மகிழ்ச்சி இன்றி முகம்புலர்ந் திருந்தாய் இன்று
பன்னிய உள்ளத் தெய்தும் பருவரல் அருள்செய்" என்றார். சுகூ

"தேவியார் தம்மை நோக்கித் தென்னவன் கூறு கின்றான்
காவிரீர் கண்ணி ஞாய்!கேள் காவிரி நாட்டில் மன்னும்
மேவிச்சீர்க் கழும லத்தான் சங்கரன் அருள்பெற் றிங்கு
மானினன் அடிகள் மாசை வாதினில் வெல்ல"|என்று. சுகூகு

"வேண்பொடி பூசுந் தொண்டர் விரவினர் அவரை எல்லாம்
கண்டுமுட் டடிகள் மார்கள் கேட்டுமுட் டியானுங் காதல்
வண்டுணைத் துதைந்த கோதை மானியே! இங்கு வந்த
வையமற் றிதுவே யாகும் பரிசுவே றில்லை" என்றான். சுகூஉ

மன்னவன் உரைப்பக் கேட்டு மங்கையர்க் கரசி யார்தாம்
"என்னிலை இதுவே யாகில் நீடிய தெய்வத் தன்மை
அன்னவர் வாது செய்தால் வென்றவர் பக்கஞ் சேர்ந்து
தன்னுவ துறுதி யாகுஞ் சுழிவுறேல் மன்ன!" என்றார். சுகூங

சோனதையிற் களிப்பு மிக்குத் திருக்கழு மலத்தார் வேந்தன்
"சந்தவா றெம்மை யாள எனவரு மகிழ்ச்சி யோடும்
வந்தலர் குழலார் போதக் குலச்சிறை யார்அங் கெய்த
இன்னான் மாற்றம் எல்லாம் அவர்க்குரைத் திருந்த பின்னர். சுகூச

"தேவர்கள் பிறவன் அமைச்ச னுருங் கைதலை குவித்து நின்று
"வெற்றனம் பிள்ளை யார்இங் கணைந்திடப் பெறும்பே" றென்பார்
"இன்றைநாள் ஈசன் அன்பர் தம்மைநாம் இறைஞ்சப் பெற்றோம்
"தன்னினிச் சமணர் செய்யும் வஞ்சனை அறியோம்" என்றார். சுகூஞ

தோனியார் தாமும் அஞ்சி "வஞ்சகப் புலையர் தாங்கள்
"சூனமே புரிய வல்லார் செய்வதென் நாம்"என் றெண்ணி
"ஞானசம் பந்தர் தம்பால் நன்மையல் லாது செய்யும்
"வானம்வந் தடையில் யாரும் உயிர்துறந் தொழிவ" தென்றார். சுகூசு

"இவர்நிலை இதுவே யாக இலங்குவேல் தென்ன னான
அவன்நிலை அதுவாம் அந்நாள் அருகர்தந் நிலையா தென்னில்
தவமறைந் தல்ல செய்வார் தங்கள்மந் திரத்தால் செந்தீ
வெவெறி வளர்க்க வந்தார் திருமடஞ் சேரச் செய்தார். சுகூள

வேறு

ஆதி மந்திரம் அஞ்செழுத் தோதுவார் நோக்கும்
மாதி ரத்தினும் மற்றைமந் திரவிதி வருமே
பூதி சாதனர் மடத்தில்தாம் புணைந்தசா தனைகள்
சாதி யாவகை கண்டமண் குண்டர்கள் தளர்ந்தார். சுகூஅ

தளர்ந்து மற்றவர் தாஞ்செய்த தீத்தொழில் சரியக்
கிளர்ந்த அச்சமுன் கெழுமிய கீழ்மையோர் கூடி

"விளங்கு நீள்முடி வேந்தன்ஈ தறியின்நம் மேன்மை
உளங்கொ ளான்நமர் விருத்தியும் ஒழிக்கும்"என் றுணர்வார்.

2,603 "மந்தி ரச்செயல் வாய்த்தில மற்றினிச் செய்யும்
புந்தி யாவதுங் கிது"எனப் பொதிதழல் கொடுபுக்
கந்தண் மாதவர் திருமடப் புறத்தயல் இருள்போல்
வந்து தந்தோழில் புரிந்தனர் வஞ்சனை மனத்தோர். எ00

2,604 திரும டப்புறச் சுற்றினில் தீயபா தகத்தோர்
மருவு வித்தஅத் தொழில்வெளிப் படுதலும் மறுகிப்
பரிச னத்தவர் பதைப்பொடுஞ் சிதைத்தது நீக்கி
அருகர் இத்திறம் புரிந்தமை தெளிந்துசென் றணைவார். எ0க

2,605 கழும லப்பதிக் கவுணியர் கற்பகக் கன்றைத்
தொழுது நின்றமண் குண்டர்செய் தீங்கினைச் சொன்ன
பொழுது "மாதவர் துயிலும்இத் திருமடப் புறம்பு
பழுது செய்வதோ ! பாவிகாள் !" எனப்பரிந் தருளி. எ0உ

2,606 "என்பொ ருட்டவர் செய்ததீங் காயினும் இறையோன்
அன்ப ருக்கெய்து மோ"என்று பின்னையும் அச்சம்
முன்பு றப்பின்பு முனிவுற முத்தமிழ் விரகர்
"மன்பு ரக்கும்மெய் முறைவழு" எனமனங் கொண்டார். எ0ங

2,607 வெய்ய தீங்கிது வேந்தன்மேற் றெனும்விதி முறையால்
"செய்ய னேதிரு வாலவாய்" எனுந்திருப் பதிகம்
"சைவர் வாழ்மடத் தமணர்கள் இட்டதீத் தழல்போய்ப்
பைய வேசென்று பாண்டியற் கா"கெனப் பணித்தார். எ0ச

வேறு

2,608 பாண்டிமா தேவியார் தமது பொற்பில் பயிலுநெடு மங்கலநாண்
பாது காத்தும், ஆண்டகையார் குலச்சிறையார் அன்பி னலும் அரசன்
பால் அபராதம் உறுத லாலும், மீண்டுசிவ நெறியடையும் விதியி
னலும் வெண்ணீ று வெப்பகலப் புகலி வேந்தர், தீண்டியிடப் பேறு
டைய னுத லாலும் தீப்பிணியைப் "பையவே செல்க" என்றார். எ0ஞ

வேறு

2,609 திருந்தி சைப்பதி கத்தொடை திருவால வாயின்
மருந்தி னைச்சண்பை மன்னவர் புனைந்திட அருளால்
விரிந்த வெந்தழல் வெம்மைபோய்த் தென்னனே மேவிப்
பெருந்த ழற்பொதி வெதுப்பெனப் பெயர்பெற்ற தன்றே. எ0ஈ

2,610 செய்ய மேனியர் திருமக னூர்உறை மடத்தில்
நையும் உள்ளத்த ராய்அமண் கையர்தாம் நணுகிக்

கையி னல்லரி இடவுடன் படும்எல்லி கரப்ப
வெய்ய வன்குணக் கடலிடை எழுந்தனன் மீது. எ0எ

இரவு பாதகர் செய்ததீங் கிரவிதன் மாபில்
குரவ ஓதியார் குலச்சிறை யாருடன் கேட்டுச்
"சிரபு ரப்பிள்ளை யாரைஇத் தீயவர் நாட்டு
வரவ ழைத்தநாம் மாய்வதே" எனமனம் மயங்கி. எ0அ

பெருகும் அச்சமோ டாருயிர் பதைப்பவர் பின்பு
திரும டப்புறம் மருங்குதீ தின்மையிற் றெளிந்து
"கருமு ருட்டமண் கையர்செய் தீங்கிது கடைக்கால்
வருவ தெப்படி யாம்"என மனங்கொளும் பொழுது. எ0கூ

"அரச னுக்குவெப் படுத்த"தென் றருகுகஞ் சுகிகள்
உரைசெ யப்பதைத் தொருதனித் தேவியார் புகுத
விரைவும் அச்சமும் மேற்கொளக் குலச்சிறை யாரும்
வரைசெய் பொற்புய மன்னவன் மருங்குவக் கணைந்தார். எக0

வேந்த னுக்குமெய் விதிர்ப்புற வெதுப்புறு வெம்மை
காந்து வெந்தழற் கதுமென மெய்யெலாங் கவர்ந்து
போந்து மாளிகைப் புறத்துநின் றூர்களும் புலர்ந்து
தீந்து போம்படி எழுந்தது விழுந்துடல் திரங்க. எகக

உணர்வும் ஆவியும் ஒழிவதற் கொருபுடை ஒதுங்க
அணைய லுற்றவர் அருகுதூ ரத்திடை அகலப்
புணர்இ ளங்கத லிக்குருத் தோடுதளிர் புடையே
கோணரி னுஞ்சுருக் கோண்டவை நுண்துக ளாக. எகஉ

மருத்து நூலவர் தங்கள்பல் கலைகளில் வகுத்த
திருத்த குந்தொழில் யாவையுஞ் செய்யவும் மேன்மேல்
உருத்தெ ழுந்தவெப் புயிரையும் உருக்குவ தாகக்
கருத்தொ ழிந்துரை மறந்தனன் கௌரியர் தலைவன். எகங

ஆன வன்பிணி நிகழ்வுழி அமணர்கள் எல்லாம்
மீன வன்செயல் கேட்டலும் வெய்துயிர்த் தழிந்து
"போன கங்குலிற் புகுந்ததின் விளைவுகொல்" என்பார்
மான முன்தெரி யாவகை மன்னன்மாட் டணைந்தார். எகச

வேறு

மால்பெருக்குஞ் சமண்கையர் மருங்கு சூழ்ந்து வழுதிநிலை
ன்டழிந்து வந்த நோயின், மூலநெறி அறியாதே தங்கள் தெய்வ
ாழிநவில்மந் திரங்கொண்டு முன்னும் பின்னும், பீலிகொடு தைவ
தற் கெடுத்த போது பிடித்தபீ லிகள்பிரம்பி னேடுந் தீந்து, மேலெ

சா. வே. | . மனமென. 2. நன்னூலி

ரியும் பொரிசிதறி வீழக் கண்டு வெப்பின்அதி சயம்நோக்கி | வெரு[illegible]
மிக்கார். எ[illegible]

2619 கருகியமா சுடையாக்கைத் தீயோர் தங்கள் கைத்தூங்கு [illegible]
டிகைநீர் தெளித்துக் "காவாய், அருகனே! அருகனே!" என்மெ[illegible]
ரோதி அடல்வழுதி மேல்தெளிக்க அந்நீர் பொங்கிப், பெருகும்[illegible]
தழல்சோரிந்த நெய்போ லாகிப் பேர்த்தும்ஒரு தழல்அதன்மேற் [illegible]
தாற் போல, "ஒருவரும்இங் கிருமருங்கும் இராது போம்"என் றமண[illegible]
ரைப்பார்த் துரைத்தரசன் உணர்வு சோர்ந்தான். எ[illegible]

வேறு

2620 பாண்டிமா தேவி யாரும் பயம்எய்தி அமைச்சர் பாரம்
பூண்டவர் தம்மை நோக்கிப் "புகலியில் வந்து நம்மை
ஆண்டுகொண் டவர்பால் கங்குல் அமணர்தாஞ் செய்த தீங்கு
மூண்டவா றிணைய தாகி முடிந்ததோ?" என்று கூற. எகள

2621 கொற்றவன் அமைச்ச ஞாராங் குலச்சிறை யாருந் தாழ்ந்து
"மற்றிதன் கொடுமை இந்த வஞ்சகர் மதில்கள் மூன்றும்
செற்றவர் அன்பர் தம்பால் செய்ததீங் கரசன் பாங்கு
முற்றிய திவர்கள் தீர்க்கின் முதிர்வதே யாவ" தென்பார். எகஅ

2622 இருதிறத் தவரும் மன்னன் எதிர்பணிந் "திந்த வெப்பு
வருதிறம் புகலி வந்த வள்ளலார் மதுரை நண்ணி
அருகர்கள் செய்த தீய அனுசிதம் அதனுல் வந்து
பெருகிய திதற்குத் தீர்வு பிள்ளையார் அருளே" என்று. எகக

2623 "காயமும் மனமும் மாசு கழுவுதல் செய்யார் செய்யும்
மாயமும் இந்த நோயை வளர்ப்பதே வழக்கெண் திங்கள்
மேயவே ணியர்பால் ஞானம் பெற்றவர் விரும்பி நோக்கில்
தீயஇப் பிணியே அன்றிப் பிறவியுந் தீரும்" என்றார். எஉ0

2624 மீனவன் செவியி னூடு மெய்யுணர் வளிப்போர் கூற
ஞானசம் பந்தர் என்னும் நாமமந் திரமுஞ் செல்ல
ஆனபோ தயர்வு தன்னை அகன்றிட அமண ராகும்
மானமில் லவரைப் பார்த்து மாற்றமொன் றுரைக்க லுற்றான். எஉக

2625 மன்னவன் அவரை நோக்கி "மற்றிவர் செய்கை எல்லாம்
இன்னவா றெய்து நேரய்க்கே ஏதுவா யின"என் றெண்ணி
"மன்னிய சைவ நீதி மாமறைச் சிறுவர் வந்தால்
அன்னவர் அருளால் இந்நோய் அகலுமேல் அறிவேன்" என்றான்.

2626 என்றுமுன் கூறிப் பின்னும் "யானுற்ற பிணியைத் தீர்த்து
வென்றவர் பக்கஞ் சேர்வன் விரகுண்டேல் அழையும்" என்ன

பா. வே. 1. வெகுவின். 2. இவ்வெய்து. 3. பின்னரும் நோக்கி
4. மானமழிந்து

அன்றவர் உவகை பொங்கி ஆர்வத்தால் அணையை நூக்கிச்
சென்றநீர் வேள்ளம் போலும் காதல்வெள் ளத்திற் செல்வார். எஉஙூ

பாயுடைப் பாத கத்தோர் திருமடப் பாங்கு செய்த
வினைத் தொழிலை நோக்கி உள்ளழி திருவுள் ளத்தான்
மெயஅத் துயரம் நீங்க விருப்புறு விரைவி னோடு
நாயகப் பிள்ளை யார்தம் நற்பதம் பணிவா ராகி. எஉச

மன்னவன் இடும்பை தீர மற்றவன் பணிமேற் கொண்டே
அன்னமென் னடையி னூரும் அணிமணிச் சிவிகை ஏறி
பின்னிடை மடவார் சூழ வேற்படை அமைச்ச னூரும்
முன்அணைந் தேகச் சைவ முதல்வனூர் மேடத்தைச் சார்ந்தார். எஉடு

திருமடஞ் சாரச் சென்று "சேயரிக் கண்ணி னூர்முன்
வருபரி இழிந்து நின்ற அமைச்சனூர் வந்த பான்மை
திருபுரப் பிள்ளை யார்க்கு விண்ணப்பஞ் செய்வீர்" என்னப்
பரிசனத் தவரும் புக்குப் பதம்அறிந் துணர்த்து கின்றூர். எஉசூ

"பாண்டிமா தேவி யாரும் பரிவுடை அமைச்ச னூரு
மீண்டுவந் தணைந்தார்" என்று விண்ணப்பஞ் செய்யச் சண்பை
ஆண்டகை யாரும் "ஈண்ட அழையும்" என் றருளிச் செய்ய
மீண்டுபோந் தழைக்கப் புக்கார் விரைவுறும் விருப்பின் மிக்கார். எஉஎ

வேறு

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
ஞானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தனக்க மலர்க்கோன்றைச் செஞ்சடையார் சீர்தோடுக்குங்
ஞானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள். எஉஅ

கண்டபொழு தமண்கொடியோர் செய்தகடுந் தொழில்நினைந்தே
மண்டியகண் அருவிநீர் பாயமலர்க் கைகுவித்துப்
பண்டரிகச் சேவடிக்கீழ்ப் பொருந்தகில முறவிழுந்தார்
கொண்டகுறிப் போடுநெடி துயிர்த்தழிந்த கொள்கையராய். எஉகூ

கரைகுழறி மெய்ந்நடுங்கி ஒன்றும்அறிந் திலராகித்
தரையின்மிசைப் புரண்டயர்ந்து சரணகம லம்பற்றிக்
கரையில்கவ லைக்கடற்கோர் கரைபற்றி னூர்போன்று
விரைவுறுமெய் அன்பினுல் விடாதொழிவார் தமைக்கண்டு. எஉஏ

மறுமறைவாழ் பூம்புகலி அண்ணலார் அடிபூண்ட
திருவரையுந் திருக்கையால் எடுத்தருளித் தேற்றிடவும்
தெருமந்து தெளியாதார் தமைநோக்கிச் சிறப்பருளித்
திருவுடையீர்! உங்கள்பால் தீங்குளதோ?" எனவினவ. எஉக

2635 "வெஞ்சமணர் முன்செய்த வஞ்சனைக்கு மிகஅழிந்தே
அஞ்சினேம் திருமேனிக் கடாதென்றே அதுதீர்ந்தோம்
வஞ்சகர்மற் றவர்செய்த தீத்தொழில்போய் மன்னவன்பால்
எஞ்சலிலாக் கொடுவெதுப்பாய் எழாநின்ற" தெனத்தொழுது. எஙஉ

2636 "வேய்யதொழில் அம்மண்குண்டர் விளைக்கவரும் வெதுப்பவர்தாம்
செய்யுமதி மாயைகளால் தீராமைத் தீப்பிணியால்
மையலுறு மன்னவன்முன் மற்றவரை வென்றருளில்
உய்யும்எம துயிரும்அவன் உயிரும்"என உரைத்தார்கள். எஙங

வேறு

2637 என்றவர் உரைத்த போதில் எழில்கொள்பூம் புகலி வேந்தர்
"ஒன்றுநீர் அஞ்ச வேண்டா உணர்விலா அமணர் தம்மை
இன்றுநீர் உவகை எய்த யாவருங் காண வாதில்
வென்றுமீ னவனை வெண்ணீ றணிவிப்பன் விதியால்" என்றார். எஙச

வேறு

2638 மொழிந்தருள அதுகேட்டு முன்இறைஞ்சி முகம்மலர்வார்
"அழுந்தும்இடர்க் கடலிடைநின் றடியோமை எடுத்தருளச்
செழுந்தரளச் சிவிகையின்மேல் தென்னுடு செய்தவத்தால்
எழுந்தருளப் பேறுடையோம் என்பெரிதும்" எனத்தொழுதும்.

வேறு

2639 "ஆவதும்அழிவ தெல்லாம் அவர்செயல் அமண ராகும்
பாவகா ரிகளை நோக்கும் பழுதுடன் நீங்க வெல்லச்
சேவுயர் கொடியி னார்தந் திருவுள்ளம் அறிவேன்" என்று
பூவலர் பொழில்சூழ் சண்பைப் புரவலர் போது கின்றார். எஙச

2640 வையகம் உய்ய வந்த வள்ளலார் மடத்தினின் றும
மெய்யணி நீற்றுத் தொண்டர் வெள்ளமும் தாமும் போந்து
கையினை தலையின் மீது குவியக்கண் மலர்ச்சி காட்டச்
செய்யவார் சடையார் மன்னுந் திருவால வாயுட் புக்கார். எஙஎ

2641 "நோக்கிட விதியி லாரை நோக்கினான் வாது செய்யத்
தீக்கனல் மேனி யானே திருவுள மே"என் றெண்ணில்
பாக்கியப் பயனு யுள்ள பாலரு வாயர் மெய்ம்மை
நோக்கிவண் தமிழ்செய் மாலைப் பதிகந்தான் துவல லுற்றார். எஙஅ

2642 கானிடை ஆடு வாரைக் "காட்டுமா வுரி" முன் பாடித்
தேனலர் கொன்றை யார்தந் திருவுளம் நோக்கிப் பின்னும்
ஊனமில் "வேத வேள்வி" என்றெடுத் துரையின் மாலை
ஞானமில் அமணர் தம்மை வாதில்வென் றழிக்கப் பாடி. எஙக

பா. பே. 1. அதுயுமதியால் எனும்பிணியால். 2. அவர்கேட்டு. 3 அழிவு தெல்லாம். முன்பு தி.

ஆலமே அமுத மாக உண்டுவா னவர்க்க ளித்துக்
லனே மார்க்கண் டர்க்காக் காய்ந்தனே அடியேற் கின்று
ாலம்கின் புகழே யாக வேண்டும்நான் மறைகள் ஏத்தும்
லமே ஆல வாயிற் சிவபெரு மானே'' என்றார். எசo

ர்த்தம் அருள்முன் பெற்று நாடிய மகிழ்ச்சி பொங்கப்
போதுவார் பணிந்து போற்றி விடைகொண்டு புனித நீற்று
தகு கோலத் தோடும் விருப்புறு தொண்டர் சூழ
தெயிற் கபாடம் நீடு முதற்றிரு வாயில் சார்ந்தார். எசக

ம்மலர்க் குழலி னர்க்கும் அமைச்சர்க்கும் அருள வேண்டிச்
செம்மணிப் பலகை முத்தின் சிவிகைமேற் கொண்ட போதில்
ம்மருங் கினிலும் தொண்டர் எடுத்தஆர்ப் பெல்லை யின்றி
ும்மைநீ டுலக மெல்லாம் முழுதுடன் நிறைந்த தன்றே. எசஉ

ல்இய நாதம் பொங்கப் படர்திரு நீற்றின் சோதி
ல்லொளி வட்ட மாகி நண்ணிமேல் வருவ தென்ன
ில்வளர் தரளக் கோவை வெண்குடை நிழற்ற ஓவ்வே
றல்லியில் முத்தின் காளாந் தாரைசங் கெங்கும் ஓத. எசஙு

ண்ணினுக் கணியாய் உள்ளார் எழுச்சியிற் காட்சி பெற்றூர்
ணண்ணிய சமயம் வேறு நம்பினர் எனினும் முன்பு
ண்ணிய தவங்கள் என்கொல் பஞ்சவன் தஞ்ச மேவிப்
ண்ணிய மூர்த்தி வந்து மதுரையிற் புகுத'' என்றார். எசச

தன்னவன் தேவி யாருந் திருமணிச் சிவிகை மீது
ன்வர அமைச்சர் முன்பு பெருந்தொண்டர் குழாத்துச் செல்லப்
பான்னணி மாட வீதி யூடெழுந் தருளிப் புக்கார்
ன்னிநா டுடையான் கோயில் காழிநா டுடைய பிள்ளை. எசஙி

காற்றவன் தன்பால் முன்பு குலச்சிறை யார்வந் தெய்திப்
பாற்றட மதில்சூழ் சண்பைப் புரவலர் வரவு கூற
ற்றுயர் சிறிது நீங்கி முழுமணி அணிப்பொற் பீடம்
ற்றவன் முடியின் பக்கத் திடுகென வல்ல ஞனன். எசசு

ந்திரி யாரைப் பின்னும் எதிர்செல மன்னன் ஏவச்
ந்தையுள் மகிழ்ந்து போந்தார் செயலியான் சமயத் துள்ளோர்
பந்துணர் அலங்கல் மன்னன் பரிசுகண் ''டிதுவோ பண்பால்
த்தனிச் சமயந் தன்னை நாட்டுமா'' றென்று பின்னும். எசஎ

ின்அற நெறியை நீயே காத்தருள் செய்தி யாகில்
ன்னவர் தம்மை இங்கே அழைத்தனை அவரும் யாமும்
ன்னுற ஒக்கத் தீர்க்க மொழிந்துமற் றவரால் தீர்ந்த
ன்னினும் யாமுந் தீர்த்தோ மாகவும் இசைவாய்'' என்றார். எசஅ

ப.ப. நாளும் ஓங்கி. 2.ஏந்தி: 2021.

2652 போய்தவ மாகக் கொண்ட புன்தலைச் சமணர் கூறச்
"செய்தவப் பயன்வந் தெய்துஞ் செவ்விமுன் னுறுத லாலே
எய்திய தெய்வச் சார்வால் இருதிறத் தீரும் தீரும்
கைதவம் பேச மாட்டேன்" என்றுகை தவனுஞ் சொன்னன். எசக

2653 என்றவன் உரைப்பக் குண்டர் எண்ணங்கெட் டிருந்த எல்லைத்
தென்தமிழ் நாடு செய்த செய்தவக் கொழுந்து போல்வார்
வன்தனிப் பவன முன்னர் வாயிலுள் அணைந்து மாடு
பொன்திகழ் தரளப் பத்திச் சிவிகைநின் றிழிந்து புக்கார். எடுo

2654 குலச்சிறை யார்முன் பெய்தக் கொற்றவன் தேவி யாரும்
தலத்திடை இழிந்து சென்றார் தண்தமிழ் நாட்டு மன்னன்
நிலத்திடை வானி னின்று நீளிருள் நீங்க வந்த
கலிச்செழுந் திங்கள் போலும் கவுணியர் தம்மைக் கண்டான். எடுக

2655 கண்டஅப் பொழுதே வேந்தன் கையெடுத் தெய்த நோக்கித்
தண்டுணர் முடியின் பாங்கர்த் தமனியப் பீடங் காட்ட
வண்டமிழ் விரகர் மேவி அதன்மிசை இருந்தார் மாயை
கொண்டவல் அமணர் எல்லாங் குறிப்பினுள் அச்சங் கொண்டார்.

2656 செழியனும் பிள்ளை யார்தந் திருமேனி காணப் பெற்று
விழியுற நோக்க லாலே வெம்மைநோய் சிறிது நீங்கி
அழிவுறு மனனேர் நிற்க அந்தணர் வாழ்வை நோக்கிக்
"கெழுவுறு பதியா" தென்று விருப்புடன் கேட்ட போது. எடுக

வேறு

2657 "பொன்னிவளந் தருநாட்டுப் புனற்பழனப் புறம்பணைசூழ்
கன்னிமதிற் கழுமலம்நாம் கருதுமூர்" எனச்சிறந்த
பன்னிரண்டு பெயர்பற்றும் பரவியசொல் திருப்பதிகம்
தென்னவன்முன் பருள்செய்தார் திருஞான சம்பந்தர். எடுச

2658 பிள்ளையார் செம்பொன்மணிப் பீடத்தில் இருந்தபொழு
துள்ளநிறை பொருமையினுல் உழையிருந்த காரமணர்
கொள்ளுமனத் திடையச்சம் மறைத்துமுகங் கோபத்தீத்
துள்ளிஎழும் எனக்கண்கள் சிவந்துபல சொல்லுவார். எடுடு

2659 காலெழுங் கதிரவனைப் புடைசூழுங் கருமுகில்போல்
பீலிசேர் சமண்கையர் பிள்ளையார் தமைச்சூழ்வார்
எலவே வாதினுல் வெல்வதனுக் கெண்ணித்தாங்
கோலுநூல் எடுத்தோதித் தலைதிமிர்ப்பக் குரைத்தார்கள். எடுக

2660 பிள்ளையார் அதுகேளாப் "பேசுகதும் பொருள்எல்லை
உள்ளவா றென்" றருள ஊத்தைவாய்ப் புறிதலையர்

பா.வே. 1. மனத்தன் பயனாம். 2. அனைவோர். 3. அனந்தனன்.

துள்ளிஎழுந் தனேகராய்ச் சூழ்ந்துபத நிக்கதற
ஒள்ளிழையார் அதுகண்டு பொருராகி உள்நடுங்கி. எடுள

வேறு

தென்னவன் தன்னே நோக்கித் "திருமேனி எளியர் போலும்
இன்னருட் பிள்ளே யார்மற் றிவர்உவர் எண்ணி லார்கள்
மன்ன!நின் மயக்கம் எங்கள் வள்ளலார் தீர நல்கும்
பின்னேஇவ் வடணர் மூள்வார் வல்லரேல் பேச" என்ருர். எடுஅ

மாறனும் அவரை நோக்கி "வருந்தல்நீ" என்று "மற்று
வேறுவா தென்கொல் என்மேல் வெப்பொழித் தருகர் நீரும்
ஆறணி சடையி ருருக் கன்பராம் இவரும் நீங்கள்
தேறிய தெய்வத் தன்மை என்னிடைத் தெரிப்பீர்" என்ருன். எடுக

ஞானஆ ரமுதம் உண்டார் நற்றவத் திருவை நோக்கி
" மானினேர் விழியி னுய்!கேள் மற்றெணப் பாலன் என்று
கீநனி அஞ்ச வேண்டாம் நிலேயிலா அமணர்க் கென்றும்
யானெனி யேன லேன்"என் றெழுந்திருப் பதிகம் பாடி. எகூ

பெற்றியால் அருளிச் செய்த பிள்ளேயார் தமக்கும் முன்னம்
சுற்றுநின் றழைத்தல் ஓவா அருகர்க்கும் தென்னர் கோமான்
"இற்றைநாள் என்னே யுற்ற பிணியைநீர் இகலித் தீரும்
தெற்றெனத் தீர்த்தார் வாதில் வென்றவர்" என்று செப்ப. எகுக

மன்னவன் மாற்றங் கேட்டு வடிவுபோல் மனத்து மாசு
துன்னிய அமணர் தென்னர் தோன்றலே நோக்கி "நாங்கள்
உன்னுடம் பதனில் வெப்பை ஒருபுடை வாம பாகம்
முன்னம்மந் திரித்துத் தெய்வ முயற்சியால் தீர்த்தும்"என்ருர். எகூஉ

யாதுமொன் றறிவி லாதார் இருளென அணேயச் சென்று
வாதினில் மன்ன வன்தன் வாமபா கத்தைத் தீர்ப்பார்
மீதுதம் பீலி கொண்டு தடவிட மேன்மேல் வெப்புத்
தீதுறப் பொருது தென்னன் சிரபுரத் தவரைப் பார்த்தான். எகூக

தென்னவன் நோக்கங் கண்டு திருக்கழு மலத்தார் செல்வர்
"அன்னவன் வலப்பால் வெப்பை ஆலவாய் அண்ணல் நீறே
மன்னுமந் திரமு மாகி மருந்துமாய்த் தீர்ப்ப" தென்று
பன்னிய மறைகள் ஏத்திப் பகர்திருப் பதிகம் பாடி. எகூச

திருவளர் நீறு கொண்டு திருக்கையால் தடவத் தென்னன்
பொருவரு வெப்பு நீங்கிப் போய்கையிற் குளிர்ந்த தப்பால்
மருவிய இடப்பால் மிக்க அழலெழ மண்டு தீப்போல்
இருபுடை வெப்புங் கூடி இடங்கொளா தென்னப் பொங்க. எகூடு

இ.ம.1.5999

2665 உறியுடைக் கையர் பாயின் உடுக்கையர் நடுக்கம் எய்திச்
செறிமயிற் பீலி தீயத் தென்னன்வெப் புறுதீத் தம்மை
எறியமா சுடலுங் கன்றி அருகுவிட் டேற நிற்பார்
அறிவுடை யாரை யொத்தார் அறிவிலா நெறியில் நின்றார். எசுசு

2670 பலர்தொழும் புகலி மன்னர் ஒருபுடை வெப்பைப் பாற்ற
மலர்தலை யுலகின் மிக்கார் வந்தநி சயித்துச் சூழ
இலகுவேல் தென்னன் மேனி வலம்இடம் எய்தி நீடும்
உலகினில் தண்மை வெம்மை ஒதுங்கினுல் ஒத்த தன்றே. எசுள

2671 மன்னவன் மொழிவான் "என்னே! மதித்தஇக் காலம் ஒன்றில்
வெங்கர கொருபா லாகும் வீட்டின்பம் ஒருபா லாகும்
துன்னுநஞ் சொருபா லாகும் சுவையமு தொருபா லாகும்
என்வடி வொன்றி லுற்றேன் இருதிறத் தியல்பும்" என்பான். எசுஅ

2672 "வெந்தொழில் அருகர் தோற்றீர் என்னைவிட் டகல நீங்கும்
வந்தெனீ உய்யக் கொண்ட மறைக்குல வள்ள லாரே!
இந்தவெப் படைய நீங்க எனக்கருள் புரிவீர்" என்று
சிந்தையால் தொழுது சொன்னன் செல்கதிக் கணிய னனன். எசுக

2673 திருமுகம் கருணை காட்டத் திருக்கையால் நீறு காட்டிப்
பெருமறை துதிக்கும் ஆற்றூல் பிள்ளையார் போற்றிப் பின்னும்
ஒருமுறை தடவ அங்கண் ஒழிந்துவெப் பகன்று பாகம்
மருவுதீப் பிணியும் நீங்கி வழுதியும் முழுதும் உய்ந்தான். எளO

2674 கொற்றவன் தேவி யாரும் குலச்சிறை யாரும் தீங்கு
செற்றவர் செய்ய பாத தாமரை சென்னி சேர்த்துப்
"பெற்றனம் பெருமை இன்று பிறந்தனம் பிறவா மேன்மை
உற்றனன் மன்னன்" என்றே உளங்களித் துவகை மிக்கார். எளக

2675 மீனவன் தன்மே லுள்ள வெப்பெலாம் உடனே மாற
ஆனபேர் இன்பம் எய்தி உச்சிமேல் அங்கை கூப்பி
மானமொன் றில்லார் முன்பு வன்பிணி நீக்க வந்த
"ஞானசம் பந்தர் பாதம் நண்ணினான் உய்ந்தேன்" என்றான். எளஉ

வேறு

2676 கந்துசீறு மாலியானை மீனவன் கருத்துநேர்
வந்துவாய்மை கூறமற்று மாசுமேனி நீசர்தாம்
மூந்தைமந் திரத்துவிஞ்சை முற்றும்எஞ்ச அஞ்சியே
சிந்தைசெய்து கைவருந் திறந்தெரிந்து தேடுவார். எளங

2677 "சைவமைந்தர் சொல்லின்வென்றி சந்தஇன்சொல் மாலையால்
கைதவன்றன் வெப்பொழிந்த தன்மைகண் டறிந்தனம்

[illegible]

மெய்தெரிந்த தர்க்கவாதம் வெல்லலாவ தன்றுவே
றெய்துதீயின் நீரில்வெல்வ'' தென்றுதம்மில் எண்ணினார். எஎச

பிள்ளையாரும் ''உங்கள்வாய்மை பேசுமின்கள்'' என்றலும்
தள்ளுநீர்மை யார்கள்''வேறு தர்க்கவாதின் உத்தரங்
கொள்ளும்வென்றி அன்றியே குறித்தகொள்கை உண்மைதான்
உள்ளவாறு கட்புலத்தில் உய்ப்ப''தென்ன ஒட்டினார். எஎடு

என்றுவாது கூறலும் இருந்தஅன்னார் மன்னனும்
''கன்றிஎன் உடம்பொடுங்க வெப்புநோய் கவர்ந்தபோ
தொன்றுமங் கொழித்திலீர்கள் என்னவா துமக்''கெனச்
சென்றுபின்னும் முன்னும்நின்று சில்லிவாயர் சொல்லுவார். எஎசு

''என்னவாது செய்வதென் றுரைத்தபோ தினுவெனுச்
சொன்னவாச கந்தொடங்கி ஏடுகொண்டு சூழ்ச்சியால்
மன்னுதம் பொருட்கருத்தின் வாய்மைதீட்டி மாட்டினால்
வெங்கெருப்பின் வேவுறுமை வெற்றியாவ'' தென்றனர். எஎஎ

என்றபோது மன்னனென் றியம்புமுன்பு பிள்ளையார்
''நன்றுநீர் உரைத்தவாறு நாடுதீயில் ஏடுதான்
வென்றிடிற் பொருட்கருத்து மெய்ம்மையாவ தென்றிசேல்
வன்தனிக்கை யானைமன்னன் முன்புவம்மின்'' என்றனர். எஎஅ

வேறு

அப்ப டிக்கெதிர் அமணரும் அணைந்துறும் அளவில்
ஒப்பில் வண்புகழ்ச் சண்பையர் காவலர் உரையால்
செப்ப ருந்திறல் மன்னனும் ''திருந்தவை முன்னர்
வெப்பு றுந்தழல் அமைக்கென'' விணைஞரை விடுத்தான். எஎசு

ஏய மாந்தரும் இந்தனங் குறைத்துடன் அடுக்கித்
தீஅ மைத்தலுஞ் சிகைவிடு புகையொழிந் தெழுந்து
காயும் வெவ்வழற் கடவுளும் பட.ரொளி காட்ட
ஆயு முத்தமிழ் விரகரும் அணையவந் தருளி. எஅ0

செங்கண் ஏற்றவ ரேபொருள் என்றுதாந் தெரித்த
பொங்கி சைத்திருப் பதிகனன் முறையினைப் போற்றி
''எங்கள் நாதனே பரம்பொருள்'' எனத்தொழு தெடுத்தே
அங்கை யால்முடி மிசைக்கொண்டு காப்புநாண் அவிழ்த்தார்.

சாற்று மெய்ப்பொருள் தருந்திரு முறையினைத் தாமே
நீற்று வண்கையால் மறித்தலும் வந்துநோற் றுளதால்
நாற்ற டம்புயத் தண்ணலார் மருவுநள் ளாறு
போற்றும் அப்பதி கம்''போக மார்த்தபூண் முலையாள்.'' எஅஉ

பா.பே.1-ஏறிபதி.

2686 அத்தி ருப்பதி கத்தினை அமர்ந்துகொண் டருளி
மைத்த வெங்கடு மிடற்றுநள் ளாறரை வணங்கி
மெய்த்த நற்றிரு வேட்டினைக் கழற்றிமெய்ம் மகிழ்ந்து
கைத்த லத்திடைக் கொண்டனர் கவுணியர் தலைவர். எஅஈ

2687 நன்மை உய்க்கும்மெய்ப் பதிகத்தின் நாதனென் றெடுத்தும்
என்னை ஆளுடை ஈசன்தன் நாமமே என்றும்
மன்னும் மெய்ப்பொரு ளாமெனக் காட்டிட வன்னி
தன்னி லாகெனத் "தளிரிள வளரொளி" பாடி. எஅச

2688 செய்ய தாமரை அகவித ழினும்மிகச் சிவந்த
கையில் ஏட்டினைக் கைதவன் பேரவை காண
வெய்ய தீயினில் வெற்றரை யவர்சிந்தை வேவ
வையம் உய்ந்திட வந்தவர் மகிழ்ந்துமுன் னிட்டார். எஅடு

2689 இட்ட ஏட்டினில் எழுதிய சேந்தமிழ்ப் பதிகம்
மட்டு லாங்குழல் வனமுலை மலைமகள் பாகத்
தட்ட மூர்த்தியைப் பொருளென உடைமையால் அமர்ந்து
பட்ட தீயிடைப் பச்சையாய் விளங்கிய தன்றே. எஅஊ

2690 மையல் நெஞ்சுடை அமணருந் தம்பொருள் வரைந்த
கையில் ஏட்டினைக் கதுவுசெந் தீயினில் இடுவார்
உய்யு மோஇது எனஉறுங் கவலையாம் உணர்வால்
நையும் நெஞ்சின ராகியே நடுங்கிநின் றிட்டார். எஅஎ

2691 அஞ்சும் உள்ளத்த ராகியும் அறிவிலா அமணர்
வெஞ்சு டர்ப்பெருந் தீயினில் விழுத்திய ஏடு
பஞ்சுதீயிடைப் பட்டது படக்கண்டு பயத்தால்
நெஞ்சு சோரவும் பீலிகை சோர்ந்திலர் நின்றார். எஅஅ

2692 மான மன்னவன் அவையின்முன் வளர்த்தசெந் தீயின்
ஞானம் உண்டவர் இட்டஏ டிசைத்தநா ழிகையில்
ஈனம் இன்மைகண் டியாவரும் வியப்புற எடுத்தார்
பான்மை முன்னையிற் பசுமையும் புதுமையும் பயப்ப. எஅஊ

2693 எடுத்த ஏட்டினை அவையின்முன் காட்டிஅம் முறையில்
அடுத்த வண்ணமே கோத்தலும் அதிசயித் தரசன்
தொடுத்த பீலிமுன் தூக்கிய கையரை நோக்கிக்
"கடுத்து நீரிட்ட ஏட்டினைக் காட்டுமின்" என்றான். எகூ0

வேறு

2694 அதுகாந் தாம் இட்ட ஏடு வாங்கச்சென் றணையும் போதில்
பெருகுதீக் கதுவ வெந்து பேர்ந்தமை கண்ட மன்னன்

பா. இ. 1. ஏடு ஐ. இ. தீயினில்.

தருபுனல் கொண்டு செந்தீத் தணிப்பித்தான் சமணர் அங்குக்
கருகிய சாம்ப ரோடுங் கரியலால் மற்றென் காண்பார். எகூக

2695 செய்வதொன் றறிகி லாதார் திகைப்பினுல் திரண்ட சாம்பல்
கையினுற் பிசைந்து தூற்றிப் பார்ப்பது கண்ட மன்னன்
எய்திய நகையி னோடும் "ஏடின்னம் அரித்துக் காணும்
பொய்யினுல் மெய்யை யாக்கப் புகுந்தீர் போமின்" என்ருன். எகூஉ

2696 "வெப்பெனுந் தியில் யான்முன் வீடுபெற் றுய்ய நீங்கள்
அப்பொழு தழிந்து தோற்றீர் ஆதலால் அதுவா ருக
இப்பொழு தெரியில் இட்ட எடுய்ந்த தில்லே என்ருல்
துப்புர வுடையீர்! நீங்கள் தோற்றிலீர் போலும்" என்ருன். எகூங

2697 தென்னவன் நகையுட் கொண்டு செப்பிய மாற்றந் தேரார்
சொன்னது பயனுக் கொண்டு சொல்லுவார் "தொடர்ந்த வாது
மூன்றுற இருகால் செய்தோம் மூக்காலில் ஒருகால் வெற்றி
என்னினும் உடையோம் மெய்ம்மை இனியொன்று காண்ப" தென்ருர்.

2698 தோற்கவும் ஆசை நீங்காத் துணிவிலார் சொல்லக் கேட்"டிம்
மாற்றமென் னுவ" தென்று மன்னவன் மறுத்த பின்னும்
நீற்றணி விளங்கு மேனி நிறைபுகழ்ச் சண்பை மன்னர்
"வேற்றுவா தினிஎன் செய்வ" தென்றலும் மேற்கோள் ஏற்பார்.

2699 "நீடுமெய்ப் பொருளின் உண்மை நிலைபெறுந் தன்மை எல்லாம்
ஏடுற எழுதி மற்றவ் வேட்டினீ யாமும் நீரும்
ஓடுநீர் ஆற்றில் இட்டால் ஒழுகுதல் செய்யா தங்கு
நாடிமுன் தங்கும் ஏடு நற்பொருள் பரிப்ப" தென்ருர். எகூசு

2700 என்றமண் கையர் கூற ஏறுசீர்ப் புகலி வேந்தர்
"நன்றது செய்வோம்" என்றங் கருள்செய நணுக வந்து
வென்றிவேல் அமைச்ச னுர்தாம் "வேறினிச் செய்யும் இவ்வா
தொன்றினுந் தோற்ருர் செய்வ தொட்டியே செய்வ" தென்ருர். எகூள

2701 அங்கது கேட்டு நின்ற அமணரும் அவர்மேற் சென்று
பொங்கிய வெகுளி கூரப் பொருமைகா ரணமே யாகத்
தங்கள்வாய் சோர்ந்து தாமே "தனிவாதில் அழிந்தோ மாகில்
வெங்கழு வேற்று வான்இவ் வேந்தனே" என்று சொன்னுர். எகூஅ

2702 மற்றவர் சொன்ன வார்த்தை கேட்டலும் மலய மன்னன்
"செற்றத்தால் உரைத்தீர் உங்கள் செய்கையும் மறந்தீர்" என்று
"பற்றிய பொருளின் எடு படர்புனல் வைகை யாற்றில்
பொற்புற விடுவ தற்குப் போதுவ" தென்று கூற. எகூக

2703 பிள்ளையார் முன்னம் பைம்பொற் பீடத்தின் இழிந்து போந்து
தெள்ளுநீர்த் தாளப் பத்திச் சிவிகைமேல் ஏறிச் சென்ருர்

பா. பே. 1. கண்டு. 2. அது வேறு கை. 3 போதுகி.

வள்ளலார் அவர்தம் பின்பு மன்னன்மா ஏறிச் சென்றான்
உள்ளவா றறிகி லாதார் உணர்வுமால் ஏறிச் சென்றார். அ00

2704 தென்னவன் வெப்புத் தீர்ந்து செழுமணிக் கோயில் நீங்கிப்
பின்னுற அணைந்த போது பிள்ளையார் பெருகுஞ் செல்வம்
மன்னிய மதுரை மூதூர் மறுகில்வந் தருளக் கண்டு
துன்னிய மாதர் மைந்தர் தொழுதுவே றினைய சொன்னார். அ0க

2705 "மீனவன் கொண்ட வெப்பை நீக்கிநம் விழுமம் தீர்த்த
ஞானசம் பந்தர் இந்த நாயனார் காணும்" என்பார்
"பானறுங் குதலைச் செய்ய பவளவாய்ப் பிள்ளை யார்தாம்
மானசீர்த் தென்னன் நாடு வாழவந் தணைந்தார்" என்பார். அ0உ

2706 "எரியிடை வாதில் தோற்ற திவர்க்குநம் அருகர்" என்பார்
"புரிசடை அண்ணல் நீறே பொருளெனக் கண்டோம்" என்பார்
"பெருகொளி முத்தின் பைம்பொற் சிவிகைமேற் பிள்ளை யார்தாம்
வருமழ கென்னே" என்பார் "வாழ்ந்தன கண்கள்" என்பார். அ0ஊ

2707 "ஏதமே விளைந்த திந்த அடிகள்மார் இயல்பால்" என்பார்
"நாதனும் ஆல வாயில் நம்பனே காணும்" என்பார்
"போதமா வதுவும் மூக்கட் புராணனே அறிவ" தென்பார்
"வேதமும் நீறு மாகி விரவிடும் எங்கும்" என்பார். அ0எ

2708 "அடிகள்மார் முகங்கள் எல்லாம் அழிந்தன பாரீர்" என்பார்
"கொடியவஞ் சனைகள் எல்லாங் குலைந்தன போலும்" என்பார்
"வடிகொள்வேல் மாறன் காதல் மாறின வண்ணம்" என்பார்
"விடிவதாய் முடிந்த திந்த வெஞ்சமண் இருளும்" என்பார். அ0ஏ

2709 "நெருப்பினில் தோற்றூர் தாங்கள் நீரில்வெல் வாரோ" என்பார்
"இருப்புநெஞ் சுடைய ரேனும் பிள்ளையார்க் கெதிரோ" என்பார்
"பருப்பொருள் உணர்ந்தார் தாங்கள் படுவன பாரீர்" என்பார்
"மருப்புடைக் கழுக்கோல் செய்தார் மந்திரி யார்தாம்" என்பார். அ0ஐ

2710 "ஏடுகள் வைகை தன்னில் இடுவதற் கிணைந்தார்" என்பார்
"ஓடுநீ ருடன்செ லாது நிற்குமோ ஓலை" என்பார்
"நீடிய ஞானம் பெற்றூர் நிறுத்தவும் வல்லர்" என்பார்
"நாடெலாங் காண இங்கு நண்ணுமா காணீர்" என்பார். அ0ஒ

2711 "தோற்றவர் கழுவில் ஏறத் துணிவதே அருகர்" என்பார்
"ஆற்றிய அருளின் மேன்மைப் பிள்ளையார்க் கழகி" தென்பார்
"கீற்றிளந் தென்னன் தீங்கு நீங்கிய வண்ணங் கண்டார்
போற்றுவார் எல்லாஞ் சைவ நெறியினைப் போற்றும்" என்பார். அ0ஓ

2712 இன்னன இரண்டு பாலும் ஈண்டினார் எடுத்துச் சொல்ல
மின்னெளி மணிப்பொற் காம்பின் வெண்குடை மீது போதப்

பா. ஒ. ப. தணையத். இ. விடுவிடும்.

பன்மணிச் சிவிகை தன்மேற் பஞ்சவன் நாட்டு ளோர்க்கு
நன்னெறி காட்ட வந்தார் நான்மறை வாழ வந்தார். அ0கூ

"தேன்தமிழ் விளங்க வந்த திருக்கழு மலத்தான் வந்தான்
மன்றுளார் அளித்த ஞான வட்டில்வண் கையன் வந்தான்
வென்றுல குய்ய மீள வைகையில் வெல்வான் வந்தான்"
என்றுபன் மணிச்சின் னங்கள் எண்டிசை நெருங்கி ஏங்க. அக0

பன்மணி முரசஞ் சூழ்ந்த பல்லியம் இயம்பப் பின்னே
தென்னனும் தேவி யாரும் உடன்செலத் திரண்டு செல்லும்
புன்னெறி அமணர் வேரூர் புடைவரப் புகலி வேந்தர்
மன்னிய வைகை யாற்றின் கரைமிசை மருவ வந்தார். அகக

கார்கெழு பருவம் வாய்ப்பக் காமுறு மகளிர் உள்ளம்
சீர்கெழு கணவன் தன்பால் விரைவுறச் செல்லு மாபோல்
நீர்கெழு பௌவம் நோக்கி நிரைதிரை இரைத்துச் செல்லும்
பார்கெழு புகழின் மிக்க பண்புடை வைகை யாறு. அகஉ

ஆற்றில்நீர் கடுக ஓடும் மருங்குற அரசன் கோக்கி
"நீற்றணி திகழ்ந்த மேனி நிறைமதிப் பிள்ளை யாரும்
வேற்றுரு அருகர் நீரும் விதித்தவ டிடுக" என்றுன்
தோற்றவர் தோலார் என்று முன்னுறத் துணிந்திட் டார்கள். அகஊ

படுபொரு ளின்றி நெல்லிற் பதடிபோல் உள்ளி லார்மெய்
அடுபவர் பொருளை "அத்தி நாத்தி"என் றெழுதி ஆற்றில்
கடுகிய புனலைக் கண்டும் அவாவினுற் கையி லேடு
விடுதலும் விரைந்து கொண்டு வேலைமேற் படர்ந்த தன்றே. அகச

ஆறுகொண் டோடும் ஏட்டைத் தொடர்ந்தெதிர் அணைப்பார் போலத்
தேறுமெய் யுணர்வி லாதார் கரைமிசை ஓடிச் சென்றார்
பாறும்அப் பொருள்மேற் கொண்ட பட்டிகை எட்டா தங்கு
நூறுவிற் கிடைக்கு முன்னே போனது நோக்கிக் காணர். அகஎ

காணவும் எய்தா வண்ணம் கடலின்மேற் செல்லும் ஏடு
நாணிலா அமணர் தம்மை நட்டாற்றில் விட்டுப் போகச்
சேணிடைச் சென்று நின்றூர் சிதறினூர் திகைத்தார் மன்னன்
ஆணையில் வழுவ மாட்டா தஞ்சுவார் அணைய மீண்டார். அகசு

வேறொரு செயலி லாதார் வெருவுற்று நடுங்கித் தம்பால்
ஈறுவந் தெய்திற் றென்றே மன்னவன் எதிர்வந் தெய்தி
ஊறுடை நெஞ்சில் அச்சம் வெளிப்பட ஒளிப்பார் போன்று
"மாறுகொண் டீரும் இட்டால் வந்தது காண்டும்" என்றூர். அகள

மாசுசேர் அமணர் எல்லாம் மதியினில் மயங்கிக் கூற
ஆகிலா நெறியிற் சேர்ந்த அரசனும் அவரை விட்டுத்

தேசுடைப் பிள்ளை யார்தந் திருக்குறிப் பதனை நோக்கப்
பாசுரம் பாட வுற்றார் பரசம யங்கள் பாற. அகஅ

தென்னவன் மாறன் தானுஞ் சிரபுரத் தலைவர் தீண்டிப்
பொன்னவிர் கொன்றை யார்தந் திருநீறு பூசப் பெற்று
முன்னைவல் வினையும் நீங்கி முதல்வனை அறியுந் தன்மை
தன்னினுன் வினைகள் ஒத்துத் தலையென நிற்ற லாலே. அகக

வேறு

உலகியல் வேதநூல் ஒழுக்கம் என்பதும்
நிலவுமெய்ந் நெறிசிவ நெறிய தென்பதும்
கலதிவாய் அமணர்காண் கிலார்க ளாயினும்
பலர்புகழ் தென்னவன் அறியும் பான்மையால். அஉ0

"அந்தணர் தேவர்ஆன் இனங்கள் வாழ்க"என்
றிந்தமெய்ம் மொழிப்பயன் உலகம் இன்புறச்
சந்தவேள் விகள்முதல் சங்க ரர்க்குமுன்
வந்தஅர்ச் சனைவழி பாடு மன்னவாம். அஉக

வேறு

வேள்வி நற்பயன் "வீழ்புன லாவது"
நாளும் அர்ச்சனை நல்லுறுப் பாதலால்
"ஆளும் மன்னனை வாழ்த்திய(து)" அர்ச்சனை
மூளும் மற்றிவை காக்கும் முறைமையால். அஉஉ

"ஆழ்க தீய"தென் றேதிற் றயல்நெறி
வீழ்க என்றது வேறெல்லாம் "அரன்பெயர்
சூழ்க" என்றது தொல்லுயிர் யாவையும்
வாழி அஞ்செழுத் தோதி வளர்கவே. அஉங

சொன்ன "வையக மும்துயர் தீர்கவே"
என்னும் நீர்மை இகபரத் தில்துயர்
மன்னி வாழுல கத்தவர் மாற்றிட
முன்னர் ஞானசம் பந்தர் மொழிந்தனர். அஉச

"அரிய காட்சியர்" என்பதவ் வாதியைத்
தெரிய லாம்நிலை யால்தெரி யாரென
உரிய அன்பினிற் காண்பவர்க் குண்மையாம்
பெரிய நல்லடை யாளங்கள் பேசினர். அஉஞ

"ஆயி னும்பெரி யாரவர்" என்பது
மேய இவ்வியல் பேயன்றி விண்முதற்
பாய பூதங்கள் பல்லுயிர் அண்டங்கள்
ஏயும் யாவும் இவர்வடி வென்றதாம். அஉசு

பா. பே. வெண்பு.

பின்பும் "ஆறி வாரவர் பெற்றியே"
என்ப துயாருணர் வானுஞ்சென் றெட்டோணு
மன்பெ ருந்தன்மை யார்என வாழ்த்தினர்
அன்பு சூழ்சண்பை ஆண்டகை யாரவர். அஉள

"வேந்த சாம்பல் விரை"யென் பதுதம
தந்த பில்லொளி அல்லா ஒளியெலாம்
வந்து வெந்தற மற்றப் பொடியணி
சந்த மாக்கொண்ட வண்ணமுஞ் சாற்றினர். அஉஅ

"தமக்குத் தந்தையர் தாயிலர்" என்பதும்
அமைத்திங் குயாவையும் ஆங்கவை வீந்தபோ
திமைத்த சோதி அடக்கிப்பின் ஈதலால்
எமக்கு நாதர் பிறப்பிலர் என்றதாம். அஉக

"தம்மை யேசிந்தி யா"எனுந் தன்மைதான்
மேய்ம்மை யாகி விளங்கொளி தாமென
இம்மை யேநீங் வார்தம் இருவினைப்
போய்ம்மை வல்லிருள் போக்குவர் என்றதாம். அஉ0

"எந்தை யாரவர் எவ்வகை யார்கொல்"என்(று)
இந்த வாய்மைமற் றெப்பொருட் கூற்றினும்
முந்தை யோரைஎக் கூற்றின் மொழிவதென்(று)
அந்தண் பூந்தராய் வேந்தர் அருளினர். அஉக

"ஆதி ஆட்பா லவர்க்கரு ளுந்திறம்
நாதன் மாட்சிமை கேட்க நவிலுங்கால்
ஓதும் எல்லை உலப்பில ஆதலின்
யாதும் ஆராய்ச்சி இல்லையாம்" என்றதாம். அஉஉ

அன்ன ஆதலில் "ஆதியார் தாளடைந்
தின்ன கேட்கவே ஏற்றகோட் பாலவும்
முன்னை வல்வினை யும்முடி வெய்தும்அத்
தன்மை யார்க்"கென் றனர்சண்பை காவலர். அஉங

மன்னும் "ஏதுக்க ளாலெனும்" வாய்மைதான்
தன்ன தொப்புவே றின்மையிற் சங்கரன்
இன்ன தன்மையை ஏது எடுத்துக்காட்
டன்ன வற்றுல் அளப்பிலன் என்றதாம். அஉச

தோன்று காட்சி "சுடர்விட் டுளன்"என்ப(து)
ஆன்ற அங்கிப் புறத்தொளி யாய்அன்பில்
ஊன்ற உள்ளெழுஞ் சோதியாய் நின்றனன்
என்று காண்பார்க் கிதுபொருள் என்றதாம். அஉஞ

பா.பே.|.பெற்றியை.

வேறு

2739 "மாதுக்க ணீங்க லுறுவீர் மனம்பற்றும்" என்ப(து)
ஆதிச் சுடர்ச்சோ தியைஅன்பின் அகத்துள் ளாக்கிப்
போதித்த நோக்குற் றுழியாமற் பொருந்தி வாழ்ந்து
பேதித்த பத்தப் பிறப்பின்நெறி பேர்மின் என்றும். அசுஈ

வேறு

ஈண்டு "சாதுக்கள்" என்றெடுத் தோதிற்று
வேண்டும் வேட்கைய எல்லாம் விமலர்தாள்
பூண்ட அன்பினிற் போற்றுவீர் "சார்மின்"என்(று)
ஆண்ட சண்பை அரசர் அருளினார். அசஉ

வேறு

"ஆடும்" எனவாக் திருப்பாட்டின் அமைத்த மூன்றும்
நீடும் புகழோ பிறர்துன்பம் நீத்தற்கோ என்று
தேடும் உணர்வீர் உலகுக்கிவை செய்த தீசர்
கூடுங் கருணைத் திறம்என்றனர் கொள்கை மேலோர். அசஅ

கருதுங் "கடிசேர்ந்த" எனுந்திருப் பாட்டில் ஈசர்
மருவும் பெரும்பூசை மறுத்தவர்க் கோறல் முத்தி
தருதன் மையதாதல் சண்டீசர் தஞ்செய்கை தக்கோர்
பெரிதுஞ் சொலக்கேட் டனம்என்றனர் பிள்ளை யார்தாம்.

"வேத முதல்வன்" எனும்மெய்த் திருப்பாட் டினினேர்
ஆதி உலகோர் இடர்நீங்கிட ஏத்த ஆடும்
பாத முதலாம் பதினெண் புராணங்கள் என்றே
ஓதென் றுரைசெய் தனர்யாவும் ஓதா துணர்ந்தார். அசO

பாவுற்ற "பாராழி வட்டத்" திருப் பாட்டின் உண்மை
காவற்றொழி லானெனுங் கண்ணனுங் காவல் பெற்றது
யாவர்க்கு மேலாய ஈசன்அருள் ஆழி பெற்று
மேவுற்ற சீருற் றதுஎன்றனர் வேத வாயர். அசக

"மாலா யவன்"என்ன வருந்திருப் பாட்டில் மாலும்
தோலா மறைநான் முகனும் தொடர்வாம் அமரர்
ஏலா வகைசுட்ட நஞ்சுண் டிறவாமை காத்த
மேலாங் கருணைத் திறம்வெங்குரு வேந்தர் வைத்தார். அசஉ

வேறு

ஆன"அற் றன்றி" என்ற அத்திருப் பாட்டிற் கூடல்
மாநக ரத்துச் சங்கம் வைத்தவன் தேற்றத் தேரு

ஈனர்கள் எல்லைக் கிட்ட ஏடுநீர் எதிர்ந்து செல்லில்
ஞானம் ஈசன்பால் அன்பே என்றனர் ஞானம் உண்டார். அசங

வேறு

வெறியார் பொழிற்சண் பையர்வேந்தர் மெய்ப்பா சுரத்தைக்
குறிஎ றியஎல்லை அறிந்துகும் பிட்டேன் அல்லேன்
சிறியேன் அறிவுக் கவர்தந்திருப் பாதந் தந்த
நெறியே சிறிதுயான் அறிநீர்மைகும் பிட்டேன் அன்பால். அசச

அலரும் விரைசூழ் பொழிற்காழியுள் ஆதி ஞானம்
மலருந் திருவாக் குடைவள்ளலார் உள்ள வண்ணம்
பலரும் உணர்ந்துய்யப் பகர்ந்து வரைந்து யாற்றில்
நிலவுந் திருவேடு திருக்கையால் நீட்டி இட்டார். அசரு

வேறு

திருவுடைப் பிள்ளை யார்தந் திருக்கையால் இட்ட ஏடு
மருவுறும் பிறவி யாற்றில் மாதவர் மனஞ்சென் றுற்போல்
பொருபுனல் வைகை யாற்றில்எதிர்ந்துநீர் கிழித்துப் போகும்
இருநிலத் தோர்கட் கெல்லாம் "இதுபொருள்" என்று காட்டி. அசசு

"எம்பிரான் சிவனே எல்லாப் பொருளும்"என் றெழுதும் ஏட்டில்
தம்பிரான் அருளால் வேந்தன் தன்னைமுன் ஓங்கப் பாட
அம்புய மலரர்ள் மார்பன் "அனபாயன்" என்னுஞ் சீர்த்திச்
செம்பியன் செங்கோ லென்னத் தென்னன்கூன் நிமிர்ந்த தன்றே.

ஏடுநீர் எதிர்ந்து செல்லும் பொழுதிமை யோர்கள் எல்லாம்
நீடிய வாழ்த்திற் போற்றிநிமிர்ந்தபூ மாரி தூர்த்தார்
ஆடியல் யானை மன்னன் அற்புதம் எய்தி நின்றான்
பாடுசேர் அமணர் அஞ்சிப் பதைப்புடன் பணிந்து நின்றார். அசஅ

ஆற்றின்மேற் செல்லும் ஏடு தொடர்ந்தெடுப் பதற்கு வேண்டிக்
காற்றென விசையிற், செல்லுங் கடும்பரி ஏறிக் கொண்டு
கோல்தொழில் திருத்த வல்ல குலச்சிறை யார்பின் சென்றார்
ஏற்றுயர் கொடியி னரைப் பாடினர் ஏடு தங்க. அசக

ஏடகம் பிள்ளை யார்தாம் "வன்னி"என் றெடுத்துப் பாடக்
கூடிய நீரில் ஏடு குலச்சிறை யாருங் கூடிக்
காடிட மாக ஆடுங் கண்ணுதல் கோயில் மாடு
நீடுநீர் நடுவுட் புக்கு நின்றவ டெடுத்துக் கொண்டார். அடுட

தலைமிசை வைத்துக் கொண்டு தாங்கரும் மகிழ்ச்சி பொங்க
அலைபுனற் கரையில் ஏறி அங்கினி தமர்ந்த மேருச்
சிலையுடை யவர்தாள் போற்றி மீண்டுசென் றணைவார் தெய்வ
மலைமகள் குழைத்த ஞான்ம் உண்டவர் தம்பால் வந்தார். அடுக

பா.வே.1. எடுத்துநீர் இ. நினைந்தது.

மற்றவர் பிள்ளை யார்தம் மலரடி வணங்கிப் போற்றிக்
கொற்றவன் முதலா யுள்ளோர் காணமுன் கொணர்ந்த ஏடு
பற்றிய கையில் ஏந்திப் பண்பினுல் யார்க்குங் காட்ட
அற்றருள் பெற்ற தொண்டர் அரவொலி எழுந்த தன்றே. அருஉ

மன்னவன் மாறன் கண்டு மந்திரி யாரை நோக்கித்
"துன்னிய வாதில் ஒட்டித் தோற்றஇச் சமணர் தாங்கள்
முன்னமே பிள்ளை யார்பால் அநுசிதம் முற்றச் செய்தார்
கொல்தூணைக் கழுவில் ஏற முறைசெய்க" என்று கூற. அருந

புகலியில் வந்த ஞானப் புங்கவர் அதனைக் கேட்டும்
இகலிலர் எனினுஞ் சைவர் இருந்துவாழ் மடத்தில் தீங்கு
தகவிலாச் சமணர் செய்த தன்மையால் சாலும் என்றே
மிகையிலா வேந்தன் செய்கை விலக்கிடா திருந்த வேலை. அருச

பண்புடை அமைச்ச ரும்பாருளோர் அறியும் ஆற்ருல்
கண்புடை பட்டு நீண்ட கழுத்தறி நிரையில் ஏற்ற
நண்புடை ஞானம் உண்டார் மடத்துத்தீ நாடி இட்ட
எண்பெருங் குன்றத் தெண்ணு யிரவரும் ஏறி னர்கள். அருடு

தோற்றவர் கழுவில் ஏறித் தோற்றிடத் தோற்றுந் தம்பம்
ஆற்றிடை அமண ரோலை அழிவினுல் ஆர்ந்த தம்பம்
வேற்றுரு தெய்வ மின்மை விளக்கிய பதாகைத் தம்பம்
போற்றுசீர்ப் பிள்ளை யார்தம் புகழ்ச்சயத் தம்ப மாகும். அருக

தென்னவன் தனக்கு நீறு சிரபுரச் செல்வர் ஈந்தார்
முன்னவன் பணிந்து கொண்டு முழுவதும் அணிந்து நின்ருன்
"மன்னன்நீ றணிந்தான்" என்று மற்றவன் மதுரை வாழ்வார்
துன்னினின் ருர்கள் எல்லாந் தூயநீ றணிந்து கொண்டார். அருள

பூதிமெய்க் கணிந்து வேந்தன் புனிதனுய் உய்ந்த போது
நீதியும் வேத நீதி யாகியே நிகழ்ந்த தெங்கும்
மேதினி புனித மாக வெண்ணீற்றின் விரிந்த சோதி
மாதிரந் தூய்மை செய்ய அமணிருள் மாய்ந்த தன்றே. அருஅ

மீனவற் குயிரை நல்கி மெய்ந்நெறி காட்டி மிக்க
ஊனமாஞ் சமணை நீக்கி உலகெலாம் உய்யக் கொண்ட
ஞானசம் பந்தர் வாய்மை ஞாலத்திற் பெருகி யோங்கத்
தேனலர் கொன்றை யார்தந் திருநெறி நடந்த தன்றே. அருக

மறையவர் வேள்வி செய்ய வானவர் மாரி நல்க
இறைவன்நன் னெறியின் ஓங்க இகத்தினில் அவனி இன்பம்
குறைவில தெனினுங் கூற்றை உதைத்தவர் நாமங் கூறி
நிறைகடற் பிறவித் துன்பம் நீங்கிடப் பெற்ற தன்றே. அசு

பா. 1. வெற்றி: வேற்று 2. பதித்தலைத்த 3. வாஸ்தி 4 மற்றுமவ் 5 உய்ய வந்த 6. தேனலில்: தேனழி.

"அங்கயற் கண்ணி தன்னே டாலவாய் அமர்ந்த அண்ணல்
பங்கயச் செய்ய பாதம் பணிவன்" என் றெழுந்து சென்று
பொங்கொளிச் சிவிகை ஏறிப் புகலியர் வேந்தர் போந்தார்
மங்கையர்க் கரசி யாரும் மன்னனும் போற்றி வந்தார். அசுக

எண்ணரும் பெருமைத் தொண்டர் யாவரும் மகிழ்ச்சி எய்திப்
புண்ணியப் பிள்ளை யாரைப் புகழ்ந்தடி போற்றிப் போத
மண்ணெலாம் உய்ய வந்த வள்ளலார் தம்மைக் கண்டு
கண்ணினாற் பயன்கொண் டார்கள் கன்னிநாட் டவர்கள் எல்லாம்.

ஆலவாய் அண்ணல் கோயில் அங்கண்முன் தோன்றக் கண்டு
பாலரு வாயர் மிக்க பண்பினுல் தொழுது சென்று
மாலுங்நான் முகனும் போற்ற மன்னினுர் கோயில் வாயில்
சீலமா தவத்தோர் முன்பு சிவிகைகின் றிழிந்து புக்கார். அசுஉ

தென்னவன் தானும் எங்கள் செம்பியன் மகளார் தாமும்
நன்னெறி அமைச்ச ருரும் ஞானசம் பந்தர் செய்ய
பொன்னடிக் கமலம் போற்றி உடன்புகப் புனிதர் கோயில்
தன்னைமுன் வலங்கொண் டுள்ளால் சண்பையர் தலைவர் புக்கார்.

கைகளுந் தலைமீ தேறக் கண்ணில்ஆ னந்த வெள்ளம்
மெய்யெலாம் பொழிய வேத முதல்வரைப் பணிந்து போற்றி
"ஐயனே அடிய னேனை அஞ்சலென் றருள வல்ல
மெய்யனே" என்று "வீட லாலவாய்" விளம்ப லுற்றூர். அசுஎ

"ஒன்றுவே துணர்வும் இல்லேன் ஒழிவற நிறைந்த கோலம்
மன்றில்நான் மறைகள் ஏத்த மானுடர் உய்ய வேண்டி
நின்றுநீ ஆடல் செய்கை நினைப்பதே நியமம் ஆகும்"
என்றுபூம் புகலி மன்னர் இன்தமிழ்ப் பதிகம் பாட. அசுஏ

தென்னவன் பணிந்து நின்று "திருவால வாயில் மேவும்
மன்னனே! அமணர் தங்கள் மாய்கையால் மயங்கி யானும்
உன்னையான் அறிந்தி லேனை உறுபிணி தீர்த்தாட் கொள்ள
இன்னருட் பிள்ளை யாரைத் தந்தனை இறைவ!" என்றான். அசுஐ

சீருடைப் பிள்ளை யாரும் சிறப்புடை அடியா ரோடும்
காரினிற் பொலிந்த கண்டத் திறைவர்தாள் வணங்கிக் காதல்
ஆரருள் பெற்றுப் போற்றி அங்குநின் றரிது நீங்கி
ஏரியல் மடத்தில் உள்ளால் இனிதெழுந் தருளிப் புக்கார். அசுஅ

நீடுசீர்த் தென்னர் கோனும் நேரியன் பாவை யாரும்
மாடுசென் றிறைஞ்சி நோக்கி மாளிகை தன்னிற் போகக்
கூடிய மகிழ்ச்சி பொங்கக் கும்பிடும் விருப்பி னுலே
நாடிஅங் கிருந்து தங்கள் நாதரைப் பாட லுற்றூர். அசுக

உ. பா. பே. | வன்னஞ். 2 புகழ்ந்துமன் : புகழ்ந்தடி என். 3 மாயையால் 4 கினைத்த. 5 போந்தி.

திருவிய மகத்தின் உள்ளுந் திருநீல கண்டப் பாணர்க்
கருளிய திறமும் போற்றி அவரொடும் அளவ ளாவித்
தெருளுடைத் தொண்டர் சூழத் திருத்தொண்டின் உண்மை நோக்கி
இருள்கெட மண்ணில் வந்தார் இனிதமர்ந் திருந்தா ரன்றே. அஎ0

பூழியன் மதுரை யுள்ளார் புறத்துளார் அமணர் சேரும்
பாழியும் அருகர் மேவும் பள்ளியும் ஆன எல்லாம்
கிழுறப் பறித்துப் போக்கிக் கிளரொளித் தூய்மை செய்தே
வாழிஅப் பதிகள் எல்லாம் மங்கலம் பொலியச் செய்தார். அஎக

மீனவன் தேவி யாரும் குலச்சிறை யாரும் மிக்க
ஞானசம் பந்தர் பாதம் நாடொறும் பணிந்து போற்ற
ஆனசண் பையர்கோ னரும் ஆலவாய் அமர்ந்தார் பாதம்
ஊனமர்ந் துருக ஏத்தி/ உளங்களித் துறையும் நாளில். அஎஉ

வேறு

செய்தவத்தால் சிவபாத விருதயர்தாம் பெற்றெடுத்த
வைதிகசூ ளாமணியை மாதவத்தோர் பெருவாழ்வை
மைதிகழுந் திருமிடற்றர் அருள்பெற்ற வான்போரூ
எய்தியபூம் புகலியிலே இருந்தநாள் மிகநினைந்தார். அஎங

"ஆனபுகழ்த் திருஞாவுக் கரசர்பால் அவஞ்செய்த
மானமிலா அமணருடன் வாதுசெய்து வெல்வதற்கும்
மீனவன்தன் நாடுய்ய வெண்ணீறு பெருக்குதற்கும்
போனவர்பால் புகுந்தபடி அறிவன்"எனப் புறப்படுவார். அஎச

துடியிடையாள் தன்னோடுந் தோணியில்வீற் றிருந்தபிரான்
அடிவணங்கி அலர்சண்பை அதனின்றும் வழிக்கொண்டு
படியின்மிசை மிக்குளவாம் பரன்கோயில் பணிந்தேத்தி
வடிநெடுவேல் மீனவன்தன் வளநாடு வந்தணைந்தார். அஎஞ

மாமறையோர் வளம்பதிக ளிடைத்தங்கி வழிச்செல்வார்
தேமருவு நறும்பைந்தார்த் தென்னவன்தன் திருமதுரை
தாமணைந்து திருவால வாய்அமர்ந்த தனிநாதன்
பூமருவுஞ் சேவடிக்கீழ்ப் புக்கார்வத் தொடும்பணிந்தார். அஎசு

அங்கணரைப் பணிந்துபோந் தருகணைந்தார் தமைவினவ
"இங்கேம்மைக் கண்விடுத்த காழியார் இளவேறு
தங்குமிடந் திருநீற்றுத் தொண்டர்குழாஞ் சாருமிடம்
செங்கமலத் திருமடம்மற் றிது"என்றே தெரிந்துரைத்தார். அஎஎ

செப்புதலும் அதுகேட்டுத் திருமடத்தைச் சென்றெய்த
அப்பர்எழுந் தருளினார் எனக்கண்டோர் அடிவணங்கி

1.80./. உளங்களிந்.. இவைவதான்கு 3 எனக்கோட்டோடு

ஒப்பில்புகழ்ப் பிள்ளையார் தமக்கோகை உரைசெய்ய
"எப்பொழுது வந்தருளிற்" றென்றெதிரே எழுந்தருள. அஎஅ

சீவபாத விருதயர்தாம் முன்தொழுது சென்றணையத்
தவமான நெறியணையுந் தாதையார் எதிர்தொழுவார்
அவர்சார்வு கண்டருளித் திருத்தோணி அமர்ந்தருளிப்
பவபாசம் அறுத்தவர்தம் பாதங்கள் நினைவுற்றார். அஎக

இருந்தவத்தோர் அவர்முன்னே இணைமலர்க்கை குவித்தருளி
"அருந்தவத்தீர் எனையறியாப் பருவத்தே எடுத்தாண்ட
பெருந்தகைமம் பெருமாட்டி யுடனிருந்த தே"என்று
பொருந்துபுகழ்ப் புகலியின்மேல் திருப்பதிகம் போற்றிசைத்தார்.

"மண்ணினல்ல" என்றெடுத்து மனத்தெழுந்த பெருமகிழ்ச்சி
உண்ணிறைந்த காதலினுல் கண்ணருவி பாய்ந்தொழுக
அண்ணலார் தமைவினவித் திருப்பதிகம் அருள்செய்தார்
தண்ணறும்பூஞ் செங்கமலத் தாரணிந்த தமிழ்விரகர். அஅக

திருப்பதிகந் திருக்கடைக்காப் புச்சாத்திச் சிறப்பின்மிகு
விருப்பினுல் அவர்தமக்கு விருந்தளித்து மேவுநாள்
அருப்புறுமெய்க் காதல்புரி அடியவர்கள் தம்மோடும்
பொருப்புறுகைச் சிலையார்சேர் பதிபிறவும் தொழப்போவார். அஅஉ

ஆலின்கீழ் நால்வர்க்கன் றறமுரைத்த அங்கணனை
நூலின்கட் பொருள்பாடி நூலறிவார்க் கிந்தாணைக்
காலம்பெற் றினிதிறைஞ்சிக் கைதொழுது புறம்போந்தார்
சீலங்கொள் தென்னவனும் தேவியரும் உடன்போத. அஅங

வேறு

தேன்கிலவு பொழில்மதுரைப் புறத்துப் போந்த தென்னவனுர் தேவியார் அமைச்சர் சிந்தை, ஊன்நெகிழும் படிஅழிந்தங் கொழுகு கண்ணீர் பாய்ந்திழிய உணர்வின்றி வீழக் கண்டே, "யானும்மைப் பிரியாத வண்ணம் இந்நாட் டிறைவர்பதி எனைப்பலவும் பணிவீர்" என்று, ஞானமுணர் வார்அருள அவரும் போத நம்பர்திருப் பரங்குன்றை நண்ணி னரே. அஅச

ஆறணிந்தார் தமைவணங்கி அங்குப் போற்றி அணிஆப்ப னூர ணைந்து பணிந்து பாடி, நீறணிந்த செல்வர்பதி பிறவுஞ் சேர்ந்து நிலவு திருப் பதிகங்கள் நிகழப் பாடிச், சேறணிந்த வயற்பழனக் கழனி சூழ்ந்த சிரபுரத்து வந்தருளுஞ் செல்வர் செங்கண், ஏறணிந்த வெல் கொடியார் திருப்புத் தூரை எய்தி இறைஞ் சிச்சிலநாள் இருந்தா ரன்றே. அஅடு

2789 பற்றார்தம் புரங்கள்மலைச் சிலையால் செற்ற பரமனார் திருப்புத்தூர் பணிந்து போந்து, புற்றரும் பணிபூண்ட புனிதனார்தம் பூவணத்தைப் புக்கிறைஞ்சிப் புகழ்ந்து பாடிக், கற்றார்கள் தொழுதேத்துங் கானப் பேரும் கைதொழுது தமிழ்பாடிச் சுழியல் போற்றிக், குற்றாலங் குறும்பலாக் கும்பிட் டேத்திக் கூற்றுதைத்தார் நெல்வேலி குறுகினாரே. அஅசு

2790 புண்ணியனார் நெல்வேலி பணிந்து போற்றிப் புரிசடையார் திருப்பதிகள் பிறவும் சென்று, நண்ணிஇனி தமர்ந்தங்கு நயந்து பாடி நற்றொண்ட ருடன்நாளும் போற்றிச் செல்வார், விண்ணவரைச் செற்றுகந்தான் இலங்கை செற்ற மிக்கபெரும் பாதகத்தை நீக்க வேண்டித், திண்ணியபொற் சிலைத்தடக்கை இராமன் செய்த திருவிரா மேச்சரத்தைச் சென்று சேர்ந்தார். அஅள

2791 செங்கண்மால் வழிபட்ட கோயில் நண்ணித் திருமுன்பு தாழ்ந்தெழுந்து தென்னனேடும், மங்கையர்க்கு நாயகியார் தாமும் மெய்ம்மை மந்திரியா ரும்சூழ மணிநீள் வாயில், பொங்கிளமும் விருப்பினுல் உடனே புக்குப் புடைவலங்கொண் டுள்ளணைவார் போற்றி செய்து, பங்கயச்செங் கைகுவித்துப் பணிந்து நின்று பாடினார் மன்னவனும் பரவி ஏத்த. அஅஅ

2792 சேதுவின்கட் செங்கண்மால் பூசை செய்த சிவபெருமான் தனைப் பாடிப் பணிந்து போந்து, காதலுடன் அந்நகரில் இனிது மேவிக் கண்ணுதலான் திருத்தொண்ட ரானூர்க் கெல்லாம், கோதில்புகழ்ப் பாண்டிமா தேவி யார்மெய்க் குலச்சிறையார் குறைவறுத்துப் போற்றிச் செல்ல, நாதர்தமை நாடோறும் வணங்கி ஏத்தி நளிர்வேலைக் கரையில்நயந் திருந்தா ரன்றே. அஅக

2793 அந்நகரில் அமர்ந்தங்கண் இனிது மேவி ஆழிபுடை சூழ்ந்தெழுதரிக்கும் ஈழந் தன்னில், மன்னுதிருக் கோணமலை மகிழ்ந்த செங்கண் மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப் பாடிச், சென்னிமதி புனைமாட மாதோட் டத்தில் திருக்கேதீச் சரத்தண்ணல் செய்ய பாதம், உன்னிமிகப் பணிந்தேத்தி அன்ப ரோடும் உலவாத கிழிபெற்றார் உவகை யுற்றார். அகO

2794 அப்பதியைத் தொழுதுவட திசைமேற் செல்வார் அங்கைஅனல் தரித்தபிரான் அமருங் கோயில், புக்கிறைஞ்சிப் பலபதியுந் தொழுது போற்றிப் புணரிபொரு தலைகரைவாய் ஒழியப் போந்தே, செப்பரிய புகழ்த்திருவா டானை சேர்ந்து செந்தமிழ்மா லைகள்சாத்திச் சிவனார் மன்னும், ஒப்பரிய புனவாயில் போற்றி செய்து வணங்கினார் உலகுய்ய ஞானம் உண்டார். அகக

பதிநிலவு பாண்டிநா டதனில் முக்கட் பரமனூர் மகிழ்விடங்கள் பலவும் போற்றி, விதிநிலவு வேதநூல் நெறியே ஆக்கி வெண்ணீற்றின் சார்வினுல் மிக்கு யர்ந்த, கதியருளிக் காழிநகர் வாழ வந்தார் கண்ணு தலான் திருத்தொண்டர் பலருஞ் சூழ, மதிநிலவு குலவேந்தன் போற்றிச் செல்ல மந்திரியார் பதிமணமேற் குடியில் வந்தார். அகூஉ

அங்ஙகரில் இனிதமர்வார் அருகு சூழ்ந்த பதிகளில்நீ(டு) அங்கணர் தங் கோயில் தாழ்ந்து, மன்னுதிருத் தொண்டருடன் மீண்டு சேர்ந்து மன்னவனும் மங்கையருக் கரசி யாரும், கொன்னவில்வேற் குலச் சிறையார் தாமும் கூடிக் குரைகழல்கள் பணிந்துகுறை கொண்டு போற்றச், சென்னிவளர் மதியணிந்தார் பாதம் போற்றிச் சிரபுரத் துச் செல்வர்இனி திருந்த நாளில். அகூங

போங்குபுனற் காவிரிநா டதனின் மீண்டு போதுதற்குத் திரு உள்ள மாகப் போற்றும், மங்கையருக் கரசியார் தாமும் தென்னர் மன்னவனும் மந்திரியார் தாமும் கூட, அங்கவர்தந் திருப்பாதம் பிரிய லாற்ற துடன்போக ஒருப்படும்அவ் வளவு நோக்கி, "இங்குநான் மொழிந்ததனுக் கிசைந்தீ ராகில் ஈசர்சிவ நெறிபோற்றி இருப்பீர்" என்று. அகூச

சாலமிகத் தளர்வாரைத் தளரா வண்ணம் தகுவனமற் றவர்க் கருளிச் செய்த பின்பு, மேலவர்தம் பணிமறுக்க அவரும் அஞ்சி மீள்வதனுக் கிசைந்துதிரு வடியில் வீழ்ந்து, ஞாலமுய்ய வந்தருளும் பிள்ளே யாரைப் பிரியாத நீண்பிணெடுந் தொழுது நின்றூர், ஆலவிடம் உண்டவரை அடிகள் போற்ற அந்நாட்டை அகன்றுமீண் டணையச் செல்வார். அகூரி

போன்னிவளந் தருநாடு புகுந்து மிக்க பொருவில்சீர்த் திருத் தொண்டர் குழாத்தி னேடும், பன்னகப்பூண் அணிந்தவர்தங் கோயில் தோறும் பத்தருடன் பதியுள்ளோர் போற்றச் சென்று, கன்னிமதில் திருக்களரும் போற்றிக் கண்டங் கறையணிந்தார் பாதாளீச் சரமும் பாடி, முன்னணைந்த பதிபிறவும் பணிந்து போற்றி முள்ளிவாய்க் கரையணைந்தார் முந்நூல் மார்பர். அகூசு

மலைவளர்சந் தனமகிலும் தேக்கும் உந்தி மலர்ப்பிறங்கல் வண்டி சைப்பச் சுமந்து பொங்கி, அலைபெருகி ஆள்இயங்கா வண்ணம் ஆறு பெருகுதலால் அத்துறையில் அணையும் ஓடம், நிலைபுரியும் ஓடக்கோல் நிலையி லாமை நீர்வாழ்நர் கரையின்கண் நிறுத்திப் போகக், கலைபயிலுங் கவுணியர்கோன் அதனைக் கண்(டு)அக் கரையின்கண் எழுந்தருளி நின்ற காலை. அகூள

தேவர்பிரான் அமர்ந்ததிருக் கொள்ளம் பூதூர் எதிர்தோன்றத் திருவுள்ளம் பணியச் சென்று, மேவுதலால் ஓடங்கள் விடுவார் இன்றி

ஒழிந்திடவும் மிக்கதோர் விரைவால் சண்பைக், காவலனூர் ஓடத்தின் கட்ட விழ்த்துக் கண்ணுதலான் திருத்தொண்டர் தம்மை ஏற்றி, நாவலமே கோலாக அதன்மேல் நின்று நம்பர்தமைக் ''கொட்டம்'' அகூஅ என நவின்று பாட.

உம்பருய்ய நஞ்சுண்டார் அருளால் ஓடம் செலச்செல்ல உந்து தலால் ஊடு சென்று, செம்பொன்நேர் சடையார்தங் கொள்ளம் பூதூர் தனைச்சேர அக்கரையில் சேர்ந்த பின்பு, நம்பரவர் தமைவணங்க ஞானம் உண்ட பிள்ளையார் நற்றிருண்ட ருடனி ழிந்து, வம்பலரு நறுங்கொன்றை நயந்தார் கோயில் வாயிலின்முன் மகிழ்ச்சியொடு வந்து சார்ந்தார். அகூக

நீணிலக்கோ புரமதனை இறைஞ்சிப் புக்கு நிகரிலாத் தொண்ட ருடன் நெருங்கச் சென்று, வாணிலவு கோயிலினை வலங்கொண் டெய்தி மதிச்சடையார் திருமுன்பு வணங்கி நின்று, ''தாணுவே! ஆற் றின்கண் ஓடம் உய்க்குந் தன்மையால் அருள்தந்த தலிவா! நாகப், பூணினுய்! களிற்றுரிவை போர்த்த முக்கட் புனிதனே!'' எனப் பணிந்து போற்றி செய்தார். கூ00

போற்றிசைத்துப் புறம்போந்தங் குறையும் நாளில் பூழியன்முன் புன்சமயத் தமணர் தம்மோ, டேற்றபெரு வாதின்கண் எரியின் வேவாப் பதிகமுடை இறையவரை இறைஞ்ச வேண்டி, ஆற்றவும்அங் கருள்பெற்றுப் போந்து முன்னம் அணைந்தபதி களும்இறைஞ்சி அன் பர் சூழ, நாற்றிசையும் பரவுதிரு நள்ளாற் றெய்தி நாடுடைநா யகர் கோயில் நண்ணி னரே. கூ0க

நீடுதிருத் தொண்டர்புடை சூழ அங்கண் நித்திலயா னத்திடை கின் றிழிந்து சென்று, பீடுடைய திருவாயில் பணிந்து புக்குப் பிறை யணிந்த சென்னியார் மன்னுங் கோயில், மாடுவலங் கொண்டுள்ளால் மகிழ்ந்து புக்கு மலர்க்கரங்கள் குவித்திறைஞ்சி வள்ள லாரைப் ''பாடகமெல் லடி''எடுத்துப் பாடி நின்று பரவினர் கண்ணருவி பரந்து பாய. கூ0உ

''தென்னவர்கோன் முன்னமணர் செய்த வாதில் தீயின்கண் இடும்வடு பச்சை யாக்கி, என்னுள்ளத் துணையார்கி ஆல வாயில் அமர்ந் திருந்த வாறென்கொல் எந்தாய்'' என்று, பன்னுதமிழ்த் தொடை சாத்திப் பரவிப் போந்து பண்பினிய தொண்டருடன் அங்கு வைகி, மன்னுபுகழ்ப் பதிபிறவும் வணங்கச் சண்பை வள்ளலார் நள்ளாறு வணங்கிச் செல்வார். கூ0ங

சீர்நிலவு திருத்தெளிச்சே ரியினைச் சேர்ந்து சிவபெருமான் தனைப்பரவிச் செல்லும் போது, சார்வறியாச் சாக்கியர்தம் போதி மங்கை சார்தலும்மற் றதுஅறிந்த சைவர் எல்லாம், ஆர்கலியின் கிளர்ச்

சினைச் சங்கு தாரை அளவிறந்த பல்லியங்கள் முழக்கி ஆர்த்துப், பார்குலவு தனிக்காளஞ் சின்னம் எல்லாம் " பரசமய கோளரிவந் தான் "என் றூத. கூ0ச

புல்லறிவிற் சாக்கியர்கள் அறிந்தார் கூடிப் புகலியர்தம் புரவல னூர் புகுந்து தங்கள், எல்லையினில் எழுந்தருளும் பொழுது தொண்டர் எடுத்தஆர்ப் பொலியாலும் எதிர்முன் சென்று, மல்கிளமுந் திருச் சின்ன ஒலிக ளாலும் மனங்கொண்ட பொருமையினால் மருண்டு தங் கள், கல்வியினில் மேம்பட்ட புத்த நந்தி முதலான தேரர்க்குங் கனன்று சொன்னர். கூ0ரி

மற்றவர்கள் வெவ்வுரையும் பிள்ளை யார்முன் வருசின்னப் பெரு கொலியும் மன்னுந் தொண்டர், பொற்புடைய ஆர்ப்பொலியுஞ் செவியி னூடு புடைத்தநா ராசம்எனப் புக்க போது, செற்றமிகும் உள்ளத் துப் புத்த நந்தி செயிர்த்தெழுந்து தேரர்குழாஞ் சூழச் சென்று, " வெற்றிபுனை சின்னங்கள் வாதில் எம்மை வென்றன்றே பிடிப்ப " தென வெகுண்டு சொன்னன். கூ0சு

புத்தரினம் புடைசூழப் புத்த நந்தி பொருவில்ஞா னப்புனிதர் திருமுன் பூதும், மெய்த்தவிறற் சின்னங்கள் விலக்குங் காலை வெகுண் டெழுந்த திருத்தொண்டர் வெறுத்து நோக்கி, "இத்தகைய செயற்கி வரைத் தடிதல்செய்யா திதுபொறுக்கில் தங்கள்நிலை ஏற்பர்" என்று, மூத்துநிரைச் சிவிகையின்மேல் மணியை வந்து முறைபணிந்து புகுந்த படி மொழிந்து நின்றார். கூ0எ

"வருமிடத்தில் அழகிதாம் நமக்கு வாதில் மற்றிவர்தம் பொருள் நிலைமை மறுத வண்ணம், பொருமிடத்தில் அறிகின்றோம் புத்த நந்தி போய்ம்மேற்கோள்" எனப்புகலி வேந்தர் கூற, அருமுறைசொற் றிருப்பதிகம் எழுதும் அன்பர் ஆளுடைய பிள்ளையார் திருவாக் காலே, "உரும்இடித்து விழப்புத்தன் உத்த மாங்கம் உருண்டுவீழ் கெ"னப்பொரு உரைமுன் விட்டார். கூ0அ

ஏறுயர்த்தார் சைவநெறி ஆணை உய்க்க எதிர்விலக்கும் இடை யூற்றை எறிந்து நீக்கும், மாறில்வலி மந்திரமாம் அசனி போல வாய்மைஉரைத் திருத்தொண்டர் வாக்கி னாலே, வேறுமொழிப் போரேற்பான் வந்த புத்தன் மேனியையும் தலையினையும் வெவ்வே றுகக், கூறுபட நூறியிடப் புத்தர் கூட்டங் குலைந்தோடி விழுந்து வெருக் கொண்ட தன்றே. கூ0கூ

மற்றவர்கள் நிலைமையையும் புத்த நந்தி வாக்கின்போ ரேற்ற வன்தன் தலையும் மெய்யும், அற்றுவிழ அத்திரவாக் கதனால் அன்பர் அறுத்ததுவும் கண்டஅரன் அடியார் எல்லாம், வெற்றிதரும் பிள்ளை யார் தமக்குச் சென்று விண்ணப்பஞ் செய"எதிர்ந்த விலக்கு நீங்க,

மாறில்வலி = வாயிலை யுணர்.

உற்றவிதி | அதுவேயாம் அரஎன் றெல்லாம் ஓது''கென அவ்வொலி வான் உற்ற தன்றே. கூகo

அஞ்சிஅகன் றோடியஅப் புத்த ரெல்லாம் அதிசயித்து மீண்டும் உடன் அணைந்து கூடி, ''வஞ்சனையோ இதுதான்மற் றவர்தஞ் சைவ வாய்மையோ'' என்மருண்டு மனத்திற் கொள்வார், ''எஞ்சலின்மந் திரவாதம் அன்றி எம்மோ டெதிர்ந்து பொருள் பேசுவதற் கிசைவ'' தென்று, தஞ்செயலின் மிக்குள்ள சாரி புத்தன் தன்னையே முன் கொண்டு பின்னுஞ் சார்ந்தார். கூகக

அத்தன்மை கேட்டருளிச் சண்பை வந்த அடலேறு திருவுள்ளத் ''தழகி'' தென்று, மெத்தமகிழ்ச் சியிலேடும் விரைந்து சென்று வெண் தரளச் சிவிகையின்நின் றிழிந்து வேறூர், சத்திரமண் டபத்தின் மிசை ஏறி நீடு சைவருடன் எழுந்தருளி இருந்து ''சாரும், புத்தர் களை அழைக்க''எனத் திருமுன் நின்றூர் புகலிகா வலர்வல் போற் றிச் சென்றூர். கூகஉ

சென்றவர்கள் தேர்குழாம் அணைந்து ''நீங்கள் செப்பிவரும் பொருள்நிலைமை தெரிக்க எங்கள், வென்றிமழ இளங்களிறு சண்பை யாளி வேதபாரகன் மும்மைத் தமிழின் வேந்தன், நன்றுமகிழ்ந் தழைக்கின்றூன் ஈண்ட நீரும் நண்ணும்''எனக் கூறுதலும் நன்மை சாராத், தன்றகைமைப் புத்தருடன் சாரி புத்தன் சத்திரமண் டப முன்பு சார வந்தான். கூகங

அங்கணைந்து மண்டபத்துப் புத்த ரோடும் பிள்ளையார் அரு கணைய நின்ற போதில், எங்குநிகழ் திருச்சின்னந் தடுத்த புத்தன் இருஞ்சிரத்தைப் பொடியாக்கும் எதிரில் அன்பர், பொங்குபுகழ்ப் புகலிகா வலர்தம் பாதம் போற்றிஅரு ளாற்சாரி புத்தன் தன்னை, ''உங்கள்தலை வனும்பொருளும் உரைக்க'' என்ன உற்றவா தினைமேற் கொண் டுரைசெய் கின்றூன். கூகச

''கற்பங்கள் அனேத்தினிலும் பிறந்து வீந்து கதிமாறுங் கணபங்க இயல்பு தன்னில், பொற்புடைய தானமே தவமே தன்மை புரிந்தநிலை யோகமே பொருந்தச் செய்ய, உற்பவிக்கும் ஒழிவின்றி உரைத்த ஞானத் தொழியாத பேரின்ப முத்தி பெற்றூன், பற்பலரும் பிழைத் துய்ய அறமுன் சொன்ன பான்மையான் யாங்கள் தொழும் பரமன்'' என்றூன். கூகஙு

என்றுரைத்த சாரிபுத்தன் எதிர்வந் தேற்ற இருந்தவத்துப் பெருந்தன்மை அன்பர் தாமும், ''நன்றுமது தலைவன்தான் பெற்றூன் என்று நாட்டுகின்ற முத்திதான் யாவ'' தென்றூர், ''நின்றவுரு வேத னையே குறிப்புச் செய்கை நேர்நின்ற ஞானமென நிகழ்ந்த ஐந்தும், ஒன்றியகந் தத்தவிவே முத்தி'' என்ன உரைசெய்தான் பிடகத்தின் உணர்வு மிக்கான். கூகசு

பா.வே.|. இதுவேயாம் · இ. வேதபாரகன் · ஈ. நண்ணும்

ஆங்கவன்தான் உரைத்தமொழி கேட்ட அன்பர் அதனைஅனு
வாதஞ்செய் தவனை நோக்கித், "தாங்கியஞா னத்துடனுங் கந்தம் ஐந்
தும் தாம்வீந்து கெட்டனவேல் தலைவன் தானும், ஈங்குளன்"என்
றவனுக்கு விடய மாக யாவையும்முன் இயற்றுதற்கு விகார மேசெய்,
தோங்குவடி வமைத்துவிழ வெடுக்கும் பூசை கொள்வார்ஆர்? உரைக்க"
என உரைக்க லுற்றான். கூகள

2824 "கந்தமாம் வினையுடம்பு நீங்கி எங்கோன் கலந்துளன்முத் தியில்
என்றான்" என்னக் "காணும், இந்திரியங் கண்முதலாங் காரணந் தானும்
இல்லையேல் அவன்உணர்ச்சி இல்லை" என்றார், "முந்தையறி வினுகி
உறங்கி னானை நிந்தித்து மொழிந்துடல்மீ தாடி னார்க்கு, வந்தவினைப்
பயன்போல வழிபட் டார்க்கும் வருமன்றே நன்மை"என மறுத்துச்
சொன்னான். கூகஅ

2825 சொன்னஉரை கேட்டருளி அன்பர் தாமும் "தொடர்ந்தவழி பாடு
பல கொள்கின் றானுக், கன்னவற்றின் உடன்பாடும் எதிர்வும் இல்லை
யானபோ தவன்பெறுதல் இல்லை" என்றார், "முன்னவற்றில் உடன்
பாடும் எதிர்வும் இன்றி முறுகுதுயில் உற்றானை முனிந்து கொன்றால்,
இன்னுயிர்போய்க் கொலையாகி முடிந்த தன்றே இப்படியால் எம்மிறை
வற் கெய்தும்" என்றான். கூகக

2826 "இப்படியால் எய்தும்"என இசைத்து "நீஇங் கெடுத்தக்காட்
டியதுபிலும் இயல்பி னன்போல், மெய்ப்படிய காரணங்கள் உயிர்தாம்
இங்கு வேண்டுதியால் நும்இறைவற் கான போது, செப்பியஅக் கந்
தத்தின் விளைவின் முகித் திரிவில்லா முத்தியிற்சென் றிலனும்
ஆனன், அப்படிஅக் கந்தத்துள் அறிவுங் கெட்டால் அம்முத்தி யுடன்
இன்பம் அணையா" தென்றார். கூஉO

2827 அவ்வுரைகேட் டெதிர்மாற்றம் அறைவ தின்றி "அணைந்துளன்
அம் முத்தியெனும் அதுவும் பாழாம்", கவ்வையில்நின் றவனைஎதிர்
நோக்கி ஞானக் கடலமுதம்! அனையவர்தங் காதல் அன்பர், "பொய்
வகையே முத்தியினிற் போனான் முன்பே பொருளெல்லாம் உணர்ந்
துரைத்துப் போனான் என்றாய், எவ்வகையால் அவன்எல்லாம்
உணர்ந்த தீதும் இல்லதுரைப் பாய்எனினும் ஏற்போம்" என்றார்.

2828 "உணர்வுபொதுச் சிறப்பென்ன இரண்டின் முன்ன துளவான
மரப்பொதுமை உணர்த்தல் ஏனைப், புணர்சிறப்பு மரங்களில்வைத்
தின்ன தென்றல் இப்படியால் வரம்பில்லாப் பொருள்கள் எல்லாம்,
கொணரும்விற கினைக்குவைசெய் திடினும் வேறு குறைத்தவற்றைத்
தனித்தனியே இடினும் வெந்தீத், துணர்கதுவிச் சுடவல்ல வாறு
போலத் தொகுத்தும்விரித் துந்தெரிக்குந் தொல்லோன்" என்றான்.

பா.இ.ப.1.உண்டாவத்தாட்

எடுத்துரைத்த புத்தன்எதிர் இயம்பும் அன்பர் "எரியுணர்வுக் கெடுத்துக்காட்டாகச் சொன்னுய், அடுத்தவுணர் வுருவுடைய தன்று சொன்ன அனல்வடிவிற் றும்அதுவும் அறிதி நுங்கோன், தொடுத்த நிகழ் காலமே அன்றி ஏனைத் தொடர்ந்தஇரு காலமுந்தொக் கறியு மாகில், கடுத்தளரி நிகழ்காலத் திட்ட தல்லால் காணுத காலத்துக் கதுவா" தென்றூர். கூஉங

ஆதலினுல் உன்னிறைவன் பொருள்கள் எல்லாம் அறிந்ததுநும் மூத்திபோல் ஆயிற் றன்றே, ஏதமாம் இவ்வறிவால் உரைத்த நூலும் என்றவனுக் கேற்குமா றருளிச் செய்ய, வாதமா றென்றின்றித் தோற்றுன் புத்தன் மற்றவனே வென்றருளிப் புகலி மன்னர், பாததா மரைபணிந்தார் அன்பர் தங்கள் பான்மையழி புத்தர்களும் பணிந்து வீழ்ந்தார். கூஉச

புந்தியினுல் அவருரைத்த பொருளின் தன்மை பொருளன்றும் படிஅன்பர் பொருந்தக் கூற, மந்தவுணர் வுடையவரை நோக்கிச் "சைவம் அல்லாது மற்றென்றும் இல்லே" என்றே, அந்தமில்சீர் மறைகள்ஆ கமங்கள் ஏனை அகிலகலேப் பொருளுணர்ந்தார் அருளிச் செய்யச், சிந்தையினில் அதுதெளிந்து புத்தர் சண்பைத் திருமறை யோர் சேவடிக்கீழ்ச் சென்று தாழ்ந்தார். கூஉஞ

அன்றவர்க்குக் கவுணியர்கோன் கருணை நோக்கம் அணைதலினுல் அறிவின்மை அகன்று நீங்கி, முன்தொழுது விழுந்தெழுந்து சைவ ரானூர் முகைமலர்மா ரியின்வெள்ளம் பொழிந்த தெங்கும், நின்றன வும் சரிப்பனவும் சைவமேயாம் நிலைமையவர்க் கருள்செய்து சண்பை வேந்தர், சென்றுசிவ னுர்பதிகள் பணிய வேண்டித் திருக்கடவூ ரதன் மருங்கு சேர வந்தார். கூஉசு

வேறு

அந்நகரில் அடியார்கள் எதிர்கொள்ளப் புக்கருளிக்
கொன்னவிலுங் கூற்றுதைத்தார் குரைகழல்கள் பணிந்தேத்தி
மன்னிஅமர்ந் துறையுநாள் "வாகீச மாமுனிவர்
எந்நகரில் எழுந்தருளிற்" றென்றடியார் தமைவினவ. கூஉள

அங்கவரும் அடிபோற்றி ஆண்டஅர செழுந்தருள்இப்
பொங்குபுனற் பூந்துருத்தி நகரின்கண் போற்றிசைத்துத்
தங்குதிருத் தொண்டுசெயும் மகிழ்ச்சியினுல் சார்ந்தருளி
எங்குநிகழ்ந் திடஇருந்த படிஎல்லாம் இயம்பினுர். கூஉஅ

அப்பரிசங் கவர்மொழிய ஆண்டஅர சினைக்காணும்
ஒப்பரிய பெருவிருப்பு மிக்கோங்க ஒளிபெருகு
மைப்பொருவு கறைக்கண்டர் கழல்வணங்கி அருள்பெற்றுச்
செப்பரிய புகழ்ப்புகலிப் பிள்ளேயார் செல்கின்றூர். கூஉகூ

பூவிரியுந் தடஞ்சோலை புடைபரப்பப் புனல்பரக்கும்
காவிரியின் தென்கரைபோய்க் கண்ணுதலார் மகிழ்ந்தஇடம்
மேவிஇனி தமர்ந்திறைஞ்சி விருப்புறுமெய்த் தொண்டொடு
நாவரச ருழைச்சண்பை நகரரசர் நண்ணுவார். ந.சை

அந்தணர்சூ ளாமணியார் பூந்துருத்திக் கணித்தாக
வந்தருளும் பெருவார்த்தை வாகீசர் கேட்டருளி
"நந்தமையா ளுடையவரை நாமெதிர்சென் றிறைஞ்சுவது
முந்தைவினைப் பயன்"என்று முகமலர அகமலர்வார். ந.சை

"எதிர்சென்று பணிவன் "என எழுகின்ற பெருவிருப்பால்
நதிதங்கு சடைமுடியார் நற்பதங்கள் தொழுதந்தப்
பதிநின்றும் புறப்பட்டுப் பரசமயஞ் சிதைத்தவர்பால்
முதிர்கின்ற பெருந்தவத்தோர் முன்னெய்த வந்தணைந்தார். ந.சை

திருச்சின்னம் பணிமாறக் கேட்டநாற் றிசையுள்ளோர்
பெருக்கின்ற ஆர்வத்தால் பிள்ளையார் தமைச்சூழ்ந்த
நெருக்கினிடை யவர்காணு வகைநிலத்துப் பணிந்துள்ளம்
உருக்கிஎழும் மனம்பொங்கத் தொண்டர்குழாத் துடன்அணைந்தார். ந.சை

வந்தணைந்த வாகீசர் வண்புகலி வாழ்வேந்தர்
சந்தமணிச் சிவிகையினைத் தாங்குவார் உடன்தாங்கிச்
சிந்தைகளிப் புறவந்தார் திருஞான சம்பந்தர்
பந்தியினில் வேறொன்று நிகழ்ந்திடமுன் புகல்கின்றார். ந.சை

"அப்பர்தாம் எங்குற்றார் இப்பொழு(து)?"என் றருள்செய்யச்
செப்பரிய புகழ்த்திருநா வுக்கரசர் செப்புவார்
"ஒப்பரிய தவஞ்செய்தென் னுதலினுல் உம்மடிகள்
இப்பொழுது தாங்கிவரப் பெற்றுய்ந்தேன் யான்"என்றார். ந.சை

அவ்வார்த்தை கேட்டஞ்சி அவனியின்மேல் இழிந்தருளி
"இவ்வாறு செய்தருளிற் றென்னும்"என் றிறைஞ்சுதலும்
செவ்வாறு மொழிநாவர் "திருஞான சம்பந்தர்க்
கெவ்வாறு செயத்தகுவ" தென்றெதிரே இறைஞ்சினார். ந.சை

சூழ்ந்துமிடைந் தருகணையும் தொண்டரெல்லாம் அதுகண்டு
தாழ்ந்துநிலம் உறவணங்கி எழுந்ததலை கைகுவித்து
வாழ்ந்துமனக் களிப்பினராய் "மற்றிவரை வணங்கப்பெற்
றாழ்ந்தபிறப் புய்ந்தோம்"என் றண்டமெலாம் உறஆர்த்தார். ந.சை

திருஞான சம்பந்தர் திருநாவுக் கரசர்தமைப்
பெருகார்வத் தொடும்அணைந்து தழீஇக்கொள்ளப் பிள்ளையார்
பருவரால் மலரடிகள் வணங்கியுடன் வந்தணைந்தார்
பொருவாரும் புனற்சடையார் மகிழ்ந்ததிருப் பூந்துருத்தி. ந.சை

பா.வ.1 ஆதலினுல்லை வரையுள்ளும் ஆ அலைதுஞ்சுதலும்.
3 எழுந்தரு.

அன்பர்குழாத் தொடுஞ்செல்வார் ஆனேற்றூர் மகிழ்கோயில்
முன்பணித்தா கச்சென்று கோபுரத்தை முன்னிறைஞ்சித்
துன்பமிலாத் திருத்தொண்ட ருடன்தொழுது புக்கருளி
என்புருக வலங்கொண்டு பணிந்தேத்தி இறைஞ்சினார். கூஈக

போய்யிலியா ரைப்பணிந்து போற்றியே புறத்தணைவார்
செய்யசடை யார்கோயில் திருவாயில் முன்னுக
மையறுசீர்த் தொண்டர்குழாம் வந்துபுடை சூழஉல
குய்யவரு வார்தங்க ளுடன்மகிழ்ந்தங் கினிதிருந்தார். கூசO

வேறு

வாக்கின் தனிமன்னர் வண்புகலி வேந்தர்தமைப்
போக்கும் வரவும் வினவப் புகுந்ததெல்லாந்
தூக்கின் தமிழ்விரகர் சொல்லிறந்த ஞானமறை
தேக்குந் திருவாயால் செப்பி அருள்செய்தார். கூசக

காழியினில் வந்த கவுணியர்தம் போரேற்றை
ஆழிமிசைக் கல்மிதப்பில் வந்தார் அடிவணங்கி
"வாழிதிருத் தொண்டென்னும் வான்பயிர்தான் ஓங்குதற்குச்
சூழும் பெருவேலி யானீர்" எனத்தொழுதார். கூசஉ

பிள்ளையார் தாமுமவர் முன்தொழுது பேரன்பின்
வெள்ள மனையபுகழ் மானியார் மேன்மையையும்
கொள்ளும் பெருமைக் குலச்சிறையார் தொண்டினையும்
உள்ள பரிசெல்லாம் மொழிந்தங்(கு) உவந்திருந்தார். கூசஙூ

தென்னற் குயிரோடு நீறளித்துச் செங்கமலத்
தன்னம் அனையார்க்கும் அமைச்சர்க்கும் அன்பருளித்
துன்னுநெறி வைதிகத்தின் தூநெறியே ஆக்குதலால்
மன்னுபுகழ் வாகீசர் கேட்டு மனம்மகிழ்ந்தார். கூசச

சோல்வின் பெருவேந்தர் தொண்டைவள நாடெய்தி
மல்கு புகழ்க்காஞ்சி ஏகாம் பரம்மன்னும்
செல்வர் கழல்பணிந்து சென்றதெல்லாஞ் செப்புதலும்
புல்குநூல் மார்பரும்போய்ப் போற்ற மனம்புரிந்தார். கூசரு

அங்கணரைப் போற்றிஎழுந் தாண்ட அரசமர்ந்த
பொங்கு திருமடத்தில் புக்கங் கினிதமர்ந்து
திங்கட்பகவணியும் சென்னியார் சேவடிக்கீழ்த்
தங்கு மனத்தோடு தாம்பரவிச் செல்லுநாள்.

வாகீச மாமுனிவர் மன்னுதிரு வாலவாய்
நாகம் அரைக்கசைத்த நம்பர் கழல்வணங்கப்

பா.பே. 1. போற்றித்திறம் புரிந்தார். 2. கோயிலும் தணியும்.

போகும் பெருவிருப்புப் பொங்கப் புகலியின்மேல்
ஏகும் பெருங்காதல் பிள்ளையார் ஏற்றெழுவார். கூசஎ

பூந்துருத்தி மேவும் புனிதர்தமைப் புக்கிறைஞ்சிப்
போந்து திருவாயில் புறத்தணைந்து நாவினுக்கு
வேந்தர் திருவுள்ளம் மேவவிடை கொண்டருளி
ஏந்தலார் எண்ணிறந்த தொண்டருடன் ஏகினார். கூசஅ

மாடுபுனற் பொன்னி இழிந்து வடகரையில்
நீடுதிரு நெய்த்தானம் ஐயாறு சேர்ந்திறைஞ்சிப்
பாடுதமிழ் மாலைகளுஞ் சாத்திப் பரவிப்போய்
ஆடல் புரிந்தார் திருப்பழனஞ் சென்றணைந்தார். கூசக

செங்கண் விடையார் திருப்பழனஞ் சேர்ந்திறைஞ்சிப்
பொங்கிய காதலின்முன் போற்றும் பதிபிறவும்
தங்கிப்போய்ச் சண்பைநகர் சார்ந்தார் தனிப்பொருப்பின்
மங்கை திருமுலைப்பால் உண்டருளும் வள்ளலார். கூஞ0

தென்னுட்டமண்மா சறுத்துத் திருநீறே
அந்நாடு போற்றுவித்தார் வந்தணையும் வார்த்தைகேட்
"டெந்நாள் பணிவ"தென ஏற்றெழுந்த மாமறையோர்
முன்னுக வேதம் முழங்க எதிர்கொண்டார். கூஞக

வேறு

போத நீடுமா மறையவர் எதிர்கொளப் புகலிகா வலருந்தம்
சீத முத்தணிச் சிவிகைநின் றிழிந்தெதிர் செல்பவர் திருத்தோணி
நாதர் கோயில்முன் தோன்றிட நகைமலர்க் கரங்குவித் திறைஞ்சிப்போய்
ஓத நீரின்மேல் ஓங்குகோயி லின்மணிக் கோபுரஞ் சென்றுற்றார்.

அங்கம் மாநிலத் தெட்டுற வணங்கிப்புக் கஞ்சலி முடிஏறப்,
பொங்கு காதலிற் புடைவலங் கொண்டுமுன் பணிந்துபோற் றெடுத்
தோதித், துங்க நீள்பெருந் தோணியாங் கோயிலை அருளினுல் தொழு
தேறி, மங்கை யோடுடன் வீற்றிருந் தருளினார் மலர்க்கழல் பணி
வுற்றார். கூஞங

மூற்று மெய்யெலாம் புளகங்கள் முகிழ்த்தெழ முகந்துகண்
களிசூரப், பற்றும் உள்ளம்உள் ளுலைத்தெழும் ஆனந்தம் பொழிதரப்
பணிந்தேத்தி, "உற்று மைசேர்வ" தெனுந்திரு வியமகம் உவகை
பால எடுத்தோதி, வெற்றி யாகமீ னவன்அவை எதிர்ந்தி மிசைவரு
வானெனவே, கூஞச

திருப்பதி கத்தினில் திருக்கடைப் காப்பேற்றி
வனமுலை யாளுடன் மன்னினுர் தமைப்போற்றி

ஆரும் இன்னருள் பெற்றுமீண் டணைபவர் அங்கையால் தொழுதேத்தி
ஏரின் மல்கிய கோயில்முன் பணிந்துபோந் திறைஞ்சினர் மணிவாயில்.

தாதை யாரும்அங் குடன்பணிந் தணைந்திடச் சண்பையார் தனிவேறு
மூதை யில்திரு வாயிலைத் தொழுதுபோய் முகைமலர்க் குழலார்கள்
ஆத ரித்துவாழ்த் துரைஇரு மருங்கெழ அணிமறு கிடைச்சென்று
காத லித்தவர்க் கருள்செய்து தந்திரு மாளிகைக் கடைசார்ந்தார்.

நவம் ஆர்பொழிற் புகலியில் நண்ணிய திருஞான சம்பந்தர்
விறலி யாருடன் நீலகண் டப்பெரும் பாணர்க்கு மிகநல்கி
உறையு ளாம்அவர் மாளிகை செலவிடுத் துள்ளணை தரும்போதில்
அறலின் நேர்குழ லார்மணி விளக்கெடுத் தெதிர்கொள அணைவுற்றார்.

அங்க ணைந்தரு மறைக்குலத் தாயர்வந் தடிவணங் கிடத்தாமும்
துங்க நீள்பெருந் தோணியில் தாயர்தாள் மனங்கொளத் தொழுவாராய்த்
தங்கு காதலின் அங்கமர்ந் தருளுநாள் தம்பிரான் கழல்போற்றிப்
பொங்கும் இன்னிசைத் திருப்பதி கம்பல பாடினர் புகழ்ந்தேத்தி.

நீல மாவிடந் திருமிடற் றடக்கிய நிமலரை நேரெய்தும்
கால மானவை அணைத்தினும் பணிந்துடன் கலந்தஅன் பர்களோடும்
சால நாள்கள்அங் குறைபவர் தையலாள் தழுவிடக் குழைகம்பர்
கோல மார்தரக் கும்பிடும் ஆசைகொண் டெழுங்குறிப் பினரானார்.

"தண்ட கத்திரு நாட்டினைச் சார்ந்துவந் தெம்பிரான் மகிழ்
கோயில், கண்டு போற்றிநாம் பணிவதென்" றன்பருக் கருள்செய்வார்
காலம்பெற், றண்ட ருக்கறி வரும்பெருந் தோணியில் இருந்தவர்
அருள்பெற்றுத், தொண்டர் சூழ்ந்துடன் புறப்படத் தொடர்ந்
தெழுந் தாதையார்க் குரைசெய்வார். கூசுo

"அப்பர்! நீர்இனி இங்கொழிந் தருமறை அங்கிவேட் டன்
போடும், துப்பு நேர்சடை யார்தமைப் பரவியே தொழுதிரும்" எனச்
சொல்லி, மெய்ப்பெ ருந்தொண்டர் மீள்பவர் தமக்கெலாம் விடை
கொடுத் தருளிப்போய், ஒப்பி லாதவர் தமைவழி யிடைப்பணிந்
தருகும்அன் பொடுசெல்வார். கூசுக

செல்வம் மல்கிய தில்லைமூ தூரினில் திருநடம் பணிந்தேத்திப்
பல்பெ ருந்தொண்டர் எதிர்கொளப் பரமர்தந் திருத்தினை நகர்பாடி
அல்கு தொண்டர்கள் தம்முடன் திருமரணி குழியினை அணைந்தேத்தி
மல்கு வார்சடை யார்திருப் பாதிரிப் புலியூரை வந்துற்றார். கூசுஉ

கன்னி மாவனங் காப்பென இருந்தவர் கழலிணை பணிந்தங்கு
முன்ன மாமுடக் கான்முயற் கருள்செய்த வண்ணமும் மொழிந்தேத்தி
மன்னு வார்பொழில் திருவடி கூரிணை வந்தெய்தி வணங்கிப்போய்ப்
பின்னு வார்சடை யார்திரு வக்கரை பிள்ளையார் அணைவுற்றார். கூசுங

2867 வக்க ரைப்பெரு மான்தனை வணங்கிஅங் கமருநாள் அருளாலே,
செக்கர் வேணியார் இரும்பைமா காளமுஞ் சென்றுதாழ்ந் துடன்
மீண்டு, மிக்க சீர்வளர் அதிகைவீ ரட்டமும் மேவுவார் தம்முன்பு,
தொக்க மெய்த்திருத் தொண்டர்வந் தெதிர்கொளத் தொழுதெழுந்
தணைவுற்றார். கூசுச

2868 ஆதி தேவர்அங் கமர்ந்தவீ ரட்டானஞ் சென்றணை பவர்முன்னே
பூதம் பாடநின் றாடுவார் திருநடம் புலப்படும் படிகாட்ட
வேத பாலகர் பணிந்துமெய் யுணர்வுடன் உருகிய விருப்போடும்
கோதி லாஇசை "குலவுகுண் டைக்குறட் பூதம்" என் றெடுத்தேத்தி.

2869 பரவி ஏத்திய திருப்பதி கத்திசை பாடினர் பணிந்தங்கு
விரவும் அன்பொடு மகிழ்ந்தினி துறைபவர் விமலரை வணங்கிப்போய்
அரவ நீர்ச்சடை அங்கணர் தாம்மகிழ்ந் துறைதிரு வாமாத்தூர்
சிரபு ரத்துவந் தருளிய திருமறைச் சிறுவர்சென் றணைவுற்றார். கூசுசு

2870 சென்ற ணைந்துசிந் தையின்மகிழ் விருப்பொடு திகழ்திரு வாமாத்தூர்ப்
பொன்த யங்குபூங் கொன்றையும் வன்னியும் புனைந்தவர் அடிபோற்றிக்
"குன்ற வார்சிலை" எனுந்திருப் பதிகமெய் குலவிய இசைபாடி
நன்றும் இன்புறப் பணிந்துசெல் வார்திருக் கோவலூர் நகர்சேர்ந்தார்.

2871 கோவல் நீடிய வீரட்டம் அமர்ந்தவர் குரைகழல் பணிந்தேத்தி
ஆவின் ஐந்துகந் தாடுவார் அறையணி நல்லூரை அணைந்தேத்திப்
பாவ லர்ந்தசெந் தமிழ்கொடு பரவுவார் பரவுசீர் அடியார்கள்
மேவும் அன்புறு மேன்மையாந் தன்மையை விளங்கிட அருள்செய்தார்.

2872 சீரின் மன்னிய பதிகமுன் பாடிஅத் திருஅறை யணிநல்லூர்
வாரின் மல்கிய கொங்கையாள் பங்கர்தம் மலைமிசை வலங்கொள்வார்
பாரின் மல்கிய தொண்டர்கள் இமையவர் நாடொறும் பணிந்தேத்தும்
காரின் மல்கிய சோலைஅண் ணுமலை அன்பர்காட் டிடக்கண்டார்.

வேறு

2873 அண்ணு மலைஅங் கமர்பிரான் வடிவு போன்று தோன்றுதலும்
கண்ணுல் பருகிக் கைதொழுது கலந்து போற்றுங் காதலினால்
"உண்ணு முலையாள்" எனும்பதிகம் பாடித் தொண்ட ருடன்போந்து
தெண்ணீர் முடியார் திருவண்ணு மலையைச் சென்று சேர்வுற்றார். கூஎ0

2874 அங்கண் அணைவார் பணிந்தெழுந்து போற்றி செய்தம் மலைமீது
தங்கு விருப்பில் வீற்றிருந்தார் தாள்தா மரைகள் தம்முடிமேல்
பொங்கும் ஆர்வத் தொடும்புனைந்து புளகம் மலர்ந்த திருமேனி
எங்கு மாகிக் கண்பொழியும் இன்ப அருவி பெருக்கினார். கூஎக

2875 ஆதி மூர்த்தி கழல்வணங்கி அங்கண் இனிதின் அமருநாள்
பூத நாத ரவர்தம்மைப் "பூவார் மல்" லாற் போற்றிசைத்துக்

பா. பே. 1. என் வரலாறு.

காத லால்அத் திருமலையிற் கிலநாள் வைகிக் கமழ்கொன்றை
வேத கீதர் திருப்பதிகள் பிறவும் பணியும் விருப்புறுவார். கூஎஉ

மங்கை பாகர் திருவருளால் வணங்கிப் போந்து வடதிசையில்
செங்கண் விடையார் பதிபலவும் பணிந்து புகலிச் செம்மலார்
துங்க வரைகள் கான்பலவுங் கடந்து தொண்டைத் திருநாட்டில்
திங்கள் முடியார் இனிதமருந் திருவோத் தூரைச் சேர்வுற்றார். கூஎக

தேவர் முனிவர்க்(கு) ஏத்தளித்தார் திருவோத் தூரில் திருத்தொண்டர்
தாவில் சண்பைத் தமிழ்விரகர் தாம்அங் கணைய களிசிறந்து
மேவுங் கதலி தோரணங்கள் விளக்கு நிரைத்து நிறைகுடமும்
பூவும் பொரியும் சுண்ணமும்முன் கொண்டு போற்றி எதிர்கொண்டார்.

சண்பை வேந்தர் தண்தாளச் சிவிகை நின்றும் இழிந்தருளி
நண்பின் மிக்க சீரடியார் சூழ நம்பர் கோபுரஞ்சூழ்
விண்பின் னுக முன்னெங்கும் வியன்பொற் புரிசை வலங்கொண்டு
பண்பு நீடிப் பணிந்தெழுந்து பரமர் கோயி லுள்ளடைந்தார். கூஎடு

வார ணத்தின் உரிபோர்த்த மைந்தர் உமையாள் மணவாளர்
ஆர ணத்தின் உட்பொருளாய் நின்ற தம்முன் அணைந்திறைஞ்சி
நார ணற்கும் பிரமற்கும் நண்ணற் கரிய கழல்போற்றும்
கார ணத்தின் வரும்இன்பக் கண்ணீர் பொழியக் கைதொழுதார். கூஎசு

தொழுது விழுந்து பணிந்தெழுந்து சொன்மா லைகளால் துதிசெய்து
முழுதும் ஆனூர் அருள்பெற்றுப் போந்து வைகி முதல்வர்தமைப்
பொழுது தோறும் புக்கிறைஞ்சிப் போற்றி செய்தங் கமர்வார்முன்
அழுது வணங்கி ஒருதொண்டர் அமணர் திறத்தான் றறிவிப்பார்.

"அங்கை அனலேற் றவர்க்கடியேன் ஆக்கும் பணிக ளானவெலாம்
மங்கு லுறநீண் டாண்பனையாய்க் காயா தாகக் கண்டமணர்
'இங்கு நீரிட் டாக்குவன காய்த்தற் கடைவுண் டோ'என்று
பொங்கு நகைசெய் திழித்துரைத்தார் அருள வேண்டும்" எனப்புகல.

பரம னருள்தந் திருத்தொண்டர் பண்பு நோக்கிப் பரிவெய்தி
விரவு காத லொடும்விரைந்து விமலர் கோயில் புக்கருளி
அரவும் மதியும் பகைதீர அணிந்தார் தம்மை அடிவணங்கி
இரவு போற்றித் திருப்பதிகம் இசையிற் பெருக எடுத்தருளி. கூஎகூ

விரும்பு மேன்மைத் திருக்கடைக்காப் பதனில் விமலர் அருளாலே
"குரும்பை ஆண்ப னைஈனும்" என்னும் வாய்மை குலவுதலால்
நெருங்கும் எற்றுப் பனையெல்லாம் நிறைந்த குலை களாய்க்குரும்பை
அரும்பு பெண்ணை யாகியிடக் கண்டோ ரெல்லாம் அதிசயித்தார்.

சீரின் மன்னுந் திருக்கடைக்காப் பேற்றிச் சிவனார் அருள்பெற்றுப்
பாரில் நீடும் ஆண்பனைமூன் காய்த்துப் பழுக்கும் பண்பினால்
நேரும் அன்பர் தங்கருத்து நேரே முடித்துக் கொடுத்தருளி
ஆரும் உவகைத் திருத்தொண்டர் போற்ற அங்கண் இனிதமர்ந்தார்.

தேன்ஞட்டு மண்மா சறுத்தார்தஞ் செய்கை கண்டு திகைத்தமணர்
அந்நாட் டதனை விட்டகல்வார் சிலர்தங் கையிற் குண்டிகைகள்
"என்ன வனமற் றிவை?" என்று தகர்ப்பார் "இறைவன் ஏறுயர்த்த
பொன்னார் மேனிப் புரிசடையான் அன்றே" என்று போற்றினார்.

பிள்ளை யார்தந் திருவாக்கிற் பிறத்த லால்அத் தாலமும்மூன்(பு)
உள்ள பாசம் விட்டகல ஒழியாப் பிறவி தனையொழித்துக்
கொள்ளு நீர்மைக் காலங்கள் கழித்துச் சிவமே கூடினவால்
வள்ள லார்மற் றவராரூரின் வாய்மை கூறின் வரம்பென்னும். கூஅங

அங்கண் அமரர் பெருமானைப் பணிந்து போந்தா டரவினுடன்
பொங்கு கங்கை முடிக்கணிந்தார் மகிழும் பதிகள் பலபோற்றி
மங்கை பாகர் அமர்ந்தருளும் வயல்மா கறலை வழுத்திப்போய்க்
கொங்கு மலர்நீர்க் குரங்கணின்முட் டத்தைச் சென்று குறுகினார்.

ஆதி முதல்வர் குரங்கணின் முட்டத்தை அணைந்து பணிந்தேத்தி
நீதிவாழுந் திருத்தொண்டர் போற்ற நிகரில் சண்பையினில்
வேத மோடு சைவநெறி விளங்க வந்த கவுணியனார்
மாதர் பாகர் தாம்மன்னும் மதில்சூழ் காஞ்சி மருங்கணைந்தார். கூஅஙி

வேறு

நீடுகாஞ்சி வாணரும் நிலவுமெய்ம்மை அன்பரும்
மாடுசண்பை வள்ளலார் வந்தணைந்த ஓகையால்
கூடுகின்ற இன்பமேர் குலாவுவீதி கோலினார்
காடுகொண்ட பூகம்வாழை காமர்தோ ரணங்களால். கூஅசு

கோடிநிரைத்த வீதியில் கோலவே திகைப்புறம்
கடிகொள்மாலை மொய்த்தபந்தர் கந்தநீர்த் தசும்புடன்
மடிவில்பொன் விளக்கெடுத்து மாதர்மைந்தர் மல்குவார்
படிவிளக்கும் அன்பரும் பரந்தபண்பில் ஈண்டுவார். கூஅள

கோதைமாதர் ஆடலும் குலாவுதொண்டர் பாடலும்
வேதகீத நாதமும் மிக்கெழுந்து விம்மவே
காதல்நீடு காஞ்சிவாணர் கம்பலைத் தெழுந்துபோய்
மூதெயிற் புறம்புசென் றணைந்துமுன் வணங்கினார். கூஅஅ

சண்பையாளும் மன்னர்முன்பு தொண்டர்வந்து சார்தலும்
பண்புநீடி யானமூன் பிழிந்திறைஞ்சு பான்மைகண்

டெண்பெருக்கு மிக்கதொண்டர் அஞ்சலித் தெடுத்தசொல்
மண்பரக்க வீழ்ந்தெழுந்து வானமுட்ட ஆர்த்தனர். கூஅகூ

சேணுயர்ந்த வாயில்நீடு சீர்கொள்சண்பை மன்னனூர்
வாணிலாவு நீற்றணி விளங்கிட மனத்தினில்
பூணும்அன்பர் தம்முடன் புகுந்திடப் புறத்துளோர்
காணும்ஆசை யிற்குவித்த கைந்நிரை எடுத்தனர். கூகூO

வியனெடுந் தெருவினூடு மிக்கதொண்டர் ஆர்ப்பெழக்
கயல்நெடுங்கண் மாதரும் காதல்நீடு மாந்தரும்
புயல்பொழிந்த தாமெனப் பூவினோடு பொற்சு(ண்)ணம்
இயலுமாறு வாழ்த்தெடுத் திருமருங்கும் வீசினர். கூகூக

இன்னவண்ணம் யாவரும் இன்பமெய்த எய்துவார்
பின்னுவார் சடைமுடிப் பிரான்மகிழ்ந்த கோயில்கள்
முன்னுறப் பணிந்துபோய் மொய்வரைத் திருமகள்
மன்னுபூ சனைமகிழ்ந்த மன்னர்கோயில் முன்னினர். கூகூஉ

கம்பவாணர் கோயில்வாயில் கண்டுகை குவித்தெடுத்
தும்பரோங்கு கோபுரத்தின் முன்னிறைஞ்சி உள்ளணைந்
தம்பொன்மா ளிகைப்புறத்தில் அன்பரோடு சூழவந்
திம்பர்ஞாலம் உய்யவந்த பிள்ளையார் இறைஞ்சுவார். கூகூங

வேறு

செம்பொன்மலிக் கொடிதழுவக் குழைந்தருளுந் திருமேனிக்
கம்பரைவந் தெதிர்வணங்குங் கவுணியர்தங் காவலனார்
பம்புதுளிக் கண்ணருவி பாய்ந்துமயிர்ப் புளகம்வரத்
தம்பெருகு மனக்காதல் தள்ளநில மிசைத்தாழ்ந்தார். கூகூச

பலமுறையும் பணிந்தெழுந்து பங்கயச்செங் கைமுகிழ்ப்ப
மலருமுகம் அளித்ததிரு மணிவாயால் "மறையான்"என்
றுலகுய்ய எடுத்தருளி உருகியஅன் பென்புருக்க
நிலவுமிசை முதற்றுளம் நிரம்பியநீர் மையில்நிகழ. கூகூரு

பாடினார் பணிவுற்றார் புரிவுறும்ஆ னந்தக்கூத்
தாடினார் அகங்குழைந்தார் அஞ்சலிதஞ் சென்னியின்மேல்
சூடினார் மெய்ம்முகிழ்த்தார் சூகரமும் அன்னமுமாய்த்
தேடினார் இருவருக்குந் தெரிவரியார் திருமகனார். கூகூசு

மருவியஏ ழிசைபொழிய மனம்பொழியும் பேரன்பால்
பெருகியகண் மழைபொழியப் பெரும்புகலிப் பெருந்தகையார்
உருகியஅன் புள்ளலைப்ப உமைதழுவக் குழைந்தவரைப்
பருகியமெய் யுணர்விஞ்சும் பரவியே புறத்தணைந்தார். கூகூள

பா. பே. வானதி.

புறத்தணைந்த தொண்டருடன் போந்தமைந்த திருமடத்தில்
பெறற்கரும்பே றுலகுய்யப் பெற்றருளும் பிள்ளையார்
மறப்பரிய காதலுடன் வந்தெய்தி மகிழ்ந்துறைவார்
அறப்பெருஞ்செல் வக்காமக் கோட்டம்அணைந் திறைஞ்சினார். கூகூஅ

திருவேகம் பரத்தமர்ந்த செழுஞ்சுடரைச் சேவடியில்
ஒருபோதும் தப்பாதே உள்ளுருகிப் பணிகின்றார்
மருவுதிரு இயமகமும் வளர்இருக்குக் குறள்மற்றும்
பெருகும்இசைத் திருப்பதிகத் தொடைபுனைந்தார் பிள்ளையார். கூகூக

நீடுதிருப் பொழிற்காஞ்சி நெறிக்காரைக் காடிறைஞ்சிச்
சூடுமதிக் கண்ணியார் தூணமலர்ச்சே வடிபாடி
ஆடுமவர் இனிதமரும் அனேகதங்கா வதம்பரவி
மாடுதிருத் தானங்கள் பணிந்தேத்தி வைகுநாள். க000

எண்திசையும் போற்றிசைக்குந் திருப்பதிமற் றதன்புறத்துத்
தொண்டருடன் இனிதேகித் தொல்லைவிடம் உண்டிருண்ட
கண்டர்மகிழ் மேற்றளியும் முதலான கலந்தேத்தி
மண்டுபெருங் காதலினுல் வணங்கிமீண் டினிதிருந்தார். க00க

அப்பதியில் விருப்பினுடும் அங்கணரைப் பணிந்தமர்வார்
செப்பரிய புகழ்ப்பாலித் திருநதியின் தென்கரைபோய்
மைப்பொலியுங் கண்டர்திரு மாற்பேறு மகிழ்ந்திறைஞ்சி
மூப்புரஞ்செற் றவர்தம்மை மொழிமாலை சாத்தினார். க00உ

திருமாற்பே றுடையவர்தந் திருவருள்பெற் றெழுந்தருளிக்
கருமாலுங் கருமாவாய்க் காண்பரிய கழல்தாங்கி
மருவூற்றல் மழவிடையார் திருவல்லம் வணங்கித்தம்
பெருமாற்குத் திருப்பதிகப் பெரும்பிணையல் அணிவித்தார். க00ங

அங்குள்ளா பிறபதியில் அரிக்கரியார் கழல்வணங்கிப்
பொங்குபுனற் பால்யாற்றின் புடையில்வட பாலிறைவர்
எங்கும்உறை பதிபணிவார் இலம்பயங்கோட் டூர்இறைஞ்சிச்
செங்கண்விடை உகைத்தவரைத் திருப்பதிகம் பாடினார். க00ச

திருத்தொண்டர் பலர்சூழத் திருவிற்கோ லமும்பணிந்து
பொருட்பதிகத் தொடைமாலை புரம்எரித்த படிபாடி
அருட்புகலி ஆண்டகையார் தக்கோலம் அணைந்தருளி
விருப்பினுடுங் திருவூறல் மேவினார் தமைப்பணிந்தார். க00டு

தோழுதுபல முறைபோற்றிச் சுரர்குருவுக் கிளையமுனி
வழுவில்தவம் புரிந்தேத்த மன்னினார் தமைமலர்ந்த
பழுதில்செழுந் தமிழ்மாலைப் பதிகஇசை புனைந்தருளி
முழுதும்அளித் தவர்அருளால் போந்தனர்முத் தமிழ்விரகர். க00சு

தென்றகெடுஞ் சிலையாளர் குலவியபல் பதிபிறவும்
நின்றவிருப் புடன்இறைஞ்சி நீடுதிருத் தொண்டருடன்
பொன்தயங்கு மணிமாடப் பூந்தராய்ப் புரவலனார்
சென்றணைந்தார் பழையனூர்த் திருவாலங் காட்டருகு. கooள

வேறு

"இம்மையிலே புவியுள்ளோர் யாருங் காண ஏழுலகும் போற் றிசைப்ப எம்மை ஆளும், அம்மைதிருத் தலையாலே நடந்து போற் றும் அம்மையப்பர் திருவாலங் காடாம்" என்று, தம்மையுடை யவர் மூதூர் மிதிக்க அஞ்சிச் சண்பைவரும் சிகாமணியார் சாரச் சென்று, செம்மைமிகறி வழுவாத பதியின் மாடோர் செழும்பதியில் அன் றிரவு பள்ளி சேர்ந்தார். கoo அ

மாலையிடை யாமத்துப் பள்ளி கொள்ளும் மறையவனார் தம் முன்பு கனவிலே வந்(து), ஆலவனத் தமர்ந்தருளும் அப்பர் "நம்மை அயர்த்தனையோ பாடுதற்" கென் றருளிச் செய்ய, ஞாலம்இருள் நீங்க வரும் புகலி வேந்தர் நடுஇடையா மத்தின்இடைத் தொழுது ணர்ந்து, வேலைவிடம் உண்டவர்தங் கருணை போற்றி மெய்யுருகித் திருப் பதிகம் விளம்ப லுற்றார். கoo கூ

"துஞ்சவரு வார்" என்றே எடுத்த ஓசைச் சுருதிமுறை வழுவா மல் தொடுத்த பாடல், எஞ்சலிலா வகைமுறையே பழைய னூரார் இயம்புமொழி காத்தகதை சிறப்பித் தேத்தி, "அஞ்சனமா கியிருத் தார் அருளாம்" என்றே அருளும்வகை திருக்கடைக்காப் பமையச் சாத்திப், பஞ்சுரமாம் பழையதிறங் கிழமை கொள்ளப் பாடினார் பாரெல்லாம் உய்ய வந்தார். கoகo

நீடும்இசைத் திருப்பதிகம் பாடிப் போற்றி நெடுங்கங்குல் இருள் நீங்கி நிகழ்ந்த காலை, மாடுதிருத் தொண்டர்குழாம் அணைந்த போது மாலையினில் திருவால வனத்து மன்னி, ஆடுமவர் அருள்செய்த படியை எல்லாம் அருளிச்செய்(து) அகம்மலரப் பாடி ஏத்திச், சேடர் பயில் திருப்பதியைத் தொழுதுபோந்து திருப்பாசூர் அதன்மருங்கு செல்ல லுற்றார். கoகக

திருப்பாசூர் அணைந்தருளி அங்கு மற்றச் செழும்பதியோர் எதிர் கொள்ளச் சென்று புக்குப், பொருப்பரையன் மடப்பாவை இடப்பா கத்துப் புராதனர்வேய் இடங்கொண்ட புனிதர் கோயில், விருப்பி னுடன் வலங்கொண்டு புக்குத் தாழ்ந்து வீழ்ந்தெழுந்து மேனி யெலாம் முகிழ்ப்ப நின்றே, அருட்கருணைத் திருவாளன் நற்மஞ் "சிந்தை இடையார்" என் றிசைப்பதிகம் அருளிச் செய்தார். கoகஉ

மன்னுதிருப் பதிகஇசை பாடிப் போற்றி வணங்கிப்போந் தப் பதியில் வைகி மூடு, பிஞ்ஞகர்தம் வெண்பாக்கம் முதலா யுள்ள பிற

பதிகள் பணிந்தணைவார் பெருகும் அன்பால், முன்னிறைந்த திரு வாய்மஞ் சனநீ ராட்டும் முதல்வேடர் கண்ணப்ப நாய னுரை, உன்னி யொளிர் காளத்தி மலைவ ணங்க உற்றபெரு வேட்கையுடன் உவந்து சென்றார். கoகந

மிக்கபெருங் காதலுடன் தொண்டர் சூழ மென்புனல்நாட் டின் கன்று. வெற்பும் கானும், தொக்கபெரு வன்புலக்கான் அடைந்து போகிச் சூலகபா லக்கரத்துச் சுடரு மேனி, முக்கண்முதற் றலைவ னிட மாகி யுள்ள முகில்நெருங்கு காரிகரை முன்னர்ச் சென்று, புக்கிறைஞ்சிப் போற்றிசைத்(து)அப் பதியில் வைகிப் பூதியரோ டுடன் மகிழ்ந்தார் புகலி வேந்தர். கoகச

இறைவர்திருக் காரிகரை இறைஞ்சி அப்பால் எண்ணில்பெரு வரைகளிரு மருங்கும் எங்கும், நிறையருவி நிரைபலவாய் மணியும் பொன்னும் நிறைதுவலை புடைசிதறி நிகழ்ப வாகி, அறைகழல்வா னவர்க்கிறைவன் குலிச வேற்றுல் அற்றகிறை பெற்றவன்மேல் எழுவ தற்குச், சிறகடித்துப் பறக்கமுயன் றுயர்ந்த போலும் சிலைநிலத்தில் எழுந்தருளிச் செல்லா நின்றார். கoகஞ

மாதவர்கள் நெருங்குசூழாம் பரந்து செல்ல மணிமுத்தின் பரிச் சின்னம் வரம்பின் முகப், பூதிநிறை கடலணைவ தென்னச் சண்பைப் புரவலனார் எழுந்தருளும் பொழுது சின்னத், தீதிலொலி பலமுறை யும் பொங்கி எங்கும் "திருஞான சம்பந்தன் வந்தான்" என்னும், நாதம் நிறை செவியினவாய் மாக்க ளெல்லாம் நலம்மருவு நினைவொன்றுய் மருங்கு நண்ண. கoகசு

கானவர்தங் குலம்உலகு போற்ற வந்த கண்ணப்பர் திருப்பாதச் செருப்புத் தோய, மானவரிச் சிலைவேட்டை ஆடும் கானும் வான மறை நிலைபெரிய மரமும் தூறும், ஏனஇமை யோர்தாமும் இறைஞ்சி ஏத்தி எய்தவரும் பெருமையவாம் எண்ணி லாத, தானமும் மற் றவைகடந்து திருக்கா ளத்தி சாரளுக் தருளினார் சண்பை வேந்தர். கoகள

"அம்பொன்மலைக் கொடிமுலைப்பால் குழைத்த ஞானத் தமு துண்ட பிள்ளையார் அணைந்தார்" என்று, செம்பொன்மலை வில்லியார் திருக்கா ளத்தி சேர்ந்ததிருத் தொண்டர்குழாம் அடைய ஈண்டிப், பம்புசடைத் திருமுனிவர் கபாலக் கையர் பலவேடச் சைவர்குல வேடர் மற்றும், உம்பர்தவம் புரிவார்அப் பதியில் உள்ளோ ருடன் விரும்பி எதிர்கொள்ள உழைச்சென் றுற்றார். கoகஅ

திசைஅனைத்தும் நீற்றிலொளி தழைப்ப மண்மேல் சிவலோகம் அணைந்ததெனச் சென்ற போது, மிசைவிளங்கும் மணிமுத்தின் சிவிகை நின்றும் வேதபா லகர்இழிந்து வணங்கி மிக்க, அசைவில்

பெருந் தொண்டர்குழாம் தொழுது போற்றி "அர"எனும்ஓ சையின் அண்டம் நிறைப்ப அன்பால், இசைவிளங்குந் தமிழ்விரகர் "திருக்கா ளத்தித் திருமலைஇம் மலைகளில்யா ?" தென்று கேட்டார். கஅகக

வந்தணைந்த ஞாதவத்தோர் வணங்கித் தாழ்ந்து "மறைவாழ்வே! சைவசிகா மணியே ! தோன்றும், இந்தமலை காளஞே டத்தி தம்மில் இகலிவழி பாடுசெய இறைவர் மேவும், அந்தமில்சீர்க் காளத்தி மலை யாம்" என்ன அவனிமேற் பணிந்தெழுந்தஞ் சலிமேற் கொண்டு, சிந்தைகளி மகிழ்ச்சிவரத் திருவி ராகம் "வானவர்கள் தானவர்" என் றெடுத்துச் செல்வார். கஅஉ0

திருந்தியஇன் னிசைவகுப்புத் திருக்கண் ணப்பர் திருத் தொண்டு சிறப்பித்துத் திகழப் பாடிப், பொருந்துபெருந் தவர்கூட் டம் போற்ற வந்து பொன்முகலிக் கரைஅணைந்து தொழுது போகி, அருந்தவர்கள் எம்மருங்கும் மிடைந்து செல்ல ஆளுடைய பிள்ளையார் அயன்மால் தேடும், மருந்துவெளி யேஇருந்த திருக்கா ளத்தி மலை யடிவா ரஞ்சார வந்து தாழ்ந்தார். கஅஉக

தாழ்ந்தெழுந்து திருமலையைத் தொழுது கொண்டே I தடஞ் சிலா தலசோபா னத்தால் ஏறி, வாழ்ந்திமையோர் குழாம்நெருங்கு மணிநீள் வாயில் மருங்கிறைஞ்சி உள்புகுந்து வளர்பொற் கோயில், சூழ்ந்துவலங் கொண்டிறைவர் திருமூன் பெய்தித் தொழுததலை மேற் கொண்ட செங்கை போற்றி, வீழ்ந்தெழுவார் கும்பிட்ட பயன்காண் பார்போல் மெய்வேடர் பெருமானைக் கண்டு வீழ்ந்தார். கஅஉஉ

உள்ளத்தில் தெளிகின்ற அன்பின் மெய்ம்மை உருவினையும் அவ்வன்பின் உள்ளே மன்னும், வெள்ளச்செஞ் சடைக்கற்றை நெற் றிச் செங்கண் விமலரையும் உடன்கண்ட விருப்பும் பொங்கிப், பள் ளத்தில் இழிபுனல்போல் பரந்து செல்லப் பைம்பொன்மலை வல்லி பரிந் தளித்த செம்பொன், வள்ளத்தில் ஞானஆ ரமுதம் உண்டார் மகிழ்ந்தெழுந்து பலமுறையும் வணங்கு கின்றார். கஅஉங

பங்கயக்கண் அருவிநீர் பாய நின்று பரவும்இசைத் திருப்பதி கம் பாடி ஆடித், தங்குபெருங் களிகாதல் தகைந்து தட்பத் தம்பெரு மான் கழல்போற்றுந் தன்மை நீட, அங்கரிதிற் புறம்போந்தங் கயன் மால் போற்ற அரியார்தந் திருமலைக்கீழ் அணைந்தி றைஞ்சிப், பொங் குதிருத் தொண்டர்மடங் காட்ட அங்குப் புக்கருளி இனிதமர்ந்தார் புகலி வேந்தர். கஅஉச

யாவர்களும் அறிவரிய இறைவன் தன்னை ஏழுலகும் உடை யானை எண்ணி லாத, தேவர்கள்தம் பெருமானைத் திருக்கா ளத்தி மலையின்மிசை வீற்றிருந்த செய்ய3தேனைப், பூவலரும் பொழில்புடைசூழ் சண்பை யாளும் புரவலனார் காலங்கள் தோறும்

புக்குப், பாமலர்கொண் டடிபோற்றிப் பருகி யார்ந்து பண்பினிய திருப்பதியில் பயிலும் நாளில். கo2டு

2929 அங்கண்வட திசைமேலும் குடக்கின் மேலும் அருந்தமிழின் வழக்கங்கு நிகழா தாகத், திங்கள்புனை முடியார்தந் தானந் தோறும் சென்றுதமிழ் இசைபாடுஞ் செய்கை போல, மங்கையுடன் வானவர் கள் போற்றி சைப்ப வீற்றிருந்தார் வடகயிலை வணங்கிப் பாடிச், செங்கமல மலர்வாவித் திருக்கே தாரம் தொழுதுதிருப் பதிகஇசை திருந்தப் பாடி. கo2உ

2930 கூற்றுதைத்தார் மகிழ்ந்தகோ காரணம் பாடிக் குலவுதிருப் பருப்பதத்தின் தொள்கை பாடி, ஏற்றின்மிசை வருவார்இந் திரன்றன் நீல பருப்பதமும் பாடிமற் றிறைவர் தானம், போற்றியசொன் மலர் மாலை பிறவும் பாடிப் புகலியர்தம் பெருந்தகையார் புனித மாகும், நீற்றின்அணி கோலத்துத் தொண்டர் சூழ நெடிதுமகிழ்ந் தப்பதியில் நிலவு கின்றார். கo2எ

2931 தென்திசையிற் கயிலையெனுந் திருக்கா ளத்தி போற்றிஇனி தமர்கின்றார் திரைசூழ் வேலை, ஒன்றுதிரு வொற்றியூர் உறைவார் தம்மை இறைஞ்சுவது திருவுள்ளத் தூன்னி அங்கண், இன்தமிழின் விரகர்அருள் பெற்று மீள்வார் "எந்தையார் இணையடிஎன் மனத்த" என்று, பொன்தாளங் கொழித்திழிபொன் முகலி கூடப் புனைந்த திருப் பதிகஇசை போற்றிப் போந்தார். கo2அ

2932 மன்னுபுகழ்த் திருத்தொண்டர் குழாத்தி னோடும் மறைவாழ வந்தவர்தாம் மலையும் கானும், முன்னணைந்த பதிபிறவும் கடந்து போந்து முதல்வனார் உறைபதிகள் பலவும் போற்றிப், பன்மணிகள் பொன்வரன்றி அகிலும் சந்தும் பொருதலைக்கும் பாலிவட கரையில் நீடு, சென்னிமதி அணிந்தவர்தந் திருவேற் காடு சென்றணைந்தார் திருஞான முண்ட செல்வர். கo2ஊ

2933 திருவேற்கா டமர்ந்தசெழுஞ் சுடர்பொற் கோயில் சென்ற ணைந்து பணிந்துதிருப் பதிகம் பாடி, வருவேற்று மனத்தவுணர் புரங்கள் செற்றார் வலிதாயம் வந்தெய்தி வணங்கிப் போற்றி, உரு வேற்றூர் அமர்ந்துறையும் ஓத வேலை ஒற்றியூர் கைதொழச்சென் றுற்ற போது, பெருவேட்கை தருவாழ்வு பெற்ற தொண்டர் பெரும் பதியோர் எதிர்கொள்ளப் பேணி வந்தார். கoஊo

2934 மிக்கதிருத் தொண்டர்தொழு தணையத் தாமும் தொழுதிழிந்து "விடையவன்" என்றெடுத்துப் பாடி, மைக்குவவு கண்டத்தார் மகிழுங் கோயில் மன்னுதிருக் கோபுரத்து வந்து தாழ்ந்து, தக்கதிருக் கடைக் காப்புச் சாற்றித் தேவர் தம்பெருமான் திருவாயி னூடு சென்று, புக்கருளி வலங்கொண்டு புனிதர் முன்பு போற்றெடுத்துப் படியின் மேல் பொருந்த வீழ்ந்தார். கoஊக

மா. கு. பி. பாடலுறும்
2. பாடல் கிழமை நிறைவு தானம்.

2935 போற்றிரள்கள் போல்புரிந்த சடையார் தம்பால் பொங்கிஎழுங்
காதல்மிகப் பொழிந்து விம்மிப், பற்றிளமும் மயிர்ப்புளகம் எங்கு
மாகிப் பரந்திழியுங் கண்ணருவி பாய நின்று, சொற்றிகழுந் திருப்
பதிகம் பாடி ஏத்தித் தொழுதுபுறத் தணைந்தருளித் தொண்ட
ரோடும், ஒற்றிநகர் காதலித்தங் கினிதுறைந்தார் உலகுய்ய உலவாத
ஞானம்உண்டார். கoகூஉ

வேறு

2936 இன்ன தன்மையிற் பிள்ளையார் இருந்தனர் இப்பால்
பன்னு தொல்புகழ்த் திருமயி லாபுரிப் பதியில்
மன்னு சீர்ப்பெரு வணிகர்தந் தோன்றலார் திறத்து
முன்னம் எய்தியதொன்றினை நிகழ்ந்தவா மொழிவாம். கoகூக

2937 அருகி தித்திறம் பெருக்குதற் கருங்கலம் பலவும்
பொருக டற்செலப் போக்கிஅப் பொருட்குவை நிரம்ப
வரும ரக்கலம் மணைப்படப் பிணைக்கரை நிரைக்கும்
இருநி திப்பெருஞ் செல்வத்தின் எல்லையில் வளத்தார். கoகூச

2938 தம்மை உள்ளவா றறிந்தபின் சங்கரற் கடிமை
மெய்ம்மை யேசெயும் விருப்புடன் மிக்கதோர் அன்பால்
பொய்ம்மை நீக்கிய பொருளிது எனக்கொளும் உள்ளச்
செம்மை யேபுரி மனத்தினர் சிவநேசர் என்பார். கoகூடு

2939 கற்றை வார்சடை முடியினர் அடியவர் கலப்பில்
உற்ற செய்கையில் ஒழிவின்றி உருகிய மனமும்
பற்றி லாநெறிப் பரசம யங்களைப் பாற்றும்
செற்றம் மேவிய சீலமும் உடையராய்த் திகழ்வார். கoகூசு

2940 ஆன நாள்செல அருமறைக் கவுணியர் பெருமான்
ஞான போனகம் நுகர்ந்ததும் நானிலம் உய்ய
ஏன வெஞ்சமண் சாக்கியம்இழித்தழித் ததுவும்
ஊன மில்புகழ் அடியர்பால் கேட்(டு)உவந் துளராய். கoகூள

2941 செல்வம் மல்கிய சிரபுரத் தலைவர்சே வடிக்கீழ்
எல்லை இல்லதோர் காதலின் இடையரு உணர்வால்
அல்லும் நண்பக லும்புரிந் தவரருள் திறமே
சொல்ல வுஞ்செயல் கேட்கவும் தொழிலின ரானார். கoகூஅ

2942 நிகழும் ஆங்கவர் நிதிப்பெருங் கிழவனின் மேலாய்த்
திகழும் நீடிய திருவினிற் சிறந்துள ராகிப்
புகழும் மேன்மையில் உலகினிற் பொலிந்துளா ரெனினும்
மகவி லாமையின் மகிழ்மனை வாழ்க்கையின் மருண்டு. கoகூக

2943 அரிய நீர்மையில் அருந்தவம் புரிந்தான் அடியார்க்
குரிய அர்ச்சனை உலப்பில செய்தஅந் நலத்தால்

பா. பே. 1. பெற்றன; 2. நீடுபுகழ் வணிகன்.
3. பெருக்கமும் மிகும்பும். 4. திகழ் நீடிய

கரிய வாங்குழல் மனைவியார் வயிறெனுங் கமலத்
தரிய பூமகள் எனவரு பெண்கொடி உதித்தாள். கoசo

நல்ல நாள்பெற வோரையின் நலம்மிக உதிப்பப்
பல்பெ ருங்கிளை யுடன்பெரு வணிகர்பார் முழுதும்
எல்லை யில்தனம் முகந்துகொண் டியாவரும் உவப்ப
மல்லல் ஆவண மறுகிடைப் பொழிந்துளம் மகிழ்ந்தார். கoசக

ஆறு சூடிய முடியினர் அடியவர்க் கன்பால்
ஈறி லாதபூ சனைகள்யா வையும்மிகச் செய்து
மாறி லாமறை யவர்க்குவேண் டினஎலாம் அளித்துப்
பேறு மற்றிது வேனும்படி பெருங்களி சிறந்தார். கoசஉ

சூத நல்வினை மங்கலத் தொழில்முறை தொடங்கி
வேத நீதியின் விதியுளி வழாவகை விரித்த
சாத கத்தொடு சடங்குகள் தசதினஞ் செல்லக்
காதல் மேவிய சிறப்பினில் கடிவிழா அயர்ந்தார். கoசங

யாவ ரும்பெரு மகிழ்ச்சியால் இன்புறப் பயந்த
பாவை நல்லுறப் பணிகிளர் பண்பெலாம் நோக்கிப்
பூவி னுளென வருதலிற் பூம்பாவை என்றே
மேவும் நாமமும் விளம்பினர் புவியின்மேல் விளங்க. கoசச

திங்கள் தோறும்முன் செய்யும்அத் திருவளர் சிறப்பின்
மங்க லம்புரி நல்வினை மாட்சியிற் பெருக
அங்கண் மாநகர் அமைத்திட ஆண்டெதிர் அணைந்து
தங்கு பேரொளிச் சீறடி தளர்நடை பயில. கoசடு

தளரும் மின்னின்அங் குரமெனத் தமனியக் கோடியின்
வளரி ளந்தளிர்க் கிளையென மணிகிளர் ஒளியின்
அளவில் அஞ்சுடர்க் கொழுந்தென அணைவுறும் பருவத்
திளவ னப்பிணை அனையவர்க் கேழியாண் டெய்த. கoசசு

அழகின் முன்னிளம் பதமென அணிவிளக் கென்ன
விழவு கொண்டெழும் பேதைய ருடன்விளை யாட்டில்
கழலொ டம்மனை கந்துகம் என்றுமற் றினைய
மழலை மென்கிளிக் குலமென மனையிடை ஆடி. கoசள

போற்றெ டிச்சிறு மகளிர்ஆ யத்தொடும் புணர்ந்து
சிற்றில் முற்றவும் இழைத்துடன் அடுக்தொழிற் சிறுசோ
றுற்ற உண்டிகள் பயின்றெளி மணியூசல் ஆடி
மற்றும் இன்புறு வண்டலாட் டயர்வுடன் வளர. கoசஅ

2952 தந்தை யாரும்அத் தளிரிளங் கொம்பனாள் தகைமை
இந்த வையகத் தின்மையால் இன்புறு களிப்பு
வந்த சிந்தையின் மகிழ்ந்து "மற் றிவள்மணம் பெறுவான்
அந்த மில்லென தருகிதிக் குரியன்" என் றறைந்தார். கoசகூ

2953 ஆய நாள்களில் அமண்பயில் பாண்டிநா டதனைத்
தூய ஞானமுண் டருளிய தோன்றலார் அணைந்து
மாய வல்லமண் கையரை வாதில்வென் றதுவும்
மேய வெப்பிடர் மீனவன் மேலொழித் ததுவும். கoருo

2954 நெருப்பில் அஞ்சினார் தங்களை நீரில்ஒட் டியபின்
மருப்பு நீள்கழுக் கோலில்மற் றவர்களே றியதும்
விருப்பி னுல்திரு நீறுமீ னவற்களித் தருளிப்
பொருப்பு வில்லியார் சாதனம் போற்றுவித் ததுவும். கoருக

2955 இன்ன வாறெலாம் அறிந்துளார் எய்திஅங் கிசைப்பச்
சொன்ன வர்க்கெலாம் இருகிதி னூசுடன் அளித்து
மன்னு பூந்தராய் வள்ளலார் தமைத்திசை நோக்கிச்
சென்னி மேற்கரங் குவித்துவீழ்ந் தெழுந்துசெந் நின்று. கoருஉ

2956 சுற்றம் நீடிய கிளையெலாஞ் சூழ்ந்துடன் கேட்பக்
"கற்ற மாந்தர்வாழ் காழிநா டுடையவர்க் கடியேன்
பெற்றெ டுத்தபூம் பாவையும் பிறங்கிய நிதியும்
முற்றும் என்னையும் கொடுத்தனன் யான்" என்று மொழிந்தார்.

2957 எல்லை யில்பெருங் களிப்பினுல் இப்பரி சியம்பி
முல்லை வெண்ணகை முகிழ்முலை யாருடன் முடியா
மல்கு செல்வத்தின் வளமையும் மறைவளர் புகலிச்
செல்வ சேவடை யாரெனுஞ் சிந்தையால் மகிழ்ந்தார். கoருச

2958 ஆற்று நாள்களில் அணங்கனார் கன்னிமா டத்தின்
பாற்ற டம்பொழில் மருங்கினிற் பனிமலர் கொய்வான்
போற்று வார்குழற் சேடிய ருடன்புறம் போந்து
கோற்றொ டித்தளிர்க் கையினுல் மூகைமலர் கொய்ய. கoருடு

2959 அன்பர் இன்புறும் ஆர்வத்தின் அளித்தபாங் கல்லால்
பொன்பி றங்குநீர்ப் புகலிகா வலர்க்கிது புணரா
தென்ப துட்கொண்ட பான்மைஓர் எயிற்றிளம் பணியாய்
முன்ப ணைந்தது போலஓர் முள்ளெயிற் றரவம். கoருசு

2960 மேலவல் மாதவிப் பந்தரில் மறைந்துவந் தெய்திச்
செவ்வி நாண்முகை கவர்பொழு தினில்மலர்ச் செங்கை
நவ்வி வாள்விழி நறுநுதற் செறிநெறி கூந்தல்
கொவ்வை வாயவள் முகிழ்விரல் கவர்ந்ததுங்குறித்து. கoருள

பா. இ. 1 தளிரிளங். 2 வண்ணமும். 3 கிளிக்கு

2961 நாலு தந்தமும் என்புறக் கவர்ந்துநஞ் சுகுத்து
மேலை மும்பணம் விரித்துநின் முடிவே டடங்க
நீல வல்விடந் தொடர்ந்தெழ நேரிழை மென்பூ
மாலை தீயிடைப் பட்டது போன்றுளம் மயங்கி. கo0ஆ

2962 தரையில் வீழ்ந்தரச் சேடியர் வெருக்கொடு தாங்கி
வரைசெய் மாடத்தி னுட்கொடு புகுந்திட வணிகர்
உரையும் உள்ளமும் நிலையழிந் துறுதுயர் பெருகக்
கரையில் சுற்றமும் தாமும்முன் கலங்கினர் கலுழ்ந்தார். கo0இக

2963 விடந்தொ லைத்திடும் விஞ்சையிற் பெரியராம் மேலோர்
அடர்ந்த தீவிடம் அகற்றுதற் கணைந்துளார் அனேகர்
திடங்கொள் மந்திரந் தியானபா வகநிலை முட்டி
தொடர்ந்த செய்வினைத் தனித்தனித் தொழிலராய்ச் சூழ்வார்.

2964 மருந்தும் எண்ணில மாறில செய்யவும் வலிந்து
பொருந்து வல்விடம் ஏழுவே கமும்முறை பொங்கிப்
பெருந்த டங்கண்மென் கொடியனுள் தலைமிசைப் பிறங்கித்
திருந்து செய்வினை யாவையுங் கடந்துதீர்ந் திலதால். கo0உக

2965 ஆவி தங்குபல் குறிகளும் அடைவில வாக
மேவு காருட விஞ்சைவித் தகர்''இது விதி''என்
றேவும் வேலையில் உறுபெருஞ் சுற்றமும் அலறிப்
பாவை மேல்விழுந் தழுதனர் படரொலிக் கடல்போல். கo0உஉ

2966 சிந்தை வெந்துய ருறுகிவ நேசரும் தெளிந்து
வந்த செய்வினை இன்மையில் ''வையகத் துள்ளோர்
இந்த வெவ்விடம் ஒழிப்பவர்க் கிகுவன் கண்ட
அந்த மில்நிதிக் குவை''எனப் பறைஅறை வித்தார். கo0உந

2967 மூசி யம்பிய மூன்றுநாள் அகவையின் முற்ற
அரசர் பாங்குளோர் உட்பட அவனிமே லுள்ள
கரையில் கல்வியோர் யாவரும் அணைந்துதங் காட்சிப்
புரையில் செய்கையில் தீர்ந்திடா தொழிந்திடப் போனார். கo0உச

2968 சீரின் மன்னிய சிவநேசர் கண்டுளம் மயங்கிக்
காரின் மல்கிய சோலைசூழ் கழுமலத் தலைவர்
சாரும் அவ்வள வும்உடல் தழலிடை அடக்கிச்
சேர என்பொடு சாம்பல்சே மிப்பது தெளிவார். கo0உரி

2969 ''உடைய பிள்ளையார்க் கெனஇவள் தனைஉரைத் ததனால்
அடைவு துன்புறு வதற்கிலை யாம்நமக்'' கென்றே
இடரொ ழிந்தபின் அடக்கிய என்பொடு சாம்பல்
புடைபெ ருத்தகும் பத்தினிற் புகப்பெய்து வைப்பார். கo0உரு

ப.எ.ப.1 அழுதது, 2 நாவனைன் றனுடைய
3 நிறையெம்பெரும், 4 அவ்வுரை

கன்னி மாடத்தில் முன்புபோற் காப்புற அமைத்துப்
பொன்னும் முத்தும்மேல் அணிகலன் பூந்துகில் சூழ்ந்து
பன்னு தூவியின் பஞ்சணை விரைப்பள்ளி அதன்மேல்
மன்னு பொன்னரி மாலைகள் அணிந்துவைத் தனரால். கo௯ள

மாலை சாந்தெடும் மஞ்சன நாடொறும் வழாமைப்
பாலின் நேர்தரும் போனகம் பகல்விளக் கினைய
சாலு நன்மையில் தகுவன நாடொறுஞ் சமைத்தே
ஏலு மாசெய யாவரும் வியப்பெய்து நாளில். கo௯அ

சண்பை மன்னவர் திருவொற்றி யூர்நகர் சார்ந்து
பண்பு பெற்றநற் றொண்டர்க ளுடன்பணிந் திருந்த
நண்பு மிக்கநல் வார்த்தைஅந் நற்பதி யுள்ளோர்
வண்பு கழ்ப்பெரு வணிகர்க்கு வந்துரை செய்தார். கo௯௯

சொன்ன வர்க்கெலாந் தூசொடு காசுபொன் னளித்தே
இன்ன தன்மையர் எனவொணா மகிழ்சிறந் தெய்தச்
சென்னி வாழ்மதி யார்திரு வொற்றியூர் அளவும்
துன்னு நீள்நடைக் காவணந் துகில்விதா னித்து. கoஎo

மகர தோரணம் வண்குலைக் கமுகொடு கதலி
நிகரில் பல்கொடித் தாமங்கள் அணிபெற நிரைத்து
நகர நீள்மறு கியாவையும் நலம்புனை அணியால்
புகரில் பொன்னுல கிழிந்ததாம் எனப்பொலி வித்தார். கoஎக

இன்ன வாறணி செய்துபல் குறைவறுப் பேவி
"முன்னம் ஒற்றியூர் நகரிடை முத்தமிழ் விரகர்
பொன்னடித்தலந் தலைமிசை புனைவன்"என் றெழுவார்
அந்த கர்ப்பெருந் தொண்டருங் உடன்செல அணைந்தார். கoஎஉ

ஆய வேலையில் அருமறைப் புகலியர் பிரானும்
மேய வொற்றியூர் பணிபவர் வியன்நகர் அகன்று
காயல் சூழ்கரைக் கடல்மயி லாபுரி நோக்கித்
தூய தொண்டர்தங் குழாத்தொடும் எதிர்வந்து தோன்ற.

மாறில் வண்பெரு வணிகரும் தொண்டரும் மலர்ந்த
நீறு சேர்தவக் குழாத்தினை நீளிடைக் கண்டே
"ஆறு சூடினர் திருமக னர்அணைந் தார்"என்
றீறி லாதசீர் மகிழ்ச்சியி னல்விழுந் திறைஞ்ச. கoஎச

காழி நாடரும் கதிர்மணிச் சிவிகையின் றிழிந்து
சூழி ரும்பெருந் தொண்டர்முன் தொழுதெழுந் தருளி
வாழி மாதவர் வணிகர்செய் திறஞ்சொலக் கேட்டே
ஆழி சூழ்மயி லாபுரித் திருநகர் அணைந்தார். கoஎடு

பா.பே./. பல்லவனம். தி.டவெற்கு வந்து.
3 ஆய 4 வணிகர்க்கு ஏற்ப.

அத்தி றத்துமுன் நிகழ்ந்தது திருவுள்ளத் தமைத்துச்
சித்தம் இன்புறு சிவநேசர் தஞ்செயல் வாய்ப்பப்
பொய்த்த வச்சமண் சாக்கியர் புறத்துறை அழிய
வைத்த அப்பெருங் கருணைநோக் கால்மகிழ்ந் தருளி. கoஎசு

கங்கை வார்சடை யார்கபா லீச்சரத் தணைந்து
துங்க நீள்சுடர்க் கோபுரந் தொழுதுபுக் கருளி
மங்கை பங்கர்தம் கோயிலை வலங்கொண்டு வணங்கிச்
செங்கை சென்னிமேற் குவிந்திடத் திருமுன்பு சேர்ந்தார்.

தேவர் தேவனைத் திருக்கபா லீச்சரத் தமுதைப்
பாவை பாகனைப் பரிவுறு பண்பினைப் பரவி
மேவு காதலின் விரும்பிய விசைவினுல் விழுந்து
நாவின் வாய்மையிற் போற்றினர் ஞானசம் பந்தர். கoஎஅ

போற்றி மெய்யருட் டிறம்பெறு புரிவுடன் வணங்கி
நீற்றின் மேனியில் நிறைமயிர்ப் புளகங்கள் நெருங்கக்
கூற்ற டர்த்தவர் கோயிலின் புறம்புபோந் தருளி
ஆற்றும் இன்னருள் வணிகர்மேற் செலஅருள் செய்வார். கoஎக

"ஒருமை உய்த்தநல் லுணர்வினீர்! உலகவர் அறிய
அருமை யாற்பெறு மகள்என்பு நிறைத்தஅக் குடத்தைப்
பேருமயா னத்து நடம்புரி வார்பெருங் கோயில்
திரும திற்புற வாய்தலிற் கொணர்"கென்று செப்ப. கoஅo

அந்த மில்பெரு மகிழ்ச்சியால் அவனிமேற் பணிந்து
வந்து தந்திரு மனையினில் மேவிஅம் மருங்கு
கந்த வார்பொழிற் கன்னிமா டத்தினிற் புக்கு
வெந்த சாம்பலோ டென்புசேர் குடத்தைவே றெடுத்து. கoஅக

மூடு பன்மணிச் சிவிகையுட் பெய்துமுன் போத
மாடு சேடியர் இனம்புடை சூழ்ந்துவந் தணைய
ஆடல் மேவினர் திருக்கபா லீச்சரம் அணைந்து
நீடு கோபுரத் தெதிர்மணிச் சிவிகையை நீக்கி. கoஅஉ

அங்க ணுளர்தம் அபிமுகத் தினில்அடி உறைப்பால்
மங்கை என்புசேர் குடத்தினை வைத்துமுன் வணங்கப்
பொங்கு நீள்புனற் புகலிகா வலர்புவ னத்துத்
தங்கி வாழ்பவர்க் குறுதியாம் நிலைமைசா திப்பார். கoஅங

மாடம் ஓங்கிய மயிலைமா நகருளார் மற்றும்
நாடு வாழ்பவர் நன்றியில் சமயத்தி னுள்ளோர்
மாடு சூழ்ந்துகாண் பதற்குவந் தெய்தியே மலிய
நீடு தேவர்கள் ஏனையோர் விசும்பிடை நெருங்க. கoஅச

தோண்டர் தம்பெருங் குழாம்புடை சூழ்தரத் தொல்லை
அண்டர் நாயகர் கோபுர வாயில்நேர் அணைந்து
வண்டு வார்குழ லாள்என்பு நிறைந்தமட் குடத்தைக்
கண்டு தம்பிரான் கருணையின் பெருமையே கருதி. கoஅரி

''இந்த மாகிலத் திறந்துளோர் என்பினைப் பின்னும்
நந்து நன்னெறிப் படுத்திட நன்மையாந் தன்மை
அந்த என்பொடு தொடர்ச்சியாம்'' எனஅருள் நோக்கால்
சிந்தும் அங்கம்அங் குடையபூம் பாவைபோ செப்பி. கoஅசு

'' மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணி னுல்அவர் நல்விழாப் போலிவுகண் டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வரு''கென உரைப்பார். கoஅள

மன்னு வார்சடை யாரைமுன் தொழுது ''மட்டிட்ட''
என்னும் நற்பதி கத்தினிற் ''போதியோ'' என்னும்
அன்ன மெய்த்திரு வாக்கெனும் அமுதம்அவ் வங்கம்
துன்ன வந்துவந் தருவமாய்த் தொக்கதக் குடத்துள். கoஅஅ

ஆன தன்மையின் அத்திருப் பாட்டினில் அடைவே
போன வாயுவும் வடிவமும் பொலிவொடு நிரம்பி
ஏனை அக்குடத் தடங்கிமுன் னிருந்தெழு வதன்முன்
ஞான போனகர் பின்சமண் பாட்டினை நவில்வார். கoஅகூ

''தேற்ற மில்சமண் சாக்கியத் திண்ணரிச் செய்கை
ஏற்ற தன்றென எடுத்துரைப் பார்''என்ற போது
கோற்றொ டிச்செங்கை தோற்றிடக் குடம்உடைந் தெழுவாள்
போற்று தாமரைப் போதவிழ்ந் தெழுந்தனள் போன்றுள். கoகூo

எடுத்த பாட்டினில் வடிவுபெற் றிருநான்கு திருப்பாட்
டடுத்த அம்முறைப் பன்னிரண் டாண்டள வணைந்து
தொடுத்த வெஞ்சமண் பாட்டினில் தோன்றிடக் கண்டு
விடுத்த வேட்கையர் திருக்கடைக் காப்புமேல் விரித்தார். கoகூக

வேறு

ஆங்கனம் எழுந்து நின்ற அணங்கினை நோக்கு வார்கள்
''ஈங்கிது காணீர்'' என்ன அற்புதம் எய்தும் வேலைப்
பாங்குசூழ் தொண்ட ராளனார் ''அரகர'' என்னப் பார்மேல்
ஓங்கிய ஓசை உம்பர் நாட்டினை உற்ற தன்றே. கoகூஉ

தேவரும் முனிவர் தாமும் திருவருட் சிறப்பு நோக்கிப்
பூவரு விசைகொள் மாரி பொழிந்தனர் ஒழிந்த மண்ணோர்

பா.வே.1 ஆராய்ச்சி.

யாவரும் இருந்த வண்ணம் எம்பிரான் கருணை என்றே
மேவிய கைகள் உச்சி மேற்குவித் திறைஞ்சி வீழ்ந்தார். கoகூஉ

அங்கவள் உருவங் காண்பார் அதிசயம் மிகவும் எய்திப்
பங்கமுற் றுரே போன்றார் பரசம யத்தி னுள்ளோர்
"எங்குள செய்கை தான்மற் றென்செய்த வா"றி தென்று
சங்கையாம் உணர்வு கொள்ளும் சமணர்தள் ளாடி வீழ்ந்தார். கoகூச

கன்னிதன் வனப்புத் தன்னைக் கண்களால் முடியக் காணர்
முன்னுறக் கண்டார்க் கெல்லாம் மொய்கருங் குழலின் பாரம்
மன்னிய வதன செந்தா மரையினிற் கரிய வண்டு
துன்னிய ஒழுங்கு துற்ற சூழல்போல் இருண்டு தோன்ற. கoகூரி

பாங்கணி சுரும்பு மொய்த்த பணிமலர் அளகப் பங்தி
தேங்கமழ் ஆரஞ் சேருந் திருநுதல் விளக்கம் நோக்கில்
பூங்கொடிக் கழகின் மாரி பொழிந்திடப் புயற்கீ ழிட்ட
வாங்கிய வான வில்லின் வளரொளி வனப்பு வாய்ப்ப. கoகூசு

புருவமென் கொடிகள் பண்டு புரமெரித் தவர்தம் நெற்றி
ஒருவிழி எரியின் நீறுய் அருள்பெற உளனுங் காமன்
செருவமும் தனுவ தொன்றும் சேமவில் லொன்றும் ஆக
இருபெருஞ் சிலைகள் முன்கொண் டெழுந்தன போல ஏற்ப. கoகூள

மண்ணிய மணியின் செய்ய வளரொளி மேனி யாள்தன்
கண்ணிணை வனப்புக் காணில் காமரு வதனத் திங்கள்
தண்ணளி விரிந்த சோதி வெள்ளத்தில் தகைவின் நீள
ஒண்ணிறக் கரிய செய்ய கயலிரண் டொத்து லாவ. கoகூஅ

பணிவளர் அல்குல் பாவை நாசியும் பவள வாயும்
நணியபே ரொளியில் தோன்றும் நலத்தினை நாடு வார்க்கு
மணிநிறக் கோபங் கண்டு மற்றது வவ்வத் தாழும்
அணிநிறக் காம ரூபி அணைவதாம் அழகு காட்ட. கoகூக

இளமயில் அனைய சாயல் ஏந்திழை குழைகொள் காது
வளமிகு வனப்பி னாலும் வடிந்ததா ஞடைமை யாலும்
இளரொளி மகர வேறு கெழுமிய தன்மை யாலும்
அளவில்சீர் அனங்கன் வென்றிக் கொடியிரண் டனைய வாக. ககoo

விற்பொலி நுதலக் கோவை விளங்கிய கழுத்து மீது
பொற்பமை வதன மாகும் பதுமநன் நிதியம் பூத்த
நற்பெரும் பணிலம் என்னும் நன்னிதி போன்று தோன்றி
அற்பொலி கண்டர் தந்த அருட்கடை யாளங் காட்ட. ககoக

எரிஅவிழ் காந்தள் மென்பூத் தலைதொடுத் திசைய வைத்துத்
திரள்பெறச் சுருக்குஞ் செச்சை மாலையோ தெரியின் வேறு

பா. ஓ. உளரொளி மேனி. இ. அனைய நாம்

கருங்கெடுங் கயற்கண் மங்கை கைகளால் காந்தி வெள்ளம்
அருகிழிந் தனவோ என்னும் அதிசயம் வடிவிற் றோன்ற. ககஅஉ

3004 ஏர்கெழு மார்பிற் பொங்கும் ஏந்திளங் கொங்கை நாகக்
கார்கெழு விடத்தை நீக்குங் கவுணியர் தலைவர் நோக்கால்
ஆர்திரு வருளிற் பூரித் தடங்கிய அமுத கும்பச்
சீர்கெழு முகிழைக் காட்டுஞ் செவ்வியிற் றிகழ்ந்து தோன்ற. ககஅக

காமவேள் என்னும் வேடன் உந்தியிற் கரந்து கொங்கை
நேமியம் புட்கள் தம்மை அகப்பட நேரி தாய
தாமநீள் கண்ணி சேர்த்த சலாகைதூக் கியதே போலும்
வாமமே கலைசூழ் வல்லி மருங்கின்மேல் உரோம வல்லி. ககஅச

3005 பிணியவிழ் மலர்மென் கூந்தல் பெண்ணமு தனையாள் செம்பொன்
அணிவளர் அல்குல் தங்கள் அரவுசெய் பிழையால் அஞ்சி
மணிகிளர் காஞ்சி சூழ்ந்து வனப்புடை அல்கு லாகிப்
பணியுல காளுஞ் சேடன் பணம்விரித் தடைதல் காட்ட. ககஅடு

3006 வரிமயில் அனைய சாயல் மங்கைபொற் குறங்கின் மாமை
கரிஇளம் பிடிக்கை வென்று கதலிமென் தண்டு காட்டத்
தெரிவுறு மவர்க்கு மென்மைச் செழுமுழந் தாளின் செவ்வி
புரிவுறு பொற்பந் தென்னப் பொலிந்தொளி விளங்கிப் பொங்க.

3010 பூவலர் நறுமென் கூந்தல் பொற்கொடி கணைக்கால் காமன்
ஆவகா ழிகையே போலும் அழகினில் மேன்மை எய்த
மேவிய செம்பொற் றட்டின் வனப்பினை மீதிட் டென்றும்
ஓவியர்க் கெழுத ஒண்ணுப் பரட்டொளி ஒளிர்வுற் றோங்க. ககஅள

3011 கற்பகம் ஈன்ற செவ்விக் காமரு பவளச் சோதிப்
பொற்றிரள் வயிரப் பத்திப் பூந்துணர் மலர்ந்த போலும்
நற்பதம் பொலிவு காட்ட ஞாலமும் விசும்பும் எல்லாம்
அற்புதம் எய்தத் தோன்றி அழகினுக் கணியாய் நின்றுள். ககஅஅ

3012 எண்ணிலாண் டெய்தும் வேதாப் படைத்தவள் எழிலின் வெள்ளம்
நண்ணுநான் முகத்தால் கண்டான் அவளினும் நல்லாள் தன்பால்
புண்ணியப் பதிஞ ருண்டு பேர்பெறும் புகலி வேந்தர்
கண்ணுதல் கருணை வெள்ளம் ஆயிர முகத்தாற் கண்டார். ககஅக

வேறு

3013 இன்னணம் விளங்கிய ஏர்கொள் சாயலாள்
தன்னைமுன் கண்ணுறக் கண்ட தாதையார்
பொன்னணி மாளிகைப் புகலி வேந்தர்தாள்
சென்னியிற் பொருந்தமுன் சென்று வீழ்ந்தனர். ககஆ

பா.வே.: வடமொழியில் 3 ஆவது வரி இல்லை.

3014 அணங்கினும் மேம்படும் அன்னம் அன்னவள்
பணம்புரி அரவரைப் பரமர் முன்பணிந்
திணங்கிய முகில்மதில் சண்பை ஏந்தலை
வணங்கியே நின்றனள் மண்ணு ளோர்தொழ. ககசக

3015 சீர்கெழு சிவநேசர் தம்மை முன்னமே
கார்கெழு சோலைசூழ் காழி மன்னவர்
"ஏர்கெழு சிறப்பில்நும் மகளைக் கொண்டினிப்
பார்கெழு மனையினிற் படர்மின்" என்றலும். ககஉ

3016 பெருகிய அருள்பெறும் வணிகர் பிள்ளையார்
மருவுதா மரையடி வணங்கிப் போற்றினின்
"றருமையால் அடியனேன் பெற்ற பாவையைத்
திருமணம் புணர்ந்தருள் செய்யும்" என்றலும். ககஙூ

3017 மற்றவர் தமக்குவண் புகலி வாணர்"நீர்
பெற்றபெண் விடத்தினுல் வீந்த பின்னையான்
கற்றைவார் சடையவர் கருணை காண்வர
உற்பவிப் பித்தலால் உரைத கா"தென. ககசச

3018 வணிகருஞ் சுற்றமும் மயங்கிப் பிள்ளையார்
அணிமலர் அடியில்வீழ்ந் தரற்ற ஆங்கவர்
தணிவில்நீள் பெருந்துயர் தணிய வேதநூல்
துணிவினை அருள்செய்தார் தூய வாய்மையார். ககசடு

3019 தேள்ளுநீ தியின்முறை கேட்ட சீர்க்கிளை
வெள்ளமும் வணிகரும் வேட்கை தீத்திடப்
பள்ளநீர்ச் செலவெனப் பரமர் கோயிலின்
உள்ளெழுந் தருளினர் உடைய பிள்ளையார். ககசசு

3020 பான்மையால் வணிகரும் "பாவை தன்மணம்
ஏனையோர்க் கிசைகிலேன்" என்று கொண்டுபோய்
வானுயர் கன்னிமா டத்து வைத்தனர்
தேனமர் கோதையும் சிவத்தை மேவினள். ககஎள

வேறு

3021 தேவர்பிரான் அமர்ந்தருளுந் திருக்கபா லீச்சரத்து
மேவியஞா னத்தலைவர் விரிஞ்சன்முதல் எவ்வுயிர்க்கும்
காவலனர் பெருங்கருணை கைதந்தபடிபோற்றிப்
பாவலர்செந் தமிழ்பாடிப் பன்முறையும் பணிந்தெழுவார். ககஅஅ

உச பா.தே ப.1 உற் பதிக் தீதிலால்: உற் பதிக் தீதிலால்
2 பதி யனைரும்.

3022 தொழுதுபுறம் போந்தருளித் தொண்டர்குழாம் புடைசூழப்
பழுதில்புகழ்த் திருமயிலைப் பதியில்அமர்ந் தருளுநாள்
முழுதுலகுந் தரும்இறைவர் முதற்றூனம் பலஇறைஞ்ச
அழுதுலகை வாழ்வித்தார் அப்பதியின் மருங்ககல்வார். ககஉக

3023 திருத்தொண்டர் அங்குள்ளார் விடைகொள்ளச் சிவநேசர்
வருத்தம்அகன் றிடமதுர மொழிஅருளி விடைகொடுத்து
கிருத்தர்உறை பிறபதிகள் வணங்கிப்போய் நிறைகாதல்
அருத்தியொடுந் திருவான்மி யூர்பணிய அணைவுற்றார். ககஉo

3024 திருவான்மி யூர்மன்னுந் திருத்தொண்டர் சிறப்பெதிர
வருவார்மங் கலஅணிகள் மறுகுநிரைத் தெதிர்கொள்ள
அருகாக இழிந்தருளி அவர்வணங்கத் தொழுதன்பு
தருவார்தங் கோயில்மணித் தடநெடுங்கோ புரஞ்சார்ந்தார். ககஉக

3025 மிக்குயர்ந்த கோபுரத்தை வணங்கிவியன் திருமுன்றில்
புக்கருளிக் கோயிலினைப் புடைவலங்கொண் டுள்ளணைந்து
கொக்கிறகும் மதிக்கொழுந்தும் குளிர்புனலும் ஒளிர்கின்ற
செக்கர்நிகர் சடைமுடியார் சேவடியின் கீழ்த்தாழ்ந்தார். ககஉஉ

3026 தாழ்ந்துபல முறைபணிந்து தம்பிரான் முன்னின்று
வாழ்ந்துகளி வரப்பிறவி மருந்தான பெருந்தகையைச்
சூழ்ந்தஇசைத் திருப்பதிகச் சொன்மாலை வினுவுரையால்
வீழ்ந்தபெருங் காதலுடன் சாத்திமிக இன்புற்றார். ககஉங

3027 பரவிவரும் ஆனந்தம் நிறைந்ததுளி கண்பனிப்ப
விரவுமயிர்ப் புளகங்கள் மிசைவிளங்கப் புறத்தணைவுற்
றரவநெடுந் திரைவேலை அணிவான்மி யூர்அதனுள்
கிரபுரத்துப் புரவலனார் சிலநாள்அங் கினிதமர்ந்தார். ககஉச

3028 அங்கணமர் வார்உலகா ளுடையாரை அருந்தமிழின்
பொங்கும்இசைப் பதிகங்கள் பலபோற்றிப் போந்தருளிக்
கங்கையணி மணிமுடியார் பதிபலவுங் கலந்திறைஞ்சிச்
செங்கண்விடைக் கொடியார்தம் இடைச்சுரத்தைச் சேர்வுற்றார்.

3029 சென்னிஇள மதியணிந்தார் மருவுதிரு இடைச்சுரத்து
மன்னுதிருத் தொண்டர்குழாம் எதிர்கொள்ள வந்தருளி
நன்னெடுங்கோ புரம்இறைஞ்சி உள்புகுந்து நற்கோயில்
தன்னைவலங் கொண்டணைந்தார் தம்பிரான் திருமுன்பு. ககஉசு

3030 கண்டபொழு தேகலந்த காதலால் கைதலைமேல்
கொண்டுதலம் உறவிழுந்து குலவுபெரு மகிழ்ச்சியுடன்
மண்டியபேர் அன்புருகி மயிர்முகிழ்ப்ப வணங்கிஎழுந்
தண்டர்பிரான் திருமேனி வண்ணங்கண் டதிசயித்தார். ககஉஎ

3031 "இருந்தஇடைச் சுரம்மேவும் இவர்வண்ணம் என்னே!" என்
றருந்தமிழின் திருப்பதிகத் தலர்மாலை கொடுபரவித்
திருந்துமனங் கரைந்துருகத் திருக்கடைக்காப் புச்சாத்திப்
பெருந்தனிவாழ் வினைப்பெற்றூர் பேருலகின் பேரூர். ககஉஅ

3032 நிறைந்தாரா வேட்கையினுல் நின்றிறைஞ்சிப் புறம்போந்தங்
குறைந்தருளிப் பணிகின்றூர் உமைபாகர் அருள்பெற்றுச்
சிறந்ததிருத் தொண்டருடன் எழுந்தருளிச் செந்துருத்தி
அறைந்(து)அளிகள் பயில்சாரல் திருக்கழுக்குன் றினைஅணைந்தார்.

3033 சென்றணையும் பொழுதின்கண் திருத்தொண்டர் எதிர்கொள்ளப்
பொன்திகழும் மணிச்சிவிகை இழிந்தருளி உடன்போந்து
மன்றல்விரி நறுஞ்சோலைத் திருமலையை வலங்கொண்டு
மின்தயங்குஞ் சடையாரை விருப்பினுடன் பணிகின்றூர். ககஉ0

3034 திருக்கழுக்குன் றத்தமர்ந்த செங்கனகத் தனிக்குன்றைப்
பெருக்கவளர் காதலினுல் பணிந்தெழுந்து பேராத
கருத்தினுடன் "காதல்செயுங் கோயில்கழுக் குன்"றென்று
திருப்பதிகம் புனைந்தருளிச் சிந்தைநிறை மகிழ்வுற்றூர். ககஉக

3035 இன்புற்றங் கமர்ந்தருளி ஈறில்பெருந் தொண்டருடன்
மின்பெற்ற வேணியினூர் அருள்பெற்றுப் போந்தருளி
என்புற்ற மணிமார்பர் எல்லையிலா ஆட்சிபுரிந்
தன்புற்று மகிழ்ந்ததிரு அச்சிறுபாக் கத்தணைந்தார். ககஉஉ

3036 ஆதிமுதல் வரைவணங்கி "ஆட்சிகொண்டார்" எனமொழியும்
கோதில்திருப் பதிகஇசை குலாவியபா டலிற்போற்றி
மாதவத்து முனிவருடன் வணங்கிமகிழ்ந் தின்புற்றுத்
தீதகற்றுஞ் செய்கையினூர் சின்னளங் கமர்ந்தருளி. ககஉங

3037 ஏறணிந்த வெல்கொடியார் இனிதமர்ந்த பதிபிறவும்
நீறணிந்த திருத்தொண்டர் எதிர்கொள்ள நேர்ந்திறைஞ்சி
வேறுபல நதிகானங் கடந்தருளி விரிசடையில்
ஆறணிந்தார் மகிழ்ந்ததிரு அரசிலியை வந்தடைந்தார். ககஉச

3038 அரசிலியை அமர்ந்தருளும் அங்கணரை சைப்பணிந்து
பரசிஎழு திருப்புறவார் பனங்காட்டூர் முதலாய
விரைசெய்மலர்க் கொன்றையினூர் மேவுபதி பலவணங்கித்
திரைசெய்நெடுங் கடலுடுத்த திருத்தில்லை நகரணைந்தார். ககஉடு

3039 எல்லையில்ஞா னத்தலைவர் எழுந்தருள எதிர்கொள்வார்
தில்லையில்வாழ் அந்தணர்மெய்த் திருத்தொண்டர் சிறப்பிலைடு
மல்கிஎதிர் பணிந்திறைஞ்ச மணிமுத்தின் சிவிகைஇழிந்
தல்குபெருங் காதலுடன் அஞ்சலிகொண் டணைகின்றூர். ககஉக

பா.பே.நி. கரைவந்தருகி. 1. தமிழ்மா ல. 3. அந்தணியர்

திருவெல்லை யினைப்பணிந்து சென்றணைவார் சேண்விசும்பை
மருவிவிளங் கொளிதழைக்கும் வடதிசைவா யிலைவணங்கி
உருகுபெருங் காதலுடன் உட்புகுந்து மறையினெவி
பெருகிவளர் மணிமாடப் பெருந்திருவீ தியைஅணைந்தார். ககஙஎ

நிலம்மலியுந் திருவீதி பணிந்தெழுந்து நற்றவர்தம்
குலம்நிறைந்த திருவாயில் குவித்தமலர்ச் செங்கையொடு
தலமுறமுன் தாழ்ந்தெய்தித் தமனியமா ளிகைமருங்கு
வலமுறவந் தோங்கியபே ரம்பலத்தை வணங்கினார். ககஙஅ

வணங்கிமிக மனமகிழ்ந்து மாலயனுந் தொழும்பூத
கணங்கள்மிடை திருவாயில் பணிந்தெழுந்து கண்களிப்ப
அணங்குதனிக் கண்டருள அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கடந்த தனிக்கூத்தர் பெருங்கூத்துக் கும்பிடுவார். ககஙக

தொண்டர்மனம் பிரியாத திருப்படியைத் தொழுதிறைஞ்சி
மண்டுபெருங் காதலினுல் நோக்கிமுகம் மலர்ந்தெழுவார்
அண்டமெலாம் நிறைந்தெழுந்த ஆனந்தத் துள்ளலோங்கு
கண்டபே ரின்பத்தின் கரையில்லா நிலைஅணைந்தார். ககசO

அந்நிலைமை அடைந்துதிளைத் தாங்கெய்தாக் காலத்தில்
மன்னுதிரு அம்பலத்தை வலங்கொண்டு போந்தருளிப்
பொன்னணிமா ளிகைவீதிப் புறத்தணைந்து போதுதொறும்
இன்னிசைவண் தமிழ்பாடிக் கும்பிட்டங் கினிதிருந்தார். ககசக

திருந்தியசீர்த் தாதையார் சிவபாத விருதயரும்
பொருந்துதிரு வளர்புகலிப் பூசுரரும் மாதவரும்
"பெருந்திருமா லயன்போற்றும் பெரும்பற்றப் புலியூரில்
இருந்தமிழா கரர்அணைந்தார்" எனக்கேட்டு வந்தணைந்தார். ககசஉ

ஆங்கவரைக் கண்டுசிறப் பளித்தருளி அவரோடும்
தாங்கரிய காதலினுல் தம்பெருமான் கழல்வணங்க
ஓங்குதிருத் தில்லைவாழ் அந்தணரும் உடனுகத்
தேங்கமழ்கொன் றைச்சடையார் திருச்சிற்றம் பலம்பணிந்தார். ககசங

தென்புகலி அந்தணரும் தில்லைவாழ் அந்தணர்முன்
அன்புநெறி பெருக்குவித்த ஆண்டகையார் அடிபோற்றிப்
பொன்புரிசெஞ் சடைக்கூத்தர் அருள்பெற்றுப் போந்தருளி
இன்புறுதோ ணியில்அமர்ந்தார் தமைவணங்க எழுந்தருள. ககசச

நற்றவர்தங் குழாத்தோடும் நம்பர்திரு நடஞ்செய்யும்
பொற்பதியின் திருவெல்லை பணிந்தருளிப் புறம்போந்து
பெற்றம்உயர்த் தவர்அமர்ந்த பிறபதியும் புக்கிறைஞ்சிக்
கற்றவர்கள் ப்ரவுதிருக் கழுமலமே சென்றடைவார். ககசரு

பா.வே.எ.மெய்யாட்சி ஓ.புகழேந்தி, கலைமகள்.

பல்பதிகள் கடந்தருளிப் பன்னிரண்டு பேர்படைத்த
தொல்லிவளப் பூந்தராய் தூரத்தே தோன்றுதலும்
மல்குதிரு மணிமுத்தின் சிவிகைஇழிந் தெதிர்வணங்கிச்
செல்வமிகு பதியதன்மேல் திருப்பதிகம் அருள்செய்வார். ககசசு

மன்னும்இசை மொழி "வண்டார் குழல்அரிவை" என்றெடுத்து
மின்னுசுடர் மாளிகை "விண் தாங்குவபோல் வேணுபுரம்"
என்னும்இசைச் சொன்மாலை எடுத்தியம்பி எழுந்தருளிப்
புன்னைமணங் கமழ்புறவப் புறம்பணையில் வந்தணைந்தார். ககசள

வாழிவளர் புறம்பணையின் மருங்கணைந்து வரிவண்டு
சூழுமலர் நறுந்தீப தூபங்க ளுடன்தொழுது
"காழிநகர் சேர்மின்" எனக் கடைமுடிந்த திருப்பதிகம்
ஏழிசையி னுடன்பாடி எயின்மூதூ ருட்புகுந்தார். ககசஅ

சேணுயர்ந்த திருத்தோணி வீற்றிருந்த சிவபெருமான்
தாணினைந்த ஆதரவின் தலைப்பாடு தணியுன்னி
நீணிலைக்கோ புரம்அணைந்து நேரிறைஞ்சிப் புக்கருளி
வாணிலவு பெருங்கோயில் வலங்கொண்டு முன்பணிந்தார். ககசசு

முன்னிறைஞ்சித் திருவருளின் முழுநோக்கம் பெற்றேறிப்
பொன்னிமயப் பாவையுடன் புணர்ந்திருந்த புராதனரைச்
சென்னிமிசைக் குவித்தகரங் கொடுவிழுந்து தீளைத்தெழுந்து
மன்னுபெரு வாழ்வெய்தி மனங்களிப்ப வணங்குவார். ககடO

பரவுதிருப் பதிகங்கள் பலவும்இசை யினிற்பாடி
விரவியகண் ணருவிநீர் வெள்ளத்திற் குளித்தருளி
அரவணிந்தார் அருள்பெருகப் புறம்பெய்தி அன்பருடன்
சிரபுரத்துப் பெருந்தகையார் தந்திருமா ளிகைசேர்ந்தார். ககடக

மாளிகையின் உள்ளணைந்து மறையவர்கட் கருள்புரிந்து
தாள்பணியும் பெருங்கிளைக்குத் தகுதியினுல் தலையளிசெய்
தாளுடைய தம்பெருமான் அடியவர்க ளுடன்அமர்ந்து
நீளவரும் பேரின்பம் மிகப்பெருக நிகழுநாள். ககடஉ

காழிநா டுடையபிரான் கழல்வணங்கி மகிழ்வெய்த
ஆழியினும் மிகப்பெருகும் ஆசையுடன் திருமுருகர்
வாழிதிரு நீலகக்கர் முதற்றொண்டர் மற்றெனையோர்
சூழுநெடுஞ் சுற்றமுடன் தோணிபுரந் தொழுதணைந்தார். ககடங

வந்தவரை எதிர்கொண்டு மனமகிழ்ந்து சண்பையர்கோன்
அந்தமில்சீர் அடியார்கள் அவரோடும் இனிதமர்ந்து
சுந்தரவா ரணங்கினுடன் தோணியில்வீற் றிருந்தாரைச்
செந்தமிழின் பந்தத்தால் திருப்பதிகம் பலபாடி. ககடச

3058 பெருமகிழ்ச்சி யுடன்செல்லப் பெருந்தவத்தால் பெற்றவரும்
மருவுபெருங் கிளையான மறையவரும் உடன்கூடித்
"திருவளர்ஞா னத்தலைவர் திருமணஞ்செய் தருளுதற்குப்
பருவமிது" என்றெண்ணி அறிவிக்கப் பாங்கணைந்தார். ககருடு

3059 நாட்டுமறை முறையொழுக்கம் ஞானபோ னகருக்கும்
கூட்டுவது மனங்கொள்வார் "கோதில்மறை நெறிச்சடங்கு
காட்டவரும் வேள்விபல புரிவதற்கோர் கன்னிதனை
வேட்டருள வேண்டும்"என விண்ணப்பஞ் செய்தார்கள். ககருசு

3060 மற்றவர்தம் மொழிகேட்டு மாதவத்தின் கொழுந்தனையார்
சுற்றமுறு பெரும்பாசத் தொடர்ச்சிவிடு நிலைமையராய்ப்
பெற்றம்உயர்த் தவர்அருள்முன் பெற்றதிலுல் இசையாது
"மூற்றியதா யினுங்கூடா" தென்றவர்முன் மொழிந்தருள. ககருள

3061 அருமறையோர் அவர்பின்னுங் கைதொழுதங் கறிவிப்பார்
"இருநிலத்து மறைவழக்கம் எடுத்தீர்நீர் ஆதலினுல்
வருமுறையால் அறுதொழிலின் வைதிகமா நெறியொழுகும்
திருமணஞ்செய் தருளுதற்குத் திருவுள்ளஞ் செய்யும்"என. ககருஅ

3062 மறைவாழ அந்தணர்தம் வாய்மையொழுக் கம்பெருகும்
துறைவாழச் சுற்றத்தார் தமக்கருளி உடன்படலும்
பிறைவாழுந் திருமுடியிற் பெரும்புனலோ டரவணிந்த
கறைவாழுங் கண்டத்தார் தமைத்தொழுது மனங்களித்தார். ககருக

3063 திருஞான சம்பந்தர் திருவுள்ளஞ் செய்ததற்குத்
தருவாய்மை மறையவரும் தாதையரும் தாங்கரிய
பெருவாழ்வு பெற்றுராய்ப் "பிஞ்ஞகனர் அருள்"என்றே
உருகாகின் றின்பமுறும் உளம்மகிழ்ச்சி எய்துவார். ககசுO

3064 ஏதமில்சீர் மறையவரில் ஏற்றகுலத் தோடிசைவால்
நாதர்திருப் பெருமணத்து நம்பாண்டார் நம்பிபெறும்
காதலியைக் காழிநா டுடையபிரான் கைப்பிடிக்கப்
போதுமவர் பெருந்தன்மை எனப்பொருந்த எண்ணினுர். ககசுக

3065 திருஞான சம்பந்தர் சீர்பெருக மணம்புணரும்
பெருவாழ்வு திருத்தொண்டர் மறையவர்கள் மிகப்பேண
வருவாரும் பெருஞ்சுற்றம் மகிழ்சிறப்ப மகட்பேசத்
தருவார்தண் பணைநல்லூர் சார்கின்றூர் தாதையார். ககசுஉ

3066 மிக்கதிருத் தொண்டர்களும் வேதியரும் உடன்ஏகத்
திக்குநிகழ் திருநல்லூர்ப் பெருமணத்தைச் சென்றெய்தத்
தக்கபுகழ் நம்பாண்டார் நம்பிதாம் அதுகேட்டுச்
செக்கர்முடிச் சடையார்தந் திருப்பாதந் தொழுதெழுவார். ககசுந

பா.பே.1. அறுபத்தும். 2. மணஞ்செய்தருள் வாதி. 3 மிகப்பேண.
4 மகிழ்சிறப்ப.

ஒப்பரிய பேருவகை ஒங்கிஎழும் உள்ளத்தால்
அப்புகிறை குடம்விளக்கு மறுகெல்லாம் அணிபெருக்கிச்
செப்பரிய ஆர்வமிகு பெருஞ்சுற்றத் தொடுஞ்சென்றே
"எப்பொருளும் எய்தினேன்" எனத்தொழுதங் கெதிர்கொண்டார்.

எதிர்கொண்டு மணிமாடத் தினில்எய்தி இன்பமுறு
மதுரமொழி பலமொழிந்து வரன்முறையால் சிறப்பளிப்பச்
சதுர்முகனின் மேலாய சண்பைவரு மறையவரும்
முதிருணர்வின் மாதவரும் அணைந்ததிறம் மொழிகின்றார். ககசுடு

"ஞானபோ னகருக்கு நற்றவத்தின் ஒழுக்கத்தால்
ஊனமில்சீ லத்(து)உம்பால் மகட்பேச வந்த"தென
"ஆனபே றந்தணர்பால் அருளுடைமை யாம்"என்று
வானளவு நிறைந்தபெரு மனமகிழ்ச்சி யொடுமொழிவார். ககசுசு

"உம்முடைய பெருந்தவத்தால் உலகனைத்தும் ஈன்றளித்த
அம்மைதிரு மூலைப்பாலிற் குழைத்தஆ ரமுதுண்டார்க்
கெம்முடைய குலக்கொழுந்தை யாம்உய்யத் தருகின்றோம்
வம்மின்"என உரைசெய்து மனமகிழ்ந்து செலவிடுத்தார். ககசுள

பேருவகை யால்இசைவு பெற்றவர்தாம் மீண்டணைந்து
காருலவு மலர்ச்சோலைக் கழுமலத்தை வந்தெய்திச்
சீருடைய பிள்ளையார்க் கவர்கோர்ந்த படிசெப்பிப்
பாருலவுந் திருமணத்தின் போன்மையினைத் தொடங்குவார். ககசுஅ

திருமணஞ்செய் கலியாணத் திருநாளும் திகழ்சிறப்பின்
மருவியஓ ரையும்கணித மங்கலநூ லவர்வகுப்பப்
பெருகுமண நாளோலை பெருஞ்சிறப்பி னுடன்போக்கி
அருள்புரிந்த நன்னாளில் அணிமுளைப்பா லிகைவிதைத்தார். ககசுசு

செல்வமலி திருப்புகலிச் செழுந்திருவீ திகழிளல்லாம்
மல்குகிறை குடம்விளக்கு மகரதோ ரணம்நிரைத்தே
எல்லையிலா ஒளிமுத்து மாலைகள்எங் கணுநாற்றி
அல்குபெருந் திருஓங்க அணிசிறக்க அலங்கரித்தார். ககளஏ

அருந்தவத்தோர் அந்தணர்கள் அயலுள்ளோர் தாம்உய்யப்
பொருந்துதிரு நாளோலை பொருவிறந்தார் கொண்டணையத்
திருந்துபுகழ் நம்பாண்டார் நம்பிசிறப் பெதிர்கொண்டு
வருந்தவத்தான் மகட்கொடுப்பார் வதுவைவினை தொடங்குவார்.

மன்னுபெருஞ் சுற்றத்தார் எல்லாரும் வந்தீண்டி
நன்னிலைமைத் திருநாளுக் கெழுநாளாம் நன்னாளிற்
பன்மணிமங் கலமூரசம் பல்லியங்கள் நிறைந்தார்ப்பப்
பொன்மணிப்பா லிகைமீது புனிதமுளை பூரித்தார். ககளஉ

பா. 1. டெம்பிரிகம்பர். 2. பாண்டைவினை. 3. மலைந்து.

சேணுயரும் மாடங்கள் திருப்பெருகு மண்டபங்கள்
நீணிலைய மாளிகைகள் நிகரில்அணி பெறவிளக்கிக்
காணவருங் கைவண்ணம் கவினெங்கும் படிஎழுதி
வாணிலவு மணிக்கடைக்கண் மங்கலக்கோ லம்புனைந்து. ககளஙூ

நீடுநிலைத் தோரணங்கள் நீள்மறுகு தொறும்நிரைத்து
மாடுயருங் கொடிமாலை மணிமாலை இடைப்போக்கிச்
சேடுயரும் வேதிகைகள் செழுஞ்சாந்து கொடுநீவிப்
பீடுகெழு மணிமுத்தின் பெரும்பந்தர் பலபுனைந்தார். ககளச

மன்றல்விளைத் திருமூலைநாள் தொடங்கிவரு நாளெல்லாம்
முன்றில்தொறும் வீதிதொறும் முகநெடுவா யில்கள்தொறும்
நின்றெரிரும் மணிவிளக்கு நிறைவாசப் பொற்குடங்கள்
துன்றுசுடர்த் தாமங்கள் தூபங்கள் துதைவித்தார். ககளரு

எங்கணுமெய்த் திருத்தொண்டர் மறையவர்கள் ஏனையோர்
மங்கலநீள் மணவினைநாள் கேட்டுமிக மகிழ்வெய்திப்
பொங்குதிருப் புகலிதனில் நாடோறும் புகுந்தீண்ட
அங்கண்அணைந் தவர்க்கெல்லாம் பெருஞ்சிறப்பு மிகஅளித்தார்.

மங்கலதூ ரியநாதம் மறுகுதொறும் நின்றியம்பப்
பொங்கியநான் மறையோசை கடலோசை மிசைப்பொலியத்
தங்குநறுங் குறைஅகிலின் தழைத்தசெழும் புகையினுடன்
செங்கனல்ஆ குதிப்புகையும் தெய்வவிரை மணம்பெருக. ககளஎ

எண்டிசையி னுள்ளோரும் ஈண்டுவளத் தொடுநெருங்கப்
பண்டநிறை சாலைகளும் பலவேறு விதம்பயில
மண்டுபெரு நிதிக்குவைகள் மலிப்பிறங்கல் எனமலிய
உண்டிவினைப் பெருந்துழனி ஓவாத ஒலிஓங்க. ககளஅ

மாமறைநூல் விதிச்சடங்கில் வகுத்தமுறை நெறிமரபின்
தூமணநல் லுபகரணம் சமைப்பவர்தந் தொழில்துவன்றத்
தாமரையோன் அனையபெருந் தவமறையோர் தாமெடுத்த
பூமருவு பொற்கலசப் புண்ணியநீர் பொலிவெய்த. ககளகூ

குங்குமத்தின் செழுஞ்சேற்றின் கூட்டமைப்போர் இனங்குழுமப்
பொங்குவிரைப் புதுக்கலவைப் புகைஎடுப்போர் தொகைவிரவத்
துங்கநறுங் கர்ப்பூரச் சுண்ணம்இடிப் போர்நெருங்க
எங்குமலர்ப் பிணைபுனைவோர் ஈட்டங்கள் மிகப்பெருக. ககஅO

இனையபல வேறுதொழில் எம்மருங்கும் நிரைத்தியற்றும்
மனைவளரும் மறுகெல்லாம் மணஅணிசெய் மறைமூதூர்
நினைவரிய பெருவளங்கள் நெருங்குதலால் நிதிக்கோமான்
தனிஇறைவர் தாம்ஏவச் சமைத்ததுபோல் அமைந்துளதால். ககஅக

1. நிகரில்அணி 2. மைவாளரும் 3 புகும் தீண்ட
4 கொழுஞ் சேற்றின் 5. நினைந்து அரிதால்

வேறு

மாறி லாநிறை வளந்தரு புகலியின் மணமீக்
கூறு நாளின்முன் ஞளினில் வேதியர் குழாமும்
நீறு சேர்திருத் தொண்டரும் நிகரிலா தவருக்
காறு சூடினர் அருட்டிருக் காப்புநாண் அணிவார். ககஅஉ

வேத வாய்மையின் விதியுளி விஜயினுல் விளங்க
ஓத நீருல கியன்முறை ஒழுக்கமும் பெருகக்
காதல் நீள்திருத் தொண்டர்கள் மறையவர் கவினுர்
மாதர் மைந்தர்பொற் காப்புநாண் ஙகர்வலஞ் செய்தார். ககஅங

ஙகர்வ லஞ்செய்து புகுந்தபின் நவமணி அணிந்த
புகரில் சித்திர விதானமண் டபத்தினிற் பொலியப்
பகரும் வைதிக விதிச்சமா வர்த்தனப் பான்மை
திகழ முற்றிய செம்மலார் திருமுன்பு சேர்ந்தார். ககஅச

செம்பொ னின்பரி கலத்தினிற் செந்நெல்வெண் பரப்பின்
வம்ப விழ்ந்தநீள் மாலைசூழ் மருங்குற அமைத்த்
அம்பொன் வாசநீர்ப் பொற்குடம் அரசிலை தருப்பை
பம்பு நீள்சுடர் மணிவிளக் கொளிர்தரும் பரப்பில். ககஅஞ

நாத மங்கல முழக்கொடு நற்றவ முனிவர்
வேத கீதமும் விம்மிட விரைகமழ் வாசப்
போது சாந்தணி பூந்துகில் புனைந்தபுண் ணியம்போல்
மீது பூஞ்சய னத்திருந் தவர்முன்பு மேவி. ககஅசு

ஆர்வம் மிக்கெழும் அன்பினுல் மலரயன் அனைய
சீர்ம றைத்தொழிற் சடங்குசெய் திருந்துநூல் முனிவர்
பார்வ ழிப்பட வரும்இரு வினைகளின் பந்தச்
சார்பொ ழிப்பவர் திருக்கையிற் காப்புநாண் சாத்த. ககஅஎ

கண்ட மாந்தர்கள் கடிமணங் காணவந் தணைவார்
கொண்ட வல்வினை யாப்பவிழ் கோள்கைய வான
தொண்டர் சிந்தையும் வதனமும் மலர்ந்தன சுருதி
மண்டு மாமறைக் குலமெழுந் தார்த்தன மகிழ்ந்தே. ககஅஅ

நிரந்த கங்குலின் நிதிமழை விதிமுறை எவர்க்கும்
புரந்த ஞானசம் பந்தர்தாம் புன்னெறிச் சமய
அரந்தை வல்லிருள் அகலவந் தவதரித் தாற்போல்
பரந்த பேரிருள் துரந்துவந் தெழுந்தனன் பகலோன். ககஅசு

அஞ்சி றைச்சுரும் பறைபொழிற் சண்பைஆண் டகையார்
தஞ்சி வத்திரு மணஞ்செயத் தவஞ்செய்நாள் என்று
மஞ்ச னத்தொழில் புரிந்தென மாசிருள் கழுவிச்
செஞ்சு டர்க்கதிர்ப் பேரணி அணிந்தன திசைகள். ககக0

பா. இ. வல்வினை பற்பவழ்.

பரம்பு தம்வயின் எங்கணும் உள்ளபல் வளங்கள்
நிரம்ப முன்கொணர்ந் தெண்திசை யவர்நெருங் குதலால்
தரங்க டந்தவர் தந்திருக் கல்லியா ணத்தின்
வரம்பில் தன்பயன் காட்டுவ தொத்தது வையம். ககக

நங்கள் வாழ்வென வருந்திரு ஞானசம் பந்தர்
மங்க லத்திரு மணஎழுச் சியின்முழக் கென்னத்
துங்க வெண்திரைச் சுரிவளை ஆர்ப்பொடு சூழ்ந்து
பொங்கு பேரொலி முழக்குடன் எழுந்தது புணரி. ககக

அளக்கர் ஏழுமொன் றுமெனும் பெருமைஎவ் வுலகும்
விளக்கு மாமண விழாவுடன் விரைந்துசெல் வனபோல்
துளக்கில் வேதியர் ஆகுதி தொடங்கிடா முன்னம்
வளர்க்கும் வேதியில் வலஞ்சுழித் தெழுந்தது வன்னி. ககக

சந்த மென்மலர்த் தாதணி நீறுமெய் தரித்துக்
கந்த மேவுவண் டொழுங்கெனுங் கண்டிகை பூண்டு
சிந்தை தூயஅன் பர்களுடன் திருமணம் போத
மந்த சாரியின் மணங்கொணர்ந் தெழுந்தது மருத்து. ககக

எண்டி சைத்திறத் தியாவரும் புகலிவந் தெய்தி
மண்டும் அத்திரு மணஎழுச் சியின்அணி வாய்ப்பக்
கொண்ட வெண்ணிறக் குரூஉச்சுடர்க் கொண்டல்கள் என்ன
வெண்து கிற்கொடி நிரைத்தது போன்றது விசும்பு. ககக

ஏல இந்நலம் யாவையும் எழுச்சிமுன் காட்டும்
காலை செய்வினை முற்றிய கவுணியர் பெருமான்
மூல மாகிய தோணிமேல் முதல்வரை வணங்கிச்
சீல மார்திரு வருளினுல் மணத்தின்மேற் செல்வார். ககக

காழி மாநகர் வேதியர் குழாத்தொடுங் கலந்து
சூழும் அன்பர்கள் ஏனையோர் துதைந்துமுன் செல்ல
வாழி மாமறை முழங்கிட வளம்பதி வணங்கி
நீழல் வெண்சுடர் நித்திலச் சிவிகைமேற் கொண்டார். ககக

ஆன் வாகனம் ஏறுவார் யாருமேற் கொள்ளக்
கான மாகிய தொங்கல்பிச் சம்குடை கவரி
மேல்நெ ருங்கிட விசும்பினும் நிலத்தினும் எழுந்த
வான துந்துபி முழக்குடன் மங்கல இயங்கள். ககக

வேறு

சங்கொடு தாரை சின்னந் தனிப்பெருங் காளம் தாளம்
வங்கியம் ஏனை மற்று மலர்துளைக் கருவி எல்லாம்

பொங்கிய ஒலியின் ஓங்கிப் பூசுரர் வேத கீதம்
எங்கணும் எழுந்து மல்கத் திருமணம் எழுந்த தன்றே. ககசுசு

கோதையர் குழல்சூழ் வண்டின் குழாத்தொலி ஒருபால், கோல
வேதியர் வேத வாய்மை மிகுமொலி ஒருபால், மிக்க
ஏதமில் விபஞ்சி வீணை யாழொலி ஒருபால், ஏத்தும்
நாதமங் கலங்கள் கீத நயப்பொலி ஒருபா லாக. கஉ00

விண்ணினை விழுங்க மிக்க வெண்துகிற் பதாகை வெள்ளம்
கண்வெறி படைப்ப மிக்க கதிர்விரி கவரிக் கானம்
மண்ணிய மணிப்பூண் நீடும் அரிசனம் மலிந்த பொற்பின்
எண்ணிலா வண்ணத் தூசின் பொதிப்பரப் பெங்கும் நண்ண. கஉ0க

சிகையொடு மான்தோல் தாங்குங் கிடையுமா சானுஞ் செல்வார்
புகைவிடும் வேள்விச் செந்தீ இல்லுடன் கொண்டு போவார்
தகைவிலா விருப்பின் மிக்க பதிகங்கள் விளம்பிச் சார்வார்
வகையறு பகையுஞ் செற்ற மாதவர் இயல்பின் மல்க. கஉ0உ

அறுவகை விளங்குஞ் சைவத் தளவிலா விரதஞ் சாரும்
நெறிவழி நின்ற வேடம் நீடிய தவத்தி னுள்ளோர்
மறுவறு மனத்தில் அன்பின் வழியினுல் வந்த யோகக்
குறிநிலை பெற்ற தொண்டர் குழாங்குழா மாகி ஏக. கஉ0ங

விஞ்சையர் இயக்கர் சித்தர் கின்னரர் மிடைந்த தேவர்
அஞ்சன நாட்ட ஈட்டத் தரம்பையர் உடனு யுள்ளோர்
தஞ்சுடர் விமான மேறித் தழைத்தஆ தரவி னோடு
மஞ்சுறை விசும்பின் மீது மணஅணி காணச் சென்றார். கஉ0ச

மற்றிவர் மிடைந்து செல்லும் மங்கல வனப்பின் காட்சி
முற்றஇத் தலத்தி னுள்ளோர் மொய்த்துடன் படரும் போதில்
அற்புத நிகழ்ச்சி எய்த அணைதலால் மணமேற் செல்லும்
பொற்பமை மணத்தின் சாயை போன்றுமுன் பொலியச் செல்ல.

தவஅர சாள உய்க்குந் தனிக்குடை நிழற்றச் சாரும்
பவம்அறுத் தாள வல்லார் பாதம்உள் ளத்துக் கொண்டு
புவனங்கள் வாழ வந்த பூந்தராய் வேந்தர் போந்து
சிவனமர்ந் துறையும் நல்லூர்த் திருப்பெரு மணத்தைச் சேர்ந்தார்.

பெருமணக் கோயி லுள்ளார் மங்கலம் பெருகு மாற்றல்
வருமணத் திறத்தின் முன்னர் வழிஎதிர் கொள்ளச் சென்று
திருமணம் புணர எய்தும் சிரபுரச் செம்ம லார்தாம்
இருள்மணந் திலங்கு கண்டத் திறைவர்தங் கோயில் புக்கார். கஉ0எ

நாதரைப் பணிந்து போற்றி நற்பொருட் பதிகம் பாடிக்
காதல்மெய் யருள்முன் பெற்றுக் கவுணியர் தலைவர் போந்து

பா. வே. நூ. வேற்றுமை. உ மற்றும் 3 இன்ன வை

வேதியர் "வதுவைக் கோலம் புனைந்திட வேண்டும்" என்னப்
பூதநா யகர்தங் கோயில் புறத்தொரு மடத்திற் புக்கார். கஉ0அ

பொற்குடம் நிறைந்த வாசப் புனிதமஞ் சனமே ராட்டி
விற்பொலி வெண்படாட் டாடை மேதக விளங்கச் சாத்தி
நற்றிரு உத்த ரீய நறுந்துகில் சாத்தி நானப்
பற்பல கலவைச் சாந்தம் பான்மையின் அணிந்த பின்னர். கஉ0ரு

திருவடி மலர்மேற் பூத்த செழுநகைச் சோதி என்ன
மருவிய தரளக் கோவை மணிச்சரி அணையச் சாத்தி
விரிசுடர்ப் பரட்டின் மீது விளங்குபொற் சரட்டிற் கோத்த
பெருகொளி முத்தின் தாமம் பிறங்கிய தொங்கல் சாத்தி. கஉகo

தண்சுடர்ப் பரிய முத்துத் தமனிய நாணிற் கோத்த
கண்கவர் கோவைப் பத்திக் கதிர்க்கடி சூத்தி ரத்தை
வெண்சுடர்த் தரள மாலை விரிசுடர்க் கொடுக்கின் மீது
வண்திரு அரையின் நீடு வனப்பொளி வளரச் சாத்தி. கஉகக

ஒளிகதிர்த் தரளக் கோவை உதரபந் தனத்தின் மீது
தளிரொளி துளும்பு முத்தின் சன்னவீ ரத்தைச் சாத்திக்
குளிர்நில வெறிக்கு முத்தின் பூணநூல் கோவை சாத்தி
நளிர்கதிர் முத்து மாலை நருசுடர் ஆரஞ் சாத்தி. கஉகஉ

வாள்விடு வயிரக் கட்டு மணிவிரல் ஆழி சாத்தித்
தாளுறு தடக்கை முத்தின் தண்டையும் சரியும் சாத்தி
நீளொளி முழங்கைப் பொட்டு நிரைசுடர் வடமுஞ் சாத்தித்
தோள்வளைத் தரளப் பைம்பூண் சுந்தரத் தோள்மேல் சாத்தி. கஉகங

திருக்கழுத் தாரந் தெய்வக் கண்டிகை மாலை சேரப்
பருத்தமுத் தொழுங்கு கோத்த படரொளி வடமுஞ் சாத்திப்
பெருக்கிய வனப்பின் செவ்வி பிறங்கிய திருவார் காதில்
வருக்கவெண் தரளக் கொத்தின் வடிக்குழை விளங்கச் சாத்தி. கஉகச

நீற்றொளி தழைத்துப் பொங்கி நிறைதிரு நெற்றி மீது
மேற்பட விரிந்த சோதி வெண்சுடர் எழுந்த தென்னப்
பாற்படு முத்தின் பாரப் பனிச்சுடர்த் திரளை சாத்தி
ஏற்பவைத் தணிந்த முத்தின் எழில்வளர் மகுடஞ் சேர்த்தார்.

இவ்வகை நம்மை யாளும் ஏர்வளர் தெய்வக் கோலம்
கைவ்வினை மறையோர் செய்யக் கடிகொள்செங் கமலத் தாதின்
செவ்விநீள் தாம மார்பர் திருவடை யாள மாலை
எவ்வுல கோரும் ஏத்தத் தொழுதுதாம் எடுத்துப் பூண்டார். கஉகசு

அழகினுக் கணியாம் வெண்ணீ றணிசெழுத் தோதிச் சாத்திப்
பழகிய அன்பர் சூழப் படரொளி மறுகில் எய்தி

மழவிடை மேலோர் தம்மை மனங்கொள எணங்கி வந்து
முழவொலி எடுப்ப முத்தின் சிவிகைமேற் கொண்ட போது. கஉகள

எழுந்தன சங்க நாதம் இயம்பின இயங்கள் எங்கும்
பொழிந்தன விசும்பில் விண்ணோர் கற்பகப் புதுப்பூ மாரி
தொழுந்தகை முனிவர் தொண்டர் சுருதியின் வாழ்த்துப் பொங்கி
வழிந்தன திசைகள் மீதே மலர்ந்தன உலகம் எல்லாம். கஉகஅ

படர்பெருந் தொங்கல் பிச்சம் பைங்கதிர்ப் பீலிப் பந்தர்
அடர்பூண செம்பொற் பாண்டில் அணிதுகிற் சதுக்கம் மல்கக்
கடலின்மீ தெழுந்து நிற்குங் கதிர்நிறை மதியம் போல
வடநிரை அணிந்த முத்தின் மணிக்குடை நிழற்ற வந்தார். கஉகக

சீரணி தெருவி னூடு திருமணஞ் செல்ல முத்தின்
ஏரணி காளம் சின்னம் இலங்கொளித் தாரை எல்லாம்
பேரொலி பெருக முன்னே பிடித்தன "மறைக ளோடு
தாரணி உய்ய ஞான சம்பந்தன் வந்தான்" என்று. கஉஉ0

மண்ணினுக் கிடுக்கண் தீர வந்தவர் திருநா மங்கள்
எண்ணில பலவும் ஏத்திச் சின்னங்கள் எழுந்த போதவ்
அண்ணலார் வதுவை செய்ய அலங்கரித் தணையப் பெற்ற
புண்ணிய மறையோர் மாட மங்கலம் பொழிந்து பொங்க. கஉஉக

மூற்றுமெய்ஞ் ஞானம் பெற்ற மூர்த்தியார் செங்கை பற்ற
நற்பெருந் தவத்தின் நீர்மை நலம்படைத் தெழுந்த தெய்வக்
கற்பகப் பூங்கோம் பன்னர் தம்மையுங் காப்புச் சேர்த்துப்
பொற்புறு சடங்கு முன்னர்ப் புரிவுடன் செய்த வேலை. கஉஉஉ

செம்பொன்செய் வாசிச் சூட்டுத் திருமணிப் புனைபூண் செல்வப்
பைம்பொனின் மாலை வேய்ந்த பவளமென் கொடியொப் பாரை
நம்பன்தன் அருளே வாழ்த்தி நல்லெழில் விளங்கச் சூட்டி
அம்பொன்செய் தீபம் என்ன அழகலங் கரித்து வைத்தார். கஉஉங

மாமறை மைந்த ரெல்லாம் மணத்தெதிர் சென்று மன்னும்
தூமலர்ச் செம்பொற் சுண்ணந் தொகுநவ மணியும் வீசத்
தாமரை மலரோன் போல்வார் அரசிலை தருப்பை தோய்ந்த
காமர்பொற் கலச நன்னீர் இருக்குடன் கலந்து வீச. கஉஉச

விண்ணவர் மலரின் மாரி விசும்பொளி தழைப்ப வீச
மண்ணகம் நிறைந்த கந்த மந்தமா ருதமும் வீசக்
கண்ணெளி விளக்கம் மிக்கார் காமர்தோ ரணங்க ளோடு
புண்ணிய விளைவு போல்வார் பூம்பந்தர் முன்பு சார்ந்தார். கஉஉஙி

பொன்னணி சங்கின் வெள்ளம் பொலிவுடன் முழங்கி ஆர்ப்ப
மன்னிய தரளப் பத்தி வளர்மணிச் சிவிகை நின்றும்

பா.தே.ல. பொலிவுடன்

பன்மலர் நறும்பொற் சுண்ணம் பரந்தபா வாடை மீது
மூன்னிழிந் தருவி வந்தார் மூவுல[1]குய்ய வந்தார். கஉஉசு

மறைக்குல மனையின் வாழ்க்கை மங்கல மகளிர் செல்லாம்
நிறைத்தநீர்ப் பொற்கு டங்கள் நிரைமணி விளக்குத் தூபம்
நறைக்குல மலர்சூழ் மாலை[2]நறுஞ்சுடர் முளைப்பொற் பாண்டில்
உறைப்பொலி கலவை ஏந்தி உடனெதிர் ஏற்று நின்றார். கஉஉள

ஆங்குமுன் னிட்ட செம்பொன் அணிமணிப் பீடந் தன்னில்
ஓங்கிய ஞான வெள்ளம் உள்நிறைந் தேழுவ தென்னத்
தாங்கிய முத்தின் பைம்பூண் [3]தண்ணிலா எறிப்ப ஏறிப்
பாங்கொளி பரப்பி நின்றார் பரசம யங்கள் வீழ்த்தார். கஉ.உஅ

எதிர்வர வேற்ற சாயல் இளமயி லனைய மாதர்
மதுரமங் கலமுன் னன வாழ்த்தொலி எடுப்ப வந்து
கதிர்மணிக் கரக வாசக் கமழ்புனல் ஒழுக்கிக் காதல்
விதிமுறை வலங்கொண் டெய்தி மேவுநல் வினைகள் செய்தார். கஉஉசு

மங்கலம் பொலிய ஏந்தி மாதரார் முன்பு செல்லக்
கங்கையின் கொழுந்து செம்பொன் இமவரை கலந்த தென்ன
அங்கவர் செம்பொன் மாடத் தாதிபூ மியினுட் புக்கார்
எங்களை வாழ முன்னுள் ஏடுவை கையினுள் இட்டார். கஉகO

அகில்நறுந் தூபம் [4]விம்ம அணிகிளர் மணியால் வேய்ந்த
துகில்புனை விதான நீழல் தூமலர்த் தவிசின் மீது
நகிலணி முத்த மாலை நகைமுக மடவார் வாழ்த்த
இகலில்சீர் மறையோர் சூழ இனிதின்அங் கிருந்த வேலை. கஉகக

திருமகட் கொடுக்கப் பெற்ற செழுமறை முனிவர் தாமும்
அருமையான் முன்செய் மெய்ம்மை அருந்தவ மனைவி யாரும்
பெருமகிழ்ச் சியினுற் பாதம் விளக்குவார் பிள்ளை யார்முன்
உரிமையால் வெண்பால் தூநீர் உடன்எடுத் தேந்தி வந்தார். கஉகஉ

வந்துமுன் னெய்தித் தாம்முன் செய்தமா தவத்தின் நன்மை
நந்துநம் பாண்டார் நம்பி ஞானபோ னகர்பொற் பாதம்
கந்தவார் குழலி னுர்பொற் கரகநீர் எடுத்து வார்ப்பப்
புந்தியால் நினைந்த யானம் 'புரிசடை யான்'என் றுன்னி. கஉகக

விருப்பினுல் விளக்கி மிக்க புனிதநீர் தலைமேற் கொண்டு
பொருப்புறு மாடத் துள்ளும் புறத்துளுந் தெளித்த பின்னர்
உருப்பொலி உதரத் துள்ளும் பூரித்தார் உவகை பொங்கி
அருப்புறு கோளுர் மேலும் தெளித்தனர் ஆர்வத் தோடும். கஉகச

பெருகொளி ஞானம் உண்ட பிள்ளையார் மலர்க்கை தன்னில்
மருவுமங் கலநீர் வாசக் கரகமுன் னேந்தி வார்ப்பார்

பா.பே.1.தேரு. 2.நகுசடர் 3 தண்ணிலை ஏ.பு.எரம்மி.

தருமுறைக் கோத்தி ரத்தின் தங்குலஞ் செப்பி "என்றன்
அருகிதிப் பாவை யாரைப் பிள்ளையார்க் களித்தேன்" என்றார். கஉஙடு

நற்றவக் கன்னி யார்கை ஞானசம் பந்தர் செங்கை
பற்றுதற் குரிய பண்பிற் பழுதில்நற் பொழுது நண்ணப்
பெற்றவ ருடன்பி றந்தார் பெருமணப் பிணைப்பன் னுரைச்
சுற்றமுன் சூழ்ந்து போற்றக் கொண்டுமுன் னன்னி னார்கள். கஉஙசு

ஏகமாஞ் சிவமெய்ஞ் ஞானம் இசைந்தவர் வலப்பால் எய்தி
நாகமார் பணப்பே ரல்குல் நற்றவக் கொழுந்தன் னுரை
மாகமார் சோதி மல்க மன்னிவீற் றிருந்த வெள்ளே
மேகமோ டிசையும் மின்னுக் கோடியென விளங்க வைத்தார். கஉஙஎ

புனிதமெய்க் கோல நீடு புகலியார் வேந்தர் தம்மைக்
குனிசிலைப் புருவ மென்பூங் கொம்பனு ருடனே கூட
நனிமிகக் கண்ட போதின் நல்லமங் கலங்கள் கூறி
மனிதருந் தேவ ராளுர் கண்ணிமை யாது வாழ்த்தி. கஉஙஅ

பத்தியிற் குயிற்றும் பைம்பொற் பவளக்காற் பந்தர் நாப்பண்
சித்திர விதானத் தின்கீழ்ச் செழுந்திரு நீல நக்கர்
முத்தமிழ் விரகர் முன்பு முதன்மறை முறையி னோடு
மெய்த்தகம் பெருமான் பாதம் மேவும்உள் ளத்தாற் செய்ய. கஉஙக

மறையொலி பொங்கி யோங்க மங்கல வாழ்த்து மல்க
நிறைவளைச் செங்கை பற்ற நேரிழை யவர்முன் அந்தப்
பொறையணி முந்நூல் மார்பர் புகரில்வெண் பொரிகை அட்டி
இறைவரை ஏத்தும் வேலை எரிவலங் கொள்ள வேண்டி. கஉசO

அருப்புமென் முலையி னுர்தம் அணிமலர்க் கைப்பி டித்தங்
கொருப்படும் உடைய பிள்ளை யார்திரு உள்ளந் தன்னில்
"விருப்புறும் அங்கி யாவார் விடைஉயர்த் தவரே" என்று
திருப்பெரு மணத்தை மேவுஞ் சிந்தையில் தெளிந்து செல்வார்.

மந்திர முறையால் உய்த்த எரிவல மாக மாதர்
தந்திருக் கையைப் பற்றுந் தாமரைச் செங்கை யாளர்
"இந்தஇல் லொழுக்கம் வந்து சூழ்ந்ததே இவள்தன் னோடும்
அந்தமில் சிவன்தாள் சேர்வன்" என்னும்ஆ தரவு பொங்க. கஉசஉ

மலர்பெருங் கிளையும் தொண்டர் கூட்டமும் மல்கிச் சூழ
அலகில்மெய்ஞ் ஞானத் தெல்லை அடைவுறுங் குறிப்பால் அங்கண்
உலகின்எம் மருங்கும் நீங்க உடன்அணைந் தருள வேண்டிக்
குலமணம் புரிவித் தார்தங் கோயிலை நோக்கி வந்தார். கஉசங

சிவனமர்ந் தருளுஞ் செல்வத் திருப்பெரு மணத்துள் எய்தித்
தவநெறி வளர்க்க வந்தார் தலைப்படுஞ் சார்பு நோக்கிப்

பா. வே. 1 டினையந்த.

"பவமற என்னை முன்னுள் ஆண்டஅப் பண்பு கூட
நவமலர்ப் பாதங் கூட்டும் என்னுநல் லுணர்வு" நல்க. கஉசச

காதல்மெய்ப் பதிகம் "கல்லூர்ப் பெருமணம்" எடுத்துக் கண்டோர்
தீதுறு பிறவிப் பாசந் தீர்த்தல்செம் பொருளாக் கொண்டு
"காதனே ! நல்லூர் மேவும் பெருமண நம்ப னே!உன்
பாதமெய்ந் நீழல் சேரும்பருவமீ" தென்று பாட. கஉசடு

தேவர்கள் தேவர் தாமுந் திருவருள் புரிந்து "நீயும்
பூவையன் னுளும் இங்குன் புண்ணிய மணத்தின் வந்தார்
யாவரும் எம்பாற் சோதி இதனுள்வந் தெய்தும்" என்று
மூவுல கொளியால் விம்ம முழுச்சுடர்த் தாணு வாகி. கஉசசு

கோயிலுட் படமேல் ஓங்குங் கொள்கையாற் பெருகுஞ் சோதி
வாயிலை வகுத்துக் காட்ட மன்னுசீர்ப் புகலி மன்னர்
பாயின ஒளியால் நீடு பாஞ்சுடர்த் தொழுது போற்றி
மாயிருள் ஞாலம் உய்ய வழியினை அருளிச் செய்வார். கஉசள

"ஞானமெய்ந் நெறிதான் யார்க்கும் நமச்சிவா யச்சோ லாம்" என்
றுனசீர் நமச்சி வாயத் திருப்பதி கத்தை அங்கண்
வானமும் நிலனும் கேட்க அருள்செய்"திம் மணத்தில் வந்தோர்
ஈனமாம் பிறவி தீர யாவரும் புகுக" என்ன. கஉசஅ

வருமுறைப் பிறவி வெள்ளம் வரம்புகா ணுத மூங்கி
உருவெனுந் துயரக் கூட்டில் உணர்வின்றி மயங்கு வார்கள்
திருமணத் துடன்சே வித்து முன்செலுஞ் சிறப்பி னுலே
மருவிய பிறவி நீங்க மன்னுசோ தியினுட் புக்கார். கஉசக

வேறு

சீர்பெருகு நீலநக்கர் திருமூருகர் முதற்றொண்டர்
ஏர்கெழுவு சிவபாத விருதயர்நம் பாண்டார்சீர்
ஆர்திருமெய்ப் பெரும்பாணர் மற்றெனையோர் அணைந்துளோர்
பார்நிலவு கிழோசூழப் பன்னிகளோ டுடன்புக்கார். கஉடுO

அணிமுத்தின் சிவிகைமுதல் அணிதாங்கிச் சென்றோர்கள்
மணிமுத்த மாலைபுனை மடவார்மங் கலம்பெருகும்
பணிமுற்றும் எடுத்தார்கள் பரிசனங்கள் விணைப்பாசந்
துணிவித்த உணர்வினராய்த் தொழுதுடன்புக் கொடுங்கினர். கஉடுக

ஆறுவகைச் சமயத்தில் அருந்தவரும் அடியவரும்
கூறுமறை முனிவர்களும் கும்பிடவந் தணைந்தாரும்
வேறுதிரு வருளினுல் வீடுபெற வந்தாரும்
ஈறில்பெருஞ் சோதியினுள் எல்லாரும் புக்கதற்பின். கஉடுஉ

பா.வே.ப.1. பதிப்பு 2 நீங்கி 3 மற்றுனையோர்,

காதலியைக் கைப்பற்றிக் கோண்டுவலங் கோண்டருளித்
தீதகற்ற வந்தருளுந் தீருஞான சம்பந்தர்
நாதனெழில் வளர்சோதி நண்ணியதன் உட்புகுவார்
போதரிலை முடிந்தவழிப் புக்கோன்றி உடனுனர். கஉருங

பிள்ளையார் எழுந்தருளிப் புக்கதற்பின் பெருங்கூத்தர்
கொள்ளரீ டியசோதிக் குறிநிலைஅவ் வழிகரப்ப
வள்ளலார் தம்பழைய மணக்கோயில் தோன்றுதலும்
தெள்ளரீ ருலகத்துப் பேறில்லார் தெருமந்தார். கஉருச

கண்ணுதலார் திருமேனி உடன்கூடக் கவுணியனார்
நண்ணியது தூரத்தே கண்டுநணு கப்பெரு
விண்ணவரும் முனிவர்களும் விரிஞ்சனேமூதலோரும்
எண்ணிலவர் ஏசறவு தீரஎடுத் தேத்தினர். கஉருஞ

அருந்தமிழா கரர்சரிதை அடியேனுக் கவர்பாதம்
தரும்பரிசால் அறிந்தபடி துதிசெய்தேன் தாரணிமேல்
பெருங்கொடையும் திண்ணனவும் பேருணர்வும் திருத்தொண்டால்
வருந்தகைமைக் கலிக்காம ஞர்செய்கை வழுத்துவேன். கஉருசு

ஆ திருவிருத்தம் - ஈகருக.

29. ஏயர்கோன்கலிக்காம நாயனார் புராணம்

நீடு வண்புகழ்ச் சோழர்நீர் நாட்டிடை நிலவும்
மாடு பொன்கொழி காவிரி வடகரைக் கீழ்பால்
ஆடு பூங்கொடி மாடரீ டியஅணி நகர்தான்
பீடு தங்கிய திருப்பெரு மங்கலப் பெயர்த்தால். க

இஞ்சி சூழ்வன எந்திரப் பந்திசூழ் ஞாயில்
மஞ்சு சூழ்வன வரைஎன உயர்மணி மாடம்
நஞ்சு சூழ்வன நயனியர் நளினமெல் லடிச்செம்
பஞ்சு சூழ்வன காளையர் குஞ்சியின் பரப்பு. உ

விழவ ருதன விளங்கொளி மணிநெடு வீதி
முழவ ருதன மொய்குழ லியர்நட அரங்கம்
மழவ ருதன மங்கலம் பொலிமணி முன்றில்
உழவ ருதநல் வளத்தன ஓங்கிருங் குடிகள். ங

நீரி னிற்பொலி சடைமுடி நெற்றிநாட் டத்துக்
காரி னில்திகழ் கண்டர்தங் காதலோர் குழுமிப்

உரு
பா. இ.ப.1. பெற்றில்லார். உ. முதலானோர்.
3 எண்ணிலவர் ஏசறவு.

பாரின் மிக்கதோர் பெருமையால் பரமர்தாள் பரவும்
சீரின் மிக்கது சிவபுரி எனத்தகுஞ் சிறப்பால். ச

3164 இன்ன வாழ்பதி அதனிடை ஏயர்கோக் குடிதான்
மன்னி நீடிய வளவர்சே ஞபதிக் குடியாம்
தொன்மை மேவிய தொடர்ச்சியால் நிகழ்வது தூய
பொன்னி நாட்டுவே ளாண்மையில் உயர்ந்தபொற் பினதால். ஞ

3165 அங்கண் மிக்கஅக் குடியினில் அவதரித் துள்ளார்
கங்கை வாழ்முடி யார்திருத்தொண்டர் கலிக்காமர் என்பார்
தங்கள் நாயகர் அடிபணி வாரடிச் சார்ந்து
பொங்கு காதலின் அவர்பணி போற்றுதல் புரிந்தார். சு

3166 புதிய நாண்மதிச் சடைமுடி யார்திருப் புன்கூர்க்
கதிக மாயின திருப்பணி அனேகமுஞ் செய்து
"நிதிய மாவன நீறுகந் தார்கழல்" என்று
துதியி னற்பர வித்தொழு தின்புறு கின்றார். எ

3167 நாவ லூர்மன்னர் நாதனைத் தூதுவிட் டதனுக்
"கியாவர் இச்செயல் புரிந்தனர்" என்றவர் இழிப்பத்
தேவர் தம்பிரான் அவர்திறந் திருத்திய அதற்கு
மேவ வந்தஅச் செயலினை விளம்புவா னுற்றேன். அ

வேறு

3168 திருத்தொண்டத் தொகையருளித் திருநாவ லூராளி
கருத்தொன்று காதலினுற் கனகமதில் திருவாரூர்
ஒருத்தர்கழல் மூப்பொழுதும் உருகியஅன் பொடுபணிந்து
பெருத்தெழுமெய் அன்பினுல் பிரியாதங் குறையுநாள். கூ

3169 தூளாண்மை உழவுதொழில் தன்மைவளம் தலைநிறந்த
வேளாளர் குண்டையூர்க் கிழவரெனும் மேதக்கோர்
வாளார்வெண் மதியணிந்தார் மறையவராய் வழக்கினில்வென்
றூளாகக் கொண்டவர்தாள் அடைந்தன்பால் ஒழுகுவார். கo

3170 சேந்நெல்லும் பொன்னன்ன செழும்பருப்பும் தீங்கரும்பின்
இன்னல்ல அமுதும்முதல் எண்ணில்பெரும் பலவளங்கள்
மன்னியசீர் வன்தொண்டர்க் கமுதாக வழுவாமல்
பன்னெடுநாள் பரவையார் மாளிகைக்குப் படிசமைத்தார். கக

3171 ஆனசெயல் அன்பின்வரும் ஆர்வத்தால் மகிழ்ந்தாற்ற
வானமுறை வழங்காமல் மாநிலத்து வளஞ்சுருங்கப்
போனகநெற் படிநிரம்ப எடுப்பதற்குப் போதாமை
மானமழி கொள்கையினுல் மனம்மயங்கி வருந்துவார். கஉ

ச.சே.பி. சிதைந்தையால் நிரைவு பு. உ. இயல் 29-ன் பகுதி

"வன்தொண்டர் திருவாரூர் மாளிகைக்கு நெல்லெடுக்க
இன்றுகுறை யாகின்ற தென்செய்கேன்" எனநினைந்து
துன்றுபெருங் கவலையினுள் துயரெய்தி உண்ணுதே
அன்றிரவு துயில்கொள்ள அங்கணர்வந் தருள்புரிவார். கஙூ

"ஆரூரன் தனக்குன்பால் நெல்தந்தோம்" என்றருளி
நீரூருஞ் சடைமுடியார் நிதிக்கோமான் தனைஏவப்
பேரூர்மற் றதன்எல்லை அடங்கவும்நெல் மலைப்பிறங்கல்
காரூரும் நெடுவிசும்பும் கரக்கநிறைந் தோங்கியதால். கச

அவ்விரவு புலர்காலை உணர்ந்தெழுவார் அதுகண்டே
"எவ்வுலகின் நென்மலைதான் இது?"என்றே அதிசயித்துச்
செவ்வியபொன் மலைவளைத்தார் திருவருளின் செயல்போற்றிக்
கொவ்வைவாய்ப் பரவையார் கொழுநரையே தொழுதெழுவார். கஞ

வேறு

"நாவலூர் மன்ன னுர்க்கு நாயனார் அளித்த நெல்லிங்(கு)
யாவரால் எடுக்க லாகும் இச்செயல் அவர்க்குச் சொல்லப்
போவன்யான்" என்று போந்தார் புகுந்தவா றருளிச் செய்து
தேவர்தம் பெருமான் ஏவ நம்பியும் எதிரே சென்றார். கசு

குண்டையூர்க் கிழவர் தாமும் எதிர்கொண்டு கோதில் வாய்மைத்
தொண்டனார் பாதந் தன்னில் தொழுதுவீழ்ந் தெழுந்து நின்று
"பண்டெலாம் அடியேன் செய்த பணிஎனக் கின்று முட்ட
அண்டர்தம் பிரானார் தாமே நெல்மலை அளித்தார்" என்று. கள

"மனிதரால் எடுக்கும் எல்லைத் தன்றுநெல் மலையின் ஆக்கம்
இனிஎனுற் செய்ய லாகும் பணியன்றி(து)" என்னக் கேட்டுப்
"பனிமதி முடியா ரன்றே பரிந்துமக் களித்தார் நெல்"லென்
றினியன மொழிந்து தாமும் குண்டையூர் எய்த வந்தார். கஅ

விண்ணினை அளக்கும் நெல்லின் வெற்பினை நம்பி நோக்கி
அண்ணலைத் தொழுது போற்றி அதிசயம் மிகவும் எய்தி
"எண்ணில்சீர்ப் பரவை இல்லத் திந்நெல்லை எடுக்க ஆளும்
தண்ணில(வு) அணிந்தார் தாமே தரில்அன்றி ஒண்ணு" தென்று. கஙூ

வேறு

ஆளிடவேண் டிக்கொள்வார் அருகுதிருப் பதியான
கோளிலியில் தம்பெருமான் கோயிலினை வந்தெய்தி
"வாளனகண் மடவாள் வருந்தாமே" எனும்பதிகம்
மூளவருங் காதலுடன் முன்தொழுது பாடுதலும். உ0

"பகற்பொழுது கழிந்ததற்பின் பரவைமனை அளவன்றி
மிகப்பெருகு நெல்லுலகில் விளங்கியஆ ரூர்நிறையப்

பா. ஏ. 1 · மலை பிறங்கு : மலை பிறங்கி உ · மலையினைத்தன்

புகப்பெய்து தருவனநம் பூதங்கள்'' எனவிசும்பில்
நிகர்ப்பரிய ஒருவாக்கு நிகழ்ந்ததுகின் மலனருளால். உக

3181 தம்பிரான் அருள்போற்றித் தரையின்மிசை விழுந்தெழுந்தே
உம்பரால் உணர்வரிய திருப்பாதந் தொழுதேத்திச்
செம்பொனேர் சடையாரைப் பிறபதியுந் தொழுதுபோய்
நம்பர்ஆ ரூர்அணைந்தார் நாவலூர் நாவலனார். உஉ

3182 பூங்கோயில் மகிழ்ந்தருளும் புராதனரைப் புக்கிறைஞ்சி
நீங்காத பெருமகிழ்ச்சி யுடனேத்திப் புறம்போந்து
பாங்கானூர் புடைசூழ்ந்து போற்றிசைக்கப் பரவையார்
ஓங்குதிரு மாளிகையின் உள்ளணைந்தார் ஆரூரர். உங

3183 கோவைவாய்ப் பரவையார் தாம்மகிழும் படிகூறி
மேவியவர் தம்மோடு மிகஇன்புற் றிருந்ததற்பின்
சேவின்மேல் உமையோடும் வருவார்தந் திருவருளின்
ஏவலினுல் அவ்விரவு பூதங்கள் மிக்கெழுந்து. உச

3184 குண்டையூர் நென்மலையைக் குறட்பூதப் படைகவர்ந்து
வண்டுலாங் குழற்பரவை மாளிகையை நிறைவித்தே
அண்டர்பிரான் திருவாரூர் அடங்கவும்நென் மலையாக்கிக்
கண்டவர்அற் புதமெய்தும் காட்சிபெற அமைத்தனவால். உடு

3185 அவ்விரவு புலர்காலை ஆரூரில் வாழ்வார்கண்
''டெவ்வுலகில் விளைந்தனநெல் மலைஇவை'' என் றதிசயித்து
''நவ்விமதர்த் திருநோக்கின் நங்கைபுகழ்ப் பரவையார்க்
கிவ்வுலகு வாழவரும் நம்பிஅளித் தன''என்பார். உக

3186 நீக்கரிய நெற்குன்று தினைநோக்கி நெறிபலவும்
போக்கரிதா யிடக்கண்டு மீண்டுந்தம் இல்புகுவார்
''பாக்கியத்தின் திருவடிவாம் பரவையார்க் கிக்நெல்லும்
போக்குமிடம் அரிதாகும்'' எனப்பலவும் புகல்கின்றார். உஎ

3187 வன்தொண்டர் தமக்களித்த நெற்கண்டு மகிழ்கிறப்பார்
''இன்றுங்கள் மனைஎல்லைக் குட்படுநெற் குன்றெல்லாம்
பொன்தங்கு மாளிகையிற் புகப்பெய்து கொள்க'' என
வென்றிமுர சறைவித்தார் மிக்கபுகழ்ப் பரவையார். உஅ

3188 அணியாரூர் மறுகதனில் ஆளியங்கப் பறையறைந்த
பணியாலே மனைநிறைத்துப் பாங்கெங்கும் நெற்கூடு
கணியாமற் கட்டிநகர் களிகூரப் பரவையார்
மணியாரம் புனைமார்பின் வன்தொண்டர் தமைப்பணிந்தார். உக

3189 நம்பியா ரூரர்திரு வாரூரில் நயந்துறைநாள்
செம்பொற்புற் றிடங்கொண்டு வீற்றிருந்த செழுந்தேனைத்

தம்பெரிய விருப்பினெடுந் தாழ்ந்துணர்வி னுற்பருகி
இம்பருடன் உம்பர்களும் அதிசயிப்ப ஏத்தினார். ஈ0

3190 குலவுபுகழ்க் கோட்புலியார் குறையிரந்து தம்பதிக்கண்
அலகில்புகழ் ஆரூரர் எழுந்தருள அடிவணங்கி
நிலவியவன் தொண்டரது இசைந்ததற்பின் நேர்இறைஞ்சிப்
பலர்புகழும் பண்பினார் மீண்டுந்தம் பதிஅணைந்தார். ஈக

வேறு

3191 தேவ ரொதுங்கத் திருத்தொண்டர் மிடையுஞ் செல்வத் திருவாரூர்
காவல் கொண்டு தனியாளுங் கடவுட் பெருமான் கழல்வணங்கி
நாவ லூரர் அருள்பெற்று நம்பர் பதிகள் பிறநண்ணிப்
பாவை பாகர் தமைப்பணிந்து பாடும் விருப்பிற் சென்றணைவார். ஈஉ

3192 மாலும் அயனும் உணர்வரியார் மகிழும் பதிகள் பலவணங்கி
ஞாலம் நிகழ்கோட் புலியார்தங் நாட்டி யத்தான் குடிநண்ண
ஏலும் வகையால் அலங்கரித்தங் கவரும் எதிர்கொண் டினிதிறைஞ்சிக்
கோல மணிமா ளிகையின்கண் ஆர்வம் பெருகக் கொடுபுக்கார். ஈஈ

3193 தூய மணிப்பொற் றவிசிலெழுந் தருளி இருக்கத் தூநீரால்
சேய மலர்ச்சே வடிவிளக்கித் தெளித்துக் கொண்டச் செழும்புனலால்
மேய சுடர்மா ளிகைஎங்கும் விளங்க வீசி உளங்களிப்ப
ஏய சிறப்பில் அர்ச்சனைகள் எல்லாம் இயல்பின் முறைபுரிவார். ஈச

3194 பூந்தண் பனிநீர் கொடுசமைத்த பொருவில் விரைச்சந் தனக்கலவை
வாய்ந்த அகிலின் நறுஞ்சாந்து வாசம் நிறைமான் மதச்சேறு
தோய்ந்த புகைநா வியின்நறுநெய் தூய பசுங்கர்ப்பூரமுடன்
ஏய்ந்த அடைக்காய் அமுதினைய எண்ணில் மணிப்பா சனத்தேந்தி.

3195 வேறு வேறு திருப்பள்ளித் தாமப் பணிகள் மிகஎடுத்து
மாறி லாத மணித்திருவா பரண வருக்கம் பலதாங்கி
ஈறில் விதத்துப் பரிவட்டம் ஊழின் நிரைத்தே எதிரிறைஞ்சி
ஆறு புனைந்தார் அடித்தொண்டர் அளவில் பூசை கொளஅளித்தார்.

3196 செங்கோல் அரசன் அருளுரிமைச் சேனை பதியாங் கோட்புலியார்
நங்கோ மானை நாவலூர் நகரார் வேந்தை நண்பினுல்
தங்கோ மனையில் திருஅமுது செய்வித் திறைஞ்சித் தலைசிறந்த
போங்கோ தம்போல் பெருங்காதல் புரிந்தார் பின்னும் போற்றுவார்.

3197 ஆனை விருப்பின் மற்றவர்தாம் அருமை யால்மூன் பெற்றெடுத்த
தேனூர் கோதைச் சிங்கடியார் தமையும் அவர்பின் திருவுயிர்த்த
மானூர் நோக்கின் வனப்பகையார் தமையும் கொணர்ந்து வன்தொண்டர்
தூநாண் மலர்த்தாள் பணிவித்துத் தாமும் தொழுது சொல்லுவார்.

பா. பே. | . விளைத்தஞ் தினைனை பே . உ . பூ தெதல்

3198 "அடியேன் பெற்ற மக்களிவர் அடிமை யாகக் கொண்டருளிக்
கடிசேர் மலர்த்தாள் தொழுதுய்யக் கருணை அளிக்க வேண்டும்"எனத்
"தொடிசேர் தளிர்க்கை இவர்எனக்குத் தூய மக்கள்" எனக்கொண்டப்
படியே மகண்மை யாக்கொண்டார் பரவை யார்தங் கோழுநுர். நகூ

3199 கோதை சூழ்ந்த குழலாரைக் குறங்கின் வைத்துக் கொண்டிருந்து
காதல் நிறைந்த புதல்வியராங் கருத்துட் கசிவால் அணைத்துச்சி
மீது கண்ணீர் விழமோந்து வேண்டு வனவுங் கொடுத்தருளி
நாதர் கோயில் சென்றடைந்தார் நம்பி தம்பி ரான்தோழர். சஂ

3200 வென்றி வெள்ளே றுயர்த்தருளும் விமலர் திருக்கோ புரம்இறைஞ்சி
ஒன்றும் உள்ளத் தொடும்அன்பால் உச்சி குவித்த கரத்தோடும்
சென்று புக்குப் பணிந்துதிருப் பதிகம் "பூணுண்" என்றெடுத்துக்
கொன்றை முடியார் அருளுரிமை சிறப்பித் தார்கோட் புலியாரை. சக

3201 சிறப்பித் தருளுந் திருக்கடைக்காப் பதனி னிடைச்சிங் கடியாரைப்
பிறப்பித் தெடுத்த பிதாவாகத் தம்மை நினைந்த பெற்றியினுல்
"மறப்பில் வகைச்சிங் கடியப்பன்" என்றே தம்மை வைத்தருளி
நிறப்பொற் புடைய இசைபாடி நிறைந்த அருள்பெற் றிறைஞ்சுவார்.

3202 அங்கு நின்றும் எழுந்தருளி அளவில் அன்பின் உள்மகிழச்
செங்கண் நுதலார் மேவுதிரு வலிவ லத்தைச் சேர்ந்திறைஞ்சி
மங்கை பாகர் தமைப்பதிகம் " வலிவ லத்துக் கண்டேன் "என்
றெங்கும் நிகழ்ந்த தமிழ்மாலை எடுத்துத் தொடுத்த இசைபுனைவார்.

3203 " நன்று மகிழுஞ் சம்பந்தர் நாவுக் கரசர் பாட்டுகந்தீர் "
என்று சிறப்பித் திறைஞ்சிமகிழ்ந் தேத்தி அருள்பெற் றெழுந்தருளி
மன்றி னிடையே நடம்புரிவார் மருவு பெருமைத் திருவாரூர்
சென்று குறுகிப் பூங்கோயிற் பெருமான் செம்பொற் கழல்பணிந்து.

3204 இறைஞ்சிப் போந்து பரவையார் திருமா ளிகையில் எழுந்தருளி
நிறைந்த விருப்பின் மேவுநாள் நீடு செல்வத் திருவாரூர்ப்
புறம்பு நணிய கோயில்களும் பணிந்து போற்றிப் புற்றிடமாய்
உறைந்த பெருமான் கழல்பிரியா(து) ஓவா இன்பம் உற்றிருந்தார்.சநி

3205 சேறிபுன் சடையார் திருவாரூர்த் திருப்பங் குனியுத் தரத்திருநாள்
குறுக வரலும் பரவையார் கொடைக்கு விழாவில் குறைவறுக்க
நிறையும் பொன்கொண் டணைவதற்கு நினைந்து நம்பி திருப்புகலூர்
இறைவர் பாதம் பணியஎழுந் தருளிச் சென்றங் கெய்தினுர். சசு

3206 சென்று விரும்பித் திருப்புகலூர்த் தேவர் பெருமான் கோயில்மணி
முன்றில் பணிந்து வலங்கொண்டு முதல்வர் முன்பு வீழ்ந்திறைஞ்சித்
தொன்று மரபின் அடித்தொண்டு தோய்ந்த அன்பில் துதித்தெழுந்து
நின்று பதிக இசைபாடி நினைந்த கருத்து நிகழ்விப்பார். சஎ

பா. ஐ.ப டு ஏ டு.

3207 சிறிது பொழுது கும்பிட்டுச் சிந்தை முன்னம் அங்கொழிய
வறிது புறம்போந் தருளிஅயல் மடத்தில் அணையார் வன்தொண்டர்
அறிவு கூர்ந்த அன்பருடன் அணிமுன் றிலின்ஓர் அருகிருப்ப
மறிவண் கையார் அருளேயோ மலர்க்கண் துயில்வந் தெய்தியதால்.

3208 துயில்வந் தெய்தத் தம்பிரான் தோழர் அங்குத் திருப்பணிக்குப்
பயிலுஞ் சுடுமட் பலகைபல கொணர்வித் துயரம் பண்ணித்தேன்
அயிலுஞ் சுரும்பார் மலர்ச்சிகழி முடிமேல் அணியா உத்தரிய
வெயிலுந் தியவெண் பட்டதன்மேல் விரித்துப் பள்ளி மேவினார். சகூ

3209 சுற்றும் இருந்த தொண்டர்களும் துயிலும் அளவில் துணைமலர்க்கண்
பற்றுந் துயில்நீங் கிடப்பள்ளி உணர்ந்தார் பரவை கேள்வனார்
வெற்றி விடையார் அருளாலே வேமண் கல்லே விரிசுடர்ச்செம்
பொற்றிண் கல்லா யினகண்டு புகலூர் இறைவர் அருள்போற்றி. நிo

3210 தொண்டர் உணர மகிழ்ந்தெழுந்து துணைக்கைக் கமல முகைதலைமேல்
கொண்டு கோயி லுட்புக்குக் குறிப்பில் அடங்காப் பேரன்பு
மண்டு காத லுறவணங்கி வாய்த்த மதுர மொழிமாலை
பண்டங் கிசையில் "தம்மையே புகழ்ந்"தென் றெடுத்துப் பாடினார்.

3211 பதிகம் பாடித் திருக்கடைக்காப் பணிந்து பரவிப் புறம்போந்தே
எதிரில் இன்பம் இம்மையே தருவார் அருள்பெற் றெழுந்தருளி
நிதியின் குவையும் உடன்கொண்டு நிறையும் நதியும் குறைமதியும்
பொதியுஞ் சடையார் திருப்பனையூர் புகுவார் புரிநூல் மணிமார்பர்.

3212 செய்ய சடையார் திருப்பனையூர்ப் புறத்துத் திருக்கூத் தொடுங்காட்சி
எய்த அருள எதிர்சென்றங் கெழுந்த விருப்பால் விழுந்திறைஞ்சி
ஐயர் தம்மை "அரங்காட வல்லார் அவரே அழகியர்" என்
றுய்ய உலகு பெறும்பதிகம் பாடி அருள்பெற் றுடன்போந்தார். நிக

3213 வளம்மல் கியசீர்த் திருப்பனையூர் வாழ்வார் ஏத்த எழுந்தருளி
அளவில் செம்பொன் இட்டிகைகள் ஆள்மேல் நெருங்கி அணிஆரூர்த்
தளவ முறுவல் பரவையார் தம்மா ளிகையில் புகத்தாமும்
உளம்மன் னியதம் பெருமானார் தம்மை வணங்கி உவந்தணைந்தார். நிச

3214 வந்து பரவைப் பிராட்டியார் மகிழ வைகி மருவுநாள்
அந்தண் ஆரூர் மருங்கணைய கோயில் பலவும் அணைந்திறைஞ்சிச்
சிந்தை மகிழ விருப்பினுடைந் தெய்வப் பெருமாள் திருவாரூர்
முந்தி வணங்கி இனிதிருந்தார் முனைப்பா டியர்தங் காவலனார். நிரி

3215 பலநாள் அமர்வார் பரமர்திரு அருளால் அங்கு நின்றும்போய்ச்
சிலைமா மேரு வீரனார் திருநன் னிலத்துச் சென்றெய்தி
வலமா வந்து கோயிலினுள் வணங்கி மகிழ்ந்து பாடினார்
தலமார் கின்ற "தண்ணியல்வெம் மையினுன்" என்னுந் தமிழ்மாலை.

P.T.O. அடுத்தில் தொடர்

3216 பாடி அங்கு வைகியபின் பரமர் வீழி மிழலையினில்
நீடு மறையால் மேம்பட்ட அந்த ணுளார் நிறைந்தீண்டி
நாடு மகிழ அவ்வளவு நடைக்கா வணம்பா வாடையுடன்
மாடு கதலி பூகநிரை மல்க மணித்தோ ரணம்நிரைத்து. நுஎ

3217 வந்து நம்பி தம்மைஎதிர் கொண்டு புக்கார் மற்றவருஞ்
சிந்தை மலர்ந்து திருவீழி மிழலை இறைஞ்சிச் சேண்விசும்பின்
மூந்தை இழிந்த மொய்யொளிசேர் கோயில் தன்னை முன்வணங்கிப்
பந்தம் அறுக்குந் தம்பெருமான் பாதம் பரவிப் பணிகின்றார். நுஅ

3218 படங்கொள் அரவில் துயில்வோனும் பதுமத் தோனும் பரவரிய
விடங்கன் விண்ணோர் பெருமானை விரவும் புளக முடன்பரவி
"அடங்கல் வீழி கொண்டிருந்தீர் அடியே னுக்கும் அருளுமம்" எனத்
தடங்கொள் செஞ்சொற் றமிழ்மாலை சாத்தி அங்குச் சாருநாள். நுகூ

3219 வாசி யறிந்து காசளிக்க வல்ல மிழலை வாணர்பால்
தேசு மிக்க திருவருள்முன் பெற்றுத் திருவாஞ் சியத்தடிகள்
பாச மறுத்தாட் கொள்ளுந்தாள் பணிந்து "பொருவனூர்" என்னும்
மாசில் பதிகம் பாடிஅமர்ந் தரிசிற் கரைப்புத் தூரணைந்தார். சுO

3220 சேழுநீர் நறையூர் நிலவுதிருச் சித்தீச் சரமும் பணிந்தேத்தி
விழுநீர் மையினில் பெருந்தொண்டர் விருப்பி னேடும் எதிர்கொள்ள
மழுவேர் டிளமான் கரதலத்தில் உடையார் திருப்புத் தூர்வணங்கித்
தொழுநீர் மையினில் துதித்தேத்தித் தொண்டர் சூழ உறையுநாள்.

3221 புனித னர்முன் புகழ்த்துணையார்க் கருளுந் திறமும் போற்றிசைத்து
முனிவர் போற்ற எழுந்தருளி மூரி வெள்ளக் கங்கையினில்
பனிவெண் திங்கள் அணிசடையார் பதிகள் பலவும் பணிந்துபோந்
தினிய நினைவில் எய்தினார் இறைவர் திருவா வடுதுறையில். சுஉ

3222 விளங்குந் திருவா வடுதுறையில் மேயார் கோயில் புடைவலங்கொண்
டுளங்கொண் டுருகும் அன்பினுடன் உள்புக் கிறைஞ்சி ஏத்துவார் [ன்
வளங்கொள் பதிகம் "மறையவன்" என்று தொடுத்து வளவன் சேங்கணு
தளங்கொள் பிறப்புஞ் சிறப்பித்துத் தமிழ்ச்சொன் மாலை சாத்தினார்.

3223 சாத்தி அங்கு வைகுநாள் தயங்கும் அன்ப ருடன்கூடப்
போத்தும் இறைஞ்சி அருள்பெற்றுப் பெண்ணோர் பாகத் தண்ணலார்
தீர்த்தப் பொன்னித் தென்கரைமேல் திகழும் பதிகள் பலபணிந்து
மூர்த்தி யார்தம் இடைமருதை அடைந்தார் முனைப்பா டித்தலைவர்.

3224 மன்னு மருதின் அமர்ந்தவரை வணங்கி மதுரச் சொன்மலர்கள்
பன்னிப் புனைந்து பணிந்தேத்திப் பரவிப் போந்து தொண்டருடன்
அந்நற் பதியில் இருந்தகல்வார் அரனூர் திருநா கேச்சுரத்தை
முன்னிப் புக்கு வலங்கொண்டு முதல்வர் திருத்தாள் வணங்கினார்.

பா. பே. 1. மழுநீர் புனைமான். 2. பணிந்தெவரும்.

3221 பெருகும் பதிகம் "பிறையணிவாள் நுதலாள்" பாடிப் பெயர்ந்துநிறை
திருவின் மலியுஞ் சிவபுரத்துத் தேவர் பெருமான் கழல்வணங்கி
உருகுஞ் சிந்தை யுடன்போந்தே உமையோர் பாகர் தாம்மகிழ்ந்து
மருவும் பதிகள் பிறபணிந்து கலிய நல்லூர் மருங்கணைந்தார். சுசு

3226 சேம்மை மறையோர் திருக்கலிய நல்லூர் இறைவர் சேவடிக்கீழ்
மும்மை வணக்கம் பெறஇறைஞ்சி முன்பு பரவித் தொழுதெழுவார்
கொம்மை மருவு "குரும்பைமுலை உமையாள்" என்னுந் திருப்பதிகம்
மெய்ம்மைப் புராணம் பலவுமிகச் சிறப்பித்(து) இசையின் விளம்பினார்.

3227 அங்கு நின்று திருக்குடமூக் கணைந்து பணிந்து பாடிப்போய்
மங்கை பாகர் வலஞ்சுழியை மருவிப் பெருகும் அன்புருகத்
தங்கு காத லுடன்வணங்கித் தமிழாற் பரசி அரசினுக்குத்
திங்கள் முடியார் அடியளித்த திருநல் லூரைச் சென்றணைந்தார். சுஅ

3228 நல்லூர் இறைவர் கழல்போற்றி நவின்று நடுவு நம்பர்பதி
எல்லாம் இறைஞ்சி ஏத்திப்போந் திசையாற் பரவுந் தம்முடைய
சொல்லா தியமா அணிந்தவர்தஞ் சோற்றுத் துறையின் மருங்கெய்தி
அல்லார் கண்டர் கோயிலினுள் அடைந்து வலங்கொண் டடிபணிவார்.

3229 "அழல்நீர் ஒழுகி அனைய" எனும் அஞ்சொற் பதிகம் எடுத்தருளிக்
கழல்நீ டியஅன் பினிற்போற்றுங் காதல் கூரப் பரவியபின்
கெழுநீர் மையினில் அருள்பெற்றுப் போந்து பரவை யார்கேள்வர்
முழுநீ றணிவார் அமர்ந்தபதி பலவும் பணிந்து முன்னுவார். எ0

3230 தேவர் பெருமான் கண்டியூர் பணிந்து திருவை யாறதனை
மேவி வணங்கிப் பூந்துருத்தி விமலர் பாதந் தொழுதிறைஞ்சிச்
சேவில் வருவார் திருவாலம் பொழிலிற் சேர்ந்து தாழ்ந்திரவு
பாவு சயனத் தமர்ந்தருளிப் பள்ளி கொள்ளக் கனவின்கண். எக

3231 "மழபா டியினில் வருவதற்கு நினைக்க மறந்தா யோ"என்று
குழகா கியதங் கோலம்எதிர் காட்டி அருளக் குறித்துணர்ந்து
நிழலார் சோலைக் கரைப்பொன்னி வடபால் ஏறி நெடுமாடம்
அழகார் வீதி மழபாடி அணைந்தார் நம்பி ஆரூரர். எஉ

3232 அணைந்து திருக்கோ புரம்இறைஞ்சி அன்பர் சூழ உடன்புகுந்து
பணங்கொள் அரவம் அணிந்தார்முன் பணிந்து வீழ்ந்து பரங்கருணைக்
குணங்கொள் அருளின் திறம்போற்றிக் கொண்ட புளகத் துடனுருகிப்
புணர்ந்த இசையால் திருப்பதிகம் "பொன்னார் மேனி" என்றெடுத்து.

3233 "அன்னே உன்னை அல்லால்யான் ஆரை நினைக்கேன்" எனஏத்தித்
தன்னே ரில்லாப் பதிகமலர் சாத்தித் தொழுது புறம்பணிந்து
மன்னும் பதியில் சிலநாள்கள் வைகித் தொண்ட ருடன்மகிழ்ந்து
பொன்னிக் கரையின் இருமருங்கும் பணிந்து மேல்பாற் போதுவார்.

பா.வே.: ஏத்திப்போய்
உ.தே.வே.: பெருமான் நினைப்புரை நினைவு யாது எனஏத்தி எனை,

செய்ய சடையார் திருவாஞைக் காவில் அஞைந்து திருத்தொண்டர்
எய்த முன்வந் தெதிர்கொள்ள இறைஞ்சிக் கோயி லுட்புகுந்தே
ஐயர் கமலச் சேவடிக்கீழ் ஆர்வம் பெருக விழுந்தெழுந்து
மெய்யும் முகிழ்ப்பக் கண்பொழிநீர் வெள்ளம் பரப்ப விம்மூவார். எரு

"மறைக ளாய நான்கும்"என மலர்ந்த செஞ்சொற் றமிழ்ப்பதிகம்
நிறையுங் காத லுடன்எடுத்து நிலவும் அன்பர் தமைநோக்கி
"இறையும் பணிவார் எம்மையும்ஆ ளுடையார்" என்றென் றேத்துவார்
உறையூர்ச் சோழன் மணியாரம் சாத்துந் திறத்தை உணர்ந்தருளி.

"வளவர் பெருமான்!மணியாரம் சாத்திக் கொண்டு வரும்பொன்னிக்
கிளருந் திரைநீர் மூழ்குதலும் வழுவிப் போகக் கேதமுற
அளவில் திருமஞ் சனக்குடத்துள் அதுபுக் காட்ட அணிந்தருளித்
தளரும் அவனுக் கருள்புரிந்த தன்மை சிறக்கச் சாற்றினர். எள

சாற்றி அங்குத் தங்குநாள் தயங்கும் பவளத் திருமேனி
நீற்றர் கோயில் எம்மருங்குஞ் சென்று தாழ்ந்து நிறைவிருப்பால்
போற்றி அங்கு நின்றும்போய்ப் பொருவில் அன்பர் மருவியதொண்
டாற்றும் பெருமைத் திருப்பாச்சி லாச்சி ராமஞ் சென்றடைந்தார்.

சென்று திருக்கோ புரம்இறைஞ்சித் தேவர் மலிந்த திருந்துமணி
மூன்றில் வலங்கொண் டுள்ளஞைந்து முதல்வர் முன்னம் வீழ்ந்திறைஞ்சி
நன்று பெருகும் பொருட்காதல் நயப்புப் பெருக நாதரெதிர்
நின்று பரவி நினைந்தபொருள் அருளா தொழிய நேர்நின்று. எக

அன்பு நீங்கா அச்சமுடன் அடுத்த திருத்தோ ழமைப்பணியால்
பொன்பெ ருத திருவுள்ளம் புழுங்க அழுங்கிப் புறம்பொருபால்
முன்பு நின்ற திருத்தொண்டர் முகப்பே முறைப்பா டுடையார்போல்
என்பு கரைந்து "பிரானுர்மற் றிலையோ" என்ன எடுக்கின்றார். அ

வேறு

நித்தமும் நீங்கா நிலைமையின் நீங்கி நிலத்திடைப் புலங்கெழும்
பிறப்பால், உய்த்தகா ரணத்தை உணர்ந்துகொந் தடிமை ஒரு
மையாம் எழுமையும் உணர்த்தி, "எத்தனை அருளா தொழியினும்
பிரானுர் இவரலா தில்லையோ" என்பார், "வைத்தனன் தனக்கே
தலையும்என் நாவும்" எனவழுத் தினர்வழித் தொண்டர். அக

இவ்வகை பரவித் திருக்கடைக் காப்பும் "ஏகின வல்ல" என்
றிசைப்ப, மெய்வகை விரும்பு தம்பெரு மானுர் விழுநிதிக் குவை
அளித் தருள, மைவளர் கண்டர் கருணையே பரவி வணங்கி அப்பதி
யிடை வைகி, எவ்வகை மருங்கும் இறைவர்தம் பதிகள் இறைஞ்சி
அங் கிருந்தனர் சிலநாள். அஉ

3242 அப்பதி நீங்கி அருளினாற் போகி ஆவின்அஞ் சாடுவார் நீடும், எப்பெயர்ப் பதியும் இருமருங் கிறைஞ்சி இறைவர்பைஞ் ஞீலியை எய்திப், பைப்பணி அணிவார் கோபுரம் இறைஞ்சிப் பாங்கமர் புடை வலங் கொண்டு, துப்புறழ் வேணி யார்கழல் தொழுவார் தோன்றுகங் காளரைக் கண்டார். அங

3243 கண்டவர் கண்கள் காதல்நீர் வெள்ளம் பொழிதரக் கைகுவித் திறைஞ்சி, வண்டறை குழலார் மனங்கவர் பலிக்கு வருந்திரு வடிவு கண் டவர்கள், கொண்டதோர் மயலால் வினவுகூற் றுகக் குலவு சொற் "காருலா விய" என், றண்டர்நா யகரைப் பரவி "ஆ ரணிய விடங்காரம்" அருந்தமிழ் புனைந்தார். அச

3244 பரவிஅப் பதிகத் திருக்கடைக் காப்புச் சாத்திமுன் பணிந்(து) அருள் பெற்றுக், கரவில்அன் பர்கள்தங் கூட்டமுந் தொழுது கலந் தினி திருந்துபோந் தருளி, விரவிய ஈங்கோய் மலைமுத லாக விமலர் தம் பதிபல வணங்கிக், குரவலர் சோலை அணிதிருப் பாண்டிக் கொடு முடி அணைந்தனர் கொங்கில். அடு

3245 கோங்கினிற் பொன்னித் தென்கரைக் கறையூர்க் கொடுமுடிக் கோயில்முன் குறுகிச், சங்கவெண் குழையர் உழைவலஞ் செய்து சார்ந்தடி அன்பினில் தாழ்ந்து, பொங்கிய வேட்கை பெருகிடத் தொழுது புனிதர்பொன் மேனியை நோக்கி, "இங்கிவர் தம்மை மறக்கவொண் ணு"தென் றெழுந்தமெய்க் குறிப்பினில் எடுப்ப. அசு

3246 "அண்ணலார் அடிகள் மறக்கினும் நாம அஞ்செழுத் தறியஎப் பொழுதும், எண்ணிய நாவே இன்சுவை பெருக இடையறு தியம்பும்" என் றிதனைத், திண்ணிய உணர்விற் கொள்பவர் "மற்றப் பற்றி லேன்" எனச்செழுந் தமிழால், நண்ணிய அன்பில் பிணிப்புற நவின் றார் நமச்சிவா யத்திருப் பதிகம். அள

3247 உலகெலாம் உய்ய உறுதியாம் பதிகம் உரைத்துமெய் உணர்வரு ஒருமை, நிலவிய சிந்தை யுடன்திரு வருளால் நீங்குவார் பாங்குநற் பதிகள், பலவுமுன் பணிந்து பரமர்தாள் போற்றிப் போந்துதண் பனிமலர்ப் படப்பைக், குலவும்ஞ்ஞிக் கொங்கிற் காஞ்சிவாய்ப் பேரூர் குறுகினார் முறுகும்ஆ தரவால். அஅ

3248 அத்திருப் பதியை அணைந்துமுன் தாழ்மை ஆண்டவர் கோயிலுட் புகுந்து, மெய்த்தவர் சூழ வலங்கொண்டு முன்பு மேவுவார் தம்மெதிர் விளங்க, நித்தனார் தில்லை மன்றுள்நின் றுடல் நீடிய கோலம்நேர் காட் டக், கைத்தலங் குவித்துக் கண்கள்ஆ னந்தக் கலுழிநீர் பொழிதரக் கண்டார். அக

3249 காண்டலுந் தொழுது வீழ்ந்துடன் எழுந்து கரையில்அன் பென் பினை உருக்கப், பூண்டஐம் புலனில் புலப்படா இன்பம் புணர்ந்து

மேய் யுணர்வினில் பொங்கத், தாண்டவம் புரியுந் தம்பிரா னரைத் தலைப்படக் கிடைத்தபின் சைவ, ஆண்டகை யாருக் கடுத்தஅந் நிலைமை விளைவையார் அளவறிந் துரைப்பார். கூ0

அங்கிலை நிகழ்ந்த ஆரருள் பெற்ற அன்பனார் இன்பவெள் ளத்து, மன்னிய பாடல் மகிழ்ந்துடன் பரவி வளம்பதி அதனிடை மருவிப், "பொன்மணி மன்றுள் எடுத்தசே வடியார் புரிநடங் கும்பிடப் பெற் றால், என்இனிப் புறம்போய் எய்துவ" தென்று மீண்டெழுந் தருளு தற் கெழுவார். கூக

ஆயிடை நீங்கி அருளினுற் செல்வார் அருவரைச் சுரங்களும் பிறவும், பாயுநீர் நதியும் பலபல கடந்து பரமர்தம் பதிபல பணிந்து, மேயவண் தமிழால் விருப்பொடும் பரவி வெஞ்சமாக் கூடலும் பணிந்து, சேயிடை கழியப் போந்துவந் தடைந்தார் தென்திசைக் கற்குடி மலையில். கூஉ

வேறு

வீடு தரும்இக் கற்குடியில் விழுமி யாரைப் பணிந்திறைஞ்சி நீடு விருப்பில் திருப்பதிகம் நிறைந்த சிந்தை யுடன்பாடிப் பாடும் விருப்பில் தொண்டருடன் பதிகள் பலவும் அணைந்திறைஞ்சித் தேடும் இருவர் காண்பரியார் திருவா றைமேற் றளிசென்றார். கூஎ

சேம்பொன் மேருச் சிலைவளைத்த சிவனார் ஆறை மேற்றளியில் நம்பர் பாதம் பணிந்திறைஞ்சி நாளும் மகிழ்வார்க் கருள்கூட உம்பர் போற்றுந் தானங்கள் பலவும் பணிந்து போந்தணைவார் இம்பர் வாழ இன்னம்பர் நகரைச் சேர எய்தினார். கூசு

எரின் மருவும் இன்னம்பர் மகிழ்ந்த ஈசர் கழல்வணங்கி ஆரும் அன்பிற் பணிந்தேத்தி ஆரா அருளால் அங்கமர்வார் போரின் மலியுங் கரியுரித்தார் மருவும் புறம்ப யம்போற்றச் சேரும் உள்ளம் மிக்கெழுமெய்ப் பதிகம் பாடிச் செல்கின்றார். கூரு

வேறு

"அங்கம் ஓதியோர் ஆறை மேற்றளி" என்றெ டுத்தமர் காதலில் பொங்கு செந்தமி ழால்வி ரும்பு "புறம்ப யந்தொழப் போதும்" என் றெங்கும் மன்னிய இன்னி சைப்பதி கம்பு னைந்துடன் எய்தினார் திங்கள் சூடிய செல்வர் மேவு திருப்பு றம்பயஞ் சேரவே. கூசு

அப்ப திக்கண் அமர்ந்த தொண்டரும் "அன்று வெண்ணெய்நல் லூரினில் ஒப்ப ருந்தனி வேதி யன்பழ ஓலை காட்டிநின் றாண்டவர் இப்ப திக்கண்வந் தெய்த என்ன தவங்கள்" என்றெதிர் கொள்ளவே மூப்பு ரங்கள் எரித்த சேவகர் கோயில் வாயிலின் முன்னினார். கூஎ

1.20.10 வரும்

நீடு கோபுர முன்பி றைஞ்சி நிலாவு தொண்டரொ டுள்ளணைந்
தாடல் மேவிய அண்ண லாரடி போற்றி அஞ்சலி கோலினின்
றேடு லாமலர் தூவி எட்டிலெ டைந்து மாகும் உறுப்பினுல்
பீடு நீடு நிலத்தின் மேற்பெரு கப்ப ணிந்து வணங்கினர். கூஅ

அங்கு நீடருள் பெற்றுள் ஆர்வம் மிகப்பொ ழிந்தெழும் அன்பினுல்
பொங்கு நாண்மலர்ப் பாத முன்பணிந் தேத்தி மீண்டு புறத்தணைந்
தெங்கு மாகி நிறைந்து நின்றவர் தாம்ம கிழ்ந்தஇ டங்களில்
தங்கு கோலம் இறைஞ்சு வார்அருள் தாவில் அன்பரோ டெய்தினர்.

வேறு

வம்புநீ டலங்கல் மார்பின் வன்தொண்டர் வன்னி கொன்றை
தும்பைவெள் ளடம்பு திங்கள் தூயநீ ரணிந்த சென்னித்
தம்பிரான் அமர்ந்த தானம் பலபல சார்ந்து தாழ்ந்து
கொம்பனூர் ஆடல் நீடு கூடலை யாற்றூர் சார. கஅ0

செப்பரும் பதியில் சேரார் திருமுது குன்றை நோக்கி
ஒப்பரும் புகழார் செல்லும் ஒருவழி உமையா ளோடு
மெய்ப்பரம் பொருளாய் உள்ளார் வேதிய ராகி நின்றூர்
மூப்புரி நூலுங் தாங்கி நம்பியா ரூரர் முன்பு. கஅக

நின்றவர் தம்மை நோக்கி நெகிழ்ந்தநெஞ் தையராய்த் தாழ்வார்
“ இன்றுயாம் முதுகுன் றெய்த வழிஎமக் கியம்பும்” என்னக்
குன்றவில் லாளி யாரும் “கூடலை யாற்றூர் ஏறச்
சென்றதிவ் வழிதான்” என்று செல்வழித் துணையாய்ச் செல்ல. கஅஉ

கண்டவர் கைகள் கூப்பித் தொழுதுபின் தொடர்வார்க் காணூர்
வண்டலர் கொன்றை யாரை “ வடிவுடை மழு”என் றேத்தி
“அண்டர்தம் பெருமான் போந்த அதிசயம் அறியேன்” என்று
கொண்டெழும் விருப்பி னோடுங் கூடலை யாற்றூர் புக்கார். கஅஊ

கூடலை யாற்றூர் மேவுங் கொன்றைவார் சடையி னர்தம்
பீடுயர் கோயில் புக்குப் பெருகிய ஆர்வம் பொங்க
ஆடகப் பொதுவில் ஆடும் அறைகழல் வணங்கிப் போற்றி
நீடருள் பெற்றுப் போந்து திருமுது குன்றில் நேர்ந்தார். கஅச

தடநிலைக் கோபு ரத்தைத் தாழ்ந்துமுன் இறைஞ்சிக் கோயில்
புடைவலங் கொண்டு புக்குப் போற்றினர் தொழுது வீழ்ந்து
நடம்நவில் வாரை “ நஞ்சி யிடை”எனுஞ் செஞ்சொன் மாலைத்
தொடைநிகழ் பதிகம் பாடித் தொழுதுகை சுமந்து நின்று. கஅடி

நாதர்பால் பொருள்தாம் வேண்டி நண்ணிய வண்ணம் எல்லாம்
கோதறு மனத்துட் கொண்ட குறிப்பொடும் பரவும் போது

பா. வே. தெரசுடன் பணிந்து.
உ. தடவனைத் தொழுவம்

காதவிழ் கொன்றை வேய்ந்தார் தரஅருள் பெறுவார் சைவ
வேதியர் தலைவர் மீண்டும் "மெய்யில்வெண் பொடி"யும் பாட. கoசு

3264 பனிமதிச் சடையார் தாமும் பன்னிரண் டாயி ரம்பொன்
நனியருள் கொடுக்கும் ஆற்றூல் நல்கிட உடைய நம்பி
தனிவரும் மகிழ்ச்சி பொங்கத் தாழ்ந்தெழுந் தருகு சென்று
கனிவிட மிடற்றி னர்முன் பின்னென்று கழற லுற்றூர். கoஎ

3265 "அருளும்இக் கனக மெல்லாம் அடியனேற் காரூர் உள்ளோர்
மருளுற வியப்ப அங்கே வரப்பெற வேண்டும்" என்னத்
தெருளுற எழுந்த வாக்கால் "செழுமணி முத்தாற் றிட்டிப்
பொருளினை முழுதும் ஆரூர்க் குளத்திற்போய்க் கொள்க" என்றூர்.

3266 என்றுதம் பிரானூர் நல்கும் இன்னருள் பெற்ற பின்னர்
வன்தொண்டர் மச்சம்[1]வெட்டிக் கைக்கொண்டு மணிமுத் தாற்றில்
பொன்திரள் எடுத்து நீருள் புகவிட்டுப் போது கின்றூர்
"அன்றெனை வலிந்தாட் கொண்ட அருள்இதில் அறிவேன்" என்று.

3267 மேவிய காதல் தொண்டு விரவுமெய் விருத்தி பெற்றூர்
"ஆவியின் விருத்தி யான அந்தணர் புலியூர் மன்றில்
காவியங் கண்டர் கூத்துக் கண்டுகும் பிடுவ"[2]தென்று
வாவிசூழ் தில்லை மூதூர் வழிக்கொள்வான் வணங்கிப் போந்தார்.

3268 மாடுள பதிகள் சென்று வணங்கிப்போய் மங்கை பாகர்
நீடிய கடம்பூர் போற்றி நிறைந்தஆ னந்தக் கூத்தர்
ஆடிய தில்லை மூதூர் அணைந்தணி வாயில் புக்குச்
சேடுயர் மாடம் மன்னுஞ் செழுந்திரு வீதி சார்ந்தார். ககக

3269 போற்றிரு வீதி தாழ்ந்து புண்ணிய விளைவாய் ஓங்கும்
நற்றிரு வாயில் நண்ணி[3]நறைமலி அலங்கல் மார்பர்
மற்றதன் முன்பு மண்மேல் வணங்கிஉட் புகுந்து பைம்பொற்
சுற்றுமா ளிகைசூழ் வந்து தொழுதுகை தலைமேற் கொள்வார். ககஉ

3270 ஆடிய திருமூன் பான[4]அம்பொனின் கோபு ரத்தின்
ஊடுபுக் கிறைஞ்சி ஓங்கும் ஒளிவளர் கனக மன்றில்
நாடகச் செய்ய தாளை நண்ணுற உள்கி றைந்து
நீடும்ஆ னந்த வெள்ளக் கண்கள்நீர் நிரந்து பாய. ககங

3271 பாவுவாய் குளறிக் காதல் படிதிருப் படியைத் தாழ்ந்து
விரவுமெய் அங்கம் ஐந்தும் எட்டினும் வணங்கி வேட்கை
[5]உரனுறு திருக்கூத் துள்ளம் ஆர்தரப் பெருகி நெஞ்சில்
கரவிலா தவரைக் கண்ட நிறைவுதங் கருத்திற் கொள்ள. ககச

பா. பே. 1. வேண்டி. 2 னென்றும்.
3 நலமலி. 4 அம்பொன்னின். 5 அரனுறு

வேறு

3276 "மடித்தாடும் அடிமைக்கண்" என்றெடுத்து மன்னுயிர்கட்
கருளும் ஆற்றல், அடுத்தாற்று நன்னெறிக்கண் நின்றார்கள் | வழுவி
நர கணையா வண்ணம், தடுப்பானைப் பேரூரிற் கண்டங்கே சிறப்பித்
துத் தனிக்கூத்தென்றும், நடிப்பானை நாம்மனமே பெற்றவா றெனுங்
களிப்பால் நயந்து பாடி. ககஞ

3277 மீளாத அருள்பெற்றுப் புறம்போந்து திருவீதி மேவித் தாழ்ந்தே
ஆளான வன்தொண்டர் அந்தணர்கள் தாம்போற்ற அமர்ந்து வைகி
மாளாத பேரன்பாற் பொற்பதியை வணங்கிப்போய் மறலி வீழத்
தாளாண்மை கொண்டவர்தங் கருப்பறிய லூர்வணங்கிச் சென்று சார்ந்தார்.

வேறு

3278 கூற்றுதைத்தார் திருக்கொகுடிக் கோயில் நண்ணிக் கோபுரத்
தைத் தொழுதுபுகுந் தன்பர் சூழ, ஏற்றபெருங் காதலினுல் இறைஞ்சி
ஏத்தி எல்லையிலாப் பெருமகிழ்ச்சி மனத்தில் எய்தப், போற்றிசைத்
துப் புறத்தணைந்தப் பதியில் வைகிப் புனிதரவர் தமைநினையும் இன்
பங் கூறிச், சாற்றியமெய்த் திருப்பதிகம் "சிம்மாந்" தென்னும்
தமிழ்மாலை புனைந்தங்குச் சாரு நாளில். ககள

3279 கண்ணுதலார் விரும்புகருப் பறிய லூரைக் கைதொழுது நீங்கிப்
போய்க் கயல்கள் பாயும், மண்ணிவளம் படிக்கரையை நண்ணி அங்கு
மாதொருபா கத்தவர்தாள் வணங்கிப் போற்றி, எண்ணில்புகழ்ப் பதி
கமும்"முன் னவன்"என் றேத்தி ஏகுவார் வாழ்கொளிபுத் தூர்எய்
தாது, புண்ணியனூர் போம்பொழுது நினைந்து மீண்டு புகுகின்றூர்
"தலைக்கலன்"என் றெடுத்துப் போற்றி. ககஅ

3280 திருப்பதிகம் பாடியே சென்றங் கெய்தித் தேவர்பெரு மானூர்
தங் கோயில் வாயில், உருப்பொலியும் மயிர்ப்புளகம் விரவத் தாழ்ந்தே
உள்ளணைந்து பணிந்தேத்தி உருகும் அன்பால், பொருப்பரையன்
மடப்பாவை இடப்பா லாணைப் போற்றிசைத்துப் புறம்போந்து தங்கிப்
பூமென், கருப்புவயல் வாழ்கொளிபுத் தூரை நீங்கிக் காஞ்சிமூள்
ளூரிற் கலந்த போது. ககக

3281 காஞ்சிமூள்ளூரைச் சாரும் போது கண்ணுதலார் எதிர்
காட்சி கொடுப்பக் கண்டு, "தூநாண்மென் மலர்க்கொன்றைச் சடை
யார் செய்ய துணைப்பாத மலர்கண்டு தொழுதேன்" என்று, வானூ
ரூந் திருப்பதிகம் "வள்வாய்" என்னும் வண்தமிழின் தொடைமாலை
மலரச் சாத்தித், தேனூரும் மலர்ச்சோலை மருங்கு சூழ்ந்த திருவதிர்
கொள் பாடியினை எய்தச் செல்வார். கஉ0

3282 எத்திசையுந் தொழுதேத்த "மத்த யானை" எடுத்"தெதிர்கொள்
பாடியினை அடைவோம்" என்னும், சித்தநிலைத் திருப்பதிகம் பாடி

பா. பே. I. வித்வான் சபாபதி ஐயர். கே. எஸ். ராமசாமி

வந்து செல்வமிகு செழுங்கோயில் இறைஞ்சி நண்ணி, அத்தர்தமை
அடிவணங்கி அங்கு வைகி அருள்பெற்றுத் திருவேள்விக் குடியில்
எய்தி, முத்திதரும் பெருமானைத் துருத்தி கூட "மூப்பதிலை" எனும்
பதிகம் மொழிந்து வாழ்ந்தார். கஉக

வேறு

காட்டுநல் வேள்விக் கோலங் கருத்துற வணங்கிக் காதல்
நாட்டிய உள்ளத் தோடு நம்பிஆ ரூரர் போற்றி
ஈட்டிய தவத்தோர் சூழ அங்குநின் றேகி அன்பு
பூட்டிஆட் கொண்டார் மன்னுந் தானங்கள் இறைஞ்சிப் போந்து.

வேறு

எஞ்சாத பேரன்பில் திருத்தொண்ட ருடனெய்தி
நஞ்சாருங் கறைமிடற்றூர் இடம்பலவும் நயந்தேத்தி
மஞ்சாரும் பொழிலுடுத்த மலர்த்தடங்கள் புடைசூழும்
செஞ்சாலி வயல்மருதத் திருவாரூர் சென்றடைந்தார். கஉங

செல்வமலி திருவாரூர்த் தேவரொடு முனிவர்களும்
மல்குதிருக் கோபுரத்து வந்திறைஞ்சி உள்புக்கங்
கெல்லையிலாக் காதல்மிக எடுத்தமலர்க் கைகுவித்துப்
பல்குதிருத் தொண்டருடன் பரமர்திரு முன்அணைந்தார். கஉச

மூவாத முதலாகி நடுவாகி முடியாத
சேவாருங் கொடியாரைத் திருமூலட் டானத்துள்
ஓவாத பெருங்காத லுடன்இறைஞ்சிப் புறம்போந்து
தாவாத புகழ்ப்பரவை யார்திருமா ளிகைசார்ந்தார். கஉஞ

பொங்குபெரு விருப்பினெடு புரிகுழலார் பலர்போற்றப்
பங்கயக்கண் செங்கனிவாய்ப் பரவையார் அடிவணங்கி
"எங்களையும் நினைந்தருளிற்" றெனஇயம்ப இனிதளித்து
மங்கைநல்லார் அவரோடு மகிழ்ந்துறைந்து வைகுநாள். கஉசு

"நாயனார் முதுகுன்றர் நமக்களித்த நன்னியமம்
தூயமணி முத்தாற்றிற் புகவிட்டேம் துணைவரவர்
கோயிலின்மா ளிகைமேல்பாற் குளத்தில்அவர் அருளாலே
போயெடுத்துக் கொடுபோதப் போதுவாய்" எனப்புகல. கஉள

"என்னஅதி சயம்இதுதான் என்சொன்ன வா"றென்று
மின்னிடையார் சிறுமுறுவ லுடன்விளம்ப மெய்யுணர்ந்தார்
"நன்னுதலாய்! என்னுடைய நாதன்அரு ளாற்குளத்தில்
பொன்னடைய எடுத்தனக்குத் தருவதுபோய் யா"தென்று. கஉஅ

ஆங்கவரும் உடன்போத அளவிறந்த விருப்பினுடன்
பூங்கோயில் உள்மகிழ்ந்த புராதனரைப் புக்கிறைஞ்சி

ஓங்குதிரு மாளிகையை வலம்வந்தங் குடன்மேலைப்
பாங்குதிருக் குளத்தணைந்தார் பரவையார் தனித்துணைவர். கஉசு

மற்றதனில் வடகீழ்பாற் கரைமீது வந்தருளி
முற்றிழையார் தமைநிறுத்தி முனைப்பாடித் திருநாடர்
கற்றைவார் சடையாரைக் கைதொழுது குளத்தில்இழிந்
தற்றைநாள் இட்டெடுப்பார் போல்அங்குத் தடவுதலும். கஉo

நீற்றழகர் பாட்டேவந்து திருவிளையாட் டினில்நின்று
மாற்றுறுசெம் பொன்குளத்து வருவியா தொழிந்தருள
"ஆற்றினில்இட் டேக்குளத்தில் தேடுவீர் ! அருள் இதுவோ
சாற்றும்"எனக் கோற்றொடியார் மொழிந்தருளத் தனித்தொண்டர்.

"முன்செய்த அருள்வழியே முருகலர்பூங் குழற்பரவை
தன்செய்ய வாயில்நகை தாராமே தாரும்"என
மின்செய்த நூல்மார்பின் வேதியர்தாம் முதுகுன்றில்
"பொன்செய்த மேனியினீர்" எனப்பதிகம் போற்றிசைத்து. கஉஉ

"மூட்டஇமை யோர்அறிய முதுகுன்றில் தந்தபொருள்
சட்டநான் பெறுதொழிந்த தளர்வினுல் கையறவாம்
இட்டளத்தை இவளெதிரே கெடுத்தருளும்" எனுந்திருப்பாட்
டெட்டளவும் பொன்காட்டா தொழிந்தருள ஏத்துவார். கஉக

"ஏத்தாதே இருந்தறியேன்" எனுந்திருப்பாட் டெவ்வுலகும்
காத்தாடும் அம்பலத்துக் கண்ணுளனுங் கண்ணுதலைக்
"கூத்தா!தந் தருளாய்இக் கோமளத்தின் முன்"என்று
நீத்தாருந் தோடார்வரிய நேரிநின்றார் பரவுதலும். கஉச

கோந்தவிழ்பூங் கொன்றைமுடிக் கூத்தனார் திருவருளால்
வந்தெழுபொன் திரளெடுத்து வீரன்முறையாற் கரையேற்ற
அந்தரத்து மலர்மாரி பொழிந்திழிந்த(து) அவனியுளோர்
"இந்தஅதி சயம்என்னே! யார்பெறுவார்?" எனத்தொழுதார். கஉடு

ஞாலம்வியப் பெய்தவரு நற்கனக மிடைஎடுத்து
மூலமெனக் கொடுபோந்த ஆணியின்முன் உரைப்பிக்க
நீலமிடற் றவர்அருளால் உரைதாழப் பின்னும்நெடு
மாலயனுக் கரியகழல் வழுத்தினார் வன்தொண்டர். கஉசு

மீட்டும்அவர் பரவுதலும் மெய்யன்பர் அன்பில்வரும்
பாட்டேவந்து கூத்துவந்தார் படுவாசி முடிவெய்தும்
ஓட்டறுசெம் பொன்னெனக்க ஒருமாவுங் குறையாமல்
காட்டுதலும் மகிழ்ந்தெடுத்துக் கொண்டுகரை ஏறினார். கஉஎ

உசு

3292 கரையேறிப் பரவையா ருடன்கனக மானதெலாம்
நிரையேயா ளிற்சுமத்தி நெடுநிலமா ளிகைபோக்கித்
திரையேறும் புனற்சடிலத் திருமூலட் டானத்தார்
விரையேறு மலர்ப்பாதந் தொழுதணைந்தார் வீதியினில். கஙஅ

3293 வந்துதிரு மாளிகையின் உட்புகுந்து மங்கலவாழ்த்
தந்தமிலா வகைஏத்தும் அளவிறந்தார் ஒலிசிறப்பச்
சிந்தைநிறை மகிழ்ச்சியுடன் சேயிழையா ருடன்அமர்ந்தார்
கந்தமலி மலர்ச்சோலை நாவலர்தங் காவலனார். கஙக

3294 அணியாரூர் மணிப்புற்றின் அமர்ந்தருளும் பரம்பொருளைப்
பணிவார்அங் கொருநாளிற் பாராட்டுந் திருப்பதிகம்
தணியாத ஆனந்தம் தலைசிறப்பத் தொண்டருடன்
துணிவாய பொருள்விளைத் தொழுதாடிப் பாடுவார். கசO

3295 பண்ணிறையும் வகை"பாறு தாங்கி"என எடுத்தருளி
உண்ணிறையும் மனக்களிப்பால் உறுபுளகம் மயிர்முகிழ்ப்பக்
கண்ணிறையும் புனல்பொழியக் கரைஇகந்த ஆனந்தம்
எண்ணிறைந்த படிதோன்ற ஏத்திமகிழ்ந் தின்புற்றார். கசக

3296 இன்புற்றங் கமர்நாளில் ஈறில்அரு மறைபரவும்
வன்புற்றின் அரவணிந்த மன்னவனார் அருள்பெற்றே
அன்புற்ற காதலுடன் அளவிறந்த பிறபதியும்
பொன்புற்கென் றிடஒளிருஞ் சடையாரைத் தொழப்போவார். கசஉ

3297 பரிசனமும் உடன்போதப் பாங்கமைந்த பதிகள்தொறும்
கரியுரிவை புனைந்தார்தங் கழல்தொழுது மகிழ்ந்தேத்தித்
துரிசறுநற் பெருந்தொண்டர் நள்ளாறு தொழுவதற்குப்
புரிவுறுமெய்த் திருத்தொண்டர் எதிர்கொள்ளப் புக்கணைந்தார். கசங

3298 விண்தடவு கோபுரத்தைப் பணிந்துகரம் மேற்குவித்துக்
கொண்டுபுகுந் தண்ணலார் கோயிலினை வலஞ்செய்து
மண்டியபே ரன்பினொடு மன்னுதிரு நள்ளாறர்
புண்டரிகச் சேவடிக்கீழ்ப் பொருந்தநில மிசைப்பணிந்தார். கசச

3299 அங்கணரைப் பணிந்தேத்தி அருளினால் தொழுதுபோய்
மங்குலணி மணிமாடத் திருக்கடவூர் வந்தெய்தித்
திங்கள்வளர் முடியார்தந் திருமயா னமும்பணிந்து
பொங்கும்இசைப் பதிகம்"மரு வார்கொன்றை" எனப்போற்றி. கசரி

3300 திருவீரட் டானத்துத் தேவர்பிரான் சினக்கூற்றின்
பொருவீரந் தொலைத்தகழல் பணிந்து"பொடி யார்மேனி"
மருஈரத் தமிழ்மாலை புனைந்தேத்தி மலைவளைத்த
பெருவீரர் வலம்புரத்துப் பெருகார்வத் தொடுஞ்சென்றார். கசசு

பா.பே. 1. சிலையா னிறை மகிழ்ச்சியுடன்
2. துணிவாய பொருள்விளைத் தொழுதாடிப் பாடுவார்.

3305 வரையோடு நிகர்புரிசை வலம்புரத்தார் கழல்வணங்கி
உரையோசைப் பதிகம்"எனக் கினி"ஓதிப் போய்ச்சங்கம்
நிரையோடு துமித்தூப மணித்தீபம் நித்திலப்பூர்
திரையோதந் கொண்டிறைஞ்சுந் திருச்சாய்க்கா டெய்தினார். கசஎ

3306 தேவர்பெரு மான்தன்னைத் திருச்சாய்க்காட் டினிற்பணிந்து
பாவலர்செந் தமிழ்மாலைத் திருப்பதிகம் பாடிப்போய்
மேவலர்தம் புரம்எரித்தார் வெண்காடு பணிந்தேத்தி
நாவலர்கா வலர்அடைந்தார் நனிபள்ளித் திருநகரில். கசஅ

3307 நனிப்பள்ளி அமர்ந்தபிரான் கழல்வணங்கி நற்றமிழின்
புனிதநறுந் தொடைபுனைந்து திருச்செம்பொன் பள்ளிமுதல்
பனிமதிசேர் சடையார்தம் பதிபலவும் பணிந்துபோய்த்
தனிவிடைமேல் வருவார்தந் திருநின்றி யூர்சார்ந்தார். கசக

3308 நின்றியூர் மேயாரை நேயத்தாற் புக்கிறைஞ்சி
ஒன்றியஅன் புள்ளுருகப் பாடுவார் உடையஅர
சென்றும்உல கிடர்நீங்கப் பாடியஎ ழெழுநூறும்
அன்றுசிறப் பித்(து) அஞ்சொல் திருப்பதிகம் அருள்செய்தார். கஙo

3309 அப்பதியில் அன்பருடன் அமர்ந்தகல்வார் அகலிடத்தில்
செப்பரிய புகழ்நீடூர் பணியாது செல்பொழுதில்
ஒப்பரிய உணர்விஞல் நினைந்தருளித் தொழலுறுவார்
மெய்ப்பொருள்வண் தமிழ்மாலை விளம்பியே மீண்டணைந்தார். கஙக

3310 " மடலாரும் புனல்நீடூர் மருவினர்தாள் வணங்காது
விடலாமே" எனுங்காதல் விருப்புறும்அத் திருப்பதிகம்
அடலார்சூ லப்படையார் தமைப்பாடி அடிவணங்கி
உடலாரும் மயிர்ப்புளகம் மிகப்பணிந்தங் குறைகின்றார். கஙஉ

3311 அங்கண்இனி தமர்ந்தருளால் திருப்புன்கூர் அணைந்திறைஞ்சிக்
கொங்கலரும் மலர்ச்சோலைத் திருக்கோலக் காஅணையக்
கங்கைசடைக் கரந்தவர்தாம் எதிர்காட்சி கொடுத்தருளப்
பொங்குவிருப் பால்தொழுது திருப்பதிகம் போற்றிசைப்பார். கஙஊ

3312 திருஞான சம்பந்தர் திருக்கைக ளால்ஒற்றிப்
பெருகார்வத் துடன்பாடப் பிஞ்ஞகனார் கண்டிரங்கி
அருளாலே திருத்தாளம் அளித்தபடி சிறப்பித்துப்
பொருள்மாலைத் திருப்பதிகம் பாடியே போற்றிசைத்தார். கஙச

3313 மூவாத முழுமுதலார் முதற்கோலக் காஅகன்று
தாவாத புகழ்ச்சண்பை வலங்கொண்டு தாழ்ந்திறைஞ்சி
நாவார்முத் தமிழ்விரகர் நற்பதங்கள் பரவிப்போய்
மேவார்தம் புரஞ்செற்றார் குருகாவூர் மேவுவார். கஙஞ

பா. தே. பி. நூறுகள்.

3315 உண்ணீரின் வேட்கையுடன் உறுபசியால் மிகவருந்திப்
பண்ணீர்மை மொழிப்பரவை யார்கொழுநர் வரும்பாங்கர்க்
கண்ணீடு திருநுதலார் காதல்வரக் கருத்தறிந்து
தண்ணீரும் பொதிசோறும் கொண்டுவழிச் சார்கின்றார். கருசு

3316 வேனிலுறு வெயில்வெம்மை தணிப்பதற்கு விரைக்குளிர்மென்
பானல்மலர்த் தடம்போலும் பந்தர்ஒரு பால்அமைத்தே
ஆனமறை வேதியராய் அருள்வேடங் கொண்டிருந்தார்
மானமருந் திருக்கரத்தார் வன்தொண்டர் தமைப்பார்த்து. கருள

3317 குருகாவூர் அமர்ந்தருளுங் குழகர்வழி பார்த்திருப்பத்
திருவாரூர்த் தம்பிரான் தோழர்திருத் தொண்டருடன்
வருவார்அப் பந்தரிடைப் புகுந்துதிரு மறையவர்பால்
பெருகார்வஞ் செலஇருந்தார் "சிவாயநம" எனப்பேசி. கருஅ

3318 ஆலநிழற் கீழிருந்தார் அவர்தம்மை எதிர்நோக்கிச்
"சாலமிகப் பசித்தீர்இப் பொதிசோறு தருகின்றேன்
காலம்இனித் தாழாமே கைக்கொண்டிங் கினிதருந்தி
ஏலநறுங் குளிர்தண்ணீர் குடித்திளைப்புத் தீரும்" என. கருகூ

3319 வன்தொண்டர் அதுகேட்டு "மறைமூனிவர் தரும்பொதிசோ
றின்றுநமக் கெதிர்விலக்கல் ஆகா"தென் றிசைந்தருளிப்
பொன்தயங்கு தூல்மார்பர் தரும்பொதிசோ றதுவாங்கிச்
சென்றுதிருத் தொண்டருடன் திருஅமுது செய்தருளி. கசுO

3320 எண்ணிறந்த பரிசனங்கள் எல்லாரும் இனிதருந்தப்
பண்ணியபின் அம்மருங்கு பசித்தணைந்தார் களும்அருந்த
உண்ணிறைந்த ஆரமுதாய் ஒருகாலும் உலவாதே
புண்ணியனார் தாமளித்த பொதிசோறு பொலிந்ததால். கசுக

3321 சங்கரனார் திருவருள்போல் தண்ணீரின் சுவை ஆர்ந்து
பொங்கிவரும் ஆதரவால் அவர்நாமம் புகழ்ந்தேத்தி
அங்கயர்வால் பள்ளிஅமர்ந் தருகணைந்தார் களுந்துயிலக்
கங்கைசடைக் கரந்தார்அப் பந்தரொடுந் தாங்கரந்தார். கசுஉ

3322 சித்தநிலை திரியாத திருநாவ லூர்மன்னர்
அத்தகுதி யினிற்பள்ளி யுணர்ந்தவரைக் காணுமை
"இத்தனையா மாற்றம் அறிந்திலேன்" எனஎடுத்து
மெய்த்தகைய திருப்பதிகம் விளம்பியே சென்றடைந்தார். கசுங

3323 குருகாவூர் அமர்ந்தருளுங் குழகனார் கோயிலினுக்
கருகார்பொற் கோபுரத்தை அணைந்திறைஞ்சி உள்புக்கு
வருகாதல் கூரவலங் கொண்டுதிரு முன்வணங்கிப்
பருகாஇன் னமுதத்தைக் கண்களார்ப் பருகினார். கசுச

பா. பெ. மணிவண்ணன் கொடுத்தது

3324 கண்ணுர்ந்த இன்னமுதைக் கையாரத் தொழுதிறைஞ்சிப்
பண்ணுர்ந்த திருப்பதிகம் பாடியே பணிந்தேத்தி
உண்ணுடும் பெருங்காதல் உடையவர்தாம் புறத்தெய்தி
நண்ணுர்வத் தொண்டருடன் அங்கினிது நயந்திருந்தார். ககூடு

3325 அங்காளில் தம்பெருமான் அருள்கூடப் பணிந்தகன்று
மின்னுர்செஞ் சடைமுடியார் விரும்புமிடம் பலவணங்கிக்
கன்னுடும் எயில்புடைசூழ் கழிப்பாலை தொழுதேத்தித்
தென்னுவ லூர்மன்னர் திருத்தில்லை வந்தடைந்தார். ககூசு

3326 சீர்வளருந் திருத்தில்லைத் திருவீதி பணிந்துபுகுந்
தேர்வளர்பொற் றிருமன்றுள் எடுத்தசே வடிஇறைஞ்சிப்
பார்வளர மறைவளர்க்கும் பதிஅதனிற் பணிந்துறைவார்
போர்வளர்மே ருச்சிலையார் திருத்தினைமா நகர்புகுந்தார். ககூள

3327 திருத்தினைமா நகர்மேவுஞ் சிவக்கொழுந்தைப் பணிந்துபோய்
நிருத்தனுர் அமர்ந்தருளும் நிறைபதிகள் பலவணங்கிப்
பொருத்தமிகுந் திருத்தொண்டர் போற்றுதிரு நாவலூர்
கருத்தில்வரும் ஆதரவால் கைதொழச்சென் றெய்தினார். ககூஅ

3328 "திருநாவ லூர்மன்னர் சேர்கின்றார்" எனக்கேட்டுப்
பெருநாமப் பதியோருந் தொண்டர்களும் "பெருவாழ்வு
வருநாள்"என் றலங்கரித்து வந்தெதிர்கொண் டுள்ளணையச்
செருநாகத் துரிபுனைந்தார் செழுங்கோயில் உள்ளணைந்தார். ககூக

3329 மேவியஅத் தொண்டர்குழாம் மிடைந்(து)"அர"என் றெழும்ஓசை
மூவுலகும் போய்ஒலிப்ப முதல்வனுர் முன்பெய்தி
ஆவியினும் அடைவுடையார் அடிக்கமலத் தருள்போற்றிக்
"கோவலனுன் முகன்"எடுத்துப் பாடியே கும்பிட்டார். களo

3330 நலம்பெருகும் அப்பதியில் நாடியஅன் பொடுநயந்து
குலம்பெருகுந் திருத்தொண்டர் குழாத்தோடும் இனிதமர்ந்து
சலம்பெருகுஞ் சடைமுடியார் தாள்வணங்கி அருள்பெற்றுப்
பொலம்புரிநூல் மணிமார்பர் பிறபதியுந் தொழப்போவார். களக

3331 தண்டகமாந் திருநாட்டுத் தனிவிடையார் மகிழ்விடங்கள்
தொண்டர்எதிர் கொண்டணைய தொழுதுபோய்த் தூயநதி
வண்டறைபூம் புறவுமலி வளமருதம் பலகடந்தே
எண்டிசையோர் பரவுதிருக் கழுக்குன்றை எய்தினார். களஉ

3332 தேனுர்ந்த மலர்ச்சோலைத் திருக்கழுக்குன் றத்தடியார்
ஆனுத விருப்பினுடும் எதிர்கொள்ள அடைந்தருளித்
தூநாள்வெண் மதியணிந்த சுடர்க்கொழுந்தைத் தொழுதிறைஞ்சிப்
பாநாடும் இன்னிசையின் திருப்பதிகம் பாடினார். களங

யா. கு. ப. அன்னகூடு மேருமந்தரை புரா

3333 பாடியஅப் பதியின்கண் இனிதமர்ந்து பணிந்துபோய்
நாடியநல் லுணர்விஞெடுங் திருக்கச்சூர் தனேநண்ணி
ஆடகமா மதில்புடைசூழ் ஆலக்கோயி லின்அமுதைக்
கூடியமெய் அன்புருகக் கும்பிட்டுப் புறத்தணேந்தார். களச

3334 அணேந்தருளும் அவ்வேலே அமுதுசெயும் பொழுதாகக்
கொணர்ந்தமுது சமைத்தளிக்கும் பரிசனமுங் குறுகாமைத்
தணந்தபசி வருத்தத்தால் தம்பிரான் திருவாயில்
புணர்ந்தமதிற் புறத்திருந்தார் முனேப்பாடிப் புரவலனார். களரு

3335 வன்தொண்டர் பசிதீர்க்க மலேயின்மேல் மருந்தானூர்
மின்தங்கு வெண்டலேயோ(டு) ஒழிந்தொருவெற் றேடேந்தி
அன்றங்கு வாழ்வார்ஓர் அந்தணராய்ப் புறப்பட்டுச்
சென்றன்பர் முகநோக்கி அருள்கூரச் செப்புவார். களசு

3336 "மெய்ப்பசியால் மிகவருந்தி இளேத்திருந்தீர் வேட்கைவிட
இப்பொழுதே சோறிரந்திங் கியான்உமக்குக் கொணர்கின்றேன்
அப்புறம்நீர் அகலாதே சிறிதுபொழு தமரும்"எனச்
செப்பிஅவர் திருக்கச்சூர் மனேதோறுஞ் சென்றிரப்பார். களள

3337 வெண்திருநீற் றணிதிகழ விளங்குநூல் ஒளிதுளங்கக்
கண்டவர்கள் மனம்உருகக் கடும்பகற்போ திடும்பலிக்குப்
புண்டரிகக் கழல்புவிமேல் பொருந்தமனி தொறும்புக்குக்
கொண்டுதாம் விரும்பிஆட் கொண்டவர்முன் கொடுவந்தார். களஅ

3338 இரந்துதாங் கொடுவந்த இன்னடிசி லுங்கறியும்
"அரந்தைதரும் பசிதீர அருந்துவீர்" எனஅளிப்பப்
பெருந்தகையார் மறையவர்தம் பேரருளின் திறம்பேணி
நிரந்தபெருங் காதலினுல் நேர்தொழுது வாங்கினர். களசு

3339 வாங்கியஅத் திருஅமுது வன்தொண்டர் மருங்கணேந்த
ஓங்குதவத் தொண்டருடன் உண்டருளி உவந்திருப்ப
ஆங்கருகு நின்றார்போல் அவர்தம்மை அறியாமே
நீங்கினர் எப்போருளும் நீங்காத நிலேமையினர். கஅ0

3340 திருநாவ லூராளி சிவயோகி யார்நீங்க
வருநாம மறையவனர் இறையவனர் எனமதித்தே
"பெருநாதச் சிலம்பணிசே வடிவருந்தப் பெரும்பகற்கண்
உருநாடி எழுந்தருளிற் றென்பொருட்டாம்" எனஉருகி. கஅக

வேறு

3341 "முதுவா யோரி" என்றெடுத்து முதல்வ னர்தம் பெருங்கருணே
அதுவாம் இதுஎன் றதிசயம்வந் தெய்தக் கண்ணீர் மழைஅருவிப்

புதுவார் புனலின் மயிர்ப்புளகம் புதையப் பதிகம் போற்றிசைத்து
மதுவார் இதழி முடியாரைப் பாடி மகிழ்ந்து வணங்கினார். கஅஉ

3342 வந்தித் திறைவர் அருளாற்போய் மங்கை பாகர் மகிழ்ந்தஇடம்
மூந்தித் தொண்டர் எதிர்கொள்ளப் புக்கு முக்கட் பெருமானைச்
சிந்தித்திடவந்தருள்செய்கழல்பணிந்துசெஞ்சொல்தொடைபுனைந்தே
அந்திச் செக்கர்ப் பெருகொளியார் அமருங் காஞ்சி மருங்கணைந்தார்.

3343 "அன்று வெண்ணெய் நல்லூரில் அரியும் அயனும் தொடர்வரிய
வென்றி மழவெள் விடையுயர்த்தார் வேத முதல்வ ராய்வந்து
நின்றுசபைமுன்வழக்குரைத்து நேரேதொடர்ந்தாட்கொண்டவர்தாம்
இன்றிங் கெய்தப் பெற்றோம்"என் றெயில்சூழ் காஞ்சி நகர்வாழ்வார்.

3344 மல்கு மகிழ்ச்சி மிகப்பெருக மறுகு மணித்தோ ரணம்நாட்டி
அல்கு தீபம் நிறைகுடங்கள் அகிலின் தூபங் கொடிஎடுத்துச்
செல்வ மனைகள் அலங்கரித்துத் தெற்றி ஆடல் முழவதிரப்
பல்கு தொண்ட ருடன்கூடிப் பதியின் புறம்போய் எதிர்கொண்டார்.

3345 ஆண்ட நம்பி எதிர்கொண்ட அடியார் வணங்க எதிர்வணங்கி
நீண்ட மதிட்கோ புரங்கடந்து நிரைமா ளிகைவீ தியிற்போந்து
பூண்ட காதல் வாழ்த்தினுடன் புனைமங் கலதூ ரியம்ஒலிப்ப
ஈண்டு தொண்டர் பெருகுதிரு ஏகாம் பரஞ்சென் றெய்தினார். கஅசு

3346 ஆழி நெடுமால் அயன்முதலாம் அமரர் நெருங்கு கோபுரம்முன்
பூழி யுறமண் மிசைமேனி பொருந்த வணங்கிப் புகுந்தருளிச்
சூழு மணிமா ளிகைபலவுந் தொழுது வணங்கி வலங்கொண்டு
வாழி மணிப்பொற் கோயிலினுள் வந்தார் அணுக்க வன்தொண்டர்.

3347 கைகள் கூப்பி முன்அணைவார் கம்பை ஆறு பெருகிவர
ஐயர் தமக்கு மிகஅஞ்சி ஆரத் தழுவிக் கொண்டிருந்த
மையு லாவுங் கருநெடுங்கண் மலையாள் என்றும் வழிபடுபூஞ்
செய்ய கமலச் சேவடிக்கீழ்த் திருந்து காத லுடன்வீழ்ந்தார். கஅஅ

3348 வீழ்ந்து போற்றிப் பரவசமாய் விம்மி எழுந்து மெய்யன்பால்
வாழ்ந்த சிந்தை யுடன்பாடி மாறு விருப்பிற் புறம்போந்து
சூழ்ந்த தொண்ட ருடன்மருவும் நாளில் தொல்லைக் கச்சிநகர்த்
தாழ்ந்த சடையார் ஆலயங்கள் பலவுஞ் சார்ந்து வணங்குவார். கஅக

3349 சீரார் காஞ்சி மன்னுதிருக் காமக் கோட்டம் சென்றிறைஞ்சி
நீரார் சடையார் அமர்ந்தருளும் நீடு திருமேற் றளிமேவி
ஆரா அன்பிற் பணிந்தேத்தும் அளவில் "தூந்தா ஒண்சுடராம்"
பாரார் பெருமைத் திருப்பதிகம் பாடி மகிழ்ந்து பரவினார். கஉo

3350 ஓண காந்தன் றளிமேவும் ஒருவர் தம்மை உரிமையுடன்
பேணி அமைந்த தோழமையாற் பெருகும் அடிமைத் திறம்பேசிக்

பா.பே-1. பணிந்தேத்தி ஆ. திருவெண்பாக்கம்.

காண மோடு பொன்வேண்டி "நெய்யும் பாலும்" கலிவிளங்கும்
யாணர்ப் பதிகம் எடுத்தேத்தி எண்ணில் நிதிபெற் றினிதிருந்தார்.

அங்கண் அமர்வார் அனேகதங்கா பதத்தை எய்தி உள்ளணைந்து,
செங்கண் விடையார் தமைப்பணிந்து "தேனெய் புரிந்"தென்
றெடுத்ததமிழ், "தங்கும் இடமாம்" எனப்பாடித் தாழ்ந்து பிறவுந்
தானங்கள், பொங்கு காத லுடன்போற்றிப் புரிந்தப் பதியிற் பொரு
ந்துநாள். ககூஉ

3351 பாட லிசையும் பணியினுற் பாவை தழுவக் குழைகம்பர்
ஆடல் மருவுஞ் சேவடிகள் பரவிப் பிரியா தமர்கின்றூர்
நீட மூதூர்ப் புறத்திறைவர் நிலவும் பதிகள் தொழுவிருப்பால்
மாடம் நெருங்கு வன்பார்த்தான் பனங்காட் டூரில் வந்தடைந்தார்.

3352 செல்வம் மல்கு திருப்பனங்காட் டூரிற் செம்பொற் செழுஞ்சுடரை
அல்லல் அறுக்கும் அருமருந்தை வணங்கி அன்பு பொழிகண்ணீர்
மல்க நின்று "விடையின்மேல் வருவான்" எனும்வண் தமிழ்ப்பதிகம்
நல்ல இசையி னுடன்பாடிப் போந்து புறம்பு நண்ணுவார். ககூச

3353 மன்னு திருமாற் பேறணைந்து வணங்கிப் பரவித் திருவல்லம்
தன்னுள் எய்தி இறைஞ்சிப்போய்ச் சாரும் மேல்பாற் சடைக்கற்றைப்
பின்னல் முடியார் இடம்பலவும் பேணி வணங்கிப் பெருந்தொண்டர்
சென்னி முகில்தோய் தடங்குவட்டுத் திருக்கா ளத்தி மலைசேர்ந்தார்.

3354 தடுக்க லாகாப் பெருங்காதல் தலைநின் றருளுங் கண்ணப்பர்
இடுக்கண் களைந்தாட் கொண்டருளும் இறைவர் மகிழ்ந்த காளத்தி
அடுக்கல் சேர அணைந்துபணிந் தருளால் ஏறி அன்பாறு
மடுப்பத் திருமுன் சென்றெய்தி மலைமேல் மருந்தை வணங்கினார்.

3355 வணங்கி உள்ளங் களிகூர மகிழ்ந்து போற்றி மதுரஇசை
அணங்கு "செண்டா" டெனும்பதிகம் பாடி அன்பாற் கண்ணப்பர்
மணங்கொள் மலர்ச்சே வடிபணிந்து வாழ்ந்து போந்து மன்னுபதி
இணங்கு தொண்டர் உடன்கெழுமி இன்புற் றிருக்கும் அந்நாளில்.

3356 வடமா திரத்துப் பருப்பதமும் திருக்கே தாரம் மலையும்முதல்
இடமா அரனார் தாம்உவந்த எல்லாம் இங்கே இருந்திறைஞ்சி
நடமா டியசே வடியாரை நண்ணி னார்போல் உள்நிறைந்து
திடமாங் கருத்தில் திருப்பதிகம் பாடிக் காதல் சிறந்திருந்தார். ககூஅ

3357 அங்குச் சிலநாள் வைகியபின் அருளாற் போந்து பொருவிடையார்
தங்கும் இடங்கள் எனைப்பலவும் சார்ந்து தாழ்ந்து தமிழ்பாடிப்
பொங்கு புனரிக் கரைமருங்கு புவியுட் சிவலோ கம்போலத்
திங்கள் முடியார் அமர்ந்ததிரு ஒற்றி யூரைச் சென்றடைந்தார்.

3355 அண்ணல் தொடர்ந்தா வணங்காட்டி ஆண்ட நம்பி எழுந்தருள
எண்ணில் பெருமை ஆதிபுரி இறைவர் அடியார் எதிர்கொள்வார்
வண்ண வீதி வாயில்தொறும் வாழை கமுகு தோரணங்கள்
சுண்ண நிறைபொற் குடந்தூப தீபம் எடுத்துத் தொழஎழுங்கால்.

3356 வரமங் கலநல் லியம்முழங்க வாச மாலை அணிஅரங்கில்
புரமங் கையர்கள் நடமாடப் பொழியும் வெள்ளப் பூமாரி
அரமங் கையரும் அமரர்களும் வீச அன்ப ருடன்புகுந்தார்
பிரமன் தலையிற் பலியுவந்த பிரானார் விரும்பு பெருந்தொண்டர். உ0க

3357 ஒற்றி யூரின் உமையோடுங் கூட நின்றார் உயர்தவத்தின்
பற்று மிக்க திருத்தொண்டர் பரந்த கடல்போல் வந்தீண்டிச்
சுற்றும் அணைந்து துதிசெய்யத் தொழுது தம்பி ரான்அன்பர்
கொற்ற மழவே றுடையவர்தங் கோயில் வாயில் எய்தினார். உ0உ

3358 வானை அளக்குங் கோபுரத்தை மகிழ்ந்து பணிந்து புகுந்துவளர்
கூனல் இளவெண் பிறைச்சடையார் கோயில் வலங்கொண் டெதிர்குறுகி
ஊனும் உயிரும் கரைந்துருக உச்சி குவித்த கையினுடன்
ஆன காத லுடன்வீழ்ந்தார் ஆரா அன்பின் ஆரூரர். உ0ங

3363 ஏட்டு வரியில் "ஒற்றியூர் நீங்கல்" என்ன எழுத்தறியும்
நாட்ட முலகுந் திருநுதலார் நறும்பொற் கமலச் சேவடியில்
கூட்டும் உணர்வு கொண்டெழுந்து கோதில் அமுத இசைகூடப்
"பாட்டும் பாடிப் பரவி" எனும் பதிகம் எடுத்துப் பாடினார். உ0ச

3364 பாடி அறிவு பரவசமாம் பரிவு பற்றப் புறம்போந்து
நீடு விருப்பிற் பெருங்காதல் நிறைந்த அன்பர் பலர்போற்றத்
தேடும் அயனும் திருமாலும் அறிதற் கரிய திருப்பாதம்
கூடுங் காலங் களில்அணைந்து பரவிக் கும்பிட் டினிதிருந்தார். உ0ரு

3365 இந்த நிலைமை யாரிவரிங் கிருந்தார் முன்பே இவர்க்காக
அந்தண் கயிலை மலைநீங்கி அருளாற் போந்த அநிந்திதையார்
வந்து புவிமேல் அவதரித்து வளர்ந்து பின்பு வன்தொண்டர்
சந்த விரைசூழ் புயஞ்சேர்ந்த பரிசு தெரியச் சாற்றுவாம். உ0சு

3366 நாலாங் குலத்திற் பெருகுநலம் உடையார் வாழும் ஞாயிற்றின்
மேலாங் கொள்கை வேளாண்மை மிக்க திருஞா யிறுகிழவர்
பாலா தரவு தருமகளா ராகிப் பார்மேல் அவதரித்தார்
ஆலா லஞ்சேர் கறைமிடற்றார் அருளால் முன்னை அநிந்திதையார்.

3367 மலையான் மடந்தை மலர்ப்பாதம் மறவா அன்பால் வந்தநெறி
தலையாம் உணர்வு வந்தணையத் தாமே அறிந்த சுங்கிலியார்
அலையார் வேற்கட் சிறுமகளிர் ஆயத் தோடும் விளையாட்டு
நிலையா வினஅப் பருவங்கள் தோறும் நிகழ நிரம்புவார். உ0அ

பா. பே. எண்ணும். இ. உணர்வு 3 பரவசமாய்ப் பாடியும்.

3368 சீர்கொள் மரபில் வருஞ்செயலே அன்றித் தெய்வ நிகழ்தன்மை
பாரில் எவரும் அதிசயிக்கும் பண்பில் வளரும் பைந்தொடியார்
வாரு மணிய அணியவரும் வளர்மென் முலைகள் இடைவருத்தச்
சாரும் பதத்தில் தந்தையார் தங்கண் மனைவி யார்க்குரைப்பார். உ0சு

3369 "வடிவும் குணமும் நம்முடைய மகட்கு மண்ணு லோர்க்கிசையும்
படிவ மன்றி மேற்பட்ட பரிசாம் பான்மை அறிகிலோம்
கடிசேர் மணமும் இனிநிகழுங் காலம்" என்னக் கற்புவளர்
கொடியே அனைய மனைவியார் "ஏற்கும் ஆற்றுற் கொடும்" என்றார்.

3370 தாய சோடு தந்தையார் பேசக் கேட்ட சங்கிலியார்
"ஏயு மாற்றம் அன்றிதுஎம் பெருமான் ஈசன் திருவருளே
மேய ஒருவர்க் குரியதியான் வேறென் விளையும்" என வெருவுற்
றுய உணர்வு மயங்கிமிக அயர்ந்தே அவனி மேல்விழுந்தார். உகக

3371 பாங்கு நின்ற தந்தையார் தாயார் பதைத்துப் பரிந்தெடுத்தே
ஏங்கும் உள்ளத் தினராகி "இவளுக் கென்னே வுற்ற" தெனத்
தாங்கிச் சீத விரைப்பனிநீர் தெளித்துத் தைவந் ததுநீங்க
வாங்கு சிலைமன் னுதலாரை "வந்த துனக்கிங் கென்?" என்றார். உகஉ

3372 என்று தம்மை ஈன்றெடுத்தார் வினவ மறைவிட் டியம்புவார்
"இன்றென் திறத்து நீர்மொழிந்த இதுஎன் பரிசுக் கிசையாது
வென்றி விடையார் அருள்செய்தார் ஒருவர்க் குரியேன் யான்இனிமேல்
சென்று திருஒற் றியூர்அணைந்து சிவனார் அருளிற் செல்வன்" என.

3373 அந்த மாற்றங் கேட்டவர்தாம் அயர்வும் பயமும் அதிசயமும்
வந்த வுள்ளத் தினரார்கி மற்ற மாற்றம் மறைத்தொழுகப்
பந்தம் நீடும் இவர்குலத்து நிகராம் ஒருவன் பரிசறியான்
சிந்தை விரும்பி மகட்பேச விடுத்தான் சிலருஞ் சென்றிசைத்தார்.

3374 தாதை யாரும் அதுகேட்டுத் தன்மை விளம்பத் தகாமையினால்
ஏதம் எய்தா வகைமொழிந்து போக்க அவராங் கெய்தாமுன்
தீதங் கிழைத்தே இறந்தான்போல் செல்ல விடுத்தார் உடன்சென்றான்
மாத ராரைப் பெற்றார்மற் றதனைக் கேட்டு மனம்மருண்டார். உகஙு

3375 "தைய லார்சங் கிலியார்தந் திறத்துப் பேசத் தகாவார்த்தை
உய்ய வேண்டும் நினைவுடையார் உரையார்" என்றங் குலகறியச்
செய்த விதிபோல் இதுநிகழச் சிறந்தார்க் குள்ள படிசெப்பி
நையும் உள்ளத் துடன்அஞ்சி நங்கை செயலே உடன்படுவார். உகசு

3376 "அணங்கே யாகும் இவள்செய்கை அறிந்தோர் பேச அஞ்சுவரால்
வணங்கும் ஈசர் திறமன்றி வார்த்தை அறியாள் மற்றிவள்தும்
குணங்கள் இவையாம் இனிஇவள்தான் குறித்த படியே ஒற்றிநகர்ப்
பணங்கொள் அரவச் சடையார்தம் பாற்கொண் டணைவோம்" எனப்பகர்வார்.

பா. பே. 1. கெழுமு 2. உள்ளம் 3. இதுபோது 4. உள்ளம் 5. வணங்கி : வணங்கு

3377
பண்ணூர் மொழிச்சங் கிலியாரை நோக்கிப் பயந்தா ரொடுங்கிளைஞர்
"தெண்ணீர் முடியார் திருவொற்றி யூரிற் சேர்ந்து செல்கதியும்
கண்ணூர் நுதலார் திருவருளா லாகக் கன்னி மாடத்துத்
தண்ணூர் தடஞ்சூழ் அந்நகரில் தங்கிப் புரிவீர் தவம்" என்று. உகஅ

3378
பெற்ற தாதை சுற்றத்தார் பிறைசேர் முடியார் விதியாலே
மற்றுச் செயலொன் றறியாது மங்கை யார்சங் கிலியார்தாம்
சொற்ற வண்ணஞ் செயத்துணிந்து துதைந்த செல்வத் தொடும்புரங்கள்
செற்ற சிலையார் திருவொற்றி யூரிற் கொண்டு சென்றணைந்தார். உகக

3379
சேன்னி வளர்வெண் பிறையணிந்த சிவனார் கோயி லுட்புகுந்து
தன் னுஞ் சுற்றத் தொடும்பணிந்து தொல்லைப் பதியோர் இசைவினால்
கன்னி மாடம் மருங்கமைத்துக் கடிசேர் முறைமைக் காப்பியற்றி
மன் னுஞ் செல்வம் தகவகுத்துத் தந்தை யார்வந் தடிவணங்கி. உஉ0

3380
"யாங்கள் உமக்குப் பணிசெய்ய ஈசற் கேற்ற பணிவிரும்பி
ஓங்கு கன்னி மாடத்தில் உறைகின் றீர்" என் றுரைக்கின்றார்
தாங்கற் கரிய கண்கள்நீர்த் தாரை ஒழுகத் தரியாதே
ஏங்கு சுற்றத் தொடும்இறைஞ்சிப் போனார் எயில்சூழ் தம்பதியில்.

3381
காதல் புரிந்து தவம்புரியுங் கன்னி யார்அங் கமர்கின்றார்
பூத நாதர் கோயிலினிற் காலந் தோறும் புக்கிறைஞ்சி
நீதி முறைமை வழுவாது தமக்கு நேர்ந்த பணிசெய்யச்
சீத மலர்ப்பூ மண்டபத்துத் திரைசூழ் ஒருபாற் சென்றிருந்து. உஉஉ

3382
பண்டு கயிலைத் திருமலையிற் செய்யும் பணியின் பான்மைமனங்
கொண்ட உணர்வு தலைநிற்பக் குலவு மலர்மென் கொடியனையார்
வண்டு மருவுந் திருமலர்மென் மாலை காலங் களுக்கேற்ப
அண்டர் பெருமான் முடிச்சாத்த அமைத்து வணங்கி அமருநாள்.

3383
அந்தி வண்ணத் தொருவர்திரு அருளால் வந்த ஆரூரார்
கந்த மாலைச் சங்கிலியார் தம்மைக் காதல் மணம்புணர
வந்த பருவம் ஆதலால் வகுத்த தன்மை வழுவாத
முந்தை விதியால் வந்தொருநாள் முதல்வர் கோயி லுட்புகுந்தார்.

3384
அண்டர் பெருமான் அந்தணராய் ஆண்ட நம்பி அங்கணரைப்
பண்டை முறைமை யாற்பணிந்து பாடிப் பரவிப் புறம்போந்து
தொண்டு செய்வார் திருத்தொழில்கள் கண்டு தொழுது செல்கின்றார்
புண்டரீகத் தடம்நிகர்பூந் திருமண் டபத்தின் உட்புகுந்தார். உஉஎ

3385
அன்பு நாரா அஞ்செழுத்து நெஞ்சு தொடுக்க அலர்தொடுத்தே
என்புள் ளுருக்கும் அடியாரைத் தொழுது நீங்கி வேறிடத்து
முன்பு போலத் திரைநீக்கி முதல்வர் சாத்தும் பணிகொடுத்து
மின்போல் மறையுஞ் சங்கிலியார் தம்மை விதியாற் கண்ணுற்றார்.

பா. பே. 1. திருவரு ளாகக் 2. சேர்ந்தினிது
3. நிலநிறுப்ப. 4. திருப்பணிகள் 5 எனபுள்ளு

3386 கோவா முத்தும் சுரும்பேறுக் கொழுமென் முகையும் அனையாரைச்
சேவார் கொடியார் திருத்தொண்டர் கண்ட போது சிந்தைநிறை
காவா தவர்பால் போய்வீழத் தம்பாற் காம னுர்துரந்த
பூவா ளிகள்வந் துறவீழத் தரியார் புறமே போந்துரைப்பார். உஉள

3387 "இன்ன பரிசென் றறிவரிதால் ஈங்கோர் மருங்கு திரைக்குள்ளால்
பொன்னும் மணியும் மலர்ந்தஒளி அமுதில் அளாவிப் புதியமதி
தன்னுள் நீர்மை யாற்குழைத்துச் சமைத்த மின்னுக் கொடிபோல்வாள்
என்னை உள்ளங் திரிவித்தாள் யார்கொல்?" என்றங் கியம்புதலும்.

3388 அருகு நின்றுர் விளம்புவார் "அவர்தாம் நங்கை சங்கிலியார்
பெருகுந் தவத்தால் ஈசர்பணி பேணுங் கன்னி யார்" என்ன,
"இருவ ரால்இப் பிறவியைஎம் பெருமான் அருளால் எய்துவித்தார்
மருவும் பரவை ஒருத்தி,இவள் மற்றை யவளாம்" எனமருண்டார்.

3389 "மின்னுர் சடையார் தமக்காளாம் விதியால் வாழும் எனைவருத்தித்
தன்னுர் அருளால் வரும்பேறு தவத்தால் அணையா வகைதடுத்தே
என்னு ருயிரும் எழில்மலருங் கூடப் பிணைக்கும் இவள்தன்னைப்
பொன்னுர் இதழி முடியார்பால் பெறுவேன்" என்று போய்ப்புக்கார்.

3390 மலர்மேல் அயனும் நெடுமாலும் வானும் நிலனும் கீழ்த்தறியா
நிலவு மலருந் திருமுடியும் நீடுங் கழலும் உடையாரை
உலக மெல்லாந் தாம்உடையா ராயும் ஒற்றி யூர்அமர்ந்த
இலகு சோதிப் பரம்பொருளே இறைஞ்சி முன்னின் றேத்துவார்.

3391 "மங்கை யொருபால் மகிழ்ந்ததுவும் அன்றி மணிநீள் முடியின்கண்
கங்கை தன்னைக் கரந்தருளுங் காதல் உடையீர்! அடியேனுக்
கிங்கு நுமக்குத் திருமாலை தொடுத்தென் உள்ளத் தொடைஅவிழ்த்த
திங்கள் வதனச் சங்கிலியைத் தந்தென் வருத்தந் தீரும்"என. உஊஉ

3392 அண்ணு லார்முன் பலவும்அவர் அறிய உணர்த்திப் புறத்தணைந்தே
"எண்ண மெல்லாம் உமக்கடிமை யாமா றெண்ணும் என்நெஞ்சில்
திண்ண மெல்லாம் உடைவித்தாள் செய்வ தொன்றும் அறியேன்யான்
தண்ணி லாமின் னெளிர்ப்பவளச் சடையீர்! அருளும்" எனத்தளர்வார்.

3393 மதிவாண் முடியார் மகிழ்கோயில் புறத்தோர் மருங்கு வந்திருப்பக்
கதிரோன் மேலைக் கடல்காண மாலைக் கடலைக் கண்டயர்வார்
முதிரா முலையார் தம்மைமணம் புணர்க்க வேண்டி மூளரிவளை
நிதியான் நண்பர் தமக்கருளும் நண்பால் நினைந்து நினைந்தழிய.

3394 உம்பர் உய்ய உலகுய்ய ஓல வேலை விடம்உண்ட
தம்பி ரானுர் வன்தொண்டர் தம்பால் எய்திச் "சங்கிலியை
இம்பர் உலகில் யாவருக்கும் எய்த ஒண்ணு இருந்தவத்துக்
கொம்பை உனக்குத் தருகின்றேம் கொண்ட கவலை ஒழி" என்ன.

"அன்று வெண்ணெய் நல்லூரில் வலிய ஆண்டு கொண்டருளி
ஒன்றும் அறியா நாயேனுக் குறுதி யளித்தீர் உயிர்காக்க
இன்றும் இவளே மணம்புணர்க்க ஏன்று நின்றீர்" எனப்போற்றி
மன்றல் மலர்ச்சே வடியிணைக்கீழ் வணங்கி மகிழ்ந்தார் வன்தொண்டர்.

ஆண்டு கொண்ட அந்தணனார் அவருக் கருளிக் கருணையினால்
நீண்ட கங்குல் யாமத்து நீங்கி வானில் நிறைமதியம்
தீண்டு கன்னி மாடத்துச் சென்று திகழ்சங் கிலியாராம்
தூண்டு சோதி விளக்கனையார் தம்பாற் கனவில் தோன்றினார். உசுஎ

தோற்றும் பொழுதிற் சங்கிலியார் தொழுது விழுந்து பரவசமாய்
ஆற்ற அன்பு பொங்கிளழுந் "தடியேன் உய்ய எழுந்தருளும்
பேற்றுக் கென்யான் செய்வ"தெனப் பெரிய கருணை பொழிந்தனைய
நீற்றுக் கோல வேதியரும் நேர்நின் றருளிச் செய்கின்றார். உசுஅ

"சாரும் தவத்துச் சங்கிலிகேள்! சால என்பால் அன்புடையான்
மேரு வரையின் மேம்பட்ட தவத்தான் வெண்ணெய் நல்லூரில்
யாரும் அறிய யான்ஆள உரியான் உன்னை எனைஇரந்தான் [ரார்.
வார்கொள் முலையாய்! நீஅவனை மணத்தால் அணைவாய் மகிழ்க்" தென்

ஆதி தேவர் முன்நின்றங் கருளிச் செய்த பொழுதின்கண்
மாத ரார்சங் கிலியாரும் மாலும் அயனும் அறிவரிய
சீத மலர்த்தா மரையடிக்கீழ்ச் சேர்ந்து வீழ்ந்து செந்நின்று
வேத முதல்வர் முன்நடுக்கம் எய்தித் தொழுது விளம்புவார். உசஎ

"எம்பி ரானே! நீர்அருளிச் செய்தார்க் குரியேன் யான்இமையோர்
தம்பி ரானே! அருள்தலைமேற் கொண்டேன் தக்க விதிமணத்தால்
நம்பி யாரூ ரருக்கென்னை நல்கி அருளும் பொழுதிமயக்
கொம்பின் ஆகங் கொண்டார்க்குக் கூறுந் திறம்ஒன் றுள"தென்பார்.

பின்னும் பின்னல் முடியார்முன் பெருக நாணித் தொழுதுரைப்பார்
"மன்னுந் திருவா ரூரின்கண் அவர்தாம் மிகவும் மகிழ்ந்துறைவ
தென்னுந் தன்மை அறிந்தருளும், எம்பி ராட்டி திருமுலைதாய்
பின்னும் புரிநூல் அணிமார்பீர்!" என்றார் குன்ற விளக்கனையார்.

வேறு

மற்றவர்தம் உரைகொண்டு வன்தொண்டர் நிலைமையினை
ஒற்றிநகர் அமர்ந்தபிரான் உணர்ந்தருளி உரைசெய்வார்
"பொற்றொடியாய்! உனைஇகந்து போகாமைக் கொருசபதம்
அற்றமுறு நிலைமையினால் அவன்செய்வான்" என அருளி.

வேயனைய தோளியார் பால்நின்று மீண்டருளித்
தூயமனம் மகிழ்ந்திருந்த தோழனார் பால்அணைந்து

பா. வே. 1. எழுகின்றார். 2. யாரும் காண.

"நீ அவளே மணம்புணரும் நிலையுரைத்தோம் அதற்கவள்பால்
ஆயதொரு குறைஉன்னல் அமைப்பதுள" தென்றருளி. உசச

வன்தொண்டர் மனங்களித்து வணங்கி "அடி யேன்செய்ய
நின்றகுறை யா"தென்ன "நீ அவளே மணம்புணர்தற்
கொன்றியுட னேநிகழ்வ தொருசபதம் அவள்முன்பு
சென்றுகிடைத் திவ்விரவே செய்க" என அருள்செய்தார். உசஞ

"என்செய்தால் இதுமுடியும் அதுசெய்வன் யான்அதற்கு
மின்செய்த புரிசடையீர்! அருள்பெறுதல் வேண்டும்"என
முன்செய்த முறுவலுடன் முதல்வர்தாம் முகநோக்கி
"உன்செய்கை தனக்கினிஎன் வேண்டுவ" தென் றுரைத்தருள. உசசு

வம்பணிமென் மூலையவர்க்கு மனங்கொடுத்த வன்தொண்டர்
"நம்பரிவர் பிறபதியும் நயந்தகோ லஞ்சென்று
கும்பிடவே கடவேனுக் கிதுவிலக்காம்" எனுங்குறிப்பால்
தம்பெருமான் திருமுன்பு தாம்வேண்டுங் குறைஇரப்பார். உசள

சங்கரர்தாள் பணிந்திருந்து தமிழ்வேந்தர் மொழிகின்றார்
"மங்கைஅவள் தனைப்பிரியா வகைசபதஞ் செய்வதனுக்
கங்கவளோ டியான்வந்தால் அப்பொழுது கோயில்விடத்
தங்கும்இடங் திருமகிழ்க்கீழ்க் கொளவேண்டும்" எனத்தாழ்ந்தார்.

தம்பிரான் தோழரவர் தாம்வேண்டிக் கொண்டருள
உம்பர்நா யகரும்அதற் குடன்பாடு செய்வாராய்
"நம்பி! நீ சொன்னபடி நாஞ்செய்தும்" என்றருள
"எம்பிரா னே! அரிய தினிஎனக்கென்?" எனஏத்தி. உசகூ

அஞ்சலிசென் னியில்மன்ன அருள்பெற்றுப் புறம்போதச்
செஞ்சடையார் அவர்மாட்டுத் திருவிளையாட் டினைமகிழ்ந்தோ
வஞ்சிஇடைச் சங்கிலியார் வழியடிமைப் பெருமையோ
துஞ்சிருள்மீ ளவும்அணைந்தார் அவர்க்குறுதி சொல்லுவார். உருO

சங்கிலியார் தம்மருங்கு முன்போலச் சார்ந்தருளி
"நங்கையுனக் காரூரன் நயந்துரு ஞறக்கடவன்
அங்குநமக் கெதிர்செய்யும் அதற்குநீ இசையாதே
கொங்கலர்பூ மகிழின்கீழ்க் கொள்க"எனக் குறித்தருள. உருக

மற்றவரும் கைகுவித்து "மாலயனுக் கறிவரியீர்!
அற்றம்எனக் கருள்புரிந்த அதனில்அடி யேனுகப்
பெற்றதுயான்" எனக்கண்கள் பெருந்தாரை பொழிந்திழிய
வெற்றிமழ விடையார்தஞ் சேவடிக்கீழ் வீழ்ந்தெழுந்தார். உருஉ

தையலார் தமக்கருளிச் சடாமகுடர் எழுந்தருள
எய்தியபோ ததிசயத்தால் உணர்ந்தெழுந்தவ் விரவின்கண்

செய்யசடை யார்அருளின் திறம்நினைந்தே கண்துயிலார்
ஐயமுடன் அருகுதுயில் சேடியரை அணைந்தெழுப்பி. உருக

3[illegible] நீங்குதுயில் பாங்கியர்க்கு நீங்கல்எழுத் தறியும்அவர்
தாங்கனவில் எழுந்தருளித் தமக்கருளிச் செய்ததெலாம்
பாங்கறிய மொழியஅவர் பயத்தினுடன் அதிசயமும்
தாங்குமகிழ்ச் சியும்எய்தச் சங்கிலியார் தமைப்பணிந்தார். உருச

3[illegible] சேயிழையார் திருப்பள்ளி எழுச்சிக்கு மலர்தொடுக்கும்
தூயபணிப் பொழுதாகத் தொழில்புரிவார் உடன்போதக்
கோயிலின்முன் காலமது வாகவே குறித்தணைந்தார்
ஆயசப தஞ்செய்ய வரவுபார்த் தாரூரர். உருஞ

3[illegible] நின்றவர்அங் கெதிர்வந்த நேரிழையார் தம்மருங்கு
சென்றணைந்து தம்பெருமான் திருவருளின் திறங்கூற
மின்தயங்கு துண்ணிடையார் விதியுடன்பட் டெதிர்விளம்பார்
ஒன்றியநா ணெடுமம்மடவா ருடன்ஒதுங்கி உட்புகுந்தார். உருசு

3[illegible] அங்கவர்தம் பின்சென்ற ஆரூரர் "ஆயிழையீர்!
இங்குநான் பிரியாமை உமக்கிசையும் படிஇயம்பத்
திங்கள்முடி யார்திருமுன் போதுவீர்" எனச்செப்பச்
சங்கிலியார் கனவுரைப்பக் கேட்டதா தியர்மொழிவார். உருள

3[illegible] "எம்பெருமான்! இதற்காக எழுந்தருளி, இமையவர்கள்
தம்பெருமான் திருமுன்பு சாற்றுவது தகா(து)"என்ன
நம்பெருமான் வன்தொண்டர் நாதர்செயல் அறியாதே
"கொம்பனையீர்! யான்செய்வ தெங்?"கென்று கூறுதலும். உருஅ

3[illegible] மாதரவர் "மகிழ்க்கீழே அமையும்"என மனம்மருள்வார்
"ஈ(து)அலர்ஆ கிலும்ஆகும் இவர்சொன்ன படிமறுக்கில்
ஆதலினல் உடன்படவே அமையும்"எனத் துணிந்(து)"ஆகில்
போதுவீர்" எனமகிழ்க்கீழ் அவர்போதப் போய்அணைந்தார். உருக

3[illegible] தாவாத பெருந்தவத்துச் சங்கிலியா ருங்காண
மூவாத திருமகிழை முக்காலும் வலம்வந்து
"மேவாதிங் கியான்அகலேன்" எனநின்று விளம்பினார்
பூவார்தண் புனற்பொய்கை முனைப்பாடிப் புரவலனார். உசo

3[illegible] மேவியசீர் ஆரூரர் மெய்ச்சபத வினைமுடிப்பக்
காவியினேர் கண்ணருங் கண்டுமிக மனங்கலங்கிப்
"பாவியேன் இதுகண்டேன் தம்பிரான் பணியால்"என்
றுவிசோர்ந் தழிவார்அங் கொருமருங்கு மறைந்தயர்ந்தார். உசக

3[illegible] திருநாவ லூராளி தம்முடைய செயல்முற்றிப்
பொருநாகத் துரிபுனைந்தார் கோயிலினுட் புகுந்திறைஞ்சி

"அருள்காலுந் தாஇருந்தீர் செய்தவா றழகி!"தெனப்
பெருநாமம் எடுத்தேத்திப் பெருமகிழ்ச்சி யுடன்போந்தார். உசுஉ

வார்புனையும் வனமுலையார் வன்தொண்டர் போனதற்பின்
தார்புனையும் மண்டபத்துத் தம்முடைய பணிசெய்து
கார்புனையும் மணிகண்டர் செயல்கருத்திற் கொண்டிறைஞ்சி
ஏர்புனையுங் கன்னிமா டம்புகுந்தார் இருள்புலர. உசுஊ

அன்றிரவே ஆதிபுரி ஒற்றிகொண்டார் ஆட்கொண்ட
பொன்திகழ்பூண் வன்தொண்டர் புரிந்தவினை முடித்தருள
நின்றபுகழ்த் திருவொற்றி யூர்நிலவு தொண்டர்க்கு
மன்றல்வினை செய்வதற்கு மனங்கொள்ள உணர்த்துவார். உசுச

" நம்பியா ரூரனுக்கு நங்கைசங் கிலிதன்னை
இம்பர்ஞா லத்திடைநம் ஏவலினல் மணவினைசெய்
தும்பர்வா ழுலகறிய அளிப்பீர்"என் றுணர்த்துதலும்
தம்பிரான் திருத்தொண்டர் அருள்தலைமேற் கொண்டெழுவார். உசுடு

மண்ணிறைந்த பெருஞ்செல்வத் திருவொற்றி யூர்மன்னும்
எண்ணிறைந்த திருத்தொண்டர் எழிற்பதியோ ருடன்ஈண்டி
உள்நிறைந்த மகிழ்ச்சியுடன் உம்பர்பூ மழைபொழியக்
கண்ணிறைந்த பெருஞ்சிறப்பிற் கலியாணஞ் செய்தளித்தார். உசுசு

பண்டுநிகழ் பான்மையினற் பசுபதிதன் அருளாலே
வண்டமர்பூங் குழலாரை மணம்புணர்ந்த வன்தொண்டர்
புண்டரிகத் தவள்வனப்பைப் புறங்கண்ட தூநலத்தைக்
கண்டுகேட் டுண்மெயிர்த்துற் றமர்ந்திருந்தார் காதலினல். உசுஎ

யாழின்மொழி எழில்முறுவல் இருகுழைமேற் கடைபிறழும்
மாழைவிழி வனமுலையார் மணியல்குல் துறைபடிந்து
வீழுமவர்க் கிடைதோன்றி மிகும்புலவி புணர்ச்சிக்கண்
ஊழியாம் ஒருகணந்தான் அவ்வூழி ஒருகணமாம். உசுஅ

இந்நிலையிற் பேரின்பம் இனிதமர்வார் இறையுறையும்
மன்னுபுகழ் ஒற்றியூ ரதனில்மகிழ் சிறப்பினல்
சென்னிமதி புனைவார்தந் திருப்பாதந் தொழுதிருந்தார்
முன்னியகா லங்கள்பல முறைமையினல் வந்தகல. உசுக

பொங்குதமிழ்ப் பொதியமலைப் பிறந்துபூஞ் சந்தனத்தின்
கொங்கணைந்து குளிர்சார லிடைவளர்ந்த கொழுந்தென்றல்
அங்கணையத் திருவாரூர் அணிவீதி அழகரவர்
மங்கலநாள் வசந்தம்எதிர் கொண்டருளும் வகைநினைந்தார். உஎ0

வெண்மதியின் கொழுந்தணிந்த வீதிவிடங் கப்பெருமான்
ஒண்ணுதலார் புடைபரந்த உலகக்கம் அதனிடையே

பண்ணமரும் மொழிப்பரவை யார்பாடல் ஆடல்தனைக்
கண்ணுறமுன் கண்டுகேட் டார்போலக் கருதினார். உஎக

பூங்கோயில் அமர்ந்தாரைப் புற்றிடங்கொண் டிருந்தாரை
நீங்காத காதலினல் நினைந்தாரை நினைவாரைப்
பாங்காகத் தாம்முன்பு பணியவரும் பயன்உணர்வார்
"ஈங்குநான் மறந்தேன்"என்(று) ஏசறவால் மிகஅழிவார். உஎஉ

மின்னெளிச்செஞ் சடையானை வேதமுதல் ஆனினை
மன்னுபுகழ்த் திருவாரூர் மகிழ்ந்தானை மிகநினைந்து
பன்னியசொற் "பத்திமையும் அடிமைமையும் கைவிடுவான்"
என்னும்இசைத் திருப்பதிகம் எடுத்தியம்பி இரங்கினார். உஎங

பின்னெருநாள் திருவாரூர் தனைப்பெருக நினைந்தருளி
உன்னஇனி யார்கோயில் புகுந்திறைஞ்சி ஒற்றிநகர்
தன்னைஅக லப்புக்கார் தாஞ்செய்த சபதத்தால்
முன்னடிகள் தோன்றுது கண்மறைய மூர்ச்சித்தார். உஎச

செய்வதனை அறியாது திகைத்தருளி நெடிதுயிர்ப்பார்
"மைவிரவு கண்ணூர்பால் சூளுறவு மறுத்ததனல்
இவ்வினைவந் தெய்தியதாம்" எனநினைந்"தெம் பெருமானை
எய்தியஇத் துயர்நீங்கப் பாடுவேன்" எனநினைந்து. உஎஞ

வேறு

"அழுக்கு மெய்கொ"டென் றெடுத்தசொற் பதிகம் ஆதி
நீள்புரி அண்ணலை ஓதி, வழுத்து நெஞ்சொடு தாழ்ந்துநின் றுரைப்
பார் மாதிதார் பாகனார் மலர்ப்பதம் உன்னி, "இழுக்கு நீக்கிட வேண்
டும்"என் றிரந்தே எய்து வெந்துயர்க் கையற வினுக்கும், பழிக்கும்
வெள்கிநல் லிசைகொடு பரவிப் பணிந்து சாலவும் பலபல நினைவார்.

அங்கு நாதர்செய் யருளது வாக அங்கை கூப்பிஆ ரூர்தொழ
நினைந்தே, பொங்கு காதல்மீ ளாநிலை மையினுற் போது வார்வழி காட்
டமுன் போந்து, திங்கள் வேணியார் திருமுல்லை வாயில் சென்றி
றைஞ்சிநீ டியதிருப் பதிகம், "சங்கி லிக்காக என்கணை மறைத்
தீர்" என்று சாற்றிய தன்மையிற் பாடி. உஎஎ

தோண்டை மானுக்கன் றருள்கொடுத் தருளுந் தொல்லை வண்
புகழ் முல்லைநா யகரைக், "கொண்ட வெந்துயர் களை" கெனப் பர
விக் குறித்த காதலின் நெறிக்கொள வருவார், வண்டு லாமலர்ச்
சோலைகள் சூழ்ந்து மாடமாளிகை நீடுவெண் பாக்கம், கண்ட
தொண்டர்கள் எதிர்கொள வணங்கிக் காயும் நாகத்தர் கோயிலை
அடைந்தார். உஎஅ

உஎ பா.தே.ப.1.கண்ணெறிண்.

அணைந்த தொண்டர்கள் உடன்வல மாக அங்கண் நாயகர் கோயில்
முன் எய்திக், குணங்கள் ஏத்தியே பரவிஅஞ் சலியாற் குவித்த
கைதலை மேற்கொண்டு நின்று, வணங்கி "நீர்மகிழ் கோயி லுளீரே"
என்ற வன்தொண்டர்க் கூன்றுகோல் அருளி, இணங்கி லாமொழி
யால்"உளோம் போகீர்"என்றி யம்பினர் ஏதிலார் போல. உஎக

வேறு

"பிழையுளன பொறுத்திடுவர்" என்றெடுத்துப் பெண்பாகம்
விழைவடிவிற் பெருமானே வெண்பாக்கம் மகிழ்ந்தானே
இழைஎனமா சுணம்அணிந்த இறையானைப் பாடினர்
மழைதவழும் நெடும்புரிசை நாவலூர் மன்னவனார். உஅ0

மூன்நின்று முறைப்பாடு போல்மொழிந்த மொழிமாலைப்
பன்னும்இசைத் திருப்பதிகம் பாடியபின் "பற்றுய
என்னுடைய பிரான்அருளிங் கித்தனைகொ லாம்"என்று
மன்னுபெருந் தொண்டருடன் வணங்கியே வழிக்கொள்வார். உஅக

அங்கணர்தம் பதிஅதனை அகன்றுபோய் அன்பருடன்
பங்கயப்பூந் தடம்பணைசூழ் பழையனூர் உழைஎய்தித்
தங்குவார் அம்மைதிருத் தலையாலே வலங்கொள்ளும்
திங்கள்முடி யார்ஆடுந் திருவாலங் காட்டின்அயல். உஅஉ

மூன்நின்று தொழுதேத்தி "முத்தா"என் றெடுத்தருளிப்
பன்னும்இசைத் திருப்பதிகம் பாடிமகிழ்ந் தேத்துவார்
அந்நின்று வணங்கிப்போய்த் திருவூறல் அமர்ந்திறைஞ்சிக்
கன்னிமதில் மணிமாடக் காஞ்சிமா நகர்அணைந்தார். உஅங

தேன்நிலவு பொழிற்கச்சித் திருக்காமக் கோட்டத்தில்
ஊனில்வளர் உயிர்க்கெல்லாம் ஒழியாத கருணையினல்
ஆனதிரு அறம்புரக்கும் அம்மைதிருக் கோயிலின்முன்
வானில்வளர் திருவாயில் வணங்கினர் வன்தொண்டர். உஅச

தொழுதுவிழுந் தெழுந்தருளால் துதித்துப்போய்த் தொல்லுலகம்
முழுதும்அளித் தழித்தாக்கும் முதல்வர்திரு ஏகம்பம்
பழுதில்அடி யார்முன்பு புகப்புக்குப் பணிகின்றூர்
"இழுதையேன் திருமுன்பே என்மொழிவேன்" என்றிறைஞ்சி.

"விண்ணுளவார் அமுதுண்ண மிக்கபெரு விடமுண்ட
கண்ணுளா! கச்சிஏ கம்பனே! கடையானேன்
எண்ணுதபிழைபொறுத்திங் குயான்காண எழிற்பவள
வண்ணங்கண் ணளித்தருளாய்" எனவீழ்ந்து வணங்கினர். உஅசு

பங்கயச்செங் கைத்தளிரால் பனிமலர்கொண் டருச்சித்துச்
செங்கயற்கண் மலைவல்லி பணிந்தசே வடிநிணைந்து

பொங்கியஅன் பொடுபரவிப் போற்றிய்ஆ ரூரருக்கு
மங்கைதழு வக்குழைந்தார் மறைந்தஇடக் கண்கோடுத்தார். உஅள

ஞாலந்தான் இடந்தவனும் நளிர்விசும்பு கடந்தவனும்
மூலந்தான் அறிவரியார் கண்ணளித்து முலைச்சுவட்டுக்
கோலந்தான் காட்டுதலுங் குறுகிவிழுந் தெழுந்துகளித்(து)
"ஆலந்தான் உகந்தவன்"என் றெடுத்தாடிப் பாடினார். உஅஅ

பாடிமிகப் பரவசமாய்ப் பணிவார்க்குப் பாவையுடன்
நீடியகோ லங்காட்ட நிறைந்தவிருப் புடன்இறைஞ்சிச்
சூடியஅஞ் சலியினராய்த் தொழுதுபுறம் போந்தன்பு
கூடியமெய்த் தொண்டருடன் கும்பிட்டங் கினிதமர்வார். உஅகூ

மாமலையாள் முலைச்சுவடும் வளைத்தழும்பும் அணிந்தமதிப்
பூமலிவார் சடையாரைப் போற்றிஅரு ளதுவாகத்
தேமலர்வார் பொழிற்காஞ்சித் திருநகரங் கடந்தகல்வார்
பாமலர்மா லைப்பதிகந் திருவாரூர் மேற்பரவி. உகூ0

"அந்தியும்நண் பகலும்"என எடுத்தார்வத் துடன்நசைவால்
"எந்தைபிரான் திருவாரூர் என்றுகொல்லய் துவ"தென்று
சந்தஇசை பாடிப்போய்த் தாங்கரிய ஆதரவு
வந்தணைய அன்பருடன் மகிழ்ந்துவழிக் கொள்கின்றார். உகூக

மின்னுதிருப் பதிகள்தொறும் வன்னியொடு கூவிளமும்
சென்னிமிசை வைத்துவந்தார் கோயிலின்முன் சென்றிறைஞ்சிப்
பன்னுதமிழ்த் தொடைசாத்திப் பரவியே போந்தணைந்தார்
அன்னம்மலி வயல்தடங்கள் சூழ்ந்ததிரு ஆமாத்தூர். உகூஉ

அங்கணரை ஆமாத்தூர் அழகர்தமை அடிவணங்கித்
தங்கும்இசைத் திருப்பதிகம் பாடிப்போய்த் தாரணிக்கு
மங்கலமாம் பெருந்தொண்டை வளநாடு கடந்தணைந்தார்
செங்கண்வள வன்பிறந்த சீர்நாடு நீர்நாடு. உகூங

அங்காட்டின் மருங்குதிரு அரத்துறையைச் சென்றெய்தி
மின்னுரும் படைமழுவார் விரைமலர்த்தாள் பணிந்தெழுந்து
சொன்மாலை மலர்க்"கல்வாய் அகில்"என்னுந் தொடைசாத்தி
மன்னுர்வத் திருத்தொண்ட ருடன்மகிழ்ந்து வைகினார். உகூச

பரமர்திரு அரத்துறையைப் பணிந்துபோய்ப் பலபதிகள்
விரவிமழ விடைஉயர்த்தார் விரைமலர்த்தாள் தொழுதேத்தி
உரவுநீர்த் தடம்பொன்னி அடைந்தன்ப ருடன்ஆடி
அரவணிந்தார் அமர்ந்ததிரு வாவடுதண் டுறைஅணைந்தார். உகூரி

அங்கணைவார் தமைஅடியார் எதிர்கொள்ளப் புக்கருளிப்
பொங்குதிருக் கோயிலினைப் புடைவலங்கொண் டுள்ளணைந்து

"கங்கைவாழ் சடையாய்!ஓர் கண்ணிலேன்" எனக்கவல்வார்
"இங்கெனக்கார் உற"வென்னுங் திருப்பதிகம் எடுத்திசைத்தார்.

திருப்பதிகங் கொடுபாவிப் பணிந்துதிரு அருளாற்போய்
விருப்பிணைடுங் திருத்துருத்தி தனைமேவி விமலர்கழல்
அருத்தியினுற் புக்கிறைஞ்சி "அடியேன்மேல் உற்றபிணி
வருத்தம்எனை ஒழித்தருள வேண்டும்"என வணங்குவார். உகூஎ

பரவியே பணிந்தவர்க்குப் பரமர்திரு வருள்புரிவார்
"விரவியஇப் பிணிஅடையத் தவிர்ப்பதற்கு வேறுக
வரமலர்வண் டறைதீர்த்த வடகுளத்துக் குளி"என்னக்
காவில்திருத் தொண்டர்தாங் கைதொழுது புறப்பட்டார். உகூஅ

மிக்கபுனல் தீர்த்தத்தின் முன்அணைந்து வேதமெலாம்
தொக்கவடி வாயிருந்த துருத்தியார் தமைத்தொழுது
புக்கதனில் முழுகுதலும் புதியபிணி அதுநீங்கி
அக்கணமே மணியொளிசேர் திருமேனி ஆயினர். உகூக

கண்டவர்கள் அதிசயிப்பக் கரையேறி உடைபுனைந்து
மண்டுபெருங் காதலினுற் கோயிலினை வந்தடைந்து
தொண்டர்எதிர் "பின்னுமா மேகம்"எனுஞ் சொற்பதிகம்
எண்டிசையும் அறிந்துய்ய ஏழிசையால் எடுத்திசைத்தார். உ00

பண்ணிறைந்த தமிழ்பாடிப் பரமர்திரு வருள்பூற்வா(து)
எண்ணிறைந்த தொண்டருடன் பணிந்தங்கண் உறைந்தேகி
உள்நிறைந்த பதிபிறவும் உடையவர்தாள் வணங்கிப்போய்க்
கண்ணிறைந்த திருவாரூர் முன்தோன்றக் காண்கின்றார். உ0க

அன்றுதிரு நோக்கொன்றுல் ஆரக்கண் டின்புறூர்
நின்றுநில மிசைவீழ்ந்து நெடிதுயிர்த்து நேர்இறைஞ்சி
வன்தொண்டர் திருவாரூர் மயங்குமா லயிற்புகுந்து
துன்றுசடைத் தூவாயர் தமைமுன்னந் தொழஅணைந்தார். உ0உ

பொங்குதிருத் தொண்டருடன் உள்ளணைந்து புக்கிறைஞ்சித்
துங்கஇசைத் திருப்பதிகங் "தூவாயா" என்றெடுத்தே
"இங்கெமது துயர்கூர்ந்து கண்காணக் காட்டாய்"என்
றங்கணர்தம் முன்நின்று பாடிஅருந் தமிழ்புனைந்தார். உ0ங

ஆறணியுஞ் சடையாரைத் தொழுதுபுறம் போந்தங்கண்
வேறிருந்து திருத்தொண்டர் விரிவுவார் உடன்கூடி
ஏறுயர்த்தார் திருமூலட் டானத்துள் இடைதெரிந்து
மாறில்திரு அத்தயா மத்திறைஞ்ச வந்தணைந்தார். உ0ச

ஆதிதிரு அன்பர்எதிர் அணையஅவர் முகநோக்கிக்
கோதில்இசை யாற்"குருகு பாய"எனக் கோத்தெடுத்தே

அருகுகள். உ. உறைந்தேகி.
3. வரிவளை யவ ருடன்கூடி.

எதிலார் போல்வினவி ஏசறவால் திருப்பதிகம்
காதல்புரி கைக்கிளையாற் பாடியே கலந்தணைவார். ஈ0ரு

சீர்பெருகுந் திருத்தேவா சிரியன்முன் சென்றிறைஞ்சிக்
கார்விரவு கோபுரத்தைக் கைதொழுதே உட்புகுந்து
தார்பெருகு பூங்கோயில் தனைவணங்கிச் சார்ந்தணைவார்
ஆர்வம்மிகு பெருங்காத லால்அவனி மேல்வீழ்ந்தார். ஈ0சு

வீழ்ந்தெழுந்து கைதொழுது முன்நின்று விம்மியே
வாழ்ந்தமலர்க் கண்ணுநின்ற ஆராமல் மனம்அழிவார்
"ஆழ்ந்ததுயர்க் கடலிடைநின் றடியேனை எடுத்தருளித்
தாழ்ந்தகருத் திணைநிரப்பிக் கண்தாரும்" எனத்தாழ்ந்தார். ஈ0எ

திருநாவ லூர்மன்னர் திருவாரூர் வீற்றிருந்த
பெருமானைத் திருமூலட் டானம்சேர் பிஞ்ஞகனைப்
பருகாஇன் னமுதத்தைக் கண்களாற் பருகுதற்கு
மருவார்வத் துடன்"மற்றைக் கண்தாரீர்" எனவணங்கி. ஈ0அ

வேறு

"மீளா அடிமை" எனஎடுத்து மிக்க தேவர் குலமெல்லாம்
மாளா மேநஞ் சுண்டருளி மன்னி இருந்த பெருமானைத்
"தாளா தரிக்கும் மெய்யடியார் தமக்காம் இடர்நீர் தரியீர்" என்
றாளாந் திருத்தே முமைத்திறத்தால் அஞ்சொற் பதிகம் பாடினார்.

பூத முதல்வர் புற்றிடங்கொண் டிருந்த புனிதர் வன்தொண்டர்
காதல் புரிவே தனைக்கிரங்கிக் கருணைத் திருநோக் களித்தருளிச்
சீத மலர்க்கண் கொடுத்தருளச் செவ்வே விழித்து முகமலர்ந்து
பாத மலர்கள் மேற்பணிந்து வீழ்ந்தார் உள்ளம் பரவசமாய். ஈக0

விழுந்தும் எழுந்தும் பலமுறையால் மேவிப் பணிந்து மிகப்பரவி
எழுந்த களிப்பி னல்லாடிப் பாடி இன்ப வெள்ளத்தில்
அழுந்தி இரண்டு கண்ணுலும் அம்பொற் புற்றின் இடைஎழுந்த
செழுந்தண் பவளச் சிவக்கொழுந்தின் அருளைப் பருகித் திளைக்கின்றார்.

காலம் நிரம்பத் தொழுதேத்திக் கனக மணிமா ளிகைக்கோயில்
ஞாலம் உய்ய வரும்நம்பி நலங்கொள் விருப்பால் வலங்கொண்டு
மாலும் அயனும் முறைஇருக்கும் வாயில் கழியப் புறம்போந்து
சீல முடைய அன்பருடன் தேவா சிரியன் மருங்கணைந்தார். ஈகஉ

நகை பரவை யார்தம்மை நம்பி பிரிந்து போனதற்பின்
தங்கு மணிமா ளிகையின்கண் தனிமை கூரத் தளர்வார்க்குக்
கங்குல் பகலாய்ப் பகல்கங்குல் ஆகிக் கழியா நாளெல்லாம்
பொங்கு காதல் மீதூரப் புலர்வார் சிலகாள் போனதற்பின். ஈகஊ

பா. பே. 1. ஸ்ரீ நிகழ்ச்சி. 3 எழுந்து.

சேம்மை நெறிசேர் திருநாவ லூரர் ஒற்றி யூர்சேர்ந்து
கொம்மை முலையார் சங்கிலியார் தம்மைக் குலவு மணம்புணர்ந்த
மெய்ம்மை வார்த்தை தாம்அவர்பால் விட்டார் வந்து கட்டுரைப்பத்
தம்மை அறியா வெகுளியினுல் தரியா நெஞ்சி னெடுந்தளர்வார். ஙகச

மேன்பூஞ் சயனத் திடைத்துயிலும் மேவார் விழித்தும் இனிதமரார்
பொன்பூந் தவிசின் மிசையினிரார் நில்லார் செல்லார் புறம்பொழியார்
மன்பூ வாளி மழைகழியார் மறவார் நினையார் வாய்விள்ளார்
என்பூ டுருக்கும் புலவியோ பிரிவோ இரண்டின் இடைப்பட்டார்.

ஆன கவலைக் கையறவால் அழியும் நாளில் ஆரூரர்
கூனல் இளவெண் பிறைக்கண்ணி முடியார் கோயில் முன்குறுகப்
பானல் விழியார் மாளிகையிற் பண்டு செல்லும் பரிசினுல்
போன பெருமைப் பரிசனங்கள் புகுதப் பெறாது புறம்நின்றார். ஙகசு

நின்ற நிலைமை யவர்கள்சிலர் நிலவு திருவா ரூரர்எதிர்
சென்று மொழிவார் "திருஒற்றி யூரில் நிகழ்ந்த செய்கைஎலாம்
ஒன்றும் ஒழியா வகையறிந்தங் குள்ளார் தள்ள மாளிகையில்
இன்று புறமுஞ் சென்றெய்தப் பெற்றி லோம்"என் றிறைஞ்சினர்.

மற்ற மாற்றங் கேட்டழிந்த மனத்த ராகி வன்தொண்டர்
"உற்ற இதனுக் கினிஎன்னே செயல்"என் றுணர்வார் உலகியல்பு
கற்ற மாந்தர் சிலர்தம்மைக் காதற் பரவை யார்கொண்ட
செற்ற நிலைமை அறிந்தவர்க்குத் தீர்வு சொல்லச் செலவிட்டார். 315

நம்பி அருளாற் சென்றவரும் நங்கை பரவை யார்தமது
பைம்பொன் மணிமா ளிகைஅணைந்து பண்பு புரியும் பாங்கினுல்
வெம்பு புலவிக் கடல்அழுந்தும் மின்னே ரிடையார் முன்எய்தி
"எம்பி ராட்டிக் கிதுதகுமோ" என்று பலவும் எடுத்துரைப்பார்.

பேத நிலைமை நீதியினுற் பின்னும் பலவும் சொன்னவர்முன்
மாத ரவரும் மறுத்துமனங் கொண்ட செற்றம் மாற்றுராய்
"ஏதம் மருவும் அவர்திறத்தில் இந்த மாற்றம் இயம்பில்உயிர்
போதல் ஒழியா" தெனஉரைத்தார் அவரும் அஞ்சிப் புறம்போந்தார்.

போந்து புகுந்த படியெல்லாம் பூந்தண் பழன முணைப்பாடி
வேந்தர் தமக்கு விளம்புதலும் வெருவுற் றயர்வார் துயர்வேலை
நீந்தும் புணையாந் துணைகாணுர் நிகழ்ந்த சிந்தா குலம்நெஞ்சில்
காந்த அழிந்து தோய்ந்தெழார் கங்குல் இடையா மக்கடலுள். ஙஉக

அருகு சூழ்ந்தார் துயின்றுதிரு அத்த யாமம் பணிமடங்கிப்
பெருகு புவனம் சலிப்பின்றிப் பேயும் உறங்கும் பிறங்கிருள்வாய்
முருகு விரியும் மலர்க்கொன்றை முடிமேல் அரவும் இளமதியும்
செருகும் ஒருவர் தோழர்தனி வருந்தி இருந்து சிந்திப்பார். ஙஉஉ

"மூன்னை வினையால் இவ்வினைக்கு மூலம் ஆனுள் பால்அணைய
என்னை உடையாய்! நினைந்தருளாய் இந்த யாமத் தெழுந்தருளி
அன்னம் அனையாள் புலவியினை அகற்றில் உய்ய லாம்,அன்றிப்
பின்னை இல்லைச் செயல்"என்று பெருமான் அடிகள் தமைநினைந்தார்.

அடியார் இடுக்கண் தரியாதார் ஆண்டு கொண்ட தோழர்குறை
முடியா திருக்க வல்லரே முற்றும் அளித்தாள் பொற்றளிர்க்கைத்
தொடியார் தழும்பும் முலைச்சுவடும் உடையார் தொண்டர் தாங்காணும்
படியால் அணைந்தார் நெடியோனும் காணு அடிகள் படிதோய. நுஉச

தம்பி ரானுர் எழுந்தருளத் தாங்கற் கரிய மகிழ்ச்சியினுல்
கம்பி யாநின் றவயவங்கள் கலந்த புளகம் மயிர்முகிழ்ப்ப
நம்பி யாரூ ரரும்எதிரே நளின மலர்க்கை தலைக்குவிய
அம்பி காவல் லவர்செய்ய அடித்தா மரையின் கிழ்வீழ்ந்தார். நுஉரு

விழுந்து பரவி மிக்கபெரு விருப்பி னேடும் எதிர்போற்றி
எழுந்த நண்பர் தமைநோக்கி "என்நீ யுற்ற?" தென்றருளத்
தொழுந்தங் குறையை விளம்புவார் "யானே தோடங்குந் துரிசிடைப்பட்
டழுந்தும் என்னை இன்னம்எடுத் தாள வேண்டும் உமக்"கென்று.

"அடியேன் அங்குத் திருஒற்றி யூரில் நீரே அருள்செய்ய
வடிவேல் ஒண்கண் சங்கிலியை மணஞ்செய் தணைந்த திறமெல்லாம்
கொடியே ரிடையாள் பரவைதான் அறிந்து தன்பால் யான்குறுகில்
'ழுடிவேன்' என்று துணிந்திருந்தாள் என்நான் செய்வ?" தெனமொழிந்து.

"நாயன் நீரே நான்உமக்கிங் கடியே னுகில் நீர்எனக்குத்
தாயின் நல்ல தோழருமாம் தம்பி ரானு ரேயாகில்
ஆய அறிவும் இழந்தழிவேன் அயர்வு நோக்கி அவ்வளவும்
போய்இவ் விரவே பரவையுறு புலவி தீர்த்துத் தாரும்"என. நுஉஅ

அன்பு வேண்டுந் தம்பெருமான் அடியார் வேண்டிற் றேவேண்டி
முன்பு நின்று விண்ணப்பஞ் செய்த நம்பி முகநோக்கித்
"துன்பம் ஒழிநீ யாம்உனக்கோர் தூத னுகி இப்பொழுதே
பொன்செய் மணிப்பூண் பரவைபால் போகின் றேம்"என் றருள்செய்தார்.

எல்லே இல்லாக் களிப்பினராய் இறைவர் தாளில் வீழ்ந்தெழுந்து
வல்ல பரிசெல் லாந்துதித்து வாழ்ந்து நின்ற வன்தொண்டர்
"முல்லை முகைவெண் நகைப்பரவை முகில்சேர் மாடத் திடைச்செல்ல
நில்லா தீண்ட எழுந்தருளி நீக்கும் புலவி" எனத்தொழுதார். நுநுஒ

அண்டர் வாழக் கருணையினுல் ஆல காலம் அமுதாக
உண்ட நீலக் கோலமிடற் றொருவர் இருவர்க் கறிவரியார்
வண்டு வாழும் மலர்க்கூந்தல் பரவை யார்மா னிகைநோக்கித்
தொண்ட னுர்தம் துயர்நீக்கத் தூத னுராய் எழுந்தருள. நுநுக

பா.பே.பி. உடையான் நினைந்தருளி ல்.
ஆ. திருத்தாண்டகமாலை.

தேவா சிரியன் முறையிருக்குந் தேவ செல்லாஞ் சேவித்துப்
போவார் தம்மில் வேண்டுவார் போத ஒழிந்தார் புறத்தொழிய
ஓவா அணுக்கச் சேவகத்தில் உள்ளோர் பூத கணநாதர்
மூவா முனிவர் யோகிகளின் முதலா னார்கள் முன்போத. ஈஈஉ

அருகு பெரிய தேவருடன் அணைந்து வரும்அவ் விருடிகளும்
மருவு நண்பு நிதிக்கோனும் முதலா யுள்ளோர் மகிழ்ந்தேத்தத்
தெருவும் விசும்பும் நிறைந்துவிரைச் செழும்பூ மாரி பொழிந்தலையப்
பொருவில் அன்பர் விடுந்தூதர் புனித வீதி யினிற்போத. ஈஈஊ

"மாலும் அயனும் காணுதார் மலர்த்தாள் பூண்டு வந்திறைஞ்சும்
காலம் இது"என் றங்கவரை அழைத்தால் என்னக் கடல்விளைத்த
ஆலம் இருண்ட கண்டத்தான் அடித்தா மரைமேற் சிலம்பொலிப்ப
நீல மலர்க்கண் பரவையார் திருமா ளிகையை நோர்நோக்கி. ஈஈச

இறைவர் விரைவின் எழுந்தருள எய்தும் அவர்கள் பின்தொடர
அறைகொள் திரைநீர் தொடர்சடையில் அரவு தொடர அரியஇளம்
பிறைகொள் அருகு நறைஇதழிப் பிணையல் சுரும்பு தொடரஉடன்
மறைகள் தொடர வன்தொண்டர் மனமும் தோடர வரும்பொழுது.

பெருவீ ரையினும் மிகமுழங்கிப் பிறங்கு மதகுஞ் சரம்உரித்து
மருவீர் உரிவை புனைந்தவர்தம் மருங்கு சூழ்வார் நெருங்குதலால்
திருவீ தியினில் அழகர்அவர் மகிழுஞ் செல்வத் திருவாரூர்
ஒருவீ தியிலே சிவலோகம் முழுதுங் காண உளதாமால். ஈஈசு

ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி தூதர் பரவையார்
கோல மணிமா ளிகைவாயில் குறுகு வார்முன் கூடத்தம்
பாலங் கணைந்தார் புறநிற்பப் பண்டே தம்மை அர்ச்சிக்கும்
சீலம் உடைய மறைமுனிவ ராகித் தனியே சென்றணைந்தார். ஈஈள

சென்று மணிவா யிற்கதவஞ் செறிய அடைத்த அதன் முன்பு
நின்று "பாவாய்! திறவாய்"என் றழைப்ப நெறிமென் குழலாரும்
ஒன்றுந் துயிலா துணர்ந்தயர்வார் "உடைய பெருமான் பூசனைசெய்
தன்றும் புரிநூல் மணிமார்பர் போலும் அழைத்தார்" எனத்துணிந்து.

"பாதி மதிவாழ் முடியாரைப் பயில்பூ சனையின் பணிபுரிவார்
பாதி இரவில் இங்கணைந்த தென்னே!" என்று பயமெய்திப்
பாதி உமையாள் திருவடிவிற் பரம ராவ தறியாதே
பாதி மதிவாள் முதலாரும் பதைத்து வந்து கடைதிறந்தார். ஈஈக

மன்னும் உரிமை வன்தொண்டர் வாயில் தூதா வாயிலிடை
முன்னின் முரைக் கண்டிறைஞ்சி "முழுதும் உறங்கும் பொழுதின்கண்
என்னை ஆளும் பெருமான்இங் கெய்தி அருளி னார்என்ன
மின்னு மணிநூல் அணிமார்பீர் எய்த வேண்டிற் றென்?"என்றார்.

ப. 1. யிடுத்த தூதர் 2 அணிமார்பர்.

வேறு

3496 கங்கைநீர் கரந்த வேணி கரந்தவர் அருளிச் செய்வார்
"நங்கைநீ மறுது செய்யின் நான்வந்த துரைப்ப" தென்ன
அங்கயல் விழியி னருளும் "அதனைநீர் அருளிச் செய்தால்
இங்கெனக் கிசையு மாகில் இசையலாம்" என்று சொல்லி. நுசக

3497 "என்நினைந் தணைந்த தென்பால் இன்னதென் றருளிச் செய்தால்
பின்னைய தியலு மாகில் ஆம்"எனப் பிரானார் தாமும்
"மின்னிடை மடவாய்! நம்பி வரஇங்கு வேண்டும்" என்ன
நன்னுத லாருஞ் "சால நன்று!நம் பெருமை" என்பார். நுசஉ

3498 "பங்குனித் திருநா ளுக்குப் பண்டுபோல் வருவா ராகி
இங்கெனைப் பிரிந்து போகி ஒற்றியூர் எய்தி அங்கே
சங்கிலித் தோடக்குண் டாருக் கிங்கொரு சார்வுண் டோ?நீர்
கங்குலின் வந்து சொன்ன காரியம் அழகி!" தென்றார். நுசந

3499 நாதரும் அதனைக் கேட்டு "நங்கைநீ நம்பி செய்த
ஏதங்கள் மனத்துக் கொள்ளா தெய்திய வெகுளி நீங்கி
நோதக ஒழித்தற் கன்றே நுன்னையான் வேண்டிக் கொண்ட
தாதலின் மறுத்தல் செய்ய அடா"தென அருளிச் செய்தார். நுசச

3500 அருமறை முனிவ ரான ஐயரைத் தையல் ஆர்தாம்
"கருமம்நீ தாக நீர்இக் கடைத்தலை வருகை மற்(று)உம்
பெருமைக்குத் தகுவ தன்றால் ஒற்றியூர் உறுதி பெற்றார்
வருவதற் கிசையேன் நீரும் போம்"என மறுத்துச் சொன்னார். நுசடு

3501 நம்பர்தாம் அதனைக் கேட்டு நகையும்உட் கொண்டு மெய்ம்மைத்
தம்பரி சறியக் காட்டார் தனிப்பெருந் தோழ னர்தம்
வெம்புறு வேட்கை காணுந் திருவிளை யாட்டின் மேவி
வம்பலர் குழலி னர்தாம் மறுத்ததே கொண்டு மீண்டார். நுசசு

3502 நாதரைப் போக விட்டு வரவுபார்த் திருந்த தொண்டர்
"நாதரை அறிவி லாதே நன்னுதல் புலவி நீக்கிப்
போதரத் தொழுதே தன்" என்று புலம்புவார் பரவை யாரைக்
காதலில் இசைவு கொண்டு வருவதே கருத்துட் கொள்வார். நுசள

3503 "போய்அவள் மனையில் நண்ணும் புண்ணியர் என்செய் தாரோ
நாயனார் தம்மைக் கண்டால் நன்னுதல் மறுக்கு மோதான்
ஆயஎன் அயர்வு தன்னை அறிந்தெழுந் தருளி னர்தாம்
சேயிழை துனிதீர்த் தன்றி மீள்வது செய்யார்" என்று. நுசஅ

3504 வழிஎதிர் கொள்ளச் செல்வர் வரவுகா ணுது மீள்வர்
அழிவுற மயங்கி நிற்பர் அசைவுடன் இருப்பர் "நெற்றி

மா. பொ. வரப்பை. உ. ரா. தாதில். 3 வருதல் நும்மை.
4. புலவி நீக்க. 5. மீள்வது

விழியவர் தாழ்த்தார்'' என்று மீளவும் எழுவர் மாரன்
பொழிமலர் மாரி வீழ ஒதுங்குவர் புன்க ணுற்றூர். நசசுஉ

3514 பரவையார் தம்பால் நம்பி தூதராம் பாங்கிற் போன
அரவணி சடையார் மீண்டே அறியுமா றணையும் போதில்
இரவுதான் பகலாய்த் தோன்ற எதிரெழுந் தணையை விட்ட
உரவுநீர் வேள்ளம் போல ஓங்கிய களிப்பிற் சென்றூர். நருஉ

3515 சென்றுதம் பிரானைத் தாழ்ந்து திருமுகம் முறுவல் செய்ய
ஒன்றிய விளையாட் டோரார் ''உறுதிசெய் தணைந்தார்'' என்றே
''அன்றுநீர் ஆண்டு கொண்ட அதனுக்குத் தகவே செய்தீர்
இன்றிவள் வெகுளி எல்லாந் தீர்த்தெழுந் தருளி'' என்றூர். நருக

3516 அம்மொழி விளம்பும் நம்பிக் கையர்தாம் அருளிச் செய்வார்
''நம்மைநீ சொல்ல நாம்போய்ப் பரவைதன் இல்லம் நண்ணிக்
கொம்மைவெம் முலையி னுட்குன் திறமெலாங் கூறக் கொள்ளாள்
வெம்மைதான் சொல்லி நாமே வேண்டவும் மறுத்தாள்'' என்றூர்.

3517 அண்ணலார் அருளிச் செய்யக் கேட்டஆ ரூரர் தாமும்
துண்ணென நடுக்கம் உற்றே தொழுது''நீர் அருளிச் செய்த
வண்ணமும் அடியா ளான பரவையோ மறுப்பாள் நாங்கள்
எண்ணஆர் அடிமைக் கென்ப தின்றறி வித்தீர்!'' என்று. நருங

3518 ''வானவர் உய்ய வேண்டி மறிகடல் நஞ்சை உண்டீர்
தானவர் புரங்கள் வேவ மூவரைத் தவிர்த்தாட் கொண்டீர்
நான்மறைச் சிறுவர்க் காகக் காலனைக் காய்ந்து நட்டீர்
யான்மிகை உமக்கின் முனல் என்செய்வீர் போதா!'' தென்றூர். நருச

3519 ''ஆவதே செய்தீர் இன்றென் அடிமைநீர் வேண்டா விட்டால்
பாவியேன் தன்னை அன்று வலியஆட் கொண்ட பற்றென்?
நோவுமென் அழிவுங் கண்டீர் தொடங்கிடை அவள்பால் இன்று
மேவுதல் செய்யீ ராகில் விடும்உயிர்'' என்று வீழ்ந்தார். நருஉ

3520 தம்பிரான் அதனைக் கண்டு தரியாது தளர்ந்து வீழ்ந்த
நம்பியை அருளால் நோக்கி ''நாம்இன்னம் அவள்பாற் போய்அக்
கொம்பினை இப்போ தேநீ குறுகுமா கூறு கின்றேம்
வெம்புறு துயர்நீங்'' கென்றூர் வினைஎலாம் விலக்க வல்லார். நருசு

3521 மயங்கிய நண்பர் உய்ய வாக்கெனும் மதுர வாய்மை
நயங்கிளர் அமுதம் நல்க நாவலூர் மன்னர் தாமும்
''முயங்கிய கலக்கம் நீக்கி உம்மடித் தொழும்ப னேனைப்
பயங்கெடுத் திவ்வா றன்றே பணிகொள்வ!'' தென்று போற்ற. நருள

அன்பர்மேற் கருணை கூர ஆண்டவர் மீண்டுஞ் செல்லப்
பின்புசென் றிறைஞ்சி நம்பி பேதுற வோடு மீண்டார்.

முன்புடன் போதா தாரும் முறைமையிற் சேவித் தேகப்
பொன்புரி சடையார் மாதர் புனிதமா ளிகையிற் சென்றார். ஈருஅ

மதிறுதற் பரவை யார்தாம் மறையவர் போன பின்பு
முதுமறை முனியாய் வந்தார் அருளுடை முதல்வ ராகும்
அதிசயம் பலவுந் தோன்ற "அறிவுற்றே அஞ்சிக் கெட்டேன்
எதிர்மொழி எம்பி ரான்முன் என்செய மறுத்தேன்" என்பார். ஈருக

கண்துயில் எய்தார் வெய்ய கையற வெய்தி "ஈங்கின்(று)
அண்டர்தம் பிரானார் தோழர்க் காகஅர்ச் சிப்பார் கோலம்
கொண்டணைந் தவரை யான்உட் கொண்டிலேன் பாவி யேன்"என்
றெண்சுடர் வாயி லேபார்த் தழையமோ டழியும் போதில். ஈசுO

வேறியுறு கொன்றை வேணி விமலருந் தாமாந் தன்மை
அறிவுறு கோலத் தோடும் அளவில்பல் பூத நாதர்
செறிவுறு தேவர் யோகர் முனிவர்கள் சூழ்ந்து செல்ல
மறுவில்சீர்ப் பரவை யார்தம் மாளிகை புகுந்தார் வந்து. ஈசுக

பாரிடத் தலைவர் முன்னும் பல்கண நாதர் தேவர்
நேர்வுறு முனிவர் சித்தர் இயக்கர்கள் நிறைத லாலே
பேரரு ளாளர் எய்தப் பெற்றமா ளிகைதான் தேன்பால்
சீர்வளர் கயிலை வெள்ளித் திருமலை போன்ற தன்றே. ஈசுஉ

ஐயர்அங் கணைந்த போதில் அகிலலோ கத்துள் ளாரும்
எய்தியே செறிந்து சூழ எதிர்கொண்ட பரவை யார்தாம்
மெய்யுறு நடுக்கத் தோடு மிக்கெழும் மகிழ்ச்சி பொங்கச்
செய்யதா ளிணைமுன் சேர விரைவினுற் சென்று வீழ்ந்தார். ஈசுஈ

அரிஅயற் கரியார் தாமும் ஆயிழை யாரை நோக்கி
"உரிமையால் ஊரன் ஏவ மீளவும் உன்பால் வந்தோம்
முருகலர் குழலாய்! இன்னம் முன்புபோல் மருதை நின்பால்
பிரிவுற வருந்து கின்றன் வரப்பெற வேண்டும்" என்றார். ஈசுச

பெருந்தடங் கண்ணி னூரும் பிரான்முன்பு மிகவும் அஞ்சி
வருந்தியு ள்ளத் தோடு மலர்க்கரங் குழல்மேற் கொண்டே
"அருந்திரு மறையோ ராகி அணைந்தீர்முன் அடியேன் செய்த
இருந்தவப் பயனும் என்ன எய்திய நீரோ?" என்பார். ஈசுடு

துளிவளர் கண்ணீர் வாரத் தொழுதுவிண் ணப்பஞ் செய்வார்
"ஒளிவளர் செய்ய பாதம் வருந்தஓர் இரவு மாறு
தளிவரும் அன்பர்க் காக அங்கொடிங் குழல்வீ ராகி
எளிவரு வீரு மானல் என்செய்கேன் இசையா!" தென்றார். ஈசுசு

"நங்கைநின் தன்மைக் கேற்கும் நன்மையே மொழிந்தாய்" என்று
மங்கையோர் பாகம் வைத்த வள்ளலார் விரைந்து போகத்

பா. வே. 1. குழுவினர். 2. அருளுடைய. 3 கினறிப்.
4 அனபரி 5 எய்தினர்.

திங்கள்வா ணுதலி னருஞ் சென்றுபின் இறைஞ்சி மீண்டார்
எங்கோ ஆளும் நம்பி தூதர்மீண் டேகு கின்றார். நகூஎ

வேறு

ஆதியும் மேலும் மாலயன் நாடற் கருளாதார்
தூதினில் எகித் தொண்டரை ஆளுந் தொழில்கண்டே
வீதியில் ஆடிப் பாடி மகிழ்ந்தே மிடைகின்றார்
பூதியில் நீடும் பல்கண நாதப் புகழ்வீரர். நகூஅ

அன்னவர் முன்னும் பின்னும் மருங்கும் அணைவெய்த
மின்னிடை யார்பால் அன்பரை உய்க்கும் விரைவோடும்
சென்னியில் நீடுங் கங்கை ததும்பத் திருவாரூர்
மன்னவ னர்அம் மறையவ னர்பால் வந்துற்றார். நகூக

அன்பரும் "என்பால் ஆவி அளிக்கும் படிபோனார்
என்செய்து மீள்வார் இன்னமும்?" என்றே இடர்கூரப்
பொன்புரி முந்நூல் மார்பினர் செல்லப் பொலிவீதி
முன்புற நேருங் கண்ணிணை தானும் முகிழாரால். நஎ0

அந்நில மைக்கண் மன்மதன் வாளிக் கழிவார்தம்
மன்னுயிர் நல்குந் தம்பெரு மானுர் வந்தெய்த
முன்னெதிர் சென்றே மூவுல குஞ்சென் றடையுந்தாள்
சென்னியில் வைத்"தென் சொல்லுவர்" என்றே தெளியாதார்.

"எம்பெரு மான்நீர் என்னுயிர் காவா திடர்செய்யும்
கொம்பனை யாள்பால் என்கொடு வந்தீர் குறை"என்னத்
தம்பெரு மானும் "தாழ்குழல் செற்றந் தணிவித்தோம்
நம்பி இனிப்போய் மற்றவள் தன்பால் நணு(கு)"என்ன. நஎஉ

நந்தி பிரானுர் வந்தருள் செய்ய நலமெய்தும்
சிந்தையுள் ஆர்வங் கூர்களி எய்தித் திகழ்கின்றார்
"பந்தமும் வீடும் நீர்அருள் செய்யும் படிசெய்தீர்
எந்தைபி ரானே என்இனி என்பால் இடர்?"என்றார். நஎந

என்றடி வீழும் நண்பர்தம் அன்புக் கெளிவந்தார்
"சென்றணை நீஅச் சேயிழை பால்"என் றருள்செய்து
வென்றுயர் சேமேல் வீதி விடங்கப் பெருமாள்தம்
பொன்திகழ் வாயிற் கோயில் புகுந்தார் புவிவாழ. நஎச

வேறு

தம்பிரா னுர்பின் சென்று தாழ்ந்தெழுந் தருளால் மீள்வார்
"எம்பிரான் வல்ல வா"றென் றெய்திய மகிழ்ச்சி யோடும்
வம்பலர் குழலார் செம்பொன் மாளிகை வாயில் நோக்கி
நம்பியா ரூரர் காதல் நயந்தெழுந் தருளும் போது. நஎஞ

பா.பெ.1. மன்னிய இராமன் திருநீறால்.

மூன்துயில் உணர்ந்து சூழ்ந்த பரிசனம் மருங்கு மொய்ப்ப
மின்திகழ் பொலம்பூ மாரி விண்ணவர் பொழிந்து வாழ்த்த
மன்றல்செய் மதுர சீத சீகரங் கொண்டு மந்தத்
தென்றலும் எதிர்கொண் டெய்துஞ் சேவகம் முன்பு காட்ட. நஎசு

மாலைதண் கலவைச் சேறு மான்மதச் சாந்து பொங்கும்
கோலநற் பசுங்கர்ப் பூரங் குங்குமம் முதலா யுள்ள
சாலும்மெய்க் கலன்கள் கூடச் சாத்தும்பூண் ஆடை வர்க்கம்
பாலன பிறவும் ஏந்தும் பரிசனம் முன்பு செல்ல. நஎள

இவ்வகை இவர்வந் தெய்த எய்திய விருப்பி னோடும்
மைவளர் நெடுங்கண் ணுரும் மாளிகை அடைய மன்னும்
செய்விணை அலங்கா ரத்துச் சிறப்பணி பலவுஞ் செய்து
நெய்வளர் விளக்குத் தூபம் நிறைகுடம் நிரைத்துப் பின்னும். நஎஅ

பூமலி நறும்பொற் றூமம் புனைமணிக் கோவை நாற்றிக்
காமர்பொற் சுண்ணம் வீசிக் கமழ்நறுஞ் சாந்து நீவித்
தூமலர் வீதி சூழ்ந்த தோகையர் வாழ்த்தத் தாமும்
மாமணி வாயில் முன்பு வந்தெதிர் ஏற்று நின்றார். நஎக

வண்டுலாங் குழலார் முன்பு வன்தொண்டர் வந்து கூடக்
கண்டபோ துள்ளக் காதல் வெள்ளத்தின் கரைகா ணாது
கொண்டகாண் அச்சங் கூர வணங்கஅக் குரிசி லாரும்
தண்தளிர்ச் செங்கை பற்றிக் கொண்டுமா ளிகையுட் சார்ந்தார். நஅ0

இருவருந் தம்பி ரானார் தாம்இடை யாடிச் செய்த
திருவருட் கருணை வெள்ளத் திறத்தினைப் போற்றிச் சிந்தை
மருவிய இன்ப வெள்ளத் தழுந்திய புணர்ச்சி வாய்ப்ப
ஒருவருள் ஒருவர் மேவும் நிலைமையில் உயிர்ஒன் றானார். நஅக

ஆரணக் கமலக் கோயில் மேவிப்புற் றிடங்கொண் டாண்ட
நாரணி வேணி யாரை நிரந்தரம் பணிந்து போற்றிப்
பாரணி விளக்குஞ் செஞ்சொற் பதிகமா லைகளுஞ் சாத்தித்
தாரணி மணிப்பூண் மார்பர் தாம்மகிழ்ந் திருந்த நாளில். நஅஉ

"நம்பியா ரூரர் நெஞ்சில் நடுக்கம்ஒன் றின்றி நின்று
தம்பிரா னுரைத் தூது தையல்பால் விட்டார்" என்னும்
இம்பரின் மிக்க வார்த்தை ஏயர்கோ னர்தாம் கேட்டு
வெம்பினர் அதிச யித்தார் வெருவினர் விளம்ப லுற்றார். நஅங

"நாயனே அடியான் ஏவுங் காரியம் நன்று! சால
ஏயுமென் றதனைச் செய்வான் தொண்டனும்! என்னே! பாவம்!
பேயனேன் பொறுக்க ஒண்ணாப் பிழையினைச் செவியாற் கேட்ப
தாயின பின்னும் மாயா திருந்ததென் ஆவி" என்பார். நஅச

பா. வே. ப. பதிப்பு.

3544 "காரிகை தன்பாற் செல்லுங் காதலால் ஒருவன் ஏவப்
பாரிடை நடந்து செய்ய பாததா மரைகள் நோவத்
தேரணி வீதி யூடு செல்வது வருவ தாகி
ஓரிர வெல்லாங் தூதுக் குழல்வராம் ஒருவர்" என்று. ஈஅஞ

3545 நம்பர்தாம் அடிமை ஆற்ற ராகியே நண்ணி னூரேல்
உம்பரார் கோனும் மாலும் அயனும்நேர் உணர ஒண்ணு
எம்பிரான் இசைந்தால் ஏவப் பெறுவதே இதனுக் குள்ளம்
கம்பியா தவனே யான்முன் காணுநாள் எந்நாள்?" என்று. ஈஅசு

3546 "அரிவைகா ரணத்தி னூலே ஆளுடைப் பரமர் தம்மை
இரவினில் தூது போக ஏவிஅங் கிருந்தான் தன்னை
வரவெதிர் காண்பே னுகில் வருவதென் னுங்கொல்?" என்று
விரவிய செற்றம் பற்றி விள்ளும்உள் ளத்த ராகி. ஈஅள

3547 சிலாப் புகழின் ஓங்கும் ஏயர்கோ னர்தாம் எண்ணப்
பேறிது பெற்றார் கேட்டுப் பிழைஉடன் படுவா ராகி
வேறினி இதற்குத் தீர்வு வேண்டுவார் விரிபூங் கொன்றை
ஆறிடு சடைய னருக் கதனைவிண் ணப்பஞ் செய்து. ஈஅஅ

3548 நாடொறும் பணிந்து போற்ற நாதரும் அதனை நோக்கி
நீடிய தொண்டர் தம்முள் இருவரும் மேவும் நீர்மை
கூடுதல் புரிவார் ஏயர் குரிசிலார் தம்பால் மேனி
வாடுறு சூலை தன்னை அருளினர் வருந்து மாற்றல். ஈஅக

3549 ஏதமில் பெருமைச் செய்கை ஏயர்தம் பெருமான் பக்கல்
ஆதியார் ஏவும் சூலை அனல்செய்வேல் குடைவ தென்ன
வேதனை மேன்மேற் செய்ய மிகஅதற் (கு)உடைந்து வீழ்ந்து
பூதநா யகர்தம் பொற்றாள் பற்றியே போற்று கின்றார். ஈகo

3550 சிந்தையால் வாக்கால் அன்பர் திருந்தடி போற்றி செய்ய
எந்தமை யாளும் ஏயர் காவலர் தம்பால் ஈசர்
வந்"தூனை வருத்துஞ் சூலை வன்தொண்டன் தீர்க்கில் அன்றி
மூன்றுற ஒழியா" தென்று மொழிந்தருள் செய்யக் கேட்டு. ஈகக

3551 "எம்பிரான் எந்தை தந்தை தந்தைஎங் கூட்ட மெல்லாம்
தம்பிரான் நீரே என்று வழிவழிச் சார்ந்து வாழும்
இம்பரின் மிக்க வாழ்க்கை என்னைநின் றீருஞ் சூலை
வம்பென ஆண்டு கொண்டான் ஒருவனே தீர்ப்பான் வந்து." ஈகஉ

3552 "மற்றவன் தீர்க்கில் தீரா தொழிந்தெனை வருத்தல் நன்றால்
பெற்றம்மேல் உயர்த்தீர் செய்யும் பெருமையை அறிந்தார் யாரே
உற்றவன் தொண்டர்க் கேஆம் உறுதியே செய்தீர்" என்னக்
கற்றைவார் சடையார் தாழும் அவர்முன்பு கரந்தார் அன்றே. ஈகஊ

மா. தே. பா. : அருமை. உ. தீர்க்கி. 3. அருமை

3553 வன்தொண்டர் தம்பால் சென்று வள்ளலார் அருளிச் செய்வார்
"இன்றுநம் ஏவ லாலே ஏயர்கோன் உற்ற சூலை
சென்றுநீ தீர்ப்பா யா"கென் றருள்செயச் சிந்தை யோடு
நன்றுமெய்ம் மகிழ்ந்து போற்றி வணங்கினார் நாவ லூரார். ஈகூச

3554 அண்ணலார் அருளிச் செய்து நீங்கஆ ரூரர் தாமும்
விண்ணவர் தம்பி ரானார் ஏவலால் விரைந்து செல்வார்
கண்ணிய மனத்தின் மேவுங் காதலால் கலிக்கா மர்க்குத்
திண்ணிய சூலை தீர்க்க வருதிறஞ் செப்பி விட்டார். ஈகூடு

3555 நாதர்தம் அருளால் நண்ணுஞ் சூலையும் அவர்பாற் கேட்ட
கேதமும் வருத்த மீண்டும் வன்தொண்டர் வரவும் கேட்டுத்
"தூதனுய் எம்பி ரானே ஏவினன் சூலை தீர்க்கும்
ஏதம்இங் கெய்த எய்தில் யான்செய்வ தென்னும்?" என்பார். ஈகூசு

3556 "மற்றவன் இங்கு வந்து தீர்ப்பதன் முன்நான் மாயப்,
பற்றிநின் றென்னை நீங்காப் பாதகச் சூலை தன்னை
உற்றஇவ் வயிற்றி னோடுங் கிழிப்பன்"என் றுடைவாள் தன்னால்
செற்றிட உயிரி னோடும் சூலையுந் தீர்ந்த தன்றே. ஈகூஎ

3557 கருதரும் பெருமை நீர்மைக் கலிக்காமர் தேவி யாரும்
பொருவரும் கணவ ரோடு போவது புரியுங் காலை
"மருவிஇங் கணைந்தார் நம்பி" என்றுமுன் வந்தார் கூற
"ஒருவரும் அழுதல் செய்யா தொழிக"என் றுரைத்துப் பின்னும்.

3558 கணவர்தஞ் செய்கை தன்னைக் காந்துகா வலரை நம்பி
அணைவுறும் பொழுது சால அலங்கரித் தெதிர்போம் என்னப்
புணர்நிலை வாயிற் றீபம் பூரண கும்பம் வைத்துத்
துணர்மலர் மாலை தூக்கித் தொழுதெதிர் கொள்ளச் சென்றார். ஈகூஈ

3559 செம்மைசேர் சிந்தை மாந்தர் சென்றெதிர் கொண்டு போற்ற
நம்மைஆ ளுடைய நம்பி நகைமுகம் அவர்க்கு நல்கி
மெய்ம்மையாம் விருப்பி னோடும் மேவிஉட் புகுந்து மிக்க
கொய்ம்மலர்த் தவிசின் மீது முகமலர்ந் திருந்த போது. சஂஂ

3560 பான்மைஅர்ச் சனைகள் எல்லாம் பண்பினில் வழாமை ஏய்ந்த
நான்மறை தொடர்ந்த வாய்மை நம்பியா ரூரர் கொண்"டிங்
கியான்மிக வருந்து கின்றேன்; ஏயர்கோ னுர்தாம் உற்ற
ஊனவெஞ் சூலை நீக்கி உடன்இருப் பதனுக்" கென்றார். சஂக

3561 மாதர்தம் ஏவ லாலே மனைத்தொழில் மாக்கள் "மற்றிங்
கேதமொன் றில்லை உள்ளே பள்ளிகொள் கின்றார்" என்னத்
"தீதணை வில்லை யேனும் என்மனந் தெருளா தின்னம்
ஆதலால் அவரைக் காண வேண்டும்"என் றருளிச் செய்தார். சஂஉ

பாடல் எண் 6 எனப்படும்.

3561 வன்தொண்டர் பின்னுங் கூற மற்றவர் தம்மைக் காட்டத்
துன்றிய குருதி சோரத் தொடர்குடர் சொரிந்துள் ளாவி
பொன்றியே கிடந்தார் தம்மைக் கண்டபின் "புகுந்த வாறு
நன்!"றென மொழிந்து "நானும் நண்ணுவேன் இவர்முன்" பென்பார்.

3562 கோளுறு மனத்த ராகிக் குற்றுடை வாளைப் பற்ற
ஆளுடைத் தம்பி ரானர் அருளினுல் அவரும் உய்ந்து
"கேளிரே யாகிக் கெட்டேன்" எனவிரைந் தெழுந்து கையில்
வாளினைப் பிடித்துக் கொள்ள வன்தொண்டர் வணங்கி வீழ்ந்தார்.

3563 மற்றவர் வணங்கி வீழ வாளினை மாற்றி ஏயர்
கொற்றவ ருரும் நம்பி குரைகழல் பணிந்து வீழ்ந்தார்
அற்றைநாள் நிகழ்ந்த இந்த அதிசயங் கண்டு வானோர்
பொற்றட மலரின் மாரி பொழிந்தனர் புவனம் போற்ற. சஅடு

3564 இருவரும் எழுந்து புல்லி இடைவிடா நண்பி னுலே
பொருவரும் மகிழ்ச்சி பொங்கத் திருப்புன்கூர்ப் புனிதர் பாதம்
மருவினர் போற்றி நின்று வன்தொண்டர் தம்பி ரானர்
அருளினை நினைந்தே "அந்த ணாளன்"என் றெடுத்துப் பாடி. சஅசு

3565 சிலபகல் கழிந்த பின்பு திருமூணைப் பாடி நாடர்
மலர்புகழ்த் திருவா ரூரில் மகிழ்ந்துடன் வந்த ஏயர்
குலமுதற் றலைவ ருருங் கூடவே குளிர்பூங் கோயில்
நிலவினர் தம்மைக் கும்பிட் டுறைந்தனர் நிறைந்த அன்பால். சஅள

3566 அங்கினி தமர்ந்து நம்பி அருளினுல் மீண்டும் போந்து
பொங்கிய திருவின் மிக்க தம்பதி புகுந்து பொற்பில்
தங்குநாள் ஏயர் கோனர் தமக்கேற்ற தொண்டு செய்தே
செங்கண்மால் விடையார் பாதஞ் சேர்ந்தனர் சிறப்பி னோடும். சஅஅ

3567 நள்ளிருள் நாய னைத்தூ துவிட் டவர்க்கே நண்பாம்
வள்ளலார் ஏயர் கோனர் மலரடி வணங்கிப் புக்கேன்
உள்ளுணர் வான ஞானம் முதலிய ஒருநான் குண்மை
தெள்ளுதீந் தமிழாற் கூறுந் திருமூலர் பெருமை செப்ப. சஅசு

ஆ திருவிருத்தம் கூறுசுஅ.

பா. ஓ. 1. நண்பால.

30. திருமூல நாயனார் புராணம்

3568 அந்திஇளம் பிறைக்கண்ணி அண்ணலார் கயிலையினில்
முந்தைதிகழ் கோயிலுக்கு முதற்பெருநா யகமாகி
இந்திரன்மால் அயன்முதலாம் இமையவர்க்கு நெறியருளும்
நந்திதிரு வருள்பெற்ற நான்மறையோ கிகள்ஒருவர். கூ

3570 மற்றவர்தாம் அணிமாதி வருஞ்சித்தி பெற்றுடையார்
கொற்றவனார் திருக்கயிலை மலைநின்றுங் குறுமுனிபால்
உற்றதொரு கேண்மையினுல் உடன்சிலநாள் உறைவதற்கு
நற்றமிழின் பொதியமலை நண்ணுதற்கு வழிக்கொண்டார். உ

3571 மன்னுதிருக் கேதாரம் வழிபட்டு மாமுனிவர்
பன்னுபுகழ்ப் பசுபதிநே பாளத்தைப் பணிந்தேத்தித்
துன்னுசடைச் சங்கரனார் ஏற்றதூ நீர்க்கங்கை
அன்னமலி அகன்றுறைநீர் அருங்கரையின் மருங்கணைந்தார். ங

3572 கங்கைநீர்த் துறையாடிக் கருத்துறைநீள் கடலேற்றும்
அங்கணர்தாம் மகிழ்ந்தருளும் அவிமுத்தம் பணிந்தேத்தி
மங்குல்வளர் வரைவிந்த மன்னுபருப் பதம்இறைஞ்சித்
திங்களணி சடையர்திருக் காளத்தி மலைசேர்ந்தார். ச

3573 நீடுதிருக் காளத்தி நிலவுதா ணுவைவணங்கி
ஆடுதிரு அரங்கான ஆலவனந் தொழுதேத்தித்
தேடும்இரு வர்க்கரியார் திருவகாம் பரம்பணிந்து
மாடுயர்மா மதிற்காஞ்சி வளநகரின் வைகினார். ஞ

3574 நற்பதிஅங் கமர்யோக முனிவர்களை நயந்துபோய்க்
கற்புரிசைத் திருவதிகை கலந்திறைஞ்சிக் கறைக்கண்டர்
அற்புதக்கூத் தாடுகின்ற அம்பலஞ்சூழ் திருவீதிப்
பொற்பதியாம் பெரும்பற்றப் புலியூரில் வந்தணைந்தார். கூ

3575 எவ்வுலகும் உய்யஎடுத் தருளியசே வடியாரைச்
செவ்வியஅன் புறவணங்கிச் சிந்தைகளி வாத்திளைத்து
வவ்வியமெய் யுணர்வின்கண் வரும்ஆனந் தக்கூத்தை
அவ்வியல்பிற் கும்பிட்டங் காராமை அமர்ந்திருந்தார். எ

3576 தடநிலைமா ளிகைப்புலியூர் தன்னிலுறைந் திறைஞ்சிப்போய்
"அடல்விடையின் மேல்வருவார் அமுதுசெய அஞ்சாதே
விடம்அளித்த" தெனக்கருதி மேதினிக்கு வளம்நிறைத்தே
கடல்வயிறு நிறையாத காவிரியின் கரைஅணைந்தார். அ

பா.பே.1. சுழியதே. 2 தென்றைவளி: 3 அமைந்தார்

3577 1 காவிரிநீர்ப் பெருந்தீர்த்தம் கலந்தாடிக் கடந்தேறி
ஆவின்அருங் கன்றுறையும் ஆவடுதண் டுறைஅணைந்து
சேவில்வரும் பசுபதியார் செழுங்கோயில் வலம்வந்து
மேவுபெருங் காதலினால் பணிந்தங்கு விருப்புறுவார். கூ

3578 அங்கிலைமைத் தானத்தை அகலாத தொருகருத்து
முன்னிளமுங் குறிப்பினால் மூளும்ஆ தரவெய்தப்
பின்னும்அகன் றேகுவார் பேணவருங் கோக்குலங்கள்
பொன்னிநதிக் கரைப்புறவிற் புலம்புவன எதிர்கண்டார். கo

3579 அந்தணர்தஞ் சாத்தனூர் ஆமேய்ப்பார் குடித்தோன்றி
மூந்தைமுறை நிரைமேய்ப்பான் மூலன்எனும் பெயருடையான்
வந்துதனி மேய்க்கின்றுன் விணைமாள வாழ்நாளே
வெந்தொழில்வன் கூற்றுண்ண வீடிநிலத் திடைவீழ்ந்தான். கக

3580 மற்றவன்தன் உடம்பினைக் கோக்குலங்கள் வந்தணைந்து
சுற்றிமிகக் கதறுவன சுழல்வனமோப் பனவாக
நற்றவயோ கியர்காணு "நம்பர்அரு ளாலேஆ
உற்றதுயர் இவைநீங்க ஓழிப்பன்"என உணர்கின்றூர். கஉ

3581 "இவனுயிர்பெற் றெழிலன்றி ஆக்களிடர் நீங்கா"என்
றவனுடலிற் றம்முயிரை அடைவிக்க அருள்புரியும்
தவமுனிவர் தம்மூடம்புக் கரண்செய்து தாம்முயன்ற
பவனவழி அவனுடலில் தம்முயிரைப் பாய்த்தினூர். கங

3582 பாய்த்தியபின் திருமூல ராய்எழலும் பசுக்களெலாம்
நாத்தழும்ப நக்கிமோந் தணைந்துகனைப் பொடுநயந்து
வாய்த்தெழுந்த களிப்பினால் வாலெடுத்துத் துள்ளிப்பின்
நீத்ததய ரினவாகி நிரைந்துபோய் மேய்ந்தனவால். கச

3583 ஆவின்நிரை மகிழ்வுறக்கண் டளிகூர்ந்த அருளினராய்
மேவியவை மேய்விடத்துப் பின்சென்றே மேய்ந்தவைதாம்
காவிரிமுன் துறைத்தண்ணீர் கலந்துண்டு கரைஏறப்
பூவிரிதண் புறவின்நிழல் இனிதாகப் புறங்காத்தார். கஙி

3584 வெய்யசுடர்க் கதிரவனும் மேல்பாலை மலைஅணையச்
சைவநெறி மெய்யுணர்ந்தோர் ஆனினங்கள் தாமேமுன்
பையநடப் பனகன்றை நினைந்துபடர் வனவாகி
வையநிகழ் சாத்தனூர் வந்தெய்தப் பின்போனூர். கசு

3585 போனவர்தாம் பசுக்களெலாம் மனைதோறும் புகுகின்றூர்
மானமுடை மனையாளும் "வைகியபின் தாழ்த்தார்"என்
றுனபயத் துடன்சென்றே அவர்நின்ற வழிகண்டாள்
"ஈனம்இவர்க் கடுத்த"தென மெய்தீண்ட அதற்கிசையார். களி

பா.வே. 1. காவிரியின் நீர்த்தீர்த்தம்: காவிரிநீர்த் தீர்த்தங்கள் தன்
2. அழுஸ்னைமாய்ப்பு: அசைதுநீங்க, நற் மெய்த்வைதாம்

3586 அங்கவளரும் மக்களுடன் அருஞ்சுற்றம் இல்லாதாள்
தங்கிவெரு வுறமயங்கி "என்செய்தீர்!" எனத்தளர
"இங்குனக்கென் னுடன்அணைவான் றில்லை"என எதிர்மறுத்துப்
பொங்குதவத் தோர்ஆங்கோர் பொதுமடத்தி னுட்புகுந்தார். கஅ

3587 இல்லாளன் இயல்புவே றுனமைகண் டிரவெல்லாம்
சொல்லாடா திருந்தவர்பால் அணையாது துயிலாதாள்
பல்லார்முன் பிற்றைநாள் இவர்க்கடுத்த பரிசுரைப்ப
நல்லார்கள் அவர்திறத்து நாடியே நயந்துரைப்பார். ககூ

3588 "பித்துற்ற மயலன்று பிறிதொருசார் புளதன்று
சித்தவிகற் பங்களோந்து தெளிந்தசிவ யோகத்தில்
வைத்தகருத் தினராகி வரம்பில்பெரு மையிலிருந்தார்
இத்தகைமை அளப்பரிதால் யாராலும்" எனஉரைப்பார். உ0

3589 "பற்றறுத்த உபதேசப் பரமர்பதம் பெற்றூர்போல்
முற்றும்உணர்ந் தனராகும் முன்னோரில் மையில்உங்கள்
சுற்றஇயல் பினுக்கெய்தார்" என்றுரைப்பத் துயர்எய்தி
மற்றவளும் மையலுற மருங்குள்ளார் கொண்டகன்றார். உக

3590 இந்தநிலை மையிலிருந்தார் எழுந்திருந்தாங் கான்நிரைகள்
வந்தெறி யேசென்று வைத்தகாப் பினில்உய்த்த
மூன்தையுடற் பொறைகாணூர் முழுதுணர்ந்த மெய்ஞ்ஞானச்
சிந்தையினில் வந்தசெயல் ஆராய்ந்து தெளிகின்றார். உஉ

3591 தண்நிலவார் சடையார்தாம் தந்தஆ கமப்பொருளே
மண்ணின்மிசைத் திருமூலர் வாக்கினுல் தமிழ்வகுப்பக்
கண்ணியஅத் திருவருளால் அவ்வுடலைக் கரப்பிக்க
எண்ணிறைந்த உணர்வுடையார் "ஈசர்அருள்" எனஉணர்ந்தார். உங

3592 சுற்றியஅக் குலத்துள்ளார் தொடர்ந்தார்க்குத் தொடர்வின்மை
முற்றவே மொழிந்தருள அவர்மீண்டு போனதற்பின்
பெற்றமீ துயர்த்தவர்தாள் சிந்தித்துப் பெருகார்வச்
செற்றம்முதல் கடிந்தவர்தாம் ஆவடுதண் டுறைசேர்ந்தார். உச

3593 ஆவடுதண் டுறைஅணைந்தங் கரும்பொருளை உறவணங்கி
மேவுவார் புறக்குடபால் மிக்குயர்ந்த அரசின்கீழ்த்
தேவிருக்கை அமர்ந்தருளிச் சிவயோகம் தலைநின்று
பூவலரும் இதயத்துப் பொருளோடும் உணர்ந்திருந்தார். உரு

3594 ஊனுடம்பிற் பிறவிவிடந் தீர்ந்துலகத் தோர்உய்ய
ஞானம்முதல் நான்குமலர் நற்றிருமந் திரமாலை
பான்மைமுறை ஓராண்டுக் கொன்றுகப் பரம்பொருளாம்
ஏனையி றுணிந்தாரை "ஒன்றவன்தான்" எனஎடுத்து. உசு

3575 முன்னியஅப் பொருள்மாலைத் தமிழ்மூவா யிரஞ்சாத்தி
மன்னியமூ வாயிரத்தாண் டிப்புவிமேல் மகிழ்ந்திருந்து
சென்னிமதி அணிந்தார்தந் திருவருளால் திருக்கயிலை
தன்னில்அணைந் தொருகாலும் பிரியாமைத் தாளடைந்தார். உள

3576 நலஞ்சிறந்த ஞானயோ கக்கிரியா சரியையெலாம்
மலர்ந்தமொழித் திருமூல தேவர்மலர்க் கழல்வணங்கி
அலர்ந்தபுகழ்த் திருவாரூர் அமணர்கலக் கங்கண்ட
தலங்குலவு விறற்றண்டி அடிகள் திறஞ் சாற்றுவாம். உஅ

ஆ திருவிருத்தம் - ஈ,நிகஅ.

31. தண்டியடிகள் புராணம்

3577 தண்டி யடிகள் திருவாரூர்ப் பிறக்கும் பெருமைத் தவமுடையார்
அண்ட வாணர் மறைபாட ஆடுஞ் செம்பொற் கழல்மனத்துக்
கொண்ட கருத்தின் அகநோக்குங் குறிப்பே அன்றிப் புறநோக்கும்
கண்ட உணர்வு துறந்தார்போல் பிறந்த பொழுதே கண்காணூர். க

3578 காணுங் கண்ணுற் காண்பதுமெய்த் தொண்டே யான கருத்துடையார்
பேணுஞ் செல்வத் திருவாரூர்ப் பெருமா னடிகள் திருவடிக்கே
பூணும் அன்பி னுள்பரவிப் போற்றும் நிலைமை புரிந்தமரர்
சேணும் அறிய அரியதிருத் தொண்டிற் செறியச் சிறந்துள்ளார். உ

3579 பூவார் சடிலத் திருமுடியார் மகிழ்ந்த செல்வப் பூங்கோயில்
தேவா சிரியன் முன்னிறைஞ்சி வலஞ்செய் வாராய்ச் செம்மைபுரி
நாவால் இன்ப முறுங்காதல் நமச்சி வாய நற்பதமே
ஓவா அன்பில் எடுத்தோதி ஒருநாள் போல வருநாளில். ஙூ

3600 செங்கண் விடையார் திருக்கோயிற் குடபால் தீர்த்தக் குளத்தின்பாங்
கெங்கும் அமணர் பாழிகளாய் இடத்தாற் குறைபா டெய்துதலால்
அங்கந் நிலைமை தனைத்தண்டி யடிகள் அறிந்தே ஆதரவால்
"இங்கு நான்இக் குளம்பெருகக் கல்ல வேண்டும்" என்றெழுந்தார். ச

3601 குழிவா யதனிற் குறிநட்டுக் கட்டுங் கயிறு குளக்குலியின்
இழிவாய்ப் புறத்து நடுத்தறியோ டிசையக் கட்டி இடைதடவி
வழியால் வந்து மண்கல்லி எடுத்து மறித்துந் தடவிப்போய்
ஒழியா முயற்சி யாலுய்த்தார் ஓதும் எழுத்தஞ் சுடனுய்ப்பார். ஞ

3602 நண்ணி நாளும் நற்றிறண்டர் நயந்த விருப்பால் மிகப்பெருகி
அண்ணல் தீர்த்தக் குளங்கல்லக் கண்ட அமணர் பொறாராகி

பா.பே 1. கன்னகலம் . 2. புரிந்தமைவால் .

எண்ணித் தண்டி யடிகள்பால் எய்தி முன்நின் றியம்புவார்
"மண்ணைக் கல்லிற் பிராணிபடும் வருத்த வேண்டாம்" என்றுரைத்தார்.

3603 மாசு சேர்ந்த முடையுடலார் மாற்றங் கேட்டு மறுமாற்றம்
தேசு பெருகுந் திருத்தொண்டர் செப்பு கின்றார் "திருவிளிகாள்
பூசு நீறு சாந்தமெனப் புனைந்த பிரானுக் கானபணி
ஆசி லாநல் லறமாவ தறிய வருமோ உமக்?" கென்றார். எ

3604 அந்த மில்லா அறிவுடையார் உரைப்பக் கேட்ட அறிவில்லார்
"சிந்தித் திந்த அறங்கேளாய் செவியும் இழந்தா யோ!" என்ன
"மந்த உணர்வும் விழிக்குருடும் கேளாச் செவியும் மற்றுமக்கே
இந்த உலகத் துள்ளன" என் றன்பர் பின்னும் இயம்புவார். அ

3605 "வில்லால் எயில்மூன் றெரித்தபிரான் விரையார் கமலச் சேவடிகள்
அல்லால் வேறு காணேன்யான் அதுநீர் அறிதற் கார்?" என்பார்
"நில்லா நிலையீர் உணர்வின்றி நுங்கண் குருடாய் என்கண்உல
கெல்லாங் காண்பான் யான்கண்டால் என்செய் வீர்?" என் றெடுத்துரைத்தார்.

3606 அருகர் அதுகேட் "டுன்தெய்வத் தருளால் கண்நீ பெற்றுயேல்
பெருகும் இவ்வு ரினில்நாங்கள் பின்னை இருக்கி லோம்" என்று
கருகு முருட்டுக் கைகளால் கொட்டை வாங்கிக் கருத்தின்வழித்
தருகைக் கயிறுந் தறியுமுடன் பறித்தார் தங்கள் தலைபறித்தார். க0

3607 வெய்ய தொழிலார் செய்கையின்மேல் வெகுண்ட தண்டி யடிகள்தாம்
மைகொள் கண்டர் பூங்கோயில் "மணிவா யிலின்முன் வந்திறைஞ்சி
"ஐய னே! இன் றமணர்கள்தாம் என்னை அவமா னஞ்செய்ய
நைவ தானேன் இதுதீர நல்கும் அடியேற்" கெனவீழ்ந்தார். க க

3608 பழுது தீர்ப்பார் திருத்தொண்டர் பரவி விண்ணப் பஞ்செய்து
தொழுது போந்து மடம்புகுந்து தூய பணிசெய் யப்பெரு
தழுது கங்குல் அவர்துயிலக் கனவில் அகில லோகங்கள்
முழுதும் அளித்த முதல்வனார் முன்நின் றருளிச் செய்கின்றார். கஉ

3609 "நேஞ்சில் மருவுங் கவலையினை ஒழிநீ நின்கண் விழித்தந்த
வஞ்ச அமணர் தங்கண்கள் மறையு மாறு காண்கின்றாய்
அஞ்ச வேண்டாம்" என்றருளி அவர்பால் நீங்கி அவ்விரவே
துஞ்சும் இருளில் அரசன்பால் தோன்றிக் கனவில் அருள்புரிவார்.

3610 "தண்டி நமக்குக் குளங்கல்லக் கண்ட அமணர் தரியாராய்
மிண்டு செய்து பணிவிலக்க வெகுண்டான் அவன்பால் நீமேவிக்
கொண்ட குறிப்பால் அவன்கருத்தை முடிப்பாய்" என்று கொளஅருளித்
தொண்டர் இடுக்கண் நீங்கஎழுந் தருளி னர்அத் தொழிலுவப்பார்.கச

3611 வேந்தன் அதுகண் டப்பொழுதே விழித்து மெய்யின் மயிர்முகிழ்ப்பப்
பூந்தண் கொன்றை வேய்ந்தவரைப் போற்றிப் புலரத் தொண்டர்பால்

பா.வே: 1. மாசுபடர்ந்த உருவையீர்க் காண்கின்றாய்

சார்ந்து புகுந்த படிவிளம்பத் தம்பி ரானூர் அருள்நினைந்தே
எய்ந்த மன்னன் கேட்பஇது புகுந்த வண்ணம் இயம்புவார். கடு

3612 "மன்ன! கேள்யான் மழவிடையார் மகிழுந் தீர்த்தக் குளங்கல்லத்
துன்னும் அமணர் அங்கணைந்தீ "தரும்அன்" றென்று பலசொல்லிப்
பின்னுங் கயிறு தடவுதற்கியான் பிணித்த தறிகள் அவைவாங்கி
என்னை வலிசெய் தியான்கல்லுங் கொட்டைப் பறித்தார்" என்றியம்பி. கக

3613 "'அந்த ணனை உனக்கறிவும் இல்லை' என்றூர் யான்அதனுக்
'கெந்தை பெருமான் அருளாலியான் விழிக்கில் என்செய் வீர்?' என்ன
'இந்த ஊரில் இருக்கிலோம்' என்றே ஓட்டி னர்இதுமேல்
வந்த வாறு கண்டிந்த வழக்கை முடிப்ப" தெனமொழிந்தார். களை

3614 அருகர் தம்மை அரசனும்அங் கழைத்துக் கேட்க அதற்கிசைந்தார்
மருவுந் தொண்டர் முன்போக மன்னன் பின்போய் மலர்வாவி
அருகு நின்று விறல்தண்டி யடிகள் தம்மை முகநோக்கிப்
"பெருகுந் தவத்தீர்! கண்அருளாற் பெருமா காட்டும்" எனப்பெரியோர். கஎ

3615 "ஏய்ந்த அடிமை சிவனுக்(கு)யான் என்னில் இன்றென் கண்பெற்று
வேந்தன் எதிரே திருவாரூர் விரவுஞ் சமணர் கண்ணிழப்பார்
ஆய்ந்த பொருளுஞ் சிவபதமே ஆவ" தென்றே அஞ்செழுத்தை
வாய்ந்த தொண்டர் எடுத்தோதி மணிநீர் வாவி மூழ்கினார். கஙூ

3616 தோழுது புனல்மேல் எழுந்தொண்டர் தூய மலர்க்கண் பெற்றெழுந்தார்
பொழுது தெரியா வகைஅமரர் பொழிந்தார் செழுந்தண் பூமாரி
இழுதை அமணர் விழித்தேதகண் ணிழந்து தடுமா றக்கண்டு
"பழுது செய்த அமண்கெட்ட" தென்று மன்னன் பகர்கின்றான். உ0

3617 "தண்டி யடிகள் தம்முடனே ஓட்டிக் கெட்ட சமண்குண்டர்
அண்டர் போற்றுந் திருவாரூர் நின்றும் அகன்று போய்க்கழியக்
கண்ட அமணர் தமைஎங்குங் காணு வண்ணந் துரக்க" என
மண்டி வயவர் சாடுதலும் கண்கள் காணூர் மனங்கலங்கி. உக

3618 குழியில் விழுவார் நிலைதளர்வார் "கோலும் இல்லை" எனஉரைப்பார்
"வழியீ" தென்று தூறடைவார் "மாண்டோம்" என்பார் "மதிகெட்டீர்
அழியும் பொருளை வட்டித்திங் கழிந்தோம்" என்பார் "அரசனுக்குப்
பழியீ தாமோ" என்றுரைப்பார் பாய்கள் இழப்பார் பறிதலையர். உஉ

3619 பீலி தடவிக் காணாது பெயர்வார் நின்று பேதுறுவார்
காலி னோடு கைமுறியக் கல்மேல் இடறி வீழ்வார்கள்
சால நெருங்கி எதிரெதிரே தம்மிற் றாமே முட்டிடுவார்
மாலும் மனமும் அழிந்தோடி வழிகள் அறியார் மயங்குவார். உங

3620 அன்ன வண்ணம் ஆரூரில் அமணர் கலக்கங் கண்டவர்தாம்
சொன்ன வண்ண மேஅவரை ஓடத் தொடர்ந்து துரந்ததற்பின்

பா. வே. இன்னைகண் மற்று.

பன்னும் பாழிப் பள்ளிகளும் பறித்துக் குளஞ்சூழ் கரைபடுத்து
மன்ன னவனும் மனமகிழ்ந்து வந்து தொண்டர் அடிபணிந்தான். உச

3624 மன்னன் வணங்கிப் போயினபின் மாலும் அயனும் அறியாத
பொன்னங் கழல்கள் போற்றிசைத்துப் புரிந்த பணியுங் குறைமுடித்தே
உன்னும் மனத்தால் அஞ்செழுத்தும் ஓதி வழுவா தொழுகியே
மின்னுஞ் சடையார் அடிநீழல் மிக்க சிறப்பின் மேவினார். உடு

3624-2 கண்ணின் மணிக ளவையின்றிக் கயிறு தடவிக் குளந்தொட்ட
எண்ணில் பெருமைத் திருத்தொண்டர் பாதம் இறைஞ்சி இடர்நீங்கி
விண்ணில் வாழ்வார் தாம்வேண்டப் புரங்கள் வெகுண்டார் வேற்காட்டூர்
உண்ணி லாவும் புகழ்த்தொண்டர் மூர்க்கர் செய்கை உரைக்கின்றாம்.

ஆ திருவிருத்தம் - ங,கூஉஉ.

34. மூர்க்க நாயனார் புராணம்

3625 மன்னிப் பெருகும் பெருந்தொண்டை வளநா டதனில் வயல்பரப்பும்
நன்னித் திலவெண் திரைப்பாலி நதியின் வடபால் நலங்கொள்பதி
அன்னப் பெடைகள் குடைவாவி அலர்புக் காட அரங்கினிடை
மின்னுக் கொடிகள் துகிற்கொடிகள் விழுவிற் காடு வேற்காடு. க

3626 சேம்பொற் புரிசைத் திருவேற்கா டமர்ந்த செய்ய சடைக்கற்றை
நம்பர்க்(கு) உம்பர்க் கமுதளித்து நஞ்சை அமுது செய்தவருக்
கிம்பர்த் தலத்தில் வழிஅடிமை என்றுங் குன்ற இயல்பில்வரும்
தம்பற் றுடைய நிலைவேளாண் குலத்திற் றலைமை சார்ந்துள்ளார். உ

3627 கோதில் மரபிற் பிறந்துவளர்ந் தறிவு கொண்ட நாள்தொடங்கி
"ஆதி முதல்வர் திருநீற்றின் அடைவே பொருள்" என் றறிந்தாரூர்
காதல் அடியார்க் கமுதாக்கி அமுது செய்யக் கண்டுண்ணும்
நீதி முறைமை வழுவாத நியதி பூண்ட நிலைமையார். ங

3628 தூய அடிசில் நெய்கன்னல் சுவையின் கறிக ளவைஅமைத்து
மேய அடியார் தமைப்போற்றி விருப்பால் அமுது செய்வித்தே
ஆய பொருளும் அவர்வேண்டும் படியால் உதவி அன்புமிக
ஏயு மாறு நாள்தோறும் இனைய பணிசெய் தின்புற்றார். ச

3629 இன்ன செயலின் ஒழுகுநாள் அடியார் மிகவும் எழுந்தருள
முன்னம் உடைமை யானபொருள் முழுதும் மாள அடிமையுடன்
மன்னும் காணி யானநிலம் மற்றும் உள்ள திறம்விற்றே
அன்னம் அளித்தே மேன்மேலும் ஆரா மனத்தா ராயினார். ஞ

பா. 60.1. புகட வரிசை.

3624 அங்கண் அவ்வூர் தமக்கொருபற் றடியார் தங்கட் கமுதாக்க
எங்கும் காணு வகைதேடின்ற இலம்பா டெய்தி இருந்தயர்வார்
தங்கும் வகையால் தாம்முன்பு கற்ற தன்மை நற்சூதால்
பொங்கும் பொருளாக் கவும்அங்குப் பொருவார் இன்மை யினிற்போவார்.

3625 பெற்றம் ஏறிப் பலிக்குவரும் பெருமான் அமருந் தானங்கள்
உற்ற அன்பாற் சென்றெய்தி உருகும் உள்ளத் தொடும்பணிந்து
கற்ற சூதால் நியதியாங் கருமம் முடித்தே கருதாரூர்
செற்ற சிலையார் திருக்குடந்தை அடைந்தார் வந்து சிலநாளில். எ

வேறு

3630 இருளாரும் மணிகண்டர் அடியார்க்கின் னமுதளிக்கப்
பொருளாயம் எய்துதற்குப் புகழ்க்குடந்தை அம்பலத்தீத
உருளாயச் சூதாடி உறும்பொருள்வென் றனநம்பர்
அருளாக வேகொண்டங் கமுதுசெய்வித் தின்புறுவார். அ

3631 முற்சூது தாந்தோற்று முதற்பணய மவர்கொள்ளப்
பிற்சூது பலமுறையும் வென்றுபெரும் பொருளாக்கிச்
சொற்சூதால் மறுத்தாரைச் சுரிகைஉரு விக்குத்தி
நற்சூதர் மூர்க்கர்எனும் பெயர்பெற்றார் நானிலத்தில். கூ

3632 சூதினில்வென் றெய்துபொருள் தூரிசற்ற நல்லுணர்வில்
நீதகல அமுதாக்கு வார்கொள்ளத் தாந்தீண்டார்
காதலுடன் அடியார்கள் அமுதுசெயக் கடைப்பந்தி
ஏதமிலா வகைதாமும் அமுதுசெய்தங் கிருக்குநாள். கo

3633 நாதன்தன் அடியார்க்கு நல்லடிசில் நாள்தோறும்
ஆதாவி னுல்அமுது செய்வித்தங் கருளாலே
ஏதங்கள் போயகல இவ்வுலகை விட்டதற்பின்
பூதங்கள் இசைபாட ஆடுவார் புரம்புக்கார். கக

3634 வல்லார்கள் தமைவென்று சூதினுல் வந்தபொருள்
அல்லாருங் கறைக்கண்டர் அடியவர்கள் தமக்காக்கும்
நல்லார்நற் சூதராம் மூர்க்கர்கழல் நாம்வணங்கிச்
சொல்லார்சீர்ச் சோமாசி மாறர்திறஞ் சொல்லுவாம். கஉ

ஆ திருவிருத்தம் - ந,சுந்.

பா. வே. 1. கடலும். 2. நற்சூதால்.

33. சோமாசிமாற நாயனார் புராணம்

3635 சூதம்பயி லும்பொழில் அம்பரில் தூய வாய்மை
வேதம்பயி லும்மறை யாளர் குலத்தின் மேலோர்
ஏதம்புரி யும்எயில் செற்றவர்க் கன்பர் வந்தால்
பாதம்பணிந் தார்அமு தூட்டுநற் பண்பின் மிக்கார். க

3636 "யாழின்மொழி யாள்தனிப் பாகரைப் போற்றும் யாகம்
ஊழின்முறை மைவழு வாதுல கங்க ளான
ஏழும்உவப் பப்புரிந் தின்புறச் செய்த பேற்றால்
வாழுந்திறம் ஈசர் மலர்க்கழல் வாழ்த்தல்" என்பார். உ

3637 எத்தன்மைய ராயினும் "ஈசனுக் கன்பர்" என்றால்
"அத்தன்மையர் தாம்நமை யாள்பவர்" என்று கொள்வார்
"சித்தந்தெளி யச்சிவன் அஞ்செழுத் தோதும் வாய்மை
நித்தந் நியமம்" எனப்போற்றும் நெறியில் நின்றார். ங

3638 சீருந்திரு வும்பொழி யுந்திரு வாரூர் எய்தி
ஆருந்திகழ் மார்பின் அணுக்கவன் தொண்டர்க் கன்பால்
சாரும்பெரு நண்பு சிறப்ப அடைந்து தங்கிப்
பாரும்விசும் பும்பணி யும்பதம் பற்றி யுள்ளார். ச

3639 துன்றும்புலன் ஐந்துடன் ஆறு தொகுத்த குற்றம்
வென்"றிங்கிது நன்னெறி சேரும் விளக்கம்" என்றே
வன்தொண்டர் பாதந்தொழு தான சிறப்பு வாய்ப்ப
என்றுந்நில வுஞ்சிவ லோகத்தில் இன்பம் உற்றார். ஞ

வேறு

3640 பணையுந் தடமும் புடைசூழும் ஒற்றி யூரில் பாகத்தோர்
துணையுந் தாமும் பிரியாதார் தோழத் தம்பி ரானரை
இணையுங் கொங்கைச் சங்கிலியார் எழில்மென் பணைத்தோள் எய்துவிக்க
அணையும் ஒருவர் சரணமே அரண மாக அடைந்தாமே. ட

ஆ திருவிருத்தம் ஈசுஈ

தா

பா. பே. I. எய்துவிக்கும். 4 ஆம் வரை ம.
3. எளியர் திருவதிகை யும்.

எ. வார்கொண்ட வனமூலையாள் சருக்கம்

சாக்கிய நாயனார் புராணம்

3641 அறுசமயத் தலைவராய் நின்றவருக் கன்பராய்
மறுசமயச் சாக்கியர்தம் வடிவினுல் வருந்தொண்டர்
உறுதிவரச் சிவலிங்கங் கண்(டு)உவந்து கல்லெறிந்து
மறுவில்சரண் பெற்றதிறம் அறிந்தபடி வழுத்துவாம். க

3642 தாளாளர் திருச்சங்க மங்கையினில் தகவுடைய
வேளாளர் குலத்துதித்தார் மிக்கபொருள் தெரிந்துணர்ந்து
கேளாகிப் பல்லுயிர்க்கும் அருளுடைய ராய்க்கேழுமி
"நீளாது பிறந்திறக்கும் நிலையழிவேன்" எனநிற்பார். உ

3643 அந்நாளில் எயிற்காஞ்சி அணிநகரஞ் சென்றடைந்து
நன்ஞானம் அடைவதற்குப் பலவழியும் நாடுவார்
முன்னுகச் சாக்கியர்தாம் மொழிஅறத்தின் வழிச்சார்ந்து
மன்னுத பிறப்பறுக்குந் தத்துவத்தின் வழிஉணர்வார். ங

3644 அந்நிலைமைச் சாக்கியர்தம் அருங்கலைநூல் ஓதிஅது
தன்நிலையும் புறச்சமயச் சார்வுகளும் பொருளல்ல
என்னும்அது தெளிந்(து)ஈசர் அருள்கூட "ஈறில்சிவ
நன்நெறியே பொருளாவ" தெனஉணர்வு நாட்டுவார். ச

3645 "செய்வினையுஞ் செய்வானும் அதன்பயனுங் கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள்" எனக்கொண்டே
"இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக் கில்லை"என
உய்வகையாற் "பொருள்சிவன்"என்(று) அருளாலே உணர்ந்தறிந்தார்.

3646 "எந்நிலையில் நின்றாலும் எக்கோலங் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்தாள் மறவாமை பொருள்"என்றே
துன்னியவே டந்தன்னைத் துறவாதே தூயசிவம்
தன்னைமிகும் அன்பினுல் மறவாமை தலைநிற்பார். சு

வேறு

3647 "எல்லாம் உடைய ஈசனே இறைவன்' என்ன அறியாதார்
பொல்லா வேடச் சாக்கியரே யாகிப் புல்ல ராகுவார்
அல்லார் கண்டார் தமக்கிந்த அகில மெல்லாம் ஆள்என்ன
வல்லார் இவர்அவ் வேடத்தை மாற்று தன்பின் வழிநிற்பார். எ

பா. வே. 1. அறுசமயல். 2. அல்லவற்றுள்.

வேறு

3644 காணுத அருவினுக்கும் உருவினுக்குங் காரணமாய்
நீணுகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாஞ் சிவலிங்கம்
நாணுது நேடியமால் நான்முகனுங் காணநடுச்
சேணுருந் தழற்பிழம்பாய்த் தோன்றியது தெளிந்தாராய். அ

3645 நாடோறுஞ் சிவலிங்கம் கண்டுண்ணு மதுநயந்து
மாடோர்வெள் ளிடைமன்னுஞ் சிவலிங்கங் கண்டுமனம்
நீடோடு களியுவகை நிலைமைவரச் செயலறியார்
பாடோர்கல் கண்டதனைப் பதைப்போடும் எடுத்தெறிந்தார். கூ

3646 அகம்நிறைந்த பேருவகை அடங்காத ஆதரவால்
மகவுமகிழ்ந் துவப்பார்கள் வன்மைபுரி செயலினுல்
இகழ்வனவே செய்தாலும் இளம்புதல்வர்க் கின்பமே
நிகழுமது போலதற்கு நீள்சடையார் தாம்மகிழ்வார். கo

3647 அன்றுபோய்ப் பிற்றைநாள் அந்நியதிக் கணையுங்கால்
கொன்றைமுடி யார்மேல்தாங் கல்லெறிந்த குறிப்பதனை
நின்றுணர்வார் "எனக்கப்போ திதுநிகழ்ந்த தவர்அருளே"
என்றதுவே தொண்டாக என்றும்அது செயநினைந்தார். கக

3648 தோடங்கியநாள் அருளியஅத் தொழிலொழியா வழிதொடரும்
கடன்புரிவார் அதுகண்டு கல்லெறிவார் துவராடைப்
படம்புனைவே டந்தவிசார் பசுபதியார் தம்செயலே
அடங்கலும்என் பதுதெளிந்தார் ஆதலினுல் மாதவர்தாம். கஉ

3649 இந்நியதி பரிவோடும் வழுவாமல் இவர்செய்ய
முன்னுதிருத் தொண்டர்நிலை முடிந்தபடி தான்மொழியில்
தன்னியமெய் யன்புடனே எழுந்தவினை தூயவர்க்கு
மன்னுமிகு பூசனையாம் அன்புநெறி வழக்கினுல். கங

3650 கல்லாலே எறிந்ததுவும் அன்பான படிகாணில்
வில்வேடர் செருப்படியுந் திருமுடியின் மேவிற்றுல்
நல்லார்மற் றவர்செய்கை அன்பாலே நயந்ததனை
அல்லாதார் கல்லென்பார் அரனுர்க்கஃ தலராமால். கச

3651 அங்கொருநாள் அருளாலே அயர்ந்துண்ணப் புகுகின்றுர்
"எங்கள்பிரான் தனைஎறியா தயர்ந்தேன்யான்" எனஎழுந்து
பொங்கியதோர் காதலுடன் மிகவிரைந்து புறப்பட்டு
வெங்கரியின் உரிபுனைந்தார் திருமுன்பு மேவினுர். கரு

3652 கோண்டதொரு கல்லெடுத்துக் குறிகூடும் வகைஎறிய
உண்டிவினை ஒழித்தஞ்சி ஓடிவரும் வேட்கையொடும்

பா. வே. 1. மலருந் 2. எய்யாதகன். 2. கடன் புரிவால்.
3. படிகானில்

கண்டருளுங் கண்ணுதலார் கருணைபொழி திருநோக்கால்
தொண்டரெதிர் நெடுவிசும்பில் துணைவியொடுந்1தோன்றினார். ககூ

3657 மழவிடைமேல் எழுந்தருளி வந்ததொரு செயலாலே
கழலடைந்த திருத்தொண்டர் கண்டுகரம் குவித்திறைஞ்சி
விழஅருள்நோக் களித்தருளி மிக்கசிவ லோகத்தில்
பழஅடிமைப் பாங்கருளிப் பரமரெழுந் தருளினார். கஎ

வேறு

3658 ஆதியார் தம்மை நாளுங் கல்லெறிந் தணுகப் பெற்ற
கோதில்சீர்த் தொண்டர் கொண்ட குறிப்பினை அவர்க்கு நல்கும்
சோதியார் அறித லன்றித் துணிவதென் னவர்தாள் சூடித்
தீதிலை நீக்க லுற்றேன் சிறப்புலி யாரைச் செப்பி. கஅ

ஆ திருவிருத்தம் ஈரெண்ணிரண்டு.

சிறப்புலி நாயனார் புராணம்

3659 பொன்னிநீர் நாட்டின் நீடும் பொற்பதி "புவனத் துள்ளோர்
இன்மையால் இரந்து சென்றூர்க் கில்லைஎன் னுதே ஈயும்
தன்மையார்" என்று நன்மை சார்ந்தவே தியரைச் சண்பை
மன்னனூர் அருளிச் செய்த மறைத்திரு2வாக்கூர் அவ்வூர். க

3660 தூமலர்ச் சோலை தோறும்3சுடர்தொடு மாடந் தோறும்
மாமழை முழக்கந் தாழ மறையொலி முழக்கம் ஓங்கும்
பூமலி மறுகில் இட்ட புகைஅகில் தூபந் தாழ
ஓமநல் வேள்விச் சாலை ஆகுதித் தூபம் ஓங்கும். உ

3661 ஆலைசூழ் பூக வேலி அத்திரு வாக்கூர் தன்னில்
ஞாலமார் புகழின் மிக்கார் நான்மறைக் குலத்தி னுள்ளார்
நீலமார் கண்டத் தெண்டோள் நிருத்தர்தந் திருத்தொண் டேற்ற
சீலராய்ச் சாலும் ஈகைத் திறத்தினில் சிறந்த நீரார். ஊ

3662 ஆளும்அங் கணருக் கன்பர் அணைந்தபோ தடியிற் சூழ்ந்து
மூளும்ஆ தரவு பொங்க முன்புகின் றினிய கூறி
நாளும்நல் லமுத மூட்டி நயந்தன எல்லாம் நல்கி
நீளும்இன் பத்துள்4தங்கி நிதிமழை மாரி போன்றார். எ

3663 அஞ்செழுத் தோதி அங்கி வேட்டுநல் வேள்வி எல்லாம்
தஞ்சணி கண்டர் பாதம் நண்ணிடச் செய்து ஞாலத்

ப.வே.1. தொழுவார். 2. வாக்கூர் நாதன். 3 சுடர்விடு. 4. துன்றும்.

தெஞ்சலில் அடியார்க் கென்றும் இடையறு அன்பால் வள்ளல்
தஞ்செயல் வாய்ப்ப ஈசர் தாள்நிழல் தங்கி னாரே. டு

3664 அறத்தினில் மிக்க மேன்மை அந்தணர் ஆக்கூர் தன்னில்
மறைப்பெரு வள்ள லார்வண் சிறப்புலி யார்தாள் வாழ்த்திச்
சிறப்புடைத் திருச்செங் காட்டங் குடியினிற் செம்மை வாய்த்த
விறற்சிறுத் தொண்டர் செய்த திருத்தொழில் விளம்ப லுற்றேன். சு

ஆ திருவிருத்தம் - ஈ,சுசுச.

35 சிறுத்தொண்ட நாயனர் புராணம்

3665 உருநாட்டுஞ் செயல்காமன் ஒழியவிழி பொழிசெந்தீ
வருநாட்டத் திருதுதலார் மகிழ்ந்தருளும் பதிவயலில்
கருநாட்டக் கடைசியர்தங் களிகாட்டுங் காவேரித்
திருநாட்டு வளங்காட்டுஞ் செங்காட்டங் குடியாகும். க

3666 நிலவியஅத் திருப்பதியில் நெடுஞ்சடையார் நீற்றடைவால்
உலகில்வளர் உயிர்க்கெல்லாம் உயர்காவற் றொழில்பூண்டு
மலர்புகழ்மா மாத்திரர்தங் குலம்பெருக வந்துள்ளார்
பலர்புகழுந் திருநாமம் பரஞ்சோதி யாரென்பார். உ

3667 ஆயுள்வே தக்கலையும் அலகில்வட நூற்கலையும்
தூயபடைக் கலத்தொழிலும் துறைகிரம்பப் பயின்றவற்றுல்
பாயுமதக் குஞ்சரமும் பரியும்உகைக் கும்பண்பு
மேயதொழில் விஞ்சையினும் மேதினியில் மேலானூர். ங

3668 உள்ளநிறை கலைத்துறைகள் ஒழிவின்றிப் பயின்றவற்றுல்
தெள்ளிவடித் தறிந்தபொருள் சிவன்கழலிற் செறிவேன்றே
கொள்ளும்உணர் வினில்முன்னே கூற்றுதைத்த கழற்கன்பு
பள்ளமடை யாய்என்றும் பயின்றுவரும் பண்புடையார். ச

3669 ஈசனடி யார்க்கென்றும் இயல்பான பணிசெய்தே
ஆசில்புகழ் மன்னவன்பால் அணுக்கராய் அவற்காகப்
பூசல்முனைக் களிறுகைத்துப் போர்வென்று பொரும்அரசர்
தேசங்கள் பலகொண்டு தேர்வேந்தன் பாற்சிறந்தார். டு

3670 மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்
தொன்னகரந் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்னனஎண் ணிலகவர்ந்தே இகலரசன் முன்கொணர்ந்தார். சு

1. களிறோட்டும் 2. பயின்றுள்ளார் 3 பொய்வென்று
4. பரிநிரையும் 5 இயலரசன்.

3671 கதிர்முடிமன் னனும்இவர்தங் களிற்றுரிமை ஆண்மையினை
அதிசயித்துப் புகழ்ந்துரைப்ப அறிந்தஅமைச் சர்களுரைப்பார்
"மதியணிந்தார் திருத்தொண்டு வாய்த்தவலி யுடைமையினால்
எதிரிவருக் கிவ்வுலகி லில்லை"என எடுத்துரைத்தார். எ

3672 "தம்பெருமான் திருத்தொண்டர்" எனக்கேட்ட தார்வேந்தன்
"உம்பர்பிரான் அடியாரை உணராதே கெட்டொழிந்தேன்
வெம்புகொடும் போர்முனையில் விட்டிருந்தேன்" எனவெருவுற்
"றெம்பெருமான் இதுபொறுக்க வேண்டும்"என இறைஞ்சினன். அ

3673 இறைஞ்சுதலும் முன்னிறைஞ்சி "என்னுரிமைத் தொழிற்கடித்த
திறம்புரிவேன் அதற்கென்னை தீங்கென்ன!" ஆங்கவர்க்கு
நிறைந்தநிதிக் குவைகளுடன் நீடுவிருத் திகள்அளித்தே
அறம்புரிசெங் கோலரசன் அஞ்சலிசெய் துரைக்கின்றான். கூ

3674 "உம்முடைய நிலைமையினை அறியாமை கொண்டுய்த்தீர்
எம்முடைய மனக்கருத்துக் கினிதாக இசைந்(து)உமது
மெய்ம்மைபுரி செயல்விளங்க வேண்டியவா றேசரித்துச்
செம்மைநெறித் திருத்தொண்டு செய்யும்"என விடைகொடுத்தான்.

3675 மன்னவனை விடைகொண்டு தம்பதியில் வந்தடைந்து
பன்னுபுகழ்ப் பரஞ்சோதி யார்தாமும் பனிமதிவாழ்
சென்னியரைக் கணபதீச் சரத்திறைஞ்சித் திருத்தொண்டு
முன்னைநிலை மையில்வழுவா முறைஅன்பிற் செய்கின்றார். கக

3676 வேதகா ரணர்அடியார் வேண்டியமெய்ப் பணிசெய்யத்
தீதில்குடிப் பிறந்ததிரு வெண்காட்டு நங்கைஎனும்
காதல்மனைக் கிழத்தியார் கருத்தொன்ற வரும்பெருமை
நீதிமனை அறம்புரியும் நீர்மையினை நிலைநிற்பார். கஉ

3677 நிறைஇதழித் திருமுடியார் அடியாரை நாடோறும்
முறைமையினில் திருஅமுது முன்னூட்டிப் பின்னுண்ணும்
நிறையுடைய பெருவிருப்பால் நியதியா கக்கொள்ளும்
துறைவழுவா வகையொழுகுந் தூயதொழிற் றலைநின்றார். கங

3678 தூயதிரு அமுதுகனி கன்னல்அறு சுவைக்கறிநெய்
பாயதயிர் பால்இனிய பண்ணியம்உண் நீர்அமுதம்
மேயபடி யால்அமுது செய்விக்க மிசைந்தடியார்
மாயிருஞா லம்போற்ற வரும்இவர்பால் மனமகிழ்ந்தார். கச

3679 சீதமதி அரவினுடன் செஞ்சடைமேற் செறிவித்த
நாதனடி யார்தம்மை நயப்பாட்டு வழிபாட்டால்
மேதகையா ரவர்முன்பு மிகச்சிறிய ராய்அடைந்தார்
ஆதலினற் சிறுத்தொண்டர் எனநிகழ்ந்தார் அவனியின்மேல். கரு

1. எதிரினை 2. நிதி 3. நீர்மையினில் 4. பெருவிருப்பு 5. கைகொள்ளும்படியால்

3684 கண்ணுதலார் கணபதீச் சரத்தின்கட் கருத்தமர
உண்ணிறைஅன் பினிற்பணிசெய் தொழுகுவார் வழுவின்றி
எண்ணில்பெருஞ் சீரடியார் இடைவிடா தமுதுசெய
நண்ணியபே ருவகையுடன் நயந்துறையு நாளின்கண். கசு

3685 நீராருஞ் சடைமுடியார் அருளினால் நிறைதவத்துப்
பேராள ரவர்தமக்குப் பெருகுதிரு மனையறத்தின்
வேராகி விளங்குதிரு வெண்காட்டு நங்கைபால்
சீராள தேவனெனுந் திருமைந்தர் அவதரித்தார். கள

3686 அருமையினிற் றனிப்புதல்வர் பிறந்தபொழு தலங்கரித்த
பெருமையினிற் கிளைகளிப்பப் பெறற்கரிய மணிபெற்று
வருமகிழ்ச்சி தாதையார் மனத்தடங்கா வகைவளரத்
திருமலிநெய் யாடல்விழாச் செங்காட்டங் குடிஎடுப்ப. கஅ

3687 மங்கலநல் லியம்முழக்கம் மறைமுழக்கம் வானளப்ப
அங்கணர்தஞ் சீரடியார்க் களவிறந்த நிதியளித்துத்
தங்கள்மர பினிலுரிமைச் சடங்குதச தினத்தினிலும்
பொங்குபெரு மகிழ்ச்சியுடன் புரிந்துகாப் பணிபுனைந்தார். கசு

3688 ஆர்வகிறை பெருஞ்சுற்றம் அகமலர அளித்தவர்தாம்
பார்பெருகு மகிழ்ச்சியுடன் பருவமுறைப் பாராட்டுச்
சீர்பெருகச் செய்யவளர் திருமகனார் சீறடியில்
தார்வளர்கிண் கிணிஅசையத் தளர்நடையின் பதஞ்சார்ந்தார். உ0

3689 சுருளுமயிர் நுதற்சுட்டி துணைக்காதின் மணிக்குதம்பை
மருவுதிருக் கண்டகாண் மார்பினில்ஐம் படைகையிற்
பொருவில்வயி ரச்சரிகள் பொன்னரைஞாண் புனைசதங்கை
தெருவிலொளி விளங்கவளர் திருவீளையாட் டினிலமர்ந்தார். உக

3690 வந்துவளர் மூவாண்டில் மயிர்வினைமங் கலஞ்செய்து
தந்தையா ரும்பயந்த தாயாரும் தனிச்சிறுவர்
சிந்தைமலர் சொற்றெளிவிற் செழுங்கலைகள் பயிலத்தம்
பந்தமற வந்தவரைப் பள்ளியினில் இருத்தினார். உஉ

3691 அந்நாளிற் சண்பைநகர் ஆண்டகையார் எழுந்தருள
முன்னுக எதிர்கொண்டு கொடுபுகுந்து மூன்றுல்சேர்
பொன்மார்பிற் சிறுத்தொண்டர் புகலிகா வலனுர்தம்
நன்னமச் சேவடிகள் போற்றிசைத்து நலஞ்சிறந்தார். உங

3692 சண்பையர்தம் பெருமானுந் தாங்கரிய பெருங்காதல்
பண்புடைய சிறுத்தொண்ட ருடன்பயின்று மற்றவரை
மண்பரவுந் திருப்பதிகத் தினில்வைத்துச் சிறப்பித்து
நண்பருளி எழுந்தருளத் தாமினிது நயப்புற்றார். உச

பா. 3ப. 1. தலங்கரித்து. 2. மகப்பயந்து. 3 வருகுவிக்க
4 பயந்தமறப் பிறந்துவரை. 5. அமர்ந்தினி.

3689 இத்தன்மை நிகழுநாள் இவர்திருத்தோண் டிருங்கயிலை
அத்தர்திரு வடியிணைக்கீழ்ச் சென்றணைய அவருடைய
மெய்த்தன்மை அன்புநுகர்ந் தருளுதற்கு விடையவர்தாம்
சித்தமகிழ் வயிரவராய்த் திருமலைகின் றணைகின்றார். உடு

3690 மடல்கொண்ட மலர்தழை நெடுஞ்சடையை வனப்பெய்தக்
கடல்மண்டி முகந்தெழுந்த காளமே கச்சுருள்போல்
தொடர்பங்கி சுருண்டிருண்டு தூறிநெறித் தசைந்துசெறி
படர்துஞ்சின் கருங்குஞ்சி கொந்தளமா கப்பரப்பி. உசு

3691 அஞ்சனமஞ் சனஞ்செய்த தணையஅணி கிளர்பம்பை
மஞ்சினிடை இடைஎழுந்த வானமீன் பரப்பென்னப்
புஞ்சநிரை வண்டுதேன் சுரும்புபுடை படர்ந்தார்ப்பத்
துஞ்சினுனித் தனிப்பரப்புந் தும்பைநறு மலர்தோன்ற. உஎ

3692 அருகுதிரு முடிச்செருகும் அந்திஇளம் பிறைதன்னைப்
பெருகுசிறு மதியாக்கிப் பெயர்த்துச்சாத் தியதென்ன
விரிசுடர்ச்சேம் பவளஒளி வெயில்விரிக்கும் விளங்குசுடர்த்
திருநுதன்மேல் திருநீற்றுத் தனிப்பொட்டுத் திகழ்ந்திலங்க. உஅ

3693 வேவ்வருக்கன் மண்டலமும் விளங்குமதி மண்டலமும்
அவ்வனற்செம் மண்டலமும் உடன்அணைந்த தெனஅழகை
வவ்வுதிருக் காதின்மணிக் குழைச்சங்கு வளைத்ததனுள்
செவ்வரத்த மலர்செறித்த திருத்தோடு புடைதிறக்க. உக

3694 களங்கொள்விடம் மறைத்தருளக் கடலமுதக் குமிழிநிரைத்
துளங்கொளிவெண் திரட்கோவைத் தூயவடம் அணிந்ததென
உளங்கொள்பவர் கரைந்துடலும் உயிரும்உரு கப்பெருக
விளங்குதிருக் கழுத்தினிடை வெண்பளிங்கின் வடந்திகழ. ஙஎ

3695 செம்பரிதி கடலளித்த செக்கரொளி யினைஅந்திப்
பம்புமிருள் செறிபொழுது படர்ந்தணைந்து சூழ்வதெனத்
தம்பழைய கரியுரிவை கொண்டுசமைத் ததுசாத்தும்
அம்பவளத் திருமேனிக் கஞ்சுகத்தின் அணிவிளங்க. ஙக

3696 மிக்கேழும்அன் பர்கள்அன்பு திருமேனி விளைந்ததென
அக்குமணி யாற்சன்ன வீரமும்ஆ ரமும்வடமும்
கைக்கணிகொள் வளைச்சரியும் அரைக்கடிசூத் திரச்சரியும்
தக்கதிருக் காற்சரியும் சாத்தியஞண் சுடர்தயங்க. ஙஉ

3697 போருவில்திருத் தொண்டர்க்குப் புவிமேல்வந் தருள்புரியும்
பெருகருளின் திறங்கண்டு "பிரானருளே பேணுவீர்!
வரும்அன்பின் வழிநிற்பீர்" எனமறைவூண் டறைவனபோல்
திருவடிமேல் திருச்சிலம்பு திசைமுழுதுஞ் செலஒலிப்ப. ஙங

பா. வே. 1. அடைத்து நி. 2. கடல்ஒளித்

3697 அயன்கபா லந்தரித்த இடத்திருக்கை யால்அணைத்த
வயங்கொளிமூ விலைச்சூலம் மணித்திருத்தோள் மிசைப்பொலியத்
தயங்குசுடர் வலத்திருக்கைத் தமருகத்தின் ஒலிதழைப்பப்
பயன்தவத்தால் பெறும்புவியும் பாததா மரைசூட. நக

3699 அருள்பொழியுந் திருமுகத்தில் அணிமுறுவல் நிலவெறிப்ப
மருள்பொழிமும் மலஞ்சிதைக்கும் வடிச்சூலம் வெயிலெறிப்பப்
பொருள்பொழியும் பெருகன்பு தழைத்தோங்கிப் புவிஏத்தத்
தெருள்பொழிவண் தமிழ்நாட்டுச் செங்காட்டங் குடிச்சேர்ந்தார். நஙி

3700 தண்டாத தொருவேட்கைப் பகியுடையார் தமைப்போலக்
கண்டாரைச் சிறுத்தொண்டர் மனைவினவிக் கடிதணைந்து
"தொண்டானர்க் கெந்நாளுஞ் சோறளிக்குந் திருத்தொண்டர்
வண்டார்பூந் தாரார்இம் மனைக்குள்ளா ரோ?" என்ன. நகூ

3701 "வந்தணைந்து வினவுவார் மாதவரே யாம்" என்று
சந்தனமாந் தையலார் முன்வந்து தாள்வணங்கி
"அந்தமில்சீர் அடியாரைத் தேடிஅவர் புறத்தணைந்தார்
எந்தமைஆ ளுடையவரே அகத்துளெழுந் தருளும்" என. நஎ

3702 மடவரலை முகம்நோக்கி "மாதரார் தாமிருந்த
இடவகையிற் றனிப்புகுதோம்" என்றருள அதுகேட்டு
விடஅகல்வார் போலிருந்தார் எனவெருவி விரைந்துமனைக்
கடனுடைய திருவேண்காட் டம்மைகடைத் தலைஎய்தி. நஅ

3703 "அம்பலவர் அடியாரை அமுதுசெய்விப் பார்இற்றைக்
கெம்பெருமான் யாவரையுங் கண்டிலர்தே டிப்போனார்
வம்பெனநீர் எழுந்தருளி வருந்திருவே டங்கண்டால்
தம்பெரிய பேறென்றே மிகமகிழ்வர் இனித்தாழார். நகூ

3704 "இப்பொழுதே வந்தணைவர் எழுந்தருளி இரும்" என்ன
"ஒப்பில்மனை யறம்புரப்பீர்! உத்தரா பதியுள்ளோம்
செப்பருஞ்சீர்ச் சிறுத்தொண்டர் தமைக்காணச் சேர்ந்தனம்யாம்
எப்பரிசும் அவரொழிய இங்கிரோம்" என்றருளி. சூ

3705 கண்துதலிற் காட்டாதார் "கணபதீச் சரத்தின்கண்
வண்ணமலர் ஆத்தியின்கீழ் இருக்கின்றோம் மற்றவர்தாம்
நண்ணிஞல் நாமிருந்த பரிசுரைப்பீர்" என்றருளி
அண்ணலார் திருவாத்தி அணைந்தருளி அமர்ந்திருந்தார். சக

வேறு

3706 நீரார் சடையான் அடியாரை நேடி எங்குங் காணாது
சீரார் தவத்துச் சிறுத்தொண்டர் மீண்டுஞ் செல்வ மனைஎய்தி

ஆரா இன்ப மனைவியார்க் கியம்பி அழிவெய் திடஅவரும்
பாரா தரிக்குந் திருவேடத் தொருவர் வந்த படிபகர்ந்தார். சஉ

3705 "அடியேன் உய்ந்தேன் எங்குற்றீர் உரையாய்?" என்ன அவர்மொழிவார்
"வடிசேர் சூல கபாலத்தார் 'வடதே சத்தோம்' என்றுர்வண்
துடிசேர் கரத்துப் பயிரவர்யாஞ் சொல்ல இங்கும் இராதேபோய்க்
கடிசேர் திருவாத் தியின்நிழற்கீழ் இருந்தார் கணப தீச்சரத்து." சங

3706 என்று மனைவி யார்இயம்ப எழுந்த விருப்பால் விரைந்தெய்திச்
சென்று கண்டு திருப்பாதம் பணிந்து நின்றுர் சிறுத்தொண்டர்
நின்ற தொண்டர் தமைநோக்கி "நீரோ பெரிய சிறுத்தொண்டர்"
என்று திருவாய் மலர்ந்தருள இறைவர் தம்மைத் தொழுதுரைப்பார்.

3707 "பூதி அணிசா தனத்தவர்முன் போற்றப் போதேன் ஆயிடினும்
நாதன் அடியார் கருணையினுல் அருளிச் செய்வர் நான்என்று
கோதில் அன்பர் தமைஅமுது செய்விப் பதற்குக் குலப்பதியில்
காத லாலே தேடியும்முன் காணேன் தவத்தால் உமைக்கண்டேன்."

3708 "அடியேன் மனையில் எழுந்தருளி அமுது செய்ய வேண்டும்"என
நெடியோன் அறியா அடியார்தாம் "நிகழுந் தவத்தீர்! உமைக்காணும்
படியால் வந்தோம் உத்தமா பதியோம் எம்மைப் பரிந்தூட்ட
முடியா துமக்குச் செய்கைஅரி தொண்ணு" தென்று மொழிந்தருள.

3709 "எண்ணு தடியேன் மொழியேன்,நீர் அமுது செய்யும் இயல்பதனைக்
கண்ணுர் வேடம் நிறைதவத்தீர்! அருளிச் செய்யுங் கடிதமைக்கத்
தண்ணுர் இதழி முடியார்தம் அடியார் தலைப்பட் டால்தேட
ஒண்ணு தனவும் உளவாகும் அருமை இல்லை" எனஉரைத்தார். சள

3710 "அரிய தில்லை" எனக்கேட்ட பொழுதில் அழகு பொழிகின்ற
பெரிய பயிர வக்கோலப் பெருமான் அருளிச் செய்வார்"யாம்
பரியுந் தொண்டீர்! மூவிருது கழித்தாற் பசுவீழ்த் திடஉண்ப
தரிய நாளும் அதற்கின்றுல் ஊட்ட அரிதாம் உமக்"கென்றுர். சஅ

3711 "சால நன்று! முந்நிரையும் உடையேன் தாழ்விங் கெனக்கில்லை
ஆலம் உண்டார் அன்பர்உமக் கமுதாம் பசுத்தான் இன்னதென
ஏல அருளிச் செயப்பெற்றுல் யான்போய் அமுது கடிதமைத்துக்
காலந் தப்பா மேவருவேன்" என்று மொழிந்து கைதொழுதார். சக

3712 பண்பு மிக்க சிறுத்தொண்டர் பரிவு கண்டு பயிரவரும்
"நண்பு மிக்கீர்! நாம்உண்ணப் படுக்கும் பசுவும் நரப்பசுவாம்
உண்ப தஞ்சு பிராயத்துள் உறுப்பில் மறுவின் றேல்இன்னம்
புண்செய் நோவில் வேலெறிந்தாற் போலும் புகல்வ தொன்"றென்றுர்.

பா.வே:1. அன்பரின் 2. பிராயத்தில்.

3715 "யாதும் அரிய தில்லைஇனி ஈண்ட அருளிச் செய்யும்" என
நாதன் தானும் "ஒருகுடிக்கு நல்ல சிறுவன் ஒருமகனைத்
தாதை அரியத் தாய்பிடிக்கும் பொழுதில் தம்மில் மனமுவக்தே
ஏதம் இன்றி அமைத்தகறி யாம்இட் டேம்ப" தெனமொழிந்தார். நுக

3716 அதுவும் முனிவர் மொழிந்தருளக் கேட்ட தொண்டர் "அடியேனுக்
கிதுவும் அரிதன்(று) எம்பெருமான் அமுது செய்யப் பெறில்" என்று
கதுமென் விரைவில் அவர்இசையப் பெற்றுக் களிப்பாற் காதலொடு
மதுமென் கமல மலர்ப்பாதம் பணிந்து மனையில் வந்தணைந்தார். நுஉ

3717 அன்பு மிக்க பெருங்கற்பின் அணங்கு திருவெண் காட்டம்மை
முன்பு வந்து சிறுத்தொண்டர் வரவு நோக்கி முன்னின்றே
இன்பம் பெருக மலர்ந்தமுகங் கண்டு பாத மிசைஇறைஞ்சிப்
பின்பு கணவர் முகநோக்கிப் பெருகுந் தவத்தோர் செயல்வினவ. நுங

3718 வள்ள லாரும் மனையாரை நோக்கி "வந்த மாதவர்தாம்
உள்ளம் மகிழ அமுதுசெய்ய இசைந்தார் குடிக்கோர் சிறுவனுமாய்க்
கொள்ளும் பிராயம் ஐந்துளனுய் உறுப்பிற் குறைபா டின்றித்தாய்
பிள்ளை பிடிக்க உவந்துபிதா அரிந்து சமைக்கப் பெறின்" என்றார். நுச

3719 அரிய கற்பின் மனைவியார் அவரை நோக்கி உரைசெய்வார்
"பெரிய பயிர வத்தொண்டர் அமுது செய்யப் பெறுவதற்கிங்
குரிய வகையால் அமுதமைப்போம் ஒருவ னுகி ஒருகுடிக்கு
வருமச் சிறுவன் தனைப்பெறுமா றெவ்வா?" றென்று வணங்குதலும்.

3720 மனைவி யார்தம் முகநோக்கி "மற்றித் திறத்து மைந்தர்தமை
நினைவு நிரம்ப நிதிகொடுத்தால் தருவா ருளரே நேர்நின்று
தனையன் தன்னைத் தந்தைதாய் அரிவார் இல்லைத் தாழாமே
எனஇங் குய்ய நீபயந்தான் தன்னை அழைப்போம் யாம்" என்றார்.

3721 என்று கணவர் கூறுதலும் அதனுக் கிசைந்"தெம் பிரான்தொண்டர்
இன்று தாழா தமுதுசெய்யப் பெற்றிங் கவர்தம் மலர்ந்தமுகம்
நன்று காண்ப" தெனநயந்து "நம்மைக் காக்க வரும்மணியைச்
சென்று பள்ளி யினிற்கொண்டு வாரும்" என்றார் திருவனையார். நுள

3722 காதல் மனையார் தாங்கூறக் கணவ னருங் காதலனை
ஏதம் அகலப் பெற்றபே றெல்லாம் எய்தி னார்போல
நாதர் தமக்கங் கமுதாக்க நறுமென் குதலை மொழிப்புதல்வன்
ஓத அணைந்த பள்ளியினில் உடன்கொண் டெய்தக் கடிதகன்றார். நுஅ

3723 பள்ளி யினிற்சென் றெய்துதலும் பாதச் சதங்கை மணியொலிப்பப்
பிள்ளை ஓடி வந்தெதிரே தழுவ எடுத்துப் பியலின்மேல்
கொள்ள அணைத்துக் கொண்டுமீண் டில்லம் புகுதக் குலமாதர்
வள்ள லார்தம் முன்சென்று மைந்தன் தன்னை எதிர்வாங்கி. நுகூ

சூஞ்சி திருத்தி முகந்துடைத்துக் கொட்டை அரைநாண் துகள்நீக்கி
மஞ்சள் அழிந்த அதற்கிரங்கி மையுங் கண்ணின் மருங்கொதுக்கிப்
பஞ்சி அஞ்சும் மெல்லடியார் பரிந்து திருமஞ் சனமாட்டி
எஞ்சல் இல்லாக் கோலஞ்செய் தெடுத்துக் கணவர் கைக்கொடுத்தார்.

அச்சம் எய்திக் கறியமுதாம் என்னும் அதனுல் அரும்புதல்வன்
உச்சி மோவார் மார்பின்கண் அணைத்தே முத்தந் தாமுண்ணூர்
பொச்சம் இல்லாத் திருத்தொண்டர் புனிதர் தமக்குக் கறிஅமைக்க
மெச்சு மனத்தால் அடுக்களையின் மேவார் வேறு கொண்டணைவார்.

ஒன்று மனத்தார் இருவர்களும் 'உலகர் அறியார்' எனமறைவில்
சென்று புக்குப் பிள்ளைதனைப் பெற்ற தாயார் செழுங்கலங்கள்
நன்று கழுவிக் கொடுசெல்ல நல்ல மகனை எடுத்துலகை
வென்ற தாதை யார்தலையைப் பிடிக்க விரைந்து மெய்த்தாயர். சூஉ

இனிய மழலைக் கிங்கிணிக்கால் இரண்டும் மடியின் புடைஇடிக்கிக்
கனிவாய் மைந்தன் கைஇரண்டும் கையாற் பிடிக்கக் காதலனும்
'நனிநீ டுவகை யுறுகின்றார்' என்று மகிழ்ந்து நகைசெய்யத்
தனிமா மகனைத் தாதையார் கருவி கொண்டு தலையரிவார். சூங

'போருவில் பெருமைப் புத்திரன்மெய்த் தன்மை அளித்தான்' எனப்பொலிந்து
மருவு மகிழ்ச்சி எய்தஅவர் மனைவி யாருங் ''கணவனூர்
அருமை உயிரை எனக்களித்தான்'' என்று மிகவும் அகமலர
இருவர் மனமும் பேருவகை எய்தி அரிய வினைசெய்தார். சூச

''அறுத்த தலையின் இறைச்சிதிரு அமுதுக் காகா'' தெனக்கழித்து
மறைத்து நீக்கச் சந்தனத்தார் கையிற் கொடுத்து மற்றைஉறுப்(பு)
இறைச்சி எல்லாங் கொத்திஅறுத் தெலும்பு மூளை திறந்திட்டுக்
கறிக்கு வேண்டும் பலகாயம் அரைத்துக் கூட்டிக் கடிதமைப்பார். சுஞ

மட்டு விரிபூங் குழல்மடவார் அடுப்பில் ஏற்றி மனமகிழ்ந்தே
அட்ட கறியின் பதம்அறிந்தங் கிழிச்சி வேறூர் அருங்கலத்துப்
பட்ட நறையால் தாளித்துப் பலவும் மற்றுங் கறிசமைத்துச்
சட்ட விரைந்து போனகமும் சமைத்துக் கணவர் தமக்குரைத்தார்.

''உடைய நாதர் அமுதுசெய உரைத்த படியே அமைத்தவதற்
கடையும் இன்பம் மூன்னையிலும் ஆர்வம் பெருகிக் களிகூர
விடையில் வருவார் தொண்டர்தாம் விரைந்து சென்று மென்மலரின்
புடைவண் டறையும் ஆத்தியின்கீழ் இருந்த புனிதர் முன்சென்றார்.

அண்ணல் திருமுன்(பு) அணைந்திறைஞ்சி அன்பர் மொழிவார்''அடியேன்பால்
நண்ணி நீரிங் கமுதுசெய வேண்டும் என்று நான்பரிவு
பண்ணி னேனுய்ப் பசித்தருள த் தாழ்த்த தெனினும் பணிசமைத்தேன்
எண்ணம் வாய்ப்ப எழுந்தருள வேண்டும்''என்றங் கெடுத்துரைப்பார்.

3733
"இறையுந் தாழா தெழுந்தருளி அமுது செய்யும்" என்றிறைஞ்சக்
கறையும் கண்டத் தினில்மறைத்துக் கண்ணும் முதலிற் காட்டாதார்
"நிறையும் பெருமைச் சிறுத்தொண்டீர்! போதும்" என்ன நிதிஇரண்டும்
குறைவன் ஒருவன் பெற்(று)உவந்தாற் போலக் கொண்டு மனைபுகுந்தார்.

3734
வந்து புகுந்து திருமனையில் மனைவி யார்தாம் மாதவரை
முந்த எதிர்சென் றடிவணங்கி முழுதும் அழகு செய்தமனைச்
சந்த மலர்மா லிகள்முத்தின் தாமம் நாற்றித் தவிசடுத்த
கந்த மலர்ஆ சனங்காட்டிக் கமழ்நீர்க் கரகம் எடுத்தேந்த. ஏ

3735
தூய நீரால் சிறுத்தொண்டர் சோதி யார்தங் கழல்விளக்கி
ஆய புனிதப் புனல்தங்கள் தலைமேல் ஆரத் தெளித்தின்பம்
மேய இல்லம் எம்மருங்கும் வீசி விரைமென் மலர்சாந்தம்
ஏயுந் தூப தீபங்கள் முதற்பூ சனைசெய் திறைஞ்சுவார். எக

3736
பனிவெண் திங்கள் சடைவிரித்த பயில்பூங் குஞ்சிப் பயிரவராம்
புனிதர் தம்மைப் போனகமும் கறியும் படைக்கும் படிபொற்பின்
வனிதை யாருங் கணவரும்முன் வணங்கிக் கேட்ப மற்றவர்தாம்
"இனிய அன்ன முடன்கறிகள் எல்லாம் ஒக்கப் படைக்க"என. எஉ

3737
பரிசு விளங்கப் பரிகலமும் திருத்திப் பாவா டையில்ஏற்றித்
தெரியும் வண்ணஞ் செஞ்சாலிச் செழும்போ னகமும் கறிஅமுதும்
வரிசை யினில்முன் படைத்தெடுத்து மன்னும் பரிக லக்கான்மேல்
விரிவெண் துகிலின் மிசைவைக்க விமலர் பார்த்தங் கருள்செய்வார்.

3738
"சோன்ன முறையிற் படுத்தபசுத் தொடர்ந்த உறுப்பெல் லாங்கொண்டு
மன்னு சுவையிற் கறியாக்கி மாண அமைத்தீ ரே"என்ன
அன்னம் அனையார் "தலைஇறைச்சி அமுதுக் காகா தெனக்கழித்தோம்"
என்ன "அதுவுங் கூடநாம் உண்ப" தென்றார் இடர்தீர்ப்பார். எச

3739
சிந்தை கலங்கிச் சிறுத்தொண்டர் மனையா ரோடுந் திகைத்தயரச்
சந்த னத்தார் எனுந்தாதி யார்தாம் "அந்தத் தலைஇறைச்சி
வந்த தொண்டர் அமுதுசெயும் பொழுது நினைக்க வருமென்றே
முந்த அமைத்தேன் கறிஅமு"தென் றெடுத்துக் கொடுக்க முகமலர்ந்தார்.

3740
வாங்கி மகிழ்ந்து படைத்ததற்பின் வணங்குஞ் சிறுத்தொண் டரைநோக்கி
"ஈங்கு நமக்குத் தனியுண்ண ஒண்ணு தீசன் அடியார்இப்
பாங்கு நின்றார் தமைக்கொணர்வீர்" என்று பரமர் பணித்தருள
எங்கிக் "கெட்டேன் அமுதுசெய இடையூ றிதுவோ" எனநினைவார்.

3741
அகத்தின் புறத்துப் போய்அருளால் எங்கும் காணார் அழிந்தணைந்து
முகத்தில் வாட்டம் மிகப்பெருகப் பணிந்து முதல்வர்க் குரைசெய்வார்
"இகத்தும் பரத்தும் இனியாரைக் காணேன் யானுந் திருவீறு
சகத்தில் இடுவார் தமைக்கண்டே இடுவேன்" என்று தாழ்ந்திறைஞ்ச.

பா. பே. 1. பன்னனைடன். 2. அகத்தும் புறத்தும்.

"உம்மைப் போல நீறிட்டார் உளரோ! உண்பீர் நீர்" என்று
செம்மைக் கற்பில் திருவெண்காட் டம்மை தம்மைக் "கலந்திருத்தி
வெம்மை இறைச்சி சோறிதனில் மீட்டுப் படையும்" எனப்படைத்தார்
தம்மை ஊட்ட வேண்டிஅவர் உண்ணப் புகலுந் தடுத்தருளி. எஅ

"ஆறு திங்கள் ஒழிந்துண்போம் உண்ணும் அளவுந் தரியாது
சோறு காளும் உண்பீர்முன் உண்ப தென்?நம் முடன்துய்ப்ப
மாறின் மகவு பெற்றீரேல் மைந்தன் தன்னே அழையும்"என
ஈறும் முதலும் இல்லாதார்க் "கிப்போ துதவான் அவன்"என்றார்.

"நாமிங் குண்ப தவன்வந்தால் நாடி அழையும்" எனநம்பர்
தாமங் கருளிச் செயத்தரியார் "தலைவர் அமுது செய்தருள
யாமிங் கென்செய் தாலாகும்?" என்பார் விரைவுற் றெழுந்தருளால்
பூமென் குழலார் தம்மோடும் புறம்போய் அழைக்கப் புகும்பொழுது.

வையம் நிகழுஞ் சிறுத்தொண்டர் "மைந்தா வருவாய்" எனஅழைத்தார்
தைய லாருந் தலைவர்பணி தலைநிற் பாராய்த் தாம்அழைப்பார்
"செய்ய மணியே! சீராளா! வாராய் சிவனார் அடியார்யாம்
உய்யும் வகையால் உடனுண்ண அழைக்கின் றார்"என் றேலமிட.

பரமர் அருளால் பள்ளியினின் றோடி வருவான் போல்வந்த
தரமில் வனப்பின் தனிப்புதல்வன் தன்னே எடுத்துத் தழுவித்தங்
காமுன் அணைத்துக் கணவனார் கையிற் கொடுப்பக் களிகூர்ந்தார்[வால்
"புரம்பூன் றெரித்தார் திருத்தொண்டர் உண்ணப் பெற்றேம்" எனும்போலி

வந்த மகனைக் கடிதிற்கொண் டமுது செய்விப் பான்வந்தார்
மூந்த வேஅப் பயிரவராம் முதல்வர் அங்கண் மறைந்தருளச்
சிந்தை கலங்கிக் காணாது திகைத்தார் வீழ்ந்தார் தெருமந்தார்
வெந்த இறைச்சிக் கறிஅமுதும் கலத்திற் காணார் வெருவுற்றார். அஈ

"செய்ய மேனிக் கருங்குஞ்சிச் செழுங்கஞ் சுகத்துப் பயிரவர்யாம்
உய்ய அமுது செய்யாதே ஒளித்த தெங்கே?" எனத்தேடி.
மையல் கொண்டு புறத்தணைய மறைந்த அவர்தாம் மலைபயந்த
தைய லோடுஞ் சரவணத்துத் தனய ரோடுந் தாம்அணைவார். அச

தனிவெள் விடைமேல் நெடுவிசும்பில் தலைவர் பூத கணநாதர்
முனிவர் அமரர் விஞ்சையர்கள் முதலா யுள்ளோர் போற்றிசைப்ப
இனிய கறியும் திருஅமுதும் அமைத்தார் காண எழுந்தருளிப்
பனிவெண் திங்கள் முடிதுளங்கப் பரந்த கருணை நோக்களித்தார்.

அன்பின் வென்ற தொண்டரவர்க் கமைந்த மனைவி யார்மைந்தர்
முன்பு தோன்றும் பெருவாழ்வை முழுதுங் கண்டு பரவசமாய்
என்பும் மனமும் கரைந்துருக விழுந்தார் எழுந்தார் ஏத்தினார்
பின்பு பரமர் தகுதியினாற் பெரியோ ரவருக் கருள்புரிவார். அசு

கோன்றை வேணி யார்தாமும் பாகங் கொண்ட குலக்கொடியும்
வென்றி நெடுவேல் மைந்தருந்தம் விரைப்பூங் கமலச் சேவடிக்கீழ்
நின்ற தொண்டர் மனையியார் நீடு மகனார் தாதியார்
என்றும் பிரியா தேஇறைஞ்சி இருக்க உடன்கொண் டேகினார். அள

ஆறு முடிமேல் அணிந்தவருக் கடியார் என்று கறிஅமுதா
ஊறி லாத தனிப்புதல்வன் தன்னை அரிந்தங் கமுதூட்டப்
பேறு பெற்றார் சேவடிகள் தலைமேற் கொண்டு பிறஉயிர்கள்
வேறு கழறிற் றறிவார்தம் பெருமை தொழுது விளம்புவாம். அஅ

ஆ திருவிருத்தம் ங,எடுஉ.

37. கழறிற்றறிவார் நாயனார் புராணம்

மாவீற் றிருந்த பெருஞ்சிறப்பின் மன்னுந் தொன்மை மலைநாட்டுப்
பாவீற் றிருந்த பல்புகழார் பயிலும் இயல்பிற் பழம்பதிதான்
சேவீற் றிருந்தார் திருவஞ்சைக் களமும் நிலவிச் சேரர்குலக்
கோவீற் றிருந்து முறைபுரியும் குலக்கோ மூதூர் கொடுங்கோளூர். க

காலை எழும்பல் கலையினெலி களிற்றுக் கன்று வடிக்குமொலி
சோலை எழுமென் சுரும்பினெலி துரகச் செருக்காற் சுலவுமொலி
பாலை விபஞ்சி பயிலுமொலி பாட லாடல் முழவினெலி
வேலை யொலியை விழுங்கிஎழு விளங்கி யோங்கும் வியப்பினதால். உ

மிக்க செல்வம் மனைகள்தொறும் விளையும் இன்பம் விளங்குவன
பக்க நெருங்கு சாலைதொறும் பயில்சட் டறங்கள் பல்குவன
தக்க அன்பர் மடங்கள்தொறும் சைவ மெய்ம்மை சாற்றுவன
தொக்க வளங்கொள் இடங்கள்தொறும் அடங்க நிதியம் துவன்றுவன.

வேத நெறியின் முறைபிறழா மிக்க ஒழுக்கந் தலைநின்ற
சாதி நான்கு நிலைதழைக்குந் தன்மைத் தாகித் தடமதில்சூழ்
சூத வகுள சரளநிரை துதையுஞ் சோலை வளநகர்தான்
கோதை அரசர் மகோதைஎனக் குலவு பெயரும் உடைத்துலகில். ச

முருகு விரியும் மலர்ச்சோலை மூதூ ரதன்கண் முறைமரபின்
அருகி அழியுங் கலிநீக்கி அறங்கொள் சைவத் திறந்தழைப்பத்
திருகு சினவெங் களியானைச் சேரர் குலமும் உலகுஞ்செய்
பெருகு தவத்தால் அரனருளால் பிறந்தார் பெருமாக் கோதையார். ஞ

1. பல்புகழின. 2. விளைப்பு பொருள்மை.
3 விளையும். 4 பயினெட் டறங்கள். 5 பயிலுவன.
6. மெனனை.

திருமா நகரந் திருஅவதா ரஞ்செய் விழவின் சிறப்பினுல்
வருமா களிகூர் நெய்யாடல் எடுப்ப வான மலர்மாரி
தருமா விசும்பின் மிகநெருங்கத் தழங்கும் ஒலிமங் கலந்தழைப்பப்
பெருமா நிலத்தில் எவ்வுயிரும் பெருகு மகிழ்ச்சி பிறங்கினவால். சூ

மண்மேற் சைவ நெறிவாழ வளர்ந்து முன்னை வழிஅன்பாற்
கண்மேல் விளங்கு நெற்றியினர் கழலே பேணுங் கருத்தினராய்
உண்மே வியஅன் பினராகி உரிமை அரசர் தொழில்புரியார்
தெண்ணீர் முடியார் திருவஞ்சைக் களத்தில் திருத்தொண் டேபுரிவார்.

'உலகின் இயல்பும் அரசியல்பும் உறுதி யல்ல' எனஉணர்வார்
புலரி எழுந்து புனல்மூழ்கிப் புனித வெண்ணீற் றினும்மூழ்கி
நிலவு திருநக் தனவனத்து நீடும் பணிகள் பலசெய்து
மலரு முகையும் கொணர்ந்துதிரு மாலை சாத்த மகிழ்ந்தமைத்து. அ

திருமஞ் சனமும் கொணர்ந்துதிரு அலகும் இட்டுத் திருமெழுக்கு
வரும்அன் புடன்இன் புறச்சாத்தி மற்றும் உள்ள திருப்பணிகள்
பெருமை பிறங்கச் செய்தமைத்துப் பேணும் விருப்பில் திருப்பாட்டும்
ஒருமை நெறியின் உணர்வுவர ஓதிப் பணிந்தே ஒழுகுநாள். கூ

நீரின் மலிந்த கடலகழி நெடுமால் வரையின் கொடிமதில்சூழ்
சீரின் மலிந்த திருநகர மதனிற் செங்கோற் பொறையனெனும்
காரின் மலிந்த கொடைநிழல்மேற் கவிக்குங் கொற்றக் குடைநிழற்கீழ்த்
தாரின் மலிந்த புயத்தரசன் தரணி நீத்துத் தவஞ்சார்ந்தான். கo

வந்த மரபின் அரசளிப்பான் வனஞ்சார் தவத்தின் மருவியபின்
சிந்தை மதிநூல் தேரமைச்சர் சிலநாள் ஆய்ந்து தெளிந்தநெறி
மூந்தை மரபில் முதல்வர்திருத் தொண்டு முயல்வார் முதற்றாக
இந்து முடியார் திருவஞ்சைக் களத்தில் அவர்பால் எய்தினார். கக

எய்தி அவர்தம் எதிரிறைஞ்சி "இருந்தண் சாரல் மலைநாட்டுச்
செய்தி முறைமை யால்உரிமைச் செங்கோல் அரசு புரிவதற்கு
மைதீர் நெறியின் முடிசூடி அருளும் மரபால் வந்த"தெனப்
பொய்தீர் வாய்மை மந்திரிகள் போற்றிப் புகன்ற பொழுதின்கண். கஉ

" இன்பம் பெருகுந் திருத்தொண்டுக் கிடையூ றுக இவர்மொழிந்தார்
அன்பு நிலைமை வழுவாமை அரசு புரக்க அருளுண்டேல்
என்பும் அரவும் புனைந்தாரை இடைபெற் றறிவேன்" எனப்புக்கு
முன்பு தொழுது விண்ணப்பஞ் செய்தார், முதல்வர் அருளினுல். கங

மேவும் உரிமை அரசளித்தே விரும்பு காதல் வழிபாடும்
யாவும் யாரும் கழறினவும் அறியும் உணர்வும் ஈறில்லாத்
தாவில் விறலும் தண்டாத கொடையும் படைவா கனமுதலாம்
காவல் மன்னர்க் குரியனவும் எல்லாங் கைவந் துறப்பெற்றார். கச

3767
ஆன அருள்கொண் டஞ்சலிசெய் திறைஞ்சிப் புறம்போந் தரசளித்தல்
ஊனம் ஆகுந் திருத்தொண்டுக் கெனினும் உடையான் அருளாலே
மேன்மை மகுடந் தாங்குதற்கு வேண்டும் அமைச்சர்க் குடன்படவும்
மான அமைச்சர் தாள்பணிந்தவ் வினைமேற் கொண்டு மகிழ்ந்தெழுந்தார்.

3768
உரிமை நாளில் ஓரைநலன் எய்த மிக்க உபகரணம்
பெருமை சிறக்க வேண்டுவன எல்லாம் பிறங்க மங்கலஞ்செய்(து)
இருமை உலகுக் கொருமைமுடி கவித்தார் எல்லா உயிரும்மகிழ்
தரும நிலைமை அறிந்துபுவி தாங்குங் கழறிற் றறிவார்தாம். கசு

3769
தம்பி ரானுர் கோயில்வலங் கொண்டு திருமுன் தாழ்ந்தெழுந்து
கும்ப யானை மேல்கொண்டு கொற்றக் குடையுஞ் சாமரையும்
கம்பும் உரிமை யவர்தாங்க நலங்கொள் நகர்சூழ் வலங்கொள்வார்
மொய்ம்பில் உவரின் போதிசுமந்தோர் வண்ணன் முன்னே வரக்கண்டார். கஎ

3770
மழையிற் கரைந்தங் குவர்ஊறி மேனி வெளுத்த வடிவினுல்
"உழையிற் பொலிந்த திருக்கரத்தார் அடியார் வேடம்" என்றுணர்ந்தே
இழையிற் சிறந்த ஓடைநுதல் யானைக் கழுத்தின் நின்றிழிந்து
விழைவிற் பெருகுங் காதலினுல் விரைந்து சென்று கைதொழுதார்.

3771
சேரர் பெருமான் தொழுக்கண்டு சிந்தை கலங்கி முன்வணங்கி
"யாரென் றடியே னைக்கொண்ட தடியேன் அடிவண் ணுன்"என்னச்
சேரர் பிரானும் "அடிச்சேரன் அடியேன்" என்று "திருநீற்றின்
வார வேடம் நினைப்பித்தீர் வருந்தா தேகும்" எனமொழிந்தார். கக

3772
மன்னர் பெருமான் திருத்தொண்டு கண்டு மதிநீ டமைச்சமெலாம்
சென்னி மிசைஅஞ் சலிசெய்து போற்றச் சினமால் களிறேறி
மின்னு மணிப்பூண் கொடிமாட வீதி மூதூர் வலங்கொண்டு
பொன்னின் மணிமா ளிகைவாயில் புக்கார் புனைமங் கலம்பொலிய. உ0

3773
யானை மிசைநின் றிழிந்தருளி இலங்கும் மணிமண் டபத்தின்கண்
மேன்மை அரியா சனத்தேறி விளங்குங் கொற்றக் குடைநிழற்றப்
பானல் விழியார் சாமரைமுன் பணிமா றப்பன் மலர்தூவி
மான அரசர் போற்றிடவீற் றிருந்தார் மன்னர் பெருமானுர். உக

3774
உலகு புரக்குங் கொடைவளவர் உரிமைச் சேழியர் உடன்கூட
நிலவு பெருமுக் கோக்களாய் நீதி மனுநூல் நெறிநடத்தி
அலகில் அரசர் திறைகொணர அகத்துப் புறத்தும் பகையறுத்து
மலருந் திருநீற் றொளிவளர மறைகள் வளர மண்ணளிப்பார். உஉ

3775
"நீடும் உரிமைப் பேரரசால் நிகழும் பயனும் நிறைதவமும்
தேடும் பொருளும் பெருந்துணையும் தில்லைத் திருச்சிற் றம்பலத்துள்
ஆடுங் கழலே" எனத்தெளிந்த அறிவால் எடுத்த திருப்பாதம்
கூடும் அன்பில் அர்ச்சனைமேற் கொண்டார் சேரர் குலப்பெருமாள்.

பா. பே. அலகினர்ஞான. உலைக.

வாசத் திருமஞ் சனம்பள்ளித் தாமஞ் சாந்தம் மணித்தூபம்
தேசிற் பெருகுஞ் செழுந்தீபம் முதலா யினவுந் திருஅமுதும்
ஈசர்க் கேற்ற பரிசினுல் அருச்சித் தருள எந்நாளும்
பூசைக் கமர்ந்த பெருங்கூத்தர் போற்பார் சிலம்பின் ஒலிஅளித்தார். உச

நம்பர் தாளின் வழிபாட்டால் நாளும் இன்புற் றமர்கின்றூர்
இம்பர் உலகில் இரவலர்க்கும் வறியோர் எவர்க்கும் ஈகையினுல்
செம்பொன் மழையாம் எனப்பொழிந்து திருந்து வென்றி யுடன்பொருந்தி
உம்பர் போற்றத் தம்பெருமாற் குரிய வேள்வி பலசெய்தார். உரு

இன்ன வண்ணம் இவரொழுக எழில்கொள் பாண்டி நன்னாட்டு
மன்னும் மதுரைத் திருவால வாயில் இறைவர் வரும்அன்பால்
பன்னும் இசைப்பா டலிற்பரவும் பாண னுர்பத் திரனுர்க்கு
நன்மை நீடு பெருஞ்செல்வம் நல்க வேண்டி அருள்புரிவார். உசு

இரவு கனவில் எழுந்தருளி "என்பால் அன்பால் எப்பொழுதும்
பரவு சேரன் தனக்குனக்குப் பைம்பொன் காணம் பட்டாடை
விரவு கதிர்செய் நவமணிப்பூண் வேண்டிற் றெல்லாங் குறைவின்றித்
தரநம் ஓலை தருகின்றேம் தாழா தேகி வரு"கென்று. உள

வேறு

அதிர்கழல் உதியர் வேந்தற் கருள்செய்த பெருமை யாலே
"எதிர்சென் வத்துக் கேற்ற இருநிதி கொடுக்க"என்று
"மதிமலி புரிசை" என்னும் வாசகம் வரைந்த வாய்மைக்
கதிரொளி விரிந்த தோட்டுத் திருமுகம் கொடுத்தார் காண. உஅ

வேறு

சங்கப் புலவர் திருமுகத்தைத் தலைமேற் கொண்டு பத்திரனுர்
அங்கப் பொழுதே புறப்பட்டு மலைநா டணைய வந்தெய்தித்
துங்கப் புரிசைக் கொடுங்கோளுர் தன்னிற் புகுந்து துன்னுகொடி
மங்குல் தொடக்கும் மாளிகைமுன் வந்து மன்னர்க் கறிவித்தார்.

கேட்ட பொழுதே கைதலைமேற் கொண்டு கிளர்ந்த பேரன்பால்
நாட்டம் பொழிநீர் வழிந்திழிய எழுந்து நடுக்கம் மிகஎய்தி
ஓட்டத் தம்பொன் மாளிகையின் புறத்தில் உருகுஞ் சிந்தையுடன்
பாட்டின் தலைமைப் பாணனுர் பாதம் பலகால் பணிகின்றூர். ஊ

"அடியேன் பொருளாத் திருமுகங்கொண் டணைந்த" தென்ன அவர்தாமும்
கொடிசேர் விடையார் திருமுகங்கைக் கொடுத்து வணங்கக் கொற்றவனுர்
முடிமேற் கொண்டு கூத்தாடி மொழியுங் குழறிப் பொழிகண்ணீர்
பொடியார் மார்பிற் பரந்துவிழப் புவிமேற் பலகால் வீழ்ந்தெழுந்தார்.

1. பி. திருமுகம் 2. பிரதிவரலாறு தம்மை.
3. வீழ்ந்தியற் வாய்.

பரிவிற் போற்றித் திருமுகத்தைப் பலகால் தொழுது படிஎடுக்க
உரிய வகையால் எடுத்தேதாதி உம்பர் பெருமான் அருள்போற்றி
விரிபொற் சுடர்மா ளிகைபுக்கு மேவும் உரிமைச் சுற்றமெலாம்
பெரிது விரைவிற் கொடுபோந்து பேணும் அமைச்சர்க் கருள்செய்வார்.

"நங்கள் குலமா ளிகையிதனுள் நலத்தின் மிக்க நிதிக்குவையாய்ப்
பொங்கி நிறைந்த பலவேறு வகையிற் பொலிந்த பண்டாரம்
அங்கண் ஒன்றும் ஒழியாமை அடையக் கொண்டு புறப்பட்டுத்
தங்கும் பொதிசெய் தாளின்மேற் சமைய ஏற்றிக் கொணரும்" என.

சேரர் பெருமான் அருள்செய்யத் திருந்து மதிநூல் மந்திரிகள்
சாரு மணிமா ளிகையுள்ளாற் றனங்க ளெல்லாம் நிறைந்தபெருஞ்
சீர்கொள் நிதியம் எண்ணிறந்த எல்லாம் பொதிசெய் தாளின்மேல்
பாரில் நெருங்க மிசைஏற்றிக் கொண்டு வந்து பணிந்தார்கள்.

பரந்த நிதியின் பரப்பெல்லாம் பாண னுர்பத் திரனுர்க்கு
நிரந்த தனங்கள் வெவ்வேறு நிரைத்துக் காட்டி "மற்றிவையும்
உரந்தங் கியவெங் கரிபரிகள் முதலாம் உயிருள் ளனதனமும்
புரந்த அரசும் கொள்ளும்"என மொழிந்தார் பொறையர் புரவலனுர்.

பாண னுர்பத் திரனுரும் பைம்பொன் மௌலிச் சேரலனுர்
காணக் கொடுத்த நிதிஎல்லாங் கண்டு மகிழ்வுற் றதிசயித்துப்
"பேண எனக்கு வேண்டுவன அடியேன் கொள்ளப் பிஞ்ஞகனுர்
ஆணை, அரசும் அரசுறுப்பும் கைக்கொண் டருளும்" என இறைஞ்ச.

இறைவர் ஆணை மறுப்பதனுக் கஞ்சி இசைந்தார் இகல்வேந்தர்
நிறையும் நிதியின் பரப்பெல்லாம் நிலத்தை நெளிய உடன்கொண்டே
உறைமும் மதத்துக் களிறுபரி உள்ளிட் டனவேண் டுவகொண்டோர்
பிறைவெண் கோட்டுக் களிற்றுமேல் கொண்டு போந்தார் பெரும்பாணர்.

பண்பு பெருகும் பெருமானும் பாண னுர்பத் திரனுர்பின்
கண்கள் பொழிந்த காதல்நீர் வழியக் கையால் தொழுதணைய
நண்பு சிறக்கும் அவர்தம்மை நகரின் புறத்து விடைகொண்டு
திண்பொற் புரிசைத் திருமதுரை புக்கார் திருந்தும் இசைப்பாணர்.

வான வரம்பர் குலம்பெருக்கும் மன்ன னுரும் மறித்தேதகிக்
கூனல் இளவெண் பிறைக்கண்ணி முடியார் அடிமை கொண்டருளும்
பான்மை அருளின் பெருமையினை நினைந்து பலகால் பணிந்தேத்தி
மேன்மை விளங்கு மாளிகைமண் டபத்துள் அரசு வீற்றிருந்தார்.

அளவில் பெருமை அகிலயோ னிகளும் கழறிற் றறிந்தவற்றின்
உளம்மன் னியமெய் யுறுதுயரம் ஒன்றும் ஒழியா வகைஅகற்றிக்
களவு கொலைகள் முதலான கடிந்து கழறிற் றறிவார்தாம்
வளவர் பெருமா னுடன்செழியர் மகிழுங் கலப்பில் வைகுநாள்.

வானக் கங்கை நதிபொதிந்த மல்கு சடையார் வழிபாட்டுத்
தூநற் சிறப்பின் அர்ச்சனையாந் தொண்டு புரிவார் தமக்கொருநாள்
தேனக் கலர்ந்த கொன்றையினர் ஆடற் சிலம்பின் ஒலிமுன்போல்
மானப் பூசை முடிவின்கண் கேளா தோழிய மதிமயங்கி. சக

பூசை கடிது முடித்''தடியேன் என்னை பிழைத்த'' தெனப்பொருமி
''ஆசை உடம்பால் மற்றினிவே றடையும் இன்பம் யா''தென்று
தேசின் விளங்கும் உடைவாளை உருவித் திருமார் பினில்நாட்ட
ஈசர் விரைந்து திருச்சிலம்பின் ஓசை மிகவும் இசைப்பித்தார். சஉ

ஆடற் சிலம்பின் ஒலிகேளா உடைவாள் அகற்றி அங்கைமலர்
கூடத் தலைமேற் குவித்தருளிக் கொண்டு விழுந்து தொழுதெழுந்து
நீடப் பரவி மொழிகின்றார் ''நெடுமால் பிரமன் அருமறைமுன்
தேடற் கரியாய்! திருவருள்முன் செய்யா தொழிந்த தென்?'' என்றார்.

என்ற பொழுதில் இறைவர்தாம் எதிர்நின் றருளா தெழும்ஒலியால்
''மன்றி னிடைநங் கூத்தாடல் வந்து வணங்கி வன்தொண்டன்
ஒன்றும் உணர்வால் நமைப்போற்றி உரைசேர் பதிகம் பாடுதலால்
நின்று கேட்டு வரத்தாழ்த்தோம்'' என்றார், அவரை நினைப்பிப்பார்.

''என்னே! அடியார்க் கிவர்அருளும் கருணை இருந்த வா''றென்று
''பொன்னேர் சடையார் திருநடஞ்செய் புலியூர்ப் பொன்னம் பலம்இறைஞ்சித்
தன்நே ரில்லா வன்தொண்டர் தமையுங் காண்பன்'' எனவிரும்பி
நன்னீர் நாட்டுச் செலநயந்தார் நாமச் சேரர் கோமானார். சஙி

பொன்னார் மௌலிச் சேரலனார் போற்றும் அமைச்சர்க் கஃதியம்பி
''நன்னாட் கொண்டு பெரும்பயணம் எழுக'' என்று நலஞ்சாற்ற
மின்னார் அயில்வேற் குலமறவர் வென்றி நிலவுஞ் சிலைவீரர்
அந்நாட் டுள்ளார் அடையநிரந் தணைந்தார் வஞ்சி அகல்நகர்வாய். சசு

இட்ட நன்னாள் ஓரையினில் இறைவர் திருவஞ் சைக்களத்து
மட்டு விரிபூங் கொன்றையினர் தம்மை வலங்கொண் டிறைஞ்சிப்போய்ப்
பட்ட தூதல்வெங் களியானைப் பிடர்மேற் கொண்டு பணிமதியம்
தொட்ட கொடிமா ளிகைமூதூர் கடந்தார் உதியர் தோன்றலார். சஎ

யானை அணிகள் பரந்துவழி எங்கும் நிரந்து செல்லுவன
மான மலைநாட் டினில்மலிந்த மலைக ளுடன்போ துவபோன்ற
சேனை வீரர் புடைபரந்து செல்வ தங்கண் மலைசூழ்ந்த
கானம் அடைய உடன்படர்வ போலுங் காட்சி மேவினதால். சஅ

புரவித் திரள்கள் ஆயோகப் பொலிவின் அசைவிற் போதுவன
அரவச் சேனைக் கடல்தரங்கம் மடுத்து மேன்மேல் அடர்வனபோல்
விரவிப் பரந்து சென்றனவால் மிசையும் அவலும் ஒன்றுக
நிரவிப் பரந்த நெடுஞ்சேனை நேமி நெளியச் சென்றனவால். சசு

1. படம்பாகு பினி வேறு. 3 போதுவ போன்ற.
2. அமைச்சர் தமக்கியம்பி. 4 படர்ந்த.

அந்நாட் டெல்லை கடந்தணைய அமைச்சர்க் கெல்லாம் விடையருளி
மின்னுர் மணிப்பூண் மன்னவனுர் வேண்டு வாரை உடன்கொண்டு
கொன்னுர் அயில்வேல் மறவர்பயில் கொங்கர் நாடு கடந்தருளிப்
பொன்னுட் டவரும் அணைந்தாடும் பொன்னி நீர்நாட் டிடைப்போவார்.

சென்ற திசையிற் சிவனடியார் சிறப்பி னேடும் எதிர்கொள்ளக்
குன்றுங் காணும் உடைக்குறும்பர் இடங்கள்தோறும் குறைவறுப்பத்
தின்று முரம்பும் கான்யாறும் துறுகற் சுரமும் பலகடந்து
வென்றி விடையார் இடம்பலவும் மேவிப் பணிந்து செல்கின்றுர்.

பொருவில் பொன்னித் திருநதியின் கரைவந் தெய்திப் புனிதநீர்
மருவுந் தீர்த்தம் மகிழ்ந்தாடி மருங்கு வடபாற் கரைவணைத்
திருவிற் பொலியுந் திருப்புலியூர்ச் செம்பொன் மன்றுள் நடம்போற்ற
உருகு மனத்தி னுடன்சென்றுர் ஒழியா அன்பின் வழிவந்தார்.

வந்து தில்லை மூதூரின் எல்லை வணங்கி மகிழ்ச்சியினுல்
அந்த ணுளர் தொண்டர்குழாம் அணைந்த போதில் எதிர்வணங்கிச்
சந்த விரைப்பூந் திருவீதி இறைஞ்சித் தலைமேற் கரம்முகிழ்ப்பச்
சிந்தை மகிழ எழுநிலைக்கோ புரத்தை அணைந்தார் சேரலனுர்.

நிலவும் பெருமை எழுநிலைக்கோ புரத்தின் முன்னர் நிலத்திறைஞ்சி
மலருங் கண்ணீர்த் துளிததும்பப் புகுந்து மணிமா ளிகைவலங்கொண்
டுலகு விளக்குந் திருப்பேரம் பலத்தை வணங்கி உள்ளணைந்தார்
அலகில் அண்டம் அளித்தவர்தின் முடிந் திருச்சிற் றம்பலமுன்.

அளவில் இன்பப் பெருங்கூத்தர் ஆட எடுத்த கழல்காட்ட
உளமும் புலமும் ஒருவழிச்சென் றுருகப் போற்றி உய்கின்றுர்
களனில் விடம்வைத் தளித்தஅமு தன்றி மன்றில் கழல்வைத்து
வளருந் திருக்கூத் தமுதுலகுக் களித்த கருணை வழுத்தினுர்.

ஆரா ஆசை ஆனந்தக் கடலுள் திளைத்தே அமர்ந்தருளால்
சீரார் வண்ணப் பொன்வண்ணத் திருவந் தாதி திருப்படிக்கீழ்ப்
பாரா தரிக்க எடுத்தேத்திப் பணிந்தார் பருவ மழைபொழியும்
காரால் நிகர்க்க அரியகொடைக் கையார் கழறிற் றறிவார்தாம்.

தம்பி ரானுர்க் கெதிர்நின்று தமிழ்ச்சொன் மாலை கேட்பிக்க
உம்பர் வாழ நடமாடும் ஒருவர் அதற்குப் பரிசிலெனச்
செம்பொன் மணிமன் றினிலெடுத்த செய்ய பாதத் திருச்சிலம்பின்
இம்பர் நீட எழுந்தஒலி தாமும் எதிரே கேட்பித்தார்.

ஆடற் சிலம்பின் ஒலிகேட்பார் அளவில் இன்ப ஆனந்தம்
கூடப் பெற்ற பெரும்பேற்றின் கொள்கை வாய்ப்பக் கும்பிடுவார்
நீடப் பணியுங் காலமெலாம் நின்று தொழுது புறம்போந்து
மாடத் திருமா ளிகைவீதி வணங்கிப் புறத்து வைகினுர்.

பரவுந் தில்லை வட்டத்துப் பயில்வார் பைம்பொன் அம்பலத்துள்
அரவும் புனலும் சடையாட ஆடு வார்கூத் தாராமை
விரவுங் காதல் மிக்கோங்க வேதம் படியுந் திருப்படிக்கீழ்
இரவும் பகலும் பணிந்தேத்தி இன்பஞ் சிறக்கும் அந்நாளில். ருகூ

ஆடும் பெருமான் பாடல்கேட் டருளித் தாழ்த்த படிதமக்குக்
கூடும் பரிசால் முன்பருளிச் செய்த நாவ லூர்க்கோவை
நீடும் பெருங்கா தலிற்காண நிறைந்த நினைவு நிரம்பமால்
தேடும் பாதர் அருளினுல் திருவா ரூர்மேற் செலவழுந்தார். சுo

அறிவின் எல்லை யாயதிருத் தில்லை எல்லை அமர்ந்திறைஞ்சிப்
பிறிவி லாத திருவடியைப் பெருகும் உள்ளத் தினிற்பேற்றுச்
செறியும் ஞான போனகர்வந் தருளும் புகலி சென்றிறைஞ்சி
மறிசேர் கரத்தார் கோயில்பல வணங்கி மகிழ்ந்து வழிக்கொள்வார்.

வழியிற் குழியிற் செழுவயலின் மதகின் மலர்வா விகளின்மடுச்
சுழியிற் றரளந் திரைசொரியுந் துறைநீர்ப் பொன்னி கடந்தேறி
விழியிற் றிகழுந் திருநுதலார் விரும்பும் இடங்கள் இறைஞ்சியுகக்
கழிவிற் பெருவெள் ளமுங்கொள்ளாக் கழனி ஆரூர் கண்ணுற்றார்.சுஉ

நம்பி தாமும் அந்நாட்போய் நாகைக் காரோ ணம்பாடி
அம்பொன் மணிப்பூண் நவமணிகள் ஆடை சாந்தம் அடற்பரிமா
பைம்பொற் சுரிகை முதலான பெற்று மற்றும் பலபதியில்
தம்பி ரானைப் பணிந்தேத்தித் திருவா ரூரிற் சார்ந்திருந்தார். சுஙூ

வந்து சேரர் பெருமானர் மன்னுந் திருவா ரூரெய்த
அந்த ணாளர் பெருமானும் அரசர் பெருமான் வரப்பெற்றுச்
சிந்தை மகிழ எதிர்கொண்டு சென்று கிடைத்தார் சேரலனர்
சந்த விரைத்தார் வன்தொண்டர் முன்பு விருப்பி னுடன்தாழ்ந்தார்.

முன்பு பணிந்த பெருமாளைத் தாமும் பணிந்து முகந்தெடுத்தே
அன்பு பெருகத் தழுவவிரைந் தவரும் ஆர்வத் தொடுதழுவ
இன்ப வெள்ளத் திடைநீந்தி ஏற மாட்டா தலைவார்போல்
என்பும் உருக உயிர்ஒன்றி உடம்பும் ஒன்றும் எனஇசைந்தார். சுஙி

ஆன நிலைமை கண்டதிருத் தொண்டர் அளவில் மகிழ்வெய்த
மானச் சேரர் பெருமானர் தாமும் வன்தொண் டருங்கலந்த
பான்மை நண்பால் 'சேரமான் தோழர்' என்று பார்பரவும்
மேன்மை நாமம் மூனைப்பாடி வேந்தர்க் காகி விளங்கியதால். சுசு

ஒருவர் ஒருவ ரிற்கலந்த உணர்வால் இன்ப மொழியுரைத்து
"மருவ இனியார் பால்செய்வ தென்னும்" என்னும் மகிழ்ச்சியினுல்
பருவ மழைச்செங் கைப்பற்றிக் கொண்டு பரமர் தாள்பணியத்
தெருவு நீங்கிக் கோயிலினுட் புகுந்தார் சேர மான்தோழர். சுஎ

சென்று தேவா சிரியனைமுன் இறைஞ்சித் திருமா ளிகைவலங்கொண்
டொன்றும் உள்ளத் தொடும்புகுவார் உடைய நம்பி முன்னுக
நின்று தொழுது கண்ணருவி வீழ நிலத்தின் மிசைவீழ்ந்தே
என்றும் இனிய தம்பெருமான் பாதம் இறைஞ்சி ஏத்தினார். சுஅ

தேவர் முனிவர் வந்திறைஞ்சுந் தெய்வப் பெருமாள் கழல்வணங்கி
மூவர் தமக்கு முதலாகு மவரைத் திருமும் மணிக்கோவை
நாவ லூரார் தம்முன்பு நன்மை விளங்கக் கேட்பித்தார்
தாவில் பெருமைச் சேரலனார், தம்பி ரானர் தாங்கொண்டார். சுஆ

அங்கண் அருள்பெற் றெழுவாரைக் கொண்டு புறம்போந் தாரூரார்
நங்கை பரவை யார்திருமா ளிகையில் நண்ண நன்னுதலார்
பொங்கு விளக்கும் நிறைகுடமும் பூமா லைகளும் புகைஅகிலும்
எங்கும் மடவார் எடுத்தேந்த அணைந்து தாமும் எதிர்கொண்டார். எO

சோதி மணிமா ளிகையின்கண் சுடரும் பசும்பொற் காலமளி
மீது பெருமாள் தமைஇருத்தி நம்பி மேவி யுடனிருப்பக்
கோதில் குணத்துப் பரவையார் கொழுந னூர்க்குந் தோழர்க்கும்
நீதி வழுவா ஒழுக்கத்து நிறைபூ சனைகள் முறையளித்தார். எக

தூண்டும் புரவிச் சேரர்குலப் பெருமாள் தமக்குத் திருஅமுது
தூண்டு சோதி விளக்கனையார் அமைக்கத் துணைவர் சொல்லுதலும்
வேண்டும் பரிசு வெவ்வேறு விதத்துக் கறியும் போனகமும்
ஈண்டச் சமைப்பித் துடன்வந்தார்க் கெல்லாம் இயல்பின் விருந்தமைத்தார்.

அரசர்க் கமைத்த சிறப்பினும்மேல் அடியார்க் கேற்கும் படியாக
விரவிப் பெருகும் அன்பினுடன் விரும்பும் அமுது சமைத்ததற்பின்
புரசைக் களிற்றுச் சேரலனார் புடைசூழ்ந் தவரோ டமுதுசெயப்
பரவைப் பிறந்த திருவனைய பரவை யார்வந் தறிவித்தார். எஙூ

சேரர் பெருமான் எழுந்தருளி அமுது செய்யச் செய்தவத்தால்
தாரின் மலிபூங் குழல்மடவாய்! தாழா தமுது செய்வி"எனப்
பாரின் மலிசீர் வன்தொண்டர் அருளிச் செய்யப் பரிகலங்கள்
ஏரின் விளங்கத் திருத்திக்கால் இரண்டிற் படியா ஏற்றுதலும். எச

ஆண்ட நம்பி, பெருமானே உடனே அமுது செய்தருள
வேண்டும்" என்ன ஆங்கவரும் விரைந்து வணங்கி வெருவுறலும்
நீண்ட தடக்கை பிடித்தருளி மீண்டும் நேரே குறைகொள்ள
ஈண்ட அமுது செய்வதனுக் கிசைந்தார் பொறையர்க் கிறையவனார்.

ஓக்க அமுது செய்தருள உயர்ந்த தவத்துப் பரவையார்
மிக்க விருப்பால் அமுதுசெய்வித் தருளி மேவும் பரிசனங்கள்
தக்க வகையால் அறுசுவையுந் தாம்வேண் டியவா றினிதருந்தத்
தொக்க மகிழ்ச்சி களிசிறப்பத் தூய விருந்தின் கடன்முடித்தார். எசு

பா. ஐ. ப. 1. திருவாத்தனின்.

3826 பனிநீர் விரவு சந்தனத்தின் பசுங்கர்ப் பூர விரைக்கலவை
வனிதை யவர்கள் சமைத்தெடுப்பக் கொடுத்து மகிழ்மான் மதச்சாந்தும்
புனித நறும்பூ மாலைகளும் போற்றிக் கொடுத்துப் பொற்கொடியார்
இனிய பஞ்ச வாசமுடன் அடைக்காய் அமுதும் ஏந்தினார். எச

3827 ஆய சிறப்பிற் பூசனைகள் அளித்த எல்லாம் அமர்ந்தருளித்
தூய நீறு தங்கள் திரு முடியில் வாங்கித் தொழுதணிந்து
மேய விருப்பி னுடனிருப்பக் கழறிற் றறிவார் மெய்த்தொண்டின்
சேய நீர்மை அடைந்தாராய் நம்பி செம்பொற் கழல்பணிந்தார். எஅ

3828 மலைநாட் டரசர் பெருமானுர் வணங்க வணங்கி எதிர்தழுவிக்
கலைநாட் பெருகு மதிமுகத்துப் பரவை யார்தங் கணவனுர்
சிலைநாட் டியவெல் கொடியாரைச் சேரத் தந்தார் எனக்கங்கை
அலைநாட் கொன்றை முடிச்சடையார் அருளே போற்றி யுடனமர்ந்தார்.

3829 செல்வத் திருவா ரூர்மேவுஞ் செம்பொற் புற்றில் இனிதமர்ந்த
வில்வெற் புடையார் கழல்வணங்கி வீதி விடங்கப் பெருமானே
மல்லற் பவனி சேவித்து வாழ்ந்து நாளும் மனமகிழ்ந்து
சொல்வித் தகர்தாம் இருவர்களுந் தொடர்ந்த காத லுடன்சிறந்தார்.

3830 இவ்வா றெழுகு நாளின்கண் இலங்கு மணிப்பூண் வன்தொண்டர்
மைவாழ் களத்து மறையவனுர் மருவும் இடங்கள் பலவணங்கிச்
செய்வார் கன்னித் தமிழ்நாட்டுத் திருமா மதுரை முதலான
மொய்வார் சடையார் மூதூர்கள் இறைஞ்ச முறைமை யால்நிணைந்தார்.

3831 சேரர் பிரானும் ஆரூரர் தம்மைப் பிரியாச் சிறப்பாலும்
வாரம் பெருகத் தமக்கன்று மதுரை ஆல வாயமர்ந்த
வீரர் அளித்த திருமுகத்தால் விரும்பும் அன்பின் வணங்குதற்குச்
சார எழுந்த குறிப்பாலும் தாமும் உடனே செலத்துணிந்தார். அஉ

3832 இருவர் திருவுள் ளமும்இசைந்த பொழுதில் எழுந்து திருவாரூர்
ஒருவர் மலர்த்தாள் புக்கிறைஞ்சி உடன்பாட் டருளால் போந்தருளி
மருவும் உரிமைப் பெருஞ்சுற்றம் வரம்பில் பணிகள் வாகனங்கள்
பொருவில் பண்டா ரங்கொண்டு போது வார்கள் உடன்போத. அங

3833 சேவித் தணையும் பரிசனங்கள் சூழத் திருவா ரூரிறைஞ்சிக்
காவிற் பயிலும் புறம்பணையைக் கடந்து போந்து கீழ்வேளூர்
மேவிப் பரமர் கழல்வணங்கிப் போந்து வேலைக் கழிக்கானல்
பூவிற் றிகழும் பொழில்நாகை புகுந்து காரோ ணம்பணிந்தார். அச

3834 திருக்கா ரோணச் சிவக்கொழுந்தைச் சென்று பணிந்து சிந்தையினே
உருக்கார் வச்செந் தமிழ்மாலை சாத்திச் சிலகாள் உறைந்துபோய்ப்
பெருக்கா றுலவு சடைமுடியார் இடங்கள் பலவும் பணிந்தேத்தி
அருட்கா ரணர்தந் திருமறைக்கா டணைந்தார் சேரர் ஆரூரர். அடு

பா.வே.: அழிந்தாறாய் 3 திருக்கா ரோணர் நிலைபேறு என்னும் மன்பதை

மூன்நீர் வலங்கொள் மறைக்காட்டு முதல்வர் கோயில் சென்றிறைஞ்சிச்
செந்நீர் வாய்மைத் திருநாவுக் கரசும் புகலிச் சிவக்கன்றும்
அந்நேர் "திறக்க அடைக்க" எனப் பாடுத் திருவா யிலஅணைந்து
நன்னீர் பொழியும் விழியினராய் நாயன்மாரை நிறைந்திறைஞ்சி. அசு

நிறைந்த மறைகள் அர்ச்சித்த நீடு மறைக்காட் டருமணியை
இறைஞ்சி வீழ்ந்து பணிந்தெழுந்து போற்றி "யாழைப் பழித்" தென்னும்
அறைந்த பதிகத் தமிழ்மாலை நம்பி சாத்த அருட்சேரர்
சிறந்த அந்தா தியிற்சிறப்பித் தனவே யோதித் திருத்தெழுந்தார். அசுஎ

எழுந்து பணிந்து புறத்தெய்தி இருவர் பெருந்தொண் டருஞ்சிலநாள்
செழுந்தண் பழனப் பதியதனுள் அமர்ந்து தென்பால் திரைக்கடல்நஞ்
சழுந்து மிடற்றர் அகத்தியான் பள்ளி இறைஞ்சி அவிர்மதியக்
கொழுந்து வளர்செஞ் சடைக்குழகர் கோடிக் கோயில் குறுகினர். அசுஅ

கோடிக் குழகர் கோயில்அயல் குடிகள் ஒன்றும் புறத்தெங்கும்
நாடிக் காணு துள்புக்கு நம்பர் பாதந் தொழுதுள்ளம்
வாடிக் "கடிதாய்க் கடற்காற்" றென் றெடுத்து மலர்க்கண் ணீர்வாரப்
பாடிக் காடு கர்ள்புணர்ந்த பரிசும் பதிகத் திடைவைத்தார். அசுக

அங்கு வைகிப் பணிந்தருளாற் போவார் அகன்சோ ணாட்டரனூர்
தங்கும் இடங்கள் வணங்கிப்போய்ப் பாண்டி நாடு தனைச்சார்ந்து
திங்கள் முடியார் திருப்புத்தூர் இறைஞ்சிப் போந்து சேண்விளங்கும்
மங்குல் தவழும் மணிமாட மதுரை மூதூர் வந்தணைந்தார். கூ0

வேறு

சேரமான் தோழரும்அச் சேரர்பிரா னும்பணிப்பூண்
ஆரமார் பரைமதுரை ஆலவா யினில்வணங்க
வாரமா வந்தணைய வழுதியார் மனக்காதல்
கூரமா நகர்கோடித் தெதிர்கொண்டு கொடுபுக்கார். கூக

தென்னவர்கோன் மகளாரைத் திருவேட்டு முன்னரே
தொன்மதுரை நகரின்கண் இனிதிருந்த சோழனார்
அன்னவர்கள் உடன்கூட அணையஅவ ருங்கூடி
மன்னுதிரு ஆலவாய் மணிக்கோயில் வந்தணைந்தார். கூஉ

திருஆல வாயமர்ந்த செஞ்சடையார் கோயில்வலம்
வருவார்முன் வீழ்ந்திறைஞ்சி வன்தொண்டர் வழித்தொண்டு
தருவாரைப் போற்றிசைத்துத் தாழ்ந்தெழுந்து வாழ்ந்ததமிழ்ப்
பெருவாய்மை மலர்புனைந்து பெருமகிழ்ச்சி பிறங்கினர். கூங

படியேறு புகழ்ச்சேரர் பெருமானும் பார்மிசைவீழ்ந்
"தடியேனைப் பொருளாக அளித்ததிரு முகக்கருணை

கூ0 பார்த்தோ, தேவ ஒலவ பணிப்பூண்.

முடிவேதென் றறிந்திலேன்'' எனமொழிகள் தடுமாறக்
கடியேறு கொன்றையார் முன்பரவிக் களிகூர்ந்தார். கூச

3367 செம்பியனு ருடன்செழியர் தாம்பணிந்து சேரருடன்
கம்பியும்முன் புறத்தணைய நண்ணியபே ருவகையால்
உம்பர்பிரான் கோயிலினின் றுடன்கொடுபோய் இருவர்க்கும்
பைம்பொன்மணி மாலிகையில் குறைவறுத்தார் பஞ்சவனூர். கூரி

3368 உளம்மகிழக் கும்பிட்டங் குறையுநாள் உதியருடன்
இளஞாளிப்பூண் வன்தொண்டர் தாமிருந்த இடங்கெழுமி
வளவனூர் மீனவனூர் வளம்பெருக மற்றவரோ
டளவளா வியவிருப்பால் அமர்ந்துகலந் தினிதிருந்தார். கூசு

3369 அந்நாளில் மதுரைநகர் மருங்கரனூர் அமர்பதிகள்
பொன்னரம் அணிமார்பில் புரவலர்மூ வரும்போதச்
செந்நாவின் முனைப்பாடித் திருநாடர் சென்றிறைஞ்சிச்
சொன்மாலை கரஞ்சாத்தித் தொழுதிருப்பூ வணத்தணைந்தார். கூள

3370 நீடுதிருப் பூவணத்துக் கணித்தாக நேர்செல்ல
மாடுவருந் திருத்தொண்டர் மன்னியஅப் பதிகாட்டத்
தேடுமறைக் கரியாரைத் ''திருவுடையார்'' என்றெடுத்துப்
பாடிசையிற் ''பூவணமீ தோ?'' என்று பணிந்தணைவார். கூஅ

3371 சென்றுதிருப் பூவணத்துத் தேவர்பிரான் மகிழ்கோயில்
முன்றில்வலங் கொண்டிறைவர் முன்வீழ்ந்து பணிந்தெழுந்து
நின்றுபர விப்பாடி நேர்நீங்கி யுடன்பணிந்த
வென்றிமுடி வேந்தருடன் போந்தங்கண் மேவினார். கூகூ

3372 அப்பதியி லமர்ந்திறைஞ்சிச் சிலநாளி லாரூரர்
மூப்பெருவேங் தர்களோடு முதன்மதுரை நகரெய்தி
மெய்ப்பரிவில் திருவால வாயுடையார் விரைமலர்த்தாள்
எப்பொழுதும் பணிந்தேத்தி இன்புற்றங் கமர்கின்றார். கஂஂ

3373 செஞ்சடையார் திருவாப்ப னூர்திருவே டகம்முதலாம்
நஞ்சணியுங் கண்டரவர் நயந்தபதி நண்ணியே
எஞ்சலிலாக் காதலினுல் இனிதிறைஞ்சி மீண்டணைந்து
மஞ்சணையும் மதில்மதுரை மாநகரில் மகிழ்ந்திருந்தார். கஂக

3374 பரமர்திருப் பரங்குன்றில் சென்றுபார்த் திபரோடும்
புரமெரித்தார் கோயில்வலங் கொண்டுபுகுந் துள்ளிறைஞ்சிச்
சிரமலிமா லச்சடையார் திருவடிக்கீழ் ஆட்செய்யும்
அருமைநினைந் ''தஞ்சுதும்'' என்று முரூரர் பாடுவார். கஂஉ

3375 ''கோத்திட்டை'' என்றெடுத்துக் கோதில்திருப் பதிகஇசை
மூர்த்தியார் தமைவணங்கி மூக்கோக்க ளுடன்முன்பே

பா. பே. பதம்பு னேருரூ. ஐ முத்தோக்க டம்மன்ஸ்ப.

ஏத்தியவண் தமிழ்மாலை இன்னிசைபா டிப்பரவிச்
சாத்தினார் சங்கரனார் தங்குதிருப் பரங்குன்றில். கoகூ

இறைவர்திருத் தொண்டுபுரி அருமையினை இருநிலத்து
முறைபுரியும் முதல்வேந்தர் மூவர்களுங் கேட்டஞ்சி
மறைமுந்நூல் மணிமார்பின் வன்தொண்டர் தமைப்பணிந்தார்
நிறைதவத்தோர் அப்பாலும் நிருத்தர்பதி தொழநினைந்தார். கoச

அங்காட்டுத் திருப்பதிகள் பலவும்அணைந் திறைஞ்சமலை
நன்னாட்டு வேந்தருடன் நம்பிதாம் எழுந்தருள
மின்னாட்டும் பன்மணிப்பூண் வேந்தர்இரு வரும்மீள்வார்
தென்னாட்டு வேண்டுவன செய்தமைப்பார் தமைவிடுத்தார். கoஞ

இருபெருவேந் தரும்இயல்பின் மீண்டதற்பின் எழுந்தருளும்
பொருவருஞ்சீர் வன்தொண்டர் புகழ்ச்சேர ருடன்புனிதர்
மருவியதா னம்பலவும் பணிந்துபோய் மலைச்சாரல்
குருமணிகள் வெயிலெறிக்குங் குற்றாலஞ் சென்றடைந்தார். கoசு

குற்றாலத் தினிதமர்ந்த கூத்தர்குரை கழல்வணங்கிச்
சொற்றமிழ மலர்தூவிக் குறும்பலாத் தொழுதிப்பால்
முற்றாவெண் மதிமுடியார் பதிபணிந்து மூவாயில்கள்
செற்றார்மன் னியசெல்வத் திருநெல்வே லியைஅணைந்தார். கoஎ

நெல்வேலி நீற்றழகர் தமைப்பணிந்து பாடிநிகழ்
பல்வேறு பதிபிறவும்பணிந்தன்பால் வந்தணைந்தார்
வில்வேட ராய்வென்றி விசயனெதிர் பன்றிப்பின்
செல்வேத முதல்வரமர் திருவிரா மேச்சரத்து. கoஅ

மன்னுமிரா மேச்சரத்து மாமணியை மூன்வணங்கிப்
பன்னுதமிழ்த் தொடைசாத்திப் பயில்கின்றூர் பாம்பணிந்த
சென்னியர்மா தோட்டத்துத் திருக்கேதீச் சரஞ்சார்ந்த
சொன்மலர்மா லைகள்சாத்தித் தூரத்தே தொழுதமர்ந்தார். கoகூ

திருவிரா மேச்சரத்துச் செழும்பவளச் சுடர்க்கொழுந்தைப்
பரிவினுல் தொழுதகன்று பரமர்பதி பிறபணிந்து
பெருவிமா னத்திமையோர் வணங்குபெருந் திருச்சுழியல்
மருவினர் வன்தொண்டர் மலிவேந்த ருடன்கூட. ககo

திருச்சுழிய லிடங்கொண்ட செம்பொன்மலைச் சிலையாரைக்
கருச்சுழியில் வீழாமைக் காப்பாரைக் கடல்விடத்தின்
இருட்சுழியு மிடற்றுரை இறைஞ்சிஎதிர் இதழிமலர்ப்
பருச்சுழியத் தடன்"ஊனுய் உயிர்"எனும்பா மலர்புனைந்தார். ககக

அங்கணரைப் பணிந்துறையும் ஆரூரர்க் கவ்வூரில்
கங்குலிடைக் கனவின்கட் காளையாந் திருவடிவால்

ப.ா. பே.ா., இதட்பூனூத்த : இதட்டனி.
உ பிறவும் கோ. 3. பணிந்தன்பர்.

செங்கையினிற் பொற்செண்டுந் திருமுடியிற் சுழியமுடன்
எங்குமிலாத் திருவேடம் என்புருக மூன்காட்டி. ககஉ

3865 "கானப்பேர் யாம்இருப்ப" தெனக்கழறிக் கங்கையெனும்
வானப்பே ராறுலவும் மாமுடியார் தாமகல
ஞானப்பே ராளர் உணர்ந் ததிசயித்து "நாகமுடன்
ஏனப்பே ரெயிறணிந்தார் அருளிருந்த பரி"சென்பார். ககங

3866 கண்டருளும் படிகழறிற் றறிவார்க்கு மொழிந்தருளிப்
புண்டரிகப் புனற்சுழியற் புனிதர்கழல் வணங்கிப்போய்
அண்டர்பிரான் திருக்கானப் பேரணைவார் ஆரூரர்
"தொண்டரடித் தொழலும்"எனுஞ் சொற்பதிகத் தொடைபுனைவார்.

3867 "காளையார் தமைக்கண்டு தொழப்பெறுவ தென்"றென்று
தாளைநா ளும்பரவத் தருவார்பால் சார்கின்றார்
ஆளைநீ ளிடைக்காண அஞ்சியநீர் நாய்அயலே
வாளைபாய் தழைப்பழன முணைப்பாடி வளநாடர். ககடு

3868 மன்னுதிருக் கானப்பேர் வளம்பதியில் வந்தெய்திச்
சென்னிவளர் மதியணிந்தார் செழுங்கோயில் வலங்கொண்டு
முன்னிறைஞ்சி உள்ளணைந்து முதல்வர்சே வடிதாழ்ந்து
பன்னுசெழுந் தமிழ்மாலை பாடினார் பரவினார். ககசு

3869 ஆராத காதலுடன் அப்பதியிற் பணிந்தேத்திச்
சீராருந் திருத்தொண்டர் சிலநாளங் கமர்ந்தருளிக்
காராரு மலர்ச்சோலைக் கானப்பேர் கடந்தணைந்தார்
போரானேற் றூர்கயிலைப் பொருப்பர்திருப் புனவாயில். ககள

3870 புனவாயிற் பதிஅமர்ந்த புனிதர் ஆலயம்புக்கு
மனஆர்வ முறச்"சித்த நீநினைஎன் னெடு"என்றே
வினவான தமிழ்பாடி வீழ்ந்திறைஞ்சி அப்பதியில்
சினயானை உரித்தணிந்தார் திருப்பாதந் தொழுதிருந்தார். ககஅ

3871 திருப்புனவா யிற்பதியில் அமர்ந்தசிவ னுர்மகிழும்
விருப்புடைய கோயில்பணிந் தருள்பெற்று மேவினார்
பொருப்பினெடு கானகன்று புனற்பொன்னி நாடணைந்து
பருப்பதவார் சிலையார்தம் பாம்பணிமா நகர்தன்னில். ககக

3872 பாதாளீச் சரமிறைஞ்சி அதன்மருங்கு பலபதியும்
வேதாதி நாதர்கழல் வணங்கிமிகு விரைவினுடன்
சூதாருந் துணைமுலையார் மணிவாய்க்குத் தோற்றிரவு
சேதாம்பல் வாய்திறக்குந் திருவாரூர் வந்தணைந்தார். கஉ0

3873 திருநாவ லூர்வேந்தர் சேரர்குல வேந்தருடன்
வருவாரைத் திருவாரூர் வாழ்வார்கள் எதிர்கொள்ளத்

பா.வே.: 3871 அடியெடுத்தது.

தருகாத லுடன்வணங்கித் தம்பெருமான் கோயிலினுள்
பெருகார்வத் தொடுவிரும்பும் பெரும்பேறு பெறப்புகுந்தார். கஉக

3874 வாசமலர்க் கொன்றையார் மகிழ்கோயில் வலங்கொண்டு
நேசமுற முன்னிறைஞ்சி நெடும்பொழுதெ லாம்பரவி
ஏசறவால் திருப்பதிகம் எடுத்தேத்தி எழுந்தருளால்
பாசவினைத் தொடக்கறுப்பார் பயில்கோயில் பணிந்தணைவார். கஉஉ

3875 பரவையார் மாளிகையில் பரிசனங்கள் முன்னெய்த
விரவுபே ரலங்கார விழுச்செல்வம் மிகப்பெருக
வரவெதிர்கொண் டடிவணங்க வன்தொண்டர் மலைநாட்டுப்
புரவலனு ரையுங்கொண்டு பொன்னணிமா ளிகைபுகுந்தார். கஉங

3876 பரவியே பரவையார் பரிவுடனே பணிந்தேத்தி
விரவியபோ னகங்கறிகள் விதம்பலவா கச்சமைத்துப்
பரிகலமும் பாவாடை பகல்விளக்கும் உடனமைத்துத்
திருஅமுது செய்வித்தார் திருந்தியதேன் மொழியினர். கஉச

3877 மங்கலமாம் பூசனைகள் பரவையார் செயமகிழ்ந்து
தங்கிஇனி தமர்கின்றூர் தம்பிரான் கோயிலினுட்
பொங்குபெருங் காலமெலாம் புக்கிறைஞ்சிப் புறத்தணைந்து
நங்கள்பிரான் அருள்மறவா நல்வினையாட் டினைநயந்தார். கஉரு

3878 நீலச்சேண்டும் பரிச்சேண்டும் வீசிமிக மகிழ்வெய்தி
விலக்கரும்போர்த் தகர்ப்பாச்சல் கண்டருளி வென்றிபெற
மலைக்குநெடு முட்கணைக்கால் வாரணப்போர் மகிழ்ந்தருளி
அலைக்குமறப் பலபுள்ளின் அமர்விரும்பி அமர்கின்றூர். கஉசு

வேறு

3879 வீரவு காதல் மீக்கூர மேவு நாள்கள் பலசெல்லக்
கரவில் ஈகைக் கோளனூர் தங்கள் கடல்சூழ் மலைநாட்டுப்
பரவை யார்தங் கொழுநனூர் தம்மைப் பணிந்து கொண்டணைவான்
இரவும் பகலும் தொழுதிரக்க இசைந்தார் அவரும் எழுந்தருள. கஉள

3880 நங்கை பரவை யாருள்ளத் திசைவால் நம்பி எழுந்தருளத்
திங்கள் முடியார் திருவருளைப் பரவிச் சேர மான்பெருமாள்
எங்கு முள்ள அடியாருக் கேற்ற பூசை செய்தருளிப்
பொங்கு முயற்சி இருவரும்போய்ப் புக்கார் புனிதர் பூங்கோயில்.

3881 தம்பி ரானைத் தொழுதருளாற் போந்து தொண்டர் சார்ந்தணைய
நம்பி யாரூ ரருஞ்சேரர் நன்னுட் டரச ராய
பைம்பொன் மணிநீள் முடிக்கழறிற் றறிவார் தாமும் பயணமுடன்
செம்பொன் நீடு மதிலாரூர் தொழுது மேல்பாற் செல்கின்றூர். கஉகூ

வேறு

3881 பொன்பரப்பி மணிவரன்றிப் புனல்பரக்குங் காவேரித்
தென்கரைபோய்ச் சிவன்மகிழ்ந்த கோயில்பல சென்றிறைஞ்சி
மின்பரப்புஞ் சடைஅண்ணல் விரும்புதிருக் கண்டியூர்
அன்புருக்குஞ் சிந்தையுடன் பணிந்துபுறத் தணைந்தார்கள். கஙo

3882 வடகரையில் திருவையா றெதிர்தோன்ற மலர்க்கரங்கள்
உடலுருக உள்ளுருக் உச்சியின்மேற் குவித்தருளிக்
கடல்பரந்த தெனப்பெருகுங் காவிரியைக் கடந்தேறித்
தொடர்வுடைய திருவடியைத் தொழுவதற்கு நினைவுற்றார். கஙக

வேறு

3883 ஐயா றதனைக் கண்டுதொழு தருளா லூரர் தமைநோக்கிச்
செய்யாள் பிரியாச் சேரமான் பெருமாள் அருளிச் செய்கின்றார்
"மையார் கண்டர் மருவுதிரு வையா றிறைஞ்ச மனமுருகி
யையா நின்ற திவ்வாறு கடந்து பணிவோம் நாம்"என்ன. கஙஉ

3884 ஆறு பெருகி இருகரையும் பொருது விசும்பில் எழுவதுபோல்
வேறு நாவாய் ஓடங்கள் மீது செல்லா வகைமிகைப்ப
நீறு விளங்குந் திருமேனி நிருத்தர் பாதம் பணிந்தன்பின்
ஆறு நெறியாச் செலவுரியார் தரியா(து) அழைத்துப் பாடுவார். கஙங

3885 "பரவும் பரிசென்" றெடுத்தருளிப் பாடுந் திருப்பாட் டின்முடிவில்
அரவம் புனைவார் தமை"ஐயா முடைய அடிக ளோ"என்று
விரவும் வேட்கை யுடனழைத்து விளங்கும் பெருமைத் திருப்பதிகம்
நிரவும் இசையில் வன்தொண்டர் நின்று தொழுது பாடுதலும். கஙச

3886 மன்றில் நிறைந்து நடமாட வல்லார் தொல்லை ஐயாற்றில்
கன்று தடையுண் டெதிரழைக்கக் கதறிக் கனைக்கும் புனிற்றுப்போல்
ஒன்றும் உணர்வால் சராசரங்கள் எல்லாங் கேட்க "ஓலம்"என
நின்று மொழிந்தார் பொன்னிமா நதியும் நீங்கி நெறிகாட்ட. கஙரு

3887 விண்ணின் முட்டும் பெருக்காறு மேல்பாற் பளிக்கு வேற்பென்ன
நண்ணி நிற்கக் கீழ்பால்நீர் வடிந்த நடுவு நல்லவழிப்
பண்ணிக் குளிர்ந்த மணல்பரப்பக் கண்ட தொண்டர் பயில்மாரி
கண்ணிற் பொழிந்து மயிர்ப்புளகம் கலக்கக் கைகுஞ் சலிகுவித்தார்.

3888 நம்பி பாதஞ் சேரமான் பெருமாள் பணிய நாவலூர்ச்
செம்பொன்முந்நூல் மணிமார்பர் சேரர் பெருமான் எதிர்வணங்கி
"உம்பர் நாதர் உமக்களித்த தன்றோ?" என்ன உடன்மகிழ்ந்து
தம்பி ரானைப் போற்றிசைத்துத் தடங்கா வேரி நடுவணைந்தார். கஙஎ

3889 செஞ்சொற் றமிழ்நா வலர்கோனும் சேரர் பிரானும் தம்பெருமான்
எஞ்ச லில்லா நிறையாற்றின் இடையே அளித்த மணல்வழியில்

பா.வே.1.வடசு: 2.மணற் பரப்பு.

தஞ்ச முடைய பரிசனமும் தாமும் ஏறித் தலைச்சென்று
பஞ்ச நதிவா ணரைப்பணிந்து விழுந்தார் எழுந்தார் பரவினார். கஙஅ

அங்கண் அரனார் கருணையினை ஆற்ற தாற்றித் தினைத்திறைஞ்சித்
தங்கள் பெருமான் திருவருளால் தாழ்ந்து மீண்டுந் தடம்பொன்னிப்
பொங்கு நதியின் முன்வந்த படியே நடுவு போந்தேதறத்
துங்க வரைபோல் நின்றநீர் துரந்து தொடரப் பெருகியதால். கஙக

ஆய செயலின் அதிசயத்தைக் கண்டக் கரையில் ஐயாறு
மேய பெருமான் அருள்போற்றி வீழ்ந்து தாழ்ந்து மேல்பாற்போய்த்
தூய மதிவாழ் சடையார்தம் பதிகள் பிறவுந் தொழுதேதத்திச்
சேயிகொங்க நாடணைந்தார் திருவா ரூரர் சேரருடன். கசஒ

கொங்கு நாடு கடந்துபோய்க் குலவு மலைநாட் டெல்லையுற
றங்கள் பெருமான் தோழனார் நம்பி தம்பி ரான்தோழர்
அங்கண் உடனே அணையவழுந் தருளா நின்றார் எனும்விருப்பால்
எங்கும் அந்நாட் டுள்ளவர்கள் எல்லாம் எதிர்கொண் டின்புறுவார்.

பதிக ளெங்கும் தோரணங்கள் பாங்க ரெங்கும் பூவனங்கள்
வதிக ளெங்கும் குளிர்பந்தர் மனைக ளெங்கும் அகிற்புகைக்கார்
நதிக ளெங்கும் மலர்ப்பிறங்கல் ஞாங்க ரெங்கும் ஓங்குவன
நிதிக ளெங்கும் முழவினொலி நிலங்க ளெங்கும் பொலஞ்சுடர்ப்பூ.

திசைகள் தோறும் வரும்பெருமை அமைச்சர் சேனைப் பெருவெள்ளம்
குசைகொள் வாசி நிரைவெள்ளம் கும்ப யானை அணிவெள்ளம்
மிசைகொள் பண்ணும் பிடிவெள்ளம் மேவுஞ் சோற்று வெள்ளங்கண்
டசைவில் இன்பப் பெருவெள்ளத் தமர்ந்து கொடுங்கோ ரூரணைந்தார்.

கோடுங்கோ ரூரின் மதில்வாயில் அணிகோ டித்து மறுகில்உடுத்
தொடுங்கோ புரங்கள் மாளிகைகள் சூளி குளிர்சா லகள்தெற்றி
நெடுங்கோ நகர்கள் ஆடரங்கு நிரந்த மணித்தா மங்கமுகு
விடுங்கோ தைப்பூந் தாமங்கள் நிரைத்து வெவ்வே றலங்கரித்து. கசச

நகர் மாந்தர் எதிர்கொள்ள நண்ணி எண்ணில் அரங்குதோறும்
மகரக் குழைமா தர்கள்பாடி ஆட மணிவீ தியில்அணைவார்
சிகர நெடுமா ளிகைஅணையார் சென்று திருவஞ் சைக்களத்து
நிகரில் தொண்டர் தமைக்கொண்டு புகுந்தார் உதியர் நெடுந்தகையார்.

இறைவர் கோயில் மணிமுன்றில் வலங்கொண் டிறைஞ்சி எதிர்புக்கு
நிறையுங் காத லுடன்வீழ்ந்து பணிந்து நேர்நின் றுரூரர்
முறையில் விளம்புந் திருப்பதிகம் 'முடிப்பது கங்கை' என்றெடுத்துப்
பிறைகொள் முடியார் தமைப்பாடிப் பரவிப் பெருமா ளுடன்தொழுதார்.

தொழுது தினைத்துப் புறம்போந்து தோன்றப் பண்ணும் பிடிமேற்பார்
முழுதும் ஏத்த நம்பியைமுன் பேற்றிப் பின்பு தாமேறிப்

பா. பே.) எதிர்கொங்கு. 2. பலவளங்கள்

பழுதில் மணிச்சா மரைவீசிப் பைம்பொன் மணிமா ளிகையில்வரும்
பொழுது மறுகில் இருபுடையும் மிடைந்தார் வாழ்த்திப் புகல்கின்றார்.

"நல்ல தோழர் நம்பெருமாள் தமக்கு நம்பி இவ"ரென்பார்
"எல்லே இல்லாத் தவம்முன்பென் செய்தோம் இவரைத் தொழ"என்பார்
"செல்வம் இனியென் பெறுவதுநஞ் சிலம்பு நாட்டுக்" கெனஉரைப்பார்
"சொல்லுந் தரமோ பெருமாள்செய் தொழிலைப் பாரீர்" எனத்தொழுவார்.

பூவும் பொரியும் பொன்துகளும் பொழிந்து பணிவார் "பொருவில்இவர்
மேவும் பொன்னித் திருநாடே புவிக்குத் திலதம்" எனவியப்பார்
பாவுந் துதிகள் எம்மருங்கும் பயில வந்து மாளிகையின்
மாவுங் களிறும் நெருங்குமணி வாயில் புகுந்து மருங்கிழிந்தார். கசக

கழறிற் றறியுந் திருவடியுங் கலிநா வலர்தம் பெருமானும்
முழவிற் பொலியுந் திருநெடுந்தோள் முனிவர் தம்மை உடன்கொண்டு
விழவிற் பொலியும் மாளிகையில் விளங்கு சிங்கா சனத்தின்மிசை
நிழல்திக் கொளிரும் பூணரை இருத்தித் தாமும் நேர்நின்று. கடO

செம்பொற் கரக வாசநீர் தேவி மார்கள் எடுத்தேந்த
அம்பொற் பாதந் தாம்விளக்கி அருளப் புகலும், ஆரூரர்
தம்பொற் றூள வாங்கி'இது தகா'தென் றருளத் தரணியில்வீழ்ந்
"தெம்பெற் றிமையால் செய்தன இங் கெல்லாம் இசைய வேண்டும்"என

பெருமாள் வேண்ட எதிர்மறுக்க மாட்டார் அன்பிற் பெருந்தகையார்
திருமா நெடுந்தோள் உதியர்பிரான் செய்த எல்லாங் கண்டிருந்தார்
அருமா னங்கொள் பூசனைகள் அடைவே எல்லாம் அளித்ததற்பின்
ஒருமா மதிவெண் குடைவேந்த ருடனே அமுது செய்துவந்தார்.

சேர ருடனே திருஅமுது செய்த பின்பு கைகோட்டி
ஆரம் நறுமென் கலவைமான் மதச்சாந் தாடை அணிமணிப்பூண்
ஈர விரைமென் மலர்ப்பணிகள் இனைய முதலா யினவருக்கம்
சார எடுத்து வன்தொண்டர்ச் சாத்தி மிக்க தமக்காக்கி. கடிக

பாடல் ஆடல் இன்னியங்கள் பயிறல் முதலாம் பண்ணேயினில்
நீடும் இனிய விநோதங்கள் நெருங்கு காலந் தொறுநிகழ
மாடு விரைப்பூந் தருமணஞ்செய் ஆரா மங்கள் வைகுவித்துக்
கூட முனைப்பா டியர்கோவைக் கொண்டு மகிழ்ந்தார் கோதையார்.கடிச

வேறு

சேண்டாடுந் தொழில்மகிழ்வுஞ் சிறுசோற்றுப் பெருஞ்சிறப்பும்
வண்டாடு மலர்வாவி மருவியநீர் விளையாட்டும்
தண்டாமும் மதகும்பத் தடமலைப்போர் சலமற்போர்
கண்டாரா விருப்பெய்தக் காவலனார் காதல்செய்நாள். கடிடி

3908 நாவலர்தம் பெருமானும் திருவாரூர் நகராளரும்
தேவர்பிரான் கழலொருநாள் மிகநினைந்த சிந்தையராய்
"ஆவியைஆ ரூரானே மறக்கலுமா மே"என்னும்
மேவியசொற் றிருப்பதிகம் பாடியே வெருவுற்றார். கருசூ

3909 திருவாரூர் தனைநினைந்து "சென்றுதொழு வேன்"என்று
மருஆர்வத் தொண்டருடன் வழிக்கொண்டு செல்பொழுதில்
ஒருவாநண் புள்ளுருக உடனெழுந்து கைதொழுது
பெருவான வரம்பனார் பிரிவாற்றார் பின்செல்வார். கருள

3910 வன்தொண்டர் முன்னெய்தி மனமழிந்த உணர்வினராய்
"இன்றுமது பிரிவாற்றேன் என்செய்கேன் யான்"என்ன
"ஒன்றுநீர் வருந்தாதே உமதுபதி யின்கணிருந்
தன்றினார் மூனைமுருக்கி அரசாளரும்" எனமொழிந்தார். கருஅ

3911 ஆரூரர் மொழிந்தருள அதுகேட்ட அருட்சேரர்
"பாரோடு விசும்பாட்சி எனக்(கு)உமது பாதமலர்
தேரூரும் நெடுவீதித் திருவாரூர்க் கெழுந்தருள
நேரூரும் மனக்காதல் நீக்கவும்அஞ் சுவன்"என்றார். கருக

3912 மன்னவனார் அதுமொழிய வன்தொண்டர் எதிர்மொழிவார்
"என்னுயிருக் கின்னுயிராம் எழிலாரூர்ப் பெருமானே
வன்நெஞ்சக் கள்வனேன் மறந்திரேன் மதியணிந்தார்
இன்னருளால் அரசளிப்பீர் நீர்இருப்பீர்" எனஇறைஞ்ச. கசுO

3913 மற்றவரும் பணிந்திசைந்தே மந்திரிகள் தமைஅழைத்துப்
"பொற்புநிறை தொன்னகரில் இற்றைக்கு முன்புகுந்த
நற்பெரும்பண் டாரநா னுவருக்க மானவெலாம்
பற்பலவாம் ஆளின்மிசை ஏற்றிவரப் பண்ணும்"என. கசுக

3914 ஆங்கவரும் அன்றுவரை ஆயமா கியதனங்கள்
ஓங்கியபொன் நவமணிகள் ஒளிர்மணிப்பூண் துகில்வருக்கம்
ஞாங்கர்நிறை விரையுறுப்பு வருக்கமுதல் நலஞ்சிறப்பத்
தாங்குபொதி வினைஞர்மேல் தலமலியக் கொண்டணைந்தார். கசுஉ

3915 மற்றவற்றின் பரப்பெல்லாம் வன்தொண்டர் பரிசனத்தின்
முற்படவே செலவிட்டு முனைப்பாடித் திருநாடர்
பொற்பதங்கள் பணிந்தவரைத் தொழுதெடுத்துப் புனைஅலங்கல்
வெற்புயர்தோ ளுறத்தழுவி விடைஅளித்தார் வன்தொண்டர். கசுங

3916 ஆரூரர் அவர்தமக்கு விடைஅருளி அங்ககன்று
காரூரு மலைநாடு கடந்தருளிக் கற்சுரமும்
நீரூருங் கான்யாறும் நெடுங்கானும் பலகழியச்
சீரூருந் திருமுருகன் பூண்டிவழிச் செல்கின்றார். கசுச

பா.வே.[illegible]

3917 திருமுருகன் பூண்டிஅயற் செல்கின்ற போழ்தின்கண்
பொருவிடையார் நம்பிக்குத் தாமேபொன் கொடுப்பதலால்
ஒருவர்கொடுப் பக்கொள்ள ஒண்ணுமைக் கதுவாங்கிப்
பெருகருளால் தாங்கொடுக்கப் பெறுவதற்கோ அதுஅறியோம். கசுரு

3918 வென்றிமிகு பூதங்கள் வேடர்வடி வாய்ச்சென்று
வன்தொண்டர் பண்டாரம் கவரஅருள் வைத்தருள
அன்றினார் புரமெரித்தார் அருளால்வேட் டுவப்படையாய்ச்
சென்றவர்தாம் வரும்வழியில் இருபாலுஞ் செயிர்த்தெழுந்து. கசுசு

3919 வில்வாங்கி அலகம்பு விசைநாணிற் சந்தித்துக்
"கொல்வோம்இங் கிட்டுப்போம்" எனக்கோபத் தாற்குத்தி
எல்லையில்பண் டாரமெலாங் கவர்ந்துகொள இரிந்தோடி
அல்லலுடன் பறியுண்டார் ஆரூரர் மருங்கணைந்தார். கசுள

3920 ஆரூரர் தம்பால்அவ் வேடுவர்சென் றணையாதே
நீரருஞ் செஞ்சடையார் அருளினால் நீங்கஅவர்
சேரூராம் திருமுருகன் பூண்டியினிற் சென்றெய்திப்
போரூரு மழவிடையார் கோயிலைநா டிப்புக்கார். கசுஅ

3921 அங்கணர்தங் கோயிலினை அஞ்சலிகூப் பித்தொழுது
மங்குலுற நீண்டதிரு வாயிலினை வந்திறைஞ்சிப்
பொங்குவிருப் புடன்புக்கு வலங்கொண்டு புனிதநதி
திங்கள்முடிக் கணிந்தவர்தந் திருமுன்பு சென்றணைந்தார். கசுக

3922 உருகியஅன் பொடுகைகள் குவித்துவிழுந் தமைபாகம்
மருவியதம் பெருமான்முன் வன்தொண்டர் பாடினார்
"வெருவுறவே டுவர்பறிக்கும் வெஞ்சுரத்தில் எத்துக்கிங்
கருகிருந்தீர்? எனக்"கோடே வெஞ்சிலை"அஞ் சொற்பதிகம். களo

3923 பாடியவர் பரவுதலும் பரம்பொருளாம் அவரருளால்
வேடுவர்தாம் பறித்தபொரு ளனைவையெல்லாம் விண்ணிறைந்த
நீடுதிரு வாயிலின்முன் குவித்திடலும் நேரிறைஞ்சி
ஆடுமவர் திருவருளால் அப்படியே கைக்கொண்டார். களக

3924 கைக்கொண்டு கொடுபோம்அக் கைவினைஞர் தமைஏவி
மைக்கொண்ட மிடற்றுரை வணங்கிப்போய்க் கொங்கணன்று
மெய்க்கொண்ட காதலினால் விரைந்தேகி மென்கரும்புஞ்
செய்க்கொண்ட சாலியுஞ்சூழ் திருவாரூர் சென்றணைந்தார். களஉ

3925 நாவலர்மன் னவர்அருளால் விடைகொண்ட நரபதியார்
ஆவியின்ஒன் முகண்பின் ஆரூரர் தமைநினைந்து
மாவலரு மலர்ச்சோலை மகோதையினில் மன்னிமலைப்
பூவலயம் பொதுநீக்கி அரசுரிமை புரிந்திருந்தார். களங

ப.ர. ஐ.ர. இதனினை. 2 புலர் திருந்தார்.

3924 இன்னிலைமை உதியர்பிரான் எம்பிரான் வன்தொண்டர்
பொன்னிவள நாடகன்று மகோதையினில் மேற்புகுந்து
மன்னுதிருக் கயிலையினில் மதவரைமேல் எழுந்தருள
முன்னர்வயப் பரிஉகைக்குந் திருத்தொழில்பின் மொழிகின்றும்.

3925 மலைமலிந்த திருநாட்டு மன்னவனார் மாகடல்போல்
சிலைமலிந்த கொடித்தானைச் சேரலனார் கழல்போற்றி
நிலைமலிந்த மணிமாட நீள்மறுகு நான்மறைசூழ்
கலைமலிந்த புகழ்க்காழிக் கணநாதர் திறமுரைப்பாம். கஎடு

திருவிருத்தம் - ங, கூஉள்.

38. கணநாத நாயனார் புராணம்

3926 ஆழி மாநிலத் தகிலமீன் றளித்தவள் திருமூலை அமுதுண்ட
வாழி ஞானசம் பந்தர்வந் தருளிய வனப்பின தளப்பில்லா
ஊழி மாகடல் வெள்ளத்து மிதந்துல கினுக்கொரு முதலாய
காழி மாநகர்த் திருமறை யவர்குலக் காவலர் கணநாதர். க

3927 ஆய அன்பர்தாம் அணிமதிற் சண்பையில் அமர்பெருந் திருத்
தோணி, நாய னார்க்குநற் றிருப்பணி யாயின நாளும்அன் பொடு
செய்து, மேய அத்திருத் தொண்டினில் விளங்குவார் விரும்பிவந்
தணைவார்க்குத், தூய கைத்திருத் தொண்டினில் அவர்தமைத் துறை
தொறும் பயில்விப்பார். உ

3928 நல்ல நந்தன வனப்பணி செய்பவர் நறுந்துணர் மலர்கொய்வோர்
பல்ப ணித்தொடை புனைபவர் கொணர்திரு மஞ்சனப் பணிக்குள்ளோர்
அல்லு நன்பக லுந்திரு அலகிட்டுத் திருமெழுக் கமைப்போர்கள்
எல்லை யில்விளக் கெரிப்பவர் திருமுறை எழுதுவோர் வாசிப்போர்.

3929 இனைய பஃறிருப் பணிகளில் அணைந்தவர்க் கேற்றஅத் திருத்
தொண்டின், வினைவி ளங்கிட வேண்டிய குறைஎலாம் முடித்துமே
விடச்செய்தே, அனைய அத்திறம் புரிதலின் தொண்டரை ஆக்கிஅன்
புறுவாய்மை, மனைய றம்புரிந் தடியவர்க் கின்புற வழிபடுந் தொழில்
நிக்கார். ச

3930 இப்பெ ருஞ்சிறப் பெய்திய தொண்டர்தாம் ஏறுசீர் வளர்காழி
மெய்ப்பெ ருந்திரு ஞானபோ னகர்கழல் மேவிய விருப்பால்மே
மூப்பெ ரும்பொழு தருச்சனை வழிபாடு மூளும்அன் பொடுநாளும்
ஒப்பில் காதல்கூர் உளங்களி சிறந்திட ஒழுகினார் வழுவாமல். ரு

பா. இ. 1. மூலை இன்மை. 2. மாமனை கூ 9.

3933 ஆன தொண்டினில் அமர்ந்தபே ரன்பரும் அகலிடத் தினிலென்றும்
ஞான மூண்டவர் புண்டரீ கக்கழல் அருச்சனை நலம்பெற்றுத்
தூந றுங்கொன்றை முடியவர் சுடர்நெடுங் கயிலைமால் வரைஎய்தி
மான நற்பெருங் கணங்கட்கு நாதராம் வழித்தொண்டின் நிலைபெற்றார்.

3934 உலக முய்யநஞ் சுண்டவர் தொண்டினில் உறுதிமெய் யுணர்வெய்தி
அலகில் தொண்டருக் கறிவளித் தவர்திறம் அவனியின் மிசையாக்கும்
மலர்பெ ரும்புகழ்ப் புகலியில் வருங்கண நாதனார் கழல்வாழ்த்திக்
குலவு நீற்றுவண் கூற்றுவ னார்திறங் கொள்கையின் மொழிகின்றாம்.

ஆ திருவிருத்தம் - ஈ;கஙஈ.

39 கூற்றுவ நாயனார் புராணம்

3935 துன்னார் முனைகள் தோள்வலியால் வென்று சூலப் படையார்தம்
கன்ன மந்தர் திருநாவில் நாளும் நவிலும் நலமிக்கார்
பன்னள் ஈசர் அடியார்தம் பாதம் பரவிப் பணிந்தேத்தி
மூன்ன கியநற் றிருத்தொண்டின் மூயன்றார் களந்தை முதல்வனார்.

3936 அருளின் வலியால் அரசொதுங்க அவனி எல்லாம் அடிப்படுப்பார்
பொருளின் முடிவுங் காண்பரிய வகையால் பொலிவித் திகல்சிறக்க
மருளுங் களிறு பாய்புரவி மணித்தேர் படைஞர் முதல்மாற்றார்
வெருளுங் கருவி நான்குநிறை வீரச் செருக்கின் மேலானார். உ

3937 வென்றி விஞையின் மீக்கூர வேந்தர் முனைகள் பலமுருக்கிச்
சென்று தும்பைத் தறைமுடித்துஞ் செருவில் வாகைத்திறங்கெழுமி
மன்றல் மாலை மிலைந்தவர்தம் வளநா டெல்லாங் கவர்ந்துமுடி
ஒன்றும் ஒழிய அரசர்திரு எல்லாம் உடைய ராயினார். ங

3938 மல்லல் ஞாலம் புரக்கின்றார் மணிமா மவுலி புனைவதற்குத்
தில்லை வாழுந் தணர்தம்மை வேண்ட அவரும் "செம்பியர்தம்
தொல்லை நீடுங் குலமுதலோர்க் கன்றிச் சூட்டோம் முடி" என்று
நல்கா ராகிச் சேரலன்றன் மலைநா டனைய நண்ணுவார். ச

3939 ஒருமை உரிமைத் தில்லைஅந் தணர்கள் தம்மில் ஒருகுடியைப்
பெருமை முடியை அருமைபுரி காவல் பேணும் படிஇருத்தி
இருமை மரபுந் தூயவர்தாஞ் சேரர் நாட்டில் எய்தியபின்
வரும்ஐ யுறவால் மனந்தளர்ந்து மன்னுள் ஆடும்கழல்பணிவார். ஞ

3940 அற்றை நாளில் இரவின்கண் "அடியேன் தனக்கு முடியாகப்
பெற்ற பேறு மலர்ப்பாதம் பெறவே வேண்டும்" எனப்பரவும்

பா.வே.1 திருநின்றமேனி. 2 தொழுபணிந்தார்.

பற்று விடாது துயில்வோர்க்குக் கனவில் பாத மலரளிக்க
உற்ற அருளால் அவைதாங்கி உலகம் எல்லாந் தனிப்புரந்தார். கூ

அம்பொன் நீடும் அம்பலத்துள் ஆரா அமுதத் திருநடஞ்செய்
தம்பி ரானுர் புவியில்மகிழ் கோயில் எல்லாந் தனித்தனியே
இம்பர் ஞாலம் களிகூர எய்தும் பெருமூ சனேஇயற்றி
உம்பர் மகிழ அரசளித்தே உமையாள் கணவன் அடிசேர்ந்தார். எ

காதற் பெருமைத் தொண்டின்நிலைக் கடல்சூழ் வையங் காத்தளித்துக்
கோதங் ககல முயல்களந்தைக் கூற்ற னர்தங் கழல்வணங்கி
நாத மறைதந் தளித்தாரை நடைநூற் பாவில் நவின்றேத்தும்
போத மருவிப் பொய்யடிமை இல்லாப் புலவர் செயல்புகல்வாம். அ

தேனுங் குழலும் பிழைத்ததிரு மொழியாள் புலவி தீர்க்கமதி
தானும் பணியும் பகைதீர்க்குஞ் சடையார் தூது தருந்திருநாள்
கூனுங் குருடுந் தீர்த்தேவல் கொள்வார் குலவு மலர்ப்பாதம்
யானும் பரவித் தீர்க்கின்றேன் ஏழு பிறப்பின் மூடங்குகூன். கூ

திருவிருத்தம் - கூ,கூசகூ.

பா. பே. 1. இணை 1990.

அ. பொய்யடிமையில்லாத புலவர் சருக்கம்.

40 பொய்யடிமையில்லாத புலவர் புராணம்

"செய்யுள்நிகழ் சொற்றெளிவும் செவ்வியநூல் பலநோக்கும்
மெய்யுணர்வின் பயன்இதுவே" எனத்துணிந்து விளங்கியொளிர்
மையணியுங் கண்டத்தார் மலரடிக்கே ஆளானர்
பொய்யடிமை யில்லாத புலவரெனப் புகழ்மிக்கார். க

போற்பமைந்த அரவாரும் புரிசடையார் தமையல்லால்
சொற்பதங்கள் வாய்திறவாத் தொண்டுநெறித் தலைநின்ற
பெற்றியினில் மெய்யடிமை யுடையாராம் பெரும்புலவர்
மற்றவர்தம் பெருமையார் அறிந்துரைக்க வல்லார்கள். உ

ஆங்கவர்தம் அடியிணைகள் தலைமேற்கொண் டவனிஎலாம்
தாங்கியவெண் குடைவளவர் குலஞ்செய்த தவமணியார்
ஓங்கிவளர் திருத்தொண்டின் உண்மையுணர் செயல்புரிந்த
பூங்கழலார் புகழ்ச்சோழர் திருத்தொண்டு புகல்கின்றும். ங

ஆ திருவிருத்தம் - ங,ஙசஉ.

41. புகழ்ச்சோழ நாயனார் புராணம்

குலகிரியின் கொடுமுடிமேல் கொடிவேங்கைக் குறிஎழுதி
நிலவுதரு மதிக்குடைக்கீழ் நெடுநிலங்காத் தினிதளிக்கும்
மலர்புகழ்வண் தமிழ்ச்சோழர் வளநாட்டு மாமூதூர்
உலகில்வளர் அணிக்கெல்லாம் உள்ளுறையூ ராம்உறையூர். க

அளவில்பெரும் புகழ்நகரம் அதனில்அணி மணிவிளக்கும்
இளவெயிலின் சுடர்ப்படலை இரவொழிய எறிப்பனவாய்க்
கிளரொளிசேர் நெடுவானப் பேர்யாற்றுக் கொடிகெழுவும்
வளரொளிமா ளிகைநிரைகள் மருங்குடைய மற்றெல்லாம். உ

நாகதலத் தும்பிலத்தும் நானிலத்தும் நலஞ்சிறந்த
போகம்அனைத் தினுக்குறுப்பாம் பொருவிறந்த வளத்தினவாய்
மாகநிறைந் திடமலிந்த வரம்பில்பல பொருள்பிறங்கும்
ஆகமொத் தளஅளவில் ஆவணவீ திகளெல்லாம். ங

பார்ஈன்ய மதம்பொழிந்து பனிவிசும்பு கொளமுழங்கும்
போர்முகவெங் கறையடியும் புடையினமென் றடையவரும்

பார்ஈன்ய பனிவிசும்பு = 3 உலகில்வளர் அணிக்கெல்லாம்

சோர்மழையின் விடுமதத்துச் சுடருகெடு மின்னுடைக்
கார்முகிலும் பலதெரியா களிற்றுநிரைக் களமெல்லாம். ச

3942 படுமணியும் பரிச்செருக்கும் ஒலிகிளரப் பயில்புரவி
நெடுநிரைமுன் புல்லுண்வாய் நீர்த்தரங்க நுரைநிஞப்ப
விடுசுடர்மெய் யுறையடுக்கல் முகில்படிய விளங்குதலால்
தொடுகடல்கள் அணையபல துரங்கசா லகமெல்லாம். ஞ

3943 தூளக்கைஐரா வதக்களிறுந் துரங்கஅர சுந்திருவும்
விளைத்தஅமு துந்தருவும் விழுமணியுங் கொடுபோத
உளைத்தகடல் இவற்றொன்று பெறவேண்டி உம்பரூர்
வளைத்ததுபோன் றுளதங்கண் மதில்சூழ்ந்த மலர்க்கிடங்கு. கூ

3944 காரேறுங் கோபுரங்கள் கதிரேறும் மலர்ச்சோலை
தேரேறும் மணிவீதி திசையேறும் வசையிலணி
வாரேறும் முலைமடவார் மருங்கேறும் மலர்க்கணையொண்
பாரேறும் புகழ்உறந்தைப் பதியின்வளம் பகர்வரிதால். எ

3945 அந்நகரில் பாரளிக்கும் அடலரச ராகின்றூர்
மன்னுதிருத் தில்லைநகர் மணிவீதி அணிவிளக்கும்
சென்னிநீ டனபாயன் திருக்குலத்து வழிமுதலோர்
பொன்னிநதிப் புரவலனூர் புகழ்ச்சோழர் எனப்பொலிவார். அ

3946 ஒருகுடைக்கீழ் மண்மகளை உரிமையினில் மணம்புணர்ந்து
பருவரைத்தோள் வென்றியினல் பார்மன்னர் பணிகேட்பத்
திருமலர்த்தும் பேருலகுஞ் செங்கோலின் முறைநிற்ப
அருமறைச்சை வந்தழைப்ப அரசளிக்கும் அந்நாளில். கூ

3947 பிறைவளருஞ் செஞ்சடையார் பேணுசிவா லயமெல்லாம்
நிறைபெரும்பூ சனைவிளங்க நீடுதிருத் தொண்டர்தமைக்
குறையிரந்து வேண்டுவன குறிப்பின்வழி கொடுத்தருளி
முறைபுரிந்து திருநீற்று முதல்நெறியே பாலிப்பார். கo

3948 அங்கண்இனி துறையுநாள் அரசிறைஞ்ச வீற்றிருந்து
கொங்கொடு குடபுலத்துக் கோமன்னர் திறைகொணர
தங்கள்குல மரபின்முதற் றனிநகராங் கருவூரில்
மங்கலநாள் அரசுரிமைச் சுற்றமுடன் வந்தணைந்தார். கக

3949 வந்துமணி மதிற்கருவூர் மருங்கணைவார் வானவர்சூழ்
இந்திரன்வந் தமராபுரி எய்துவான் எனஎய்திச்
சிந்தைகளி கூர்ந்தரனூர் மகிழ்திருவா னிலைக்கோயில்
முந்துறவந் தணைந்திறைஞ்சி மொய்யொளிமா ளிகைபுகுந்தார். கஉ

3950 மாளிகைமுன் அத்தாணி மண்டபத்தின் மணிபுனைபொற்
கோளரிஆ சனத்திருந்து குடபுலமன் னவர்கொணர்ந்த

ஒளிநெடுங்களிற்றின் அணி உலப்பில்பரி துலக்கனகம்
நீளிடைவில் விலகுமணி முதல்நிறையுந் திறைகண்டார். கங

3960 திறைகொணர்ந்த அரசர்க்குச் செயலுரிமைத் தொழிலருளி
"முறைபுரியுந் தனித்திகிரி மூறைநில்லா முரண்அரசர்
உறைஅரணம் உளவாகில் தெரிந்துரைப்பீர்" எனஉணர்வு
நிறைமதிநீ டமைச்சர்க்கு மொழிந்தருளி நிகழுநாள். கச

3961 சென்றுசிவ காமியார் கொணர்திருப்பள் ளித்தாமம்
அன்றுமித முங்களிற்றை அறஎறிந்து பாகரையும்
கொன்றஎழி பத்தரெதிர் "என்னையுங்கொன் றருளும்"என
வென்றிவடி வாள்கொடுத்துத் திருத்தொண்டில் மிகச்சிறந்தார். கஞ

3962 விளங்குதிரு மதிக்குடைக்கீழ் வீற்றிருந்து பாரளிக்கும்
துளங்கொளிநீள் முடியார்க்குத் தொன்முறைமை நெறிஅமைச்சர்
"அளந்ததிறை முறைகொணரா அரசன்உளன் ஒருவன்"என
உளங்கொள்ளும் வகைஉரைப்ப உறுவியப்பால் முறுவலிப்பார். கசு

3963 "ஆங்கவன்யார்?" என்றருள "அதிகனவன் அணித்தாக
ஓங்கெயில்சூழ் மலைஅரணத் துள்ளுறைவான்" எனஉரைப்ப
"ஈங்குநமக் கெதிர்நிற்கும் அரணுளதோ! படைஎழுந்தப்
பாங்கரணந் துகளாகப் பற்றறுப்பீர்" எனப்பகர்ந்தார். கள

3964 அடல்வளவர் ஆணையினுல் அமைச்சர்களும் புறம்போந்து
கடலனைய நெடும்படையைக் கைவகுத்து மேற்செல்வார்
படர்வனமும் நெடுங்கிரியும் பயில்அரணும் பொடியாக
மிடலுடைநாற் கருவியுறு வெஞ்சமரம் மிகவிளைத்தார். கஅ

3965 வளவனுர் பெருஞ்சேனை வஞ்சிமலர் மிலைந்தேற
அளவில்அர ணக்குறும்பின் அதிகர்கோன் அடற்படையும்
உளநிறைவெஞ் சினந்திருகி உயர்காஞ்சிமிலைந்தேறக்
கிளர்கடல்கள் இரண்டென்ன இருபடையும் கிடைத்தனவால். கசு

வேறு

3966 கயமொடு க்யமெதிர் குத்தின
அயமுடன் அயமுனை முட்டின
வயவரும் வயவரு முற்றனர்
வியனமர் வியலிட மிக்கதே. உ0

3967 மலையொடு மலைகள் மலைந்தென
அலைமத அருவி கொழிப்பொடு
சிலையினர் விசையின் மிசைத்திறு
கொலைமத கரிகொலை யுற்றவே. உக

பா. பே. 1. களிற்றணியும் வளக்கிளரி. 2. துலைக்கனகம்
3 வழிநில்லா. 4 பற்றுவீர். 5 வெஞ்சமர்புனை
6 மலைந்தேற. மிலைந்தேற.

வேறு

3968 சூறை மாருதம் ஒத்திதிர்
ஏறு பாய்பரி வித்தகர்
வேறு வேறு தலைப்பெய்து
சீறி ஆவி செகுத்தனர். உஉ

3969 மண்டு போரின் மலைப்பவர்
துண்ட மாயிட உற்றெதிர்
கண்டர் ஆவி கழித்தனர்
உண்ட சோறு கழிக்கவே. உங

3970 வீடி னார்உட லிற்பொழி
நீடு வார்குரு திப்புனல்
ஓடும் ஆறென ஒத்தது
கோடு போல்வ பிணக்குவை. உச

3971 வானி லாவு கருங்கொடி
மேனி லாவு பருந்தினம்
ஏனை நீள்கழு கின்குலம்
ஆன ஊணெ டெழுந்தவே. உரு

வேறு

3972 வரிவிற் கதைசக் கரமுற் கரம்வாள்
சுரிகைப் படைசத் திகழுக் கடைவேல்
எரிமுத் தலைகப் பணமெற் பயில்கோல்
மூரிவுற் றனதுற் றனமொய்க் களமே. உசு

3973 வடிவே லதிகன் படைமா ளவரைக்
கடிசூழ் அரணக் கணவாய் நிரவிக்
கொடிமா மதில்நீ டுகுறும் பொறையூர்
முடிநே ரியனுர் படைமுற் றியதே. உள

3974 முற்றும் பொருசே னைமுனைத் தலையில்
கற்றிண் புரிசைப் பதிகட் டழியப்
பற்றுந் துறைநொச் சிபரிந் துடையச்
சுற்றும் படைவீ ரர்துணித் தனரே. உஅ

3975 மாறுற் றவிறற் படைவா ளதிகன்
நூறுற் றபெரும் படைநூ ழில்படப்
பாறுற் றனயிற் பதிபற் றறவிட்
டேறுற் றனன்ஓ டிஇருஞ் சுரமே. உக

3976 அதிகன் படைபோர் பொருதற் றதலைப்
பொதியின் குவைஎண் ணிலபோ யினபின்

பா. வே. எ. சாமிநாதன்.

நிதியின் குவைமங் கையர்நீள் பரிமா
எதிருங் கரிபற் றினர்எண் ணிலரே. ஈ0

3977 அரண்முற் றிஎறிந் தஅமைச் சர்கள்தாம்
இரணத் தொழில்விட் டெயில்சூழ் கருவூர்
மூரணுற் றஇறப் பொடுமுன் னினர்நீள்
தரணித் தலிவன் கழல்சார் வுறவே. ஈக

3978 மன்னுங் கருவூர் நகர்வா யிலின்வாய்
முன்வந் தகருந் தலிமொய் குவைதான்
மின்னுஞ் சுடர்மா முடிவேல் வளவன்
தன்முன் புகொணர்ந் தனர்தா னையுளோர். ஈஉ

3979 மண்ணுக் குயிரா மெனும்மன் னவனுர்
எண்ணிற் பெருகுந் தலியா வையினும்
நண்ணிக் கொணருந் தலியொன் றினடுக்
கண்ணுற்ற தோர்புன் சடைகண் டனரே. ஈஈ

வேறு

3980 கண்டபொழு தேநடுங்கி மனங்கலங்கிக் கைதாழுது
கொண்டபெரும் பயத்தினுடன் குறித்ததிர்சென் றதுகொணர்ந்த
திண்திறலோன் கைத்தலியில் சடைதெரியப் பார்த்தருளிப்
புண்டரிகத் திருக்கண்ணீர் பொழிந்திழியப் புரவலனுர். ஈச

3981 "மூரசுடைத்திண் படைகொடுபோய் முதலமைச்சர் முனைமுருக்கி
உரைசிறக்கும் புகழ்வென்றி ஒன்றுழிய ஒன்றுமல்
திரைசரித்த கடலுலகில் திருநீற்றின் நெறிபுரந்தியான்
அரசளித்த படிசால அழகி!"தென அழிந்தயர்வார். ஈடு

3982 "தூர்தாங்கிக் கடன்முடித்த சடைதாங்குந் திருமுடியார்
நீர்தாங்குஞ் சடைப்பெருமான் நெறிதாங்கண் டவரானுர்
சீர்தாங்கும் இவர்வேணிச் சிரந்தாங்கி வரக்கண்டும்
பார்தாங்க இருந்தேனெ பழிதாங்கு வேன்"என்றுர். ஈசு

3983 என்றருளிச் செய்தருளி இதற்கிசையும் படிதுணிவார்
நின்றநெறி அமைச்சர்க்கு "நீள்நிலங்காத் தரசளித்து
மன்றில்நடம் புரிவார்தம் வழித்தொண்டின் வழிநிற்ப
வென்றிமுடி என்குமரன் தணிப்புனிவீர்" எனவிதித்தார். ஈள

3984 அம்மாற்றங் கேட்டழியும் அமைச்சரையும் இடரகற்றிக்
கைம்மாற்றுஞ் செயல்தாமே கடனுற்றுங் கருத்துடையார்
செம்மார்க்கந் தலிநின்று செந்தீமுன் வளர்ப்பித்துப்
போய்ம்மாற்றுந் திருநீற்றுப் புனைகோலத் தினிற்பொலிந்தார். ஈஅ

3985 கண்டசடைச் சிரத்தினையோர் கனகமணிக் கலத்தேந்திக்
கொண்டுதிரு முடித்தாங்கிக் குலவும்எரி வலங்கொள்வார்
அண்டர்பிரான் திருநாமத் தஞ்செழுத்தும் எடுத்தோதி
மண்டுதழற் பிழம்பினிடை மகிழ்ந்தருளி உள்புக்கார். ஙக

3986 புக்கபொழு தலர்மாரி புவிநிறையப் பொழிந்திழிய
மிக்கபெரு மங்கலதூ ரியம்விசும்பின் முழக்கெடுப்பச்
செக்கர்நெடுஞ் சடைமுடியார் சிலம்பலம்பு சேவடியின்
அக்கருணைத் திருநிழற்கீழ் ஆசாமை அமர்ந்திருந்தார். சO

3987 மூரசங்கொள் கடற்றானை மூவேந்தர் தங்களின்முன்
பிரசங்கொள் நறுந்தாடையல் புகழ்ச்சோழர் பெருமையினைப்
பரசுங்குற் றேவலினால் அவர்பாதம் பணிந்தேத்தி
நரசிங்க முனையர்திறம் நாமறிந்த படிஉரைப்பாம். சக

ஆ திருவிருத்தம் ங,கஅள.

நரசிங்கமுனையரைய நாயனார் புராணம்

3988 கோடாத நெறிவிளக்கும் குலமரபில் அரசளித்து
மாடாக மணிகண்டர் திருநீறே மனங்கொள்வார்
தேடாத பெருவளத்தில் சிறந்ததிரு முனைப்பாடி
நாடாளுங் காவலனார் நரசிங்க முனையரையர். க

3989 இம்முனையர் பெருந்தகையார் இருந்தரசு புரந்துபோய்த்
தெம்முனைகள் பலகடந்து தீங்குநெறிப் பாங்கல
மும்முனைநீள் இலைச்சூல முதற்படையார் தொண்டுபுரி
அம்முனைவர் அடிஅடைவே அரும்பெரும்பே றென அடைவார். உ

3990 சினவிடையார் கோயில்தொறும் திருச்செல்வம் பெருக்குநெறி
யனஇடைஆர் உயிர்த்துறக்க வருமெனினும் அவைகாத்து
மனவிடைஆ மைத்தொடையல் அணிமார்பர் வழித்தொண்டு
கனவிடையா கிலும்வழுவாக் கடனுற்றிச் செல்கின்றார். ங

3991 ஆறணிந்த சடைமுடியார்க் காதிரைநாள் தொறுமென்றும்
வேறுநிறை வழிபாடு விளங்கியபூ சனைமேவி
நீறணியும் தொண்டர்அணைந் தார்க்கெல்லாம் நிகழ்பசும்பொன்
நூறுகுறை யாமல்அளித் தின்னமுது துகர்விப்பார். ச

3992 ஆனசெயல் முறைபுரிவார் ஒருதிருவா திரைநாளில்
மேன்மைநெறித் தொண்டர்க்கு விளங்கியபொன் னிடும்பொழுதில்

ச ந. ஏ. பி. மாடாத இலமரபில்.

மானநிலை அழிதன்மை வருங்காமக் குறிமலர்ந்த
ஊனநிகழ் மேனியராய் ஒருவர்நீ றணிந்தணைந்தார். நி

3993 மற்றவர்தம் வடிவிருந்த படிகண்டு மருங்குள்ளார்
உற்றஇகழ்ச் சியராகி ஒதுங்குவார் தமைக்கண்டு
கொற்றவனார் எதிர்சென்று கைகுவித்துக் கொடுபோந்தப்
பெற்றியினர் தமைமிகவுங் கொண்டாடிப் பேணுவார். சு

3994 சீலம்இல ரேனினுங் திருநீறு சேர்ந்தாரை
ஞாலம்இகழ்ந் தருநரகம் நண்ணுமல் எண்ணுவார்
பாலணிந்தார் தமக்களித்த படிஇரட்டிப் பொன்கொடுத்து
மேலவரைத் தொழுதினிய மொழிவிளம்பி விடைகொடுத்தார். எ

3995 இவ்வகையே திருத்தொண்டின் அருமைநெறி எங்ஙனும்
செவ்வியஅன் பினிலாற்றித் திருந்தியசிந் தையராகிப்
பைவளர்வாள் அரவணிந்தார் பாதமலர் நிழல்சேர்ந்து
மெய்வகைய வழிஅன்பின் மீளாத நிலைபெற்றார். அ

3996 விடநாகம் அணிந்தபிரான் மெய்த்தொண்டு விளைந்தநிலை
உடனுகும் நரசிங்க முனையர்பிரான் கழலேத்தித்
தடநாக மதஞ்சொரியத் தனஞ்சொரியுங் கலஞ்சேரும்
கடனுகை அதிபத்தர் கடனுகைக் கவினுரைப்பாம். சு

ஆ திருவிருத்தம் ஈ,ஈஈஈ.

43 அதிபத்த நாயனார் புராணம்

3997 மன்னி நீடிய செங்கதி ரவன்வழி மரபின்
தொன்மை யாம்முதற் சோழர்தந் திருக்குலத் துரிமைப்
பொன்னி நாடெனுங் கற்பகப் பூங்கொடி மலர்போல்
நன்மை சான்றது நாகப்பட் டினத்திரு நகரம். க

3998 தாம நித்திலக் கோவைகள் சரிந்திடச் சரிந்த
தேம லர்க்குழல் மாதர்பந் தாடுதெற் றிகள்சூழ்
காமர் பொற்சுடர் மாளிகைக் கருங்கடல் முகந்த
மாமு கிற்குலம் மலியென வறுவ மருங்கு. உ

3999 பெருமை யிற்செறி பேரொலி பிறங்கலின் நிறைந்து
திரும கட்குவாழ் சேர்விட மாதலின் யாவும்
தருத லின்கடல் தன்னினும் பெரிதெனத் திரைபோல்
கரிப ரித்தொகை மணிதுகில் சொரிவதாங் கலத்தால். ங

பா. ஓ.நி. பிறங்கலிற் நிறைந்து.

4000 நீடு தொல்புகழ் நிலம்பதி னெட்டினும் நிறைந்த
பீடு தங்கிய பலபொருள் மாந்தர்கள் பெருகிக்
கோடி நீள்தனக் குடியுடன் குவலயங் காணும்
ஆடி மண்டலம் போல்வதவ் வணிகினர் மூதூர். ச

4001 அங்கெ டுந்திரு நகர்மருங் கலைகடல் விளிம்பில்
பன்னெ டுந்திரை நுரைதவழ் பாங்கரின் ஞாங்கர்
மன்னு தொன்மையின் வலைவளத் துணைவினில் மலிந்த
தன்மை வாழ்குடி மிடைந்தது தடதுளைப் பாடி. நி

4002 புயல ளப்பன எனவலை புறம்பணை குரம்பை
அயல ளப்பன மீன்விலைப் பசும்பொனின் அடுக்கல்
வியல ளக்கரில் விடுந்திமில் வாழ்நர்கள் கொணர்ந்த
கயல ளப்பன பரத்தியர் கருநெடுங் கண்கள். சு

4003 உணங்கல் மீன்கவர் உறுநசைக் குருகுடன் அணைந்த
கணங்கொள் ஓதிமம் கருஞ்சிறைப் புன்னையங் கானல்
அணங்கு துண்ணிடை நுளைச்சியர் அசைநடைக் கழிந்து
மணங்கொள் கொம்பரின் மருங்குகின் றிழியல மருளும். எ

4004 வலைகெ டுந்தொடர் வடம்புடை வலிப்பவ ரொலியும்
விலைப கர்ந்துமீன் குவைகொடுப் பவர்விளி யொலியும்
தலைசி றந்தவெள் வளைசொரி பவர்தழங் கொலியும்
அலைகெ டுங்கடல் அதிரொலிக் கெதிரொலி அணைய. அ

4005 அணைய தாகிய அந்துளைப் பாடியில் அமர்ந்து
மனைவ ளம்பொலி நுளையர்தங் குலத்தினில் வந்தார்
புனைஇ ளம்பிறை முடியவர் அடித்தொண்டு புரியும்
வினைவி ளங்கிய அதிபத்தர் எனநிகழ் மேலோர். கூ

4006 ஆங்க வன்பர்தாம் நுளையர்தந் தலைவராய் அவர்கள்
ஏங்கு தெண்திரைக் கடலிடைப் பலபட வியக்கிப்
பாங்கு சூழ்வலை வளைத்துமீன் படுத்துமுன் குவிக்கும்
ஓங்கு பல்குவை உலப்பில உடையராய் உயர்வார். கo

4007 மூட்டில் மீன்கொலைத் தொழில்வளத் தவர்வலை முகந்து
பட்ட மீன்களில் ஒருதலை மீன்படு தோறும்
"நட்ட மாடிய நம்பருக்" கெனநளிர் முந்நீர்
விட்(டு) உவந்தனர் விடாதஅன் புடனென்றும் விருப்பால். கக

4008 வாகு சேர்வலை நாளொன்றில் மீனொன்று வரினும்
ஏக நாயகர் தங்கழற் கெனவிடும் இயல்பால்
ஆகு நாள்களில் அநேகநாள் அடுத்தொரு மீனே
மேக நீர்படி வேலையிற் படவிட்(டு) உவந்தார். கஉ

பா.வே.1. கணங்கொள் - தி. அணிநலை .
ப அதிபத்த எ ராமமீன்

மீன்வி லைப்பெரு குணவினில் மிகுபெருஞ் செல்வம்
தான்ம றுத்தலின் உணவின்றி அருங்கிளே சாம்பும்
பான்மை பற்றியும் வருந்திலர் பட்டமீன் ஒன்று
மான்ம றிக்கரத் தவர்கழற் கெளவிட்டு மகிழ்ந்தார். கஙூ

சால நாள்கள்இப் படிவரத் தாம்உண வயர்த்துக்
கோல மேனியுந் தளரவுந் தந்தோழில் குறையாச்
சீல மேதலே நின்றவர் தந்திறந் தெரிந்தே
ஆலம் உண்டவர் தொண்டர்அன் பெனும்அமு துண்பார். கச

ஆன நாளொன்றில் அவ்வொரு மீனும்அங் கொழித்துத்
தூநி றப்பசுங் கனகநற் சுடர்நவ மணியால்
மீனு றுப்புற அமைத்துல கடங்கலும் வியாம்
பான்மை அற்புதப் படியதான் றிடுவலைப் படுத்தார். கஙி

வாங்கு நீள்வலை அலைகடற் கரையில்வந் தேற
ஓங்கு செஞ்சுடர் உதித்தென உலகெலாம் வியப்பத்
தாங்கு பேரொளி தழைத்திடக் காண்டலும் எடுத்துப்
பாங்கு நின்றவர் "மீனொன்று படுத்தனம்" என்றார். ககூ

என்று மற்றுளோர் இயம்பவும் ஏறுசீர்த் தொண்டர்
"பொன்தி ரள்சுடர் நவமணி பொலிந்தமீன் உறுப்பால்
ஒன்றும் மற்றிது என்னைஆ ளுடையவர்க் காகும்
சென்று பொற்கழல் சேர்"கெனத் திரையொடுந் திரித்தார். கள

அகில லோகமும் பொருள்முதற் றுமெனும் அளவில்
புகலும் அப்பெரும் பற்றினைப் புரையற எறிந்த
இகலில் மெய்த்திருத் தொண்டர்முன் இறைவர்தாம் விடைமேல்
முகில்வி சும்பிடை அணைந்தனர் பொழிந்தனர் முகைப்பூ. கஅ

பஞ்ச நாதமும் எழுந்தன அதிபத்தர் பணிந்தே
அஞ்ச லிக்கரம் சிரமிசை அணைத்துநின் றவரை
நஞ்சு வாண்மணி மிடற்றவர் சிவலோகம் நண்ணி
அஞ்சி றப்புடை அடியர்பாங் குறத்தலை அளித்தார். ககூ

தம்ம றம்புரி மரபினில் தகும்பெருந் தொண்டு
மெய்ம்மை யேபுரி அதிபத்தர் விளங்குதாள் வணங்கி
மும்மை யாகிய புவனங்கள் முறைமையிற் போற்றும்
செம்மை நீதியார் கலிக்கம்பர் திருத்தொண்டு பகர்வாம். உ0

ஆ திருவிருத்தம் — ச,0கக.

பா.வே.1. ஒளையல்வ்கத்2. உஞ்சிறப்புணட.

44 கலிக்கம்ப நாயனார் புராணம்

—∞—

4017 உரிமை ஒழுக்கந் தலைநின்ற உயர்தொன் மரபில் நீடுமனைத்
தரும நெறியால் வாழ்குடிகள் தழைத்து வளருந் தன்மையதாய்
வருமஞ் சுறையும் மலர்ச்சோலை மருங்கு சூழ்ந்த வளம்புறவில்
பெருமை யுலகு பெறவிளங்கும் மேல்பாற் பெண்ணை கடமூரூர். க

4018 மற்றப் பதியி னிடைவாழும் வணிகர் குலத்து வந்துதித்தார்
கற்றைச் சடையார் கழற்காத லுடனே வளர்ந்த கருத்துடையார்
அற்றைக் கன்று தூங்கானை மாடத் தமர்ந்தார் அடித்தொண்டு
பற்றிப் பணிசெய் கலிக்கம்பர் என்பார் மற்றோர் பற்றில்லார். உ

4019 ஆன அன்பர் தாமென்றும் அரனூர் அன்பர்க் கமுதுசெய
மேன்மை விளங்கு போனகமும் விரும்பு கறிநெய் தயிர்தீம்பால்
தேனின் இனிய கனிகட்டி திருந்த அமுது செய்வித்தே
ஏனை நிதியம் வேண்டுவன எல்லாம் இன்ப முறஅளிப்பார். ங

4020 அன்ன வகையால் திருத்தொண்டு புரியு நாளில் அங்கொருநாள்
மன்னு மனையில் அமுதுசெய வந்த தொண்டர் தமைஎல்லாம்
தொன்மை முறையே அமுதுசெயத் தொடங்கு விப்பார் அவர்தம்மை
முன்னர் அழைத்துத் திருவடிகள் எல்லாம் விளக்க முயல்கின்றார். ச

4021 திருந்து மனையார் மனையெல்லாந் திகழ விளக்கிப் போனகமும்
பொருந்து சுவையிற் கறியமுதும் புனிதத் தண்ணீ ருடன்மற்றும்
அருந்தும் இயல்பில் உள்ளனவும் அமைத்துக் கரக நீரளிக்க
விரும்பு கணவர் பெருந்தவர்தாள் எல்லாம் விளக்கும் பொழுதின்கண். ஞ

4022 முன்பு தமக்குப் பணிசெய்யுந் தமராய் ஏவல் முனிந்துபோய்
என்பும் அரவும் அணிந்தபிரான் அடியா ராகி அங்கெய்தும்
அன்ப ருடனே திருவேடக் தாங்கி அணைந்தார் ஒருவர்தாம்
பின்பு வந்து தோன்றஅவர் பாதம் விளக்கும் பெருந்தகையார். ட

4023 கையால் அவர்தம் அடிபிடிக்கக் காதல் மனையார் "முன்பேவல்
செய்யா தகன்ற தமர்போலும்" என்று தேரும் பொழுதுமலர்
மொய்யார் வாசக் கரகநீர் வார்க்க முட்ட முதற்றெரிண்டார்
மையார் கூந்தல் மனையாரைப் பார்த்து மனத்துட் கருதுவார். எ

4024 "வேறித்த கொன்றை முடியார்தம் அடியார் இவர்முன் மேவுகிலே
குறித்து வெள்கி நீர்வாரா தொழிந்தாள்" என்று மனங்கொண்டு
மறித்து நோக்கார் வடிவாளை வாங்கிக் கரகம் வாங்கிக்கை
தறித்துக் கரக நீரெடுத்துத் தாமே அவர்தாள் விளக்கினார். அ

4025 விளக்கி அமுது செய்வதற்கு வேண்டு வனதா மேசெய்து
துளக்கில் சிந்தை யுடன்தொண்டர் தம்மை அமுது செய்வித்தார்

பாடபேதம் தறித்துக்கொண்டு.

அளப்பில் பெருமை யவர்பின்னும் அடுத்த தொண்டின் வழிநின்று
களத்தில் நஞ்சம் அணிந்தவர்தாள் நிழற்கீழ் அடியா ருடன்கலந்தார்.

ஓத மலிநீர் விடமுண்டார் அடியார் வேடம் என்றுணரா
மாத ரார்கை தடிந்தகலிக் கம்பர் மலர்ச்சே வடிவணங்கிப்
பூத நாதர் திருத்தொண்டு புரிந்து புவனங் களிற்பொலிந்த
காத லன்பர் கலிநீதி யார்தம் பெருமை கட்டுரைப்பாம். கo

ஆ திருவிருத்தம்-ச,oஉசு.

45 கலிய நாயனார் புராணம்

பேருலகில் ஓங்குபுகழ்ப் பெருந்தொண்டை நன்னாட்டு
நீருலவுஞ் சடைக்கற்றை நிருத்தர்திருப் பதியாகும்
காருலவு மலர்ச்சோலைக் கன்னிமதில் புடைசூழ்ந்து
தேருலவு நெடுவீதி சிறந்ததிரு ஒற்றியூர். க

மீடுகெழும் பெருந்தெருவும் புத்தருடன் மீலிஅமண்
வேடமுடை யவர்பொருள்போல் ஆகாச வெளிமறைக்கும்
ஆடுகொடி மணிநெடுமா ளிகைநிரைகள் அலைகமுகின்
காடணைய கடல்படப்பை எனவிளங்குங் கவின்காட்டும். உ

பன்னுதிருப் பதிகஇசைப் பாட்டோவா மண்டபங்கள்
அன்னநடை மடவார்கள் ஆட்டோவா அணிஅரங்கு
பன்முறைதா ரியமுழங்கு விழவோவா பயில்வீதி
செந்நெல்அடி சிற்பிறங்கல் உணீவோவா திருமடங்கள். ங

கெழுமலர்மா தவிபுன்னை கிளைஞாழல் தளைஅவிழும்
கொழுமுகைய சண்பகங்கள் குளிர்செருந்தி வளர்கைதை
முழுமணமே முந்நீரும் கமழமலர் முருகுயிர்க்கும்
செழுநிலவின் துகளனைய மணற்பரப்புந் திருப்பரப்பு. ச

எயிலணையும் முகில்முழக்கும் எறிதிரைவே லியின்முழக்கும்
பயில்தருபல் லியமுழக்கும் முறைதெரியாப் பதியதனுள்
வெயிலணிபன் மணிமுதலாம் விழுப்பொருளா வனவிளக்கும்
தயிலவிளைத் தொழில்மரபில் சக்கரப்பா டித்திருவு. ஞ

அக்குலத்தின் செய்தவத்தால் அவனிமிசை அவதரித்தார்
மிக்கபெருஞ் செல்வத்து மீக்கூர விளங்கினார்
தக்கபுகழ்க் கலியனார் எனுநாமந் தலைநின்றார்
முக்கண்இறை வர்க்குரிமைத் திருத்தொண்டின் நெறிமுயல்வார். சு

மண்டபமும் அவதரித்து

4037 எல்லையில்பல் கோடிதனத் திறைவராய் இப்படித்தாம்
செல்வநெறிப் பயனறிந்து திருவொற்றி யூரமர்ந்த
கொல்லைமழ விடையார்தங் கோயிலின்உள் ளும்புறம்பும்
அல்லுநெடும் பகலும்இடுந் திருவிளக்கின் அணிவிளைத்தார். எ

4038 எண்ணில்திரு விளக்குநெடு நாளெல்லாம் எரித்துவரப்
புண்ணியமெய்த் தொண்டர்செயல் புலப்படுப்பார் அருளாலே
உண்ணிறையும் பெருஞ்செல்வம் உயர்த்தும்வினைச் செயல்ஓவி
மண்ணில்அவர் இருவினைபோல் மாண்டதுமாட் சிமைத்தாக. அ

4039 திருமலிசெல் வத்துழனி தேய்ந்தழிந்த பின்னையுந்தம்
பெருமைநிலைத் திருப்பணியில் பேராத பேராளர்
வருமரபில் உள்ளோர்பால் எண்ணெய்மா றிக்கொணர்ந்து
தருமியல்பிற் கூலியினல் தமதுதிருப் பணிசெய்வார். கூ

4040 வளமுடையார் பால்எண்ணெய் கொடுபோய்மா றிக்கூலி
கொளமுயலுஞ் செய்கையும்மற் றவர்கொடா மையின்மாறத்
தளருமன முடையவர்தாஞ் சக்கரளந் திரம்புரியும்
களனில்வரும் பணிசெய்து பெறுங்கூலி காதலித்தார். கo

4041 சேக்குநிறை எள்ளாட்டிப் பதமறிந்து திலதயிலம்
பக்கமெழ மிகவுழந்தும் பாண்டில்வரும் எருதுய்த்தும்
தக்கதொழில் பெறுங்கூலி தாங்கொண்டு தாழாமை
மிக்கதிரு விளக்கிட்டார் விழுத்தோண்டு விளக்கிட்டார். கக

4042 அப்பணியால் வரும்பேறும் அவ்வினைஞர் பலருளராய்
எப்பரிசுங் கிடையாத வகைமுட்ட இடருழந்தே
ஒப்பில்மனை விற்றெரிக்கும் உறுபொருளும் மாண்டதற்பின்
செப்பருஞ்சீர் மனையாளை விற்பதற்குத் தேடுவார். கஉ

4043 மனமகிழ்ந்து மனைவியார் தமைக்கொண்டு வளநகரில்
தனமளிப்பார் தமைஎங்குங் கிடையாமற் றளர்வெய்திச்
சினவிடையார் திருக்கோயில் திருவிளக்குப் பணிமுட்டக்
கனவினுமுன் பறியாதார் கையறவால் எய்தினார். கங

4044 பணிகொள்ளும் படம்பக்க நாயகர்தங் கோயிலினுள்
அணிகொள்ளுந் திருவிளக்குப் பணிமாறும் அமையத்தில்
"மணிவண்ணச் சுடர்விளக்கு மாளில்யான் மாள்வன்" எனத்
துணிவுள்ளங் கொளநினைந்தவ் வினைமுடிக்கத் தொடங்குவார். கச

4045 திருவிளக்குத் திரிஇட்டங் ககல்பரப்பிச் செயல்நிரம்ப
ஒருவியஎண் ணெய்க்கீடா உடல்உதிரங் கொடுநிறைக்கக்
கருவியினல் மிடறரிய, அக்கையைக் கண்ணுதலார்
பெருகுதிருக் கருணையுடன் நேர்வந்து பிடித்தருளி. கரு

பா. பே. பா. எண்ணெய்க் கிடைமை

மற்றவர்தம் முன்னுக மழவிடைமேல் எழுந்தருள
உற்றவூ றதுநீங்கி ஒளிவிளங்க உச்சியின்மேல்
பற்றியஞ் சலியினராய் நின்றவரைப் பரமர்தாம்
பொற்புடைய சிவபுரியில் பொலிந்திருக்க அருள்புரிந்தார். ககூ

தேவர்பிரான் திருவிளக்குச் செயல்மூட்ட மிடறிரிந்து
மேவரிய வினைமுடித்தார் கழல்வணங்கி வியனுலகில்
யாவரெனை தானடியார் தமைஇகழ்ந்து பேசினரை
நாவரியுஞ் சத்தியார் திருத்தொண்டின் நலமுரைப்பாம். களை

ஆ திருவிருத்தம் - சoசஉ

சத்தி நாயனார் புராணம்

களமர் கட்ட கமலம் பொழிந்ததேன்
குளகி றைப்பது கோலொன்றி லெண்திசை
அளவும் ஆணைச் சயத்தம்பம் நாட்டிய
வளவர் காவிரி நாட்டு வரிஞ்சையூர். க

வரிஞ்சை யூரினில் வாய்மைவே ளாண்குலம்
பெருஞ்சி றப்புப் பெறப்பிறப் பெய்தினர்
விரிஞ்சன் மால்முதல் விண்ணவர் எண்ணவும்
அருஞ்சி லம்பணி சேவடிக் காட்செய்வார். உ

அத்த ராகிய அங்கணர் அன்பரை
இத்த லத்தில் இகழ்ந்தியம் பும்உரை
வைத்த நாவை வலித்தரி சத்தியால்
சத்தி யார்எனும் நாமமும் தாங்கினர். ங

தீங்கு சொற்ற திருவிலர் நாவினை
வாங்க வாங்குதண் டாயத்தி னுல்வலித்
தாங்க யிற்கத்தி யால்அரிந் தன்புடன்
ஓங்கு சீர்த்திருத் தொண்டி னுயர்ந்தனர். ச

அன்ன தாகிய ஆண்மைத் திருப்பணி
மன்னு பேருல கத்தில் வலியுடன்
பன்னெ டும்பெரு நாள்பரி வாற்செய்து
சென்னி ஆற்றினர் செந்நெறி ஆற்றினர். ஙு

ஐய மின்றி அரிய திருப்பணி
மெய்யி னுற்செய்த வீரத் திருத்தொண்டர்

ச. கை. 1. ஞாலவிளக்கும் 2. ஆண்டித் தொண்டரி.
3 நாமம் தரித்துளார்.

வைய முய்ய மணிமன்று ளாடுவார்
செய்ய பாதத் திருநிழல் சேர்ந்தனர். சு

4050 நாய னார்தொண் டரைநலங் கூறலார்
சாய நாவரி சத்தியார் தாள்பணிந்
தாய மாதவத் தையடி கள்எனுந்
தூய காடவர் தந்திறஞ் சொல்லுவாம். எ

ஆ திருவிருத்தம் - சஅடுo

4047

ஐயடிகள்காடவர்கோன் நாயனார் புராணம்

4052 வையகிழ் பல்லவர்தங் குலமரபின் வழித்தோன்றி
வெய்யகலி யும்பகையும் மிகையொழியும் வகைஅடக்கிச்
செய்யசடை யவர்சைவத் திருநெறியால் அரசளிப்பார்
ஐயடிகள் நீதியால் அடிப்படுத்துஞ் செங்கோலார். க

4053 திருமலியும் புகழ்விளங்கச் சேணிலத்தில் எவ்வுயிரும்
பெருமையுடன் இனிதமரப் பிறபுலங்கள் அடிப்படுத்துத்
தருமநெறி தழைத்தோங்கத் தாரணிமேற் சைவமுடன்
அருமறையின் துறைவிளங்க அரசளிக்கும் அந்நாளில். உ

4054 மன்னவரும் பணிசெய்ய வடநூல்தென் தமிழ்முதலாம்
பன்னுகலைப் பணிசெய்யப் பாரளிப்பார் "அரசாட்சி
இன்னல்"என இகழ்ந்ததனை எழிற்சுமரன் மேலிழிச்சி
நன்மைநெறித் திருத்தொண்டு நயந்தளிப்பா ராயினார். ங

4055 தோண்டுரிமை புரக்கின்றார் சூழ்வேலை உலகின்கண்
அண்டர்பிரான் அமர்ந்தருளும் ஆலயங்க ளானஎலாம்
கண்டிறைஞ்சித் திருத்தொண்டின் கடனேற்ற பணிசெய்தே
வண்தமிழின் மொழிவேண்பா ஒருசொன்று வழுத்துவார். ச

4056 பேருத்தழுகா தலில்வணங்கிப் பெரும்பற்றத் தண்புலியூர்த்
திருச்சிற்றம் பலத்தாடல் புரிந்தருளுஞ் செய்யசடை
நிருத்தனார் திருக்கூத்து நேர்ந்திறைஞ்சி நெடுந்தகையார்
விருப்பினுடன் செந்தமிழின் வேண்பாமென் மலர்புனைந்தார். ஞ

4057 அவ்வகையால் அருள்பெற்றங் கமர்ந்துசில நாள்வைகி
இவ்வுலகில் தம்பெருமான் கோயில்களெல் லாமெய்திச்
செவ்வியஅன் பொடுபணிந்து திருப்பணிவற் றனைசெய்தே
எவ்வுலகும் புகழ்ந்தேத்தும் இன்தமிழ்வெண் பாமொழிந்தார். ட

இந்நெறியால் அரனடியார் இன்பமுற இசைந்தபணி
பன்னெடுநாள் ஆற்றியபின் பரமர்திரு வடிநிழற்கீழ்
மன்னுசிவ லோகத்து வழிஅன்பர் மருங்கணைந்தார்
கன்னிமதில் சூழ்காஞ்சிக் காடவரை அடிகளார். எ

பையரவ மணியாரம் அணிந்தார்க்குப் பாவணிந்த
ஐயடிகள் காடவனார் அடியிணைத்தா மரைவணங்கிக்
கையணிமான் மழுவுடையார் கழல்பணிசிக் தினையுடைய
செய்தவத்துக் கணம்புல்லர் திருத்தொண்டு விரித்துரைப்பாம். அ

உளத்திலொரு துளக்கமிலோம் உலகுய்ய இருண்டதிருக்
களத்துமுது குன்றர்தரு கனகம்ஆற் றினில்விட்டு
வளத்தின்மலிக் தேழுலகும் வணங்குபெருந் திருவாரூர்க்
குளத்திலெடுத் தார்வினையின் குழிவாய்நின் றெனைஎடுத்தார். கூ

ஆ திருவிருத்தம் - சஅடுகூ.

கூ. கறைக்கண்டன் சருக்கம்

48 கணம்புல்ல நாயனார் புராணம்

திருக்கிளர்சீர் மாடங்கள் திருந்துபெருங் குடிநெருங்கிப்
பெருக்குவட வெள்ளாற்றுத் தென்கரைப்பால் பிறங்குபொழில்
வருக்கைநெடுஞ் சூலைபொழிதேன் மடுகிறைத்து வயல்விளைக்கும்
இருக்குவே ளூர்என்ப திவ்வுலகில் விளங்குபதி. க

அப்பதியில் குடிமுதல்வர்க் கதிபராய் அளவிறந்த
எப்பொருளும் முடிவறியா எய்துபெருஞ் செல்வத்தார்
ஒப்பில்பெருங் குணத்தினுல் உலகின்மேம் படநிகழ்ந்தார்
"மெய்ப்பொருளா வனஈசர் கழல்" என்னும் விருப்புடையார். உ

"தாவாத பெருஞ்செல்வந் தலைநின்ற பயன்இது" என்
றேவாத ஒளிவிளக்குச் சிவன்கோயி லுள்ளெரித்து
நாவாரப் பரவுவார் நல்குரவு வந்தெய்தத்
தேவாதி தேவர்பிரான் திருத்தில்லை சென்றடைந்தார். ங

தில்லைநகர் மணிமன்றுள் ஆடுகின்ற சேவடிகள்
அல்கியஅன் புடனிறைஞ்சி அமர்கின்றூர் புரமெரித்த
வில்லியார் திருப்புலீச் சரத்தின்கண் விளக்கெரிக்க
இல்லிடைஉள் ளனமாறி எரித்துவரும் அந்நாளில். ச

ஆயசெயல் மாண்டதற்பின் அயலவர்பால் இரப்பஞ்சிக்
காயமுயற் சியில்அரிந்த கணம்புல்லுக் கொடுவந்து
மேயவிலைக் குக்கொடுத்து விலைப்பொருளால் நெய்மாறித்
தூயதிரு விளக்கெரித்தார் துளக்கறுமெய்த் தொண்டனார். ஞ

இவ்வகையால் திருத்துவிளக் கெரித்துவர அங்கொருநாள்
மெய்வருந்தி அரிந்தெடுத்துக் கொடுவந்து விற்கும்புல்
எவ்விடத்தும் விலைபோகா தொழியவும்இப் பணியொழியார்
அவ்வரிபுல் லினைமாட்டி அணிவிளக்கா யிடஎரிப்பார். ட

முன்புதிரு விளக்கெரிக்கும் முறையாமங் குறையாமல்
மென்புல்லும் விளக்கெரிக்கப் போதாமை மெய்யான
அன்புபுரி வார்அடுத்த விளக்குத்தந் திருமுடியை
என்புருக மடுத்தெரித்தார் இருவினையின் தொடக்கெரித்தார். எ

தங்கள்பிரான் திருவுள்ளஞ் செய்துதலைத் திருவிளக்குப்
பொங்கியஅன் புடன்எரித்த பொருவில்திருத் தொண்டருக்கு

மங்கலமாம் பெருங்கருணை வைத்தருளச் சிவலோகத்
தெங்கள்பிரான் கணம்புல்லர் இனிதிறைஞ்சி அமர்ந்திருந்தார். அ

மூரியார் கலியுலகின் முடியிட்ட திருவிளக்குப்
பேரியா றணிந்தாருக் கெரித்தார்தங் கழல்பேணி
வேரியார் மலர்ச்சோலை விளங்குதிருக் கடவூரில்
காரியார் தாஞ்செய்த திருத்தொண்டு கட்டுரைப்பாம். கூ

ஆ திருவிருத்தம் ச,0கூஅ.

௯. காரி நாயனார் புராணம்

மறையாளர் திருக்கடவூர் வந்துதித்து வண்தமிழின்
துறையான பயன்தெரிந்து சொல்விளங்கப் பொருள்மறையக்
குறையாத தமிழ்க்கோவை தம்பெயராற் குலவும்வகை
முறையாலே தொகுத்தமைத்து மூவேந்தர் பால்பயில்வார். க

அங்கவர்தாம் மகிழும்வகை அடுத்தஉரை நயமாக்கிக்
கொங்கலர்தார் மன்னவர்பால் பெற்றநிதிக் குவைகொண்டு
வெங்கண்அரா வொடுகிடந்து விளங்கும்இளம் பிறைச்சென்னிச்
சங்கரனார் இனிதமருந் தானங்கள் பலசமைத்தார். உ

யாவர்க்கும் மனமுவக்கும் இன்பமொழிப் பயனியம்பித்
தேவர்க்கு முதற்றேவர் சீரடியார் எல்லார்க்கும்
மேவுற்ற இருநிதியம் மிகஅளித்து விடையவர்தம்
காவுற்ற திருக்கயிலை மறவாத கருத்தினராய். ங

ஏய்ந்தகடல் சூழுலகில் எங்குந்தம் இசைநிறுத்தி
ஆய்ந்தஉணர் விடையழ அன்பினராய் அணிகங்கை
தோய்ந்தகெடுஞ் சடையார்தம் அருள்பெற்ற தொடர்பினால்
வாய்ந்தமனம் போலுடம்பும் வடகயிலை மலைசேர்ந்தார். ச

வேரியார் மலர்க்கொன்றை வேணியார் அடிபேணும்
காரியார் கழல்வணங்கி அவரளித்த கருணையினால்
வாரியார் மதயானை வழுதியர்தம் மதிமரபில்
சீரியார் நெடுமாறர் திருத்தொண்டு செப்புவாம். ஞ

ஆ திருவிருத்தம் - ச,0எங

50 நின்றசீர் நெடுமாற நாயனார் புராணம்

4074 தடுமாறும் நெறியதனைத் தவமென்று தம்மூடலை
அடுமாறு செய்தொழுகும் அமண்வலையில் அகப்பட்டு
விடுமாறு தமிழ்விரகர் வினைமாறுங் கழலடைந்த
நெடுமாற னார்பெருமை உலகேழும் நிகழ்ந்ததால். க

4075 அந்நாளில் ஆளுடைய பிள்ளையார் அருளாலே
தென்னடு சிவம்பெருகச் செங்கோல்உய்த் தறம்அளித்துச்
சொன்னெம நெறிபோற்றிச் சுரர்நகர்க்கோன் தனைக்கொண்ட
பொன்னுரம் அணிமார்பிற் புரவலனார் பொலிகின்றார். உ

4076 ஆயஅர சளிப்பார்பால் அமர்வேண்டி வந்தேற்ற
சேயபுலத் தெவ்வரெதிர் நெல்வேலிச் செருக்களத்துப்
பாயபடைக் கடல்முடுகும் பரிமாவின் பெருவெள்ளம்
காயுமதக் களிற்றின்நிரை பரப்பிஅமர் கடக்கின்றார். ஊ

4077 எடுத்துடன்ற மூனைஞாட்பின் இருபடையிற் பொருபடைஞர்
படுத்தநெடுங் கரித்துணியும் பாய்மாவின் அறுகுறையும்
அடுத்தமர்செய் வயவர்கருந் தலைமலையும் அலைசெந்நீர்
மடுத்தகடல் மீளவுந்தாம் வடிவேல்வாங் கிடப்பெருக. ச

4078 வியப்பரியின் களிப்பொலியும் மறவர்படைக் கலஒலியும்
கயப்பொருப்பின் முழக்கொலியும் கலந்தெழுபல் வியஒலியும்
வியக்குமுகக் கடைநாளின் மேகமுழக் கெனமீளச்
சயத்தொடர்வல் லியும்இன்று தாம்விடுத் தம் படிதயங்க. ஞ

4079 தீயுமிழும் படைவழங்குஞ் செருக்களத்து முருக்குமுடல்
தோயுநெடுங் குருதிமடுக் குளித்துநிணந் துய்த்தாடிப்
போயபரு வம்பணிகொள் பூதங்க ளேயன்றிப்
பேயும்அரும் பணிசெய்ய உணவளித்த தெனப்பிறங்க. ட

4080 இனையகடுஞ் சமர்விளைய இகலுழந்த பறந்தலையில்
பனைநெடுங்கை மதயானைப் பஞ்சவனார் படைக்குடைந்து
முனையழிந்த வடபுலத்து முதல்மன்னர் படைசரியப்
புனையுநறுந் தொடைவாகை பூழியர்வேம் புடன்புனைந்து. எ

4081 வளவர்பிரான் திருமகளார் மங்கையருக் கரசியார்
களபமணி முலைதிளைக்குந் தடமார்பிற் கவுரியனார்
இளவளவெண் பிறைஅணிந்தார்க் கேற்றதிருத் தொண்டெல்லாம்
அளவில்புகழ் பெறவிளக்கி அருள்பெருக அரசளித்தார். அ

ப.ர. லே.1. அவர்களுக்கு 2. இளவளவனை.
3. தொண்டை எல்லாம்.

4086 திரைசெய்கடல் உலகின்கண் திருநீற்றின் நெறிவிளங்க
உரைசெய்பெரும் புகழ்விளக்கி ஓங்குநெடு மாறனார்
அரசுரிமை நெடுங்காலம் அளித்திறைவர் அருளாலே
பரசுபெருஞ் சிவலோகத் தின்புற்றுப் பணிந்திருந்தார். சூ

4087 பொன்மதில்சூழ் புகலிகா வலர்அடிக்கீழ்ப் புனிதராந்
தென்மதுரை மாறனார் செங்கமலக் கழல்வணங்கிப்
பன்மணிகள் திரையோதம் பரப்புநெடுங் கடற்படப்பைத்
தொன்மயிலை வாயிலார் திருத்தொண்டின் நிலைதொழுவாம். கூ

திருவிருத்தம் - ச;ூஅசு

51. வாயிலார் நாயனார் புராணம்

4088 சொல்வி ளங்குசீர்த் தொண்டைநன் னாட்டிடை
மல்லல் நீடிய வாய்மை வளம்பதி
பல்பெ ருங்குடி வீடு பரம்பரைச்
செல்வம் மல்கு திருமயி லாபுரி. ச

4089 நீடு வேலைதன் பால்நிதி வைத்திடத்
தேடும் அப்பெருஞ் சேமவைப் பாமென
ஆடு பூங்கொடி மாளிகை அப்பதி
மாடு தள்ளு மரக்கலச் செப்பினால். உ

4090 கலஞ்சொ ரிந்த கரிக்கருங் கன்முழுத்
தலம்பு மூன்நீர் படிந்தணி மேகமும்
நலங்கொள் மேதினன் னுகுந் தெரிக்கொணு
சிலம்பு தெண்திரைக் கானலின் சேணெலாம். ங

4091 தவள மாளிகைச் சாலி மருங்கிறைத்
துவள்ப தாகை நுழைந்தணி தூமதி
பவள வாய்மட வார்முகம் பார்த்தஞ்சி
உவள கஞ்சேர்ந் தொதுங்குவ தொக்குமால். ச

4092 வீதி எங்கும் விழாஅணிக் காலையர்
தூதி யங்குஞ் சுரும்பணி தோகையர்
ஓதி எங்கும் ஒழியா அணிநிதி
பூதி எங்கும் புனைமணி மாடங்கள். ஞ

4093 மன்னு சீர்மயி லைத்திரு மாநகர்த்
தொன்மை நீடிய சூத்திரத் தொல்குல

பா.வே.ப.ம.ஒப்பு நோக்கு.

நன்மை சான்ற நலம்பெறத் தோன்றினார்
தன்மை வாயிலார் என்னுந் தபோதனர். கூ

4090 வாயி லாரென நீடிய மாக்குடித்
தூய மாமர பின்முதல் தோன்றியே
நாய னார்திருத் தொண்டின் நயப்புறு
மேய காதல் விருப்பின் விளங்குவார். எ

வேறு

4091 மறவாமை யான்அமைத்த மனக்கோயில் உள்ளிருத்தி
உறவாதி தனையுணரும் ஒளிவிளக்குச் சுடரேற்றி
இறவாத ஆனந்தம் எனுந்திருமஞ் சனம்ஆட்டி
அறவாணர்க்(கு) அன்பென்னும் அமுதமைத்தர்ச் சனைசெய்வார். அ

4092 அகமலர்ந்த அர்ச்சனையில் அண்ணலார் தமைநாளும்
நிகழவரும் அன்பினுல் நிறைவழிபா டொழியாமே
திகழநெடு நாட்செய்து சிவபெருமான் அடிநிழற்கீழ்ப்
புகலமைத்துத் தொழுதிருந்தார் புண்ணியமெய்த் தொண்டனார். கூ

4093 நீரார்ஞ் சடையாரை நீடுமன ஆலயத்துள்
ஆராத அன்பினுல் அர்ச்சனைசெய் தடியவர்பால்
பேராத நெறிபெற்ற பெருந்தகையார் தமைப்போற்றிச்
சீரார்ந் திருநீடூர் முனைஅடுவார் திறமுரைப்பாம். கஅ

அ திருவிருத்தம் ச,அகங.

52. முனையடுவார் நாயனார் புராணம்

4094 மாறு கடிந்து மண்காத்த வளவர் பொன்னித் திருநாட்டு
நாறு விரைப்பூஞ் சோலைகளின் நனைவாய் திறந்து பொழிசெழுந்தேன்
ஆறு பெருகி வெள்ளமிடும் அள்ளல் வயலின் மள்ளர்உழும்
சேறு நறுவா சங்கமழுஞ் செல்வ நீடூர் திருநீடூர். க

4095 விளங்கும் வண்மை மிக்குள்ள வேளாண் தலைமைக் குடிமுதல்வர்
களங்கொள் மிடற்றுக் கண்ணுதலார் கழலிற் செறிந்த காதல்மிகும்
உளங்கொள் திருத்தொண் டுரிமையினில் உள்ளார் வள்ளார் முனைஎறிந்த
வளங்கொ டிறைவர் அடியார்க்கு மாறு தளிக்கும் வாய்மையார். உ

4096 மாற்றார்க் கமரில் அழிந்துள்ளோர் வந்து தம்பால் மாநிதியம்
ஆற்றும் பரிசு பேசினுல் அதனை நடுவு நிலைவைத்துக்

கூற்றும் ஒதுங்கும் ஆள்வினையால் கூலி எற்றுச் சென்றெறிந்து·
போற்றும் வென்றி கொண்டிசைந்த பொன்னுங் கொண்டு மன்னுவார்.

97 இன்ன வகையால் பெற்றநிதி எல்லாம் ஈசன் அடியார்கள்
சொன்ன சொன்ன படிநிரம்பக் கொடுத்துத் தூய போனகமும்
கன்னல் நறுநெய் கறிதயிர்பால் கனியுள் ளூறுத்த கலந்தளித்து
மன்னும் அன்பின் நெறிபிறழா வழித்தொண் டாற்றி வைகினார். ச

98 மற்றிந் நிலைமை பன்னெடுநாள் வையம் நிகழச் செய்துவழி
உற்ற அன்பின் செந்நெறியால் உமையாள் கணவன் திருவருளால்
பெற்ற சிவலோ கத்தமர்ந்து பிரியா உரிமை மருவினார்
மூற்ற உழந்த முனையடுவோர் என்னும் நாமம் முன்னுடையார். ஞ

99 யாவ ரெனினும் இகலெறிந்தே ஈசன் அடியார் தமக்கின்பம்
மேவ அளிக்கும் முனையடுவார் விரைப்பூங் கமலக் கழல்வணங்கித்
தேவர் பெருமான் சைவநெறி விளங்கச் செங்கோல் முறைபுரியும்
காவல் பூண்ட கழற்சிங்கர் தொண்டின் நிலைமை கட்டுரைப்பாம். சு

100 செறிவுண் டென்று திருத்தொண்டிற் சிந்தை செல்லும் பயனுக்கும்
குறியுண் டொன்று கிலுங்குறையொன் றில்லோம் நிறையுங் கருணையினால்
வெறியுண் சோலைத் திருமுருகன் பூண்டி வேடர் வழிபறிக்கப்
பறியுண் டவர்எம் பழவினைவேர் பறிப்பார் என்னும் பற்றுமேல. எ

திருவிருத்தம் - சு,கூ00.

கo. கடல்சூழ்ந்த சருக்கம்

53 கழற்சிங்க நாயனார் புராணம்

படிமிசை நிகழ்ந்த தொல்லைப் பல்லவர் குலத்து வந்தார்
கடிமதில் மூன்றுஞ் செற்ற கங்கைவார் சடையார் செய்ய
அடிமலர் அன்றி வேறொன் றறிவினிற் குறியா நீர்மைக்
கொடிநெடுந் தானை மன்னர் கோக்கழற் சிங்கர் என்பார். க

காடவர் குரிசி லார்தாங் கழற்பெருஞ் சிங்க னர்தாம்
ஆடக மேரு வில்லார் அருளினுல் அமரிற் சென்று
கூடலர் மூனைகள் சாய வடபுலங் கவர்ந்து கொண்டு
நாடற நெறியில் வைக நன்னெறி வளர்க்கு நாளில். உ

குவலயத்(து) அரனார் மேவுங் கோயில்கள் பலவுஞ் சென்று
தவலரும் அன்பிற் றுழ்ந்து தக்கமெய்த் தொண்டு செய்வார்
சிவபுரி என்ன மன்னுந் தென்திரு வாரூர் எய்திப்
பவமறுத் தாட்கொள் வார்தங் கோயிலுட் பணியப் புக்கார். ங

அரசியல் ஆயத் தோடும் அங்கணர் கோயி லுள்ளால்
முரசுடைத் தானை மன்னர் முதல்வரை வணங்கும் போதில்
விரைசெறி மலர்மென் கூந்தல் உரிமைமெல் லியலார் தம்முள்
உரைசிறந் துயர்ந்த பட்டத் தொருதனித் தேவி மேவி. ச

கோயிலே வலங்கொண் டங்கண் குலவிய பெருமை எல்லாம்
சாயல்மா மயிலே போல்வாள் தனித்தனி கண்டு வந்து
தூயமென் பள்ளித் தாமந் தொடுக்குமண் டபத்தின் பாங்கர்
மேயதோர் புதுப்பூ அங்கு விழுந்ததொன் றெடுத்து மோந்தாள். ஞ

புதுமலர் மோந்த போதிற் செருத்துணைப் புனிதத் தொண்டர்
"இதுமலர் திருமூற் றத்துள் எடுத்துமோந் தனளாம்" என்று
கதுமென ஓடிச் சென்று கருவிகைக் கொண்டு பற்றி
மதுமலர்த் திருவொப் பாள்தன் மூக்கினைப் பிடித்து வார்ந்தார். ரு

வார்ந்திழி குருதி சோர மலர்க்கருங் குழலுஞ் சோரச்
சோர்ந்துவீழ்ந் தரற்றுந் தோகை மயிலெனத் துளங்கி மண்ணில்
சேர்ந்தயர்ந் தூரிமைத் தேவி புலம்பிடச் செம்பொற் புற்றுள்
ஆர்ந்தபே ரொளியைக் கும்பிட் டரசரும் அணைய வந்தார். எ

வந்தணை வுற்ற மன்னர் மலர்ந்தகற் பகத்தின் வாசப்
பைந்தளிர்ப் பூங்கோம் பொன்று பார்மிசை வீழ்ந்த தென்ன
நொந்தழிந் தரற்று வாளை நோக்கி "இவ் வண்டத் துள்ளோர்
இந்தவெவ் வினைஅஞ் சாதே யார்செய்தார்?" என்னும் எல்லை. அ

அந்நிலை அணைய வந்து செருத்துணை யாராம் அன்பர்
முன்னுறு நிலைமை அங்குப் புகுந்தது மொழிந்த போது
மன்னரும் அவரை நோக்கி "மற்றிதற் குற்ற தண்டம்
தன்னை அவ் அடைவே யன்றே தடிந்திடத் தகுவ" தென்று. கூ

கட்டிய உடைவாள் தன்னை உருவி "அக் கமழ்வா சப்பூத்
தொட்டுமுன் னெடுத்த கையாம் முற்படத் துணிப்ப" தென்று
பட்டமும் அணிந்து காதல் பயில்பெருந் தேவி யான
மட்டவிழ் குழலாள் செங்கை வளையொடுந் துணித்தா ரன்றே. கo

ஒருதனித் தேவி செங்கை உடைவாளால் துணித்த போது
பெருகிய தொண்டர் ஆர்ப்பின் பிறங்கொலி புவிமேற் பொங்க
இருவிசும் படைய ஓங்கும் இமையவர் ஆர்ப்பும் விம்மி
மருவிய தெய்வ வாச மலர்மழை பொழிந்த தன்றே. கக

அரியஅத் திருத்தொண் டாற்றும் அரசனார் அளவில் காலம்
மருவிய உரிமை தாங்கி மாலயற் கரியார் மன்னும்
திருவருட் சிறப்பி னாலே செய்யசே வடியின் நீழற்
பெருகிய உரிமை யாகும் பேரருள் எய்தி னாரே. கஉ

வையக நிகழக் காதல் மாதேவி தனது செய்ய
கையினைத் தடிந்த சிங்கர் கழலிணை தொழுது போற்றி
எய்திய பெருமை அன்பர் இடங்கழி யாரென் றேத்தும்
மெய்யரு ளுடைய தொண்டர் செய்வினை விளம்ப லுற்றும். கங

திருவிருத்தம் ச,கங.

54. இடங்கழி நாயனார் புராணம்

எழுந்திரைமா கடலாடை இருநிலமா மகள்மார்பில்
அழுந்துபட எழுதும்இலைத் தொழில்தொய்யில் அணியினவாம்
செழுந்தளிரின் புடைமறைந்த பெடைகளிப்பத் தேமாவின்
கொழுந்துணர்கோ திக்கொண்டு குயில்நாடு கோனுடு. க

மூருகுறுசெங் கமலமது மலர்துதைந்த மொய்யளிகள்
பருகுறுதெண் திரைவாவிப் பயில்பெடையோ டிரையருந்தி
வருகுறுதண் டுளிவாடை மறையமா தவிச்சூழல்
குருகுறங்குங் கோனூட்டுக் கொடிநகரங் கொடும்பாளூர். உ

அந்நகரத் தினிலிருக்கும் வேளிர்குலத் தரசளித்து
மன்னியபொன் னம்பலத்து மணிமுகட்டில் பாக்கொங்கின்

1. ஒ.வே.1. பேரா தெய்வ வே ரா. 2. பையடைத்தளிக்க.

பன்னுதுலைப் பசும்பொன்னுற் பயில்பிழம்பாம் மிசையணிந்த
பொன்னெடுந்தோள் ஆதித்தன் புகழ்மரபிற் குடிமுதலோர். ங

இடங்கழியார் எனவுலகில் ஏறுபெரு நாமத்தார்
அடங்கலர்முப் புரமெரித்தார் அடித்தொண்டின் நெறியன்றி
முடங்குநெறி கனவினிலும் முன்னுதார் எந்நாளும்
தொடர்ந்தபெருங் காதலினுல் தொண்டர்வேண் டியசெய்வார். ச

சைவநெறி வைதிகத்தின் தருமநெறி யொடுந்தழைப்ப
மைவளருந் திருமிடற்றூர் மன்னியகோ யில்களெங்கும்
மெய்வழிபாட் டர்ச்சனைகள் விதிவழிமேன் மேல்விளங்க
மொய்வளர்வண் புகழ்பெருக முறைபுரியும் அந்நாளில். ஞ

சங்கரன்றன் அடியாருக் கமுதளிக்குந் தவமுடையார்
அங்கொருவர் அடியவருக் கமுதாருநாள் ஆக்கூடன்
எங்கும்ஒரு செயல்காணு தெய்தியசெய் தொழில்மூட்டப்
பொங்கிளமும் பெருவிருப்பால் புரியும்வினை தெரியாது. ஃ

அரசரவர் பண்டாரத் தங்நாட்டின் நெற்கூட்டின்
நிரைசெறிந்த புரிபலவா நிலைக்கொட்ட காரத்தில்
புரைசெறிநள் விருளின்கண் புக்குமுகந் தெடுப்பவரை
முரசெறிகா வலர்கண்டு பிடித்தரசன் முன்கொணர்ந்தார். எ

மெய்த்தவரைக் கண்டிருக்கும் வேல்மன்னர் வினவுதலும்
"அத்தனடி யாரையான் அமுதுசெய்விப் பதுமுட்ட
இத்தகைமை செய்தேன்"என் றியம்புதலும் மிகஇரங்கிப்
பத்தரைவிட் "டிவரன்றே பண்டாரம் எனக்"கென்பார். அ

நிறையழிந்த உள்ளத்தால் "நெற்பண்டா ரமும்அன்றிக்
குறைவில்நிதிப் பண்டார மானஎலாங் கொள்ளுமுகந்
திறைவனடி யார்கவர்ந்து கொள்க"என எம்மருங்கும்
பறையறையப் பண்ணுவித்தார் படைத்தநிதிப் பயன்கொள்வார். கூ

எண்ணில்பெரும் பண்டாரம் ஈசனடி யார்கொள்ள
உண்ணிறைந்த அன்பினுல் உறுகொள்ளை மிகஊட்டித்
தண்ணளியால் நெடுங்காலந் திருநீற்றின் நெறிதழைப்ப
மண்ணிலருள் புரிந்திறைவர் மலரடியின் நிழல்சேர்ந்தார். கo

மைதழையும் மணிமிடற்றூர் வழித்தொண்டின் வழிபாட்டில்
எய்துபெருஞ் சிறப்புடைய இடங்கழியார் கழல்வணங்கி
மெய்தருவார் நெறியன்றி வேறுன்றும் மேலறியாச்
செய்தவராஞ் செருத்துணையார் திருத்தொண்டின் செயல்மொழிவாம்.

திருவிருத்தம் - கூகூக.

பா.வே. பன்னுதுணை ; பன்னுசுடர்ப்.

55 செருத்துணை நாயனார் புராணம்

4125 உள்ளும் புறம்புங் குலமரபின் ஒழுக்கம் வழுவா ஒருமைநெறி
கொள்ளும் இயல்பிற் குடிமுதலோர் மலிந்த செல்வக் குலப்பதியாம்
தெள்ளுநீர் திரைகள் மதகுதொறுஞ் சேலுங் கயலுஞ் செழுமணியும்
தள்ளும் பொன்னி நீர்நாட்டு மருக னுட்டுத் தஞ்சாவூர். க

4126 சீரின் விளங்கும் அப்பதியில் திருந்து வேளாண் குடிமுதல்வர்
நீரின் மலிந்த செய்யசடை நீற்றர் கூற்றின் நெஞ்சிடித்த
வேரி மலர்ந்த பூங்கழல்சூழ் மெய்யன் புடைய சைவமெனப்
பாரில் நிகழ்ந்த செருத்துணையார் பரவுந் தொண்டின் நெறிநின்றார். உ

4127 ஆன அன்பர் திருவாரூர் ஆழித் தேர்வித் தகர்கோயில்
ஞான முனிவர் இமையவர்கள் நெருங்கு நலஞ்சேர் மூன்றிலினுள்
மான நிலவு திருப்பணிகள் செய்து காலங் களின்வணங்கிக்
கூனல் இளவெண் பிறைமுடியார் தொண்டு பொலியக் குலவுநாள். ங

4128 உலகு நிகழ்ந்த பல்லவர்கோச் சிங்கர் உரிமைப் பெருந்தேவி
நிலவு திருப்பூ மண்டபத்து மருங்கு நீங்கிக் கிடந்ததொரு
மலரை எடுத்து மோந்ததற்கு வந்து பொறுமை வழித்தொண்டர்
இலகு சுடர்வாய்க் கருவிகொடுத் தெழுந்த வேகத் தாலெய்தி. ச

4129 கடிது மூற்றி மற்றவள்தன் கருமென் கூந்தல் பிடித்தீர்த்துப்
படியில் வீழ்த்தி மணிமூக்கைப் பற்றிப் " பரமர் செய்யசடை
முடியில் ஏறுந் திருப்பூமண் டபத்து மலர்மோந் திடும்மூக்கைத்
தடிவன்" என்று கருவியினால் அரிந்தார் தலைமைத் தனித்தொண்டர்.

4130 அடுத்த திருத்தொண் டுலகறியச் செய்த அடலே றனையவர்தாம்
தொடுத்த தாம மலரிதழி முடியார் அடிமைத் தொண்டுகடல்
உடுத்த உலகில் நிகழச்செய் துய்யச் செய்ய பொன்மன்றுள்
எடுத்த பாத நிழலடைந்தே இறவா இன்பம் எய்தினார். சு

4131 செங்கண் விடையார் திருமுன்றில் விழுந்த திருப்பள் ளித்தாமம்
அங்கண் எடுத்து மோந்தஅதற் கரசர் உரிமைப் பெருந்தேவி
துங்க மணிமூக் கரிந்தசெருத் துணையார் தூய கழலிறைஞ்சி
எங்கு நிகழ்ந்த புகழ்த்துணையார் உரிமை அடிமை எடுத்துரைப்பாம்.

ஆ திருவிருத்தம் - ச,ஙக.

பா. வே. 1. ஏகம்பனின் தொண்டு எதிழி மணிபும்
2 எழுவுழுத்து. 3. சேட்டி.

56 புகழ்த்துணை நாயனார் புராணம்

4132 செருவிலிபுத் தூர்மன்னுஞ் சிவமறையோர் திருக்குலத்தார்
அருவரைவில் லாளிதனக் ககத்தடிமை யாமதனுக்
கொருவர்தமை நிகரில்லார் உலகத்துப் பரந்தோங்கிப்
பொருவரிய புகழ்நீடு புகழ்த்துணையார் எனும்பெயரார். க

4133 தங்கோணைத் தவத்தாலே தத்துவத்தின் வழிபடுநாள்
பொங்கோத ஞாலத்து வற்கடமாய்ப் பசிபுரிந்தும்
"எங்கோமான் தனைவிடுவேன் அல்லேன்"என் றிராப்பகலும்
கொங்கார்பன் மலர்கொண்டு குளிர்புன்கொண் டருச்சிப்பார். உ

4134 மாலயனுக் கரியானை மஞ்சனம்ஆட் டும்பொழுது
சாலவுறு பசிப்பிணியால் வருந்திநிலை தளர்வெய்திக்
கோலநிறை புனல்தாங்கு குடந்தாங்க மாட்டாமை
ஆலமணி கண்டத்தார் முடிமீது வீழ்த்தயர்வார். ங

4135 சங்கரன்தன் அருளாலோர் துயில்வந்து தமையடைய
அங்கணனுங் கனவின்கண் அருள்புரிவான் "அருந்துணவு
மங்கியநாள் கழியளவும் வைப்பதுநித் தமும்ஒருகா
சிங்குனக்கு நாம்"என்ன இடர்நீங்கி எழுந்திருந்தார். ச

4136 பேற்றம்உகந் தேறுவார் பீடத்தின் கீழ்ஒருகா
சற்றம்அடங் கிடஅளிப்ப அன்பரும்மற் றதுகைக்கொண்
டுற்றபெரும் பசியதனால் உணங்கும்உடம் புடன்உவந்து
மூற்றணர்வு தலைநிரம்ப முகமலர்ந்து களிகூர்ந்தார். ஞ

4137 அங்காள்போல் எங்காளும் அளித்தகா சதுகொண்டே
இன்னுத பசிப்பிணிவந் திறுத்தநாள் நீங்கியபின்
மின்னுர்செஞ் சடையார்க்கு மெய்யடிமைத் தொழில்செய்து
பொன்னுட்டின் அமரர்தொழப் புனிதாடி நிழல்சேர்ந்தார். ட

4138 பந்தணையு மெல்விரலாள் பாகத்தார் திருப்பாதம்
வந்தணையு மனத்துணையார் புகழ்த்துணையார் கழல்வாழ்த்திச்
சந்தணியு மணிப்புயத்துத் தனிவீர ராந்தலைவர்
கொந்தணையும் மலரலங்கல் கோட்புலியார் செயலுரைப்பாம். எ

ஆ திருவிருத்தம் - ச,ஞ,அ.

பா. வே. 1. அருவிவளர் வில்லாளிக்.

57 கோட்புலி நாயனார் புராணம்

4139 நலம்பெருகுஞ் சோணாட்டு நாட்டியத்தான் குடிவேளாண்
குலம்பெருக வந்துதித்தார் கோட்புலியார் எனும்பெயரார்
தலம்பெருகும் புகழ்வளவர் தந்திரியா ராய்வேற்றுப்
புலம்பெருகத் துயர்விளைப்பப் போர்விளைத்துப் புகழ்விளைப்பார். க

4140 மன்னவன்பால் பெறுஞ்சிறப்பின் வளமெல்லாம் மதியணியும்
பிஞ்ஞகர்தங் கோயில்தொறுந் திருஅமுதின் படிபெருகச்
செந்நெல்மலைக் குவடாகச் செய்துவருந் திருப்பணியே
பன்னெடுநாள் செய்தொழுகும் பாங்குபுரிந்(து) தோங்குநாள். உ

4141 வேந்தனே வலிற்பகைஞர் வெம்முனைமேல் செல்கின்றார்
பாந்தள்பூ ணெனஅணிந்தார் தமக்கமுது படியாக
ஏந்தலார் தாமெய்து மளவும்வேண் டுஞ்செந்நெல்
வாய்ந்தகூ டவைகட்டி வழிக்கொள்வார் மொழிகின்றார். ங

4142 தந்தமக்க ளாயினார் தமக்கெல்லாந் தனித்தனியே
"எந்தையார்க் கமுதுபடிக் கேற்றியநெல் லிவைஅழிக்கச்
சிந்தைஆற் றுகின்னவார் திருவிரையாக் கலி"என்று
வந்தனையால் உரைத்தகன்றார் மன்னவன்மாற் றார்முனைமேல். ச

4143 மற்றவர்தாம் போயினபின் சிலநாளில் வற்காலம்
உற்றலும்அச் சுற்றத்தார் உணர்வின்றி "இறப்பதனில்
பெற்றம்உயர்த் தவர்அமுது படிகொண்டா கிலும்பிழைத்துக்
குற்றமறப் பின்கொடுப்போம்" எனக்கூடு குலைத்தழித்தார். ஞ

4144 மன்னவன்றன் தெம்முனையில் வினைவாய்த்து மற்றவன்பால்
நன்னிதியின் குவைபெற்ற நாட்டியத்தான் குடித்தலைவர்
அந்நகரில் தமர்செய்த பிழையறிந்த தறியாமே
துன்னினார் "சுற்றமெலாந் துணிப்பன்"எனுந் துணிவினராய். சு

4145 எதிர்கொண்ட தமர்க்கெல்லாம் இனியமொழி பலமொழிந்து
மதிதங்கு சுடர்மணிமா ளிகையின்கண் வந்தணைந்து
"பதிகொண்ட சுற்றத்தார்க் கெல்லாம்பைந் துகில்நிதியம்
அதிகந்தந் தளிப்பதனுக் கழைமின்கள்" என்றுரைத்து. எ

4146 எல்லாரும் புகுந்ததற்பின் இருநிதியம் அளிப்பார்போல்
"நல்லார்தம் பேரோன்முன் கடைகாக்க நாதன்றன்
வல்லாணை மறுத்தமுது படிஅழித்த மறக்கிழமைக்
கொல்லாதே விடுவேனே" எனக்கனன்று கொலைபுரிவார். அ

1 பா.பே.1. துயரவாளையப் உழுதெனான். 3 உற்றிடைத்.

தந்தையார் தாயார்மற் றுடன்பிறந்தார் தாரங்கள்
பந்தமார் சுற்றத்தார் பதியடியார் மதியணியும்
எந்தையார் திருப்படிமற் றுண்ணஇசைந் தார்களையும்
சிந்தவாள் கொடுதுணித்தார் தீயவினைப் பவந்துணிப்பார். கூ

பின்னங்குப் பிழைத்ததொரு பிள்ளையைத்தம் பெயரோன்"அவ்
அன்னந்துய்த் திலது,குடிக் கொருபுதல்வன் அருளும்"என
" இங்நெல்லுண் டாள்முலைப்பால் உண்ட " தென எடுத்தெறிந்து
மின்னல்ல வடிவாளால் இருதுணியாய் விழுவேற்றூர். கo

அங்நிலையே சிவபெருமான் அன்பரெதிர் வெளியேநின்(று)
"உன்னுடைய கைவாளால் உறுபாசம் அறுத்தகிளை
பொன்னுலகின் மேலுலகம் புக்கணையப் புகழோய்கீ
இங்கிலகம் முடன்அணை"கென் றேவிளழுந் தருளினார். கக

அத்தனுய் அன்னையாய் ஆருயிராய் அமிர்தாகி
முத்தனும் முதல்வன்தாள் அடைந்துகிளை முதல்தடிந்த
கொத்தலர்தார்க் கோட்புலியார் அடிவணங்கிக் கூட்டத்தில்
பத்தராய்ப் பணிவார்தம் பரிசினையாம் பகருவாம். கஉ

மேவரிய பெருந்தவம்யான் முன்புவிளைத் தனஎன்னே
யாவதும்ஓர் பொருளல்லா என்மனத்தும் அன்றியே
காவலர்கா வலர்பெருகு நதிகிழிய வழிநடந்த
சேவடிப்போ தெப்போதுஞ் சென்னியினும் மலர்ந்தனவால். கங

ஆ திருவிருத்தம் - ச,கடுக.

பா.ஏ.1. நீலகண்டர் பயன் துணைப்பார்

கக. பத்தராய்ப்பணிவார் சருக்கம்

58. பத்தராய்ப் பணிவார் புராணம்

4152 ஈசனுக்கே அன்பானூர் யாவரையுந் தாங்கண்டால்
கூசிமிகக் குதுகுதுத்துக் கொண்டாடி மனமகிழ்வுற்
றுசையினுல் ஆவின்பின் கன்றணைந்தாற் போலணைந்து
பேசுவன பணிந்தமொழி இனியனவே பேசுவார். க

4153 தாவரிய அன்பினுற் சம்புவினே எவ்விடத்தும்
யாவர்களும் அர்ச்சிக்கும் படிகண்டால் இனிதுவந்து
பாவனையால் நோக்கினுல் பலர்காணப் பயன்பெறுவார்
மேவரிய அன்பினுல் மேலவர்க்கும் மேலானூர். உ

4154 அங்கணனே அடியாரை ஆராத காதலினுல்
பொங்கிவரும் உவகையுடன் தாம்விரும்பிப் பூசிப்பார்
பங்கயமா மலர்மேலான் பாம்பணையான் என்றிவர்கள்
தங்களுக்குஞ் சார்வரிய சரண்சாருந் தவமுடையார். ங

4155 யாதானும் இவ்வுடம்பாற் செய்வினைகள் ஏறுயர்த்தார்
பாதார விந்தத்தின் பாலாக எனும்பரிவால்
காதார்வெண் குழையவர்க்காம் பணிசெய்வார் கருக்குழியில்
போதார்கள் அவர்புகழ்க்குப் புவனமெலாம் போதாவால். ச

4156 சங்கரனைச் சார்ந்தகதை தான்கேட்குந் தன்மையராய்
அங்கணனே மிகவிரும்பி அயலறியா அன்பினுல்
கங்கைநதி மதிஇதழி காதலிக்குந் திருமுடியார்
செங்கமல மலர்ப்பாதஞ் சேர்வதனுக் குரியார்கள். ஞ

4157 ஈசனையே பணிந்துருகி இன்பமிகக் களிப்பெய்திப்
பேசினவாய் தழுதழுப்பக் கண்ணீரின் பெருந்தாரை
மாசிலா நீறழித்தங் கருவிதா மயிர்சிலிர்ப்பக்
கூசியே உடல்கம்பித் திடுவார்மெய்க் குணமிக்கார். ட

4158 நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றுடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை
குன்றாத உணர்வுடையார் தொண்டராங் குணமிக்கார். ண

4159 சங்கரனுக் காளான தவங்காட்டித் தாமதனுல்
ப் பா பங்கமறப் பயன்துய்யார் படிவிளக்கும் பெருமையினூர்
அங்கணனைத் திருவாரூர் ஆள்வானே அடிவணங்கிப்
பொங்கிஎழுஞ் சித்தமுடன் பத்தராய்ப் போற்றுவார். அ

57

பரமனையே பாடுவார் புராணம்

4160 புரமூன்றுஞ் செற்றனைப் பூணுகம் அணிந்தானை
உரனில்வரும் ஒருபொருளை உலகனைத்தும் ஆனனைக்
காரணங்கள் காணுமல் கண்ணுர்ந்து நிறைந்தானைப்
பரமனையே பாடுவார் தம்பெருமை பாடுவாம். க

4161 தென்தமிழும் வடகலையும் தேசிகமும் பேசுவன
மன்றினிடை நடம்புரியும் வள்ளலையே பொருளாக
ஒன்றியமெய் யுணர்வோடும் உள்ளுருகிப் பாடுவார்
பன்றியுடன் புட்காணப் பரமனையே பாடுவார். உ

58

சித்தத்தைச்சிவன்பாலேவைத்தார் புராணம்

4162 காரணபங் கயம்ஐந்தின் கடவுளர்தம் பதங்கடந்து
பூரணமெய்ப் பரஞ்சோதி பொலிந்திலங்கு நாதாந்தத்
தாரணையாற் சிவத்தடைந்த சித்தத்தார் தனிமன்றுள்
ஆரணகா ரணக்கூத்தர் அடித்தொண்டின் வழியடைந்தார். க

59

திருவாரூர்ப் பிறந்தார் புராணம்

4163 அருவாகி உருவாகி அனைத்துமாய் நின்றபிரான்
மருவாருங் குழலுமையாள் மணவாளன் மகிழ்ந்தருளும்
திருவாரூர்ப் பிறந்தார்கள் திருத்தொண்டுந் திசைதோறும்
ஒருவாயால் சிறியேனுல் உரைக்கலாந் தகைமையதோ. க

4164 திருக்கயிலை வீற்றிருந்த சிவபெருமான் திருக்கணத்தார்
பெருக்கியசீர்த் திருவாரூர்ப் பிறந்தார்கள் ஆதலினுல்
தருக்கியஐம் பொறிஅடக்கி மற்றவர்தந் தாள்வணங்கி
ஒருக்கியநெஞ் சுடையவர்க்கே அணித்தாகும் உயர்நெறியே. உ

பா. பே. 1. நின்ற சீர. 2. தோற்றுணை: தெரிந்துணைத்த.
3. தாள் வணங்க.

62 மூப்போதும் திருமேனி தீண்டுவார் புராணம்

எப்போதும் இனியபிரான் இன்னருளால் அதிகரித்து
மெய்ப்போத நெறிவந்த விதிமுறைமை வழுவாமே
அப்போதைக் கப்போதும் ஆர்வமிகும் அன்பினராய்
மூப்போதும் அர்ச்சிப்பார் முதற்சைவ ராம்முனிவர். க

தேரிந்துணரின் மூப்போதுஞ் செல்காலம் நிகழ்காலம்
வருங்கால மானவற்றின் வழிவழியே திருத்தொண்டின்
விரும்பியஅர்ச் சனைகள்சிவ வேதியர்க்கே உரியனஅப்
பெருந்தகையார் குலப்பெருமை யாம்புகழும் பெற்றியதோ. உ

வேறு

நாரணற்கும் நான்முகற்கும் அறிய ஒண்ணா நாதனீளம் பெரு
மானே ஞான மான, ஆரணத்தின் உட்பொருள்கள் அனைத்து மாகும்
அண்ணலெண் ணியகாலம் மூன்றும் அன்பின், காரணத்தால் அர்ச்
சிக்கும் மறையோர் தங்கள் கமலமலர்க் கழல்வணங்கிக் கசிந்து சிந்
தைப், பூரணத்தால் முழுநீறு பூசி வாழும் புனிதர்செயல் அறிந்தவா
புகல லுற்றேன். ங

63 முழுநீறு பூசிய முனிவர் புராணம்

ஆதார மாயனைத்தும் ஆகி நின்ற அங்கணன்எம் பெருமான்
நீர் அணிந்த வேணிக், காதார்வெண் திருக்குழையான் அருளிச்
செய்த கற்பம்அது கற்பம்உப கற்பந் தானும் ஆகாதென் றங்
குரைத்த அகற்பம் நீக்கி ஆமென்று மூன்மொழிந்த மூன்று பேத,
மோகாதி குற்றங்கள் அறுக்கும் நீற்றை2மொழிவதுநம் இருவினை
கள் கழிவ தாக. க

அம்பலத்தே உலகுய்ய ஆடும் அண்ணல் உவந்தாடும் அஞ்சினை
யும் அளித்த ஆக்கள், இம்பர்மிசை அநாமயமாய் இருந்த போதில்
ஈன்றணிய கோமயமந் திரத்தி னல்ஏற், றும்பர்தொழ எழுஞ்சிவமந்
திரஓ மத்தால் உற்பவித்த சிவாங்கிதனில் உணர்வுக் கெட்டா, எம்
பெருமான் கழல்நினைந்தங் கிட்ட தூநீ றிதுகற்பம் என்றெடுத்திங்
கேத்த லாகும். உ

ஆரணியத் துலர்ந்தகோ மயத்தைக் கைக்கொண் டழகுறநுண்
பொடியாக்கி ஆவின் சுத்த, நீரணிவித் தத்திரமந் திரத்தி னலே
நிசயமுறப் பிடித்தோம நெருப்பில் இட்டுச், சீரணியும் படிவெந்து

பா.பே.1. வழிமொழி செய். 2. மொழிவோம்.

கொண்ட செல்வத் திருநீறும் அநுகற்பம் தில்லை மன்றுள், வாரணியு முலைஉமையாள் காண ஆடும் மாணிக்கக் கூத்தர்மொழி வாய்மை யாலே. ங

அடவிபடும் அங்கியினுல் வெந்த நீறும் ஆனிலைகள் அனல்தொ டக்க வெந்த நீறும், இடவகைகள் எரிகொளுவ வெந்த நீறும் இட்டி கைகள் சுட்டளரி பட்ட நீறும், உடனன்றி வெவ்வேறே ஆவின் நீரால் உரைதிகழு மந்திரங்கொண் டிண்டை யாக்கி, மடமதனில் பொலிந்திருந்த சிவாங்கி தன்னுல் வெந்ததுமற் றுபகற்பம் மரபின் ஆகும். ச

இந்தவகை யால்அமைத்த நீறு கொண்டே இருதிறமுஞ் சுத்தி வரத் தெறித்த பின்னர், அந்தமிலா அரன்அங்கி ஆறு மெய்ம்மை அறிவித்த குருநன்மை அல்லாப் பூமி, மூந்தளதிர் அணியாதே அணி யும் போது முழுவதும்மெய்ப் புண்டரஞ்சந் திரனிற் பாதி, நந்திளரி தீபநிகழ் வட்ட மாக நாதரடி யார்அணிவர் நன்மை யாலே. ஞ

சாதியினில் தலையான தரும சீலர் தத்துவத்தின் நெறியுணர்ந் தோர் தங்கள் கொள்கை, நீதியினிற் பிழையாது நெறியில் நிற்போர் நித்தநிய மத்துநிகழ் அங்கி தன்னில், பூதியினைப் புதியபா சனத்துக் கொண்டு புலியதளின் உடையானைப் போற்றி நீற்றை, ஆதிவரு மும்மலமும் அறுத்த வாய்மை அருமுனிவர் முழுவதும்மெய் அணிவ ரன்றே. ட

64. ஆ திருவிருத்தம் உ,எஎக

அப்பாலும் அடிச்சார்ந்தார் புராணம்

மூவேந்தர் தமிழ்வழங்கு நாட்டுக் கப்பால் முதல்வனுர் அடிச் சார்ந்த முறைமை யோரும், நாவேய்ந்த திருத்தொண்டத் தொகை யிற் கூறும் நற்றொண்டர் காலத்து முன்னும் பின்னும், பூவேய்ந்த கெடுஞ்சடைமேல் அடம்பு தும்பை புதியமதி நதிஇதழி பொருந்த வைத்த, சேவேந்து வெல்கொடியான் அடிச்சார்ந் தாரும் செப்பியஅப் பாலும்அடிச் சார்ந்தார் தாமே. க

சேற்றூர்தம் புரமெரித்த சிலையார் செல்வத் திருமுருகன் பூண்டி யினிற் செல்லும் போதில், சுற்றுருஞ் சிலைவேடர் கவர்ந்து கொண்ட தொகுநிதியின் பரப்பெல்லாஞ் சுமந்து கொண்டு, முற்றுத முலைஉமை யாள் பாகன் பூத முதற்கணமே உடன்செல்ல முடியாப் பேறு, பெற் றூர்தங் கழல்பரவ அடியேன் முன்னைப் பிறவியினிற் செய்ததவம் பெரிய வாமே. உ

ஆ திருவிருத்தம் - உ,எஎடி

கஉ. மன்னியசீர்ச் சருக்கம்

பூசலார் நாயனார் புராணம்

அன்றினார் புரமெ ரித்தார்க் காலயம் எடுக்க எண்ணி
ஒன்றும்அங் குதவா தாக உணர்வினல் எடுக்குந் தன்மை
நன்றென மனத்தி னுலே நல்லஆ லயந்தான் செய்த
நின்றஊர்ப் பூச லார்தம் நினைவினை உரைக்க லுற்றும். க

உலகினில் ஓழுக்கம் என்றும் உயர்பெருந் தொண்டை நாட்டு
நலம்மிகு சிறப்பின் மிக்க நான்மறை விளங்கு மூதூர்
குலமுதற் சீலம் என்றுங் குறைவிலா மறையோர் கொள்கை
நிலவிய செல்வம் மல்கி நிகழ்திரு நின்ற ஊராம். உ

அருமறை மரபு வாழ அப்பதி வந்து சிந்தை
தருமூணர் வான எல்லாந் தம்பிரான் கழல்மேற் சார
வருநெறி மாறு அன்பு வளர்ந்தெழ வளர்ந்து வாய்மைப்
பொருள்பெறு வேத நீதிக் கலியுணர் பொலிவின் மிக்கார். ங

"அடுப்பது சிவன்பால் அன்பர்க் காம்பணி செய்தல்" என்றே
கொடுப்பதெவ் வகையுந் தேடி அவர்கொளக் கொடுத்துக் கங்கை
மடுப்பொதி வேணி ஐயர் மகிழ்ந்துறை வதற்கோர் கோயில்
எடுப்பது மனத்துக் கொண்டார் இருநிதி இன்மை எண்ணூர். ச

மனத்தினுற் கருதி எங்கும் மாநிதி வருந்தித் தேடி
"ஏனைத்தும்ஓர் பொருட்பே றின்றி என்செய்கேன்" என்று நைவார்
நினைப்பினல் எடுக்க நேர்ந்து நிகழ்வுறு நிதிய மெல்லாம்
தினைத்துணை முதலாத் தேடிச் சிந்தையால் திரட்டிக் கொண்டார். ஞ

சாதனத் தோடு தச்சர் தம்மையும் மனத்தால் தேடி
நாதனுக் கால யஞ்செய் நலம்பெறு நன்னுட் கொண்டே
ஆதரித் தாக மத்தால் அடிநிலே பாரித் தன்பால்
காதலிற் கங்குற் போதுங் கண்படா தெடுக்க லுற்றார். ரு

அடிமுதல் உபானம் ஆதி யாகிய படைக ளெல்லாம்
வடிவுறுந் தொழில்கள் முற்ற மனத்தினுல் வகுத்து மான
மூடிவுறு சிகரந் தானும் முன்னிய முழுத்திற் கொண்டு
நெடிதுநாள் கூடக் கோயில் நிரம்பிட நினைவாழ் செய்தார். எ

தூபியும் நட்டு மிக்க சுதையுநல் வினையுஞ் செய்து
கூவலும் அமைத்து மாடு கோயில்சூழ் மதிலும் போக்கி
வாவியுந் தொட்டு மற்றும் வேண்டுவ வகுத்து மன்னுந்
தாபரஞ் சிவனுக் கேற்க விதித்தநாள் சாரு நாளில். அ

1. வேண்டு வினைத்.

காடவர் கோமான் கச்சிக் கற்றளி எடுத்து முற்ற
மாடலாஞ் சிவனுக் காகப் பெருஞ்செல்வம் வகுத்தல் செய்வான்
நாடமா லறியா தாரைத் தாபிக்கும் அந்நாள் மூன்னுள்
ஏடலர் கொன்றை வேய்ந்தார் இரவிடைக் கனவி லெய்தி. கூ

"நின்றவூர்ப் பூசல் அன்பன் நெடிதுநாள் நினைந்து செய்த
நன்றுநீ டால யத்து நாளைநாம் புகுவோம் நீஇங்
கொன்றிய செயலை நாளை ஒழிந்துபின் கொள்வாய்" என்று
கொன்றைவார் சடையார் தாண்டர் கோயில்கொண் டருளப் போந்தார்.

தோண்டரை விளக்கத் தூயோன் அருள்செயத் துயிலை நீங்கித்
திண்திறல் மன்னன் "அந்தத் திருப்பணி செய்தார் தம்மைக்
கண்டுநான் வணங்க வேண்டும்" என்றெழுந் காத லோடும்
தண்டலைச் சூழல் சூழ்ந்த நின்றவூர் வந்து சார்ந்தான். ககூ

அப்பதி அணைந்து "பூசல் அன்பர்இங் கமைத்த கோயில்
எப்புடை யது?" என் றங்கண் எய்தினர் தம்மைக் கேட்கச்
செப்பிய பூசல் கோயில் செய்ததொன் றில்லை" என்றார்
"மெய்ப்பெரு மறையோ ரெல்லாம் வருக" என் றுரைத்தான் வேந்தன்.

பூசுரர் எல்லாம் வந்து புரவலன் தன்னைக் காண
"மாசிலாப் பூச லார்தாம் யார்?" என மறையோ ரெல்லாம்
"ஆசில்வே தியன்இவ் வூரான்" என்றவர் அழைக்க ஓட்டான்
ஈசனூர் அன்பர் தம்பால் எய்தினன் வெய்ய வேலான். கஙூ

தோண்டரைச் சென்று கண்ட மன்னவன் தொழுது "நீர்இங்
கெண்திசை யோரும் ஏத்த எடுத்தஆ லயந்தான் யாதிங்
கண்டர்நா யகரைத் தாபித் தருளுநாள் இன்றென் றும்மைக்
கண்டடி பணிய வந்தேன் கண்ணுதல் அருள்பெற்" றென்றான். கச

மன்னவன் உரைப்பக் கேட்ட அன்பர்தாம் மருண்டு நோக்கி
"என்னையோர் பொருளாக் கொண்டே எம்பிரான் அருள்செய் தாரேல்
முன்வரு நிதியி லாமை மனத்தினில் முயன்ற கோயில்
இன்னதாம்" என்று சிந்தித் தெடுத்தவா றெடுத்துச் சொன்னார். கஙூ

அரசனும் அதனைக் கேட்டங் கதிசயம் எய்தி "என்னே!
புரையறு சிந்தை அன்பர் பெருமை!" என் றவரைப் போற்றி
விரைசெறி மாலை தாழ நிலமிசை வீழ்ந்து தாழ்ந்து
முரசெறி தானை யோடு மீண்டுதன் மூதூர்ப் புக்கான். கசூ

அன்பரும் அமைத்த சிந்தை ஆலயத் தானூர் தம்மை
நன்பெரும் பொழுது சாரத் தாபித்து நலத்தி னோடும்
பின்புபூ சனைக ளெல்லாம் பெருமையிற் பலநாள் பேணிப்
பொன்புனை மன்று ளாடும் பொற்கழல் நீழல் புக்கார். களூ

பா.வே: பூசலன்பர் - பூசலன்பர் தம் அன்பர்.

நீண்டசெஞ் சடையி னுர்க்கு நிணைப்பிலுல் கோயி லாக்கிப்
பூண்டஅன் பிடைய ருத பூசலார் பொற்ருள் போற்றி
ஆண்டகை வளவர் கோமான் உலகுய்ய அளித்த செல்வப்
பாண்டிமா தேவி யார்தம் பாதங்கள் பரவ லுற்றேன். கஅ

ஆ திருவிருத்தம் - ச,ககங

மங்கையர்க்கரசியார் புராணம்

மங்கையர்க்குத்| தனியரசி எங்கள் தெய்வம் வளவர்திருக் குலக்
கொழுந்து வளைக்கை மானி, செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை, எங்கள்பிரான் சண்பை
யர்கோன் அருளி னுலே இருந்தமிழ்நா டுற்றஇடர் நீக்கித் தங்கள்,
பொங்கொளிவெண் திருநீறு பரப்பி னரைப் போற்றுவார் கழல்
எம்மால் போற்ற லாமே. க

பூசுரர்சூ ளாமணியாம் புகலி வேந்தர் போனகஞா னம்பொழிந்த
புனித வாக்கால், தேசுடைய பாடல்பெறுந் தவத்தி னரைச் செப்பு
வதியா மென்னறிந்து தென்னர் கோமான், மாசில்புகழ் நெடுமாறன்
தனக்குச் சைவ வழித்துணையாய் நெடுங்காலம் மன்னிப் பின்னை,
ஆசில்நெறி யவரோடுங் கூட ஈசர் அடிநிழற்கீழ் அமர்ந்திருக்க அரு
ளும் பெற்ருர். உ

வருநாளென் றும்பிழையாத் தெய்வப் பொன்னி வளம்பெருக்க
வளவர்குலம் பெருக்குந் தங்கள், திருநாடு போற்செழியர் தென்னர்
நாடு சீர்விளக்குஞ் செய்யசீ றடிகள் போற்றி, ஒருநாளுந் தஞ்
செயலில் வழுவா தன்பர்க் குடைகீளும் கோவணமும் நெய்து நல்கும்,
பெருநாமச் சாலியர்தங் குலத்தில் வந்த பெருந்தகையார் நேசர்திறம்
பேச லுற்ரும். ங

ஆ திருவிருத்தம் - ச,ககஉ.

நேசநாயனர் புராணம்

சீர்வளர் சிறப்பின் மிக்க செயன்முறை ஒழுக்கங் குன்ரு
நார்வளர் சிந்தை வாய்மை நன்மையார் மன்னி வாழும்
பார்வளர் புகழின் மிக்க பழம்பதி மதிதோய் நெற்றிக்
கார்வளர் சிகர மாடக் காம்பீலி என்ப தாகும். க

பா.பே.| தனித்திருத்தம். உ.பாவி. 3 புகழ்ந்தமால்.

அந்நக ரதனில் வாழ்வார் அறுவையர் குலத்து வந்தார்
மன்னிய தொழிலில் தங்கள் மரபில்மேம் பாடு பெற்றார்
பன்னகா பரணற் கன்பர் பணிதலைக் கொண்டு பாதம்
சென்னியிற் கொண்டு போற்றுந் தேசினர் நேசர் என்பார். உ

ஆங்கவர் மனத்தின் செய்கை அரனடிப் போதுக் காக்கி
ஓங்கிய வாக்கின் செய்கை உயர்ந்தஅஞ் செழுத்துக் காக்கித்
தாங்குகைத் தொழிலின் செய்கை தம்பிரான் அடியார்க் காகப்
பாங்குடை உடையுங் கீளும் பழுதில்கோ வணமும் நெய்வார். ஊ

உடையொடு நல்ல கீளும் ஒப்பில்கோ வணமும் நெய்து
விடையவர் அடியார் வந்து வேண்டுமா றீயு மாற்றால்
இடையறு தளித்து நாளும் அவர்கழல் இறைஞ்சி ஏத்தி
அடைவுறு நலத்த ராகி அரனடி நீழல் சேர்ந்தார். ச

வேறு

கற்றை வேணி முடியார்தங் கழல்சேர் வதற்குக் கலந்தவினை
செற்ற நேசர் கழல்வணங்கிச் சிறப்பால் முன்னைப் பிறப்புணர்ந்து
பெற்றம் உயர்த்தார்க் காலயங்கள் பெருக அமைத்து மண்ணுண்ட
கொற்ற வேந்தர் கோச்செங்கட் சோழர் பெருமை கூறுவாம். ஞ

திருவிருத்தம்-ச,உ0க.

கோச்செங்கட்சோழ நாயனார் புராணம்

துலையிற் புறவின் நிறையளித்த சோழர் உரிமைச் சோணாட்டில்
அலையிற் றளரும் அகிலொடுசந் தனிநீர்ப் பொன்னி மணிகொழிக்கும்
குலையிற் பெருகுஞ் சந்திரதீர்த் தத்தின் மருங்கு குளிர்சோலை
நிலையிற் பெருகுந் தருமிடைந்த நெடுந்தண் கானம் ஒன்றுளதால். க

அப்பூங் கானில் வெண்ணுவல் அதன்கீழ் முன்னாள் அரிதேடும்
மெய்ப்பூங் கழலார் வெளிப்படலும் மிக்க தவத்தோர் வேள்ளானை
கைப்பூம் புனலும் முகந்தாட்டிக் கமழ்பூங் கொத்தும் அணிந்திறைஞ்சி
மைப்பூங் குவளைக் களத்தாரை நாளும் வழிபட் டொழுகுமால். உ

ஆன செயலால் திருவானைக் காஎன் றதற்குப் பெயராக
ஞான மூடையொருசிலந்தி நம்பர் செம்பொன் திருமுடிமேல்
கானல் விரவுஞ் சருகுதிரா வண்ணங் கலந்த வாய்நூலால்
மேனற் றிருமேற் கட்டிஎன விரிந்து செறியப் புரிந்துளதால். ங

நன்றும் இழைத்த சிலம்பிவலைப் பரப்பை நாதன் அடிவணங்கச்
சென்ற யானை "அதுசிதம்"என் றதனைச் சிதைக்கச் சிலம்பிதான்

"இன்று களிற்றின் கரஞ்சுலவிற்" றென்று மீள இழைத்ததனை
அன்று கழித்த பிற்றைநாள் அடல்வெள் ளானை அழித்ததால். ச

"எம்பி ரான்தன் மேனியின்மேல் சருகு விழாமை யால்வருந்தி
உம்பர் இழைத்த தூல்வலயம் அழிப்ப தே"என் றுருத்தெழுந்து
வெம்பிச் சிலம்பி தூதிக்கையினிற் புக்குக் கடிப்ப வேகத்தால்
கும்ப யானை கைநிலத்தில் மோதிக் குலைந்து வீழ்ந்ததால். ஞ

தூறையிற் புடைப்பக் கைப்புக்க சிலம்பி தானும் உயிர்நீங்க
மறையிற் பொருளுந் தருமாற்றுன் மதயா னைக்கும் வரங்கொடுத்து
முறையிற் சிலம்பி தனைச்சோழர் குலத்து வந்து முன்னுதித்து
நிறையிற் புவனங் காத்தளிக்க அருள்செய் தருள நிலத்தின்கண். சு

வேறு

தொன்மைதரு சோழர்குலத் தரசனுஞ் சுபதேவன்
தன்னுடைய பெருந்தேவி கமலவதி யுடன்சார்ந்து
மன்னுபுகழ்த் திருத்தில்லை மன்றுடும் மலர்ப்பாதம்
சென்னியுறப் பணிந்தேத்தித் திருப்படிக்கீழ் வழிபடுநாள். எ

மக்கட்பே றின்மையினுல் மாதேவி வரம்வேண்டச்
செக்கர்நெடுஞ் சடைக்கூத்தர் திருவுள்ளஞ் செய்தவினுல்
மிக்கதிருப் பணிசெய்த சிலம்பிகுல வேந்துமகிழ்
அக்கமல வதிவயிற்றில் அணிமகவாய் வந்தடைய. அ

வேறு

கழையார் தோளி கமலவதி தன்பாற் கருப்ப நாள்நிரம்பி
விழைவார் மகவு பெறஅடுத்த வேலை யதனிற் காலம்உணர்
பழையார் "ஒருநா ழிகைகழித்துப் பிறக்கு மேல்இப் பசுங்குழவி
உழையார் புவனம் ஒருமூன்றும் அளிக்கும்" என்ன ஒள்ளிழையார். கூ

"பிறவா தொருநா ழிகைகழித்தென் பிள்ளை பிறக்கும் பரிசென்கால்
உறஆர்த் தெடுத்துத் தூக்கும்"என உற்ற செயல்மற் றதுமுற்றி
அறவா னர்கள்சொல் லியகாலம் அணையப் பிணிவிட் டருமணியை
இறவா தொழிவாள் பெற்றெடுத்"தேன் கோச்செங் கண்ணு னே!"என்றாள்.

தேவி புதல்வர்ப் பெற்றிறக்கச் செங்கோற் சோழன் சுபதேவன்
ஆவி அனைய அரும்புதல்வன் தன்னை வளர்த்தங் கணிமகுடம்
மேவும் உரிமை முடிகவித்துத் தானும் விரும்பு பெருந்தவத்தின்
தாவில் நெறியைச் சென்றடைந்து தலைவர் சிவலோ கஞ்சார்ந்தான். கக

கோதை வேலார் கோச்செங்கட் சோழர் தாம்இக் குவலயத்தில்
ஆதி மூர்த்தி அருளால்முன் னறிந்து பிறந்து மண்ணுள்வார்
பூத நாதன் தான்மகிழ்ந்து பொருந்தும் பெருந்தண் சிவாலயங்கள்
காத லோடும் பலஎடுக்குந் தொண்டு புரியுங் கடன்பூண்டார். கஉ

ஆனைக் காவில் தாம்முன்னம் அருள்பெற் றதனை அறிந்தங்கு
மானைத் தரித்த திருக்கரத்தார் மகிழுங் கோயில் செய்கின்றார்
ஞானச் சார்வாம் வெண்ணுவ லுடனே கூட நலஞ்சிறக்கப்
பானற் களத்துத் தம்பெருமான் அமருங் கோயில் பணிசமைத்தார்.

வேறு

மந்திரிகள் தமைவரவி வள்ளல்கொடை அனபாயன்
மூன்றைவருங் குலமுதலோ ராயமுதற் செங்கணார்
அந்தமில்சீர்ச் சோணாட்டில் அகனகு தொறுமணியார்
சந்திரசே கரனமருந் தானங்கள் பலசமைத்தார். கச

அக்கோயில் தொறுஞ்சிவனுக் கமுதுபடி முதலான
மிக்கபெருஞ் செல்வங்கள் விருப்பினல் மிகஅமைத்துத்
திக்கனைத்துந் தனிச்செங்கோல் முறைநிறுத்தித் தேர்வேந்தர்
முக்கண்முதல் நடமாடும் முதற்றில்லை முன்னினார். கடு

திருவார்ந்த செம்பொன்னின் அம்பலத்தே நடஞ்செய்யும்
பெருமானே அடிவணங்கிப் பேரன்பு தலைசிறப்ப
உருகாநின் றுளங்களிப்பத் தொழுதேத்தி உறையுநாள்
வருவாய்மை மறையவர்க்கு மாளிகைகள் பலசமைத்தார். கசு

தேவர்பிரான் திருத்தொண்டிற் கோச்செங்கட் செம்பியர்கோன்
பூவலயம் பொதுநீக்கி ஆண்டருளிப் புவனியின்மேல்
ஏவியநற் றிருண்டுபுரிந் திமையவர்கள் அடிபோற்ற
மேவினார் திருத்தில்லை வேந்தர்திரு வடிநிழற்கீழ். கஎ

வேறு

கருநீல மிடற்றார் செய்ய கழலடி நீழல் சேர
வருநீர்மை யுடைய செங்கட் சோழர்தம் மலர்த்தாள் வாழ்த்தித்
தருநீர்மை இசைகொள் யாழின் தலைவராய் உலக மேத்தும்
திருநீல கண்டப் பாணர் திறமினிச் செப்ப லுற்றேன். கஅ

திருவிருத்தம் - ச,உகக

திருநீலகண்டயாழ்ப்பாண நாயனார் புராணம்

எருக்கத்தம் புலியூர் மன்னி வாழ்பவர் இறைவன் தன்சீர்
திருத்தகும் யாழி லிட்டுப் பரவுவார் செழுஞ்சோ ணாட்டில்
விருப்புறு தான மெல்லாம் பணிந்துபோய் விளங்கு கூடற்
பருப்பதச் சிலையார் மன்னும் ஆலவாய் பணியச் சென்றார். க

ஆலவாய் அமர்ந்தார் கோயில் வாயிலை அடைந்து நின்று
பாலியீ சேழு கோத்த பண்ணினிற் கருவி வீக்கிக்
காலமா தரித்த பண்ணிற் கைபல முறையும் ஆராய்ந்
தேலவார் குழலாள் பாகர் பாணிகள் யாழி லிட்டார். உ

மற்றவர் கருவிப் பாடல் மதுரைநீ டால வாயில்
கொற்றவன் திருவுள் ளத்துக் கொண்டுதன் தொண்டர்க் கெல்லாம்
அற்றைநாட் கனவில் ஏவ அருட்பெரும் பாண னுரைத்
தெற்றினர் புரங்கள் செற்றார் திருமுன்பு கொண்டு புக்கார். ங

அன்பர்கள் கொண்டு புக்க பொழுதினில் அரிவை பாகன்
தன்பெரும் பணியாம் என்று தமக்குமெய் யுணர்த்த லாலே
மன்பெரும் பாண னரும் மாமறை பாட வல்லார்
முன்பிருந் தியாழிற் கூடல் முதல்வரைப் பாடு கின்றார். ச

திரிபுர மெரித்த வாறும் தேர்மிசை நின்ற வாறும்
கரியினை யுரித்த வாறும் காமனைக் காய்ந்த வாறும்
அரிஅயற் கரிய வாறும் அடியவர்க் கெளிய வாறும்
பரிவினற் பாடக் கேட்டுப் பரமனார் அருளி னாலே. ஞ

அந்தரத் தெழுந்த ஓசை "அன்பினிற் பாணர் பாடும்
சந்தயாழ் தனையிற் சீதந் தாக்கில்வீக் கழியும்" என்று
"சுந்தரப் பலகை முன்நீர் இடும்" எனத் தொண்ட ரிட்டார்
செந்தமிழ்ப் பாண னருந் திருவருள் பெற்றுச் சேர்ந்தார். ட

தமனியப் பலகை ஏறித் தந்திரிக் கருவி வாசித்
தமையொரு பாகர் வண்மை உலகெலாம் அறிய ஏத்தி
இமையவர் போற்ற ஏகி எண்ணில்தா னங்கள் கும்பிட்(டு)
அமர்ந்நா டாளா தாரூர் ஆண்டவர் ஆரூர் சேர்ந்தார். எ

வேறு

கோயில் வாயில் முன்னடைந்து கூற்றஞ் செற்ற பெருந்திறலும்
தாயின் நல்ல பெருங்கருணை அடியார்க் களிக்குந் தண்ணளியும்

பா. வே. 1. கேட்டா. 2. கீன்று.

ஏயுங் கருவி யிற்றொடுத்தங் கிட்டுப் பாடக் கேட்டங்கண்
வாயில் வேறு வடதிசையில் வகுப்பப் புகுந்து வணங்கினார். அ

மூலத் தானத் தெழுந்தருளி இருந்த முதல்வன் தனிவணங்கிச்
சாலக் காலம் அங்கிருந்து தம்பி ரான்தன் திருவருளால்
சீலத் தார்கள் பிரியாத திருவா ரூரின் நின்றும்போய்
ஆலத் தார்ந்த கண்டத்தார் அமருந் தானம் பலவணங்கி. கூ

ஆழி சூழுந் திருத்தோணி அமர்ந்த அம்மான் அருளாலே
யாழின் மொழியாள் உமைஞானம் ஊட்ட உண்ட எம்பெருமான்
காழி நாடன் கவுணியர்கோன் கமல பாதம் வணங்குதற்கு
வாழி மறையோர் புகலியினில் வந்தார் சந்த இசைப்பாணர். கo

ஞானம் உண்டார் கேட்டருளி நல்ல இசையாழ்ப் பெரும்பாணர்க்(கு)
ஆன படியாற் சிறப்பருளி அமரும் நாளில் அவர்பாடும்
மேன்மைப் பதிகத் திசையாழில் இடப்பெற் றுடனே மேவியபின்
பூனற் களத்தார் பெருமணத்தி லுடனே பரமர் தாளடைந்தார். கக

வேரும்பான் மையினிற் பெரும்பாணர் மலர்த்தாள் வணங்கி வயற்சாலிக்
கரும்பார் கழனித் திருநாவ லூரிற் சைவக் கலிமறையோர்
அரும்பா நின்ற அணிநிலவும் பணியும் அணிந்தார் அருள்பெற்ற
சுரும்பார் தொங்கற் சடையனார் பெருமை சொல்ல லுறுகின்றும். கஉ

ஆ திருவிருத்தம் - ச,உங.

சடையநாயனார் புராணம்

தம்பி ரானைத் தோழமைகொண் டருளித் தமது தடம்புயஞ்சேர்
கொம்ப னார்பால் ஒருதூது செல்ல ஏவிக் கொண்டருளும்
எம்பி ரானைச் சேரமான் பெருமாள் இணையில் தணைவராம்
நம்பி யாரூ ரரைப்பயந்தார் ஞால மெல்லாங் குடிவாழ. க

ஆ திருவிருத்தம் - ச,உங.

இசைஞானியார் புராணம்

ஒழியாப் பெருமைச் சடையனார் உரிமைச் செல்வத் திருமனையார்
அழியாப் புரங்கள் எய்தழித்தார் ஆண்ட நம்பி தனைப்பயந்தார்
இழியாக் குலத்தின் இசைஞானிப் பிராட்டி யாரை என்சிறுபுன்
மொழியாற் புகழ முடியுமோ முடியா தெவர்க்கும் முடியாதால். க

ஆ திருவிருத்தம் க,உங.

பா. பே. வந்து புகுந்து.

கந. வெள்ளானைச் சருக்கம்

மூல மான திருத்தொண்டத் தொகைக்கு முதல்வ ராய்இந்த
ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி தம்பி ரான்தோழர்
காலே மலர்ச்சேங் கமலக்கண் கழறிற் றறிவா ருடன்கூட
ஆலம் உண்டார் திருக்கயிலே அணைந்த தறிந்த படியுரைப்பாம். க

படியில் நீடும் பத்திமுதல் அன்பு நீரிற் பணைத்தோங்கி
வடிவு நம்பி யாரூரர் செம்போன் மேனி வனப்பாகக்
கடிய வெய்ய இருவினையின் களைகட் டெழுந்து கதிர்பரப்பி
முடிவி லாத சிவபோகம் முதிர்ந்து முறுகி விளைந்ததால். உ

ஆரம் உரகம் அணிந்தபிரான் அன்பர் அணுக்க வன்தொண்டர்
ஈர மதுவார் மலர்ச்சோலை எழிலா ரூரில் இருக்குநாள்
சேரர் பெருமாள் தினைநினைந்து தெய்வப் பெருமான் கழல்வணங்கிச்
சாரல் மலைநா டணைவதற்குத் தவிரா விருப்பி னுடன்போந்தார். ங

நன்னீர்ப் பொன்னித் திருநாட்டு நாதர் மகிழுந் திருப்பதிகள்
முன்னி இறைஞ்சி அகன்றுபோய் முல்லைப் படப்பைக் கொல்லைமான்
தன்னி உகைக்குங் குடக்கொங்கில் அணைந்து தூய மதிவான்நீர்
சென்னி பிசைவைத் தவர்செல்வத் திருப்புக் கொளியூர் சென்றடைந்தார்.

மறையோர் வாழும் அப்பதியின் மாட வீதி மருங்கணைவார்
நிறையுஞ் செல்வத் தெதிர்மனைகள் இரண்டில் நிகழ்மங் கலவியங்கள்
அறையும் ஒலியொன் றினில்ஒன்றில் அழுகை ஒலிவந் தெழுதலும்ஆங்
குறையும் மறையோர் களை"இரண்டும் உடனே நிகழ்வ தென்?"னென்றார்.

அந்த ணாளர் வணங்கி"அரும் புதல்வர் இருவர் ஐயாண்டு
வந்த பிராயத் தினர்குளித்த மடுவில் முதலை ஒருமகவை
முந்த விழுங்கப் பிழைத்தவனை முந்நூல் அணியுங் கலியாணம்
இந்த மனைமற் றந்தமனை இழந்தார் அழுகை என்றுரைத்தார். சு

இத்தன் மையினைக் கேட்டருளி இரங்குந் திருவுள் ளத்தினராம்
மொய்த்த முகைத்தார் வன்தொண்டர் தம்மை முன்னே கண்டிறைஞ்ச
வைத்த சிந்தை மறையோனும் மனைவி தானும் மகவிழந்த
சித்த சோகம் தெரியாமே வந்து திருத்தாள் இறைஞ்சினார். எ

துன்பம் அகல முகமலர்ந்து தொழுவார் தம்மை முகநோக்கி
"இன்ப மைந்தன் தனைஇழந்தீர் நீரோ!" என்ன எதிர்வணங்கி
"முன்பு புகுந்து போனதது முன்னே வணங்கு முயல்கின்றேம்
அன்பு பழுதா காமலெழுந் தருளப் பெற்றேம்" எனத்தொழுதார். அ

1. ஏ. வெளிமை. 2. நேராகியுள்ள.

"மைக்தன் தன்னை இழந்ததுயர் மறந்து நான்வந் தணைந்ததற்கே
சிந்தை மகிழ்ந்தார் மறையோனும் மனைவி தானும் சிறுவனையான்
அந்த முதலை வாய்நின்றும் அழைத்துக் கொடுத்தே அவிநாசி
எந்தை பெருமான் கழல்பணிவேன்" என்றூர் சென்றூர் இடர்களைவார்.

இவ்வா றருளிச் செய்தருளி "இவர்கள் புதல்வன் தனைக்கொடிய
வெவ்வாய் முதலை விழுங்குமடி எங்கே?" என்று வினவிக்கேட்
டவ்வாழ் பொய்கைக் கரையிலெழுந் தருளி அவனை அன்றுகவர்
வைவாள் எயிற்று முதலைகொடு வருதற் கெடுத்தார் திருப்பதிகம். கo

"உரைப்பார் உரை" என் றெடுத்த திருப் பாட்டு முடியா முன்னுயர்ந்த
வரைப்பான் மையில்நீள் தடம்புயத்து மறலி, மைத்தன் உயிர்கொணர்ந்து
திரைப்பாய் புனலின் முதலைவயிற் றுடலிற் சென்ற ஆண்டுகளும்
தரைப்பால் வளர்ந்த தெனநிரம்ப முதலை வாயில் தருவித்தான். கக

பேருவாய் முதலை கரையின்கண் கொடுவந் தமிழ்ந்த பிள்ளைதனை
உருகா நின்ற தாய்ஓடி எடுத்துக் கொடுவந் துயிரளித்த
திருவா ளன்தன் சேவடிக்கீழ்ச் சில மறையோ னெடுவீழ்ந்தாள்
மருவார் தருவின் மலர்மாரி பொழிந்தார் விசும்பில் வானோர்கள். கஉ

மண்ணி னுள்ளார் அதிசயித்தார் மறையோ ரெல்லாம் உத்தரியம்
விண்ணில் ஏற விட்டார்த்தார் வேத நாதம் மிக்கெழுந்த
தண்ண லாரும் அவிநாசி அரனூர் தம்மை அருமறையோன்
கண்ணின் மணியாம் புதல்வனையும் கொண்டு பணிந்தார் காசினிமேல்.

பரவும் பெருமைத் திருப்பதிகம் பாடிப் பணிந்து போந்தன்பு
விரவு மறையோன் காதலனை வெண்ணூல் பூட்டி அண்ணலார்
முரசம் இயம்பக் கலியாணம் முடித்து முடிச்சேச லர்தம்பால்
குரவ மலர்ப்பூந் தண்சோலை குலவு மலைநா டணைகின்றூர். கச

சென்ற சென்ற குடபுலத்துச் சிவனூர் அடியார் பதிகள்தொறும்
நன்று மகிழ்வுற் றின்புற்று நலஞ்சேர் தலமுங் கானகமும்
துன்று மணிநீர்க் கான்யாறுந் துறுகற் சுரமுங் கடந்தருளிக்
குன்ற வளநாட் டகம்புகுந்தார் குலவும் அடியேன் அகம்புகுந்தார். கஙி

"மூன்னுள் முதலை வாய்ப்புக்க மைந்தன் மூன்போல் வரமீட்டுத்
தென்னு ரூரர் எழுந்தருளா நின்றூர்" என்று சேரர்பிரார்க்
கன்னாட் டரனூர் அடியார்கள் முன்னே ஓடி அறிவிப்பப்
பொன்னூர் கிழியும் மணிப்பூணுங் காசுந் தூசும் பொழிந்தளித்தார். கசு

செய்வ தொன்றும் அறியாது சிந்தை மகிழ்ந்து களிகூர்ந் "தென்
ஐயன் அணைந்தான் எனையாளும் அண்ணல் அணைந்தான் ஆரூரிற்
சைவன் அணைந்தான் என்துணையாம் தலைவன் அணைந்தான் தாணிலாம்
உய்ய அணைந்தான் அணைந்தான்" என் றேகை மூசஞ் சாற்றுவித்தார்.

பா. ப. 1. நிலைபெ.

பெருகு மதிநூல் அமைச்சர்களோ அழைத்துப் பெரியோர் எழுந்தருளப்
பொருவில் நகரம் அலங்கரித்துப் பண்ணிப் பயணம் புறப்படுவித்
தருவி மதமால் யானையினை அணைந்து மிசைகொண் டரசர்பெருந்
தெருவு கழிய எதிர்வந்தார் சேரர் குலம்உய்ந் திடவந்தார். கஅ

மலைநாட் டெல்லை புட்புகுத வந்த வன்தொண் டரைவரையில்
சிலைநாட் டியவெல் கொடித்தானைச் சேரர் பெருமான் எதிர்சென்று
தலைநாட் கமலப் போதனைய சரணம் பணியத் தாவில்பல
கலைநாட் டமுத ஆரூரர் தாமுந் தொழுது கலந்தனரால். ககக

சிந்தை மகிழுஞ் சேரலனுர் திருவா ரூர னெனுமிவர்கள்
தந்த மணிமே னிகள்வேறும் எனினும் ஒன்றுந் தன்மையராய்
முந்த எழுங்கா தலிற்றொழுது முயங்கி உதியர் முதல்வேந்தர்
எந்தை பெருமான் திருவாரூர்ச் செல்வம் வினவி இன்புற்றார். உ0

ஒருவர் ஒருவ ரிற்கலந்து குறைபா டின்றி உயர்காதல்
இருவர் நண்பின் செயல்கண்ட இரண்டு திறத்து மாந்தர்களும்
பெருகு மகிழ்ச்சி கலந்தார்த்தார் பெருமாள் தமிழின் பெருமாளே
வருகை வரையின் மிசைஏற்றித் தாம்பின் மதிவெண் குடைகவித்தார்.

உதியர் பெருமாள் பெருஞ்சேனை ஓதங் கிளர்ந்த தெனஆர்ப்பக்
கதிர்வெண் திருநீற் றன்பர்குழாங் கங்கை கிளர்ந்த தெனஆர்ப்ப
எதிர்வந் திறைஞ்சும் அமைச்சர்குழாம் ஏறும் இவுளித் துகள்ஆர்ப்ப
மதிதங் கியமஞ் சணிஇஞ்சி வஞ்சி மணிவா யிலைஅணைந்தார். உஉ

வேறு

ஆரண மொழிகள் முழங்கிட ஆடினர் குணிலைகள் அந்தணர்
வாரண மதமழை சிந்தின வாசிகள் இளமொளி பொங்கின
பூரண கலசம் மலிந்தன பூமழை மகளிர் பொழிந்திடுந்
தோரண மறுகு புகுந்தது தோழர்கள் *நடவிய குஞ்சரம். உங

அரிவையர் தெருவில் நடம்பயில் அணிகிளர் தளிரடி தங்கிய
பரிபுர வொலிகள் கிளர்ந்தன பணைமுர சொலிகள் பரந்தன
சுரிவளை நிரைகள் முரன்றன துணைவர்கள் இருவரும் வந்தணி
விரிதரு பவன நெடுங்கடை விறல்மத கரியின் இழிந்தனர். உச

தூகறு மலர்தர ளம்பொரி தூவிமுன் †இருபுடை யின்கணும்
கான்மறை முனிவர்கள் மங்கல நாமநன் மொழிகள் விளம்பிட
மேல்நிறை நிழல்செய வெண்குடை வீசிய கவரி மருங்குற
வானவர் தலைவரும் நண்பரும் மாளிகை நடுவு புகுந்தனர். உரு

அரியணை யதனில் விளங்கிட அடல்மழ விடைஎன நம்பியை
வரிமலர் அமளி அமர்ந்திட மலையர்கள் தலைவர் பணிந்துபின்

1

உரிமைநல் வினைகள் புரிந்தன உரைமுடி விலவென மூன்செய்து
பரிசனம் மனமகி ழும்படி பலபட மணிநிதி சிந்தினர். உசு

வேறு

இன்ன தன்மையில் உதியர்கள் தலைவர்தாம் இடர்கெட முனைப்பாடி
மன்னர் தம்முடன் மகிழ்ந்தினி துறையுநாள் மலைநெடு நாட்டெங்கும்
பன்ன கம்புனை பரமர்தந் திருப்பதி பலவுடன் பணிந்தேத்திப்
பொன்னெ டுந்தட மூதையில் மகோதையிற் புகுந்தனர் வன்தொண்டர். உஎ

ஆய செய்கையில் நாள்பல கழிந்தபின் அரசர்கள் முதற்சேரர்
தூய மஞ்சனத் தொழிலினில் தொடங்கிடத் துணைவராம் வன்தொண்டர்
பாய கங்கைசூழ் நெடுஞ்சடைப் பரமரைப் பண்டோம் பிரிந்தெய்தும்
சேய நன்னெறி குறுகிடக் குறுகினர் திருவஞ்சைக் களந்தன்னில். ஏ

காரிய கண்டர்தங் கோயிலை வலங்கொண்டு காதலாற் பெருகன்பு
புரியும் உள்ளத்தர் உள்ளனைத் திறைவர்தம் பூங்கழ லிணைபோற்றி
அரிய செய்கையில் அவனியில் விழுந்தெழுந் தலைப்புறும் மனைவாழ்க்கை
சரிய வே"தலைக் குத்தலை மாலை"என் றெடுத்தனர் தமிழ்மாலை. உக

எடுத்த அத்திருப் பதிகத்தின் உட்குறிப்(பு) 'இவ்வுல கினிற்பாசம்
அடுத்த வாழ்க்கையை அறுத்திட வேண்டும்'என் றன்பர்அன் பினிற்பாடக்
கடுத்த தும்பிய கண்டர்தங் கயிலையிற் கணத்தவ ருடன்கூடத்
தடுத்த செய்கைதான் முடிந்திடத் தங்கழற் சார்புதந் தளிக்கின்றார். ஐ

மன்ற லந்தரு மிடைந்தபூங் கயிலையில் மலைவல்லி யுடன்கூட
வென்றி வெள்விடைப் பாகர்தாம் வீற்றிருந் தருளிய பொழுதின்கண்
"ஒன்று சிந்தைநம் மூரனை உம்பர்வெள் ளானையின் உடனேற்றிச்
சென்று கொண்டிங்கு வாரும்"என் றயன்முதற் றேவர்கட் கருள்செய்தார். ஒ

வான நாடர்கள் அரிஅயன் முதலினோர் வணங்கிமுன் விடைகொண்டு
தூந லந்திகழ் சோதிவெள் ளானையுங் கொண்டுவன் தொண்டர்க்குத்
தேன லம்புதண் சோலைசூழ் மகோதையில் திருவஞ்சைக் களஞ்சேரக்
கானி லங்கொள வலங்கொண்டு மேவினர் கடிமதிற் றிருவாயில். ஙூ

தேவர் தங்குழாம் நெருங்கிய வாய்தலிற் றிருநாவ லூரர்தம்
காவல் மன்னரும் புறப்பட எதிர்கொண்டு "கயிலைவீற் றிருக்கின்ற
பூவ லம்புதண் புனற்சடை முடியவர் அருளிப்பா" டெனப்போற்றி
"ஏவல்" என்றபின் செய்வதோன் றிலாதவர் பணிந்தெழுந் தெதிரேற்றார் ஙூ

ஏற்ற தொண்டரை அண்டர்வெள் ளானையின் எதிர்வலங் கொண்
டேற்ற, நாற்ற டங்கடல் முழக்கென ஐவகை நாதம்மீ தெழுந்தார்ப்பப்,
போற்றி வானவர் பூமழை பொழிந்திடப் போதுவார் உயிரெல்லாம்,
சாற்று மாற்றங்கள் உணர்பேரும் துணைவரை மனத்தினிற் கொடு
சார்ந்தார். ஙூ

சேரர் தம்பிரான் தம்பிரான் தோழர்தஞ் செயலறிந் தப்போதே,
சார நின்றதோர் பரியினை மிசைக்கொண்டு திருவஞ்சைக் களஞ்சார்
வார், வீர வேண்கழல் றுகைத்துவிண் மேற்செலும் மெய்த்தொண்டர்
தமைக்கண்டார், பாரில் நின்றிலர் சென்றதம் மனத்தோடு பரியும்
முன் செலவிட்டார். நூ

விட்ட வெம்பரிச் செவியினிற் புவிமுதல் வேந்தர்தாம் விதியாலே
இட்ட மாஞ்சிவ மந்திரம் ஓதலின் இருவிசும் பெழப்பாய்ந்து
மட்ட லர்ந்தபைந் தெரியல்வன் தொண்டர்மேல் கொண்டமாதங்கத்தை
முட்ட எய்திமுன் வலங்கொண்டு சென்றது மற்றதன் முன்னுக. நூசு

உதியர் மன்னவர் தம்பெருஞ் சேனையின் உடன்சென்ற படைவீரர்
கதிகொள் வாசியிற் செல்பவர் தம்மைத்தங் கட்புலப் படுமெல்லை
எதிர்வி சும்பினிற் கண்டுபின் கண்டிலர் ஆதலின் எல்லாரும்
முதிரும் அன்பினில் உருவிய சுரிகையால் முறைமுறை உடல்வீழ்த்தார்.

வீர யாக்கையை மேல்கொண்டு சென்றுபோய் வில்லவர் பெருமானைச்
சார முன்சென்று சேவக மேற்றனர் தனித்தொண்டர் மேல்கொண்ட
வாரும் மும்மதத் தருவிவெள் ளானைக்கு வயப்பரி முன்வைத்துச்
சேரர் வீரருஞ் சென்றனர் மன்றவர் திருமலைத் திசைநோக்கி. நூஅ

யானை மேல்கொண்டு செல்கின்ற பொழுதினில் இமையவர் குழாமெண்ணும்
தானை முன்செலத் ''தானைனை முன்படைத் தான்'' எனுந் தமிழ்மாலை
மான வன்தொண்டர் பாடிமுன் னணைந்தனர் மதிநதி பொதிவேணித்
தேன லம்புதண் கொன்றையார் திருமலைத் தென்திசைத் திருவாயில்.

மாசில் வெண்மைசேர் பேரொளி உலகெலாம் மலர்ந்திட வளர்மெய்ம்மை
ஆசில் அன்பர்தஞ் சிந்தைபோல் விளங்கிய அணிகிளர் மணிவாயில்
தேசு தங்கிய யானையும் புரவியும் இழிந்துசே ணிடைச்செல்வார்
ஈசர் வெள்ளிமா மலைத்தடம் பலகடந் தெய்தினர் மணிவாயில். சஂ

அங்கண் எய்திய திருஅணுக் கன்திரு வாயிலின் அடற்சேரர்
தங்கள் காவலர் தடையுண்டு நின்றனர் தம்பிரான் அருளாலே
பொங்கு மாமதம் பொழிந்தவெள் ளானையின் உம்பர்போற் றிடப்போந்த
நங்கள் நாவலூர் காவலர் நண்ணினர் அண்ணலார் திருமுன்பு. சக

சென்று கண்ணுதல் திருமுன்பு தாழ்ந்துவீழ்ந் தெழுந்துசே ணிடைவிட்ட
கன்று கோவினைக் கண்டணைந் ததுஎனக் காதலின் விரைந்தெய்தி
நின்று போற்றிய தனிப்பெருந் தொண்டரை நேரிழை வலப்பாகத்
தொன்றும் மேனியர் ''ஊரனே! வந்தனை'' என்றனர் உலகுய்ய. சஉ

''அடிய னேன்பிழை பொறுத்தெனை ஆண்டுகொண் டதுதொடக்
கினைநீக்கி, முடிவி லாநெறி தரும்பெருங் கருணைஎன் தரத்ததோ''
எனமுன்னர்ப், படியும் நெஞ்சொடு பன்முறை பணிந்தெழும் பரம்

பரை ஆனந்த, வடிவு நின்றது போன்றின்ப வேள்ளத்து மலர்ந்தனர் சங
வன்தொண்டர்.

நின்ற வன்தொண்டர் "நீரணி வேணிய! நின்மலர்க் கழல் சாரச், சென்று சேரலன் திருமணி வாயிலின் புறத்தினன்" எனச் செப்பக், குன்ற வில்லியார் பெரியதே வரைச்சென்று கொணர்கென அவரெய்தி, வென்றி வானவர்க் "கருளிப்பா" டெனஅவர் கழல் சச
தொழ விசைந்தெய்தி.

மங்கை பாகர்தந் திருமுன்பு சேய்த்தாக வந்தித்து மகிழ்வெய் திப்
பொங்கும் அன்பினிற் சேரலர் போற்றிடப் புதுமதி அலைகின் ற
கங்கை வார்சடைக் கயிலைநா யகர்திரு முறுவலின் கதிர்காட்டி
"இங்கு நாம்அழை யாமைமீ எய்திய தென்?"னென அருள்செய்தார்.

அரசர் அஞ்சலி கூப்பிநின் "றடியனேன் ஆரூரர் கழல்போற் றிப், புரசை யானைமுன் சேவித்து வந்தனன் பொழியுநின் கருணைத் தெண், டிரைசெய் வெள்ளமுன் கொடுவந்து புகுதலின் திருமுன்பு வரப்பெற்றேன், விரைசெய் கொன்றைசேர் வேணியாய்! இனியொரு சசு
விண்ணப்பம் உள"தென்று.

"பெருகு வேதமும் முனிவரும் துதிப்பரும் பெருமையாய்! உனஅன்பால், திருஉ லாப்புறம் பாடினேன் திருச்செவி சாத்திடப் பெறவேண்டும், மருவு பாசத்தை அகன்றிட வன்தொண்டர் கூட்டம் வைத் தாய்"என்ன, அருளும் ஈசருஞ் "சொல்லுக" என்றனர் அன் பருங் கேட்பித்தார். சஎ

சேரர் காவலர் பரிவுடன் கேட்பித்த திருஉலாப் புறங்கொண்டு
நாரி பாகரும் நலம்மிகு திருவருள் நயப்புடன் அருள்செய்வார்
"ஊர ஞகிய ஆலால சுந்தர னுடனமர்ந் திருவீரும்
சார நங்கண நாதராந் தலைமையில் தங்கும்"என் றருள்செய்தார். சஅ

அன்ன தன்மையில் இருவரும் பணிந்தெழுந் தருள்தலை மேற்கொண்டு
மன்னும் வன்தொண்டர் ஆலால சுந்தரர் ஆகித்தாம் வழுவாத
முன்னை நல்வினைத் தொழில்தலை நின்றனர் முதற்சேரர் பெருமானும்
நன்மை சேர்கண நாதராய் அவர்செயும் நயப்புறு தொழில்பூண்டார்.

தலத்து வந்துமுன் னுதயஞ்செய் பரவையார் சங்கிலி யாரென்னும்
நலத்தின் மிக்கவர் வல்வினைத் தொடக்கற நாயகி அருளாலே
அலத்த மெல்லடிக் கமலினி யாருடன் அனிந்திதை யாராகி
மலைத்த னிப்பெரு மான்மகள் கோயிலில் தந்தொழில் வழிநின்றார்.

வாழி மாதவ ராலால சுந்தரர் வழியிடை அருள்செய்த
ஏழி சைத்திருப் பதிகம்இவ் உலகினில் ஏற்றிட எறிமுந்நீர்

ஆழி வேந்தனும் வருணனுக் களித்திட அவனும்அவ் வருள்சூடி
ஊழி யிற்றனி யொருவர்தந் திருவஞ்சைக் களத்திலுய்த் துணர்வித்தான்.

சேரர் காவலர் விண்ணப்பஞ் செய்தஅத் திருஉலாப் புறம்அன்று
சாரல் வெள்ளியங் கயிலையிற் கேட்டமா சாத்தனர் தரித்திந்தப்
பாரில் வேதியர் திருப்பிட வூர்தனில் வெளிப்படப் பகர்ந்தெங்கும்
நார வேலுசூழ் உலகினில் விளங்கிட நாட்டினர் நலத்தாலே. நுஉ

வேறு

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம். நுஙூ

ஆ திருவிருத்தம் - ச,உஅசு.

---

*வைய நீடுக மாமழை மன்னுக
மெய்வி ரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.

திருச்சிற்றம்பலம்

பெரிய புராணம் முற்றுப்பெற்றது.

---

*இந்தப் பாட்டு பல ஏட்டுப் பிரதிகளிலில்லை. இது சேக்கிழார் வாக்கல்ல வென்று பல ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

சிவமயம்

திருமுறைகண்ட புராணம்

கருமுறை விண்டடி யவருயு மாறருள் கவுணியர் குலதீபம்
தருமிறை நாவுக் கரசா ரூரர் தாஞ்சே மித்திடும்அத்
திருமுறை கண்ட புராண முரைக்கச் சிந்தை முகனற்ரூள்
ஒருமுறை இருமுறை மும்முறை வாழ்த்தி உவந்தன் பொடுபணிவாம்.

உலகமகிழ் தருசைய மீது தோன்றி ஓவாது வருபொன்னி சூழ்சோ ணாட்டின், திலகமென விளங்குமணி மாட ஆரூர்த் தியாகேசர் பதம்பணிந்து செங்கோ லோச்சி, அலகில்புகழ் பெறுராச ராச மன்னன் அபயகுல சேகரன் பால் எய்தும் அன்பர், இலகுமொரு மூவாருள் பதிக மொன்றிரண்டி னினிதின் உரைசெய்ய அன்பாற் கேட்டு. க

கையிரண்டும் உச்சிமேல் ஏறக் கண்ணீர் கரைந்தோட மெய்ம்முழுதும் புளகம் போர்ப்ப, ஐயன்மலர்ப் பதமுளத்தே கொண்டு போற்றி அரியமுறை தேடஎங்கும் இலாமை யாலே, நையுமனத் தினனாகி இருக்குங் காலை நாரையூ ரினில்ஆதி சைவமறை யோன்பால், வையமெலாம் ஈடேறச் சைவம் வாழ மாமணிபோல் ஒருசிறுவன் வந்து தோன்றி. உ

வளமொடுப நயனவிதிச் சடங்கும் பூண்டு மறைமுதலாம் கலைபயின்று வருகாள் ஈன்ற, கிளர்மறையோன் ஒளூர்க்குச் செல்ல மைந்தன் கேடில்பிதா உரைத்தமொழிப் படியே அந்தி, இளமதிச்செஞ் சடைப்போல்லாப் பிள்ளை யாரை ஏத்திஆ ராதிப்பான் இனிதின் ஏகி, உளமலிஅன் பொடுதிருமஞ் சன முன் னாகும் உரியஎலாஞ் செய்துநிவே தனம்முன் வைத்து. ங

"எம்பெருமான்! அமுதுசெய வேண்டும்" என்ன இறைஞ்சிடவும் அமுது செயா திருப்பக் கண்டு, வெம்பியுளம் "ஏதேனுந் தவறிங் குண்டோ வேழமுக னே!அடியேன் நிவேதித் திட்ட, பம்பமுதம் உண்ணுத தென்னை" என்று பரிந்துதலை தனைமோதப் புகுங்கால் எம்மான், "நம்பிபொறு" எனத்தடுத்தவ் வமுத மெல்லாம் நன்கருந்த உவந்துநம்பி நவில்வ தானூர். ச

"எந்தையே! இனிஅடியேன் பள்ளிக் கேகில் எங்கள்தே சிகன்அடிப்பான் ஆத லாலே, சந்தமறை முதற்கலைகள் நீயே ஓதித் தரல்வேண்டும்" எனவேழ முகத்தோன் தானும், அந்தமற ஓதுவிக்க ஓதி நம்பி மிழ்ந்தனன்அன் றது போல மற்றை நாளும், விந்தையொடு நிகழநம்பி யாண்டார் நம்பி மேவியிருந் திடுஞ்செய்தி வேந்தன் கேளா. ஞ

"செல்வமிகு திருநாரை யூரில் மேவுஞ் சிவனளித்த மதகரிக்குச் சிந்தை கூர்ந்து, நல்லபுக முடையநம்பி யாண்டார் நம்பி நண்பினெடு நிவேதிப்பான் மதுர மிக்க, எல்லையில்வா ழைக்கனிதேன் அவலோ டப்பம் எள்ளுண்டை இவ்வுலகோர் எடுக்க" என்றே, மல்லல்மிகு சேனையுடன் இராச ராச மன்னவ னும் அங்கரில் வந்து சேர்ந்தான். ட

ஆங்கதனுக் கங்ஙகரில் இடம்போ தாமல் அயல்சூழப் பதின்காத அகல
எல்லை, மாங்கனிவா ழைக்கனிகள் வருக்கை யாவும் வந்தனஅவ் வெல்லையெலாம்
மருவ வைத்துப், பாங்கினுடன் நம்பிதாள் பணிந்து மன்னன் பலகனிகள்
கொணர்ந்தலாம் பகர்ந்து போற்றி, "ஈங்கிதனைப் பொல்லாத பிள்ளே யாருக்
கிப்பொழுதே நிவேதிக்க" என்று சொன்ஞன். எ

நம்பிஅர சன்சொன்ன வார்த்தை கேளா "நன்றுனது பணி"என்ன அரு
ளால் உன்னித், தும்பிமுகன் அடிபணிந்து " மன்னன் இங்குத் தொகுத்தனமீ
அமுதுசெய வேண்டும்" என்னக், கம்பமதக் களிற்றுமுகத் தானும் அங்குக்
கருத்தினுடன் நம்பியுரைக் கிசைந்து காட்ட, இம்பரினில் வந்தனகாற் சுத்தி
செய்தே இருந்தலாம் படைக்கஅவன் ஏற்றல் செய்தான். அ

புகழ்முகக்கை புறப்படவே படைத்த எல்லாம் புகுந்தஇடம் அறியாமற்
போன பின்னே, அகமெகிழ மெய்யரும்பிக் கண்ணீர் வார நம்பிகழல் அன்பினுல்
அரசன் போற்றி, "மிகவும்ஒரு விண்ணப்பம் அடியேற் குண்டு வேதியனே!
கேள்"என்று விளம்பு வான்"மெய்ப், புகழதுசேர் **ழவர்தமிழ்-தொண்டர் செய்தி**
பூதலத்தில் விளங்க"எனப் போற்றி நின்ருன். கூ

அந்தஉரை கேட்டலும்அங் கரசன் தன்னை நம்பிமகிழ்ந் தருள்புரிவான்
"அருள்சேர் மூவர், செந்தமிழ்கள் இருந்தஇடம் அன்ப ருள்ளோர் செய்திக்கவ்
விநாயகன்தாள் சிந்தித் தெந்தாய்!, அந்தவகை எதென்று கேட்டால் எந்தை
மகிழ்ந்தருளும் அந்நெறியை வழாது னக்குத், தந்திடுவன் மன்ன!பொறு" என்று
சொல்லித் தந்திமுகன் சன்னிதியில் தாழ்ந்து சென்ருன். கo

சென்றுபணிந் திபமுகத்தோன் பாதப் போதைச் சென்னியில்வைத்
தவனருளில் நினைத்துச் சிந்தை, ஒன்றுமற உருகிவிழி தாரை கொள்ள
உண்மையினுல் வந்தித்தங் குவாவோன் தன்னை, "இன்தமிழ்சேர் மூவர்தமிழ்
இருந்த எல்லை - எல்லையில்சீர்த் திருத்தொண்டர் இயல்பு - மூர்த்தி !, நன்றும்
அருள் செய்தருள வேண்டும்" என்ன நாகமுகன் நம்பிக்கு நவில லுற்ருன். கக

"வார்தருட்கண் நீர்சொரிய நம்பி கேட்ப **வண்தமிழ்கள்** இருந்தஇடம்
மன்று ளாடும், கூர்ந்தஇருட் கண்டர்புறக் கடையின் பாங்கர்க் கோலமலர்க்
கைகள்அடை யாள மாகச், சார்ந்தன"என் றருள்செய்து **தொண்டர் பேரும்**
சாற்றுதலால் சகதலத்தோர் அருளைச் சார, ஆர்ந்ததமிழ் இருந்தஇடம் - அன்
பர் செய்தி அத்தனையும் நம்பிமனத் தருளிற் கொண்டார். கூ

கோண்டுகுல சேகரனுங் கோன்பால் வந்து குஞ்சரத்தோன் அருள்செய்த
கொள்கை எல்லாம், மண்டுபெருங் காதலுடன் சொல்லி அந்த வண்தமிழின்
பெருமைதனை வகுத்துச் சொல்வார், "கண்டபெரு மந்திரமே மூவர் பாடல்
கைகாணு மந்திரங்கண் ணுதலோன் கூறல், எண்திசையுஞ் சிவனருளைப் பெறு
தற் காக இம்மொழியின் பெருமையையான் இயம்பக் கேள்மீ." கூ

"கேடர்மலி காழிநகர் வேந்தர் தாமும் தேவர்புகழ் திருத்தோணிச் சிவனூர்
பங்கில், பீடுடைய உமைமூலப்பால் அருளால் உண்டு பிஞ்ஞகனைச் சின
விடைமேல் பெருகக் கண்டு, 'தோடுடைய செவியன்'முதல் 'கல்லு' 'ரொன்னும்
தொடைமுடிவாப் பரசமயத் தொகைகள் மாளப், பாடினுர் பதிகங்கள் பாவில்
ஒன்றும் பதினுரு யிரமுளதாப் பகரு மன்றே. கச

திருநாவுக் கரையரெனும் செம்மை யாளர் தீஅமணர் சிறைநீங்க அதிகை
மேவும், குருநாமப் பரஞ்சுடரைப் பாவிச் சூலை கொடுங்'கூற்ரு யின'என எடுத்

துக் கோதில், 'ஒருமானைத் தரிக்கு'மொரு வரையுங் காறும் ஒருகாற்பத் தொன் பதிஞ யிரம தாகப், பெருகாமப் புகலூரிற் பதிகங் கூறிப் பிஞ்ஞக ஞர் அடியிணைகள் பெற்று ளாரே. கடி

பின்புசில நாளின்கண் ஆரூர் நம்பி பிறங்குதிரு வெண்ணெய்நல்லூர்ப் 'பித்தா' என்னும், இன்பமுதல் திருப்பதிகம் 'ஊழி தோறும்' ஈரைய்மூப் பத் தெண்ணு யிரம தாக, முன்புபுகன் றவர்கொடித்தான் மலையிற் சேர்த்தார் முறைகளெல்லாந் திருத்தில்லை மூதூர் தன்னில், அன்றவர்கை இலச்சினை யால் வைத்தார் மன்ன! ஆராய்ந்து தருக"என அருளிச் செய்தார். ககூ

"அருமறையைச் சிச்சிலிபண் டருந்தத் தேடும் அதுபோலன் றிதுஎன்றும் உளதாம் உண்மைப், பரபதமும் தற்பரமும் பரனே அன்றிப் பலரில்லை என் றெழுதும் பனுவல் பாரின், எரியினிடை வேவாதாற் றெறிரே யோடும் என் புக்கும் உயிர்கொடுக்கும் இடுநஞ் சாற்றும், கரியைவலை விக்குங்கல் மிதக்கப் பண்ணுங் காமதலை கரையிலுறக் காற்றுங் காணே." கஎ

என்றென்று நம்பிக்குப் பரிவால் உண்மை இன்தமிழின் பெருமைதனை இயம்பக் கேட்டுக், குன்றெறுன்று பேருருவங் கொண்டாற் போலுங் குஞ்சரத் தோன் அருளினைஉட் கொண்டு மன்னன், மன்றினிடஞ் சென்றுமறை யோர்கள் தொண்டர் வார்சடையோர் காவலுடை மரபோர்க் கெல்லாம், "நன்றெங்கள் கணபதிதன் சொல்லி" தென்று நன்மையுடன் மன்னவனுர் கவிலுங் காலை. கஅ

அத்தகையோர் "தமிழ்வைத்த மூவர் வந்தால் அறைதிறக்கும்" என உரைக்க அரசன் தானும், மெய்த்தகுசீர் அம்பலவர்க் குற்ற செல்வ விழா எடுத்து விளம்புதமிழ் மூவர் தம்மை, உய்த்தணிவீ தியினிலுலா வருவித் தும்பர் நாயகன்றன் கோயில்வல மாக்கி யுள்ளே, சித்தமெலாம் உருக்குதமிழ் இருக்கை சேரச் சேர்த்திஅவர் சேர்ந்ததெனச் செப்பி னின்றான். ககூ

ஐயர்நட மாடும்அம் பலத்தின் மேல்பால் அருள்பெற்ற மூவர்தம தருள் சேர் செய்ய, கையதுவே இலச்சினையாய் இருந்த காப்பைக் கண்டவர்கள் அதி சயிப்பக் கடைவாய் நீக்கிப், பொய்யுடையோர் அறிவுதனைப் புலன்கள் ழுடும் போற்பதுபோல் போதமிகும் பாடல் தன்னை, நொய்யசிறு வன்மீகம் மூடக் கண்டு கொடிப்பளவி னிற்சிந்தை நொந்த வேந்தன். உ0

பார்த்ததனைப் புறத்துய்ப்ப உரைத்து மேலே படிந்திருந்த மண்மலையைச் சேரத் தள்ளிச், சீர்த்ததில தயிலமலி கும்பங் கொண்டு செல்லுதனை யச் சொரிந்து திருவ டெல்லாம், ஆர்த்தஅரு ளதனுலே எடுத்து நோக்க அல கிலா ஏடுபழு தாகக் கண்டு, "தீர்த்தமுடிக் கணிபானே பரனே" என்னச் சிந்தைதளர்ந் திருகண்ணீர் சோர நின்றான். உக

ஏந்துபுகழ் வளவனிவ்வா றன்பி னுலே இடர்க்கடலின் கரைகாணு தினை யுங காலைச், சார்ந்தமலை மகள்கொழுநன் அருளால் "வேதச் சைவநெறித் தலைவ ரொனும் மூவர் பாடல், வேய்ந்தனபோல் மண்மூடச் செய்தே ஈண்டு வேண்டு வன வைத்தோம்"என் றுலகி லுள்ள, மாந்தரொடு மன்னவனுங் கேட்கு மாற் றுல் வானகத்தில் ஓரோசை எழுந்த தன்றே. உஉ

அந்தமொழி கேட்டலுமே மன்னன் தானும் ஆடினுன் பாடினுன் அலக் கண் யாவும், சிந்தினுன் அமுதமுண்டான் போல நெஞ்சந் தேறினுன் நம்பி

திரு வடியில் தாழ்ந்தான், "பந்தமறு சிவனடியார் கொள்க" என்னுப் பண்டாரந் திறந்துவிட்டான் பரிவு கூர்ந்தான், இந்தவகைப் பெருங்களிகொள் மன்னன் தானும் எழில்முறையை முன்போல வகுக்க எண்ணி. உங

மன்னுதமிழ் விரகரெங்கள் காழி வேந்தர் வகுத்தருளால் அமைத்ததிரு முறைஒர் மூன்றும்; அன்னவகை வாகீசர் முறைஒர் மூன்றும் ஆரூரர் உரைத்ததிரு முறைய தொன்றும், துன்னவகை ஏழாகத் தொகுத்துச் செய்தான் தூயமனு எழுகோடி என்ப துன்னித், தன்னிகரில் திருவருளால் மன்னன் தானுந் தாரணியோர் வீடுபெறுந் தன்மை சூழ்ந்தே. உசு

வேறு

பண்புற்ற திருஞான சம்பந்தர் பதிகமுந்தூற்
றெண்பத்தி நான்கிலுல் இலங்குதிரு முறைமூன்று
நண்புற்ற நாவரசர் முந்தூற்றேழ் மூன்றிலுல்
வண்பெற்ற முறைஒன்று தூற்றிலுல் வன்தொண்டர். உஞ

ஆகவளர் திருமுறைவழ் அருட்டிருவா சகமொன்று
மோகமெறி திருவிசைப்பா மாலைமுறை யொன்றுசிவ
போகமிகு மந்திரமாம் முறையொன்று புகழ்பெறவே
பாகமிகுந் திருமுறைகள் பத்தாக வைத்தார்கள். உசு

வைத்ததற்பின் நம்பிகழல் மன்னர்பிரான் மகிழ்ந்திறைஞ்சிச்
"சித்திதரும் இறைமொழிந்த திருமுகப்பா சுரம்முதலாம்
உய்த்தபதி கங்களேயும் ஒருமுறையாச் செய்க"எனப்
பத்திதருந் திருமுறைகள் பதிஎன்ஞப் பண்ணினுர். உஎ

மந்திரங்கள் எழுகோடி ஆதலிலுல் மன்னுமவர்
இந்தவகை திருமுறைகள் ஏழாக எடுத்தமைத்துப்
பந்தமுறு மந்திரங்கள் பதிஎன்றும் ஆதலிலுல்
அந்தமுறை நான்கிலுடு முறைபதிஎன் றுரக்கினுர். உஅ

ஆக்கியபின் திருத்தொண்டத் தொகைஅடைவை அருளாலே
நோக்கியபின் நாயன்மார் நடங்கடைவுந் தொழிற்பேறும்
பாக்கியத்தால் இபமுகத்தோன் அருள்செய்த பகுதியிலுல்
வாக்கியல்சேர் அந்தாதி நம்பிஅடை வேவகுத்தார். உக

சீரருள்சேர் அறுபத்து மூவர்தனித் திருக்கூட்டம்
சாரும்அவர் ஒன்பானுந் தண்டமிழா லுரைசெய்து
பேரிசையாம் வகைஅடைவு புவியினிடைப் பெருமையிலுற
சீருலவு திருஎருக்கத் தம்புலியூர் சென்றடைந்தார். [illegible]

சென்னியருள் நம்பிஇவர் அங்ககரைச் சேர்ந்துசிவன்
மன்னுதிருக் கோயிலினே வலங்கொண்டு பணிந்"தரனே
இன்னிசைதந் தருள்"என்ன இரக்கமுடன் குறைந்[illegible]
கன்னியொரு பங்குடையோன் அருள்செய்த கடனு[illegible]

"நல்லிசையாழ்ப் பாணனுர் நன்மாபின் வழிவந்த
வல்லிஒருத் திக்கிசைகள் வாய்ப்பஅளித் தோம்"என[illegible]

சொல்லஅவள் தனைஅழைத்துச் சுருதிவழிப் பண்தழுவும்
நல்லிசையின் வழிகேட்டு நம்பிஇறை உள்மகிழ்ந்தார். நஉ

"ஆங்கவளை அம்பலத்துள் ஆடுவார் திருமுன்பே
பாங்கினுடன் கொடுவந்து பண்ணைவு பயில்பாடல்
ஓங்கருளால் முறைபணித்தற் கொக்கும்" என ஓரோசை
நீங்கரிய வானின்கண் நிகழஅர சன்கேட்டான். நஙக

மன்னனுக்கும் நம்பிக்கும் மறையவர்மூ வாயிரவர்
பன்னரிய திருத்தொண்டர் பலதுறையோர்க் குங்கேட்க
இன்னருள்முன் வியந்துரைத்த இவள்முதலா இசைத்தஇசை
தென்னிலமேல் விகத்தோன்றத் திருவருளால் தோன்றியதாம். நச

சொல்நட்ட பாடைக்குத் தொகைஎட்டுக் கட்டளையாம்
இன்னிசையால் தருந்தக்க ராகத்தேழ் கட்டளையாம்
பன்னுபழந் தக்கரா கப்பண்ணின் மூன்றளதாம்
உன்னரிய தக்கேசிக் கோரிரண்டு வருவித்தார். நஞ

மேவுகுறிஞ் சிக்கஞ்சு வியாழக்குறிஞ் சிக்காறு
பாவுபுகழ் மேகரா கக்குறிஞ்சிப் பாலிரண்டு
தேவுவந்த இந்தளத்தின் செய்திக்கு நான்கினிய
தாவில்புகழ்க் காமரத்தின் தன்மைதனக் கிரண்டமைத்தார். நசு

காந்தார மாகியபி யந்தையாங் கட்டளைக்கு
வாய்ந்தவகை மூன்றுக்கி வன்னட்ட ராகத்திற்
கேய்ந்தவகை இரண்டாக்கிச் செவ்வழியொன் றுக்கிஇசைக்
காந்தார பஞ்சமத்தின் கட்டளைமூன் றுக்கினார். நஎ

கோல்லிக்கு நாலாக்கிக் கவுசிகத்துக் கூறும்வகை
சொல்லிலிரண் டாக்கிமிகு தூங்கிசைசேர் பஞ்சமத்திற்
கொல்லையினில் ஒன்றுக்கிச் சாதாரிக் கொன்பதாப்
புல்லும்இசைப் புறநீர்மைக் கொன்றுகப் போற்றினார். நஅ

அந்தாளிக் கொன்றுக்கி வாசீசர் அருந்தமிழின்
மூந்தாய பலதமிழுக் கொன்றொன்றும் மொழிவித்து
நந்தாத கோசிசையாங் கொல்லிக்கு நாட்டிலிரண்
டுந்தாடுங் குறுந்தொகைக்கோர் கட்டளையா வீரித்துரைத்தார். நக

தாண்டகமாம் பாவுக்கோர் கட்டளையாத் தாபித்தங்
காண்டகையார் தடுத்தாண்ட ஐயர்அருள் தய்யமுறைக்
கீண்டிசைசேர் இந்தளத்துக் கிரண்டாக எடுத்துரைத்து
நீண்டதக்க ராகத்துக் கிரண்டாக நிகழ்வித்தார். சஉ

கூறரிய நட்டராக் கத்திரண்டு கொல்லிக்கு
வேறுவகை மூன்றுக மிகுத்தபழம் பஞ்சுரத்துக்
கேறும்வகை இரண்டாக்கி இன்னிசைதேர் தக்கேசிப்
பேறிசைஆ றுக்கியதிற் காந்தாரம் பிரித்திரண்டாம். சக

ஒன்றுகுங் காந்தார பஞ்சமத்துக் கோரிரண்டாம்
நன்றுன சீர்நட்ட பாடைக்கு நவின்றுரைக்கில்

குன்றுத புறநீர்மைக் கிரண்டாகுங் கூறுமிசை
ஒன்றுகக் காமாத்துக் கொன்றுகப் போற்றினர். ஈ உ

உற்றஇசைக் குறிஞ்சிக்கோர் இரண்டாக வகுத்தமைத்துப்
பற்றரிய செந்துருத்திக் கொன்றுக்கிக் கவுசிகப்பாற்
றுற்றஇசை இரண்டாக்கித் தூயஇசைப் பஞ்சமத்துக்
கற்றஇசை ஒன்றுக்கி அரனருளால் விரித்தமைத்தார். ஈ ங

இந்தவகை சிவன்செவிப்பால் எக்கண்ணும் தழைத்தோங்க
அந்தமிலா அறுபத்து மூவரருள் அம்புவிமேல்
கந்தியிட மும்மலமும் கல்லுலகோர் நீங்கியிடச்
சிந்தைஅருட் சிவமாகத் தெளிவித்தான் அருட்சென்னி. ஈ ஈ

கீராருந் திருமுறைகள் கண்டதிறற் பார்த்திபனும்
ஏராரும் இறைவனையும் எழிலாரும் நம்பியையும்
ஆராத அன்பினுடன் அடிபணிந்தங் கருள்விரவச்
சோராத காதல்மிகுந் *திருத்தொண்டர் பதந்துதிப்பாம். ஈ சு

ஆ திருவிருத்தம் சுடு.

திருப்பதிகக்கோவை

ஒன்றுதி ஒரெழுபத் தொன்றீறுய் மூவர்தமிழ்
சென்றுர் சிவதலங்கள் செப்புதற்கு—நின்று
கடக்குஞ் சரமுகனேர் காய்வழியான் ஈன்ற
கடக்குஞ் சரமுகனே காப்பு.

பன்னுசிவ தலம்ஒருநூற் றைம்பதிற்று மூன்று பதிகம்ஒன்றும் நாற்பத் தொன் பதுபதிகம் இரண்டாம்,உன்னும்இரு பதிற்றெட்டு நகர்பதிகம் மூன்றும் ஒருபதினேர் தலம்பதிகம் ஒருநான்கென் றுணர்க, மன்னும்இரு நான்குதலம் ஒன்றுதே பதிகம் மற்றும்ஐந்து தலங்களுக்கு வருபதிகம் ஆறும், பின்னும் ஐந்து வளநகர்க்குப் பெறும்பதிகம் ஏழாம் பேசும்ஒரு நான்குதலம் பெறும் பதிகம் எட்டே. க

பாவும்ஒரு நான்குதலம் பதினென்றும் பதிகம் பன்னும்இரு தலம்பதிகம் பன்னிரண்டாப் பகரும், உரைசெய்இரு தலம்பதிகம் பதினெட்டாம் இப்பால் ஒருமூன்று தலங்களுக்கிங் குறுபதிகம் உரைக்கின், நிரவிவரும் அறுநான்கு மூப்பதிற்று நான்கு நீடெழுபத் தொன்றும்என நிரல்நிரையா மாகக், கருது சிவ தலம்இருநூற் றெழுபதிற்று நான்கு கடைகாப்போர் எழுநூற்று நாற்பதிற் றொன் பானே. உ

திருப்பழுவூர் சேய்ஞலூர் திருமுல்லை வாயில் திருவைகா கொடிமாடச் செங்குன்றூர் வியலூர், கருக்குடிதெங் கூர்பனந்தாள் கலிக்காமூர் தலைச்சங் காடுமயேற் திரப்பள்ளி கச்சினங்கன் றுப்பூர், குரக்குக்கா பெரும்புலியூர் திருக் காட்டுப் பள்ளி குடந்தைக்கீழ்க் கோட்டமொடு குடந்தைக்கா ரோணம்,எருக்கத்

* திருத்தொண்டர் புராணசாரம் பார்க்க.

தம் புலியூர்வெண் துறைகண்ணூர் கோயில் இலம்பையங்கோட் டீச்சிக்கல் இரா மனதீச் சரமே. கூ

பள்ளியின்முக் கூடல்திரு இரும்பூளை ஆவூர்ப் பசுபதீச் சரம்பாலைத் துறைபரிதி நியமம், கள்ளில்குராங் கணின்முட்டம் திருமுருகன் பூண்டி கஞ்ச னூர் கச்சிஏகம்பிக் காரைக்கா டோத்தூர்,புள்ளமங்கை நாட்டியத்தான் குடிகலிய நல்லூர் புக்கொளியூர் அவிநாசி பூவனூர் துறையூர்,கொள்ளிக்காடு டைச்சுரம்அச் சிறுபாக்கம் விளமர் கொட்டையூர் கொடுங்குன்றங் கூடலையாற் றூரே. ச

நெல்வேலி திருவழுந்தூர் தருமபுரம் பயற்றூர் நெடுங்களம்வக் கரை இரும்பை மாகாளம் வடகூர், நெல்வெண்ணெய் வடகரைமாந் துறைதிருவிற் கோலம் நீடூர்ச்சக் கரப்பள்ளி அகத்தியான் பள்ளி, நெல்வாயில் பேணுபெருந் துறைநாலூர் மயானம் நெல்லிக்கா விற்குடிவீ ரட்டமதி மூற்றம், வல்லம்அறை யணிநல்லூர் தலையாலங் காடு வாட்போக்கி திருநாவ லூர்மயிலாப் பூரே. ஞ

திருவாரூர்ப் பரவையுண்மண் டளிசாத்த மங்கை சிற்றேமம் தெளிச்சேரி திருவசாத் தானம், கரவீரம் திருவாலம் பொழில்வெண்ணெய் நல்லூர் கச்சி அனே கதங்காவ தங்கோடிக் குழகர், அரசிலிதென் குடித்திட்டை வடமுல்லை வாயில் அம்பர்ப்பெருந் திருக்கோயில் வெண்பாக்கம் சுழியல், பெருமணம்இந் திரநீல பருப்பதம்வேற் காடு பேரெயில்பாற் றுறைமூக்கிச் சரம்மூண்டீச் சரமே. ஙு

பறியலூர் வீரட்டங் காளைட்டு முள்ளூர் பாதாளீச் சரம்எதிர்கொள் பாடி வலி தாயம், சிறுகுடிகச் சூர்ஆலக் கோயில்கொள்ளம் பூதூர் திருப்புறவார் பனங்காட்டூர் விளநகர்தண் டலைநீள், நெறிஅரதைப் பெரும்பாழி ஊறல்கரு வூர்ஆ னிலைஇடும்பா வனங்கடுவாய்க் கரைப்புத்தூர் கடம்பந், துறைதிருவ டகந திருவஞ் சைக்களம்ஆ டானை சோபுரங்கற் குடிவடகு ரங்காடு துறையே. எ

திருமாணி குழிவேட்டக் குடிதிருவாப் பாடி திருந்துதே வன்குடிமா கறல்சத்தி மூற்றம், திருவாப்ப னூர்மீயச் சூரவ்வூர் தன்னில் திகழ்ந்ததிரு விளங்கோயில் வெஞ்சமாக் கூடல், பெருநீலக் குடிமண்ணிப் படிக்கரைஈன் னிலத்துப் பெருங்கோயில் திருகணு திருப்பட்டீச் சரமே, திருஈங்கோய் மலை வன்பார்த் தான்பனங்காட் டூர் திருப்புகலூர் வர்த்தமா னேச்சரம்பாம் புரமே. அ

கடைமுடியே ஓணகாந் தன்தளிகோட் டூர்வை கன்மாடக் கோயில்இடை யாறுபழை யாறை, வடதளிநற் றினைநகரம் கோணமா மலைசீர் வன்னியூர் கருவிலிஅ னேகதங்கா வதநல், இடம்மேவு கடிக்குளநல் திருக்களர்என் றிவை கட் கிரும்பதிகம் ஒவ்வொன்றென் றிசைத்திடுக இப்பால்,குடவாயில் புனவாயில் தூங்கானை மாடம் கோழம்பம் அவளிவணல் லூர்கோலக் காவே. கூ

குருகாவூர் திருவேள்விக் குடிவிசய மங்கை குற்றாலம் குடமூக்குக் கோட் டாறு பனையூர், கருகாவூர் குரங்காடு துறையோமாம் புலியூர் கண்டியூர் வேதி குடி காளூர்கோ காணம், திருவாரூர் அரனெறிபந் தணைநல்லூர் நல்லம் திருக் கண்டீச் சரம்தேவூர் திருச்சிராப் பள்ளி, பெருவேளூர் கீழ்வேளூர் எறும்பியூர் கானப் பேர்திருமங் கலக்குடிஆக் கூர்கோவ லூரே. கo

திருப்பரங்குன் றம்திருப்பா திரிப்புலியூர் குறுக்கை திருப்புத்தூர் மணஞ் சேரி பாச்சிலாச் சிராமம், கருப்பறிய லூர்கேதீச் சரம்திருக்கே தாரங் கச்சிமேற் றளிமேலத் திருக்காட்டுப் பள்ளி, அருத்தியுறு பட்டினத்துப் பல்லவனீச்

சரம்பேர் அன்பிலா லத்துறைப ராய்த்துறைவேட் களம்இங், குரைத்தசீர் அன்னியூர் இவ்விரண்டாம் பதிகம் உள்ளதலங் கடவூர்ம யானம்வாஞ் சியமே.

தூருத்திதிரு கனிபள்ளி திருமருகல் திருப்பூர் அருத்திபுறம் பயங்கடவூர் புள்ளிருக்கு வேளூர், அரத்துறைவாழ் கொளிபுத்தூர் வான்மியூர் பாசூர் அம் பர்மா காளம்மயி லாடுதுறை வாய்மூர், திருக்கழுக்குன் றம்பாண்டிக் கொடு மூடிரா மேசம் செங்காட்டங் குடிவெண்ணி திருச்செம்பொன் பள்ளி, பருப் பதம்புன் கூர்அரிசிற் கரைப்புத்தூர் சேறை பைஞ்ஞீலி கற்குடிமா மலைபதிகம் கஉ மூன்றே.

வலம்புரம்ஆ லங்காடு சிவபுரங்கா ளத்தி வலிவலஞ்சாய்க் காடுதிருக் கோ டிகா நகரம், கலந்திகழும் பூவணங்கோ ளிலிகின்றி யூரும் நறையூர்ச்சித் தீச் சரமும் கான்காகும் பதிகம், வலஞ்சுழிநல் லூர்பழனம் ஆமாத்தூர் அண்ணு மலை கடம்பூர் இன்னம்பர் காரையூர் ஐந்தாம், நிலத்திகழ்கா கேச்சரம்மாற் பேறுமழ பாடி நெய்த்தானம் வெண்காடு நீள்பதிகம் ஆறே. கங

கயிலாயம் ஆனைக்கா கள்ளாறு நாகைக் காரோணம் திருச்சோற்றுத் துறை ஏழு புகலூர், வயலாரும் கழிப்பாலை ஒற்றியூர் திருவா வடுதுறைஎட் டானத்தில்லை மறைக்காடு மதுரை, இயலாரும் மூதுகுன்றம் பதிஞான்று கச்சி ஏகம்பம் இடைமருதீ ராறையா றதிகை, அயலீரொன் பான்வீழி ஆரூர்சீ காழி அறு நான்கும் மும்பாஞன் கெழுபத்தொன் றுமே. கச

ஆ திருவிருத்தம் - கச.

திருப்பதிக்கோவை

கோயில்திரு வேட்களம்நெல் வாயில்கழிப் பாலை குலவுபெரு மணமையேர் திரப்பள்ளி முல்லை, வாயில்கலிக் காமூர்சாய்க் காடுதிருப் பல்ல வனீச்சரம் வெண் காடுவளர் திருக்காட்டுப் பள்ளி, தாயிலான் குருகாவூர் காழிகோ லக்கா தருக்கிளர்புள் ளிருக்குவே ளூர்கண்ணூர் கோயில், ஞாயில்இயற் கடைமுடியே மின்றியூர் புன்கூர் காடியூர் சீர்அன்னி யூர்வேள்விக் குடியே. க

கருதெதிர்கொள் பாடிமணஞ் சேரிதிருக் குறுக்கை கருப்பறிய லூர் கதியே காட்டுகுரக் குக்கா, மருவும்வாழ் கொளிபுத்தூர் மண்ணிப்படிக் கரையே வளரும்ஓ மாம்புலியூர் காஞ்சிட் டூள்ளூர், திருகாரை யூர்கடம்பூர் பந்தணைநல் லூர்பொன் திகழ்கஞ்ச னூர்கோடி காமங்கலக் குடியே, திருப்பனந்தாள் ஆப் பாடி சேய்ஞலூர் திருந்து தேவன்குடி திருவியலூர் திருக்கோட்டை யூரே. உ

இன்னம்பர் திருப்புறம்ப யம்வீசய மங்கை இயல்வைகா வூர்நல்வா குரங் காடு துறையே, பின்னமறு பழனம்ஐ யாறுநெய்த் தானம் பெரும்புலியூர் மழ பாடி திருப்பழுவூர் காஞர்,அன்னஅன்பி லாலந்துறை மாந்துறைபாற் றுறையே ஆனைக்கா பைஞ்ஞீலி பாச்சிலாச் சிராமம், மன்னும்ஈங் கோய்மலியி னோட்டூ பான் மூன்றே வடகரையிற் பதிதென்பால் வாட்போக்கி யாமே. ஙஉ

கடம்பந்துறை திருப்பராய்த்துறை கற்குடிமூக் கீசங் கருதிருச் சிராப் பள்ளி திருஎறும்பி யூரே, நெடுங்களம்மே லக்காட்டுப் பள்ளிஆலம் பொழில் சீர் நிகழ்திருப்பூர் அருத்திகண்டி யூர்சோற்றுத் துறைமால், அடும்வேதி குழ்

தென்குடித் திட்டைபுள்ள மங்கை அணியார்சக் கரப்பள்ளி அருங்கருகா வூரே,
படர்பாலைத் துறைகல்லூர் திருவாவூ ரதனில் பசுபதீச் சரஞ்சத்தி முற்றம்பட்
டீச் சரமே. ச

ஆறைவட தளிதிருவ லஞ்சுழியே குடமூக் கதனிற்கீழ்க் கோட்டங்கா
ரோணம்கா கேசங், கூறும்இடை மருதுகுரங் காடுதுறை நீலக் குடிவைகன்
மாடக்கோயில் நல்லங்கோ ழம்பஞ், சாறமரா வடுதுறைதண் துருத்திதிரு வழுந்
தூர் சகம்புகழ்மா யூரம்விள நகர்பதிய லூரே, வீறுசெம்பொன் பள்ளிநனி
பள்ளிவலம் புரமே வியன்தலைச்சங் காடாக்கூர் விளங்குகட வூரே. ஙி

தீருக்கடவூர் மயானமொடு திருவேட்டக் குடியே தெளிச்சேரி தருமபுரம்
கள்ளாறு கோட்டா, றுரைக்கும்அம்பர்ப் பெருந்திருக் கோயில்மா காளம் உயர்
மீயச் சூர்இளங்கோ யில்திலதைப் பதிஞ், மருக்கமழ்பாம் புரம்நற்சிறு குடிவீழி
மிழலே வன்னியூர் கருவிலிமன் பேணுபெருந் துறையென், கருத்துடைக்கும்
நறையூர்ச்சித் தீச்சரத்தோ டரிசிற் கரைப்புத்தூர் சிவபுரமும் கலையநல்லூர்
காணே. சு

கருக்குடிவாஞ் சியம்திருநன் னிலத்துப்பெருங் கோயில் கவின்கொண்டீச்
சரம்பனையூர் விற்குடிதென் புகலூர், இருக்கும்வர்த்த மானேச்சரம் இராமன
தீச் சரமே இயல்பயற்றூர் செங்காட்டங் குடிமருகல் இருளே, முருக்குதிருச்
சாத்தமங்கை நாகைக்கா ரோணம் முன்திருச்சிக் கல்திருக்கீழ் வேளூர்தே வூரே,
அரிக்கரியான் பள்ளியின்முக் கூடல்திரு வாரூர் அரனெறிமூ லட்டானம்
பரவையுண்மண் டளியே. எ

மேலாகும் விளமர்கர வீரம்பெரு வேளூர் மிளிர்தலைஆ லங்காடு குட
வாயில் சேறை, நாலூர்ம யானங்கடு வாய்க்கரைப் புத்தூர் நவிலும்இரும் பூளை
திரு வாதைப்பெரும் பாழி, மாலூரும் அவளிவணல் லூர்பரிதி நியமம் வாழ்
வெண்ணி பூவனூர் பாதாளீச் சரமீர்ச், சேலூரும் திருக்களர்சிற் றேமம்உசாத்
தானந் திருஇடும்பா வனத்தோடு சேர்ந்தகடிக் குளமே. அ

தண்டலைநீ ணெறிகோட்டூர் வெண்துறையோ டழகே தருகொள்ளம்
பூதூர்பேர் எயில்கொள்ளிக் காடு, கண்டருதெங் கூர்மெலிக்கா காட்டியத்தான்
குடியே காரையல் கன்றாப்பூர் வலிவலங்கச் சினத்தோ, டண்டர்பிரான் கோளி
லிதென் திருவாய்மூர் மறைக்கா டகத்தியான் பள்ளிகோடிக் குழகருந்தென்
கரையில், எண்தருதூற் றிருபத்தேழ் இப்பால்ஈ ழத்தில் இசைகோண மாமலைகே
தீச்சுரம்என் றிரண்டே. கூ

ஆலவாய் ஆப்பனூர் பரங்குன்றே டகத்தோ டருங்கொடுங்குன் றந்திருப்
புத் தூர்புனவா யிலிஞை, டேலும்இரா மேச்சரமா டானைகா னப்பேர் எழில்
திருப்பூ வணஞ்சுழியல் இன்புறுகுற் றாலம், பாலலோ சனன்திருநெல் வேலி
யொடு பாண்டி பதிஞான்கு மலைகாட்டில் அஞ்சைக்களம் ஒன்றே, சீலமிகும்
அவிநாசி திருமுருகன் பூண்டி திருநணு கொடிமாடச் செங்குன்றூர் தானே. கக

வெஞ்சமாக் கூடல்கொடு முடிகருவூர் கொங்கின் மேவும்ஏழ் அரத்துறை
வண் தூங்கானை மாடம், எஞ்சலில்கூ டலையாற்றூர் எருக்கத்தம் புலியூர் இணை
யகலுந் தினைநகர்சோ புரம்அதிகை புகழே, விஞ்சுதிரு நாவலூர் முதுகுன்றந்
திருநெல் வெண்ணெய்திருக் கோவலூர் அறையணிநல் லூரே, மஞ்சுதிகழ்
இடையாறு வெண்ணெய்நல்லூர் துறையூர் வடகூர்வீ டேஅருளுந் திருமாணி
குழியே. கக

தண்ணார்தண் டலைப்பாதி ரிப்புலியூர் முண்டீச் சரம்புறவார் பனங்காட்டூர்
திருஆமாத் தூரே, எண்ணார்அண் ணாமலையும் நடுகாட்டில் இருபத் திரண்டா
கும் இப்பால்ஏ கம்பம்மேற் றளிவிண், கண்ணேணங்கு மதில்ஓண காந்தன்ற ளி
அனே கதங்காவ தங்கச்சி நெறிக்காரைக் காடே, உள்நாடு குரங்கணின்முட் டந்
திருமா கறல்ஓத் தூர்வன்பார்த் தான்பனங்காட் டூர்வல்லம்மாற் பேறே. கஉ

ஊறல்இலம் பையங்கோட்டூர் விற்கோலம் ஆலங்கா டுயர்பாசூர் வெண்
பாக்கம் கள்ளில்கா ளத்தி, மாறில்திரு ஒற்றியூர் வலிதாயம் பாலி வடமூல்லை
வாயில்வேற் காடுதிரு மயிலை, ஈறில்திரு வான்மியூர் கச்சூர்ஆ லக்கோயில்
இடைச்சுரங் கழுக்குன்றம் அச்சிறுபாக் கம்மே, மாறில்திரு வக்கரையே அர
சிலிதொல் லிரும்பை மாகாளந் தொண்டைநன்னாட் டெண்ணின்மூப்பான்
இரண்டே. கங

கோகரணம் அளவதே யத்தில்ஒன்றே இப்பால் குலவுபருப் பதநீல
பருப்பதம்அம் பிகைதன், பாகர்உறை அனேகதங்கா வதந்திருக்கே தாரம் பகர்
கொடித்தான் மலைவடக்கிற் பதிஐந்தே இவற்றோ, டாகஇரு நூற்றெழுபான்
நான்கென்பர் மூவர் அருட்பதிகம் இருக்குமூர் அதிகமாம் வைப்புத், தாக
முடன் நினைப்போர்க்கும் துதிப்போர்க்கும் வினைகள் சாராவாம் பிறப்பகலுஞ்
சத்தியம்முத் தியுமே. கச

ஆ திருவிருத்தம் - கச.

நம்பியாண்டார் நம்பி அருளிய

திருத்தொண்டர் திருவந்தாதி

திலலைவாழ் அந்தணர்

செப்பத் தகுபுகழ்த் தில்லைப் பதியில் செழுமறையோர்
ஒப்பப் புவனங்கள் மூன்றினும் உம்பரின் ஊர்எரித்த
அப்பர்க் கமுதத் திருநடர்க் கந்திப் பிறையணிந்த
அப்பர்க் குரிமைத் தொழில்புரி வோர்தமைச் சொல்லுதுமே. க

திருநீலகண்ட நாயனார்

சொல்லச் சிவன்திரு ஆணைதன் தூமொழி தோள்*நசையை
ஒல்லைத் துறந்துரு மூத்ததற் பின்னுமை கோனருளால்
வில்லைப் புரைநுத லாளொ டிளமைபெற் றின்பமிக்கான்
தில்லைத் திருநீல கண்டக் குயவனுஞ் செய்தவனே. உ

இயற்பகை நாயனார்

செய்தவர் வேண்டியது யாதுங் கொடுப்பச் சிவன்தவனுய்க்
கைதவம் பேசிநின் காதலி யைத்தரு கென்றலுமே
மைதிகழ் கண்ணியை ஈந்தவன் வாய்ந்த பெரும்புகழ்வந்
தெய்திய காவிரிப் பூம்பட் டினத்துள் இயற்பகையே. ங

பா - டீ—*நசையால்.

இளையான்குடிமாற நாயனார்

இயலா விடைச்சென்ற மாதவர்க் கின்னமு தாவிதைத்த
வயலார் மூளவித்து வாரி மனையலக் கால்வறுத்துச்
செயலார் பயிர்விழுத் தீங்கறி யாக்கு மவன்செழுநீர்க்
கயலார் இளையான் குடியுடை மாறனெங் கற்பகமே. ச

மெய்ப்பொருள் நாயனார்

கற்றகன் மெய்த்தவன் போலொரு பொய்த்தவன் காய்சினத்தால்
செற்றவன் தன்னை அவனைச் செறப்புக லுற்றிருவாய்
மற்றவன் தத்தா நமரே எனச்சொல்லி வானுலகம்
பெற்றவன் சேதிபன் மெய்ப்பொரு ளாமென் று பேசுவரே. ஞ

விறன்மிண்ட நாயனார்

பேசும் பெருமையவ் வாரூ ரனையும் பிரானவனும்
ஈசன் தனையும் புறகுதட் டென்றவன் ஈசனுக்கே
நேசன் எனக்கும் பிரான்மனைக் கேபுக நீடுதென்றல்
வீசும் பொழிற்றிருச் செங்குன்ற மேய விறன்மிண்டனே. ட

அமர்நீதி நாயனார்

மீண்டும் பொழிற்பழை யாறை அமர்நீதி வெண்பொடியின்
மூண்டங் தரித்த பிராற்குகல் லூரின்முன் கோவணநேர்
கொண்டிங் கருளென்று தன்பெருஞ் செல்வமுந் தன்னையுந்தன்
தொண்ட மதிதுத லாளையும் ஈந்த தொழிலினனே. ண

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

தோழுதும் வணங்கியும் மாலயன் தேடருஞ் சோதிசென்றூங்
கெழுதுந் *தமிழ்ப்பழ ஆவணங் காட்டி எனக்குன்குடி
முழுதும் அடிமைவந் தாட்செய் எனப்பெற்ற வன்மூல்தேன்
ஒழுகும் மலரினற் றூர்எம் பிரான்நம்பி யாரூரனே. அ

எறிபத்த நாயனார்

ஊர்மதில் மூன்றட்ட உத்தமர்க் கென்றூர் உயர்தவத்தோன்
தார்மலர் கொய்யா வருபவன் †தண்டின் மலர்பறித்த
ஊர்மலை மேற்கொளும் பாகர் உடல்துணி யாக்குமவன்
‡வர்மலி மாமதில் சூழ்கரு வூரி லெறிபத்தனே. க

ஏனாதிநாத நாயனார்

பத்தனை ஏனாதி நாதனைப் பார்§டீ டெயினை தன்னுள்
அத்தனைத் தன்னை டமர்மலைக் தான்றெற்றி நீறுகண்டு
கைத்தனி வாள்வீ டொழிந்தவன் கண்டிப்ப நின்றருளும்
மித்தனை ஈழக் குலதீபன் என்பரிந் நீணிலத்தே. கஎ

கண்ணப்ப நாயனார்

நிலத்தில் திகழ்திருக் காளத்தி யார்திரு நெற்றியின்மேல்
நலத்திற் பொழிதரு கண்ணிற் குருதிகண் டுள்ளடுங்கி

பா - மீ—*இதழ். †அங்கை. ‡வர்மலியும் மதில். §டீடெயினி.

வலத்திற் கடுக்கணே யால்தன் மலர்க்கண் இடந்தப்பிஞண்
குலத்திற் கிராதனங் கண்ணப்ப ஞமென்று கூறுவரே. கக

தங்குலியக்கலய நாயனார்

ஞய்ந்த கயிறுதன் கண்டத்திற் பூட்டி எழிற்பனந்தாள்
சாய்ந்த சிவனிலைத் தானென்பர் காதலி தாலிகொடுத்
தாய்ந்தகற் குங்குலி யங்கொண்ட னற்புகை காலனைமுன்
காய்ந்த அரற்கிட்ட தென்கட ஞரிற் கலயனையே. கஉ

மானக்கஞ்சாற நாயனார்

கலச முலைக்கன்னி காதற் புதல்வி கமழ்குழலை
நலசெய் தவத்தவன் பஞ்ச வடிக்கிலை நல்கெனலும்
அலசும் எனக்கரு தாதவள் கூந்தல் அரிந்தளித்தான்
மலைசெய் மதிற்கஞ்சை மானக்கஞ் சாற னெனும்வள்ளலே. கங

அரிவாட்டாய நாயனார்

வள்ளற் பிராற்கமு தேந்தி வருவோ னுகலுமிங்கே
வெள்ளச் சடையாய்! அமுதுசெய் யாவிடில் என்தலையைத்
தள்ளத் தகுமென்று வாள்பூட் டியதடங் கையினன்காண்
அள்ளற் பழனக் கணமங் கலத்தரி வாட்டாயனே. கச

ஆனாய நாயனார்

தூயவன் *யாவுக்குந் தாழ்சடை மேல்தனித் திங்கள்வைத்த
தூயவன் பாதந் தொடர்ந்துதொல் சீர்துளை யாற்பரவும்
வேயவன் மேல்மழ நாட்டு விரிபுனல் மங்கலக்கோன்
ஆயவன் ஆனாயன் என்னையு வந்தாண் டருளினனே. கடி

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

அருட்டுறை அத்தர்க் கடிமைப்பட் டேன்இனி அல்லனென்னும்
பொருட்டுறை யாவதென் னேஎன்ன வல்லவன் பூங்குவளை
இருட்டுறை நீர்வயல் நாவற் பதிக்குப் பிரான்அடைந்தோர்
மருட்டுறை நீக்கிநல் வான்வழி காட்டிட வல்லவனே. கசு

ஞானசம்பந்தர் நாயனார்

அவந்திரி குண்டம ணைவதின் மாள்வன்என் றன்ருலவாய்ச்
சிவன்திரு மேனிக்குச் செஞ்சந் தனமாச் செழுமுழங்கை
உவந்தொளிர் பாறையில் தேய்த்துல காண்டஒண் மூர்த்திதன்னூர்
நிவந்தபொன் மாட மதுரா புரிஎன்னு நீள்பதியே. கஎ

முருக நாயனார்

பதிகந் திகழ்தரு பஞ்சாக் கரம்பயில் நாவினன்சீர்
மதியஞ் சடையார்க் கலர்தொட் டணிபவன் யான்மகிழ்ந்து
துதியுங் கழற்சண்பை நாதற்குத் தோழன்வன் தொண்டனம்பொன்
அதிகம் பெறும்புக லூர்முரு கன்னெனும் அந்தணனே. கஅ

பா - மி—*யாவர்க்குந்.

உருத்திரபசுபதி நாயனார்

அந்தாழ் *புனலிடை அல்லும் பகலும்நின் றூதரத்தால்
உந்தாத அன்பொ டுருத்திரஞ் சொல்லிக் கருத்தமைந்த
பைந்தார் உருத்ர பசுபதி தன்னைப் பதிவயற்கே
நந்தார் திருத்தலை யூரென் றுரைப்பரிந் நானிலத்தே. ககூ

திருநாளைப்போவார் நாயனார்

நாவார் புகழ்த்தில்லை அம்பலத் தானருள் பெற்றுநாளைப்
போவா னவனும் புறத்திருத் தொண்டன்றன் புன்புலைபோய்
மூவா யிரவர்கை கூப்ப முனியாய வன்பதிதான்
மாவார் பொழில்திகழ் ஆதனூர் என்பரிம் மண்டலத்தே. உ0

திருக்குறிப்புத்தொண்ட நாயனார்

மண்டும் புனற்சடை யான்தமர் தூசெற்றி வாட்டும்வகை
விண்டு மழைமுகில் †வீடா தொழியின்யான் வீவனென்னு
மிண்டும் படர்பாறை மூட்டும் எழிலார் திருக்குறிப்புத்
தொண்டன் குலங்கச்சி ஏகா லியர்தங்கள் தொல்குலமே. உக

சண்டேசுர நாயனார்

குலமே றியசேய்ஞ லூரிற் குரிசில் குரைகடல்சூழ்
தலமே றியவிறற் சண்டிகண் டீர்தந்தை தாளிரண்டும்
வலமே றியமழு வால்எறிந் தீசன் மணிமுடிமேல்
நலமே றியபால் சொரிந்தலர் சூட்டிய நன்னிதியே. உஉ

சுந்தாழார்த்தி சுவாமிகள்

நிதியார் அருத்திதென் வேள்விக் குடியாய்! வினைமறந்த
மதியேற் கறிகுறி ‡வைத்துப் புகர்பின்னை மாற்றிடென்று
அதியா அருள்சொன்ன வாறறி வாரிடைப் பெற்றவன்காண்
நதியார் புனல்வயல் நாவலர் கோனென்னு நற்றவனே. உங

திருநாவுக்கரசு சுவாமிகள்

நற்றவன் நல்லூர்ச் சிவன்திருப் பாதந்தன் சென்னிவைக்கப்
பெற்றவன் மற்றிப் பிறப்பற வீரட்டர் பெய்கழற்றாள்
உற்றவன் உற்ற விடமடை யாரிட ஒள்ளமுதாத்
தற்றவ ஞமூரில் நாவுக் கரசெனுந் தூமணியே. உச

மணியினை மாமறைக் காட்டு மருந்தினை வண்மொழியால்
திணியன நீள்கத வந்திறப் பித்தன தெண்கடலில்
பிணியன §கல்மிதப் பித்தன சைவப் பெருகெறிக்கே
அணியன நாவுக் கரையர்பி ரான்ற னருந்தமிழே. உடு

சுலச்சிறை நாயனார்

அருந்தமி ழாகரன் வாதில் அமணைக் கழுநுதிமேல்
இருந்தமிழ் நாட்டிடை ஏற்றுவித் தோன்எழிற் சங்கம்வைத்த

பா - ம்—*புனல்தன்னில். †வீடா தொழிக்திடில். ‡வைத்த. §வன் கல்மிதப்பித்த.

பெருந்தமிழ் மீனவன் தன்னதி காரி பிரசமல்கு
குருந்தவிழ் சாரல் மணமேற் குடிமன் குலச்சிறையே. உசு

பெருமிழலைக்குறும்ப நாயனார்

சீறைநன் புனல்திரு நாவலூ ராளி செழுங்கயிலைக்
கிறைநன் கழல்காளை எய்தும் இவனருள் போற்றஇன்றே
பிறைநன் முடியன் அடியடை வேன்என் றுடல்பிரிந்தான்
நறைநன் மலர்த்தார் மிழலைக் குறும்பன் எனுநம்பியே. உள

காரைக்காலம்மையார்

நம்பன் திருமலை நான்மிதி யேனென்று தாளிரண்டும்
உம்பர் மிசைத்தலை யால்நடந் தேற உமைநகலும்
செம்பொன் னுருவன்என் னம்மை எனப்பெற் றவள்செழுந்தேன்
கொம்பி னுகுகாரைக் காலினில் மேய குலதனமே. உஅ

அப்பூதியடிகள்

தனமா வதுதிரு நாவுக் கரசின் சரணமென்னு
மனமார் புனற்பந்தர் வாழ்த்திவைத் தாங்கவன் வண்தமிழ்க்கே
இனமாத் தனது பெயரிடப் பெற்றவன் எங்கள்பிரான்
அனமார் வயல்திங்க ளூரினில் வேதியன் அப்பூதியே. உக

திருநீலநக்க நாயனார்

பூதிப் புயத்தர் புயத்திற் *சிலம்பி புகலுமஞ்சி
ஊதித் துமிந்த மனைவியை நீப்பவுப் பாலவெல்லாம்
பேதித் தெழுந்தன காணென்று பிஞ்ஞகன் காட்டுமவன்
நீதித் திகழ்சாத்தை நீலநக் கன்னெனும் வேதியனே. ஙo

நமிநந்தியடிகள்

வேத மறிக்கரத் தாரூர் அரற்கு விளக்குநெய்யைத்
தீது செறிஅமண் கையரட் டாவிடத் தெண்புனலால்
ஏதம் உறுக அருகொன் றன்று விளக்கெரித்தான்
நாதன் எழிலேமப் பேறூர் அதிபன் நமிநந்தியே. ஙக

சுந்தாழூர்த்தி சுவாமிகள்

நந்திக்கு நம்பெரு மாற்குநல் லாரூரில் நாயகற்குப்
பந்திப் பரியன செந்தமிழ் †பாடிப் படர்புனலின்
சிந்திப் பரியன ‡சேவடி பெற்றவன் சேவடியே
வந்திப் பவன்பெயர் வன்தொண்டன் என்பரிவ் வையகத்தே. ஙஉ

திருஞானசம்பந்தழூர்த்தி சுவாமிகள்

வைய மகிழ்யாம் வாழ அமணர் வலிதொலைய
ஐயன் பிரம புரத்தரற் கம்மென் குதலைச்செவ்வாய்
பைய மிழற்றும் பருவத்துப் பாடப் பருப்பதத்தின்
தையல் அருள்பெற் றனனென்பர் ஞானசம் பந்தனையே. ஙங

பா - மீ—*சிலம்பி. †பாடப். ‡செல்படி.

பந்தார் விரலியர் வேள்செங்கட் சோழன் முருகனல்ல
சந்தா ரகலத்து நீலகக் கன்பெயர் தான்மொழிந்து
கொந்தார் சடையர் பதிகத்தில் இட்டடி யேன்கொடுத்த
அந்தாதி கொண்ட பிரானருட் காழியர் கொற்றவனே. நிகச

ஏயர்கோன்கலிக்காம நாயனர்

கொற்றத் திறலெந்தை தந்தைதன் தந்தைஎங் கூட்டமெல்லாம்
தெற்றச் சடையாய் நினதடி யேந்நிகழ் வன்தொண்டனே
மற்றிப் பிணிதவிர்ப் பானென் றுடைவா ளருவி அந்நோய்
செற்றுத் தவிர்கலிக் காமன் குடிஏயர் சீர்க்குடியே. நிகி

திருநீல நாயனர்

குடிமன்னு சாத்தனூர்க் கோக்குலம் மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன் தன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி யேபர விட்டெனுச்சி
அடிமன்ன வைத்த பிரான்மூல னுகின்ற அங்கணனே. நிசு

தண்டியடிகள்

கண்ணூர் மணியொன்று மின்றிக் கயிறு பிடித்தாற்குத்
தண்ணூர் புனல்தடந் தொட்டலுந் தன்னை நகும்அமணர்
கண்ணுங் கிழப்ப அமணர் கலக்கங்கண் டம்மலர்க்கண்
விண்ணு யகனிடைப் பெற்றவன் ஆரூர் விறற்றண்டியே . நிஎ

மூர்க்க நாயனர்

தண்டலை சூழ்திரு வேற்காட் டீர்மன்னன் தகுகவற்றூல்
கொண்டவல் லாயம்வன் சூதரை வென்றுமுன் கொண்டபொருள்
மூண்டநன் னீற்றன் அடியவர்க் கீபவன் மூர்க்கனென்பர்
நண்டலை நீரொண் குடந்தையின் மேவுநற் சூதனையே. நிஅ

சோமாசிமாற நாயனர்

சூதப் பொழிலம்பர் அந்தணன் சோமாசி மாறனென்பான்
வேதப் பொருள்அஞ் செழுத்தும் விளம்பியல் லால்மொழியான்
நீதிப் பரன்மன்னு நித்த நியமன் பரவையுண்னும்
*மாதுக்குக் காந்தன் வன்தொண்டன் தனக்கு மகிழ்தூணே. நிக

சுந்தாமூர்த்தி சுவாமிகள்

தூணையும் அளவும்இல் லாதவன் தன்னரு ளேதுணையாக
கணையுங் கதிர்நெடு வேலுங் கறுத்த கயிணையும்
பிணையும் நிகர்த்தகண் சங்கிலி பேர்அமைத் தோள்இரண்டும்
அணையு மவன்திரு ஆரூர னுகின்ற அற்புதனே. சஅ

காக்கிய நாயனர்

தகடன ஆடையன் சாக்கியன் மாக்கற் றடவரையின்
மகடனந் தாக்கக் குழைந்ததிண் தோளர்வண் கம்பர்செம்பொன்

பா - ம்—*மாதுக் குகந்தான்.

திகழ்தரு மேனியிற் செங்க லெறிந்து சிவபுரத்துப்
புகழ்தரப் புக்கவன் ஊர்சங்க மங்கை புவனியிலே. சக

சிறப்புலி நாயனார்

புவனியில் பூதியுஞ் சாதன மும்பொலி வார்ந்துவந்த
தவநிய மார்க்குச் சிறப்புச்செய் தத்துவ காரணனும்
அவனியிற் கீர்த்தித் தென்னூக்கூர் அதிபன் அருமறையோன்
சிவனிய மந்தலை நின்றதொல் சீர்நஞ் சிறப்புலியே. சஉ

சிறுத்தொண்ட நாயனார்

புலியின் அதளுடைப் புண்ணியற் கின்னமு தாத்தனதோர்
ஒலியின் சதங்கைக் குதலைப் புதல்வன் உடல்துணித்துக்
கலியின் வலிகெடுத் தோங்கும் புகழ்ச்சிறுத் தொண்டன்கண்டீர்
மலியும் பொழிலொண் செங்காட்டங் குடியவர் மன்னவனே. சஙூ

கழறிற்றறிவார் நாயனார்

மன்னர் பிரானெதிர் வண்ணு னுடலுவர் *ஊறிரூர்
தன்னர் பிரான்தமர் போல வருதலுந் தான்வணங்க
என்ன பிரான்அடி வண்ணுன் எனஅடிச் சேரனென்னும்
தென்னர் பிரான்கழ றிற்றறி வானெனுஞ் சோலனே. சஎ

சேரற்குத் தென்னு வலர்பெரு மாற்குச் சிவனளித்த
பாரக் கடகரி முன்புதன் பந்தி இவுளிவைத்த
வீரற்கு வென்றிக் கருப்புவில் வீரனே வெற்றிகொண்ட
சூரற் கெனதுள்ளம் நன்றுசெய் தாய்இன்று †தொண்டுபட்டே. சஞி

கணநாத நாயனார்

தொண்டரை யாக்கி அவரவர்க் கேற்ற தொழில்கள்செய்வித்
தண்டர்தங் கோனக் கணத்துக்கு நாயகம் பெற்றவன்காண்
கொண்டல்கொண் டேறிய மின்னுக்குக் கோல மடல்கள்தொறும்
கண்டல்வெண் சோறளிக் குங்கடற் காழிக் கணநாதனே. சஙூ

கூற்றுவ நாயனார்

நாதன் திருவடி யேமூடி யாகக் கவித்துகல்ல
போதங் கருத்திற் பொறித்தமை யாலது கைகொடுப்ப
ஓதந் தழுவிய ஞாலமெல் லாம்ஒரு கோலின்வைத்தான்
கோதை நெடுவேற் களப்பாள ரெகிய கூற்றுவனே. சஎ

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

கூற்றுக் கெவரே புகல்திரு வாரூரன் பொன்முடிமேல்
ஏற்றுத் தொடையலும் இன்னடைக் காயும் இடுதருமக்
கோற்றொத்து கூனனும் கூன்போய்க் குருடனும் கண்பெற்றமை
சாற்றித் திரியும் பழமொழி யாமித் தரணியிலே. சஅ

பா - மீ—*ஊறிய கீற் - றன்ன. †தொன்றுபட்டே.

பொய்யடிமைஇல்லாத புலவர்

தரணியிற் பொய்ம்மை இலாத்தமிழ்ச் சங்க மதிற்கபிலர்
பரணர்நக் கீரர் முதல்காற்பத் தொன்பது பல்புலவோர்
அருள்நமக் கீயுந் திருவால வாய்அரன் சேவடிக்கே
பொருளமைத் தின்பக் கவிபல பாடும் புலவர்களே. சகூ

புகழ்ச்சோழ நாயனார்

புலமன் னியமன்னைச் சிங்கள நாடு பொடிபடுத்த
குலமன் னியபுகழ்க் கோகன நாதன் குலமுதலோன்
நலமன் னியபுகழ்ச் சோழன தென்பர் நகுசுடர்வாள்
வலமன் னியஎறி பத்தனுக் கீந்ததொர் வண்புகழே. நிo

நரசிங்கமுனையரைய நாயனார்

புகழும் படிஎம் பரமே தவர்க்குநல் பொன்னிடுவோன்
இகழும் படியோர் தவன்மட வார்புனை கோலமெங்கும்
*நிகழும் படிகண் டவனுக் கிரட்டிப்†பொன் னீட்டவன்நீள்
திகழும் முடிநர சிங்க முனையர சன்திறமே. நிக

அதிபத்த நாயனார்

திறமமர் மீன்படுக் கும்பொழு தாங்கொரு மீன்சிவற்கென்
றுறவமர் மாகடற் கேவிடு வோனெரு நாட்கனக
நிறமமர் மீன்பட நின்மலற் கென்றுவிட் டோன்கமலம்
புறமமர் நாகை அதிபத்த னுகிய பொய்யிலியே. நிஉ

கலிக்கம்ப நாயனார்

பொய்யைக் கடிந்தரம் புண்ணியர்க் காட்பட்டுத் தன்னடியான்
சைவத் திருவுரு வாய்வரத் தானவன் தாள்கழுவ
வையத் தவர்முன்பு வெள்கிநீர் வாரா விடமனைவி
கையைத் தடிந்தவன் பெண்ணை கடத்துக் கலிக்கம்பனே. நிஙூ

கலிய நாயனார்

கம்பக் கரிக்கும் சிலந்திக்கும் நல்கிய கண்ணுதலோன்
உம்பர்க்கு நாதற் கொளிவிளக் கேற்றற் குடலிலஞ்சி
கும்பத் தயிலம்விற் றுஞ்செக் குழன்றுங்கொள் கூலியினல்
கம்பற் கெரித்த கலியொற்றி மாநகர்ச் சக்கிரியே. நிச

சத்தி நாயனார்

கிரிவில் லவர்தம் அடியரைத் தன்முன்பு கீழ்மைசொன்ன
திருவில் லவரைஅந் நாவரி வோன்திருந் தாரைவெல்லும்
வரிவில் லவன்வயற் செங்கழு நீரின் மருவுதென்றல்
தெருவில் விரைகம ழுந்தென் வரிஞ்சைத் திகழ்சத்தியே. நிஙு

ஐயடிகள்காடவர்கோன் நாயனார்

சத்தித் தடக்கைக் குமரன்நற் றுதைதன் தானமெல்லாம்
முத்திப் பதம்ஒரொர் வெண்பா மொழிந்து முடியரசாம்
அத்திற்கு மும்மைநன் றுலரற் காவையம் ஏற்றலென்னும்
பத்திக் கடல்ஐ யடிகளா கின்றநம் பல்லவனே. நிசு

பா - மீ—*நிகழும் படிகண் டவற்கன் றிரட்டிப்பொன் னிட்டவனி.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

பல்லவை செங்கதி ரோனைப் பறித்தவன் பாதம்புகழ்
சொல்லவன் தென்புக லூர்அரன் பால்துய்ய செம்பொன்கொள்ள
வல்லவன் நாட்டியத் தான்குடி மாணிக்க வண்ணனுக்கு
நல்லவன் தன்பதி காவலூ ராகின்ற நன்னகரே. நிஎ

கணம்புல்ல நாயனார்

நன்னக ராய இருக்குவே ளூர்தனில் நல்குரவாய்ப்
பொன்னக ராயகற் றில்லை புகுந்து புலீச்சரத்து
மன்னவ ராய அரற்குகற் புல்வால் விளக்கெரித்தான்
கன்னவில் தோளெந்தை தந்தை பிரானெங் ஙணம்புல்லனே. நிஅ

காரி நாயனார்

புல்லன வாகா வுகையுல கத்துப் புணர்ந்தனவும்
சொல்லின வுங்கய மாக்கிச் சுடர்பொற் குவடுதனி
வில்லனே வாழ்த்தி விளங்குங் கயிலைக் காணென்பரால்
*கல்லின மாமதில் சூழ்கட ஊரினில் காரியையே. நிக

நின்றசீர்நெடுமாற நாயனார்

கார்த்தண் முகிற்கைக் கடற்கா ழியர்பெரு மாற்கெதிராய்
ஆர்த்த அமணர் அழித்தது கண்டுமற் றுங்கவரைக்
கூர்த்த கழுவின் நுதிவைத்த பஞ்சவன் என்றுரைக்கும்
வார்த்தை அதுபண்டு நெல்வேலி யில்வென்ற மாறனுக்கே. நஎ

வாயிலார் நாயனார்

மாரு அருளான் தன்னே மனஆ லயத்திருத்தி
ஆரு அறிவாம் ஒளிவிளக் கேற்றி அகமலராம்
வீரு மலரிட் டன்பெனும் மெய்யமிர் தங்கொடுத்தான்
†வேரூர் மயிலையுள் வாயிலான் என்று விளம்புவரே. நக

முனையடுவார் நாயனார்

என்று விளம்புவர் நீடு ரதிபன் முனையடுவோன்
என்றும் அமருள் அழிந்தவர்க் காக்கூலி ஏற்றெறிந்து
‡வென்ற பெருஞ்செல்வ மெல்லாங் கனகமல் மேருவென்னும்
குன்று விளைத்த சிலையான் தமர்க்குக் கொடுத்தனனே. நஉ

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

கோடுத்தான் முதலிலைகொள் பிள்ளைக் குயிரன்று புக்கொளியூர்த்
தொடுத்தான் மதுர கவிஅவி நாசியை வேடர்சுற்றம்
படுத்தான் திருமுரு கன்பூண் டியினிற் பராபரத்தேன்
மடுத்தா னவனென்பர் வன்தொண்ட ஞகின்ற மாதவனே. நஙி

கழற்சிங்க நாயனார்

மாதவத் தோர்தங்கள் வைப்பினுக் காரூர் மணிக்குவைத்த
போதினைத் தான்மோந்த தேவிதன் மூக்கை அரியப்பொற்கை

பா - மீ—*கல்லன. †வீரூர். ‡வென்று.

காதிவைத் தன்றே அரிவதென் முங்கவள் கைதடிந்தான்
காதமொய்த் தார்வண்டு கிண்டுபைங் கோதைக் கழற்சிங்கனே. சுசு

இடங்கழி நாயனார்

சீங்கத் துருவனைச் செற்றவன் சிற்றம் பலமுகடு
கொங்கிற் கனகம் அணிந்தஆ தித்தன் குலமுதலோன்
திங்கட் சடையார் தமரதென் செல்வம் எனப்பறைபோக்
கெங்கட் கிறைவன் இருக்கு வேளூர்மன் னிடங்கழியே. கடு

செருத்துணை நாயனார்

கழிநீள் கடல்நஞ் சயின்றூர்க் கிருந்த கடிமலரை
மொழிநீள் புகழ்க்கழற் சிங்கன்றன் தேவிமுன் மோத்தலுமே
எழில்நீள் குமிழ்மலர் மூக்கரிந் தான்என் றியம்புவரால்
செழுநீர் மருகனன் னுட்டமர் தஞ்சைச் செருத்துணையே. சுசு

புகழ்த்துணை நாயனார்

சேருவிலி புத்தூர்ப் புகழ்த்துணை வையஞ் சிறுவிலைத்தா
உருவலி கெட்டுண வின்றி உமைகோனே மஞ்சனஞ்செய்
தருவதோர் போதுகை சோர்ந்து கலசம் *விழத்தரியா
தருவரை வில்லி அருளின் நிதியது பெற்றனனே. சுஎ

கோட்புலி நாயனார்

பெற்றம் உயர்த்தோன் விரையாக் கலிபிழைத் தோர்தமது
சுற்ற மறுக்குந் தொழிற்றிரு நாட்டியத் தான்குடிக்கோன்
குற்ற மறுக்குங் கோட்புலி நாவற் குரிசிலருள்
பெற்ற அருட்கட லென்றுல கேத்தும் பெருந்தகையே. கஅ

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

தகுமகட் பேசினேன் வீயவே தூல்போன சங்கிலிபால்
புகுமணக் காதலி னல்லொற்றி யூருறை புண்ணியன்றன்
மிகுமலர்ப் பாதம் பணிந்தரு ளாலிவ் வியனுலகம்
நகும்வழக் கேகன்மை யாப்புணர்ந் தான்நாவ லூரரசே. சுக

பத்தராய்ப் பணிவார்

அரசினே ஆரூர் அமரர் பிரானே அடிபணிந்திட்
டுரைசெய்த வாய்தடு மாறி உரோம புளகம்வந்து
காசர ணுதி அவயவங் கம்பித்துக் கண்ணருவி
சொரிதரும் அங்கத்தி னேர்பத்தர் என்று தொகுத்தவரே. எ0

பரமனையே பாடுவார்

தொகுத்த வடமொழி தென்மொழி யாதொன்று தோன்றியதே
மிகுத்த இயலிசை †வல்ல வகையில்விண் தோயுநெற்றி
வகுத்த மதிற்றில்லை அம்பலத் தான்மலர்ப் பாதங்கள்மேல்
உகுத்த மனத்தொடும் பாடவல் லோரொன்பர் உத்தமரே. எக

பா - மீ—*விழத்தரியாப் - பெருவரை. †அவ்வகை யாலவ்விண்.

சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்

உத்தமத் தானத் தறம்பொருள் இன்ப மொடிஎறிந்து
வித்தகத் தானத் தொருவழிக் கொண்டு விளங்கச்சென்னி
மத்தம்வைத் தான்திருப் பாத கமல மலரடிக்கீழ்ச்
சித்தம்வைத் தாரென்பர் வீடுபே றெய்திய செல்வர்களே. எஉ

திருவாரூர்ப் பிறந்தார்

செல்வம் திகழ்திரு வாரூர் மதில்வட்டத் துட்பிறந்தார்
செல்வன் திருக்கணத் துள்ளவ ரேயத னூற்றிகழச்
செல்வம் பெருகுதென் னூரூர்ப் பிறந்தவர் சேவடியே
செல்வ மெறியுறு வார்க்கணித் தாய செழுமெறியே. எங

முப்போதுந் திருமேனி தீண்டுவார்

நெறிவார் சடையரைத் தீண்டி முப்போதுநீ டாகமத்தின்
அறிவால் வணங்கிஅர்ச் சிப்பவர் நம்மையும் ஆண்டமரர்க்
கிறையாய்முக் கண்ணும்எண் தோளுந் தரித்தீறில் செல்வத்தொடும்
உறைவார் சிவபெரு மாற்குறை வாய உலகினிலே. எச

முழுநீறுபூசிய முனிவர்

உலகு கலங்கினும் ஊழி திரியினும் உள்ளொருகால்
விலகுத லில்லா விதியது பெற்றநல் வித்தகர்காண்
அலகில் பெருங்குணத் தாரூ ரமர்ந்த அரனடிக்கீழ்
இலகுவெண் ணீறுதம் மேனிக் கணியும் இறைவர்களே. எடி

அப்பாலும் அடிச்சார்ந்தார்

வருக்க மடைத்துநன் னுவலூர் மன்னவன் வண்தமிழால்
*பெருக்கு மதுரத் தொகையிற் பிறைசூடி பெய்கழற்கே
ஒருக்கு மனத்தொடப் பாலடிச் சார்ந்தவ ரென்றுலகில்
தெரிக்கு மவர்சிவன் பல்கணத் தோர்களுஞ் செழுந்தவரே. எசு

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

சேழுநீர் வயல்முது குன்றினில் செந்தமிழ் பாடிவெய்ய
மழுநீள் தடக்கைய னீந்தபொன் னுங்குக்கொள் ளாதுவந்து
பொழிணீள் தருதிரு வாரூரில் வாசியும் பொன்னுங்கொண்டோன்
கெழுநீள் புகழ்த்திரு வாரூரன் என்றுநாங் கேட்பதுவே. எள

பூசலார் நாயனார்

பதுமகற் போதன்ன பாதத் தரற்கொரு கோயிலையான்
கதுமெனச் செய்குவ தென்றுகொ லாமென்று கண்துயிலா
ததுமனத் தேயெல்லி தோறும் கினைந்தருள் பெற்றதென்பர்
புதுமணத் தென்ற லுலாகின்ற வூர்தனிற் பூசலையே. எஅ

மங்கையர்க்கரசியார்

பூச லயிற்றென்ன னுர்க்கன லாகப் பொருமையிலுல்
வாச மலர்க்குழல் பாண்டிமா தேவியா மானிகண்டீர்

பா - ம்—*பெருக்க மதுரத் தொகைபிறை சூடிதன்.

தேசம் விளங்கத் தமிழா கரர்க்கறி வித்தவரால்
நாசம் வினைத்தா ளருகந்த ருக்குத்தென் னூட்டகத்தே. எக

நேச நாயனார்

நாட்டமிட் டன்றரி வந்திப்ப வெல்படை நல்கினர்தந்
தாட்டரிக் கப்பெற் றவனென்பர் சைவத் தவரையில்
*கூட்டும்அக் கப்படங் கோவணம் நெய்து கொடுத்தநன்மை
ஈட்டும்அக் காம்பீலிச் சாலிய நேசனே இம்மையிலே. அ

கோச்செங்கட்சோழ நாயனார்

மைவைத்த கண்டன் நெறியன்றி மற்றோர் நெறிகருதாத்
தெய்வக் குடிச்சோழன் முன்பு கிலந்தியாய்ப் பந்தர்செய்து
சைவத் துருவெய்தி வந்து தாணிதீ டாலயங்கள்
செய்வித் தவன்†திருக் கோச்செங்க ணனெனுஞ் செம்பியனே. அக

செம்பொன் அணிந்துசிற் றம்பலத் தைச்சிவ லோகமெய்தி
நம்பன் கழற்கீழ் இருந்தோன் குலமுதல் என்பர்நல்ல
வம்பு மலர்த்தில்லை ஈசனைச் சூழ மறைவளர்த்தான்
நிம்ப நறுந்தொங்கற் கோச்செங்க ணனெனு நித்தனையே. அஉ

திருநீலகண்டயாழ்ப்பாண நாயனார்

தனையொப் பருள்எருக் கத்தம் புலியூர்த் தகும்புகழோன்
நினையொப் பருந்திரு நீலகண் டப்பெரும் பாணனேநீள்
சினையொப் பலர்பொழிற் சண்பையர் கோன்செந் தமிழ்மொடிசை
புனையப் பரனருள் பெற்றவ னென்பரிப் பூதலத்தே. அஊ

சடைய நாயனார்

தலம்விளங் குந்திரு நாவலூர் தன்னில் சடையனென்னும்
குலம்விளங் கும்புக ழோனை உரைப்பர் குவலயத்தில்
நலம்விளங் கும்படி நாம்விளங் கும்படி நற்றவத்தின்
பலம்விளங் கும்படி ஆரூ ரனைமுன் பயந்தமையே. அ

இசைஞானியார்

பயந்தாள் கறுவுடைச் செங்கண்வெள் ளேப்பொள்ளல் நீள்பனைக்கைக்
கயந்தான் உகைத்தநற் காளையை என்றுங் கபாலங்கைக்கொண்
டயந்தான் புகுமர ணூரூர்ப் புனித அரன்திருத்தாள்
நயந்தாள் தனதுள்ளத் தென்றும் உரைப்பது ஞானியையே. அடு

ஆஉ திருவிருத்தம் - அடு.

பா - ம்—*கூட்டு மகப்படக். †பெயர்.

(ஒல பிரதிகளில் காணப்பட்டவை)

சுந்தாமூர்த்தி சுவாமிகள்

*ஞானஆ ரூரரைச் சேரரை யல்லது காமறியோம்
மானவ ஆக்கை யொடும்புக் கவரை வளரொளிப்பூண்
வானவ ராலும் †மருவற் கரிய வடகயிலைக்
கோனவன் கோயில் பெருந்தவத் தோர்தங்கள் கூட்டத்திலே.

திருத்தொண்டத் தொகைக் கூட்ட அடியார்கள், தனியடியார்கள்

கூட்டம்ஒன் பானெ டறுபத்து மூன்று தனிப்பெயரா
சூட்டும் பெருந்தவத் தோர்எழு பத்திரண் டாம்வினையை
வாட்டுந் தவத்திருத் தொண்டத் தொகைபதி னெஞ்நின்வகைப்
பாட்டுந் திகழ்திரு நாவலூ ராளி பணித்தனனே.

திருத்தொண்டத் தொகை முதற்குறிப்பு

பணித்தநற் றொண்டத் தொகைமுதல் தில்லை இலைமலிந்த
வணித்திகழ் மும்மை திருநின்ற வம்பரு ‡வார்கொண்டசீர்
இணைத்தநற் பொய்யடி மைகறைக் கண்டன் கடல்சூழ்ந்தபின்
மணித்திகழ் சொற்பதத் தர்மன்னிய சீர்மறை நாவனெடே.

§பலன்நூள் கவி

ஓடிடும் பஞ்சேர் திரியம் ஒடுக்கினன் ||உள்வினைகள்
வாடிடும் வண்ணமின் றெத்தவஞ் செய்தனன் வானினுள்ளோர்
சூடிடுஞ் சீர்த்திருப் பாதத்தர் தொண்டத் தொகையினுள்ள
சேடர்தஞ் செல்வப் பெரும்புக ழந்தாதி செப்பிடவே.

நம்பியாண்டார்நம்பி

பொன்னி வடகரை சேர்நாரை யூரில் புழைக்கைமுக
மன்னன் அறுபத்து மூவர் பதிதே [illegible]ாபுசெயல்
பன்னஅத் தொண்டத் தொகை[illegible]ரும்அத் தாதிதனைச்
சொன்ன மறைக்குல நம்பிபொற் ட[illegible]ாதனே.

பா - டீ—*ஞானவவ் வாரூ ரரசரை. †அறிதற். ‡வார்கொண்டதோர் - இணைத் திகழ். §நூற்பயன். ||ஊழ்.

திருத்தொண்டர் புராணசாரம்

மல்குபுகழ் வன்தொண்டர் அருளால் ஈந்த வளமருவு திருத்தொண்டத் தொகையின் வாய்மை, நல்கும்வகை புல்கும்வகை நம்பி யாண்டார் நம்பிதிரு வந்தாதி நவின்ற வாற்றால், பல்குநெறித் தொண்டர்சீர் பரவ வல்ல பான்மை யார் எமையாளும் பரிவால் வைத்த, *செல்வமிகுந் திருத்தொண்டர் புராண மேவுந் திருத்துபயன் அடியேனும் செப்ப லுற்றேன். க

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

தூண்கபிலை யதுநீங்கி நாவ லூர்வாழ் சைவனுர் சடையனுர் தனய னுராய், மண்புகழ அருட்நிறையான் ஓலை காட்டி மணம்விலக்க வன்தொண்டாய் அதிகை சேர்ந்து, நண்பினுடன் அருள்புரிய ஆரூர் மேவி நலங்கிளரும் பரவை தோள் நயந்து வைகித்,திண்குலவும் விறன்மிண்டர் திறல்கண் டேத்துந் திருத் தொண்டத் தொகைஅருளாற் செப்பி னாரே. உ

செப்பலருங் குண்டையூர் நெல்ல மைத்துத் திருப்புகலூர்ச் செங்கல் செழும் பொன்னுச் செய்து, தப்பில்முது குன்றர்தரும் †பொருள்ஆற் றிட்டுத் தடத்தெடுத்துச் சங்கிலிதோள் சார்ந்து காதன், ஒப்பில்தனித் தூதுவந்தா றாடு கீறி உறுமுதலை சிறுமதலை உமிழ நல்கி,மெய்ப்பெரிய களிறேறி அருளாற் சேர வேந்தருடன் வடகயிலை மேவி னாரே. ங

திலகவாழ்நந்தனார்

நல்லவா னவர்போற்றுந் திலை மன்றுள் நாடகஞ்செய் பெருமானுக் கணி யார் நற்பொன், தொல்லைவான் பணிஎடுத்தற் குரியார் வீடுந் ‡துறந்தநெறி யார் தொண்டத் தொகைமுன் பாடத், திலைவாழ் அந்தணரென் றெடுத்து காதன் செப்பும்அரு ளுடையார்முத் தீயார் பத்திக், கெல்லைகாண் பரியாரொப் புலகில் தாமே எய்ந்துளார் எமையாள வாய்ந்து ளாரே. ச

திருநீலகண்ட நாயனுர்

திலைநகர் வேட்கோவர் தூர்த்த ராகித் தீண்டிலெமைத் திருநீல கண்டம் என்று, சொல்லுமனை யாள்தனையே அன்றி மற்றுந் துடியிடையா ரிடை யின்பந் துறந்து மூத்தங், கெல்லையிலோ டிறைவைத்து மாற்றி நாங்கள் எடுத் திலமென் றியம்புமென இழிந்து பொய்கை, மெல்லியலா ளுடன்மூழ்கி இளமை எய்தி விளங்குபுலீச் சரத்தரனே மேவி னாரே. ஞ

இயற்பகை நாயனுர்

எழிலாருங் காவிரிப்பூம் பட்டி னத்துள் இயல்வணிகர் இயற்பகையார் இரு வர் தேட, அழலாய பிரான்தூர்த்த மறையோ னுகி ஆயிழையைத் தாவேண்டி அணைய ஐயன், கழலாரப் பணிந்துமனைக் கற்பின் மேன்மைக் காதலியைக் கொடுத்தமர்செய் கருத்தால் வந்த, பிழையாருஞ் சுற்றமெலாந் துணித்து மீளப் பிஞ்ஞகனுர் அழைத்தருளப் பெற்று ளாரே. ட

பா - மி—*செல்வமலி. †பொன். ‡துறந்தநெறி யார்.

இளையான்குடிமாற நாயனார்

மன்னியவே ளாண்தொன்மை இளசை மாறர் வழுமையால் உணவுமிக மறந்து வைகி, உன்னருநள் எிருள்மழையில் உண்டி வேண்டி உம்பர்பிரான் அணையவயல் உழுது வித்துஞ், செந்நெல்முளை அமுதுமனை அலக்கால் ஆக்கிச் சிறுபயிரின் கறியமுத் திருந்தச் செய்து, பன்னலரும் உணவருந்தற் கெழுந்த சோதிப் பரலோகம் முழுதாண்ட பான்மை யாரே. எ

மெய்ப்பொருள் நாயனார்

சேதிபர்கற் கோவலூர் மலாட மன்னர் திருவேடம் மெய்ப்பொருளாத் தெளிந்த சிந்தை, நீதியினூர் உடன்பொருது தோற்ற மாற்றான் மெடுஞ்சின மூங் கொடும்படையும் நிகழா வண்ணம், மாதவர்போல் ஒருமுறைகொண் டணுகி வாளால் வன்மைபுரிந் திடமருண்டு வந்த தத்தன், காதலுற கமர்த்தா என்று நோக்கிக் கடிதகல்வித் திறைவனடி கைக்கொண் டாரே. அ

விறன்மிண்ட நாயனார்

வினங்குதிருச் செங்குன்றூர் வேளாண் தொன்மை விறன்மிண்டர் திரு வாரூர் மேவு காளில், வளங்குலவு தொண்டரடி வணங்கா தேகும் வன்தொண் டன் புறகவனை வலிய ஆண்ட, துளங்குசடை முடியோனும் புறகென் றன்பால் சொல்லுதலும் அவர்தொண்டத் தொகைமுன் பாட, உளங்குளிர உளதென் றூர் அதனுல் அண்ணல் உவகைதர உயர்கணத்துள் ஒங்கி னரே. கூ

அமர்நீதி நாயனார்

பழையாறை வணிகர்அமர் நீதி யார்பால் பரவுசிறு முனிவடிவாய்ப் பயி லும் நல்லூர்க், குழைகாதர் வந்தொருகோ வணத்தை *வைக்கக் கொடுத்ததனை எடுத்தொளித்துக் குளித்து வந்து, தொழிலாரும் அதுவேண்டி வெகுண்டு நீர்இத் தலையிலிடுங் கோவணமேர் தூக்கும் என்ன, எழிலாரும் பொன்மனைவி இளஞ்சேய் எற்றி எறினர்வா னுலகுதொழ எறி னரே. கo

எறிபத்த நாயனார்

திருமருவு கருவூர்ஆ னிலையார் சாத்துஞ் சிவகாமி யார்மலரைச் சிந்த யானை, அரனெறியோர் எறிபத்தர் பாக ரோடும் அறவெறிய என்னுயிரும் அகற் றீர் என்று, புரவலனூர் கொடுத்தபடை அன்பால் வாங்கிப் புரிந்தரிவான் புகழெழு ந்த புனித வாக்கால், கரியினுடன் விழுந்தாரும் எழுந்தார் தாமுங் கணகாத ரதுகாவல் கைக்கொண் டாரே. கக

ஏனாதிநாத நாயனார்

ஈழக் குலச்சான்றூர் எயின னூர்வாழ் ஏனாதி நாதனூர் இறைவன் நீற்றைத், தாழத் தொழுமரபார் படைகள் ஆற்றல் தன்மை †பெரு அதிசூரன் சமரில் தோற்று, வாழத் திருநீறு சாத்தக் கண்டு மருண்டார் தெருண்டார்கை வாள் விடார்நேர், வீழக்.களிப்பார்போல் நின்றே யாக்கை விடுவித்துச் சிவனருளே மேவி னரே. கஉ

கண்ணப்ப நாயனார்

வேடர்அதி பதியுடுப்பூர் வேந்தன் நாகன் விளங்கியசேய் திண்ணனூர் கன்னி வேட்டைக், காடதில்வாய் மஞ்சனமுங் குஞ்சிதரு மலருங் காய்ச்சினமென் றிடு

பா - ம்—*வைத்துக். †பொரு அரிசூரன்.

தசையுங் காளத்தி யார்க்குத், தேடரும்அன் பினில்ஆறு தினத்தளவும் அளிப்பச்
சீறுஇவ கோசரியுந் தெளியவிழிப் புண்ணீர், ஓடஒரு கண்ணப்பி ஒருகண் ணப்ப
ஒழிகஎனும் அருள்கொடரு குறநின் ரூரே. கஊ

தங்குலியக்கலய நாயனார்

சீலமலி திருக்கடவூர்க் கலய ஞாந் திகழ்மறையோர் பணிவறுமை சிதையா
மூன்னே, தாலியைஎற் கொளஎன்று வாங்கிக் கொண்டு சங்கையில்குங் குலி
யத்தால் சார்ந்த செல்வர், ஞாலநிகழ் திருப்பனந்தாள் காதர் கேரே ஈரபதியுர்
தொழக்கச்சால் நயந்து போதப்,பாலமுதம் உண்டாரும் அரசும் எய்திப் பரிந்த
மூது செயஅருள்சேர் பான்மை யாரே. கச

மானக்கஞ்சாற நாயனார்

கஞ்சநகர் மானக்கஞ் சாற ஞர்சீர்க் காதல்மகள் வதுவைமணங் காண காதன்,
வஞ்சமலி மாவிரதத் தலேவ ஞநி வந்துபுகுந் தவளளக மகிழ்ந்து நோக்கிப்,
பஞ்சவடிக் காமென்ன அரிந்து நீட்டும் பத்தர்எதிர் மறைந்திறைவன் பணித்த
வாக்கால், எஞ்சலில்வண் குழல்பெற்ற பேதை மாதை எயர்பிராற் குதவியருள்
எய்தி ஞரே. கடி

அரிவாட்டாய நாயனார்

தாவில்கண மங்கலத்துள் வேளாண் தொன்மைத் தாயனார் நாயனார் தமக்கே
செல்நெல், தூவரிசி எனவிளைவ தவையே யாகத் துறந்துணவு வடுவரிசி அளங்கு
கீரை, ஆவினில்ஐந் துடன்கொணர கமரிற் சித்த அழித்தரிவாள் கொண்
டீட்டி அரியா முன்னே, மாவடுவின் ஒலியும்அரன் காமுர் தோன்றி வாள்
விலக்கி அமர்தொழ வைத்த தன்றே. கசு

ஆனிய நாயனார்

மங்கலமா மழநாட்டு மங்கலமா நகருள் மருவுபுகழ் ஆனயர் வளர்ஆ மேய்ப்
பார், கொங்கலர்பூந் திருக்கொன்றை மருங்கு சார்ந்து குழலிசையில் ஐக்தெழுத்
தும் குழைய வைத்துத், தங்குசரா சரங்களெலாம் உருகா நிற்பத் தம்பிரான்
அணைந்துசெவி தாழ்த்தி வாழ்த்து, பொங்கியவான் கருணைபுரிந் தென்றும்
ஊதப் போதுகஎன் றருளஉடன் போயி ஞரே. கஎ

மூர்த்தி நாயனார்

வழங்குபுகழ் மதுரைநகர் மூர்த்தி யாராம் வணிகர்திரு வாலவாய் மன்னர்
சாத்தத்,தழங்குதிர முழங்கைதரத் தேய்த்த ஊறும் தவிர்க்தமணர் வஞ்சனேயும்
தவிர மன்னன்,இழந்தவுயி ரினஞக ஞாலம் கல்க எழில்வேணி முடியாக இலங்கு
வேடம், முழங்குபுகழ் அணியாக விரைநீ ரூக மும்மையுல காண்டருளின்
முன்னி ஞரே. கஅ

மூநக நாயனார்

மன்னுதிருப் புகலூர்வாழ் முருக ஞராம் மறையவர்கோ வர்த்தமா னீச்ச
ரத்தார், சென்னியினுக் கழகமரும் மலர்கள் கொய்து *திருமாலே புகழ்மாலே
திகழச் சாத்திக், கன்னிமதிற் கழுமலநா டுடைய நாதன் காதல்மிகு மணங்
காணுங் களிப்பி ஞலே, இன்னல்கெட உடன்சேவித் தருளால் மீளா திலங்கு
பெரு மணத்தரனே எய்தி ஞரே. ககூ

பா - ம்—*திகழ்மாலே புகழ்மாலே திருத்தச் சாத்தி.

உருத்திரபசுபதி நாயனார்

பங்கமில்வண் புகழ்நிலவு தலையூர் வாழும் பசுபதியார் எனும்மறையோர் பணிந்து செந்தேன், அங்கமல மடுவினிடை அல்லும் எல்லும் அகலாதே யாகள மாய் அமர்ந்து நின்று, திங்கள்வளர் சடைமுடியான் அடியே போற்றித் திரு எழுத்தும் உருத்திராமும் *திருந்த ஓதி, மங்கையிடம் உடையபிரான் அருளால் மேலை வானவர்கள் †தொழும்உலகில் மன்னி னரே. ஒ

திருநாளைப்போவார் நாயனார்

நன்மைதிகழ் மேற்காநாட் டாத னூர்வாழ் நந்தனார் புறத்தொண்டர் நாளைப் போகப், பொன்மலிதென் புலியூர்க்கென் றுரைப்பார் புன்கூர்ப் பொய் கைஅமைத் தடலேறு பிரிய நோக்கி, வன்மதில்சூழ் தில்லைஇறை அருளால் வாய்ந்த வண்தழலின் இடைமூழ்கி மறையோர் போற்ற, மின்மலிசெஞ் சடை முனியாய் எழுந்து காதன் விளங்குநடந் தொழமன்னுள் மேவி னரே. ஒக

திருக்குறிப்புத்தொண்ட நாயனார்

கொந்தலர்பூம் பொழிற்கச்சி நகர்ஏ காலிக் குலத்தலைவர் தவர்குறிப்புக் குறித்து ளார்பால், வந்திறைவர் நமக்கின்று தாரீ ராகில் வருந்தும்உடல் என வாங்கி மாசு நீத்த,கந்தைபுல ராதொழிய மழையும் மாலைக் கடும்பொழுதும் வரக் கண்டு கலங்கிக் கன்மேல், சிந்தமுடி புடைப்பளவில் திருவே கம்பர் திருக்கை கொடு பிடித்துயர்வான் சேர்த்தி னரே. ஒஉ

சண்டேசுர நாயனார்

வேதமலி சேய்ஞலூர் எச்ச தத்தன் விளங்கியசேய் மறைபயிலும் விசார சன்மர்,கோதனம்மேய்ப் பவன்கொடுமை பொறாது தாமே கொண்டுநிரை மண் ணியின்தென் கரையின் நீழல், தாதகியின் மணல்இலிங்கத் தான்பா லாட்டத் தாதைபொரு தலைஇடறுந் தாள்கள் மாளக், காதிமலர்த் தாமமுயர் நாம முண்ட கலமகனும் பதமருளாற் கைக்கொண் டாரே. ஒங

திருநாவுக்கரசு சுவாமிகள்

போற்றுதிரு வாமூரில் வேளாண் தொன்மைப் பொருவில்கொறுக் கையர் அதிபர் புகழ னர்பால், மாற்றரும்அன் பினில்திலக வதியாம் மாது வந்துதித்த பின்புமரு ணீக்கி யாரும், தோற்றிஅமண் சமயமுறு துயரம் நீங்கத் தூணைவர் அருள் தரவந்த சூலை நோயால், பாற்றருநீள் இடரெய்திப் பாடலிபுத் திரத்திற் பாழியொழித் தான்அதிகைப் பதியில் வந்தார். ஒச

வந்துதமக் கையரருளால் நீறு சாத்தி வண்டமிழால் நோய்தீர்த்து வாக்கின் மன்னுப், வெந்தபொடி விடம்வேழம் வேலை நீந்தி வியன்சூலங் கொடிஇடபம் விளங்கச் சாத்தி, அந்தமில்அப் பூதிமகன் அரவு மாற்றி அருட்காசு பெற்று மறை அடைப்பு நீக்கிப், புந்திமகிழ்ந் தையாற்றில் கயிலை கண்டு பூம்புகலூர் அரன்பாதம் பொருந்தி னரே. ஒடு

குலச்சிறை நாயனார்

கோதில்புகழ் தருமணமேற் குடியார் கோவண் குலச்சிறையார் தென் னர்குல அமைச்சர் குன்ரு, மாதவர்கள் அடிபரவும் மரபார் பாண்டி மாதேவி யார்அருள்வான் பயிர்க்கு வேலி, காதல்மிகு கவுணியர்கோன் வாதில் தோற்ற கையரைவை கைக்கரைசேர் சுழுவில் ஏற்று, ‡நீதியினுல் ஆலவாய் நிமலர்ச் சேர்ந்த நின்மலனர் என்மலங்கள் நீக்கி னரே. ஒசு

பா - ம்—*திகழ. †தொழ. ‡நீதியினர்.

பெருமிழலைக்குறும்ப நாயனார்

கோண்டல்பனி வளர்சோலை மிழலை நாட்டுக் கோதில்புகழ்ப் பெருமிழலைக் குறும்ப னஞ்சீர்,அண்டர்பிரான் அடியவருக் கடியா ராகும் ஆதரவால் அணுக்கவன் தொண்டர்க் காளாய்,மண்தொழும்எண் தருசித்தி வாய்ந்து ளார்தாம் வன்தொண்டர் வடகயிலை மருவு நாள்முன், எண்திகழும் மணறமூல நெறியூ டேகி இலங்கொளிசேர் வடகயிலை எய்தி னாரே. உஎ

காரைக்காலம்மையார்

தங்குபுகழ்க் காரைக்கால் வணிகன் மிக்க தனதத்தன் தரும்புனித வதியார் மாவின்,செங்கனிகள் திருவருளால் அழைப்பக் கண்டு திகழ்கணவன் அதிசயித்துத் தேசம் நீங்க, அங்கஉடல் இழந்தமுடி நடையால் ஏறி அம்மையே எனகாதன் அப்பா என்று, பொங்குவட கயிலைபணிக் தால்ங் காட்டில் புனிதனடம் அனவரதம் போற்றி னாரே. உஅ

அப்பூதியடிகள்

அந்தமில்நல் திங்களூர் வரும்அப் பூதி அருமறையோர் திருநாவுக் கரசின் நாமம், பந்தரிடை எழுதக்கண் டரசும் எய்தப் பணிந்துபரி கலநேடிப் படப்பை சேர்ந்த, மைந்தனுயிர் உயர்கதலி இலைமேல் துஞ்சும் வாளரவு வரஉடன் மறைத்தல் கேட்டுச், சிந்தைமகிழ்ந் துயர்பதிக மருந்தால் தீர்த்துத் திருவமுது செயஅருளைச் சேர்ந்து ளாரே. உக

திருநீலநக்க நாயனார்

நீதிதரு மறையோர்வாழ் சாத்த மங்கை நீலநக்கர் அயவந்தி நிமலர் மேனி, ஊதிவிழுஞ் சிலம்பிகடிந் தவரை நீத்தார்க் குமியாத இடம்நாதன் உறுநோய் காட்டக், காதல்மிகு மனைவியையும் மகிழ்ந்து மேவிக் காழியர்கோன் அமுது செயக் *களித்து வாழ்ந்து, வேதிகையில் பாணனுர்க் கிடமும் நல்கி விளங்கு பெரு மணத்தரனை மேவி னாரே. ஈ0

நமிநந்தியடிகள்

நண்ணுபுகழ் மறையோர்வாழ் ஏமப் பேறூர் நமிநந்தி யடிகள்திரு விளக்கு நல்க, எண்ணெய்அம ணர்கள்விலக்க நீரால் ஆரூர் இலங்கும்அர னெறியாருக் கேற்று நாளில், கண்ணமணர் கெடக்கண்பெற் றடிகள் வாழக் காவலனுல் நிபந்தங்கள் கட்டு வித்தே, அண்ணலருள் கண்டாரூர் அமர்ந்து தொண்டர்க் காணி எனும் அரசினருள் அடைந்து ளாரே. ஈக

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

காழிநகர்ச் சிவபாத விதயர் தந்த கவுணியர்கோன் அழுதமையாள் †கருதி யூட்டும், ஏழிசையின் அமுதுண்டு தாளம் வாங்கி இலங்கியமித் திலச்சிவிகை இசைய ஏறி, வாழும்முய லகனகற்றிப் பந்தர் எய்ந்து வளர்கிழிபெற் றரவின் விடம் மருகல் தீர்த்து, வீழிநகர்க் காசெய்தி மறைக்கதவம் பிணித்து மீன வன்மே னியின்வெப்பு விடுவித் தாரே. ஈஉ

ஆரொளியிட் டெடுத்தவ டவைமுன் னேற்றி ஆற்றிலிடும் ‡எடெதிர்போய் அணைய ஏற்றி, ஓரமணர் ஒழியாமே கழுவி லேற்றி ஒதுதிருப் பதிகத்தால் ஓடம்

பா - ம்—*கலந்து. †கருதி யூட்ட. ‡எடெதிரே.

ஏற்றிக், காருதவும் இடிபுத்தன் தலையில் ஏற்றிக் காயாத பனையின்முது கனிகள் ஏற்றி, ஈரமிலா அங்கம்உயிர் எய்த ஏற்றி இலங்குபெரு மணத்தரனே எய்தி னரே. நஙூ

ஏயர்கோன்கலிக்காம நாயனார்

ஏதமில்வே ளாளர்பெரு மங்க லத்துள் ஏயர்கோன் கலிக்காமர் இறையை னேரே, தூதுகொளு மவனணுகில் என்னும் என்னுங் துணிவினர்பால் இறைவன்அருஞ் சூலை ஏவி, வேதனவன் தொண்டன்வரின் நீங்கும் என்ன வெகுண்டுடல்வாள் கொடுதுறந்து மேய காவல்,போதகமும் உடல்இகழ எழுந்து தாழ்ந்து போற்றியது விலக்கிஅருள் பொருந்தி னரே. நஙூ

திநழல நாயனார்

கயிலாயத் தொருசித்தர் பொதியில் சேர்வார் காவிரிசூழ் சாத்தனூர் கரு தும் மூலன், பயிலாதோ யுடன்வீயத் துயர நீடும் பசுக்களேக்கண் டவனுடலிற் பாய்ந்து போத, அயலாகப் பண்டையுடல் அருளான் மேவி ஆவதெண் டுறை ஆண்டுக் கொருபா வாகக், குயிலாரும் அரசடியில் இருந்து கூறிக் கோதிலா வடகயிலை குறுகி னரே. நஙி

தண்டியடிகள்

திருவாரூர் வருத்தண்டி யடிகள் காட்சி சேராதார் குளந்தொட்டற் கம ணர் சிறிக்,குருடாநீ முன்செவிடுங் கூடிற் றென்று குறித்தநியைப் பறித்தெறி யக் கொதித்துத் தங்கண், அருளாலே விழித்தெவரும் அந்த ராக அமணர்கலக் கம்பலகண் டவர்கள் பாழிப், பருவான கற்பறித்தா விக்கரையுங் கட்டிப் பரனரு ளால் அமருலகம் பற்றி னரே. நகூ

பூர்க்க நாயனார்

தொண்டைவள நாட்டுவளர் வேற்காட் சேர்வாழ் தொல்லுழவர் நற்குதர் சூதி வென்று, கொண்டபொருள் கொண்டன்பர்க் கமுத ளிக்குங் கொள்கை யினர் திருக்குடந்தை குறுகி யுள்ளார், விண்டிசைவு குழறுமொழி வீணர் மாள வெகுண்டிடலான் மூர்க்கரென விளம்பும் நாமம், எண்டிசையும் மிகவுடையார் அண்டர் போற்றும் எழுலகு முடனுளும் இயல்பி னரே. நஎ

சோமாசிமாற நாயனார்

அம்பர்நகர் அத்தணர்சோ மாசி மாறர் அன்பர்களாம் யாவர்க்கும் அமுத ளிப்பார், உம்பர்நிகழ் வகையாகம் பலவுஞ் செய்யும் உண்மையினர் ஐந் தெழுத்தும் ஓவா நாவார், நம்பர்நிகழ் திருவாரூர் நயந்து போற்றும் நாவலர் கோன் அடிபரவும் நன்மை யாலே, இம்பர்தொழ உம்பர்பணிந் தேத்த மேலை எழுல்கு முடனுளும் இயல்பி னரே. நஅ

சாக்கிய நாயனார்

சங்கமங்கை வரும்வேளாண் தலைவர் காஞ்சிச் சாக்கியரோ டியைந்தவர்தந் தவறுஞ் சைவத்,துங்கமலி பொருளும்உணர்ந் தந்த வேடந் துறவாதே சிவலிங் கந் தொழுவோர் கண்டோர், அங்கல்மலர் திருமேனி அழுந்தச் சாத்தி அமரு நாள் மறந்தொருநாள் அருந்தா தோடிச், செங்கலெறிந் திடும்அளவில் மகிழ்ந்த நாதன் திருவருளால் அமருலகஞ் சேர்ந்து னாரே. நகூ

சிறப்புலி நாயனார்

திருவாக்கூர் அருமறையோர் உலகம் ஏத்துஞ் சிறப்புலியார் மறப்புலியார் உரிமேற் செங்கண், அரவார்த்தார் வரும்ஏற்றார்க் கன்ப ராளர்க் கமுதளிப்பார் ஒளிவெண்ணீ றணிந்த மார்பர், பெருவாக்கால் மறைபரவி யாகம் போற்றும் பெற்றியினர் ஐந்தெழுத்தும் பிறழா தோதிக், கருவாக்கா இறைவன்தா ளிணை கள் சேர்ந்த கருத்தினர் எனையாவுந் திருத்தி னரே. ச0

சிறுத்தொண்ட நாயனார்

பல்குமருத் துவர்அதிபர் செங்காட்டங் குடிவாழ் படைத்தலைவர் அமுத ளிக்கும் பரஞ்சோதி யார்மெய்ச், செல்வமிகு சிறுத்தொண்டர் காழி நாடன் திருவருள்சேர்ந் தவர்வளரு ஞ் சோளன் தன்னை,நல்குதிரு வெண்காட்டு நங்கை சமைத் திடப்பின் நன்மதிச்சந் தனத்தாதி தலைக்கறியிட் டுதவப், புல்கவரும் வயிரவர்தாம் மகிழ்ந்துமக வருளப் போற்றியவர் சிவனருளே பொருந்தி னரே.

கழறிற்றறிவார் நாயனார்

காவலர்ம கோதையார் கொடுங்கோ ளூர்க்கோக் கழறியவை அறிந்தகோச் சிலம்போசைக் கருத்தார்,நாவலர்கோன் நண்பர்அடிச் சேரன் என்றே நவின்று வரும் வண்ணனை நயந்த கோநற், பாவலர்கோப் பாணபத் திரனுல் வாய்ந்த பரமர்திரு முகம்வாங்கிப் பணிகோ வெற்பின், மேவியகோ ஆனைக்குக் குதிரை வைத்த வீரர்கோ எனையாளுஞ் சேரர் கோவே. ச உ

கணநாத நாயனார்

கந்தமலி வயற்காழி மறையோ ரேத்துங் கணநாதர் திருத்தோணிக் கடவு ளார்க்கு, நந்தவனம் பலஅமைத்து மலருங் கொய்து நற்றுமஞ் சொற்றுமம் நயந்து சாத்தி, வந்தவரைத் தொண்டாக்கிப் பணிகள் பூட்டி வாதுசெய்த வார ணத்தை மகிழ்ந்து வாழ்த்திப், புந்திமகிழ்ந் தானருளால் கயிலை மேவிப் பொரு வில்கணத் தவர்காவல் பொருந்தி னரே. ச ங

கூற்றுவ நாயனார்

குன்றாத புகழாளர் களந்தை வேந்தர் கூற்றுவனார் மாற்றலர்மண் கொண்டு சூடப், பொன்தாழு முடிவேண்டப் புலியூர் வாழும் பூசுரர்கள் கொடாதகலப் புனிதன் ஈந்த, மன்றுடுங் திருவடியே முடியாச் சூடி மாநிலங்காத் திறைவ னுறை மாடக் கோயில், சென்றுசை யுடன்வணங்கிப் பணிகள் செய்து திருவரு ளால் அமருலகஞ் சேர்ந்து ளாரே. ச ச

பொய்யடிமையில்லாத புலவர்

பொய்யறியாக் கபிலரொடு பாண ராதிப் புலவோர்பொற் பார்கலைகள் பொருந்த ஓதிச், செய்யுளிடை வளர்ஆசு மதுர நல்ல சித்திரம்விந் தாரமெனத் தெரிக்குஞ் செம்மை, மெய்யுடைய தொடைகளெல்லாம் மன்றுள் ஆடல் மேவி யகோன் இருதாளில் விரவச் சாத்திக், கையுடைஅஞ் சலியினராய் அருளால் மேலைக் கருதரிய அமருலகங் கைக்கொண் டாரே. ச ரு

புகழ்ச்சோழ நாயனார்

பொழில்மருவுங் கருவூர்வாழ் புகழார் சோழர் போதகம்போல் என்னுயி ரும் போக்கும் என்றே, அழல்அவிர்வாள் கொடுத்தபிரான் அதிக மான்மேல்

அடர்ந்தபெரும் படைஎவ அவர்கொண் டேய்ந்த, தழல்விழிகொள் தலைகாண் பார் கண்ட தோர்புன் சடைத்தலையை முடித்தலையால் தாழ்ந்து வாங்கிக், கழல் பரவி அதுசிரத்தின் எந்தி வாய்ந்த கனல்மூழ்கி இறைவனடி கைக்கொண் டாரே. சசு

நரசிங்கமுனையரைய நாயனார்

நாடுபுகழ் முனைப்பாடி நாடு மேய நரசிங்க முனையர்பவி நயந்து மன்றுள், ஆடுமவர் ஆதிரைநாள் அடியார்க் கம்பொன் அமுதளிப்பார் ஒளிவெண்ணீ றணிந்து தூர்த்த, வேடமுடை யவர்க்கிரட்டிச் செம்பொன் ஈந்து விடுத்தழகார் ஆலயங்கள் விளங்கச் செய்து, தோடலர்தா ருடையபிரான் அருளே ஆளத் தோன்றினார் எனையருளின் ஊன்றி னாரே. சள

அதிபத்த நாயனார்

அலையாருங் கடல்நாகை நகருள் வாழும் அதிபத்தர் பரதவர்கள் அதிபர் வேலை, வலைவாரி வருமீனில் தலைமீன் ஈசன் வார்கழற்கே என்றுவிடும் மர பார் பன்னுள்,தலையான தொருமீனே சார நாளுந் தன்தொழிலால் விடுத்தமிடி சாரச் செம்பொன், நிலையாரும் மணிநயந்த மீனென் றெய்த நீத்தருளால் இறைவனடி நேர்ந்து ளாரே. சஅ

கலிக்கம்ப நாயனார்

கடவுளருட் கண்ணுர்கள் பயிலுந் தொல்லைக் கடந்தைநகர் வணிகர்கலிக் கம்பர் அன்பர்க்,கடிமையுற அமுதளிப்பார் அடியான் நீங்கி அருளுருவாய் அன் பருடன் அணைய எத்தி, இடையிலவர் அடியிணையும் விளக்கா நிற்ப இகழ் மனைவி கரகமலி இரண்டு கையும், படியில்விழ எறிந்தவள்செய் பணியுந் தாமே பரிந்துபுரிந் தானருளே பற்றி னாரே. சக

கலிய நாயனார்

தடமதில்சூழ் ஒற்றியூ ரதனில் வாழுஞ் சக்கரப்பா டியர்குலமெய்த் தவமா யுள்ளார், படர்புகழார் கலியனார் கலியுங் கூற்றைப் பாய்ந்தவர்க்கு விளக்கெரிக் கும் பரிவால் மற்றோர், உடலிலராய்ச் செக்குழல்வார்க் கதுவும் நேரா அயர் மனைவி யைகொள்வார் உளரும் இன்றி, மிடறுதிரம் அகல்நிறைய அரிய நாதன் வியன்கைகொடு பிடிப்பஅருள் மேவி னாரே. நிக

சத்தி நாயனார்

விரிதருகா விரிநாட்டு வரிஞ்சை யூர்வாழ் வேளாளர் சத்தியார் விமலர் பா தத், துரியவர்கள் அடிபரவும் ஒருமை யார்நாள் ஓவாமே ஐந்தெழுத்தும் உரைக்கு நீரார், இருளின்மிட றுடையபிரான் அடியார் தம்மை இகழ்வார்நாத் தண்டாயத் திடுக்கி வாங்கி, அரியுமது திருத்தொழிலா உடையார் மன்றுள் ஆடியசே வடிநீழல் அடைந்து ளாரே. நிக

ஐயடிகள் காடவர்கோன் நாயனார்

வையகிழ் பல்லவர்தங் குலத்து வந்த மாமணிமா நிலமுழுதும் மகிழ்ந்து காக்கும், ஐயடிகள் காடவர்கோன் அருளால் நூல்கள் அறிந்தரசு புரிந்திடுதல் அமையு மென்றே,பொய்யனைய உடல்வாழ்வு கழியு மாறு பொருந்தியிடும் புகழ் வெண்பாப் புலியூர் மேவும், செய்யதிரு வடிமுதலாப் பதிகள் தோறுஞ் செப்பி னார் *இருவினைகள் தப்பி னாரே. நிஉ

பா - ம்—*என்.

கணம்புல்ல நாயனார்

இலஞ்வட வெள்ளாற்றுத் தென்பால் வாழும் இருக்குவே ளூர்அதிபர் எழி லார் சென்னிக், கலைநிலவார் அடிபரவுங் கணம்புல்லர் தில்லைக் கருதுபுலீச் சரத் தரற்குக் காதல் தீபம், நிலைதரத்தாம் இடமிடியால் ஒருநாள் புல்லால் தீடுவிளக் கிடஅ தவும் நோ தாகத்,*தலைமயிரின் எரிகொளவும் அஞ்சில் நாதன் தாவாத †வாழ்வருளுந் தன்மை யாரே. நிந

காரி நாயனார்

தீருக்கடவூர் வரும்உரவோர் காரி யாராம் திகழ்தொண்டர் வண்தமிழ்நூல் திருந்த ஓதி, விருப்பொடுதம் பெயராற்பா விளம்பி மும்மை வேந்தரையும் முறைமுறையே மேவி அங்கண், உரைத்தஉரை நயமாகி அவர்பால் ஏய்ந்த ‡ஒண்பொருளால் ஆலயங்கள் ஓங்கச் செய்து, தரைக்கண்அருந் தவர்க்கேவல் தகமுன் போற்றுந் தன்மையால் அருள்சேர்ந்த நன்மை யாரே. நிச

நின்றசீர் நெடுமாற நாயனார்

கன்னல்மலி நெல்வேலிக் கவிஞர் மாறர் கவுரியர்கோன் அமணருறு கலக்க மெல்லாம், பொன்னெயில்சூழ் சிரபுரக்கோன் அணைய மாற்றிப் புனிதமிகு நீற றணிந்து போற்றி செய்து, மன்னுபுகழ் மங்கையருக் கரசி யாராம் மலர்மாது மணி மார்பின் மகிழ்ந்து மாற்றூர், வெற்றிமுதல் கண்டாசு புரிந்து காழி வேந்தரருள் சேர்ந்தபெரு விறலி னாரே. நிடு

வாயிலார் நாயனார்

ஞாயிலார் மதிற்செருண்டை நாட்டு மேன்மை நண்ணுமயி லாபுரியின் வேளாண் தொன்மை, வாயிலார் மலைவில்லான் அடியே போற்றி மறவாமை தலை கின்ற மனமே செம்பொற், கோயிலா உயர்ஞானம் விளக்கா நீராக் குலவியஆ னந்தம்அன்பே அமுதாக் கொண்டு, தாயிலான் இருசரணம் நிகழ எத்தும் தன்மையார் அருள்சேர்ந்த நன்மை யாரே. நிசு

முனையடுவார் நாயனார்

பொன்னிவளந் தருநாட்டுப் புகழு நீர்ப்பொருவில்திரு மலிவேளாண் தொன்மை மிக்கார், முன்னியவர் முனையடுவார் இகலார் போரின் முராணழிவார் தமக்காக மொழிந்த கூலி, மன்னுநிதி கொண்டுசெயங் கொடுத்து வந்த வளர் பொருளால் இறைவனடி ||வழுவா அன்பர்க், கன்னமவர் நசையின்மிக மிசைய நல்கும் அன்பர்துன்ப மவையாவும் அகன்று ளாரே. நிஎ

கழற்சிங்க நாயனார்

காடவர்தங் குலமுவந்த கழலார் சிங்கர் காதல்மிகு தேவியுடன் காவ லாளர், ஆடவல பெருமானைப் பணிவார் அங்கோர் அகன்றமலர் தனைமோந்த அரிவை மூக்கைச், சேடுடைய செருத்துணையார் அரியக் கேட்டுத் திறலரசர் மலரெடுத்த செங்கை என்றே, சூடகமுன் கைதடிந்து ஞாலங் காத்த தூய்மை யார் அருள்சேர்ந்த வாய்மை யாரே. நிஅ

இடங்கழி நாயனார்

கோநாட்டுக் கொடும்பாளூர் இருக்கும் வேளிர் குலத்தலைவர் இடங்கழியார் கொங்கிற் செம்பொன், ஆனேற்றூர் மன்றின்முக டம்பொன் மேய்ந்த ஆதித்

பா - மீ—*தலையின்மயிர். †வரம்அருளுந் தகைமையோரே. ‡ஒண்பொருள்கொண் டாலயங்கள். ||மறவா.

தன் மரபோர்நெல் கவர்ந்தோ ரன்பர், போகாப்பண் இருளின்கட் காவு லாளர் புரவலர்முன் கொணரஅவர் புகலக் கேட்டு, மானேற்றூர் அடியாரே கொள்க என்று வழங்கிஅ சாண்டருளின் மன்னி னாரே. நிசு

செருத்துணை நாயனார்

இரைத்தணையார் புனற்பொன்னி மருகல் நன்னாட் டெழிலாருந் தஞ்சை நகர் உழவ ரேத்தும், செருத்துணையார் திருவாரூர் சேர்ந்து வாழ்வார் செல்வ மிகும் பல்லவர்கோன் தேவி வீழ்ந்த, மருத்துணையார் மலரெடுத்து மோப்பக் கண்டு வளமலிபூங் கத்தியால் அவள்மூக் கீர்ந்த, கருத்துணையார் விறற்றிருத் தொண் டினையே செய்து கருதலரும் அமருலகம் கைக்கொண் டாரே. சுo

புகழ்த்துணை நாயனார்

புண்ணியர்கள் புகழ்அழகார் திருப்புத் தூர்வாழ் புகழ்த்துணையார் அகத்தடி மைப் புனிதர் சின்னாள், மண்ணிகழ மழைபொழியா வற்கா லத்தால் வருந்துட லம் நடுங்கிடவு மணிநீ ரேந்தி, அண்ணல்முடி பொழிகலசம் மூடிமேல் வீழ அயர்ந்தொருநாள் புலம்பஅரன் அருளா லீந்த, நண்ணலரும் ஒருகாசுப் படி யால் வாழ்ந்து நலமலிசீர் அமருலகம் நண்ணி னாரே. சுக

கோட்புலி நாயனார்

சூலவுபுகழ் காட்டியத்தான் குடிவே ளாளர் கோட்புலியார் குவித்தயர்த்த செந்நெற் கூடு, நிலவணிவார்க் கமைத்தாணை நிறுத்தி ஒன்னார் நேர்மலைவார் திருவாணை நினையா தேநெல், சிலமிடியால் அழித்தபடி அறிந்து வாளால் சேர்ந்தபெருங் கிளைஞருடல் சிதற வீசி, இலகுமொரு குழவியையும் எறிந்து காதன் எண்ணரிய கருணைநிழல் எய்தி னாரே. சுஉ

பத்தராய்ப் பணிவார்

தொண்டரடித் தொழல்பூசைத் தொழில்மகிழ்தல் அழகார் துளங்கியஅர்ச் சனைபுரிதல் தொகுதிகிய மங்கள், கொண்டபணி திருவடிக்கே கொடுத்தல் ஈசன் குணமருவும் அருங்கதையைக் *குலவிக் கேட்டு, மண்டிவிழி துளும்பல் மயிர் சிலும்பல் உன்னல் மருவுதிருப் பணிகாட்டி வருப வாங்கி, உண்டிகொளா தொழிதலென இவைஒ ரெட்டும் உடையரவர் பத்தரென உரைத்து ளாரே. சுங

பரமனையே பாடுவார்

அருந்தமிழால் வடகலையால் அருளால் ஒன்னூல் அறிவுநெறி மருவுமருங் †கவிகள் யாவும், திருந்தியவா னவர்பணிய மன்னு ளாடுந் தேவர்பிரான் கழலி னையே சேர ஓதி, விருந்திடுநா வுடையபயன் மேலி னேர்தாம் மேலானே மெனமகிழ்ந்து விழிநீர் சோரப், பரிந்தருளால் பரமனையே பாட வல்ல பான் மையார் எமையாளும் மேன்மை யாரே. சுச

சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்

பாரணவும் புலனந்தக் கரண மொன்றும் படராமே நடுநாடி பயிலு நாதம், காரணபங் கயன்முதலாம் ஐவர் வாழ்வுங் கழியுநெறி வழிபடவுங் கருதி மேலைப், பூரணமெய்ப் பரஞ்சோதிப் பொலிவு நோக்கிப் புணர்ந்தணைந்த சிவானுபவ போகம் மேவும், சீரணவு மவரன்றே எம்மை யாளும் சித்தத்தைச் சிவன்பாலே வைத்து ளாரே. சுடு

பா - மீ—*குலவிக் கேட்டல். †கலிகள்.

திருவாரூர்ப் பிறந்தார்

பொங்கியமா தவமுடையார் வருணம் நான்கில் பொருந்தினர்கள் அல்லாத புகழி னுள்ளார், சங்கையிலா அருந்தவம்முன் புரிந்தார் இங்குச் சார்விலார் இறைவனருள் சார்த்த லாலே, கங்கைவாழ் சடைமுடியான் அருளே நீங்காக் கணநாதர் எனவாழுங் கருத்தர் கன்னிச், செங்கண்வரால் வளர்வாவி திகழும் ஆரூர்ச் சிறந்துளார் எமையாளப் பிறந்து ளாரே. சுசு

முப்போதுந் திருமேனி தீண்டுவார்

சேப்பலருந் தவமுடைய செம்மை யாளர் சிறுகாலே மலர்வாவி திகழ மூழ்கி, ஒப்பில்திரு நீறணிந்து நியதி ஆற்றி ஓவாமே ஐந்தெழுத்தும் *உணர்ந்து சைத்துத், தப்பில்சிவா கமவிதியால் இன்பால் அன்பாந் தன்மையால் நன்மையாந் தகையார் என்றும்,மூப்பொழுதுந் திருமேனி தீண்ட வல்ல முறைமை யார் பிறவிதெறுந் திறமை யாரே. சுஎ

முழுநீறு பூசிய முனிவர்

கற்பம்அணு கற்பம்உப கற்பம் என்றிக் கடன்அணைந்த திருநீறுங் கனற்கண் நீறும், பொற்புடைய அரன்ஆசான் அங்கி ஆறு பொல்லாத பூமிஎனிர் புனைத லாகா, அற்புதமாந் திரிபுண்ட மதியின் பாதி அகிலாங்கந் தீபமிகும் அழகார் வட்டம், மூற்பொலிய உடலணியும் முறையா ரன்றே முழுநீறு பூசவல்ல முனிவர் தாமே. சுஅ

அப்பாலும் அடிச்சார்ந்தார்

தாராரும் மூவேந்தர் பயிலுந் தொல்லைத் தமிழ்நாட்டப் புறத்திறைவன் சரணஞ் சார்ந்த, சீராருந் தொண்டர்களும் அண்ட ரேத்துந் திருத்தொண்டத் தொகைஅருளால் செப்புங் காலத், தேராருந் தொடையிலுறு திப்பால் அப்பால் எந்தைபிரான் அடியடைந்த இயல்பி னோரும், ஆராத காதலுடை யவர்க ளன்றே அப்பாலும் அடிச்சார்ந்த அடியார் தாமே. சுக

பூசலார் நாயனார்

பொருவருந்தண் டகநாட்டு நின்ற வூர்வாழ் பூசுரர்கோப் பூசலார் புந்தி யாலே, இருநிதியந் தேடிஆ லயமு மாக்கி எழுந்தருளப் பண்ணுவதா எண்ணுங் காலை, அரனதனைக் காடவர்கோற் கருள மன்னன் அந்நகரம் அணைந்தவனா றறிந்து தாழ, விரவுமனக் கோயிலுற இருத்தி அங்கண் வேண்டுவகொண் டிறைஞ்சிஅருள் மேவி னாரே. எ0

மங்கையர்க்கரசியார்

மங்கையர்க்குத் தனிஅரசி வளவர்குலக் கொழுந்து மன்னவர்சூழ் தென்ன வர்க்கு மாதேவி யார்மண், சங்கைகெட அமண்சமயஞ் சாட வல்ல சைவசிகா மணிஞானத் தமிழிற் கோத்த, பொங்குதிரு வருளுடைய போத வல்லி பொரு வில்நெடு மாறனுரப் புயமேல் வாழும், செங்கலச மூலையாள்தன் அருளால் இன் பஞ் சேர்ந்தவரைப் புகழ்ந்தடியேன் வாழ்ந்த வாறே. எக

நேச நாயனார்

சாலியர்கோக் காம்பீலித் தலைவர் மேன்மை தாவாத புகழ்நேசர் தஞ் சொல் என்றும், கோலியஞ் தெழுத்தோதிச் சிந்தை யுன்னிக் கொண்ட

பொருள் அன்பர்கொளக் கொடுத்து வாழ்வார், சீலமிகுந் திருத்தொண்டர்க் குடையுங் கீளுந் திருந்தியவெண் கோவணமுஞ் சேர ஈந்து, பாலனைய ஒளிநீற் றுன் பாத மேத்திப் பரலோகம் முழுதாண்ட பான்மை யாரே. எஉ

கோச்செங்கட் சோழ நாயனார்

வெண்ணுவல் இறைக்கொளிநூல் பத்தர் செய்த வியன்சிலம்பி அது அழித்த வெள்ளா னைக்கை, உள்நாடிக் கடித்தஉடல் ஒழியச் சோழன் உயர் குலத்துச் சுபதேவன் கமலத் தோங்கும், பெண்ணுகி யவள்வயிற்றில் வைகிச் செங்கட் *பெருமானுப்ப் பெருங்கோயில் பலவுங் கட்டிக், கண்ணுர்வித் தயர் தில்லை மறையவர்க்கும் உறையுள் கனகமய மாக்கிஅருள் கைக்கொண் டாரே.

திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார்

பிறங்கெருக்கத் தம்புலியூர் வாழும் பேரியாழ் பேணுதிரு நீலகண்டப் பாண ஞர்சீர், நிறந்தருசெம் பொற்பலகை ஆல வாயின் நிமலன்பால் பெற் ருரூர் கோர்த்துசிவன் வாயில், திறந்தருளும் வடதிசையே சேர்ந்து போற்றித் திருஞான சம்பந்தர் திருத்தாள் வாழ்த்தி, அறந்திகழும் திருப்பதிகம் யாழி லேற்றி ஆசில்திருப் பெருமணஞ்சேர்ந் தருள்பெற் ருரே. எச

சடைய நாயனார்

சங்கையிலா அரன்மறையோர் நாவ லூர்வாழ் தவரதிபர் தம்பிரான் தோழ ராய, எங்கள்பிரான் தவகெறிக்கோர் இலக்கு வாய்த்த இசைஞானி யார்தனயர் எண்ணுர் சிங்க,மங்கையர்கள் தொழும்பரவை மணவாள நம்பி வந்து திக்க மாதவங்கள் வருந்திச் செய்தார், வெங்கண்அரா விளங்கும்இளம் பிறை சேர் சென்னி விடையினுர் அருள்சேர்ந்த சடைய ஞரே. எஞ

இசை ஞானியார்

நாவல் திருப்பதிக்கோர் செல்வச் சைவ நாயகமாஞ் சடையனுர் நயந்த இன்பப், பூவைக் குலமடந்தை பொற்பார் கொம்பு புனிதமிகு மீறணிந்து போற்றி செய்தே,ஆவில் திகழ்தலைவன் வலிய ஆண்ட ஆரூர் அவதரிக்க அருந் தவங்கள் புரிந்தார், யாவர்க்கும் எட்டாத இசைந்த இன்ப இசைஞானி என ஞானம் எளிதா மன்றே. எசு

ஆ திருவிருத்தம் - எசு

(சில பிரதிகளில் காணப்பட்டவை)

அத்தரடி யவர்கூட்டத் தில்லை வாழும் அந்தணர்பொய் யடிமையிலாப் புலவர் ஆகில், பத்தர்முதல் எழுவரோ டொன்பதின்மர் ஏழொன் பதின்மர் தனிப் பேரெண்ணுன் பதின்ம ராய, இத்தொகையில் தொண்டர்சீர் உரைத் தான் வைத்த ஈரிரண்டா யிரத்திருநூற் றைம்பத்து மூன்றும், உத்தமநல் விருத்தத்திற் பயனுஞ் செய்யுள் உலகெழுபத் தைந்தெனநின் றுரைக்கு மன்றே.

செல்வமிகு திருத்தொண்டத் தொகையில் உள்ளார் சிறந்ததனிப் பெய ராக அறுபதின்மேன் மூவர், மல்லன்மிகு கூட்டப்பேர் அருள்சேர்ந் தார்கள்

பா - ம்—*தென்னவஞப்ப் பெருங்கோயில் பலவும்.

மாதவத்தோர் மும்மூன்று வகைபெற் றூர்கள், இல்லறத்தும் அறவறத்தும் இருந்து வாழ்ந்தே இயல்பாகச் சிவபதமான் கிசைந்தார் தம்மை, அல்லலறுத் தெனையாண்ட சைவசிகா மணியார் அருட்புலியூர் *உமாபதியார் அருள்செய் தாரே.

திருஞான சம்பந்தர் சண்டீசர் முருகர் சிறப்புலியார் கணநாதர் திருநீல நக்கர், அருள்சேரும் பசுபதியார் சோமாசி மாறர் அப்பூதி நமிநந்தி கலேயர்பூ சலேயார், பெருவாய்மை மறையவர்கள் பன்னிருவர் சைவப் பெருமான்நற் சடை யர்இசை ஞானிபுகழ்த் துணேயார், ஒருநால்வர் சிவமறையோர் திருத்தொண் டர் என்னும் ஒருவர்மருத் துவர்மன்னர் அறுவரையும் உரைப்பாம்.

ஆமருவும் கொடைச்செங்கண் வளவர்புகழ்ச் சோழர் அன்பர்இடங் கழி மாறர் அருள்மானி சேரர், தாமறுவர் குறுநிலமன் னவர்ஐவர் சேதித் தலேவரருட் கூற்றர்நர சிங்கர்கழற் சிங்கர், காமர்எழிற் காடவர்கோன் வணிகர்கள்தாம் ஐவர் காரைக்கால் அம்மைஎங்கள் கலிக்கம்ப மூர்த்தி, யாமஇழ அருளும்அமர் நீதி இயற் பகையார் வேளாளர் பதின்மூவர் இவரைஇனி உரைப்பாம்.

வாக்கரசர் இளையான்றன் குடிமாறர் மாறர் மானக்கஞ் சாறனூர் வாட்டா யர் ஏயர், கோக்குடிசேர் கலிக்காமர் விறன்மிண்டர் மூர்க்கர் கோட்புலியார் வாயி லார் கொடியமூனே யடுவார், சாக்கியனூர் செருத்துணேயார் வாழ்சிபூர் வாழ்த்த சத்தியார் பதின்மூவர் பொதுவர்இரண் டெங்கள், பாக்கியமாம் திருமூலர் ஆனை யர் பாணர் யாழ்ப்பாணர் பரதாதி பத்தரெனுந் தவரே.

தவரான வேட்கோவர் தனிநீல கண்டர் சான்றூரில் ஏனுதி நாதர்சா லியரில், சிவநேசர் வண்ணரில் திருக்குறிப்புத் தொண்டர் செக்காரில் கலியனூர் அருட்டிருக்கண் ணப்ப, ரவர்வேடர் களிற்கடைஞர் திருநாளேப் போவார் ஆக இவர் மாபறியார் அறுவர்இவர் ஞானக், குலச்சிறையார் கணம்புல்லர் காரிஎறி பத்தர் தண்டியடி கள்குறும்பி னரெனுமா தவரே.

மாமறையோர் பன்னிருவர் சிவமறையோர் நால்வர் மருத்துவரி லேயொ ருத்தர் மன்னவரில் அறுவர், கோமுறைமைக் குறுநிலமன் னவர்ஐவர் வணிகர் குலத்தைவர் வேளாளர் பதின்மூவர் குயவர், தாமுயர்வே டர்பாணர் கடைஞரறச் செக்கார் சான்றூர்வண் ணர்பரதர் சாலியர்ஒ ரொருவ, ராமிடையர் இருவர் இரு மூவர்மர பறியார் ஆகஅறு பத்துமூன் றருகியமா தவரே.

---

*திருமுறைகண்ட புரண இறுதிச் செய்யுளிலுள்ள " .....திருத்தொண்டர் பதந் துதிப்பாம் " என்பது, திருத்தொண்டர் புராண சாரத்தைக் குறிப்பது. இதனுல் திருமுறைகண்ட புராண ஆசிரியரும், திருத்தொண்டர் புராண சார ஆசிரியரும் ஒருவர் என்பது விளங்குகிறது. திருத்தொண்டர் புராணசார ஆசிரியர் உமாபதியார் என்று இச்சிறப்புப் பாயிரம் கூறுகிறது. சில பிரதிகளில் இச்சிறப்புப் பாயிரம் இல்லே.

திருத்தொண்டர் திருநாமக்கோவை

மெய்யன்பர் நாமமெல்லாம் வெவ்வேறு போற்றிடஐங்
கையன் திருவடியே காப்பு.

தில்லைவா ழந்தணர்கள் சீர்நீல கண்டனார்
இல்லை அளித்த இயற்பகையார்—தொல்லை
இளையான் குடிமாறர் மெய்ப்பொருளார் என்றும்
இளையா விறன்மிண்டர் இன்பம்—அளவும்அமர்
நீதி எறிபத்தர் நீண்டபுகழ் ஏனாதி
நாதர்திருக் கண்ணப்பர் நற்கலயர்—மேதகுசீர்
மானக்கஞ் சாறர்அரி வாட்டாயர் ஆனாயர்
ஞானத் திருமூர்த்தி நாயனார்—மேன்மை
முருகர் பசுபதியார் முன்னுளைப் போவார்
அரிசில் திருக்குறிப்புத் தொண்டர்—மருவுமறைச்
சண்டீசர் வாகீசர் தக்க குலச்சிறையார்
கொண்ட மிழலைக் குறும்பனார்—தொண்டுசெயும்
நீள்காரைக் காலம்மை அப்பூதி நீலநக்கர்
மூளு நமிநந்தி மூத்தமிழை—ஆளும்
திருஞான சம்பந்தர் செய்ய கலிக்காமர்
அருள்மூலர் தண்டி யடிகள்—வருமூர்க்கர்
சோமாசி மாறனார் சாக்கியனார் சூழாக்கூர்
நாமார் சிறப்புலியார் நற்றிரண்டின்—மேமச்
சிறுத்தொண்டர் சேரமான் செய்ய கணநாதர்
விறற்களத்தைக் கூற்றுவனார் விஞ்சைத்—திறத்துமிகும்
பொய்யடிமை இல்லாப் புலவர் புகழ்ச்சோழர்
மொய்கொள்நர சிங்க முனையரையர்—ஐயர்அதி
பத்தர் கலிக்கம்பர் கலியர் பகர்சத்தி
கைத்தபுலன் ஐயடிகள் காடவர்கோன்—மொய்த்தகணம்
புல்லனார் காரிநெடு மாறர்புகழ் வாயிலார்
நல்ல முனையடுவார் நாயனார்—மல்குகழற்
சிங்கர் இடங்கழியார் தஞ்சைச் செருத்துணையார்
கொங்கார் புகழ்த்துணையார் கோட்புலியார்—அங்கணர்க்குப்
பத்தராய்த் தாழ்வார் பரமனையே பாடுவார்
சித்தஞ் சிவன்பாலே சேர்த்துள்ளார்—நித்தமும்
முத்தி நெறிகாட்டும் முதல்வர் முழுதுணர்ந்தோர்
பித்தனுறை ஆரூர்ப் பிறந்தார்கள்—அத்தனையே
முப்போதுந் தீண்டுவார் முழுநீறு பூசுவார்
அப்பாலும் ஈசன் அடிச்சார்ந்தார்—மெய்ப்பூசல்
மானியார் நேசனார் வாழ்செங்கட் சோழனார்
பான்மையார் நீலகண்டப் பாணனார்—மேன்மைச்
சடையரிசை ஞானி இவர் தம்மையெல்லாஞ் சேர்த்துத்
தொடையாகப் பாடியவன் தொண்டர்—அடியிணைகள்

சிந்தனைசெய் திந்தத் திருகாமக் கோவைதனை
மந்திரமாக் கொண்டு மயிர்சிலிர்த்து—நைந்துருகி
மெய்யன்பா லென்றும் விளம்பப் பெறுவார்கள்
கைதவமும் புல்லறிவும் கற்பனையும்—மையலுந்தீர்ந்
தத்துவிதா னந்த அகண்டபரி பூரணத்தில்
நித்தியமா வாழ்வார் நிசம்.

திருத்தொண்டர் திருநட்சத்திரம்

ஒன்றகல எட்டெட்டாம் ஒதும்அடி யாரன்பால்
அன்றுமதி காளினிது சொல்லவே—வென்றிதரும்
பொன்னிதிவி னையகனூர் பூமுடிமேல் ஆடிதிருச்
சன்னிதிவி காயகனூர் தாள்.

தில்லைவாழ் அந்தணர் திருவரு ளாலவர்
மல்குசீர்ப் பதத்தை மகிழ்வொடு வணங்கிக்
கடிதிரு நீல கண்டர்தை விசாகம்
வடிவியற் பகையார் மார்கழி உத்திரம்
வரும்இளை யான்குடி மாறர்ஆ வணிமகம்
கருதுமெய்ப் பொருளார் கார்த்திகை உத்திரம்
விறன்மிண்ட கண்டர் மேடம்ஆ திரைகாள்
அறன்அமர் நீதி ஆனிப் பூரம்
மாண்எறி பத்தர் மாசியில் அத்தம்
காணும்வ னுதியார் கன்னிஉத்தி ராடம்
மலர்கண் ணப்பர் மகாமான் நலியிற்
குலவுகுங் குலியர் கோளரி மூலம்
தருமா னக்கஞ் சாறர்விற் சுவாதி
அரிவாட் டாயர்தை ஆதிரை காளில்
ஆனாயர் கார்த்திகை அத்த காளில்
கான மூர்த்தியார் கடகத் தாரல்
முருகர் இடப மூல மதனில்
உருத்திர பசுபதி உயர்கன்னி மூன்னுள்
பொருந்திரு காளைப் போவார்கன் னியிற்பார்
திருக்குறிப் படியார் சித்திரைச் சுவாதி
சண்டீச ராமவர் தையுத் திரத்தில்
தண்டமிழ் அப்பர் தகரிற் சதயம்
குலச்சிறை காயனூர் கோளரி அனுடம்
அலகில் குறும்பர் ஆடியிற் சித்திரை
அருள்கா ரைக்கால் அம்மைமீன் விளக்காம்
அருகில்அப் பூதிதை யதிற்சத யத்தில்
கமைலீல காக்கர் காளை மூலத்தில்

நமிநந்தி யடிகள் நாள்விடைப் பூசம்
ஞானசம் பந்தர் நாள்விடை மூலம்
ஆன கலிக்காமர் ஆனிரே வதியில்
அருட்டிரு மூலர் ஐப்பசி முன்னுள்
வருதண்டி யடிகள் வளர்மீன் சதயம்
சேமமா மூர்க்கர் தேள்மதி மூலம்
சோமாசி மாறர் தொழுவிடை அரவில்
சாக்கிய நாயனர் தனுப்பூ ராடம்
தேக்கிய சிறப்புலி தேட்பூ ராடம்
சேர்சிறுத் தொண்டர் சித்திரைப் பரணி
சேரமான் கடகஞ் சேர்ந்தசோ தியினில்
கணநாதர் மீனங் கலந்தஆ திரையில்
குணமாங் கூற்றுவர் குளிர்மதி ஆதிரை
பொய்யடிமை இல்லாப் புலவர்தாள் போற்றி
மெய்ப்புகழ்ச் சோழர் மிளிர்குளிர் ஆரல்
நரசிங்க முனையார் நற்கன்னி சதயம்
திரஅதி பத்தர் சிங்கஆ யிலியம்
*கலிக்கம்பர் மகரக் கடைநா ளதனில்
கலியார் ஆடியிற் கலந்தஇத் திரளுள்
தூயசிற் சத்தியார் அலாப்பூ சத்தில்
ஐயர்கா டவர்கோன் ஐப்பசி மூலம்
கணம்புல்ல நாயனர் கார்த்திகை அங்கி
கணஞ்சேர் காரியார் கடம்பூ ராடம்
தூய்நெடு மாறர் தலாமதிப் பரணியில்
வாயிலார் நாயனர் மார்கழி இரேவதி
வெம்மூனே யடிவார் மீனப் பூசம்
†செம்மைநா கங்கழற் சிங்கர்சேப் பரணி
மருவிடங் கழியார் மதிஅலா ஆரல்
செருத்துணை நாயனர் சிங்கப் பூசம்
சேட்புகழ்த் தூணியார் சிங்கஆ யிலியம்
கோட்புலி நாயனர் குளிர்மதி கேட்டை
பத்தராய்த் தாழ்வார் பரமனைப் பாடுவார்
சித்தத் தைச்சிவன் பாலே சேர்த்துளார்
அப்புறு செய்த்திரு ஆரூர்ப் பிறந்தார்
முப்போ தும்திரு மேனி தீண்டுவார்
முப்புவி தொழுமுழு நீறு பூசுவார்
அப்பாலும் அடிச்சார்ந் தாரை வணங்கிப்
பூசலார் ஐப்பசி புகும்அனு டத்தில்
மாசிலா மானியார் மைம்மதி உரோகணி
மிகுசிவ நேசர் மீனரோ கணியில்
தொகுபுகழ்ச் செங்கட் சோழர் குடக்குன்
றடுநீல கண்ட யாழ்ப்பாணர் சேமூலம்
சடையனார் மார்கழி சார்ந்தஆ திரையில்
இசைஞானி மேடத் திசைந்தசித் திரையில்

பா - ம்—*கலியர் ஆடியினிற். †செம்மையா நங்கழ[illegible]

வசையிலா இம்மதி மருவும்இந் நாளில்
பரகதி யடைந்த பத்தரைப் பாடிக்
கருதுவன் தொண்டர் கடகச் சுவாதி
குருபூசை நாளில் குறைவிலா திவர்க்கு
வருபூசை தந்தோர் மாநிலத் தோங்கித்
தவப்பய னெய்திச் சதுமறைக் கிரியில்
சிவகதி யடைதல் திண்ணம்உண் மையதே.

சமயகுரவர்

சீத்திரைச் சதயம் அப்பர் சிறந்தவை காசி மூலம்
அத்தரைப் பணிசம் பந்தர் ஆனிமா மகத்தில் அந்த
மூத்தமிழ் வாத வூரர் முதியநல் ஆடி தன்னில்
சுத்தமாஞ் சோதி நாளில் சுந்தரார் கயிலை சேர்ந்தார்.

சமயகுரவர்—சேக்கிழார்

பாடிய சம்பந்தர் வைகாசி மூலம் பயிலும்அப்பர்
கூடிய சித்திரை மாதச் சதயம் நிறைவன்தொண்டர்
ஆடியிற் சோதி திருவாத வூரர்நல் லானிமகம்
தேடிய சேக்கிழார் வைகாசிப் பூசஞ் சிறந்தனரே.

சந்தானகுரவர்

சீத்திரை அத்தம் உமாபதி ஆவணித் திங்கள்தனில்
உத்திரஞ் சீர்கொள் மறைஞான சம்பந்தர் ஓதுகன்னிச்
சுத்தமெய்ப் பூரம் அருணந்தி ஐப்பசிச் சோதிதனில்
வித்தக மெய்கண்ட தேவர் சிவகதி மேவினரே.

சமயகுரவர் வயது

அப்பருக்கெண் பத்தொன் றருள்வாத வூருக்குச்
செப்பியநா லெட்டினில் தெய்வீகம்—இப்புவியில்
சுந்தரர்க்கு மூவாறு தொன்ஞான சம்பந்தர்க்
கந்தம் பதினு றறி.

சேக்கிழார் புராணம்

என வழங்கும்

திருத்தொண்டர் புராண வரலாறு

பாயிரம்

விநாயகர்

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனமுக னேப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம். க

சபாநாதர்

சீராருஞ் சதுமறையும் தில்லைவா ழந்தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ்சலியும் தொழுதேத்த
வாராருங் கடல்புடைசூழ் வையமெலாம் ஈடேற
ஏராரு மணிமன்றுள் எடுத்தகிரு வடிபோற்றி. உ

சிவகாமசுந்தரி

பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய இருள்நீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றின் ஒளிவிளங்க
அரந்தைகெடப் புகலியர்கோன் அழுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி. ங

கற்பகவிநாயகர்

மலரயனுந் திருமாலுங் காணுமை மதிமயங்கப்
புலிமுனியும் பதஞ்சலியுங் கண்டுதொழப் புரிசடையார்
குலவுநடந் தருந்தில்லைக் குடதிசைக்கோ புரவாயில்
நிலவியகற் பகக்கன்றின் நிரைமலர்த்தா ளிணைபோற்றி. ச

சுப்பிரமணியர்

பாறுமுக மும்பொருந்தப் பருந்துவிருந் தணைக்கழகு
கூறுமுக மாயிணங்கு நூழில்படு களம்புகுத
மாறுமுகந் தருகிருதர் மடியவடி வேலெடுத்த
ஆறுமுகன் திருவடித்தா மரையிணைக ளவைபோற்றி. ஞ

சைவசமயாசாரியர்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைத்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்தொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூர்திருத் தாள்போற்றி. ட

திருத்தொண்டர்—சேக்கிழார்

தில்லைவாழ் அந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாந் திருத்தொண்டத் தொகையடியார் பதம்போற்றி
ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழா ரடிபோற்றி. எ

நூற்பெயர்

தாய்மலர்ந்த முகத்தினளாய்த் தழுவிமுலை தாவந்த
சேய்மலர்ந்த பிறவிதொறு நுழையாமல் உலகுய்யத்
தீமலர்ந்த சடைக்கூத்தர் திருவருளாற் சேக்கிழார்
வாய்மலர்ந்த புராணத்தின் வரலாறு விரித்துரைப்பாம். அ

அவையடக்கம்

ஊர்க்கடலே இவனெனவந் துதித்தகான் ஒங்குதமிழ்
நூற்கடலைக் கரைகண்டு நுவலநினைக் குமதுதிருப்
பாற்கடலைச் சிற்றெறும்பு பருகநினைப் பதுபோலும்
நீர்க்கடல்சூழ் மண்ணுலகை நிறுக்கநினைக் குமதொக்கும். க

தேவுடனே கூடியசொல் செழுந்தமிழோர் தெரிந்துரைத்த
பாவுடனே கூடியஎன் பருப்பொருளும் வீழுப்பொருளாம்
கோவுடனே கூடிவருங் குருட்டாவும் ஊர்புகுதும்
பூவுடனே கூடியசார் புனிதர்முடிக் கணியாமால். கo

நூல்

பாலாறு வளஞ்சுரந்து நல்க மல்கும் பாலைவிரி மணங்கமழ்பூஞ் சோலை தோறும்,காலாறு கோலிஇசை பாட நீடும் களிமயில்கின் றூடும்இயல் தொண்டை நாட்டுள், காலாறு கோட்டத்துப் புலியூர்க் கோட்டம் நன்றிபுனை குன்றைவள நாட்டு மிக்க, சேலாறு கின்றவயற் குன்றத் தூரில் சேக்கிழார் திருமரபு சிறந்த தன்றே. கக

நாடெங்கும் சோழன்முனைக் தெரிந்தே ஏற்றும் நற்குடிநாற் பத்தெண்ணா யிரத்து வந்த, கூடல்கிழான் புரிசைகிழான் குலவு சீர்வெண் குளப்பாக்கி ழான் வரிசைக் குளத்து ழான்முன், தேடுபுக ழாரிவருஞ் சிறந்து வாழச் சேக்கிழார் குடியிலிந்தத் தேசம் உய்யப், பாடல்புரி அருண்மொழித்தே வரும்பி னந்தம் பாலரு வாயரும்வந் துதித்து வாழ்ந்தார். கஉ

இமயமலை யரையன்மகள் தழுவக் கச்சி ஏகம்பர் திருமேனி குழைந்த ஞான்று, சமயமலை ஆறினுக்குந் தலைவிக் சீசர் தந்தபடி எட்டுழக்கி ராழி நெல்லும், உமைதிருச்சூ டகக்கையால் கொடுக்க வாங்கி உழவுதொழி லாற் பெருக்கி உலக மெல்லாம், தமதுகொழு மிகுதிகொடு வளர்க்கும் வேளாண் தலை வர்பெரும் புகழ்உலகில் தழைத்த தன்றே. கங

விளைகழனி பூலோகம் முழுதும் எரி விரிதிரைநீர்க் கடல்வருணன் கம்பு கட்டி, இளர்கலப்பை தருசுமையாள் சுவேத ராமன் இடாமறலி வசத்தீசன் வசத்தான் என்றிங், களவறித்தாண் டாண்டுதொறும் விதைதப் பாமல் அளக்கு மவள் கச்சியறம் வளர்த்த மாதா, ஒளிபெருகு கொழுமிகுதி எறும்பீ ரூன உயிரனைத்துந் தேவரும்உண் டுவப்ப தன்றே. கச

மாறுகொடு பழையனூர் நீலி செய்த வஞ்சனையால் வணிகன்உயிர் இழப்பத் தாங்கள், கூறியசொல் பிழையாது துணிந்து செந்தீக் குழியிலெழு பதுபேரும் மூழுகிக் கங்கை, ஆறணிசெஞ் சடைத்திருவா லங்காட் டப்பர் அண்டமுற நிமிர்ந்தாடும் அடியின் கீழ்மெய்ப், பேறுபெறும் வேளாளர் பெருமை எம்மால் பிறித்தளவிட் டிவளவெனப் பேச லாமோ. கடு

காராளர் அணிவயலில் உழுது தங்கள் கையார நட்டமுடி திருந்தில் இந்தப், பாராளுந் திறல்அரசர் கவித்த வெற்றிப் பசும்பொன்மணி முடிதிருந் துங் கலப்பை பூண்ட, ஏராலெண் திசைவளர்க்கும் புகழ்வே ளாளர் ஏரடிக்குஞ் சிறுகோலால் தரணி யாளச், சீராரு முடியரசர் இருந்து செங்கோல் செலுத்து வர்வே ளாளர்புகழ் செப்ப லாமோ. கசு

வாயிலார் சத்தியார் விறல்சேர் மிண்டர் வாக்கரையர் சாக்கியர்கோட் புலிகஞ் சாறர், எயர்கோன் கலிக்காமர் மூலைவித் தாக்கும் இளையான்றன் குடி மாறர் மூர்க்கர் செங்கைத், தாயனூர் செருத்துணையார் செருவில் வெம்போர் சாதித்த மூனையடுவார் ஆக நம்பி, பாயிரஞ்சேர் அறுபதுபேர் தனிப்பேர் தம் மில் பதின்மூவர் வேளாளர் பகருங் காலே. கஎ

அத்தகைய புகழ்வேளாண் மரபில் சேக்கி ழார்குடியில் வந்தஅருண் மொழித்தே வர்க்குத், தத்துபரி வளவனுந்தன் செங்கோ லோச்சுந் தலைமை அளித் தவர்தமக்குத் தனது பேரும், "உத்தமச்சோ ழப்பல்ல வன்தான்" என் றும் உயர்பட்டங் கொடுத்திடஆங் கவர்தீர் நாட்டு, நித்தனுறை திருநாகேச் சுரத்தில் அன்பு நிறைதலினல் மறவாத நிலைமை மிக்கார். கஅ

நம்பதிகுன் றத்தூரில் மடவ ளாகந் தாளுக்கித் திருக்கோயில் தாபித் தங் கண், செம்பியர்கோன் திருநாகேச் சுரம்போ லீதுந் திருநாகேச் சுரமெனவே திருப்பேர் சாற்றி, அம்புவியில் அங்காங்க வைப வங்கட் கானபரி கலந்திருநாள் பூசை கற்பித், திம்பர்புகழ் வளவன்அர சுரிமைச் செங்கோல் இமசேது பரியந்தம் இயற்று நாளில். கக

*கலகமிடும் அமண்முருட்டுக் கையர் பொய்யே கட்டிநடத் தியசிந்தா மணியை மெய்யென், றுலகிலுளோர் சிலர்கற்று நெற்குத் துண்ணு துமிக் குத்திக் கைவருத்திக் கறவை நிற்க, மலடுகறந் தளந்தளர்ந்து குளிர்பூஞ் சோலை வழியிருக்கக் குழியில்விழுந் தளறு பாய்ந்து, வீலதருமென் கரும்பிருக்க இரும்பை மென்று விளக்கிருக்க மின்மினித்தீக் காய்ந்து நொந்தார். உ0

வளவனுங்குண் டமண்புரட்டுத் திருட்டுச் சிந்தா மணிக்கதையை மெய் யென்று வரிசை கூற, உளமகிழ்ந்து பலபடப்பா ராட்டிக் கேட்க உயருல மணிவிளக்காஞ் சேக்கி ழார்கண், டிளஅரசன் தனைநோக்கிச் "சமணர் பொய்ந் நூல் இதுமதுமைக் காகாதிம் மைக்கு மற்றே, வளமருவு கின்றசிவ கதைஇம் மைக்கும் மறுமைக்கும் உறுதி" என வளவன் கேட்டு. உக

"அவகதையாய்ப் பயனற்ற கதையீ தாகில் அம்மையும்இம் மையும்உறுதி பயக்கத் தக்க, சிவகதைஎ ததுகற்ற திறமைப் போரார் சிவகெசிந் தாமணிபோல் இடையில் வந்த, நவகதையோ புராதனமோ முன்னு லுண்டோ நானிலத்துச் சொன்னவரார் கேட்ட பேரார், தவகதையோ தவம்பண்ணிப் பேறு பெற்ற தனிக்கதையோ அடைவுபடச் சாற்றும்" என்ருன். உஉ

செம்பியர்பூ பதிமகிழ்ந்து வினவிக் கேட்கச் சேக்கிழார் குரிசில்உரை செய்வார் "ஞாலத், தம்பலவர் திருத்தொண்டர் பெருமை ஆரூர் அடிகள்முதல்

*இதற்குச் சேக்கிழார் அருளிய பெரிய புராணத்தில் சான்றில்லை.

அடிஎடுத்துக் கொடுக்க நாவல், நம்பிபதி ஞெருதிருப்பாட் டாகச் செய்த நலமலிதொண் டத்தொகைக்கு நாரை யூரில், தும்பிமுகன் பொருளுரைக்க நம்பி யாண்டார் சுருதிமொழிக் கலித்துறைஅந் தாதி செய்தார். உங

"ஆயுமறை மொழிநம்பி யாண்டார் நம்பி அருள்செய்த கலித்துறைஅந் தாதி தன்னைச், சேயதிரு முறைகண்ட ராச ராச தேவர்சிவா லயதேவர் முதலா யுள்ள, ஏயகருங் கடல்புடைசூழ் உலக மெல்லாம் எடுத்தினிது பாராட்டிற்" றென்ன "அந்தத், தூயகதை அடைவுபடச் சொல்வீர்" என்று சோழன்உரை செயக்கேட்டுக் குன்றை வேந்தர். உச

தில்லைவாழ் அந்தணரே முதற்பண் பாடு திருநீல கண்டத்துப் பாணர் ஈறுச், சொல்லியதொண் டத்தொகைதூல் வகைஅந் தாதித் தொடர்ச்சியினை விரித்துரைக்க வளவன் கேட்டு, மெல்லியலாள் பங்கர்திரு வருளை நோக்கி *வியந்தடியார் தொண்டுசெய்து பேறு பெற்ற, செல்கதியை நினைந்துருகி வளவர் கோமான் சேவையர்கா வலமைமுக நோக்கிச் சொல்வான். உரு

"அவரவர்கள் நாடவர்கள் இருந்த ஊர்வந் தவரித்த திருமரபு திருப்பேர் செய்த, சிவசமயத் திருத்தொண்டு முற்பிற் பாடு சிவனடிக்கீழ் உயர்பரம முத்தி பெற்றோர், எவரும்அறி யச்சீவன் முத்த ராய்இங் கிருப்பவர்கள் இனிமேலும் பிறப்போர் மண்மேல், அவர்களைச்சேர்ந் தருள்பெற்றோர் பகைத்துப் பெற் றோர் அவர்கள்பகை யாய்நரகில் அடைந்த பேர்கள். உசு

இல்லறத்தில் இருந்துஞனி முத்தி பெற்றோர் இல்லறத்தில் சிற்றின்ப இயல்பை நீக்கி, நல்லறமாந் துறவறத்தில் நின்று பெற்றோர் நற்பிரம சாரி களாய் அருள்பெற் றுய்ந்தோர், செல்கதிசற் குருவருளால் சென்று சேர்ந்தோர் சிவபூசை செய்துபர முத்தி பெற்றோர், புல்லறிவு தவிர்ந்துதிரு வேட மேமெய்ப் பொருளெனக்கொண் டரனடிக்கீழ்ப் பொருந்தப் புக்கோர். உஎ

இப்படியே அடைவுபடப் பிரித்துக் கேட்டால் யாவருக்கு மேதரிக்கச் செவிநா நீட்ட, ஒப்பரிய பொருள்தெரிந்து விளங்கித் தோன்ற உவமை யுடைத் தாயகதை கற்க நிற்கத், தப்பில்பெருங் காவியமாய் விரித்துச் செய்து தருவீர்"என் றவர்க்குவிடை கொடுத்து வேண்டும், செப்பரிய திரவியமும் கொடுக்க வாங்கிச் சேக்கிழார் குரிசில்திருத் தில்லை சேர்ந்தார். உஅ

வேறு

தில்லை எல்லையில் வந்து வந்தெதிர் தெண்ட ணுகவி ழுந்தெழுந் தல்லி சேர்கம லத்த டத்தினில் மூழ்கி அம்பல வாணர்முன் ஒல்லை சென்றுப ணிந்து கைத்தலம் உச்சி வைத்துளம் உருகிமெய் தெல்லை காணரி தாய பேரொளி இன்ப வாரியில் மூழ்கியே. உக

அடைய லார்புரம் நீறெ ழத்திரு நகைசெய் தன்னெரு மூவரைப் படியின் மேல்அடி மைக்கொ ளும்பத பங்க யங்கள் பணிந்துகின் "றடிக ளேஉன தடியர் சீர்அடி யேன்உ னைத்திட அடிஎடுத் திடர்கெ டத்தரு வாய்"எ னத்திரு வருளை எண்ணிஇ றைஞ்சினார். ஈ0

அலைபு னற்பகி ரதிந திச்சடை யாட வாடர வாடகின் றிலகு மன்றினில் ஆடு வார்திரு வருளி னல்அச ரீரிவாக்

பா - மீ—*வியந்தடிமைத்.

'குலகெ லாம்'என அடிஎ டுத்துரை செய்த பேரொலி யோசைமிக்.
கிலகு சீரடி யார்செ விப்புலத் தெங்கு மாகிகி றைத்ததால். நக

தில்லை மாநகர் வாழ வாழ்த்தவ சிந்தை அந்தணர் ஆறைஞ்ஞூ
றல்ல தும்பல மடப தித்தவ ராச ரிக்கையி லுள்ளபேர்
எல்லை யில்லவர் பாவ ருங்களி கொளவி ளங்கச ரீரிவாக்
கொல்லை வன்தெழ அனைவ ருங்கரம் உச்சி வைத்துளம் உருகினார். நஉ

உள்ள லார்புரம் நீறெ ழக்கணை ஒன்று தொட்டுயர் மன்றில்வாழ்
வள்ள லார்திரு மாலை யுந்திரு நீறு மெய்ப்பரி வட்டமும்
எள்ள லாரல ரென்று சேவையர் காவ லர்க்கிவை இனிதளித்
தள்ள லார்வயல் நீடு தில்லையில் அனைவ ருங்களி கொண்டபின். நங

சேவை காவலர் தொண்டர் சீர்உரை செய்வ தற்குயர் செய்யுள்முன்
மூவ ரோதிய திருந கரித்தமிழ் ஆத லால்வரன் முறைமையால்
யாவ ரும்புகழ் திருந கரித்தலை வரைவ ணங்கிஇ ணங்கிமெய்த்
தாவ ருஞ்சிவ சாத னங்கள் தரித்து நீறு பரித்தரோ. நச

வந்து சூழ நிரைத்த ஐஇரு நூறு கால்மணி மண்டபத்
தென்தை யார்திரு வருளை யுன்னி இருந்து சேவையர் காவலர்
செந்த மிழ்த்தொடை யால்வி ளங்கிய திருவி ருத்தனி ருத்தனர்
தந்த சொன்முத லாள டுத்தனர் தாணு வானபு ராணநூல். நடு

வேறு

திருமறையோர் புராணமவை பதின்மூன்று சிவவே தியர்அரனை வழிபட்ட புராணமோ ரிரண்டு, குரைகழல்மா மாத்திரரொன் றறுவர்முடி மன்னர் குறுகில மன் னவர்ஐவர் வணிகர்குலத் தைவர், இருமைதெறி வேளாளர் பதின்மூவர் இடையர் இருவர்சா லியர்குயவர் தயிலவினை யாளர், பரதவர்சான் றூர்வண் ணூர் சிலைமறவர் நீசர் பாணரிவர் ஒரொருவ ராம்பகருங் காலே. நசு

அறுதிபெறத் திருமரபு குறித்துரையாப் புராணம் அவைகள்ஒரு பதின் மூன்று திருக்கூட்டத் தன்னில், மறுவிலவர் பதியறிந்த கதைஇரண்டு வந்த மரபறிந்த கதைஇரண்டு பேரறிந்த கதையொன், றுறுமரபு தெரியாப்பு ராணமவை யோரேழ் ஊரறியாக் கதைஎழு பேரறியாக் கதைஎட், டிறுதியிலக் கங்கண்ட திருக்கூட்ட மொன்றெண் ணித்தனைஎன் றறியாத திருக்கூட்டம் எட்டே. நஎ

தில்லைமறை யோர்கலயர் முருகர்பசு பதியார் சிறப்புலியார் கணநாதர் பூசலைசண் டேசர், கல்விகிறை சோமாசி மாறர்நமி நந்தி கவுணியனர் அப்பூதி நீலநக்க ராகச், செல்வமறை யோர்காதை பதின்மூன்று சிவவே தியர்காதை இரண்டுபுகழ்த் தூணையார்முப் போதும், வல்லபடி சிவனேஅருச் சிப்பார்கள் மாமாத் திரர்மரபில் சிறுத்தொண்டர் ஒருவர்முடி மன்னர். நஅ

அறுவரெவ ரவர்செங்கட் சோழர்புகழ்ச் சோழர் அருள்மானி இடங்கழி யார் நெடுமாறர் சேரர், குறுநிலமன் னவர்ஐவர் நரசிங்க முனையர் கூற்றுவனர் கழற்சிங்கர் மெய்ப்பொருள்ஐ யடிகள், முறைமைவணி கரில்ஐவர் காரைக்கா லம்மை மூர்த்திகலிக் கம்பர்அமர் நீதிஇயற் பகையார், *திறமைவிரி வேளா ளர் பதின்மூவர் மூர்க்கர் செருத்தூணையார் வாயிலார் கோட்புலியார் சத்தி. நக

பா - மீ—*திறமைபுரி.

தாயனார் இளையான்றன் குடிமாறர் அரசு சாக்கியர்கஞ் சாறர்விறன் மிண்டர்மூனை யடுவார், எயர்கோன் கலிக்காமர் கோபாலர் மரபில் இருவர்திரு மூலனார் ஆனாயர் குயவர், சேயபுகழ்த் திருநீல கண்டனார் பாணர் திருமரபில் திருநீல கண்டத்துப் பாணர், மேயதிறல் அதிபத்தர் பரதவர்கண் ணப்பர் வேடர்மர பினில்*சான்றூர் எனுதி நாதர். சஂ

நேசனார் சாலியரில் திருநாளைப் போவார் நீசர்மர பினில்எங்கள் திருக் குறிப்புத் தொண்டர், தூசொலிக்கும் ஏகாலி மரபுதில தயிலத் தொழில் மரபில் கலியனார் மரபு†குறித் தூரையாக், காசில்கதை பதின்மூன்று குலச்சிறை யார் தண்டி கணம்புல்லர் எறிபத்தர் காரியார் குறும்பர், தேசுடைய பத்தர்பர மனைப்பாடு வார்கள் சித்தத்தைச் சிவன்பால்வைத் தார்ஆரூர்ப் பிறந்தார். சக

நேப்பரிய பொய்யடிமை இல்லாதார் மெய்யில் திருநீறு பூசுமுனி வாரு லகு தன்னில்,அப்பாலும் அடிச்சார்ந்தார் இவர்கள்தமிற் சிலபேர் ஆய்ந்ததமிழ்ப் பேர்சிலபேர் மலையாளர் சிலபேர், தப்பாத தெலுங்கர்சிலர் மற்றுளதே சத் தோர் தவஞ்செய்து பரகதியை அடைந்தவர்கள் சிலபேர், இப்போதும் இருந் தாரனை வழிபடுவோர் சிலபேர் இனிமேலுக் திருமேனி கொடுவருவோர் சிலரே.

திருஞான சம்பந்தர் திருநாவுக் கரையர் திருமூலர், நெடுமாறர் மங்கை யருக் கரசி, கரைசேருங் குலச்சிறையார் யாழ்ப்பாணர் குறும்பர் கணநாதர் அப்பூதி சோமாசி மாறர், உரைசேரும் இவர்கள்பதி னெருவர்குரு வருளால் உயர்முத்தி யடைந்தவர்கள் எறிபத்தர் கலயர், முருகனார் கண்ணப்பர் ஆனாயர் தாயர் மூர்த்தியார் சண்டேசர் திருநாளைப் போவார். சஙூ

நேசனார் சாக்கியனார் கூற்றுவனார் தண்டி சிறப்புலியார் பசுபதியார் கலிக்காமர் கலியர், காரியார் அதிபத்தர் நீலநக்கர் பூசல் கணம்புல்லர் கோட் புலியார் நமிநந்தி யடிகள், சீருடைய கழற்சிங்கர் வாயிலார் தூய செருத்துணை யார் புகழ்த்துணையார் காடவர்ஐ யடிகள், மூரிநெடு வேற்செங்கட் சோழனு ராக முப்புதேர் சிவலிங்கத் தால்முத்தி யடைந்தோர். சஜ

திருநீல கண்டனார் இயற்பகையார் மூர்க்கர் சிறுத்தொண்டர் திருக்குறிப் புத் தொண்டர்விறன் மிண்டர்,அருள்சேரும் இடங்கழியார் மூனையடுவார் சத்தி அமர்நீதி மெய்ப்பொருளார் எனுதி நாதர், கரைசேரும் புகழ்ச்சோழர் கஞ் சாறர் மாறர் காரைக்கா லம்மைசர சிங்கர்கலிக் கம்பர், வருநேச ராகஒரு பத் தொன்ப தடியார் மணிவேடத் தாரைவழி பட்டரனை யடைந்தோர். சஙு

நவுணியர்நா வுக்கரசர் பேயார்இம் மூவர் கற்கும்இயல் இசைவல்லோர் இசைத்தமிழ்நூல் வல்லோர், பவமணுகாத் திருநாளைப் போவார்ஆ னாயர் பாணர்பர மனைப்பாடு வாராக நால்வர், புவனிபுகழ் ஐயடிகள் திருமூலர் காரி பொய்யடிமை இல்லாத தமிழ்ப்புலவர் சேரர், நவமுடைய இவரைவர் இயல் வல்லோர் நின்ற நாயன்மார் தவம்புரிந்து நற்கதியை அடைந்தோர். சஜ

இல்லறத்தில் நின்றவர்கள் திருநீல கண்டர் இயற்பகையார் உள்ளிட்டார் மூர்த்தியார் அப்பர், நல்லபுற வறம்பிரம சாரிகள்சண் டேசர் நானிலத்தில் அரனடியார் தங்களுடன் சேர்ந்து, செல்கதிபெற் றவர்ஞான சம்பந்த ருடனே திருமணத்தில் ஒருமணமாய்ச் சேர்ந்தவர்கள் அநேகர், பல்வளஞ்சேர் ஆரூ ருடன்சேரர் கையில் பரிஉகைக்க உடன்சென்ற பரிசனமெண் ணிறந்தோர்.சஎ

பா - ம்—*சான்ரூர். †குறித்தறியாக்.

சீவனடியா ருடன்பகையாய் முத்தியடைந் தவர்கள் செய்ஞ்ஞலூர்ச் சண் டேசர் பிதாஎச்ச தத்தன், கவர்புகழ்சேர் கோட்புலியார் உரைத்ததிரு விரை யாக் கலிபிழைத்த கிளை*பகைத்து நரகினைச்சென் றடைந்தோர், †தவரான மூர்த்தியார் இறைவனுக்குச் சாத்துஞ் சந்தனக்காப் பினைவிலக்கி அமண்சம யச் சார்வாய்ப், புவிபுரந்த கருநடமன் னவன்முதல னேகர் புராணகதை யினைப் பிரித்துப் புகலஎளி தலவே. சஅ

ஆரூரர் திருத்தொண்டத் தொகையுரைத்த நாளில் அடித்தொண்டு செய் தொண்டர் சிலர்அவர்க்கு முன்னே, பேரூர்மெய்த் தொண்டுசெய்த பேர்சில பேர் அவர்க்குப் பிறகுதிருத் தொண்டுசெயும் பேர்சிலபே ராகச், சீரூருந் திருத் தொண்டர் புராணத்திற் சேர்த்துச் சேவையர்கோன் சேர்வைசெயுந் தொண் டாஎ விறந்தோர், காரூரும் மணிகண்டர்க் கவரவர்கள் செய்த கைத்தொண்டின் நீலகரைகண் டுரைக்கஎளி தலவே. சகூ

ஓருலகோ ஒருதிசையோ ஒருபதியோ தம்மில் ஒருமரபோ ஒரு பெயரோ ஒருகாலந் தானே, பேருலகில் ஒருமைநெறி தருங்கதையோ பன்மைப் பெருங்கதையோ பேர்ஒன்றே அல்லவே இதனை, எ"ருலகெ லாம்உணர்ந் தோ தற்கரிய வன்"என் றிறைவன்முதல் அடியெடுத்துக் கொடுத்தருளக் கொண்டு, பாருலகில் நாமகள்நின் றெடுத்துக்கை நீட்டப் பாடிமுடித் தனர் தொண்டர் சீர்பரவ வல்லார். நிo

கருங்கடலைக் கைநீத்துக் கொளஎளிது முந்நீர்க் கடற்கரையின் ‡மொய் மணலை எண்ணிஅள விடலாம், பெருங்கடல்மேல் வருந்திரையை ஒன்றிரண் டென் றெண்ணிப் பிரித்தெழுதிக் கடைஇலக்கம் பிரித்துவிட லாகும், தருங் கடலின் மீனைஅள விடலாகும் வானத் தாரகையை அளவிடலாம் சங்கரன்தாள் தமது, சிரங்கொள்திருத் தொண்டர்புரா ணத்தைஅள விடஞ் சேக்கிழார்க் கெளிதலது தேவர்க்கும் அரிதே. நிக

அறுபதுபேர் தனித்திருப்பேர் திருக்கூட்டம் ஒன்ப தாகஅறு பத் தொன்ப தானடியார் கதையை, மறுவில்திரு நாவலூர்ச் சிவமறையோர் குலத்து வருசடைய னுர்மனைவி இசைஞானி வயிற்றில், உறுதிபெற அவதரித்த ஆரூரர் முன்னுள் உரைசெய்த திருத்தொண்டத் தொகைப்பதிகத் தடைவே, நறைமலியும் பொழில்புடைசூழ் திருநாரை யூரில் நம்பியாண் டார்திருவந் தாதிகடைப் பிடித்து. நிஉ

காண்டம்இரண் டாவகுத்துக் கதைப்பரப்பைத் தொகுத்துக் கருதரிய சருக்கங்கள் பதின்மூன்று நிலையிட், டீண்டுரைத்த புராணத்தில் **திருவிருத்தம் நாலா யிரத்தினுநூற் றைம்பத்து மூன்றுக** அமைத்துச், சேண்டகைய திருத் தொண்டர் புராணமெனப் புராணத் திருமுறைக்குத் திருநாமஞ் சீர்மைபெற அமைத்திட், டாண்டகைமை பெறஎழுதி மைக்காப்புச் சாத்தி அழகுபெறக் கவளிகையும் அமைத்தில்வைத் ததன்பின். நிங

வேறு

"சேவை காவலர் புராண காதைதொகை செயநி னைந்தமை அகன்றபின் யாவர் தாம்அரு கிருந்த பேர்கள்கதை சென்ற தெவ்வளவி ருந்ததெங் காவ தென்னினைவைகள் அறிய வேண்டுமெ தறிந்து வாரும்"என வளவர்கோன் ஏவி னனுரிய தூதர் தூதரறி யாம லொற்றரையு மேவினன். நிச

பா - ம்—*பிழைத்து. †தவராசர். ‡மண்.

வென்றி. வேல்வளவன் அளவ றிந்துவர விட்ட காளையர் "பு ராணநூல்
ஒன்று பாதிகதை சென்ற" தென்றுசிலர் ஓடி ஞர்சிலர்உ வந்துசென்
"றின்று காளைமுடி யும்பு ராணம்இனி" என்று தைத்திடஇ றைஞ்சிஞன்
சென்று "நற்கதை முடிந்த" தென்றுசிலர் செம்பியற் குறுதி செப்பினர். நிடு

வந்து சொன்னவர்கள் அனைவ ருக்குரவ மணிக ளுந்துகிலு மம்பொனும்
சிந்தி அள்ளியும் உவந்து வீசிஉயர் செம்பொன் அம்பல மருங்கில்வாழ்
அந்தி வண்ணர்நட மும்பணிந் தமுதல் அடிஎ டுத்தவர் கொடுத்திடப்
புந்தி செய்தமகிழ் சேவை காவலர் "புராண முற்றொழு வன்றான்" எனு. நிசு

வீதி வீதிகள்தொ றுந்தொறும் பயணம் என்று வென்றிமணி முரசறைந்
தோதி வேதியர்கள் எண்ணி இட்டஉயர் நாளும் ஓரையும் முகூர்த்தமும்
போத நாடிவரை புரைகடக் களிறு புரவி தேர்கருவி யாள்தரச்
சாது ரங்கமுட னேசெலப் பிளிறு தந்தி மேல்கொடு நடந்தனன். நிஎ

தேர்மு ழக்கொலி மழைக்க டக்கரட சிந்துரக் களிறு பிளிறுசீர்
ஆர்மு ழக்கொலி பரிச்செ ருக்கொலி பதாதி வந்தெதிர் அடர்ந்தெழும்
போர்மு ழக்கொலி சழக்கி லாதுயர் படைக்க லன்புணரும் ஓசைஏழ்
கார்மு ழக்கொலியின் எட்டி ரட்டிநிறை கடல்மு ழக்கென முழக்கெழ. நிஅ

வளவர் கோன்வர வறிந்து தில்லைமறை யோரும்வண் மைமட பதிகளும்
பிளவு கொண்டமதி நுதல்ம டந்தையரும் மற்று முள்ளபெரி யோர்களும்
களவி லாதமொழி கொடுபு ராணகதை செய்த கங்கைகுல திலகரும்
தளவ மாலைஅப யனைஎதிர்ந் தினிய சார லுபில சாற்றினர். நிக

முண்ட மானதிரு முடியும் இட்டதிரு முண்ட முங்கவச முந்துணைக்
குண்ட லங்களும் இரண்டு காதினும் வடித்த லொற்றகுழை யுற்றிருக்
கண்ட மாலைகா மாலை யுஞ்சிரசு மாலை யுங்கவின் விளங்கவே
தொண்டர் சீர்பரவு வான்அ ணைந்தசுப சரிதை சோழனெதிர் கண்டனன். சுo

கண்ட போதுள மகிழ்ந்து தன்னைஅறி யாது கைகள்தலை மீதுறக்
'கொண்ட வேடம்அர னடியர் வேடம்இது குறைவி லாததவ வேடம்'என்
றண்ட வாணர்திரு வருளை யுன்னிஅவர் அடிமை கொண்டபெரு மையைநினைந்
தெண்ட யங்கரசர் ஏறு சேவையர் குலாதி பாதுகை இறைஞ்சினன். சுக

இறைஞ்சி அம்பலவர் பாத தாமரை இறைஞ்ச எண்ணிவரன் முறைமையால்
அறஞ்சி றந்தமுனி சேவை காவலரும் ஆறைஞ் ஞூறுமறை யோர்களும்
துறஞ்சி றந்தமட பதிகளுந் தொடர வந்து மன்னன்அரி பிரமர்பால்
மறைஞ்சு நின்றபொருள் வெளிப்படக் கனக மன்றில் நின்றபடி கண்டனன்.

கண்ட கண்ணருவி தாரை கொள்ளஇரு கைகள் அஞ்சலி கொளக்கசிந்
தெண்ட ரும்புளக ரோம கூபம்எழ இன்ப வாரிகரை புரளவாய்
விண்ட தூமொழிகள் குழற அன்பிலெடு விம்மி விம்மிஅருள் மேலிடத்
தெண்ட ஞகமுன் வீழ்ந்தெ ழுந்துநனி செம்பி யன்பரவ எம்பிரான். சுஎ

"சேக்கி ழான்நமது தொண்டர் சீர்பரவ நாம்மகிழ்ந் 'துலகம்' என்றுநம்
வாக்கி ஞல்அடி எடுத்து தைத்திட வரைந்து நூல்செய்து முடித்தனன்
காக்கும் வேல்வளவ நீஇதைக் கடிது கேள்" எனக் கனக *வெளியிலே
ஊக்க மானதிரு வாக்கெ ழுந்தது திருச்சி லம்பொலியும் உடனெழ. சுச

பா - மீ—*சபையிலே.

மன்று ளாடிதிரு வாய்ம லர்ந்தமொழி யுஞ்சிலம் பொலியும் மன்றிலே
நின்ற மானிடர்செ விப்பு லன்புக நிறைந்த தன்றியும் நிலத்தின்மேல்
ஒன்றி நின்றுயர் சராசரங் கள்அடை யக்க ருத்திருகி ஓலிடக்
குன்றி லங்குதிரள் தோள்நரேந் திரபதி *குதுகு லித்துளம் மகிழ்த்தனன். சுடு

'தொண்டர் தொண்டுசெய் புராண காதைமதி சூடு நாதர்திரு வருளினால்
விண்ட நீதிபுனை சேக்கி ழார்முனி விரித்து ரைத்தகதை கேட்பதற்
கண்ட வாணர்அடி யாரெலாங் கடுக வருக" என்றுதிசை திசைதொறும்
எண்ட யங்கரசன் எடெடுத் தெழுதி ஆளும் ஓலைகளும் எவினன். சுசு

வேறு

கவச மணிந்த சனங்களு மிங்கித மூங்கம்பித்
தவச முறுஞ்சிவ சிந்தையும் அன்பக லாமேன்மைத்
தவச ரிதத்தொழி லுஞ்சிவ சாதன முஞ்சாரச்
சிவச மயத்தவர் யாவரும் வந்து திரண்டார்கள். சுஎ

வேதியர் வேத முழக்கொலி வேதத் தைத்தமிழால்
ஓதிய மூவர் திருப்பதி கத்தொலி ஓவாமல்
பூதி அணிந்'தர கர'என அன்பர் புகழ்ந்தோதும்
காதியல் பேரொலி காரொலி போலொலி கைத்தேற. சுஅ

பூசிப் பவர்சிலர் பூசித் தன்பொடு புனிதன்தாள்
நேசிப் பவர்சிலர் "பிறவா வரம்அருள் நிமலா"என்
றியாசிப் பவர்சிலர் திருமுறை எழுதிக் களிகூர
வாசிப் பவர்சில ராக இருந்து மகிழ்ந்தார்கள். சுக

தேள்ளு திரைக்கடல் மீது மிதந்த திருத்தோணி
வள்ளலே அன்புசெய் அன்பர் மடங்கள் தொறும்பாலர்
மெள்ள இருந்து மிழற்று புராண விருத்தத்தைக்
கிள்ளைகள் பாடி உரைப்பன கேட்பன மெய்ப்பூவை. எ0

மற்றது கண்டு களித்த நலத்த மனத்தோடு
சுற்றிய மந்திரி மாரொடு தந்திரி மார்சூழத்
தெற்றென வந்து திரண்டு முரண்தரு சீர்நாடு
பெற்றது செல்வ மெனத்தனி யோகை பெருத்தார்கள். எக

பாடினர் தும்புரு நாரதர் வீடிசை பாடாகின்
ரூடினர் வானில் அரம்பையர் அஞ்சலி எஞ்சாமல்
சூடினர் மண்ணின் மடந்தையர் எந்தை அணைப்பாதம்
தேடினர் மாலயன் அன்பர் நடந்தரி சித்தார்கள். எஉ

சங்கொடு பேரி கறங்கிசை வீணை தனித்தாளம்
வங்கிய காள மிடக்கை கடக்கை மணிக்காளம்
பொங்கிய பம்பை வலம்புரி கண்டை முதற்பொற்பார்
மங்கல தூரியம் எங்கும் முழங்கி வனப்பெய்த. எங

வேதியர் வேள்வி நெடும்புகை ஆலயம் எங்கெங்கும்
காதிய குங்குலி யப்புகை நீடு கருப்பாலைச்

பா - ம்—*குதகுதச்.

சோதி மெடும்புகை தோரண வீதி தொறுந்தோறும்
மாதர் புகைக்கும் அகிற்புகை எங்கும் வனப்பெய்த. எச

ஆடக நாடக சாலைகள் முத்தணி அத்தாணி
மேடை அரங்குக ளங்க மிலாத வெளிக்கூடம்
மாட மதிட்கன மாளிகை சூளிகை எங்கெங்கும்
தோடவிழ் மாலைகள் பொன்னரி மாலைகள் சூழ்வித்தார். எடு

பழுதக லத்திரு வலகு விருப்பொடு பணிமாறிக்
குழைவு பெறத்திகழ் கோமய நீர்குளி ரச்செய்து
தழைபொதி தோரண மூங்கொடி யுந்துகி லுஞ்சார்வித்
தழகு பெறத்திரு வீதி புதுக்கி யதன்பின்பு. எசு

வேறு

தீருமெ நித்தமிழ் வல்ல பேர்கள் சிவாக மங்கள் படித்தபேர்
கருமெ நிப்பகை ஞான நூல்பல கற்ற பேர்மறை கற்றபேர்
குருமெ நிக்குரி யோரி லக்கண லக்கி யங்கள்கு நித்தபேர்
பெருமெ நிப்பல காவி யங்கதை பேச வல்லவ ரீனவரும். எள

வேறு

வள்ளலார் திருநடஞ்செய் மன்றின் மூன்றில் மறையவர்கோ மயசலத்தால் மெழுகித் தாபித், தெள்ளரும்வெண் சுதையொழுக்கி அறுகாற் பீடம் இட்டதன்மேல் பசும்பட்டு விரித்து மீதே, வெள்ளைமடித் திட்டுமது மலருந் தூவி விரைநறுந்தூ பங்கொடுத்தா தனங்கற் பித்துத், தெள்ளுதமிழ்ச் சேக்கிழார் புராணஞ் செய்த திருமுறையை அதன்மேல்வைத் திறைஞ்சிப் போற்றி.

"வாழிதிருத் தொண்டர்புரா ணத்தை நீரே வாசித்துப் பொருள்அருளிச் செய்வீர்" என்று, சோழர்பெரு மான்முதலாம் அடிய ரெல்லாஞ் சொலக்கேட்டுக் குன்றைமூனி மன்று ளாடும், தாழ்சடையான் அடிஎடுத்துத் தரத்தாஞ் செய்த சைவகதை யினைவிளங்க விரித்துச் சொல்லச், சூழிருந் தம்பலவர் அடியா ரெல்லாம் "சுருதிமொழி இது"எனக்கை தொழுது கேட்டார். எக

வேறு

"தாளுடைய திருச்சிலம்பு புலம்பரடம் புரியுந் தன்மைஅர னுக்கிசைத்த பேர்வழியி னுளும், ஆளுடைய பிள்ளையார் அவதரித்த நாளும் அவரழுது திருஞானம் அமுதுசெய்த நாளும், சூளுடைஆ திரைநாளாம் சித்திரைஆ திரைநாள் தொடங்கினதி ராம்ஆண்டு சித்திரைஆ திரையின், நாளுடைய கதைமுடிப்பம்" எனக்குன்றை வேந்தர் நடத்தஅனை வருமிருந்து கேட்டனர்நாள் தோறும்.

சிறப்புடைய மூவர்முத லிகள்திருவாய் மலர்ந்த திருநெறிய தமிழ்மூலர் திருமந்திர மாலை, அறப்பயனுங் காரைக்கால் பேயிரட்டை மாலை அந்தாதி மூத்தபதி கங்கழறிற் றறிவார், மறப்பரிய பொன்வண்ணத் தந்தாதி திருமும் மணிக்கோவை தெய்வஉலா ஐயடிகள் வெண்பா, உறுப்பாகத் திருவிருத்தம் உடலாகப் பொருட்கோள் உயிராக நாலடியால் நடந்தஅல கெல்லாம். அக

அன்றுமுதல் நாள்தோறும் நாள்தோறும் அண்ணல் அடியர்அள விறந்த பெயர் வந்தவர்க ளெல்லாம், சென்றுறையத் திருமடங்கள் திருமடங்கள் தோறும் திருவிளக்கங் கவர்சாத்த உள்ளுடைமேற் போர்வை, துன்றியசெச் செலின்அடிசில் கன்னல்நறுங் கனிகள் தூயஅறு சுவைக்கறிநெய் தயிர்திரண்ட

பால்தேன், நன்றுதிருப் பண்ணியந்தண் ணீர்அமுதம் அடைக்காய் சாபதிஎ
வலின்அமைச்சர் காள்தோறும் நடத்த. அஉ

நலமலியுந் திருத்தில்லை மன்றினில்நின் றாடும் நடராசற் கன்றுமுதல் மக
பூசை நடத்தி, அலகில்புகழ்த் தில்லைவாழ் அந்தணர்க்கும் வெவ்வே றமுதுபடி
கறியமுது முதலானீ எல்லாம், நலமலிசெங் கோல்வளவன் தப்பாமே நாளும்
நடத்திவர அரனடியார் நிறைத்துபதஞ் சலியும், புலிமுனியும் தவஞ்செய்த
பெரும்பற்றப் புலியூர் பூலோக சிவலோக மெனப்பொலிந்து தோன்ற. அங

மருவுதிரு முறைசேர்ப்பார் எழுதுவார் இருந்து வாசிப்பார் பொருளு
ரைப்பார் கேட்டிருப்பார் மகிழ்ந்து, சிரமசைத்துக் கொண்டாடிக் குதுகுலிப்
பார் சிரிப்பார் தேனிப்பார் குன்றைமுனி சேக்கிழார் செய்த, அரியதவத்
தினைநினைப்பார் 'அம்பலவர் முன்னுள் அடிஎடுத்துக் கொடுக்கஇவர் பாடினர்'
என் றுரைப்பார், 'பெரியபுரா ணங்கேட்ட வளவர்பிரான் செவிக்குப் பிடிக்
குமோ இனிச்சிந்தா மணிப்புரட்'டென் றுரைப்பார். அச

இத்தகைய சிறப்புடனே திருத்தொண்டர் புராணம் இருந்தன்பர் பாரா
ட்ட நடந்தெதிராம் ஆண்டு, சித்திரைஆ திரைநாளின் முடியஅது கண்டு
திருத்தொண்டர் 'அர'எனும்பே ரொலிஎழுந்து பொங்கக், கத்துதிரைக்
கடலொலியை விழுங்கிமுழங் கோரேழ் கடலொலியைக் கீழ்ப்படுத்திப் பிர
மாண்ட வெளியைப், பொத்திஇமை யவர்செவியை நிறைத்துயரப் பொங்கிப்
பொன்னுலகுக் கப்பாலும் புகழ்பொலிந்த தன்றே. அடி

திருத்தொண்டர் புராணம்எழு நியமுறையை மறையோர் சிவமூல
மந்திரத்தால் அருச்சனைசெய் திறைஞ்சி, இருக்குமுதல் மறைநான்கில் இன்று
முத லாக இதுவும்ஒரு தமிழ்வேதம் ஐந்தாவ தென்று, கருத்திருத்தி அமுத
டைக்காய் நறுந்தூப நீபம் கவரிகுடை கண்ணுடி ஆலத்தி நீறு, பரித்தளவு
செயக்கண்டு வளவர்பிரான் முறையைப் பசும்பட்டி ஞற்சூழ்ந்து பொற்க
லத்தில் இருத்தி. அசு

கெறிமதயா னைச்சிரத்தில் பொற்கலத்தோ டெடுத்துத் திருமுறையை
இருத்தியபின் சேவையர்கா வலரை, முறைமைபெற எற்றிஅர சனுங்கூட ஏறி
முறைமையினுல் இணைக்கவரி தூணைக்கரத்தால் வீச, மறைமுழங்க விண்ணவர்
கள் கற்பகப்பூ மாரி மழைபொழியத் திருவீதி வலமாக வரும்போ, திறைவர்திரு
வருளைநினைந் தடலரசர் கோமான் ''இதுவன்றே நான்செய்த தவப்பயன்''
என் றிசைத்தான். அள

வாரணத்தில் இவரைவரக் கண்டதிரு வீதி மறுகுதொறுந் தூய்மைசெய்து
வாழைகளும் நாட்டிப், பூரணகும் பமும்அமைத்துப் பொரியும்மிகத் தூவிப்
பொன்னரிமா லையும்நறும்பூ மாலைகளுந் தூக்கித், தோரணங்கள் நிரைத்து
விரை நறுந்தூபம் எந்திச் சுடர்விளக்கும் எற்றிஅணி மணிவிளக்கும் ஏந்தி,
ஆரணங்கள் விரித்தோதி மாமறையோ ரெதிர்கொண் டாறுகெடுப்ப வாழ்த்
தெடுத்தார் அரம்பையர்க ளெல்லாம். அஅ

வேறு

''காவல னரிவர் தவரிவர் காவலர் கவரி இடத்தகு மோ''என்பார்
''சேவையர் காவல னர்சிவ மான சிறப்பிது நல்ல சிறப்''பென்பார்
''தேவரு மெழுதவொ ணுமறை யைத்தமிழ் செய்து திருப்பதி கம்பாடும்
மூவரும் ஒருமுத லாயுல கத்து முளேத்த முதற்பொருள் தான்''என்பார். அக

மின்மழை பெய்தது மேக ஒழுங்குகள் விண்ணவர் கற்பக விரைசேர்பூ
நன்மழை பெய்தனர் சேவையர் காவலர் நாவல நின்புற நாவாரச்
சொன்மழை பெய்தன ரிரவலர் மிடிகெட அள்ளி முகந்தெதிர் சோழேசன்
பொன்மழைபெய்தனன்உருகிய நெஞ்சொடு கண்மழைஅன்பர் பொழிந்தார்கள்.

"மதுரஇ ராமா யணகதை உரைசெய்த வான்மிக பகவனும் ஒப்பல்ல
விதிவழி பாரதம் உரைசெய்து கரைசெய்த வேதவி யாதனும் ஒப்பல்ல
சிதைவற ஆயிர நாவுடன் அறிவுள சேட விசேடனும் ஒப்பல்ல
பொதிய மலைக்குறு முனிவனும் ஒப்பல புகழ்புனை குன்றை முனிக்"கென்பார்.

மெய்யுள சிவசா தனமும் வெளிப்பட வெண்ணீ றெழுதிய கண்ணேறும்
கையுந் திகழ்மணி கண்டமும் *ஒளிதரு கவளிகை யும்புத் தகவடிம்
நையுந் திருவுள மழியுந் தொறு"மர கர"வெனு நாமமும் "நாமெல்லாம்
உய்யும் படியருள் கருணையும் அழகி"தெ னத்தொழு தனருல கவரெல்லாம்.கூ

பூவை மறந்தனள் வெண்டா மரையில் புகல்தரு சங்கப் புலவோர்சொல்
பாவை மறந்தனள் தேச சுபாடித பயனை மறந்தனள் பதுமத்தோன்
நாவை மறந்தனள் பொதிய மலைத்தலை நண்ணிய புண்ணிய முனிவனெனும்
கோவை மறந்தனள் சேவையர் காவல னுர்திரு நாவிற் குடிகொண்டாள். கூ

இப்படி இப்படி தன்னில் விதிப்படி இம்பரும் உம்பரும் ஏனோரும்
அப்படி சூழ அரத்திரு வீதிவ லஞ்செய் தணைந்தம் பலமுன்றில்
தப்பற யானையி னின்றும் இழிந்தர சனும்உரை செறிசே வையர்கோவும்
முப்புரி நூல்மறை யோரொ டணைந்தெழு தியமுறை யைத்திரு முன்வைத்தார்.

வேறு

அண்ட வாணரெதிர் தெண்ட னுகஅனை வரும்வி ழுந்துபின் எழுந்துசீர்
கொண்ட சேவைகுல திலக ருக்கனைவ ருங்கு றித்தெதிர் கொடுத்தபேர்
தொண்டர் சீர்பரவு வாரெ னப்பெயர் சுமத்தி ஞானமுடி சூட்டிமுன்
மண்ட பத்தினி லிருத்தி மற்றவரை வளவர் பூபதி வணங்கினான். கூடு

பூவ ரோதுதிரு முறைக ளேழுதிரு வாத வூரர்முறை ஒன்றிசைப்
பாவ ரைந்தமுறை ஒன்று மூலர்முறை ஒன்று பாசுரம தாதியாக்
கோவை செய்தமுறை ஒன்று சேவையர் குலாதி நீதிமுறை ஒன்றுடன்
பாவை பாகர்திரு வருள்சி றந்தமுறை பன்னி ரண்டென வகுத்தபின். கூசு

"தோடு செய்ததிரு நெறிய செந்தமிழொ டொக்கும்" என்றுரை தொடர்ந்து
பேடு செய்துநட ராசர் சந்நிதியில் ஏற்றி னுர்களிது பாலிசூழ் [செப்
நாடு செய்ததவ நீடு குன்றைவள நகரி செய்ததவ நிகரிலாப்
பீடு செய்தபகி ரதிகு லத்திலகர் சேக்கி ழார்செய்த பெருந்தவம். கூஎ

ஆய வேலைஅன பாயன் இந்நிலைமை யாதலால்"அனுசர் பாலரூ
வாயர் எங்குளர்" எனப்ப னிந்திரு மருங்கு நின்றவர் விளம்புவார்
"தூய குன்றைநகர் மீது தம்பெயர் துலங்க ஓர்குளம் அமைத்தபின்
ஏய நாகைஅர னுர்தி ருப்பணி இயற்றி அவ்விடை இருந்தனர்". கூஅ

என்று சொல்லஅவர் தமைஅழைத் தரசன் "இவரமைச் சரிவர் பட்டமும்
'மன்றல் மாலைபுனை தொண்டை மான்' "என வகுத்தபின் தமது மண்டலம்

பா - மீ—*ஒளிவரு.

அன்று வற்பம்வர வந்த டைந்தவரை ஆற்றல் செய்து''தொண் டைமண்டல
நின்று காத்தபெரு மான்''எனத் தமது பெயரை எங்கணும் நிறுத்தினார். கூகூ

தொண்டர் சீர்பரவு சேக்கி ழார்குரிசில் தூய தில்லைநகர் தன்னிலே
பண்டு மூவர்பதி கத்து வந்தஅறு பத்து மூவர்கதை தானெயுணர்ந்
தண்ட வாணர்அடி யார்கள் தம்முடன் அருந்த வந்தனில் இருந்துபின்
இண்டை வைத்தசடை அம்பலத்தவர் எடுத்த பாதநிழல் எய்தினார். கஂஂ

வாழி தில்லைமணி மன்று ளென்றும்நட மாடும் அங்கணர் மலர்ப்பதம்
வாழி காழிநகர் வாழ வந்ததிரு தெறிய ராதிபதி வள்ளல்தாள்
வாழி அன்பர்திரு நீறு மிட்டதிரு மூண்ட மூன்றுவய கவசமும்
வாழி குன்றைமுனி சேவை யாதிதிரு வாய்ம லர்ந்தருள் புராணமே. கஂக

தேசி லங்குமுகில் குன்றை யாதிபதி தொண்டர் சீர்பரவு சேக்கிழார்
வாசல் அன்றுமுதல் இன்று காறும்இனி மேலும் வாழையடி வாழையாய்
வீசு தென்றல்மணி மண்ட பத்தாசு வீற்றி ருக்குமுடி மன்னருக்
கீச னன்பர்கள் புராண முஞ்சொலி அமைச்சு மாகிநலம் எய்துமால். கஂஉ

அண்ட வாணர்தொழு தில்லை யம்பலவர் அடிஎடுத்'துலகெ லாம்'எனத்
தொண்டர் சீர்பரவு சேக்கி ழான்வரிசை துன்றுகுன்றைந கராதிபன்
தண்ட காதிபதி திருவெ நித்தலமை தங்கு செங்கைமுகில் பைங்கழல்
புண்ட ரீகமலர் தெண்ட னிட்டுவினை போக்கு வார்பிறவி நீக்குவார். கஂஙூ

ஆ திருவிருத்தம் - கஂஙூ.

சிறப்புப்பாயிரம்

*திருக்கிளருங் கயிலைமலைக் காவல் பூண்ட செல்வமலி திருநகரி மரபில்
வந்து, கருக்குழியில் எமைவீழா தெடுத்தாட் கொள்ளுங் கருணைமிகு மெய்
கண்ட தேவர் தூய, மருக்கிளர்தாள் பரவும்அரு ணந்தி தேவர் மகிழும்மறை
ஞானதே வருக்கன் பாகி, இருக்கும்உமா பதிதேவர் சேக்கி ழார்தம் இசைப்
புரா ணம்உரைத்தார் என்ப மாதோ.

---

*இச்சிறப்புப் பாயிரம் சில பிரதிகளிலில்லை.

*சேக்கிழார் தோத்திரங்கள்

புண்ணிய முதலே! பொங்கொளி மணியே! பொய்யாப் பெருவாழ்வே!
பொள்ளலின் முத்தே! கள்ளமில் வித்தே! புரையில் சுவைப்பாகே!
தண்ணிய அமுதே! மண்ணியல் மதியே! தமிழ்கா வலர்ஏறே!
சத்துவ நிதியே! பொத்திய மலநோய் சாடு பெரும்பகையே !
எண்ணிய அன்பரு ளத்தமு தூற இனிக்கும் நறுந்தேனே !
என்றும் பத்தி ரசங்கனி கனியே ! என்னு ளினும்எங்கட்
கண்ணிய பொருளே! ஆய்பவர் தெருளே! ஆடுக செங்கீரை
யாரரு ளாகர சேவையர் காவல ஆடுக செங்கீரை. (க)

பத்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ !
பயனில தாகுஞ் சிற்தாமணிவழி படர்தல் எனப்போதித்
தூத்திச் சுமையொரு தோள்வைத் திடுபுல் உயர்த்தோன் மனமடியார்
உறுசெயல் நாடப் புரிமதி வலவஒல் லாவ ருகத்தர்திறம்
மூத்தித் திறமல வென்றள விலர்பால் முற்றிச் சிவமடைய
முயல்செயல் வலவ வயற்கண் மடைச்செறி முத்தம னேத்தினையுந்
தத்திப் புனல்பாய் குன்றைத் திருமுனி தாலோ! தாலேலோ !
சைவப் பயிர்தழை யத்தழை யும்புயல் தாலோ! தாலேலோ ! (உ)

நிலஞ்சார் தெய்வக் கற்பகமே! நிமல ஞான வாரிதியே !
நீடுஞ் சைவப் பெருவாழ்வே! நிலவா நின்ற குணக்குன்றே !
வலஞ்சார் பெருகா வலரேறே! மாறு அருட்சிந் தாமணியே!
மதிப்பார் மதியுள் எழுஞ்சுடரே! வாழ்த்து வார்தம் பெரும்பேறே !
புலஞ்சார் பத்தி விளைநிலமே! போக்கு வரவில் பூணமே !
புந்திக் கினிக்குஞ் சுவையமுதே! போற்றி இனிமேல் ஒருதாயர்
கலஞ்சார் மூலப்பால் அருந்தாத கனிவாய் முத்தந் தருகவே !
கனகக்குன்றை யனகசெழுங் கனிவாய் முத்தந் தருகவே ! (ங)

---

* இவை மகாவித்வான் - திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களது "சேக்கிழார் பிள்ளைத்தமிழ்" எனும் நூலிலுள்ளன.

சோழர் குடிவழி

சூரிய வம்சம்

1. விஜயாலயர் 846—880

2. ஆதித்தர் I 880—907 — 2. இடங்கழியார் 3-ம் செய்யுள் பார்க்க.

3. பராந்தகர் I 907—947 — 3. சோழர்களில் முதன்முதல் தேவாரம் ஓத ஏற்பாடு செய்தவர். திருச்சிற்றம்பலம் பொன் வேய்ந்தவர்.

4. இராஜாதித்தர் 947—949 — 4. திருநாவலூரில் திருத்தொண்டீசுவரம் கட்டினவர்.

5. கண்டராதித்தர் 949—950 — 5. திருவிசைப்பாகாரர்.

*

10. இராஜராஜர் I 985—1016 — 10. தஞ்சை †இராஜராஜேச்சரம் கட்டினவர். மூவர் பிரதிமங்கள் ஆலயத்தில் இவர் காலத்தில் எழுந்தருளச் செய்யப்பட்டன.

11. இராஜேந்திர சோழர் I 1012—1043 — 11. †கங்கைகொண்ட சோளேச்சரம், திருவாமூர் கோயில் கட்டினவர்.

*

சந்திர வம்சம் *

17. இராஜேந்திர சோழர் II என்கிற குலோத்துங்கசோழர் I (அபயன்) 1070—1120 — 17. இவர் காலத்தில் மூவர் திருமுறைகள் செப்பேட்டில் எழுதப்பட்டன. திருமுறை மண்டபம் ஏற்பட்டது. கலிங்கத்துப்பரணி—தலைவர்.

18. விக்கிரம சோழர் (அகளங்கன்) 1118—1133 — 18. திருச்சிற்றம்பலம் பொன் வேய்ந்தவர். விக்கிரமசோழன் உலா—தலைவர்.

19. குலோத்துங்கசோழர் II (அநபாயன்) 1133—1146 — 19. குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ்—குலோத்துங்கசோழன் உலா—தலைவர்.

பெரியபுராண காலம்.

20. இராஜராஜர் II 1146—1163 — 20. இராஜராஜன் உலா - தக்கயாகப்பரணி - தலைவர். தாராசுரத்திலுள்ள இராஜராஜேச்சரம் கட்டினவர். கம்பராமாயண காலம்.

21. இராஜாதிராஜர் 1163—1178

22. குலோத்துங்கசோழர் III 1178—1216 — 22. திரிபுவனக்கோயில் கட்டினவர். குலோத்துங்க சோழன் கோவை—தலைவர்.

---

* திருப்பல்லாண்டின் 11-ம் பாட்டில் "மணஞ்செய் குடிப்பிறந்த" என்ற தொடர் சூரியவம்சச் சோழர் பெண்வழி வந்த இக்குடியைக் குறிக்குமென்பர்.

†கருவூர்த்தேவர் இவ்விரு கோயில்களுக்கும் திருவிசைப்பா பாடியுள்ளார்.

*சேக்கிழார் காலத்திற்குமுன் நாயன்மார்களையும் அவர்களது சரிதங்களையும் குறிக்கும்

கல்வெட்டுகள்

ராஜ ராஜன் I

1. 3-ம் ஆண்டு - (988) - திருச்செங்காட்டங்குடி - ஒரு வேளாளரால் சீராளதேவர்க்கு இரண்டு விளக்கு தானம் - †56/1913.

2. 20-ம் ஆண்டு - (995)-குகூர் (தஞ்சை ஜில்லா) - நம்பிஆரூரர் கோவிலில் சித்திரைத் திருவிழாவைக் குறிக்கிறது - 299/1917.

3. 22-ம் ஆண்டு - (997) - குகூர் (தஞ்சை ஜில்லா) - "திருப்பதியம் விண்ணப்பம் செய்த பிள்ளை நம்பிஆரூரனுர்க்கு ப்ரீதியாய்" நிலதானம் - 275/1918.

4. 29-ம் ஆண்டு - (1004) - திருச்செங்காட்டங்குடி - "சீராளதேவர் சித்திரைத் திருவாதிரைத் திருநாளில் சிறுத்தோண்ட நம்பி மாளிகையில் வைச்ச உடையாரடியார்க்கு ஆஹாரமிடச் செய்து கொடுத்த நிலமாவது" - 57/1913.

5. 29-ம் ஆண்டு - (1014) - தஞ்சை பெரிய கோயிலில் (ராஜராஜேச்சுரம்) ஸ்ரீ ராஜராஜதேவர் எழுந்தருளிவித்த செப்புத் திருமேனிகள். i. சண்டேசுவர பிரசாததேவர்....சண்டேசுவரர்-இவர் பிதா (எச்ச தத்தர்) - பிரசாதம் பெறுகின்றராகக் கனமாகச் செய்த சண்டேசுவரர். ‡S. I. I. Vol. ii. No. 29.

6. ii. ஸ்ரீராஜராஜேசுவரம் உடையார்க்கு ஸ்ரீகாரியஞ் செய்கின்ற பொய்கை நாடுகிழவன் ஆதித்தன் சூரியனை தென்னவன் மூவேந்த வேளான் எழுந்தருளிவித்த செப்புப் பிரதி மங்கள்.....நம்பிஆரூரனுர்.... நங்கைபரவையார்.... திருநாவுக்கரையர்.... திருஞானசம்பந்தடிகள்.... S. I. I. Vol. ii. No. 38.

---

* இப்பட்டி சென்னை பல்கலைக்கழகச் சரித்திரப் பேராசிரியர் பிரமஸ்ரீ க. அ. நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள் உதவியது.

† சிலாசாசன ஆண்டறிக்கை எண்.

‡ தென்னிந்திய கல்வெட்டு தொகுதி எண்.

7. iii ஸ்ரீ ராஜராஜதேவர் பெருந்தனம் ஈராயிரவன் பல்லவய னை மும்முடி சோழபோசன்....எழுந்தருளிவித்த செப்புத் திரு மேனி....சண்டேசுவர தேவர் (மழுவுடன்)S. I.I. Vol. ii. No. 55.

ராஜராஜேந்திரன் I

8. iv. 2-ஆம் ஆண்டு-(1014) iv. தென்னவன் மூவேந்த வேளான்....சண்டேசுவரர் கோயிலில் வைத்த செம்பின்மேல் பொன் கடிக்கின குடம். S. I. I. Vol. ii. No. 60.

9. i. ங-ம் ஆண்டு (1015) மேற்கண்ட தென்னவன் மூவேந்த வேளான் செய்வித்த செப்புப் பிரதிமங்கள் . . . தத்தா ங்மரே காண் என்ற மிலாடுடையார் ஒருவர். S. I. I. Vol. ii. No. 40.

10. ii. மேற்கண்ட தென்னவன் மூவேந்த வேளாண் தான் எழுந்தருளுவித்த நம்பியாரூரனுர்க்கும் திருஞானசம்பந்தடிகளுக்கும் திருநாவுக்கரைய தேவர்க்கும் . . . குடுத்த தாரநிலை விளக்கு ஒன்று. S. I. I. Vol. ii. No. 41.

11. iii. மேற்கண்ட தென்னவன் மூவேந்த வேளான் எழுந் தருளிவித்த செப்புத் திருமேனிகள் சிறுத்தொண்டநம்பி....திருவெண் காட்நேங்கை....சீராளதேவர்....S. I. I. Vol. ii. 43.

ராஜாதி ராஜர் I

12. ங-ம் ஆண்டு - (1023) காளத்தி - திருக்கண்ணப்பதேவர் சிவநாமத்தால் கழுகு திருநந்தவனம் செய்ய காசு உரிo. 125/1922.

13. உஅ-ம் ஆண்டு - (1023) - திருவொற்றியூர் திருத்தொண்டத் தொகை கேட்டருளி பக்தர்களுக்குக் கொடுக்கும் சட்டிச் சோறு.... பத்தர்கள் திருமேனி....137/1912.

குலோத்துங்கன் I

14. உசு-ம் ஆண்டு-(1091)-திருவாமூர்-திருநாவுக்கரசுதேவர்க்கு நிபந்தமாக திருவாமூரார் விட்டது. 'சித்தாந்தம்', மலர் - ரு. பார்க்க.

அரும்பொருள் அகராதி

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர்
திரு. மு. இராகவையங்காரவர்கள் தொகுத்தது.

அங்காங்க வைபவம், சேக். 19
அஞ்சைக்களம், பெருமிழ. 8; வெள். 28
அட்டமாக விடுதல், கண். 76
அடிகள்மார் - சைனமுனிவர், திருஞா. 641, 681
அடிநிலை - உபானம்; ஆகமத்தாலடி நிலை பாரித்து, பூச. 6
அடிமை விற்றல், குங். 8
அணங்குடையாட்டி, கண். 67
அணங்குறைவாள், கண். 153
அணுக்கச் சேவகம், ஏயர். 332
அத்தனை; நான் செய்யும் அத்தனை, இயற். 9; மீளுமத்தனை, திருமா. 366
அதற்படுகாதல், கண். 10
அதிகன், புகழ்ச். 17, 29
அதிகன் மலையாண், புகழ்ச். 17
அதிபத்தர், அதி. 9
அந்தணர் அந்தணர்க்கடிமையாதலின்மை, தடுத். 40
அந்நின்று வணங்கிப்போய், ஏயர். 283
அநபாயன், அனபாயன் பார்க்க.
அநுகற்பம், மூழு. 3
அப்படி - அப்படி பல்க, ஆனை. 12; அப்படி சூழ, சேக். 94
அப்பாலு மடிச்சார்ந்தார், அப்பா. 1
அப்பூதியடிகள், அப்பூ. 9
அபயன் - அநபாயன், திருமலை. 12
அபயன் குலோத்துங்க சோழன், சண். 8; சேக்கிழார் காலத்தரசன், சேக். 59
அம்பர் - செங்கணான் செய்த கோயில், திருஞா. 532
அம்பர்ச் சோமாசி மாறர், சோமா. 1
அம்பலமுகட்டிற்பாக் கொங்குப்பொன்னால் ஆதித்தன் வேய்ந்தது, இடங். 3
அமணர் தூறுத்தல், திருநாவு. 298
அமணர் பாழி, தண்டி. 4
அமர்நீதியார், அமர். 2
அமுதுபடி முதலா நிபந்தம், கமி. 19
அயவந்தி, திருநீலநக். 20
அரசு - திருநாவுக்கரசர், குங். 32
அர்ச்சனைக்குக் கோரோசனை புலையர் உதவல், திருநாவு. 14
அரிவாட்டாயர், அரி. 22
அருகந்தர், குலச். 10
அருகுராப்பண நிவருங்கங்குல், இளை. [15
அருளிப்பாடு, வெள்ளா. 33, 44
அலக்கு, மனையினீடு மலக்கு, இளை. 19
அலகம்பு, கண். 145; சேர. 167
அழகலங்கரித்தல், திருஞா. 1223
அழிதகன் போகேல், இயற். 15
அற்சனை, தடுத். 70
அற்றம் வெளியுறுதல், காரைக். 36
அறியாமை யறியாதார், மானக். 10
அறுகெடுப்ப வாழ்த்தெடுத்தல், சேக். 88
அறுவையர்குலத்தார் நேச நாயனார், நேச. 2
அன்பு பிழம்பாய்த் திரிதல், கண். 154
அனபாயன், பாயி. 8; திருமலை. 12; திருநாட். 35; திருநகர. 13; இயற். 1; எறி. 2; சண். 8; திருஞான. 847; புகழ்ச். 8; இடங். 3; கோச். 14
அனபாயன் தில்லைநகர் மணிவீதி யணி விளக்கியவன், புகழ்ச். 8
அனிதம், திருமலை. 5
ஆக்கூர், சிறப். 1
ஆட்சியாவணங்காட்சி என்ற மூன்று பிரமாணங்கள், தடுத். 56
ஆடைவீசுதல் - மகிழ்ச்சிக்குறி, திருஞா. 95; 259
ஆதனூர், திருநாளை. 1
ஆதிசைவன், தடுத். 54
ஆதித்தன் அம்பலமுகடு பொன்வேய்ந்தது, இடங். 3

ஆதிபுரி - ஒற்றியூர், ஏயர். 264
ஆதிபூமி, திருஞா. 1230
ஆனிலை, எறி. 5
ஆயோகப் பொலிவு, சேர. 49
ஆரோசை யமரோகை, ஆனு. 24
ஆல் - ஆதலால், அமர். 36
ஆவணம், தடுத். 56, 58
ஆழித்தேர் - திருவாரூர்த்தேர், செருத். 3
ஆள்வான், திருவாரூராள்வான், பத்த. 8
ஆளுடைய பிள்ளையாரந்தாதி, திருத் திருவந். 34
ஆளோலை, தடுத். 39, 42, 45
ஆற்றிலிட்டதைக் குளத்திலெடுத்தல், ஐயடி. 9.
ஆற்றினிலிட்டுக் குளத்தினிற்றேடுவார் ஏயர். 131
ஆறுதொழில்கள், குங். 2
ஆறை - திருவாறை, ஏயர். 93
ஆன்கனேப்புக்கேட்ட கன்று உவமை, தடுத். 68
ஆனது; வேகமானது மேற்செல்ல, கண். 105
ஆனந்தக்கூத்தர்-கடம்பூர்ச் சிவபிரான், ஏயர். 111
ஆனந்தப் பெருங்கூத்தர், திருநாளை. 36
ஆனுயர், ஆனு. 8
இசைஞானிப் பிராட்டியார், இசை. 1
இட்டளம், ஏயர். 133
இடங்கழியார், இடங். 4
இடைபெற்றறிதல், சேர. 13
இடைவண்ணம் - இசைவகை, ஆனு. 28
இண்டைச் சுருக்கு-மாலைவகை, முருக. 9
இண்டை புனைந்த சடைமுடியார், திருநாவு. 320
இயற்பகையார், இயற். 2
இயற்பகை முனிவர், இயற். 29
இருக்குவேளூர் - வெள்ளாற்றுத் தென் கரையது, கணம். 1
இருந்தால்...காண்கின்றாய், கண். 163
இருபிறப்பாளரு மல்லாவேனையாரும், திருஞா. 110
இருவினை யொப்பு, திருஞா. 819
இலாடபூமி, திருநாவு. 352
இலக்கலத்தை ஈர்வாய்வலம்பெறவைத்தல், அப்பூ. 39
இளசைமாறன், இயற். 36
இளையான்குடிப்பதிமாறனார், இளை. 1
இறக்கியவரியை நீங்கலென்றெழுதும் ஒருத்தர், திருக்குறி. 39
இறைச்சியமுது, கண். 150
ஈண்ட - விரைவாக, இளை. 23, 24; சிறுத். 51; கண். 123; ஏயர். 330
ஈண்டன் - விரைவாக, திருஞா. 727
ஈயல், கண். 35, 49
ஈயலுண்டி, கண். 35
ஈராண்டதன்மே லோராண்டு சம்பந்தர்க்குச் சென்றது, திருஞா. 53
உடுப்பூர், கண். 2
உடையநம்பி, ஏயர். 107
உடையபிள்ளை, திருஞா. 131, 234, 1241
உடையுங்கீளும், சேச. 3
உத்தமசோழப்பல்லவன், சேக். 18
உத்தராபதி, சிறுத். 40
உத்தரியம்விண்ணிலேறவிட்டார்த்தல், வெள்ளா. 13
உத்தரியம் வீசுதல், திருஞா. 95
உபானமாதியபடைகள், பூச. 7
உம்மீற்று முன்னிலையேவல், கொண்டு வாரும், அமர். 19
உருத்திரபசுபதி, உருத். 91
உலகியல்பு கற்றமாந்தர் - பிரிந்தோரைப் புணர்த்த வல்லார், ஏயர். 318
உலகேறும் பெருமை, விறன். 3
உழலைவேலி, கண். 25
உழவுதொழில், மானக். 6
உள்ளந்தண்டு, அரிவாட். 17
உள்ளால்; திரைக்குள்ளால், ஏயர். 228; மாளிகையுள்ளால், சேர. 34; திருஞா. 864, 868
உளது நாமுளது, விறன். 9
உளராளுருளராளூர், திருநாவு. 16
உற்றிடத்துதவுநீரார், எறி. 1
உறுப்புநூல், காரைக். 6
உறையுள், திருநீலகண். 22
உறையூர், புகழ்ச். 1
உன்னைக் கேட்டோம் - உன்பாற் கேட்டோம், தடுத். 40
ஊட்டியை யரிதல், அரிவா. 16

எண்பெருங்குன்றத் தெண்ணுயிரவர், திருஞா. 855
எண்பெருங்குன்றம், திருஞா. 631, 855
எத்தினுள்ளும், 'தமிழ்நா டெத்தினுள்ளும்', திருஞா. 279
எதிர்வழக்கம், திருஞா. 589
எதிராமாண்டு ; ஆண்டெதிரீணைந்து செல்ல, கண். 20 ; திருஞா. 53 ; சேக். 80, 85
எம்பிரானார் விறன்மிண்டர், விறன். 4
எயினனூர், எஞ. 1
எரி கொள்ளுதல், 'சமிதையுடன்மே லெரிகொண்டு' சண். 27
எரிதுள்ளினுலெனவெகுளல், அமர். 26
எரியுமிழ் பேழ்வாய்த்தோணியிரும்பீர்ப் பார், திருஞா. 332
எல்லாம்தான் வைத்து வாங்கவல்லான், திருநீலகண். 20
எறிபத்தர், எறி, 6 ; புகழ்ச். 15
எழுத்தறியும்பெருமாள், திருக்குறி.39; திருநாவு. 335
ஏகாலிக்குலம், திருக்கு. 111
ஏட்டுவரியிலொற்றியூர் நீங்கல் என்ற எழுத்தறியுமவர், ஏயர். 204
ஏமப்பேரூர், நமி. 1
ஏயர்—குடி—குரிசிலார், ஏயர். 389;—குலமன்னவன், மானக். 35;—கோக்குடி, ஏயர். 5;—கோன், ஏயர். 383;—பெருமகன், மானக். 16 ;—தம்பெருமான், ஏயர். 390
ஏழாம் வேகம் விடத்துக்குண்மை, அப்பூதி. 27
ஏழு விடவேகம், திருஞா. 1061
ஏற்றுதல் - மெய்ப்பித்தல், தடுத். 55
ஏனதிநாதனூர், ஏஞ. 2
ஐந்தியலொலி, ஐவகை நாதம் பார்க்க
ஐந்துபயம், திருநகர. 36
ஐந்துபோறிவுங் கண்களே கொள்ளல், தடுத். 106
ஐம்படை, தடுத். 4 ; சிறுத். 21
ஐயடிகள், ஐயடி. 1
ஐவகைநாதம், வெள்ளா. 34; கண். 101 திருநாவு.428;பஞ்சமாசத்தம் பார்க்க
ஒட்டுதல், திருஞா. 775 ; 1051
ஒடியெறிதல், கண். 75
ஒடுக்குதல் - பண்டாரத்தி லடைவுற வொடுக்கி, குங் 13
ஒருபொருளோப் பொய்யு மெய்யுமா மென்னும் பொருள், நமி. 10
ஒலித்தல் ; 'ஒலிக்கும் வண்ணூர்' திருக்குறி. 113
ஒழுகுதல்; மங்கலமொழுகுதல் - மானக். 27
ஒன்றுக் கொருகாலாக வெதிர் செல்ல, சண். 34
ஓகை முரசஞ் சாற்றுவித்தல், வெள்ளா. 17
ஓசையைந்து, ஐவகைநாதம் பார்க்க
ஓட்டறு செம்பொன், ஏயர் - 137
ஓடளித்தல், திருநீல. 3
கச்சிக்கற்றளி காடவர் கோமான்செய்தது, பூசலா. 9
கச்சி கரிகாற்பெருவளத்தானுல் அமைக்கப்பட்டது, திருக்கு. 85
கஞ்சாறு, மானக். 6
கடமையாமா, கண். 44
கடவுட் பொறையாட்டி, கண். 65
கடவூர், குங். 1
கடிசூத்திரச்சரி, சிறுத். 32
கடைக்கால் - மூடிவில், திருஞா. 709
கண்டகாண் - பிள்ளையணிவகை, சிறுத். [21
கண்டு மூட்டு, திருஞா. 683
கண்ணப்பர், கண். 183
கண்ணி ; தண்டிற் கட்டுங் கண்ணிகளும் மாலைகளும், முருக. 9
கணநாதர் - காழிமறையவர், கணநா. 1
கணம்புல், கணம். 5
கணம்புல்லர், ஐயடி. 8
கணமங்கலம், அரிவா. 1
கணிதனூற் புலவர், தடுத். 14
கந்தியர், திருஞா. 634
கரணத்தான், தடுத். 58
கரிகாற் பெருவளத்தோன் கச்சியமைத்தது, திருக்குறி. 85
கருநாட மன்னன், மூர்த்தி. 11
கருவூர், எறிபத்த. 2 ; புகழ்ச். 11
கலயனூர் - குங்கிலியக்கலயனூர், குங். 24
கலியனூர், கலிய. 6
கலிக்கம்பர், கலிக். 2
கலிக்காமர், ஏயர். 6

கலிப்பகையார் - திலகவதியார் கணவர், திருநாவு. 23
கலியுகத்தி லிலங்குவேற் காிகாற் பெரு வளத்தோன், திருக்கு. 85
கலை மனமுகிழ்த்த சுருணீக்கி மலர்விப் பது, திருநாவு. 20
கவடிக்கலன், கண். 37
கவளிகை, சேக். 53
கழற்சிங்கர், கழற். 1
கழற்பெருஞ் சிங்கன், கழற். 2
கழறிற்றறிவார், சிறுத்தொண்ட. 88 ; கழறிற்றறிவார், 14 ; 16 ; 56
கழனி வீழ்த்தல் - எழினிவிடுதல், காரைக். 42
கள் விருதி; பிடிப்பித்தார்கள், கண். 40; இருந்தார்கள். சண். 40; வருத்தி னர்கள், குங். 8
களந்தை முதல்வன் - கூற்றுவநாயனர், கூற். 1
களம்பாடு பொருநர், திருக்குறிப். 33
களிக்கிகன்னி, கண்; 73
களிறுண் விளங்கனி, அரிவா. 8
கற்பம், முழு. 2
கற்பு நான்காக்தீயாக வளர்க்கப்படுதல், திருநீலகக். 3
கற்றளி - காடவர்கோன் செய்தது, பூச, 9
கறியமுது, காரைக். 19; இளேயா. 22
கன்னசாலே-மாளிகை யுறுப்பு, திருக் குறி, 91
கன்னிநாடு - பாண்டிநாடு, காரைக். 34
கன்னிவேட்டை, கண். 47
காசுவாசியுடன்பெற்றது,திருநாவு. 260
காஞ்சிக்காடவர் - ஐயடிகள், ஐயடி. 7
காஞ்சியிற் கனகமழை பெய்தது, திருக் குறி. 94
காஞ்சிவாய்ப்பேரூர், எயர். 88
காடவர் குரிசிலார், கழற். 2
காடவர்கோமான் கச்சிக்கற்றளி யெடுத் தது, பூச. 9
காடுகாள் புணர்ந்த பரிசைப் பதிகத் தமைத்தல், சேர. 89
காடுபலியூட்டல், கண். 47, 51
காதலுக் தனிமையு மாயினர், தடுத். காப்போலே, தடுத். 62 [163
காம்பீலிநகர் - நேச. 1
காமரூபி, திருஞா. 1099
காமனுக்குத் தனுவும் சேமவில்லும் என இருவிற்கள், திருஞா. 1097
காரிக்கோவை, காரி. 1
காரிக்கரை, திருக்காரிக்கரை பார்க்க
காரியார், காரி. 5; கணம். 9
காரைக்காலம்மை, பெருமிழ. 11
காலக் தவறுதீர்தல் - பஞ்சகீங்கல், திரு நாவு. 262
கால நிரம்ப, எயர். 312 திருஞா. 163
காற்சரி, சிறுத். 32
கிடை ; மறைக்கிடை, திருநீலகக். 2 ; அக்தணர்களோது கிடை, திருஞா. 627; வேதமாணவர் கிடையு மாசா னும், திருஞா. 1202
கிடைத்தல்-பொருதல்; 'இருபடையுங் கிடைத்தனவால்', புகழ்ச். 19 ; எறி 22 ; சேர, 64 ; எயர். 245
கீள்; 'கந்தை கீளுடை கோவணம்' அமர். 3 ; நேச. 4
கீள் கிழிக்கோவணம், அமர். 11
கீளும் உடையும் நேச. 3
கீறு கோவணம், அமர். 24
குங்குலியக்கலயனர், குங். 35
குங்குலியத் தூபம், குங். 6
குட்டமிடுதல், கண். 145
குடக்கொங்கு, வெள். 4
குடங்கையினகன்ற வுண்கண், குங். 3
குடபுலம், புகழ்ச்சோ. 11
குடிமித்தேவர், கண் 96
குணிலையிட்டாடுதல், திருஞா. 232
குணிலையிடுதல், காரைக். 51
குதம்பை - பிள்ளேயணி, சிறுத். 21
குதிகுதித்தல், பத். 1
குரத்தி, திருஞா. 638
குலச்சிறையார், குலச். 2
குலோத்துங்க சோழன், சண். 8
குழைக்குடுமி யிலேதல், சண். 25
குழையணி காதர், கண். 129
குறிஞ்சிநிலத்தலேவர் இருப்பிடத்தின் சிறப்பு, கண். 2
குறும்பனர் - பெருமிழலைக் குறும்பர், பெரு. 2
குறைமறைவு-ஆற்றிடைக்குறை,சண்.34
குறையை நோதல், இளா. 22

குறைவறுத்தல், எயர். 46 ; சேர. 95 ; திருஞா. 522, 889, 1072
குன்றியை நிகர்விழி...பன்றி, கண். 90
கூடற்சங்கம், திருஞா. 843
கூலிக்குத் தூணைபுரிந்து அரசர்க்குதவுவோர், முனையரையர், முனை. 2
கூற்றஞர் - கூற்றுவ நாயனார், கூற்று. 8
கேட்டேன், எஞ. 38 ; எறி. 38, 43, 46; சிறுத். 76; கண். 136, 168, 181
கேசவடப்பூண்மாவிரதியர், மானக். 23
கேட்டு மூட்டி, திருஞா. 684
கேட்பித்தல், தமிழ்ச்சொன்மாலை கேட்பித்தல், சேர. 57, 69
கைச்செறி, கண். 60
கையாற் கடமைத்தலைநிற்றல், சண். 50
கையினிற் பொற்செண்டு, சேர. 112
கோக்கிறகு - சிவபிரான் அணிவது, திருஞா 1122
கொங்கொடு குடபுலத்துக் கோமன்னர், புகழ்ச்சோ. 11
கொங்கிற்காஞ்சிவாய்ப்பேரூர், எயர். 88
கொங்கிற்பொன், இடங்கழி. 3
கொங்குநாடு மறவர் பயில்வது, சேர.50
கொட்டகாரம், இடங். 7
கொட்டு - மண்வெட்டி, தண்டி. 10
கொட்டையரைநாண் - குழந்தையணி, சிறுத். 60
கொடிப்பாலைப் பண், ஆனைய. 25
கொடுகுவெஞ்சிலைப் பதிகம், சேர. 170
கொடுங்கோளூர், சேர. 1, 143
கொடும்பாளூர், இடங். 2
கொடும்பாளூர் வேளிர், இடங். 3
கொடைக்கு விழாவிற் குறைவறுதல், எயர். 46
கொண்டுவாரும், அமர். 19
கொல்லி மழவன், திருஞா. 311
கோச்செங்கட் சோழர், கோச். 12
கோச்செங்கணான், திருஞா. 345, 532
கோட்புலியார்,கோட்.1; புகழ்த்துணை.7
கோரோசனை, புலையர் கோயிற்குக் கொடுத்துவரும் பணி, திருநாளை. 14
கோவணமுங் கீளும், நேச. 4
கோற்பாகர், எறி. 25
கோஞடு, இடங். 1
சக்கரப்பாடித்தெருவு திருவொற்றியூரில், கலிய. 5
சக்கரப்பாடியார், திருத்தொண். புரா சா. 50
சகோடயாழ்த் தலைவர், திருநீலகக். 31
சங்கபடகம், திருஞா. 33, 620
சங்கப் புலவர், சேக். 93
சங்கம், மதுரைத் தமிழ்ச்சங்கம் பார்க்க.
சங்கு குளித்தல், திருக்கு. 35
சட்டறங்கள், சேர. 3
சடங்கவி மறையோன், தடுத். 7
சடையனார் - இசை. 1
சண்டீசபதம், சண். 56
சண்டேசுரர் - பக். 150
சத்தியார், சத்தி. 7
சதுக்கம் - விருதுவகை, திருஞா. 1219
சந்திர தீர்த்தம் திருவானைக்காவில் உள்ளது, கோச். 1
சபைமுன் காணத்தான் ஆவணம்வாசித்தல், தடுத். 58
சமண்பள்ளி, திருநாவு. 38
சயத்தம்பம், சத்தி. 1
சயத்தொடர்வல்லி, நின்ற. 5
சழங்கலுடை, தடுத். 31
சன்னவீரம், சிறுத். 32, கண். 59
சாக்கியர், சாக். 7
சாக்கியர்தம் போதிமங்கை, திருஞா. 904
சாரிபுத்தன் திருஞா. 911
சாலேதாறுஞ் சட்டறங்கள், சேர. 3
சிங்கடியார், எயர். 42
சிங்கடியப்பன், எயர். 42
சிங்கர் - கழற்சிங்கர், கழற். 13
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார், பக். 503
சிந்தைபரங்கொள்ளுதல், கண். 54
சிம்மாந்து (பதிகமுதல்), எயர். 117
சிலம்பிசோழனைப் பிறந்தது, கோச் 8.
சிலம்பிடிப்பித்தல், கண். 40
சிலம்பிவலை காட்டியது, சேர. 24
சிவகாமியார், எறி. 13, புகழ்ச். 15
சிவதா ஏனல், எறி. 15
சிவபிரான்கு விடமளித்த தெனக்கருதி மேதினிக்கு வளநிறைத்தே, கடல் வயிறு நிறையாதகாவிரி, திருமூல. 8
சிவாலயதேவர், சேக். 24

சிற்றம்பலத்தைச் செம்பொனணிந்து சிவலோகமெய்திய சோழர், திருத். திருவர். 82
சிறப்புலி, சிறப். 6
சிறுத்தொண்டர் ; பழையனூர்ச் சிறுத்தொண்டர், திருக்கு. 3 ; சிறுத்தொண்ட நாயனர், சிறுத். 15; திருநாவு. 242 ;— சம்பந்தரை எதிர்கொண்டது, சிறுத். 23 ; திருஞா. 470
சுருள்பெறுமடியை நீக்கி ஓலை வாசித்தல், தடுத். 58
சுலவுதல் ; களிற்றின்காஞ் சுலவிற்று, கோச். 4
சுழியம் ; திருமுடியிற் சுழியம், சேர. 112
சுரூவின் முள்மருப்பு நெய்தனிலமக்கள் வணக்கத்துக்குரியது, திருக்கு. 7
சுறுக்கொள்ளுதல், திருஞா. 712
சூத்திரத் தொல்குலம், வாயி. 6
சூத்திர ரற்குலம், இளை. 1,
சூராட்டி, கண். 51
செங்கணான் - ஏயர். 63. சோழமண்டலத்து நாடுதொறும் சிவாலயங் கட்டியது, கோச். 14
செங்காட்டங்குடி, சிறுத். 1
செங்குன்றூர், விறன். 2
செண்டாடுந் தொழில், கழறிற். 155
செண்டாடு, (பதிகமுதல்) ஏயர். 197
செந்தமிழ்த் திருநாடு, காசைக். 43
செந்தமிழ்நாடு, திருநாவு. 412
செய்புண்மிக்கேறுசங்கம், மூர்த். 5
செருத்துணையார், செருத். 2
செருவிலிபுத்தூர், புகழ்த், 1
செல்வக்கருவூர், திருஞா. 339
செல்வத்திருவாரூர், தண்டி. 2 ; ஏயர். 45 ; சேர. 80 திருஞா. 346
சென்னி யபயன் குலோத்துங்கன், சண். 8
சென்னியனபாயன், இயற். 1
சேடைநல்குதல், கண். 48
சேதிநன்னாடு, மெய்ப். 1
சேமவில் காமனுக்கு, திருஞா. 1097
சேய்ஞலூர், சண். 1
சேரர் மூதூர்களிற் சிறந்தது செங்குன்றூர், விறன். 2
சேராட்டுவையவர் மைத்துனமுறைமை வேண்டியது தொண்டைநாடு, திருக்கு. 4
சேரமான்பெருமாள், சடைய. 1
சேவகங்காட்டுதல், ஏயர். 376
சேனைவீரர் தலைவனில்லையாயின் தம் மூடல் துணித்து இறத்தல் - வெள். 37
சொன்னவாறறிவார், திருஞா. 435 ; திருத். திருவர். 23
சோதிவிருக்ஷம் - எரிமரம், கண். 131
சோமாசிமாறர், மூர்க். 12
சோழன் மலையிடித்து வழிகண்டது, எறி. 2
தட்டி - சின்னவகை, எறி. 31
தடுத்தாட்கொண்ட புராணம், பக். 19
தண்டியடிகள், தண். 4
தண்டிற் பூங்கூடையேத்தல், எறி. 10
தண்டின்மீது கோவணம், அமர். 9
தண்டுபோதல், சிறுத். 6
தண்பொருந்தப்புனல்நாடு-பாண்டிநாடு, திருநாவு. 399
தத்தாகமர் எனல், மெய்ப். 16
தந்திரியார் ; வளவர் தந்திரியாராய், கோட். 1.
தம்பிரான்றோழனர், தடுத். 171
தம்மானே யறியாத சாதியாருளரே, தடுத். 88
தமிழ்க்கோவை தம்பெயரால் மூவேந்தர்மேலும் பாடியவர் - காரியார், காரி. 1
தமிழ் மூவாயிரம், திருமூ. 27
தமிழாகரர், திருஞா. 1256
தயில வினையாளர், சேக். 36
தருக ; குளத்தின் மூழ்கித்தருக, திருநீலகண். 35
தலசுத்தி - கோமயமிட்டுப் பூமியைநீவி வான்சுதை போக்குதல், அப்பூ. 39
தலைச்சங்கப் புலவனர், திருஞா. 667
தனித்தடை, திருஞா. 647
தனிநகர், எறி. 4
தனிநகராங்கருவூர், புகழ்ச். 11
தாண்டகச் சதுரர், குங். 32
தாமரை மாலையைச் சம்பந்தர் திருமணத்தில் அணிந்தது, திருஞா. 1216
தாயனர் - அரிவாட்டாயர், அரி. 5

திண்ணன், கண். 29
திரட்கோவை, சிறுத். 30
திரிமுகக் காந்தஞ்சேர்ந்த வல்லிரும்பு, தடுத். 50
திருக்கடவூர்க் காரியார், காரி. 1
திருக்கடைக் காப்புச்சாத்தல், திருஞா. 80 ; எயர். 85
திருக்காமக்கோட்டம், திருக்கு. 74
திருக்காரிக்கரை, திருநாவு. 343; திருஞா. 1015
திருக்குடக்தை, மூர்க். 7
திருக்குறிப்புத் தொண்டர், திருக்கு. 112
திருக்கூட்டச் சிறப்பு, பக். 18
திருக்கோவலூர் சேதி நாட்டது, மெய்ப். 1
திருஞானசம்பந்தசுவாமிகள், பக். 233
திருத்தலேயூர், உருத். 1
திருத்துருத்திச் சொன்னவாறறிவார், திருஞா. 435
திருநாட்டுச் சிறப்பு, பக். 8
திருநாவலூர், தடுத். 2
திருநாவுக்கரசர், பக். 157
திருநாளைப்போவார், திருநாளை. 34
திருநீறே, முனையடு. 1
திருநீலகண்டம், திருநீலக. 4
திருநீலகண்ட யாழ்ப்பாணர், பக். 516 - கோயிற் புறநின்று யாழ் வாசித்தது, திருஞா. 134 - மறையோர் சிறப்பித்தது, திருநீலநக. 30
திருநீலநக்கர், பக். 261
திருநீற்றுக்காப்பு ஏத்தல், திருஞா. 262
திருப்பள்ளித் தாமம், புகழ்ச். 15, சண். 35, பள்ளித்தாமம் பார்க்க.
திருப்பாட்டு - பதிகம், கழறிற். 9
திருப்புலீச்சரம், கணம். 4
திருப்பூந்துருத்தியில் திருமடம் திருநா. 389
திருமலைச்சிறப்பு, பக். 3
திருவணுக்கன் திருவாயில், வெள். 41
திருமடம், திருநா. 389
திருமால் முல்லைத் தெய்வமென்று அருந்தமிழுரைக்கப் பெறுதல், திருக்குறி. 18
திருமாலை திருநீறு பரிவட்ட மரியாதை, சேக். 33
திருமுறைகண்ட ராசராசதேவர், சேக். 24
திருமுறைகளின் கணக்கு, சேக். 96
திருமுனைப்பாடி நாடு, தடுத். 1
திருமூலதேவர், திருமூ. 28
திருமெழுக்கமைத்தல், கணநா. 3
திருவஞ்சைக்களம், சேர. 11, 145
திருவடி - சுவாமி ; வாசீசத் திருவடி, திருநாவு. 109
திருவடிப்பிழைத்தல், திருக்கு. 69
திருவடையாளமாலை, சம்பந்தர்க்குத் தாமரையாதல், திருஞா. 1216
திருவலகு, திருநாவு. 320, சேர. 9
திருவலகு திருமெழுக்கிடுதல், சேர. 9
திருவாரூர் ஆழித்தேர், செருத். 3
திருவாரூர்ச்செல்வம் வினவுதல், வெள். 20
திருவாரூர்ப் பிறத்தார், திருவாரூர்ப்பி. 1
திருவிரையாக்கலி, கோட். 4 ; திருத்தொண். திருவந். 68 ; சேக். 48
திருவிழாவணி சேவித்து, அமர். 5
திருவுலாப்புறம், வெள். 52
திருவேட்டல் - மணம் புரிதல், சேர. 92
திருவொற்றியூர், கலிய. 1
தில்லைத் திருவெல்லை பொன்னின் மயமாக்கிய வளவன், சண். 8
தில்லைநகர் மணிவீதி யணிவிளக்குஞ் சென்னிநீ டனபாயன், புகழ்ச். 8
தில்லையில் மூவாயிரம் யாகவேதிகைகள் உண்மை, திருநாளை. 24
தில்லையந்தணர், தில். 10 ; திருநாளை, 28, 35
தீக்கடைகோல், கண். 144
தீக்காலி யவுணற்கு அருள் புரிந்த இடம் - வல்லம், திருக்கு. 30
தீபமா மரம், கண். 131
துகில்வர்க்கம், அமர். 36
துகிற்கொடி, மானக். 5
துணங்கை, கண். 39
துமித்தல், 'ஊதிமுன்றுமிப்பவர்' திருநீலந. 12
துமித்தூபம், எயர். 147
தூலையெனுஞ் சலம், அமர். 41

தூவாயர், ஏயர். 302
தேலுங்கு கடந்து கன்னட மெய்தல், திருஞா. 350
தெற்றியாடன் முழவதிர்தல், ஏயர். 185
தென்னவர்கோன் மகளாரைத் திருவேட்ட சோழன், சேர. 92
தென்னவ னெடுமாறன், குலச். 8
தேசுபாடிதபயன், சேக். 93
தேசிகம்; தென்றமிழும் வடகலையுந் தேசிகமும், பரமனே. 2
தேவர்பிரா னர்ச்சனைக்குப் புலையர் கோரோசனை யுதவல், திருஞானே. 14
தேவாரட்டி, கண். 47
தோங்கல் - மாலை வகை, தடுத்தாட். 21
தொண்டை நாடு, வாயி. 1
தொண்டைநாடு சேர நாட்டவரால் மைத்துன முறைமை பாராட்டப் படுதல், திருக்கு. 4
தொண்டைமண்டல நின்றுகாத்தபெருமான், சேக். 99
தொண்டைமான் பட்டம் - பாலறுவாயர்க்கு, சேக். 99
தொண்டைமானுக் கன்றருள் கொடுத் தருளுந் தொல்லை வண்புகழ் மூல்லை நாயகர், ஏயர். 278
தொழுகுலம், காரைக். 38
தோணி யிரும்பீர்த்தல், திருஞா. 332
தோரைமலி சேடை, கண். 48
தோழங்கள், ஆனா. 11
தோள்வளைச்சரி, சிறுத். 32
நடுநின்றூர் படைமதனூர், தடுத். 141
நடைக்காவண மிடுதல், திருநீலநக். 25
நந்தனூர், திருநாளை. 11
நம்பியாரூரர், தடுத். 203; பெருமி. 6
நமிநந்தியடிகள், நமி. 4
நரசிங்க முனையரையர், தடுத். 5; நரசிங். 1
நலப்படுதல், கண். 116
நாகபட்டணம், அதி. 1
நாகர் குலத்தவர் கண்ணப்பர், கண். 33
நாசி - மாடநெற்றி, திருஞா. 12
நாசிகை - மாளிகையுறுப்பு, திருக்கு. 95
நாயன்மார், மெய்ப். 4; அமர். 33
நாயனூர் - சிவபிரான், குலச். 9; சுவாமி, கண். 123; தலைவர், திருஞா. 802
நாலடி மேல்வைப்பு, திருஞா. 277
நாவலர்க்கு வளம்பெருக நல்குதல், திருநாவு. 36
நாளோலே, தடுத். 9
நாற்பத்தெண்ணாயிரவர் வேளாண் குடியினர், சேக். 12
'நானுய்ந்தேன்' எனத் தொழுதல், திருநாளை. 30
நிபந்தம்; அர்ச்சனைக்கு நிபந்தமெல்லாமமைத்து, திருநாவு. 299; அமுது படி முதலா நிபந்தம், நமி. 19
நிபந்தமாராய்தல், மனு. 16
நிலம்பதினெட்டு, அதி. 4
நிலைச்செண்டும் பரிச்செண்டும் வீசுதல், சேர. 126
நின்றசீர் நெடுமாறர், நெடுமாறனார் பார்க்க
நிவாக்கரையிலுள்ள பதிகள், திருஞா. 176
நின்றவூர், பூச. 2, 11
நீக்கலெழுத்தறியுமவர், ஏயர். 254
நீலகண்டப் பெரும்பாணர், திருநீலநக். 30
நீலிகோட்டம், திருக்கு. 15
நுழைப்பழனம், சேர. 115
நூல்தாங்கா தனைத்துயிர்க்கு மருடாங்கி, திருநாவு. 34
நெடுமாறன், மங்கை. 2
நெடுமாறனார், நின்றசீர். 1
நெய்யாடல் மகப்பேற்றுக் காலத்து நிகழ்வது, சேர. 6
நெய்யாடல் விழா, சிறுத். 18
நேசர் - நேசநாயனார், நேச. 2
நேபாளம், திருமூல. 3
நேர்தல் - எதிர்த்தல், இயற். 17
நேர்பாடு, கண். 182
நைகரமில்லா அன்பு, அரிவா. 12
பகழிப்புண்கள், கண். 175
பங்கயவதனிமார், தடுத். 10
பசுபதி நேபாளம், நேபாளம் பார்க்க
பசுபதியார், உருத். 3
பஞ்சநாதம், பஞ்சமாசத்தம் பார்க்க
பஞ்சமாசத்தம், தடுத். 69; திருநாவு. 428; கண். 101; அதி. 19
பஞ்சவடி - மாவிரதியர் அணியும் மயிர்ச்சடை, மானக். 29, திருத். திருவக். 13

பட்டடைக் குரலாங் கொடிப்பாலே, ஆஞ. 25
பட்டவர்த்தனம், எறி. 11, 26, 51
பட்டிகை - ஏடு, திருஞா. 815
படம்பக்க நாயனூர், கலிய. 14
படிமத்தார், கண். 49
படியோலை, தடுத். 56
படுவாசி முடிவெய்து மோட்டறு செம் பொன், எயர். 137
படைபிழைத்தல், எஞ. 29
பத்தராய்ப் போற்றுவார் - பத்தராய்ப் பணிவார், பத். 8
பதவு காலம், சண். 26
பதிகப்பற்று, முருக. 10
பதிகன்-வழிப்போக்கன், திருஞா. 473
பம்பை, திருநீலக. 12 ; சிறுத். 27
பதினெட்டு நிலம், அதிபத். 4
பயமைந்துங் காத்தறங் காத்தல் அரசர்க் குரியது, திருநகர. 36
பயில் விளியாற் கலியழைத்தல், கண். 143
பரசுராமன்பெறுகாடுமலைகாடு,விறன்.1
பாஞ்சோதியார் - சிறுத்தொண்டர், சிறு. 2
பரமனையே பாடுவார், பர. 2
பரிகலக்கால்மேல் விரி வெண்டுகிலில் அமுது படைத்தல், சிறுத். 73
பரிகலந் திருத்துதல், குங். 21
பரிக்காரர், எறி. 12, 41
பரிச்செண்டு வீசுதல், சேர. 126
பல்லவகுலத்தார் ஐயடிகள், ஐயடி. 1
பல்லவர் குலம், கழற். 1
பல்லவர் கோச்சிங்கர், செருத். 4
பலிப்பாத்திரம், திருநீலகண். 12
பவனமாய்ச் சோடையாய், திருஞா.
பவனவழி - யோகவழி, திருமூ.13[518
பழுவம் புரளுதல், திருநாவு. 359
பழைய மன்னுடி, தடுத். 48
பழையனூர்ச் சிறுத்தொண்டர் கரிச் சொற்காத்தது, திருக்கு. 3
பழையனூர்த் திருவாலவனம்,திருநாவு.
பழையனூர் நீலிகதை, திருக்கு. 3[341
பழையாறை, அமர் 1 ; திருநா. 294 [4
பள்ளமடையாய் அன்பு ஓடுதல், சிறுத்.
பள்ளித்தாமம், எறி. 40; திருப்பள்ளித் தாமம் பார்க்க
பற்றறவிடுதல், புகழ்ச். 29
பற்றறுத்தல் - அரணழித்தல்,புகழ்ச். 17
பறைச்சேரிவருணனை,திருநாளை.6—9
பறைத்துடைவையுணவுகள், திருநாளை.13
பனிநீர் கூட்டியமைத்த சந்தனச்சேறு, தடுத். 17
பாடலனுன் மறைபாடி, திருஞா. 497
பாடலிபுத்திரம், திருநாவு. 38
பாடவமுரைத்தல், இயற். 18
பாடினி, திருஞா. 135
பாண்டியன் கடன்மேல் வேல்விட்டது, கின்ற. 4
பாண்டில் - விருதுவகை,திருஞா. 1219
பாணியார் - பாண்பெண்,திருநீலநக். 31
பாதமூலங்கள், திருநீலநக். 20
பார்வை விலங்கு, கண். 71
பாரித்தல், இளை. 9
பாலறுவாயார், திருஞா. 465 ; சேக் இழார் அனுசர், சேக். 98
பாலிநதியின் வடபால் வேற்காடு, மூர்க். 1
பாலியாறு பிள்ளைவருடு மூலைபோன்ற ஊற்றுடையது, திருக்கு. 22
பாவகஞ் செய்தல், திருநீலகண். 26
பாவாடையிலேற்றி அமுது படைத்தல் சிறுத். 73
பாவாடை பகல்விளக்கும் அமைத்து அமுது செய்வித்தல், சேர. 124
பிணையல் - மாலைவகை, முருக. 9
பிணையன் மாலை அணிரிணர்க் கண்ணி கோதை தாமம், தடுத். 18
பிரமரதம் - சடங்குமுடிதோறும் வேள்வித் தலைவர் ஏறுந் தேர்கள், சண். 6
பிரியாவிடை, திருநாவு. 263
பிழைதெறி வழக்கு, தடுத். 48
பிள்ளையணிகள், சிறுத். 21
பிள்ளையார், குங். 32
பீலிச்சோலை, தடுத். 22
பீலிப்பத்தர், திருஞா. 1219
புகலூர், முருக 1
புகழ்ச்சோழர், புகழ்ச். 8
புகழ்த்துணையார், புகழ்த். 1.
புகார் நகரம், இயற். 1
புணர்ச்சிகள் - ஆடை யாபரணதிகள், அமர். 38
புத்த நந்தி, திருஞா. 905, 906

புத்தூர்ச் சடங்கவி, தடுத். 7
புதுமலை யிடித்துப் போற்று மன்னெறி வழியேயாக அயல்வழி யடைத்த சோழன், எறி. 2
புலியுகிர்ச் சுட்டி, கண். 20
புலியெயிற்றுத்தாலி, கண். 9
பூலப்பாடி, திருஞா. 6
புறகு - பிரஷ்டம், விறன். 7 ; [புறகு தட்டு - சாதிப்பிரஷ்டம் திருத், திருவக். 6]
புன்செய்க் குறும்பயிர், இளை. 21
பூசல் - பூசலார். 10, 12
பூதம் பணிகொண்ட பாண்டியன், நின்ற. 6
பூம்புகார் வணிகர்-இயற்பகையார், திரு
பெண்ணாகடம், கலிக். 1 [நீலகண். 44
பெண்வருணனை, தடுத். 134
பெரிய சிறுத்தொண்டர், சிறுத். 44
பெரிய தேவர் - கந்திதேவர், வெள்.44; ஏயர். 333
பெருகு, திருஞா. 65
பெரும்பாணர் விறலியாருடன் வருதல், திருநீலநக். 24
பெருநம்பி, குலச்சி. 2
பெருமக்கள் ; எந்தம் பெருமக்களை, மூர்த். 16
பெருமங்கலம், சேரநாட்டது, ஏயர். 1
பெருமிழலை, பெருமிழ. 1
பெருமுதலி, கண். 117
பெருவண்ணம், ஆனை. 28
பெரூப் பேறு, குங். 11
பெருமிழலைக் குறும்பர், பக். 209
பேரவை - வழக்குரைக்குஞ் சபை, திருநீலகண். 30
பேரிடாக்கொள்ளமுன்கவித்தல், இளை.
பேரூர், காஞ்சிவாய்ப்பேரூர் பார்க்க [17
பேழ்கணித்தல், திருஞாவு. 275
பைதிரம் - தேசம், திருஞாவு. 352
போக்கணம், மானக். 23
பொத்தப்பி நாடு, கண். 1
பொய்யடிமையில்லாத புலவர், பொய். 1
பொற்செண்டு, சேர. 112
பொற்பொது - கனகசபை, இயற். 34
பொன்மழை காஞ்சியிற் பெய்தது, திருக் குறிப். 94
பொன்வண்ணத் திருவந்தாதி, சேர. 56
போகப் போதா - போகக்கூடாது, திரு போதிமங்கை, திருஞா. 904 [ஞாவு.289
போதும் வைகிற்று, இளை. 12
போர்ச் செயல்கள், எனை. 15
மகனைப் பற்றிக்கொண்டு குளத்தில் மூழ்குஞ் சபதம், திருநீலகண். 27
மகோதை, சேர. 4; வெள். 27
மங்கலநூற்றூலி, குங். 9
மங்கலம் - மழநாட்டூர், ஆனை. 7; திருத். திருவக். 15
மங்கலமாக அறுகு சுண்ணம் நறும் பொரி வீசல், தடுத். 24
மங்கலமொழுகுதல், மானக். 27
மங்கையர்க்கரசியார், மங்கை. 1
மச்சம் வெட்டுதல் - ஏயர். 109
மச்சு - மற்று என்பதன் விகாரம் ; மச் சிது செய்தார் யாரே, கண். 108
மடபதிகள், சேக். 59
மடபதித்தவராசர், சேக். 32
மணம்வந்த புத்தூர், தடுத். 23
மணமகன் பரிமேலேறிப் போதல், தடுத்.19, 27 [குலச். 1
மணமேற்குடி - குலச்சிறையா ரூர், மணவாளப்பிள்ளை பரிமிசை இழிந்து மணப்பந்தர் அடைதல், தடுத். 27
மணிபத்தசைதல், திருஞாவு. 358
மத்திய தேசம், திருஞா.வு 352
மதங்க சூளாமணி - திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருஞா. 131
மதிமலி புரிசை யென்னும் வாசகம் வரைந்த திருமுகம், கழறிற். 28
மதுரையில் சம்பந்தர் திருமடம், திருஞாவு. 389; திருஞா. 868, 877, 878
மதுரைத் தமிழ்ச்சங்கம் - திருஞாவு. 403; திருஞா. 843; மூர்த்தி. 5, 7
மயிலனையார், மானக். 6
மயிலாபுரி, வாயி. 1
மயிற்கழுத்து - அணிவகை, கண். 48
மரக்கோவை, ஆனை. 3
மருகலுட்டுத் தஞ்சாவூர், செருத். 1
மருணீக்கியார், திருஞாவு. 18
மலைநாடு,விறன். 1; வெள். 3 [ச். 17
மலையாரணத்தில் அதிகன் வாழ்தல்,புகழ்
மலையிலருவிகள் இந்திரன் மேலெழு தற்கு மலைகள் சிறகடிப்பது போறல், திருஞா. 1015

மழநாட்டுப் பொன்னி வடகரைமிசைப் பாச்சிலாச்சிராமம், திருஞா. 310
மழநாடு, ஆஞ. 1
மழவர் கோமான், திருஞா. 314
மழவன், திருஞா. 311
மழைக்குதவும் பெருங்கற்பு, மானக். 11
மறக்குடி மரபு, கண். 18
மறவர்பயில் கொங்கர் நாடு, கழறிற். 50
மறவர் புன்புல வைப்பு, திருஞா. 628
மறையவர் அடிமையாதலின்மை, தடுத். 52
மன்னுடி, தடுத். 48
மனுநீதிகண்டபுராணம் - திருநகரச் சிற்ப
மனுவேந்தன், திருநகர. 13 [பு,பக்.12
மனைவியைப் பற்றிக்கொண்டு குளத்தில் மூழ்கிச் சபதஞ்செய்தல், திரு
மாசாத்தன், வெள். 52 [நீலக. 28
மாடக்கோயில், திருஞா. 433; அழுக்கூர், திருஞா. 434
மாணிக்கக்கூத்தர், முழு. 3.
மாமல்லை - திருக்குறி. 41
மாமாத்திரர், சிறுத். 2
மாமாத்தியர், திருஞா. 471
மாலைவகைகள், முருக. 9; தடுத். 18
மாவடு விடேல் விடேலெனல், அரிவா. 18, 22
மாவிரத முனிவர், மானக். 26; கோலங்கள், மானக். 23
மாறனார் - நெடுமாறனார், நின்ற. 110
மாறுதல் - இல்லையாதல்; உணவுமாறி,
மானக்கஞ்சாறனார், மானக். 7 [குங். 9
மிழலைக் குறும்பர், மிழ. 2,8
மிழலைநாட்டு மிழலை, பெருமிழ. 1
மிறைக்கவிகள், திருஞா. 276, 277
மீளாவடிமை, (பதிகமுதல்) எயர். 309
முகைக்குமலரின் வாசம்போல் மூத்தை யறிவின் தொடர்ச்சியினுற் சித்தை மலர்தல், சண். 13
மூட்டுதல் - குறைவுறுதல், மூர்த். 20
முடிச்சுழியம், கழறிற். 112
முதலி - தலைவன், கண். 117
முத்தாறு, திருஞா. 183
முத்தநாதன், மெய். 7
மூப்போதுமர்ச்சிப்பார் - மூப்பொழுதுந் திருமேனி தீண்டுவார், பக். 508
மூம்மையா லுலகாண்டதன் பொருள், முயற்றி, சண். 16 [மூர்த். 46
முருகக்கடவுட்கு அணங்காடல், கண். 11
முருகனார், முருக. 5
முல்லையின் தெய்வமென் றருந்தமி ழாரைக்குஞ் செங்கண்மால், திருக்குறி. 18
முழுநீறுபூசிய முனிவர், பக். 508
மூழப்பையுகைப்பு, ஆஞ. 5
மூளரிவளை நிதியான் - குபேரன், எயர். 234
மூளவுமுள்கோத்த எயிற்றுத்தாலி, கண். 20
மூளைசாத்தல் - மணவினை, தடுத். 11
மூனைப்பாடிமன்னர்-சுந்தரர், வெள். 27
மூனைப்பாடி வளநாடர். கழறிற். 115
மூனையர் - மூனையரையர், நர. 1, 2
மூர்க்கர், மூர்க். 9, 12
மூர்த்தியார், மூர்த். 9
மூலவாணி பொன்னுக்கு, எயர் 136
மூலவோலை, தடுத். 56
மூவேந்தர் தமிழ்வழங்குநாடு, அப்பாலும். 1
மெய்ப்பொருள்வேந்தன், 6
மேலெழுத்திடுதல், தடுத். 60
மேற்றளி, திருஞா. 1001
மைக்காப்புச் சாத்தல், சேக். 53
மைத்துனமுறைமை சோநாட்டுக்கும் தொண்டை நாட்டுக்கும் உண்மை, திருக்குறி. 4
மொழியும் புகுந்தது, திருநீலக. 33
யானையைக் கண்கட்டி அரசனைத் தெரிந்தெடுக்க விடுதல், மூர்த். 30
யானையை முயல்தூரத்தியதலம், திருக்குறி. 77
வக்காணை (வக்காணை), ஆஞ. 24
வக்குதல், கண். 145
வங்கினைப்பற்றிப் போகா வல்லுடும்பு உவமை, கண். 116
வஞ்சிமணிவாயில், வெள். 22
வஞ்சியகநகர், கழறிற். 46
வட்டை-கிரிவட்டையும், திருகாவு. 351
வடபுலத்து மன்னர்படை சரிதல், நின்ற. 7
வடபுலத்து வாதாவித் தொன்னகரந் தகளாக்கியது, சிறுத். 6
வடபுலங்கவர்ந்த பல்லவன், கழற். 2

வடிகாது ; குழைக்கலையும் வடிகாதிற் கூத்தனுர், மானக். 11
வடுகக்கருநாடர் மன்னன், மூர்த்தி. 11
வண்ணவிசைவகை, ஆனு. 28
வயிரச்சரி - பிள்ளையணி, சிறுத். 21
வர்த்தமானீச்சரம், மூருக. 12
வரிஞ்சையூர் - காவிரிநாட்டது, சத்தி. 1, 2
வலிசெய்தல் - வல்வழக் குரைத்தல், திருநீலக. 32
வலியமாட்டாமை, திருநீலநக். 34
வழக்கம் - போக்குவரவு, திருநாவு. 273
வழக்கின் மேலிட்டணைதல், திருநீலக.
வனவன் செங்கணுன், எயர். 63 [31
வஞ்சத்தாலான் கொண்டே யன்றிப் போவதுஞ் செய்யேன், திருநீலக. 26
வற்காலம் - வறட்காலம், கோட். 5
வனப்பு - இசைவகை, ஆனு. 28
வாகுசேர் வேல, அதி. 12
வாசமாலை - மாலைவகை, மூருக. 9
வாசனை - குழல்வாசிப்பு, ஆனு. 12, 36
வாசிபடுதல் (காசு), திருஞா. 568
வாசியில்லாக் காசுபடிபெறுதல், திருநாவு. 260
வாதாபித்தொன்னகரம், சிறுத். 6
வாய்கட்டிப் பூவெடுத்தல், எறி. 9
வாயிலார், வாயி. 6
வாரணப்போர் - கோழிப்போர், கழறிற். 2
வாரொழுக்குதல், கண். 74, 75 [126
வாரும் - கொண்டு வாரும், அமர். 19
வாலிதாகிலைமை, திருநீலக. 19
வாழையடி வாழை, சேக். 102
வான்மிக பகவன், சேக். 91.
வானகத்துபி, திருஞா. 81
வானவர் தலைவன் - சோமான் பெருமாள், வெள். 25
வானவரம்பர், கழறிற். 39
வானிழல் - அசரீரி, பாயி. 9
விகற்பச்செய்யுட்கள், திருஞா. 276
விசாரசருமனுர், சண். 12
விடத்தின் எழுவேகம், திருஞா. 1061
விடந்தீர்க்கும் வகை - மந்திரத்தியான பாவக நிலைமுட்டி, திருஞா. 1060
விண்ணப்பஞ் செய்தபடி செய்தருளுதல், நமி. 20
வித்தகம் பேசல், தடுத். 41
விபஞ்சி - பாலைப்பண், கழறிற். 2
விருத்தி, எறி. 7 ; எயர். 110; திருஞா. 699 ; சிறுத். 9 ; திருநாவு. 82
விரையாக்கலி - திருவிரையாக்கலி பார்க்க
வில்விழவு, கண். 31, 39
விளக்கங்காணுதல், திருநீலக. 10
விளங்கனிக்கவளம், கண். 35
விற்பிடித்தல், கண். 29
விறலியருடன் பெரும்பாணர், திருநீலக. 24 ; திருஞா. 957
விறன்மிண்டர், விறன். 4
வினவுதல் - விசாரித்தல், திருமலை. 18
வீக்கழிதல் (யாழ்), திருநீ. யா. 6
வெகுப்பு, திருஞா. 706
வெள்ளாற்றுத் தென்கரை இருக்குவேளூர், கணம். 1
வெள்ளானை, பக். 518
வேட்கோவர்குலத்தவர், திருநீலக, 1, 19
வேட்டுவக் கோலம், கண். 57, 63
வேடர் தலைமைக் குறியாக உடைதோலும் சுரிகையும் கொடுத்தல், கண். 53
வேடர் பிள்ளைக்கோலம், கண். 18
வேணுத் தண்டு கொண்டு அந்தணன் வருதல், தடுத். 31
வேதகத்திரும்பு பொன்னுதல், கண். 154
வேதபாரகர், தடுத். 51
வேந்தற் குற்றுழிவினை, திருநாவு. 26
வேலை - 'என்ற வேலையில்'—தடுத். 43
வேழக்கரும்பு, எறி. 2
வேளாள விழுக்குடிமைச் செம்மையினர் பழையனுர், திருநாவு. 341
வேளாண் குடிப்பெயர்கள், சேக். 12
வேளாண்குடி காற்பத் தெண்ணுயிரவர், சேக். 12
வேற்காடு, மூர்க். 1
வைகுதல்-போதுமைவைகிற்று, இளை. 12
வைதிகத்தேர், குங். 30; விறன். 6
வைதிகவழக்கம், திருஞா. 600

பாட்டு முதற்குறிப்பகராதி

கிழக்குமருதூர் - திருவாளர் - தி. கி. நாராயணசாமி நாயடு அவர்களால்
கோவை செய்யப்பட்டது.

பாட்டு	பக்கம்
அ	
அக்குடியின்மேல்	கடுஅ
அக்குலத்தின்	சஅஅ
அக்குலப்பதிக்குடி	டுஉ
அக்குலப்பதிதன்	ககங
அக்கோயில்	டுகடு
அகத்தின்புறத்து	சடுங
அகம்நிறைத்தபேரு	சசஙு
அகமலர்ந்தஅர்ச்	சகஎ
அகல்பாறையின்	கஉசீ
அகலிடத்துயர்ந்த	சஎ
அகில்நறுந்தூபம்	ஙஅஉ
அகில்விரைத்தூப	உக
அகிலகாரணர்தாள்	கஅ
அகிலலோகமும்	சஅசு
அங்ககன் றமுனி	உகக
அங்கங்கள்அடங்க	ககசுடு
அங்கண்அணைவார்	ஙடுக
அங்கண்அமர்கின்றஉ	சுடு
அங்கண்அமர்வார்	உகஅ
,,	சஐஅ
அங்கண்அமார்பெ	ஙடுஙு
அங்கண்அமருந்	கஉஅ
அங்கண்அரணூர்	சஎக
அங்கண்அருள்	சசுஙு
அங்கண்அவ்வூர்	சசஐ
அங்கண்இருந்த	ககஙு
அங்கண்இனிதமர்ந்	சஐஙு
அங்கண்இனிதமரு	உஅஐ
அங்கண்இனிது	சஎக
அங்கண்எய்திய	டுஉஉ
அங்கண்ஒரொளி	டு
அங்கண்மலைத்	அஎ
அங்கண்மாஞகரத	கஉஅ

பாட்டு	பக்கம்
அங்கண்மாமலை	ககஅ
அங்கண்மாமறை	ஙஐ
அங்கண்மிக்கஅக்	ஙஅசு
அங்கண்முன்னை	கடுஙு
அங்கண்மேவிய	ஙகடு
அங்கண்வடதிசை	ஙடுக
அங்கண்வான்மி	கஙடு
அங்கண்விழவிற்	உஙசு
அங்கணகன்றம்	உசுக
அங்கணமர்வார்	ஙஎஐ
அங்கணர்அடியார்	எடு
அங்கணர்ஆரூர்	உகஉ
அங்கணர்தங்கோ	சஎச
அங்கணர்தம்	சகஅ
அங்கணரைஅடி	உக
அங்கணரைஆமாத்	சகக
அங்கணரைப்பணி	ஙஙஅ
,,	சஐஉ
,,	சசுஎ
அங்கணரைப்போ	ஙசஅ
அங்கணன்அம்மை	உகஎ
அங்கணனேஅடி	டுஐசு
அங்கணுளர்தம்	ஙசுடு
அங்கணுளன்அதற்	சு
அங்கணேந்தமர்ந்	உகச
அங்கணேந்தருள	ஙடுஐ
அங்கணேந்திளம்	உசுஐ
அங்கணேந்துகோ	உஅஅ
அங்கணேந்துதம்	கஅஉ
அங்கணேந்துமண்	ஙசச
அங்கணேவார்தமை	சகக
அங்கதுகேட்டுநின்	ஙஉகு
அங்கப்பதிநின்	உஎச
அங்கப்பொழுதிற்	கஐ
அங்கம்எட்டினும்	ஙகச

பாட்டு	பக்கம்
அங்கம்ஓதியோர்	ஙகசு
அங்கம்மாநிலத்	ஙசக
அங்கயற்கண்ணி	ஙஙஎ
அங்கவர்எக	ஙஐடு
அங்கவர்தம்பின்	சகடு
அங்கவர்தாம்	சகச
அங்கவரும்அடி	ஙசசு
அங்கவரும்அமண்	கசுக
அங்கவள்உருவ	ஙசுஎ
அங்கவளும்மக்க	சஙடு
அங்கிவன்மலையில்	கசு
அங்கினிதமர்ந்து	சஙஉ
அங்குச்சிலநாள்	சஐஅ
அங்குதன்மையில்	உகடு
அங்குநாதர்செய்	சகஎ
அங்குநிகழ்ந்த	கஅக
அங்குநின்றரி	உகடு
அங்குநின்றுதிரு	ஙகஙு
அங்குநின்றும்எழு	ஙகஐ
அங்குநின்றெழுந்	உடுங
அங்குநின்றேறி	உசுசு
அங்குநீடருள்	ஙகஎ
அங்குமண்ணுலக	கசஐ
அங்குமவன்திரு	உகங
அங்குமுற்றிஅக	ககஅ
அங்குமுன்னெமை	டு
அங்குரைக்கென்	கஉ
அங்குவைகிப்	சசுடு
அங்குள்ளபிறபதி	ஙடுடு
அங்குறைத்தகண்	உஐடு
அங்குறையுந்தன்	உஐஉ
அங்குறையுநாளின்	ககஎ
அங்கைஅனலேற்	ஙடுஉ
அங்கொருநாள்	சசஙு
அச்சம்எய்தி	சடுஉ

அச்சமயத்திடை ககஉ
அச்சொற்கேட்ட கநிச
அஞ்சலிகுவித்த ஙகஉ
அஞ்சலிசென்னி சகச
அஞ்சனமஞ்சனஞ் சஜஅ
அஞ்சிஅகன்றோடி ஙசச
அஞ்சிறைச்சுரும் ஙஎஎ
அஞ்சும்உள்ளத்த ஙஉஅ
அஞ்சும்உள்ளமோ உஉநி
அஞ்சுவன்கரத் ககஙஉ
அஞ்செழுத்தோதி சசச
அஞ்சைக்களத்து உ0க
அஞ்சொல்திரு களநி
அடல்மூனமறவர் அ0
அடல்வளவர் சஅ0
அடல்விடையே அக
அடவிபடும்அங் நி0க
அடிகண்மார்எல்லா ககஎ
அடிகள்மார்முகங் ஙங0
அடிபணிந்திருமக களஎ
அடிமுதல்உபா நிக0
அடியவர்க்கடிய சஉ
அடியவர்கள்எதிர் உஅக
அடியவர்கள்களி உஅநி
அடியவரும்பதியவ ங0ங
அடியனேன்அறி கஙநி
அடியனேன்ஆதர உ0எ
அடியனேன்பிழை நிஉஉ
அடியார்இடுக்கண் சஉங
அடியாராம்இமைய உஅக
அடியேன்அங்குத் சஉங
அடியேன்உய்ந்தே சநி0
அடியேன்பெற்ற ஙக0
அடியேன்பொரு சநிஅ
அடியேன்மனையில் சநி0
அடித்ததிருத் நி0உ
அடித்தூமேன்மேல் ஙக
அடுப்பதுசிவன் நிக0
அடைத்திடக்கண்டு ங0ச
அடைமேல்அல கஉள
அடைவிலமண் ககஉ
அண்டத்திறைவர் உநிஉ
அண்டர்நாயகர் கசஉ
அண்டர்பிரான் உளக
அண்டர்பிரானுக் கநிசு
அண்டர்பூமழை ஙக
அண்டர்பெருமான் சகக
அண்டர்வாழக் சஉங
அண்ணல்அணைக் உசஉ
அண்ணல்அருக் களo
அண்ணல்திருமுன் சநிஉ
அண்ணல்தொடர்ந் சo0க
அண்ணல்வீற்றிருக் ங
அண்ணலவன்தன் ஙசு
அண்ணலார்அடி ஙஙநி
அண்ணலார்அருள் கசக
அண்ணலார்அருளிச உசு
” சஙக
அண்ணலார்அன் கசஎ
அண்ணலார்தமக் உநிக
அண்ணலார்திருஅ உநிக
அண்ணலார்திருஆ உஅங
அண்ணலார்திருக் க0உ
அண்ணலார்நிகழு எக
அண்ணலார்முன் சஙஉ
அண்ணலேஎனை உ00
அண்ணலேக்கை அசு
அண்ணுமலேஅங் ங்நிக
அண்ணுமலேமேல் ககஙசு
அணங்கனேயதிலக கநிக
அணங்கினும்மேம் ஙசுக
அணங்கேயாகும் சக0
அணிகிளர்தாரவன் உஎ0
அணிசிலம்படிகள் ஙநி
அணிமுத்தின்சிவி ஙஅச
அணியாரூர்மணி சo0உ
அணியாரூர்மறுகதி ஙஅஅ
அணைந்ததெதான் சகஅ
அணைந்தருளும் சo0சு
அணைந்துதிருக் ங்ஙங
அணையவந்துபுக் உஉச
அணையுந்திருத் உசுநி
அணைவுறவந்தெழு உசஉ
அணைவுறும்அக் உஅசு
அத்தகைமை உசுச
அத்தர்தந்தஅருட் நி
அத்தர்முன்புசென் சுள
அத்தர்வேண்டிமுன் கஅ
அத்தராகிய சக0
அத்தருவளர் ஙங
அத்தன்மைகேட் ஙசச
அத்தன்மையில் களக
அத்தனுய்அன் நி0நி
அத்திருத்தொண் ங்கநி
அத்திருப்பதிஅக உஅச
அத்திருப்பதிகத் ஙஉஅ
அத்திருப்பதிபனி உசுக
அத்திருப்பதியில் சு
அத்திருப்பதியினி களஉ
அத்திருப்பதியை ங்ஙநி
அத்திருமூதூர் கஅநி
அத்திருமூதூரின் உசுசு
அத்திருவாயில் ங0ச
அத்திறத்தமுன் ங்சுநி
அத்திறம்அறிந் சுஉ
அத்துறையின்மீக் ககஙக
அதன்மருங்கு உசுக
அதிகன்படை சஅக
அதிசயம்அன்றிஅ ககஅ
அதிர்கழல்உதியர் சநிஅ
அதுகண்டுடைய கஅக
அதுகண்டுவீரட் உக
அதுபொழுதே உள்க
அதுவும்மூனவர் சநிக
அந்தண்மறை கநிச
அந்தண்வெள்ளி உ0க
அந்தணர்அவை உநி
அந்தணர்கள்அதி கஙங
அந்தணர்கூறஇன் உசு
அந்தணர்சூளா ங்சள
அந்தணர்தஞ் சஙங
அந்தணர்தேவர் ங்ஙஉ
அந்தணர்விசய உசு0
அந்தணரின் கஅக
அந்தணனும் நிக
அந்தணளர்உரை உநிநி
அந்தணளர்தமை கநிநி
அந்தணளர்வண நிகஅ
அந்தணளரும்ஆங் சு
அந்தம்இலவாம் கஉஉ
அந்தமாற்றங்கேட் சக0
அந்தமில்சீர் சு
அந்தமில்பெரு ங்சுநி
அந்தமில்லாஅறி சஙஎ
அந்தமின்றிகல் கசஉ
அந்தமெய்ப்பதிகத் எ
அந்தரத்தமரர் சக
அந்தரத்தெழுந்த நிகசு

அந்தவிமானம் ககஉ
அந்தஞன சஙஅ
அந்திஇளம்பிறை சஙஙு
அந்திப்பிறை கஉஉ
அந்தியும்சண்பக சகக
அந்திவண்ணத் சகக
அந்திவான்மதி ஙி
அந்தகர்தன்னில் ஙூ0
அந்தகரத்தினி ஙி00
அந்தகரதனில் ஙிகஙூ
அந்தகரில்அடியார் ஙுசசு
அந்தகரில்அமர்ந் ஙுச0
அந்தகரில்அவ்வண் ககஙி
அந்தகரில்இனி ஙுசக
அந்தகரில்கொ உசுக
அந்தகரில்பாரளிக் சளக
அந்தகரில்வாழ்வா உளக
அந்தாட்டின் சகக
அந்தாட்டுத்திருப் சசுள
அந்தாட்டெல்லை சசுக
அந்தாள்இரவின் கஉங
அந்தாள்சிலதாள் உசுடு
அந்தாள்போல்எந் ஙி0ங
அந்தாளில்ஆளு கஅச
சகஙடு
அந்தாளில்எயிற் சசஉ
அந்தாளில்ஒரு உஅக
அந்தாளில்தம் ச0டி
அந்தாளில்தமக்கே கஅசு
அந்தாளில்திலக கடிக
அந்தாளில்மதுரை சசுசு
அந்தாளிற்கொடி உளஉ
அந்தாளிற்சண்பை சசள
அந்திலைஅணைந்த ஙூ0டி
அந்திலைஅணைய ஙி00
அந்திலைஅவரை ஙிஉ
அந்திலைஆரூரான் உக
அந்திலைஎழுந்த எள
அந்திலைநிகழ்ந்த ஙகசு
அந்திலைமைஅடை ஙளஉ
அந்திலைமைஆளு உளஉ
அந்திலைமைக்கண் சஉஅ
அந்திலைமைச்சாக் சசஉ
அந்திலைமைத் சஙச
அந்திலைமையினில் உ0டி
அந்திலையில்அன் க00
அந்திலையில்ஆளு உசடி
அந்திலையில்திருத் உச0
அந்திலையில்மிகப் கசு0
அந்திலையேஉயிர் கள
அந்திலையேசிவ ஙி0டி
அந்தின்றதொண் அஉ
அந்தெடுத்திருநகர் சஅடி
அந்தெறியின்மிக் கசுக
அப்படிக்கெதிர் ஙூஉள
அப்படிச்சின்னுள் கஅசு
அப்பணியால் சஅக
அப்பதிஅணைந்து ஙிகக
அப்பதிக்கண் ஙூகசு
அப்பதிக்குமுதல் உ0ள
அப்பதிதன்னில் உகச
அப்பதிதான்அந் உஙூ
அப்பதிநீங்கிஅரு ஙூகடி
அப்பதிபணிந் உசுஉ
அப்பதிபோற்றி உசுள
அப்பதியில்அமர் உஅ0
அப்பதியில்அன் ச0ங
அப்பதியில்குடி சகஙூ
அப்பதியில்குல க0க
அப்பதியில்விருப் ஙூடிடி
அப்பதியிலமர்ந் சசுசு
அப்பதியின்அந் உஙச
அப்பதியின்கண் உளஉ
அப்பதியைச்சூழ்ந் கஅக
அப்பதியைத் ஙூச0
அப்பர்சோற்றுத் உளடி
அப்பர்தாம்எங்குற் ஙூசள
அப்பர்நீர்இனிஇங் ஙடி0
அப்பரிசங்கவர் ஙூசசு
அப்பரிசருளப்பெ உகள
அப்பரிசவ்வினை களக
அப்பரேவேதவன ஙூ0ங
அப்பாலைக்குடபுல உளக
அப்புறத்திடை உடிஙூ
அப்புறம்புரள் ககக
அப்பூங்கானில் டிகஙூ
அப்பூதிஅடிகளார் உஉஉ
அப்பெருங்கல்லும் களக
அப்பெற்றியில் கூ0
அப்பொழுதங்கண் உசஉ
அப்பொழுதனைய எஉ
அப்பொழுதனை க0டி
அப்பொழுதின் உகள
அப்பொழுதுதிரு உஅசு
அப்பொழுதுபொற்உங்கு
அப்பொழுதேஅம் களஅ
அப்பொற்பதியினி சுங
அப்பொற்பதிவாழ் கஉக
அப்போதரையார் உகஅ
அம்பர்மாகர்அ உகசு
அம்பலத்தேஉல டி0அ
அம்பலவர்அடியா சசக
அம்பிகைஅளித்த உசசு
அம்பிகைசெம் களஅ
அம்பிகைதிருவுள் உகசு
அம்புயமலராள் ஙுகக
அம்புனிற்றாவின் கச
அம்பொன்மீடிய டிஉள
அம்பொன்மீடும் சளள
அம்பொன்மேலக் ஙடிஉள
அம்பொன்வார்குழ கஙடி
அம்மருங்குகடந்து ககஅ
அம்மருங்குகின்றயர்உகங
அம்மலர்க்குழலினு ஙஉங
அம்மலர்ச்சீர்ப்பதி ககள
அம்மலர்த்தடம் உஅஉ
அம்மாற்றங்கேட் சஅஉ
அம்மொழிகேட்ட உகடி
அம்மொழிமாலைச் கஅடி
அம்மொழிவிளம்பி ஙுகக
அம்மொழிவிளம்பு உசசு
அழுதுசெய்தபின் உசசு
அயல்கறும்புறவி கஙுக
அயல்வரைப்புலத் அசு
அயலறியாத டிஉ
அயலோர்தவழுயல் உஅ
அயவந்திஅமர்ந் உஅள
அயன்கபாலத்தரித் சசக
அயில்கொள்முக் கஉக
அரசர்அஞ்சலி டிஉங
அரசர்க்கமைத்த சசுங
அரசர்க்குலப்பெரு கசசு
அரசரவாபண் டி0க
அரசருளிச்செய்கி ஙூ0ள
அரசருளிச்செய்த உகஉ
அரசறியஉரை உகக
அரசன்ஆங்கருளி எடி
அரசனதுபணிதலை ககஙள

அரசனுக்குவெப்ப நகக
அரசனும்அதனை நிநக
அரசியல்ஆயத் சகஙக
அரசியல்ஆயத்தா சுஉ
அரசியல்தெறியின் சுo
அரசிலியைஅமர்ந் நஎக
அரசுகொள்கடன் நக
அரண்முற்றிஎறி சஅஉ
அரந்தைசெய்வார் நஅ
அரந்தைதீர்க்கும் கஅ
அரம்பையாடல் ச
அரவநெடுந்தேர் கசசு
அரவம்அணிந்த கஉஅ
அரிஅயற்கரியார் சஉஎ
அரிஅயனுக்கரியா களங
அரிஅயனேமுதல் உஙங
அரிசனமும்குங்கு உஎஉ
அரிதருசெல்வெற் கo
அரிதில்திறக்கத் கஅங
அரியஅத்திருத் நிoo
அரியகற்பின் சநிக
அரியகாட்சியர் நநஉ
அரியணையத்தனில் நிஉo
அரியதில்லைஎனக் சநிo
அரியநீர்மையில் நசுo
அரியானேஎன் களஎ
அரிவைகாரணத் சஙo
அரிவையர்தெரு நிஉo
அருக்கன்முதற் உஙநி
அருகர்அதுகேட் சஙஎ
அருகர்தம்மை சஙஅ
அருகர்தாம்இட்ட நஉஅ
அருகர்மதியாதரைஉஅ
அருகணைந்தார்த்த கசுஅ
அருகணையுந்திருப் உஅஅ
அருகுசூழ்ந்தார் சஉஉ
அருகுநிரு சசஅ
அருகுநின்றூர் சகஉ
அருகுபெரியதேவ சஉச
அருங்கடிஎழுந்த உக
அருட்பெருகுதனி களக
அருட்பெருமகிழ்ச் களஎ
அருத்தமிழாகார் நஅநி
அருத்தவத்தொண் நிக
அருத்தவத்தோர் நஎநி
அருத்தவர்எழுந் உஉக
அருத்தனயன்உயிர் கஅஉ
அருநிதித்திறம் நசுo
அருப்புமென்முலை நஅங
அரும்பெறல்மறவர் அங
அருமறைகள்திருக் நoநி
அருமறைநாவல் உசு
அருமறைப்பய கஉக
அருமறைமரபுவா நிகo
அருமறைமுறையிட் உச
அருமறைமுனிவ சஉநி
அருமறையத்தண கசசு
அருமறையாற் உசஎ
அருமறையான நoச
அருமறையோர் நஎச
அருமறைவாழ்நும் நஉக
அருமையினிற்ற சசஎ
அருவரைக்குற அச
அருவாகிஉருவா நிoஎ
அருவித்தசெம் கநஎ
அருவிலையிற் நoஉ
அருள்கொண்ட கசுஎ
அருள்செய்த ககக
அருள்நயத்தஞ் களஉ
அருள்பொழியுந் சசக
அருள்வெள்ளத் உஅo
அருளின்நீர்மைத் உ
அருளின்வலியால் சஎசு
அருளும்இக்கனக நகஅ
அரையிற்சரணத் கo
அல்லல்நல்குரா ககச
அல்லற்பவம்அற களசு
அல்லார்கண்டத் கஅஅ
அல்லிமலர்ப்பழ ககசு
அல்லிருள்அன்ன களக
அலகில்திருப்பதி உஅநி
அலகில்நீள்தவத் கசஉ
அலர்பகல்கழித்த அநி
அலரும்விரைசூழ் நகநி
அலறுபோர்ஆவை கநி
அவ்என்பின்ஒளி ககக
அவ்வகைஅவர்கள் நகக
அவ்வகைமருங்கு உசஅ
அவ்வகையதிருநக கசஅ
அவ்வகையால் சகக
அவ்வண்ணந்தொழு கசு
அவ்வழிஅந்திமா கள
அவ்வழிஅவர்கள் சுஉ
அவ்வளவில்அருந் நக
அவ்வளவில்ஆஞ் உசுக
அவ்வார்த்தைகேட் கசுந
,, நசஎ
அவ்வாறுபணிந் நஎ
அவ்வாறுமொழிந் கஉநி
அவ்விடத்தை கசுக
அவ்விரவுபுலர்கா நஅஎ
,, நஅஅ
அவ்வினைக்கிவ் உஎஉ
அவ்வினைசெய்தி களக
அவ்வுரைஅவையின் உநி
அவ்வுரைகேட்ட கநி
,, உகந
,, உஉக
அவ்வுரைகேட்டெ நசநி
அவ்வுரையில்வரு கசு
அவ்வுரையும் உளக
அவ்வூர்நின்றுந் உஉஅ
அவ்வேலையில் கஉச
அவம்பெருக்கும் உநசு
அவர்தங்கண் சஎ
அவர்நிலைமை கசுஉ
அவர்முன்பணி களநி
அவனிமிசை நoஉ
அவனுடையவடி கoக
அழகின்முன்னி நசுக
அழகினுக்கணியாம் நஅo
அழல்நீர்ஒழுகி நகநஉ
அழுக்குமெய்கொ சகள
அழுகின்றபிள்ளை உசo
அழுந்தியஇடரு நிக
அழைத்தபேர் நிசு
அழைத்துக்கொடு ககo
அள்ளல்நீர்வயல் உநிசு
அளக்கர்ஏழுமொ நஎஅ
அளவில்இன்பப் சசுக
அளவில்சனஞ் உகஅ
அளவில்தொல்கலை கச
அளவில்பெரும் சஎஅ
அளவில்பெருமை சநிக
அளவிலாதபெருமை உ
அளவிலாமகிழ்ச் உசஅ
,, நக
அளவிலர்மரபின் சஎ

அளிக்குலங்கள் உஎக
அளிமிடைகரை கூச
அளிமிடைதார் உகக
அற்றைநாள்இர உடுடு
அற்றைநாளில் சஎசு
அறத்தினில்மிக்க சசடு
அறம்பொருளின்ப கச
அறல்மலியுங் உஎஅ
அறிவில்அமணர் ககஉ
அறிவிற்பெரியவர் கஎடு
அறிவின்எல்லை சசுஉ
அறிவுற்றசிந்தைய உகக
அறுசமயத்தலைவ சசஉ
அறுத்ததலையி சடுஉ
அறுவகைவிளங் நஎக
அன்பர்அங்கிருப் கoசு
அன்பர்இன்புறும் நசுஉ
அன்பர்ஈட்டங் கஅக
அன்பர்கள்கொண் டுகசு
அன்பர்குழாத் நசஅ
அன்பர்மேற்கரு சஉசு
அன்பராய்அவர் நகந
அன்பரும்அமை டுகக
அன்பரும்என் சஉஅ
அன்பனேஅன்பர் சுo
அன்பனேஅருளின் உஎ
அன்பின்துணி கஉந
அன்பின்வந்தெதி நo
அன்பின்வென்ற சடுச
அன்பினுக்களவு நoச
அன்புகாராஅஞ் சகக
அன்புநீங்காஅச்ச நகச
அன்புநீடியஅருவி உஅஉ
அன்புபுரியும் கடுடு
அன்புபெருக நச
அன்புமிக்கபெரு சடுக
அன்புவேண்டும் சஉந
அன்பூதிமிசை ககஅ
அன்றாசருளிச் நoச
அன்றவர்க்குக் நசசு
அன்றவர்கள் கஅஉ
அன்றிரவுகண் கநஉ
அன்றிரவுகனவின் கoo
அன்றிரவேஆதி சகசு
அன்றிஞர்புர டுகo
அன்றுதிருநோக் சஉo
அன்றுபோய்ப் சசந
அன்றுவெண்ணெ சoஎ
,, சகந
அன்னஆதலில் நநந
அன்னஇம்மொழி கஎ
அன்னதன்திரு ச
அன்னதன்மையர் ககக
அன்னதன்மையி உஉடு
,, உஎசு
,, டுஉந
அன்னதாகிய சகo
அன்னதொல்நக கந
அன்னதொன்மை உoக
அன்னநாடுகடந் ககஅ
அன்னம்ஆடும் கo
அன்னவகையால் சஅஎ
அன்னவடிவும் சஉஅ
அன்னவண்ணம் ககo
,, சநஅ
அன்னவர்முன் சஉஅ
அன்னவன்பெயர் டு
அன்னேஉன்னே நகந
அன்னேயையும் உஅக
அனேத்துத்திறத் கடுஙி
அனேத்துலூல் உடு
அனேயசெய்கை உசo
அனேயதாகிய சஅடு
அனேயவாகிய கநக
அனேயனபலவும் அடு

ஆ

ஆங்கணிசொன் உசுக
ஆங்கணேயும்அவ கஅசு
ஆங்கதன்கரையின் கூச
ஆங்கதுகேட்டஅர கஎக
ஆங்கதுகேட்டலு ககக
ஆங்கதுகேட்டவேக் கடு
ஆங்கப்பணிகளான கஉஎ
ஆங்கப்பரிசைஅறி கஅக
ஆங்கவர்தஞ்சீலத் உடுஉ
ஆங்கவர்தந்திருத் கஎச
ஆங்கவர்தம்அடி சஎஅ
ஆங்கவர்தாங்கள் நoசு
ஆங்கவர்போற்றுஞ் உகக
ஆங்கவர்மனத் டுகந
ஆங்கவர்வாட்டம் உஉஉ
ஆங்கவர்விடமுன் நoசு
ஆங்கவரும்அன்று சஎந
ஆங்கவரும்உடன் சoo
ஆங்கவரைக்கண்டு நஎஉ
ஆங்கவன்தன்இல் உக
ஆங்கவன்தான் நசடு
ஆங்கவன்பர்தாம் சஅடு
ஆங்கவன்போய்த் கசுந
ஆங்கவன்யார் சஅo
ஆங்கவனும்விரைக் கஅக
ஆங்கனம்எழுந்து நகசு
ஆங்கனம்போற்றி நகந
ஆங்குடையபிள்ளே உஎக
ஆங்குநாதரைப் உடுச
ஆங்குமருங்கு கடுச
ஆங்குமற்றஅருள் உடுசு
ஆங்குமற்றவர் உoo
ஆங்குமுன்னீட்ட நஅஉ
ஆங்குவளர்எயிலி கசச
ஆங்குவனமூலை கடுஅ
ஆங்குவேதியில் உஉசு
ஆசனத்தில்பூசனை உஉo
ஆட்கொள்ளும் ககச
ஆட்சியில்ஆவணத் உடு
ஆடல்கீடுவதுகிற் உகந
ஆடற்சிலம்பின் சசுo
,, சசுக
ஆடியதிருமுன் நகஅ
ஆடினுய்கறெய் உடுந
ஆடுகின்றவர்பேர் நஉ
ஆடுதோகைபுடை நக
ஆடும்எனவாள் நநச
ஆடும்பெருமான் சசுஉ
ஆடுமயில்இனங்க ககக
ஆடுவார்பாடுவார் உoசு
ஆண்டஅரசங் உoச
ஆண்டஅரசதன கசுஅ
ஆண்டஅரசருள் கசுஅ
ஆண்டஅரசும் ககo
ஆண்டஅரசெழுந் களக
,, கஅந
,, கஅச
ஆண்டஅரசை ɜஎo
ஆண்டகைஅருளின் உஉ
ஆண்டகைமைத் கடுக
ஆண்டகையாரும் உசுசு

ஆண்டநம்பிஎதிர் சoஎ
ஆண்டநம்பிபெரு சசஙூ
ஆண்டுகொண்ட சகஙூ
ஆண்டெதிர்அணைந் அசஎ
ஆணையாமென கூஙூச
ஆத்திமலரும் கஙுஙூ
ஆதலாலேகுளி உஙூo
ஆதலினல்உன் நூசசு
ஆதாரமாயனைத் நுoஅ
ஆதிஆட்பாலவர்க் நூஙூ
ஆதிதிருஅன்பர் சஎo
ஆதிதேவர்அங்கமர் நூஙுக
ஆதிதேவர்எழுந்த உஙூo
ஆதிதேவர்தந்திரு எoo
ஆதிதேவர்முன் சகஙூ
ஆதிநான்மறை உஎக
ஆதிமந்திரம்அஞ் நூகஎ
ஆதிமாதவமுனி அ
ஆதிமாமறைத் உஅஙூ
ஆதிமுதல்வர்குரங் நூஙுஙூ
ஆதிமுதல்வர்தமை கஙூக
ஆதிமுதல்வரை நூஎக
ஆதிமூதெதியில் கசஎ
ஆதிமூர்த்திஅவன் சு
ஆதிமூர்த்திகழல் நூஙுக
ஆதியாய்நடுவுமாகி சஙூ
ஆதியார்கோயில் உசசு
ஆதியார்தம்அரத் உஙுச
ஆதியார்தம்மை சசச
ஆதியார்நீலகண் சஅ
ஆதியும்மேலும் சஎஅ
ஆதியோடந்தமில் உகஎ
ஆய்ந்தசீர்இரட் உகசு
ஆய்ந்தமெய்ப் உஎஙூ
ஆயஅந்தணர் கஎஅ
ஆயஅரசளிப்பார் சகஙுஙி
ஆயஅன்பர்தாம் சஎஙுஙி
ஆயஇசைப்புகல் கக்க
ஆயகுறிப்பினில் உஎஎ
ஆயசிறப்பிற்பூசனை சசுச
ஆயசிறப்பினுற் கஙுஎ
ஆயசெய்கையராய உoஅ
ஆயசெய்கையில் உஎச
,, நுஎக
ஆயசெயல்மாண் சகஙூ
ஆயசெயலின் சஎக
ஆயநாள்களில் நூசுஎ
ஆயநாளிடைஇப் கசுo
ஆயநானிலத் கஙூக
ஆயநிரையின்குல கஙுஙூ
ஆயநுண்பொரு நுஙூ
ஆயபலசெய்தொழிஉஎ
ஆயபொழுதுதம் உஙூo
ஆயபொழுதுதிரு ககக
ஆயபோற்றின் உஙுஎ
ஆயர்குலத்தை ககஎ
ஆயவாரிருளின் கக்கூ
ஆயவாறுமற்றவர் உoஎ
ஆயவேலையில் நூசுச
ஆயிடைநீங்கி நூக்சு
ஆயினும்பெரியா நூஙூஎ
ஆயுள்வேதக்கலையு சசஙு
ஆர்கொல்பொர எஅ
ஆர்த்திகண்டும்என் நூஅ
ஆர்தமராகநீரிங் கூசு
ஆர்வநிறைபெருஞ் சசஎ
ஆர்வம்மிக்கெழும் நூஎஎ
ஆரங்கண்டிகை கக்
ஆரணக்கமலக் சஎக
ஆரணங்கள்மதுர உசுஎ
ஆரணங்களேஅல்ல கஙூ
ஆரணமும்உலகே உசo
ஆரணமொழிகள் நுஎo
ஆரணியத்துலர்ந் நுoஅ
ஆரநறுஞ்சேறுட்டி நூக்க
ஆரம்உரகம்அணிந் நுகஅ
ஆரம்என்புபுனைந்த நுஎ
ஆராஆசைஆனந்த சசுக
ஆராதகாதலுடன் சசுஅ
ஆருயிரின்திரு உoடு
ஆரூரர்அவர்தமக் சஎஙூ
ஆரூரர்தம்பால் சஎச
ஆரூரர்மொழிந் சஎஙூ
ஆரூரன்தனக்கு நூஅஎ
ஆலங்காடதனில் உகஎ
ஆலகிழற்கீழிருந் சoச
ஆலமேஅமுதமாகஙூஉங
ஆலவாய்அண்ண நூஙூஎ
ஆலவாய்அமர்ந் நுகசு
ஆலின்கீழ்கால்வர் நூக்சு
ஆலும்மறைசூழ்கயி உஎ
ஆலைசூழ்பூகவேலி சசச
ஆலைபாய்பவர்ஆர் கo
ஆவடுதண்டுறைஅ கஅo
ஆவடுதண்டுறையா சாஙுஙி
ஆவணம்பறிக்க உச
ஆவதிதுகேண்மின் உங்
ஆவதும்அழிவ நூஉஉ
ஆவதென்இதனைக் கூச
ஆவதென்உன்பால் நுo
ஆவதென்பாவிகாள் நூக்க
ஆவதேசெய்தீர் சஉசு
ஆவதேல்நுமக் நூகசு
ஆவதொன்றிது நூகசு
ஆவிதங்குபல்குறி நூசுஙூ
ஆவின்நிரைக்குலம் ககஎ
ஆவினிரைமகிழ்வு சஙூச
ஆழ்கதீயதென் நூஙூஉ
ஆழிசூழ்ந்திரு நுகஎ
ஆழிநெடுமால் சoஎ
ஆழிமாநிலத் சஎஙு
ஆழிவிடம்உண்ட கஎஅ
ஆளிடவேண்டி நூஅஎ
ஆளுடைத்தொண் எஎ
ஆளுடையநாயக்ன் கஅக
ஆளுடையாளுட உஙுடு
ஆளுடையாளுட நுஎ
ஆளுடையாளுடன் நுஎ
ஆளும்அங்கணர் நூகசு
ஆளும்அங்கணருக் சசச
ஆற்றில்நீர்கடுக நூஙூக
ஆற்றின்மேற் நூஙூடு
ஆற்றுநாள்களில் நூசுஉ
ஆறணிந்தசடை சஅஙூ
ஆறணிந்தார்தமை நூஙூக
ஆறணியுஞ்சடை உகஙூ
,, சஉo
ஆறலைத்துண்ணு அஙூ
ஆறுகொண்டோடு நூஙூக
ஆறுசடைமேல் கஅஅ
ஆறுசூடியஐயர் நுஙூ
ஆறுசூடியமுடியி நூசுக
ஆறுசெஞ்சடை கoடு
ஆறுதிங்கள்ஒழிந் சடுச
ஆறுபெருகிஇரு சஎo
ஆறும்மதியும் எஉ
ஆறுமுடிமேல் சடுடு
ஆறுலவுசெய்ய உங்எ
ஆறுவகைச்சமயத் நூஅச

ஆனஅத்திருப்பதி உகூச
ஆனஅப்பொழுது உகசு
ஆனஅருள்கொண் சருள
ஆனஅற்றன்றி ஙஙச
ஆனஅன்பர்தா சஅள
ஆனஅன்பர்திரு ருoஎ
ஆனகவலைக்கை சஎஉ
ஆனகீர்த்தொண் எசு
ஆனசெயல்அன் ஙஅசு
ஆனசெயல்முறை சஅங
ஆனசெயலால்தி ருகங
ஆனதங்கேள்வர் சஎ
ஆனதன்மைகண் சுஅ
ஆனதன்மையின் ஙசுசு
ஆனதொண்டினி சஎசு
ஆனதொல்நகர் கஙக
ஆனந்தவெள்ளத் ககுஅ
ஆனநாள்செல ஙசுo
ஆனநாளொன் சஅசு
ஆனநிலைமைகண் சசுஉ
ஆனபுகழ்த்திரு ஙஙஅ
ஆனபெருமை கஉள
ஆனவன்பிணிநிக ஙகக
ஆனவாகனம்எறு ஙளஅ
ஆனைதீர்த்தில்லை களடு
ஆனையர்குழலோ கஉo
ஆனைவிருப்பின் ஙஅக
ஆனிசைகள்அரு ககக
ஆனிசைகூடஅக ககள
ஆனைஇனத்தில் ககஉ
ஆனைக்காவில் ருகடு

இ

இக்கந்தைஅழுக் கசக
இங்கதுபிழைப்ப எங
இங்கிதன்நாமங் உ
இங்கெழுந்தருளு ஙகங
இங்ஙனம்இரவும் ககக
இசைவிளங்கிட உடுக
இசைவிஞல்எழுது உடு
இஞ்சிசூழ்வன ஙஅடு
இட்டஎட்டினில் ஙஉஅ
இட்டநன்ஞள் சசுo
இடங்கழியார் ருoக
இடமருங்குதனி ஙo
இடியுற்றெழும் களo
இத்தலைஇவர் உடுசு
இத்தன்மைஅரம் உoசு
இத்தன்மைஈசர் கஙக
இத்தன்மைசிவ உஅக
இத்தன்மைநிகழ்ந் கசுடு
இத்தன்மைநிகழு சசஅ
இத்தன்மையர் களசு
இத்தன்மையராய் உoக
இத்தன்மையினை டுகஅ
இத்தனைகாலமும் அள
இத்தனைபொழுது கoஉ
இத்திருநாடுதன் அஉ
இதற்கினிஎன்கண் கoங
இதற்குமுன்எல்லை ஙடு
இதுஎனக்குமுன் டுங
இந்தநன்னிலை ககங
இந்தநிலைமையாரி சoக
இந்தநிலைமையிலி சஙடு
இந்தமாதவர்கூட்ட கக
இந்தமாநில்த்திறந் ஙசுசு
இந்தமாநிலத்தின் உடுடு
இந்தவகையால் ருoக
இந்தனத்தைமுறி கக
இந்நாளில்நிருப் களச
இந்நியதிபரிவோ சசஙட
இந்நிலைஇவர்வர் ஙoக
இந்நிலைஇவன்இங் உகச
இந்நிலைக்கண் உடுடு
இந்நிலைமைஉதி சஎடு
இந்நிலைமைஉல உoசு
இந்நிலையவெங் அo
இந்நிலையிற்பேரின் சகசு
இந்நெறிஒழுகுநா கoடு
இந்நெறிஒழுகும் சஅ
இந்நெறியால்அர சகஉ
இந்நெறியொழுகு ஙoசு
இப்படிஅமணர் ஙகo
இப்படிஇழந்த சுo
இப்படித்தாகிய கஙo
இப்படியால்எய்து ஙசடு
இப்பத்தர்இப் உகஅ
இப்பரிசணையுஞ் ஙகஉ
இப்பரிசாயிருக்க கஙஉ
இப்பரிசிவர்க்குத் சுo
இப்பரிசுதிருவமு கoo
இப்பிறவிபோய் கஙஉ
இப்பெருஞ்சிறப் சஎடு
இப்பொழுதேதவர் சகக
இம்மலைவர்தெனை கoக
இம்மாயப்பவத் உoசு
இம்முனையர்பெ சஅங
இம்முனையவெம் அo
இம்மையிலேபுலி ஙடுசு
இமம்மலியஎடுத் கசசு
இயம்பலதுவைப்ப உக
இயற்பகைமுனி டுசு
இரந்துதாங்கொடு சoசு
இரவுகனவில்எழு சடுஅ
இரவுசென்றுதம் உஉக
இரவுபாதகர்செய் ஙகக
இருக்கோலம்இடும் ஙஉ
இருதிறத்தவரும் ஙஉo
இருந்தஇடைச்சு ஙஎக
இருந்தடங்களும் உடுங
இருந்தவத்தோர் ஙஙக
இருபெருவேந்த சசுஎ
இரும்புவனம் உஙசு
இருவர்திருவுள்ள சசுச
இருவரால்அறிய டுடு
இருவருந்தம்பிரா சஉக
இருவரும்எழுந்துபு எசு
„ வா
இருவினைப்பாசமு களஉ
இருள்மறைமிடற் உசு
இருளாரும்மணி சதo
இல்லத்திற்சென் க
இல்லாளன்இயல் சஙடு
இல்லாளன்வைக்க உகஉ
இவ்வகைஅரசின் உஉஉ
இவ்வகைஇவர்கள் ஙoடு
இவ்வகைஇவர்வர் சஉக
இவ்வகைதிரு ஙoடு
இவ்வகைநம்மை ஙஅo
இவ்வகைப்பல கசசு
இவ்வகைபரவித் ஙகச
இவ்வகைபலவும் களச
இவ்வகையதிரு கடுஅ
இவ்வகையால்தந் கஙக
இவ்வகையால்திரு சகஙட
இவ்வகையேதிரு சஅச
இவ்வகைவரு கஙட

இவ்வண்ணந்தின் அள
இவ்வண்ணம்இரவு கஙஉ
இவ்வண்ணம்எழு கஉங
இவ்வண்ணம்பெரு கஙக
இவ்வண்ணம்போ களஙட
இவ்வளந்தரு கஙக
இவ்வாறருளிச் நிகக
இவ்வாறுகேட்ட அக
இவ்வாறுநிற்பன கஉ0
இவ்வாறுலகத்தின் கஉங
இவ்வாரெழுகு சசுச
இவர்தமைக்கண் கநி
இவர்நிலைஇதுவே நகள
இவணியர்பெற் சஙச
இழைத்தஅன்பினி சுக
இழைத்தடங் உநி0
இழையணிமூன்நூல் நி0
இளமையில்அனைய நசுள
இளமையில்மிக்கு சஅ
இளைத்தனர் கள
இறவாதஇன்ப உகள
இறைஞ்சிஎத்தி உளநி
இறைஞ்சிப்போந் நகஂ0
இறைஞ்சுதலும் சசசு
இறையுந்தாழா சநிங
இறையோன்அடிக் கநிச
இறைவர்ஆணை சநிக
இறைவர்கோயில் சளக
இறைவர்திருக்கா ஙநிள
இறைவர்திருத் சசுள
இறைவர்விரைவி சஉச
இன்பம்பெருகுந் சநிசு
இன்புற்றங்கமர்ந்த நஎக
இன்புற்றங்கமர்கா சஂ0உ
இன்புறுதாரம் நிசு
இன்றிவர்பெருமை சள
இன்றுநீரெனக் நிங
இன்னசெயலின் சஙக
இன்னடிசில்கறி உகஉ
இன்னணம்விளங் ஙசுஅ
இன்னதன்மைய ஙக
இன்னதன்மையில் கசுசு
,, உநிங
இன்னதன்மையிற் ஙசு0
,, நிஉக
இன்னநல்லொழு உ0அ
இன்னபரிசுதிருப் உஉக
இன்னபரிசென் சகஉ
இன்னம்பர்மன்னு உசுள
இன்னல்தரும்இழி கஙஉ
இன்னவகையால் உஙக
,, சகஅ
இன்னவண்ணம் ஙநிச
,, சநிஅ
இன்னவாழ்பதி ஙஅசு
இன்னவாறணி ஙசுச
இன்னவாறருள் ஙகநி
இன்னவாறுசொன் உகள
இன்னவாறுவளஞ் நிள
இன்னவாறெலாம் ஙசுஉ
இன்னவாறேஇவ உ0க
இன்னவாறேத்து சஉ
இன்னவாரெழுகு சு0
இன்னனஇரண்டு ஙஙட
இன்னிசைஎழும் உசஙட
இன்னிசைபாடின உசுநி
இன்னிசைவண் உசுக
இன்னுயிர்செகுக்க சுஙட
இனியமழலைக்கிங் சநிஉ
இனேயகடுஞ்சமர் சகநி
இனேயபஂறிரு சளநி
இனேயபலவேறு ஙளசு
இனேயவகைஅற கள

ஈ

ஈங்கிவன்குறித்த உகநி
ஈசர்மிழலைஇறைய கஅஅ
ஈசனடியார்க்கென் சசநி
ஈசனருள்எனக் உகஙட
ஈசனுக்கேஅன் நி0சு
ஈசனேயேபணிந்து நி0சு
ஈண்டுசாதுக்கள் ஙஙச
ஈண்டுதீவினை கசஙட
ஈரமேனியைநீக்கி நிஅ
ஈரவேபூட்டும்வா எசு
ஈறில்பெருந்தவம் உசஉ
ஈறிலாப்புகழின் சஙக0
ஈன்றுளுமாய் களஉ

உ

உடுத்தகோவணம் சுஅ
உடைஒழிந்தொரு கசுசு
உடையஅரசுலகேத் உஅ
உடையாதர்அமு சநிஉ
உடையபிள்ளையார் உசு0
,, ஙசுஙட
உடையொடுகல்ல நிகஙட
உண்ணீர்மையிலு கஅகக
உண்ணீரின்வேட் சo0ச
உணங்கல்மீன்கவர் சஅநி
உணர்வின்நேர் உநிக
உணர்வுபொதுச் ஙசுநி
உணர்வும்ஆவியும் ஙகக
உதியர்பெருமாள் நிஉ0
உதியர்மன்னவர் நிஉஉ
உம்பர்உய்ய சகஉ
உம்பர்தங்கோனே களஙட
உம்பர்நாயகர்தம் ஙள
உம்பர்நாயகர்பூச கச0
உம்பர்நாயகரடியார் சஙட
உம்பருய்யநஞ்சுண் ஙசஉ
உம்பருலகதிசயிப்ப உசநி
உம்மூடையகிலை சசசு
உம்மூடையபெரு ஙளநி
உம்மைப்போல சநிச
உய்யவந்தசம்பந்த உநிநி
உரிமைஒழுக்கந் சஅள
உரிமைகாளில் சநிள
உருகியஅன்புறு உஅசு
உருகியஅன்பொடு க0க
உருகியஅன்பொழி சளச
உருளாட்டுஞ்செய சசநி
உரைகுழறிமெய்ந் ஙஉக
உரைசெய்துவிரை கசச
உரைப்பார்உரை நிகக
உலகம்உய்யவும் எ
உலகமுய்யநஞ் சளசு
உலகர்கொள்ளும் உ0அ
உலகியல்புநிகழ்ச் ஙo0க
உலகியல்வேதனு ஙஙஉ
உலகில்இல்லதோர் சுஅ
உலகின்இயல்பும் சநிசு
உலகினில்ஒழுக்க நிக0
உலகுநிகழ்ந்தபல் நி0உ

உலகுபுரக்குங் ௪டுஎ
உலகெலாம்உணர்ந் க
உலகெலாம்உய்ய ஙகூடு
உழுதசால்மிகவூறித் க
உள்கிறைந்தெழுந் கூடு
உள்ளத்தில் ஙடுஅ
உள்ளகிறைகலேத் ௪டுடு
உள்ளம்அன்பு டுஅ
உள்ளம்ஆருருகாதவ கஙக
உள்ளம்இன்புற உஅ௪
உள்ளவண்ணம் டு
உள்ளுந்தகைமை கடுஉ
உள்ளும்புறம்புங் டு0உ
உளங்கொள்மறை உஙஙக
உளத்திலொரு ௪கூஉ
உளம்மகிழக்கும்பி ௪சுசு
உற்பவித்தெழுந்த உகசு
உறியுடைக்கையர் ஙஉசு
உறுகவின்மெய்ப் கக0
உறையுளாகிய உஉ௪
உனக்கவன்தன் க0க

ஊ

ஊர்தொறும்பலி க0சு
ஊரில்விடும்பறை கஙக
ஊழிமுடிவில் உகூக
ஊழிமுதல்வர்க் உடுக
ஊறுகாதலில் உகூ௪
ஊன்அடைந்த க
ஊன்அமுதுகல்லே க00
ஊனுடம்பிற்பிறவி ௪ஙடு

எ

எங்கணுமெய்த் ஙஎசு
எச்சில்மயங்கிட உ௪க
எஞ்சாதபோன்பி ௪00
எடுக்கும்மாக்கதை க
எடுத்தஅத்திருப் டுஉக
எடுத்தஎட்டினே ஙஉஅ
எடுத்தகுழற்கருவி ககள
எடுத்தகிருப்பதிக உ௪டு
எடுத்தபாட்டினில் ஙசுசு
எடுத்தமனக்கருத் கசுஙட
எடுத்தவண்தமிழ் உஅஙட
எடுத்துடன்ற ௪கூடு
எடுத்துரைத்தபுத் ஙடசு
எண்டிசைத்திறத் ஙடஅ
எண்டிசையினுள் ஙடசு
எண்டிசையும் ஙடுடு
எண்ணரியசிவஞா உ௪0
எண்ணருஞ்சீர்த் உ௪அ
எண்ணரும்பெருவ க௪உ
எண்ணரும்பெரு ஙஙள
எண்ணுதடியேன் ௪டு0
எண்ணியஓசைஐந் உள
எண்ணியநூற்பெரு ககக
எண்ணில்ஆகமம் கஙக
எண்ணில்திருவிள ௪அக
எண்ணில்பெரும் டு0க
எண்ணில்பேர்உலக ங்க
எண்ணிலாண் ஙசுஅ
எண்ணிறந்தகட கூக
எண்ணிறந்தபரிச ௪0௪
எண்ணும்இவ்வுலக டுஅ
எத்தன்மையராயி ௪௪க
எத்திசையுந்தொ ஙகக
எதிர்கொண்ட டு0௪
எதிர்கொண்டிறை ககடு
எதிர்கொண்டு ஙஎடு
எதிர்சென்றுபணி ஙசள
எதிர்வரவேற்றசா ஙஅஉ
எந்தைஈசன்என உடுள
எந்தையாரவர் ஙஙங
எந்தையும்எம்அ கசு0
எங்கிலையில்கின்ற ௪௪உ
எப்பொருளும் உ௪க
எப்போதும்இனி டு0அ
எம்பிராட்டிஇவ் எ
எம்பிரான்கோயில் உசு
எம்பிரான்சிவனே ஙஙடு
எம்பிரான்யான் ௪கூ
எம்பிரான்எந்தை ௪ஙட0
எம்பிரான்தன் டுகச
எம்பிரானேநீர் ௪கஙட
எம்பெருமான்இத ௪கடு
எம்பெருமான்நீர் ள௪அ
எம்மருங்குங்கிரை ககஅ
எய்தியவர்தம் ௪டுசு
எய்தியசீர்ஆகமத் கூஅ
எய்தியபேரானந் உ0ச
எய்துமவர்குறிப் கச௪க
எய்துமென்பெடை ஙஙஅ
எய்ப்புநீங்கிநின்ற ககஙட
எயில்குலவும்வள கடுஅ
எயிலணையும்முகி ௪அஅ
எரிஅவிழ்காந்தள் ஙசுள
எரியிடைவாதில் ஙட0
எரிவிடம்முறை உஉக
எருக்கத்தம்புலி டுகசு
எல்லாஉலகும் கடுசு
எல்லாம்உடை ௪௪உ
எல்லாரும்புகுந்த டு0ச
எல்லஇல்லாக் ௪உங
எல்லையில்ஞானத் ஙஎக
எல்லையில்பல் ௪அக
எல்லையில்பெருங் ஙசுஉ
எல்லையிலாமறை உ௪க
எவ்வுலகும்உய்ய ௪ஙட
எழுதாதமறை ககசு
எழுதுமாமறை உஎடு
எழுந்தபொழு உஉஅ
எழுந்தனசங்கரா ஙஅக
எழுந்திரைமா டு00
எழுந்துபணிந்து சசுடு
எழும்பணியும் கஅஉ
எள்ளுஞ்செயல் கஉஉ
எறிந்தஅதுவே கடுசு
எறிபுனல்பொன் க௪0
என்செய்தாய் கூசு
என்செய்தால்இது ௪கச
என்செய்தால்தீரு க0ட
என்னினைந்தணைந் ௪உடு
என்பொருட்டவர் ஙகஅ
என்மகன்செய் கசு
என்றடிவீழும் ௪உஅ
என்றபொழுதவர கசுச
என்றபொழுதில் ௪சு0
என்றபோதுமன் ஙஉள
என்றமண்கையர் ஙஉக
என்றாசன்இகழ்ந் கசு
என்றருளிச் ௪அஉ
என்றலுஞ்சுற்றத் உகடு
என்றலும்கின்ற உ௪
என்றவர்அருளிச் டுச
என்றவர்உரைத்த ஙஉஉ
என்றவர்கள் ஙஉள

என்றவர்கூற கசுங
என்றவர்போற்றி ககடு
என்றவர்விண்ணப் உகஙக
என்றவர்விரைந்து சகக
என்றவருரைத்த எஙக
என்றவன்உரைப் ஙஉச
என்றவன்கூறக் சுங்க
என்றவன்முன் ககசுங
என்றவுரைகேட்ட ஙக
என்ருன்இறை உஙக
என்றிவ்வுரை கஉடு
என்றின்னனவே சo
கடுஉ
,,
என்றினையபலகூ உசஙக
என்றினையபலவு ஙஎ
என்றிவ்வுரைகே கஉடு
என்றுகணவர் சடுங்க
என்றுகவுனியப் ஙoo
என்றுகூறஇறைஞ் டு
என்றுகூறஎல்லை ககஙக
என்றுகூறலும் ஙககசு
என்றுகூறியஇய டுஙக
என்றுகூறிஅங்க உஅஙக
என்றுகூறுவார் ஙககசு
என்றுசாலவும்அ ஙஎ
என்றுதங்களுக்கீ உடுஎ
என்றுதம்பிரான் சுடு
என்றுதம்பிரானுர் ஙகஅ
என்றுதம்மைஈன் சகo
என்றுபகைத்தோ எக
என்றுபலமுறை ஙச
என்றுபிள்ளையார் உகசு
என்றும்இன்பம் டுஉச
என்றும்உள்ள கசச
என்றுமற்றுளோ சஅசு
என்றுமனேவி சடுo
என்றுமாமுனிவன் எ
என்றுமுன்கூறிப் ஙஉo
என்றுமெய்த் கoஎ
என்றுரைக்கஅர உகஅ
என்றுரைசெய்அந் உங
என்றுரைத்தசாரி ஙசச
என்றுவாகூறலு ஙஉஎ
என்றெழும்ஓசை உஎ
என்னஅதிசயம் சoo
என்னஅவ்வுரை டுஙக
என்னவாதுசெய் ஙஉஎ
என்னும்பெயரின் சுஙக
எண்ணேஅடியார்க் சசுo
எனமொழிந்து கசு

ஏ

ஏகம்பன்காண் ககடு
ஏகமாஞ்சிவமெய் ஙஅங
ஏட்டுவரியில்ஒற்றி சoக
ஏடகம்பிள்ளையார் ஙஙடு
ஏடதீஎன்செய்தா டுச
ஏடுகள்வைகை ஙஙo
ஏடுநீர்எதிர்ந்து ஙஙடு
ஏத்தாதேஇருந் சoக
ஏதமில்நீர்மறைய ஙஎச
ஏதமில்பலயோனி கசo
ஏதமில்பெருமைச் சஙo
ஏதமேவிளைந்த ஙஙo
ஏய்ந்தஅடிமை சஙஅ
ஏய்ந்தகடல்சூழல சகசச
ஏயமாந்தரும் ஙஉஎ
ஏயுமாறுபல்உயிர் கஙச
ஏர்கெழுமார் ஙசுஅ
ஏரின்மருவும் ஙகசு
ஏரின்மல்குவளத் டுஎ
ஏலஇக்கலம் ஙஎஅ
ஏலங்கமழ்கோதை கஉசு
ஏழுவிரலிடைப் ககஅ
ஏற்றதொண்டரை டுஉக
ஏற்றிஞர்அருள் உoo
ஏறணிந்தவெல் ஙஎக
ஏறுகாற்பன்றி கூஅ
ஏறுதற்குச்சிவிகை உடுடு
ஏறுயர்த்தார்திருப் உஎச
ஏறுயர்த்தார்சைவ ஙசஙட
ஏனமோடுமானி கூஉ

ஐ

ஐந்துபேர்அறிவுங் ஙக
ஐந்துவருடம் கடுக
ஐயமின்றிஅரிய சகo
ஐயர்அங்கணேந்த சஉஎ
ஐயர்கைதவம்அறி சுசு
ஐயர்கோலம்அங் உoஉ
ஐயர்நீர்அருளிச் டுo
ஐயர்நீர்அவதரித் உடுஙட
ஐயர்நீர்யாழ்இதனேஉஅசு
ஐயரேஅம்பலவர் கஙங
ஐயவியுடன்பல ஙஎ
ஐயாறதனேக் சஎo
ஐவனஅடிசில் அசு

ஒ

ஒக்கஅமுதுசெய்த சசுஙட
ஒக்கஎடுநாள்இவ சுசச
ஒடியெறிந்து கூக
ஒண்துறைத்தலை க
ஒப்பரியபேருவகை ஙஎடு
ஒப்பில்பெருங்குடி ககசு
ஒருகுடைக்கீ சஎக
ஒருகுன்றவில் உகக
ஒருதனித்தேவி டுoo
ஒருபிறப்பும்எய்தா உசுஙட
ஒருமகள்கூந்தல் ககஉ
ஒருமூன்கைத் ககக
ஒருமைஉய்த்தறல் ஙசுடு
ஒருமைஉரிமைத் சஎசு
ஒருமைந்தன் கள
ஒருவர்ஒருவரிற் சசுஉ
டுஉo
,,
ஒருவாறுபெருங் கசுo
ஒழியாப்பெருமை டுகள
ஒளிகதிர்த்தரளக் ஙஅo
ஒற்றியூர்வளகர கசுசு
ஒற்றியூரின்உமை சoக
ஒன்றியசிந்தை உடுஙட
ஒன்றுமனத்தார் சடுஉ
ஒன்றுவேறுணர்வு ஙஙஎ

ஓ

ஓங்கியகாற்குல கசஎ
ஓங்குகோவணப் சுசு
ஓங்குசெல்வெலின் கஙஎ
ஓங்குதிருப்பதிகம் உஅக
ஓங்குபுனற்பேணு உகஅ
ஓடிஅருகர்கள் கஎo
ஓணகாந்தன்றளி சoஎ
ஓதமலிநீர்வி சஅஅ

ஓதுகிடையினுட கடுஉ
ஓரெழுநாள் கசுஅ
ஓலைகாட்டென்று உச
ஓவாதேபொழியு கசக
ஓவியம்நான்முகன் ஙசு

க

கங்குலிற்பள்ளி உஉசு
கங்கைநதிகரந்த நு0
கங்கைநீர்கரந்த சஉடு
கங்கைநீர்கலிக்குஞ் க0டு
கங்கைநீர்த்துறை சஙஙட
கங்கையும்மதியும் ககக
கங்கையேமுதல் உ0க
கங்கைவார்சடை ஙசுடு
கஞ்சனூர்ஆண்ட உசுஎ
கஞ்சாறர்மகட் ககக0
கட்டியஉடை நு00
கடகரிதுறையிலாடும் எக
கடல்மிசைவங்கம் உகச
கடல்விரிபுனல் கூஉ
கடிதணைந்துவாகீ உகக
கடிதுமுற்றிமற்ற நு0உ
கடிந்துவந்தமுது உ0க
கடுமுயற்பறழி அடு
கடுவிசைமுடுகிப் எச
கடைகாவலுடை கசுஎ
கடைஞர்மிடைவய கடுஎ
கடையுகத்தில்ஆழி கஎஅ
கடையுகத்தில்தனி உஙக
கடையுடைக்காவ சுக
கண்கட்டிவிடுங் கஉச
கண்கள்எண்ணிலாத உ0
கண்கொள்ளாக் ஙசு
கண்டஅப்பெருங் உ0டு
கண்டஅப்பொழு ஙஉச
கண்டஅப்போதே ஙo0டு
கண்டஆனந்தக் உ0க
கண்டகவுணியக் உசுச
கண்டசடைச் சஅஙட
கண்டத்திடை அக
கண்டதோர்வடிவால் சஉ
கண்டபின்அவர் உடுசு
கண்டபின்கெட் க0ங
கண்டபொழுதமண் ஙஉக
கண்டபொழுதேக ஙஎ0
,, கெ அக
,, கை உசுக
,, நடி சஅஉ
கண்டபோதிலப் கச0
கண்டபோதே கடுடு
கண்டமாந்தர்கள் ஙடஎ
கண்டருளும்படி சசுஅ
கண்டவர்இதுமுன் எஙட
கண்டவர்க்குறுகாத சுடு
கண்டவர்கண்கள் ஙகூடு
கண்டவர்கள்அதிச சஉ0
கண்டவர்கைகள் ஙகஎ
கண்டவர்வியப்புற் உகசு
கண்டவியப்புமற் ககஉ
கண்டனர்கைகளார நுஉ
கண்டார்கள்கைத கஎஙட
கண்டியூர்வீரட்டர் உஎச
கண்டுசென்றணையு சுக
கண்டுதொழுதுகீ கஅஙட
கண்டுதொழுவ உ0உ
கண்டெதிர்போற் உகக
கண்ணகன்புகலூரி உகசு
கண்ணுர்ந்தஇன்ன சஅடு
கண்ணுர்ந்துதிருநு ஙo0அ
கண்ணுரும்அரும உஅக
கண்ணிடைகரந்த உஉ
கண்ணின்மணிக சஙஙக
கண்ணினுக்கணியா ஙஉஙட
கண்ணுதல்கண்ணி க0ங
கண்ணுதல்கோயில் சஉ
கண்ணுதலார்கண ஙஅடு
கண்ணுதலார்திரு சசஎஎ
கண்ணுதலார்விரு ஙகக
கண்ணுதலிற்காட் சசக
கண்ணுயில்எய்தார் சஉஎ
கண்நீலக்கடைசியர் க0அ
கண்மலர்கள்நீர் உச0
கண்மலர்காவிகள் ககசு
கணவர்தஞ்செய் சஙக
கணவர்தாம்வண உகடு
கணவன்தான்வர உகஉ
கணவனூர்த்தம்மை நுக
கதிர்இளம்பிறைக் சுசு
கதிர்மணிபிறந்த ங்டு
கதிர்முடிமன்னனு சசசு
கதிரவன்உச்சி கூச
கதிரோன்எழு எஅ
கந்தம்கமழ்மென் ச0
கந்தமாம்வீனை ஙசடு
கந்தியர்தம்மில் ஙக0
கந்துசீறுமாலி ஙஉசு
கந்தைபுடைத் கசக
கம்பர்காதலிதழுவ கசக
கம்பவாணர்கோயி ஙடுச
கயமொடுகய சஅ0
கயல்பாய்பைந்தட கூ
கயிலைமால்வரை உ00
கரண்டமலிதடம் கஅடு
கரந்தரும்பயன் கசக
கரவாடும்வன் ககூடு
கரிப்பருமருப்பின் அச
கரியகண்டர்தங் நுஉக
கருகாவூர்முதலாக கஅக
கருகியமாசுடை ஙஉ0
கருங்கதலிப்பெரு கடுஎ
கருங்கதிர்விரிக்கு அச
கருங்கழிவேலைப் ங0க
கருதரும்பெருமை சஙக
கருதுங்கடிசேர்ந்த ஙசுச
கருநடங்கழிவாக ககஅ
கருநீலமிடற்றர் டுகடு
கருப்புவில்லோனே க0அ
கரும்படுகளமர்ஆலைக் கக
கரும்பல்லசெல் கூ
கரும்புசெந்நெல் உடு0
கருமுகில்என்ன க0உ
கருவரைஒருதனு கூஉ
கருவரைப்பிற் உடுச
கரையில்கம்பலை கஉஅ
கரையேறிப்பர சo0உ
கல்லாலேஎறிந்த சசஙட
கல்லின்புறந்தேய் கஉங
கலஞ்சமைத்ததற் உகச
கலஞ்சொரிந்த சககசு
கலந்தஅன்பர்கள் உஎஅ
கலவமென்மயி உடு0
கலையனூர்அனைக் க0சு
கவருமீன்குவை கங்அ
கழறிற்றறியுர் சஎஉ
கழிக்கானல்மருங் உஅஅ
கழுமலக்கோன் உ0ங

கழுமலப்பதிக் ஙகஅ
கழைசொரிதரளக் கூள
கழையார்தோளி நுகச
களங்கொள்விட சசஅ
களமர்கட்டகமலம் சகூ0
களவுபொய்காமம் உகஅ
களித்தனர்புண் உசூக
களியானையின் ஏஉ
கற்குடிமாமலே உளங
கற்பகத்தின்பூங் ஙசூ
கற்பகப்பூந்தளிரடி உ0சூ
கற்பகம்ஈன்ற ஙசூஅ
கற்பங்கள்அனேத்தி ஙசஅ
கற்பனைகடந்த சசூ
கற்புறுமனேவியா சஅ
கற்றைவார்சடை ஙசூ0
கற்றைவேணிமுடி நுகங
கறியமுதங்குதவா உகஉ
கறையணிகண்டர் உசள
கறைவிளங்கிய கஙச
கன்றெறுபொல்மறை ககள
கன்னிஇளங்கொ உள0
கன்னிதன்வனப்பு ஙசூள
கன்னிதிருத்தாதை கடுக
கன்னிநன்னெடு கசஉ
கன்னிநாடமணர் ஙஉள
கன்னிமாடத்தில் ஙசூச
கன்னிமாவனங் ஙநு0
கனங்கொண்டமணி ஙக
கனவுநிலேநீங்கிய கஉக

கா

காட்டுநல்வேள்வி சஉ0
காடவர்குரிசிலா சகஙக
காடவர்கோமான் நுகக
காடனும்எதிரே கூசு
காடெல்லாம்கழைக் க
காண்டகைமை கஅக
காண்டலும்தொழு ஙகூநு
காண்டலேகருத் கஅங
காணவும்எய்தா ஙநக
காணுதஅருவினுக் சஅங
காணுங்கண்ணுற் சஙசூ
காணும்அப்பெருங் உ0க
காதணிவெண் ககள
காதல்அன்பர்தம் கஉக
காதல்செய்யுங் ககச
காதல்புரிசிந்தை உஙள
காதல்புரிந்துதவம் சகக
காதல்மனேயார் சநுக
காதல்மெய்ப்பதிக ஙஅச
காதலால்அரசன் க0ள
காதலால்மிக்கோர் ஙு0சூ
காதலியைக்கைப் ஙஅநு
காத்லுடன்அணேந் உசஅ
காதலொடுந்தொ ஙு0க
காதற்பெருமைத் சளள
காதில்வெண்குழை ச
காதிலணிகண்டிகை உஉ
காப்பணியும்இளங் க0கூ
காமத்துயரில்கவல் ச0
காமர்திருப்பதி உஙச
காமவேள்என்னும் ஙசூஅ
காய்வுற்றசெற்றங் கஉங
காயமும்மனமும் ஙஉ0
காயல்வண்கரைப் கஙஅ
கார்கெழுபருவம் ஙங்க
கார்வளரும்மாட களச
காரணங்கண்ணு உ0ள
காரணபங்கயம் நு0ள
காரமண்வெஞ் ஙு0உ
காரிகைதன்பாற் சஙு0
காரோதுங்கோபுர சளக
காரைகள்கூகை உசசூ
கால்கழல்கட்டிய எக
காலத்தவறுதீர்த் கஅஅ
காலநிலேமையால் கஅள
காலம்நிரம்பத் சஉக
காலனேக்காய்ந்த க0சூ
காலிலுல்தடவிச் நுக
காலெல்லாந்தகட் கநுள
காலெளழுங்கதிர ஙஉச
காலெளழும்பல் சநுநு
காலெசெய்வினேகள் உ0
காவணம்எங்கும் உசசூ
காவளர்த்தும்குளந் கசக
காவிநேர்வருங் ஙள
காவிரிநீர்ப்பெருந் சஙச
காவின்மேல்முகி உளசூ
காவினிற்பயிலுங் க0
காவும்குளமும் ககஙக
காழிநாடரும்கதிர் ஙசூச
காழிநாடுடைய ஙளங
காழிமாநகர்வேதி ஙளஅ
காழியர்கோன் உ0ங
காழியர்தவமே உசஙக
காழியார்தவப்பய உசகூ
காழியார்வாழவந் உகநு
காழியினில்வந்த ஙசஅ
காழிவரும்பெரு உசச
காளையார்தமைக் சசுஅ
கானக்கடிசூழ் கஉஉ
கானப்பேர்யாம் சசுஅ
கானவர்குலம் அச
கானவர்தங்குலம் நுநுள
கானவர்பெருமா க0ச
கானவர்போன கசு
கானுட்டுமுள் ஙகஙக
கானிடைஆடுவா ஙஉஉ
கானிடைநட்டம் ஙக0
கானில்வரித்தளிர் அஅ

கீ

கிளரொளிச்செங் கசநு
கிளைஞரும்மற்றது உஅநு

கீ

கீளொடுகோவணம் சஅ

கு

குங்குமத்தின் ஙள்சு
குஞ்சிதிருத்தி சநுஉ
குடங்கையின் க0ச
குடதிசைமேற் உசுஅ
குண்டர்களுங் ககுஙு
குண்டிகைதகர்த் ங0
குண்டையூர்க்கிழ ஙஅள
குண்டையூர்நென் ஙஅஅ
கும்பிடுங்கொள் உகநு
குருகாவூர்அமர்ந் ச0ச
” ச0ச
குருதியின்கதி எக
குலகிரியின்கொடி சளஅ
குலச்சிறையார் ஙஉச

குலவுபுகழ்க்கோட் ஙஅக
குலமுதல்அறிவில் உ0
குலவுந்துறைநீதி கஉசு
குலவுமறையும் கடுக
குவலயத்துஅரனூர் சகக
குழல்செய்வண் கஙடு
குழியில்விழுவார் சஙஅ
குழிவாயதனிற் சஙசு
குழைக்கலையும் க0க
குழைமறைகாதினை உச
குழையணிகாதி எடு
குற்றுலத்தினி சசுள
குறவர்பன்மணி கஙச
குறித்தபொழுதே கசக
குறியில்நான்கு உ0அ
குன்றெடுஞ்சிலை ஙடுசு
குன்றவர்அதனில் அஉ
குன்றவர்வரி அசு
குன்றியைநிகர கூங

கூ

கூடத்தைக்குத்தி கசுக
கூடலையாற்றூர் ஙகள
கூடவந்துமறைய ககஙூ
கூடுமாறருள் உகள
கூர்முனைஅயில் அ0
கூருகிர்மெல்லடி கஙூ0
கூற்றுதைத்தார்தி ஙகக
கூற்றுதைத்தார்ம ஙடுக

கெ

கெழுமலர்மாதவி சஅஅ

கே

கேட்கவிரும்பிவன் ஙச
கேட்டஅப்பொழு உஉசு
” ஙூ0சு
கேட்டபொழுதே சடுஅ
கேடிலாப்பெரி டு0
கேடும்ஆக்கமும் கஅ

கை

கைக்கிடாகுரங்கு சக
கைக்கொண்டு சளச
கைகள்குவித்துக் கஅள
கைகள்கூப்பித் டு
கைகள்கூப்பிமுன் ச0ள
கைகளுஞ்சலிகூப் சு
கைகளுந்தலைமீ ஙஙள
கைகளும்மணி ககக
கைச்சிலைவிழுத்த கூடு
கைத்தலத்திருந்த சுக
கைதொழுதுதட கஙஙூ
கைதொழுதேத் உளச
கைம்மான்மறியார் உடுஉ
கையதனுல்லத் உசச
கையார்ந்ததிருத் ககடு
கையால்அவர்தம் சஅள
கையில்மான்மழுவர் ச
கையில்விளங்கு உஉஅ
கையினில்புனை சக
கையினிற்கவர்ந் உஉ0
கையினைத்துணி எங
கையுந்தலைமிசை கள சு
கைவாள்உடன் அஉ

கொ

கொங்கினிற்பொ ஙகடு
கொங்குநாடுகடந் சளக
கொடிநிரைத்த ஙடுஙூ
கொடிமாடம்நிலவு உ0ச
கொடுங்குன்றத்தி ஙூ0கீ
கொடுங்கோளூரி சளக
கொடுத்தகோவ சுசு
கொடுவினைத் கஙள
கொண்டதொரு சசஙூ
கொண்டல்வானத் கஙூச
கொண்டுமடித்த கடுச
கொண்டுவந்துதனி சஉள
கொண்டுவந்துமனை டுள
கொத்தார்மலர்க் உள
கொந்தல்பூங் கசச
கொந்தவிழ்பூங் ச0க
கொம்பனூர்இல்ல க0சு
கொய்தபன்மலர் கச0
கொல்லாதசூலை ககஙூ
கொழுவியதசை கள
கொற்றஆழிகுவல கஙூ
கொற்றவன்அமை ஙகள
கூஉ0

கொற்றவன்தன் ஙஉஙூ
கொற்றவன்தேவி ஙஉசு
கொன்றைவார் உஅஙூ
கொன்றைவேணி சடுடு

கோ

கோட்டமில்என் அச
கோட்டுமலரும் கஉள
கோடல்கோங்கம் உசுஅ
கோடாதநெறி சஅஙூ
கோடிக்குழகர் சசுடு
கோடுகொண் கஙூஅ
கோடுமுன்பொலி ஙக
கோத்திட்டை சசுசு
கோதில்மரபிற் சஙங
கோதில்மான்தோ கடு0
கோதிலாஅமுத கசக
கோதிலாஆரமு உஅள
கோதைசூழ்ந்த ஙக0
கோதைமாதர்ஆட ஙடுஙூ
கோதையர்குழல் ஙூஎக
கோதைவேலார் டுகச
கோயில்வாயில் டுகசு
கோயிலினிற் உசஅ
கோயிலுட்பட ஙூஅச
கோயிலுட்புகுவார் ஙூ0ச
கோயிலேவலங் சகஙக
கோலப்பூங்கூடை எஉ
கோலமுல்லையும் கடுஙூ
கோலினிற்கோத் ககசு
கோலும்கயிறும் கடுஙூ
கோவல்நீடியவீரட் ஙடுக
கோவாமுத்தும் சகஉ
கோவாய்முடுகி கஅ0
கோவைவாய்ப்பர ஙூஅஅ
கோஞ்சுமனத்த சஙஉ

ச

சக்காப்பள்ளி உளசு
சங்கங்கள்முரன் கஉடு
சங்கங்கள்வயல் ஙூ0ங
சங்கநாதங்கள்ஒலி உசுசு
சங்கப்புலவர் சடுஅ
சங்கரர்தாள்பணி சகச

சங்கரன்தன்அரு நி0ஈ
சங்கரன்றன்அடி நி0க
சங்கரனூர்திருவரு ச0ச
சங்கரனுக்கா நி0கூ
சங்கரனேச்சார்ந்த நி0கூ
சங்கிலியார்தம்மரு சகச
சங்குதுந்துபி உறிகூ
சங்கொடுதாரைகா எச
,, சின்ன ஈஎஅ
சடைமருங்கில் கள
சடையானேஎவ் உகூ0
சண்பைஆளுந் கஅக
சண்பைத்திரு உகூக
சண்பைநாடுடைய ஈ0டி
சண்பைமன்னருந் உகூ
சண்பைமன்னவர் ஈகூச
சண்பையர்தம் சசஎ
சண்பையாளியார் உஉஎ
,, உறிகூ
சண்பையாளும் ஈறிஈ
சண்பைவருந்த உ0ஈ
சண்பைவரும்பி உஎக
சண்பைவேந்தர் ஈறிஉ
சத்திதற்பரசித்த கசஈ
சந்திமென்மலர்த் ஈ எஅ
சம்புவின்அடித் நி

சா

சாத்திஅங்குவைகு ஈகூஉ
சாதனத்தோடு நி0க0
சாதியினில்தலை நி0க
சாயலார்கள்நுசுப் கசள
சாயுந்தளிர்வல்லி கஉக
சாயைமூன்பிணிக் கசஈ
சார்ந்தார்தம்புக கஅள
சார்வருந்தவங்கள் கூள
சாருந்தவத்துச் சகஈ
சால்பாயமும்மை கஉக
சாலஈன்றமூழ் சநி0
சாலஈள்அங்க கஅஉ
சாலஈள்கழிந்த சக
சாலஈள்கள்இப் சஅசு
சாலமிக்கவியப் உறிசு
சாலமிகத்தளர் ஈசக
சாலிதேடிஅறுத் ககச
சாலிநீள்வயலின் க0
சாலியின்கற்றை க0
சாற்றிஅங்குத் ஈகூச
சாற்றுமெய்ப் ஈஉள

சீ

சிகையொடுமான் ஈஎக
சித்தநிலாவுந் கஅநி
சித்தநிலைதிரியாத ச0ச
சித்தும்பொழுதில் கடுநி
சித்தை இடையறு உ சுச
சித்தைகலங்கி சடுஈ
சித்தைசெய்வது சுச
சித்தைமகிழுஞ் நி உ0
சித்தையால்அள உஅசு
சித்தையால்வாக் சஈ0
சித்தையிற்களிப்பு ங்கள
சித்தைவென்றய ஈசுஈ
சிரபுரச்செல்வர் ஈஉள
சிரபுரத்தந்தணர் ங00
சிரபுரத்தில்அமர் உசக
சிரபுரத்துப்பிள் ஈ0அ
சிரபுரத்துமறைய உகூ0
சிலந்திக்கருஞங் ககஈ
சிலபகல்கடந்து உகநி
சிலபகல்கழிந்த க0அ
,, சஈஉ
சிலைமறவர்உரை அஅ
சிலையினைக்காப்புக் அசு
சிவபாதவிருதயர் ஙஙக
சிவலோகமுடைய கஙக
சிவனடியேசிந்திக் உசக
சிவனமர்ந்தருளுஞ்ஙஅ
சிவனருள்என உஙசு
சிவனுறையுந்திரு உஅ
சிவிகைமுத்தினிற் உறிக
சிறப்பித்தருளுங் ஙகூ0
சிறப்புடைத்திருப் உகள
சிறிதுபொழுது ங்கக
சிறியமறைக்களி. உசக
சிறுத்தொண்ட உஅஅ
சிறுமணித்தேர் உங்க
சின்னந்தனிக்காள உசுசு
சினவிடையார் சஅங
சினவிடையேறு களள

சீ

சீதமதிஅரவினுட சசசு
சீதமலிகாலத்துத் கசஅ
சீர்கெழுசிவநேசர். ங்சுக
சீர்கொள்மரபில் சக0
சீர்தருசெங்காட்ட கஅநி
சீர்திகழும்பாண்டி உ0ச
சீர்நிலவுதிருக்குறி கடி0
சீர்நிலவுதிருத்தெ ஙசஉ
சீர்பெருகுந்திருத் சஉக
சீர்பெருகுநீலநக் ஙஅச
சீர்மலிஅசோகு ங்க0
சீர்மறையோர் உசக
சீர்மன்னுசெல்வக் கஉக
சீர்மன்னுந்திருக் கஅசு
சீர்வளர்கோயிலை உசஉ
சீர்வளர்சிறப்பின் நிகஉ
சீர்வளரும்திருத் ச0நி
சீர்வளருமதிற் ககடி
சீரணிதெருவினூடு ஙஅக
சீரார்காஞ்சிமன்னு ச0எ
சீரார்பதியினின் ககஈ0
சீரில்வீடியசெம் சுச
சீரின்மல்கியதிருப் ஙசக
சீரின்மலிந்த உகக
சீரின்மன்னிய ஙடுக
,, ஙசுஙு
சீரின்மன்னுந் ஙடுஙு
சீரின்விளங்குந்திரு கஅள
சீரின்விளங்கும்அ நி0உ
சீரினில்திகழ்ந்த உசள
சீருடைப்பிள்ளை ங்ஙள
சீருந்திருவும் சசக
சீரேறும்இசை கஙக
சீலம்இலரேளனி சஅச
சீலம்உய்த்தஅத் உஉங
சீலமுடையகோக் கடுஉ
சீலமெய்த்திருத் உஉசு
சீறடிமேல்நூபுரங் ங்க

சூ

சுண்ணமொடு உங்ள
சுரமகளிர்கற்பகப் ககக
சுருதிஆயிரம்ஓதி உசுச

சுருளுமயிர் நுதற் சசள
சுலவிவயிற்றசங் ககூச
சுழிப்புனற்கடல் கஙஅ
சுற்றத்தார்யாரும் அக
சுற்றம்மீடியகிளை நஃஉ
சுற்றியஅக்குலத் சஙடு
சுற்றும்இருந்த ஙகக
சுற்றுமாமறைச் உடுஅ

சூ

சூடினுர்கரகமலங் உசுக
சூதகல்வினை ஙசுக
சூதபாடலங்கள் கக
சூதம்மெருங்கு உoக
சூதம்பயிலும் சசக
சூதினில்வென் சசo
சூழ்ந்துமிடைந் ஙசஎ
சூழவரும்பெருஞ் உஙஅ
சூழ்திருத்தெரா கஅங
சூழுமிதழ்ப்பங்க கஉக
சூறைமாருதம் சஅக

செ

செக்கர்ச்சடையா கஉஉ
,, ககூச
செக்குநிறைஎள் சஅக
செங்கட்குறவ உளக
செங்கண்ஏற்றவர் உடுo
செங்கண்ஏற்றவரோ நஉள
செங்கண்மாதர் கஉ
செங்கண்மால் ஙசo
செங்கண்வயக் அக
செங்கண்விடையா கடுசு
,, ககூச
,, ஙசக
,, சஙசு
,, டுoஉ
செங்கண்வெள்வி கoஙு
செங்கண்வெள்ளே கoஎ
செங்கமலமலர் உசடு
செங்குமுதமலர் கஅசு
செங்குவளைபறித்த கூ
செங்கைமான்மறி உசுஅ
செங்கோல்அரசன் ஙஅக
செஞ்சடைக்கற்றை கஎஎ
செஞ்சடையார் சசுசு
செஞ்சொல்மலர் ஙoo
செஞ்சொல்வண் உகூச
செஞ்சொற்றமிழ் சஎo
செண்டாடுந்தொ சஎஉ
செந்தமிழ்மாலை உசுடு
செந்தழல்ஒளி கூஅ
செந்தினை இடியும் அசு
செந்தீமேல்எழு கஙஙு
செந்நெல்ஆர்வ ககஙு
செந்நெல்லும்பொ ஙஅசு
செப்பரும்பதியில் ஙகஎ
செப்பலுற்றபொரு உ
செப்புதலும்அது ஙஙஅ
செம்பரிதிகடல சசஅ
செம்பியர்பெருமா ஙகஙு
செம்பியனுருடன் சசுசு
செம்பொற்கரக சஎஉ
செம்பொற்புரிசை சஙக
செம்பொற்புற்றி உஉஅ
செம்பொன்செய் ஙஅக
செம்பொன்மலைக் ஙடுசு
செம்பொன்முத உஙஎ
செம்பொன்மேரு ஙகசு
செம்பொன்னும் உoசு
செம்பொனின் ஙஎஎ
செம்மணிவாரி உஎங
செம்மாண்வினை கஉச
செம்மாந்திங்கியா உக
செம்மைசேர்சிந் சஙக
செம்மைதெறிசேர் சஉஉ
செம்மைபெறஎடு உசக
செம்மைமறை ஙகஙு
செம்மையால்தணி சகசு
செம்மைவெண்ணீ கடுo
செய்தபடிசொல் உகஙு
செய்தவத்தால் ஙஙஅ
செய்தவர்இசை உஉo
செய்யஜயர்திரு ககசா
செய்யசடையார்தி உடுஉ
,, ஙகக
,, ஙகசா
செய்யச்சடையார்ப ககஉ
செய்யதாமரை ஙஉஅ
செய்யபுன்சடை சுடு
செய்யபொன் உடுஅ
செய்யமாமணி கஅங
செய்யமேனிக்கரு சடுச
செய்யமேனியர் ஙகஅ
செய்யுள்நிகழ் சஎஅ
செய்வதற்கரிய
செய்வதனை சகஎ
செய்வதொன்ற ஙஉக
செய்வதொன்று டுஙக
செய்வினையுஞ் சசஉ
செயத்தகும்பணி சுஎ
செயலிப்படியே கடுச
செருவிலிபுத்தூர் டுoங
செல்கின்றபோழ் கஙஉ
செல்லல்நீங்கப் டுஅ
செல்லுமாமறை உடு
செல்வக்கருவூர்த் உஎங
செல்வத்திருமுன் உடுஉ
செல்வத்திருவா சசுச

செல்வநெடுமாளி உசுங
செல்வம்பிறிவறி உடுஉ
செல்வம்மல்கிய உடுக
,, ஙகடு
,, ஙடுo
,, ஙசுo
செல்வம்மல்குதிரு சoஅ
செல்வமலிதிருப் ஙஎடு
செல்வமலிதிருவா சoo
செல்வமேவிய டுஎ
செழியனும்பிள்ளை ஙஉச
செழுந்தரளப் உசசு
செழுந்திருவேள் உசுஎ
செழுநீர்நறையூர் ங்ஙஉ
செற்றார்தம்புர டுoக
செறிந்தவர்தம்மை எடு
செறிபுன்சடையா ங்கo
செறிவலித்திண் கஙo
செறிவுண்டென் சகஅ
சென்றகாலத்தின் ங்கங
சென்றசென்ற டுகக
சென்றடிவணங்கி கூஉ
சென்றணைந்தஅ ககுஎ
சென்றணைந்தஆ ககஅ
சென்றணைந்துசிந் ஙடுக
சென்றணைந்துதிரு உஅo
சென்றணைந்தும உoச

சென்றணையும் நுஎக
சென்றதிசையிற் சசுக
சென்றமறையோ கடுடு
சென்றவர்கள் நுசச
சென்றவர்தடுத்த டுடு
சென்றவர்முனி டுசு
சென்றவருங்கஞ் ககo
சென்றுகண்ணு டுஉஉ
சென்றுசிவகாமி சஅo
சென்றுசேர்ந்து கஅo
சென்றுதம்பிரானே சஉசு
சென்றுதிகழ்திரு உஎச
சென்றுதிருக்கோ நுகுச
சென்றுதிருப்பூவ சசுசு
சென்றுதிருமாந் உசுக
சென்றுதிருவீரட் கசுக
சென்றுதேவர்தம் உஅங
சென்றுதேவாசிரி சசுங
சென்றுபிள்ளை உஉசு
சென்றுமணிவாயிற்சஉச
சென்றுவிரும்பி நுகo
சென்றுள்புகுந்து கஅஎ
சென்னிஅபயன் கடுக
சென்னிஇளமதி நுஎo
சென்னிமிசைநீர் உஉக
சென்னியால்வண டுo
சென்னிவளர்மதி உங்ங
சென்னிவளர்வெ சகக
சென்னிவெண்கு டுஉ

சே

சேட்டாருங்கங்குல் அக
சேணேர்மேருச் சுச
சேணிலவுதிருமலே ககஅ
சேணுயர்ந்தருத் நுஎங
சேணுயர்ந்தவாயி நுடுச
சேணுயர்மாடப் உகக
சேணுயருமாடங் நுஎக
சேதிகன்னட்டுடீ சுo
சேதுவின்கட் நுசo
சேயிழையார்திரு சகடு
சேர்த்தும்இன்னி நுகச
சேர்ந்துவிருப்பொ உoஉ
சேரமான்தோழ சசுடு
சேரர்காவலர் டுஉங
,, டுஉச
சேரர்தம்பிரான் டுஉஉ
சேரர்பிரானும் சசுச
சேரர்பெருமான் சடுஎ
,, சடுக
,, சசுங
சேரருடனேதிரு சஎஉ
சேவடியில்தொடு ககஅ
சேவித்தணையும் சசுச
சேறணிதண்பழன கoஅ
சேனையும்ஆனை கoஎ

சை

சைவநெறிவைதிக ககக
,, டுoக
சையமால்வரை அ
சைவமைந்தர் நுஉசு

சோ

சொரிந்தனகுடல் டுடு
சொல்லரசருடன் நுoங
சொல்லார்தமிழ் உஅ
சொல்லின்பெரு நுசஅ
சொல்லும்எல்லை கஙடு
சொல்லுவதறியே டுசு
சொல்விளங்கு சகசு
சொற்பெருவேந் உகஉ
சொற்றுணைவேதி கஎக
சொன்னஉரை நுசடு
சொன்னசாட்டிடை கஉ
சொன்னமுறையி சடுங
சொன்னவண்ண கசுசு
சொன்னவர்க் நுசுச
சொன்னவுரை அஎ
சொன்னவையக நுங்உ

சோ

சோதிமணிமாளி சசுங
சோதிமணிவேதி நுங்
சோலைமறைக்காட் ககக
சோதிமுத்தின் உடுஎ
சோதிவிளக்கொன்உக

ஞா

ஞாலந்தான்இடம் சகக
ஞாலம்அறியப் கடுசு
ஞாலம்உய்ந்திட உடுo
ஞாலம்உய்யஎழுந் சஉச
ஞாலம்உய்யத் ககச
ஞாலம்உய்யநடம் சஉ
ஞாலம்உய்யநாம் சுச
ஞாலம்வியப்பெய் சoக
ஞானஆரமுதம் நுஉடு
ஞானச்செய்தவ ககக
ஞானசம்பந்தன் உடுடு
ஞானசம்பந்தரும் உசுக
ஞானத்தின்திரு நுஉக
ஞானபோனகர்எ திங்கச
ஞானபோனகர்நம் உஎஅ
ஞானபோனகருக் நுஎடு
ஞானம்உண்டார் டுகள
ஞானமெய்ங்கெறி நுஅச
ஞானமேமுதலா சசு

த

தக்கஅத்தணர் உகள
தங்கள்பிரான்திரு சகங
தங்கும்அகில கடுஉ
தங்கோனேத்தவத் டுoங
தஞ்சாணத்திடை ககக
தஞ்சேசரணம் எங
தடங்கிலக்கோபுரத் ங்கள
தடங்கிலமாளிகை சங்ங
தடமெங்கும்புனல் நுoக
தடுக்கலாகாப் சoஅ
தடுத்தூமுன்ஆண்ட நுஉ
தடுமாறும்நெறி சகடு
தண்காஞ்சிமென் கசச
தண்சுடர்ப்பரிய நுஅo
தண்டகத்திருகாட் நுடுo
தண்டகமார்திரு சoடு
தண்டமிழ்மாலை கஎo
தண்டாததொரு சசக
தண்டிநமக்குக் சங்ள
தண்டியடிகள்தம் சங்அ
தண்டியடிகள்திரு சங்சு
தண்டிருதலையும் டுங

தண்ணளிவெண் ௬௭
தண்ணிலவார்சடை ௬௩௫
தண்தாரளமணித் ௫௬
தண்புனற்குளிர் ௨௭௮
தண்மலர்அலங்கல் ௮௫
தந்தகோவணம் ௬௬
தந்தமுமன்தாரா ௫௦
தந்தமர்களாயினர் ௫௦௰
தந்தருளும்இக்கர் ௬௰௬
தந்திரத்தலைவர் ௭௰
தந்திருக்கண்எரி ௫௮
தந்திருமாளிகை ௨௰௰
தந்தைதாய்களி ௬௫௬
தந்தைநிலைஉட் ௮௬
தந்தையார்சடைய ௨௦
தந்தையார்தாயார் ௫௮௫
தந்தையார்மொழி ௨௮௨
தந்தையாரும்அத் ௫௬௨
தந்தையும்மைந்த ௮௫
தம்பியார்உளராக ௬௬௦
தம்பிரான்அதனை ௰௨௬
தம்பிரான்அருள்செ ௫௫
தம்பிரான்அருள்பு ௫௦௬
,, போற் ௫௮௮
தம்பிரான்அருளி ௬௬
தம்பிரான்தோழ ௰௬௰
தம்பிரான்பணி ௭௭
தம்பிரானுர்எழுந்த ௰௨௫
தம்பிரானுர்க்கெதி ௰௬௬
தம்பிரானுர்கோயில்சூழ ௭
தம்பிரானுர்பின் ௰௨௮
தம்பிரானேத்தொ ௰௬௬
தம்பிரானேத்தோ ௫௬௭
தம்புதல்வன்சவம் ௬௮௨
தம்பெருமான்கொ ௰௫
தம்பெருமான்கோ ௨௭௬
தம்பெருமான்சா ௮௨
தம்பெருமான்திரு ௰௰௬
தம்பெருமான்பணி ௬௫௨
தம்மறம்புரிமரபி ௰௮௬
தம்மைஅணைந்த ௬௫௫
தம்மைஉள்ளவா ௫௬௦
தம்மையேசிந்தியா ௫௫௫
தமக்குத்தந்தையர் ௫௫௫
தமனியப்பலகை ௫௬௬
தருதொழில்திரு ௨௨௭
தருமசேனர்க்கு ௬௬௬
தருமபுரம்பெரும் ௨௮௫
தரையில்வீழ்தரச் ௫௬௫
தலத்தின்கண் ௬௫௮
தலத்துவந்து ௫௨௫
தலைநெறியாகிய ௬௬௭
தலைப்பட்டார்எல் ௮௦
தலைமிசைச்சுமந்த ௬௭
தலைமிசைவைத்து ௫௫௫
தலையின்மயிரை ௬௬௨
தலையுலல்நடந்து ௨௬௬
தலைவர்தஞ்சக்கர ௨௭௬
தவ்வைசைவத்து ௬௬௬
தவஅரசாள ௫௭௬
தவம்நிறைந்தான் ௬௬
தவம்முயன்றரிதில் ௬௰
தவமுனிதன்னை ௫௫
தவமென்றுபாயிடு ௬௬௨
தவளமாளிகைச் ௰௬௬
தழைமலர்த்தட ௨ ௬௫
தள்ளும்முறைமை ௬௨௭
தளர்ந்தமற்றவர் ௫௭
தளர்ந்துவீழ்மகனை ௨௨
தளரும்மின்னின் ௫௬
தனைத்தடம்பணை ௬௫
தறையிற்புடைப் ௫௬௰
தன்னுயிர்க்கன்று ௬௫
தன்னைஒப்பரியது ௰
தன்னையாளுடைய ௰
,, ௰௫
தனிப்பெருந்தரும ௬௰
தனிவெள்விடை ௰௫௰
தனுஒருகையில் ௭௭

தா

தாண்டவம்புரிய ௨
தாண்டும்புரவிச் ௰௬௫
தாணுவினைத்தனி ௨௰௨
தாதவிழ்செந்தா ௨௰௬
தாதியர்தங்கை ௨௫௮
தாதுசூழும்குழல் ௬௨௬
தாதையாரும்அங் ௫௫௦
தாதையாரும்அது ௰௬௦
தாதையாரும்பயந் ௬௬௦
தாமரைத்திலக் ௰௮௰

தாயர்திருமடித் ௨௫௮
தாயரோடுதந்தை ௰௬௦
தாயனூர்எனும் ௬௬௫
தார்தாங்கிக்கடன் ௰௮௨
தாவ்ரியஅன்பிலு ௫௦௬
தாவாதபுகழ்த்தரு ௬௬௫
தாவாதபெருஞ் ௰௬௫
தாவாதபெருந்தவத் ௰௬௫
தாவில்செம்மணி ௬௫௰
தாவில்யாழ்ப்பா ௨௰௬
தாழ்ந்தவேணியர் ௬௫
தாழ்ந்தாவினுக் ௨௬௬
தாழ்ந்துபலமுறை ௫௭௦
தாழ்ந்தெழுந்துநி ௫௫௮
தாழ்ந்தெழுந்தும ௨௫
தாழுஞ்சமண்கை ௬௨
தாழுஞ்செயலின் ௬௨
தாள்அறுவன ௬௨
தாளதொன்றினி ௬௰௫
தாளாண்மைஉழவு ௫௮
தாளாளர்திருச் ௰௰
தாளிணைமேல்விழு ௬௬
தாளில்வாழ் ௬௦
தாளுடையபடை ௨௫
தானதிலைக்கோல் ௨௰
தாளுள்விருத்தி ௭
தானும்அம்மனைவி ௨௬

தி

திங்கள்அணிமணி ௨௬
திங்கள்சூடியமுடிச் ௮
திங்கள்சேர்சடை ௬௫
திங்கள்தோறும் ௫௬
திங்கள்நீர்மை ௨௫
திங்கள்முடியார் ௨௫
திங்கள்வெண்கவிகை ௬௰
திங்களூர்தனில் ௬௮
திசைஅனைத்தும் ௫
திசைகள்தோறும் ௰௬
திசையயங்கவெளி ௬௰
திசைமுழுதுங் ௬௦
திசையனைத்தின் ௨௫
திண்படைவயவர் ௮௦
திரண்டமாமறை ௨௬
திரிபுரமெரித்த ௫௬
திருஆலங்காடுறை ௬௬

திருஆலவாயமர்ந்த சசுடு
திருக்கச்சிஏகம்பம் ககசு
திருக்கயிலைவீற் டுo௭
திருக்கழுக்குன்றத் ஙஎக
திருக்கழுத்தாரர் ஙஅ0
திருக்காரோணச் சசுச
திருக்கிளர்சீர் சகஙு
திருக்குறுக்கை உசுசு
திருக்கைசென்றரி ககடு
திருக்கோடிகா உசுள
திருச்சத்திமுற்றத் உளக
திருச்சின்னம்பணி ஙசள
திருச்சுழியலிடங் சசுள
திருஞானசம்பந்தர் உஅக
,, ஙo௧
,, ஙசள
,, ஙளச
,, ஙளச
,, சo஫
திருஞானமாமுனி உo஫
திருத்தினைமாநகர் சo டி
திருத்துறையூர் உஅ
திருத்தொண்டத் ஙஅசு
திருத்தொண்டர்அ ஙஎo
திருத்தொண்டர்ப ஙடுடி
திருத்திசைப்பதிக ஙகஅ
திருத்தியஇன் ஙடிஅ
திருத்தியசீர்த் ஙளஉ
திருத்தியவாசஙன் உஉஉ
திருத்தூதேவன் உசுள
திருத்தூமனேயார் சஅள
திருநகையால் உஙஅ
திருநாகேச்சரத்த உஅக
திருநாவலூர்மன்ன சo டி
சஉக
,,
திருநாவலூர்வேர் சசுஅ
திருநாவலூராளிசி சo சு
திருநாவலூராளிதம்சகடி
திருநாவுக்கரசமுது கஅக
திருநாவுக்கரசர்ள கஅடி
திருநாவுக்கரசரும் ககசு
,, ஙo௮
திருநாவுக்கரசு கடிள
திருநிலவுமணிமுத் ஙகக
திருநீலகண்டத்து உசஅ
திருநீலநக்கடிகள் கஅசு
திருப்பதிகங்கொடு சஉo
திருப்பதிகச்செழு கஅசு
திருப்பதிகத்திருக் ஙஙக
திருப்பதிகம்கிறை உசஉ
திருப்பதிகம்பாடி ஙக்க
திருப்பாசூர்அணை ஙடுசு
திருப்பாசூர்நகர் ககள
திருப்புகலூர்அமர் கஅச
திருப்புகலூர்த்திரு உக்க
திருப்புன்கூர்ச் கஙக
திருப்புனவாயிற் சசுஅ
திருப்பூந்துருத்தி ஏ0உ
திருப்பெருகு உசடு
திருமகட்குமேல் கஏo
திருமகட்கொடு ஙஅஉ
திருமகள்என்ன சுக
திருமஞ்சனமும் சடுசு
திருமடஞ்சார ஙஉக
திருமடப்புற ஙஏஅ
திருமணஞ்செய் ஙஎடு
திருமருகல்நகரின் உஅக
திருமலிசெல்வத் சஅக
திருமலிபுகலிமன் உசுக
திருமலியும்புகழ் சக்க
திருமூலயின்புறம் ஙக்க
திருமறைக்காடு ஙo௭
திருமறைச்சண் உசுசு
திருமறைநம்பர் ஙo டி
திருமறைநூல் உசo
திருமறையோர்அ உஙக்க
திருமறையோர்கள் உசசு
திருமறையோர்த ஙo஫
திருமாகரம்திரு சடுசு
திருமாற்பேறுடை ஙடுடி
திருமிகுமறையோர் உசு
திருமூகங்கரூணை ஙஉசு
திருமூருகன்பூண் சளச
திருமேனிவெண் கசஅ
திருவடிமலர்மேற் ஙஅo
திருவதிகைப்பதி களச
திருவளர்சிறப்பி டுசு
திருவளர்நீறு ஙஉடு
திருவாயிலினை ஙக்கடி
திருவார்ந்தசெம் டுகடி
திருவார்பெருமை சுஙு
திருவாரூர்தனை சளஙு
திருவாலவாய் உoச
திருவாளன்திரு கசுச
திருவாறைமேற் உளக
திருவான்மியூர்மரு ககசு
திருவான்மியூர்மன் ஙஎo
திருவியமகத்தின் ஙஙஅ
திருவிராமேச்சரத் சசுள
திருவிளக்குத்திரி சஅக
திருவீரட்டானத் சo உ
திருவுசாத்தானத் ஙo஫
திருவுடைஅந்த டுக
திருவுடைப்பிள்ளை ஙஙடு
திருவுடைமனைவி டுடி
திருவுடையதில்லை கஙங
திருவெல்லையினைப் ஙஎஉ
திருவேகம்பரத் ஙடுடி
திருவேற்காடமர்ந் ஙடுக
திரைக்கெடிலவீர கசுச
திரைசெய்கடல் சகசு
திரைத்தடம்புனல் உஅச
தில்லைநகர்மணி சகஙு
தில்லைவாழ்அந்த கஙங
திலகவதியார்பிறந் கடுக
திறைகொணர்ந்த சஅo

தீ

தீங்குகுறித்தழைத் அக
தீங்குசொற்றதிரு சஙo
தீங்குதீர்க்குரல் கசஉ
தீந்தமிழ்நாட்டி உo஫
தீதுகொள்வினை கஉo
தீதுநீங்கிட கஙள
தீம்பாலொழுக கடுo
தீயவிடந்தலை கஅக
தீயுமிழும்படை சகடி
தீவிடம்நீங்க உஉஉ

து

துங்கநீள்மருப்பின் கo சு
துங்கமாதவன் கஙசு
துஞ்சவருவார் ஙடுசு
துடிக்குறடுருட்டி அடி
துடியடியனமடி கஉ
துடியிடையாள் ஙஙஅ

துணரிணர்ச்சோ உகூஉ
துக்துபிகள்முத நகக
துயில்வன்தெய்த நகக
தூலையிற்புறவின் நிகந
தூளிவளர்கண்ணீர் சஉள
தூளக்கைஐரா சளக
துன்பம்அகல நிகஅ
துன்றும்புலன்ஐந் சசக
துன்னூர்மூனைகள் சளசு
துன்னுபல்லுயிர் கசo
துன்னுமுழுஉடற் நகஉ

தூ

தூங்காணைமாடத் களச
தூண்டுசோதி கசச
தூண்டுதவவிளக் ககஉ
தூதரைப்போக சஉநி
தூதறும்பசுங்கர்ப்பூ உக
தூதறுமலர்தாளம் நிஉo
தூபியும்நட்டு நிகo
தூமணிமாளிகை உசச
தூமலர்ச்சோலை சசச
தூமலர்ப்பிணையல் உக
தூயஅடிசில்நெய் சநக
தூயதிருஅமுது சசசு
தூயநற்கறிகளான உஉo
தூயநீரால்சிறுத் சநிந
தூயமணிப்பொற் நஅக
தூயவெண்டுறைப் கநள
தூயவெண்ணீறு களந
தூரத்தேதிருக் சாந
தூரியத்துவைப் எச

தெ

தெண்ணிலா நஉ
தெண்திரைசூழ் நoஅ
தெய்வநிகழ்குற அஅ
தெய்வப்பெருமா உநo
தெரிந்துணரின் நிoஅ
தெரிவரும்பெரு உ
தெருளுமெய்க்கலே உநிஅ
தெள்ளுதண் கஉக
தெள்ளுநீதியின் நசுக
தென்தமிழ் நநக
தென்தமிழ்மும்வட நிoள
தென்திசைப்பொ கக
தென்திசையிற் நநிக
தென்புகலிஅத்த நளஉ
தென்னவர்கோன் நசஉ
,, சசுநி
தென்னவன்தன் நஉநி
தென்னவன்தனக் நந.சு
தென்னவன்தாணு நoசு
,, நநள
தென்னவன்தேவி நஉந
தென்னவன்நகை நஉக
தென்னவன்நோக் நஉநி
தென்னவன்பணிந் நநள
தென்னவன்பெருந் நகச
தென்னவன்மாற நநஉ
தென்னவன்வெப் நந.o
தென்னற்குயி நசஅ
தென்னிலங்கை உoநி
தென்னுட்டமண் நசக
,, நநிந
தென்னவலூர் சக

தே

தேசம்எல்லாம் எ
தேசுடையமலர்க் கசஅ
தேடியஅயனும் உள
தேடியமாடுநீடு சுo
தேம்பொழியும் உoநி
தேமருவுமலர் உஅக
தேமலங்கல்லணிமா உக
தேராரும்நெடுவீதி நந
தேரும்கொடியும் சo
தேரொலிக்கமா கசஅ
தேவதேவனும் கநக
தேவர்கள்தேவர் நஅச
தேவர்தங்குழாம் நிஉக
தேவர்தந்தலைவ உகநி
தேவர்தம்பிரான் உநிக
தேவர்தானவர் உoக
தேவர்தேவனைத் நசுநி
தேவர்தொழுந் உoநி
தேவர்பிரான்அமர் நசுக
,, உஅo
,, நசக
தேவர்பிரான்திரு களஉ
,, திருத் நிகநி
,, திருவி சகo
தேவர்பிரானைத் கஅநி
தேவர்பெருமான்ள உந.o
,, கண் நகநந
,, தன் சoந
தேவர்முனிவர்க் நநிஉ
தேவர்முனிவர்வர் சசுந
தேவரும்முனிவர் நசுசு
தேவரொதுங்கத் நஅக
தேவாசிரியன் சஉச
தேவிபுதல்வர்ப் நிகச
தேவியார்தம்மை நகள
தேவுமால்கொண் சுசு
தேற்றமில்சமண் நசுசு
தேன்நிலவுபொழிற் சகஅ
தேனக்கமோதை கoஅ
தேனலருங் உசசு
தேனிலவுபொழில் நங்சு
தேனூர்க்கும்மலர்ச் நங.
தேனூர்ந்தமலர்ச் சoநி
தேனுருந்தண்பூங் எள
தேனிறைத்தசெந் கநநி
தேனுங்குழலும் சளள

தை

தையலார்சங்கிலி சகo
தையலார்தமக்கரு சகச

தொ

தொடங்கியநாள் சசநந
தொடுத்தஇதழி கநிசு
தொண்டகமுரசும் அசு
தொண்டர்அன்பெ சுசு
தொண்டர்ஆர்த்த உநிஅ
தொண்டர்ஈண்டி கசநி
தொண்டர்உளர நகசக
தொண்டர்குழாம்ஆஉளக
,, பு களஅ
தொண்டர்தம்பெ நசுசு
தொண்டர்தாம் நகநந
தொண்டர்பலரும் உoக
தொண்டர்மனம்க உநிந

தொண்டர்மனம்பி நஎஉ
தொண்டரைச் நிகக
தொண்டரைவி நிகக
தொண்டனுர்க்கிம சுஉ
தொண்டனுர்தமக் ககஉ
தொண்டுரிமை சகக
தொண்டைமானுக் சகஎ
தொல்லைநான்மறை கநஎ
தொல்லைநீள் உஎநி
தொல்லைமால்வரை சநு
தொல்லைவேட்கோ சகு
தொல்லைவேத கஅஅ
தொலைவில்செய் உஉச
தொழுதணைவுற்ரு களஅ
தொழுதுதிளைத்து சஎக
தொழுதுபலமுறைநுநிநி
தொழுதுபலவகை உ0நி
தொழுதுபுறம்ப உளங
தொழுதுபுறம்போ நஎ0
தொழுதுபுனல் சநஅ
தொழுதுபோற்றி எ0
தொழுதுவிழுந்து நநிஉ
தொழுதுவிழுந்தெ சகஅ
தொழுதெழுந்த உ00
தொழுந்தகைஅன் எசு
தொழுந்தகைகாவி களஉ
தொழுவார்க்கே உசக
தொன்மைத்திரு எஎ
தொன்மைதரு நிகச
தொன்மைமுறை கநிஎ

தோ

தோணியில்நாமங் உகக
தோணிவீற்றிருந் உசஎ
தோள்கொண்ட எஅ
தோற்கவும்ஆசை நஉக
தோற்றவர்கழுவில் நநo
நநசு
தோற்றும்பொழு சகந
தோற்றும்மன் நஅ
தோன்றுகாட்சி நநந

ந

நக்கார்முகநோக்கி உந
நகர்வலஞ்செய்து நஎள
நகரமாந்தர்எதிர் சஎக
நங்கள்குலமாளிகை சநிக
நங்கள்சமயத்தி களக
நங்கள்நாதனும் எ
நங்கள்வாழ்வென நஎஅ
நங்கைஉள்நிறை கநக
நங்கைநின்தன்மை சஉள
நங்கைபரவையார் சஉக
நங்கைபரவையாரு சசுக
நச்சிஇன்தமிழ் உஅந
நஞ்சுகலந்தூட்டிட கசுக
நஞ்சும்அமுதாம் கசுக
நட்டம்புரிவாரணி கஉந
நடமேபுரியுஞ் கநிஉ
நண்ணிஇறைஞ்சி உஉஅ
நண்ணிநாளும் சநசு
நண்ணிமாமறைக் கக
நண்ணியஒருமை க0எ
நண்ணியதவச்சிவ சஅ
நண்ணியவயல்கள் ககச
நண்ணுந்திருநாவு ககந
நண்ணும்இசை கஉள
நதியும்மதியும் சுநு
நந்திஎம்பிரான் உநிக
நந்திபிராஞர்வக் சஉஅ
நம்பர்அடியார் உகஉ
நம்பர்தாம்அடிமை சநo
நம்பர்தாம்அதனை சஉநி
நம்பர்தாளின்வழி சநிஅ
நம்பர்மகிழ்திரு நo2உ
நம்பரைநலந்திகழ் உசுஉ
நம்பிஅருளாற் சஉஉ
நம்பிதாமும் சசுஉ
நம்பிபாதஞ்சேர சஎ0
நம்பியாரூரர்திரு நஅஅ
நம்பியாரூரர்நெஞ் சஉக
நம்பியாரூரனுக்கு சகசு
நம்முடையகுல அக
நம்மையுடையவர் உகக
நமக்குமுன்பிங் நிஅ
நரசிங்கமுனையர் ககு
நல்லகோவணம் சுள
நல்லசெங்கீரை ககச
நல்லதாய்தந்தை உ2o
நல்லதோழர்தம் சஎஉ
நல்லதன சஎநி
நல்லவகும்பங்கள் கநிச
நல்லகாள்பெற நசுக
நல்லபதமுறவெய்து க00
நல்லபொன்னெநி சுஅ
நல்லவெனஉறுப்பு உகக
நல்லூர்இறைவர் நகுந
நல்லூரில்நம்பர் கஅஉ
நல்லொழுக்கந் நிo
நலஞ்சிறந்தஞான சநசு
நலம்பெருகுஞ் நிoச
நலம்பெருகும்அப் சo நி
நலம்மலியுந்திரு நஎஉ
நலிவாரும்மெலி ககக
நவமின்சுடர் களசு
நள்ளார்களும் எஅ
நள்ளாற்றில்எழுந் உஅசு
நள்ளிருட்கண் உசக
நள்ளிருள்நாய சநஉ
நற்பதிஅங்கமர் சநந
நற்றமிழ்வரைப்பின் கஉ
நற்றவக்கனியார்நஅந
நற்றவர்தங்குழாத் நஎஉ
நற்றவராம்பெரு ககக
நற்றிறம்புரி கநச
நறவமார்பொழிற் நநிo
நறைஇதழித்திரு சசசு
நறைகமழுஞ்சடை நிக
நறையாற்றுங்கழுகு கநிஎ
நன்மைஉய்க்கும் நஉஅ
நன்மைசாலும் உஉந
நன்மைதீடியநடு கநச
நன்மைபெருகரு கஅo
நன்றிபுரியும் கநிக
நன்றுசாலஎன்றன் சுஅ
நன்றும்இழைத்த நிகநு
நன்றுமகிழுஞ்சம் நகo
நன்னீர்ப்பொன் நிகஅ
நனிபள்ளி அமர்ந்த சo நு
நனைத்தனையதிரு கஅo
நனைமருவுஞ்சினை கநo

நா

நாகசூதவகுளஞ் நo
நாகதலத்தும் சஎஅ
நாட்டார்அறிய உநக
நாட்டுநல்லிசை நஅ

காட்டும்மறைமுறை ஙஎச
காடியகழல்வயவர் கஙங
காடும்அன்பொடு சுஅ
காடும்இன்பொற்பு ஙடு
காடொறும்பணிந் சஙஂ
காடோறுஞ்சிவ சசஙங
காணனும்அன்பும் கூச
காணனேதோன் கூச
காணெனுகோட கஂஂ
காதமங்கலமுழக் ஙஎள
காதமறைதேர் உஉக
காதர்தம்அருள்மு ஙஉங
காதர்தம்அருளால் சஙக
காதர்தம்திரு எஂ
காதர்பால்பொருள் ஙகள
காதர்மருவுந்திரு ககூச
காதரும்அதனைக் சஉடு
காதரும்பெரு கசக
காதரைப்பணிந்து ஙஎக
காதன்தன்அடி சசஂ
காதனுர்அருளிச் சஙட
காம்அறியோம் உஙஅ
காமகாணத்தழகு உஙள
காமமூதூர்மற்றத கஉசு
காமார்க்குங்குடி கசுள
காமிங்குண்ப சடுச
காயகன்கழல் ஙட
காயன்தீரோதான் சஉங
காயனுர்உமக்களித் உகசு
காயனுர்தொண் சகக
காயனுர்மூதூகுன் சஂஂ
காயினஅடியான் சஉக
காரணற்கும் டுஂஅ
காரணன்தான் உளங
காலடிமேல்வைப்பு உசுடு
காலாங்குலத்திற் சஂக
காலுகாணங்களும் உகஂ
காலுதந்தமும் ஙசுங
காலூர்தென்திருச் கஅங
காவலர்கோன்ஆரூ உஅ
காவலர்தம்பெரு சளஙட
காவலர்மன்னவர் சளச
காவலூர்மன்னர் ஙஅசு
காவலூர்மன்னனுர் ஙஅள
காவலூர்வந்தசைவ சக
காவாண்டபலகலே உஙக
காவின்தனிமன் உகஅ
காவினுக்கரசர்கே உஉக
காவினுக்கரசரும் உகூடு
காவினுக்குவேந்த ஙஂக
காவுக்கரசர்எழுந் உகஉ
காவுக்கரசரும் களடு
காவுக்குமன்னர் கஅ0
காளிகோரஞ் கக
காளும்நம்பி உ0க
காளும்பெருங் கஉஉ
காளுமிகும்பணி ககூஉ
காஃப்போவேன் கஙஉ
கான்மறைநூற் கஅச
கான்மறைமுனி உசு
கானமான்மதகளிர் உகஙட

நீ

நிகரிலாமேரு உஅ0
நிகழும்ஆங்கவர் ஙசூ0
நிகழும்முறைமை கடுக
நித்தமும்நீங்காநில ஙகஉ
நித்திலச்சிவிகை உளசு
நிரந்தகங்குலின் ஙஎள
நில்லாதஉலகியல்பு ககூக
நிலத்தின்ஓங்கிய கஉஅ
நிலமகட்கழகார் கஙட
நிலமிசைப்பணிந்தஙகஉ
நிலவியஅத்திருப் சசடு
நிலவும்எண்ணில் ஙட
நிலவும்பெருமை சசுக
நிலவுமாளிகை உஅச
நிலைச்செண்டும் சசுக
நிலைமைமற்றது சுக
நிறைகுடந்தூபந் உஉ
நிறைகுடம்தூபம் உகள
நிறைசெல்வத் உஅள
நிறைந்தநீறணி கஉள
நிறைந்தமறை சசுடு
நிறைந்தாரா ஙஎக
நிறையழிந்த டுஂக
நிறையும்பரிசு உஉக
நின்அறநெறியை ஙஉங
நின்றஅன்பரை உஉசு
நின்றஊர்ப்பூசல் டுகக
நின்றசெங்குருதி கஂங
நின்றதிருத்தாண்ட உ0டு
நின்றநிலைமை சஉஉ
நின்றமறையோர் உகக
நின்றமுதூகுறக் அஅ
நின்றவர்அங்கெய் கஙஉ
நின்றவர்அங்கெதிர் சகடு
நின்றவர்தம்மை ஙஂள
,, ஙகள
நின்றவன்தொண் டுஉங
நின்றலியின் கடுடு
நின்றவேதியர் சுள
நின்ருலும்இருக் டுஂசு
நின்றியூர்மேயாரை சஂஙட
நின்றுகோபுரத்தை ஙஉ
நின்றெங்குமொய்க் க0
நினைத்தனர்வேறு கஂங

நீ

நீக்கரியநெற்குன் ஙஅஅ
நீங்குதுயில்பாங்கி சகடு
நீங்கும்இரவின் கஉச
நீடியஅப்பதிகளை உளஉ
நீடியஅப்பதினின் உ0உ
நீடியசீர்கடல் உகக
நீடியபேரன்பு உகஅ
நீடியமணியின் களள
நீடுகாஞ்சிவாண ஙடுங
நீடுகோபுரம்இறை உஅஉ
நீடுகோபுரமுன் ஙகள
நீடுசீர்த்திருநீல உஉடு
நீடுசீர்த்திருவாய் ஙஂடு
நீடுசீர்த்தென்னர் ஙஙள
நீடுதண்பணை கஙள
நீடுதிருக்கழுக்குன் ககசு
நீடுதிருக்கழுமலத் உசச
நீடுதிருக்காளத்தி சஙஙட
நீடுதிருத்தூங்கா களச
நீடுதிருத்தொண் ஙசஉ
நீடுதிருநின்றி உசுசு
நீடுதிருநீலநக்கர் உஅள
நீடுதிருப்பூவணத் சசுசு
நீடுதிருப்பொழிற் ஙடுடு
நீடுதிருவாச்சிரா உள0
நீடுதிருவாஞ்சியத் ஙஂஉ
நீடுதேவர்நிலகளும் ங

நீடுதொண்டர்கள் உருஅ
நீடுதொல்புகழ் சஅடு
நீடுந் திருவுடன் களசு
நீடுநிலத்தோர நடஎசு
நீடுநீள்நிலை உடுக
நீடுபுகழ்த்திரு கஅச
நீடுபூசனைநிரம்பி உஉச
நீடும்அப்பதிநீங்கு உளள
நீடும்அன்பினில் கஉக
நீடும்இசைத்திருப் நடுசு
நீடும்உரிமைப் சடுள
நீடும்பராய்த்துறை உளந
நீடுமெய்ப்பொரு நஉக
நீடுவண்புகழ்ச் நஅடு
நீடுவாழ்பதியாகும் உடுடு
நீடுவேலைதன் சகசுசு
நீண்டசெஞ்சடை நுகஉ
நீண்டவரைவில் களஅ
நீணிலக்கோபுர நசஉ
நீணிலமாளிகை உளஅ
நீதிமாதவர் சஉ
நீர்நாடுகடந்தருளி நடஅ
நீராடித்தருப்பித் உங
நீரார்சடையான் சசக
நீராருஞ்சடைமூடி சசள
,, கஅச
நீராருஞ்சடையா சகள
நீரின்மலிந்தகட சடுசு
நீரினிற்பொலி நஅடு
நீலகக்கடிகளும் உகடு
நீலமாமஞ்ஞை ககஅ
நீலமாமிடற்றாலவா நகச
நீலமாவிடந்திரு நடுo
நீவிநிதம்பஉழத்தி ககசு
நீள்நிதியாம்இது நுக
நீளிடைமூடுகி எக
நீளிடைவிசை கஉ
நீற்றலர்பேரொளி கஉக
நீற்றழகர்பாட்டு சoக
நீற்றூல்நிறை ககடு
நீற்றெளிதழைத் நஅo
நீறணிந்தார்அகத் ககசச
நீறுசேர்திரு கநசு
நீறுபூசுவார் உநக

நு

நுதலின்கண்விழி கஉசு

நெ

நெஞ்சம்நசனைக் கசo
நெஞ்சில்மருவுங் சநள
நெடிதுபோதுயிர்த் கடு
நெடியோன்அறி எந
நெடுங்களத் உளச
நெடுஞ்சடைகரந் சஅ
நெருங்குதூரியங் உக
நெருங்குபைங் ககு
நெருப்பினில்அஞ் நசஉ
நெருப்பினில் நநo
நெல்வேலிநீற்றழ சசுள
நெற்றியிற்கண்ணுர் ச
நெற்றிவிழியான் உந
நெறிகொண்ட அக

நே

நேசம்மிறைந்த கடுசு
நேர்ந்தவர்எதிர்ந்த டுடு

நோ

நோக்கிடவிதியி நஉஉ

ப

பகர்ந்துலகுசீர் கஉக
பகற்பொழுது நஅள
பங்கயக்கண்அருவி நடுஅ
பங்கயச்செங்கைத் சகஅ
பங்கயப்பாசடை உஅசு
பங்குனித்திருநா சஉடு
பஞ்சநாதமும் சஅசு
பஞ்சின்மெல்லடிப் நஅ
பட்டவனவிலங் ககக
படங்கொள்அரவில் நகஉ
படர்ந்தபேரொளிப் கஉ
படர்பெருந்தொங் நஅக
படிமிசைநிகழ்ந்த சகக
படியில்ஞானமூண் உகநு
படியில்நீடும்பத்தி டுகஅ
படியேறுபுகழ்ச் சசுடு
படிவம்மாற்றி உநo
படுபொருளின்றி நுநக
படுமணியும்பரிச் சளக
பண்டிசரிகோவண உஉ
பண்டெயிலத்திரு சகக
பண்டுதிருவடிமற உங்க
பண்டுநிகழ் சகசு
பண்டுபுரிநற்ற கசுஉ
பண்டுபோலப்பல உஉக
பண்ணுர்பதிக உடுக
பண்ணுர்மொழி சகக
பண்ணியவஞ்சனைத்நகஉ
பண்ணிறையும் சoஉ
பண்ணிறைத்த சஉo
பண்ணின்பயனும் கடுக
பண்ணுறும்உறுப்பு எச
பண்தருவிபஞ்சி கக
பண்பயில்வண்ட களக
பண்பயில்வண்டின உளக
பண்புடைஅமைச் நநசு
பண்புடையபாண் உoச
பண்புபெருகும் சடுக
பண்புமிக்கசிறுத் சடுo
பண்புமிக்கார்பல உoஅ
பண்புமேம்படுநிலை உஉடு
பணிகொள்ளும் சஅக
பணிந்துவீழ்ந்த உகச
பணிந்தெழுந்து உஅந
பணிந்தெழுந்துத கக
பணிபுவனங்களி கக
பணியார்வேணி கக
பணியும்அப்பதி உளள
பணியும்அன்பரை சுள
பணிவளர்அல்குல் நசுள
பணிவுடையவடிவு கoக
பணையில்வீளைந்த உஉள
பணையுந்தடமும் சசக
பத்தனுய்ப்பாடமா களள
பத்தியிற்குயிற்றும் நஅந
பத்தியின்பாலாகி கo
பதவுகாலங்களில் கடுந
பதிகஇன்னிசை உளள
பதிகாண்மலர் உஉசு
பதிகம்பாடித்திரு நகக

பதிகளெங்கும் ௧௭௬
பதிநிலவுபாண்டி ௩௪௬
பதுமநற்றிருவின் ௬௦௯
பதைத்தசெய்கை ௨௨௮
பந்தணைமெல்விர ௨௯௮
பந்தணையுமெல் ௫௦௩
பந்தம்வீதிதரும் ௩௭
பயன்தருவபஃற ௨௩௯
பயில்வடுப் ௮௩
பயில்வினியால்கலே ௪௪
பயிலேச்செறிந்த ௨௬௦
பரசுங்கருணைப் ௪௯௫
பரசுவந்தியர்மூன் ௬௮
பரந்தநிதியின் ௰௫
பரந்தவிளைவயற் ௨௩
பரம்புதம்வயின் ௩௭௮
பரம்பொருளைப் ௨௬
பரமர்அருளால் ௰௫
பரமர்தந்திருக்கரு ௨௯௨
பரமர்தந்திருப்பறி ௨௮௫
பரமர்திருஅரத் ௰௬
பரமர்திருப்பரங் ௰௯௯
பரமனூர்தந்திரு ௩௫௨
பரவமேன்மேல் ௪௫௫
பரவிஅப்பதிகத் ௩௪௫
பரவிஏத்திஅங் ௨௬௭
பரவிஏத்தியதிரு ௩௫௬
பரவியகாதலிற் ௨௮௮
பரவியேபணிக் ௬௨௦
பரவியேபரவை ௰௯௬
பரவிவரும்ஆனந்த ௩௭௦
பரவினர்காப்புப் ௩௫
பரவுகாதலிற் ௩௪௫
பரவுசொற்பதிகம் ௨௭௯
பரவுதிருப்பதிகஇ ௨௯௩
பரவுதிருப்பதிகங்க ௩௭௩
பரவுந்தில்லைவட்ட ௰௯௨
பரவும்பரிசென் ௰௭௦
பரவும்பெருமைத் ௫௬௬
பரவுவாய்குளரிக் ௩௬௮
பரவுறுசெந்தமிழ் ௨௮௨
பரவைஒதக்கழிக் ௬௮௮
பரவையர்தம்பால் ௰௨௯
பரவையார்மாளி ௰௯௬
பரவையார்வலங் ௩௭
பரிசனமும்உடன் ௰௦௨
பரிசுவிளங்கப் ௰௫௩
பரிவிற்போற்றித் ௰௫௬
பரிவுறுசிந்தை ௬௬௫
பருவமழுப்பொ ௨௭௨
பல்குதொண்டர் ௨௫௦
பல்குவெண்ணதிர் ௨௫௮
பல்பதிகள்கடந் ௩௭௩
பல்பதியும்மெடுங் ௬௬௭
பல்பெருநற்கிளே ௨௬௦
பல்லவனும்அது ௬௯௮
பல்லியங்கள்பரந்த ௬௨
பல்லியஞாதம் ௩௨௩
பல்வகைத்தாண் ௨௦௩
பல்வேறுவாளி ௬௦
பலதுறைகளின் ௬௨
பலநாள்அமர்வார் ௩௬௬
பலமுறையும்பணி ௨௯௮
,, ௫௫௰
பலர்தொழும் ௩௨௯
பவந்தவிர்ப்பவர் ௨௫௦
பழனத்துமேவிய ௨௯௮
பழிப்பறைமுழக்கோ ௬௫
பழுதில்சீர்த்திருப் ௨௭௭
பழுதுதீர்ப்பார் ௰௩௭
பழுதுபுகுந்ததுதீர ௬௮
பள்ளிகள்மேலும் ௩௬௦
பள்ளிகொள் ௨௨௫
பள்ளியினிற்சென் ௰௫௬
பற்றறுத்தஉபதேச ௰௩௫
பற்றூர்தம்புரங்கள் ௩.௰௦
பற்றொன்றிலாவரு ௬௮
பறிமயிர்த்தலே ௩௦௯
பன்மணிமுரசஞ் ௩௩௬
பன்முறைஉயிர் ௬௨௰
பன்னகப்பூணி ௨௰௭
பன்னுதமிழ்மறை ௨௭௦
பன்னுதிருப்பதிக ௰௮௮
பன்னுதொல்புகழ் ௨௦௭
பன்னெடுங்குன்று ௨௭௩
பனிநீர்விரவுசந்த ௰௯௰
பனிமதிச்சடையா ௩௬௮
பனிவிசும்பில்அமரர் ௩
பனிவெண்திங்கள் ௰௫௩

பா

பாகமருங்கிருபுடை ௬௰௫
பாங்ககன்றுமனைவி ௨௬௩
பாங்கணிசுரும்பு ௩௯௭
பாங்கியர்மருங்கு ௩௫
பாங்குடையதெறி ௨௬௨
பாங்குநின்றதந்தை ௰௬௦
பாங்குமணிப்பல ௬௦௬
பாங்கோடிச்சிலே ௩௰
பாசத்தொடை ௬௰௬
பாசமற்றிலாயினு ௨௫௰
பாசமாம்வினைப் ௩௭
பாசிலைப்படலே ௮௰
பாசொளிமணியோ ௮௰
பாட்டியல்தமிழுரை ௮
பாடல்ஆடல்இன் ௰எ௨
பாடலிசையும்பணி ௰௦௮
பாடலிபுத்திர ௬௰௬
பாடிஅங்குவைகிய ௩௬௨
பாடிஅறிவுபாவச ௰௦௬
பாடிநின்றுபரவி ௨எ௫
பாடிமிகப்பரவச ௰௬௬
பாடியஅப்பதிகப் ௩௦௩
பாடியஅப்பதியின் ௰௦௰
பாடியபதிகம் ௩௬௩
பாடியவர்பரவுத ௰எ௰
பாடினர்பணிவுற் ௩௫௰
பாடுத்தமிழ்மாலே ௬௬௦
பாடும்அப்பதி ௨௮௰
பாடும்அரதை ௨௮௦
பாடும்பதிகஇசை ௨௫௨
பாண்டிமாதேவியா ௩௬௮
,, ௩௨௦
,, ௩௨௬
பாணனூர்பத்திரனு ௰௫௬
பாதம்பரமன்னவர் ௬௨௰
பாதாளீச்சர ௰௰௮
பாதிமதிவாழ்முடி ௰௨௰
பாம்புரத்துறை ௨௬௭
பாய்த்தியபின் ௰௩௰
பாய்தலும்மிசை ௭௩
பாயுடைப்பாதக ௩௨௬
பார்தனையமதம் ௰எ௮
பார்மிசைநெருங் ௬௦௭
பார்விளங்கவளர் ௩௦
பாரிடத்தலைவர் ௰௨௭

பாரின்மிசை உஎக
பாலனும்மறையோ கo௫
பாவக்கொடுவினை கஎo
பாவியேன்கண்ட கo௨
பாவினதிசைவழி உசுo
பாவுங்கலைகள் கடுஉ
பாவுற்றபாராழி ஙஙச
பாளைவிரிமணங் கஙo
பான்மைஅர்ச்சனை சஙக
பான்மையால்வணி ஙசுக
பான்மையில்சமை அசு
பானல்வயல்தமிழ் ஙகஉ

பி

பிஞ்ஞகனும்ஈவலர் உங
பிணியவிழ்மலர் ஙசுஅ
பித்தனும்ஆகப் உச
பித்துற்றமயலன்று சஙடு
பிரமபுரத்திருமுனி உoச
பிரமபுரத்தில்அமர் ஙoo
பிரமபுரம்வேணு உஙச
பிரிவுறும்ஆவி உஉஉ
பிழையுளன சகஅ
பிள்ளைதைவரப் கஙசு
பிள்ளைமைப்பருவ ஙடு
பிள்ளையார்அதிகை உ.oங
,, ஙஉச
பிள்ளையார் அருள் உசக
,, உசக
பிள்ளையார்எழுந்த கஅசு
,, உஉஎ
,, உசஉ
,, உஎo
,, ஙகச
,, ஙஅடு
பிள்ளையார்கழல் கஎஅ
பிள்ளையார்செம் ஙஉச
பிள்ளையார்தந்திரு ஙடுங
பிள்ளையார்தமைக் உஙக
பிள்ளையார்தாமும ஙசஅ
பிள்ளையார்திருஅவ ஙஉ
பிள்ளையார்திருத் உஅள
பிள்ளையார்முன் ஙஉக
பின்னையாரும்உங்க ஙஉள
பின்னையாரெழுந் உஉசு
பிளவுகொண்ட கஙடு
பிறந்ததெங்கள் ஙக
பிறந்தபெருமழிச்ச் கoக
பிறந்துணர்வு கஙக
பிறவாதொரு டுகச
பிறைத்தளிர்ச் சுடு
பிறைவளர்சடை சஅ
பிறைவளருஞ்செ சளக
பின்சென்றபிள்ளை உஙக
பின்பும்ஆறிவா ஙஙங
பின்புமுன்னை உஉடு
பின்மறவர்கள் கூஉ
பின்னங்குப்பிழை டுoடு
பின்னும்பின்னல் சகஙங
பின்னெருநாள் சகள

பீ

பீடுகெழும்பெருந் சஅஅ
பீலிதடவிக்காணு சஙஅ
பீலியும்தடுக்கும் ஙகo

பு

புக்கபொழுதலர் சஅஙஉ
புக்கபோதவர் ஙகடி
புக்கிறைஞ்சிஎதிர் உகக
புக்கெதிர்தாழ்ந்து உகக
புகலிகாவலர் ஙoஎ
புகலியில்வந்த ஙஙசு
புகழ்ந்தகோமய உஉஉ
புகழனூர்தமக்கு கடுஅ
புடைமாலைமதி கஅஉ
புண்டரிகம்பொன் எஎ
புண்ணியமுதலே உசஙங
புண்ணியனூர் ஙசo
புண்தலைவன் கசுஙங
புணர்ந்தஆனிரை கஙஅ
புணர்ந்தமெய் உடுஅ
புத்தரினம்புடை ஙசஙங
புதியதான்மதிச் ஙஅசு
புதுமலர்மோந்த சகக
புந்தியினுல்அவ ஙசசு
புயல்காட்டுங்கூந்த கoஅ
புயலளப்பனஎன சஅடு
புரங்கடந்தவர் கசஅ
புரசைவயக்கட ஙகஉ
புரமூன்றுஞ்செற் டுoஎ
புரவித்திரள்கள் சசுo
புரிந்தவர்கொடுத்த எசு
புருவமென்கொடி ங.சுஎ
புல்லறிவிற்சமண களங
புல்லறிவிற்சாக்கி ங.சஙங
புல்லோடும்கல்லோ உoசு
புலர்வதன்முன் கசுஉ
புலரும்படியன்றி சo
புலரும்பொழுதின் கஉஎ
புலன்கொள்இன் உஎஅ
புலனெனும் உஅ
புவனவாரூரினிற் உகடு
புள்ளலம்புதண் உகசு
புள்ளுந்தண்புனற் கஙo
புற்றிடங்கொண்ட ங.ச
புற்றிடங்கொளும் உகச
புற்றிடம்விரும்பி ஙடு
புறத்தணைந்த ஙடுடி
புறந்தருவார் ங.உ
புறப்பட்டபோதி எஅ
புறம்பயத்திறை உசுo
புறம்புனின்று கஅக
புறம்புவந்தணைந்த ங.oச
புன்மைச்செயல் கஉங
புன்னயத்தரு உoஅ
புன்னெறியாம் களச
புனப்பண்ணை கடுள
புனவாயிற்பதி சசுஅ
புனிதமெய்க்கோ ங.அங
புனிதனூர்முன் ங.கஉ
புனைமலர்மென் ககo
புனைவார்பொற் உங.ச

பூ

பூங்கோயில்அமர்ந் சகள
பூங்கோயில்மகிழ் ங.அஅ
பூசுரர்எல்லாம் டுகக
பூசுரர்சூளாமணி டுகஉ
பூசைகடிதுமுடித் சசo
பூணுந்தொழில் கடுங
பூத்தபங்கய உஉங
பூதகணங்கள் கடுசு
பூதகணநாதர்புவி உங.சு

பூதராய்கர்புற் கஅ
பூதம்ஐந்தும் கஅ
பூதம்யாவையின் எ
பூதமுதல்வர்புற் சஉக
பூதிஅணிசாதன சடுo
பூதிகோவணஞ் உoஅ
பூதிமெய்க்கணிந்து ஙஙசு
பூதியாகியபுனித கசக
பூந்தண்பனிநீர் ஙஅக
பூந்தண்பொன்னி கடுo
பூந்துருத்தி ஙசக
பூமகளுக்குறை கசடு
பூமரும்புனல் கஙஎ
பூமருவும்கங்கை உஅக
பூமலிநறும்பொற் சஉக
பூமுகைஅவிழுந் உஙசு
பூவலர்நறுமென் ஙசுஅ
பூவார்சடிலத்திரு சஙசு
பூவார்திசைமுகன் கஅ
பூவிரியுந்தடஞ் ஙசஎ
பூவிற்பொலியும் ககஉ
பூவும்பொரியும் சஎஉ
பூழியர்தமிழ்நாட் ஙoசு
பூழியன்மதுரை ஙஙஅ

பெ

பெரியபெருமாட் களக
பெரியவர்அமுது உஉக
பெருக்கோலிட் உசச
பெருகியஅருள் ஙசுக
பெருகியஅன்பினர் களக
பெருகியநலத்தால் ககக
பெருகுகாதலிற் உஉஎ
பெருகும்அச்சமோ ஙகக
பெருகும்பதிகம் ஙகஙு
பெருகுமதிநூல் டுஉo
பெருகுவானம் டுஅ
பெருகுவிருப்பு உசுடு
பெருகுவேதமும் டுஉங
பெருகொளி ஙஅஉ
பெருத்தெழுகாத சகக
பெருத்தெழும்அ உஙடு
பெருந்தடங்கண் சஉஎ
பெரும்பாணர்வர உசஅ
பெருமகிழ்ச்சி ஙஎச
பெருமணக்கோயி ஙஎக
பெருமதில்சிறந்த ஙக
பெருமலையத்த உஙள
பெருமாள்வேண் சளஉ
பெருமைசால்அர உo
பெருமைபிறங்கு கடுக
,, கடுச
பெருமையால் சஉ
பெருமையிற்செறி சஅச
பெருமைவிளங்கு உஉ அ
பெருவாசமலர்ச் கஅங
பெருவாய்முதலை டுகக
பெருவிறல்ஆவி டுச
பெருவீரையனும் சஉச
பெற்றதாதை சகக
பெற்றம்உகந் டுoங
பெற்றம்ஏறிப் சசo
பெற்றியால்அருளி ஙஉடு
பெற்றியால்தவ அங
பெறலருந்திரு உகச
பெறலரும்புதல்வ உஉக

பே

பேணியஅற்புத உசஙு
பேணும்அன்பரை சுடு
பேதநிலைமைநீ தி சஉஉ
பேர்பரவைபெண் ஙசு
போதபாசப்பிணி ககக
பேரிசைஞாவுக்கர உசுடு
பேருலகில்ஓங் சஅஅ
பேருவகையால் ஙஎடு
பேறினிஇதன் கoச
பேறுவேறுசூழ் கஙடு
பேறெனக்கிதன் ஙக

பை

பைஞ்ஞீலியினில் ககஙு
பையரவமணியா சகஉ

பொ

பொங்கரில்வண்டு ககசு
பொங்கிஎழுங்காத உடுஉ
பொங்கிஎழுந்திருத் ஙoஅ
பொங்கியசிந்தை உகஙு
பொங்கியசினவில் ஙச
பொங்கியதிருவில் சசு
பொங்கியமாநதி ககசு
பொங்குகடற்கல் உகக
பொங்குகாதலி உளள
பொங்குகொங்கை உடுo
பொங்குதமிழ்ப் சகசு
பொங்குதிருத்தொ சஉo
பொங்குதெண் உடுங
பொங்குபுனலார் ககஉ
பொங்குபுனற்காவி ஙசக
பொங்குபெருவிரு சoo
பொங்குமாமறைப் கங
பொங்குவிடந் உகo
பொங்குவெண்கிழி சுசு
பொங்கொளிமால் உசஙு
பொச்சமில்லடி சுக
பொடிஅணிந்த உடுள
பொடிமூடுதழல் ககக
பொடியார்க்குந் ககங
பொய்கடிந்தறத் சள
பொய்கைசூழ்பூம் உoடு
பொய்தருமால்உள் ககஙு
பொய்தவமாக ஙஉச
பொய்யிலியாரை ஙசஅ
பொய்வாய்மை ககடு
பொருட்டிருமறை எக
பொருந்தியவிட உஉo
பொருப்பரையன் உகஅ
பொருப்பில்எழுஞ் கூஅ
பொருப்பினில்வந் கoக
பொருபுலிப் அடு
பொருவருஞ்சிறப் அங
பொருவருந்தவத் சு
பொருவரும்வழக் உசு
பொருவில்திருத் சசஅ
பொருவில்பெரு சடுஉ
பொருவில்பொன் சஙக
பொருவிலாதசொ உகசு
பொலங்கலப்புரவி சக
பொழுதுவைக உங்o
பொற்களபமாளி ககடு
பொற்குடம்மிறை ஙஅo
பொற்சிலவீலய அo
பொற்பமைந்த சளஅ

பொற்றடவரை அள
பொற்றிரள்கள் நசுo
பொற்றிருவீதி நகஅ
பொற்றொடிச்சிறு நசுக
பொன்தயங்குமதி *கள
பொன்தரத்தாரும் கoடு
பொன்தவழ்அரு எடு
பொன்தாழ்அருவி சுங
பொன்திரளும் உக
பொன்பரப்பி சஎo
பொன்மதில்சூழ் சகசு
பொன்மலைக்கொடி உoக
பொன்மலைப்புலி எக
பொன்முகலி ககள
பொன்னணிசங் நஅக
பொன்னூர்ந்ததிரு களச
பொன்னூர்மௌலி சசுo
பொன்னிதழ்க் உசள
பொன்னிகீர்நாட் சதச
பொன்னிமயப் கசஅ
பொன்னிவலங் உoங
பொன்னிவளந்தரு நசக
,, நஉச
பொன்னின்வெண் ங

போ

போகநீடுநிதி நக
போதஞானப்புகலி உடுள
போதநீடுமாமறைய நசக
போதம்மிகழ ககo
போதராகின்ற ககச
போதுபோயிருள் உஉடு
போதுவர்மீண்டு கடு
போந்துபுகுந்த சஉஉ
போந்துமாமாத்திர உஅஅ
போமதுதனைஅடு கங
போமாறுணர்ந்து ககக
போய்அவள்மனை சஉடு
போர்வலச்சிலைத் கக
போர்வைத்தோல் கஙக
போற்றிச்சடை உகஅ
போற்றிசைக்கும் உஅள
போற்றிசைத்துப் ககசு
,, உஅo
,, நசஉ
போற்றிநீள்தில்லை சசு
போற்றிமெய்யருட்நசுடு
போற்றியகாதல் உசுசு
போனஅதிகுரன் அக
போனவர்தாம் சநச
போனவேதியர் சுசு

ம

மக்கட்பேறின் டுகச
மகட்கொடையின் உகக
மகரதோரணம் நசுச
மகிழ்ச்சியால்மண உo
மகிழ்த்ததன்தலை உளஅ
மங்கலகீதநாதமறை உக
மங்கலகீதம்பாட நங
மங்கலதூரியத்து உசச
மங்கலதூரியநாத நஎசு
மங்கலதூரியம் உளo
மங்கலநல்லியம் சதள
மங்கலம்பெருக சுக
மங்கலம்பொலியச் உo
மங்கலம்பொலியஎ நஅஉ
மங்கலமாஞ்செயல் ககo
மங்கலமாம்பூசனை சசுக
மங்கலமாமணவினை உகக
மங்கலமாமெய்ஞ் உசடு
மங்கலவிழவு ஏஉ
மங்கலவினைகள் கக
மங்குல்வாழ்திரு கoச
மங்கைபாகர்தம் டுஉங
மங்கைபாகர்திரு நடுஉ
மங்கைபாகராம் சுஅ
மங்கையர்க்கரசி நகக
மங்கையர்க்குத்த டுகஉ
மங்கையர்க்குவாள் கநசு
மங்கையைப்பாக சுo
மங்கையொருபால் சகஉ
மங்கையோடுடனு உநக
மட்டவிழ்அலங்கல் எசு
மட்டவிழ்கொன் உகள
மட்டுவிரிபூங்குழல் சடுஉ
மடமகள்தன்னை உகச
மடல்கொண்டமல சசஅ
மடலாரும் சoங
மடவரலைமுக சசக
மடித்தாடும்அடி நகக
மடுத்தபுனல்வே உகள
மடைஎங்கும்மணி உநச
மடையில்கழுநீர் கடுக
மண்டியபேர்அன்பி நஉ
மண்டுகாதலின் சுக
மண்டுபுனல்பரந்த கூ
மண்டுபோரின் சஅக
மண்ணிக்கரையின் கடுங
மண்ணியமணியின் நசுள
மண்ணில்திகழுந் உகo
மண்ணில்வாழ்தரு கங
மண்ணின்மிசைவந் கசஅ
மண்ணின்மிசைவா நoo
மண்ணினல்ல நநக
மண்ணினிற்பிறந் நசுசு
மண்ணினிற்பொலி உசo
மண்ணினுக்கிடுக் நஅக
மண்ணினுள்ளார் டுகக
மண்ணிறைந்தபெ சகசு
மண்ணுக்குயிரா சஅஉ
மண்ணுலகில்வாழ் உசக
மண்ணுலகுசெய்த உசஉ
மண்முதலாம்உல உoள
மண்மேற்சைவ சடுசு
மணமிசைத்தநா உகக
மணவினைக்கமைந்த உo
மணிநெடுந்தோர களங
மணிவீதிஇடங் உசுஅ
மதிமுதற்பரவை சஉள
மதிபுனைந்தவர் உளள
மதிவளர்சடைமுடி க
மதிவாண்முடியார் சகஉ
மதிவிளங்கிய சுக
மந்தரத்தும்மத்தி ககக
மந்தாகிலம்வந் கஉக
மந்திரங்களான உசச
மந்திரச்செயல் நகஅ
மந்திரமுறையால் நஅங
மந்திரிகள்அகண் கசு
மந்திரிகள்தமை டுகடு
மந்திரியாரை நஉங
மயங்கியநண்பர் சஉசு
மயிலொடுங்கவண் உளக
மரபிரண்டுஞ்சைவ உடு
மருகல்அமர்ந்து உகக

மருங்கின்மந்திரி ஙகச
மருங்குனின்றவர் கூசு
மருங்குபெருங் ககட
மருங்குளநற்பதிக உஅட
மருட்கொடுங் கஙஅ
மருணீக்கியார் கடுக
மருத்துநூலவர் ஙகக
மருந்தும்எண்ணிலஙசுஙூ
மருமேவுமலர்மேய கடுள
மருவலார்புரம் உளஅ
மருவியஏழிசை ஙடுச
மருவியகால் கஉ0
மருவியதிருவின் க0டு
மருவும்அன்பொடு சுடு
மல்கியவளங்கள் அசு
மல்குதண்டலை உஅச
மல்கும்அப்பெரு கஙடு
மல்குமகிழ்ச்சி ச0ள
மல்லல்ஞாலம் சளசு
மல்லல்நீடிய உகூச
மல்லல்நீர்ஞாலம் எக
மலர்ந்தசிந்தைய சுள
மலர்ந்தபேரொளி உடுக
மலர்நீலம்வயல் கடுஅ
மலர்பெருங்கிளை ஙஅஙூ
மலர்மழைபொழி உகசு
மலர்மாரிபொழி ஙூ0அ
மலர்மிசைஅய ள0
மலர்மேல்அயனும் சகஉ
மலரமளித்துயிலாற் ச0
மலைக்குலக்கொடி கசக
மலைச்சிகரச்சிகா ககள
மலைநாட்டரசர் சசுச
மலைநாட்டெல்லை டுஉ0
மலைபடுமணியும் அடு
மலைமலித்தருளா சளடு
மலையான்மடந்தை ச0க
மலையும்பல்சமயங் கசுசு
மலையொடுமலை சஅ0
மலைவளர்சந்தகில் உஅ
மலைவளர்சந்தனம ஙசக
மலைவிழிப்பன கஙஅ
மழபாடியினில் ஙகஙூ
மழபாடிவயிரமணி உசுஅ
மழவிடைஇளங் ஙக0
மழவிடைமேல் சசச
மழுவுடைச்செய்ய க0ள
மழையிற்கரை சடுள
மழைவளர்உலகில் எக
மற்றத்திருப்பதி உகூட
மற்றதற்குப்பிள்ளை உசக
மற்றதனில்வடதீழ் ச0க
மற்றதனைக்கொடு உகஙூ
மற்றதுகண்டபோ ஙூ0ச
மற்றதுகண்டுமைந் கச
மற்றநற்பதிவட உசுஉ
மற்றப்பதிகள் ககஙூ
மற்றப்பதியினி சஅள
மற்றம்மாற்றம் டுஅ
மற்றமாமறை ஙகசு
மற்றமாற்றங்கேட் சஉஉ
மற்றவ்வூர்ப்புறம் கஙூ0
மற்றவ்வூர்தொழு ஙூ0உ
மற்றவண்பதி உகள
மற்றவர்அணைய எஉ
மற்றவர்இனைய எள
மற்றவர்க்குவிடை உக0
மற்றவர்கட்கருள் ஙூ0எ
மற்றவர்கருவி டுகசு
மற்றவர்கள்நிலை ஙசஙூ
மற்றவர்கள்வெவ் ஙசஙூ
மற்றவர்சென்று ஙூ0எ
மற்றவர்சொண்ணமா டுடு
மற்றவர்சொன்ன ஙஉக
மற்றவர்தஞ்செய் அ0
மற்றவர்தந்திரு உஙச
மற்றவர்தம்உரை சகஙூ
மற்றவர்தம்பெருங் உஅஅ
மற்றவர்தம்மூன் சகூ0
மற்றவர்தம்மை உகடு
மற்றவர்தம்மொழி கசக
,, ஙஎச
மற்றவர்தம்வடி சஅச
மற்றவர்தமக்கு ஙசுக
மற்றவர்தாம்அணி சஙூ
மற்றவர்தாம்உயிர் கசு0
மற்றவர்தாம்போயி உகள
,, டுஒச
மற்றவர்திண்ண கூங
மற்றவர்பிசைந்து க0ங
மற்றவர்பின்னேயா ஙூசு
மற்றவர்மனைவி க0சு
மற்றவர்மொழிந்த எச
மற்றவர்வணங்கி சஙஉ
மற்றவருங்கைகுவி சகச
மற்றவரும்பணிந் சளஙூ
மற்றவரும்மனமகி கஅக
மற்றவரைஎதிர் உஉ0
மற்றவற்றின்பரப் சளஙூ
மற்றவன்இங்கு சஙக
மற்றவன்இசைந்த உ0
மற்றவன்கொண்டு சுஉ
மற்றவன்செயல் டுள
மற்றவன்தன்உடம்சஙூச
மற்றவன்தன்மொ அஅ
மற்றவன்தீர்க்கில் சஙூ0
மற்றவனுங்கொற்ற எஅ
மற்றவனும்முறை உகக
மற்றவுரைகேட்ட ககூச
மற்றவேலையிற் உஉடு
மற்றிதற்குப்பதிகம் எ
மற்றிக்கிலைமை சகஅ
மற்றிவ்வான்பழி ஙகடு
மற்றிவர்மிடைந்து ஙஎக
மற்றிவனும்வான உக0
மற்றினிநாம் அஉ
மற்றுநீவன்மை உள
மற்றும்இனையன களஉ
மற்றுவேறொரு உசுக
மற்றைநாள்தம் ஙூ0க
மற்றைமறையோ கடுக
மறக்கருதிநெறி கடுஅ
மறவாகைமயால் சகள
மறிகரத்துதண் சுள
மறுவில்சிந்தை ஙஅ
மறுவிலாமரபின் சசு
மறைக்குலமனை ஙஅஉ
மறைகள்கிளர்ந் உசஉ
மறைகளாயவான் ஙகச
மறைகளாயினமூன் உச
மறைகளால்துதித் கசஙூ
மறைத்தவன் சுஉ
மறைமுழங்கின உடுக
மறைமுனிஅஞ்சி டுசி
மறைமுனிவர்மூழ் உச0
மறையவர்கள்அடி உசுஙூ
மறையவர்கள்மொ கஙஙூ
மறையவர்வேள்வி ஙஙசு

மறையவனுகின்ற சகூ
மறையனேத்தும் உருச
மறையாளர்திருக் சகூச
மறையொலிபொ ஙஅங
மறையோர்மொழி கருருி
மறையோர்வாழு நிகஅ
மறைவளர்திருவே உசஙூ
மறைவாழ்அந்தண ஙஎச
மறைவிளங்கும் உஎள
மன்பெருந்திருமா சஉ
மன்பெருமாமறை க0க
மன்றல்மலர்ப்பிறங் ஙூ0க
மன்றல்விரவுமலர் கஅஅ
மன்றல்வினைத் ஙஎசூ
மன்றலங்கழனிசூழ் உஎசூ
மன்றலங்குழலி ஙூக
மன்றலந்தருமிடை நிஉக
மன்றில்கிறைத்து சஎ0
மன்றுளாடுமதுவின் ஙூ0
மன்றுளேதிருக் நிஉ
மன்னகேள்யான் சஙூஅ
மன்னர்பெருமான் சருஎ
மன்னவர்க்குத்தண் சசருி
மன்னவர்திருவும் உக
மன்னவருமபணி சகூக
மன்னவன் அதனைக் கருி
மன்னவன்அவரை ஙூஉ0
மன்னவன்இடும் ஙூஉக
மன்னவன்உரைப்பஙூசு
,, ஙூகள
,, நிகக
மன்னவன்தன்மைக் கள
மன்னவன்தன்னே எருி
மன்னவன்பால் நி0ச
மன்னவன்மாற்றங் ஙூஉநி
மன்னவன்மாறன் ஙஙூசு
மன்னவன்மொழி ஙூஉசு
மன்னவன்வருத்த க0எ
மன்னவன்றன் நி0ச
மன்னவனுர்அது சஎளங
மன்னவனேவிடை சசசு
மன்னன்வணங்கி சஙூக
மன்னிஈடிய சஅச
மன்னிப்பெருகும் சஙூக
மன்னியஅந்தக்கர உ0எ
மன்னியன்பின் களங
மன்னியசிறப்பின் எக
மன்னுகின்றஅத் கசஙூ
மன்னுகோயிலை உருிக
மன்னுங்கருவூர் சஅஉ
மன்னுசீர்மயிலைத் சகூசு
மன்னுசீர்வயல் சஙூ
மன்னுஞ்செல்வ கஙூ0
மன்னுதபோதனி கசூஉ
மன்னுதிருக்கான சசூஅ
மன்னுதிருக்கேதா சஙூங
மன்னுதிருநள்ளா உஅள
மன்னுதிருப்பதிக ஙூருசு
மன்னுதிருப்பதிகள் சகக
மன்னுதிருமாற்பே ச0அ
மன்னுதோரண உகச
மன்னுந்திசைவே சஉரு
மன்னுபுகழ்த் ஙூருக
மன்னுபெருஞ் ஙஎருி
மன்னும்அக்கோயி உஎசு
மன்னும்அப்பதிவ சுச
மன்னும்அப்பதிவா உஎள
மன்னும்இசை ஙஎஙூ
மன்னும்உரிமை சஉச
மன்னும்எதுக் ஙஙூங
மன்னும்பதிகம் கசூருி
மன்னும்புகழ்நாவ ச0
மன்னுமருதின் ஙூஉ
மன்னுமாமடம் உஅச
மன்னுமிராமேச் சசூள
மன்னுயிர்புரந்து கரு
மன்னுவார்சடை ஙூசூ
மனத்தினுற்கருதி நிக0
மனந்தளரும்இடர் கஉஉ
மனமகிழ்ந்தவர் சுக
மனமகிழ்ந்து சஅக
மனிதரால்எடுக்கு ஙூஅள
மனைசாலும்நிலைய க0க
மனைப்படப்பிற் கள
மனைமருங்கடகு கசச
மனையறத்தில் உஙூரு
மனைவியார்கொழு நிக
மனைவியார்சுற்றத் நிச
மனைவியார்செய்த உஉச
மனைவியார்தம்மூக சருக
மனைவியார்தம்மை நிக
மனைவியார்தாம் உகஙூ
மனைவியாருடன் உஉ0
மனைவியாரொடு சூள

மா

மாகமார்திருக் கூரு
மாகமீ துவளர்ந்த ககூச
மாசறுசிந்தை ககருி
மாசில்வடகலை ககஙூ
மாசில்வாய்மை உருிசு
மாசில்வெண்ணை நிஉஉ
மாசிலாதமணிதிகழ் கச
மாசிலாமரபில்வந்த உங
மாசின்மதிநீடு ககுச
மாசின்மனத்துய ககு0
மாசுசேர்அமணர் ஙூங
மாசுசேர்ந்தமுடை சஙூள
மாசுடம்புவிடத் கஙூங
மாடநிரைமணி உசுச
மாடநீடுதிரு ககூ0
மாடம்ஓங்கிய ஙூசுரு
மாடமாளிகை கஉ
மாடலகுருதி நிருி
மாடவீதிஅலங் கசஎள
மாடவீதிமருங் ககூச
மாடுசூழ்திரு உகூச
மாடுபுனற் ஙூசஙூ
மாடுபோதகங்கள் கக
மாடுவிரைப்பொலி ககசு
மாடுளபதிகள் ஙூகூச
மாடுற்றணைஇவுளி கள0
மாடெங்கும்நெரு கஉருி
மாதங்கம்எருத் சூஉச
மாதங்கம்தீங்கு எருி
மாதர்தம்ஏவலாலே சஙூக
மாதர்காறுபறிப்பவர் கூ
மாதர்ப்பிறை உ0உ
மாதரவர்மகிழ்க்கிழேசகருி
மாதரவர்மருங் உ0சு
மாதவஞ்செய்த சு
மாதவமறையோர் உஉஉ
மாதவர்கள் ஙருிள
மாதவவேடங் சுக
மாதினியார்நி கருிக
மாதுக்கரீங்கரு ஙூசூ
மாதுகூறுவள்மற் நிஅ

மா துடன்கூட ௪௬
மா துதன்னேமுன் ௫௬
மாதொருபாக ௬௬
மாதகரம்அலங்கரி ௨௯௬
மாநாகம்அருச்சி ௨௬
மாநிலங்காவலனு ௬௯
மாபாவிக் கடையம ௬௯௬
மாமணிச்சிவிகை ௨௬௫
மாமதில்ஆரூர் ௬௪௫
மாமதில்மஞ்சு ௭௬
மாமலையாள் ௪௬௬
மாமறைநூல்விதிச் ௫௭௯
மாமறைமைந்த ௫௪௬
மாமறையாளர் ௨௯௬
மாமறையோர்குழா ௨௪௫
மாமறையோர்வள ௫௬௪
மாமறைவிதிவழா ௨௦
மாமறைவிழுக்குல ௨௫௭
மாமுனிவர்காள் ௬௦௦
மார்பமுந்தசை ௬௬௬
மார்பாரப்பொழி ௬௪௪
மார்பிற்சிறுதந்த ௪௬
மாரிக்காலத்திரவி ௫௪
மால்பெருக்குஞ் ௫௬௬
மாலயற்கரிய ௫௬
மாலயன்சதமகன் ௫௬
மாலயனுக்கரி ௫௦௫
மாலாயவன்என்ன ௫௫௪
மாலினுந்திச்சுழி ௪
மாலும்அயனும்உ ௫௪௬
மாலும்அயனும்மா ௪௨௪
மாலேசாந்தாடும் ௫௯௪
மாலேசூழ்புறங் ௨௬௫
மாலேதண்கலவை ௪௨௬
மாலேபயிலும் ௨௨௭
மாலேயாமம்புலர் ௨௫௭
மாலேயிடையாம ௫௫௯
மாலேவெண்குடை ௫௬௯
மாவிரைத்தெழுந் ௬
மாவீற்றிருந்த ௪௫௫
மாளிகைகள்மண்ட ௫௫
மாளிகைமுன்அத் ௭௬௬
மாளிகையின்உள் ௫௭௫
மாற்றூர்க்கமரில் ௪௬௭
மாறன்பாடினனும் ௨௫௫
மாறனும்அவரை ௫௨௫
மாறில்ஊன்அமுது ௬௦௨
மாறில்பெருஞ் ௬௦௬
மாறில்வண்பகட் ௬௫௯
மாறில்வண்பெரு ௫௯௪
மாறிலாதஇப்பூச ௬௪௨
மாறிலாநிறை ௫௭௭
மாறிலாமிழ்ச்சி ௬௦௮
மாறுகடிந்தமண் ௪௬௭
மாறுபெறல்அருங் ௬௪௫
மாறுமுதற்பண் ௬௬௮
மாறுற்றவிறற் ௪௮௬
மான்இளம்பிணை ௫௫
மான்மறிக்கை ௨௨௫
மானச்சிலை ௬௦
மானமன்னவன் ௫௨௮
மானமிகுதருமம் ௨௬௦
மானவிஞ்சையர் ௬௬௮
மானியார்தாமும் ௫௬௭

மி

மிக்கசெல்வமனை ௪௫௫
மிக்கதிருத்தொண் ௫௫௬
,, ௫௭௪
மிக்கபுனல்தீர்த் ௪௨௦
மிக்கபெருங்காத ௫௫௭
மிக்குயர்ந்த ௫௭௦
மிக்கெழும்அன் ௪௪௮
மிடையும்நீள் ௨௦௬
மின்னெடுஞ்சடை ௨௨௪
மின்பொலிபன் ௬௪௫
மின்னுர்சடையார் ௪௬௨
மின்னுர்செஞ்சடை ௫௫
மின்னிடைமடவா ௬௦௯
மின்னுசெஞ்சடை ௬௬௫
மின்னும்மணி ௬௨௫
மின்னெளிச் ௪௬௭

மீ

மீட்டும்அவர்பரவு ௪௦௬
மீளமீளஇவ்வண் ௬௫௪
மீளாஅடிமைஎன ௪௨௬
மீளாதஅருள் ௫௬௬
மீளும்அத்தனே ௨௦௦
மீளும்ஓதமுன் ௬௫௬
மீன்விலைப்பெரு ௪௮௯
மீனவற்குயிரை ௫௫௯
மீனவன்கொண்ட ௫௫௦
மீனவன்செவியி ௫௨௦
மீனவன்தன்மே ௫௨௯
மீனவன்தேவி ௫௫௮

மு

முக்கண்ணக்கராம் ௯௫
முகிலுரிஞ்சுங் ௬௪௫
முஞ்சிராண்உற ௯௫
முட்டஇமையோர் ௪௦௬
முட்டில்அன்பர் ௯௮
முட்டில்மீன்கொ ௪௮௫
முண்டநிறைநெற் ௬௬௦
முத்தமிழ்விரகர் ௨௪௮
முத்திரையேமுத ௬௬௮
முதுவாயோரி ௪௦௯
முந்திமுவெயில் ௬௬௮
முந்தைதாள்கள் ௨௫௪
முந்தைமறைநூன் ௬௬௮
முந்நீர்வலங் ௪௯௫
மும்மைப்புவனங் ௬௨௬
மூரசங்கொள் ௪௮௫
மூரியம்பிய ௫௯௫
மூரசுடைத்திண் ௪௮௨
முருகலர்சோலை ௨௬௪
முருகிற்செறி ௬௮௫
முருகுவிரியும் ௪௫௫
முருகுறுசெங் ௫௦௦
முழுதும்பழுதே ௬௨௫
முற்றுதிதாந் ௪௪௦
முற்றும்பொரு ௪௮௬
முற்றுமெய்ஞ்ஞா ௫௮௬
முற்றுமெய் ௫௪௬
முறித்தவைஅடுப் ௫௬
முறையால்வரு ௨௮
முன்செய்தஅருள் ௪௦௬
முன்துயில்உணர்ந் ௪௨௬
முன்நின்றமழ ௬௨௦
முன்நின்றுதொழு ௪௬௮
முன்நின்றுமுறை ௪௬௮
முன்நெற்றியின் ௨அ௬
முன்புகண்டு ௨௦௬
முன்புசெய்தவத் ௬௪

மூன்புதமக்குப் சஅள
மூன்புதிருக்காளத் கoo
மூன்புதிருவிளக் சகூங
மூன்புநின்றரிதில் கூசு
மூன்புநீமக்குத் • உள
மூன்புபணிந்த சகூஉ
மூன்புபோல்முதல் ககச
மூன்மால்அயன் உடுஉ
மூன்னணைந்ததிரு ஙoஙு
மூன்னம்ஆங்கவன் சு
மூன்னவரைநேர் கடுo
மூன்னுள் அயனுந் கஅள
மூன்னுள்முதலே டுகக
மூன்னியஅப் சஙசு
மூன்னிருந்தமைந் அஅ
மூன்னிலகமரே ககடு
மூன்னிறைஞ்சித் ஙளஙு
மூன்னேவர்தெதிர் ஙசு
மூன்னோள்போல் கoக
மூன்னேவினையால் சஉஙு

ழ

மூடுபன்மணிச் ஙசுடு
மூண்டஅப்புலவி சஅ
மூண்டபெருமகிழ் உஉo
மூண்டுமுன்பல டுடு
மூப்புறும்அத்தளர் உகஉ
மூரியார்கலியுல சகூச
மூலத்தானத் டுகள
மூலமான திருத் டுகஅ
மூவருக்கறிவரும் உஅஉ
மூவலூர்உறை உஅச
மூவாதமுதலாகி சoo
மூவாதமுழுமுத சoஙு
மூவேந்தர்தமிழ் டுoக

மெ

மெய்த்தஆகமவிதி உஉங
மெய்த்தவரைக் டுoக
மெய்த்திருஞான உகூஉ
மெய்தரும்புகழ்த் கஙஅ
மெய்ந்நிறைந்த உசச
மெய்ப்பசியால்மிக சoசு
மெய்ப்பொருளா உசஎ
மெய்ம்மேற்கண் உசo
மெய்ம்மைப்பணி ககசு
மெய்ம்மைபோற்றி உடுள
மெய்யன்பர்மனத் கஉo
மெய்யெலாம்நீறு சுக
மென்பூஞ்சயனத் சஉஉ

மே

மேக ஒழுங்குகள் எக
மேகமும்களிறும் கக
மேதகையஇந் உஙக
மேதினிமேற் உஙடு
மேயஇவ்வுரை உ
மேல்கொண்ட எஉ
மேலம்பரதல களசு
மேலாம்பெரியோர் கடுடு
மேலாறுசெஞ்ச கoஅ
மேலுஇமையோர் உஙசு
மேவநாவாஅஞ் கூஅ
மேவரியபெருந் டுoடு
மேவலர்புரங்கள் அஉ
மேவிஅங்குறை உஅஉ
மேவியஅத்தொண் சoடு
மேவியகாதல்தொ ஙகூஅ
மேவியசீர்ஆரூரர் சகடு
மேவியபணிகள் களள
மேவுசெல்வம் ககஙு
மேவுதிருவாதிரை கஅச
மேவுநாளில் உஉள
மேவுபுனற்பொன் களக
மேவும்உரிமை சடுசு
மேவுற்றஇவ்வே லை கசுடு
மேற்பட்டஅத்த உகூக
மேன்மைநான் ங
மேன்மைவிளங்கு உஙo

மை

மைச்செறிந்த அங
மைத்தடங்குன்று எடு
மைதழையும்மணி டுoக
மைதீரும்மறை உஉஉ
மைந்தன்தன்னை டுகக
மைம்மருபூங்குழல் ஙoo
மையல்நெஞ்சுடை ஙஉஅ
மையற்றுறைஏறி கசுடு
மையார்தடங்கட் உoக
மைவளர்கண்டர் ஙச

மொ

மொய்காட்டும் கூஅ
மொய்கொள் உடுஙு
மொய்த்துவளர்பேர் உஙு
மொய்தருஞ் உஎடு
மொய்திகழ்சோலை உசுள
மொய்பனிகூர் உஎஉ
மொய்யளிசூழ்கிரைக்குஅ
மொய்வைத்தவண் கஉக
மொழிந்தருளஅது ஙஉஉ

மௌ

மௌவல்மாதவிப் ஙசுஉ

யா

யாகம்கிலவும்சாலை கடுo
யாங்கள்உமக்குப் சகக
யாதவன்துவரைக் ச
யாதானும்இவ் டுoசு
யாதும்அரியதில்லை சடுக
யாதுமொன்றறிவி ஙஉடு
யாதொன்றும் கoடு
யாவர்க்கும்மனமு சகூச
யாவர்களும்அறி ஙடுஅ
யாவருக்குந்தந்தை உச0
யாவரும்பெருமகிழ் ஙுக
யாவரெனினும் சகஅ
யாழ்நரம்பில்ஆர உஅள
யாழில்எழும் உசஅ
யாழின்மென்மொ ஙகச
யாழின்மொழிஎழி சகசு
யாழின்மொழியாள் சசக
யானேஇனிஇக் கடுஉ
யானைஅணிகள் சசுo
யானைமிசைநின் சடுள
யானைமேல்கொ டுஉஉ
யானையின்கையிற் களக

வ

வக்கரைப்பெரு ஙடுக
வங்கமலிகடற் உகo
வஞ்சகர்விட்டசின களo
வடகரையில்திரு சளo
வடகுரங்காடு உசுள
வடங்கொண்ட கஙக

வடதிசைத்தேசம் ௨௬௯
வடமாதிரத்துப்பரு ௯௦அ
வடிவுகாண்டலும் ௯௫
வடிவுதாங்காணு ௨௬அ
வடிவும்குணமும் ௯௬௦
வடிவேலதிகன் ௯அ௬
வண்டமிழ்மென் ௬எ௫
வண்டல்பயில்வன ௨௬௦
வண்டிரைத்தெழு ௨௫௦
வண்டுபாடப் ௬௨எ
வண்டுலாங்குழல் ௨௦௦
வண்டுலாங்குழலார் ௯௨௬
வண்டோங்குஞ் ௬௬௯
வண்ணங்கண்டு ௬௬௨
வண்ணநீள்வரை அ
வண்ணவெஞ்சிலை அ௨
வண்தமிழின் ௨அ௦
வண்புகலிவேதிய ௨அ௫
வணங்கிஉள்ளங் ௯௦அ
வணங்கிமிகமன ௫எ௨
வணங்கும்அன் ௯௯
வணிகர்பெருங் ௨௬௦
வணிகருஞ்சுற்றமு ௫௯௬
வணிகனுந்தன் ௨௬௫
வந்தஅந்தணன் ௫௬௯
வந்தஇப்பழியை ௬௫
வந்தகவலைமாற்று ௨௨அ
வந்தடைந்தசிறு ௨அ௬
வந்தடைந்தவர் ௬௯௯
வந்தணைந்தஎயர் ௬௬௨
வந்தணைந்தகிருத் ௨௯அ
வந்தணைந்தமாத ௫௫அ
வந்தணைந்தமாவிர ௬௬௬
வந்தணைந்தவர் ௨அ௨
வந்தணைந்தவாகீசர் ௨௬அ
” ௫எ௯
வந்தணைந்துதிலக ௬௯௯
வந்தணைந்துதிருக் ௨அ௬
வந்தணைந்துவாழ் ௨௬அ
வந்தணைந்துவினவு ௯௯௬
வந்தணைவற்ற ௯௬௬
வந்தகிருத்தொ ௨௯௫
வந்தபின்தொண்ட ௯௬
வந்தபின்மனைவின ௫௬
வந்தமனைக்கடி ௯௫௯
வந்தமாபின்அர ௯௫௯
வந்தமூதறிவோர் ௨௬௬
வந்தமூதறிவோரை ௬௬௦
வந்தவர்அணைந்த ௨௬௫
வந்தவர்அழைத்த ௬௫
வந்தவர்குருதிகண் ௬௦௨
வந்தவரைஎதிர் ௫௬௫
வந்தழைத்தமாற் ௬௬
வந்தித்திறைவர் ௯௦௬
வந்திறைஞ்சு ௨௬௫
வந்துகோபுரமணி ௨௫௬
வந்துசிவனுர்திரு ௬௬௬
வந்துசேர்பெரு ௯௯௨
வந்துதண்புகார் ௫௫
வந்துதிருக்காளத்தி ௬௦௦
வந்துதிருமலையின் ௬அ
வந்துதிருமாமறை ௨௫
வந்துதிருமாளிகை ௯௦௨
வந்துதிருவீழி ௨௬௬
வந்துதில்லைமூதூ ௯௯௬
வந்துதோன்றிய ௨௫௬
வந்துநம்பிதம்மை ௫௬௨
வந்துபந்தர்மாதவி ௨௬௬
வந்துபரவைப் ௫௬௬
வந்துபுகுந்து ௯௫௫
வந்துமணிமதிற் ௯௬௬
வந்துமற்றவர் ௬௬௬
வந்துமிகைசெய் ௬௫௯
வந்துமுன்னெய்தி ௫அ௨
வந்துவணங்கி ௨௨௬
வந்துவளர்மூவாண் ௯௯௬
வந்துற்றபெரும் ௬௨௨
வந்துற்றெழுமங் ௬௨௫
வந்தெதிர்கொண்டு ௫௫
வந்தெழுமங்கல ௨௯௨
வந்தொருவர்அறி ௨௦௫
வம்பணிமென்மூலை ௯௬௯
வம்புநீடலங்கல் ௫௬௬
வம்புலாமலர்அலைய அ
வம்புலாமலர்நீரால் ௫௫
வம்புலாமலர்வாவி ௨௦௦
வயப்பரியின் ௯௬௫
வயல்வளமும் ௬௫௦
வயலெலாம்வீஎ ௬௦௯
வரமங்கலகல்லியம் ௯௦௬
வரிசிலைத்தென் ௫௦௯
வரிஞ்சையூரினில் ௯௬௦
வரிமயில்அனைய ௫௯அ
வரிவளர்பூஞ் ௨௬
வரிவிற்கதை ௯அ௬
வருங்கறைப்பொ ௬அ
வருதாளென்றும் ௫௬௨
வரும்இவள்நம்மை ௨௬௯
வரும்பான்மை ௫௬௬
வரும்புனற்பெருங் ௬௫௯
வரும்புனற்பொன் ௬௬௫
வருமணக்கோலத் ௨௨
வருமிடத்தில்அழ ௫௯௫
வருமுறைஎரிமூன் ௯௬
வருமுறைப்பருவத் அ௯
வருமுறைப்பிறவி ௫அ௯
வருமுறைமை ௨௫அ
வரைதவழ்மாமஞ் ௬௬௫
வரையுறைகடவுட் அ௯
வரையோடுங்கர் ௯௦௫
வல்அமணர்தமை ௨௦௯
வல்லமண்குண் ௬அ௫
வல்லாண்மையின் ௬௨௨
வல்லார்கள்தமை ௯௯௦
வல்லேயேல்காட்டிங் ௨௫
வலங்கொண்டு ௨௬அ
வலத்திருக்கண் ௬௦௫
வலெடுத்தொ ௯அ௫
வழக்கென்றுநீர் ௬௬
வழிஎதிர்கொள்ள ௯௨௫
வழிபோம்பொழுது ௬௬௫
வழியிற்குழியிற் ௯௯௨
வழிவரும்இளைப்பி ௫௬
வழிவிடுத்தூண ௫௯
வழுதிமாகதர்அத ௫௬௫
வள்ளலார்மணம் ௬௬௦
வள்ளலார்வாசிக் ௬௬௬
வள்ளலாரும்மனை ௯௫௬
வளத்தில்நீடும் ௬௬௫
வளத்தினுல்மிக்க ௫௦
வளம்பயிலும்புறம் ௨௫௫
வளம்பொழில் ௨௬௦
வளமல்கியசீர்த் ௫௬௬
வளமுடையார் ௯அ௬
வளர்பருவமுறை ௨௫அ
வளர்பொற்கன ௬எ௯
வளவனின்புதல்வன் ௬௫
வளவர்பிரான் ௯௬௫

வளவர்பெருமான் ஙகச
வளவனூர்பெருஞ் சஅ0
வளவனூர்வீடாது எசு
வளவனும்கேட்ட எச
வளையும்ஆர்த்தன உடுஅ
வன்சிறுதோல் கஙo
வன்திறல்உந்தை கடு
வன்தொடர்ப்பிணி கக
வன்தொண்டர்அது ஙசு
சo
வன்தொண்டர்தி ஙஅள
வன்தொண்டர்தம் சஙக
வன்தொண்டர்தம ஙஅஅ
வன்தொண்டர்பசி சoசு
வன்தொண்டர்ம சகச
வன்தொண்டர்பின்சஙஉ
வன்தொண்டர்மு சளங
வன்பிணிநீங்கு உள0
வன்புலிக்குருளை அங
வன்பெருங்களிறு எசு
வன்னிகொன்றை ஙo
வன்னிலைமள்ளர் ககசு

வா

வாக்கின்தனிமன் உசுடு
ஙசஅ
வாக்கின்பெரு உசுச
வாசிசமாமுனிவர் ஙசஅ
வாகுசேர்வலை சஅடு
வாங்கிமகிழ்ந்து சடுங
வாங்கியஅத்திரு சoசு
வாங்கியதொண் எசு
வாங்குநீள்வலை சஅச
வாங்குவார்போல் ககக
வாசகங்கேட்ட உசு
வாசத்திருமஞ் சடுஅ
வாசநெய்பூட்டி உக
வாசம்நீர்குடைமங் அ
வாசமலர்க்கொன் சசுக
வாசமலர்ப்பிணை ககள
வாசமென்மலர் கஙசு
வாசியறிந்துகாசளி ங்கூ
வாதில்தோற்றஅம உoஅ
வாம்பெருந்திரை கஙஅ
வாய்ந்தகீர்வருண களூ
வாய்ந்தநீர்வளத் கoச
வாய்ந்தமிழலை கஅஅ
வாய்மைமறை உூஅ
வாயம்பால்அழிப்ப ககக
வாயில்எங்கணுற் கசள
வாயில்காவலர் ஙகடு
வாயிலாரென சகள
வார்ந்திழிகுருதி சகக
வார்ந்துசொரி ஙஉங
வார்புனையும்வன சகசு
வாரணச்சேவ அங
வாரணத்தின்உரி ஙடுஉ
வாரிசொரியுங் சுங
வாவிபுள்ளொலி ஙஅ
வாவியின்மூழ்கி டுக
வாழ்பொற்பதி கடுo
வாழிமாதவரால்லால டுஉங
வாழியமாமறை ஙச
வாழிவளர்புறம் ஙளங
வாள்விடுவயிரக் ஙஅo
வாளரவுதீண்ட உஅக
வாளியுந்தெரிந்து கoஉ
வாளின்படை எஅ
வாளொடுநீள்கை எக
வாளொடுபலகை டுச
வானக்கங்கை சசுo
வானகமின்னுக் உoசு
வானநாடர்கள் டுஉக
வானநாயகர்திரு உடுச
வானவர்உய்யவே சஉசு
வானவர்கள்மலர் உoள
வானவர்பூவின் டுசு
வானவரம்பர்குலம் சடுக
வானளவுயர்ந்த உசள
வானளிப்பன கஉஅ
வாளுகிநிலனுகி ங00
வானிலாவுகருங் சஅக
வானிறைந்தபுன கசக
வானுயர்செங்கதிர் உகஉ
வானுறைதீந்திரு ஙச
வானேஅளக்குங் சoக

வி

விசயமங்கை உசுo
விஞ்சையர்இயக்கர் ஙஎக
விட்டவெம்பரிச் டுஉஉ
விடந்தொலைத் ஙசுஙு
விடநாகம்அணி சஅச
விடுசுடர்நீள் உஙச
விடுவதேஎண்ண உகச
விடையவர்வீரட் கoடு
விடையின்மேல கசஉ
விண்ணவர்கள் கஉo
விண்ணவர்போற் உளங
விண்ணவர்மலரின் ஙஅக
விண்ணுள்வார் சகஅ
விண்ணிடைநின்ற டுசு
விண்ணிறைந்த உசக
விண்ணின்முட்டும் சளo
விண்ணின்றிழிந்த கஅஅ
விண்ணினைஅளக் ஙஅள
விண்ணினைவிழுங்க ஙஎக
விண்தடவுகோபு சo உ
விண்பயில்புரங்கள் கoள
விதிதவறுபடும் உஙஅ
வியனெடுந்தெரு ஙடுச
வீரவுகாதல்மீக் சசுக
வீரவுபன்மணிகள் கூள
வீரவுபேரணி உகஙு
வீரிகடல்சூழ் கoக
விரூப்பிஞல்விளக் ஙஅஉ
விரும்புமேன்மை கஙள
ஙடுஉ
விரைசெய்கறும் சுங
விரையலங்கற் ககள
வில்லால்எயில் சஙள
வில்லொடுவேல் எச
வில்வாங்கிஅல சளச
விழவுரூதன ஙஅடு
விழவுமலிதிருக் கசள
விழுந்தபோதில் உஉச
விழுந்தமழை கசக
விழுந்தவர்எழுந்து கoஉ
விழுந்துபரவி சஉங
விழுந்துஎழுந்து சஉக
விழுந்தெழுந்து ககஉ
விளக்கம்மிக்க கங
விளக்கிஅழுது சஅள
விளங்குதிருமதிக் சஅo
விளங்குத்திருவா ஙகஉ
விளங்குபெருந்திரு கசுசு
விளங்கும்வண் சகள
விளங்குவேணுபுர உடுக

சைவத்தமிழ் நூல்நிலை

விளைவளம்பெரு ௨௬௮
விற்பொலிதரளக் ௩௯௭
விறலுடைத் ௫௨
வினவிவந்த ௨௭௮

வீ

வீக்குரம்புடை ௨௮௯
வீட்டியாச்சமணர் ௬௭௮
வீடிஞர்உடலிற் ௮௮௬
வீடுதரும்இக்கற் ௩௯௯
வீதிஎங்கும்விழா ௮௯௯
வீதிகள்விழவின் ௬௬
வீரக்கழல்காலின் ௯௦
வீரியாக்கையை ௫௨௨
வீழ்ந்துபோற்றி ௮௦௭
வீழ்ந்தெழுந்து ௮௨௬
வீழிமிழலைதனை ௬௬௯
வீழிமிழலைவந்த ௬௮௭

வெ

வெங்கட்களிற்றின் ௬௨௫
வெங்கண்புலிகிடந் ௭௮
வெங்கண்விடை ௨௯௭
வெங்கண்விறற்சி ௭௬
வெங்கணைபடுபிடர் ௬௨
வெங்கதிர்ப்பகல ௬௬௬
வெங்கதிர்விசும் ௮௭
வெங்குருவேந்தரும் ௨௯௬
வெஞ்சமண்குண் ௬௭௩
வெஞ்சமணர்முன் ௩௨௨
வெஞ்சிலேக்கை ௬௬
வெஞ்சினவாள் ௮௦
வெட்டுண்டுபட்டு ௭௮
வெண்கோடல் ௬௬௭
வெண்ணிமேய ௨௭௫
வெண்ணீறுநெற்றி ௮௬
வெண்திருநீற்றணி ௮௦௯
வெண்பொடிபூசுந் ௩௬௭
வெண்மதியின் ௮௬௯
வெந்தசாம்பல் ௩௩௩
வெந்தழற்சுடர் ௭௫
வெந்தொழில்அரு ௩௨௯
வெப்பெனுந்தீயி ௩௨௬
வெம்புசினக்களிற் ௬௮௯
வெம்மறக்குலத்து ௬௫

வெம்மூனேமேற் ௬௯௦
வெம்மைதருவே ௨௭௬
வெய்யகனற்பதங் ௬௦௬
வெய்யசுடர்க்கதிர ௮௩௮
வெய்யதீங்கிது ௩௬௮
வெய்யதொழில் ௩௨௨
வெய்யதொழிலார் ௮௩௭
வெய்யரீற்றறை ௬௯௮
வெய்யமாளமுப்ப ௬௬
வெயிலுமிழும் ௬௮௯
வெல்படைத் ௮௩
வெவ்வருக்கன்ம ௮௮௮
வெள்ளிமால்வரை ௬௩௬
,, ௨௭௯
வெள்ளிவெற்பின் ௨௦௬
வெறித்தகொன் ௮௮௭
வெறியார்பொழிற் ௩௩௫
வெறியுறுகொன் ௬௨௭
வென்றிமடங்கல் ௮௬
வென்றிமால்யானை ௭௨
வென்றிமிகுபூதங் ௮௭௮
வென்றிவானவர் ௬௮௭
வென்றிவிடையார் ௨௨௬
வென்றிவினையின் ௮௭௯
வென்றிவெள்ளே ௩௬௦

வே

வேடர்தங்கரிய ௬௩
வேடர்தங்கோமா ௮௫
வேடரைக்காணுர் ௬௦௨
வேண்டும்ஆறு ௬௬
வேணுபுரக்கோன் ௬௬௬
வேதஆரணம் ௮௨
வேதஉள்ளுறை ௨௨௩
வேதஒசையும் ௬௨
வேதகாரணர்அடி ௮௮௯
வேதகாரணராய ௨௮௨
வேதங்கள்எண்ணி ௩௦௫
வேதங்கள்மொழி ௨௬௨
வேதநாதமும் ௨௫௬
வேதான்மூகன் ௮
வேதநெறிதழை ௨௩௩
வேதநெறியின் ௮௫௫
வேதநெறிவளர் ௨௮௫
வேதபாரகரில் ௨௫

வேதம்வளர்க்கவுஞ் ௩௦௮
வேதமுதல்வன் ௩௩௮
வேதவனத்தின் ௬௮௬
வேதவாய்மையின் ௩௬௭
வேதவேதியர்வே ௬௮௭
,, ௨௭௫
வேதனேஎய்திவீழ்ந் ௯௨
வேதியர்சேய்ஞலூ ௨௯௬
வேதியர்தில்லை ௮௭
வேதியன்அதனைக் ௨௫
வேதியன்ஆகி ௨௭
வேந்தற்குற்றுழி ௬௫௬
வேந்தன்அணுகண் ௮௩௭
வேந்தனுக்குமெய் ௩௬௬
வேந்தனேவலிற் ௫௦௮
வேயனேயதோளி ௮௬௩
வேரியார்மலர்ச் ௮௬௮
வேலைஅழற்கதிர் ௨௩௮
வேலொடுவில்லும் ௫௮
வேழக்கரும்பிலை ௭௭
வேழத்தரசங்கன் ௬௨௮
வேள்விறற்பயன் ௩௩௨
வேள்விபுரிசடங் ௩௩௮
வேறுநல்லதோர் ௯௭
வேறுபிறிதென் ௯௮
வேறுவேறுதிருப் ௩௮௬
வேறெருசெயலி ௩௩௬
வேனிலுறுவெயில் ௮௦௮

வை

வைகல்நீடுமாட ௨௮௮
வைகலும்உணவி ௬௬௮
வைகறைஉணர்ந்து ௭௨
வைகும்அக்காளிற் ௨௮௮
வைத்தபின்மறை ௮௬
வைத்தபூதம் ௨௮௩
வைதெரிந்தகற்றி ௬௦
வையகங்கழக் ௫௦௦
வையகம்உய்ய ௩௨௨
வையகம்பொலிய ௩௬
வையங்கழல்பல்ல ௮௬௬
வையங்கழுஞ் ௮௫௮
வையம்எங்கும் ௬௮௭
வையம்புரக்கு ௨௨௭
வையம்முறைசெய் ௬௨௫